V2:1.3' N70
N71.2731
61479

# Index to Tamil Nadu Legislative Assembly Debates

Seventh Session of the Fourth Legislative Assembly under the Constitution of India.

*10th March to 14th March* 1970.

[Volume XXVII (Nos. 1 to 5)]

*Table of contents.*


| | PAGES |
|---|---|
| *Tuesday, 10th March 1970.* | |
| (i) Personnel of the Government of Tamil Nadu ... | i–iv |
| (ii) Principal Officers of the Tamil Nadu Legislative Assembly. ... ... ... ... ... | v |
| (iii) List of Members of the Tamil Nadu Legislative Assembly with their Constituencies ... ... | vi–xi |
| (1) Questions and Answers ... ... ... ... | 1–22 |
| (2) Points of Order— | |
| (i) Non-inclusion of questions in the Order Paper | 22 |
| (ii) Denial of opportunity to seek clarification from the Minister after his reply to the Budget discussion ... ... ... ... ... | 23–27 |
| (3) Charge against the Minister for Co-operation ... | 27–42 |
| (4) Voting on Demands for Grants for the year 1970-71—*cont.* | |
| (i) Demand No. 7—Elections ... ... ... | |
| (ii) Demand No. 8—Head of State, Ministers and Headquarters staff ... ... ... ... | 42–95 |
| (iii) Demand No. 33—Miscellaneous ... ... | |
| (5) Papers laid on the Table ... ... ... | 105 |

PAGES

*Wednesday, 11th March 1970.*

(1) Questions and Answers ... ... ... 107-130
(2) Announcement :
Mmbers who have joined the party functioning under the leadership of Thiru G. Bhuvarahan ... ... ... ... ... 130
(3) Voting on Demands for Grants for the year 1970-71—*cont.*
Demand No. 13—Education ... ... 130-131
134-195
(4) Point of Order—
Non-utilisation of the entire question hour and denial of adequate opportunities to put supplementaries ... ... ... ... 132-133
(5) Papers laid on the Table ... ... ... ... 195

*Thursday, 12th March 1970.*

(1) Questions and Answers ... ... ... ... 261-287
(2) Adjournment Motion—
Fast by Coimbatore agriculturists as a protest against increase in electricity tariff rates 287
(3) Point of Information—
Charge levelled by Leader of the Opposition against the Minister for Co-operation ... 287-292
(4) Announcements—
(i) Charge levelled by Thiru Ramachandra Dorai against the Minister for Local Administration ... ... ... ... 292-293
(ii) Election to Committee on Estimates ... 299-300
(iii) Election to Committee on Public Accounts 300
(5) Point of Order—
Chief Minister's appeal to the Press about the publication of the proceedings of the House 293-297
(6) Calling Attention—
Stoppage of supply of rice at controlled price to Students' Hostels and Orphanages and its consequences ... ... ... ... 297-299



PAGES

*Thursday, 12th March 1970—cont.*

(7) Government Motions—
(i) Election to Committee on Estimates ... 299
(ii) Election to Committee on Public Accounts. 300
(8) Voting on Demands for Grants for the year 1970-71—*cont.*
Demand No. 13—Education—*cont.* ... 301-374
(9) Papers laid on the Table ... ... ... 374

*Friday, 13th March 1970.*

(1) Questions and Answers ... ... ... 377-403
(2) Adjournment Motion—
Decision of Livestock Assistants' Association Executive Committee to fast before the Secretariat ... ... ... ... 404
(3) Calling Attention—
Snapping of D.M.K. Flag in Kizhayur and attack on the investigating Police ... 404-405
(4) Announcement—
Bills passed in the Legislative Council ... 406
(5) Voting on Demands for Grants for the year 1970-71—*cont.*
Demand No. 9—District Administration and Miscellaneous ... ... ... ...
Demand No. 1—Land Revenue Department
Demand No. 4—Stamps—Administration ...
Demand No. 31—Famine Relief ... ... ...
Demand No. 32—Pensions ... ... ...
Demand No. 36—Other Miscellaneous compensations and Assignments ... ... ...
Demand No. 37—Compensation to Zamindars
Demand No. 45—Commuted Value of Pensions
Demand No. 47—Loans and Advances by the State Government ... ... ... ... 406-41[illegible]
417-48[illegible]
(6) Point of Order—
Reading in the House of long Policy Notes relating to Demands for Grants ... ... 416-41[illegible]
(7) Papers laid on the Table ... ... .. 48[illegible]

PAGES

*Saturday, 14th March 1970.*

(1) Obituary Reference—

Demise of Ex-Member and Ex-Minister Thiru S. Ramanathan ... ... ... 505

(2) Questions and Answers ... ... ... ... 505–528

(3) Calling Attention—

Murder of Thiru V. K. Kannappan, Swatantra Councillor of Vellore Municipality and the consequent unrest ... ... ... 529

(4) Point of Order—

Discussion on a matter '*sub-judice*' ... 529–531

(5) Request of the Leader of the Opposition to make a statement under Rule 81 ... ... ... 532–535

(6) Voting on Demands for Grants for the year 1970-71—*cont.* ... ... ... 535–606

Demand No. 9—District Administration and Miscellaneous ... ... ... ...
Demand No. 1—Land Revenue Department
Demand No. 4—Stamps—Administration ...
Demand No. 31—Famine relief ... ...
Demand No. 32—Pensions ... ... ...
Demand No. 36—Other Miscellaneous Compensations and Assignments ... ... ..
Demand No. 37—Compensation to Zamindars
Demand No. 45—Commuted Value of Pensions ... ... ... ... ...
Demand No. 47—Loans and Advances by the State Government ... ... ...

(7) Papers laid on the Table ... ... ... 606

## How to use the index.

The Index is arranged alphabetically. The main heading are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every main heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said main headings, i.e., 'Committee(s)', 'Council(s)', 'Corporation(s)' etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers Laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

A list of abbreviations used in the Index is given below:—

| | |
|---|---|
| A.M./Ad. Motion ... | Adjournment Motion. |
| Ann. ... ... | Announcement. |
| B.O.H. ... ... ... | Business of the House. |
| C.A. ... ... ... | Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| C.A.St. ... ... ... | Calling Attention Statement. |
| Consid. ... ... ... | Consideration stage of a Bill This stage includes :<br>(i) Motion to refer to Select/Joint Select Committee.<br>(ii) Amendment to refer to Select/Joint Select Committee.<br>(iii) Amendment to circulate. |

வெளியீடு—29—5—1971]
Issued—29—5—1971]

3894

# தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை 1970 மார்ச் 10

**Tuesday, 10th March 1970**

தொகுதி XXVII- எண் 1

**Volume XXVII—No. 1**

தமிழ் நாடு அரசு
1971

GOVERNMENT OF TAMIL NADU
1971

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9

Legislative Assembly Department
Fort St. George, Madras-9.

விலை 50 காசுகள்]
Price 50 Paise]

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப்பணித் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பொதுப் பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டம் உட்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், முகம்மதியர் அறக் கட்டளைகள் ( Waqfs ), போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

9. மாண்புமிகு திரு. மா. முத்துசாமி (உள்ளாட்சித் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார். நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், பூதான, கிராமதான இயக்கங்கள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், முன்னாள் இராணுவ வீரர்கள், சீரணி.

10. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (கூட்டுறவுத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார். கூட்டுறவு, வேளாண்மை, மறுநிதி உதவி, துறைமுகங்கள்

11. மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா (அறநிலையத் துறை அமைச்சர்). கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : அறக் கட்டளைகள், வீட்டு வசதி, இடவசதிக் கட்டுப்பாடு, சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள்.

12. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்). கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள் சின்கோனா.

13. மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் (தொழிலாளர் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : தொழிலாளர். எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரங்கள், இரவலர்கள், அனாதை இல்லங்கள்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMIL NADU

SARDAR UJJAL SINGH.

---

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. THE HON. THIRU M. KARUNANIDHI (Chief Minister) : Minister in-charge of Public, General Administration, Matters relating to I.C.S. and I.A.S. Officers, Disrict Revenue Officers and Deputy Collectors, Police, Elections, Prohibition, Information and Publicity, Cinematograph Act, Food Production. Passports and Newsprint Control and Prices and Supplies of Goods Act.

2. THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN (Minister for Education and Health) : Minister in-charge of Education including Technical Education, Official Language, Public Health and Medicine and Legislature.

3. THE HON. THIRU K. A. MATHIALAGAN (Minister for Finance) : Minister in charge of Finance, Planning, Revenue, Board of Revenue, District Revenue Establishments, Indian Overseas, Refugees and Evacuees.

4. THE HON. DR. (THIRUMATHI) SATYAVANIMUTHU (Minister for Agriculture and Harijan Welfare) : Minister in-charge of Agriculture, Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries and Tourism

5. THE HON. THIRU N. V. NATARAJAN (Minister for Backward Classes) : Minister in-charge of Backward Classes, Registration, Stationery and Printing and Government Press.

6. THE HON. THIRU P. U. SHANMUGHAM (Minister for Food and Commercial Taxes) : Minister in-charge of Food, Commercial Taxes, Animal Husbandry and Milk.

7. THE HON. THIRU S. MADHAVAN (Minister for Industries) : Minister in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA (Minister for Public Works) : Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Project Works, Highways and Waqfs, Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

9. THE HON. THIRU M. MUTHUSWAMY (Minister for Local Administration) : Minister in-charge of Municipal Administration, Community Development, Panchayats, Bhoodan and Gramadan, Khadi and Village Industries, Rural Industries Project, Ex-servicemen and Prosperity Brigade.

10. The HON. THIRU Si. Pa. ADITANAR (Minister for Co-operation): Minister in-charge of Co-operation, Agricultural Refinance and Ports.

11. The HON. THIRU K. V. SUBBIAH (Minister for Religious Endowments): Minister in-charge of Religious Endowments, Housing, Accomodation Control, Approved Schools and Vigilance Services.

12. The HON. THIRU O. P. RAMAN (Minister for Electricity): Minister in-charge of Electricity, Legislation on Money Lending (Rural Indebtedness), Legislation on Chits, Forests and Cinchona.

13. THE HON. THIRU K. VEZHAVENDAN (Minister for Labour): Minister in-charge of Labour, Legislation on Weights and Measures and Statistics, Beggars and Orphanages.

## தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

### பேரவைத் தலைவர்.

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன்.

### பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. ஜி. ஆர். எட்மண்ட்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. ந. தருமலிங்கம்.
திரு. ஆர். என். அரங்கநாதன்.
திரு. என். எஸ். வி. சித்தன்.
திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம்.
திரு. எம். சுரேந்திரன்.
திரு. வி. டி. அண்ணாமலை.

### சட்டப் பேரவைச் செயலாளர்.

திரு. கா. அ. நடராசன், எம்.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்.

திரு. கு. புஜங்க ராவ், பி.ஏ., எல்.எல்.பி.

### உதவிச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி).
திரு. ஜி. இராகவன்.
திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.
திரு. ஆர். மாணிக்கம், பி.எஸ்ஸி., பி.எல்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ் நாடு சட்டப்பேரவை உறுப்பினர்களின் (ஆங்கில அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்

| தொடர் எண். | உறுப்பினர்கள் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | அப்துல் கபூர் சாகிப், எம். .. .. | இராணிப்பேட்டை. |
| 2 | ஆதித்தனார், சி.பா. (அமைச்சர்) .. .. | ஸ்ரீவைகுண்டம். |
| 3 | அக்னிராஜூ, எஸ். .. .. .. | திருப்பரங்குன்றம். |
| 4 | அழகமுத்து, து.ப. (அரசாங்கத் தலைமைப் ஆளுங்கட்சி இணைப்பாளர்). | உப்பிலியாபுரம். |
| 5 | அழகர்சாமி, சோ. .. .. .. | கோயில்பட்டி. |
| 6 | அழகுத்தேவர், எஸ். .. . | சிவகாசி. |
| 7 | அலங்காரம், மு. . .. .. | கடலாடி. (செ.வ.) |
| 8 | ஆனந்தன், மு. .. .. .. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 9 | ஆண்டி என்ற குருசாமி, கு. .. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.) |
| 10 | அண்ணாமலை, சி.வி.எம். .. .. | கடம்பத்தூர். |
| 11 | அண்ணாமலை, வி.டி. .. .. .. | பெரணமல்லூர். |
| 12 | அரங்கநாதன், ஆர். என். .. .. | சோளிங்கபுரம். |
| 13 | அரங்கண்ணல், இராம. .. .. | மயிலாப்பூர் (சென்னை மாநகரம்). |
| 14 | அரசு, அ. பொ. .. .. .. | திருவொற்றியூர். |
| 15 | ஆறுமுகம், அ. .. .. .. | எடப்பாடி. |
| 16 | ஆறுமுகம், எஸ். .. .. .. | வீரபாண்டி. |
| 17 | ஆலடி அருணா, வி. .. .. .. | ஆலங்குளம். |
| 18 | ஆசைத்தம்பி, ஏ.வி.பி. .. .. .. | எழும்பூர் (சென்னை மாநகரம்). |
| 19 | பாலன், எம். சி. .. .. .. | நாகர்கோவில். |
| 20 | பாலகிருஷ்ணன், ஏ. கோ. .. .. | வானூர் (செ.வ.) |
| 21 | பலராமன், இல. .. .. .. | கணியம்பாடி. |
| 22 | பாலசுப்பிரமணியன், எ. .. .. | திண்டுக்கல. |
| 23 | பெள்ளி கௌடர், ஜெ. .. .. .. | கூனூார். |
| 24 | பாரதிமோகன், கோ. .. .. .. | குத்தாலம். |
| 25 | பூபதி, எம். .. .. .. .. | கோயம்புத்தூர்–கிழக்கு. |
| 26 | பூவராகன், கோ. .. .. .. | விருத்தாசலம். |
| 27 | போஜன், கே. .. .. .. .. | உதகமண்டலம். |
| 28 | சீமைச்சாமி, கரு. .. .. .. | மானாமதுரை. |
| 29 | சின்னராஜி, அ. கே. .. .. .. | திருப்பத்தூர். |
| 30 | சின்னச்சாமி, மு. .. .. .. | ஈரோடு. |
| 31 | சின்னச்சாமி, வி. .. .. .. | ஏர்க்காடு (ஆ.வா.) |
| 32 | சித்தன், என்.எஸ்.வி. .. .. .. | திருமங்கலம். |
| 33 | தனுஷ்கோடி, பி. எஸ். .. .. | திருவாரூர் (செ.வ.) |
| 34 | தருமலிங்கம், ந. .. .. .. | திருத்துறைப்பூண்டி. |
| 35 | துரைராஜ், சு.ம. .. .. .. | திருவள்ளூர் (செ.வ.) |
| 36 | துரைபாண்டியன், என். .. .. | நாங்குனேரி. |
| 37 | துரைராஜ், பி. .. .. .. | சங்கரன்கோவில் (செ.வ.) |



| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 38 | துரைசாமி, சு. .. .. .. | திருப்பூர். |
| 39 | துரையரசன், ஆ. .. .. .. | அறந்தாங்கி. |
| 40 | எட்மண்ட், ஜி. ஆர். (பேரவைத் துணைத் தலைவர்) .. .. | திருச்செந்தூர். |
| 41 | இளம்வழுதி, இரெ. .. .. .. | கடலூர். |
| 42 | எல்லப்பன், பி. எஸ். .. .. .. | அச்சரப்பாக்கம் (செ. வ.). |
| 43 | கணேசன், எல். .. .. .. | ஒரத்தநாடு. |
| 44 | கணேசன், எஸ். .. .. .. | செம்பனார்கோவில். |
| 45 | ஜார்ஜ், வ. .. .. .. .. | பத்மநாபபுரம். |
| 46 | ஞானசம்பந்தன், கொ. இர. .. | நாகப்பட்டினம். |
| 47 | கோமதிசங்கர தீட்சிதர், க. .. .. | அம்பாசமுத்திரம். |
| 48 | கோபால், எம். .. .. .. | குன்றத்தூர் (செ. வ.). |
| 49 | கோவிந்தன், கே. ஆர். .. .. | தாரமங்கலம். |
| 50 | கோவிந்தன், புலவர் கா. (பேரவைத் தலைவர்). .. | செய்யாறு. |
| 51 | கோவிந்தராசன், ம. சொ. .. .. | மதுரை சென்ட்ரல். |
| 52 | கோவிந்தராசன், சி. .. .. .. | நெல்லிக்குப்பம். |
| 53 | கோவிந்தராஜன், வி. எஸ். .. .. | புரசவாக்கம் (சென்னை மாநகரம்). |
| 54 | கோவிந்தராசுலு, கே. .. .. | கோயம்புத்தூர்—மேற்கு. |
| 55 | கோவிந்தராசன், ஆ. .. .. .. | புவனகிரி. |
| 56 | ஹபிபுல்லா பேக், டாக்டர் .. .. | ஹார்பர் (சென்னை மாநகரம்). |
| 57 | ஹாண்டே, டாக்டர் எச். வி. .. .. | பார்க் டவுன் (சென்னை மாநகரம்). |
| 58 | இளஞ்செழியன், வீ. சா. .. .. | விராலிமலை |
| 59 | இராசரத்தினம், டி. .. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 60 | ஜேம்ஸ், ஜே. .. .. .. .. | திருவட்டார். |
| 61 | ஜானகியம்மாள், திருமதி கே. பி. .. | மதுரை-கிழக்கு. |
| 62 | ஜயராஜ், பி. .. .. .. .. | நன்னிலம் (செ. வ.). |
| 63 | ஜயராமன், கி. .. .. .. .. | சேலம்-1. |
| 64 | ஜெயராமன், பி. .. .. .. | பேர்ணம்பட்டு (செ. வ.). |
| 65 | கலியமூர்த்தி என்ற மூர்த்தி, ஆ. கு. .. | ஜெயங்கொண்டம் (செ. வ.). |
| 66 | கனகசபை, ரா. .. .. .. | சிதம்பரம். |
| 67 | கந்தசாமி கவுண்டர், செ. .. .. | அரவக்குறிச்சி. |
| 68 | கந்தசாமி, எம். .. .. .. | குளித்தலை. |
| 69 | கந்தசாமி படையாச்சி, மு. ... .. | உளுந்தூர்ப்பேட்டை. |
| 70 | கண்ணன், எம். ஆர். .. .. .. | பேசின் பிரிட்ஜ் (சென்னை மாநகரம்). |
| 71 | கண்ணப்பன், எம். .. .. .. | கிணத்துக்கடவு. |
| 72 | கரியமாணிக்கம் அம்பலம், கரு. ராம. | திருவாடானை. |
| 73 | கருணாநிதி, மு. (முதல் அமைச்சர்) .. | சைதாப்பேட்டை (சென்னை மாநகரம்). |
| 74 | கருப்பையா, ஆ. .. .. .. | கங்கைகொண்டான் (செ. வ.). |

| தொடர் எண். (1) | உறுப்பினர் பெயர். (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 75 | கருப்பையா, ஆர். | அரியலூர். |
| 76 | கருத்திருமன், பி. ஜி. (எதிர்க் கட்சித் தலைவர்). | சத்தியமங்கலம். |
| 77 | காசிராமன், நா. | கும்பகோணம். |
| 78 | கதிரவன், க. மு. | தென்காசி. |
| 79 | கேசவலு, தே. | கள்ளக்குறிச்சி. |
| 80 | கிட்டப்பா, என். | மாயூரம். |
| 81 | கொளத்தூர் கோதண்டம் | மதுராந்தகம். |
| 82 | கோதண்டராமன், வி. கே. | குடியாத்தம். |
| 83 | கோதண்டராமையா, கே. எஸ். | உத்தனப்பள்ளி. |
| 84 | கிருஷ்ணமூர்த்தி, கு. | பழனி (செ.வ.). |
| 85 | கிருஷ்ணமூர்த்தி, சி. | கொடவாசல். |
| 86 | கிருஷ்ணமூர்த்தி, மு. | பேராவூரணி. |
| 87 | கிருஷ்ணன், அ. | மங்களூர் (செ.வ.) |
| 88 | கிருஷ்ணன், ஈ. ஆர். | சேலம்-2. |
| 89 | கிருட்டிணன், நா. | காஞ்சீபுரம். |
| 90 | கிருஷ்ணசாமி கவுண்டர், ரா. | அவிநாசி. |
| 91 | குமாரசாமி, கே. என். | பல்லடம். |
| 92 | குப்பம்மாள், திருமதி சு. | போளூர். |
| 93 | மாதவன், செ. (அமைச்சர்) | திருப்பத்தூர். |
| 94 | மகாதேவன், ப. | கன்யாகுமரி. |
| 95 | மலைச்சாமி, பெ. | மேலூர். |
| 96 | மலைக்கண்ணன், வீ. | இளையாங்குடி. |
| 97 | மணி, கே.பி.எஸ். | சீர்காழி (செ.வ.). |
| 98 | மணி, எம். எஸ். | திருச்சிராப்பள்ளி-1. |
| 99 | மணி, வி. எஸ். எஸ். | ஆத்தூர். |
| 100 | மாணிக்கவாசகம், இரா. | தொண்டாமுத்தூர். |
| 101 | மணியன், பி.எஸ். | சோழவந்தான். |
| 102 | மாரிமுத்து, அ. | ஆடுதுறை. |
| 103 | மாரிமுத்து, எ.ஆர். | பட்டுக்கோட்டை. |
| 104 | மாரிமுத்து, மூ. | தலைவாசல் (செ.வ.). |
| 105 | மார்டின், டி. | சாத்தான்குளம். |
| 106 | மருதாசலம், என். | பேரூர் (செ.வ.). |
| 107 | மதியழகன், கே. எ. (அமைச்சர்) | ஆயிரம்விளக்கு (சென்னை மாநகரம்). |
| 108 | மெய்யப்பன், சா. | காரைக்குடி. |
| 109 | மேத்தா, எம். | பெரியகுளம். |
| 110 | மூக்கையா தேவர், பி.கே. | உசிலம்பட்டி. |
| 111 | முனுசாமி கௌண்டர், பி.எம். | கிருஷ்ணகிரி. |
| 112 | முனுசாமி, ரா.ரா. | மேல்மலையனூர். |
| 113 | முனியாண்டி, எ. | நலக்கோட்டை [செ.வ.] |
| 114 | முனு. ஆதி | திருப்போரூர். |
| 115 | முருகையன், புலவர் க. | திருவையாறு. |



| தொடர் எண். (1) | உறுப்பினர் பெயர். (2) | தொகுதி. (3) |
|---|---|---|
| 116 | முருகையன், எஸ். | கலசபாக்கம். |
| 117 | முருகேசன், க. | பாலக்கோடு. |
| 118 | செஞ்சி முனுசாமி, வெ. | செஞ்சி. |
| 119 | முத்தையா, கே. கே. | கடலூர். |
| 120 | முத்தையா, மு. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 121 | முத்துலிங்கம், எஸ். | வந்தவாசி (செ.வ.). |
| 122 | முத்துசாமி, பா. கசி. | பெண்ணாகரம். |
| 123 | முத்துசாமி, மா. (அமைச்சர்) | நாமக்கல். |
| 124 | முத்துச்செல்வன், பு.செ. | முசிறி. |
| 125 | நாச்சிமுத்து, நா. | ஒட்டன்சத்திரம். |
| 126 | நாகலிங்கம், பா. | பொன்னேரி (செ.வ.) |
| 127 | நாகசுந்தரம், ஆர். | திருச்சிராப்பள்ளி-2. |
| 128 | நல்லசிவன், க. ர. | மொடக்குறிச்சி. |
| 129 | நல்லசாமி, தோ. மு. | கரூர். |
| 130 | நஞ்சன், சி. | கடத்தூர் (செ.வ.). |
| 131 | நரசிம்மன், எ. சி. | ஆரணி. |
| 132 | நாராயணன், இரா. | வரகூர். |
| 133 | நடராசன், மு. க. து. | லால்குடி. |
| 134 | நடராஜன், ஜி. | காட்பாடி. |
| 135 | நடராசன், ஈ. எம். | அந்தியூர். |
| 136 | நெடுஞ்செழியன், இரா. (அமைச்சர் பேரவை முன்னவர்) | திருவல்லிக்கேணி (சென்னை மாநகரம்). |
| 137 | பச்சையப்பன், எஸ். பி. | சங்கராபுரம். |
| 138 | பத்மாவதி, திருமதி, ஜி. | முசையூர். |
| 139 | பழனி, சி. | ஓமலூர் (செ.வ.). |
| 140 | பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம் (செ.வ.). |
| 141 | பழனிவேல் ராஜன் | தேனி. |
| 142 | பன்னீர்செல்வம், எம். | ஆம்பூர் (செ.வ.) |
| 143 | பரமசிவம் பி. என். | பொங்கலூர். |
| 144 | பரமசிவம், எஸ். | ஆண்டிப்பட்டி. |
| 145 | பரிசுத்த நாடார், எ. ஒய். எஸ். | தஞ்சாவூர். |
| 146 | பட்டாபி நாயுடு, எ. | காவேரிப்பட்டணம். |
| 147 | பீர் முஹம்மது, ஹாஜி. ம. மு. | மேலப்பாளையம். |
| 148 | பெரியசாமி, பெ. | ராசிபுரம். |
| 149 | பெருமாள், எ. ஆர். | கரியாப்பட்டி. |
| 150 | பொன்னம்பலம், புலவர் பொ. | திருமயம். |
| 151 | பொன்னப்ப நாடார், ஆர். | விளவங்கோடு. |
| 152 | பொன்னுமலை, தி. | பனமரத்துப்பட்டி. |
| 153 | இராஜா, எ. எம். | பவானி. |
| 154 | ராசகோபால், க. மு. | உத்திரமேரூர். |
| 155 | ராஜமன்னார், எஸ். எ. | வாணியம்பாடி. |
| 156 | [illegible], மா. | கம்பம். |
| 157 | [illegible], என். | குறிஞ்சிப்பாடி (செ.வ.) |

| | |
|---|---|
| | (iv) Motion to consider as reported by Select/Joint Select Committee. |
| | (v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc. |
| Consid. Cl. ... ... | Consideration of clauses of a Bill. |
| D.E.E. ... ... ... | Demands for Excess Expenditure. |
| Dis. S.D. or D.S.D ... | Discussion for Short Duration on an urgent matter of Administration. |
| D.S.G. ... ... ... | Demands for Supplementary Grants. |
| G.A. ... ... ... | Governor's Address. |
| G.D. ... ... ... | General Discussion. |
| H.A.H. Dis./H.H.D. ... | Half-hour Discussion. |
| Int. | Introduction stage of a Bill. |
| L.A. ... ... ... | Legislative Assembly. |
| L.C. ... ... ... | Legislative Council. |
| M. ... ... ... | Motion. |
| P.M. ... ... ... | Privilege Motion. |
| R/Res. ... ... ... | Resolution. |
| St. ... ... ... | Statement. |

## தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ் நாடு ஆளுநர்

சர்தார் உஜ்ஜல் சிங்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (முதல் அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பொதுத் துறை, பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, செய்தி-விளம்பரம், திரைப்படச் சட்டம், உணவு உற்பத்தி, பயண அனுமதிச் சீட்டுகள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, சரக்குகளின் விலைகள்-வழங்கல் குறித்த சட்டம்.

2. மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் (கல்வி-சுகாதார அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் . தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, பொதுச் சுகாதாரம், மருத்துவம், சட்ட மன்றம்.

3. மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் (நிதி அமைச்சர் : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : நிதி, திட்டம், வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

4. மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து 'வேளாண்மை அரிசன நல அமைச்சர்) . கீழ்க்கண்ட துறைகளுக் துப் பொறுப்பு வகிப்பார் : வேளாண்மை, அரிசனநலம், மகளிர்- சிறுவர் நலம், மீனளம், சுற்றுலா.

5. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (பின்னிலை வகுப்பினர் நல அமைச்சர்). கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப் பார் : பிற்பட்டோர் நலன், பத்திரப் பதிவு, எழுது பொருள்-அச்சுத்துறை, அரசாங்க அச்சகம்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (உணவு வணிக வரித் துறை அமைச்சர்) . கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப் பார் : உணவு, வணிக வரிகள், கால்நடை வளர்ப்பு, பால் வழங்கு துறை.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் அமைச்சர்) . கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : தொழில்கள், கனிப் பொருள்கள், சுரங்கங்கள், கைத்தறி, நூல், துணிகள், வேலை வாய்ப்பும்-பயிற்சியளித் தலும், இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

# தமிழ் நாடு சட்டப் பேரவை

---

செவ்வாய்க்கிழமை, 1970 மார்ச் 10.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 289, 290, 291, 292 ஆகிய எண்கள் உள்ள வினாக்களெல்லாம் சேர்ந்தாற்போல் எடுத்துக் கொள்ளப்படும்.

### சுகாதார நிலையங்கள்.

*289 வினா—திரு. டி. மார்டின் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மொத்தம் எத்தனை சுகாதார நிலையங்கள் உள்ளன ?

(இ) அவைகளில் 1214 சுகாதார நிலையங்களில் டாக்டர்கள் இல்லை என்பது உண்மையா ?

(உ) ஆம் எனில், டாக்டர்கள் இல்லாத குறையைப் போக்க தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) 341.

(இ) இல்லை. எல்லா சுகாதார நிலையங்களிலும் மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

*290 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் தொகுதி பெருமாநல்லூரில் "ஆரம்ப சுகாதார நிலையம்" ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) திருப்பூர் தொகுதி பெருமாநல்லூரில் ஆரம்ப சுகாதார நிலையத்தை துவக்கத் தமிழக அரசு 1969 நவம்பர் மாதத்தில் ஒப்புதல் அளித்தது. 23—12—1969-ல் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. மருத்துவ அதிகாரி 1—2—1969-இல் பதவி ஏற்று பணிகள் நடைபெற்று வருகின்றன.

| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 158 | ராஜவேலு, டி. ஏ. .. .. | .. திருச்செங்கோடு. |
| 159 | ராமச்சந்திர துரை, ரா. .. .. | .. கந்தர்வக்கோட்டை. |
| 160 | இராமச்சந்திரன், க. ந. .. | .. ஆண்டிமடம். |
| 161 | ராமச்சந்திரன், எம். ஜி. .. | .. பரங்கிமலை. |
| 162 | இராமச்சந்திரன், எஸ். .. .. | .. பண்ருட்டி. |
| 163 | ராமலிங்கம், எஸ். .. .. | .. ஸ்ரீரங்கம் (செ.வ.) |
| 164 | இராமமூர்த்தி, க. .. .. | .. திண்டிவனம். |
| 165 | இராமன், மு. .. .. .. | .. கண்டமங்கலம் (செ.வ.) |
| 166 | இராமன், ஓ. பி. (அமைச்சர்) .. | .. மேலூர்-தெற்கு (செ.வ.) |
| 167 | இராமராசன், வ.க. .. .. | .. பவானிசாகர் (செ.வ.) |
| 168 | இராமசாமி, இ. .. .. | .. வால்பாறை (செ.வ.) |
| 169 | ராமசாமி கவுண்டர், கே.எம். | .. கோபிசெட்டிப்பாளையம். |
| 170 | ராமசாமி, எஸ்.ஜே. .. .. | .. அரக்கோணம். |
| 171 | இராசு, ஜே.எஸ். .. .. | .. பெரம்பலூர் (செ.வ.) |
| 172 | இரத்தினசபாபதி, மு. .. .. | .. விளாத்திகுளம். |
| 173 | ரெத்தினதேவர், ரா. .. | .. முதுகுளத்தூர். |
| 174 | சாதிக் பாட்சா, எஸ்.ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 175 | சகாதேவக் கண்டர், கே. .. | .. தண்டராம்பட்டு. |
| 176 | சாமிநாதன், கே. என். .. | .. வெள்ளக்கோயில். |
| 177 | சங்கரய்யா, என். .. .. | .. மதுரை—மேற்கு. |
| 178 | சந்தானம், பி.எஸ். .. | .. செங்கம் (செ.வ.) |
| 179 | சாரதி, மா.பா. .. .. | .. வேலூர். |
| 180 | சத்தியவாணிமுத்து, டாக்டர் (திருமதி) (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.) (சென்னை மாநகரம்) |
| 181 | சீனிவாச நாயக்கர், ஆர். .. | .. சாத்தூர். |
| 182 | சீனிவாசன், பெ. .. .. | .. விருதுநகர். |
| 183 | செல்லக் கவுண்டர், அ. .. | .. சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 184 | சேனாபதி, அ. .. .. .. | .. காங்கேயம். |
| 185 | சேதுராமன், சி. .. .. | .. சிவகங்கை. |
| 186 | சண்முகம், எம். .. .. | .. விழுப்புரம். |
| 187 | சண்முகசுந்தரம், அ.ப. .. | .. பொள்ளாச்சி. |
| 188 | சிறைமீட்டான், தொ.க. .. | .. பரமக்குடி (செ.வ.). |
| 189 | சிவஞானம், ம. பொ. .. | .. தியாகராயநகர் (சென்னை மாநகரம்.) |
| 190 | சிவபெருமாள், க.ந. .. .. | .. ஆத்தூர். |
| 191 | சிவசாமி, மு.ச. .. .. | .. தூத்துக்குடி. |
| 192 | சிவசுப்பிரமணியன், எஸ். .. | .. காட்டுமன்னார் கோயில் (செ.வ.) |
| 193 | சோமசுந்தரம், ந. .. ... | .. வலங்கைமான் (செ.வ.) |
| 194 | சௌந்தரபாண்டியன், நா. .. | .. ராதாபுரம். |
| 195 | சௌந்தரபாண்டியன், பெ. .. | .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 196 | சௌந்தரராஜ மூப்பனார், இரா. | .. பாபநாசம். |
| 197 | சுந்தர பாரதி, சௌடி எஸ். | ... அருப்புக்கோட்டை. |
| 198 | சீனிவாசன், சு. .. .. | .. போடிநாயக்கனூர். |



| தொடர் எண். | உறுப்பினர் பெயர். | தொகுதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 199 | சுவாரெஸ், திருமதி ஏ. .. | .. நியமன உறுப்பினர். |
| 200 | சுப்பராஜா, ஏ.அ. .. .. | .. இராஜபாளையம். |
| 201 | சுப்பையா, ஆ.கு. .. .. | .. கோட்டூர் (செ.வ.) |
| 202 | சுப்பையா, கே. வி. (அமைச்சர்) | .. ஆலங்குடி. |
| 203 | சுப்பையா முதலியார், ஏ.ஆர். | .. கடையநல்லூர். |
| 204 | சுப்பிரமணியம், அ.லெ. .. | .. திருநெல்வேலி. |
| 205 | சுப்பிரமணிய கவுண்டர், எம். | .. தர்மபுரி. |
| 206 | சுப்பிரமணியம், இ.எம். .. | .. திருக்கோவிலூர். |
| 207 | சுரேந்திரன், எம். .. .. | .. மேட்டூர். |
| 208 | சுவாமிநாத உடையார், த.சி. | .. மன்னார்குடி. |
| 209 | சுவாமிநாதன், வை. .. | .. திருவெறும்பூர். |
| 210 | தம்பி நாயக்கர், பா. .. .. | .. வடமதுரை. |
| 211 | தங்கப்பன், டி. .. .. | .. இராமநாதபுரம். |
| 212 | தவமணி தேவர், வி. .. .. | .. சேடப்பட்டி. |
| 213 | தீர்த்தகிரி, ந. .. .. | .. ஹசூர் (செ.வ.) |
| 214 | தீர்த்தகிரி கவுண்டர், தி. .. | .. ஊத்தங்கரை. |
| 215 | திம்மராய கவுண்டர், தி. சி. .. | .. நாட்ராம்பள்ளி. |
| 216 | திப்பையா, டி.டி.எஸ். .. .. | .. மேட்டுப்பாளையம். |
| 217 | வடிவேலு, எஸ்.கே. .. | .. தொட்டியம். |
| 218 | வரதராஜன், என். .. | .. வேடசந்தூர். |
| 219 | வேதாசலம், மு. .. .. | .. வண்ணாரப்பேட்டை. (சென்னை மாநகரம்) |
| 220 | வீரமணி, சி. .. .. .. | .. சங்கரி (செ.வ.) |
| 221 | வீராசாமி, ந. .. .. | .. ஆர்க்காடு. |
| 222 | வேலப்பன், சி. வே. .. .. | .. கபிலமலை. |
| 223 | வெள்ளத்துரை, ஏ. .. .. | .. வாசுதேவநல்லூர். |
| 224 | வேலுசாமி, பி. .. .. | .. சிங்காநல்லூர். |
| 225 | வெங்கடாசல தேவர், பெ. .. | .. வேதாரண்யம். |
| 226 | வெங்கடசாமி, பி. .. .. | .. ஹோசூர். |
| 227 | வேழவேந்தன், கா. (அமைச்சர்) | .. கும்மிடிப்பூண்டி. |
| 228 | விஜய ரகுநாத தொண்டமான், மா.ஆர். | புதுக்கோட்டை. |
| 229 | விஜயராஜ், தா. .. .. | .. திருவண்ணாமலை. |
| 230 | விநயகம், கே. .. .. | .. திருத்தணி. |
| 231 | விசுவநாதன், செ. கோ. .. | .. செங்கற்பட்டு. |
| 232 | வில்லியம், எம். .. .. | .. கிள்ளியூர். |
| 233 | வெற்றிடம் .. .. .. | .. பெருந்துறை |
| 234 | வெற்றிடம் .. .. .. | .. கொளச்சல் |
| 235 | வெற்றிடம் | .. சேரன்மகாதேவி. |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.**

| பெயர். | |
|---|---|
| (2) | |
| திரு. என். வி. நடராசன் | .. அமைச்சர். |
| திரு. ப. உ. சண்முகம் .. | .. அமைச்சர் |
| திரு. எஸ். கோவிந்த சாமிநாதன் | .. தலைமை வழக்கறிஞர் |

*291 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இல்லாத பஞ்சாயத்து யூனியன்கள் எவை?

(இ) அவற்றில் எப்பொழுது முதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஒன்றுமில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

*292 வினா—திரு. கரு. சீமைச்சாமி: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் சின்னாளப்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட நிலம் இனாமாக கொடுக்கப்பட்டதா?

(இ) ஆம் என்றால், விபரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) சின்னாளம்பட்டி திரு. எல். கே. பி. லெக்ஷ்மணன் மேற்படி யூரில் ஆரம்ப சுகாதார நிலையமும், அதைச் சார்ந்த குடியிருப்புகளும் கட்டுவதற்காக 3.37 ஏக்கரா நிலத்தை தானமாகக் கொடுத்துள்ளார்.

திரு. டி. மார்டின்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்கள் பொதுவாக கிராமங்களில் இருக்கின்ற காரணத்தால் அங்கு பணியாற்றச் செல்லுகின்ற டாக்டர்களுக்கு 'ஸ்பெஷல் பே' என்ற வகையில் ஓரளவு அதிகச் சம்பளம்—பர்சனல் அசிஸ்டென்ட்களுக்குக் கொடுப்பதுபோல்—கொடுப்பதற்கான ஒரு திட்டம் ஏதாவது, ஆட்சியின் பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட திட்டம் எதுவும் இப்பொழுது பரிசீலனையில் இல்லை. பெரும்பாலும் மருத்துவர்கள் கிராமப்புறங்களில் போய் வசிப்பதற்குப் போதுமான அளவு குடியிருப்பு வசதி இல்லை என்ற குறைபாட்டைத்தான் அவர்கள் அடிக்கடி கோரிக்கையாக எடுத்து வைக்கிறார்கள். குடியிருப்பு இல்லங்கள் கட்டுவதற்கான முயற்சிகளில் அரசு ஈடுபட்டிருக்கிறது.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அ[illegible]களே, அமைச்சர் அவர்கள் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு [illegible]குமாரநல்லூரில் மருத்துவ மனை துவக்கப்பட்டதாகத் தெரிவித்தா[illegible]கள். அங்கே மருத்துவ மனை துவங்கிய பின்னர் பொதுமக்கள் ப[illegible]ரம் ரூபாயும் மருத்துவ மனைக் கட்டிடத்திற்காக ந[illegible]ாகப் பத்தா[illegible]ரை ஏக்கர்





பூமியும் கொடுத்திருக்கிறார்கள். குடும்ப நலத் திட்டத்தின் அடிப்படையில் இன்னும் ஒரு மருத்துவமனை கட்ட அரசாங்கம் முற்படுமா? அதை இந்த ஆண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அங்கே ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. அடுத்து ஒரு நிலையம் கட்டுவதுபற்றி பின்னர்தான் யோசிக்க வேண்டும்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் சொந்தக் கட்டிடம் இல்லாமல் வாடகைக் கட்டிடத்தில் இருக்கும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் எத்தனை? மாயூரம் ஒன்றியத்தைச் சேர்ந்த காளி என்னும் கிராமத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் வைப்பதற்கு ஏழாண்டு காலத்திற்கு முன்பே ஆறாயிரம் ரூபாய் பொதுமக்கள் பங்குத்தொகையாகக் கட்டியும் இதுவரையில் வேலை துவக்கப்படவில்லை. அதைத் துரிதப்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்த ஆண்டு முப்பது ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான கட்டிடங்கள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டு எத்தனை இடங்கள் என்பதைப் பொறுத்து, எங்கெங்கு ஐந்து ஏக்கர் நிலம் கிடைத்து, முன்பணமாகப் பத்தாயிரம் ரூபாய் கட்டியிருக்கிறார்களோ, அப்படிப்பட்ட இடத்தில் முதலில் எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வகையில் எந்த எந்த இடங்களில் துவக்கலாம் என்பதை இனித்தான் பார்க்க வேண்டும். மற்ற ஆரம்ப சுகாதார நிலையத்தைப்பற்றி உறுப்பினரவர்கள் குறிப்பிட்டார்கள். தனிக்கேள்வி போட்டால், அதனுடைய விவரம் சேகரித்துத் தரப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, Is there any proposal to open new primary health centres in villages this year. where there is no medical aid?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்பொழுது 334 பிளாக்குகளில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மொத்தம் 374 பிளாக்குகள் இருக்கின்றன. ஆகவே, மற்றவைகளில் அமைப்பதற்கான முயற்சி வருகின்ற ஆண்டுகளில், இருக்கின்ற நிதி வசதிகளைப் பொறுத்தும், ஆங்காங்கு கிடைக்கும் இட வசதியைப் பொறுத்தும் இருக்கின்றது. ஆகவே, சில கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் துவக்கலாம் என்றால் அங்கே கட்டிடங்கள் கிடைப்பதில்லை. அப்படிக் கட்டிடம் கிடைக்காத கிராமங்களை விட்டு விட்டு, மற்ற கிராமங்களில் அமைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடவேண்டியிருக்கிறது. எந்த ஊரில் வைப்பது என்ற அத்தகைய

[1970 மார்ச் 10

இடங்களில் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைப்பதற்காக, அந்த
இடங்களை உடனுக்குடனே ஜாரி செய்துகொள்ளக்கூடிய அளவுக்கு
உத்தரவு பிறப்பிக்கப்படுமா? மேலும், அந்த ஆரம்பச் சுகாதார
நிலையங்களில் ஒரே டாக்டர் இருப்பதால், இரவுபகல் என்று
பாராமல் உழைக்க வேண்டியிருப்பதால் அங்கு பணியாற்ற
வருவதற்குத் தயங்குகிறார்கள். ஆகவே, ஆரம்ப சுகாதார
நிலையங்களில் இரண்டு டாக்டர்களைப் போட ஏற்பாடு செய்யப்
படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே,
ஆங்காங்கு புறம்போக்கு நிலங்கள் இருக்குமானால், அந்த
இடங்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அமைக்கும் முயற்சிகள்
நடைபெற்றுவருகின்றன. சில இடங்களில் கோயில்களுக்குச்
சொந்தமான நிலங்கள் இருந்து அங்கே ஆரம்பச் சுகாதார
நிலையம் ஏற்படுத்த வேண்டிய அவசியம் இருந்தால், அறநிலையத்
துறையினரோடு பேசி அந்த நிலம் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்
கிறது. ஆரம்பச் சுகாதார நிலையங்களில் ஒரு டாக்டருக்குப்
பதிலாக இரண்டு டாக்டர்களைப் போட வேண்டும் என்று
உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒரு டாக்டர்கூட
இல்லாமல் இருந்த இடத்தில் ஒரு டாக்டராவது இருக்கிறாரே
என்று நாம் ஆறுதல் அடைய வேண்டும். 374 ஒன்றியங்களிலும்
ஆரம்பச் சுகாதார நிலையங்களை அமைக்கும் முயற்சியில் கவனம்
செலுத்த வேண்டியிருக்கிறது. அதற்குப் பிறகு இரண்டு
டாக்டர்களைப் போட வேண்டும் என்பதில் கவனம் செலுத்த
வேண்டும். ஒரு சில இடங்களிலே ஆரம்பச் சுகாதார நிலையங்கள்
ஆரம்பிக்கப்படாமலே இருக்கின்றன. ஆகவே, அவற்றில் முதல்
கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே,
டாக்டர்களாக பொறுப்பு ஏற்கிறவர்கள் எல்லாம் நகர்ப்புறங்
களிலே பணியாற்றத்தான் விரும்புகிறார்கள். அவர்கள் ஆரம்பச்
சுகாதார நிலையங்களுக்குப் போக விரும்புவதில்லை. ஆகவே, அவர்
கள் அந்த நிலையங்களில் போய்ப் பணியாற்றுவதற்காக அவர்
களுக்கு அதிக ஊதியமும், படியும் கொடுக்க வழிவகை செய்யப்
படுமா ? அடுத்து, சின்னாளம்பட்டியில் ஆரம்பச் சுகாதார நிலையம்
ஆரம்பிக்க ஒருவர் நிலம் கொடுத்திருக்கிறார். அந்த நிலம் எப்
போது கொடுக்கப்பட்டது ? அந்த நிலத்தில் கட்டடம் கட்டி முடிக்
முடிக்கப்பட்டதா ? இல்லையெனில் எப்போது கட்டி முடிக்கப்படும்?
அந்த இடத்தில் எப்போது மருத்துவ மனை ஆரம்பிக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே,
முதலிலே சொன்னபடி அப்படி ஒரு யோசனை இருந்து வருகிறது.
நகர்ப்புறங்களில் பணியாற்றும் டாக்டர்களைவிட கிராமங்களுக்குச்
செல்லும் டாக்டர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுத்தால், கிராமங்
களுக்குச் செல்வார்கள் என்று சொல்வது தவறு. சம்பளத்தை
விட, டாக்டர்களுக்குப் போதுமான குடியிருப்பு வசதிகள் இல்லை
யென்பதுதான் குறை. ஆகவே, இதிலே கவனம் செலுத்தி, அவர்



1970 மார்ச் 10]

களுக்கு க்வார்ட்டர்ஸ் கட்டுவதன் மூலமாக டாக்டர்களை கிராமப்
புறங்களுக்கு வரவழைக்கலாம். மேலும், படித்துவிட்டு வெளி
வருகிற டாக்டர்களை இரண்டு ஆண்டுக் காலம் கட்டாயமாக
கிராமப்புறங்களில் பணியாற்றச் செய்யவேண்டும், என்று சொன்ன
யோசனை பரிசீலனையில் இருந்து வருகிறது. இப்போது 341 ஒன்றி
யங்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்களிலே டாக்டர்கள் இருந்து
வருகிறார்கள். எதிலும் டாக்டர்கள் இல்லையென்ற குறைபாடு
இப்போது இல்லை. சின்னாளம்பட்டியில் நிலம் கொடுக்கப்பட்டது
பற்றிச் சொன்னார்கள். அங்கு ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்
கும்படியான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அந்தத்
தற்போது என்னிடத்தில் இல்லை. தனிக்கேள்வி போட்டால் விவரம்
திட்டம் இந்த ஆண்டில் சேர்க்கப்பட்டிருக்கிறதா என்ற விவரம்
அளிக்கப்படும்.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு
பஞ்சாயத்து யூனியனிலே ஒரு ப்ரைமரி ஹெல்த் சென்ட்டர்தான்
இருக்கலாம் என்ற விதி இருக்கிறது. இரண்டு அல்லது மூன்று
ப்ரைமரி ஹெல்த் சென்ட்டர் இருப்பதற்கு ஏன் அனுமதி கொடுக்
கக்கூடாது ? ஒரு பஞ்சாயத்து யூனியனிலே பெரிய ஊர்கள் இருக்
கலாம், சிறிய ஊர்களும் இருக்கலாம். ஆகவே, ஒரு பஞ்சாயத்து
யூனியனுக்கு ஒரு ப்ரைமரி ஹெல்த் சென்ட்டர் என்ற விதியை
மாற்ற அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே,
ஒரு பஞ்சாயத்து யூனியனிலே ஒரு ஆரம்பச் சுகாதார நிலைய
மாவது இருக்க வேண்டுமென்பது கட்டாயம். முன்னூற்று எழு
பத்து நான்கு ஒன்றியங்களிலும் ஆரம்பச் சுகாதார நிலையங்களை
ஏற்படுத்த முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இப்போது
கூட 7 ஊராட்சி ஒன்றியங்களில் இரண்டு ஆரம்பச் சுகாதார நிலை
யங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. மேற்கொண்டு 40 ஊராட்சி
ஒன்றியங்களில் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்கப்பட வேண்டி
யிருக்கிறது. அதற்குப் பிறகு அங்குள்ள நெருக்கடி நிலைமை,
தேவை, இவைகளை உத்தேசித்து இரண்டு இருக்கலாமா என்
பதைப்பற்றி யோசிக்கலாம்.

**திரு. எம். சுரேந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே,
அமைச்சர் அவர்கள் பதில் கூறுகின்றபொழுது நிலமும், பத்தா
யிரம் ரூபாயும் கொடுத்தால், அந்த இடத்தில் ஆரம்பச் சுகாதார
நிலையக் கட்டடம் கட்டுவதற்காக ஏற்பாடு செய்யப்படும் என்று
கூறினார்கள். நங்கவல்லியில் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம்
வாடகைக் கட்டடத்தில் இருந்து வருகிறது. நிலமும், வசதிகளும்
அளிப்பதாகக் கூறியும் இன்னும் அங்கு கட்டடம் கட்டுவதற்கான
ஏற்பாடு செய்யவில்லை. அடுத்தாற்போல் அமைச்சர் அவர்கள்
மருந்துகள் பகிர்ந்தளிப்பதைப்பற்றிக் கூறினார்கள். அந்தந்த
யூனியனிலே இருக்கும் ஜனத்தொகையின் அடிப்படையில் அல்லது
நோயாளிகள் எண்ணிக்கை தன்மையின் அடிப்படையில் கணக்

பிரச்சினையும் இருக்கிறது. எந்த எந்த இடங்களில் வைப்பதற்குச் சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவோ, அந்த இடங்களில் வைக்க லாம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** டாக்டர்களை எந்த பிரைமரி ஹெல்த் சென்டருக்கு போகவேண்டும் என்று சொன்னாலும் அவர்கள் அங்கே போய் வேலை செய்தாகவேண்டும் என்று கட்டாய மாக ஆணை பிறப்பிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட ஒரு யோசனையும் சொல்லப்பட்டு வருகிறது. அது பற்றி ஆராயும்படியாக நான் மருத்துவத் துறை இயக்குநர் அவர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். மருத்துவர்கள் இரண்டு ஆண்டு, மூன்று ஆண்டுக்காலம் கிராமப்புறங்களில் பணி புரிந்த பின்னர்தான் நகர்ப்புற மருத்துவ மனைக்கு வரவேண்டும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது பரிசீலனையில் இருந்து வருகிறது.

**திரு. அ. ஆறுமுகம் :** அமைச்சரவர்கள் இந்த ஆண்டு ஐம்பது பிரைமரி ஹெல்த் சென்டர்கள் ஆரம்பிக்க இருப்பதாகச் சொல்லி யிருக்கிறார்கள். மாவட்டத்தில் எந்த எந்த இடங்களில் அவை ஆரம்பிக்கப்படும் என்று மாவட்ட வாரியாக உள்ள விவரங்கள் அளிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஐம்பது அல்ல. 334 ஒன்றியங்களில் இப்பொழுது ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. 374 ஒன்றியங்களிலும் வைப்பதற்கான திட்டங்கள் இருக்கின்றன. சில ஊர்களில் இடம் கிடைக்கவில்லை. சில ஊர்களில் இடம் தெரிந்தெடுக்கப்பட்ட பிறகும்கூட, கட்டி டங்கள் கொடுக்க முன்வராத காரணத்தால் தேங்கியிருக்கின்றன. அந்த வகையில் சிலபல இடங்களில் இருக்கின்றனவே தவிர, வசதி களும் வாய்ப்புகளும் ஏற்படுகின்ற இடங்களில் சுகாதார நிலையங் களை அமைக்க எல்லா முயற்சிகளும் அரசு எடுத்துக் கொள்ளும்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** ஐயா, ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க மூன்று ஏக்கர் நிலம் கொடுக்கவேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கின்றது. கிராமங்களில் மூன்று ஏக்கர் நிலம் கிடைப்பது அரிதாக இருப்பதால், மூன்று ஏக்கர் தரவேண்டும் என்ற விதியைத் தளர்த்தி ஒன்றரை ஏக்கர், இரண்டு ஏக்கர் விஸ்தீரணம் இருந்தாலும் சுகாதார நிலையம் கட்ட அரசாங்கம் ஆலோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மூன்று ஏக்கர் அல்ல; ஐந்து ஏக்கர் வேண்டும் என்பதுதான் விதிக் கப்பட்டிருக்கிற நிபந்தனையாகும். ஐந்து ஏக்கர் நிலமும் பத்தா யிரம் ரூபாயும் கட்டவேண்டும் என்ற நிபந்தனை இருந்தாலும், அரசு



ஒன்றரை இலட்ச ரூபாய் அதற்காகச் செலவழிக்கவேண்டியிருக் கிறது. ஐந்து ஏக்கர் நிலம் என்பது ஆரம்ப சுகாதார நிலையத் திற்கு மட்டுமல்ல. ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான கட்டிடங்கள் கட்டுவது மட்டுமல்லாமல், அங்கே குடும்ப நலத் திட்டத்திற்கான கட்டடம் கட்ட 92,000 ரூபாய் இந்திய அரசு வழங்குகிறார்கள். அந்தப் பணத்தை வாங்கி, ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கும் இடங்களில் குடும்ப நலப் பிரிவையும் அங்கே துவக்கி, டாக்டர் களுக்கும்—குறிப்பாக பெண் டாக்டர்களுக்கு—குடியிருப்பு வசதி யளிப் பதற்காகக் கட்டடம் கட்டுவதற்கான முயற்சியும் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. இதற்கெல்லாம் ஐந்து ஏக்கர் நிலம் தேவைப் படுகிறது. ஐந்து ஏக்கர் ஓரிடத்தில் கிடைக்க வில்லை என்றால், வேறு எங்கு ஐந்து ஏக்கர் நிலம் கிடைக்கிறதோ, அந்த ஊராகப் பார்த்து அந்த ஊரில் துவக்கவேண்டியிருக்கும். ஐந்து ஏக்கர் நிலமும் பத்தாயிரம் ரூபாயும் எந்த ஊரில் கிடைக் கிறதோ, அந்த ஊருக்கு ஆரம்ப நிலையம் அமைக்கும் வகையில் மாற்ற வேண்டி வரும்.

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவர் அவர்களே. இப்பொழுது ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருந்து கிடைக்காத அளவிற்கு யூனியனில் பணம் ஒதுக்கவில்லை என்று பொதுமக்களிடம் பிரசாரம் செய்கிறார்கள். ஆனால், யூனியன் சேர்மனாக இருப்பவர் காங்கிரஸ்காரராக இருப்பதால், இந்த ஆட்சிக்குக் கெட்ட பெயர் உண்டாக்கவேண்டும் என்று மருந்துக் குத் தொகை ஒதுக்காமலிருப்பதுபற்றிய புகார் ஏதாவது அரசுக்கு வந்துள்ளதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, பொதுவாக நாம் நம்முடைய வரவு செலவுத் திட்டங்களை, தேவை களை நிறைவேற்றுகின்ற அளவுக்குப் போடுகின்ற நிலையில் மாநில அரசைப் பொறுத்த அளவிலோ மத்திய அரசைப் பொறுத்த அளவிலோ இல்லை. கிடைக்கிற வசதியை வைத்துக்கொண்டு பகிர்ந்தளிக்கும் முறையில்தான் வரவு செலவுத் திட்டம் அமைக் கின்றோம். ஓராண்டுக்கு மருந்துக்கு இவ்வளவு தொகை என்று ஒதுக்குகிறார்கள். அதை எல்லாம் மாவட்டங்களிலும் உள்ள மருத்துவ மனைகளுக்கென்று நாம் ஒதுக்கித் தருகின்றோம். ஆக. இருக்கும் மருந்துகளின் தன்மையை வைத்துக்கொண்டு ஆங்காங்கு இருக்கும் டாக்டர்கள் சாமர்த்தியமாக அந்த ஆண்டைப் போக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். சில இடங்களில் தாராளமாகச் செலவழிக்கின்ற நிலைமைகள் ஏற்படும் போது பற்றாக்குறை ஏற்படுகிறது. பற்றாக்குறை ஏற்படுகிற இடங்களில் கூடுதலான மருந்துகள் தருவதற்கான முயற்சியை மேற்கொள்ளவேண்டுமென்று இயக்குநருக்கு அடிக்கடி உத்தர விடப்பட்டு வருகிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** பேரவைத் தலைவர் அவர்களே, புறம்போக்கு நிலங்களும், சில இடங்களில் கோயில்களுக்கும் மடங்களுக்கும் சொந்தமான நிலங்கள் இருக்கின்றனவே, அந்த

THIRU K. S. KOTHANDARAMIAH : About eight sheep breeding centres are closed in Hosur taluk. Government have constructed a number of buildings. Since these centres are closed, the buildings are in a ruinous condition. Hosur has got a congenial climate and facilities for sheep breeding. Under the circumstances will the Hon. Minister think of reviving the closed sheep centres?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அப்படி ஒன்றும் இப்போது யோசனை இல்லை.

### முட்டைப்பொடி தயாரிப்பு

* 298 வினா—திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு உணவு, வணிக வரித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முட்டைப் பொடி ( Egg Powder ) செய்யும் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் ஏதேனும் தமிழக அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எந்த நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

### கைத்தறி துணிக்கு விற்பனைக்கழிவு வீதத்தில் உயர்வு

* 299 வினா— திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

தீபாவளி, பொங்கல் போன்ற விசேஷ நாட்களில் கதர்த் துணிக்கு தரப்படுகின்ற அளவுக்குக் கைத்தறி துணிக்கும் விற்பனை கழிவு (ரிபேட்) உயர்த்தும் உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, கதரைவிட கைத் தறியில் அதிகமான தொழிலாளர்கள் ஈடுபடுகிற காரணத்தினால், அவர்கள் மீது கருணை காட்டி இவர்களுக்கும் அதிகமான ரிபேட் வழங்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கதருக்கென்று ஒரு வாரியம் தனியாக இருக்கிறது. மத்திய அரசாங்கம் அதற்கென்று தனித் திட்டம் வகுத்திருக்கிறார்கள். கைத்தறிக்கு அது அனுமதிக்கப்படு வதில்லை.

**திரு. சி. வீரமணி :** தீபாவளி சமயத்தில், பொங்கல் சமயத்தில் கதர் கைத்தறிகளுக்கு ரிபேட் கொடுப்பதுபோல—கையினால் செய் யப்படக்கூடிய மிதி அடிகளுக்கும், அவை இயந்திரத்தினால் செய்





யப்படுகிற மிதியடிகளோடு போட்டியிட முடியாத காரணத்தினால் —கையால் செய்யப்படுகிற பொருள்களுக்கு ரிபேட் வழங்க முன் வருவார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கைத்தறிகளுக்குத்தான் ரிபேட் கொடுத்துவருகிறோம்.

**திரு. சி. கோவிந்தராஜன் :** தீபாவளி, பொங்கல் சமயத்தில் கதர் துணிகள் பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்கள், சிப்பந்திகளுக் குக் கடனாக வழங்கப்படுகிறது. அதுபோல கைத்தறித் துணிகள் வழங்குவார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்த ஆண்டு கைத்தறித் துணிக்கும் அந்த வசதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். கருப்பையா :** கதர் வாரியம் இருப்பதுபோல் கைத் தறி வாரியம் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த அரசு மத்திய அரசுக்குச் சிபார்சு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதற்குத் தனி வாரியம் தேவையில்லை. இப்போதே மாநில சங்கம் இருக்கிறது. ஹான்ட் லூம்ஸ் டைரெக்டர் இருக்கிறார். இரண்டும் சேர்ந்து உதவி புரிகிறது.

**திரு. எம். எஸ். மணி :** மில்லில் நூற்கப்பட்ட நூலை தறியில் நெய்வது கைத்தறி. நூலையும் கையினாலேயே நூற்றுக்கொண்டு தறியில் நெய்வது கதர். அதைவிட இதற்கு அதிக கை உழைப்பு இருக்கிறதினால் இன்னும் அதிக உதவி அளிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கனம் அங்கத்தினர் கதருக்கு வாதாடுகிறார்கள்.

### *Clay Toys Unit at Perambur*

* 300 Q.—THIRU K. SAHADEVA KANDER : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether the Government Glazed Clay Toys Unit is functioning at Perambur, Madras; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) இப்பிரிவு 1961 முதல் செயல்பட்டு வருகிறது. அழகு வேலைப்பாடமைந்த மண்பாண்டத் தயாரிப்புக் கலையில் நாட்ட முள்ள தெரிந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு அது பயிற்சி அளிக் கிறது. ஆண்டுதோறும் 10 மாணவர்கள் இப்பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். ஒவ்வொரு மாணவருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 40 உதவிப் பணம் வழங்கப்படுகிறது. அழகு வேலைப் பாடமைந்த மட்பாண்டத் தொழிலிலும், அன்றாடப் பயனுக்கான மட்பாண்டத் தொழிலிலும் புதிய வடிவமைப்பு மாதிரிகளைத் தயா ரிக்கும் பணியும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது.

கிட்டு பகிர்ந்தளிக்கப்படுகிறதா? அப்படி பகிர்ந்தளிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, நங்கவல்லியில் ஆரம்பச் சுகாதார நிலையம் இந்த ஆண்டு எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறதா என்ற விவரம் தற்போதும் என்னிடத் தில் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் விவரம் தரப்படும். மருந்துகள் பகிர்ந்தளிப்பதைப்பற்றிச் சொன்னார்கள். ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு நோயாளிகள் எவ்வளவு பேர் வருகிறார் கள், அந்த நிலையத்திற்கு எவ்வளவு மருந்து தேவைப்படும் என்பதை இரண்டு மூன்று ஆண்டுகளின் சராசரி அளவைக் கணக் கிட்டு வழங்குகிறோம். அந்த இடத்திலுள்ள ஜனத்தொகையின் அடிப்படையில் மருந்துகள் அந்த நிலையங்களுக்கு வழங்கப்படு வதில்லை.

**திரு. கொளத்தூர் கோதண்டம்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்து ஏக்கர் நிலமும் பத்தாயிரம் ரூபாயும் கொடுத்தால் ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கான கட்டடங்கள் கட்ட ஏற்பாடு செய்யப் படும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். பத்தாயிரம் ரூபாய்க்குப் பதிலாக 15 ஆயிரம் ரூபாய் கொடுக்கும் இடங்களுக்கு முதல் சலுகை அளித்து, அந்த இடங்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்களை அரசு ஏற்படுத்துமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அப்படி முதல் சலுகை அளிப்பதற்கில்லை. இந்த ஆண்டு இடமும் பணமும் கொடுத்த இடங்களில் 30 நிலையங்கள் கட்ட மார்ச் மாதத் திற்குள்ளாக அனுமதி கொடுக்கப்பட்டு, நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆகவே, இடமும் பணமும் கொடுக்கிற இடங்களில் அடுத்த ஆண்டிலே துவக்க ஏற்பாடுகள் செய்யப்படும். பாகிஸ்தான் போர் ஏற்பட்டதாலே இடையிலே இது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. சென்ற ஆண்டிலிருந்து இந்தத் திட்டம் மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட் டிருக்கிறது. வாடகைக் கட்டடத்தில் இருப்பவைகளிலும் சில எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆண்டுக்கு 30 ஆரம்பச் சுகாதார நிலை யங்கள் அமைக்க வழி செய்யப்பட்டிருக்கின்றன. இனி, 40, 50 நிலை யங்கள் என்ற அளவில் அமைக்க வகை செய்யப்படும். அடுத்த ஆண்டில் 40 நிலையங்கள் அமைக்க வகை செய்யப்படும். அதற்கான வரைவுத் திட்டம் ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு ஆணையர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. கே. விநயகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்கப்படுகிறபோது ஒரு யோசனை இருந்தது. அதாவது, எந்தெந்த பிளாக்கிலே சுகாதார நிலையம் இல்லையோ அங்கெல்லாம் மொபைல் ஹெல்த் வேனிலே டாக்டர் ஒருவர் மருந்துகளுடன் சென்று, அந்தக் கிராமங்களுக்குப் போய் சிகிச்சை செய்யவேண்டும் என்பது. அந்த யோசனை இப்பொழுது





கடைப்பிடிக்கப்படுகிறதா? இல்லையென்றால் ஏன் கடைப்பிடிக் கப்படவில்லை? எனது தொகுதியில் இருக்கும் ராமகிருஷ்ணாராஜ பேட்டையும் அம்மையார்குப்பமும் தொலைவில் இருக்கிறது. ஆகவே, இனிமேலாவது மொபைல் ஹெல்த் வேன் அங்கு அனுப்பி, சிகிச்சை செய்யும் முயற்சியை நமது அரசு செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்பு தற்போது என்னிடத்தில் இல்லை. உறுப்பினர் அவர்கள் திருத்தணி பகுதியில் மொபைல் வேன் அனுப் புவதற்கான முயற்சிகள் இருக்கின்றதா என்று கேட்டதற்கான விவரக் குறிப்பு தற்போது இல்லை. அங்குள்ள குறைபாடுகளை கவனத்திற்குக் கொண்டுவந்தால், அவைபற்றி சிந்தித்து ஆராய்ந்து பார்க்கலாம். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலும் வேன் இல்லை. மொபைல் வேன் ஒருசில இடங்களில் இருப்பதால், அவர்கள் மூன்று நான்கு இடங்களுக்குப் போக வேண்டியிருப்ப தால் போய் விடுகிறார்கள். ஒரு ஒன்றியத்திலிருந்து இன்னொரு ஒன்றியத்திற்கும் போகவேண்டிய நிலைமை இருக்கிறது. ஒவ் வொரு நிலையத்திற்கும் ஒரு மொபைல் வேன் வைக்கப்படுகிற யோசனை பரிசிலிக்கப்படவேண்டி வந்தால், அதுபற்றி பரிசீலிக்கப் படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள் 293, 294 ஆகியவை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

### மேட்டூர் வேளாண்மைப் பள்ளிக் கட்டடம்.

* 295 வினா—திரு. எம். சுரேந்திரன்: மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூரில் உள்ள வேளாண்மை பள்ளிக் கட்டிடம் சீர் குலைந்து இருப்பது அரசாங்கத்துக்கு தெரியுமா?

(இ) இதைச் சீர்படுத்தி நல்ல கட்டடமாகக் கட்டுவதற்கு அரசாங்கத்திடம் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(உ) ஆம் எனில், அதற்காக மதிப்பிடப்பட்டுள்ள செலவு எவ்வளவு?

(எ) அது எப்பொழுது கட்டி முடிக்கப்படும்?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** (அ) ஆம்.

(இ) மேட்டூர் அணையிலுள்ள வேளாண்மை பள்ளியின் ஓலை வேய்ந்த கூரையில் ஒழுகல் கண்டது. கூரையைப் பழுது பார்க்க ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(உ) & (எ) வினாக்களுக்கு இடமில்லை.

**திரு. எம். சுரேந்திரன்:** இன்று விவசாயத்துறையை விரிவு படுத்தி நல்ல முறையில் செய்யவேண்டுமென்று நினைக்கிறபோது அதற்கான பயிற்சி அளிக்கிற இடம் விரிவாகவும், சுத்தமாகவும்

[1970 மார்ச் 10

**திரு. கே. சகாதேவக் கண்டர் :** தலைவர் அவர்களே, இந்த களி மண்ணால் பொம்மைகள் செய்யப்படுகின்றன. இன்னும் சில இடங் களில் இப்படிப்பட்ட மண் இருப்பதாகத் தெரிகிறது. அப்படிப் பட்ட இடங்களிலும் இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை ஆரம்பிக்க அரசு ஆவனசெய்ய முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நாம் அமைத்திருப்பது டிரெயினிங்-கம்-புரடக்ஷன் சென்டர். இதிலே பயிற்சி கொடுக்கப் படுகிறது. வேறு எங்காவது தொடங்கலாம் என்று யாராவது முன் வந்தால் அவர்களுக்கு உதவி செய்யலாம்.

**மாமல்லபுரம் அரசினர் சிற்பக்கலைப் பயிற்சிப் பிரிவு**

*301 **வினா—திரு. என். சங்கரய்யா :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) மாமல்லபுரத்திலுள்ள அரசினர் சிற்பக்கலைப் பயிற்சி நிலைய மாணவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் மாத உதவித் தொகையை ரூ. 60-5-75 என்ற விகிதத்திற்கு உயர்த்தும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசிலனையில் உள்ளதா ?

(இ) இப்பள்ளியில் படித்துத் தேறுகின்றவர்களுக்கு தேவஸ் தானங்களில் சிற்பிகளாக பணிபுரியும் வேலைவாய்ப்புக் கிடைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(உ) செங்கல் கலைக் கட்டடத்துறையிலும், சுதையிலிருந்து பிம்பங்கள் செய்யும் துறையிலும் இம்மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசிலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) மாத உதவித் தொகையை ரூ. 60 ஆக எல்லா மாணவர்களுக்கும் உயர்த்தும் செயற்குறிப்பு அரசாங்கத்தின் பரிசிலனையில் உள்ளது.

(இ) ஆம்.

(உ) ஆம்.

**வேலூர் தாலுக்கா, சதுப்பேரி குளத்திற்கு வரும் கால்வாயைத் தூர் எடுத்தல்**

*302 **வினா—திரு.** மா. பா. சாரதி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு, வேலூர் தாலுக்காவில் இருக்கும் சதுப் பேரிக்கு மழைக் காலத்தில் பாலாற்று நீரைக் கொண்டு வரும் கால் வாயை மராமத்து செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது ?



1970 மார்ச் 10]

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) & (இ) வட ஆற்காடு மாவட்டத்தில் வேலூர் தாலுக்காவில் சதுப்பேரி குளத் திலும், சதுப்பேரி குளத்திற்கு வரும் கால்வாயிலும் தூர் எடுப்பதற் காக பஞ்ச நிவாரணத் திட்டத்தின் கீழ் ரூ. 27,300-க்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு வேலைகள் முடிவடைந்து விட்டன.

**அணைக்கட்டுகள்**

*303 **வினா—திரு. பி. ஜெயராமன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

வட ஆர்க்காடு மாவட்டம் பேரணம்பட்டு தொகுதி பத்தர பள்ளி, மோர்தாணு இரண்டு அணைக கட்ட அரசு எடுத்த நடவ டிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பத்தரப்பள்ளி கிராமத்தின் அருகில் மலட்டாற்றின் குறுக்கே ஒன்றும், மோர்தாணு கிராமத்தின் அருகில் கௌண்டிய நதியின் குறுக்கே மற்றொன்றும் ஆக இரு நீர்த் தேக்கங்கள் அமைப்பதற்கான திட்டங்கள் ஏற் கனவே பரிசீலிக்கப்பட்டன.

இவ்விரு திட்டங்களை எடுத்துக் கொள்ளுவது பாலாறு வடி நிலத்தின் நீரியல் அமைப்பினை நன்றாக ஆய்வு செய்து முடிக்கும் வரையில் தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

**திரு. பி. ஜெயராமன் :** தலைவர் அவர்களே, பேரணம்பட்டுத் தொகுதியில் பத்திரபள்ளி, மோர்தாணு என்ற இரண்டு அணைகளைக் கட்டுவதாக காமராஜர் குடியாத்தத்திலே தேர்தலில் நின்ற நேரத்திலே அப்பொழுதே மக்களுக்குச் சொன்னதால் மக்கள் பேரார்வம் கொண்டு நம்முடைய தொகுதியிலே காமராஜர் வந்து அணைகட்டுகிறார் என்று ஆசையோடு இருந்தார்கள். அது நடை பெறவில்லை. நம்முடைய ஆட்சியிலே அணை கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். அந்த மக்களுடைய எண் ணத்தை நிறைவேற்ற அரசு துரிதமாக அந்த அணைக்கட்டுகளைக் கட்டிமுடிப்பதற்கு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அவர் சொல்லி விட்டுப் போய்விட்டார். நாம் இப்பொழுது அதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், சட்டப்படி 2 ஏக்கருக்கு ஒரு டன் நெல் உற்பத்தியாகிறது என்று சொன்னால் அதற்கு 3 ஆயிரம் ரூபாய் என்ற அடிப்படையிலே அணை கட்டவேண்டும். ஆனால் இந்த இன்வெஸ்டிகேஷன் நடத்திய அடிப்படையைப் பார்க் கக்கூடிய நேரத்திலே 1,500 ரூபாய்க்கு அடங்குகிறது. அப்படி இருந்தும், 4 ஆயிரம், 10 ஆயிரம் ரூபாய் அளவிலே டாம்களைக்

[1970 மார்ச் 10

இருக்கவேண்டியது அவசியமாகிறது. ஆகவே கூரைகளை நீக்கி
நல்ல ஓட்டுக் கட்டடமாகச் செய்வதற்கு விரைவில் ஏதாவது
நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இம்மா
நிலத்தில் மொத்தம் 14 வேளாண்மைப் பள்ளிகள் இருக்கின்றன.
மூனறுக்கு நிரந்தரமான கட்டடம் அமைக்கப்பட்டிருக்கிறது.
1969–70-க்கு ஒரு லட்சம் ஒதுக்கி மேலும் இரண்டுக்கான கட்டடம்
கட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மேலும் இவ்வாண்டில் 2
பள்ளிக்கான கட்டடம் கட்டப்படும். இப்படி முறையாக அதுபற்றி
கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

### விவசாயக் கிடங்குகள்.

* 296 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு வேளாண்மை
அரிசனநல அமைசசர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை
யளிப்பாரா—

மாவட்ட விவசாய அதிகாரிகளின் கண்காணிப்பில் இயங்கி
வரும் விவசாயக் கிடங்குகள் ( Agricultural Depots ) இலாப
கராமாக இயங்கி வருகின்றனவா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** விவசாயத்
திற்கு வேண்டிய பொருக்கு விதை, உரம் மற்றும் ஏனைய உபகர
ணங்களை விவசாயிகளுக்கு வழங்கும் பொருட்டேயன்றி இலாப
நோக்கோடு அரசாங்கம் விவசாயக்கிடங்குகளை இயக்கிவருவ
தில்லை. ஆகவே இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, எத்தனை விவசாயக்
கிடங்குகள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன என்பதை
யும், விவசாயக் கிடங்குகள் இல்லாத இடங்களில் கிடங்குகளை ஏற்
படுத்த என்ன வாய்ப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட
இருக்கிறது என்பதையும் தெரிவிக்க முடியுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** எத்தனை
கிடங்குகள் இயங்கி வருகின்றன என்கிற விவரம் இல்லை. புதிய
துணைக் கிடங்குகள் துவங்கப்பட வேண்டுமென்றால், மூலக் கிடங்கு
களுக்கும் இப்போதுள்ள துணைக் கிடங்குகளுக்கும் உள்ள தொலை
தூரம், மூலக் கிடங்கில் நடக்கும் வியாபாரம், துணைக் கிடங்கு
ஏற்படுத்தியாக வேண்டிய அவசியம், பஞ்சாயத்து யூனியன் தீர்மா
னம் இவற்றின் அடிப்படையில்தான் துவங்க வேண்டும்.

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி :** ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன்
தலைநகரில்தான் அரசினர் கட்டிடங்களில் கிடங்குகள் இருக்
கின்றன. மற்றவை பெரும் பகுதி மாதம் 75, 100 ரூபாய் வாடகை
என்று வாடகைக் கட்டிடங்களில் இருக்கின்றன. வருஷத்தில் 750
ரூபாய் வாடகை என்றால் நான்கு ஐந்து வருடத்தில் வாடகை
மட்டும் எவ்வளவு ஆகிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியைப் போடுங்கள்.



1970 மார்ச் 10]

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி :** ஆகவே, வாடகை இல்லாமல்
சொந்தக் கட்டிடத்திலேயே இயங்க அங்கங்கே விவசாயக் கிடங்கு
களுக்கான கட்டிடத்தைக்கட்ட அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** எல்லா
வற்றுக்கும் நிரந்தரமான சொந்தக் கட்டடம் கட்ட இப்போது
ஏற்பாடு இல்லை.

**திரு. சோ. அழகர்சாமி :** விவசாயிகள் விவசாய கிடங்கு
களுக்குப் போகிறபோது பிற்பகல்—உணவு நேரம் என்று கிடங்குப்
பணியாளர்கள் அதைப் பூட்டிக்கொண்டு போகிற நிலை இருக்கிறது.
அப்படியின்றி ஷிப்ட் முறையில் தொடர்ந்து காலை முதல் மாலை
வரை இயங்க விவசாயக் கிடங்குகளின் பணியாளர்களை அதிகப்
படுத்த அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அப்படிப்
பட்ட புகார்கள் விவசாயிகள் மத்தியில் இருந்து வந்ததாகத் தெரிய
வில்லை. எனினும் அரசாங்கம் இதுபற்றி பரிசீலிக்கும்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** அமைச்சர் அவர்கள் பதில் சொல்
லும் போது லாப நோக்கத்தோடு மட்டும் இவை செயல்படவில்லை
என்று சொன்னார்கள். நாம் இப்போதே 6 கோடிக்கு வரிகளை
உயர்த்தியிருக்கிறோம். இவற்றினால் நஷ்டம் ஏற்படாத அளவுக்
காவது பார்த்துக்கொள்ள முயற்சி எடுத்துக்கொள்வார்களா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அதிக
நஷ்டம் வந்தால் கிடங்குகளை மூடத்தான் வேண்டும். நஷ்டம்
வராது பார்க்க நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

### *Sheep breeding unit at Ootacamund.*

* 297 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR:
Will the Hon. the Minister for Food and Commercial Taxes be
pleased to state—

(a) whether the sheep breeding unit at Ootacamund has been
closed; and

(b) if so, the reasons for this step?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) இல்லை, ஐயா.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** நீலகிரியில் வளர்க்கப்படுகிற
ஆடுகளின் தரம் நம்முடைய விவசாயிகளைக் கவர்வதாக இருப்பத
னால் மீண்டும் அதை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நீலகிரியில் வளர்க்கப்படு
கிற ஆடுகள் குறைந்து வருகிறதென்றுதான் அரசாங்கம் அவற்றை
அபிவிருத்தி செய்ய முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறது.

36 per cent interest is being charged by them and whereas they go to most of the unfortunate Government servants before the latter draw their salary on the first of every month and threaten them, what steps will this Government take to protect such kind of unfortunate Government servants?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** இதைச் சீர்குலைக்கும் வகையில் ஒருசிலர் ஈடுபடுகிற முயற்சியில் பணம் வாங்குகின்றவர்களும் அவர்களோடு ஒத்துழைக்கின்ற நிலைமை இருக்கிறது. ஆனாலும் சரியாக நடந்து கொள்ளாதவர்கள் மீது அவ்வப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. எம். எஸ். மணி:** பட்டாணியர்களுக்கு ஆறுமாதக் கடன்காரர்கள் என்று பெயர் இருக்கிறது. 100 ரூபாய் கடன் கொடுத்துவிட்டு 300 ரூபாய் கடன் வாங்கியதாக லெட்ஜரில் கணக்கு எழுதுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** லெட்ஜர் வைத்திருக்கவேண்டும், ரசீது வைத்திருக்கவேண்டும். இதிலே தவறு இருந்தால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் 16 பட்டாணியர்கள் லைசென்ஸ் இல்லாமல் தொழில் நடத்தியதாகக் கேள்விப்பட்டு அதற்குத் தகுந்த நடவடிக்கையைக் கலெக்டர் அவர்கள் எடுக்கவேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறோம். அவர்களும் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

### மின்சார வரி குறைப்பு

* 308 வினா—திரு. கரு. சீமைச்சாமி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அனல் மின்சாரப் பகுதிகளிலுள்ள தொழிற்சாலைகளுக்கு சமீபத்தில் தமிழக அரசு 10 சத மின்சார வரி ரத்து செய்ததா?

(இ) ஆம் என்றால், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** ஆம். மின்சாரப் பகுதியிலுள்ள உயர்திறன் மின்சக்தி உபயோகிக்கும் தொழிற்சாலைகள் செலுத்தி வந்த 10 சதவிகிதம் விதம் வரி 19—11—1969-லிருந்து நீக்கப்பட்டது.

### தஞ்சாவூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்தல்

* 293 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?



**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. என். கிட்டப்பா:** தமிழ்நாட்டிலே பெரிய மாவட்டங்களில் ஒன்றாகவும், நிலவரி மிகுதியாக வசூலிக்கப்படும் மாவட்டமாகவும் உள்ள தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பதற்கு இனியேனும் அரசு முயற்சிக்குமா? சென்னை ராஜ்யம் என்பது தமிழ்நாடு என்று வழங்கப்படுவதுபோல் தற்போதுள்ள மாவட்டங்களின் பெயர்களுக்குப் பதிலாக சோழ மாவட்டம், பாண்டிய மாவட்டம், பல்லவ மாவட்டம், கொங்கு மாவட்டம் என்று மாற்றப்படுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பெரிய ஆபத்தாக இருக்கிறது. கிட்டப்பா அவர்கள் சோழ மாவட்டம் என்று சொன்னால் (திரு. பொன்னப்ப நாடார் அவர்களைச் சுட்டிக்காட்டி) இவர்கள் சேரநாடு என்று சொல்லக்கூடிய நிலைமைக்குப் போய்விடும். பொதுவாக மாவட்டங்கள் நிர்வாகச் சௌகரியங்களுக்காகப் பிரிக்கப்படுகின்றன. இருபது பிளாக்குகள்தான் ஒரு மாவட்டத்தில் இருக்க வேண்டுமென்றும், 20 லட்சம் மக்களுக்கு ஒரு மாவட்டத்தை அமைக்கவேண்டுமென்றும் மாவட்ட நிர்வாகக் கமிட்டி பரிந்துரை செய்திருக்கிறது. இவை எல்லாம் சரித்திரபூர்வமான மாவட்டங்கள். சில மாவட்டங்கள் பிற்போக்கான நிலையில் இருக்கின்றன. சில மாவட்டங்கள் தொழில் வளர்ச்சி பெற்றிருக்கின்றன. இவற்றையெல்லாம் கணக்கில் கொண்டு புது மாவட்டங்கள் அமைக்கப்படுகின்றன. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை அப்படிப்பட்ட யோசனை எதுவும் இல்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** திரு. கிட்டப்பா அவர்களுடைய கேள்வியின் முதல் பகுதி நிர்வாக வசதிக்காக தஞ்சை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்படுமா என்பது. பிறகு சோழ மாவட்டம் என்று அவர் சொல்லும்போது தஞ்சையையும் திருச்சியையும் இணைக்கச் சொல்லுகிறாரா? இதில் எதை அரசு ஏற்றுக் கொள்வது என்று புரியவில்லை.

### *Inclusion of temporary service for pension.*

* 204 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Finance be pleased to state whether there are proposals under the consideration of the Government to include temporary service for pension to Government servants?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** நிலையான அல்லது தாற்காலிகப் பதவியில் அரசுப் பணியாளர் ஒருவர் ஆற்றிய தற்காலிகப் பணிக்கால அளவு முறைப்படியாக இருப்பினும் இராவிடினும் அதை ஓய்வூதியத்திற்குச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று அனுமதித்து அரசு அண்மையில் ஆணை பிறப்பித்துள்ளது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** கூட்டுறவுச் சட்டத்திலே குறைபாடுகள் இருக்கின்றன. அதைப் போக்குவதற்காக சந்தானம் கமிட்டி போட்டு அந்தக் கமிட்டி ரிப்போர்ட் வந்த தற்குப் பிறகு இதுவரையிலும் புதிய சட்டம் வரவில்லை. எப்பொ ழுது வரும், உடனடியாகக் கொண்டுவரப்படுமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு வங்கியைப் பொறுத்தவரையில் அதிலே உள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டி 1—12—1967 அன்று நோட்டீஸ் கொடுக் கப்பட்டது. சம்பந்தப்பட்டவர்கள் உயர்நீதிமன்றத்திற்குச் சென்று, 28—2—1969 அன்று, அவர்களுக்குத் தீர்ப்பளிக்கப்பட்டது. தீர்ப்பில் காணப்பட்டதை விவர அறிக்கையில் குறிப்பிட்டிருக் கிறேன். தீர்ப்பில் என்ன சொல்லப்பட்டது என்றால் இந்தச் சங்கத்தின் நிர்வாகக் குழுவின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருந் தாலும் எடுக்கப்பட்ட நடவடிக்கை அண்மையில் நடந்த தவறு களைப்பற்றி இருக்கவேண்டும். 72-வது விதியின்படி, நிகழ்காலத் தில் என்று இருக்கிறது. அதைக் கடந்த காலம் என்று மாற்ற வேண்டும். சட்டத்தை நாம் திருத்தியாக வேண்டும். அதற்கும் சந்தானம் கமிட்டிக்கும் சம்பந்தம் ஒன்றும் இல்லை. திருத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**திரு. க. மு. இராசகோபால் :** தலைவர் அவர்களே, இந்தக் கூட்டு றவு மூலம் தமிழகத்திலே எத்தனை தவறுகள் நடந்திருக்கின்றன? எந்த எந்த மாவட்டத்தில் நடந்திருக்கின்றன? அதிலே எடுக்கப் பட்டிருக்கிற நிதியை அதாவது கையாடல் செய்யப்பட்ட பணம் எவ்வளவு என்பதைத் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் என்னிடத்திலே இல்லை.

*Pathans engagedd in money-lendding business.*

* 307 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Electricity be pleased to state the number of Pathans doing money-lending business in this State?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** 130 (நூற்று முப்பது)

THIRU K. S. KOTHANDARAMIAH : Are these money-lending Pathans submitting any returns or accounts to Government?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** இப்பொழுது இருக்கிற சட் டப்படி மணி லெண்டிங் வியாபாரம் என்று சொன்னாலும் அரசாங்க அனுமதிபெற்றுத்தான் நடத்தப்படுகிறது. தாசில்தார், அனைத் தாசில்தார் இவர்களால் அனுமதி கொடுக்கப்பட்டு, இந்த மாநிலத் தில் 130 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டு அவர்கள் நடத்திக்கொண்டு வருகிறார்கள்.



**திரு. எம். பூபதி :** இந்த 130 பத்தான்கள் கொடுக்கிற கடன் களுக்கு வட்டி விகிதம் எவ்வளவு, அவர்கள் எவ்வளவு வட்டி இன்று வாங்கி இருக்கிறார்கள், கடன் கொடுத்த ஒட்டுமொத்தமான தொகை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** முழு விவரம் இல்லாவிட்டா லும் சொல்கிறேன். சட்டப்படி 9 சத விகிதம் அல்லது 12 சத விகிதம் தான் வட்டி வாங்கலாம். அதற்கு மேலே அவர்கள் வாங்கக் கூடாது.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** இந்த மணி லெண்டிங் ஆக்ட் முக்கியமாக தொழிலாளர்கள் இருக்கக்கூடிய இடங்களில் அமல் படுத்தப்பட வேண்டும். என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய விக்கிரமசிங்கபுரம் ஹார்வி மில் தொழிலாளர்கள் 120 பர்சன்ட், அதற்கு மேலும் வட்டிக்காகப் பணம் கொடுப்பவர்களிடமிருந்து வாங்கி அதனால் அந்தத் தொழிலாளர்கள் படுகின்ற கஷ்டம் சொல்லி முடியாது. இந்த மணி லெண்டிங் ஆக்டை விக்கிரம சிங்கபுரம் போன்ற தொழிலாளர்கள் இருக்கும் இடங்களில் கண்டிப்பாக அமலுக்குக் கொண்டுவர இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** இந்த ஆக்ட் தமிழ்நாடு முழு வதற்கும் என்று போட்டு இன்னின்ன இடங்களில் அமல்படுத்தப் படும் என்று ஜி.ஓ. போடப்பட்டிருக்கிறது. சென்னை, முனிசிபல் நகரங்கள், டவுன் பஞ்சாயத்துக்களுக்கு இப்போது இது விஸ்தரிக் கப்பட்டிருக்கிறது. மேலும் சில இடங்களுக்கு விஸ்தரிக்க வேண்டு மென்றால் அதுபற்றி அரசாங்கம் கவனிக்கும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** வட்டி விகிதாசாரத்தை அதிக மாக வசூலிக்கின்றவர்களைக் கண்காணிக்க அரசாங்கம் என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** இதைப் பரிசோதனை செய்ய இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். கலெக்டர்களுக்கும் அதிகாரம் இருக்கிறது. மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் வாரன்ட் வாங்கி வழக்கு கள் கூடப் போடப்படுகின்றன.

**திரு. சோ. கருணைநாதன் :** பட்டாணியர்களை அரசு எந்த நிபந்தனையோடு அனுமதிக்கிறது ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** லைசென்ஸ் வாங்க வேண்டு மென்ற நிபந்தனையோடுதான்.

THIRU K. VINAYAKAM : Sir, whereas there is a provision in the Act that interest should not be charged beyond 9 per cent, whereas in practice money-lenders especially Pathans from the North are taking some documents without the knowledge of others —these are transactions between the lender and the taker, whereas

கட்டக்கூடிய நேரத்திலே குறைந்த அளவிலே செலவாகக்கூடிய இந்த அணையைக் கட்டாமல் தள்ளிப்போட்டதற்குக் காரணம் என்ன என்பதைத் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பாலாற்றின் தண்ணீர் அதிகமாகப் பயன்படுகிறது. பரப்பிலே அதிகமாகப் பாசன வசதிகளுக்காகப் பயன்படுகிறது. இவற்றையெல்லாம் பரிசீலித்து அரசாங்கம் விரைவிலே நடவடிக்கை எடுத்துக்கொள் கிறது.

**திரு. எஸ். ஜே. இராமசாமி :** தலைவர் அவர்களே, பாலாறுபற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பாலாறு பேசின் விதி என்று ஒரு விதி இருக்கிறது. அந்த விதியை எடுத்துவிடுவதற்கு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அந்த விதிபற்றி என்னைவிட கனம் உறுப்பினருக்கு நன்றாகத் தெரியும்.

*** 304 வினா.—புலவர் பொ. பொன்னம்பலம்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் வட்டத்திலுள்ள நெறிஞ்சிக்குடியாறு, கூட லூர் ஆறு, பாலாறு ஆகிய காட்டாறுகளின் குறுக்கே அணைகள் எழுப்பும் திட்டம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) திருமயம் வட்டம், நெய்வேலி கிராமத்தில் நெறிஞ்சிக் குடியாறின் குறுக்கே அணை எழுப்பும் திட்டம் பரிசீலனையில் உள்ளது. திருமயம் வட்டத் தில் கூடலூர் ஆறு, பாலாறு ஆகிய காட்டாறுகள் இல்லை.

(இ) இது உள்ளூர் அதிகாரிகளின் ஆய்வில் உள்ளது.

**புலவர் பொ. பொன்னம்பலம் :** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, பாம்பாறு என்பது பாலாறு என்று வந்து விட்டது. பாம்பாற்றின் குறுக்கே கைலாசபுரம் என்னுமிடத்திலே அணை கட்டப்பட இருக்கிறது. அதற்காக நன்றியைத் தெரிவித் துக் கொள்கிறேன். அதேபோல பாம்பாற்றின் குறுக்கே வாளர மாணிக்கம், சொகவபட்டி, ஏற்றநாடு, இரும்பாநாடு, சித்தாகூர் ஆகிய இடங்களில் அணைகள் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கின்ற நிலைமை இருப்பதாலே இவைகளினுடைய இன்றியமையாத் தேவையைக் கருதி அவற்றைக் கட்டி முடிக்க உடனடியாக முடித் துத் தர அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஒப்புதல் அளிக்கக் கூடிய நிலைமை இருந்தால் அரசு நடவடிக்கை எடுக்கும்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களுடைய கேள்வியிலேயே பாலாறு என்றுதான் இருக்கிறது.

### மதுரை மாவட்ட கூட்டுறவு விற்பனைச் சங்கம்

*** 305 வினா—திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்க ளுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்ட கூட்டுறவு சப்ளை மார்க்கெட்டிங் சொசைட்டி லிமிடெட்டின் போர்டு டிஸ்மிஸ் செய்யப்பட்டு ஸ்பெ ஷல் அதிகாரி நியமிக்கப்பட்டது உண்மையா ?

(இ) ஸ்பெஷல் அதிகாரி நியமனத்திற்குப் பின் சொசைட்டி யின் வியாபாரம் அபிவிருத்தி அடைந்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) ஆம்.

(இ) பொதுவாக வளர்ச்சி காணப்படுகிறது.

### வட ஆற்காடு மத்திய கூட்டுறவு வங்கியின் குழு

*** 306 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவு மத்திய பேங்கு போர்டைக் கலைக்க நோட்டீஸ் எப்பொழுது எதற்காக கொடுக்கப் பட்டது ?

(இ) அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) & (இ) விவர அறிக்கை* ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இந்த விவர அறிக்கை யிலே 'மன நிறைவுதரும் வகையில் நடக்கவில்லை. கடன் தொகையை ஆராய்தல், அதற்கு ஒப்பளிப்பு வழங்கல், கடன் வழங்கல் ஆகியவை குறித்துக் கடுமையான முறைகேடுகள் நடந்த தாகத் தெரிய வந்துள்ளது' என்று இருப்பதுபோல் இது எல்லாம் கண்டுபிடித்ததற்குப் பிறகு சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட் டது என்றாலும் நீதிமன்றத்திற்குப் போனதற்குப் பிறகு அது நேர் விரோதமான முறையிலே தவறு செய்யக்கூடியவர்களுக்குச் சாதகமான முறையிலே தீர்ப்பு அளிக்கக்கூடிய நிலைமை இருக் கிறது என்றால். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அங்கே தீர்ப்பளிக்கப்பட்டதா, இங்கே தீர்ப்பளிக்கப்பட்டதா ?

---

* 102-103-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** இதுமாதிரி தற்காலிகமாக வேலை செய்தவர்களது பணிக்காலத்தையும் இந்தப் பட்டியலில் சேர்த்துக் கொள்வதன் காரணமாக அரசாங்கத்திற்கு எவ்வளவு அதிகப் பணம் செலவாகிறது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பென்ஷன் கணக்கு அவ்வப்போது ஓய்வூதியத்திற்கு அருகதை உடையவர்களாக ஆகின்றவர்களைப் பொறுத்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. நடைமுறைக் கேள்விகள்.

(அ) வினாக்களை விடையளிக்க எடுத்துக் கொள்ளாதது குறித்து.

**திரு. சோ. அழகர்சாமி :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இந்தச் சட்டசபை ஆரம்பித்ததில் இருந்து பல கேள்விகளை நான் அனுப்பி இருக்கிறேன். ஒரு கேள்வி கூட இதுவரை வரவில்லை. கேள்வி போட்டு கூட்டுத் தொடர் முடிந்த பிறகு அவற்றைப் புதுப்பிக்க வேண்டுமென்றும் எழுதியிருக்கிறேன். ஒரு கேள்வி கூட இது வரை வராததற்குக் காரணம் என்ன? சிறு கட்சி என்பதற்காக கேள்வி வராமல் இருக்கிறதா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முதலிலே இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல. கொடுத்த கேள்வி வரவில்லை என்றால் பேரவைத் தலைவருடைய அறையில் வந்து கேட்க வேண்டும். இதிலே பெரிய கட்சி, சிறிய கட்சி என்று பார்ப்பது இல்லை. கேள்விகள் அனுமதிக்கப்பட்டவுடன் அமைச்சர்களின் இலாகாக்களுக்கு அனுப்பப்படுகின்றன. அங்கிருந்து விடைகள் சட்டமன்ற அலுவலகத்திற்கு வந்தவுடன் அந்தக் கேள்விகள் அவைக்கு வரும்படி ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். இவ்வளவு கேள்விகள் அமைச்சர்களிடம் இருக்கின்றன, விரைவில் பதிலை அனுப்ப வேண்டுமென்று ஒவ்வொரு அமைச்சருக்கும் தனித் தனியாக அலுவலகத்திலிருந்து எழுதப்படுகிறது. வந்தவுடன் இந்த அவைக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. இதிலே எந்தவிதமான ஒழுங்குப் பிரச்சினையும் இல்லை. திரு. அழகர்சாமி அவர்கள் கொடுத்த கேள்விகளில் 22 கேள்விகள் புதிய கேள்விகள், நான்கு கேள்விகள் புதுப்பிக்கப்பட்ட கேள்விகள். மொத்தம் 26. அனுமதிக்கப்பட்டவை 17; ஐந்து கேள்விகள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. நான்கு கேள்விகள் உறுப்பினர் அவர்களுக்கு விளக்கம் கேட்டு திருப்பி அனுப்பப்பட்டிருக்கின்றன. எதற்கும் விடை வரவில்லை. விடை வராத காரணத்தால் அவைக்கு வரவில்லை.





(ஆ) நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்திற்கு அமைச்சர் விடையளித்த பின்னர் உறுப்பினர்களுக்கு விளக்கம் கேட்க வாய்ப்பளிக்காமல் நிதிக் கோரிக்கைகள் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேற்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சினை எழுப்பினார்கள். அந்த ஒழுங்குப் பிரச்சினைக்கு நேற்றே கூட தீர்ப்புக் கொடுத்திருக்கலாம். ஆனால் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள். அவசரப்பட்டு தீர்ப்பு கொடுக்க வேண்டியதில்லை; எதிர்க்கட்சித் தலைவர்களை எல்லாம் கலந்து கொண்டு இதற்குத் தீர்ப்பு கொடுக்கலாம் என்று சொன்னார்கள். அந்த அளவுக்கு விதிமுறைகளோ, அவையின் மரபுகளோ புரியாத நிலையில் நான் இருக்கவில்லை என்பதையும் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விதிமுறைகளை எல்லாம் நான் பேரவைத் தலைவராக ஆனபிறகுதான் தெரிந்து கொண்டேன் என்பதில்லை. கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் சட்டமன்ற விதிமுறைகளையும், மரபுகளையும் மீறாமல் எப்படி நல்ல ஒரு சட்டமன்ற உறுப்பினராகப் பணி புரிய முடியும் என்ற ஆர்வத்தில் ஏற்கெனவே ஐந்து ஆண்டு கால அனுபவம் இருக்கிறது. நேற்றே தீர்ப்பைக் கொடுத்திருக்கலாம். கட்சித் தலைவர்களை எல்லாம் கலந்து கொண்டு கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். கட்சித் தலைவர்கள் எல்லாம் தாங்கள் சொல்லவேண்டிய கருத்துக்களை எல்லாம் எப்படிப்பட்ட நேரம் கொடுத்தாலும் சொல்லக்கூடிய துடிப்போடு இருப்பவர்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே உணர்வார்கள்.

விதிமுறைகள் இருக்கின்றன. இந்த அவையில் இந்த இருக்கையில் இதற்கு முன் இருந்து இந்த அவையின் மரபுகளைக் காத்தவர்கள் வழிகாட்டியிருக்கிறார்கள். அவற்றைப் பார்த்துத்தான் முடிவு கூற வேண்டுமே தவிர, வேறு ஒன்றும் தேவை இல்லை. இருந்தாலும் அவசரப்பட்டுக் கொடுத்து விட்டார்கள், யோசித்துக் கொடுத்தால் நன்றாக இருந்திருக்கும் என்ற கூற்றுக்கு இடம் கொடுக்கக் கூடாது என்பதால் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு மூன்று விதிகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். 83, 153, 154 ஆகிய விதிகளை அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். விதி 83-ல்:

"Any member may at any time submit a point of order for the decision of the Speaker but in doing so shall confine himself to stating the point."

என்று சொல்லியிருக்கிறது. முதலில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்றால் அப்போது நடக்கிற நிகழ்ச்சியில் ஏதாவது மாறுபாடு இருந்தால், அதைச் சுட்டிக்காட்டுவதற்கு பாயின்ட் ஆஃப் ஆர்டர்

24—7—1957-ல்

" I want to make it very clear to the Hon. Minister that he must not rise to answer every one of the supplementary questions now raised. I have no objection to his answering the particular point now raised. But, as a rule, it is advisable that Hon. Ministers answer all the points at a time in their replies. Once they finish their reply, I cannot allow a discussion on points of information.

என்று தீர்ப்பளித்திருக்கிறார்கள்.

(THIRU K. VINAYAKAM : This is just an observation).

இது உறுப்பினர்களுக்குச் சொல்லதல்ல. அமைச்சர்களுக்குச் சொல்வது.

Every hon. Member is at liberty to make any suggestion in the course of his speech. The Hon. the Finance Minister will take notes and I hope he will reply to the criticisms and suggestions made by every hon. Member. But it is not the practice for every Member to convert this Budget discussion into question-hour and ask the Finance Minister for clarification of any points at the beginning of the debate or in the course of the debate. I am sure if the hon. Member makes really valuable suggestions, the Hon. the Finance Minister will take note of them and answer them in his reply.

உறுப்பினர்கள் விளக்கம் கேட்டாலும் அமைச்சர்கள் விடை அளிக்கக்கூடாது என்று அமைச்சர்களுக்கு கட்டுப்பாடு போட்டிருக்கிறார்கள். இதுவும் திரு. கிருஷ்ண ராவ் அவர்கள் கொடுத்துள்ள தீர்ப்புதான். இன்னொரு தீர்ப்பும் கொடுத்திருக்கிறார்கள் 18—7—1957-ல் :—

" I want to make one observation. This morning when the Hon. Minister for Health had finished his reply, a number of hon. Members rose up and asked him about the points raised by them in the course of the debate. Having allowed one hon. Member, I did not want to prevent others from asking their questions. According to the rules this is incorrect, because members may raise many points and the Hon. Minister will try to answer all of them. But in spite of that, he may not be able to do so. He may not like to answer some of them or he may not be in a position to answer some of them immediately or he may not have the time to answer some of them. Therefore it is not proper for the hon. Members to rise up at the end of Hon. Minister's speech and ask him "What about my point?" "What about my point"? I will not allow this from tomorrow. Unfortunately, the Hon. Minister for Health was subjected to a number of interruptions and he managed them successfully. But I do not want the Hon. Ministers to be put to such an embarrassing situation. I am sure the Hon. Ministers will reply to all points raised in the discussion but if they do not, it does not mean that they do not care for such of those points as have been left



out. They will take action on them otherwise. Therefore I want hon. Members not to put questions to the Hon. Ministers at the end of their replies to the discussion. "

இந்த மூன்று தீர்ப்புகளையும் திரு. கிருஷ்ண ராவ் அவர்கள்தான் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இதில் எந்தவிதமான பாயிண்ட் ஆஃப் ஆர்டரும் இல்லை. எந்தவிதமான முறைகேடும் நடைபெறவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, 1970-71-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம்.

DR. H. V. HANDE : With your permission I wish to say a few words. The speaker asked why I did not raise the point of order the previous day. I could not raise it the previous day because at that time the guillotine was on, and according to rules, we could not get up and say anything at that time. When members speak, Ministers get up and interrupt. But when the Ministers speak, we normally do not interrupt, because they have got to finish their speech within forty-five minutes or one hour or whatever the allotted time is. Some system could be evolved by which the members could interrupt and seek clarification when the Ministers speak.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று உங்களைப்பற்றிச் சொன்னதைப்பற்றிச் சொல்லலாமே தவிர, இன்னொரு விவாதத்திற்குரிய பொருளைக் கிளப்ப வேண்டாம்.

### (3) கூட்டுறவுத்துறை அமைச்சர் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இந்த அவைக்கு ஒரு ஸ்டேட்மெண்டை வைக்க வேண்டுமென்று விரும்பி என்னிடத்தில் கொடுத்திருக்கிறார்கள். அதைப்பற்றிய கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் 28—1—1970-ஆம் தேதியன்று நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சரவர்களைப் பற்றிப் பேசுகின்ற நேரத்தில், அவர்கள் 85 லட்சம் ரூபாய்க்கு வருமான வரி கட்டவில்லை என்று ஹைகோர்ட்டில் கேஸ் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்பொழுது நான் குறுக்கிட்டது, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் குறுக்கிட்டதெல்லாம் இந்த அவைக்குத் தெரியும். பாதுகாப்பு வேண்டுமென்று கேட்டார்கள், பாதுகாப்பு தருகிறேன் என்று நான் சொல்லிவிட்டு, 'மேஜை மீது அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அதில் சில தகவல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தத் தகவல்கள் தவறு என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆதாரங்களோடு சொல்லட்டும். கார் இல்லை என்று போட்டிருக்கிறார் என்று சொன்னால், அவர்கள்

கருத்திருமன் என்ற கையெழுத்து மட்டும்தான் இருக்கிறது. இது ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆதாரம்தான், டாகுமெண்ட்தான் என்று சொல்லக்கூடிய அளவுக்கு இல்லை.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 85 லட்சத்தைப் பற்றி இருக்கிறதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 85 லட்சத்தப் பற்றிய பேச்சில்லை. இதில்

The Properietor of a Tamil Newspaper created a trust in 1954 with the object of establishing the newspaper as an organ of educated public, and disseminating news and ventilating opinion for the Tamil reading public on all matters of public interest through the said newspaper and devoting the surplus income in improving and enlarging the said newspaper and its services.

The Income-tax Officer, Madras, issued notice under Section 22 (2) for assessment years 1959-60, 1960-61, 1961-62 and also reopened under section 34 for assessment years 1955-56, 1956-57, 1957-58 and 1958-59. He took instructions from the Board and wrote letter to the assessee denying the status of the Trust. Thereupon the assessee filed writs in the High Court of Madras for quashing the Income-tax Officer's order letter, dated 6th November 1961 and restraining the Income-tax Officer from proceeding with the assessment for the years 1955-56 to 1958-59

Judgment: (1) Income-tax Officer's order was liable to be quashed because it contained the opinion of the Board and not his decision. Further advance decision given by the Income-tax Officer is not legal.

(2) Writ of prohibition cannot be issued as the Income-tax Officer has clear jurisdiction.

பிறகு இன்னொரு வரியைச் சேர்த்திருக்கிறார்கள்.

As per the High Court's direction the Income-tax Officer, Madras, did not accept the contention that the Trust is for charitable purposes and so assessed for 55 lakhs. என்றிருக்கிறது. இங்கே நம்முடைய கேள்வியெல்லாம், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொன்ன குற்றச்சாட்டு, ஆதித்தனார் 85 லட்சத்திற்கு வருமான வரியை ஏமாற்றிவிட்டார் என்பது; அதற்கான விளக்கம் இல்லை. அவர் பெயரில் இல்லை, அவருடைய மகன் பெயரில் இருக்கிறது, அதற்கான ஆதாரம் தருவதாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அதற்கான ஆதாரமும் இல்லை. இப்பொழுது கொடுத்திருப்பது டிரஸ்ட், என்ற பெயரில் கொடுத்திருக்கிறார். அதிலும்கூட. அவர் கொடுத்திருக்கும் காகிதம் ஒரு டாகுமெண்டா ? என்றால் இது டாகுமெண்ட் அல்ல. எக்ஸ்ட்ராக்ட் என்றால் யார் வேண்டுமானாலும்,



எதை வேண்டுமானாலும் செய்யக்கூடும். 85 லட்சம் என்ற வார்த்தையே எந்த இடத்திலும் இல்லை.

அடுத்தபடியாக, கிரிமினல் கேஸ் பற்றி இரண்டு பக்கம் கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கடைசியிலே வாசிக்கும்

பொழுது,

As per the High Court 's direction the Income-tax Officer has assessed for 55 lakhs. என்று கொடுத்திருக்கின்றார்கள் என்று கூறினீர்களே. அது அவர்கள் குறிப்பிட்ட தீர்ப்பிலே இருக்கிறதா? தீர்ப்பிலே இல்லாமல், அதிலே உள்ளே நுழைத்திருக்கிறார்களா? உள்ளே நுழைப்பதற்கான ஆதாரம் கொடுத்திருக்கிறார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுதான் இல்லை என்று சொல்கிறேன். ஒரு வாக்கியம்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது, இது எப்படி தாம் சொன்ன குற்றச்சாட்டிற்கான ஆதாரமாக, டாகுமெண்டாக இருக்க முடியும் என்பதைப்பற்றி இப்பொழுது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் விளக்கம் கொடுக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இது டிரஸ்ட் மீது போடப்பட்ட வழக்கா? அல்லது டிரஸ்டைச் சேர்ந்தவர்கள் ஹைகோர்ட்டிற்கு வழக்கிற்குப் போனார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவர் கொடுத்த தகவல்படி, டிரஸ்டைச் சேர்ந்தவர்கள், இன்கம்டாக்ஸ் ஆபீசர்கள் போட்டிருக்கும் வரி முறையற்றது என்று அவர்கள் வழக்கிற்கு போயிருக்கிறார்கள். அது தானே தவிர, இன்கம்டாக்ஸ் ஆபீசர்கள் வழக்கிற்குப் போகவில்லை.

As per the High Court's direction, the Income-tax Officer, Madras, did not accept the contention that the Trust is for charitable purposes and so assesssed for 55 lakhs. என்றிருக்கிறது. ஆகவே இதை ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. ஹைகோர்ட் தீர்ப்பு அல்ல.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, 55 லட்சம் வரியைப் போடுவதற்கு ஏதாவது ஆதாரம் காட்டியிருக்கிறார்களா ? ஏனென்றால் 55 லட்சம் வரி போட்டுவிட்டார்கள் என்று பாவி விடும். அதிலே சொல்லியிருப்பது,

As per the High Court direction

என்பது முதலிலே குறிப்பிட்டது, வழக்கு ஒரு தனிப்பட்ட அமைச்சர் மீது, அவர்மீது வழக்காகப் போடப்பட்டதென்று சொன்னதற்கும், இங்கே தனிப்பட்டவர்கள் அரசாங்கத்தின்மீது போட்ட வழக்கு என்பதையும் கூறினார்கள். எனவே,

எழுப்பலாம். நேற்று நடந்து போன நிகழ்ச்சிக்காக இன்று பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்புவது என்பது முதலில் முறை அல்ல என்று விதிமுறைகள் கூறுகின்றன.

அடுத்து, 153, 154 விதிகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். 153-ல்:

"(1) The Budget shall be dealt with by the Assembly in two stages, namely :—

(a) a general discussion; and

(b) the voting of demands for grants.

(2) The Speaker, shall in consultation with the Leader of the House and the Business Advisory Committee, if any, fix and appoint sufficient number of days for each of these stages :

Provided that not more than ten days shall be fixed for the general discussion of the Budget and that not more than twenty-five days shall be fixed for the voting of demands for Grants.

என்று சொல்லியிருக்கிறது. இதில் எந்தவிதமான முறைகேடும் அன்று நடந்ததாகச் சொல்வதற்கில்லை. அடுத்து, விதி 154-ல்:

"During the days appointed under rule 153 (2) for the general discussion of the Budget the Assembly shall be at liberty to discuss the Budget as a whole or any question of principle involved therein, but no motion shall be moved at this stage, nor shall the Budget be submitted to the vote of the Assembly."

என்று சொல்லியிருக்கிறது. நம்முடைய நிதிநிலை அறிக்கை இங்கு வோட்டுக்கு விடப்படவில்லை. இரண்டாவதாக, தெளிவாகவே இங்கு கூறப்பட்டிருக்கிறது. மணி 10.30-க்கு கேள்விகள் எல்லாம் முடிந்து விவாதம் தொடங்குகிற நேரம். யார் யாருக்கு எவ்வளவு நேரம் தேவை என்று இந்த அவையில் கேட்டு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தமக்கு ஒரு மணி நேரம் தேவை என்று சொன்னார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் தமக்கு ஒரு மணி நேரம் தேவை என்று சொன்னார்கள். மீதி இருக்கிற அரை மணி நேரத்தில் திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், திரு. பூவராகன் அவர்களும் பேசுவதாக இருந்தது. திரு பொன்னப்ப நாடார் அவர்கள் பத்து நிமிடங்களில் முடிக்கவேண்டுமென்றும், திரு. பூவராகன் அவர்கள் பதினைந்து நிமிடங்களில் முடிக்கவேண்டுமென்றும், 11 மணிக்கு மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் தொடங்கி 12 மணிக்கு முடிக்க வேண்டுமென்றும், 12 மணிக்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தொடங்கி 1 மணிக்கு முடிக்க வேண்டுமென்றும், 1 மணிக்கு வாக்கெடுப்பு என்பதும் முடிவு செய்த ஒரு நிகழ்ச்சியாகும். அந்த முடிவையொட்டித்தான் இந்த நடைமுறை வந்ததே தவிர வேறு ஒன்றுமில்லை. இன்னொன்றும் சொல்லியிருக்கிறார்கள். நம் சட்டசபைவரலாற்றிலேயே இவ்வளவு பெரிய பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இதற்கு முன் எந்த நேரத்திலாவது எழுப்பியிருப்பார்களா என்று அச்சம்தான் அவர்கள் சொல்லி



யிருப்பது 'ஏஜ் ஓல்ட்' நீண்ட காலமாக இருந்து வந்த மரபு மீறப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குள்ள உரிமையை நான் திருடி விட்டேன். I am robbed of these opportunities and privileges என்று அவர்கள் வாக்கியப்படி By bringing in this new Convention, I am robbed of these opportunities and privileges. என்று சொல்லியிருக்கிறார்கள். கடினமான வார்த்தைகள்தான், நீண்ட காலமாக இருந்து வருகிற மரபை மீறிவிட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதனால் எங்கள் உரிமைகள் பறிக்கப்பட்டு விட்டன என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த அவையின் மரபுகளை இந்த மன்றத்தில் இதற்கு முன் இந்த இருக்கையில் இருந்து இந்தப் பேரவையின் மரபுகளைக் காத்து வந்த அவர்களின் வழியில் செல்வதுதான் என் எண்ணம்.

இந்த அவைத் தலைவர்களாக இருந்தவர்களில் ஒருவரான திரு. கிருஷ்ண ராவ் அவர்கள் எப்படிப்பட்ட பேரவைத் தலைவராக விளங்கினார்கள் என்பது இந்த மன்றத்திற்கு தெரியும், நாட்டிலுள்ள மற்ற சகல மன்றங்களுக்கும் தெரியும். அவர்கள் கொடுத்துள்ள தீர்ப்புகளைப் படிக்கிறேன். இந்தச் சட்டமன்றத்தில் 234 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேர்களுக்கும் இங்கு பேச உரிமை இருக்கிறது. நாம் மட்டும்தான் இங்கு இருக்கிறோம், நமக்கு மட்டிலும்தான் பேசுவதற்கு உரிமை இருக்கிறது, இந்தப் பேரவையை நாம் மட்டிலும்தான் பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்று யாரும் நினைக்கக்கூடாது. இந்த மன்றத்தில் உள்ள எல்லா உறுப்பினர்களுக்கும் சம பங்கு, சம உரிமை உண்டு. இந்த நிதிநிலை அறிக்கை மீது பேசிய உறுப்பினர்கள், நிதி அமைச்சர் அவர்களையும் சேர்த்து, நூறு உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். அப்படி 99 உறுப்பினர்கள் பேசி நிதி அமைச்சர் அவர்கள் விடை அளித்த பிறகும் அந்த 99 பேர்களும் தங்கள் பேச்சிற்கு விளக்கம் தராத பகுதிகளுக்கு விளக்கம் வேண்டும், விளக்கம் வேண்டும் என்று சொன்னால், அப்படி ஒவ்வொரும் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டும் என்று சொன்னால் அது முடியுமா என்று பார்க்கவேண்டும். மற்றவர்கள் விளக்கம் கேட்கமாட்டார்கள். அப்படிக் கேட்கக்கூடிய நிலையில் இருக்க மாட்டார்கள், நான் ஒருவன்தான் அப்படிக் கேட்கக்கூடிய நிலையில் இருக்கிறேன் என்று எந்த ஒரு உறுப்பினரும் உரிமை பாராட்ட முடியாது. உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள உரிமை ஒரு வரம்பிற்கு உட்பட்ட உரிமை என்று தெரிவித்துக்கொள்கிறேன். திரு. கிருஷ்ண ராவ் அவர்கள் இப்படிப்பட்ட நிலையில் கொடுக்க இரண்டு தீர்ப்புகளை மட்டிலும் இங்கு படித்துக் காட்டிவிட்டால் திரு. ஹாண்டே அவர்கள் எழுப்பியுள்ள பாயின்ட் ஆஃப் ஆர்டர் எப்படி முறையானது அல்ல என்பது தெரியும்.

கூடத் தான் அது பொருந்தும். இவ்வளவு நேரம் இது சம்பந்தமாக நடந்த விவாதங்கள் எந்த வகையில் நம்முடைய சட்டமன்ற விதிகளுக்குட்பட்டது என்பது பற்றி தாங்கள் தீர்ப்பு அளிக்க வேண்டும். அமைச்சர்களுடைய நிர்வாகக் காரியங்களைப் பற்றி விமர்சனம் செய்யலாம், செய்யக்கூடாது என்பது அல்ல. ஆனால், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், பொறுப்புள்ள அமைச்சர் ஒருவர், அவர்களுடைய சொத்து விவரங்களை இங்கே கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் விவரங்கள் தெரிந்து தான் கொடுத்திருக்கவேண்டும். இவர்கள் இங்கே பேசுகிற வாதத்தில் என்ன ஆகிறது என்றால், சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சொத்துக் கணக்குகள் தவறானவை என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அப்படியானால் இந்த மன்றத்தை அவமதித்ததாகும். அவ்வளவு பெரிய ஒரு குற்றச்சாட்டு நிரூபணமானால்; அதற்கான பொறுப்புகளை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிவரும். அவ்வளவு பெரிய குற்றச்சாட்டை அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்த வகையில் தான் இது நமக்குச் சம்பந்தமே தவிர வருமானவரி கட்டவில்லை, ஏமாற்றினார்கள் என்றெல்லாம் சொன்னால் அதற்குரிய முறைகள் இருக்கின்றன.

தனிப்பட்ட முறையில் நாம் ஒவ்வொருவரும் ஏதோ செய்கிறோம். நம்முடைய விவகாரங்களைப் பற்றிப் பேசுவதற்கு இது இடம் இல்லை. இதற்கு ஒரு பெரிய பாதுகாப்பாக இருக்கிறது மன்றத்தின் விதி 67 (2). எதிர்க்கட்சித் தலைவர், நாம் எல்லோரும் சேர்ந்து செய்த விதிமுறைகள் தான் இவை. இந்த மன்றத்தினுடைய சமீப கால நடவடிக்கைகளைப் பார்த்தால் ஏதாவது ஒரு குற்றச்சாட்டை, அபாண்டமான குற்றச்சாட்டைச் சாட்டுவது, உறுப்பினர்களாக இருக்கட்டும், மந்திரிகளாக இருக்கட்டும் என்ற நிலை இருக்கிறது. அது பற்றி நான் ஒரு யாசனை கூறிக்கொள்ள விரும்புகிறேன். இம்மாதிரியான முறையில் இவர்கள் பேசுவது, இப்படிப்பட்ட விவாதங்கள் கூட இந்த மன்றத்தினுடைய சட்டதிட்டங்களுக்கு விரோதமானது. இப்படிப்பட்ட விவாதமே விதிமுறைகளுக்கும் புறம்பானது.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நிறைய உரிமை இருக்கிறது, அதை நான் ஆட்சேபிக்கவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டசபையை மிஸ்லீட் பண்ணுகிறார்கள் என்பது உண்மையாக இருக்குமானால், அது ஒரு பெரிய குற்றச்சாட்டு என்பதில் சந்தேகம் இல்லை. கணக்குக் கொடுப்பது சரியில்லை, இந்தச் சபையை மிஸ்லீட் பண்ணுகிறார்கள் என்றால், அதற்கு பிரிவிலேஜ் மோஷன் கொண்டுவருவதற்கு தங்களுடைய அனுமதியைப் பெறலாம். அதற்கு முன்னால் பிரிவிலேஜ் மோஷன் கொண்டுவருவதற்கு பிரைமா பேஸி கேஸ் இருக்கிறது என்று தங்களைத் திருப்திப் படுத்தியாகவேண்டும். அப்படி அடித்தளத்தில் ஆதாரம் இருக்கிறது என்று நிரூபித்து, பிரிவிலேஜ் மோஷன் கொண்டுவருவதற்கு உறுப்பினர் அவர்களுக்கு உரிமை இருக்கிறது.



இந்த மாமன்றத்து உறுப்பினர்கள் 4 கோடி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். உறுப்பினர்கள் லட்சக்கணக்கான வாக்குகளைப் பெற்று இங்கே வீற்றிருக்கிறார்கள். அரசாங்கக் காரியங்களையும் மக்களுக்குப் பயனுள்ள பொதுக் காரியங்களையும் விவாதிப்பதற்கு இந்த மன்றம் இருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது இந்தச் சபையினுடைய நடவடிக்கைகள் வேறு மாதிரியாகப் போய்க்கொண்டிருக்கிற நிலையைப் பார்க்கிறோம். ஆகவே, விதியின்படி இதுபற்றி தாங்கள் ஒரு தீர்ப்பு அளிக்கவேண்டும். தனிப்பட்ட முறையில் ஆதாரமில்லாமல் எவரையும் தாக்கிப் பேசக்கூடாது. உறுப்பினர்களுக்கும் சரி, அமைச்சர்களுக்கும் சரி, அது பொருந்தும். அமைச்சர்களுடைய நிர்வாகக் காரியங்களைப் பற்றிச் சொல்லலாம். ஆனால் தனிப்பட்ட முறையில் ஒருவரைத் தாக்கி, எதை வேண்டுமானாலும் சொல்லிவிட்டுப் போய்விடுவது என்பது கூடாது. அந்தமாதிரி தனிப்பட்ட முறையில் ஆதாரமில்லாத குற்றச்சாட்டைச் சாட்டுவது முறையாகாது. இதற்குத் தகுந்த தீர்ப்பை அளித்து, பிறகு இந்த விவாதத்தைத் தொடங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு திரு. கருத்திருமன் அவர்கள் தன்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு முன்பு ஒரு சிலவற்றை இங்கே நான் குறிப்பிட்டுக் காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

இந்த மன்றத்தில் சொத்து விவரங்களை வைக்கவேண்டும் என்ற கோரிக்கை எழுப்பப்பட்டு, நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்த நேரத்திலே அது எடுத்துச்சொல்லப்பட்டு, சொத்து விவரங்கள் வைக்கவேண்டும், ஏன் வைக்கவில்லை என்றெல்லாம் கேட்டு, நாங்கள் அந்த விவரங்களை வைப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லி, சொத்து விவரங்கள் இங்கே வைக்கப்பட்டிருக்கின்றன. அமைச்சர்கள் சொத்து விவரங்களை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுடைய சொத்து விவரங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சொத்து விவரங்களை இங்கே வைப்பதன் காரணம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று நான் கருதுகிறேன். அமைச்சரான பிறகு, அமைச்சர் அந்தஸ்தை பயன்படுத்திக்கொண்டு சொத்துக்களை சேர்த்திருக்கிறார்களா, அதிகாரத்தைப் பயன்படுத்திக்கொண்டு சொத்துக்களை சேர்த்திருக்கிறார்களா, பதவியை துஷ்பிரயோகம் செய்து சொத்துக்களை சேர்த்திருக்கிறார்களா, அப்படி அவர்கள் சொத்துக்களைச் சேர்த்திருந்தால், அவை எந்த வகையில் சேர்க்கப்பட்ட சொத்துக்கள் என்ற விவரங்களை இந்த அவை புரிந்துகொள்வதற்காகத் தான், இந்த விவரங்கள் கேட்கப்படுகின்றனவே தவிர வேறு அல்ல.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே எழுப்பிய வாதம் அல்லது தொடர்ந்திருக்கின்ற குற்றச்சாட்டு, கூட்டுறவுத் துறை அமைச்சர் மாண்புமிகு ஆதித்தனார் அவர்கள் அமைச்சராவதற்கு

இந்த மன்றத்திற்குத் தவறாக, திட்டமிட்டு ஒரு தவறான கருத்தை இணைத்திருக்கிறார்களா? அந்த விளக்கத்தைத் தலைவரவர்கள் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே தெளிவாக இல்லை. அவர்கள் மீது வரி போட்டார்கள் என்பதற்கான ஆதாரம் இதிலே இல்லை. நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சாட்டிய குற்றச்சாட்டிற்கும் அவர் மேஜை மீது வைக்கவேண்டும் என்பதற்காக என்னுடைய அனுமதி பெறுவதற்காக என்னிடம் கொடுத்திருக்கும் இந்தக் காகிதத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. அவர் சாட்டிய குற்றச்சாட்டிற்கு ஆதாரமே இல்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, ரூ. 55 லட்சம் என்பதெல்லாம், ஜட்ஜ்மெண்டு காபி கொடுத்திருக்கிறார்களே, அதில் இருக்கிறதா அல்லது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய விமர்சனம் என்ற முறையில் அந்த வார்த்தைகளைச் சேர்த்திருக்கிறார்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புரிந்துகொள்ள முடியாத நிலையில் இருக்கிறது, ஜட்ஜ்மெண்டு என்று கொடுத்திருக்கிறார்கள். அதில் ஒன்று, இரண்டு என்று இருக்கிறது. அதோடு சரி.

'(1) Income-tax Officer's order was liable to be quashed because it contained the opinion of the Board and not his decision. Further advance decision given by the Income-tax Officer is not legal.'

அது ஒரு ஜட்ஜ்மெண்டு. இரண்டாவதாக,

'(2) Writ of prohibition cannot be issued as the Income-tax Officer has clear jurisdiction.' என்று இருக்கிறது. அதுதான் ஜட்ஜ்மெண்டு. கீழே கொடுத்திருப்பது ஜட்ஜ்மெண்ட் அல்ல. அது யாருடைய கருத்து, எங்கிருந்து இங்கே இணைக்கப்பட்டது என்பது தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். ஜட்ஜ்மெண்டு ஆப் தி ஹைகோர்ட் வெளியிடப்பட்டிருக்கிறது. அதற்கு என்று அனுமதி பெற்று வெளியிடப்படுகிறது. அப்படி அனுமதி பெற்று வெளியிடப்பட்ட வழக்கு மன்றத் தீர்ப்பை உங்கள் முன்னால் வைக்கிறோம் என்று சொல்லி, இல்லாத ஒன்றை இருப்பதாக இணைத்துக் கொடுத்தால் அது உரிமையை மீறியதாகாதா? வேண்டுமென்றே திட்டமிட்டுச் செய்த செயலாகாதா? அதற்கான ஆதாரம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடம் இருக்கிறதா?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** சபாநாயகர் அவர்களே, நான் அடிக்கடி கூறிக்கொண்டு வந்திருக்கிறேன். என்மீது தவறான கருத்துச் சொல்லப்படுகிறது. ரூ. 85 லட்சம், அது இது என்று சொல்கிறார்கள். என்னுடைய கருத்தெல்லாம் என்னவென்றால்,





இன்றையதினம் இன்கம்டாக்ஸ் கொடுக்கவேண்டி இருக்கக்கூடிய ஒரு அமைச்சர் . . . (குறுக்கீடு) நான் சொல்வதை தயவு செய்து பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருக்கவேண்டும். அதற்குப் பின்னால் தீர்ப்பு வழங்குங்கள். சட்ட அமைச்சர் அவர்கள் தவறாகக் கொண்டு வரப்பட்டது . .

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** பொறுப்புள்ள எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இப்படி அடிக்கடி அமைச்சர்களைப் பற்றிக் குறிப்பிடுவது, இந்தச் சபையினுடைய மரியாதையைக் குறைப்பதாக இருக்கிறது. ஆகையால் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை அவர்கள் அப்படி அடிக்கடி குறிப்பிடுவது முறையாகுமா என்று கேட்கிறேன் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லி முடிக்கட்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அமைச்சர்கள் சொத்துக் கணக்குகளை இந்த மன்றத்தில் வைக்கவேண்டும் என்று சொல்லியதின் பேரில் இந்த மன்றத்தில் சொத்துக் கணக்குகளை வைத்தார்கள். அப்படி சொத்துக் கணக்குகளை வைத்த பொழுது நான் ஏதாவது ஒரு சாம்பிள் எடுக்கலாம் என்று சொல்லி திரு. சி. பா. ஆதித்தனார் அவர்களுடைய சொத்துக் கணக்குகளை எடுத்துப் பார்த்தேன். அவர்களுடைய சொத்துக் கணக்கைப் பார்க்கும்பொழுது, விவரங்களைப் பின்னாலே கொடுக்கும் சமயத்தில் ரொம்பக் கொஞ்சமாக இருக்கிறது. தார் இல்லை. . . (குறுக்கீடு) அதை வைத்து வந்தது தான் இது. அதனுடைய விளைவு தான் இது. முன்னால் நீங்கள் அதையெல்லாம் படித்தீர்கள், என்னை ஆதாரம் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறீர்கள். நான் அதையெல்லாம் பற்றி பேசக்கூடாது என்று ஏன் மறுக்கிறீர்கள்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய விதியிலே 67-வது விதியில் நம்முடைய சட்டசபையில் பேசும் பொழுது எப்படிப் பேசவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது.

'Rules to be observed by members while speaking'

என்பதில், இரண்டாவதாகக் கூறப்பட்டிருப்பது

'(ii) A Member while speaking must not make a personal charge against a member.'

என்பது. இந்த மன்றத்தினுடைய உரிமைகள் இந்த மன்றத்தின் உறுப்பினர்களுக்கும் பொருந்தும், மந்திரிமார்களுக்கு மட்டும் அல்ல. ஒரு அமைச்சருடைய நிர்வாகக் கோளாறுகளைப் பற்றிக் கூட சொல்லலாம், வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேசக்கூடாது, குற்றச் சாட்டு கூடாது என்று விதிகளில் கூறப்பட்டிருக்கிறது, அமைச்சர்களுக்கு மட்டும். நான் சொல்லவில்லை. மற்ற உறுப்பினர்களுக்குக்

முன்பே அவர்களுடைய சொத்துக்களை எப்படி எப்படி பிரித்து
வைத்துக்கொண்டார், அல்லது எப்படி டிரஸ்டு ஆக்கினார் என்கின்ற
அந்த விவரங்களிலே அவர்கள் புகுந்து, அதைப்பற்றி பேசியிருக்
கிறார்கள். ஆதித்தனார் அவர்கள் அமைச்சரான பிறகு அவர்கள்
அந்தப் பதவியை துஷ்பிரயோகம் செய்து சொத்துக்களைச் சேர்த்து
இருக்கிறார்களா என்கின்ற அந்த குற்றச்சாட்டு எதிலும் எதிர்க்
கட்சித் தலைவர் அவர்கள் நுழையவில்லை என்பது அவர்களுக்கு
நன்றாகத் தெரியும்.

ஆனால், இவைகளை நான் சொல்லுகிற காரணத்தால், மாண்புமிகு
நிதி அமைச்சர் எழுப்பிய பிரச்சனையினுடைய அடிப்படைத் தத்து
வத்தைக் கொண்டும் விஷயத்தை அப்படியே விட்டு விடவேண்டும்
என்று கூறவில்லை. ஏனென்றால், அப்படிச் சொல்வதானால், எதிர்க்
கட்சித் தலைவர் விவாதத்திற்கு பயந்து கொண்டுவிட்டு விட்டோம்
என்று கூறக்கூடும். மிகத் தைரியமாக எதிர்க் கட்சித்தலைவர் கூறி
யிருக்கும் குற்றச் சாட்டை சந்திப்பதிலும், விவரங்களைத் தெரிந்து
கொள்வதிலும் ஆவல் உள்ளவனாக இருக்கிறேன் என்பதைக் கூற
விரும்புகிறேன். எனக்குள்ள ஆவல் எல்லாம், இதுதான். முதன்
முதலிலே ஒரு கூட்டத் தொடரில், கூட்டுறவுத் துறை அமைச்சர் 85
லட்சம் ரூபாய்க்கு வரி ஏய்ப்புச் செய்திருக்கிறார்கள், அதன் மேல்
உயர் நீதி மன்றத்தில் வழக்கு இருக்கிறது என்று எதிர்க் கட்சித்
தலைவர் சொன்னார்கள். அதை என்னால் நிரூபிக்க முடியும், நிரூபிக்
கிறேன், பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று அந்த முதல் கூட்
டத்தொடரில் சொன்னார்கள். இதுதான் எதிர்க் கட்சித் தலைவர்
அவர்கள் அளித்த சூளுரையாகும். இந்தக் கூட்டத் தொடரில்,
நான் பேசுகிற நேரத்தில் எதற்கெடுத்தாலும் நிரூபிக்கிறேன்
நிரூபிக்கிறேன் என்கிறீர்களே, முன்பு கூட்டுறவு துறை அமைச்சர்
மீது 85 லட்ச ரூபாய்க்கு வரி ஏய்ப்பு செய்துவிட்டதாகவும்,
வழக்கு இருப்பதாகவும் சொன்னீர்களே, அதை நிரூபிக்கவில்லையே,
ஒரு வேளை இந்தக் கூட்டத்தொடருக்குள்ளாவது நிரூபிப்பீர்களா
என்று கேட்டபோது, அவர்மேல் இருக்கவில்லை, அவருடைய மகன்
பேரில் வழக்கு இருக்கிறது, அவராக இருந்தால் என்ன,
அவருடைய மகனாக இருந்தால் என்ன, அதை நிரூபிக்கிறேன்
என்றார்கள். இப்பொழுது முதலிலே திரு. ஆதித்தனார் மீது வழக்கு
இருப்பதாகச் சொல்லி, பின்பு அவருடைய மகன் மீது இருப்ப
தாகச் சொல்லிவிட்டு, இப்பொழுது கொண்டு வந்துகொடுத்
திருக்கும் விவரம் ட்ரஸ்டின் சார்பாக தொடரப்பட்ட வழக்கு
பற்றியதாக இருக்கிறது. முதலாவதாக அவர்மீது வழக்கு
தொடரப்பட்டு ஹைகோர்ட்டில் இருப்பதாகச் சொல்லி, இரண்டா
வதாக அவருடைய மகன் பேரில் இருப்பதாகச் சொல்லி, எதிர்க்
கட்சித் தலைவருடைய குற்றச்சாட்டு பற்றி அவர்கள் இப்பொழுது
கொடுத்திருக்கும் ஆதாரக் கடிதம் முழுதும் அது அதிகார
பூர்வமான ஆதாரமா என்பது ஒருபுறம் இருந்தாலும், கொடுத்
திருப்பதைப் பொருத்தவரையில் அதில் சபாநாயகர் அவர்களே,





நீங்கள் கூட நான் எழுப்பிய ஐயத்திற்கு, ஹைகோர்ட்டில் வழக்கு இருக்கிறது. ஆனால் அது ட்ரஸ்ட் தொடர்ந்த வழக்கு என்றுதான் குறிப்பிட்ட அந்த உண்மையும் கிடைத்திருக்கிறது. இவைகளுக் கெல்லாம், எந்தக் குறிப்பான விளக்கத்தை எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள் தர இருக்கிறார்கள், தரப்போகிறார்கள் என்று எதிர்பார்த்து அமர்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்கும், நிதி அமைச்சர் அளித்த விளக்கத்திற்கும் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் அவர்களைக் கேட்கிறேன். என்ன கேட்கிறேன் என்றால், சொத்து விவரத்தை சட்ட மன்றத்தில் வைக்க வேண்டும் என்றதின் நோக்கமே, அவரவர்கள் எந்த எந்த அந்தஸ்தில் இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்வதற்காகத்தான். மந்திரியானதற்குப் பிறகு இருக்கும் நிலை என்றால், அது ஐந்து வருஷம் கழிந்த பிறகல்லவா தெரியமுடியும். அது என்ன என்று எனக்கு புரிகிறது. அதாவது சொத்து விவரம் கொடுப்பது நாம் யார் எந்த அந்தஸ்தில் இருக்கிறார்கள், உயர்ந்த அந்தஸ்தா அல்லது தாழ்ந்த அந்தஸ்தா என்று தெரிந்து கொள்ளத் தான் (குறுக்கீடு) நான் பேசுகிறதற்கே பொறுமை இல்லாவிட்டால் எப்படி? அந்த நிலையில் சொத்து விவரம் கொடுத்த போது, சில விஷயங்களை, சொந்தக்காரர்களுடைய, மகன், ரத்த சம்மந்தம் உள்ளவர்கள், இவர்களுடைய சொத்து விவரங்களையும் கொடுக்க வேண்டும் என்று தீர்மானத்தில் போட்டிருக்கிறோம். அப்படிப் போட்டிருக்கும்போது, நான் உள்பட, என்னுடைய மகன் மேஜராக இருந்தாலும், எல்லா சொத்து விவரமும், மனைவி மேல் இருக்கும் சொத்துக்கள் உள்பட, குடும்பத்தில் இருப்பவர்களுடைய சொத்து விவரங்களைக் கொடுத்திருக்கிறோம். அது எல்லோருக்கும் பொருந்தும் என்று நினைக்கிறேன். (மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மேஜராகவோ, தனியாகவோ போயிருந்தால் கொடுக்க வேண்டிய தில்லை) நாங்கள் கொடுத்திருக்கிறோம். மடியில் கனமிருந்தால் தானே வழியில் பயம். ஒப்பனைக் கொடுத்திருக்கிறோம். மாண்புமிகு ஆதித்தனார் சொத்து விவரத்தில், ' the details of particulars with which member of the family has any connection '
தனியாக ட்ரஸ்டில் தனக்காகவோ குடும்பத்திற்காகவோ இருப்பதைக் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. அதற்
கெல்லாம் **' Nil, Nil '**
என்று போடப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) தயவுசெய்து நான் பேசுவதை பூரணமாகக் கேளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அன்று சொன்னதையே சொல்கிறார்கள். மேஜை மீது அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு கூட்டுறவு அமைச்சருடைய சொத்து விவரம் பற்றியும் இருக்கிறது. எதிர்க் கட்சித் தலைவருடைய வாதம், அந்த விவரம் தவறானது என்பது.

பேரில் கார் இருக்கிறது, இன்ன நம்பரில் அது ரெஜிஸ்ட்ரேஷனாகி யிருக்கிறது என்று எடுத்துக் காட்டுங்கள். அப்படியில்லாமல் அவருக்கு கார் இல்லையா, அவர் ஏழையா என்றெல்லாம் சொல்வது முறையல்ல. ஆதாரங்களோடு பேசவேண்டும்' என்று நான் கூறினேன். அதற்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள், '85 லட்சம் ரூபாய்க்கு வருமான வரி கட்டவில்லை என்று ஹைகோர்ட்டில் கேஸ் இருக்கிறது. தஸ்தாவேஜ் இருக்கிறது' என்று சொன்னார்கள். பிறகு மாண்புமிகு ஆதித்தனார் அவர்கள், 'ஹைகோர்ட்டில் என் மீது எந்தவிதமான கேஸும் கிடையாது. ஹைகோர்ட்டில் கேஸ் நடந்ததும் இல்லை, இப்போது நடந்து கொண்டிருக்கவும் இல்லை. ஆகவே, தயவு செய்து பெருந்தன்மை யோடு உறுப்பினர் அவர்கள் அவர்கள் சொன்னதை பின்வாங்கிக் கொள்வது நல்லது' என்று சொன்னார்கள். அதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பாதுகாப்பு வேண்டுமென்று கேட்டார்கள். பாதுகாப்பு கொடுக்கத்தான் இருக்கிறேன். அவர்களுக்கு குற்றச்சாட்டு சொல்வதற்கு உரிமை இருக்கிறது. ஆனால் சாட்டப்படுகிற குற்றச்சாட்டு ஆதாரத்தோடு கூடிய குற்றச்சாட்டாக இருக்கவேண்டும். 'வைல்ட் அலிகேஷன்ஸ்' கூடாது. கொடுத்திருக்கக் கூடிய அறிக்கை தவறானது, இன்னின்ன சொத்துக்கள் அவர்கள் பேரில் இருக்கின்றன என்றெல்லாம் ஆதாரங்களோடு சொல்லவேண்டும்" என்று நான் கூறினேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள், 'ஒரு ஜட்ஜை போடுங்கள். நான் நிரூபிக்கத் தயாராயிருக்கிறேன். ஒரு நீதி விசாரணை நடத்தினால் அவருக்கு எவ்வளவு சொத்து இருக்கிறது என்று சொல்லத் தயார்' என்று சொன்னார்கள். பிறகு நான் குறிப்பிட்டது "சட்ட மன்றப் பேரவைத் தலைவர்கள் மாநாட்டில் கூட ஒரு முடிவிற்கு வரப்பட்டது. குற்றஞ் சாட்டுகிற நேரத்தில் ஆதாரங்களோடு கூடிய குற்றச்சாட்டுகளைச் சொல்லவேண்டும். ஆதாரம் இல்லாத 'வைல்ட் அலிகேஷன்ஸ்' க்கு சட்டமன்றத்தில் இடம் கொடுக்கக் கூடாது என்று. எதற்கு வேண்டுமானாலும். 'என்கொயரி வையுங்கள், நிரூபிக்கிறேன்' என்று சொல்வது முறையல்ல. இது இன்றோடு முடிவதல்ல. ஒரு மாதம் கழிந்து கூடப் போகிறோம். அப்போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அது தவறான ஸ்டேட் மெண்ட் என்று சொல்லி ஆதாரங்களைக் கொண்டு வந்து சட்ட மன்றத்தில் பேசலாம்" என்று கூறியிருக்கிறேன். பிறகு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள், 'ஆதாரத்தோடு கொண்டு வரத் தயா ராக இருக்கிறேன் என்று சொல்லிக்கொள்ளுகின்றேன்' என்று கூறினார்கள். பிறகு திரு. அழகமுத்து அவர்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பி, 'வரி கட்டாமல் அமைச்சரவர்கள் மீது வழக்கு இருப்பதாகக் கூறினார்கள். அமைச்சரவர்கள் எந்தவிதமான வழக்கும் இல்லை என்று கூறினார்கள். எனவே, அதை நிரூபிக்க அவர்கள் தயாராக இருக்க வேண்டும், அல்லது அதை வாபஸ் வாங்க வேண்டும்' என்று சொன்னார்கள். எதிர்க்கட்சித் தலைவரவர்கள்,





'நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன்' என்று சொன்னார்கள். பிறகு மாண்புமிகு ஆதித்தனார் அவர்கள், 'எந்தவிதமான வழக்கும் இல்லை. அப்படி வழக்கு இருப்பதாகக் கூறினால், என்ன நம்பர், எங்கே இருக்கிறது என்று கூறலாம்' என்று கேட்டார்கள் பிறகு மாண்புமிகு முதலமைச்சரவர்கள், 'எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் 85 லட்சம் ரூபாய்க்கு வருமான வரி கட்டவில்லை என்பதாக வழக்கு இருக் கிறது, அதை நிரூபிக்கிறேன் என்று கூறியுள்ளார்கள். அப்படி நிரூபிக்காவிட்டால் எந்த வகையில் பொறுப்பேற்றுக்கொள்கி றார்கள்?' என்று கேட்டார்கள். எதிர்க்கட்சித் தலைவரவர்கள், 'சபாநாயகரவர்களே, அவர்கள் மந்திரியாக வந்த பிறகு இருக்கிற தா இல்லையா என்பதைப்பற்றிய பிரச்சினை கிடையாது. எனக்கும் கொஞ்சம் சட்டம் தெரியும். ஆதித்தனார் என்ற பெயரில் பல பத்திரிகைகளில், கோடீஸ்வரர் என்று வந்திருக்கிறது' என்று பேசத் தொடங்கியதும், நான், 'இன்னும் ஒரு மாத காலத்தில் கூடப் போகிறோம், அப்படிக் கூடுகின்ற நேரத்தில், என்னென்ன சொத்துக்கள் இருக்கின்றன, போட்டிருக்கும் அறிக்கை தவறு என்பதற்கான ஆதாரங்களுடன் பேசுங்கள் என்று கூறினேன்.

பிறகு, 6—3—1970-ஆம் தேதியன்று, மாண்புமிகு முதலமைச் சரவர்கள், 'மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அடிக்கடி நிரூபிக்கிறேன் என்று சொல்கிறார்கள். 85 லட்ச ரூபாய்க்கு வரு மான வரி சம்பந்தமான வழக்கு ஒன்று இருக்கிறது என்றும், அதை நிரூபிப்பதாகவும் முன்பு சொன்னார்கள். இதுவரையில் நிரூபிக்க வில்லை. இந்த பட்ஜெட் கூட்டத்தொடர் முடிவதற்குள்ளாவது நிரூபிப்பாரா?' என்று கேட்டார்கள். அதற்கு மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள், 'மகன் பெயரில் ஹைகோர்ட்டில் கேஸ் போடப்பட்டிருக்கிறது. மகன் இவர்கள் வழியாக வந்த மகன் தானே? வேறு வழியாக வந்த மகனா? அந்த ஆதித்தன் யார்? அவருடைய குடும்பத்தின் வழி வந்த ஆதித்தன் என்ற பெயரில் தான் இருக்கிறது. தன் பெயரில் இல்லை என்று வேண்டுமானால் சொல்லிக்கொள்ளலாம். உண்டா, இல்லையா? நாளைக்குக் கேள்வி நேரம் முடிந்தபிறகு சட்டசபையில் அதற்கான ஆதாரத்தைக் கொண்டு வந்து சமர்ப்பிக்கிறேன்.' என்று சொன்னார்கள்.

ஆகவே, தொடக்கத்தில் திரு. ஆதித்தனார் மீது என்று சொல்லி விட்டு, பிறகு அவருடைய மகன்மீது இருக்கிறது என்று சொல்லி விட்டு, இப்பொழுது நம்முடைய அவையிலே கொடுப்பதற்காக ஒரு காகிதத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதைக் காகிதம் என்று நான் சொல்வதற்குக் காரணம், இங்கே நம்முடைய அவையில் கொண்டுவரக்கூடிய ஆதாரம், ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆதாரமாக இருக்க வேண்டும். இதில் கேஸ் நம்பர் போடாமல், வால்யூம் 32, ஐ.டி.ஆர்./1964 என்று போட்டுள்ளதைக் கொடுத்திருக்கிறார்கள். உண்மையான நகல் என்பதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை.

நிரூபிக்க வேண்டுமென்று சொன்னால் நிரூபிக்க நான் தயாராக இருக்கிறேன். முன்பு 85 லட்சம் என்று சொன்னீர்களே, இப்பொழுது 55 லட்சம்தான் என்று சொல்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இப்போது சொன்ன இந்தத் தகவல்களையெல்லாம், தாங்கள் தந்துள்ள ஆதாரம் உள்ளடக்கியிருக்கிறதா?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இதைப்பற்றி நான் சொல்வது என்னவென்றால், அவருக்கு தினத் தந்தி டிரஸ்டில் சம்பந்தம் இருக்கிறது என்பதற்கு ஆதாரம் இருக்கிறது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவர் அவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர். சட்டமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் தங்களுடைய சொத்துக் கணக்குகளை சமர்ப்பித்திருக்கிறார்கள். ஒரு பெரிய விவாதமே தொடர்ந்து நடந்து வருகிறது. யார் யார், எவ்விதம், கணக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை விசாரிக்க ஒரு விசாரணைக் குழுவை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது பாயிண்ட் ஆஃப் ஆர்டரா?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தலைவர் அவர்களே, நீங்கள் கொடுத்த தீர்ப்பை நான் மீறுவதாக இல்லை. நான் சொல்ல விரும்புவதெல்லாம், அமைச்சர் அவர்கள் பவுண்டர் டிரஸ்டி என்று கொடுத்திருந்தால், எனக்கு ஆட்சேபம் ஒன்றும் இருந்திருக்காது. ஆனால் அவர் பவுண்டர் டிரஸ்ட்டியாக இந்தத் தேதி வரைக்கும் இருக்கிறார். அமைச்சரான பிறகும் இந்தத் தேதி வரைக்கும் இருக்கிறார். நீதிவிசாரணை வையுங்கள். நான் நிரூபிக்கிறேன். நான் நிரூபித்தால் அவர் மந்திரிசபையை விட்டே விலகிவிட வேண்டும். நிரூபிக்கவில்லையென்றால், நான் விலகிக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சாலென்ஜ் செய்வதையெல்லாம் இந்த அவையிலே வைத்துக் கொள்ளக்கூடாது. சாலென்ஜ் செய்வதற்கு இந்த அவையில் இடமில்லை. நீங்கள் எதை எதைச் சொல்ல வேண்டுமென்று நினைக்கிறீர்களோ, அவைகளையெல்லாம் இங்கே சொல்வதற்கு இந்த அவையை பயன் படுத்திக்கொள்ளக்கூடாது. உங்களுடைய அரசியல் போராட்டத்தை வெளியே வைத்துக் கொள்ளுங்கள். உறுப்பினர்கள் பேசும்போது இப்படி இப்படிப் பேச வேண்டுமென்று ஒரு விதி இருக்கிறது. அந்த விதிமுறைகளைக் கடைப் பிடிக்க வேண்டும். குற்றச்சாட்டு என்று சொல்லும்போது ஆதாரத்தோடு குற்றச்சாட்டு செய்ய வேண்டும். டாக்குமென்ட் என்றால் அதற்கும் விளக்கம் தரப்பட்டிருக்கிறது. ஆக அதற்குச்





'The word "document" denotes any matter expressed or described upon any substance by means of letters, figures or marks or by more than one of those means intended to be used or which may be used as evidence of that matter . . .'

சான்றாக இருக்கக்கூடிய காகிதம்தான் டாக்குமென்டாக இருக்க முடியும். ஆகவே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு சந்தர்ப்பம் தருகிறேன். நீங்கள் மீண்டும் 85 லட்சம் ரூபாய், மகன்மீது இருக்கிறது என்றெல்லாம் குற்றச்சாட்டு செய்யக்கூடாது இந்தக் காகிதம் டாக்குமென்ட் இல்லையென்றால் டாக்குமென்ட் கொண்டு வந்து தருகிறேன் என்று சொன்னீர்கள். அதற்கும் ஒரு வாய்ப்புத் தருகிறேன். அதன்மீது முடிவு எடுக்கலாம். எந்தக் குற்றச்சாட்டையும் யார்மீதும் கூறி விடலாம், பின்பு கமிட்டி வையுங்கள், கமிஷன் வையுங்கள், ஆதாரம் கூறுகிறேன் என்று சொல்வது முறையாகாது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விரும்பினால், இன்னொரு முறை டாக்குமென்ட் கொடுக்கிறேன் என்று உறுதி கூறினால் இந்த நிகழ்ச்சிக்கு இத்துடன் முற்றுப்புள்ளி வைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டுச் சட்டப் பேரவை நடைமுறைவிதி 67, இரண்டாவது துணை விதிப்படி இந்தச் சட்டமன்றம் நடைபெறப் போகிறதா அல்லது இதேமாதிரிதான் நடைபெறப் போகிறதா என்பதற்கு நீங்கள் இன்னும் தீர்ப்பை வழங்கவில்லை. அமைச்சர்கள்மீது அபாண்டமாகப் பேசுவதும், அதை விசாரணைக்குக் கொண்டுவருவது என்பதும் சரியல்ல. அதைத் தவிர்ப்பதற்கு ஒரு தீர்ப்பு மூலமாகக் கூறிவிடுங்கள். இந்த மன்றத்தின் உறுப்பினர்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற முறையில் நீங்கள் காவலாக இருக்கிறீர்கள். நீங்கள் தீர்ப்பை வழங்க வேண்டும்.

**Thiru K. VINAYAKAM :** Sir, on a point of further elucidation.

**Mr. SPEAKER:** No point of elucidation now.

**Thiru K. VINAYAKAM :** Sir, arising out of the document placed on the table of the House, I want to say that this is not a personal charge.

**Mr. SPEAKER :** No further discussion.

அடுத்து, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், இந்த அவை சட்டமன்ற விதிமுறைகளையொட்டி நடைபெற வேண்டாமா என்பது பற்றிச் சொன்னார்கள். நான் அதை மீண்டும், மீண்டும் வற்புறுத்துகிறேன். பேரவைத் தலைவர் அவர்கள் வற்புறுத்தி, உறுப்பினர்கள் தீர்ப்புக்கு அடங்கி நடக்க மாட்டோம் என்றால் என்ன பொருள்? எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், "எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் ஒரு மாநாடு கூட்டி முடிவு எடுக்கவேண்டும்"

எதிர்க் கட்சித் தலைவரவர்கள், அது என்னென்ன வகையில் தவறானது என்பதற்கான ஆதாரம் கொடுங்கள். அதை நான் மறுக்கவில்லை.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, குடும்பம் என்றால் என்ன என்பது தீர்மானத்தில் இருக்கிறது. தீர்மானத்தை எதிர்க் கட்சித் தலைவரவர்கள் படித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். தீர்மானத்தின் விதிப்படி, பிரிந்து இருக்கும் மகன் பற்றி, மகன் இருக்கும் ட்ரஸ்ட் பற்றி சொல்ல வேண்டும் என்று இருக்கிறதா? கூட்டுறவு அமைச்சர் அதை மறைத்திருக்கிறார்களா?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தயவுசெய்து நான் சொல்வதை பூரணமாகக் கேளுங்கள். குறுக்கே, குறுக்கே பேசினால்? நான் பேசுவதை இன்னும் முடிக்கவில்லையே, குறுக்கே குறுக்கே கேட்டுக் கொண்டிருந்தால் எப்படி? பயந்து ஓட மாட்டேன், நிரூபித்து விட்டுத்தான் போவேன். பயந்து போய்விடமாட்டேன். பயந்து போக நான் எதிர்க் கட்சித் தலைவனாக இல்லை. யார் உதவிக்கு வந்தாலும் (சபாநாயகர் உதவிக்கு வந்தாலும், ஓடிவிடமாட்டேன். . . . சபை பூராவும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் வாயில் பயந்து ஓடமாட்டேன் என்கிற வார்த்தை கூட வரக்கூடாது. இந்த அவை அவர் பயந்து ஓடக்கூடிய நிலையில் இருக்கும் என்று உட்பொருள் ஆகும். அது சரி இல்லை. அதுவே கூட ஒரு குற்றம் என்பதையும் உணரவேண்டும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** 'ஓட மாட்டேன்' என்கிறார்கள். ஓடினாலும் விட்டுவிடுவதாக இல்லை (பலத்த சிரிப்பு).

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஓட்ட முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவருக்கு திருப்பித் திருப்பிச் சொல்லுகிறேன். கொடுத்திருக்கிற கணக்கு, தகவல் இப்படிக் கொடுத்திருக்கிறார்கள், அது உண்மையாக இருக்கமுடியுமா என்கிற அந்தக் கேள்வியை எழுப்பாதீர்கள். கொடுத்திருக்கிற தகவல் இன்னின்ன ஆதாரப்படி தவறு என்று சுட்டிக்காட்ட வேண்டும் என்பதை சுட்டிக் காட்டிச் சொல்லுகிறேன். அதை அவர்கள் சொல்லவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சொல்லிக் கொண்டே வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பழைய கதைக்குப் போக வேண்டாம். 85 லட்ச ரூபாய் வருமான வரியை ஏமாற்றிவிட்டார் மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் என்றும், வழக்கு நீதி மன்றத்தில் இருக்கிறது என்றும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குற்றம் சாட்டிவிட்டு, அடுத்துவரும் காலத்தில் அவர் பெயரில் இல்லை. அவருடைய மகன் பெயரில்



இருக்கிறது என்ற குற்றச்சாட்டில் விலகியதும், இப்பொழுது கொடுத்திருப்பதும் அதற்கான விவரம் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன். அதைத் தான் நான் மீண்டும் சொல்கிறேன், இதற்கான விளக்கத்தைச் சொல்ல முடியுமானால் சொல்லுங்கள். இல்லை என்றால், பழைய கதைக்குப் போய் அவையின் அருமையான நேரத்தை வீணாக்குவதை நான் விரும்பவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பொறுத்திருந்து கேளுங்கள். என்னுடைய வாதமெல்லாம், ட்ரஸ்டுக்கும் இவருக்கும் சம்மந்தம் இருக்கிறது என்பதுதான். அவர்தான் முதல் 'பௌண்டர் ட்ரஸ்டி ஆப் தினத் தந்தி', அது இந்தத் தேதிவரையில் இருக்கிறது. அவர்களும் இருக்கிறார்கள். 1969-ல் அமைச்சரான பிறகு ஹைக்கோர்ட்டில் கேஸ் வந்த போது அவர் இருக்கிறார். 1969-ல் தினத் தந்தியில் சி. பா. ஆதித்தனார் அவர்கள் பௌண்டர் ட்ரஸ்டி. அவர்கள் ஆரம்பித்தார்கள். என்னென்னமோ கேஸ்கள் இருக்கின்றன. அபராதம் விதித்திருக்கிறார்கள். அபராதம் எவ்வளவானால் என்ன. குற்றவாளி தானே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சற்று இருங்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** என்னுடைய ஆர்குமெண்டைக் கேளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆர்குமெண்டில் நேரத்தை வீணாக்க வேண்டாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இதில் என்னுடைய மானம், என் கட்சி எல்லாம் இங்கே இருக்கிறது. என்னுடைய நேரத்தையும் வீணாக்க விரும்பவில்லை. எவ்வளவு நேரமானாலும் நிரூபிக்கத் தயார். தினத் தந்தியின் 'பௌண்டர் ட்ரஸ்டி' என்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ட்ரஸ்டின் நோக்கமே இன்கம்டாக்சைக் கொடுப்பதில். (குறுக்கீடு) அதைப் பற்றி பின்னால் பூரணமாகச் சொல்லுகிறேன். அதற்கு முதல் விதிவிலக்கு மறுக்கப்பட்டிருக்கிறது. பின்னால் விலக்கு கொடுக்கப் பட்டிருக்கிறது. பலப் பல கேசுகள் இருக்கின்றன. 1969-ல் மீண்டும் தினந் தந்தி மேல் கேசுகள்-ரீ-ஓபன் செய்து மீண்டும் ரிட் போட்டு, தடை உத்தரவை வாங்கியிருக்கிறார்கள். அவரும் அவருடைய மகனும், 1969-ல் அமைச்சரானதற்குப் பின்னால் தொடர்ந்து ஒரு கேஸ் இருக்கிறது. தினந் தந்தி டிரஸ்ட் மேல் இருக்கிறது (குறுக்கீடு) சமமந்தம் இருக்கிறது. ட்ரஸ்ட் என்ற முறையில் சொல்கிறேன். அவர் எத்தனையோ வ ம், லட்சம் வைத்துக்கொள்ளட்டும். ஆட்சேபணையில்லை. அ றகாக குற்றம் சாட்ட விரும்பவில்லை. பெருமைப் படுகிறேன். ஒரு தமிழன். பச்சைத்தமிழன் (குறுக்கீடு) இவ்வளவு பெரிய சொத்து வைத்திருக்கிறார் என்றால் பெருமைதான். தவறு இல்லை, ஆனால் தினத் தந்தியின் டிரஸ்ட்டுக்கு 1969-ம் வருஷத்தில் 'பௌண்டர் ட்ரஸ்ட்' என்ற முறையில் அவரும் அவர் மகனும் தடைஉத்தரவு வாங்கியிருக்கிறார்கள். தகவல் இருக்கிறது. நீங்கள்

[1970 மார்ச் 10

DR H. V. HANDE : Sir, to discuss the necessity to offer a better deal to the Non-Gazetted Officers in the State including those in the Hill Stations, I move—

"That the allotment of Rs. 4,54,51,100 under Demand No. 8—Head of State, Ministers and Headquarters staff be reduced by Rs. 100."

திரு. ரா. கனகசபை : தலைவர் அவர்களே, ஒரே நிகழ்ச்சிக்கு எல்லா அமைச்சர்களும் சென்று கலந்துகொள்ள வேண்டுமென்று இப்போது கடைப்பிடித்து வருகின்ற முறையை தவிர்க்கவேண்டும் என்று விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,54,51,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(இ) நிதிக் கோரிக்கை எண் 33—பல்வகை

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 33—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ரூ. 8,32,85,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, இலங்கை, பர்மா, மலேயா முதலிய பிரதேசங்களிலிருந்து தாயகம் திரும்பி வரும் மக்களுக்கு மேலும் உதவி புரியும் விஷயத்தைப்பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 33—பல்வகை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 8,32,85,400-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K. RAMAMOORTHI: Sir, to discuss policy I move the cut-motion standing in my name—

"That the allotment of Rs. 8,32,85,400 under Demand No. XXXIII—Miscellaneous—be reduced by Rs. 100."

DR. H. V. HANDE : To discuss the need to recognise the "Venthirai Thunai Nadigar Sangam" for the purpose of the issue of "Censor Certificate to avoid exploitation by the producers", I move the cut-motion standing in my name :—

"That the allotment of Rs. 8,32,85,400 under Demand XXXIII—Miscellanous be reduced by Rs. 100."



1970 மார்ச் 10]

திரு. ஏ. அ. சுப்பராஜா : தலைவர் அவர்களே, அரசியல் கைதிகளுக்கு செலவழிக்கப்படும் தற்போதைய நிதி போதுமானதாக இல்லாதது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 33—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 8,32,85,400-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : என் வெட்டுத் தீர்மானம் என்ன ஆயிற்று ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிற உறுப்பினர்கள் தங்கள் தங்கள் கட்சியின் சார்பாக எந்த வெட்டுத் தீர்மானம், யாரால் பிரேரேபிக்கப்படுகிறது என்பதை முன்கூட்டியே எனக்கு தெரிவித்துவிடுவது நன்றாக இருக்கும்.

இப்போது மானியங்களும், வெட்டுத் தீர்மானங்களும் விவாதத்திற்கு வருகின்றன.

* திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அரசுத் தரப்பில் கோரப்பட்டிருக்கிற இந்த மானியக் கோரிக்கைகளுக்கு என்னுடைய கட்சியின் சார்பாகவும், என் சார்பாகவும் கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்களை ஒட்டி என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இந்த அவையில் வைக்க விரும்புகிறேன்.

குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்—ஆட்சி பீடம் ஏறியதும் அமைச்சர்கள் தங்களுடைய சம்பளத்தைப் பாதியாகக் குறைத்துக்கொண்டு 500 ரூபாய்தான் சம்பளம் வாங்குகிறார்கள் என்கிற நிலைமை மக்கள் மத்தியில் நிலவி வருகிறது.

1966-67-இல் காங்கிரஸ் ஆட்சி நடந்தபோது படாடோபமான பக்தவத்சலம் அவர்களுடைய ஆட்சியில் அமைச்சர் வகைக்கான செலவு ஐந்து லட்சத்து பதினெட்டாயிரத்து ஐநூறு ரூபாய் தான். உண்மையிலேயே அந்த படாடோப ஆட்சியில் 5 லட்சம் ஆயிற்று என்றால்—அந்த அமைச்சர் முழுச் சம்பளம் வாங்கிக்கொண்டிருந்த நேரத்தில் 5 லட்சம் ஆயிற்று என்றால், இவர்கள் பாதிச் சம்பளம் 500 வாங்குகிற நேரத்தில் அந்த 5 லட்சத்தில் பாதியாகிய இரண்டு லட்சத்து ஐம்பத்தேழாயிரம்தான் செலவாக வேண்டும்.

ஆனால் இந்த 1970-71-க்கு நாம் அந்த செலவினத்தைப் பார்க்கிறபோது பத்து லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் மானியமாகக் கேட்டிருக்கிறார்கள். பாதியாகக் குறைக்கப்படவேண்டியது 5 மடங்காகப் பெருகியிருப்பதை பார்க்கிறபோது உண்மையில் அதற்குக் காரணம் என்ன என்பதை அறிய ஆசைப்படுகிறோம்.

[திரு. டி. மார்டின்] [1970 மார்ச் 10

அதுமட்டுமல்ல. காருக்காக மட்டும் 1967-68-இல் 3 லட்சம் ரூபாயும், 1968-69-ல் 2 லட்சத்து 59 ஆயிரம் ரூபாயும், 1969-70-இல் 2 லட்சத்து 35 ஆயிரம் ரூபாயும் ஆக மொத்தம் 7 லட்சத்து 95 ஆயிரத்து 643 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவற்றைத் தவிர இப்போது 1970-71-க்கு 2 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். ஆக மொத்தத்தில் பார்த்தால் காருக்காக மட்டும் 9 லட்சத்து 95 ஆயிரம் ரூபாய் செலவினமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. உண்மையில் இப்படி ஒதுக்கப்பட்டிருப்பதற்கான காரணத்தை இந்தமாமன்றம் அறிந்தாகவேண்டும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஒரு சின்ன விளக்கம். கார்களைப்பற்றிக் கூறினார்கள். அமைச்சர்களுக்காக மட்டும் வாங்கப் பட்ட கார்கள் அல்ல. பொதுவாக தலைமைச் செயலகம் முழு மைக்குமாக வாங்கப்பட்ட கார்களின் செலவு அவை.

**திரு. டி. மார்டின் :** தலைமைச் செயலகம் முழுமைக்குமாக வாங் கப்பட்ட கார்களின் செலவு, இவை என்றால் அப்படி வாங்க வேண்டிய அவசியம் பற்றி விரிவாக விளக்கம் சொல்லவேண்டும். அமைச்சர்களுக்காக மட்டும் காருக்காக ஆன செலவு என்ன என் பதை மொத்தத்தில் இருந்து பிரித்துச் சொல்லியாக வேண்டும். அப்படிப் பிரித்துக் கொடுப்பார்களேயானால் படாடோப ஆட்சிக்கும் ஏழைகளின் ஆட்சிக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது என்பதை மக்கள் அறிந்துகொள்ள முடியும். இனி மேல் வருகிற நிதிநிலை அறிக்கையில் அமைச்சர்வகை கார்ச் செலவு என்ன, தலைமைச் செயலக கார்ச் செலவு என்ன என்பதைத் தனித் தனியே பிரித்துக் கொடுக்கவேண்டும் என்றும் விரும்புகிறேன்.

குறிப்பாக சிக்கனம் என்பது இன்றைக்கும் பெயர் அளவில் தான் இருக்கிறது, செயல்முறையில் இல்லை என்பதை எல்லோரும் அறிவார்கள்.

குறிப்பாக, ஆட்சியில் உள்ளவர்கள் ஒரு சில அதிகாரிகளுக்கு வேண்டுமென்ற முறையில் தனிச்சலுகை காட்டுவது, பாரபட்ச மாக நடந்துகொள்வது என்கிற நிலை இருக்கிறது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக முதல் அமைச்சரிடம் இருக்கக்கூடிய பி.ஏ. வைத்தியலிங்கம் அவர் கள் டெபுடி கலெக்டராக நேர்முகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். பின்பு சர்வீஸ் டென்யூர் ஆகிப்போய் ஆர்.டி.ஓ.-ஆகப் பணியாற்றி வந்தார்கள். தேர்தல் முடிந்தவுடன் பொதுப்பணித்துறையை அமைச்சர் எடுத்துக்கொண்டபோது அவருக்குப் பி.ஏ. ஆகச் சென்றார். அப்படி பி.ஏ. ஆக இருந்த நேரத்தில் அதுவும் மறைந்த முதல் அமைச்சர் அண்ணாதுரை அவர்கள் அமெரிக்காவில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நேரத்தில்—இவருக்கு பேப்பர் ப்ரமோஷன்—டெபுடி கமிஷனராகக் கொடுக்கப்பட்டிருக் கிறது. அதுவும் அப்போது இருந்த திரு. கெய்வார் அவர்கள் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்தும், புல் ரெவின்யூ போர்டு



1970 மார்ச் 10] [திரு. டி. மார்டின்]

எதிர்ப்புத் தெரிவித்தும்—மேலே வேலை செய்துகொண்டிருந்த பலரைக் கீழே தள்ளிவிட்டு இவருக்குப் பேப்பர் ப்ரமோஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை ஏன் கூறுகிறேன் என்றால் அவருக்காக எல்லா விதிகளையும் தளர்த்திச் செய்திருக்கிறார்கள். தனிப்பட்ட முறையில் அவருக்குச் சலுகை ஏன் அளிக்கப்பட் டிருக்கிறது என்பதை இந்த மாமன்றம் அறியக் கடமைப்பட்டிருக் கிறது.

இன்று முதல் அமைச்சருக்கு பி.எஸ். ஆக இருக்கிறார்கள். மற்ற அமைச்சர்களுக்கும் பி.ஏ. இருக்கிறார்கள். சட்ட அமைச்சரிடத் தில் கெஜெடெட் பி.ஏ. ஆக டெபுடி செக்ரடரி கிரேடில் ஒருவர் இருக்கிறார். இருந்தும் முதல் அமைச்சரிடம் இருக்கக்கூடிய வருக்கு மட்டும் ஸ்பெஷல் பே என்பதாக 250 ரூபாய் கொடுக்கப்படு கிறது. அவர் டி.ஆர்.ஓ. கிரேடில் இருக்கிறவர். பே ஸ்கேலை அடிப் படையாக வைத்துப் பார்த்தால் 195 வாங்கலாம். 200 வாங்கட்டும். ஏன் 250 கொடுக்கப்படுகிறது? அதுமட்டுமல்ல. சென்னையில் டி.ஆர்.ஓ. கிரேடில் ஆறு, ஏழு பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் 150 தான் வாங்குகிறார்கள். அவர்களுக்கு இல்லாத வகையில் தனிச் சலுகையாக இவருக்கு ஏன் 250 கொடுக்கப்படுகிறது? இவர் என்ன அதிகமாக வேலை செய்கிறார் என்று அர்த்தமா? முதல் அமைச்சர் அவர்களிடம்—அப்போது எதற்காக இன்னொரு கெஜெடெட் பி.ஏ. கருப்பண்ணன் என்பவர் இருக்கிறார். உண்மை யிலேயே இதைப்பற்றியெல்லாம் இந்த மாமன்றம் விளக்கம் பெற ஆசிக்கிறது.

மத்தியிலேயிருந்து யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் சென்னை மாநிலத்திற்கு அக்டோபர் 1969-ல் வந்தது இங்கே வந்து விருந்து சாப்பிட்டுவிட்டுச் செல்வதற்காக வரவில்லை. ஐ.பி.எஸ்., ஐ.ஏ.எஸ். கோட்டாவை இந்த மாநிலத்திற்கு நிர்ணயம் செய்வதற்கு வந்தார் கள். வந்தவர்கள் ஐ.பி.எஸ். கோட்டாவை நிர்ணயம் செய்துவிட்டு டெல்லி மாநகருக்குச் சென்றுவிட்டார்கள். ஐ.ஏ.எஸ். கோட் டாவை நிர்ணயம் செய்யவில்லை. காரணம் என்ன? பி.ஏ. அவர் களுக்கு என்ன என்ன சலுகைகள் காட்டி டெபுடி கமிஷனர் போஸ்டிலே போடுவதற்கு எப்படிப்பட்ட முறையிலே விதிகள் மாற்றப்பட்டுச் சலுகைகள் காட்டப்பட்டதோ அதே முறையிலே ஐ.ஏ.எஸ்.லிலும் 41-வது போராக இருந்தவரை 15-வது போராகக் கொண்டு வந்து 26 பேர்களுக்கு முன்னாலே மேலே கொண்டுவரக் கூடிய அளவுக்கு விதிகளை மாற்றி சீனியாரிடியை மாற்றி ஒரு லிஸ்டைத் தயார் செய்து கொடுத்தார்கள். அதனால் பாதிக்கப் பட்டவர்கள் குமுறிய எரிமலையாக இருக்கிறார்கள். அதேபோன்று 130-வது போராக இருந்த நாகராஜன் என்பவர் 130 இடங்களை முந்திக்கொண்டு வந்திருக்கிறாரே. இவையெல்லாம் அரசு ஊழியர் களிடம் இந்த அமைச்சரவை காட்டும் பாரபட்சம் இல்லையா? இது பாரபட்சம் ஆகாதா? ஐ.பி.எஸ்.க்கு என்ன முறையைக் கையாள் கிறார்களோ அதே முறையைத்தான் இதற்கும் கையாளவேண்டும். ஐ.பி.எஸ்.க்கு ஒரு முறை ரெவின்யூ எக்ஸிகியுடிவ்க்கு ஒரு

என்று சொன்னார்கள். நீங்கள் போகிற போக்கிலேதான் போக வேண்டுமென்று சொன்னால், சட்டமன்றம் நன்றாக நடக்காது, உறுப் பினர் யாராவது குற்றச்சாட்டு சொல்லவேண்டுமென்றால் அந்தக் குற்றச்சாட்டு ஆதாரத்தோடுதான் இருக்கவேண்டும். நிதி பெற்றிருக்கி அந்தப் பதவிக்குரிய முறையில் செயலாற்றி தவறு க்கைச் சுட்டிக்காட்டுவதாக குற்றச்சாட்டுகள் இருந்தால், அந்த பாதிரிக் குற்றச்சாட்டு கூறும் உறுப்பினர்கள்மீது என்ன நட டிக்கை எடுக்கவேண்டுமென்பதற்கு சட்டமன்ற விதிமுறைகள் இடம் கொடுத்திருக்கிறது. அந்தக் கட்டாய நிலை எனக்கு வந்துவிடும் என்பதை உறுப்பினர்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு வந்துவிடும் என்பதை உறுப்பினர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எதிர்க்கட்சித் தலைவர்கள் அவர்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு அளித்து, இதை இந்த அளவோடு முடித்துக் கொள் கிறேன்.

### (4) 1970–71-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு தொடர்ச்சி

#### (அ) நிதிக் கோரிக்கை எண் 7—தேர்தல்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன் :

"நிதிக் கோரிக்கை எண் 7—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 8,48,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

THIRU K. VINAYAKAM: Sir, to discuss about the desirability of conducting fair and impartial elections and to dissuade the State Ministers in participating in the election propaganda, I move—

'That the allotment of Rs. 8,48,000 under Demand No. 7 --Elections be reduced by Rs. 100.'

திரு. எம். பூபதி: தலைவர் அவர்களே, நடமாடும் தேர்தல் முறையை கையாள வேண்டும் என்பதைப்பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 7—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 8,48,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

DR. H. V. HANDE: Sir, to discuss the need to include Engineering Diploma holders of three year' standing in the electoral rolls of the Graduates Constituencies, I move—

'That the allotment of Rs. 8,48,000 under Demand No. 7—Elections be reduced by Rs. 100.'





#### (ஆ) நிதிக் கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச் சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,54,51,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

திரு. வி. கே. கோதண்டராமன்: தலைவர் அவர்களே, அமைச்சர் களில் பலர் தலைமைச் செயலகத்திற்கு வாராமல் இருப்பதால் பாதிக் கப்படுவதைப் பற்றி எடுத்துக் கூற—

'நிதிக் கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச் சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,54,51,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. டி. மார்டின்: தலைவர் அவர்களே, அமைச்சர்கள் வகைக்கு செலவாகும் தொகை பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச் சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,54,51,100-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவர் அவர்களே, பொதுமக்கள் அனுப்பும் மனுக்களுக்கு ஒரு மாதத்திற்குள்ளாக பதில் அனுப்ப ஏற்பாடு செய்யவேண்டுமென்று விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச் சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,54,51,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஏ. அ. சுப்பராஜு: தலைவர் அவர்களே, அமைச்சர்கள் உப யோகிக்கும் வாகனங்கள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப் பட்டவைகளைத் தவிர்த்து நமது நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட வைகளை உபயோகப்படுத்துவது குறித்து விவாதிக்க—

"நிதிக்கோரிக்கை எண் 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர் கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,54,41,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

[திரு. டி. மார்டின்] [1970 மார்ச் 10

முறையா? இதற்கான காரணங்களை அமைச்சர் அவர்கள் நிச்ச
யம் விளக்கவேண்டும். இந்தப் பாசப் பிணைப்பின் அர்த்தம் என்ன
என்பதை இந்த அவைக்குச் சொல்லவேண்டும்.

சேலத்தில் தாண்டவராயக் கவுண்டர் மொத்த வியாபாரம்
செய்வதற்கு ஹோல்சேல் புட்கிரயன்ஸ் லைசென்ஸ் கொடுக்கப்பட்டி
ருக்கிறது. அவர் எந்தவிதமான வியாபாரமும் செய்தவர் அல்ல,
சேல்ஸ்டாக்ஸ் கட்டியவரும் அல்ல, அப்படியிருந்தும் எந்த குவாலி
பிகேஷன் அடிப்படையில் அந்த லைசென்ஸ் கொடுக்கப்பட்டது,
என்று சேலம் மாவட்டத்தில் மக்கள் கேட்கிறார்கள். விசாரித்துப்
பார்க்கிறபோது அவர் சீப் மினிஸ்டருடைய பி.ஏ.-வின் சகோ
திரியை மணந்தவர் என்ற குவாலிபிகேஷனைத் தவிர வேறு குவாலி
பிகேஷன் இல்லாதவர் என்று கூறுகிறார்கள். இதை விளக்க
வேண்டும்.

ராமலிங்கக் கவுண்டர் என்பவர் ஈரோட்டில் வீட் புராடக்ஸ்
லைசென்ஸ் பெற்றிருக்கிறார். அவரும் பி.ஏ. அவர்களுக்கு
உறவினர் என்கிறார்கள். இவற்றையெல்லாம் அமைச்சரவை
தெளிவுபடுத்தவேண்டும். பேரவைத் தலைவர் அவர்களே, தெளிவு
படுத்துவதற்கு அவர்கள் கடமைப்பட்டு இருக்கிறார்கள்.

இன்னொன்று விந்தையிலும் விந்தையாக இருக்கிறது.
நான் முன்பே குறிப்பிட்டிருக்கிறேன். கோவையில் ஜான்
சிம்ஸன் என்பவர் அஸிஸ்டெண்ட் மோட்டார் வெகிக்கிள்ஸ்
இன்ஸ்பெக்டராக இருந்து லஞ்சக் குற்றத்திற்காக செக்ஷன்
5(1) (டி) 5 (2) பிரிவன்ஷன் ஆப் காரப்ஷன் ஆக்டின்படி ஒரு வருடக்
கடுங்காவல் தண்டனை ஸ்பெஷல் ஜட்ஜினால் விதிக்கப்பட்டு, சென்னை
உயர்நீதி மன்றத்தில் சி.ஏ. 234/65 படி உயர்நீதிமன்ற நீதிபதி
கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் மூன்று மாத கடுங்காவல்
தண்டனை அளித்து தீர்ப்பளித்தற்குப் பிறகு செங்கற்பட்டு
மாவட்டத்தில் அஸிஸ்டெண்ட் மோட்டார் வெகிக்கிள்ஸ்
இன்ஸ்பெக்டராக வேலை பார்க்கிறார் என்றால் இந்த அமைச்சரவை
நியாயப்படி இருப்பதற்கு தகுதி பெற்றிருக்கிறதா என்று கேட்க
விரும்புகிறேன். இந்த நபரை வேலைக்கு எடுத்துக்கொள்ள
உத்திரவு போட்டவர் யாராக இருந்தாலும், இதற்குத் தூண்டியவர்
யாராக இருந்தாலும் உடனடியாக சஸ்பெண்ட் செய்யவேண்டும்.
அப்படிச் செய்தால்தான் இந்த ஆட்சி பழைய முதலமைச்சர்
விட்டுச் சென்ற கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டை செயல்
முறைக்குக் கொண்டு வருகிறது என்று கூறமுடியும். உண்மை
யிலேயே இந்தவிதமான லஞ்சகுற்றத்திற்காக தண்டிக்கப்பட்ட
வர்கள், அவர்கள் கூறினார்களே பழைய ஆட்சியை பாவிகள் ஆட்சி
என்று, அந்தப் பாவிகள் ஆட்சியிலே, பக்தவத்சலத்தின் ஆட்சி
யிலே இந்த விதமாகத் தண்டிக்கப்பட்டவர்கள் யாராவது
உத்தியோகத்திற்கு வந்தார் என்றால் இதை நான் அப்படியே விட்டு
விடுகிறேன். நான் அறிந்துகொண்டவரையில் தண்டிக்கப்பட்ட



1970 மார்ச் 10] [திரு. டி. மார்டின்]

வர்கள் இந்தவிதமாக வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை
யென்று அநேகர் சொல்கிறார்கள். இதை விளக்குவதற்கு இந்த
அமைச்சரவை கடமைப்பட்டிருக்கிறது.

அவர்கள் தேர்தல் அறிக்கையில் என்ன கூறியிருக்கிறார்கள்
என்பதைப் பார்க்கவேண்டும். பேரவைத் தலைவர் அவர்களே இவற்
றிற்கு நீதி விசாரணை வைத்தால் அதற்கு நான் தயாராக இருக்கி
றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தேர்தல் அறிக்கை
யிலே அவர்கள், எதிர்க்கட்சியாக இருந்தபொழுது கொடுக்க
தேர்தல் அறிக்கையிலே, 8-ம் பக்கத்திலே பாரா 47 இல் ஊழல்கள்
நீக்கப்பட வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆட்சிப் பொறுப்
பிலே ஊழல் குற்றச்சாட்டுகள் வரும்பொழுது நீதி விசாரணைக்கு
அவற்றை உட்படுத்தவேண்டுமென்று கழகம் கடும் முயற்சிகளை
எடுத்துக் கொள்ளும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பேரவைத்
தலைவர் அவர்களே, அவர்கள் போன்று பெரு முயற்சி எடுக்கா
விட்டாலும் நான் பேசுவதன்மூலமாகச் சாதாரண முயற்சியை
எடுத்துகொள்கிறேன். இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு நீதி விசாரணை
வைக்கவேண்டும். தாங்கள் அந்த பைல்களை கால்பார் பண்ண
வேண்டும். அதற்குப்பிறகு நீதி விசாரணை வைக்கவேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன் (மணியடிக்கப்பட்டது).

TIRU T. MARTIN : I shall take ten minutes of my Deputy Leader 's time.

பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கார் ஊழியர்கள் சம்பந்தப்
பட்டவரையில் விதிமுறைகள் எவ்விதம் மீறப்பட்டிருக்கின்றன
என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சேலம் மாவட்டத்தில்
செல்லப்பன் என்பவர் டிஸ்ட்ரிக்ட் எஜுகேஷனல் ஆபீஸருக்கு
பி.ஏ. வாக பணியாற்றி வநதார். அவரை உலகத் தமிழ் மாநாட்டு
சாவ்னியர் வெளியிடுவதற்காகத் திடீரென்று கெஜடெட் போஸ்டு
கொடுத்து 375-25-800 என்ற அளவிலே கொடுத்து, பின்பு தற்காலிக
மாக ரிவர்ட் செய்து பிறகு சீரணி எடிட்டர் ஆகப் போட்டு 375-25-
800 என்ற அளவிலே போட்டு தற்சமயம் பேரவைத் தலைவர் அவர்
களே, பப்ளிக் ரிலேஷன்ஸ் ஆபீஸராகத் திடீரென்று 550 கிரேடிலே
போய்விட்டாரே. மற்ற ஊழியர்கள் எல்லாம் இதைப்பார்த்து
என்ன நினைப்பார்கள்? ஒரு சில ஊழியர்களுக்காகத்தான் இந்த
அமைச்சரவையும் சர்க்காரும் நடக்கிறதா? ஒரு சில அமைச்சர்
களுக்கும் ஒரு சில ஆபீசர்களுக்கும் உள்ள பாசப்பிணைப்புத்தான்
என்ன? எந்த அளவுக்கு அவர்களுக்குள் உறவு இருக்கிறது? இதை
இந்த மாமன்றம் அறியக் கடமைப்பட்டிருக்கிறது. மக்களும்
அறியக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

பரமசாமி என்பவர் பிளாக் டெவலப்மெண்ட் ஆபீஸில்
இருந்தார். சாதாரண நான்-கெஜடெட் ஆக இருந்தவர் திடீரென்று
மாநில சீரணி ஆபீஸராகப் போடப்பட்டு 500 கிரேடிலே கொடுத்
திருக்கிறார்கள். அவருக்கும் மேலே வேலை செய்தவர்களின் கதி

[திரு. டி. மார்டின்] [1970 மார்ச் 10

என்ன? அவர்கள் எந்தவிதமான இரக்கத்தோடு ஆட்சியைப் பார்ப்பார்கள்? ஆகா, நமக்குக் கைதூக்கிவிட ஆள் இல்லையே, நியாயமான உத்தியோக உயர்வு வாங்கிக் கொடுப்பதற்கு இந்த ஆட்சியிலே யாரும் இல்லையே, செல்லப்பனுக்கு ஆள் இருக்கிறார்கள், பாமசாமிக்கு ஆள் இருக்கிறார்கள், சீஃப் மினிஸ்டர் பி.ஏ. வைத்தியலிங்கத்திற்கு ஆள் இருக்கிறார்கள், ஆனால் மற்ற பி.ஏ. க்களுக்கு ஆள் இல்லையா என்று குமுறிக்கொண்டிருக்கிறார்கள். நான் கேட்பது எல்லாம் அரசாங்க ஊழியர்களுக்கு வேலை உயர்வு கொடுப்பதற்கு ரூல்கள் இருக்கின்றன அதன்பிரகாரம் ஜனநாயக ஆட்சியில் நடக்க வேண்டும் என்பதே கிராமங்களிலே சொல்வார்கள், மேனேஜர் விருப்பப் படி புரோகிராம் மாற்றப்படும் என்று சொல்வார்கள். அதைப் போன்று ரூல்களை கிராமங்களிலே நாடக மேடைகளிலே மாற்று வதைப்போன்று ஆட்சியிலே மாற்றினால் இது ஒரு சர்வாதிகார ஆட்சியாக இருக்கிறதே என்று மக்கள் கருதமாட்டார்களா?

ரத்தினவேலு டெபுடி தாசில்தாராக நான்-கெஜடெட் போஸ்டில் இருந்தவர் இப்பொழுது ஸ்டேட் கெஸ்ட் ஹவுஸுக்கு கெஜடெட் போஸ்டிலே போடப்பட்டிருக்கிறார். அவருக்கு மேலே இருக்கிறவர்களின் நிலைமை என்ன?

டிஸ்ரிக்ட் ஜட்ஜ் போஸ்ட்கள் 24 போஸ்ட்கள் இருந்தன. Department : Direct selection 18 : 6 என்ற முறை முன்பு கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. முதலமைச்சர் அவர்கள் ஆண்டாண்டுதோறும் கையாண்ட முறைதான் இருக்கும் என்று சொன்னார்கள். 18 : 6 என்ற முறை கடைப்பிடிக்கப்படவில்லை என்று ஜுடிஷியல் ஆபீஸர்ஸ், சப்-ஜட்ஜ், டிஸ்டிரிக்ட் முன்சீப்ஸ் சொல்கிறார்களே, Once a mortgage always a mortgage; Once a Sub judge, always a Sub-judge.

என்று வேடிக்கையாகச் சொல்வார்கள். அவர்கள் அந்தப் பாட்டுப்பாட ஆரம்பித்துவிட்டார்கள். இப்படியிருந்தால் உண்மையிலேயே நீதி நிர்வாகம் கெட்டுப்போய்விடும். அந்த அளவுக்கு விடக்கூடாது என்று கூறிக்கொள்கிறேன். (மணியடிக்கப் பட்டது)

THIRU T. MARTIN : I have already told that I may be given ten minutes' of my Deputy Leader's time.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 12 பேர்கள் பெயர் கொடுத்து இருக்கிறார்கள் இன்னும் இரண்டரை மணி நேரம்தான் இருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் பேசவேண்டும், பிறகு முதலமைச்சர் அவர்கள் பதிலளிக்கவேண்டும். பிறகு வோட்டுக்கு விடவேண்டும்.

THIRU T. MARTIN : Please give me two more minutes. I shall finish.

பேரவைத் தலைவர் அவர்களே, சொத்துக் கணக்கு பற்றி எல்லோரும் பேசினோம். இப்போது கொஞ்ச நேரத்திற்கு முன்னால் கூட இந்த அவையில் விவாதம் நடந்தது. சட்ட



1970 மார்ச் 10] [திரு. டி. மார்ட்டின்]

மன்றத்தில் நாம் ஒரு தீர்மானம் போட்டோம். அந்தத் தீர்மானத்தின்படி 30—9—1969-க்குள் இந்த மாமன்றத்தின் கணக்குகளை அமைச்சர்களும், உறுப்பினர்களும் வைக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு 'ஸாலம் ரெசல்யூஷன்' போட்டோம். இந்தவிதமாக ரெசல்யூஷனைப் போட்டுவிட்டு அந்த ரெசல்யுஷன்படி நடக்காத அமைச்சர்கள் யாராக இருந்தாலும் சரி, பழைய முதலமைச்சர் அவர்கள் காட்டிய 'கடமை' என்பதை நிறைவேற்றத் தவறி விட்டதன் காரணமாக இந்த அவையில் அந்தப் படத்திற்கு முன்பாக மன்னிப்புக் கேட்டிருக்க வேண்டும். 30—9—1969-க்குள் கணக்குகளை வைக்காமல் கடமையில் இருந்து தவறி விட்டோம் என்று இந்த அவையிடம் மன்னிப்புக் கேட்கச் சொல்லவில்லை; மறைந்த முதலமைச்சர் அவர்கள் படத்தின் முன்பு மன்னிப்புக் கேட்க வேண்டுமென்றுதான் சொல்லுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குற்றச்சாட்டு சொல்லலாமே தவிர, ஜட்ஜ்மெண்ட் சொல்லக்கூடாது. திரு. நாகசுந்தரம் அவர்கள் இப்போது பேசுவார்கள். உறுப்பினர்கள் ஐந்து நிமிஷத்திற்குமேல் எடுத்துக் கொள்ளக்கூடாது.

* திரு. ஆர். நாகசுந்தரம்: தலைவர் அவர்களே, நம்முடைய தலைமைச் செயலகத்தில் ஒருசில சீர்திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஒரு அமைச்சருடைய செயலாளர், துணைச் செயலாளர், அவரது அலுவலகங்கள் அனைத்தும் ஒரே இடத்தில் இருந்தால் மிகவும் வசதியாக இருக்கும். நம்முடைய முதல்வர் அவர்கள் வந்த பிறகு காலதாமதத்தை எந்த அளவுக்குத் தவிர்க்க வேண்டுமோ அந்த அளவுக்குத் தவிர்த்திருக்கிறார்கள். அதற்காகத்தான் பி. ஏ.க்களையும்- பி.எஸ். சையும் வைத்திருக்கிறார். இவர்களோடு என்ன உறவு என்று முன்னால் பேசிய நண்பர் கேட்டார். முதல்வர்—செயலாளர் உறவுதான். உள்ளபடியே கால நேரம் இல்லாமல் இரவு 1½ மணி வரை அலுவல் பார்க்கிற முதல்வர் அவர்களுக்குத் துணையாக பி.எஸ். இருப்பதிலே அவருக்குச் சட்டப்படி பதவி உயர்வு கொடுத்ததிலோ தவறு இல்லை நம்முடைய அமைச்சர்கள் முழு நேர ஊழியர்கள் போன்றவர்கள். அவர்களுக்கு இப்போது தரப்படும் ஊதியம் நிச்சயமாகப் போதாது. முதல்வர் அவர்களுக்கும் 1,500 ரூபாயும் மற்ற அமைச்சர்களுக்கும் 1,000 ரூபாயும் தர வேண்டும். அமைச்சர்கள் பதவியில் இருக்கும்போது எதிர்பாராத காலமாகிவிட்டால் அவர்களது குடும்பத்தினருக்கு பென்ஷன் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அமைச்சர்கள் அதிகமாக வெளியில் சுற்றி வருகிறார்கள் என்று இங்கே பலர் கூறினார்கள். உள்ளபடியே தமிழ்நாடு என்பது தலைமைச் செயலகத்தில் மட்டும் இல்லை. தமிழ்நாடு முழுவதும் மக்கள் இருக்கிறார்கள். அமைச்சர்கள் இப்போது சுற்றுப் பயணம் செய்வது போதாது. மாதத்தில் 20 நாட்களுக்காவது பொதுமக்க

ளுக்கு. ஆகவே இதற்காக ஒரு கமிட்டி அல்லது ஸ்பெஷல் அதிகாரி யாவது நியமித்து அந்தந்த வட்டாரங்களிலிருந்து வரும் மகஜர் களுக்கு ஒரு மாத காலத்திற்குள்ளாக பதில் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த தலைவர் அவர்களுக்கு என் நன்றியைக் கூறி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கோதண்டராமன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** ஐந்து நிமிடங்களுக்குள் இந்த முக்கியமான டிமாண்ட்டுகளின் மீது பேசுவதை விட பேசாமல் இருந்துவிடுவது ரொம்ப நல்லது. இதில் மூன்று டிமாண்டுகள் இருக்கின்றன. ஒவ்வொன்றிலும் ஏழெட்டு பிரச்னைகள் அடங்கி உள்ளன. இவற்றில் பேசுவது என்றால், மணிக்கணக்கில் பேச வேண்டியிருக்கும்போது, அமைச்சர்கள் பற்றியும் சேர்த்துப் பேசுவதற்கு ஐந்து நிமிடங்கள்தான் தரப்படுகிறது, அதற்குள் முடித்து விடவேண்டுமென்று சொன்னால் அப்படிப் பேசுவதை விட பேசாமல் இருப்பதே நல்லது என்று உங்களுக்கு என் நன்றியைக்கூறிக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஒவ்வொரு மானியக் கோரிக் கையைப் பற்றியும் விவாதிப்பதற்கு இத்தனை நாட்கள் என்றும், எவ்வளவு நாட்கள் இந்தச் சட்டமன்றக் கூட்டுத் தொடரை நடத்துவது என்றும் அன்றைய தினம் நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில், பிசினஸ் அட்வைசரிக் கமிட்டியில் முடிவு செய்யப்பட்டு அப்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில்தான் இந்த விவாதங்களுக்கான நாட்கள் தங்களால் குறிக்கப்பட்டு அது இந்த அவையிலும் அறிவிக்கப்பட்டது. ஒரு வேளை திரு. கோதண்டராமன் அவர்கள் அந்த பிஸினஸ் அட்வைஸரிக் கூட்டத்திற்கு வராதிருந்தாலும் அவருடைய கட்சித் தலைவர் திரு. பால சுப்பிரமணியம் அவர்கள் வந்திருந்து ஏற்றுக் கொண்டது இது. ஆகவே உறுப்பினர் அவர்கள் பேசாமல் உட்காருவதால் யாரையாவது அவமானப்படுத்தியிருப்பார்களானால் அது அவரது கட்சித் தலைவரைத்தான் அவமானப்படுத்துகிறார் என்று பொருள் கொள்ளக்கூடும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** ஆன் எ பாயிண்ட் ஆஃப் பெர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷன். எங்கள் கட்சித் தலைவர் அவர்களை நான் அவமானப்படுத்தவில்லை அல்லது அமைச்சரவையையும் நான் அவமானப்படுத்தவில்லை. பிஸினஸ் அட்வைஸரிக் கமிட்டி முடிவு எடுத்திருக்கலாம் எந்தெந்தத் தேதிகளில் என்னவென்ன எடுப்பது என்பது பற்றி. ஆனால் 2 அல்லது 3 அல்லது 5 நிமிடங்கள்தான் பேச வேண்டும் என்று முடிவு எடுக்கவில்லை. பத்து பேர்கள் உள்ள ஒரு கட்சிக்கு அதன் சார்பில் பேச ஒருவருக்குதான் அனுமதி கொடுக்கிறீர்கள். இரண்டு மூன்று பேர்களுக்கு அல்ல. ஆகவே ஐந்து நிமிடங்களுக்குள் பேச வேண்டுமென்று சொன்னால் அது முடியுமா என்பதை முதல் அமைச்சர் அவர்கள் சிந்திப்பதற்குப்



பதிலாக திசை திருப்பி விட்டு இது எங்கள் கட்சித் தலைவரை அவமதிப்பதுபோலாகும் என்று சொல்கிறார்கள். பிஸினஸ் அட்வைஸரிக் கூட்டத்தில் நடந்தது அவர்களுக்குத் தெரியவில்லை போலும், அவர் தப்பிக்க முயற்சி செய்கிறார் என்றுதான் அர்த்தம் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர்கள் பத்து பேர்கள் என்றால் இங்கு 234 பேர்கள் இருக்கிறார்கள். எல்லோரும் பேச வேண்டுமென்றால் முடியுமா? கொடுத்திருப்பது இரண்டரை மணி நேரம். மணி 1.30 க்குள் விவாதம் முடிய வேண்டும். எதிர் கட்சித் தலைவர் அவர்கள் பேச வேண்டும், பேசியவற்றிற்கு முதல் அமைச்சர் அவர்கள் விடை அளித்த பிறகு வோட்டு எடுக்க வேண்டும். பெயர் கொடுத்திருக்கக் கூடிய உறுப்பினர்கள் எண்ணிக்கை 12. கொடுக்கப்பட்டிருக்கக் கூடிய நேரத்தைப் பங்கு போட்டால் ஐந்து நிமிடங்கள் தான் வருகிறது. ஆகவே, இருக்கிற நேரத்தை யொட்டி கொடுக்கப்பட்டிருக்கிற பெயர்ப் பட்டியலையொட்டி நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நிலைமையை யொட்டி நான் முடிவை எடுக்க வேண்டியிருக்கிறது. பேச விருப்பம் இல்லை யென்றால், பேரவைத் தலைவர் மீது கோபித்துக் கொள்வதில் பயன் இல்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** உங்கள் பேரில் எனக்குக் கோபம் ஒன்றுமில்லை.

**திரு. இராம. அரங்கண்ணல் :** திரு. கோதண்டராமன் அவர்கள் எவ்வளவு நேரம் பேசலாம் என்பதுபற்றித் தீர்ப்பு வழங்குவது தாங்கள். ஆனால் அமைச்சரவைத் தப்பித்துக் கொண்டு போக இதைச் செய்கிறார்கள் என்று அமைச்சரவை மீது குற்றஞ்சாட்டு கிறார். தங்கள் தீர்ப்புக்கும் அமைச்சரவைக்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. ஆகவே, இப்படி அமைச்சரவை மீது குற்றம் சுமத்தலாமா என்பதுபற்றி தங்கள் தீர்ப்பை எதிர்பார்க் கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேரம் கொடுப்பதற்கும் அமைச்சரவைக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. இது பிஸினஸ் அட்வைஸரிக் கமிட்டியில் முடிவு செய்யப்பட்டது. அதை முதலமைச்சர் அவர்கள் நன்றாகச் சுட்டிக் காட்டினார்கள். தலைவர் நேரம் ஒதுக்குவது அல்ல. அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய் யப்பட்டதை தலைவர் நடைமுறையில் செயல்படுத்துகிறார். கொடுத் திருக்கிற நேரம், கொடுத்துள்ள பெயர் பட்டியல் இவற்றை வைத் துக் கொண்டு நேரத்தை பங்கிட்டுக் கொடுக்க வேண்டும். அதில் எந்தவிதமான பாரபட்சமும் கிடையாது. திரு. கோதண்டராமன் அவர்கள் கட்சியில் பத்து பேர்கள் இருக்கிறார்கள், ஐந்து நிமிடங் கள்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இந்தப் பக்கத்தில் 138 பேர்கள் இருக்கிறார்கள். மூன்று பேர்கள்தான் பேசு கிறார்கள். மொத்தம் பதினைந்து நிமிடங்கள்தான் பேசப் போகிறார் கள். ஆகவே, யாருக்கும் எந்தவிதமான வேறுபாடும் காட்டவில்லை. இருக்கிற நேரத்தை பங்கு போட்டுக் கொடுக்கிற நிலைதான். உறுப்

பினர்களுக்கு தங்கள் தொகுதி மக்களின் குறைகளைக் கவனிப்பதற்காக அவர்களுக்கு ஒரு குமாஸ்தா இருக்கக்கூடிய நிலைமையிருந்தால் வசதியாக இருக்கும். ஆகவே முதல் அமைச்சர் அவர்கள் இவற்றைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு இவற்றைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஆர். என். அரங்கநாதன் தலைமை]

இதைத் தெரிவிக்கும் அதேநோத்தில், சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் இன்று ரயிலில் வர வேண்டியிருக்கிறது, கோவையிலிருந்தும், மற்ற இடங்களிலிருந்தும் வரவேண்டியிருக்கிறது. இப்படி வந்து போவதற்காக, பாஸ் கிடைக்கும் முறையில் ஒரு ஏற்பாட்டைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பைக் கொடுத்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்ளுகின்றேன்.

* திரு. ரா. ராமச்சந்திர துரை: தலைவரவர்களே, இன்றைய தினம் நடைபெறுகின்ற இந்த மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளித்தமைக்காக என்னுடைய் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்ததற்குப் பிறகு, அமைச்சர்களாக இருக்கின்றவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களாயிருந்தாலும்கூட, அமைச்சர் பதவியை ஏற்றதற்குப் பிறகு, அவர்கள் பொதுவாக இந்தத் தமிழகத்தின் அமைச்சர்கள், எல்லோருக்கும் பாகுபாடு இன்றி, அவர்கள் நடந்துகொள்ள வேண்டும். அதுதான் முறை. அதே நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த அமைச்சர்கள் இருக்கின்ற தொகுதிகளுக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் இருக்கின்ற பகுதிகளுக்கும் நல்ல சலுகைகளைச் செய்துவிட்டு, மற்றப் பகுதிகளையெல்லாம் ஒதுக்கிவிடுகின்றார்கள். உதாரணமாக மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய தொகுதியிலே ரோட்டுக்காக வேண்டி 40 லட்சம் ரூபாய், கார்ப்பொரேஷனுக்குள் இருந்த ரோடுகளுக்கு அரசாங்கமே ஏற்று 40 லட்சம் ரூபாய் தனியாக ஒதுக்கியிருக்கிறார்கள். அதேபோல், அறந்தாங்கி தொகுதியிலே சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்றவர் என்னுடைய உறவினர்தான், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர், பஞ்சாயத்து யூனியன் தலைவர், அந்த மாவட்டத்தைச் சேர்ந்த துணைமாவட்டச் செயலாளர், அந்தப் பகுதிக்கு 18 லட்சம் ரூபாய் வறட்சி நிவாரணத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒதுக்குவதைப் பற்றிக் கவலையில்லை. ஆனால் அந்த லட்சக்கணக்கான ரூபாய்கள் நல்ல முறையிலே அங்கு செலவு செய்யப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால்,



அங்குள்ளவர்கள் குறை சொல்லுகிறார்கள். அம்மாதிரி இடங்களில் நீதி விசாரணை முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர்கள் 13 பேர் இருக்கிறார்கள். கிட்டத்தட்ட அவ்வளவு பேர்களுக்கும் சில காரியங்கள் பேச வேண்டுமென்று வைத்திருக்கிறது. அவ்வளவு பேர்களைப் பற்றியும் சொல்வது என்றால் 5 நிமிஷங்கள் போதாது. மெடிகல் காலேஜ் சம்பந்தமாக, முன்பே ஒரு சப்ளிமெண்ட்ரி கொஸ்டின் போட்டுச் சொல்லியிருக்கிறேன். அந்தக் கேள்வியிலே, ஊழல் நடந்திருக்கிறது என்றும் சொன்னேன். இப்பொழுது முதலமைச்சரவர்களுக்கும், செண்ட்ரல் கவர்ன்மெண்ட் மினிஸ்டர் அவர்களுக்கும் மற்றும் இங்குள்ள பொறுப்புள்ள அமைச்சர்களுக்கும் ஒரு கடிதம் வந்திருக்கிறது. ஒரு பெட்டிஷன் கொடுத்திருக்கிறார்கள். ஒரு அமைச்சர் இந்த மெடிகல் காலேஜ் சம்பந்தமாக ரூபாய் பதினாயிரம் வாங்கிக் கொண்டு மெடிகல் காலேஜிலும் சீட்டும் வாங்கிக் கொடுக்காமல், ஐந்தாயிரம் ரூபாயைத் திருப்பிக் கொடுத்துவிட்டு, ஐயாயிரம் ரூபாய் இன்னும் பாக்கியிருப்பதாக முதலமைச்சரவர்களுக்கும், கல்வியமைச்சரவர்களுக்கும், செண்ட்ரல் கவர்ன்மெண்ட் மினிஸ்டருக்கும், பிளிட்ஸ் பத்திரிகை ஆபீசிற்கும் கொடுத்திருப்பதாகத் தகவல் கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படிப்பட்ட கடிதம் எனக்கு வரவில்லை, கல்வியமைச்சரவர்களைக் கேட்டேன், அவர்களுக்கும் வரவில்லை என்று சொல்கிறார்கள்.

திரு. ரா. ராமச்சந்திர துரை: இப்பொழுது என்னிடத்திலே அந்தக் கடிதம், யாரிடத்திலே பணம் வாங்கினார்களோ அதே ஆள் அந்தப் பெட்டிஷன் காப்பியைக் கொடுத்திருக்கிறார்கள். அதை உங்கள் மத்தியிலே கொடுக்கத் தயாராக இருக்கிறேன். ஒரு ஜுடிஷியல் என்கொயரி வைத்து . . . .

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, யார் வேண்டுமானாலும், யாரைப்பற்றி வேண்டுமானாலும் எழுதியதாகக் கடிதத்தை வாங்கிக்கொண்டு, அதற்கு நீதி விசாரணை என்று சொல்வதா? நீதி விசாரணை நீதி விசாரணை என்பது ரொம்பப் புளித்துப் போய்விட்டது.

திரு. ரா. ராமச்சந்திர துரை: வேறு எப்படி நிரூபிப்பது? பணம் கொடுத்துப் பெற்றுக்கொண்டதைப் பற்றிக் கடிதம் எழுதினார்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கொடுத்தவர்கள் வேண்டுமானால் நீதி மன்றத்திலே வழக்கு போடலாம்.

திரு. ரா. ராமச்சந்திர துரை: நீதி மன்றத்திலும் வழக்கு போடலாம், சட்டமன்றத்திலும் எடுத்துப் பேசலாம்.

[பேரவைத் தலைவர்] [1970 மார்ச் 10

பினர் அவர்கள் நீண்டகாலமாக இந்த அவையில் இருப்பவர்கள். எதை எதை எப்படி எப்படிப் பேச வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியும். இருந்தாலும் சில நேரங்களில் உணர்ச்சி வசப்பட்டு சில கருத்துக்களைச் சொல்லிவிடுகிறார்கள்.

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என் கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என்று கருதுகிறேன். இங்கு எனக்கு முன்னால் பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்கள் இந்த அமைச்சரவையில் உள்ள அமைச்சர்களின் நேர்முக உதவியாளர்களுக்கும் அந்தரங்கச் செயலாளர்களுக்கும் சட்டத்திற்குப் புறம்பான வகையில், சட்டத்திற்கு மாறுபட்ட நிலையில் அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் வேண்டுமென்கிற உணர்வோடு பதவி உயர்வுகள் கொடுக்கப்பட்டிருப்பதாக ஒரு குற்றச்சாட்டை அழுத்தந்திருத்தமாகச் சொன்னார்கள். தங்கள் மூலம் அவர்களுக்கும் பின்னால் பேச இருக்கிற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அமைச்சர்களின் அந்தரங்கச் செயலாளர்களாக அல்லது அமைச்சர்களின் நேர்முக உதவியாளர்களாக வருகிற ஒரே காரணத்திற்காக அவர்களுக்கு பதவி உயர்வுகள் கொடுக்கக்கூடாது என்று விதி ஏதாவது இருக்கிறதா ? இருப்பின் அதை தயவுசெய்து விளக்குங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர்களின் நேர்முக உதவியாளர்களாக வருகிறவர்களுக்கும், அந்தரங்கச் செயலாளர்களுக்கும் பதவி உயர்வு உண்டு. அவர்களும் அரசாங்க ஊழியர்கள்தான் என்ற அந்த அடிப்படையில்தான் இந்தப் பதவி உயர்வுகள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இங்கு பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஏதோ தனிப்பட்ட சிலருக்கு மட்டும் பதவி உயர்வு கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். நான் அவர்களை பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புவது,, எந்த விதியை மீறி அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கப்பட்டிருக்கின்றன ? தனிப்பட்ட சலுகைகளைக் காட்டி அமைச்சர்களின் நேர்முக உதவியாளர்களுக்கு நேர்முக உதவியாளர்கள் என்ற தகுதிக்காகப் பதவி உயர்வு கொடுக்கப்பட்டிருந்தால் அவற்றைப் பற்றி இங்கு தாராளமாக குறிப்பிட்டுச் சொல்லட்டும், விதிகள் மீறப்பட்டிருந்தால். ஆனால் இன்றுகூட அரசாங்கத்துறையில் உள்ள வேறு பல பதவிகளுக்கு அவர்களுக்கு பதவி உயர்வு கொடுக்கப்பட்டதற்குப் பின்னால் அங்கிருக்கிறவர்கள் கூட நீதிமன்றத்திற்குப் போவதற்கு வாய்ப்பிருக்கிறது. அப்படி யாராவது சிலருக்கு பதவி உயர்வு கொடுக்கப்பட்டு அதனால் சிலர் பாதிக்கப்பட்டிருக்கிற நிலைமை இருக்குமானால் தாராளமாக நீதி மன்றத்திற்குப் போய் அதைப் பெறுவதற்கான வாய்ப்பிருக்கிறது. ஆனால் இங்கு பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஏதோ மாலைப் பத்திரிகைகளில் செய்தி வரவேண்டும் என்ற தோரணையோடு இந்த அமைச்சரவை மீது குற்றச்சாட்டு சுமத்தினாரே தவிர எந்த ஆதாரத்தோடு, எந்த விதியைச் சுட்டிக் காட்டி



1970 மார்ச் 10] [திரு. சு. துரைசாமி]

இங்கு குற்றச்சாட்டு சுமத்தியிருக்கிறார் என்று பார்த்தால் எந்த
மாகத்தான் அவர்கள் பேசிவிட்டுச் சென்றிருக்கிறார். இந்த
அரசைப் பொறுத்தவரையில் அரசின் சகல ஊழியர்களுக்கும் அர
சைப் பொறுத்த வரையில் அரசின் சகல ஊழியர்களுக்கும் அர
சாங்க விதிமுறைகளுக்கு ஏற்பத்தான் பதவி உயர்வு கொடுக்கப்பட்
டிருக்கிறதே தவிர தனிப்பட்ட முறையில் யாருக்கும் சலுகைகள்
காட்டப்படவில்லை என்பதை இங்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு கருத்தும் எடுத்துரைக்கப்பட்டது. 1966-67-ல் ஐந்து
லட்சம் ரூபாய் என்றிருந்த செலவு இப்போது பத்து லட்சம் ரூபாய்
என்றளவிற்கு உயர்ந்துவிட்டதாகச் சொன்னார்கள். அரசாங்கப்
பணியாளர்களுக்குள்ள செலவையும் சேர்த்துத்தான் இந்தச்
செலவே தவிர தனிப்பட்ட முறையில் உள்ள செலவல்ல.

இன்னொன்றும் கூறப்பட்டது. அமைச்சர்கள் அடிக்கடி கிராமப்
பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள கிராம மக்களைச் சந்திப்
பதற்கும் அவர்கள் சொல்கிற குறைகளைக் கேட்பதன்மூலம் அவர்
களுடைய குறைகளைத் தீர்க்கும் பொறுப்பு அமைச்சர்களைச்
சார்ந்தது. அதன் காரணமாக தொடர்ந்து அமைச்சர்கள் தங்கள்
சுற்றுப்பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற ஒரு கருத்தும்
இருக்கிறது, அதை அமல்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்
கிறேன்.

இதைத் தெரிவிக்கிற நேரத்தில் சட்டமன்ற உறுப்பினர்களைப்
பொறுத்தவரையில் அவர்களுக்குள்ள சில சிரமங்களை இங்கு
எடுத்துக் காட்ட வேண்டியது என் கடமை என்று கருதுகிறேன்.
சட்டமன்ற உறுப்பினர் பொறுப்பேற்றிருக்கிற நாங்கள் மாவட்ட
தலைநகருக்குச் செல்கிறோம். அங்கு சென்றால் தங்குவதற்கு என்று
தனியான இடம் கிடையாது. மாவட்ட தலைநகரில் இருந்து
கொண்டு நாங்கள் பல்வேறு அதிகாரிகளோடு தொடர்புகொண்டு
பல்வேறு ஆக்கப் பணிகளைச் செய்யவேண்டிய நிலை இருக்கிறது.
ஆகவே ஒவ்வொரு மாவட்ட தலைநகரிலும் சட்டமன்ற உறுப்பினர்
கள் தங்குவதற்கு என்று ஒரு விடுதி ஏற்படுத்தி அதற்குத் தேவை
யான குமாஸ்தாக்களை நியமித்து தொகுதி மக்களின் பல்வேறு காரி
யங்களை நிறைவேற்றிக் கொடுக்கும் வகையில் இந்த அரசு தக்க நட
வடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்றும் கேட்டுக்கொள்
கிறேன். ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவரை எடுத்துக்
கொண்டால் அவர்களுக்கு என தனியாக ஒரு குமாஸ்தா இருக்
கிறார். ஆகவே, அந்த தலைவர் ஊராட்சிய ஒன்றிய வேலைகளை, தன்
தொகுதி வேலைகளை, அந்த குமாஸ்தா மூலம் செய்துகொள்ள ஒரு
வாய்ப்பிருக்கிறது. அந்த வாய்ப்பு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு
இல்லை. ஆகவே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஊராட்சி ஒன்றி
யங்களில் அல்லது நகரசபைகளில் தனி இடம் ஒதுக்கிக் கொடுக்கப்
படவும் வேண்டும். ஊராட்சி ஒன்றிய வேலைகளைக் கவனிக்க
ஊராட்சி ஒன்றியத்திற்குச் சென்றால் அங்கு மன்ற உறுப்பினர்
களுக்கு என்று தனி இடம் இருக்க வேண்டும். சட்டமன்ற உறுப்

ளுடன் தொடர்பு கொள்ளும் முறையில் சுற்றுப் பயணம் செய்ய வேண்டும். பொதுமக்கள் அதைத்தான் எதிர்பார்க்கிறார்கள். நாட்டின் கடைக் கோடியில் உள்ளவர்கள் அமைச்சர்களை இங்கு வந்து பார்ப்பது இயலாது. அமைச்சர்கள் மாவட்டங்களுக்கு வரும்போதுதான் பார்க்க வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அதிக மான நாட்களை வெளி மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்ய ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அமைச்சர்கள் சுற்றுப் பயணம் எங்கிருந்தாலும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சுற்றுப் பயண விவரத்தை அனுப்ப வேண்டும். இப்போது அவரவர் களுடைய மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்கின்றபோது மட் டுந்தான் அனுப்பப்படுகிறது. தமிழ்நாட்டில் எங்கே சுற்றுப்பய ணம் செய்தாலும் மன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட வேண்டும்.

நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களை அரசாங்க நிகழ்ச்சியில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றும், அவர்களுக்கு சரியான அந் தஸ்து தரவேண்டுமென்றும், அதிகாரிகள் அவர்களை அரவணைத்துக் கொள்ள வேண்டுமென்றும் இந்த அரசுதான் உத்தரவிட்டிருக் கிறதே தவிர, இதற்கு முன்னால் இருந்தவர்கள் அத்தகைய உத்தர வைப் போடவில்லை.

நம்முடைய சட்டமன்றத்தின் முன்னால் உள்ள லாபியில் சர். பி. ராஜகோபாலாச்சாரி, பிரிசிடென்ட் லெஜிஸ்லேட்டிவ் கவுன்சில், எல். டி. சுவாமிக்கண்ணு, பிரசிடென்ட் லெஜிஸ்லேட்டிவ் கவுன்சில் ஆகிய இருவர் சிலைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. பெஞ்சமின் டிஸ்ரேலி, வைகவுன்ட் பால்மாஸ்டர், மார்க்விஸ் ஆப் சாலிஸ்பரி, வில்லியம் எட்வர்ட் என்ற விக்டோரியா முதலமைச்சர் ஆகியோரது படங்களும் இருக்கின்றன. இவை 40 ஆண்டுக்கு மேற்பட்டவை யாக இருக்கின்றன. இவற்றைப் பக்கத்தில் உள்ள அரசாங்க மியூசி யத்தில் வைக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

செகரடேரியட் சர்விசில் உதவிச் செயலாளர் பதவி கிடைத்து விட்ட சூப்பிரண்டண்டுகளுக்கு தாங்கள் ஏற்கனவே வாங்கி வந்த சம்பளத்தைவிட, சலுகைகளை விட குறையக் கூடிய நிலை இருக் கிறது. பஞ்சபடி ஐநூறுக்கு மேற்பட்டால் 120, ஐநூற்றுக்குக் கீழே 164. ஆகவே, இந்தப் பதவிக்குச் சம்பளத்தைக் கூட்ட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்குப் பேச சந்தர்ப்பம் கொடுத்ததற்கு நன்றி கூறி முடித்துக் கொள்ளுகிறேன்.

* திரு. மு. முத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தேர்தல் காலத்திற்கு மூன்று மாதத்திற்கு முன்னால் அமைச்சர்கள் பதவியை ராஜினாமாச் செய்துவிட்டு தேர்தலில் நின்றால் மிகவும் நன்றாக இருக்கும் என்பது என்னுடைய சிறிய விண்ணப்பம். காங்கிரஸ் ஆட்சியின் போது இதை நாமே சொல்லியிருக்கிறோம். பதவியில்





இருந்தால் அதிகாரத்தைப் பயன்படுத்தி, அதிகாரிகளைப் பயன்படுத்தி வாக்குகளைப் பெறக்கூடிய நிலை ஏற்படும். தமிழக அரசு மிகவும் முற்போக்கான அரசு என்ற முறையில் தேர்தல் காலத்தில் மூன்று மாதம் முன்பாக பதவியை அமைச்சர்கள் ராஜினாமா செய்து விட்டு நின்றால் நன்றாக இருக்கும். அதனால் அரசாங்கச் செலவு இல்லாமல் தங்களுடைய சொந்தச் செலவில் நிற்க வாய்ப்பாக இருக்கும். அப்படியிருந்தால் ஏனைய கட்சிகளுக்குள் பூசல்களோ, குழப்பங்களோ நடக்காது. அந்தந்த வட்டாரத்தில் உள்ள மக்கள் ஆர்வத்தோடு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வாய்ப்பு ஏற்படும்.

சட்டமன்றம் நடக்கும் காலங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களைச் சந்தித்துப் பேசுவதற்குத் தனியாக நேரம் ஒதுக் குவது நல்லது. சில நேரங்களில் உறுப்பினர்கள் அமைச்சர்களிடத் தில் முக்கியமான விஷயங்களைக் கூற வேண்டுமென்றாலும் அமைச் சர்களைச் சந்தித்துச் சொல்ல சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. என்னு டைய தொகுதியைச் சேர்ந்த ஒட்டப் பிடாரத்தில் உள்ள ஒரு கிராமத்தில் அரிசனங்களுக்கும் காமாட்சி அம்மன் கோயில் பூசாரி என்று சொல்லப்பட்ட சர்க்கரை நாடார் என்பவருக்கும் இடையே பொதுக் கிணற்றிலே தண்ணீர் எடுப்பதிலே தகாறு நடந்து அதைப்பற்றி அமைச்சர் அவர்களிடத்தில் சொன்னதன் பேரில் நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரியவருகிறது. அதைப் பற்றிய கவன ஈர்ப்புத் தீர்மானம் கூட கடந்த 4-ம் தேதி அன்று பேரவைத் தலைவர் அவர்களிடம் கொடுத்துள்ளேன். அங்கு மிகவும் கெடுபிடியாக, பரபரப்பாக, கலவரத்தைத் தூண்டிவிடக் கூடிய சந்தர்ப்பமாக இருக்கிறது. இதைப் பற்றி ஒன்றும் உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை. இதைப் பற்றி அமைச்சர் அவர்களிடத் தில் எடுத்துச் சொல்ல சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஆகவே, உறுப் பினர்கள் அமைச்சர்களைச் சந்திப்பதற்கு என்று தனியாக நேரம் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசாங்க அலுவலகங்களில் வேலை செய்பவர்கள் ரிடையர் ஆகக் கூடிய சந்தர்ப்பத்தில்கூட தங்களுக்கு மேலும் வேலை வாய்ப்பு நீடிப்பு வேண்டுமென்று கேட்கிறார்கள். இப்போதுள்ள சந்தர்ப் பத்தில், வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வரும் நிலையில் மீண்டும் அவர்களுடைய பதவிக் காலத்தை நீடிக்க வேண்டுமென்று கோருவதை இந்த அரசு ஏற்றுக் கொள்ளக் கூடாது. ஓய்வு பெறும் வயதை ஐந்து ஆண்டுகள் குறைத்தால் கூட நன்றாக இருக் கும். அதனால் வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கும் ஆயிரக் கணக் கான படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

கிராமங்களிலிருந்து பொது மக்கள் மகஜர்கள் அனுப்பினால் ஒரு மாதத்திற்குள்ளாக அந்த மகஜர்களுக்குப் பதில் கிடைக்க வேண்டும். எவ்வளவோ மகஜர்கள் கொடுக்கப்பட்டு வருடக்கணக் காக ஆகியும்கூட பதில் கிடைப்பதில்லை அங்குள்ள வட்டார மக்க

[1970 மார்ச் 10

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இப்படிப் பணம் பெற்றுக்கொண்டதாக ஒரு ஆளைத் தயார் செய்து அவரிடம் ராமச்சந்திர துரை அவர்கள் இன்னாரிடம் பணம் பெற்றுக்கொண்டார் என்று ஒரு கடிதம் எழுதி அதன்கீழ் ராமன், கிருஷ்ணன் என்று கையெழுத்துப் போட்டு, அதை வைத்துக்கொண்டு, நீதி விசாரணை நடத்தத் தயாரா என்று சொல்லலாமா?

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** ராமனோ, கிருஷ்ணனோ அந்த ஆளே விசாரணைக்குத் தயார் என்று சொல்கிறார், இராமன், கிருஷ்ணனைக் கேட்டால் அவர்கள் வந்து எப்படிச் சொல்ல முடியும். பூதிப் பிரச்சினை அல்ல இது, பூதிமனு அல்ல இது. உண்மையில் நடைபெற்றதைச் சொல்லுகிறார்கள். நீதி விசாரணை வைத்தால் சொல்லுகிறேன் என்று சொல்லுகிறார்கள்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, லஞ்சம் வாங்கிக் கொள்வதும் கூடாது, லஞ்சம் கொடுப்பதும் கூடாது: சட்டவிதிகளின்படி நடவடிக்கைகள் இருக்கின்றன. வழக்குமன்றத்தில் வழக்கு தொடுத்துக்கொண்டு அவர் ஆதாரங்களை எடுத்துச் சொல்லலாம். மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற அப்படிப்பட்ட குற்றச்சாட்டைப்பற்றி நீதி மன்றத்திற்கு எடுத்துச் செல்லலாம், விஜிலன்ஸ் கமிஷன் எல்லாம் இருக்கிறது. அந்த முறையில் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** தலைவரவர்களே, கேள்விப் பட்டவைகளைச் சட்டசபையிலே பேசுகிறேன். மறைந்த முதலமைச்சரவர்கள், காங்கிரஸ்காரர் தீ வைத்தார் என்று குழாயடியிலே பேசியதைப் பேசுகின்ற நேரத்தில், உறுப்பினரொருவர், ஆதாரமாக ஒரு கடிதத்தை அவர் கொண்டு வந்து பேசக் கூடாதா? அவர்கள் விசாரணைக்குத் தயாராக இருக்கிறார்கள் என்று . . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஆர். என். அரங்கநாதன்):** அவையின் முன் இல்லாத ஒரு மனுவைப்பற்றி, மனுவில் இருக்கிற சங்கதிகளைப் பற்றிக் கூறுவது சரியல்ல. ஏற்கனவே அவைத் தலைவரின் கவனத்திற்குக்கொண்டு வந்திருக்க வேண்டும்.

**திரு. ரா. ராமச்சந்திர தரை:** தலைவரவர்களே, இதோ. இருக்கின்றது.

(ஒரு கடிதத்தை மாண்புமிகு மாற்றுத் தலைவரிடம் கொடுக்கிறார்.)

தலைவரவர்களே, சபாநாயகர் மூலமாக இதைக் கொடுத்திருக்கிறேன். சந்தர்ப்பம் இருக்கும்பொழுது அதைத் திருப்பிக் கொடுத்துவிடும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன். ஏனென்றால் கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். திடீரென்று நிரூபிக்க வேண்டுமென்றால் கொடுக்க வேண்டும் அல்லவா, அதற்காகச் சொல்லுகின்றேன்.



1970 மார்ச் 10]

அதற்கடுத்தபடியாக, இந்தத் திராவிட முன்னேற்றக் கழகம் பதவி ஏற்றதற்குப் பிறகு, இன்று ஒரு முக்கியப் பதவியில் இருக்கின்ற ஒருவர், அடிஷனல் கவர்ன்மெண்ட் ப்ளீடர், அவர்மீது 12 பாட்டில்கள் பிராந்தி வைத்திருப்பதாகப் போலீசில் அரஸ்ட் செய்து ஜாமீனில் விடப்பட்டு, அதற்குப் பிறகு பல அமைச்சர்கள் சிபார்சு செய்ததற்குப் பிறகு அந்த வழக்கை வித்ட்ரா செய்து கொண்டதாகத் தெரிய வருகிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஆர். என். அரங்கநாதன்):** நேரமாகிவிட்டது, உங்களுக்கு ஒரு நிமிடம் கூடவே கொடுத்திருக்கிறேன்.

**திரு. ரா. ராமச்சந்திர துரை:** இந்தப் பாயின்டை மாத்திரம் சொல்லி முடித்துவிடுகிறேன். சிபார்சு செய்த பிறகு வழக்கை வித்ட்ரா செய்திருக்கிறார்கள். இம்மாதிரியான குற்றம் செய்தவர்களையெல்லாம் முக்கியப் பொறுப்பில் இருக்கின்ற அமைச்சர்கள் தலையிட்டு வித்ட்ரா செய்ய சிபார்சு செய்வது என்றால் இது எப்படி இருக்கிறது என்பதை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதற்கு ஒரு ஜுடிஷியல் விசாரணை வைத்தால் இதையும் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன் என்று கூறிக் கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

* **திரு. எம். சுரேந்திரன்:** சபாநாயகரவர்களே, சபைக்கு முன்னாலே வைத்திருக்கின்ற தேர்தல்கள், மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், பல்வகை என்ற தலைப்பின்கீழ் இருக்கின்ற மானியம் சம்பந்தமாக ஓரிரு வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். நம்முடைய தலைமையிடப் பணியாளர்கள் என்ற அமைப்பு மிகவும் பளுவானதாக இருக்கின்றது, மிகவும் படாடோபமானதாக இருக்கின்றது, பிரச்சினையைக் குழப்ப அனுசரணையாக அமைந்திருக்கின்றது. இது இன்றைய நிலைக்குப் பொருத்தமான மாதிரி இல்லை என்று முதலிலே குறிப்பிட விரும்புகிறேன். இந்த அமைப்புகளை உண்டாக்கிய காலத்திலே அன்னியர்கள் ஆண்டுகொண்டு இருந்தார்கள். அவர்களுடைய ஆட்சியைப் பாதுகாப்பதற்காக, இதுபோன்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தினார்கள். அன்றைக்கு அவர்களுக்கு உறவினர்களோ, வேண்டியவர்களோ, நண்பர்களோ, ஓட்டு வேண்டுமென்ற எண்ணமோ எதுவுமே இருக்கவில்லை. இன்றைக்கிருக்கின்ற அமைச்சர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் உறவினர்கள் இருக்கின்றார்கள். நண்பர்கள் இருக்கின்றார்கள். வேறு பல துறையிலே ஓட்டுகள் சேகரிக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. இவ்வளவெல்லாம் சேர்த்துப் பார்த்து, இன்றைய நிலைக்குப் பொருந்திய அமைப்பாக மாற்றுவது அவசியம் என்று கூற விரும்புகிறேன்.

அதோடு, இன்றைய நிலைமையிலே, சோஷலிசத்தைப்பற்றி எல்லோரும் பேசிக்கொண்டிருக்கின்ற காலகட்டம். இந்த அமைச்சரவைகூட சோஷலிசத்திற்கான ஆரம்ப வேலைகளைச் செய்வதற்

[திரு. கோ. பூவராகன்] [1970 மார்ச் 10

எல்லோரையும் மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது பரவலாக எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களும், எல்லாக் கட்சியினர்களும் ஒத்துக்கொள்கின்ற ஒன்றாக இருப்பதை நாம் பார்க்கிறோம். அவ் வாறு அதை நடத்துவதற்கு முயற்சி எடுக்க வேண்டும்.

சில நகர பஞ்சாயத்துக்கள் நகர மன்றங்களாக மாற்றி அமைக்கப்பட்ட நகரமன்றங்கள் இப்பொழுது அதிகாரிகளுடைய பொறுப்பிலே இருந்து வருகின்றன. அதே நிலைமை இரண்டு ஆண்டு, மூன்று ஆண்டு என்று நீடித்துக்கொண்டு போகிற நிலைமையைப் பார்க்கிறோம். விரைவாக அவைகளுக்கான தேர்தல்களை நடத்தி, அந்த அமைப்புகளின் மூலம்தான் நகரமன்றங்கள் நடைபெற வேண்டும் என்று இருப்பதால், இந்தத் தேர்தல்களைக் கொஞ்சம் விரைவுபடுத்த வேண்டும்.

நம்முடைய தலைமைச் செயலகத்தில் ஆண்டுதோறும் பார்க்கிறோம், கொஞ்சமும் சிக்கன நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. ஆண்டுதோறும் செலவினங்கள் வளர்ந்து வருகிற நிலையைத்தான் பார்க்கிறோம். ஏற்கனவே இந்த அமைப்பை மாற்றி அமைக்க வேண்டும். சிக்கனத்தை கையாள வேண்டும். விரைவிலே காரியங்களை ஆற்றுவதற்கு இலகுவான முறையிலே இந்த அமைப்புகள் இருக்கவேண்டும் என்று நாம் சொல்லியிருக்கிறோம். ஆனால், சில காரியதரிசிகள் அதிகரித்திருக்கிறார்கள். இப்பொழுது சென்றமுறை இருந்ததைவிட இந்த இரண்டு ஆண்டுகளில் பல இலாகக்கள் பிரிக்கப்பட்டு, காரியதரிசிகள் அதிகமாக ஆகியிருக்கிறார்கள். இன்னும் இதுபோன்ற அதிகார நிலையிலே உள்ள அதிகச் செலவினங்களை தவிர்ப்பதற்குக் கொஞ்சம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்களா, ஏதாவது அம்மாதிரி முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்களா என்று பார்த்தால் இல்லை.

பிரயாணச் செலவு கூடிக்கொண்டு போகிறது. அதிகாரிகள் பிரயாணச் செலவும், அமைச்சர்களுடைய பிரயாணச் செலவும், மற்ற நிர்வாகச் செலவினங்களும் கூடுகிறபொழுது, நாம் எதற்காக திட்டமிட்டு ஒரு குறிப்பிட்ட சில நல்ல காரியங்கள் நடக்க வேண்டும் என்று பணத்தைத் திரட்டுகிறோமோ அந்தப் பணம் இவ்வாறு வேறு வழியில் செலவு ஆகின்றபொழுது, நடக்க வேண்டிய நல்ல காரியங்கள் நடைபெறா. அந்தச் செலவைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

சிக்கன சீரமைப்பு பற்றி நடவடிக்கை எடுப்பதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டது. மத்திய அரசாங்கத்திலும் அம்மாதிரி ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவினுடைய சிபார்சுகள் ஏதாவது பின்பற்றப் பட்டிருக்கின்றனவா என்றால், பின்பற்றப் பட்டிருப்பதாகத் தெரியவில்லை. எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் திரு. சுரேந்திரன் அவர்கள் சொன்னதுபோல, ரெவின்யூ போர்டைக் கலைத்துவிடவேண்டும் என்று அறிக்கை விடப்பட்டது சட்டமன்றத்தில். கலைத்துவிடாவிட்டாலும் பரவாயில்லை.



1970 மார்ச் 10] [திரு. கோ. பூவராகன்]

இன்னும் அதிகமாக உறுப்பினர்களைப் போட்டிருக்கிறார்கள். நாம் கொள்கை அளவிலே ஒன்றை ஏற்றுக்கொண்டபிறகு, சட்டமன்றத்தில் அறிவித்துவிட்ட பிறகு, கூடிய சீக்கிரம் அதைக் கலைத்து, வேறு முறையில் அதை மாற்றி அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமே தவிர, இப்பொழுது இருக்கிற சிக்கல்களை தவிர்ப்பதற்காக மேலும், ஒன்றிரண்டு மெம்பர்களை அதிகப்படுத்துவது என்பது நாம் ஏற்றுக்கொண்ட அந்தக் கொள்கைக்கு உகந்ததாக இருக்காது என்பதை இந்த சமயத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

மேலும், அமைச்சர்கள் வெளியூர்களுக்குப் போகவேண்டியதுதான், நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வேண்டியதுதான், ஜனநாயக முறை, ஜனநாயக அமைப்பு இருக்கும்பொழுது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், மக்கள் எதிர்பார்ப்பது எல்லாம், எல்லா மக்களும் வந்து அமைச்சர்களிடத்திலே குறைகளைச் சொல்லி, உடனே அவைகளை நிவர்த்தி செய்துகொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்கின்ற மனோநிலை நம்முடைய ராஜ்யத்தில் உண்டு. அவர்கள் அமைச்சர்களோடு தொடர்பு வைத்துக்கொள்ளவேண்டும் என்று நினைக்கிறார்கள். அந்தக் காரியங்கள் உடனுக்குடன் நடக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். வெட்டுப் பிரேரணைகளைக் கொடுத்திருக்கிற பல உறுப்பினர்கள், சில அமைச்சர்கள் தலைமைச் செயலகத்தில் இருப்பதில்லை, 30 நாட்களும் வெளியிடங்களுக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள், செயலக வேலைகள் அதனால் சரியாக நடைபெறவில்லை என்றெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதற்கு ஒரு முறை வைக்க வேண்டும். மாதத்தில் இந்த இந்த நாட்களில் செயலகத்தில் இருப்பார்கள் என்று, மற்ற அறிவிப்புகள் போல், தந்தால் அது நலமாக இருக்கும்.

கொஞ்ச நாளாக ஒவ்வொரு மந்திரியும் அறிக்கைகள் விடுவது குறைந்துவிட்டது. அதற்காக முதல் அமைச்சரைப் பாராட்ட வேண்டும். ஆரம்பத்தில் இரண்டு ஆண்டுகள் மாற்றி மாற்றி அமைச்சர்கள் அறிக்கை விடுவார்கள். அதெல்லாம் இப்பொழுது குறைந்துவிட்டது. அதேபோல் இதிலும் ஒரு முறையை வகுத்துக் கொள்ள வேண்டும். சட்டமன்றம் நடைபெறும் போது மட்டுமல்லாமல், சட்டமன்றம் நடைபெறாத சமயங்களிலும் அமைச்சர்கள் கட்டாயம் இன்னின்ன நாட்களில் செயலகத்தில் இருப்பார்கள் என்று அறிவித்துவிடவேண்டும். கலெக்டர்கள் இந்த இந்த தினங்களில் கோரிக்கை, மனுக்கள் பெறுவார்கள் என்பதுபோல், அமைச்சர்களும், இந்த இந்த நாட்களில் செயலகத்தில் இருப்பார்கள் என்று செய்துவிட்டால், நல்லதாக இருக்கும். அதற்கு வழிவகை செய்ய வேண்டும்.

அதோடு கல்யாண நிகழ்ச்சிகளுக்கு. எல்லா அமைச்சர்களுடைய பெயர்களையும் போட்டுவிடுகிறார்கள். அமைச்சர்கள் கல்யாண நிகழ்ச்சிகளுக்குப் போக வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் ஒரு நிகழ்ச்சிக்கு அத்தனை பேரும் போவது என்

றால், தங்குவதற்கு சங்கடம், அதிகாரிகளுக்கு சங்கடம், போக்குவரத்து வசதி, பந்தோபஸ்து வசதி இவற்றிலெல்லாம் சங்கடங்கள் ஏற்படும். ஓரிரு அமைச்சர்கள் போவாததனால் சரி. ஆனால் எல்லோருமே போவது என்றால், சட்டமன்ற அங்கத்தினர்கள் அத்தனை பேரும் கூட வரவேண்டும் என்றுதான் விரும்புவார்கள். இன்றைக்கு இருக்கும் சூழ்நிலையில் இப்படிப்பட்டவற்றை தவிர்த்தே தீர வேண்டும். பொது நிகழ்ச்சியென்றால் பாதகமில்லை. ஒரு திட்டம் 100 கோடி ரூபாய் செலவில் ஏற்பாடு செய்கிறார்கள் என்றால், அப்படிப்பட்ட நிகழ்ச்சியில் எல்லா அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்கள்கூட, கலந்து கொள்ளலாம். பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அதற்குப் பெரிய விளம்பரம் வேண்டும். ஆனால், கல்யாணம் அப்படியில்லை. கல்யாணத்தையே சிக்கனமாக நடத்தவேண்டும் என்று சொல்லும்போது, 13 அமைச்சர்களும் போவது என்றால் எப்படி . . . .

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : உங்கள் கல்யாணத்தின்போது எவ்வளவு அமைச்சர்கள் வந்தார்கள் ?

திரு. கோ. பூவராகன் : என் கல்யாணம் நான் மந்திரியாக இருந்தபோது சென்னையிலேயே நடந்தது. யாருக்கும் செலவில்லை. எல்லோரும் வந்திருந்தார்கள். ஆனால் பத்திரிகையில் போடவில்லை. இன்னார் இன்னார் கலந்து கொள்வார்கள் என்று பத்திரிகையில் போடவில்லை. அண்டை மாநிலத்திலிருந்து கூட வந்திருந்தார்கள். ஆனால் இவர்களெல்லாம் கலந்து கொள்வார்கள் என்று போடவில்லை. அழைப்பு அனுப்புகிறோம். அழைப்பதால் கட்டாயம் போய்த்தான் ஆக வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஆனால் இவர்கள் இவர்கள் தலைமையிலே, முன்னிலையிலே வாழ்த்துரை வழங்கப்படும் என்று போட்டுவிட்டால், போய்த் தீரவேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது. அதைத் தவிர்க்க வேண்டும். போவதை வேண்டாம் என்று சொல்லவில்லை என்று சொல்லி முடிக்கிறேன்.

* திரு. செஞ்சி வெ. முனுசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு முதல் அமைச்சர் கொண்டு வந்திருக்கும் மானியங்களை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விழைகிறேன். இன்றையதினம் பிரதான எதிர்க்கட்சியாக இருக்கும் காங்கிரஸ் கட்சி ஒரு பிரச்சினையைக் கிளப்புவார்கள் என்று கருதுகிறேன். இதில் மாநில ஆட்சித் தலைவர் பற்றிய செலவினம் சேர்க்கப்பட்டிருக்கிறது. சிண்டிகேட்டின் சிரிய தலைவர்கள் வெளியிலே ஆகட்டும், பாராளுமன்றத்திலாகட்டும், கவர்னர் பதவி தேவைதானா என்று கிளப்பிக் கொண்டு இருக்கிறார்கள். பிரதான எதிர்க் கட்சித் தலைவரான மாண்புமிகு திரு. கருத்திருமன் அவர்கள் இதுபற்றி தன்னுடைய பேச்சின் போது தெளிவுபடுத்துவார்கள் என்று கருதுகிறேன். எங்களைப் பொறுத்தமட்டில் இதைப்பற்றி கருத்தைத் தெளிவுபடுத்தி, அரசியல் அமைப்புச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டுப் பொறுப்.





பேற்றிருக்கிறோம். இந்த நிலையில், இப்படிப்பட்ட பிரச்சினைகளை விட்டுவிட்டு, தனிப்பட்ட அதிகாரிகளுக்குக் கொடுத்துவிட்ட பதவி உயர்வைப் பற்றி ஏதோ தகுதியில்லாமல் கொடுத்துவிட்டதாக எதிர்க்கட்சியைச் சார்ந்த காங்கிரஸ் உறுப்பினர்கள் பேசினர். அது எந்த எந்த அளவிற்கு உண்மைக்கு மாறானது என்பதை விவரமறிந்தவர்கள் உணர்வர். எதற்காக இல்லாவிட்டாலும் இதற்காக இந்த அரசைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. காரணம் என்னவென்றால், காந்தியத்தைக் காங்கிரஸ்காரர்கள் மறந்தபோதிலும் காந்திய வழியில் நடந்துவந்த தென்னாட்டு காந்தி பேரறிஞர் அண்ணா அவர்கள், முதல் அமைச்சர் பதவி ஏற்ற நேரத்திலேயே சிக்கனமான முறையில் நடந்து கொள்ள வேண்டுமென்று, தன் சொந்தவீட்டிலேயே இருந்துகொண்டு அலுவல்களைக் கவனித்து வந்தார்கள். அதே வழியில் இன்றைய முதல் அமைச்சர் கலைஞர் அவர்களும் தன்னுடைய வீட்டிலிருந்தே அலுவல்களைக் கவனித்து வருகிறார்கள். இது பற்றி நாடாளு மன்றத்திலேயே பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் பாராட்டியிருப்பதைப் பார்க்கிறோம்.

சுற்றுப் பயணம் குறைக்கப்படுவது பற்றிக் குறிப்பிட்டார்கள். சுற்றுப் பயணத்தைக் குறைக்க முடியாது. ஏனென்றால், அமைச்சர்கள் சுற்றுப் பயணமே செய்யாமல், இங்கேயே இருந்தால் தெருக்கூத்திலும், நாடகத்திலும் அரசர் வேடம் போட்டவர், மந்திரி வேடம் போட்டவரைப் பார்த்து, "என்ன மந்திரி மாதம் மும்மாரி பெய்கிறதா ?" என்று கேட்பதைப்போல் இந்நாள் அமைச்சர்களும் அதிகாரிகளைக் கேட்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும். ஆகவே, சுற்றுப் பயணம் அவசியம். அமைச்சர்கள் கிராமப் புறங்களுக்குச் சென்று, மக்கள் குறைகளை அறிந்து வரும் போதுதான், நாட்டு மக்கள் நிலை என்ன, நிர்வாகம் எப்படி நடக்கிறது என்பதை அறியமுடியும். ஆகவே, அது அவசியம். மேலும், அமைச்சர்களெல்லாம் குக்கிராமங்களுக்கு, போக்குவரத்து வசதியற்ற இடங்களுக்கு வரவேண்டும், தங்கள் குறைகளை அறிய வேண்டும், ஆவன செய்ய வேண்டும் என்று கிராமவாசிகள் கருதுகின்றனர். அது நியாயமும்கூட. ஏதோ நகர மக்கள்தான் அமைச்சர்கள் கண்களில் படுவதாகவும், பலவற்றில் கிராமப்புறம் புறக்கணிக்கப்படுவதுபோலவும், சுற்றுப்பயணத்தில் கூட நகர்ப் புறங்களில் ஏற்பாடு செய்கின்ற நிகழ்ச்சிகளில்தான் அமைச்சர்கள் கலந்து கொள்ளுகின்றனர் என்றும் கிராம மக்கள் கருதுகின்றனர். அதில் உண்மையிருப்பதனைக் கிராமப்புறங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட என்னைப் போன்ற சட்ட மன்ற உறுப்பினர்கள் உணருகின்ற நிலை ஏற்படாமல் இருப்பதற்கில்லை. ஆகையால் அமைச்சர்கள் பரவலாக கிராமப்புறங்களிலும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, மக்கள் குறைகளை அறிந்து, ஆவன செய்யக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கான முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறது. கடந்தகால அமைப்பிலே சோஷலிச சித்தாந்தத்தை எண்ணி நம்புகின்றவர்களாக இந்த அமைப்பு உருவாக்கப்படவில்லை. முதலாவதாக, ஏழைகளாக சமூகத்திலே இருப்பவர்களுக்கு, படித்தவர்களும், பண வசதி உள்ளவர்களும் காட்டுகின்ற பரிவுகளை இந்த அதிகார வர்க்கம் காட்டுவதில்லை. படித்தவர்கள், ஏழை எளியவர்கள், அவர்களின் பக்கத்திலே பரிவுகாட்ட வேண்டிய ஒரு நிலைதான் சோஷலிச அமைப்புக்கான ஆரம்ப வேலையாகும். அதற்கு அனுசரணையாக அவர்களுடைய அலுவலக அமைப்புக்களையும் மாற்றி அமைக்க வேண்டியது மிகவும் அவசியமானது. அம்மாதிரி படாடோபம் என்று சொல்கிறபொழுது ஒரு விஷயத்தைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். மாநிலத்தின் தலைவராக இருப்பவருக்கு சம்பளமும், படியும் சேர்ந்து கிடைக்கின்ற ரூபாய் 53,000 என்று போடப்பட்டிருக்கிறது. ஆனால், அவர்களுடைய பணியாளர்களுக்கான செலவு தொகை என்பதிலே ரூ. 2,76,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒருவருடைய வருமானத்தைக்கொண்டு அவர்களுடைய சிப்பந்திகளின் செலவு நிர்ணயிக்கப்பட வேண்டுமே தவிர, அவருடைய வருமானத்திற்கு மேலாக மிகவும் அதிகமாக அவருடைய சிப்பந்திகளுக்கும், இதர செலவினங்களுக்கும் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது இன்றைய சோஷலிஸ முறைக்குப் பொருந்துவதாக எனக்குத் தோன்றவில்லை. சிவில் சப்ளை இலாக்காவிற்கு கடந்த வருடம் ரூ. 2,88,12,000 என்று இருக்கிறது. இந்த வருஷம் ரூ. 2,90,59,000 என்று இருக்கிறது. இன்றைக்கு கொள்முதல் அல்லது ரேஷன் முறை எல்லாம் எடுத்துவிட்டதற்குப் பின்னால், இவ்வளவு பணம் அதிகமாக ஒதுக்கப்பட்டிருப்பது என் என்பது எனக்குப் புரியவில்லை. ஏற்கெனவே இந்தச் சபையில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் வருவாய்த் துறை வாரியத்தை எடுத்து விடுவது என்று முடிவு செய்திருக்கிறோம் என்று கூறியிருந்தார்கள். ஆனால் வருவாய் துறை வாரியத்தை எடுப்பதற்கான எந்த நடவடிக்கையும் இங்கே காணவில்லை. வருவாய்த் துறை வாரியத்திற்கு அதிகமாக பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் இங்கே பார்க்கிறோம். இன்றைக்கு பளுவாக இருக்கிற அமைப்புகளை மாற்றி, எளிமையான அமைப்புகளாகச் செய்து, ஏழைகள், படிக்காதவர்கள் வருகிறபோதெல்லாம் அவர்களுக்குப் பரிவு காட்டி, அவர்களுடைய பக்கத்தில் தங்களுடைய நீதியை வழங்குகின்ற முறையிலே இந்த அமைப்புகளிலே இருக்கிற சிப்பந்திகளை மாற்றி அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் என்று நான் கருதுகிறேன்.

தேர்தல் என்று குறிப்பிடப்பட்ட ஒரு விஷயத்தைப்பற்றி ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். தேர்தல் முறையானது மிகவும் பளுவானதாக இருக்கிறது. மிக அதிகமாகப் பணம் படைத்தவர்கள்தான் இன்றைக்குத் தேர்தலிலே நிற்க முடியும் என்ற நிலைமை இருக்கிறது. அந்த நிலைமையை மாற்றாத வரையில் அதிலே இருக்கிற ஊழல்கள், குற்றச்சாட்டுகள், பொருந்தாத பல





காரியங்கள் நடந்துகொண்டே இருக்கவேண்டிய நிலைமைதான் ஏற்படும். தேர்தல் முறை எளிதாக வேண்டும், யார் வேண்டுமானாலும் நிற்கலாம், கட்டாயமாக எல்லோரும் வோட்டுப் போடுவார்கள் என்ற நிலை இல்லாத வரையில், வோட்டர்களைச் சேகரித்து, வோட்டர்களை தாஜா செய்து, வோட்டர்களை கவர்ச்சி செய்து கொண்டு வரவேண்டிய நிலைதான் இருக்கும். அந்த நிலையில் நிறைய பணம் செலவு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. தேர்தல் காலத்தில் கட்டாயமாக வோட்டுப் போடுவார்கள் என்று நிச்சயம் இருந்தால், அப்படி அதிகமாகப் பணம் செலவு செய்கின்ற நிலை ஏற்படாது. சாதாரணமாக சேவை செய்கின்ற அவ்வளவு பேர்களும் தேர்தலில் பங்கு எடுத்துக்கொள்வார்கள், வெற்றி பெறுவதற்கு, ஈடுபடுவதற்கு வாய்ப்பு கிடைக்கும். ஆகவே, சோஷலிஸம் என்று சொல்கிற பொழுது ஏற்கனவே இருக்கின்ற முறைகளில் ஒரு சில முறைகளை வைத்துக் கொண்டு பாக்கி இருக்கிற காரியங்களில் மட்டும் சோஷலிச காரியங்களாகச் செய்ய முடியாது.

அடுத்து, காரியங்கள் செய்வதற்கான எல்லாவிதமான சுற்று சார்புடைய அமைப்புகளையும் மாற்றி அமைக்க வேண்டும். இன்றைய தேவைக்கு அனுசரணையாக அமைப்புகளை உருவாக்கி, எளிதாக்கி, சிக்கல் இல்லாமல் செய்து, சட்டத்தின்படி மக்களுடைய பக்கத்தில் அவ்வளவு பேர்களுடைய கவனத்தையும் ஒருமுகமாக கான்சென்டிரேட் செய்கின்ற ஒரு நிலைமை ஏற்பட்டால்தான், நாம் இன்றைக்கு எடுத்துக் கொண்டிக்கிற முயற்சிகள் வெற்றி பெறும். அந்த வகையிலே இந்த அரசாங்கம் செயல்படவேண்டும் என்று கூறி, என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. கோ. பூவராகன்: தலைவர் அவர்களே, இன்றையதினம் இந்த மன்றத்தில் வைக்கப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கட்சி சார்பாகத் கொடுத்திருக்கிற வெட்டுப் பிரேரணையை ஒட்டி சில கருத்துக்களைக் கூற விழைகின்றேன். தேர்தல்களை காலம் கடத்தாது எவ்வெப்பொழுது எந்தெந்தத் தேர்தல்களை நடத்தவேண்டுமோ அவ்வப்பொழுது அந்தந்தத் தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கம் முற்பட வேண்டும். தேர்தல்கள் இந்த ஆண்டு நடக்க வேண்டுமென்று சொன்னால், இரண்டு ஆண்டுகள் தள்ளிப்போட்டு, எப்பொழுது ஆளும் கட்சிக்கு அனுசரணையான சூழ்நிலை வருகிறதோ அப்பொழுது அந்தத் தேர்தலை நடத்தலாம் என்று வைத்துக்கொள்வது அவ்வளவு பொருத்தமாக இருக்காது என்றுதான் நான் இந்தச் சமயத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பஞ்சாயத்துத் தேர்தல்களை காலம் கடந்து நடத்த இருப்பதாகத் தெரிய வருகிறது. பஞ்சாயத்து தேர்தல்களை உரிய காலத்தில் நடத்தவேண்டும். அதற்கு காலம் தள்ளிப் போடக் கூடாது என்று இந்தச் சமயத்தில் சொல்வதோடு, பஞ்சாயத்து யூனியன் தேர்தலைப் பொறுத்த அளவில் இப்பொழுது இருக்கிற முறையை மாற்றி,

[1970 மார்ச் 10

*திரு. அ. மாரிமுத்து:* விளக்கத்திற்கு நன்றி. மாணவர்களிடம் அத்தகைய அக்கறை கொண்டவர்கள் முதல் அமைச்சராக இருக்கிறபோது—இன்றைக்கு பட்டம் பெற்ற எத்தனை மாணவர்கள் வேலை கிடைக்காமல் திண்டாடுகிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும்—அந்த மாணவர்கள் தங்கள் கோரிக்கையை முதல் அமைச்சர் அவர்களிடம் தெரிவிக்க வந்தபோது அவர்களைச் சந்தித்து ஆறுதல் கூறாது மறுத்து அனுப்பியிருக்கிறார்கள் என்றால் . . . .

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:* எப்போது மறுத்தேன் என்பதை விளக்க விரும்புகிறேன்.

*திரு. அ. மாரிமுத்து:* நான் மாணவர்கள் மத்தியில் பேசும் போது அவர்கள் இதனைச் சொன்னார்கள்.

*மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:* மாணவர்கள் என்னைச் சந்தித்த நேரத்தில் அவர்களோடு நான் ஒரு மணிநேரம் பேசினேன். அவர்களுடைய கோரிக்கையை கவனிப்பதாகச் சொன்னேன். நான் மாணவர்களைச் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்த நேரத்தில் எடுக்கப்பட்ட போட்டோ எல்லாப் பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. உண்மைக்கு மாறான விஷயங்களைப் பேசுவது நல்லது அல்ல.

*திரு. அ. மாரிமுத்து:* விளக்கத்திற்கு நன்றி. அந்த மாணவர்களுக்கு வேலை கிடைக்கும் வரை உபகாரச் சம்பளமாக 100 ரூபாய் தந்து உதவவேண்டும் . . . . (மணி அடிக்கப்பட்டது)

DR. H. V. HANDE: Sir, on behalf of the Swatantra Party I wish to offer a few remarks. First of all, I request the Hon. Chief Minister to clarify to the House the circumstances under which a senior I.C.S. Officer resigned sometime ago. I request the Hon. Chief Minister to take the House into confidence and read the exact resignation letter which that senior I.C.S. Officer wrote to the Chief Minister, what were the contents of that letter etc. I hope and trust the Hon. Chief Minister must be able to lay his finger on a copy of the letter written by that senior I.C.S. Officer and tell us exactly the circumstances which made that officer resign because there is a general feeling that the seniority of that distinguished officer was overlooked. Therefore a reading of the letter will help us to know the exact position. Any action taken by the Ministry should not be such as to demoralise the services. That is my first plea to the Ruling Party.

Secondly, there is the Pay Commission. I request the Hon. Chief Minister to give instructions to the authorities concerned to give the report as quickly as possible and try to implement it as quickly as possible and not to try to put it in cold storage. There was a Pay Commission's report given during the time of the erst-



1970 மார்ச் 10] [Dr. H. V. Hande]

while Congress Party (I do not know whether it is Mr. Bhuvara-han's Congress or Mr. Vinayakam's Congress, for when it comes to responsibility, one claims it is Subramaniam's Congress and the other claims it is Kamaraj's Congress) and most of the Commission's recommendations have not been implemented. There is a feeling that the same mistake of the Congress Party may be done by this Government also. So I want the Hon. Chief Minister to give a categorical answer that the recommendations of the Pay Commission will be given proper weightage and will be properly implemented.

Thirdly, I come to the Secretariat. The accommodation there is woefully miserable. The shabby manner in which the employees are seated is deplorable. Many of them had told me that there is absolutely no proper accommodation at all. This is the position in the Secretariat, which is the nerve centre for the entire State Government should give their immediate attention to this problem and do the needful. In this connection one incident comes to my mind. The revered Anna at one time accidentally happened to go to one particular section and he was taken aback that so many people were seated in such a manner. He was so much moved that he immediately passed an order saying that those people should be given proper accommodation. Some clerks even told me what a great man he was and what a human heart he had

எத்தகைய மனிதத் தன்மை படைத்தவர் இங்கே பாருங்கள் என்று சொன்னார்கள்.

So this is one incident to tell the Ministry that such sort of sentiment we expect from the present Ministry also.

Fourthly, I come to the Governor's Address. We are tired of the Governor's Address. I request the Hon. Chief Minister to immediately pass a resolution in this House to do away with this anachronism of this address, a legacy of British Raj. It was alright during British days. Now it is not at all necessary. I demand on the floor of the House and request the Hon. Chief Minister to convene a conference of all parties and then pass a unanimous resolution in this House doing away with the Governor's Address. Instead of it, let us have a Chief Minister's Address, wherein the Chief Minister voices the opinion of his Government. Let us exterminate the anachronistic demonstration of the British Raj. That is point (*a*).

Coming to point (*b*), we are spending huge amount of money on Governor's household (interruption), I know and I can tell the hon. Member Thiru Vinayakam that we can only not vote upon the Governor's establishment but we can talk on the same. I know it and that is why I am talking. We cannot bring a cut-motion on it but we can discuss. The point is we are wasting huge sums of money on Governor's household. We can convert it into

[திரு. ஏ. அ. சுப்பராஜா] [1970 மார்ச் 10

அமெரிக்காவில் இருக்கிற கான்ஸ்ட்டிட்யூஷனைப் பார்க்கிறோம். அந்தத் தேர்தல் முறை வந்தால்தான் நிலையான சர்க்கார் ஐந்து வருஷமாவது இருக்கலாம் என்று கருதுகிறேன். நமக்கு ஒரு நல்ல தேர்தல் முறை வரவேண்டும். அதற்கு மாநில சர்க்கார் சிபாரிசு செய்ய வேண்டும். அமெரிக்காவில் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க தேசத்திலுள்ள அத்தனை மக்களும் ஓட்டளிக்கிறார்கள். அதேமாதிரி பிரதம மந்திரி தேர்தல் நடத்தினால், எல்லா மாநில மக்களின் ஓட்டைப் பெறும்போது, நம்முடைய பிரதம மந்திரி என்ற உணர்வு பொதுமக்களிடத்தில் ஏற்படும். அப்பொழுது கட்சிபேதம் ஏற்படாது. ஒவ்வொரு மாநிலத்திலும் இன்றைய முதன் மந்திரிகள் நிலை என்ன, நாளை என்ன நடக்கும் என்ற நிலையில்தான் இருக்கிறார்கள். சாதாரணமாக, ‘பிள்ளைப்பூச்சியை எடுத்து மடியில் கட்டிக் கொண்டு அவதிப்படுவதுபோல’ என்று பழமொழி சொல்வார்களே, அதுபோல காலையில் எழுந்தால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருமோ என்று அச்சப்படக்கூடிய நிலைமையில், நாளைக்கு என்ன ஆகுமோ என்று கவலைப்படக்கூடிய நிலைமையில் தப்புசெய்யக் கூடிய நிலைமையில் சர்க்கார் இருந்து வருகிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, முதலமைச்சர்களும், பிரதம மந்திரியும் நேரடியாக தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். சட்டசபைக்கும் அவர்களுக்கும் தொடர்பு இருக்கக்கூடாது.

இன்றைக்கு இந்தியா தேசத்தில் நேரடித் தேர்தல் முறை நடத்தவில்லையென்றால், பிற்காலத்தில் தேசம் பிரிந்து சின்னா பின்னமாகி, நமக்குப் பின்னால் வருகிறவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருப்பார்களோ என்பதை நாம் கொஞ்சம் யோசித்துப் பார்த்தால்தான் தெரியும். எந்த ஃபெடரேஷன் கேட்டாலும் பின்னால் தேசம் சிதறுண்டு போவதற்கு நாம் விட்டிடக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நமது மாநில சர்க்கார் நேரடித் தேர்தல் முறை வேண்டுமென்று தீர்மானம் போட்டு, சிபாரிசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. அ. மாரிமுத்து: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கட்சியின் சார்பாகக் கொடுத்துள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இன்றையதினம் அமைச்சர்களுடைய பொறுப்பு பற்றியும், அவர்களுடைய கடமை பற்றியும் இங்கு பேசுவதற்கு இந்த மன்றம் உறுப்பினர்களுக்கு வாய்ப்பு அளித்திருக்கிறது. எங்கள் தஞ்சை மாவட்டத்திலே கும்பகோணம் பகுதியில் வலங்கைமான் என்ற ஊரிலே சென்ற ஒரு வாரத்திற்கு முன்னால் கள் குடித்ததன் காரணத்தால் 9 பேர் மாண்டனர் என்ற செய்தி வந்ததைப் பார்க்கிறோம். தமிழகத்திலே இந்தமாதிரியான தீய காரியங்களிலே எந்த அளவிலே அக்கறை



1970 மார்ச் 10] [திரு. அ. மாரிமுத்து]

கொண்டிருக்கிறார்கள் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் அவர்கள் முன்னாள் மறைந்த முதல்வரை ‘தென்னாட்டுக் காந்தி’ என்றும் அவரால் உருவாக்கப் பட்ட தம்பிமார்கள் ஆளும் தமிழகத்தின் ஆட்சியில் எந்தக் குறையும் இல்லையென்றும் பாராட்டிப் பேசினார்கள். குடந்தையிலே இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கும்போது மிகமிக அச்சப்படக்கூடிய நிலையிலே அந்தப் பகுதி மக்கள் இருக்கிறார்கள் என்பதை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து, தானியக் கட்டுப்பாட்டைப்பற்றி நான் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் நான் இதைச் சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன். தஞ்சை மாவட்டத்திற்கு மட்டும் தானியக் கட்டுப்பாடு இருக்கிறது. அப்பகுதி விவசாயிகள் உற்பத்தி யாளர்கள் அத்தனைபேரும் எந்த ஒரு லாபத்தையும் அடைய முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இன்னும் வெளிப்படையாகச் சொல்லப் போனால், தஞ்சையின் தானியக் கட்டுப்பாடு தனி நபருக்கு மகத்தான, கொள்ளை லாபத்தைத் தந்திருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். தஞ்சையில் 76 ரூபாய்க்கு அந்த நெல்லை விற்க வேண்டுமென்று தமிழக அரசு உத்தரவிட்டதன் காரணமாக மற்றைய மாவட்டங்களில் அதிகமாக விலை விற்றது. தனி வியாபாரிகள் அந்த நெல்லை வாங்கி மற்ற மாவட்டங்களில் அதிக விலைக்கு விற்று, கொள்ளை லாபம் அடித்திருக்கிறார்கள். உற்பத்தியாளர்களும் அரசாங்கம் நிர்ணயிக்கக்கூடிய விலையிலே விற்கும் நிலை ஏற்பட்டது. விவசாயிகள் ஒருபுறம் வாங்கிய கடனை அடைக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தம். மறுபுறம் பிப்ரவரி வந்தால் நிலவரி வந்துவிடுமே, அதிகாரிகளிடம் தொல்லைப்பட முடியாதே என்று குறைந்த விலைக்கு விற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆகவேதான் உற்பத்தி செய்யக்கூடியவர்களுக்கு லாபம் கிடைக்க வில்லையென்பதை உணவு அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அடுத்து, 1965-லே நமது முதலமைச்சர் அவர்கள் சட்டக் கல்லூரியில் பேசியபோது மாணவர்கள் குறையைப்பற்றிக் கூறினார்கள். அப்போது, "முதலமைச்சராக இருந்த கனம் பக்தவத்சலம் அவர்கள் மாணவர்களுடைய பிரச்சினைக்காக டெல்லியில் ஒரு குரல் எழுப்பினால், அன்னவருக்கு என் கை எலும்பை எடுத்து சிலை வடிப்பேன்" என்று கூறினார்கள். ஆனால் இன்றையதினம் அத்தகைய பொறுப்பை . . .

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பேசுவதை திருத்திச் சொல்வது நல்லதல்ல. ‘டெல்லிக்குச் சென்று இந்தியை நாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்று சொல்வார்களானால்’ நான் அந்த நிபந்தனையைச் சொன்னேன்.

a T. B. Sanatorium. We can see to it that a small household is set apart for the Governor in a proper manner. Let us not spend too much money on it.

With regard to Minister's tour programmes, I do not want to go into the details of what Thiru Bhuvarahan said. It happens like that. I do not want to prevent Minister's attending marriages of their friends. But I would pinpoint one request. Whenever a Minister goes out of the City, other Ministers must know about it. There must be proper co-ordination and not more than two or three Ministers must be out of the city at any time. There have been days when 75 per cent of the Ministers were out of the City. There must be proper co-ordination. In their cabinet meetings, they should discuss and arrange their functions accordingly so that not more than two or three Ministers are out of the city at any time.

I want to make one more request. With regard to election to graduates constituency, the Secretariat staff because of their being posted as Presiding Officers are not able to exercise their franchise. It is something unthinkable. "If you want to vote, you forgo your remuneration as Presiding Officer". That is what I heard as having been said. This is most undemocratic. It is against ethics of election. Therefore it is that I say that a van might be arranged to collect the votes of the 120 Presiding Officers in the polling booths. This is the simple suggestion that I want to make, for which I am sure the Hon. Minister will give proper weight and pass necessary orders. Thank you, Sir.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அவைத்தலைவர் அவர்களே, இப்போது இருக்கும்படியான மானியத்திலே எங்கள் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்ட வெட்டுப்பிரேரணைகளை ஆதரித்துப் பேசுகின்றேன்.

முதலாவதாக தேர்தல் நடக்கும்படியான முறை பற்றிச் சொல்கிறேன். தேர்தல் சமயத்தில் எத்தனையோ இவர்கள் எதிர்க் கட்சியில் இருந்தபோது பேசி வந்தார்கள். தாக்கி வந்தார்கள். ஆளும் கட்சியாக வந்தவுடன் இவர்கள் என்ன மாறுதல்களைச் செய்தார்கள் என்று பார்த்தால் ஒன்றும் இல்லை. தேர்தல் சமயத்தில் அமைச்சரவையே ராஜிநாமாச் செய்யவேண்டும் என்றார்கள். தேர்தலிலேயே ராஜிநாமாச் செய்துவிட்டு கலந்து கொள்ளக் கூடாது என்றார்கள். (திரு. கே. பூவராகன் குறுக்கிடு.) நான் ராஜிநாமாச் செய்யவேண்டும் என்று சொல்லவில்லை. கலந்து கொள்ளவேண்டாம் என்று சொல்லிக்கொள்கிறேன். நீங்கள் ராஜிநாமாச் செய்யவேண்டும் என்று சொன்னீர்களே என்று கேட்டபோது—உப தேர்தலுக்குச் சொல்லவில்லை என்று மாற்றிக் கொண்டார்கள். அதனுடைய விளைவுகள் எல்லாம் என்ன? அமைச்சர்கள் கலந்து கொள்ளும்படியான சந்தர்ப்பத்திலே சர்க்கார் அதிகாரிகளை உபயோகப்படுத்துகிறார்கள். தேர்தல் முறைகளிலே யார் யாரைக் கொண்டுபோவது, என்ன என்ன செய்ய





வேண்டுமோ அதையெல்லாம் செய்வது என்று நடத்தினார்கள். தென்காசியிலே தேர்தல் நடந்தது. அங்கே உள்ள யூனியன் சேர்மன் இன்னும் சிறிய சிறிய அதிகாரிகள் இவர்களையெல்லாம் ஈடுபடுத்தி ஆதரவு கொடுத்தால் இப்படிச் செய்வோம் அப்படிச் செய்வோம் என்றெல்லாம் பிரச்சாரம் செய்தார்கள். ஆளுங் கட்சியிலே உள்ள அமைச்சர்கள் செய்யும்படியான பிரச்சாரம் இருக்கிறதே அதற்குச் சிலவேளைகளில் மக்களும் செவிசாய்க்கும் படியான நிலைமை வந்துவிடுகிறது. உடனே முதலமைச்சர் அவர்கள் கேட்கலாம், உங்கள் கட்சி இருந்த நேரத்தில் அப்படி யெல்லாம் நடந்ததே என்று சொல்வார்கள், அப்படி அவர்களால் கேட்காமல் இருக்கமுடியாது. இருந்தாலும் அப்படியே நடந்து கொண்டே போனால் தேர்தல் நியாயமான முறையிலே நடத்தப் படுகிறதா என்று எப்படிப் பார்க்கமுடியும். முகையூரிலே தேர்தல் நடந்தது. தேர்தல் நடப்பதற்கு நான்கு வார காலத்திற்கு முன்னாலே அபேட்சா பத்திரம் தாக்கல் செய்கின்ற நேரத்திலே மின்சார விஸ்தரிப்பு, ரோடுகள் பராமரித்தல் இவையெல்லாம் நடந்ததைப் பார்த்தேன். முகையூர் பகுதியிலே அபிவிருத்தி வேண்டும், வேண்டாமென்று சொல்லவில்லை. ஏற்கனவே அங்கே விஸ்தரிப்பு செய்திருப்பார்களானால் நல்லது. வேண்டாமென்று யாரும் சொல்லமுடியாது. முப்பது லட்சம் 40 லட்சம் என்று செலவு செய்தார்கள். இதிலே இரண்டு பாதிப்பு ஏற்படுகிறது. அவசரமாகச் செலவு செய்தால் செலவு நிறைய ஆகிறது, அதே நேரத்திலே செலவு அதிகமாவதால் பாக்கியிருக்கும்படியான இடங்களில் விஸ்தரிப்பு நடப்பதையெல்லாம் நிறுத்துவதற்கு வழி ஏற்பட்டு விடுகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே பாரபட்சம் இல்லாத முறையில் தேர்தல் நடத்தவேண்டும். மக்கள் தாங்களாக ஓட்டுப்போடும்படியான முறை இருக்கவேண்டும். பஞ்சாயத்துத் தேர்தல் வந்தது. ஐந்து வருஷம் ஆனவுடனே தேர்தல் நடத்தியிருக்கலாம், ஆறு மாதம், 3 மாதம் என்றார்கள். ஆளுங்கட்சிக்குச் சாதகமாக ரேஷன் எல்லாம் . . . .

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பொதுத் தேர்தல், இடைத் தேர்தல்பற்றித்தான் மானியம். பூவராகன்கூட அதைப்பற்றிப் பேசினார்கள். எனக்கு விளங்கவில்லை. பஞ்சாயத்துத் தேர்தலைப் பற்றித் தனியாக மானியம் வருகிறது. எனவே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த நல்ல நேரத்தை அதற்குப் பயன்படுத்த வேண்டாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** ரொம்ப நன்றி. அந்த நேரத்திலும் பேசிக்கொள்ளலாம். வடநாட்டு கவர்னர் வேண்டாம் என்று சொன்னார்கள். கவர்னருடைய பேச்சுக்களைப் பகிஷ்காரம் செய்வோம் என்று சொன்னார்கள். இப்பொழுது அதே ராஜபவனத்திற்கு நீங்கள் செல்லவில்லையா? கவர்னர் பதவி வேண்டாம்,

சொத்துக் கணக்கு கொடுத்திருக்கிறீர்கள். கடன்தான் என்று எழுதி வைத்திருக்கிறீர்கள். ஆயிரம் 2 ஆயிரம் வருமானம் வருவதாகக் காணோம். அமைச்சர்கள் கோபித்துக்கொள்ளக்கூடாது. ஒரு நாளைக்கு சிகரெட் எவ்வளவு பிடிக்கிறார்கள்? ஒரு நாளைக்கு எட்டு பாக்கெட்டு ஆகிறது என்று வைத்துக்கொள்வோம். குறைந்தது ஒரு நாளைக்கு 16 ரூபாய் என்று வைத்துக் கொண்டால் மாதத்திற்கு 480 ரூபாய் அதிலேயே போய்விடுமே. பாக்கி வீட்டுக்கு அரிசியெல்லாம் எப்படி வாங்குவது? சிகரெட்டெல்லாம் ஒரு பாக்கெட் இரண்டு பாக்கெட் என்று அன்பளிப்புத் தருகிறார்களா? மக்கள் பாராட்டக்கூடிய முறையில் எளிய வாழ்க்கை நடத்தவேண்டும். சாதாரணமாக கைச்செலவுக்குக் கூட 400, 500 என்று செலவாகிறது. எப்படி அந்தச் சம்பளத்தை வைத்துக் கொண்டு இருக்கமுடியும்? விலைவாசியைக் குறைப்போம் என்று போராட்டம் எல்லாம் நடத்தினீர்கள். குறைந்திருக்கிறதா? வாழ்க்கைப்புள்ளி குறைய வில்லையே, ஏறிக்கொண்டேதான் போகிறது. எனவே திட்டவட்டமாக இதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்களா இதுவரையில்?

அதைப் பற்றியெல்லாம் சொல்லாமல் விளக்கெண்ணெய் விலை குறைந்திருக்கிறது என்று ஒரு அமைச்சர் பதில் கூறினார். விளக்கெண்ணெய் ரொம்பவும் நல்லது. சுற்றுப் பயணத்தில் அஜீரணம் ஏற்பட்டு விட்டால் விளக்கெண்ணெய் சாப்பிட்டால் நல்லது. எல்லாவற்றுக்கும் நாம் ஒரு முன் மாதிரியாக இருந்து காட்ட வேண்டும். இந்த மந்திரி சபையை மட்டும் நான் சொல்லவில்லை. டில்லி வரை அப்படித்தான் இருக்கிறது. நாட்டின் நிலவரம், மந்திரி சபையில் எப்படிப் பதிந்து கொள்வது, மந்திரிகளை எப்படி அதிகப்படுத்துவது என்பதிலேதான் இருக்கிறது. அரசியல் கட்சியிலே இருப்பவர்கள் எல்லாம் நாட்டு மக்களுக்காக இல்லை. எந்தெந்த நோக்கில் எப்படி மந்திரியாகவிடலாம் என்றுதான் நிலைமை இருக்கிறது.

உறுப்பினர்கள் பேசும்போது குற்றச்சாட்டுகளை நிரூபிக்க வேண்டுமென்று சபாநாயகர் அவர்களும் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். ஒரு அமைச்சர் வீட்டிற்கு சென்று கல்லூரி அட்மிஷனுக்காக ஒருவர் பணம் கொடுக்கார். அவர் பெயர் ஆடலழகன். அமைச்சர் டெலிபோனில் போலீஸ் அதிகாரியைக் கூப்பிட்டு அவரை பிடித்துக் கொண்டு போகும்படி சொல்லிவிட்டார். அவர் கோர்ட்டில் என்ன சொன்னார்? 'நான் அவருக்குக் கொடுக்கவில்லை; திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கொடுத்தேன்' என்று சொன்னார். நான் முன்பு ஒருசமயம் மெயில் ஸ்ட்ரீம் என்ற பத்திரிகையிலிருந்து ஒன்றைப் படித்தேன்.

"Corruption was here and there and under the two years of D.M.K. rule corruption is institutionalised,





என்று அதிலே இருக்கிறது. அதற்கு ஆதாரமாகத்தான் இதைக் குறிப்பிடுகிறேன். கட்சிக்காகக் கொடுத்தேன் என்று பிடிப்பட்டவர் கோர்ட்டில் கூறியிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கடைசியில் நீதிபதி என்ன தீர்ப்பளித்தார் என்பதையும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறவேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பணம் கொடுத்தது உண்டு. நீங்கள் டெலிபோன் செய்தது உண்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பணம் கொடுக்க வந்தவனை அமைச்சர் அவர்கள் உரிய அதிகாரியிடம் டெலிபோன் மூலம் தெரிவித்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்படி ஒப்புவித்துவிட்டார். * அந்த அந்த நிலையில் வார்த்தைகளைத் திரும்பப் பெற வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எதிர்க்கட்சித் தலைவர் ஒன்றுமே பேசக்கூடாது என்று சொல்லிவிடுங்கள். நான் வெளியே போய் விடுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, ஆடலழகன் என்ற திராவிட முன்னேற்றக் கழகக்காரர் கல்வியமைச்சரிடத்தில் வந்து ஐயாயிரம் ரூபாய் கொடுக்க வந்தார். கல்வியமைச்சர் உடனடியாக அந்தக் குற்றத்தைப் போலீசாருக்குத் தெரியப்படுத்தி நடவடிக்கை எடுத்தார். நீதி மன்றம் அவருக்குத் தண்டனை வழங்கி இருக்கிறது, அவர் அப்பீல் செய்திருக்கிறார். அது வேறு விஷயம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்று கேட்டிருப்பது உள்ளபடியே வேதனைக்குரிய ஒன்றாகும்.

அப்படிச் சொன்னதைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரும்பத் திரும்ப எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அப்படிச் சொல்லிக் கொண்டிருப்பது முறையல்ல. ஒருவர் பணம் கொடுக்க அமைச்சரிடம் வந்தார். அமைச்சர் அவரைப் பிடித்துக் கொடுத்து விட்டார். இப்படியெல்லாம் பேசுவதற்கு வெளியிலே வேறு இடம் இருக்கிறது. அங்கே எவ்வளவு வேகமாகப் பேச வேண்டுமோ அவ்வளவு வேகமாகப் பேசுங்கள். இங்கே பேசும்போது எந்தக் குற்றச்சாட்டைக் கூறினாலும் ஆதாரம் இல்லாமல் சொல்ல வேண்டாம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணையினங்க அகற்றப்பட்டது.

ஏதோ அரசாங்க அலுவல் நிகழ்ச்சிகளுக்குப்போய், கட்சி நிகழ்ச்சிகளுக்குச் செல்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. பேறிஞர் அண்ணா அவர்கள் இப்படிப்பட்ட பேச்சு வரும் என எண்ணி, வழிச்செலவுக்கு, அரசு சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளுக்குப் போனால்தான், அரசாங்கப்பணம் பெறவேண்டும், கட்சி நிகழ்ச்சிகளுக்குப் போகும்போது கட்சியிடம் வழிச்செலவு பெறவேண்டும் என்று வகுத்துக் கொடுத்த வழியில்தான் இந்த அரசு செல்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

தேர்தல்கள் பற்றிச் சொன்னார்கள். ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டால் ஐந்தாண்டுகளுக்கு இருக்கலாம் என்று சட்டங்களும் விதிகளும் இருக்கின்றன. அப்படியொரு ஸ்திரமான நிலை இங்கே இருப்பதை நாம் பார்க்கிறோம். இதற்கு மாறாக ஸ்திரத் தன்மை அற்று மேற்குவங்காளத்தில் இடைத்தேர்தல் வந்ததையும், வருவதையும் மற்ற இடங்களில் இடைத்தேர்தல்கள் வருமோ என்ற அச்சமும் ஏற்படுகின்ற நிலைமையை பார்க்கும்போது, தமிழகத்தில் நிலையான முறையில் ஐந்து ஆண்டுகளும் தொடர்ந்து உறுப்பினர்களாக இருந்து பணியாற்றுகின்ற நிலையைக் கண்டு பெருமைப்படலாம். இன்றைக்கு ஊராட்சி, ஒன்றியத் தேர்தல்கள் வரவிருக்கின்றன. இந்த நேரத்தில் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். வரிகளைக் கட்டி விட்டதற்கு க்ளியரன்ஸ் சர்ட்டிபிகெட் வாங்கிக்கொடுக்க வேண்டும் என்பதில், முன்பு ஊராட்சி ஒன்றிய ஆணையாளரிடமிருந்து பெறவேண்டும் என்று இருந்ததை இப்பொழுது ரெவின்யூ இன்ஸ்பெக்டரிடமிருந்தும் வாங்கித்தர வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இது காலதாமதம் ஏற்படுவதற்கு இடம் கொடுக்கும். உரிய நேரத்தில் வாங்க முடியாமல் பாதிக்கப்படுவார்கள். வசதிபடைத்தவர்கள் எதை வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம், ஆனால் பாமரமக்கள் பாதிக்கப்படுவார்கள். க்ளியரன்ஸ் சர்ட்டிபிகேட் தேவையென்றால். அது அங்கங்கேயுள்ள தாலூகா ஆபீசில், வட்ட ஆட்சித் தலைவரிடம் 'டாக்ஸ் அர்ரியர்ஸ்' இல்லை என்று சொல்லும் அளவில் ஒட்டு மொத்தமாக ஒரே சர்டிபிகேட் பெற்றுத் தந்தால் போதும் என்ற நிலையை உருவாக்கி கிராமமக்கள் பல இடங்களுக்குச் சென்று அவதிப்படுகின்ற நிலையைப் போக்கி ஆணையாளர், ரெவின்யூ இன்ஸ்பெக்டர் ஆகியவர்களிடம் சர்டிபிகேட் பெற வேண்டியதில்லையெனச் செய்யவேண்டும் என்று சொல்லிக்கொண்டு முதல் அமைச்சர் கொண்டுவந்துள்ள கோரிக்கைகளை ஆதரித்து முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. ஏ. அ. சுப்பராஜா : தலைவர் அவர்களே, தேர்தலைப்பற்றிய இந்த மானியத்தின்மேல் பேச விரும்புகிறேன். ஒருசில மாற்றங்கள் செய்ய அரசாங்கம் சிபாரிசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பொதுவாக, இப்பொழுது இருக்கக்கூடிய தேர்தல் முறையானது. பாராளுமன்றமானாலும் சரி, மாநிலமானாலும் சரி,





முதலமைச்சர்கள், பிரதம மந்திரி ஆகியோர் நேரடித் தேர்தல் முறையில் தேர்ந்தெடுக்கப்படாமல் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களாக இருக்கிறார்கள். இதனால் கட்சி உறுப்பினர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்படும்போது பிரதம மந்திரி, முதலமைச்சர் போன்றோர் அகற்றப்பட்டு, அந்த இடத்தில் வேறு ஒருவர் வரக்கூடிய நிலைமை இருக்கிறது. கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளில் எத்தனையோ மந்திரிகள் மாற வேண்டிய நிலைமை இருக்கிறது. இன்றைக்கு நமது தேசம் எங்கே போகிறது என்ற ஐயம் இருக்கிறது. மாநிலத்திற்கு மாநிலம் கருத்து வேறுபாடுகள் மிகுந்திருக்கின்றன. நதிகளில் வரக்கூடிய தண்ணீரைப் பகிர்ந்துகொள்வதிலும், எல்லைகளைப் பிரித்துக் கொள்வதிலும் இரண்டு மாநிலங்களும் சண்டை போட்டுக்கொள்ளக் கூடிய நிலைமை இருக்கிறது. இன்றைக்கு இருக்கிற தேர்தல் முறையானது இந்தமாதிரியான நிலைமையை உண்டாக்கியிருக்கிறது.

இன்றைக்கு நமக்கு லூஸ் ஃபெடரேஷன் வேண்டுமென்று கேட்கிறோம். அதை எந்த வகையில் செய்வது என்று சொன்னால் மத்திய அரசாங்கத்தில் இருக்கிற அதிகாரங்களை நாம் பெற வேண்டும். நமக்கு ஒரு சுய ஆட்சி வேண்டுமென்று கேட்கிறோம். நாட்டில் அந்தந்தப் பிரதேசத்தில் பிரதேசக் கட்சிகள் வளரக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. உதாரணமாக பஞ்சாபில் அகாலி தளமும், தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் போன்ற கட்சிகளும் இருக்கின்றன. இந்தப் பிரதேசக் கட்சிகள் எல்லாம் பாராளுமன்றத்தில் மத்தியில் ஒரு ஸ்திரமான அரசாங்கத்தை அமைப்பது என்றால் முடியாது. பிரதேசக் கட்சிகள் மத்திய அரசாங்கத்தை ஏற்படுத்தினால், அன்றைக்கு அங்கிருக்கக்கூடிய அரசியல் சட்டத்தை மாற்றி, அதிகாரங்களை மாநிலங்களுக்குப் பிரித்துக்கொள்ளும் நிலைமை வரும். ஆகவே, மத்தியிலே இருக்கக் கூடிய பிரதம மந்திரி அவர்களும், மாநில முதலமைச்சர்களும் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஒரு கட்சி பெரும்பான்மை மெஜாரிட்டியாக இருந்தாலும்கூட, கட்சியில் ஏற்படும் உட்பூசல்களினால், மந்திரிசபை மாறுகிற நிலைமை இருக்கிறது. இன்றைக்கு மேற்கு வங்காளத்தில் இருக்கிற நிலைமையை நாம் பார்க்கிறோம். ஒரு தேர்தல் என்று சொன்னால் எத்தனை செலவுகள், எத்தனை கஷ்டங்கள் ஏற்படுகின்றன? இப்படி அடிக்கடி மந்திரிசபை மாறினால் என்ன ஆவது என்ற பயம் மக்களிடத்திலே ஏற்படுகிறது. பொறுப்புள்ள பிரதிநிதிகள், சிறு பிள்ளைகள் விளையாடுவதைப்போல காரியங்களில் ஈடுபடுகிறார்கள். இப்படியே போனால் நமக்கு பின்னால் வருகின்ற சந்ததியினர் நம்மைப்பற்றி என்ன நினைப்பார்கள் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1970 மார்ச் 10

அதுவும் வடநாட்டுக் கவர்னர் வேண்டாமென்றெல்லாம் சொன்னீர்கள். இப்பொழுது வடநாட்டுக் கவர்னரோடு அரசியல் மாநாட்டிலே கட்டித்தழுவிக் கொண்டிருக்கிறீர்கள். வடநாடு தென்னாடு என்று பேசாமல் நல்ல வேளை இப்பொழுதாவது சேர்ந்து இருப்பதற்காகப் பாராட்டுகிறேன். இப்பொழுது வடநாட்டுக் கவர்னர்தான் இருக்கிறார்கள். ஏன் கொள்கையில் மாற்றம்? கவர்னர் பதவியை ரத்துச் செய்யவேண்டுமென்று சொன்னீர்களே, ஏன் செய்யவில்லை? நீங்கள் எதிலுமே நிலையாக இருப்பதில்லை, குழப்பமாக இருக்கிறீர்கள். உத்திரவு போடுவதிலே நிலையாக இருக்கிறீர்களா? அலுவலகங்களிலே கடவுளர்படம் இருக்கக்கூடாது என்று சொன்னீர்கள். பிறகு அதைப்பற்றிக் கேட்டால் எப்படியோ வந்துவிட்டது என்று சொன்னார்கள். எப்படி வந்தது என்று நடவடிக்கை எடுக்கவேண்டாமா? நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்த நேரத்திலே எப்படியோ வந்தது என்று சொன்னார்கள். திட்டவட்டமாகக் கேட்கிறோம். எப்படி உத்திரவு போட்டோம் என்பதை . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** எப்படியோ வந்துவிட்டது என்று யார் சொன்னார்கள்? நடவடிக்கை தெரியபில் இருக்கிறதா?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** எப்படியோ வந்துவிட்டது என்று சொன்னார்கள். கடவுளர் படம் நீக்கப்படும் என்று உத்திரவு போட்டு இருக்கிறீர்களா என்று திட்டவட்டமாகச் சொல்ல வேண்டும். (குறுக்கீடு: போடப்பட்டிருக்கிறது) போடப்பட்டிருக்கிறது என்று சொல்கிறீர்கள் நன்றி. போட்டிருப்பதால் அது ஒரு மதத்தைச் சார்ந்தவர்களாக இருப்பவர்களின் மனத்தைப் புண்படுத்துவதாக இல்லையா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** கடவுளர் படங்கள் ஆங்காங்கு இருக்கவேண்டிய இடங்களில்தான் இருக்கவேண்டும். அலுவலகங்களிலே மாட்டுகின்ற காரணத்தினாலே இருக்கின்ற மற்ற மதத்தினரைப் புண்படுத்தக்கூடிய நிலைமையெல்லாம் வந்து அதைத் தொடர்ந்து சர்ச்சைகள் எல்லாம் வருகின்றன. அதனால் தான் எந்த இடங்களில் இருக்கவேண்டுமோ அந்த இடங்களில் இருக்கலாம். கடவுளர்மீது எங்களுக்கு வெறுப்புக் கிடையாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** கடவுளர் படத்திற்கு என்றால் எல்லா மதத்தைச் சேர்ந்தவர்களுடைய படங்களுக்கும் என்று உத்திரவு போட்டிருக்கிறார்களா? அப்படியென்றால் எம்மதமும் சம்மதம் என்று சொல்லுகிறார்கள், ஒன்றுமே வேண்டாம் என்றால் என்ன அர்த்தம்? அடிப்படை உரிமையே போய்விடுகிறது. படம் போடக்கூடிய உரிமை இருக்கட்டும், ஆனால் யாரையும் புண்படுத்துவதாக இருக்கவேண்டாம். முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், நான் நாஸ்திகனாக இருந்தேன். ஆஸ்திகத்திற்கு நான் எதிர்ப்பு இல்லை. என்னுடைய கொள்கை, நாஸ்திகம் பாதி,



1970 மார்ச் 10] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

ஆஸ்திகம் பாதி இதிலே பாதி அதிலே பாதி என்று விளக்கம் தந்தார்கள். ஆனால் அடிப்படை ஜீவாதார உரிமை என்பதைக் கொடுக்க வேண்டும். . . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அதிலே பாதி இதிலே பாதி என்று நான் சொன்னதாகச் சொல்லிக் கற்பித்துக்கொண்டு நான் ஏதாவது சொல்லவேண்டுமென்று எதிர்பார்த்துப் பேசுகிறார்கள். எனக்கு கடவுளைப்பற்றி ஒரு கொள்கை உண்டு. ஆனால் அதே நேரத்திலே மற்றவர்களுடைய கொள்கையிலே தலையிடுவதில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** உங்களுடைய கொள்கை புரிகிறது. ஆனால் தலையிடும்படியான நிலைமையும் இருக்கக்கூடாது. சீர்திருத்தம், கொள்கைகள் இவற்றிலே திட்டவட்டமாக இல்லை யென்பதைத்தான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த ஆண்டு வறட்சி நிவாரணத்திற்காக 18 கோடி ரூபாய் செலவழித்திருக்கிறார்கள். நம்முடைய நாட்டிலே வறட்சி இருந்ததோ, இல்லையோ பணத்தை வாங்கிச் செலவழித்திருக்கிறார்கள். ஆனால் அமைச்சர்களுடைய சுற்றுப் பயணத்திலே வறட்சியே இல்லை. முன்பு 5 லட்சம் ஆக இருந்தது இப்பொழுது 11½ லட்சமாக ஆகியிருக்கிறது. அவர்களுக்கு மக்களைப் பற்றி அக்கறை கிடையாது. முன்பு இருந்தவர்களைப்பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது ஊருக்குத்தான் உபதேசம் தனக்கில்லை என்ற கொள்கையை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். 500 ரூபாய் ஆக சம்பளத்தைக் குறைத்துக்கொண்டோம் என்றார்கள். என்ன பிரயோஜனம்? பிரயாணப்படி செலவுகளைக் குறைத்திருக்கிறீர்களா? குறைத்ததாகத் தெரியவில்லையே. காங்கிரஸ்காரர்கள் ஆட்சியிலே இருந்தபொழுது அவர்களை நல்லவர்களாக ஆக்கிவிட்டீர்கள். அவர்கள் எவ்வளவு தூரம் சுற்றுப்பிரயாணம் செய்தாலும் கோட்டையிலே வேலையில்லையா, எதற்காக ஊர் ஊராகச் சுற்றுகிறீர்கள் என்று கேட்டீர்கள். இப்பொழுது உங்கள் கணக்கு என்ன? ஒரு மந்திரி அல்ல டஜன் கணக்கில் மந்திரிகள் போகிறார்கள். திருமணத்திற்கு 6 மந்திரிகள், காதுகுத்திற்கு 7 மந்திரிகள், கிரகப் பிரவேசத்திற்கு எத்தனை மந்திரிகள்? முன்பு அவர்கள் ஒன்றிரண்டு மந்திரிகளாகப் போனார்கள், வந்த இடங்களுக்கு நீங்கள் 7 பேர்கள் போகிறீர்கள். கேட்டால் இதுவும் ஒரு சாதனை, ஒரு மந்திரி இரண்டு மந்திரிதான் போனார்கள், நாங்கள் 7 பேர்கள் போகிறோம் என்று சாதனை என்று சொல்வார்கள். கேட்டால் பொதுமக்களுடன் தொடர்பு வைத்துக் கொள்வதற்காகப் போகிறோம் என்று சொல்வார்கள். நீங்கள் அதைக் குறைக்க என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள்?

ஐந்நூறு ரூபாயை வைத்துக்கொண்டு குடும்பத்தை நடத்து கிறீர்களா? சென்னையிலே 500 ரூபாயை வைத்துக்கொண்டு குடும்பத்தை நடத்தமுடியுமா? கணக்குப் போட்டுப் பார்ப்போம்.

[1970 மார்ச் 10

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பணம் கொடுக்க வந்தவரை அமைச்சர் டெலிபோன் செய்து பிடித்துக் கொடுத்தார். அதைப் பற்றி என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்லக் கூடாதா ? அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** — — என்று நீங்கள் கூறியதை ஆதாரத்தோடு கூறவேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** பொதுமக்கள் அப்படி சொல்லிக் கொள்ளுகிறார்கள். அதைக் கேட்டு நான் சொல்லுகிறேன். பொது மக்கள் கூறுவதை, பத்திரிகையில் வருவதைக் கூறக்கூடாதா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பொதுமக்கள் கூறுவதை, பத்திரிகையில் வருவதை எல்லாம் இங்கே கூறக்கூடாது. கூறு கின்ற குற்றச்சாட்டுக்கும் கூறுகின்றவர்கள் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். பத்திரிகையில் வந்தது, அதைக் கூறிவிட்டேன், பொதுமக்கள் சொல்லுகிறார்கள்—நான் கூறிவிட்டேன் என்று சொல்லுவது எதிர்க்கட்சித் தலைவருடைய கூற்றாக இருக்க முடியாது. அப்படிப்பட்ட வார்த்தைகளுக்கு மன்றத்தில் இடம் தரமுடியாது. நீங்கள் ஆதாரமான குற்றச்சாட்டு இருந்தால் கூறவேண்டும். அதைவிட்டு பொதுமக்கள் பேசிக் கொள்ளுகிறார் கள் ; பத்திரிகையிலே வந்திருக்கிறது என்று பேசுவது முறைதானா என்பதைச் சிந்தித்துப் பார்த்துப் பேச வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சிந்தித்துத்தான் பேசுகிறேன். மனுநீதி வழங்கும் இந்தச் சர்க்கார் மீது, தமிழ்ப் பாரம்பரை முறை யில் நடக்கும் இந்தச் சர்க்கார் மீது இப்படிப்பட்ட குற்றச்சாட்டு கள் இருக்கின்றன, தெரிந்து கொள்ளுங்கள் என்று கூறுகிறேன். அவர்கள் நன்றாக இருக்க வேண்டுமென்பதற்காக தான் இதைச் சொல்லுவது தவறா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களுடைய வாதப்படி ஒரு வர் பணம் கொண்டுவந்து கொடுத்தவுடன் காவல் துறையினருடன் தொடர்பு கொண்டு அவரைப் பிடித்துக் கொடுத்தது உங்களுடைய குற்றச்சாட்டா ? அதை ஆதாரத்தோடு சொன்னால் அந்தக் குற்றச்சாட்டுகளை இங்கே கூற வேண்டாமென்று நான் சொல்ல வில்லை. அப்படி இல்லாமல் 'பேசிக் கொள்ளுகிறார்கள்' என்று சொன்னால்—கடைவீதியில் என்னவெல்லாமோ பேசிக் கொள்ளு கிறார்கள்; அதைச் சொல்லுவதற்கு இது இடம் இல்லை; அதற்கு வேறு இடம் இருக்கிறது. இதையெல்லாம் அங்கே வைத்துக் கொள்ளுங்கள். இங்கே ஆதாரத்தோடு பேசவேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** முன்னால் இருந்த அமைச்சர்களைப் பற்றி இவர்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது பேசியிருக்கிறார்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்





கள். ஹூர்தம்மாள் சைமன் மீது குற்றச்சாட்டைப் பத்திரிகை யில் போட்டார்கள், சட்டசபையிலும் பேசினார்கள். நடவடிக்கை எடுத்தீர்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** முன்னாள் அமைச்சர் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நிரூபித்தீர்களா ? பாரபட்சம் இல்லாமல் நடக்க வேண்டுமென்பதற்காகத்தான் இதைச் சொல்ல விரும்புகிறேன். ஒவ்வொன்றையும் ஆதார பூர்வமாகச் சொல்ல வேண்டுமென்றால் அதற்கு கோர்ட்தான் இருக்கிறது. கோர்ட்டுக்கு போய்ச் சொல்லிக் கொண்டிருக்க முடியுமா ? இங்கே சொல்ல உரிமை இல்லையா ? இதுமாதிரி ஊரில் பேசிக்கொள்ளுகிறார்கள் என்று கூறினேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** * என்ற வார்த்தைகளை எதிர்க் கட்சித் தலைவர் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் இதைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் ஒன்றும் ஏற்படவில்லை. முன்பு சபா நாயகராக இருந்த ஒருவர் 'எதிர்க்கட்சித் தலைவர்' என்ற வார்த் தையே 234 விதிகளில் ஒன்றில்கூட இல்லையென்று சொன்னார். அவர் கூறியது தவறு என்று அடுத்த நாள் நிரூபித்த பிறகும் இவர், தான் சொன்னதைத் திரும்பப் பெறாது, 'நான் சொன்னது சொன் னதுதான்' என்று சொல்லிவிட்டார். அவருக்கு ஒரு நீதி, எனக்கு ஒரு நீதியா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த 'நீதி' வேறு எங்கோ போய்க் கொண்டிருக்கிறது. நீங்கள் கூறியது முறைகேடான குற்றச்சாட்டு, ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டு. அதை திரும்பப் பெற்றுக் கொள்ளுவது நல்லது. விதிமுறைகள் அப்படித்தான் இருக்கின்றன.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** 'எதிர்க்கட்சித் தலைவர்' என்ற வார்த்தையே கிடையாது என்று அவர் சொல்லிவிட்டு சொன்னதை திரும்பப்பெற முடியாது என்று சொன்னது சரியா ? நான் சொல்லியதில் ஒன்றும் தவறு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்போது உள்ள 'சப்ஜெக்ட்' நீங்கள் சொன்ன வார்த்தைகளைத் திரும்பப் பெற்றுக் கொள்ளு கிறீர்களா, இல்லையா என்பது. நீங்கள் இப்போது கூறுகின்ற விஷயத்தைப்பற்றித் தனியாக விவாதம் வைத்துக்கொள்ளுவோம். இப்போது நீங்கள் கூறியது முறைகேடான குற்றச்சாட்டு. அதை

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

[திரு. பி. ஜி. கருத்திருமன்.] [1970 மார்ச் 10

ரூபாய் செலவு செய்யலாம் என்று போட்ட உத்தரவு இருக்கிறது. பூம்புகாரில் செலவழித்த பணம் எங்கே? அவைகளைப் பற்றிய கணக்குகள் வைக்கப்படவில்லை. கேட்டால் முதல் அமைச்சர் அவர்கள் நன்றாகப் பதில் சொல்வார்கள். அதை ஏன் காட்டவில்லை, இதை ஏன் காட்டவில்லை என்று சொல்வது சகஜமாகி விட்டது. கேட்ட கேள்விக்கு நேராகப் பதில் சொல்லவேண்டும். தமிழ் மாநாட்டிற்கான கணக்குகளை காட்டவேண்டும். எவ்வளவோ தொகை வசூலிக்கப்பட்டது. திருச்சியில் 35 லட்சம், கோவையில் இவ்வளவு லட்சம், தஞ்சையில் தாங்கமுடியாத லட்சம் என்று சொல்லியிருக்கிறீர்களே, அந்தக் கணக்குகள் எங்கே?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** உலகத் தமிழ் மாநாட்டுக் கணக்கு அப்போதே பத்திரிகைகளில் எல்லாம் வெளியிடப்பட்டிருக்கிறது, எல்லாப் பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டிருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதை ஆடிட் செய்து சட்டசபையில் வைக்க வேண்டுமென்று சொல்கிறோம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதை சர்க்கார் செய்யவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சீப் செகரட்டரி உத்தரவு போட்டிருக்கிறார்களே அதனால்தான் கேட்கிறேன்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** கேள்வி போடுங்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கேள்விபோடவேண்டும் என்று சொல்ல நீங்கள் யார்? கேள்வி போடுங்கள் என்று எனக்கு அவர்கள் ஆலோசனை சொல்கிறார்கள். என்ன பதில் வரும் என்று தெரியாதா. தப்பித்துக்கொண்டு போகப் பார்க்கிறார்கள். சீஃப் செகரட்டரி உத்தரவு போட்டிருக்கிறாரா இல்லையா. சர்க்கார் உத்தரவு போட்டிருக்கிறதா இல்லையா.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** என்ன உத்தரவு அது?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இவ்வளவு லட்சம் ரூபாய் செலவிடப்படும் என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். சர்க்கார் உத்தரவு இடப்பட்டிருக்கிறது. அது ஆடிட் ரிப்போர்ட்டிலும் வந்திருக்கிறது, சரியான கணக்கு இல்லை என்று வந்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஒரு கண்காட்சி நடத்துகிறோம், தேனாம்பேட்டையில் ஒரு கண்காட்சி நடத்தப்படுகிறது என்று வைத்துக்கொள்வோம், அல்லது சுற்றுலாக் கண்காட்சி நடத்துவதாக வைத்துக்கொள்வோம். அதற்கு அரசாங்கம் இவ்வளவு பணம் ஒதுக்குவது என்று ஒதுக்கி விட்டால் அந்தக் கண்காட்சிக் கணக்கை இந்தச் சட்டசபையில் இந்த அரசாங்கம் வைக்கவேண்டுமா? விளக்கம் தேவை.



1970 மார்ச் 10]

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தேனாம்பேட்டையை நினைக்காமல் முதல் அமைச்சர் அவர்களுக்கு தூக்கம் வராது, காங்கிரசை நினைக்காமல் அவருக்கு தூக்கம் வராது. அவ்வளவு பின்னிப் போயிருக்கிறார்கள். தேனாம்பேட்டை . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பேசுகிற வார்த்தையை வைத்துக்கொண்டு அங்கிருந்து பாய்ந்து பாய்ந்து செல்வது நல்லதல்ல. சுற்றுலாக் கண்காட்சி என்றும் சொன்னேன். எந்தக் கண்காட்சியாக இருந்தாலும் அதற்காக அரசு இவ்வளவு மானியம் அல்லது ஸ்டால் வைக்க இவ்வளவு என்று நிதி ஒதுக்கி சீப் செகரட்டரி ஒரு உத்தரவு போடுகிறார் என்று வைத்துக்கொள்வோம். பிறகு அது நடைபெறுகிறது. அந்தக் கண்காட்சி முடிந்தபிறகு அதன் வரவு செலவுக் கணக்கை எல்லாம் இங்கு நாம் வைக்க கடமைப்பட்டவர்களா?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அப்படி நடத்துவது வேறு, சர்க்கார் நடத்துவது வேறு.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதேபோல்தான் உலகத் தமிழ் மாநாட்டிற்கு ஆதரவு அளித்து சர்க்கார் ஓரளவு ஒரு சிறு தொகைதான் கொடுத்ததே தவிர அதை ஒரு கமிட்டி நடத்தியது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அப்படியானால் அது சர்க்கார் ஆடிட் ரிப்போர்ட்டில் ஏன் வரவேண்டும்? அப்படி அது சர்க்கார் ஆடிட் ரிப்போர்ட்டில் வராவிட்டால் ஆட்சேபனை கிடையாது. அது சர்க்கார் ஆடிட் ரிப்போர்ட்டில் வந்திருக்கிறது. அதில், உலகத் தமிழ் மாநாட்டுக் கணக்குகளை சரியாக வைக்கவில்லை என்று ஏன் போட்டிருக்கிறார்கள்? ஆடிட் ரிப்போர்ட்டில் வந்திருக்காவிட்டால் நான் நிச்சயம் இதைப்பற்றி இங்கு கேட்க முடியாது. கேட்டிருக்கவும் மாட்டேன். வேறு ஒருவர் நடத்தியிருந்தால் அதைப்பற்றி இங்கு கூறியிருக்க மாட்டேன். முதல் அமைச்சர் அவர்கள் சொல்லலாம், நீங்கள் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி சேர்மன் ஆயிற்றே, அதைப்பற்றி விசாரணை செய்து கொள்ளுங்கள் என்று சொல்லலாம். முதல் அமைச்சர் அவர்களுக்கு என் ஆலோசனை எல்லாம், அந்த வரவு செலவுக் கணக்குகளை இப்போதாவது பரிசீலனை செய்து இங்கு வைத்தால் பொது மக்கள் அதைப் பார்த்துக் கொள்ளவும், நம் சர்க்காரின் நாணயம், நேர்மை எவ்வளவுதூரம் என்று தெரியும். பத்திரிகையில் அறிவித்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். பத்திரிகையில் வந்ததை வைத்து நாங்கள் கேட்கிறோம். பத்திரிகையில் அறிவித்ததை எடுத்துக்கொண்டு சொல்வார்களேயானால் நன்றாக இருக்கும் என்று கூறி இந்தக் கட் மோஷனை ஆதரிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவரவர்களே, இந்த மானியத்தின்மீது எதிர்க்கட்சித் தலைவரவர்களும், மற்ற கட்சிகளின் தலைவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்திருக்கின்றார்கள். இதிலே, குறிப்பாக

நீங்கள் திரும்பப் பெற்றுவிடுவது நல்லது. அப்படிப்பட்ட குற்றச் சாட்டைச் சொல்ல நான் இடம் தர முடியாத நிலை ஏற்படும் என்பதைத்தான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதை சபாநாயகர் அவர்களின் அபிப்பிராயத்திற்கு விட்டுவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதை நீக்கிவிட உத்தரவிடுகிறேன். அதை யாரும் பத்திரிகைகளிலும் வெளியிடத் தேவை இல்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அமைச்சர்கள் இதுமாதிரி பொறுப்பில்லாமல் பல சுற்றுப்பயணங்களை மேற்கொள்வதினால் வீண் விரயம் ஏற்படுகிறது. இப்படி ஒவ்வொரு அமைச்சராகப் போய்க்கொண்டிருந்தால் எவ்வளவு செலவாகிறது என்று பார்க்க வேண்டும். அமைச்சர்கள் போகும்போது பெரிய பெரிய ஆபீசர்களும் போக வேண்டியிருக்கிறது, அப்போது அவர்கள் டி. ஏ. பில் வாங்காமலா இருக்கிறார்கள்? நான் ரெயிலில் போய்க்கொண்டிருந்த போது ஒருவர் சொன்னார், இந்த ரயில் வண்டி அமைச்சர்கள் போகிற வண்டி என்று. இதில் ஒருவர் வருவார் ஒருவர் போவார் என்று கூறினார். இப்படி அடிக்கடி அமைச்சர்கள் போவதால் கலெக்டர்கள் தங்கள் வேலைகளைக் கவனிக்க முடியவில்லை. இன்று ஒருவர் போகிறார், நாளை ஒருவர் போகிறார் என்றால் இவர்கள் பின்னோடு சுற்றிக்கொண்டிருந்தால் நிர்வாகம் எப்படி நடக்கும்? கோட்டையில் நிர்வாகம் சரியாக நடக்கவில்லை. ஜில்லா தலைநகர அலுவலகங்களிலும் நிர்வாகம் சரியாக நடக்கவில்லை. வேலைகள் நன்றாக நடக்கவில்லை. அதிகப்படியாக சுற்றுப்பயணம் செல்வதால் விரயம் தவிர வேறு ஒன்றுமில்லை. மக்களைச் சென்று சந்திக்கவேண்டும் என்றால் அதற்கு என்று ஒரு போர்ட் ஃபோலியோ ஒதுக்கி வைக்கலாமே, அமைச்சரவையில் ஒரு சிலர் இருக்கிறார்கள். கட்சியை வளர்ப்பதற்காக என்று, கட்சியை தாங்கிப் பிடிப்பதற்காக என்று ஒரு அமைச்சர் இருக்கிறார். ஆகவே, தனியாக ஒரு போர்ட் போலியோவைக் கொடுத்து ஊர் ஊராகச் சுற்றிக்கொண்டு இரு, கட்சியை வளர்த்துக் கொண்டிரு, மக்களைப் பார்த்துக் கொண்டிரு என்று சொல்லலாமே.

விண்ணப்பங்கள் மாவட்டச் செயலாளர்கள் மூலம் வர வேண்டும் என்று ஒருவர் சொல்லியிருக்கிறார். எம்.எல்.ஏ. மூலம் வரவேண்டும் என்றில்லை. இதை எப்படி நிரூபிப்பது, கையெழுத்து வாங்கி இப்படித்தான் சொல்லியிருக்கிறார் என்று நிரூபிக்க முடியுமா. ஆகவே, நிர்வாகம் சரியாக நடைபெறுகிறதா, அமைச்சர்கள் பொறுப்புடன் நடந்து கொள்கிறார்களா என்றால் இல்லை. இப்படிச் சுற்றிக்கொண்டிருந்தால் எப்படி பிரச்னைகளுக்கு தீர்வு காண்பது. ஆய்ந்து ஓய்ந்து பார்த்தா முடிவு எடுக்கிறார்கள்? ஆய்ந்து ஓய்ந்து பார்க்காமல் எப்படியோ ஒரு முடிவு எடுத்துவிட்டு பிறகு அதற்குத் தக்கபடி அட்ஜஸ்ட் செய்வது என்றால் சிறப்பான முறையில் நிர்வாகம் நடக்க முடியாது.





ஆகவே, நான் சொல்வது, வீண் செலவுகள் குறைக்கப்பட வேண்டும், மக்களுக்கு நாம் ஒரு எடுத்துக்காட்டாக அமைய வேண்டும். நாம் பரிசுத்தமாக இருக்கவேண்டும். ஏதாவது குற்றஞ்சாட்டினால் முன்னால் இதைச் செய்யவில்லையா என்று சொல்வது அதற்குப் பரிகாரம் ஆகாது. அது நியாயமான பதிலும் அல்ல. அதைத் திருத்துவதற்குத்தானே அமைச்சரவையில் இருக்கிறீர்கள். அதற்காகத்தானே நீங்கள் இங்கே உட்கார்ந்துகொண்டு இருக்கிறீர்கள். முன்பு இப்படியெல்லாம் தப்புகள் நடந்துவிட்டன, இப்போது அவற்றைத் தீர்த்திருக்கிறோம், நிர்வாகத்தில் இவ்வளவு சிக்கனம் செய்திருக்கிறோம், இவ்வளவு தூரம் அபிவிருத்தி செய்திருக்கிறோம் என்று சொன்னால் அவற்றை ஏற்றுக்கொள்ளத்தயார். ஆனால் அப்படி ஒன்றும் இல்லை. ரெவின்யூ போர்டை எடுத்தாகிவிட்டது என்று சொன்னார்கள். பின்னால் படிப்படியாக எடுத்துக்கொண்டு வருகிறோம் என்று சொல்கிறார்கள். முன்பு போர்ட் ஆஃப் ரெவின்யூவை எடுக்கவேண்டுமென்றும் அதை ஒழித்துவிட்டு ஆங்காங்கு கமிஷனர்களைப் போடவேண்டும் என்றும் அதுபற்றி ஆராய்ந்த பிறகு செலவு அதிகமாவதால் அது நன்றாக இருக்காது என்று மீண்டும் அதை வைத்துக் கொள்ளலாம் என்று தீர்மானம் செய்தார்கள் முன்பிருந்த சர்க்கார்.

செக்ரட்டேரியேட்டை எடுத்துக்கொண்டால் கார்கள் வாங்குவது போவது என்று எல்லாம் இருக்கிறது. இங்குள்ள அதிகாரிகளுக்கு பல சங்கடங்கள் இருக்கின்றன. ஒரு உத்தரவு போட்டிருப்பதை பாராட்டாமல் இருக்கமுடியாது. ரூ. 1,250 சம்பளம் அல்லது அதற்குமேல் வாங்குகிறவர்கள் லி.ஐ.டி.-யில் உள்ள வீடுகளை காலி செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள், அதை நடுத்தர உத்தியோகஸ்தர்களுக்கு கொடுக்கவேண்டுமென்று. செக்ரட்டேரியட்டில் உள்ளவர்களுக்கு தனிப்பட்ட முறையில் அவர்களுக்கு தனியாக ஒதுக்கீடு செய்து வீட்டு வசதியெல்லாம் தனிப்பட்ட முறையில் செய்வார்களானால் நன்றாக இருக்கும் என்ற என் ஆலோசனையைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மக்களின் நலனைப் பாதுகாக்க இந்த நிர்வாகம் இல்லை. வெறும் பிரசாரமாக, கட்சி சார்பாகத்தான் இருக்கிறது. எங்களைக் கலந்து கொள்ளவில்லை என்ற முறையில் சொல்லவில்லை.

உலகத் தமிழ் மாநாடு நடந்தது. அது நடந்து இரண்டு வருடங்கள் ஆகிவிட்டது. அதுவும் இதில் வருகிறது. இது அவுட் ஆஃப் ஆர்டர் என்று சொல்வீர்களோ என்றுதான் இதைச் சொல்கிறேன். உலகத் தமிழ் மாநாடு நடந்தது. அதன் கணக்கு வழக்குகள் இதுவரையில் வந்திருக்கிறதா, அந்தக் கணக்குகள் சரிபார்க்கப்பட்டிருக்கிறதா? அது சட்டசபையில் வைக்கப்பட்டதாக எனக்குத் தெரியவில்லை. ஒவ்வொரு ஜில்லாவிலும் எவ்வளவோ பணம் வசூல் செய்யப்பட்டதே, அதற்கான வவுச்சர்ஸ் எங்கே, அதற்கான கணக்குகள் எங்கே என்று கேட்கிறேன். சீப் செகரட்டரி போட்ட உத்தரவு, பத்து லட்சம்

[திரு. மு. கருணாநிதி] [1970 மார்ச் 10

நம்முடைய நண்பர் திரு. மார்டின் அவர்கள் இங்கு தொகுத்தளித்த சில குற்றச்சாட்டுகளுக்கு நான் முதலில் விடைகாண விரும்புகின்றேன்.

என்னுடைய தனிச் செயலாளரை டெபுடி டிரான்ஸ்போர்ட் கமிஷனராக விதிகளுக்குப் புறம்பாக சலுகை காட்டும் விதத்தில் ஆர்.டி.ஓ.-வாக இருந்த அவரை ஏதோ பாசப் பிணைப்பின் காரணமாக பேப்பர் பிரமோஷன் கொடுத்துவிட்டதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. மார்டின் குற்றம் சாட்டினார். அவர் என்னுடைய பி.ஏ. அல்ல; என்னுடைய பிரைவேட் செகரட்டரி என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

டெபுடி டிரான்ஸ்போர்ட் கமிஷனராக யார்யாரை நியமிக்க வேண்டும் என்பது பற்றி விதிகளை டிரான்ஸ்போர்ட் கமிஷனர் அவர்கள் அனுப்பி அவை அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அந்த விதிகளின்படி அஸிஸ்டென்ட் டிரான்ஸ்போர்ட் கமிஷனராக ஓராண்டு முடிந்திருந்தாலோ, தலைமைச் செயலகத்தில் ஹோம் டிபார்ட்மெண்டிலோ, இண்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மெண்டிலோ, டிரான்ஸ்போர்ட் சப்ஜெக்ட் பார்த்துக் கொண்டு இருக்கும் உதவிச் செயலாளர்கள் தாங்கள் உதவிச் செயலாளர் என்ற கிரேடில் நான்கு ஆண்டுகள் இருந்திருந்தாலும், டெபுடி கலெக்டர்களாக இருந்து டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண்டிற்கு சென்று இரண்டு ஆண்டுகள் ஆர்.டீ.ஓ.-வாக பணியாற்றி அவர்கள் டெபுடி கலெக்டர், ஆர்.டீ.ஓ. இரண்டையும் சேர்த்து குறைந்தது ஆறு ஆண்டுகளாவது சர்விஸ் செய்து இருப்பார்களானால் அவர்களையும் டெபுடி டிரான்ஸ் போர்ட் கமிஷனராகத் தேர்ந்தெடுக்கலாம் என்று விதி இருக்கிறது.

எனக்கு தற்பொழுது தனிச் செயலாளராகவும், நான் பொதுப் பணி அமைச்சராக இருந்த போது கெஜட்பதிவு பெற்ற பீ.ஏ.-வாகவும் இருந்தார். அவர் என்னிடம், நான் பொதுப்பணி அமைச்சராக இருந்தபோது நான் அவருக்கு டெபுடி டிரான்ஸ் போர்ட் கமிஷனராக பிரமோஷன் வந்தது. டிபார்ட்மெண்டில் எல்லோரும் பரிசீலனை செய்து டெபுடி டிரான்ஸ்போர்ட் கமிஷனர் பதவிக்கு யார்யார் தகுதி வாய்ந்தவர்கள் என்று உள்துறை செயலாளர், ஓய்வுபெற்ற தலைமைச் செயலாளர் இருவரும் பரிசீலனை செய்து ஒரு பேனல் தயாரிக்கப்பட்டது. அந்தப் பேனலில் என்னுடைய (1) தனிச் செயலாளர், (2) தெட்சணாமூர்த்தி என்ற டிரான்ஸ்போர்ட் இலாகாவைச் சேர்ந்தவர்., (3) தர்மா என்ற தலைமைச் செயலகத்தினைச் சேர்ந்த உதவிச் செயலாளர் ஆகிய மூவரும்தான் தகுதி உடையவர்கள் என்று பேனல் தயாரிக்கப் பட்டது. அந்தப் பேனலை மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் அங்கீகரித்தார்கள். அந்த அங்கீகாரத்திற்குப் பிறகு போஸ்டிங்ஸ் கொடுப்பதற்கு பைல் வந்தது. அப்போது என்னிடத்தில் பீ.ஏ.-வாக இருந்தவரை விடுவிக்க நான் விரும்பவில்லை. என்னிடத்தில் அவர் பீ.ஏ வாக இருந்ததினாலேயே அவருக்குக் கிடைக்கவேண்டிய பிரமோஷனைத் தடுக்கக்கூடாது என்ற முறையைப் பின்பற்றி



1970 மார்ச் 10] [திரு. மு. கருணாநிதி]

அவருக்குப் பேப்பர் பிரமோஷன் கொடுக்கப்பட்டதே ஒழிய விதி முறைக்குப் புறம்பாக எதுவும் செய்யப்படவில்லை. இதை 'ஃபுல் போர்டு ஆக்ஷேபித்தது என்று கூறுவதும் தவறு.

அண்ணா அவர்கள் அமெரிக்கா சென்றிருந்த போது அவருக்கு போஸ்டிங்ஸ் கொடுக்க என்னிடம் பைல் வந்தது. அண்ணா அவர்கள் அமெரிக்கா சென்றபொழுது தன்னுடைய இலாக்காக்களை மற்ற அமைச்சர்களுக்குப் பகிர்ந்து அளித்துவிட்டுச் சென்றார்கள். அதில் பப்ளிக் சர்விஸ் துறை என்னிடம் கொடுக்கப்பட்டிருந்தது. போக்குவரத்துத் துறை ஏற்கனவே என்னிடம் இருந்தது. ஆகவே அண்ணா அங்கீகரித்ததையொட்டி அவருக்கு பேப்பர் பிரமோஷன் கொடுக்கும் உத்தரவில் நான் கையெழுத்து போட்டேனே ஒழிய, ஏதோ அண்ணா இல்லாத சமயத்தில் அவருடைய விருப்பத்திற்குப் புறம்பாக நான் ஏதோ எனக்கு வேண்டியவர் என்பதற்காக செய்துவிட்டது போல் மிகைப்படுத்திச் சொல்வதெல்லாம், சில தினங்களுக்கு முன்னர் வேண்டுமென்றே என்னுடைய டிரைவர் மீது மிகைப்படுத்தி ஒரு குற்றம் சொன்னார்களே, அதைப் போன்றதேயல்லாமல் வேறில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளு கின்றேன்.

அடுத்து, அவருக்கு ஸ்பெஷல் பே என்று ரூபாய் 250 கொடுக்கப் படுகிறது என்று குற்றம் சாட்டினார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மார்டின் அவர்கள் எப். ஆர். ரூல்ஸ் விதி ஒன்றைச் சுட்டிக் காட்டினார்கள். ஸ்பெஷல் பே என்பது அடிப்படை சம்பளத்தில் சாதாரணமாக இத்தனை விகிதம் இருக்கவேண்டுமென்று இருக்கிறது. ஆனால் அதே எப். ஆர். ரூல்ஸ்ஸில் ஸ்பெஷல் பே என்பது ஆளைப் பொறுத்தது அல்ல; அவர் செய்யும் உத்தியோகத்தின் சிரமத்தைப் பொறுத்து நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று இருக்கிறது. முதலமைச்சரின் தனிச் செயலாள ராக யார் இருந்தாலும் அந்த உத்தியோகத்திற்கு என்ன ஸ்பெஷல் பே உண்டோ அது கொடுக்கப்பட வேண்டும் என்பது விதி. மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு தனிச் செயலாளராக இருந்தவருக்கும், அதற்கு முன்னர் இருந்த தனிச் செயலாளர் களுக்கும் ரூபாய் 250 தான் ஸ்பெஷல் பே கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது. தனிச் செயலாளராக யாரைப் போட்டுக் கொள்ள வேண்டும் என்பது அந்தந்த முதலமைச்சரின் நம்பிக்கைக்கு பாத்திரமானவர்களும், கடுமையாக உழைப்பவர்களும்தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அந்த முறையில் என்னுடைய தனிச் செயலாளருக்கு 250 ரூபாய் ஸ்பெஷல் பே கொடுத்தது, எந்த விதிமுறைக்கு புறம்பானது என்று எனக்குப் புரியவில்லை.

அடுத்து, டெபுடி கலெக்டர்களின் லிஸ்டில் 41 வது ஆளாக சீனியாரிட்டி லிஸ்ட்டில் இருந்தவரை, 15-வது ஆளாக மாற்றி விட்டார்கள் என்று ஒரு குற்றச்சாட்டு. டெபுடி கலெக்டர்கள், சீனியாரிட்டி, கன்பர்மேஷன், பிரமோஷன் போன்றவைகள் பற்றி ஸ்பெஷல் ரூல் ஒன்று காங்கிரஸ் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்

[திரு. மு. கருணாநிதி] [1970 மார்ச் 10

பட்டு அமுலில் இருந்து வருகிறது. தாசில்தார்களாக இருந்து
பிரமோஷன் பெறும் டெபுடி கலெக்டர்களும், நேரிடையாக
நியமனம் பெறும் டெபுடி கலெக்டர்களும் 2 : 1 என்ற விகிதத்தில்
அமைய வேண்டுமென்று இருக்கிறது. சர்வீஸ்களைப் பொறுத்து
ஜெனரல் ரூல் 6-ன் படி நேரிடையான நியமனங்கள் சாஸ்வதமான
காலியிடங்களுக்கே நியமிக்கப்பட வேண்டுமென்று இருக்கிறது.
சிறப்பு விதி இரண்டின் படி சாஸ்வதமாக காலியாகும் இடங்களில்
2 : 1 என்ற விகிதாச்சாரத்தை பின்பற்றி நியமனங்கள் செய்யப்பட
வேண்டும். ஆகவே, ஓராண்டில் 9 நிரந்தர காலி இடங்கள்
ஏற்படுமானால் அந்த ஆண்டில் 3 பேர் நேரிடையாக நியமனம்
பெறுகிறார்கள். ஆனால் அதே ஆண்டில் தற்காலிகம் என்று
சொல்லப்படுகிற 20, 30 இடங்கள் வருவது உண்டு. இந்த 20, 30
இடங்களுக்கு எல்லாம் நேரிடையான நியமனம் அனுமதிக்கப்
படுவதில்லை. நேரிடையாக நியமனம் பெற்ற டெபுடி கலெக்டர்கள்
அவர்கள் பயிற்சி காலம் முடிந்தவுடன் நிரந்தர டெபுடி
கலெக்டர்களாக ஆக்கப்படுகிறார்கள். நிரந்தர டெபுடி கலெக்டர்கள்
என்பது 72 பேர் தான் இருக்கிறார்கள். ஆனால் நமது மாநிலத்தில்
டெபுடி கலெக்டர்கள் சுமார் 300-க்கு மேல் இருக்கிறார்கள். இந்த
300 பேர்களில் சுமார் 24 பேர் தான் நிரந்தர டெபுடி கலெக்டர்கள்
இருக்கிறார்கள். இவர்களுக்கு விதிகளின்படி சீனியாரிட்டி அவர்கள்
நிரந்தரமாக ஆக்கப்பட்ட தேதியிலிருந்து நிர்ணயிக்கப்பட
வேண்டுமே அல்லாது, தற்காலிகமாக பிரமோஷன் வந்தவர்
களுடன் பயிற்சி காலம் ஆரம்பத் தேதியை வைத்து சீனியாரிட்டி
நிர்ணயம் செய்வது தவறு. சட்ட விரோதம் என்று சுப்ரீம்
கோர்ட்டில் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. நான் மேலே கூறிய
விதிகளை உயர்நீதிமன்றத்தில் ஜெயசிங் என்பவருக்கும் மத்திய
அரசுக்கும் இடையே நடந்த வழக்கில் 1967-ம் ஆண்டு, உத்தரவு
எண் 1427, 52 என்பதில் கூறப்பட்டிருக்கிறது. இந்த உத்தரவு
போடுவதற்கு முன்பு தாசில்தாராக இருந்து, டெபுடி கலெக்டர்
களாக பதவி உயர்வு பெற்றவர்களின் பிரதிநிதிகளையும் நேரிடை
யாக நியமனம் டெபுடி கலெக்டர்களாக பெற்றவர்களின் பிரதிநிதி
களையும் நிதி அமைச்சர், சட்ட அமைச்சர், முன்னாள் தலைமைச்
செயலாளர், சட்டச் செயலாளர், ரெவின்யூ இலாகா செயலாளர்
இவர்கள் முன்னிலையில் கோரிக்கைகளைக் கேட்டு ஆழ்ந்து பரிசீ
லித்து அதன் பின்னர் அரசாங்க ஆணை எண் 3090 தேதி 22-12-69
அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆணையை திரு.
மார்டின் அவர்கள் படித்துப் பார்த்தால் இந்த உத்தரவிலே தவறு
ஏதுமில்லை என்பதை நன்கு புரிந்து கொள்வார்கள் என்று நம்பு
கிறேன். ஏற்கனவே இருக்கும் விதிமுறைகளை அமுலாக்க வேண்
டும் என்பதுதான் நேரடி நியமனம் பற்றி டெபுடி கலெக்டர்களின்
கோரிக்கையே அல்லாமல் பொதுவாக எதுவும் எங்களுக்குச்
செய்யவேண்டும் என்பது அல்ல அவர்களுடைய கோரிக்கை. என்
னுடைய தனிச் செயலாளர் இந்த மாற்றத்தினால் முதலாவதாகவோ
இரண்டாவது ஆளாகவோ வரவில்லை. 15-வது ஆளாகத்தான் வந்



1970 மார்ச் 10] [திரு. மு. கருணாநிதி]

திருக்கிறார். துரதிருஷ்டவசமாக, அவர் எனக்கு தனிச் செயலாள
ராக அமைந்ததினால் இந்தக் குற்றச்சாட்டை எழுப்ப வேண்டிய
ஒரு நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார் என்று நான்
கருதுகிறேன்.

ஐ.ஏ.எஸ். பற்றிச் சொன்னார்கள். 1969-ம் ஆண்டு செப்டம்பரில்
ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ்., செலக்‌ஷன் செய்வதற்கு டெல்லியிலிருந்து
கமிட்டி ஒன்று வந்தது. ஆனால் நேரடியாக நியமனம் பெற்ற
டெபுடி கலெக்டர்கள் எங்களுடைய சீனியாரிட்டி முடிந்த பிறகு
ஐ.ஏ.எஸ். தேர்வு வைத்துக்கொள்ளவில்லை என்றால் எங்களுக்குக்
கடும் அநீதி ஏற்படும் என்ற கோரிக்கையை விடுத்தார்கள். நான்
மேலே விளக்கிச் சொல்லியபடி அவர்களுடைய கோரிக்கை நியாய
மானது. ஆகவே, டெல்லியிலிருந்து வந்த கமிட்டி, ஐ.பி.எஸ்.
தேர்வை மட்டும் முடித்துக்கொண்டு சென்று விட்டார்கள். இந்த
சீனியாரிட்டி பிரச்சினையைப் பற்றி 3090 என்ற எண்ணிட்ட அர
சாங்க உத்திரவின் நகல் சம்பந்தப்பட்ட எல்லா டெபுடி கலெக்டர்
களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. அவர்கள் அதன்மீது மேலும்
சில முறையீடுகளைச் செய்திருக்கிறார்கள். அதையும் பரிசீலனை
செய்த பிறகு முடிவான உத்திரவு விரைவிலே வெளியிடப்படும்.
அதற்குப் பிறகுதான் ஐ.ஏ.எஸ். தேர்வு கமிட்டி வருவது நியாயம்.

இன்னொன்று, என்னுடைய அந்தரங்கச் செயலாளர் பற்றி.
சேலத்தில் தாண்டவராய கவுண்டர் என்ற ஒருவருக்கும் ஈரோடில்
ராமலிங்கம் என்ற ஒருவருக்கும் அரசாங்கத்தில் சலுகைகள்
கொடுக்கப்பட்டன என்ற குற்றம் சாட்டினார். நான் விசாரித்த
அளவில் தாண்டவராய கவுண்டர் என்பவர் என்னுடைய தனிச்
செயலாளரின் மைத்துனர் என்று தெரிகிறது. ஆனால், அவருக்கு
தனிப்பட்ட முறையில் எந்த ஹோல்சேல் லைசன்சும் கொடுக்கப்பட
வில்லை. இரண்டு மூன்று பேர் சேர்ந்து கூட்டாக உணவுப்
பொருள் வியாபாரம் செய்வதற்காக இலாகாக்களுக்கு மனுச்
செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு லைசன்ஸ் ஒன்று கலெக்டரால்
வழங்கப்பட்டதாகத் தெரிகிறது. அந்தக் கூட்டுக் கம்பெனியில்
தனிச்செயலாளர் மைத்துனரும் ஒருவர் என்றும் தெரிகிறது.
அதுவும், இப்பொழுது இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்புதான்
லைசன்ஸ் கிடைத்திருக்கிறது. உணவுக் கன்ட்ரோலை எடுத்துவிட்ட
பிறகு அந்த லைசன்ஸுக்கும் பயன் இருக்கும் என்று நான் கருத
வில்லை. சாதாரணமாக, விதிமுறைப்படி உறவினர்கள் என்பதால்
அவர்கள் எந்த தொழிலும் செய்யக்கூடாது என்பது எந்த
நீதியில் அடங்கும் என்று எனக்குப் புரியவில்லை. ஈரோட்டு
ராமலிங்கம் என்பவர் [illegible]ார் என்பதே தனக்குத் தெரியாது. அவர்
தனக்கு உறவினர் இ[illegible]லை என்று என்னுடைய தனிச் செயலாளர்
கூறுகிறார். அவர் எ[illegible]த வன்னிய குலத்தைச் சார்ந்தவரோ இவர்
எந்த வன்னிய குல[illegible]தைச் சேர்ந்தவரோ தெரியவில்லை. ஏனென்
றால், வன்னிய குலத்திற்காக அதிக சலுகைகளை இந்த அரசு
அளித்து வருகிறது. முதலமைச்சர் அளித்து வருகிறார் என்று

பேசி வருகிறார்கள். அந்த அடிப்படையிலே இந்தக் குற்றச்சாட்டு அமைந்தால் நான் உள்ளபடியே அந்த நோக்கத்திற்காக வருத்தப்படுகிறேன்.

அடுத்து, செல்லப்பன் அவர்களுக்கும் பரமசாமி அவர்களுக்கும் சலுகைகள் அளித்து பதவி உயர்வுகள் கொடுக்கப்பட்டுள்ளன என்றும் திரு. மார்டின் அவர்கள் குற்றம் சாட்டினார்கள். இந்த நியமனங்கள் எல்லாம் விதிமுறைகளை பின்பற்றியே செய்யப்பட்டிருக்கின்றன. வாதத்திற்காக விதிமுறைகளுக்குப் புறம்பாக இவைகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று வைத்துக்கொண்டாலும் இங்கு முன்பு முதலமைச்சராகயிருந்த திரு. காமராஜ் அவர்கள் யாரைத் தன்னுடைய பிரைவேட் செக்ரட்டரியாக வைத்திருந்தார்? திரு. கிருஷ்ணையாவை பிரைவேட் செக்ரட்டரியாக வைத்திருந்தார்கள். அவர் ஐ.ஏ.எஸ். அல்ல. அது மட்டுமல்ல, ஆசிரியாக இருந்து அடிஷனல் டெவலப்மெண்ட் கமிஷனர் பதவிக்கு உயர்த்தப்பட்ட திரு. வெங்கடாசலபதி அவர்களுக்கும் எந்த விதி முறையை பின்பற்றி பழைய சர்க்கார் பதவி உயர்வுகள் கொடுத்தது என்பதை இங்கு இருக்கும் ரெக்கார்டுகளை பார்த்தால் நன்கு விளங்கும். பாசப் பிணைப்பும் எங்களிடம் இல்லை, பழைய திரவியப் பிணைப்பும் எங்களிடம் கிடையாது. மாண்புமிகு உறுப்பினர், நண்பர் திரு. மார்டின் அவர்கள் இதை நன்றாக உணர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பாசப் பிணைப்பு, கட்சிப் பிணைப்பு இவைகளின் பேரில் ஒருவருக்கு வேலை கொடுக்கப்பட்டது என்று சொல்வது தவறாகும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** திரவியப் பிணைப்பு என்றால் என்ன?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** புரிந்துகொண்டுதான் கை தட்டினார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** எனக்குப் புரியவில்லை. எனக்குத் தெரியாததனால்தான் நான் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இதில் பாசப் பிணைப்பும் அல்ல, திரவியப் பிணைப்பும் அல்ல என்றுதான் சொன்னேன். இருக்கிறது என்று சொன்னால்தானே உங்களுக்கு விளக்கம் தேவை.

அடுத்தாற்போல், செங்கல்பட்டில் மோட்டார் வெஹிக்கில் இன்ஸ்பெக்டராக இருந்து ஒருவர் உயர்நீதி மன்றத்தினால் தண்டிக்கப்பட்டும், மீண்டும் பதவியில் நியமிக்கப்பட்டிருக்கிறார், இது இந்த அரசு செய்த மாபெரும் குற்றம் அல்லவா? இதைப்போல எங்களிடம் ஒரு குற்றச்சாட்டை எடுத்துக் காட்டுங்கள், இந்த இடத்திலேயே நான் இல்லை என்று திரு. மார்டின் அவர்கள் அவசரப்பட்டுச் சொல்லி விட்டார். இந்த செங்கல்பட்டு விவகாரத்தில், ரூபாய் 10 லஞ்சம் வாங்கிய குற்றத்திற்காக அவருக்கு மாவட்ட நீதிபதியால் ஈராண்டு சிறைத் தண்டனை அளிக்கப்பட்டது. அவர் உயர்நீதி மன்றத்திற்கு அப்பீல் செய்து, அதன்பேரில் அப்பீலில் தண்டனை



மூன்று மாதங்களாகக் குறைக்கப்பட்டது. அந்தத் தண்டனையை வைத்து, அவரை வேலையை விட்டு நீக்குவதற்காக உத்தரவிடப் பட்டது. 'மேஜர் பனிஷ்மெண்டு' கொடுக்கும்போது சர்விஸ் கமிஷனைக் கலந்து ஆலோசிக்க வேண்டும் என்று முறைப்படி சர்வீஸ் கமிஷனின் அபிபிராயத்திற்கு அந்தக் கருத்து விடப்பட்டது. சர்வீஸ் கமிஷன், இவரை வேலை நீக்கம் செய்ததில் விதிமுறைகள் சரியாகக் கடைப்பிடிக்கப்படவில்லை என்று கூறியது. ஆகவே, அவரைத் திரும்பவும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டிய நிர்ப் பந்தம் எங்களுக்கு ஏற்பட்டது. மீண்டும் அவருக்கு குற்றப் பத்திரிகை கொடுக்கப்பட்டிருக்கிறது. அவருக்குத் தக்க தண்டனையை கொடுக்க வேண்டிய அதிகாரிகள் கொடுப்பார்கள், டிபார்ட்மெண்டல் ஆக்ஷன் நிச்சயம் எடுத்துகொள்ளப்படும் என்று இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். முதலில் அவரை வேலையிலிருந்து நீக்கம் செய்யவேண்டும் என்பது குறித்து, சர்வீஸ் கமிஷனின் கருத்தைத் தெரிந்துகொள்வதற்காக அனுப்பியபோது, ப்ரொஸீஜர் சரியாக இல்லை, முறைப்படி வரவேண்டும் என்று சர்வீஸ் கமிஷன் எழுதியிருக்கிற காரணத்தினால், அந்த ஃபைல் மறுபடியும் டிபார்ட்மெண்டினால் கவனிக்கப் பட்டு வருகிறது. அவருக்கு உரிய தண்டனை கொடுக்கவேண்டும், அவரை வேலையிலிருந்து நீக்கவேண்டும் என்கின்ற அளவிலேதான் அரசு சிபார்சு செய்திருக்கிறது. 'இப்படி ஒன்றை எங்களுடைய ஆட்சியில் காட்ட முடியுமா' என்று அவர்கள் கேட்டார்கள். நான் அவர்களுக்குச் சொல்கிறேன். 9-3-1964-ல் உங்களுடைய ஆட்சியில் கணபதி நாயுடு என்ற ஒரு போலீஸ் அதிகாரி, அவர் தண்டிக்கப் பட்டவர், அப்படி தண்டிக்கப்பட்ட அந்த கணபதி நாயுடு என்பவரை பேசின் பிரிட்ஜில் உள்ள மின்சார இலாக்காவில் சார்ஜெண்டாக நியமித்துக்கொண்டிருக்கிறார்கள். ஒன்று காட்டுங்கள், இங்கே இருக்கவே இல்லை என்று சொன்னார்கள். ஒன்று காட்டி விட்டேன். ஆனால் போகவேண்டாம், இங்கேயே இருங்கள்.

பிறகு அமைச்சர்களுடைய செலவு முன்பிருந்ததைவிட இப் பொழுது அதிகமாகி விட்டது என்று சொல்லி, முன்பு ரூபாய் 5 லட்சமாக இருந்தது. இப்பொழுது ரூ 10,57,000-ஆக இருக்கிறது என்று குற்றச்சாட்டு சாட்டினார்கள். முன்பு ரூ. 5 லட்சம் என்று ஏன் அவர்கள் குறைத்துச் சொன்னார்கள் என்பது தெரியவில்லை. 1966-67-ல் ரூ. 6.44 லட்சம். அதாவது 6 லட்சத்து 44 ஆயிரம் ரூபாய் அமைச்சர் வகையில் ஆன செலவு. இப்பொழுது 1970-71க்கு ரூ. 10,57,000 என்று கணக்கு தரப்பட்டிருக்கிறது. இதிலே முழுவதும் அமைச்சர்களுக்காகவே செலவிடப்படுகிறது என்றால், இல்லை. அமைச்சர்களுக்காக இருக்கிற ஸ்டாஃப், அமைச்சர் களுக்கு மாத்திரமல்லாமல் செக்ரடேரியட்டுக்கு வாங்கப்படுகிற கார்கள். அந்தக் கார்கள் பழுதுபார்த்தல், இவை அனைத்தும் சேர்ந்து செலவிடப்படுகிற தொகை இது. ரூ. 6.44 லட்சம் பழைய அமைச்சரவை பெற்றுக்கொண்டிருந்த நேரத்தில், அமைச்சரவையில் அமைச்சர்களின் எண்ணிக்கை கணக்கு 8.

கல்யாணங்களுக்கு எல்லோரும் செல்கிறார்கள் என்று திரு. பூவராகன் அவர்கள், போவதைவிட, பெயர்களைப் போடுகிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் ஆசைக்குப் போடுகிறார்கள். எல்லோருடைய பெயர்களையும் போட்டதாலேயே, எல்லோரும் போய் விடுகிறோம் என்று பொருள் இல்லை. அதிலும் ஒரு முறையை வகுத்துக் கொள்கிறோம், யார் போவது என்று ஒரு திட்டம் வகுத்துக் கொண்டு, அப்படித்தான் சென்று வருகிறோம். பூவராகன் கல்யாணத்திற்குப் போகாத காரணத்தால், 13 பேரும் போயிருப்பார்கள் என்று சொல்கிறார்கள் போலும், அப்படி நாங்கள் செல்வதில்லை. ஆனாலும், கட்சியில் உற்ற நண்பர்கள் இருக்கிறார்கள். மந்திரிகளாகப் போய் விட்டதால் உற்ற நண்பர்களை மறந்துவிட முடியாது. உற்ற நண்பர்கள் அனைவரும் கலந்து கொள்வதில் ஈடுபடுகிறோம். எங்களுக்கும் அவர்களுக்கும் பாசப் பிணைப்பு, தொன்று தொட்டு வளர்ந்த நட்பு இருப்பதால், போகாமல் இருக்க முடியாது. அதே போல எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இல்லங்களுக்கும் அனைவரும் சென்று வருகிறோம். அதில் பாரபட்சம் காட்டுவது கிடையாது. மந்திரிகள் சுற்றுப் பயணத்தைக் குறைக்க வேண்டும் என்று ஒரு கருத்தும், அதே நேரத்தில், தலைநகரத்தில் இருக்கவேண்டும் என்ற ஒரு கருத்தும் சொல்லப்பட்டது. இரண்டு கருத்துகளையும் ஏற்றுக் கொள்கிறேன். ஏற்றுக் கொள்வது மட்டுமல்ல, சுற்றுப் பயணத்தால் ஏற்படும் நன்மைகளைப் பற்றி நீங்களும் சிந்திக்க வேண்டும் என்று உங்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

திரு. பூவராகன் வருவாய்த்துறை வாரியத்திற்குப் பதிலாக வேறு அமைப்புகள் இன்னும் செய்யப்படவில்லை என்று சுட்டிக் காட்டினார்கள். இந்தச் சட்டரீதியான பொறுப்புக்களை வருவாய்த் துறை வாரியத்திற்குப் பதிலாக ஆணையாளர்களை நியமித்து அவர்களின் மூலம் செய்யலாமா என்பது யோசனையில் இருக்கிறது. ஆகவே, அதை நாங்கள் செய்யவில்லை, கைவிட்டுவிட்டோம் என்று பொருள் இல்லை. செய்த முடிவுக்குப் பிறகு, இந்த வருவாய்த் துறை வாரிய நீக்கச் சட்டம் இந்தியக் குடியரசுத் தலைவருடைய அனுமதியையும் பெறவேண்டும் என்பதை உறுப்பினர்கள் அறியாதவர்கள் இல்லை. அந்த யோசனை ஆய்வில் இருக்கிறது. பல்வேறு கருத்துக்கள் சொல்லப்பட்டன. உரிய நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும் என்பதை அவர்களுக்குச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) அவர்களுடைய பிரமோஷன் வருகிற நேரத்தில் அவர்களுக்கு இடம் கிடைக்கும்.

திரு. ராமச்சந்திர துரை அவர்கள் சைதாப்பேட்டைத் தொகுதிக்கு பல லட்சக்கணக்கான ரூபாய் செலவழித்து சாலைகள் போடப்பட்டிருக்கின்றன என்றார்கள். எனக்கு தேர்தலுக்கு நல்ல பாயின்ட் ஒன்று கொடுத்திக்கிறார்கள். நான் சொல்லுவேன், ' உங்கள் தொகுதிக்கு பணம் ஒதுக்கவேண்டும் என்று செய்தேன். ஆனால், திரு. ராமச்சந்திர துரை, காங்கிரஸ்காரர், இந்தத்





தொகுதிக்கு பணமா' என்றார்கள், ' ஆகவே, வாக்காளர்களே அதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்' என்று சொல்ல நல்ல வாய்ப்பாக இருக்கும்.

(திரு. ராமச்சந்திர துரை தன் இடத்தில் நின்றார்)

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: Not Yielding நேரம் இல்லை. அவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள் என்று தெரியும். மற்ற தொகுதிகளுக்குக் கொடுக்காமல், இந்தத் தொகுதிக்கு மாத்திரமா என்று தன்னைத் திருத்திக் கொள்ள விரும்புகிறார். அதை நானே திருத்திக் கொள்கிறேன். ஆனால், சைதாப்பேட்டை சென்னை மாநகரத்தோடு இணைக்கப்பட்ட புதிய பகுதி. தலையை ஆட்டுகிறார் வேகமாக திரு. வினாயகம். (திரு. வினாயகம்: உங்களுக்கு முன்பு நான்தான் மெம்பர் அதற்கு) திரு. வினாயகம் வாதாடுகிறார்கள். ஆகவே, சைதாப்பேட்டை சென்னை மாநகரத்தோடு இணைக்கப்பட்ட இடம். சென்னை வளரும் பகுதி. அதோடு கிராமப் புரத்தைச் சேர்த்திருக்கிறார்கள். முதலில் நான்கூட சைதாப் பேட்டையை சென்னையிலே நகர் புறத்திலே இப்படி இருப்பதாலே, இது தஞ்சாவூர் போல, குளித்தலை போல கஷ்டப்பட வேண்டியது இல்லை என்று நினைத்தேன். ஆனால், தொகுதியைச் சுற்றிப் பார்த்த பிறகு, அந்தக் கிராமப் பகுதிகளோ பரவாயில்லை என்றிருந்தது. இந்தக் கிராமத்தையும், சென்னை நகரத்தையும் இணைத்திருக்கிறார்கள். அதையும் சென்னை நகரம்போல் செய்ய வேண்டும் என்றாலும், முழுமையாக வெற்றி பெற முடியா விட்டாலும், புதிய வசதிகளைச் செய்ய வேண்டும் என்று, சைதாப்பேட்டைத் தொகுதிக்கு ரோடு வசதி, விளக்கு வசதி, சுகாதார வசதிகள் இவற்றிற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அறந்தாகிக்குப்போய் வறட்சிக்காகக் கொடுத்திருக்கிறார்களே என்று கேட்டார்கள்.

அறந்தாங்கி திரு. துரையரசன், எம்.எல்.ஏ., எங்கள் கட்சியைச் சேர்ந்தவர் என்பதாலோ, அந்த மாவட்டத்துச் செயலாளர் திரு. ராஜன் பஞ்சாயத்து யூனியன் தலைவராக இருப்பதாலோ அந்தப் பகுதிக்கு பணம் ஒதுக்கித் தரவில்லை. அது தஞ்சை மாவட்டத்திலே துரதிர்ஷ்டமான பகுதி. அது இராமநாதபுரம் மாவட்டத்தோடு சேர்க்கப்பட வேண்டிய இடம். மிகுந்த வறண்ட பகுதி அறந்தாங்கி. அந்தப்பகுதி வறட்சியால் தாக்கப்பட்ட நேரத்தில் நண்பர் அவர்கள் குறிப்பிட்டதுபோல 18 லட்சமோ, 15 லட்சமோ வறட்சி நிவாரணத்திற்காக அளிக்கப்பட்டதே தவிர, வேறு காரணத்திற்காக அல்ல. வறட்சி எங்கெங்கு பாதகத்தை உண்டு பண்ணியதோ அங்கெல்லாம் தமிழக அரசு வாரி அளித்திருக்கிறது.

கவர்னர் அவர்களின் உரையின்மீது பேசும்போது இன்னொரு கருத்தும் சொல்லப்பட்டது. நண்பர் திரு. விநாயகம் அவர்களுடைய தொகுதியான திருத்தணி தொகுதிக்கு செங்கற்பட்டு மாவட்டத்திலே மற்ற எந்த தொகுதிக்கும் இல்லாத அளவில்

[திரு. மு. கருணாநிதி] [1970 மார்ச் 10

அதிகத் தொகை ஒதுக்கப்பட்டது. அறந்தாங்கிக்கு இவ்வளவு பணமா என்று கேட்பது, நண்பர் திரு. ராமச்சந்திர துரை திரு. விநாயகம் தொகுதியான திருத்தணி தொகுதிக்கு ஒதுக்கியதை மறைமுகமாகக் குற்றம் சாட்டுவதுபோல் இருக்கிறது. அந்தப் பகுதியில் நீர்வளம் குறைவு. அந்த மாவட்டத்திலே அது வறட்சிப் பகுதி என்று அறிவிக்கப்பட்டது. அந்தப் பகுதி எம்.எல்.ஏ., எங்கள் கட்சியைச் சேர்ந்தவர் என்பதற்காகப் பணம் ஒதுக்க வில்லை. கட்சி சார்பற்ற முறையில் வறட்சி நிவாரணப் பணிகளுக் காக எல்லாப் பகுதிகளுக்கும் நியாயமாகப் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அடுத்து, பஞ்சாயத்து தேர்தலைப்பற்றி எல்லோரும் சொன்னார்கள். அதற்கு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நோக்கில் விளக்கமாகக் கூறுவார்கள். அடுத்து, டாக்டர் ஹாண்டே அவர்கள் பே கமிஷன் ரிப்போர்ட் எப்போது வரும் என்று கேட்டார்கள். அவர் என்.ஜி ஓ.க்களுடைய ஒரு கூட்டத்திலே பேசிவிட்டதாலேயே அவர்கள் மீது மிகுந்த அக்கறை இருப்பதாகக் காட்டியிருக்கிறார்கள். நேற்றைய தினமே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் உற்ற பதிலைக் கொடுத்தார்கள். கழக அரசு என்.ஜி.ஓ.க்களுடைய குறைகளைப் போக்குவதில், என்.ஜி.ஓ.க்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் எந்த உறுப்பினர்களுக்கும் தாழ்ந்து விடவில்லையென்பதை உறுதியாகக் கூறுகிறேன். (கையொலி) கொஞ்ச காலதாமதம் ஏற்படலாம், நிர்வாக வசதியை முன்னிட்டு, நிதிவசதியை முன்னிட்டு சிறிது தாமதப்படலாம். ஆனால் அவர்களுடைய எண்ணத்த ஈடேற்றுவதில் கிஞ்சிற்றும் பின் வாங்காது. எல்லாக் கட்சி உறுப்பினர்களுக்கும் எந்த அளவிற்கு அவர்கள்பால் ஆர்வம் இருக்கிறதோ அதைவிட அதிக ஆர்வம் இந்த அரசு கொண்டிருக்கிறது என்பதை டாக்டர் உறாண்டே அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

DR H. V. HANDE : The Hon. Chief Minister said that because I was recently called upon to address the N.G.O's meeting, I had become interested in their problems. I may tell the Hon. Chief Minister that long before this, I was representative of the N.G.O.'s (representative of the graduates) in the Upper House. That is why I am interested in their problems and I had been pleading for them. I know their problems even during the British regime. So I request the Hon. Chief Misister to view what I had said in an objective manner and not from a personal angle.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அடுத்து, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உலகத் தமிழ் மாநாட்டைப்பற்றிப் பேசினார்கள். அவர்களுடைய பேச்சில் இரண்டு மூன்று விஷயங்கள் இல்லாமல் இருக்காது. நாதஸ்வர வித்வான் ராஜரத்தினம் அவர்களுடைய கச்சேரியில் தோடி ராகம் இல்லாமல் இருக்காது. அதுபோலவே எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய பேச்சில்



1970 மார்ச் 10] [திரு. மு கருணாநிதி]

கொள்முதல் உலகத் தமிழ் மாநாட்டின் கணக்கு இடம் பெறாமல் இருக்காது. நண்பர் ஆதிமூலம் அவர்களுடைய அனுதாபத் தீர்மானத்திலேகூட கொள்முதல் வந்தது. உலகத் தமிழ் மாநாட்டுக் கணக்கை பேரறிஞர் அண்ணா அவர்கள் 1968-ஆகஸ்ட் 28-ம் தேதி யன்று இதே மன்றத்தில் படித்துக் காட்டியிருக்கிறார் கள். சட்டப் பேரவை நடவடிக்கைக் குறிப்பில் 417-வது பக்கத் திலே அது இடம் பெற்றிருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** தலைவர் அவர்களே, படித்தது படித்ததுதான். அது சரியான கணக்குத்தானா என்பதைத்தான் நான் கேட்கிறேன். என்னுடைய பழக்கம் எப்படி என்பதைப் பற்றி முதலமைச்சர் அவர்கள், "ராஜரத்தினம் கச்சேரியில் தோடி ராகம் எப்படி முக்கியமோ அது போல" என்று சொன்னார்கள். "ராஜரத்தினம் நாயனத்திற்கு இவர் பக்கமேளமாக வர வேண்டாம்' என்பதைத்தான் நான் சொல்லிக்கொள்கிறேன். ஒரு விஷயம் தீராத பிரச்சினையாக இருப்பதாலேதான் மீண்டும் மீண்டும் சொல்கிறேன். இப்பொழுது ரேஷனை எடுத்துவிட்டீர்கள். உலகத் தமிழ் மாநாட்டின் கணக்கைப் பூரணமாகச் சொல்லி யிருந்தால் நான் அதைப் பேசியிருக்க மாட்டேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** கணக்குச் சரியில்லையென்று கூறுவது சரியல்ல. அடிக்கடி கனம் பக்தவத்சலம் அவர்கள் "புழுதிவாரி வீசிவிட்டு போவது" என்று கூறுவார்களே அதேபோல கணக்குச் சரியில்லை, கணக்குச் சரியில்லை என்று பொதுப்படையாகக் கூறுவது சரியில்லை. நாங்கள் கணக்குக் கொடுத்துவிட்டோம். கணக்கு கொடுக்கப்பட்டுவிட்ட பிறகு, இன்னின்ன கணக்கு தவறு, இன்னின்ன இனங்களிலே தவறு என்று சுட்டிக்காட்டினால் ஏற்றுக்கொள்ளலாம். பொதுப்படை யாகத்தவறு என்று சொன்னால் போதுமா? நான் ராஜரத்தினம் போன்ற பெரிய வித்வான்களோடு ஒப்பிட்டுப் பேசியது எதிர்க் கட்சித் தலைவருக்குப் பிடிக்கவில்லை. அப்படி பெரிய வித்வான்க ளோடு ஒப்பிட்டுப் பேசியதற்கு வருத்தம் தெரிவித்துக்கொள் கிறேன். (சிரிப்பு) ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக் கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

நிதிக்கோரிக்கை எண் 7-க்கு திரு. கே. விநாயகம் அவர்களுடைய வெட்டுதீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வி யுற்றது.

திரு. எம். பூபதி அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்க ளுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டது.

[திரு. மு. கருணாநிதி] [1970 மார்ச் 10

இப்பொழுது 13 அமைச்சர்கள் இருக்கிறார்கள். அப்பொழுது ரூ. 6.44 லட்சத்தில், கார்களுக்காக செலவிடப்பட்டது ரூ. 1,12,000 படிகளுக்காக ரூ. 42,000. படிகள் என்றால் அமைச்சர்களுக்கு மாத்திரமல்ல, அவர்களோடு செல்கின்ற அலுவலர்களுக்கும் சேர்ந்த படி தான். பஞ்சப்படியாக ரூ. 44,000 அப்பொழுது. அந்தக் காலத்தில், கார் படிகள் இந்த வகைகளுக்காக ரூ. 1,98,000 செலவிடப்பட்டிருக்கிறது. படிகள் என்பது அமைச்சர்களுக்கு மாத்திரமல்ல, கூடவே செல்கின்ற பி.ஏ., செக்யூரிடி ஆபீசர், இவர்களுக்கெல்லாம் சேர்ந்த கணக்குத்தான். அப்பொழுது ரூ. 1,12,000 காருக்காக, இப்பொழுது ரூ 2 லட்சம். இதர படிகளுக்காக இப்பொழுது ரூ. ஒரு லட்சம், பஞ்சப்படிக்காக ரூ. 1,20,000. அப்பொழுது ஆன ரூ. 6,44,000-த்தில் ரூ. 1,98,000-த்தை கழித்துப் பார்க்க வேண்டும், அமைச்சர்களுக்கான செலவுக்கு இப்பொழுது அமைச்சர்களுக்காக ஆகின்ற செலவு ரூ. 10,57,000-த்தில் ரூ. 4,20,000-த்தைக் கழித்துப் பார்க்க வேண்டும்.

அமைச்சர்களுடைய வசதிக்காக மாத்திரம் வாங்கப்பட்ட கார்கள் 1967-ல் 12 அம்பாசிடர் கார்கள் வாங்கப்பட்டன. 1968-ல் இரண்டு அம்பாசிடர் கார்களும், 1969-ல் 20 அம்பாசிடர் கார்களும் வாங்கப்பட்டன. இவைகளில் 16 கார்களை அமைச்சர்கள் பயன்படுத்துகிறார்கள். 4 கார்களை ஸ்பேராக, கார்களுக்கு பழுது ஏற்படும்பொழுதும் உடனுக்குடன் உபயோகப்படுத்துவதற்கு 3, 4 கார்கள் ஸ்பேராக வைக்கப்பட்டிருக்கின்றன. நான்கு கார்கள் மாவட்ட கலெக்டர்களுடைய வேலைகளுக்காக அனுப்பப்பட்டுவிட்டன. டெபுடி ஸ்பீக்கருக்கு ஒரு கார், அசெம்பிளி வேலைகளுக்காக, லெஜிஸ்லேசருக்காக இரண்டு கார்கள், சர்குலேஷன் வான் அவைகளில் ஒன்று, ஸ்டாஃப் கார், அலுவலர்களுக்கு மாத்திரம் உபயோகப்படுத்திக்கொள்ள 6 கார்கள், சென்டிரல் ஸ்டேட் ரிலேஷன்ஷிப் கமிட்டியின் உபயோகத்திற்காக ஒரு கார், சீஃப் விப்பிற்காக ஒரு கார், எதிர்க் கட்சித் தலைவர் இன்னும் சம்மதம் தெரிவிக்கவில்லை, அதன் காரணமாகத்தான் அவருக்கு இன்னும் கார் தரப்படாமல் இருக்கிறது. ஆக, இந்த அளவிலே இந்தக் கார்கள் பயன்படுத்தப்படுகின்றனவே அல்லாமல், கார்கள் அனைத்தையும், 30-க்கும் மேற்பட்ட கார்களை அமைச்சர்களே பயன்படுத்திக்கொண்டிருக்கவில்லை. ஆகவே, இந்தக் கார்கள் வாங்குவது என்பது யாருடைய தனிப்பட்ட வசதிக்காகவும் அல்ல, பழுது ஏற்பட, ஏற்பட தலைமைச் செயலகத்திற்கு அவ்வப்பொழுது வாங்கப்படுகிற கார்களினுடைய கணக்கும் இதில் சேர்ந்திருக்கிறது. இப்படியெல்லாம் சேர்ந்த கணக்குதான் ரூ. 10 லட்சம் என்று தெரிகிறது. அது மாத்திரமல்ல. இதர படிகள் என்ற வகையிலே அப்பொழுது ரூ. 42,000 செலவிடப்பட்டது. இப்பொழுது ரூ. 1 லட்சம் இதர படிகள் என்ற வகையிலே செலவிடப்பட இருக்கிறது. ஏன்? எங்களோடு இருக்கிற பி.ஏ முதலிய அலுவலர்கள், இவர்களுக்காக உயர்த்தப்பட்டிருக்கிற படிகளின் விகிதாசாரப்படி



1970 மார்ச் 10] [திரு. மு. கருணாநிதி]

அந்த பயனை அவர்கள் பெற்று கொண்டிருக்கிறார்கள். ஆகவே தான் அது ரூ. 1 லட்சமாக உயர்ந்திருக்கிறது. அதைப் போலவே தான் அப்பொழுது பஞ்சப்படி ரூ. 44,000, இப்பொழுது அது ரூ. 1,20,000-ஆக உயர்ந்திருக்கிறது. அந்த வகையில் ரூ. 10 லட்சத்திலிருந்து ரூபாய் 4 லட்சத்தைக் குறைத்துப் பார்த்தால், இது அதிகச் செலவு என்று யாரும் கூறமாட்டார்கள்.

அமைச்சர்கள் ஏதோ வெளி நாடுகளிலிருந்து புதிய கார்களை இறக்குமதி செய்து, அந்தக் கார்களில் போய்க்கொண்டிருக்கிறார்கள் என்றெல்லாம் குற்றச்சாட்டு சாட்டப்பட்டது.

எம். எஸ். எம். 2728 (பென்ஸ்) காரை முதலமைச்சர் பயன்படுத்துகிறார்.

எம்.எஸ்.எஸ். 7575 (செவர்லே) காரை கல்வி, பொதுச் சுகாதார அமைச்சர் பயன்படுத்துகிறார்.

எம்.டி.ஈ. 8448 (போர்ட் லெபைர்) காரை நிதி அமைச்சர் பயன் படுத்துகிறார்.

எம்.எஸ்.எஸ். 5550 (பென்ஸ்) காரை வேளாண்மை, அரிசன நலத்துறை அமைச்சர் பயன்படுத்துகிறார்.

எம். எஸ். ஆர். 9999 (ஓபல் காபிடன்) காரை உணவு, வாணிக வரித்துறை அமைச்சர் பயன்படுத்துகிறார். மிச்சமுள்ளவை எம். எஸ். எஸ். 7111 (செவர்லே இம்பாலா) அரசு விருந்தினர் மாளிகையில் பயன்படுத்தப்படுகிறது. எம். டி. இ. 9339 (செவர்லே பிஸ்கேன்), எம். எஸ். எஸ். 5750 (பியட்), எம். எஸ். எஸ் 7007 (போர்ட் ஸெபைர்), எம். எஸ். எஸ். 417 (பிளிமத்), எம். எஸ். ஒய். 3456 (பிளிமத்), எம். எஸ்.ஒய். 3003 (பிளிமத்) ஆகிய கார்கள் அரசு விருந்தினர் மாளிகையிலுள்ளன. ராஜ்பவன் கார் ஒன்று பிளிமத். இந்தக் கார்களில் எதுவும் பென்ஸ் கார் ஒன்றைத் தவிர, இந்த மூன்று ஆண்டு காலத்தில் வாங்கப்பட்ட கார்களல்ல. இறக்குமதி செய்யப்பட்ட, வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட பெரிய கார்கள் அனைத்தும் நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு படிப்படியாக சில ஆண்டுகளில் வாங்கப்பட்ட கார்களே தவிர, நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, நான் பயன்படுத்துகிற பென்ஸ் கார் ஒன்றைத் தவிர, வேறு பெரிய கார்கள் வாங்கவில்லை. அந்த பென்ஸ் கார் அறிஞர் அண்ணா அவர்கள் அறுவை சிகிச்சைக்காக அமெரிக்கா சென்றபொழுது, அவர் திரும்பியதும் அவருடைய உபயோகத்திற்காக வாங்கவேண்டும் என்று வாங்கப்பட்டு டெல்லியில் இருந்தது. அண்ணா அவர்கள் மறைந்ததற்குப் பிறகு நான் டெல்லி சென்றபொழுது அந்தக் கார் அங்கே இருந்தது. ஏன் அந்தக் கார் அங்கே இருக்கிறது என்று கேட்டேன். முதலமைச்சர் டெல்லிக்கு வந்தால் அவருடைய உபயோகத்திற்காக இருக்கிறது என்றும், அமைச்சர்களை, மற்ற பிரமுகர்களைச் சந்திப்பதற்காகச் செல்லும்பொழுது, மற்ற எல்லா ஸ்டேட் அமைச்சர்களும் பெரிய கார்களில் போகும்பொழுது நான் மட்டும்

## இணைப்பு

**17-ம் பக்கத்தில் 306 ம் எண்ணுள்ள வினாவிற்குரிய விடையைக் காண்க.**

(*a*) The affairs of the Co-operative Central Bank, Limited, Vellore in North Arcot District have not been satisfactory for sometime past. Serious irregularities in the scrutiny, sanction and disbursement of loans have been noticed. The Joint Registrar, Madras Region, who has been asked to examine the working of the Bank has reported that the committee of the Central Bank is responsible for the state of affairs of the bank and recommended its dissolution. The entire matter was examined and a notice under section 72 of the Madras Co-operative Societies Act, (53) of 1961 was issued to the committee of the Co-operative Central Bank Limited, on 1st December 1967 directing the committee to make its representation, if any, against the proposal to dissolve the committee and to appoint a nominee of the Registrar of Co-operative Societies to manage the affairs of the Bank.

(*b*) The Committee of the Central Bank has made its representation on 14th February 1968. But at the same time the Committee had filed a Writ Petition No. 3822 of 1967 in the High Court of Judicature, Madras praying for the issue of a writ of prohibition, prohibiting the Registrar of Co-operative Societies from proceeding further in pursuance of the notice issued by the Registrar on 1st December 1967. The writ was admitted by the High Court and was later dismissed after hearing and the stay was vacated. The judgment in the above Writ Petition was delivered on 28th February 1969. Immediately the committee of the Co-operative Central Bank, Limited, Vellore filed a Writ Appeal No. 113 of 1969 in the High Court of Judicature, Madras. The judgment in the above case was delivered on 22nd April 1969. The Court held that having regard to the words used in section 72 of the Madras Co-operative Societies Act, it is only the recent irregularities or mismanagement that can be taken into account and has directed the issue of fresh show cause notice after considering the charges once again in the light of the judgment. The show cause notice dated 1st December 1967 issued by the Registrar has been quashed by the Honourable Court.

(அ) கடந்த சில காலமாக வட ஆற்காடு மாவட்டம், வேலூரிலுள்ள கூட்டுறவு மத்திய வங்கியின் அலுவலர்கள் மன நிறைவு தரும் வகையில் நடக்கவில்லை. கடன் தொகையை ஆராய்தல், அதற்கு ஒப்பளிப்பு வழங்கல், கடன் வழங்கல் ஆகியவை குறித்து கடுமையான முறைகேடுகள் நடந்ததாகத் தெரிய வந்துள்ளது. இந்த வங்கி செயல்படுவது பற்றி ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட சென்னை வட்டாரத்தின் இணைப் பதிவாளர், வங்கியின் சீர்கேடான நிலைக்கு கூட்டுறவு மத்திய வங்கியின் குழுவே பொறுப்பாகும் என்று தெரிவித்து அக்குழுவைக் கலைத்துவிட வேண்டும் என்று பரிந்துரைத்தார். இதுபற்றி முழுவதும்



ஆராயப்பட்டது. குழுவைக் கலைத்துவிடவும் வங்கியின் பொறுப்பை நிர்வகிப்பதற்கு கூட்டுறவுச் சங்கப் பதிவாளரின் நியமனதாரரை நியமிப்பதற்குமான செயற் குறிப்புக்கு எதிராக முறையீடு ஏதேனுமிருப்பின் அதைத் தெரிவிக்குமாறும், கட்டளையிட்டு 1-12-1967 அன்று கூட்டுறவு மத்திய வங்கியின் குழுவிற்கு, தமிழ்நாடு 1961-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 53/1961) 72-வது பிரிவின்கீழ் அறிவிப்பு ஒன்று கொடுக்கப்பட்டது.

(இ) 1968-ம் வருடம் பிப்ரவரி மாதம் 14-ம் தேதியன்று மத்திய வங்கியின் குழு தனது முறையீட்டைக் கொடுத்துக் கொண்டது. ஆனால் அதே சமயத்தில் 1-12-1967 அன்று பதிவாளரால் வெளியிடப்பட்ட அறிவிப்பையொட்டி கூட்டுறவுச் சங்க பதிவாளர் மேற்கொண்டும் நடவடிக்கை எடுப்பதைத் தடை செய்து, தடை ஆணை ஒன்றைப் பிறப்பிக்க வேண்டி சென்னை உயர்நீதி மன்றத்தில் 1967-ம் ஆண்டு 3822-ம் எண்ணுள்ள ரிட் மனு ஒன்றை அக்குழு தாக்கல் செய்தது. இந்த ரிட் மனு உயர்நீதி மன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. விசாரணைக்குப் பிறகு இது தள்ளி விடப்பட்டது. நிறுத்தி வைப்பு ஆணை ரத்து செய்யப்பட்டது. மேற்கூறிய ரிட் மனு குறித்து 28-2-1969 அன்று தீர்ப்பு கூறப்பட்டது. உடனே வேலூர் கூட்டுறவு மத்திய வங்கியின் குழு, சென்னை உயர்நீதி மன்றத்தில் 1963-ம் ஆண்டு 113-ம் எண்ணுள்ள மேல் முறையீட்டு மனு ஒன்றைத் தாக்கல் செய்தது. மேற்கூறிய வழக்கு குறித்து 22-4-1969 அன்று தீர்ப்பு கூறப்பட்டது. தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் 72-வது பிரிவில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களை பொருள்கொண்டு பார்க்கையில் அண்மையில் நடந்த முறைகேடான செயல்கள் அல்லது நிர்வாக முறைகேடுகளை கருத்தில் கொள்ளப்படவேண்டும் என்று நீதிமன்றம் அறிவித்தது. மேலும், இத்தீர்ப்பையொட்டி குற்றச்சாட்டுகளை மறுபடியும் ஆராய்ந்து பிறகு, குற்றச்சாட்டுகளுக்கு எதிராக நடவடிக்கை ஏன் எடுக்கக்கூடாது என்று காரணம் காட்டுமாறு புதிதாக அறிவிப்பு வெளியிடும்படியும் அது கட்டளையிட்டது. குற்றச்சாட்டுகளுக்கெதிராக ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான காரணம் காட்டுமாறு பதிவாளர் 1—12—1967 அன்று பிறப்பித்த அறிவிப்பு மாண்புமிகு நீதிமன்றத்தினால் ரத்து செய்யப்பட்டது.

# தமிழ் நாடு சட்டப் பேரவை

---

## புதன்கிழமை, 1970 மார்ச் 11.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

*Public Relations Wing inoffi of Inspector-General of Police.*

* 309 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether any Public Relations Wing has been set up at the office of the Inspector-General of Police, Madras City, and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) & (இ) அடிஷனல் உதவி இன்ஸ்பெக்டர் ஜெனரலும் பொதுமக்கள் தொடர்பு அதிகாரியுமான ஒருவர் காவல் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் அலுவலகத்தில் 1969 டிசம்பர் 22-ம் நாள் முதற்கொண்டு நியமிக்கப்பட்டுள்ளார்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பொது ஜனத் தொடர்பு அதிகாரி என்னும் பதவி ஏற்படுத்தப்பட்டு அதில் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பதனால், இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ், போலீஸ் கமிஷனர் ஆகியோரைப் பார்க்க வரும் சாதாரணப் பொதுமக்கள் அந்தக் குறிப்பிட்ட பொதுஜனத் தொடர்பு அதிகாரியை மட்டும் பார்க்குமாறு பணிக்கப்படுகிறார்களா ? ஆம் எனில், ஐ.ஜி., போலீஸ் கமிஷனர் போன்ற பெரிய அதிகாரிகளை நேரில் பார்த்துக் குறைகளைக் கூறவேண்டும் என்று வருகிறவர்களுக்கு இனியாவது பேட்டி கிடைக்க ஆவன செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இவர்கள் பார்த்து முடிவு செய்ய வேண்டிய விஷயங்களை இவர்களே பார்ப்பார்கள். ஐ.ஜி. போன்றவர்களைப் பார்க்க வேண்டுமானால் அதற்கும் வழிவகுப்பார்கள்.

THIRU T. MARTIN: May I request the Hon. Chief Minister to state whether there is any register kept in that office to show the number of Visitors veceived by this officer?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அந்த விவரம் இல்லை. அப்படி அதுபற்றி ரிஜிஸ்தர் ஒன்று வைத்திருக்கக்கூடும்.

திரு. என். கிட்டப்பா : இதுபோல் ஒவ்வொரு ரேஞ்சிலும் டி.ஐ.ஜி. அலுவலகத்திலும் ஓர் அதிகாரி நியமிக்கப்படுவதற்கான யோசனை உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அது தேவைப்படுகிறதா என்று பார்த்து அதற்குப் பிறகு முடிவெடுக்கப்பட வேண்டிய விஷயம் ஆகும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, 'போலீஸ்' என்றால் கொஞ்சம் அச்சம் இருக்க வேண்டும் மனத்திலே. இப்படி ரொம்பவும் அதிகமாகப் பொதுமக்களிடத்தில் தொடர்பு கொண்டால் அந்த அச்சம் எடுபட்டுப் போகிறது. ஆகவே, அந்தத் தொடர்பை ஓரளவு நிறுத்திவிடுவதுகூட நல்லது என்று நினைக்கிறேன். முதலமைச்சர் அவர்களுடைய கருத்து என்ன என்று தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :

அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவ
தஞ்சல் அறிவார் தொழில்.

THIRU K. VINAYAKAM : What exactly are the functions of this Public Relations Officer ? Is he just to act as a Post Office to receive petitions and then forward them to the concerned authorities ? Or, is he empowered to take any decision on papers on which he is not entitled to take a decision ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பத்திரிகைகளோடு தொடர்பு வைத்துக்கொள்ளவும், வகுப்புக் கலவரங்கள், பிற நிகழ்ச்சிகள் ஆகியவற்றைப்பற்றிய அதிகாரபூர்வமான செய்திகளை வெளியிடவும், பொதுமக்களின் கோரிக்கைகளை நேரில் பெற்றுக் கொள்ளவும் போன்ற காரியங்களுக்காக அவர்கள் பயன் படுகின்றார்கள்.

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு போலீஸ் நிலையத்திலும் இப்படி அதிகாரிகள் நியமிக்கப்படுவது இயலாது என்கிற காரணத்தினால் ஆங்காங்கு புகார்ப் பெட்டிகள் வைக்கவேண்டும் என்ற யோசனை இருந்ததே, அது என்ன ஆயிற்று ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படியொரு யோசனை இருந்திருக்குமானால் அதை மீண்டும் பரிசீலிக்கச்சொல்லி, அதற்கு ஆவன செய்ய இந்த அரசு தயாராக இருக்கும்.

### *Duty Officer in Secretariat.*

* 310 *Q.*—THIRU K. VINAYAKAM
THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR

Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether the Government have introduced a new system of nominating an I.A.S. Officer as 'Duty Officer' in Secretariat Buildings to attend to matters of 'Important and Emergent' nature ; and

(*b*) when this system comes to effect ?





மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) செயலகப் பணியாளர்களின் ஒழுங்கு முறையை உயர்த்தவும், கட்டடங்களைப் பேணி வரவும், உடனடி முக்கியத்துவம் வாய்ந்த செயல்களைக் கவனிக்கத் துணை புரியவும் செயலகத்தில் இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ. ஏ. எஸ்.) தகுதிபெற்ற அரசின் உதவிச் செயலாளர், (Under Secretary) அரசுத் துணைச் செயலாளர் (Deputy Secretary) தரத்திலுள்ள அதிகாரிகளை ஒவ்வொரு நாளும் "அலுவல் அதிகாரிகளாக" (Deputy Officer) , அரசு நியமித்துள்ளது.

(இ) இந்த ஏற்பாடு 1-12-1969 முதல் செயலுக்கு வந்துள்ளது.

திரு. கே. வினாயகம் : சார், ஒரு தனி நபர் ஒரு டிபார்ட்மெண்டினுடைய செக்ரடரியைப் பார்க்க வேண்டும், அவரிடம் தகவல் சொல்ல வேண்டும் என்று நினைத்தால் அவர் இந்த டியூடி ஆபிசரிடம் போய் அனுமதி வாங்கிக் கொண்டுதான் அந்த கன்ஸர்ண்டு ஆபிசரைப் பார்க்கப் போகவேண்டுமா ? அல்லது, அவர் நேரடியாகவே போய்ப் பார்ப்பதற்கு அனுமதி இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இவருடைய அனுமதி வாங்கிக்கொண்டுதான் போகவேண்டும் என்று இல்லை. ஆனால் வெளியிலிருந்து அதிகமான பேர் அனுமதி இல்லாமல் உள்ளே வந்து கொண்டு, தாழ்வாரங்கள் போன்றவைகளில் இருந்து கொண்டிருப்பதைத் தவிர்ப்பதற்காக இந்த அதிகாரி முயற்சிகள் எடுத்துக் கொள்ளுகின்றார்.

THIRU T. MARTIN : May I request the Hon. Chief Minister to state the number of persons, whether they are staff or third parties, who have been found fault with by these special Duty Officers so far for dereliction of duty or for improper conduct ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதிலே பொறுப்பு அதிகாரிகளாக நியமிக்கப்படுகின்றவர்கள், நான் முதலில் எடுத்துக் காட்டியதைப் போல, அண்டர் செக்ரடரி, டெபுடி செக்ரடரி என்கிற அளவிலேதான் நியமிக்கப்படுகிறார்கள். அவர்களால் பிடிபட்டவர்களின் எண்ணிக்கை விவரம் இல்லை.

### மேட்டூர் ஊழியர்களுக்கு குடிநீர்த் திட்டம்.

* 311 வினா—திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் அருகாமையில் உள்ள ராமமூர்த்திநகர், கருமலைக்கூடல், புதுசாம்பள்ளி போன்ற ஊர்களில் குடிநீருக்கான திட்டம் ஏதாவது அரசாங்கத்திட்டம் இருக்கிறதா ?

(ஆ) ஆமெனில், அது எப்பொழுது அமலுக்கு வரும் ?

டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண். 7—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 8,48,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக்கோரிக்கை எண் 8-க்கு திரு. டி. மார்டின் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

திரு. ரா. கனகசபை அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டது.

திருவாளர்கள் வி. கே. கோதண்டராமன், சோ. அழகர்சாமி, ஏ. அ. சுப்பராஜா, டாக்டர் ஹாண்டே ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்களை பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண். 8—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,54,51,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 33-க்கு வெட்டுத்தீர்மானம் கொடுத்திருந்த திரு. க. இராமமூர்த்தி அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்பட்டது.

திருவாளர்கள் வி. கே. கோதண்டராமன், ஏ. அ. சுப்பராஜா, டாக்டர் உறாண்டே ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 33—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ரூ. 8,32,85,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".



நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது. 1-19 பி. ப.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து பேரவை மீண்டும் நாளை காலை 9 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

### (5) பேரவையின் முன்வைக்கப்பட்ட ஏடுகள்.

#### A. *Statutory Rules and Orders.*

@ 161. Notification issued with G.O. Ms. No. 1668, Revenue, dated the 14th August 1969 in regard to making the Tamil Nadu Agricultural Labourer Fair Wages Rules, 1969. [*Laid on the Table of the House under Section 14 (4) of the Tamil Nadu Agricultural Labourer Fair Wages Act*, 1969 (*Tamil Nadu Act* 19 *of* 1969]

#### B. *Reports, Notifications and other papers.*

† 64. The Tamil Nadu Appropriation (Vote on Account) Bill, 1970.

61479

@ Placed on the table of the House on 9th March 1970.

† Despatched to Members on 7th March 1970.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) இந்தக் கிராமங்களுக்கு ஒருங்கிணைந்த நீர் வழங்குத் திட்டம் தயாரித்து அனுப்புமாறு தலைமைப் பொறியாளர் (பொது சுகாதார பொறியியல் மற்றும் நகராட்சி பணிகள்) கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளார். அவரது கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், இந்த ஊர்கள் மேட்டூர் டவுன் ஷிப்பை ஒட்டியிருக்கின்றன. அதோடு, அங்கிருக்கின்ற ஜனங் களும் அங்கே இருக்கின்ற தொழிற்சாலைகளில் வேலை செய்கின்றவர் களாக இருக்கிறார்கள். அங்கே மேட்டூர் டவுன்ஷிப் கமிட்டி யினுடைய குடிநீர்த் திட்டத்தை விஸ்தரித்து இந்தப் பகுதி களுக்குக் கொண்டுவருவது எளிதாக இருக்கும். இது சம்பந்த மாக அரசாங்கம் யோசிக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, புதுசாம்பள்ளி, கருமலைக்குடில் ஆகிய இரண்டு ஊர்களில் இருக் கின்ற கிணறு நீர், அங்கிருக்கின்ற தொழிற்சாலையிலிருந்து வெளி வருகின்ற கழிவுநீரினால் கெடுகிறது என்ற காரணத்தினால் குடி நீர்த் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இப்பொழுது ஐயாயிரம் காலன் தண்ணீர் பிடிக்கக்கூடிய மேல்நிலைத்தொட்டிகள் இரண்டு ஊர்களிலும் ஒரு லட்சத்து 15 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டும் வேலை ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்டிருக் கிறது. அதைத்தவிர, 4½ லட்ச ரூபாய் செலவில் 10 ஊர்களை இணைக்கக்கூடிய திட்டமொன்று தலைமைப் பொறியாளரால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

கருமலைக்குடில், காவேரிபுரம், தேசாய்நகர், தாங்கல்வாரை, இராமமூர்த்திநகர், புதுசாம்பள்ளி, ராமன் நகர், இரட்டைபுளிய மரம், குஞ்சண்டியூர், வீரக்கல்புதூர் ஆகிய இந்தப் பத்து ஊர் களுக்கும் சேர்ந்து பயன்படத்தக்க அளவுக்கு 4½ இலட்ச ரூபாய் செலவில் திட்டமொன்றைத் தலைமைப் பொறியாளர் அவர்கள் தயாரித்து வருகிறார்கள். அது வந்த பிறகு, பத்து ஊர்களுக்கும் பயன்படும் அளவுக்குத் திட்டம் மேற்கொள்ளப்படும். புதுசாம் பள்ளி, கருமலைக்குடில் ஆகிய இரண்டு ஊர்களுக்கும் ஐயாயிரம் காலன் தண்ணீர் தேங்கக்கூடிய அளவுக்குள்ள மேல்நிலைத் தொட்டிகள் அமைக்கும் வேலை 1 லட்சத்து 15 ஆயிரம் ரூபாய் செலவில், வறட்சி நிவாரண நிதியின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. சி. கோவிந்தராஜன் :** தலைவர் அவர்களே, மேட்டூர், மேட் டூரைச் சுற்றியுள்ள இடங்கள் ஆர். வி. ப்ளான்ட், கெமிப் க்ளாஸ்டு, அலுமினியம் இண்டஸ்ட்ரி பாக்டரிகளின் கழிவு நீரினால் பாதிக்கப் பட்டு செடி கொடிகள் கூடப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே அந்தக் கழிவு நீரைக் குழாய்கள் மூலம் வெகுதூரம் எடுத்துப்போக நடவடிக்கை எடுக்கப்படுமா ?





**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அந்தத் தண்ணீரைக் கெடாத அளவுக்கு என்ன முறையில் செய்யலாம் என்பது ஆராயப் பட்டு வருகிறது. கழிவு நீரினால் இந்த இரண்டு ஊர்க் கிணறுகள் பாதிக்கப்பட்டிருப்பதனால் இங்குள்ளவர்களுக்குக் குடி தண்ணீர் வழங்கும் பொறுப்பை இந்தக் கம்பெனிகள் ஏற்றுக்கொண்டிருக் கின்றன. தண்ணீரை இலவசமாகக் கொடுக்க கம்பெனி உரிமை யாளர்கள் ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். அதை உயர்நிலைத் தொட்டிக்கு எடுத்துச்சென்று விநியோகிக்கப் பொறுப்பு ஏற்கப் பட்டிருக்கிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** இந்த 4½ லட்சம் ரூபாய்க்கான திட்டம் எப்போது நடைமுறைக்கு வந்து முடிவுறும்? இந்தத் தொழிற்சாலையில் இருந்து வருகிற கழிவு நீரினால் 78-க்கு மேல் விவ சாயக் கிணறுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அந்த விவசாயி களுக்கு நஷ்டஈடு அளிக்கப்படுமா ? அவர்கள் விவசாயம் செய்ய முடியாமல் பாதிக்கப்பட்டிருப்பதனால் அவர்களுக்கு என்ன மாற்று ஏற்பாடு செய்ய அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** 10 ஊர்களுக்குக் குடி தண்ணீர் திட்டத்திற்காக 4½ லட்சம் ரூபாயில் திட்டம் தயாரித்து தலைமைப் பொறியாளர் அனுப்பியிருக்கிறார். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. பாசனக் கிணறுகள் பாதிக்கப் பட்டிருப்பது சம்பந்தமாகத் தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கிறேன்.

### *Rent free quarters for women teachers.*

* 312 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether the Tamil Nadu Government have sanctioned a sum of Rupees five lakhs for the construction of rent-free quarters for women teachers in rural areas during 1969-70 ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஆம்.

**திரு. கே. விநாயகம் :** பெண் ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க ரூ. 5 லட்சம் ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். எத்தனை வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன ? எந்த எந்த ஊர்களில் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன ? இன்னும் செலவழிக்கப்படாமல் இருக்கும் தொகை எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** எந்த எந்த ஊர் களில் கட்டப்பட்டிருக்கின்றன என்கிற விவரம் இல்லை. 1968-69-ல் 1,300 இல்லங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. நான்காவது ஐந்தாண்டுத் திட்ட மதிப்பீட்டில் இதற்காக ரூ. 25 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1969-70-ல் ரூ. 5 லட்சம் செலவழிக்கப் பட்டிருக்கிறது. 1970-71-க்கு ரூ. 5 லட்சம் மதிப்பீடு செய்யப் பட்டிருக்கிறது.

**திரு. சு. துரைசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்கள் நிறையப் பேர்கள் இதற்கு வருகின்ற காரணத்தினால் இந்த இட நெருக்கடியைப் போக்குவதற்கு அரசாங்கம் ஷிப்ட் முறையை வைக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, ஐந்தாறு ஆண்டு காலத்திற்கு முன்னால் பொறியியல் கல்லூரியில் இட நெருக்கடி இருந்தது. இப்பொழுது இரண்டு மூன்று ஆண்டுகளாக இட நெருக்கடி பொறியியல் கல்லூரியில் இருக்கிறது என்று சொல்வதற்கில்லை. இந்திய அரசாங்கத்தினர் அகில இந்திய அடிப்படையிலே 30 சத விகிதம் மாணவர்களை சேர்ப்பதிலே குறைக்க வேண்டுமென்றும், பொறியியல் படித்துவிட்டு வருகின்றவர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைப்பது கஷ்டமாக இருப்பதால் குறைக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். 30 சத விகிதம் குறைந்தால் எதிர்காலத்தில் என்ன அமையும் என்று தெரியாத நிலைமை இருப்பதால் ஓரளவுக்கு இட நெருக்கடி இல்லாத வகையிலே நாம் குறைத்திருக்கிறோம். 1,415 பேர்கள் 1967-68-ஆம் ஆண்டிலே எடுத்துக் கொள்ளப்பட்டார்கள். 1968-69-ஆம் ஆண்டிலே ஆயிரம் பேர்கள்தான் சேர்க்கப்பட்டார்கள். 1969-70-இல் 887 பேர்கள்தான் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். பொறியியல் கல்லூரிக்கு இட நெருக்கடி என்பது இல்லை. ஆகவே ஷிப்ட் சிஸ்டம் வைக்கவேண்டிய அவசியமில்லை.

**திரு. ஆர். கருப்பையா:** தலைவர் அவர்களே, இட நெருக்கடி இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மருத்துவக் கல்லூரியைப் பொறுத்தவரையில் இட நெருக்கடி அதிகமாக இருக்கிறது. (மணியடிக்கப்பட்டது).

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பொறியியல் கல்லூரியில் ஷிப்ட் சிஸ்டம் கொண்டுவருவதற்கான வாய்ப்பு இல்லை என்று சொன்னார்கள். சில ஆண்டுகளாக இங்கே எல்.சி.இ., எல்.எம்.இ., எல்.இ.இ., டிப்ளமோ கோர்ஸ் படித்தவர்களுக்கு மாலை நேரங்களிலே டிகிரி கோர்ஸ் படிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் என்று பத்திரிகைகளிலே எல்லாம்கூட செய்திகள் வந்தன. இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. எனவே எல்.சி.இ., எல்.எம்.இ., எல்.இ.இ., போன்ற டிப்ளமோ கோர்ஸ்கள் படித்தவர்கள் மாலை நேரங்களிலே டிகிரி கோர்ஸ் படிப்பதற்கு ஏற்ற முறையில் அரசாங்கம் ஏற்பாடு செய்துகொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அதுபற்றிய விவரக் குறிப்புகள் தரப்படுமானால் பரிசீலனை செய்வதற்கு வாய்ப்பு இருக்கும்.



**THIRU K. VINAYAKAM:** Sir, instead of dearth of engineers we have got plenty of them available for employment. What avenues have been opened by the Government to absorb the unemployed engineers or in the alternative what type of incentives the Government are prepared to give them to keep them away from unemployment?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற காலத்தில் பொறியியல் படித்தவர்களுக்கு வாய்ப்புகள் மிகவும் அதிகமாக ஏற்படும் என்று நம்பப்படுகிறது. இப்பொழுது ஏற்றுக்கொள்ளப்பட்டு நடப்பு ஆண்டிலே நடைமுறைக்கு வருகின்ற நேரத்தில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் வேலைகள் பல துறைகளிலே மேற்கொள்ளப்படுகின்ற நேரத்திலே பொறியியல் படித்தவர்களுக்கு வாய்ப்புகள் இருக்கும். பொதுப் பணித் துறை, சுகாதாரத் துறை, மின்சாரத் துறை, ஆகியவற்றில் ஏற்கனவே 600 எஞ்சினியர்கள் ஈர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். எனவே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகின்ற பொழுது பொறியியல் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்பட்டு அவர்களை ஈர்த்துக்கொள்ளுகின்ற நிலைமை ஏற்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி பொறியியல் கல்லூரியில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதுபற்றி. வேலைவாய்ப்புப் பற்றிக் கேட்கிறீர்கள்.

**திரு. கே. விநாயகம்:** அதுவும் அல்லைட் சப்ஜெக்ட்தானே.

**திரு. எம். பூபதி:** தலைவர் அவர்களே, கல்லூரியிலே பயின்றுவிட்டு வெளியே வருகின்ற எஞ்சினியர்கள் ஏதாவது ஒரு தொழிலை அவர்களாகவே செய்யக்கூடிய அளவிற்கு முன்வரக்கூடிய முறையில் கல்வி அமைப்பை மாற்றுவதற்கு அரசு திட்டமிடுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இப்பொழுதே அவர்கள் பெற்றிருக்கின்ற பயிற்சியை அடிப்படையாக வைத்துக்கொண்டு தனியாகத் தொழில்கள் ஆரம்பிக்க முன்வரலாம். இந்த வகையிலே தான் அவர்களுக்கு வேண்டுகோள்கள் விடப்படுகின்றன. அரசாங்கம் அதற்காக உதவி செய்யக்கூடிய முறையில் கொடுக்கின்ற தொகையை அவர்கள் பயன்படுத்தி ஒருவரோ அல்லது சேர்ந்து பலரோ ஈடுபடலாம். இறுதி வகுப்பிலே படிக்கிற மாணவர்களுக்கு அவர்கள் எந்த எந்தத் தொழில்களிலே ஈடுபடலாம் என்பதைப்பற்றி இந்திய அரசாங்கத்தின் சார்பாக அமைந்திருக்கிற நிறுவனங்களிலே பயிற்சி அளித்து விவரங்களையெல்லாம் கற்றுத்தருகிறார்கள். ஒருவரோ அல்லது ஒன்று சேர்ந்து பலரோ ஒரு தொழில் அமைப்பதற்கு முன்வந்தால் சிறு தொழில்கள் நடத்துவதற்கு முன்வருவார்களானால் அவர்களுக்கு முதல் சலுகை கொடுப்பதற்கான எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கிறது. அந்த வாய்ப்பினை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். தாங்களாகவே தொழில் ஆரம்பிக்கத் தக்க அளவுக்குத்தான் இப்பொழுதே பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

அம்பாசிடர் காரில் எப்படிப் போவது என்பதற்காகத்தான் அந்தக் காரை அங்கேயே விட்டுவைத்திருக்கிறோம் என்றும் சொன்னார்கள். அந்தக் கார் அங்கே இருக்க வேண்டியதில்லை, எப்பொழுதோ மூன்று மாதங்களுக்கு ஒரு முறை டெல்லி செல்லும்பொழுது பயன் படுத்துவதற்காக டெல்லியில் அந்தக் கார் இருக்கத் தேவையில்லை என்று கூறி, அந்தக் காரை சென்னைக்கு எடுத்து வந்துவிடச் சொன்னேனே தவிர, வேறு அல்ல. இதிலே வைக்கப்பட்டிருக்கிற குளிர் சாதனமும், ஏர்-கண்டிஷன் கார் விலைக்கு வாங்கியபோதே அதையும் சேர்த்தே விற்றிருக்கிறார்கள். இல்லையென்றால், டாக்டர்கள் சொன்னாலும் நான் வைக்காமலேயே இருந்திருப்பேன். அதுபற்றிப் பேசப்பட்டது. குளிர் சாதனத்தோடேயே இந்த பென்ஸ் காரை டெல்லியில் வாங்கி, அண்ணாவின் உபயோகத்திற்காக வைத்த இந்த ஒன்றைத் தவிர, இந்த அமைச்சரவை பொறுப் பேற்ற பிறகு பெரிய கார்கள், நான் படித்துக் காட்டிய பெரிய கார்கள் முன்பே வாங்கப்பட்டனவேயல்லாமல் நாங்கள் வாங்கியவை அல்ல. அம்பாஸடார் யாருக்கும் அவசியம் இல்லாத தால், விருந்தாளிகள் மாளிகையில் இருக்கிறது.

அமைச்சர்களைப் பார்வையாளர்கள் சந்திக்க முடியவில்லை என்ற குற்றச் சாட்டு கூறப்பட்டது. அது உள்ளபடியே எனக்கு வேடிக்கையாக, வேதனையாக இருக்கிறது. சிற்சில சமயங்களில் நாங்கள் நிகழ்ச்சிகளுக்கு தாமதமாக வருகிறோம் என்றால், பார்வையாளர்களின் கடலிலே சிக்கிக்கொண்டு காரிலே செல்ல முடியாமல் தவித்துக் கொண்டு இருக்கிறோம் என்பதை நீங்கள் யாரும் அறியாதவர்கள் அல்ல. எதிர்க்கட்சித் தலைவர்கூட என்னைச் சந்திக்க வந்த நேரங்களில் பார்த்திருக்கிறார்கள். என்னை சந்திப்பது என்கிற எண்ணம் கிடையாது. ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்றில்லாமல், நண்பர் என்கிற முறையில் நான் அவரைப் பார்ப்பதும், அவர்கள் என்னைப் பார்ப்பதும் உண்டு. அவர்களே பார்த்திருக்கிறார்கள். அப்பொழுது சொல்லுவார்கள், 'ஏனையா இவ்வளவு கூட்டம் இருக்கிறதே. உடம்பு என்னத்திற்கு ஆகும்.' என்று கண்டிந்துக் கூட இருக்கிறார்கள். அந்த நிலையில் பார்வை யாளர்களை ஒவ்வொரு அமைச்சரும் சந்தித்துக் கொண்டு இருக் கிறோம். ஒன்று சொல்லப்பட்டது. கோட்டைக்கு குறித்த நேரத்தில் அமைச்சர்கள் வந்திருந்தால், பார்வையாளர்கள் பார்க்க வசதியாக இருக்கும் என்று சொல்லப்பட்டது. உள்ள படியே அது யோசிக்க வேண்டிய ஒன்றாகும். (குறுக்கிடு) வீட்டுக்கு வாராதீர்கள். இங்கேயே காணுங்கள் என்று 'இருந்து விட்டால் வீட்டில் பைல்களைப் பார்த்து விட்டு, இங்கே வந்து பார்வையாளர்களைச் சந்திக்க நேரம் கிடைக்கும். அந்த நிலைக்கு உறுப்பினர்களெல்லாம் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த ஒரு ஆண்டு காலத்தில், என்றைக்கும் இல்லாத வகையில், நாங்கள் அடிக்கடி கூடிப்பேசி, மாதம் ஒரு முறை காபினட் கூடி முடிவுகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பது உங்களுக்கெல்



லாம் தெரியும். சில நேரங்களில் 15 நாட்களுக்கு ஒரு முறை காபினட் மீட்டிங் கூடி முடிவுகள் எடுக்கிறோம். அது மாத்திரமல்ல, உறுப்பினர்கள் குறைகளைச் சொல்வதாக இருந்தாலும் எந்தக் கட்டுப்பாடும் இல்லை. பார்க்கிறோம், இங்கே குறுக்கே புகுந்து, இங்கே திரும்பினாலும், அங்கே திரும்பினாலும், முக்கியமான விஷயத்திற்குப் பதில் சொல்லவேண்டும் என்றுகூட கவனிக்க முடியாமல், உறுப்பினர்கள் இங்கே எங்களிடம் கோரிக்கைகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கொஞ்சம் ஐந்து நிமிஷம் ஓய்வு எடுத்துக் கொள்வோம் என்றாலோ, பாத் ரூம் பக்கம் போக லாம் என்றாலோ, அங்கே வந்திருப்பவர்கள் உத்தரவு கேட்டுத்தான் கதவைத் திறக்க வேண்டிய நிலை இருக்கிறது. அந்த அளவுக்கு மனுக்களைக் கூடுமான வரையில் வாங்கிக்கொண்டு, அவைகளையெல் லாம் நிறைவேற்றி வைப்பதில் தீவிர கவனம் செலுத்தப்படுகிறது. கொஞ்சம் ஸ்டாப் அதிகமாக வைத்துக் கொண்டிருக்கிறோம். அலுவலர்களை அதிகமாக வைத்திருக்கிறோம். முன்பு இருந்த அமைச்சர் சொல்லுகிறார்கள், எங்களுக்கு இந்த அளவுக்கு அதிக மாக மக்கள் வருவதில்லை, சந்திப்பதில்லை, சுலபமாக வரலாம் என்றி ருப்பதால் அதிகமான பேர்கள் வருகிறார்கள் என்றார்கள். அவர் களுக்கு விளக்க விரும்புகிறேன். இது ஒன்றும் தவறான முறை யல்ல. மக்கள் ஆட்சியில் மக்கள் குறைகளைக் கேட்க, சந்திக்க, வாய்ப்பும், வசதியும் இருக்கவேண்டும் என்கிற தத்துவத்தின் அடிப் படையில் செய்யப்படுகிறது.

அமைச்சர்கள் சுற்றுப் பயணம் பற்றிச் சொல்லப்பட்டது. நான் கூட அதிகச் செலவாகியிருக்குமோ என்று பார்த்தேன். இல்லை. 65,66 ஆக இரண்டு ஆண்டுகளுக்கு சுற்றுப் பயண படிச் செலவு ரூ. 1,49,802. இப்பொழுது 67-ம் ஆண்டு, 68-ம் ஆண்டு ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் ரூ. 1,32,138 தான் செலவு ஆகியி ,ருக்கிறது. ஆகவே, அதிகச் செலவு ஆகிவிட்டதாகச் சொல்ல முடி யாது. உறுப்பினர்கள் அதிகமாகச் சுற்றிக் கொண்டு இருக்கக் கூடாது என்பதை மறுக்கவில்லை. ஆனாலும் இருக்கும் சங்கடம் என்னவென்றால், திரு. கனகசபை எல்லா அமைச்சர்களும் வரக்கூடாது என்றார்கள். கூட்டுறவு அமைச்சர், நிதி அமைச்சர், முதல் அமைச்சர் எல்லோரையும் அழைக்கிறார்கள். பாங்கு விஷயம் என்று முதல் அமைச்சரைக் கூப்பிடுகிறார்கள். பண விஷய மாக இருப்பதால் நிதியமைச்சர் வரவேண்டும், சட்ட சிக்கல் என்று சட்ட அமைச்சர் வரவேண்டும், கூட்டுறவு விஷயம் ஆகவே கூட்டுறவு அமைச்சர் வரவேண்டும் என்று. இப்படிக் காரணங்களைச் சொல்லி, எங்களைக் கட்டுப் படுத்தாமல் இருக்கிறார் களா என்றால் இல்லை. அப்படிக் கட்டுப்படுத்துவதிலும் தவறு இருப்பதாகவும் கருதவில்லை. அப்படிப் போகின்ற நேரத்தில் ஒவ் வொரு மாவட்டத்திலும் மக்களைச் சந்திக்கின்றோம். அதிகாரி களுடன் கலந்து பேசுகிறோம். சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவர்களைச் சந்தித்து, குறைபாடு களை முறையீடுகளை தருவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு ஏற்படு கிறது. இவற்றையும் கவனிக்க முடிகிறது.

**திரு. என். மருதாசலம் :** பெண் ஆசிரியர்களுக்கு எந்த எந்த ஜில்லாக்களில் எவ்வளவு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்வார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மொத்தத்தில் 1,300 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எந்த எந்த இடத்தில் எவ்வளவு என்கிற விவரம் இல்லை.

**திரு. வை. சுவாமிநாதன் :** ஒரு பெண் ஆசிரியருக்கு ஒரு வீடு என்று கட்டிக்கொடுக்கப்படுவதினால் தனியாக அங்கே ஒரு பெண் ஆசிரியர் குடியேற பயப்படுகிறார். ஒரு வீடு இரண்டு பேர்களுக்கு என்கிற அடிப்படையில் ப்ளான் அமைத்துக் கட்டிக் கொடுக்க வகை செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இருக்கிறபோது 1,300 வீடுகளே கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நிதி வசதி ஏற்படுகிறபோது நல்ல முறையில் இது கவனித்து செயல்படுத்தப்படும்.

### மாவட்டங்களில் கண் மருத்துவ மனைகள்

* 313 வினா.—திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டந்தோறும் தனியாக ஒரு கண் ஆஸ்பத்திரி ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(இ) கண் டாக்டர்களின் பற்றாக்குறையைப் போக்கும் வகையில் 'Diploma in Ophthalmology' போன்ற பட்டப்படிப்பு வகுப்புகளை ஆரம்பிக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) சென்னை மருத்துவக் கல்லூரி, மதுரை மருத்துவக் கல்லூரி இவைகளில் 6 இடங்கள் வீதம் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல், அக்டோபர் மாதங்களில் ' Diplomo in Ophthalmology ' வகுப்புகள் நடத்தப் பட்டு வருகின்றன.

**திரு. சி. கோவிந்தராஜன் :** இந்தக் காலத்தில் கண் சம்பந்தப் பட்ட வியாதிகள் அதிகமாக இருக்கிற காரணத்தினால்—மாவட்ட தலைநகரில் உள்ள ஆஸ்பத்திரிகளிலாவது தனி டிபார்ட்மெண்டை ஏற்படுத்தி கண் வைத்தியர்களைப் போட ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஒவ்வொரு மாவட்டத்திலும் கண் மருத்துவ மனை இல்லை என்றுதான் சொன்னேன். ஆனால், தலைநகர ஆஸ்பத்திரி ஒவ்வொன்றிலும் இப்போதே தனி கண் வைத்தியப் பிரிவு இருக்கிறது, டாக்டர்கள் தனியாக இருக்கிறார்கள். சென்னையில் மட்டும் தான் தனியாகவே கண் மருத்துவ மனை இருக்கிறது.





**திரு. செஞ்சி வெ. முனுசாமி :** முன்பு இருந்ததைவிட இப்போது—ஆடம்பரத்திற்காக அன்றி அவசியத்திற்காக வேண்டி—கண்ணாடி பலர் போடுகின்றனர். பிறக்கும்போதே கண்ணாடியோடு பிறந்தார்களோ என்று எண்ணும்படியாக—குழந்தைகள் முதற் கொண்டு கண்ணாடிப் போட்டுக் கொள்கிறார்கள். ஆகவே, கண் நோய் ஏற்படுவதற்கு காரணம் என்ன என்பதை கண் மருத்துவ நிபுணர்களைக் கொண்டு ஆராய்ந்து பொதுமக்களுக்கு அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கண் நோய்க்கு ஆங்காங்கே நல்ல முறையில் சிகிச்சை செய்யப்பட்டு வருகிறது. சென்னையில் உள்ள கண் மருத்துவமனை ஆசியாவிலேயே மிகச் சிறந்த ஒன்றாக, சிறப்பான பணியாற்றிக்கொண்டு வருகிறது. தேவைகளை ஒட்டி, இவற்றை விரிவுபடுத்தவும் அரசு ஆவன செய்யும்.

**திருமதி கே. பி. ஜானகி அம்மாள் :** மதுரையில் எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் கண் டாக்டர் வெங்கடசாமி தலைமையில் கண் டாக்டர்கள் குழு நல்லமுறையில் கிராமங்களுக்கே சென்று ஏழைகளுக்கு சிகிச்சை அளித்து வருகிறார்கள். இது மக்களுக்கு உதவியாக இருக்கிறது என்பதை அரசு அறியுமா ? இதுபோல கோவை, திருச்சி, சென்னை போன்ற இடங்களிலும் செய்வதற்கு முயற்சி செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மதுரையில் டாக்டர் வெங்கடசாமி தலைமையில் நல்லமுறையில் இயங்கி வருவது தெரியும். அவர் அரசாங்கத்திற்கு இதுபற்றி ஒரு திட்டத்தையே தந்திருக்கிறார்கள். மேலும் மாணவர்களுக்குக் கண் நோய் வருவதற்கான காரணம், அதைத் தடுத்துக் கொள்வதற்கான வழி இது பற்றி பயிற்சி அறிவு அளிக்கவும் இதில் திட்டமிருக்கிறது. அவருடைய திட்டம் அரசாங்கப் பரிசீலனையில் இருக்கிறது. மதுரையில் பரீட்சார்த்தமாக பைலட் யூனிட்டாக வைத்து இதன் செயல்முறைகளைத் தெரிந்துகொண்டு விரிவுபடுத்தலாம் என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கிறது.

### பொறியியல் கல்லூரிகளில் முறைவகுப்பு ஏற்பாடு

* 314 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

என்ஜினிரிங் கல்லூரிகளில் இட நெருக்கடியைப் போக்கும் முறையில் ஷிப்ட் முறையைப் புகுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

[1970 மார்ச் 11

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அப்படிப்பட்ட ஒரு யோசனை அரசின் பரிசீலனையில் இருக்கிறது. புதிய பொட்டலமாக 'பாக்' செய்து விற்கலாம் என்றாலும் அளவு அப்போதும் குறையத்தான் செய்யும். அதிலே ஏற்படும் நஷ்டத்தை யார் ஏற்றுக் கொள்வது என்ற நிலையிலே அரசாங்கம் அதுபற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

## ஓசூர் கால்நடைப் பண்ணை

* 318 **வினா—திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு உணவு, வணிகவரித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஓசூர் கால்நடைப் பண்ணையில், தீவனம் வாங்கிய விஷயத்தில் ஏற்பட்ட மோசடியின் காரணமாக, எந்தெந்த அதிகாரிகள் மீது வழக்குத் தொடரப்பட்டது ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அரசு கீழ்க்கண்ட அதிகாரிகள் மீது வழக்குத் தொடர ஆணை பிறப்பித்துள்ளது :—

(1) டாக்டர் ஐ. டி. மந்திரமூர்த்தி, முன்னாள் கால்நடை இயக்குநர், தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறை.

(2) டாக்டர் என். திருநாவுக்கரசு, முன்னாள் கண்காணிப்பாளர், கால்நடை ஆராய்ச்சி நிலையம், ஓசூர் விலங்கினப் பண்ணை.

(3) டாக்டர் சி. கோவிந்தன், முன்னாள் பண்ணை மேலாளர், கால்நடை ஆராய்ச்சி நிலையம், ஓசூர் விலங்கினப் பண்ணை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** இந்தத் தீவனம் வாங்கிய விஷயத்தில் ஏற்பட்ட மோசடியின் விளைவாக எந்த அளவு பணத் தொகை மோசடி செய்யப்பட்டிருக்கிறது ? எந்தெந்த விதத்தில் மோசடி செய்திருக்கிறார்கள் ? அவர்கள் தப்பித்துக் கொள்ளுவதற்காக முயற்சிகள் செய்யப்படுவதாகச் சொல்லப்படுவது உண்மையா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** வழக்கு, நீதிமன்றத்தில் இருக்கும் காரணத்தால் உப கேள்விகளுக்குப் பதில் சொல்ல இயலாத நிலையில் இருக்கிறேன்.

**THIRU K. S. KOTHANDARAMIAH :** May I know from the Hon. Minister the present stage of enquiry about this fraud case ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** வழக்கு, நீதிமன்றத்தில் இருக்கிறது என்று சொன்னேன்.

**THIRU T. MARTIN :** May I request the Hon. Minister to state the nature of the fraud perpetrated by these officials ? I think this will not be *sub judice*, Sir.



1970 மார்ச் 11]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** குற்றம் எத்தகையது என்பதைத்தான் கேட்டிருக்கிறார்கள். அது பத்திரிகையில் வந்திருக்கிறது. மேற்கொண்டு இந்த நேரத்தில், வழக்கு விசாரணையில் இருக்கின்ற நேரத்தில் எந்த விவரத்தையும் அரசாங்கத் தரப்பில் வெளியிடுவது சரியல்ல என்ற காரணத்தால் பதில் சொல்ல மறுக்கிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** வழக்கு மன்றத்தில் இருப்பதால் அதனுடைய உள் விஷயத்தைக் கேட்க வரவில்லை. மோசடி எந்த அளவுக்கு, எவ்வளவு மோசடி ஏற்பட்டது என்பதைக் கூறினால் அது வழக்கைப் பாதிக்காது. எவ்வளவு தொகை மோசடி செய்யப்பட்டது ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அதைக் கூடச் சொல்லுவதற்கு அவசியம் இல்லையென்று கருதுகிறேன்.

## மதுராந்தகம் வட்டத்தில் மரவள்ளிக்கிழங்கு மாவு ஆலை

* 319 **வினா—திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகம் வட்டத்தில் மரவள்ளிக்கிழங்கு (குச்சி கிழங்கு) மாவு தயாரிக்கக் கூட்டுறவு ஆலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மதுராந்தகம் பகுதியில் குச்சி கிழங்கு அதிகமாகப் பயிராவதாலும், அதை விற்க மார்க்கட் இல்லாததாலும் இப்பேர்ப்பட்ட ஆலையைக் கூட்டுறவுத் துறையிலோ அல்லது தனியாருக்குச் சலுகை கொடுத்தோ அரசு ஏற்படுத்துவதற்கு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதுபோன்ற கூட்டுறவு ஆலையை அமைக்க சேலத்தில் ஐயாயிரம் ரூபாய் முதலும், 76,200 ரூபாய் கடனும் கொடுக்கப்பட்டிருக்கிறது. சேலம் மாவட்டத்தில் குச்சிக் கிழங்கு உற்பத்திக்காகவும் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. செங்கற்பட்டு மாவட்டத்திலும் இது போன்ற ஆலையை அமைக்க தனியார் முன்வந்தால் இதுபோன்ற உதவிகள் செய்யப்படும்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** மரவள்ளிக் கிழங்குத் தொழிற்சாலைகள் சேலம் மாவட்டத்தில் அதிகமாக இருக்கின்றன. ரொட்டி செய்யும்போது இந்த மாவைக் கலப்படம் செய்து உபயோகித்து விடுகிறார்கள். இதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

[1970 மார்ச் 11

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தொழிலைத் தொடங்குவதைப் பற்றி நான் சொல்லியிருக்கிறேன். கலப்படத்தைத் தடை செய்வதைப் பற்றிச் சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் கேட்கலாம்.

*Deposits of iron ore.*

* 320 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether any agency of the U.N. is (i) mapping and (ii) surveying the iron ore deposits in this State ; and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) & (இ) பேரவையின் முன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** இந்த இரும்புக் கனி வள ஆராய்ச்சி ஸ்தாபனத்திற்கு மத்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்பு உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மத்திய அரசின் மூலமாகத் தான் இந்த யு.என்.டி. ப்ராஜக்ட் என்ற திட்டத்தில் யு.என்.டி. அலுவலர்கள் இங்கு பணியாற்றி வருகிறார்கள்.

**மைகா படிவங்கள்**

■321 வினா—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் வட்டத்திலுள்ள நற்சாந்துப்பட்டியை அடுத்திருக்கும் இடுக்குமலைப் பகுதியில் மைகா படிவங்கள் தென்படுவது குறித்து அரசு ஆய்வு நடத்தியுள்ளதா ?

(இ) ஆமெனில் அதன் விளைவு என்ன ?

THE HON. THIRU S. MADHAVAN : (*a*) & (*b*) The Geological Survey of India has carried out systematic Geological mapping in the hills near Narchanthupatti, Tirumayam taluk of Tiruchirappalli Dis- trict during the years 1960-61 and 1961-62. Biotite (a black variety of mica) has been noticed to occur in Charnockite (granites) in a quarry near Narchanthupatti and the occurrence is reported to be of no economic importance.

■322 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகருக்கு அருகே எரிச்ச நத்தம் கிராமத்தில் "மைக்கா" இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனின், அதன் விவரம் என்ன ?

---

* 211-212-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



1970 மார்ச் 11]

THE HO]. THIRU S. MADHAVAN : (*a*) &(*b*) Yes. Sir Preliminary investigation of the area by the State Geology Branch has shown that mica occurs in pegmatite rock in survey field 736|1 of Erichanatham village, situated 20 kms. from Virudhunagar on the Virudhunagar-Watrap road. The mica flakes are small in size, about five centimetres across. Further investigation of the area is proposed to be taken up by the State Geology Branch.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** விருதுநகரின் பக்கத்திலுள்ள எரிச்சநத்தம் கிராமத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள மைகாவின் தரம் எப்படியிருக்கிறது ? இதை வெட்டி எடுக்க எவ்வளவு செலவாகும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது ? இதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த ஆராய்ச்சி எப்போது மேற்கொள்ளப்படும் ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்த இடத்தில் கிடைக்கக் கூடிய மைகாவின் அளவை முன்னாலேயே குறிப்பிட்டேன். இது எந்த அளவிற்குக் கிடைக்கிறது, பொதுவாக லாபத்தோடு இதை எடுக்க முடியுமா என்பதை நம் மாநில ஜியாலஜி துறையினர் மேற்கொண்டு ஆராய்ச்சி செய்து வருகிறார்கள்.

**திரு. நா. வீராசாமி :** இந்த மைகாவிற்கு உலகத்தில் நல்ல மார்க்கெட் இருக்கிறது. இந்த ஜியாலஜி டிப்பார்ட்மென்ட் சர்வே செய்ததாகச் சொன்னார்கள். தமிழ்நாடு பூராவும் சர்வே செய்தார்களா ? வட ஆர்க்காடு மாவட்டத்தில் வாலாஜா தாலுகாவில் தகரக்குப்பம் பகுதியில் நிறைய மைகா இருப்பதாக நூறு ஆண்டுகளுக்கு முன்பு எழுதி வைத்திருக்கிறார்கள். எனவே, எப்படி சர்வே செய்யப்பட்டிருக்கிறது ? இங்கும் சர்வே செய்யப்பட்டிருக்கிறதா ? இல்லாவிட்டால் இனியாவது அங்கும் சர்வே செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** வட ஆர்க்காடு மாவட்டத்தில் மைகா கிடைப்பதாகப் புள்ளிவிவரம் என்னிடம் இல்லை. நம் ஜியாலஜி துறையினர் மாநிலம் முழுவதிலும் எங்கெங்கு இப்படிப்பட்ட கனிப்பொருள்கள் கிடைக்கின்றனவோ அங்கெல்லாம் இதை எடுக்கிறார்கள். வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஏரியல் மாப்பிங் மூலம் இரும்புக் கனிப் படிவங்கள் இருப்பதாகத் தகவல் இருக்கிறது. வேறு பொருள்கள் பற்றிய விவரம் என்னிடம் இல்லை.

**திரு. இராம. அரங்கண்ணல் :** மைகாவிற்குப் பதிலாக பல செயற்கைப் பொருள்கள் இப்போது அதிகரித்திருப்பதால் மைகா தொழில் லாபகரமானதல்ல என்று கருதப்பட்டு வருகிறது. ஆகவே, இந்த மைகா சம்பந்தமான தொழிலை ஆரம்பிக்க உத்தேசிக்கிற சமயத்தில் அந்தக் கருத்தும் எடுத்துக்கொள்ளப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நான் முன்னாலேயே சொன்னேன். மைகா கிடைத்தாலும் பொருளாதார இலாபம் நமக்குக் கிடைக்கக்கூடிய அளவிற்கு மைகா இருக்கிறதா என்று ஆராய்ச்சி செய்ததற்குப் பின்னால்தான் நாம் இதுபற்றி முடிவு செய்யலாம்.

[1970 மார்ச் 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 315 வது வினு பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

## இரசாயன உரங்கள்

* 316 வினு—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழகத்தில் ரசாயன கலப்பு உரம் எந்தெந்த கம்பெனிகளில் தயாரிக்கப்படுகிறது, மாவட்டவாரியாக ?

(இ) அவைகளுக்குப் போதுமான அளவுக்கு ரசாயன உரம் சப்ளை செய்யப்படுகிறதா ? இல்லையென்றால், காரணம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) பேரவை முன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

(இ) ஆம். தொகுப்பு ஏற்பாடுகளின் கீழும் ( (Pool atraingement) ) கட்டுப்பாடற்ற வணிகப் பங்களவின் கீழும் (free trade quota) போதிய அளவிற்கு இரசாயன உரம் கிடைக்கிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இந்த அரசாங்கம் கலப்பு உரக் கம்பெனிகளில் பல கம்பெனிகளில் உரத்திலே மண், உப்பு போன்றவற்றைக் கலந்து விற்பனை செய்கிறார்கள் என்பது பற்றிப் புகார் வந்திருக்கிறதா ? உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று சர்க்கார் முடிவெடுத்திருக்கக்கூடிய நேரத்தில் மண்ணையும் உப்பையும் கலக்கக்கூடிய உரத்தைப் போடுவதின் மூலமாக பூமியே கெட்டு நாசமாகிவிடும், இதனாலேயே விவசாயமே கெட்டுவிடும் என்பதை அமைச்சர் அவர்கள் உணர்கிறார்களா ? ஆகவே விஷம் கலந்த உணவைக் கொடுத்தால் அதன்மீது (மணியடிக்கப்பட்டது)—சார், முடிக்கப் போகிறேன்—என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறதோ அதுபோன்று கடுமையான நடவடிக்கை இதிலேயும் எடுக்க உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** கலப்படம் எதிலேயும் எங்கேயும் இருக்கக்கூடாது என்பதுதான் இந்த அரசாங்கத்தின் கொள்கை. அதிலும் குறிப்பாக இரசாயன உரத்திலே கலப்படம் கூடாது. அவ்வப்பொழுது அதிகாரிகள் இவற்றைக் கண்காணித்து வருகிறார்கள். குறிப்பாகப் புகார் வந்தால் அரசாங்கம் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும். இது வரையில் எந்தவிதமான புகாரும் வரவில்லை. தகவல் கொடுத்தால் நான் கவனிக்கிறேன்.

**திரு. கே. பி. எஸ். மணி :** சார், உரம் வாங்குவது சம்பந்தமாக, உரத்தின் விலை ஏற்றப்பட்டு இருக்கிற காரணத்தினலே நடுவிலே இருக்கிற கமிஷன் ஏஜென்டுகள் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்த கேள்வியிலே உரத்தின் விலையைப்பற்றி வருகிறது. அதிலே கேளுங்கள்.

---

196–210-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்[illegible]



1970 மார்ச் 11]

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, இதுமாதிரிக் கலப்பு உரம் தயாரிக்கிறவர்கள் இரசாயன உரத்தை வாங்கி அதைக் கலப்பு உரம் ஆக்காமல் வெளியிலே விற்றுவிடுகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதன்மீது எடுக்கப்பட்டிருக்கின்ற நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** கலப்பு உரம் என்பது வேறு. எம்.பி.கே. காம்ப்ளக்ஸ் வருகிறது அது வேறு. கனம் உறுப்பினர் திரு. கோதண்டராமன் அவர்கள் சொன்னது—கல்லையும் மண்ணையும் கலந்து விற்கிறார்களா என்று கேட்டார்கள். கலப்பு உரம் என்பது வேறு. தவறான முறையிலே அதை விற்கிறார்கள் என்றால் அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். அதிகாரிகளும் அவ்வப்பொழுது கண்காணித்து வருகிறார்கள்.

**திரு. சோ. அழகர்சாமி :** கலப்பு உரக் கம்பெனிகளில் முன்பு இருந்ததைவிட தரம் குறைந்ததாக இருக்கிறது. கலப்புச் சேர்க்கைகள் ஒவ்வொரு பொருளையும் சரியான முறையில் சேர்ப்பது இல்லை என்று தெரிகிறது. கலப்பு உரம் தயாரிப்பதை அரசாங்கத்தின் மூலம் எப்படிக் கண்காணிக்கப்பட்டு வருகிறது என்று அறிவிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** ஒவ்வொரு பிளாக்கிலும் உர அதிகாரிகள் இருந்துகொண்டு இவற்றைக் கண்காணித்து வருகிறார்கள். இதைப்பற்றிப் புகார் வந்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் திரும்பத் திரும்பக் கூறுகிறேன்.

**திரு. அ. ஆறுமுகம் :** கலப்பு உரத்தைத் தயாரிக்கிறவர்கள் பல மாதிரியான உரங்களைத் தயாரிக்கிறார்கள். அரசாங்கத்தின் அனுமதி பெற்ற பிறகு, அதிகாரிகள் பார்த்ததற்குப் பிறகு அவற்றை வெளியிடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** நிச்சயமாக எடுக்கும்.

**திரு. கே. சகாதேவக் கவுண்டர் :** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இரசாயன உரம் 50 கிலோவுக்குப் பதில் 25 கிலோவாகக் குறைகிறது. அது மூட்டையிலே கட்டி வைக்கப்பட்டு நல்ல முறையிலே பயன்படுத்தப்படாமல் உள்ளது. ஒரு பயிருக்குப் பயன்படுத்துவதை வேறு பயிருக்குப் பயன்படுத்துகிறார்கள். இதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இரண்டு வகையான இரசாயன உரங்கள் இருக்கின்றன. கேள்வியில் கேட்கப்பட்டிருப்பது கலப்பு உரத்தைப்பற்றியது. அந்த அந்தக் கம்பெனிகள் விற்கின்றன. இவற்றைப் பொட்டலமாக அல்லது

[1970 மார்ச் 11

முட்டையாகக் கட்ட வழியில்லை. விவசாயிகள் தேவையான அளவுக்குக் கம்பெனிகளிலே போய்வாங்கக்கூடிய நிலைமை இருக்கிறது. மூட்டைகளிலே குறைபாடுகள் வருவது எல்லாம் மத்திய அரசாங்கத்திலேயிருந்து வருகின்றதைப் பொறுத்துத்தான். அதிலேதான் புகார்கள் வருகின்றன. அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும். இந்த மாநிலத்திலே உள்ள கம்பெனிகள் விவசாயிகளுக்குத் தேவைப்படுகின்ற அளவுக்குக் கொடுக்கக்கூடிய முறையில் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி 317.

(திரு. வி. கே. கோதண்டராமன் எழுந்தார்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்த கேள்விக்குப் போய் ஆகிவிட்டது.

***317 வினா—திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ரசாயன உர விலைச் சலுகையை நவம்பர் 30-க்கு பிறகு நீடிக்கச் செய்யும் உத்தேசம் தமிழக அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** மெதுவாக விற்பனையாகக்கூடிய உர வகைகளான கால்சியம் அம்மோனியம் நைட்ரேட், டை—அம்மோனியம் பாஸ்பேட், அம்மோனியம் பாஸ்பேட், அம்மோனியம் குளோரைடு, பொட்டாஷ் மியூரியட், வெவ்வேறு தரங்களைச் சேர்ந்த எம்.பி.கே. காம்பிளக்ஸ் ஆகிய வரையறுப் பொறுத்தவரையில் 30—11—69 முதல் 31—3—70 வரை இரசாயன உரங்களில் பழைய இருப்புகளைச் சலுகை விலைகளில் விற்க அரசு அனுமதியளித்துள்ளது. எனினும், விரைவாக விற்பனையாகும் அம்மோனியம் சல்பேட், அம்மோனியம் சல்பேட் நைட்ரேட், யூரியா போன்ற இரசாயன உரங்கள் குறித்து 1—3—69 முதல் செயலுக்குக் கொண்டுவரப்படும் என்று இந்திய அரசினால் அறிவிக்கப்பட்ட அதிகரித்த தொகுப்பு விலைகள், 1—12—69 அன்று முதல் செயலுக்குக் கொண்டுவரப்பட்டன.

**திரு. வை. சுவாமிநாதன் :** யூரியா, சல்பேட் போன்ற உரங்கள் பழைய ஸ்டாக்காக இருக்கும் காரணத்தால் அவற்றைப் பழைய விலைக்கே விற்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இந்த உரங்களை எல்லாம் பழைய விலைக்கே தான் 10 சதவிகிதம் குறைந்த விலைக்கேதான் கொடுத்துக் கொண்டு வருகிறோம். 1–12–1969லேயே அதிகப்படியான விலைக்கு மாநில அரசாங்கம் கொடுக்க வேண்டுமென்று கூறிற்று. நாங்கள் மத்திய அமைச்சரிடத்தில் இவற்றைப் பழைய விலைக்கேதான் கொடுக்க வேண்டுமென்று கூறி அவ்வாறு குறைந்த விலைக்குத்தான் கொடுத்துக் கொண்டு வருகிறோம்.



1970 மார்ச் 11]

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி :** உரத்தின் விலை உயர்ந்து இருப்பது ஒரு பக்கம் இருந்தாலும் கூட்டுறவுச் சங்கங்களில் அந்த உரத்தை நிறுத்துக் கொடுக்க மறுக்கிறார்கள். மூட்டைக்கு 2 கிலோ குறைவாக இருக்கிறது. இதன்பேரில் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** இந்த உரங்கள் 1965–66-ம் ஆண்டுகளிலேயே வாங்கி வைக்கப்பட்ட உரங்கள். இதை ஆந்திர மாநிலமும், கேரள மாநிலமும் வாங்க மறுத்து விட்ட காரணத்தால் அப்போது இருந்த கட்டுப்பாடு காரணமாக 83,000 டன் உரத்தை 23 கோடி ரூபாய்க்கு அப்போதே வாங்கி வைத்துவிட்டார்கள். அப்போதே வாங்கி வைத்ததன் காரணமாக கோணிப் பைகள் நைந்து கிழிந்து போகிற காரணத்தால் குறைவு ஏற்படுகிறது. மத்திய அரசாங்கம் 10 சதவிகிதம் விலையை ஏற்றிய நிலையிலும் நாங்கள் பழைய விலைக்கே கொடுத்துக் கொண்டு வருகிறோம். இந்த நிலையில் நஷ்டத்தை மத்திய அரசாங்கத்தில் இருந்து கேட்க முடியாத நிலையில் மூட்டைகள் எப்படி இருக்கின்றனவோ அப்படியே கூட்டுறவுச் சங்கங்களில் விற்றுக் கொண்டு வருகிறார்கள்.

**திரு. கே. விநாயகம் :** மைசூர் மாநிலமும், கேரள மாநிலமும் எடுக்காது போன உரத்தை நாம் எடுத்துக் கொள்ளலாம் என்ற முடிவு எடுக்கப்பட்டு எப்போது எந்த ஆண்டில் யாரால் இந்த உரம் வாங்கப்பட்டது ? விலை குறைவாக நாம் விற்பதால் சர்க்காருக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** மைசூர் மாநிலமும், ஆந்திர மாநிலமும் இவற்றை வாங்கி வைக்க துறைமுக வசதி இல்லை என்பதாலும், ஸ்டாக் செய்து வைக்க இட வசதி இல்லை என்பதாலுந்தான் வாங்கி வைக்கவில்லை. அதை வாங்கியது நாங்கள் அல்ல ; காங்கிரஸ் ஆட்சியின்போதே வாங்கி வைக்கப்பட்டு விட்டது. இப்போது பத்து சதவிகிதம் குறைத்து பழைய விலைக்கே விற்பதால் இரண்டரைக் கோடி ரூபாய் நஷ்டம் ஆகிறது. அதுமட்டுமல்லாமல் இவ்வளவு ஆண்டு காலமாகக் கிடங்கில் வைத்திருப்பதால் நாளாவட்டத்தில் தேய்ந்து குறைந்து வருவதாலும் நஷ்டம் ஏற்படுகிறது. இந்த நஷ்டத்தை மத்திய அரசு ஈடுகட்ட வேண்டுமென்று எழுதிக் கொண்டு வருகிறோம். முதலமைச்சர் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும் டில்லிக்குச் செல்லும் போதெல்லாம் வற்புறுத்தி வருகிறார்கள். நானும் மத்திய உணவு அமைச்சர் வந்தபோது அந்த நஷ்டத்தை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று சொன்னேன். அவரும் அதுபற்றிக் கவனிப்பதாகக் கூறினார்கள்.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** டை—அம்மோனியம் சல்பேட், எம்.பி.கே. மிக்ஸ்சர் போன்ற உரங்கள் கையிலே கூட எடுக்க முடியாத நிலையில் அப்படியே பல கிடங்குகளில் கிடக்கின்றன. கோணிகளை மாற்றி விவசாயிகளுக்குக் கொடுக்கும் போது அந்த விலையைக் கழித்துக் கொடுக்க அரசு முன்வருமா ?

THIRU K. VINAYAKAM : Whereas it has been reliably under-stood that exploitation of the veins of mica running in the area under reference is an economically viable venture, has the Department gone into that aspect or does the Department simply say that mica is avail-able only in small tracts and so its exploitation is not economical? I was told that, if they went deeper in the earth, there was more track of mica, and has it been investigated?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அதைத்தான் என்னுடைய பதிலில், முதலிலேயே சொன்னேன். இப்படி ஒரு சர்வே நம்பரில் கிடைப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதை எடுப்பதற்கு மைனிங் லீஸ்க்கு ஒரு நபர் மனுச் செய்துள்ளார். தொடர்ந்து அந்தப் பகுதியில் என்ன இருக்கிறது என்பதைப்பற்றி- அdetailed investigation is being done by the Gelogical Branch.

*Motor vehicles, taxes*

* 323 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minis-ter for Public Works be pleased to state :

(*a*) whether a large number of cases of evasion ofmotor vehi-cles' tax were detected (i) in Tamil Nadu Mysore and (ii) in Tamil Nadu-Andhra border in September-October, 1969; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) ஆம்.

(இ) தமிழ் நாடு—ஆந்திரப் பிரதேச எல்லையில் ஏழு இடங் களிலும், தமிழ்நாடு—மைசூர் மாநில எல்லையில் மூன்று இடங்களி லும் பெருமளவில் சோதனைகள் நடத்தப்பட்டன. நடத்தப்பட்ட சோதனைகளின் விவரம் பின்வருமாறு :—

| | | தமிழ்நாடு—ஆந்திரப் பிரதேச எல்லை. | தமிழ்நாடு—மைசூர் மாநில எல்லை. |
|---|---|---|---|
| 1 சோதனையிடப்பட்ட வண்டிகளின் எண்ணிக்கை. | தமிழ்நாடு<br>பிற மாநிலங்கள் | 1,069<br>413 | 280<br>319 |
| 2 வரி செலுத்தாதிருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை. | | 76 | 6 |
| 3 வசூலிக்கப்பட்ட தொகை. | | 23,350 | 5,953 |

**திரு. என். எஸ். வி. சித்தன்:** இதுமாதிரி இரண்டொரு குறிப் பிட்ட காலத்தில் இரண்டு இடங்களில் நடத்தப்பட்ட சோதனைகளி னுல் அரசாங்கத்திற்கு ஏறத்தாழ ரூ. 28,000 கிடைத்திருக்கிறது. எனவே இம்மாதிரியான சோதனைகளைச் செய்வதற்கு முனைப்பாக, ஒவ்வொரு க்வார்ட்டரிலும் இப்படிப்பட்ட சோதனைகளை நடத்து வதை விடுத்து விட்டு, எல்லாக் காலங்களிலும், பலவிடங்களிலும் இம்மாதிரிப்பட்ட சோதனைகளை நடத்துவார்களேயானல் அரசாங்



கத்திற்கு அதிகப் பணம் கிடைக்குமே, ஆகவே முனைப்பாக இந்த முயற்சியை மேற்கொள்ள அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அரசாங்கத்தின் வருமானத்தில் அக்கறை கொண்டு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தைப் பரிசீலித்து நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

அரசுப் போக்குவரத்துத் துறை

■324 வினு—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசாங்க பஸ் சர்வீசுக்குத் தனி போர்டு அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) ஆம் எனில், காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) இல்லை.

(இ) வினுவிற்கு இடமில்லை.

**திரு. சு. துரைசாமி:** போக்குவரத்துத் துறையில் அது பெரிய தொரு ஸ்தாபனமாக இருக்கிற காரணத்தினுல் நஷ்டமும் அதே போல் அதிகச் சிரமங்களும் இருக்கின்றன. இதைப் போக்கக் கூடிய அளவில் மாவட்டவாரியாக 25 பஸ்கள் அல்லது 50 பஸ்கள் என்று சொல்லத்தக்க அளவிற்குத் தனித்தனியாக ஒவ்வொரு அமைப்பாகப் பிரித்து நடத்தினுல் நிர்வாகத்திற்கும் வசதியாக இருக்கும். லாபகரமாக இருப்பதற்குத் தக்கபடியாகவும் அமை யும். எனவே அதை ஆராய்ச்சி செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இது மூலக் கேள்விக்குத் தொடர்புடையதாக இல்லை.

**திரு. எம். சுரேந்திரன்:** அரசாங்கப் பஸ்களில் அதனுடைய பராமரிப்பு நிர்வாகம் சரியாக இல்லாமலிருப்பதும், அதில் இருக்கிற போர்டுகள் கூட—சாதாரணமாக வைத்துக்கொண்டிருக் கிற, இன்ன இடத்திற்குப் போய் சேரும், என்பது கூடச் சரியாக இல்லாமல், குடி தண்ணீர் கூட இல்லாமல் மிக மோசமாக இருப்பதைக் கவனித்துத் தக்க ஏற்பாடுகள் செய்வார்களா? போர்டு இல்லாவிட்டாலும் கூட வேறு ஏதாவது ஒரு கண்காணிப்பு செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு அரசாங்கத்திற்கு எண்ணமுண்டா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ஹை பவர் கமிட்டி ரிப்போர்ட்டின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு வரு கிறது. அதைப் பரிசீலித்து முடிவு எடுத்த பிறகு உறுப்பினர் அவர்களின் கருத்துக்களின் அடிப்படையில் ஏதாவது நடவடிக்கை கள் எடுக்கப்படும்.

DR. H. V. HANDE : Sir, after the new Minister took over this department, has he had time to go into the problems of transport, whether it is not a fact that a number of people are complaining of inefficient service . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி, போர்டு அமைக்கிறது பற்றித்தான். அதைப்பற்றிக் கேளுங்கள்.

DR. H. V. HANDE : The supplementary question is directly connected with the subject.

I would like to have a clear-cut answer and request the Minister not to give an evasive answer. What are the complaints that he has received so far about transport, on what basis this board is going to function and whether the travelling facilities will be one of the subjects to which the board will address itself ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போர்டு அமைக்கிறதுபற்றித் தான் கேள்வி. நீங்கள் கேட்கிற தகவல்கள் மினிஸ்டரிடம் இருக்குமா ?

DR. H. V. HANDE : Will the Minister be able to tell us the terms of reference of the Board and the basis on which it is going to function ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : I have already answered that at present there is no proposal to constitute the board. My Friend said that there was a change of portfolio and that that might cause some improvement. I do not agree.

### மலுமிச்சாம்பட்டி கிராமத்துக்குக் குளம்

*325 வினு—திரு. என். மருதாசலம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை தாலுக்கா, மலுமிச்சாம்பட்டி கிராமத்தில் உள்ள சர்க்கார் பள்ள வாரி புறம்போக்கு சர்வே 648, 213, 212 எண்ணுள்ள 11 ஏக்கர் 98 செண்டு நிலத்தில் குளம் வெட்டவேண்டி அக் கிராம விவசாயிகள் 12—8—1968 அன்று சர்க்காருக்கு விண்ணப்பம் அனுப்பினர்களா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம். நில அளவை எண் 648, 212, 213-இல் குளம் ஒன்றை வெட்ட வேண்டுமென வேண்டி அனுப்பப்பட்ட மனுவுடன் ஒன்று மாவட்ட ஆட்சித் தலைவரால் பெறப்பட்டு, அது கோயம்புத்தூர் கோட்ட நிர்வாகப் பொறியாளருக்கு அனுப்பப்பட்டது.

(இ) இந்தப் பணி குறித்த செயற்குறிப்புகள் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவரால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, இப்பணிக்காக "வறட்சித் தணிப்பு பணிகளின்" கீழ் ரூபாய் 79,000 செலவிட இசைவு அளிக்கப்பட்டுள்ளது.





திரு. என். மருதாசலம் : தலைவரவர்களே, அந்தப் பூமியிலே இப்பொழுது குளம் கட்டியாகிவிட்டது. அதற்கு அரசாங்கத்திற்கு நன்றி தெரிவிக்கிறேம்.

### Panchayat Elections

* 326 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Government have postponed the Panchayat Elections in this State ; and

(b) if so, for what reasons ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) ஊராட்சி வாக்காளர் பட்டியல் ஒன்றைத் தனியே தயாரித்து அச்சிட்டு வெளியிடுவதற்கும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும் உள்ள ஊராட்சிகளைச் சீரமைத்து, சிறு பிரிவுகளாக மீண்டும் தொகுப்பதற்கும் இயலும்படிச் செய்வதற்காக 1970-ம் ஆண்டின் தொடக்கத்தில் ஊராட்சிகளுக்கு நடக்க வேண்டிய சாதாரணத் தேர்தல்களைச் சில மாதங்கள் ஒத்திப்போட அரசு முடிவு செய்துள்ளது.

திரு. கே. விநயகம் : அப்படி ஒத்திப்போடப்பட்ட தேர்தல் இறுதியாக எப்பொழுது நடக்கும் ? இன்னும் பல பஞ்சாயத்துக்கள் தாங்கள் பிரிந்து போக வேண்டுமென்று மனுக்களை அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறர்களே, அவைகளைப்பற்றி இறுதியான முடிவை அரசாங்கம் எடுத்துவிட்டதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவரவர்களே, இந்தத் தேர்தல்கள் ஜுலை மாதத்தில் கடைசி வாரத்திற்குள்ளாக நடத்தி முடிக்க வேண்டுமென்று அதற்கான ஆயத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. ஊராட்சி மன்றங்களைப் பிரிப்பது சம்பந்தமான காரியங்கள் அநேகமாக முடிவுற்ற நிலையில் இருக்கின்றன. மேற்கொண்டும் புதிதாக ஊராட்சிகளைப் பிரிப்பதுபற்றிய தகவல்களை இனிமேலும் அனுப்பினல் காலதாமதம் ஆகும் என்பதால், தேர்தலுக்கு முன்னல் அனுப்ப வேண்டாமென்று எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, கன்னியாகுமரி ஜில்லாவிலே, குறிப்பாக இந்தப் பஞ்சாயத்து சீரமைப்பு பற்றி பல ஆட்சேபனைகள் தெரிவித்து விண்ணப்பங்கள் அனுப்பியிருக்கிறர்களா ? அவற்றை அரசாங்கம் பரிசீலிப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவரவர்களே, ஏற்கெனவே, மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கே இருக்கிற மாவட்ட அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டி, அதனுடைய கருத்துக்களைக்

கேட்டறிந்து திட்டங்கள் அனுப்பியிருக்கிறார்கள். அவைகளிலே சிலபல மாறுபாடுகளைச் செய்ய வேண்டுமென்று உறுப்பினர்கள் கேட்டிருக்கிறார்கள். அவைகள் பரிசீலிக்கப்பட்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்பொழுது, அவைகள் அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்பது அல்ல.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** கன்னியாகுமரி ஜில்லாவிலே மாவட்ட அபிவிருத்தி மன்றத்திலே இது சரியாகப் பரிசீலிக்கப் பட்டதா? அங்கத்தினர்கள் வெளிநடப்புச் செய்தார்கள், அதைப் பற்றி அரசாங்கத்திற்குத் தகவல் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** எற்கெனவே அங்கத்தினர்கள் அத்தனைபேரும் ஏகமனதாக ஒரு தீர்மானத்தை இந்த அரசாங்கத்திற்கு முதலாவதாக அனுப்பினார்கள். பின்னால் அவர்கள் கருத்தை மாற்றிக் கொண்டு ஒருவேளை வெளிநடப்பு செய்திருக்கலாம். அதைப்பற்றிப் புகார்கள் நமக்கு எதுவும் நேரடியாக வரவில்லை.

**திரு. கோ. கருணைநாதன்:** ஊராட்சி மன்றத் தேர்தலில் மாற்றம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** அடுத்த கேள்வி அதன் தொடர்புடையது. ஊராட்சி மன்றத்திற்கான தலைவர் தேர்தலை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறையைப் பின்பற்ற அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. அதற்கான சட்ட திருத்தம் விரைவில் வரும்.

* 327 *Q.*—THIRU K. VINAYAKAM: **Will the Hon. the Minister for Local Administration be pleased to state—**

**(*a*) whether the Government proposes to simplify the procedures relating to Panchayat and Panchayat Union Elections; and**

**(*b*) if so, what those new proposals are?**

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** (அ) ஊராட்சி மன்றத் தலைவரை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறையினைத் தவிர, நடைமுறை மாற்றம் எதுவும் செய்யும் செயற்குறிப்பு இல்லை.

(இ) இவ் வினா எழவில்லை.

**திரு. கே. விநாயகம்:** அப்படி ஊராட்சிமன்றத் தலைவர் தேர்தல் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றால் அதை இலாகா ஆர்டர் மூலமாகப் போட முடியாது. அதற்குத் தகுந்த மசோதா வர வேண்டுமென்று விதியிருக்கிறது. அந்த மசோதாவை நாமெல்லாம் கலைந்து போவதற்குள்ளாகக் கொண்டு வருவார்களா? அல்லது வேறு எப்பொழுதாவது சட்டசபையைக் கூட்டி அப்பொழுது கொண்டுவரப் போகிறார்களா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** தலைவரவர்களே, ஊராட்சி மன்றத்தினுடைய சட்டதிட்ட விதிகளை மாற்றுவது என்னும் பொழுது அதற்கான மசோதாவை இந்தச் சபையிலே நிறைவேற்ற



வேண்டுமென்ற விதியைக்கூட நாங்கள் புரிந்துகொள்ளாமல் இருப்போம் என்று கருதுவது விந்தையாக இருக்கிறது. அந்தக் காரியம் நடைபெறும் சமயத்தில் எப்பொழுது வரவேண்டுமோ அப்பொழுது இந்த மன்றத்தின் முன்னால் வைத்து நிறைவேற்றப்படும்.

## தஞ்சாவூர் காந்தி மார்க்கெட்

* 328 **வினா—புலவர்** பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூரில் அமைந்திருந்த காந்தி மார்க்கெட் என்பது காமராஜ் மார்க்கெட் என்று ஏன், எப்போது மாற்றப்பட்டது?

(இ) அதை மீண்டும் காந்தி மார்க்கெட் என்று வழங்கச் செய்வதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** (அ) & (இ) தஞ்சாவூரில் அமைந்திருக்கும் "காந்தி மார்க்கெட்" என்பது "காமராஜ் மார்க்கெட்" என்று மாற்றப்படவில்லை. "கோட்டை காய்கறி மார்க்கெட்" என்பதுதான் "காமராஜ் மார்க்கெட்" என்று மாற்றப்பட்டது. தஞ்சையில் மானம்புசாவடி என்ற வேறு இடத்தில் "காந்தி மார்க்கெட்" என்று ஒரு மார்க்கெட் இருக்கிறது.

**புலவர் பொ. பொன்னம்பலம்:** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, சில மாதங்களுக்கு முன்னால் தீப்பற்றி எரிந்ததாகச் செய்தி வந்ததே, அது காமராஜ் மார்க்கெட்டில்தானே. அப்பொழுது பத்திரிகைகளில் முன்னால் இது காந்தி மார்க்கெட் என்று இருந்து, அது காமராஜ் மார்க்கெட் என்று பின்னாலே மாற்றப்பட்டது என்று செய்திகள் வந்திருந்தன. அதுபற்றிய விவரம் தெரியுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** பத்திரிகைகளிலே வந்த செய்திகளை ஆதாரமானவைகளாக எடுத்துக் கொள்ளத் தேவை இல்லை.

## *Staff Inspection Wing in Finance Department*

* 315*Q.*—THIRU G. GOMATHISANKARA DIKSHDAR: **Will the Hon. the Minister for Finance be pleased to state whether there are proposals under the consideration of this Government to have a Staff Inspection Wing in the Finance Department?**

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** அப்படிப்பட்ட உத்தேசம் தற்சமயம் இல்லை.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்:** தலைவரவர்களே, மத்திய சர்க்காரில் இன்ஸ்பெக்ஷன் ஸ்டாஃப் ஏற்படுத்தியிருப்பதைப் போல, இங்கேயும் ஏற்படுத்தி, ஸ்டாஃப்கள் தேவைக்குத் தகுந்தபடி இருக்கிறார்களா, கூடுதலாக வேண்டுமா, அல்லது குறைக்க

[1970 மார்ச் 11

வேண்டுமா என்பதைக் கவனிப்பதற்கு வசதி ஏற்படுமாதலால், இதைக் கவனிக்க அரசாங்கம் முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஏற்கனவே பப்ளிக் டிபார்ட்மெண்டில் 'இன்ஸ்பெக்ஷன் செல்' இருக்கிறது. கண்காணிப்பதற்காக அந்தத் துறையில் இருக்கிறது. எனவே, நிதித் துறையிலும் தனியாக அப்படிப்பட்ட ஒன்று தேவையில்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

THIRU K. VINAYAKAM : Sir, if I can trust my memory I seem to have read in the Press a statement regarding the constitution of a separate Staff Inspection Wing in the Finance Department, made by no less a person than the Hon. Minister for Finance himself. Basing on that statement only this question has been tabled. Is that statement right or this statement right?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இப்பொழுது இல்லை என்று தான் நான் கூறினேன். அப்பொழுது சொல்லியிருந்தாலும் அந்த ஸ்டேட்மெண்டைத் திருத்திக் கொள்வதற்கு இடம் ஏற்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### (2) அறிவிப்பு.

### திரு. கோ. சுவராகன் தலைமையில் இயங்கும் கட்சியில் சேர்ந்திருக்கும் உறுப்பினர்கள் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. திரு. கோ. பூவராகன் அவர்கள் தலைமையில் இயங்கும் சட்டப் பேரவை காங்கிரஸ் கட்சியில் கீழ்க்கண்ட இரு உறுப்பினர்களும் சேர்ந்திருப்பதாக எனக்கு அவர் அறிவித்துள்ளதை இப்பேரவைக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

1. திரு. எஸ். சிவசுப்பிரமணியம்.
2. திரு. பி. ஜெயராஜ்.

### (3) 1970-71-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### கோரிக்கை எண் 13—கல்வி.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

" நிதிக் கோரிக்கை எண் 13—கல்வி என்ற தலைப்பின்கீழ் ரூ. 67,73,14,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் ".



1970 மார்ச் 11]

DR. H. V. HANDE : Sir, to discuss the need for the continuance of English as the medium of instruction at the collegiate level, I move—

'That the allotment of Rs. 67,73,14,400 under Demand No. 13 be reduced by Rs. 100'.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** தலைவரவர்களே, மாநில ரீதியில், கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்க கமிட்டி அமைப்பதைப் பற்றி விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண் 13—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 67,73,14,400-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ". என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** தலைவரவர்களே, உயர்நிலை பள்ளி ஆசிரியர்களின் வேலைப்பளுவைக் குறைத்து வேலையில்லாத ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வழிசெய்வது குறித்து விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண். 13—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 67,73,14,400-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ". என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. கே. பி. எஸ். மணி :** தலைவரவர்களே, பள்ளியில் ஆசிரியர்களை அதிகப்படுத்தி அவர்களுக்குத் தேவையான வசதி செய்து கொடுத்து முறையாகச் செயல்பட வழி வகை செய்வது பற்றி விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண். 13—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 67,73,14,400-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ". என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, ஆரம்பப் பள்ளிகளில் 20 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் வீதம் நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று விவாதிக்க,

" நிதிக் கோரிக்கை எண். 13—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 67,73,14,400-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ". என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவரவர்களே, பட்டம் பெற்ற மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு தேடித்தர வேண்டியது பற்றி விவாதிக்க

" நிதிக் கோரிக்கை எண். 13—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 67,73,14,400-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ". என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

### (4) நடைமுறைக் கேள்வி

**வினா நேரம் முழுமையும் பயன்படுத்தப்படவில்லை எனவும், துணை வினாக்கள் கேட்கப் போதிய வாய்ப்பு கொடுக்கப்படவில்லை எனவும் சொல்லப்பட்டது குறித்து**

**திரு. டி. மார்டின் :** பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். பேரவைத் தலைவரவர்களே, கேள்வி நேரம் 10 மணி வரைக்கும் உண்டு. ஆனால் அநேகமாக, கேள்விகள் துணைக் கேள்வி கேட்பதற்கு நானும் மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக என்னுடைய கைகளை உயர்த்திக் கொண்டிருந்தேன். அதிகக் கேள்விகள் கேட்க எனக்கு வாய்ப்பில்லாவிட்டாலும் பரவாயில்லை. ஆனால் பத்து மணி வரைக்கும் அந்தப் பொன்னான நேரத்தைத் தாங்கள் கேள்விகளுக்காக ஒதுக்கீடு செய்திருக்கும்பொழுது அதற்கு முன்னாலேயே கேள்வி நேரத்தை முடித்துவிட்டு, இன்று மானியக் கோரிக்கைக்குப் போய்விட்டீர்கள். ஆகவே, தயவு செய்து 10 மணி வரைக்கும் எல்லோரும் கேள்வி கேட்கக்கூடிய முறையில் வாய்ப்புக் கொடுத்து, அதற்குப் பிறகு மானியக் கோரிக்கைகளை எடுத்துக் கொள்வீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முதல் மணி நேரம் கேள்வி நேரம் தான். ஆனால், கேள்விகள் இல்லை, அல்லது துணைக் கேள்விகள் கேட்பதற்கு உறுப்பினர்கள் கையைத் தூக்கவில்லை என்ற ஒரு நிலைமை ஏற்படுகிற நேரத்தில், அந்த ஒரு மணி நேரத்தில் பாக்கி நேரம் சும்மா உட்கார்ந்து இருக்கவேண்டுமென்று விதிமுறை இல்லை. முதல் அவர் குவெஸ்சின் அவர் அவ்வளவுதான். அந்த ஒரு மணி நேரமும் கட்டாயமாகக் கேள்வி நேரத்திற்கு ஒதுக்க வேண்டும் என்பது விதிமுறை இல்லை. மேலும் திரு. மார்டின் அவர்கள் தனக்கு வாய்ப்புக் கொடுக்கவில்லை என்று சொல்லுகிறார். அவர்களுக்கு துணைக் கேள்விகள் கேட்க நிறைய வாய்ப்புக் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறேன். அவர் கையை எழுப்பும் பொழுதெல்லாம் கூப்பிட்டுக் கொண்டுதான் இருக்கிறேன். ஆனால், இன்று மார்டின் அவர்கள் அங்கிருந்து கொண்டே கையைத் தூக்காமல், 'ஸார், ஸார்' என்று குரல் எழுப்பினார். அதைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காகத்தான் இன்றைக்கு திரு. மார்டின் அவர்களுக்கு கொடுக்கும் வாய்ப்பை கொஞ்சம் குறைத்துக் கொண்டேன் என்பதை திரு. மார்டின் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM : It is an avowed principle in all democratic institutions that a Member should try to catch the eye of the Speaker. But your eye is such an elusive object. You see us but I do not know whether your conscience permits you to call us.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வினாயகம் அவர்களுக்கு கண் கெட்டிருக்கிற அளவுக்கு என்னுடைய கண் கெட்டிருக்கவில்லை. எல்லா உறுப்பினர்களையும் பார்க்கிறேன். எல்லா உறுப்பினர்களின் பெயரையும் தெரிந்து கொண்டிருக்கிறேன். இந்தக் கோடியில் திரு. மார்டின் அவர்களையும், அந்தக் கோடியில் இருக்கும்



திரு. ஆறுமுகம் அவர்களையும், ஆகிய இருவர்களையும் பார்க்கக் கூடிய அளவுக்கு என் கண் பார்வை இருக்கிறது. ஆகவே, எல்லா உறுப்பினர்களையும்தான் நான் பார்க்கிறேன். யாரையும் பார்க்கவில்லை என்ற குறை வேண்டாம். திரு. மார்டின் அவர்கள் துணைக் கேள்வி கேட்கவேண்டுமென்றால் கையை உயர்த்துவதுதான் பழக்கம். ஆனால், இன்று அப்படியில்லாமல், 'ஸார்', 'ஸார்', 'ஸார்' என்று குரலை அங்கிருந்தவண்ணமே எழுப்பிக் கொண்டிருந்தார். அதைத் தவிர்க்கவேண்டும், அதை அவர் உணர வேண்டும் என்பதற்காகத்தான் இன்று அவருக்கு நான் அதிக வாய்ப்புக் கொடுக்கவில்லை.

THIRU K. VINAYAKAM : You have not heard me, Sir. There was a ruling in the other House, viz. Lok Sabha, that a Member should try not only to attract the 'eye' of the Hon. Speaker but also the 'ear'. There was a rling like that yesterday. We follow the Mother of Parliaments or the Lok Sabha. At least now please give a ruling whether we can draw your attention by the 'eye' or 'ear' also, if possible.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கையைத் தான் தூக்க வேண்டும். அப்படியல்லாமல், இருக்கிற 234 உறுப்பினர்களும் 'பேரவைத் தலைவர்', 'பேரவைத் தலைவர்', 'ஸார்', 'ஸார்', 'ஸார்', என்று கூப்பிடுவதாக இருந்தால், ஒன்றுமே நடைபெறாது.

*திரு. மார்டின் எழுந்தார்.*

MR. SPEAKER : Please sit down.

THIRU T. MARTIN : On a point of Order, Sir. Under Rule 22 of our Assembly Rules, it is stated as follows :—

"The first hour of every sitting shall unless the House unanimously resolves otherwise, be available for the asking and answering of questions. The Speaker may, in his discretion exted the time for questions".

Mr. Speaker, Sir, I want a ruling from the Chair. The first hour is allotted as 'question hour'. The Hon. Speaker has got discretion to extend the time, with the leave of the House. But from this rule I understand that the Hon. Speaker has no power to decrease the time which has been allotted for question-hour. My submission is today the Hon. Speaker has limited the questions before seven minutes to 10.00 A M. I want to know from the Hon. Speaker whether it is proper, in view of Rule 22 of our Assembly Rules. I want your ruling on that.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதற்கு நான் முன்பே ஒரு நிலைமையைச் சொன்னேன். முதல் மணி கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற மணி என்று விதி முறையில் கொடுக்கப்பட்டிருந்தாலும், போதிய கேள்விகள் இல்லை என்ற நிலை ஏற்படலாம். அல்லது துணைக் கேள்விகள் கேட்பதற்கு உறுப்பினர்கள் விரும்பாத ஒரு நிலை ஏற்படலாம். அப்படிப்பட்ட நேரத்தில் அரை மணி நேரத்தில் கேள்விகள் முடிந்துவிட்டால், பாக்கி உள்ள அரை மணி நேரத்தை வேறொன்றுக்குமே பயன்படுத்தக் கூடாது என்று சொல்லி, அதை வீணாக்க முடியாது. ஆகவே, அந்த நிலையும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1970 மார்ச் 11

## (3) 1970-71-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி

### மானியக் கோரிக்கை எண் 15—கல்வி—தொடர்ச்சி

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறையைப்பற்றி பல்வேறு விவரங்கள் அடங்கிய அறிக்கை * ஒன்று இந்த மன்றத்தின் முன் வைக்கப்பட்டிருக்கிறது. அதையே என்னுடைய உரையாகக் கொண்டு, அதைப் பதிவு ஏட்டில் ஏற்றக்கொள்ளுமாறு தங்களைக் கேட்டுக்கொண்டு, இந்த விவாதத்தைத் தொடங்குமாறு கோருகிறேன்.

**திரு. ஆர். கருப்பையா :** பேரவைத் தலைவர் அவர்களே, இன்று எடுத்துக்கொண்டுள்ள கல்வித் துறை மானியத்தின் மீது எங்கள் கட்சியினர் கொண்டு வந்துள்ள வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக, கல்வித் துறை மானியம் என்பது ஒரு சாதாரணமான மானியம் அல்ல. அது மிக முக்கியமான மானியம். ஆகவே, அதற்காக நமது சர்க்கார் ஒதுக்கியிருக்கும் தொகை, அது அமல் நடத்தப் படுகிற முறை இவைகளை யெல்லாம் பற்றி இந்த நேரத்தில் சிந்திக் காமல் இருக்க முடியாது. * * சென்னை பல்கலைக்கழகம் தமிழ கத்தில் மட்டுமல்ல, இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்திலேயே ஒரு தலைசிறந்த பல்கலைக்கழகமாக மதிக்கப்பட்டு வந்தது. சென்னை பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர்கள் என்றாலே ஒரு தனி மதிப்பாக இருந்தது. * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** * * உறுப்பினர் அவர்கள் பேச்சில் * * கூறியவை நடவடிக்கை குறிப்பேட்டிலிருந்து நீக்கப்படும், அதைப் பிரசுரிக்காமல் இருக்குமாறு நான் பத்திரிகை யாளரைக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவர் அவர்களே, கல்வித் துறை மானியத்திற்கு ஒதுக்கியிருக்கிற தொகை குறைவாக இருக்கிறது; இது போதாது. ஒரு துறை நன்றாகச் செயல்படவேண்டுமென்றால், முதல் அமைச்சர் அவர்கள் சொன்னபடி, அதில் இருப்பவர்கள் நல்லவராகவும் வல்லவராகவும் இருக்க வேண்டும். ஆகவே, அந்தத் துறைக்கு வரவேண்டியவர்கள் நல்லவராக மட்டும் இருந்தால் போதாது. சிறந்த முறையில் படித்தவராகவும், வல்லவராகவும் இருக்கவேண்டும். பொதுவாக, கல்வி கற்றவர்களுடைய எண்ணிக் கையைக் கொண்டுதான் ஒரு நாட்டினுடைய தகுதி நிர்ணயிக்கப் படும். அந்தப் பகுதியிலுள்ள மற்றவர்களுடைய எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு தான் அந்தப் பகுதியின் தகுதி நிர்ண யிக்கப்படும். தமிழகத்தைப் பொறுத்த மட்டில், ஏறக்குறையப் பார்த்தால், கேரள மாநிலத்தில் உள்ள கற்றறிந்தவர்களுடைய எண்ணிக்கையைவிட, இங்கு கற்றறிந்தவர்களின் எண்ணிக்கை

* 212–259-ம் பக்கங்களில் மூன்றும் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



1970 மார்ச் 11] [திரு. ஆர். கருப்பையா]

குறைவாகத் தான் இருந்து வருகிறது. நாட்டில் கல்வி வளர வேண்டுமானால், அதற்கு அடிப்படையாக ஆரம்பக் கல்வி வளர வேண்டும். இந்த நிலைமையில் இந்த ஆண்டு தொடக்கக் கல்விக் காக ஒதுக்கியிருக்கிற பணம் மிகக் குறைவு. 1968-69-ல் ரூ. 200 லட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது. 1970-71-ல் ரூ. 133 லட்சம் தான் ஒதுக்கப்பட்டிருந்தது, ரூ. 67 லட்சம் குறைக்கப்பட்டிருக்கிறது. அடுத்து, பகல் உணவிற்காக, ஏழை மாணவர்கள், வசதியில்லாத மாணவர்கள், ஏழை அரிசன மாணவர்கள், பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் மதிய உணவு கிடைக்கிறது என்பதற்காகத் தான் பள்ளிகளுக்கு அதிகமாக வருகிறார்கள். ஏழை மாணவர் களுக்கு மதிய உணவுத் திட்டத்திற்காக 1968-69-ல் 27 லட்சம் ஒதுக்கப்பட்டது. 1970-71-ல் ரூ. 20 லட்சம் தான் ஒதுக்கப்பட் டிருக்கிறது. அதிலும் ரூ. 7 லட்சம் குறைக்கப்பட்டிருக்கிறது. பொதுக் கல்விக்காக சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 720 லட்சம், ஆனால் இந்த ஆண்டு ரூ. 86 லட்சம் குறைவாக, ரூ. 634 லட்சம் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏழைக் குழந்தைகளுக்கு புத்தகங்கள் வாங்குவதற்காக முன்பு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 5 லட்சம். இப்பொழுது 1970–71-ல் ரூ. ஒரு லட்சம்தான் ஒதுக்கி இருக்கிறார்கள். ஒரு லட்சத்தைக் குறைத்திருந்தால் கூடப் பரவா யில்லை. ஆனால் ஒரு லட்சம் மட்டும் தான் ஒதுக்கியிருக்கிறார்கள். நான்கு லட்சம் குறைத்திருக்கிறார்கள். இது முறையாகுமா என்று கேட்கிறேன்.

அடுத்து, இடைநிலைக் கல்விக்காக 1968-69-ல் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 140 லட்சம். இப்பொழுது 1970-71-ல் ரூ. 96 லட்சம் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது, ரூ. 44 லட்சம் குறைக்கப்பட்டிருக் கிறது. புதிய கல்லூரிகள் தொடங்க வேண்டுமென்பதற்காக, அந்த ஆவலில் முன்பு சர்க்கார் அதற்காக ரூ. 26 லட்சம் ஒதுக்கியிருந் தார்கள். இந்த ஆண்டு புதிய கல்லூரிகள் துவங்குவதற்காக ரூ. 17 லட்சம் மட்டும் தான் ஒதுக்கியிருக்கிறார்கள். பணத்தைக் குறை வாக ஒதுக்கி, கல்லூரிகளை அதிகமாகத் தொடங்கினால், அது நல்லது அல்ல. இன்றைக்கு ஒன்றை மாத்திரம் சொல்லிக் கொள் கிறேன். பல கல்லூரிகளுக்கு கட்டடம் இல்லை, உயர்நிலைப் பள்ளி களுக்கு கட்டடம் இல்லை. இதற்காக ஒதுக்கியிருக்கிற தொகை மிகக் குறைவு, போதாது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, தொழில் நுட்பக் கல்விக்கு ஒதுக்கியிருக்கும் தொகை குறைவாக இருக்கிறது. 1968-ல் அது ரூ. 160 லட்சமாக இருந்தது. இந்த ஆண்டு அதுவே 92 லட்ச ரூபாய்தான். அந்த வகையில் 68 லட்ச ரூபாய் துண்டு விழுந்திருக்கிறது.

8-வது வகுப்பு மாணவர்களைப் பொறுத்தவரையில், முன்பு ஒரு பொதுத் தேர்வு இருந்தது. அந்தப் பொதுத் தேர்வின் அடிப் படையில் 9-வது வகுப்பிற்குச் சேர்த்தார்கள். இது இப்பொழுது

Talented children should be encouraged. Such children may be watched and encouraged to go in for higher studies and perhaps some day they will become leaders of our country.

Teachers of Aided Schools are eagerly looking forward to the decisions of the Second Pay Commission. The Government have realised that some immediate relief should be given to the teachers and have announced a Special Compensatory Allowance of Rs. 10 per mensum for all those who get a salary of Rs. 500 and below. This will be appreciated by the teachers though there may be some who may feel that the paltry sum of Rs. 10 may not go a long way in relieving their sufferings. But what is more important is the generous gesture of the Government in being prepared to spend Rs. 6 crores by way of granting this relief. In this connection, I request that whatever benefits are given to aided school teachers may be made applicable to the teachers working in the Anglo-Indian schools, for they also are included in the category of teachers.

It will not be out of place to refer to the question of language in a discussion on Education. The daily papers make frequent reference to the question of language. At the recent conference held at Tiruchirappalli, the leaders of the Ruling Party gave a categorical assurance that they would endeavour to get statutory recognition for the Nehru formula which states that English would continue to be an Associate or alternate language for the non-Hindi speaking people as long as they need it.

In 1959 the leader of the Anglo-Indian community in the Parliament moved a resolution that English be included in the Eighth Schedule of the Constitution. It came up for discussion in April 1959. The Member of Parliament pointed out that English was the language of a recognised minority of the country, namely the Anglo-Indians. The Bombay High Court and the Supreme Court also affirmed that English was as much an Indian language as the other languages of the country. The Supreme Court went a step further and stated that English was more an Indian language than the other languages mentioned in the Eighth Schedule.

It was the language of the Constitution and was the sole official language upto 1965. In August 1959 Pandit Nehru fearing that there would be resistance in the Parliament to the imposition of Hindi, intervened and announced what is now known as the 'Nehru Formula', namely, that English would continue as the alternate or associate language for as long as the non-Hindi-speaking people so desired. Pandit Nehru reaffirmed this formula the following month and said that the imposition of compulsory tests in Hindi for instance for the Union Public Service Commission examinations should not be insisted upon. In 1963 the Official Languages Bill came up for discussion but unfortunately this did not help in implementing Nehru's assurance. In 1967 a Bill to amend the Official Languages Act was introduced and the three-language formula was imposed on the non-Hindi-speaking people.

Our State Government introduced the two-language formula in 1968. At present more and more schools and colleges are following the Tamil medium. Parallel sections in English are few at present. When the students taking up the Tamil medium upto the S.S.L.C. standard go to the P.U.C. and take up the English medium, for a whole



term or more they are unable to follow what is taught through the medium of English. In many cases such students join the degree course and take up the Humanities. There again they have to go back to the medium of English but according to the Note on 'Education' circulated to the hon. Members of this House, more and more institutions and more and more pupils are now taking up the Tamil medium.

It is recommended by great educationists that Science and Technology and Post-Graduate courses in these subjects should be taught through the medium of English.

If Pandit Nehru's formula is made statutory, parallel courses through the medium of English could be provided for the minorities in the State and for others like the Central Government servants who move from State to State. There is also another group of persons who aspire to join India's Foreign Service. In these days of Embassies, exchange of students and representatives in organisations like the United Nations Organization or World Health Organization, a sound knowledge of English is invaluable. English should be taught at a high level without lowering the level of the regional language. Thank you, Sir.

DR. H. V. HANDE : Sir, I rise in support of the cut motion I have moved and also in support of the cut motions which I have not moved. The very fact that I have been constrained to give more than 20 cut motions for this particular Demand gives a clear indication that I am totally dissatisfied with the manner in which the Education Department is being run.

Sir, all the ills and maladies that were there in this Department before 1967 have not come down but have increased after the new Ministry has come into power. I view with great concern certain important things which I shall very briefly refer just now.

Firstly, the present system of education is so poor and so wrong and we have almost nationalised the schools and colleges by our peculiar system of free education and grants which are insufficient. Practically the schools and colleges are now run by this Department itself directly or indirectly and so much so the very incentive that was there previously in the field of education has been completely removed. Why is it that we have not been able to satisfy the teachers and the non-teaching staff in spite of pouring in about Rs. 67 crores? That is because the number of philanthropists who used to come forward with their money before have no place now and so much so the private money which was tapped before is now idle. Even if we give Rs. 100 crores, will it be possible to satisfy everybody? No. Now private philanthropy has been put in cold storage and the Education Department has not bothered to properly evolve methods and policies which could bring the incentive factor to the fore. That is my first charge.

Now in regard to the functioning of the D.P.I.'s Office it is now in a much worse position than it was before. Even though the Education Department has been bifurcated and there are Directors of School Education and Collegiate Education, things have not improved. A number of complaints have been brought to the attention of the D.P.I.'s Office but absolutely no interest is evinced by the Department. There is a bundle of red tapism there. If we want to see a classical example of redtapism in the whole of Tamil Nadu, we can

[திரு. ஆர். கருப்பையா] [1970 மார்ச் 11

என்று சொன்னால் எப்படி செயல்படுத்த முடியும்? ஆகவே, தமிழில் பல நூல்கள் வெளிவர தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அடுத்து, தமிழில் படித்துவிட்டு வருகிறவர்களுக்கு வேலை வாய்ப்பு உத்தரவாதம் அளிக்க வேண்டும். எண்டோமெண்ட் போர்டிலே வேலை வாய்ப்பு தருவதாகச் சொல்கிறார்கள். அப்படிச் செய்தாலும் வருடத்திற்கு நான்கைந்து பேர்களுக்குத்தான் வேலை வாய்ப்பு செய்து தர முடியும். மற்றவர்களுக்கு என்ன செய்வது? ஆகவே, தமிழில் படித்துவிட்டு வருபவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதில் முதல் சலுகை அளிக்கப்படும் என்ற உத்தரவாதம் அளிக்கவேண்டும்.

அடுத்தபடியாக, உயர்நிலைப் பள்ளிகளில் எலெக்டிவ், அதாவது விருப்பப் பாடம் இருக்கிறது. சாதாரணமாக நகரங்களில் இருக்கக்கூடிய உயர்நிலைப் பள்ளிகளில்—சயின்ஸ் லாபரேட்டரி—விஞ்ஞானக் கூடங்கள் அமைந்திருப்பதால் நகரத்து மாணவர்கள் விருப்பப் பாடத்தில் சயின்ஸ் எடுத்துக்கொள்ள வசதி இருக்கிறது. ஆனால் கிராமத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் இந்த விஞ்ஞானக் கூடங்கள் இல்லாத காரணத்தினால் அங்கே படிக்கும் மாணவர்கள் ஹிஸ்டரி, எகனமிக்ஸ், பூகோளம் போன்ற விருப்பப் பாடங்களைத்தான் எடுத்துக் கொள்ள முடிகிறது. சயின்ஸ் விருப்பப் பாடமாக எடுக்க முடிவதில்லை. கல்லூரிகளில் சேரும்போது நகரத்து மாணவன் தான் விரும்பும் துறையில் சேருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதே சமயத்தில் கிராமத்து மாணவன் உயர்நிலைப்பள்ளியின் எந்த விருப்பப்பாடம் எடுத்துப் படித்தானோ அதையேதான் கல்லூரியிலும் எடுக்க வேண்டியிருக்கிறது. கிராமங்களிலுள்ள உயர் நிலைப் பள்ளிகளில் விஞ்ஞானக் கூடங்கள் இல்லாத காரணத்தினாலேதான் அவன் சயின்ஸ் தவிர மற்றப் பாடங்களை எடுத்துக்கொள்கிறான். ஆகவே, ஒரு சாராருக்குத் தான் நல்ல வாய்ப்பு இருக்கிறது. திரு. ராஜாஜி அவர்கள் முன்பு குரு குலக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்து, எப்படி ஒரு சாராருக்கு நன்கு படிக்க வாய்ப்பு அளித்தார்களோ அதேபோலத் தான் இந்த முறையும் அமைந்திருக்கிறது. ஆகவே, கிராமங்களில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளிலும் விஞ்ஞானக் கூடங்களை அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது மாநிலக் கல்லூரிக்கு ஏறக்குறைய ஒன்றரை ஆண்டுகளுக்கு முன் திரு. சேதுராமன் என்பவர் எம்.பி. எஸ்.ஸி. மூலமாக பொருளாதார போராசிரியராக தேர்ந்தெடுக்கப் பட்டார். ஆனால் ஒன்றரை ஆண்டுகளாகியும் அவருக்கு இன்னும் வேலை கொடுக்கப்படவில்லை. தற்காலிகமாக அந்தப் பதவியில் இருந்தவர்தான் தொடர்ந்து இருந்து வருகிறார். [illegible]



1970 மார்ச் 11] [திரு. ஆர். கருப்பையா]

மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவருக்கு ஏன் இன்னும் வேலை கொடுக்க வில்லை? ஏன் காலதாமதம்? அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். . .

(மணியடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் திருமதி சுவாரிஸ் அழைக்கப்பட்டார்).

* THIRUMATHI A. SUARES : Mr. Speaker, Sir, while supporting the Demand for Rs. 67 croes under 'Education I wish to offer a few remarks. In this year's budget Government has mentioned particularly three categories of employees—government employees, local body employees and teachers. It is heartening to find that Government consider teachers as forming a separate category. The relief measures mentioned in this year's budget speech have been appreciated by the teachers in general. The category of teachers is one among the several categories of persons who have suffered most from the rising cost of living during the past few years. The scales of pay and allowances have been rigid, except for revision by one pay commission. Teachers have been poorly paid for a very long time. Consequently the morale of the teachers has been lowered, as they have no status in society and they have unfortuately developed an imferiority complex.

Government has now taken up the question of improving the conditions of service of teachers. A committee was set up by the Government to go into this question. This committee issued a questionnaire and invited members of the teaching profession to attend the seminars where the grievances of teachers were expressed and explained. The report of this committee is awaited.

The relief measures announced by the Government will go a long way to help the families to balance their budget. Free medical assistance will reduce the expenditure of the family. Besides this, it will raise the standard of health in the families, because the members of the families will go to government hospitals and dispensaries. House rent at present is very exorbitant for the limited accommodation provided. Even a small assistance by way of house rent allowance will help teachers. Festival Advance and marriage loan will also be appreciated, and the burden of repayment will be less heavy than in the case of loans taken from moneylenders.

As a result of free education and greater awareness of the value of literaey, more and more pupils are enrolled evey year. In the coming year provision is made for 2,720 teachers for the age group 6 to 11, 1,930 teachers for the age group 11 to 14 and 1,320 B.Ts. for the age group 14 to 17. This makes a total number of 6,000 teachers. This will solve the unemployment problem to a great extent.

Government has rightly placed emphasis on the maintenance of standards and qualitative improvements. When large sums of money amounting to lakhs or even crores are spent on the expansion of education, the teachers should be dedicated workers and realise the magnitude of the work entrusted to them. Managements of schools, inspecting agencies and advisory committees of schools have also a responsibility in watching the work done in the newly-opened schools and the newly-opened sections. Training students to be self-reliant, to use initiative, to work intelligently is absolutely necessary, besides mere class room routine work.

see it in the D.P.I.'s Office in Nungambakkam. I can quote one or two examples. For instance there was a teacher who was suspended from a school. I have given that complaint to the Hon. Minister also. I drew the attention of the Secondary Education Commission also to it, to whom I have given evidence. I have given facts and figures. Even the Secretariat has taken interest. The Hon. Minister has taken interest. But the department has not bothered about it at all. What action have they taken in spite of the fact that an order of Government had been flouted. I bring this to the notice of the Hon. Minister. I do not want to waste much time on this.

Whatever be the decision at the Headmasters' Conference or the Secondary School Teachers' Conference, they send a copy to the office of Director of School Education. But that is put in cold storage. That is not passed on to the Secretariat or the Minister, with comments. I do not know why the officers' behaviour should be so.

With regard to University, it is said that it is an autonomous body and we should not make charges against its Vice-Chancellor. There is the method of electing the Vice-Chancellor. Even when the Madurai University Bill came, this subject was discussed. What I say is, the post of Vice-Chancellor should not be converted into that of a politician. What is happening now? We find that it has become a political appointment. We find them adopting the policy of politicians. We do not want the Vice-Chancellors to become greater politicians than the politicians themselves. Therefore, what I say is, let a system be evolved by which the post of Vice-Chancellor is not reduced to that of a politician. I hope and trust statements of a political character will not be published by Vice-Chancellors. A sort of practical convention must be established by which irresponsible statements will not be issued by Vice-Chancellors (I mean Vice-Chancellors all over the world). A Vice-Chancellor said that he was glad that so many judges belonging to a particular community had been appointed—such statements are of a bad odour; it leads to bad effects and demoralises the teachers and students.

மாண்புமிகு இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அப்படி நான் சொல்லவில்லை என்று அவர்கள் ஒரு மறுப்பு அறிக்கை விடுத்திருக்கிறார்கள். அது பத்திரிகையிலே எல்லாம் கூட வெளி வந்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்களா?

DR. H. V. HANDE: After that, there was the reply by the Correspondent of the 'Hindu' of that area. That is for information. I am very glad that it became necessary to refute that. To that extent, the mistake had been realised. To that extent, I am happy.

I forgot to say one thing about the Director of School Education. In Egmore (my distinguished friend from that area is here) there are two schools in the same compound, the Presidency Girls' High School and the Government Girls' High School. The former school has got a building; the latter school does not have a building and classes are taking place under the shade of a tree. There are buildings available for accommodating this school in Poonamallee High Road. I have even given the door number of the building. But the office of the Director of School Education had not taken action. They have





glossed over the whole thing. I bring it to the notice of the Hon. Minister and request that action might be taken soon. Whenever we Members give suggestions, the authorities in the Directorate of School Education should pounce upon the same and try to implement them to the extent possible. But they had not done so. They seem to be 'Lotus Eaters'.

I now come to the teaching of 'English'. I want to strike a note of warning. I warn my very good friends in the Treasury Benches that if English language is disregarded—it has become the fashion of the day and people take pride in saying that they do not know English. In the end, it is we, who are going to suffer. We talk of English in the Lok Sabha. We make an attempt to impress upon the people there in Lok Sabha, hat we are for English. But what is the follow-up action you have taken? The quality of English teaching is extremely poor, in high school level and even in college level. The number of words of English that are to be taught in High School, the number of words of English that are to be taught in colleges had been discussed upon by Headmasters' Conference and they had passed a resolution on that. But what is the action that this Government had taken on that resolution? They had said that there was a big gap, discrepancy, between the number of words taught in High School and number of words used in Colleges. That is why a boy or girl when he enters the college finds himself in difficulties with regard to English. I request this Government to pay attention to this and see that the quality of English does not suffer under any circumstances. If the quality of English is not improved, we have no future at all in this country. Especially people in this part of the country will suffer most. For northern people, there is Hindi. But for us, we will suffer. Even our lawyers cannot go and argue cases in the Supreme Court, since we cannot speak Hindi also. We do not want to have the three—language formila. We speak of two&language formula and finally we end with one-language formula. That is the point.

Now I come to nationalisation of text books. This is nothing but regimentation of education. If nationalisation goes on in democracy, ultimately it will end in totalitarian system. Has this Government consulted the teachers about this system of nationalisation of textbooks? Has this Government taken into confidence the educationists with regard to this, before embarking on this scheme. We have to consider first whether the educational pattern had been evolved properly. It had been accepted by educational experts that the present syllabi as revised in 1965 are defective and it has not helped in raising up the standard. What is the result? What has happened to our boys. In I.A.S., they have suffered. In I.P.S., I.R.S. and even in Armed Forces, our boys have suffered. In I.T.I. also, there is no chance for our boys. Boys of other States score high over our boys. It is because our educational system has become outmoded. That has to be revised. It cannot be revised by nationalisation of textbooks. That will only mean much more regimentation. Probably because the Central Government had promised some aid, and because of that Rs. 1 crore, this scheme had been taken up by this Government.

I wish to point out that in the selection for admission to post-graduate courses, preference might be given to tutors and demonstrators, because with the experience they already possess, they are likely to continue in the teaching profession. That is one point. I also

request Government to prescribe the maximum strength of the classes in Universities. For theoretical instruction, it can be fixed as 60 for PUC, 40 for degree classes and 20 for post-graduate classes. This will ensure meaningful dialogue between the teacher and the taught.

How are we going to solve the problem of rush of admission to collages? The University may liberalise rules relating to administration to Evening Colleges, which could absorb more students. Permission might be given to such of those colleges as are willing to have evening courses and they might be asked to commence the academic year from January. The course might be from January to December. That will help boys and girls who had passed Matriculation to join such colleges. Those who had first failed and then passed S.S.L.C. could continue college education in evening colleges, without wasting many months.

It is time the Universities in the south organised "Correspondence Courses". Because we h ave ouly limited number of seats in the colleges, we can start "Correspondence Courses".

I now come to pay scales of teachers in colleges. The University Grants Commission has given number of suggestions, and they are prepared to pay nearly 80% of the bill. Why not we get that 80% help and adopt those scales? The following are their scales:—

Principal of post-graduate college—Rs. 1,000—60—1,300—100—1,800.

Professor of Integrated Department—Rs. 600—40—800—50—1,100.

Lecturer or Assistant Professor—Rs. 450—30—600—35—950.

Post-graduate tutor or demonstrator—Rs. 300—25—500.

Graduate tutor and demonstrator—Rs. 250—15—400.

I request Government to treat this problem seriously and try to help the teachers in colleges.

When we come to marks obtained in University examinations, we saw at the time of interview of students for admission to medical colleges, how some were not able to fare well in the interview even though they had scored high marks in Univehsity examinations when I talk of University, the Hon. Minister is saving that University is an autonomous body and that we should not talk against the University. I am only saying about method of conducting examinations.

The University may consider the possibility of introducing code numbers for candidates in examinations. This will be an insurance against all types of malpractice.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்*: உங்களுக்கு ஒதுக்கப்பட்ட 15 நிமிடங்களில் 2 நிமிடந்தான் இருக்கிறது. எப்படியும் ஐந்து நிமிடங்களுக்குள் முடித்துவிடுங்கள்.

**Dr. H. V. HANDE**: I am skipping over my notes and mentioning only the points. In fact I am not putting even the subject, predicate and object in my sentences.

**Private colleges are larger in number compared to Government colleges. Many of them are good institutions and Government must give them liberal grants. Otherwise they will be completely stifled**



With regard to the members of the non-teaching staff, are they going to get the benefits promised to the teaching staff? I request the Government to consider the matter, even if they are not able to answer now.

There is a movement called the Scout Movement. I request the Government to see that officials do not take too many responsible positions in the Scout Movement. After the present incumbent's term is over a nd after he goes to the Centre, instruction can be given that a number of philanthropists, a number of persons interested in the Scout Movement, can be made to take an active interest in the Scout Movement.

Wha is he real cause of the student unrest? The main cause, according to me, is that we talk one thing and we do another thing. The student does not know what exactly he should do. The student has lost faith in politicians, and feels that he has been made a pawn in the chess game of politicians. We tell them to study. People discover that those who do not study are in a better position and those who study are in a worse position. After studying B. Tech., B.E. or M.B.B.S. the student finds himself helpless. He has lost faith in education itself. Unless we re-orient the educational system in such a manner as to make him gain confidence, the student unrest will continue. The emoluments of the teaching staff should be upgraded as to attract the brilliant men who go in for Indian Administrative Service and other services. Brilliant men should be attracted to the teaching line. A friend of mine told me that the best measure by which de can discipline the student is excellent teaching. The moment excellent teaching is given in the class, automatically indiscipline will disappear.

The Ministry should devise ways and means of bringing in private people into the field of education and encourage philanthropists which was the practice before 1964. Since 1964 the rot has started and I request the Government to re-orientthe system as it presents itself now. Thank you, Sir.

■ **திரு. ஆலடி ஆருணா**: தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் கோரப்பட்டிருக்கின்ற கல்வி மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களை இந்த மேலான அவையின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன். பொறுப்பேற்றிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் அறிவுக் கண்களைத் திறப்பதற்கும், அறிவு வளர்ச்சியில் நாட்டில் புதிய மாற்றங்களைக் காண்பதற்கும் கல்வித் துறையில் புதிய புரட்சிகளை உருவாக்கிக் காட்டும் வகையிலும் இந்த நிர்வாகம் எவ்வளவு சிறப்பான முறையில் பணியாற்றுகிறது என்பதற்கான எடுத்துக்காட்டாக பல சாதனைகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்பேட்டில் இருந்து மிகத் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடிகிறது. திராவிட முன்னேற்றக் கழகம் இந்தப் பொறுப்பை ஏற்பதற்கு முன்னால், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருமேயானால் அறிவாலயங்கள் எப்படி இருக்கும் கல்லூரிகள் எப்படி இருக்கும், பள்ளிக்கூடங்கள் எப்படி இருக்கும் என்றெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றி முன்னாலே ஆளும் பொறுப்பிலே இருந்த காங்கிரஸ் அன்பர்கள் தவறான

இல்லை. ஆசிரியர்கள் இந்த எட்டாவது வகுப்பு பொதுத் தேர்வு வேண்டும் என்று கூறுகிறார்கள். ஆகவே, இந்த 8-வது வகுப்பு பொதுத் தேர்வைக் கொண்டு வரவேண்டும் என்று குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

தொடக்கப் பள்ளிகள் சரியாக இல்லாமல் இருந்தால், ஆசிரியர்கள் அங்கே சொல்லிக் கொடுக்கவில்லை என்றால், உயர்நிலைப் பள்ளிகளில் ஒன்றும் சரியாக இருக்காது. ஆகவே, இந்தப் பொதுத் தேர்வு வந்தால்தான் நல்ல முறையில் அடியிலிருந்து கல்வி கற்றுக் கொடுக்க வசதியாக இருக்கும். தொடக்கக் கல்விக்கு ஒரு தனி இயக்குநர் வேண்டும். அப்பொழுதுதான் நல்ல முறையில் தொடக்கக் கல்வியை, அந்தத் துறையை வளர்ச்சியடையச் செய்ய முடியும். ஆகவே, ஒரு தனி இயக்குநரை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, ஆசிரியர்-மாணவர் விகிதாசாரம் பற்றிச் சொல்ல வேண்டும். இப்பொழுது 70 மாணவர்களுக்கும் ஒரே ஆசிரியர் தான் இருக்கிறார். 75-க்கு மேல், அல்லது 80-க்கு மேல் போனால் தான் இரண்டாவது ஆசிரியரை நியமிக்கிறார்கள். அந்த அதிகாரமும் ஊராட்சி ஒன்றியத் தலைவருக்கோ, ஆணையருக்கோ இல்லை. ஆகவே, 25 மாணவருக்கு ஒரு ஆசிரியர் என்று நியமிக்க வேண்டும். அப்படி நியமிக்கும் அதிகாரமும் ஊராட்சி ஒன்றியத்திற்கே விட்டு விட வேண்டும். அந்த அந்த பள்ளிகளின் நிலைமைக்குத் தக்கபடி, அங்குள்ள மாணவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து, அந்த அந்த பள்ளிக்கு ஆசிரியர்கள் வேண்டும் என்பதையெல்லாம் அவர்களுக்கு நன்கு தெரியும். எங்காவது ஒரு மாவட்டத்திற்கு 4 ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அப்படிச் செய்வதில் பள்ளிகளுக்கும் போதிய ஆசிரியர்கள் இல்லை, படித்த ஆசிரியர்களுக்கும் வேலை வாய்ப்புக்கள் இல்லை. மாணவர்களுக்கு கல்வி நல்ல முறையில் இல்லை என்றால் அதை உடனடியாகச் சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகவே, ஒரு ஆசிரியருக்கு 25 மாணவர்கள் என்ற அடிப்படையில் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

குடியிருப்பு வசதிகள் பொறுத்தவரையில், ஆசிரியர்களுக்கு இப்பொழுது வீட்டு வசதியே கிடையாது. ஒரு பள்ளிக்கூடத்திற்கும் அவர்கள் இருக்கும் இடத்திற்கும் 5, 10 மைல்கள் இருக்கின்றன என்றால், அவர்கள் அந்த தூரத்தைக் கடந்து பள்ளிகளுக்கு வரவேண்டியதாக இருக்கிறது. அங்கும் அவர்களுக்கு இடவசதி போதுமானதாக இல்லை. ஒவ்வொரு கிராமப் பகுதியிலும், இண்டீரியர் பகுதிகளிலும் வீடுகள் கிடைப்பதும் அரிதாக இருக்கிறது. ஆகவே, அவர்கள் இருக்கும் இடங்களிலேயே வீட்டு வசதி செய்து கொடுக்க சர்க்கார் ஆவன செய்ய வேண்டும்.



இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடன், பள்ளிகளிலே பணியாற்ற வேண்டிய ஆசிரியர்கள் பலர் பஸ் ஸ்டாண்டுகளில் பணியாற்றுகிறார்கள். நான் வேடிக்கையாகச் சொல்லவில்லை. பார்த்தால் தெரியும். திருச்சி பாலக்கரை, சிந்தாமணி பகுதியில், பஸ் ஸ்டாண்டில் கிட்டத்தட்ட 10 ஆசிரியர்கள் ஒரு மணி நேரம் காத்திருக்கிறார்கள். 12 மணி வரையிலும் நிற்கிறார்கள். எதற்காக? அங்கேதான் ஆசிரியர்கள் ஆள் பிடிக்கும் வேலையைச் செய்கிறார்கள். லால்குடி, புள்ளம்பாடி இவற்றைச் சேர்ந்த ஆசிரியர்கள் திருச்சி சிந்தாமணியில் என்ன வேலை செய்கிறார்கள்? புள்ளம்பாடி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊட்டத்தூரில் பணியாற்றும் ஆசிரியர் ஒருவர் ஒரே மாதத்தில் 60 அறுவைச் சிகிச்சைக்கு ஆண்கள் கொண்டு வந்திருக்கிறார் என்றால், அவர் எப்படி பள்ளியிலே பணியாற்றியிருக்க முடியும்? கையெழுத்துக் கூடப் போட நேரம் இல்லை. வாரத்தின் 7 நாட்களுக்கும் சேர்த்து ஒரே நாளில் கையெழுத்து போட்டுவிட்டு வந்துவிடுகிறார்கள். இது போன்ற நிலைகள் நீடித்தால் பள்ளிகளில் மாணவர்களுக்குப் பாடம் எப்படிச் சொல்லிக் கொடுக்க முடியும்? ஆகவே, குடும்ப நலத் திட்டத்தை தொடக்கப்பள்ளி ஆசிரியர்களிடம் கொடுப்பது சரியானது அல்ல. இந்த முறையை இந்த அரசு உடனடியாக மாற்ற வேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

ஆசிரியர்களிடமிருந்து 'க்யுமுலேடிவ் டைம் டெபாசிட்' என்று பிடித்தம் செய்கிறார்கள். பல ஊராட்சி ஒன்றியங்களில் இவை கணக்கு சரியாக வைக்கப்படுவதில்லை. முதல் தேதியிலோ அல்லது மூன்றாம் தேதியிலோ பிடிக்கிறார்கள், சம்பளம் கொடுக்கும்போது. ஆனால், அதன் பிறகு இரண்டு மூன்று மாதங்கள் ஆனாலும் கூட, போஸ்டாபீசில் கட்டுவதில்லை. ஆணையரோ அல்லது வேறு அலுவலரோ தன் வசம் வைத்துக் கொள்ளுகிறார்கள். ஒவ்வொரு மாதமும் பிடிக்கப்படும் பணத்திற்கு சரியான கணக்குக் கிடையாது. சில ஒன்றியங்களில் இப்படிப்பட்ட பணத்தை கையாடல் செய்துவிடுகிறார்கள். உதாரணத்திற்கு, அரியலூர் பி. ஜி. தங்கராஜு என்பவர் பெயரில் ரூ. 25 பிடிக்கப்பட்டு, அதற்கு ரசீதும் கொடுக்கப்பட்டுள்ளது. அதே போல டி. ஆர். பெரியசாமி என்பவருக்கு ரூ. 75 பிடிக்கப்பட்டு ரசீதும் கொடுக்கப்பட்டுள்ளது; ஆனால் இந்தப் பணமெல்லாம் கணக்கில் வரவு வைக்கப்படவில்லை. இப்படிப்பட்ட ஊழல்கள் நடந்தால், அதைச் சொல்லப் போனால் அவர்களை வேறு இடத்திற்கு மாற்றிவிடுவார்கள், ஆசிரியர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, அவர்கள் சொல்வதில்லை. ஒவ்வொரு பள்ளியிலும் கமிஷனர் ஆசிரியர்களை விரட்டுவதைப் பார்த்தால் மிக மோசமாக இருக்கிறது. வயலில் வேலை செய்கிறவர்களை விட கேவலமாக விரட்டுகிறார்கள். ஆசிரியர்களுக்கு மதிப்பு இருந்தால்தான், அவர்கள் நல்ல முறையில் மாணவர்களுக்கு கல்வி கற்றுக் கொடுக்க முடியும். ஆகவே, தொடக்கப்பள்ளி ஆசிரியர்களிடம் குவியும் நிதி, க்யுமுலேடிவ் டைம் டெபாசிட்டுக்கு பிடிக்கப்படும் பணத்தை சரியாகக் கணக்கு வைக்க தக்க ஏற்பாடுகள்

[திரு. ஆர். கருப்பையா] [1970 மார்ச் 11

செய்ய வேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன். சிறு சேமிப்பு
என்கிற பெயரால் அவர்கள் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள்.
கட்டாயப்படுத்தி சம்பளத்தில் பிடிக்கிறார்கள். இந்த நிலைகள்
மாறவேண்டும்.

செகண்டரி கல்வி பற்றிச் சொல்ல வேண்டும் என்றால், அதிலும்
வேறுபாடு இருக்கிறது. 1966-க்கு முன்பு இருந்த உயர்நிலைப்
பள்ளிகளை அரசாங்கப் பள்ளிகளோடு ஒன்றுக்குவோம் என்று
குறிப்பிட்டார்கள். ஒன்றுக்கப்பட்டு அவை நல்ல முறையில் இல்லை.
பல ஆசிரியர்கள் தங்கள் பதவி உயர்வு வரும் காலத்தில், அரசினர்
பள்ளிகளில் பணியாற்றுகிறவர்களுக்குத்தான் அப்படிப்பட்ட
உயர்வுகள் கொடுக்கப்படுகின்றன என்றும், மாவட்ட பள்ளி ஆசிரி
யர்களுக்கு கொடுக்கப்படுவதில்லை என்றும் கூறுகிறார்கள். அந்த
நிலையை மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.
மாவட்ட மன்றங்களின் கீழ் உயர்நிலைப் பள்ளிகளில் வேலை செய்த
ஆசிரியர்களுக்கும் பதவி உயர்வுகள் கொடுக்க வேண்டும். அந்த
ஆசிரியர்களுக்கு பெரும் பாதகம் ஏற்பட்டிருக்கிறது. அந்த அந்த
பகுதியில் ஏற்படும் பதவி உயர்வுகளுக்கு அந்த அந்த பகுதி பள்ளி
ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவர்களுக்கு வாய்ப்புக்
கொடுக்கவேண்டும்.



1970 மார்ச் 11] [திரு. ஆர். கருப்பையா]

நியமிக்காமல் இருக்கிறார்கள். நியமிக்கப்பட்டால் வேலை வாய்ப்பு
கிடைக்கும். வேலையும் சரியாக நடக்கும். ஆகவே, அப்படிப்
பட்ட நிலைகளில் அதிகாரிகளை இந்த சர்க்கார் நியமிக்க வேண்டும்
என்று குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கல்லூரிகளிலே இடம் இருக்கிறது என்ற
செய்தி வானொலி மூலம் தெரிவிக்கப்படும் என்று அமைச்சர்
அவர்கள் சொன்னார்கள். மேலும் ஷிப்ட் முறை ஏற்படுத்தப்படும்
என்றும் ஸ்டூடன்ட்ஸ் கோர்ட்—மாணவர் நீதி மன்றம்—ஏற்படுத்தப்
படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இது
வரையில் இந்த மூன்று திட்டங்களும் எங்கேயும் நிறைவேற்றப்
பட்டதாகத் தெரியவில்லை.

அடுத்தபடியாக, இந்த ஆட்சி ஏற்பட்ட பின்னர் கல்லூரிகள்
நடைபெறுகின்ற நாட்கள் குறைவு; மூடியிருக்கின்ற நாட்கள்தான்
அதிகமாக இருக்கின்றன. குறிப்பாக, அரசினர் கலைக் கல்லூரி
மூடியிருந்த நாட்கள் அதிகம். தற்சமயம் கூட கல்லூரி மூடப்
பட்டிருக்கிறது, காரணம் எக்ஸாமினேஷன் ஹாலிடேஸ். கல்லூரி
களிலே ஏதாவது ஒரு சிக்கல் வந்துவிட்டால் உடனே கல்லூரியை
இழுத்து மூடிவிடுகிறார்கள். சிக்கல் ஏற்பட்டதற்கு என்ன கார
ணம், அந்தச் சிக்கலை எப்படி தீர்ப்பது என்பதையெல்லாம்
ஆராய்ந்து பார்க்காமல் உடனே, கல்லூரியை மூடிவிட்டால் மாண
வர்கள் வீட்டிற்குப் போய்விடுவார்கள், குழப்பம் ஏற்படாது,
சிக்கல் தீர்ந்துவிடும் என்று எண்ணுகிறார்கள். ஏற்பட்டுவிட்ட
சிக்கலுக்குப் பரிகாரம் காணவேண்டுமேயல்லாது, கல்லூரியை
இழுத்து மூடி விடக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

அடுத்தபடியாக, கல்லூரிகளில் தமிழ் மீடியத்தைக் கொண்டு
வந்திருக்கிறார்கள். நாங்கள் அதை எதிர்க்கவில்லை. மேலும் தமிழ்
போதனா மொழியைக் கொண்டுவருகிற நேரத்தில் தமிழ்ப் புத்த
கங்கள் இன்னும் சரியாக வெளிவரவில்லை. ஆங்கிலத்தில் ஒரு
பாடத்திற்கு நான்கைந்து புத்தகங்கள் இருக்கின்றன. உதாரண
மாக பி.எஸ்.ஸி., என்றால் நான்கைந்து புத்தகங்கள் வைத்துப்
பாடம் சொல்லிக் கொடுக்கிறார்கள். கல்லூரிகளில் சொல்லிக்
கொடுப்பதைவிட, மாணவர்கள் தாங்களாகவே புத்தகங்களைப்
படிப்பது அதிகம். ஆகவே, தமிழிலே ஒவ்வொரு பாடத்திலும்
பல நூல்கள் எழுத வேண்டும். பல புத்தகங்கள் வெளிவர வகை
செய்ய வேண்டும். மேலும் தமிழாக்கம் செய்பவர்களுக்கு 500
பக்கங்கள் கொண்ட புத்தகத்திற்கு 1,500 ரூபாய் என்ற அளவில்
தான் கொடுக்கிறார்கள். சாதாரணமாக, 300, 400 பரிட்சை பேப்பர்
களைத் திருத்தினால்கூட அந்தப் பணம் ஆசிரியருக்கு வந்துவிடும்.
ஆகவே, தமிழாக்கம் செய்யும் ஆசிரியர்களுக்கு அதிகப் பணத்தை
ஒதுக்கித் தர வேண்டுமென்று குறிப்பிடுகின்றேன். தமிழ் புத்த
[illegible]ளின் எண்ணிக்கை வளராமல் கல்லூரிகளிலே தமிழ் மீடியம்

பிரசாரத்தில் ஈடுபட்டு வேண்டுமென்றே சொன்னார்கள். அவர்களுடைய குற்றச்சாட்டுகள் எல்லாம் பொய்க்கின்ற வகையிலே, அவர்களுடைய பழியெல்லாம் அர்த்தமற்றவை என்பதை நாட்டு மக்கள் உணருகின்ற வகையில், இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழக அரசு மிகச் சிறப்பான முறையில் காரியமாற்றி இருப்பதைக் கண்கூடாகக் காண்கிறோம்.

காங்கிரஸ் ஆட்சியின் கதை முடிந்த நேரத்தில் அதாவது 1966-67-ம் ஆண்டில் கல்விக்காக எவ்வளவு பணம் செலவு செய்தார்கள்? அப்போது கல்விக்காக ஒதுக்கிய பணம் 43 கோடி 86 லட்சம் ரூபாய். இன்றையதினம் நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் கல்வி வளர்ச்சிக்காக, அறிவு முன்னேற்றத்திற்காக அவர் கேட்டிருக்கும் பணம் 66 கோடி 83 லட்சம் ரூபாய். இதற்கு முன்னாலே காங்கிரசார் கூறினார்கள்—“ இவர்களுக்கு வாக்களித்தீர்களானால் இவர்கள் கல்லூரிகளை மூடிவிடுவார்கள்; பள்ளிக்கூடத்தை அடைத்து விடுவார்கள்; பாடங்களைச் சொல்லிக் கொடுக்க மாட்டார்கள்; பகலுணவு தரமாட்டார்கள்; சீருடையை நிறுத்தி விடுவார்கள்” என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் இந்த மூன்றாண்டு கால ஆட்சியில் கல்வி வளர்ச்சிக்காக எவ்வளவு கவனம் செலுத்தியிருக்கிறது, ஆக்க வேலையில் எவ்வளவு தீவிரமாக கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது என்பதற்குப் பல ஆதாரங்களைப் பார்க்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்ற பின்னால் 511 தொடக்கப் பள்ளிகள் புதிதாகத் துவக்கப்பட்டிருக்கின்றன. 173 உயர்நிலைப் பள்ளிகள் துவக்கப்பட்டிருக்கின்றன. 35 கல்லூரிகள் துவக்கப்பட்டிருக்கின்றன. நான்கு பயிற்சிக் கல்லூரிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. 1857-ம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகம் துவக்கப்பட்டதாக நினைவு. கிட்டத்தட்ட 110 ஆண்டுகள் ஆகின்றன. இதிலே 1966-ம் ஆண்டு வரை அதாவது 110 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் திறக்கப்பட்ட கல்லூரிகளின் எண்ணிக்கை 105. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த மூன்று ஆண்டு காலத்திற்குள்ளாக 35 புதிய கல்லூரிகளைத் திறக்க ஏற்பாடு செய்திருக்கிறது என்றால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சாதனை எவ்வளவு மகத்தானது, வரலாற்றுச் சிறப்பு மிக்கது என்பதை அதிகமாக எடுத்துக் கூறத் தேவையில்லை. கல்வி வளர்ச்சிக்கு மட்டுந்தான் திராவிட முன்னேற்றக் கழக அரசு இவ்வளவு பாடுபடுகிறது என்பதல்ல. இந்தக் கல்வி வளர்ச்சிக்குப் பணி புரிந்து வருகின்ற ஆசிரியர் பயிற்சிக்குப் படித்தவர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பு கிடைக்க வழி செய்திருக்கிறது. ஆசிரியர்களாகப் பணி புரிந்து வருகின்றவர்களுக்கு நியாயமான சலுகைகளை அளிக்கவும் இந்த அரசாங்கம் செம்மையாகப் பாடுபடுகிறது என்பதையும் தெளிவாக உணருகிறோம். இந்த ஆண்டு கேட்டிருக்கும் மானியக் கோரிக்கையின்படி துவக்கப்பள்ளிகளில் 2,720 புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்பட இருக்கிறார்கள். நடுநிலைப் பள்ளி

களுக்கு 1,930 ஆசிரியர்கள் நியமிக்கப்பட இருக்கிறார்கள். உயர் நிலைப் பள்ளிகளுக்கு 1,320 ஆசிரியர்கள் நியமிக்கப்பட இருக்கிறார்கள். மொத்தமாகச் சொல்ல வேண்டுமென்றால் 5,970 ஆசிரியர்களுக்கு வருகின்ற ஆண்டிலே மட்டும் இந்த அரசாங்கம் வேலை வாய்ப்பு அளிக்க இருக்கிறது.

ஆசிரியர்களுடைய குறைகள் களையப்பட்டாக வேண்டும், நியாயமான கோரிக்கைகளை ஏற்றாக வேண்டும், அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்தாக வேண்டும் என்பதிலே அரசாங்கத்திலே இரண்டுபட்ட கருத்துக்கே இடம் இல்லை. ஆனால், சமுதாயத்தில் ஒரு குறிப்பிட்ட சாராருக்கு மட்டும் உள்ள குறைகளைப் பூர்த்தி செய்வதற்கு மட்டும் அரசாங்கம் இல்லை. அரசாங்கம் என்பது ஆசிரியர்களுக்கு மட்டும் சொந்தமானது அல்ல; அரசாங்கம், அதிகாரிகளுக்கு மட்டும் சொந்தமானது அல்ல; அரசாங்கம் நான்கு கோடி மக்களுக்கும் சொந்தமானதாகும். எனவே நாட்டின் நிலைமை, அரசாங்கத்தின் வருவாய், தனக்கு இருக்கின்ற அதிகாரங்கள் ஆகியவற்றை வைத்துத்தான் எல்லோரையும் வாழ வைப்பதற்கு அரசாங்கம் முயற்சிகளை எடுக்கும். அப்படி முயற்சிக்கின்றபோது ஆசிரியர்களுடைய கோரிக்கைகளையும், வேண்டுகோள்களையும் அரசு அனுதாபத்தோடும் தனி கவனத்தோடும் அணுகுகிறது என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இந்த மானியக் கோரிக்கையில் ஆசிரியர்களின் வீட்டு வாடகைப் படியை கொடுத்திருக்கிறார்கள். இதன் மூலம் தமிழ் நாட்டில் 37,000 ஆசிரியர்கள் பயனடைய இருக்கிறார்கள். மலைப் பகுதியில் வேலை செய்யும் ஆசிரியர்கள் குளிர்காலப்படி தேவை என்றார்கள். அதையும் இந்த அரசு ஏற்றுக்கொண்டு கொடுத்திருக்கிறது. இதனால் 2,570 ஆசிரியர்கள் பயனடைய இருக்கிறார்கள். அது தவிர, திருமணக் கடன், விழாவுக்கு முன்பணம் ஆகியவற்றையும் கொடுக்க முன் வந்திருக்கும் இந்த அரசாங்கத்தை ஆசிரியர் சமுதாயம் நன்றியறிதலோடு பாராட்டும் என்று மனதார நம்புகிறேன். கல்வித் துறையைப் பொறுத்த மட்டில் தமிழ்நாடு தன்னிகரற்று இருப்பதாக நான் கருதுகிறேன்.

இந்தியாவிலேயே, பி.யு.சி.யில் இலவசக் கல்வி என்று செய்திருக்கக் கூடிய ஒரே சர்க்கார் தி.மு.க. சர்க்கார்தான். அது இந்த மன்றத்திற்கும் தெளிவாகத் தெரியும்.

இதை விட முக்கியமான பிரச்னை என்னவென்றால், உணர்ச்சி பூர்வமாக மக்களின் உள்ளத்தைக் கவரும் பிரச்னை இந்திப் பிரச்னை; இந்தி ஆதிக்கத்தை விரட்டிய சர்க்கார் என்ற பெருமை இந்த ஒரு சர்க்காரையே சாரும். திராவிட முன்னேற்றக் கழகம் எந்த லட்சியங்களைச் சொன்னதோ அல்லது எந்தத் திட்டங்களைச் சொன்னதோ அவைகளை தங்கள் அதிகாரத்திற்குட்பட்ட முறையில் செம்மையாக நிறைவேற்றி வருகிறது. அவற்றை தீவிரமாக நிறைவேற்றி வருகிறது, அவற்றை தெளிவோடு நிறைவேற்றி வருகிறது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக இந்தியை பள்ளிகளிலிருந்து விரட்டியதை இந்த மன்றத்திற்கு நினைவு படுத்துகிறேன்.

[திரு. ஆலடி அருணா] [1970 மார்ச் 11

இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிராக மாணவர்களை தூண்டிவிட முடியாதா, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிராக மாணவர்கள் போர் குரல் கொடுக்கமாட்டார்களா என்று இவர்களாகவே தப்புக் கணக்கு போட்டுக்கொண்டு இவர்கள் மனதில் உள்ளதை நிறைவேற்றிக்கொள்ள மக்கள் மத்தியில் மொழிப்பிரச்னையைப்பற்றிக் கூறுகிறார்கள். நேரு அவர்களின் வாக்குறுதியை நிறைவேற்றி வைக்க திராவிட முன்னேற்றக் கழகச் சர்க்கார் இந்திரா சர்க்காரை நிர்பந்திக்குமா, அந்தச் சர்க்காரைக் கவிழ்க்க முன்வருமா என்ற அடிப்படையில் அவர்கள் இன்றையதினம் வாதங்களை எழுப்புகிறார்கள். ஏதோ அவர்கள் இந்தியை எதிர்த்து சிறை சென்றது போலவும், இந்தியை எதிர்த்து அவர்கள் சித்திரவதைக்கு ஆளானதைப் போலவும், இந்தியை எதிர்த்து தியாகங்கள் செய்த செம்மல்கள் பலர் அவர்கள் இயக்கத்தில் இருப்பது போலவும் அவர்கள் வாதம் புரிகிறார்கள். நான் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன், அவர்கள் ஆபத்தான வாதத்தில் ஈடுபடுகிறார்கள் என்று. ஆபத்து யாருக்கு என்பதை நீங்கள் போகப் போக புரிந்து கொள்வீர்கள்.

நான் கேட்கிறேன், இந்தப் பிரச்னைக்கு மூலக் காரணம் யார்? இந்தி அரியணை மீது உட்கார வேண்டும், இந்திதான் இந்திய துணைக்கண்டத்தின் ஆட்சிமொழி என்ற சட்டத்தைக் கொண்டு வந்த அக்கிரமக்காரர்கள் யார்? அதற்கு மூல ஆதாரமாக இருந்தவர்கள் யார்? ஆட்சிமொழிச் சட்டமானாலும் சரி அல்லது அரசியல் சட்டமானாலும் சரி அதற்கு ஆதரவு அளித்தவர்கள் யார்? இதைச் சற்று எண்ணிப் பாருங்கள். இந்தியைப் பரப்பவேண்டும் என்பதற்காகத்தானே இந்தி பிரசார சபையை அமைத்தீர்கள். இந்தியைப் பரப்பவேண்டும் என்பதற்காகத்தானே லட்சக்கணக்கில் ரூபாய் செலவு செய்து இந்திப் பிரசார சபைகளுக்கு காங்கிரஸ் மூலம் கொடுத்தீர்கள். இவற்றையெல்லாம் மாணவ சமுதாயம் மறந்துவிடுமா? இதை மாணவர்கள் மறந்துவிடுவார்கள் என்று நினைக்கிறீர்களா?

அரசியல் அமைப்புச் சட்டம் இயற்றப்படும்போது ஆட்சி மொழிப் பிரச்சினை வரைக் குழுவிற்கு வந்தது. அப்போது இந்திக்கு ஆதரவாக 77 வாக்குகள் கிடைத்தன, அதற்கு எதிராக 77 வாக்குகள் கிடைத்தன. அந்த சமயத்தில் அச்சபைத் தலைவராக இருந்த ராஜேந்திர பிரசாத் அவர்கள் வார்தாவில் உடல் நலக் குறைவால் மருத்துவ மனையில் இருந்தார். ஆனால் மொழிப் பிரச்சினையில் தீவிர எதிர்ப்பு இருக்கிறது என்று தெரிந்த உடனே அவர்கள் வார்தாவிலிருந்து கிளம்பி டெல்லி சென்று மொழிப் பிரச்னை சம்பந்தமாக வோட்டு எடுக்கும்போது தான் தனி வோட்டை, காஸ்டிங் வோட்டை இந்திக்கு ஆதரவாக அளித்து 77 என்பதை 78 ஆகச் செய்தார்கள். அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதை எண்ணிப் பாருங்கள்.



1970 மார்ச் 11] [திரு. ஆலடி அருணா]

1937-ல் காங்கிரஸ் ஆட்சிபீடத்திற்கு வந்தது. 24-1-1938-ல் சென்னை மாநிலத்தில் இந்தியை கட்டாய பாடமாக்கினார்கள். அப்போது சென்னையோடு ஆந்திர மாநிலமும் இணைந்திருந்தது. சென்னை மாநிலத்தில் மட்டும் 60 பள்ளிக்கூடங்களில் இந்தி படித்துத்தான் ஆகவேண்டும் என்று கட்டளையிட்டவர்கள் யார்? கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் அமைச்சரா அல்லது காங்கிரஸ் கட்சியின் முதல் அமைச்சரா? இதை சிந்தித்துப் பாருங்கள். அதை எதிர்த்து நீங்கள் போராடினீர்களா? அதை எதிர்த்து நாங்கள் போராடினோம். அதற்குப் பிறகு கட்டாய இந்தி கைவிடப்பட்டது. 1946-ல் அவர்கள் ஆட்சிக்கு வந்தார்கள். அப்போது இங்கு கல்வி அமைச்சராக திரு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள் இருந்தார்கள். மீண்டும் இந்தியை கட்டாயப் பாடமாக ஆக்கினார்கள். அப்போது அவர்கள் நெல்லைக்கு வருகை தந்தார்கள். அப்போது ஆசிரியர்கள் அவர்களை அணுகி இந்தி படிக்காத மாணவர்களை நாங்கள் என்ன செய்யவேண்டும் என்று கேட்டார்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொன்னார் தெரியுமா? எந்த மாணவன் இந்தி படிக்க விரும்பவில்லையோ அவனை பள்ளிக்கூடத்தில் இருந்து வெளியேற்று என்று சொன்னார்கள். இதை எல்லாம் மாணவ சமுதாயம் மறந்துவிடும் என்று நீங்கள் கருதுகிறீர்களா? அல்லது மறக்க விடுவோம் என்று நினைக்கிறீர்களா?

இவை கடந்த காலத்தில் நடந்தவை என்று சொல்லலாம். நான் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். 1965-க்குப் பிறகு இந்தி மொழி மட்டுமே ஆட்சிமொழி என்று குடியரசுத் தலைவர் 1960-ல் அறிவித்தார்கள். அப்போது சென்னையில் உள்ள கல்லூரி மாணவர்கள் எல்லாம் தமிழ்நாட்டின் முதல் அமைச்சராக அப்போது இருந்த பெருமதிப்பிற்குரிய காமராஜர் அவர்களை அணுகி குடியரசுத் தலைவர் அவர்கள் இப்படி உத்தரவிட்டிருக்கிறார்களே இந்திதான் ஆட்சி மொழி என்று, இது எங்களைக் கொடுமைப்படுத்துவதாகாதா என்று காமராஜ் அவர்களிடம் கேட்டார்கள். அப்போது அவர்கள் மாணவர்களுக்குச் சொன்ன பதில் என்ன என்று தெரியுமா? 'மத்திய சர்க்காரில் வேலை வேண்டுமானால் இந்தி படி. இல்லாவிட்டால் சும்மா இரு' என்று மாணவர்களிடம் சொல்லியிருக்கிறார்கள். அப்படி மாணவர்களை அலட்சியப்படுத்தி அனுப்பினார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: பாயிண்ட் ஆப் ஆர்டர். சற்று முன்னதாக இங்கு அவையில் இல்லாத ஒருவரைப்பற்றி இங்கு கூறக்கூடாது என்று ரூலிங் கொடுக்கப்பட்டது. அதேபோல் இந்த அவையில் இல்லாத எங்கள் தலைவர் திரு. காமராஜ் அவர்களைப் பற்றி இவர்கள் ஒரு சொற்பொழிவு ஆற்றுகிறார்களே இது சட்டத்திற்கு புறம்பானது. ஆகவே இதன்மீது ஒரு ரூலிங் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆலடி அருணா :** காமராஜ் அவர்களைப்பற்றி நான் தனிப் பட்டமுறையில் சொல்லவில்லை. அவர்களை ஒரு இயக்கத்திற்குச் சொந்தக்காரன் என்ற முறையில் சொல்கிறேன் ஆனால் ஜேம்ஸ் அவர்கள் அவர்களை கீழே இறக்கி ஒரு தனி மனிதராக ஆக்குகிறார். அவர்கள் ஒரு இயக்கத்திற்குச் சொந்தக்காரர், அவர்கள் பின்னால் இலட்சக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள் என்ற அந்த அடிப் படையில் சொல்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தங்கள் முடிவைச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பெயரைச் சொல்லாமல் சொல்லுங்கள்.

**திரு. மு. முத்தையா :** பாயின்ட் ஆப் ஆர்டர். அவையில் இல்லாத காமராஜ் அவர்களைப் பற்றிப் பேசுகிறார்கள், இது சரியா என்று கேட்கிறார்கள். காங்கிரஸ்காரர்கள். இந்த அவையில் இல்லாத எங்கள் மாபெரும் தலைவர் ராஜாஜி அவர்கள் குலக் கல்வித் திட்டம் கொண்டு வந்தார்கள் என்று பேசினார்களே, அதை எப் படிப் பேசலாம்?

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி :** பாயின்ட் ஆப் ஆர்டர். அவையில் இல்லாதவர்களைப் பற்றி இங்கு பேசக் கூடாது என்ற மாபு இருக்கக் காரணம், அவர்கள் நேரடியாகப் பதில் சொல்ல முடியாது என்ற காரணத்தினால்தான் அந்த முறை பின்பற்றப்பட்டு வரு கிறது. ஆனால் என் கட்சியைச் சார்ந்த ஆலடி அருணா அவர்கள் பேசுகிறபோது அரசியல் ரீதியில் ஒரு கட்சித் தலைவர் வெளியே என்னென்ன சொன்னார்கள், நாட்டில் என்னென்ன நடக்கின்றன, அவர்களது கட்சி என்ன செய்கிறது என்றுதான் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அவற்றிற்குப் பதில் சொல்ல காமராஜ் அவர்கள் தேவை இல்லை. அவர்களது ஆள்கள் நிறையப் பேர்கள் இங்கே இருக்கிறார்கள், அவர்கள் பதில் சொல்லலாம். ஆகவே அவர்கள் பேசியது ஒழுங்குக்கு மீறிய செயல் அல்ல.

**திரு. ஆலடி அருணா :** 1965 ஜனவரியில் பயங்கர மொழிப் பிரச்னை தமிழ்நாட்டில் தலைதூக்கியது. அந்த நேரத்தில் நான் முன்னால் குறிப்பிட்ட பெரியவர் இந்தியத் துணைக்கண்டத்து காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்தார்கள். நாட்டில் ரத்தக் கிளறி ஓடியது. இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து, இந்தி ஆதிக்கத்தை ஒழிப்பதற்காக மக்கள் போர்க்கோலம் பூண்டார்கள். அவர்களை எல்லாம் முன்னால் இருந்த காங்கிரஸ் சர்க்கார் கொக்கு குருவிகளை சுட்டு வீழ்த்துவதுபோல் தமிழ்நாட்டில் சுட்டு வீழ்த்தி நாடே பிணக்காடாகியது. தமிழ்நாட்டில் எந்தப் பகுதியைப் பார்த் தாலும் ரத்த ஆறு ஓடிக்கொண்டிருந்தது. ஒரு விபரீதமான சூழ் நிலை இருந்தது. இந்த நாட்டில் அமைதியை நிலைநாட்ட, சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட இந்தியப் பிரதமராக இருந்த திரு.

1970 மார்ச் 11]  [திரு. ஆல்டி அருணா]

லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் தமிழக மக்கள் அமைதியாக இருக்கும்படியும், மொழிப் பிரச்சினையில் நாம் ஆற்றியிருக்கிற பணிகள் பற்றியும் வானொலியில் பேசினார்கள். அவர்கள் பேசிய மறுநாள் விமானம் மூலம் காங்கிரஸ் கட்சித் தலைவர் கோவை நகரத்திற்கு வந்தார்கள். அப்போது இந்தியன் எக்ஸ்பிரஸ் நிருபர் அவர்களைச் சந்தித்து நேற்றைய தினம் லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் இப்படிப் பேசி யிருக்கிறார்களே, காலைப் பத்திரிகைகளிலும் அது வந்திருக்கிறதே, அது பற்றிய உங்கள் கருத்து என்ன என்று கேட்டார்கள். அதற்கு காங்கிரஸ் கட்சித் தலைவர் என்ன சொன்னார்கள் தெரியுமா ? நான் அதைக் கேட்கவும் இல்லை, படிக்கவும் இல்லை, அதைப்பற்றி நான் எதுவும் சொல்ல விரும்பவும் இல்லை என்று சொன்னார்கள். நாட்டு மக்கள் ரத்த ஆற்றில் நீந்திக் கொண்டிருந்தார்கள்; பயங்கரமானதொரு சூழ்நிலை நாட்டில் உருவாகியிருந்தது. அந்த சமயத்தில் காங்கிரஸ் கட்சித் தலைவர் ஒருவித நடவடிக்கையும் எடுக்காது இப்போது கேட்கிறார், மொழிப் பிரச்சினையில் நீங்கள் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறீர்கள் என்று. இப்போது மொழிப் பிரச்சினையைத் தூக்க முடியாமல் தூக்குவானேன் ? அவர்கள் இந்தியை எதிர்க்கிறாரா அல்லது இந்திராவை எதிர்க்கிறாரா? இதை இந்த மன்றம் அறியவேண்டும் என்றுதான் இதை இச்சபையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

நேருவின் உறுதிமொழி சட்டமாக்கப் படவேண்டும் என்று அன்றும் சொன்னேன், இன்றும் சொல்கிறேன். 1963-ல் ஆட்சி மொழிச்சட்டம் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டபோது நேருவின் வாக்குறுதி அந்தச் சட்டத்தில் இல்லை. நேருவினுடைய வாக்குறுதி இந்தச் சட்டத்தில் இடம் பெறவில்லை. ஆகவே திருத்தத்தை ஒப்புக்கொண்டாகவேண்டுமென்று இந்தி பேசாத மக்கள் வாழ்வில் அக்கறை கொண்டுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் அத்தனைபேரும் அந்த மசோதாவுக்கு எதிராகப் போராடினார்கள். ஆனால் மறுநாளே என்ன சொன்னார்கள். நேருவின் வாக்குறுதி உள்ளே இருக்கிறது, உங்களுக்குப் புரியவில்லை என்று வாதிட்டார்கள். லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் அப்பொழுது உள்துறை அமைச்சராக இருந்தார்கள். அவர்களும் அப்படித்தான் சொன்னார்கள். பெருமதிப்பிற்குரிய பண்டிட் நேருவும் அந்த வாதத்தையே தீவிரமாகச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில் பிராங்க் அந்தோனி அவர்கள் உங்கள் வாக்குறுதி இந்தச் சட்டத்திலே இடம் பெற்றிருக்கிறது என்றால் நீங்களும் ஒரு வழக்கறிஞர், நானும் ஒரு வழக்கறிஞர், எங்கே இருக்கிறது அந்த வாக்குறுதி எனக்கு விளக்கிக் காட்டுங்கள் என்று பண்டித நேரு அவர்களைத் திருப்பிக் கேட்டார். அப்போதுதான் நேருஜி அவர்கள் பகிரங்கமாக ஒப்புக் கொண்டார்கள்.

யிருந்தும் கூட, அது செயல்படாமல் நின்று கிடக்கிறது. இதை
அரசாங்கம் கவனத்தில் எடுத்துக்கொண்டு, அங்கு கல்லூரி கட்டு
வதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

மேட்டூரில் 7 உயர் நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அந்த உயர்
நிலைப் பள்ளிகளில் படிக்கின்றவர்களுடைய எண்ணிக்கை 5,655.
இன்னும் சுற்றுப் பக்கத்தில் இருக்கிற இரண்டு யூனியன்களில்
இருக்கிற பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை மிக
அதிகம். ஆகவே, ஒரு கல்லூரி கட்டுவதற்கு நிலம் இருக்கிறது,
பணம் உண்டாக்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்றெல்லாம்
தீர்மானிக்கப்பட்ட பின்னும்கூட, அது செயல்படாமல் நிறுத்தி
வைக்கப்பட்டிருக்கிறது. அதற்கான காரணம் எனக்குத் தெரிய
வில்லை. ஒரே ஒரு காரணம்தான் இருக்கமுடியும். அங்கே பிரஜா
சோஷலிஸ்டு கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏ. இருக்கிறார் என்பது
தான் ஒரு காரணமாக இருக்கமுடியுமே தவிர, வேறு காரணம்
இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை.

அங்கே இருக்கிற உயர்நிலைப் பள்ளிகளைப் பற்றி ஒன்றிரண்டு
கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அரசினர் உயர்நிலைப்
பள்ளியில் 1,322 பேர்கள் படிக்கிறார்கள். கடந்த வருடம் ரிசல்
டைப் பார்த்தால் மிகவும் மோசமாக இருக்கிறது. அதை
அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கை ஏதாவது எடுக்கப்
பட்டிருக்கிறதா என்று பார்த்தால், அப்படி எடுக்கப்பட்டதாகத்
தெரியவில்லை. அங்கு பல வருடங்களாக இருக்கின்ற ஆசிரியர்
களுக்கும் புதிதாக வருபவர்களுக்கும் சண்டைகள் உண்டா
கின்றன, குரூப்கள் ஏற்படுகின்றன. அதனால் குழந்தைகளின்
கல்வியின் தரம் மிகவும் மோசமாக இருக்கிறது. ரிசல்டைப்
பார்த்தால், சரியான பெர்செண்டேஜ் வரவில்லை. ரிசல்டு
பெர்செண்டேஜ் மிகவும் குறைவாக இருக்கிறது என்பதை
கவனத்தில் எடுத்துக்கொண்டு, அந்தப் பள்ளி சீர்திருத்தப்பட்டு,
ஒழுங்காக நடப்பதற்கு, நல்ல பெர்செண்டேஜ் ரிசல்ட்டு
வருவதற்குத் தகுந்த ஏற்பாடுகளை அரசு செய்யவேண்டும் என்று
நான் விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் குழந்தை
களின் எண்ணிக்கை, ஆசிரியர்களின் எண்ணிக்கை, இவைகளுக்
கிடையே உள்ள விகிதாசாரம் பல இடங்களில் அதிகமாக இருக்
கிறது. இன்றைக்கு ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் பல பேர்கள்
வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களை நாம் பயன்படுத்திக்
கொண்டு, இந்த விகிதாசாரத்தை, இப்பொழுது இருக்கிற 30 என்ற
விகிதாசாரத்தை இன்னும் சிறிது குறைத்தால் கூட நல்லது.
அப்படிக் குறைக்காவிட்டாலும்கூட, குறைந்த பட்சம் 30 என்ற
விகிதாசாரத்திலாவது நிற்கும்படி பார்த்து, அதற்கு அதிகமாக
வருகிற இடங்களில் ஆசிரியர்களை அதிகப்படுத்துவதற்கான ஏற்
பாடுகளை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று
நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இம்மாதிரி கல்வி சம்பந்





தமாக செய்யப்படவேண்டிய காரியங்களை எல்லாம் சரியாக, துரித
மாகக் கவனித்து, இந்த அரசாங்கம் ஆவன செய்யும் என்று கருதி,
இந்தக் கல்வி மானியத்தை நான் ஆதரிக்கிறேன்.

* திரு. என். நாச்சிமுத்து : தலைவர் அவர்களே, இந்த அரசு
கொண்டுவந்திருக்கிற கல்வி மானியத்தை ஆதரித்து, இந்த
அவையின் முன் நான் எனது சில கருத்துக்களைக் கூற விரும்பு
கிறேன். ஒரு சமுதாயம் அல்லது ஒரு நாடு முன்னேற வேண்டு
மானால், அந்த சமுதாயமும், நாடும் எவ்வளவு தூரம் கல்வித்
துறையிலே தன்னுடைய உழைப்பையும், கவனத்தையும் செலுத்து
கிறதோ அந்த அளவுக்குத்தான் அந்த சமுதாயமும் நாடும் முன்
னேற முடியும் என்ற கொள்கைக்கு இணங்க தமிழக அரசு தங்க
ளுடைய பல திட்டங்களைத் தீட்டி, கல்விக்காகத் தன் வருவாயில்
மிகப் பெருவாரியான தொகையை ஒதுக்கி, கல்வியின் முன்னேற்றத்
திற்குப் பெரும் பணியாற்றுகிறது என்பதற்கு நாம் அனைவரும்
பெருமைப்பட வேண்டும்.

முதலாவதாக நாம் கல்வியில் முன்னேறவோ அல்லது நம்மு
டைய நாட்டு மக்களைக் கல்வியில் முன்னேற்றவோ வேண்டுமானால்,
நம் நாட்டினுடைய அமைப்பை நாம் முதலில் கவனிக்கவேண்டும்.
நமது நாட்டில் பெருவாரியான மக்கள் கிராமப் பகுதிகளாக உள்ள
இடங்களில் ஆங்காங்கு பற்பல பிரிவுகளாகப் பிரிந்து வாழ்ந்து
வருகிறார்கள். அப்படி வாழ்ந்து வருகிறபொழுது, கிராமப்
பகுதிகளில் எவ்வளவு பள்ளிகள், கல்லூரிகள் ஏற்படுகின்ற
னவோ அந்த அளவுக்குத்தான் நாட்டு மக்கள் கல்வியிலே
முன்னேறமுடியும். பள்ளிகளை ஏற்படுத்தும்போது, ஆங்காங்கு
உள்ள நகர்ப்பகுதிகளிலே அல்லாமல், கிராமப் பகுதிகளிலே
ஏற்படுத்த வேண்டும் என்று நான் அரசைக் கேட்டுக்கொள்
கிறேன்.

இப்பொழுதெல்லாம் கல்வியைப் பொறுத்தவரையில், பள்ளிகள்
தொடங்கப்படுவது என்றால், அங்கெல்லாம் பள்ளிகள் தேவைதானா
என்ற அடிப்படையில் ஆராய்ந்து பார்க்கப்பட்டு, தொடங்கப்பட
வில்லை. இடத்தையும், பணத்தையும் அரசுக்குப் பொது மக்கள்
எங்கு தருகிறார்களோ, அங்குத்தான் பள்ளிகள் தொடங்கப்
படுகின்றன. ஆனால், கிராமங்களைப் பொறுத்த அளவில் நிலங்கள்
கொடுக்கப்படுகின்ற இடங்களில் எல்லாம், பணத்தை எதிர்பார்க்
காமல், கல்லூரிகளும், பள்ளிகளும் தொடங்கப்படவேண்டும் என்று
நான் கேட்டுக்கொள்கிறேன். எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் கூட எங்கே பள்ளிகள், கல்லூரிகள் தொடங்
கப்பட வேண்டும் என்பது பற்றி மிகத் தெளிவாக எடுத்துக் கூறி
னார்கள். நம் நாட்டில் கிராமப் பகுதிகளில்தான் மக்கள் அதிகமாக
இருக்கிறார்கள். அங்கெல்லாம்தான் பள்ளிகள் அதிகமாகத்
தொடங்கப்படவேண்டும். நகரங்களை எடுத்துக்கொண்டால்,
பள்ளிகள் எங்கிருந்தாலும், அங்கு போக்குவரத்து வசதிகள் இருக்
கின்றன, மற்றும் அங்கே இருக்கும் குழந்தைகளுடைய

அதுமட்டுமல்ல, கல்வியைக் கற்றுக் கொள்பவர்கள், ஏழை எளிய படிக்காத பாமரர்கள், படித்தவர்கள் என்ற மாதிரியான இரண்டுவிதமான வர்க்கங்கள் பிரிந்துகொண்டு வருகிற ஒரு சூழ்நிலை உருவாகி வருகிறது. அதற்குக் காரணம், படிக்காதவர்கள் எல்லாம் உழைப்பாளிகள், படித்தவர்களெல்லாம் மூளையைக் கொண்டு காரியம் செய்பவர்கள் என்ற நிலை இருப்பதுதான். ஆகவே, படித்தவர்கள் உழைக்க ஆரம்பித்துவிட்டால், படித்தவர்களுக்கும், பாமரர்களுக்கும் இருக்கும் இடைவெளி குறைந்து, மிகவும் நெருங்கிய ஒரு நிலைக்கு வர வாய்ப்புக் கிடைக்கும். அது மட்டுமல்ல, காரியாலயங்களிலும், உயர்ந்த ஸ்தாபனங்களிலும் மட்டுந்தான் பணி புரிய வேண்டுமென்ற உணர்வு மாறி படிப்பவர்களுக்கு ஒரு மாற்று வழியும் உண்டாகும். ஆகவே, படித்தவர்கள் என்று சொல்லுகின்ற வகையைச் சேர்ந்தவர்களெல்லாம் உழைப்பதற்கும் தகுதியான முறையில் படிப்பை மாற்றியமைக்க வேண்டிய அவசியமான நேரத்தில் நாம் இருக்கிறோம் என்று இந்த நேரத்திலே இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வர நான் விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கல்லூரிகளிலே இன்றைக்குத் தமிழ் மொழியா, ஆங்கில மொழியா என்ற சர்ச்சை இருந்துகொண்டிருக்கிறது. அரசாங்கத் துறையிலே இருக்கும் கல்லூரிகளில் தமிழ்மொழியும், தனிப்பட்டவர்கள் கல்லூரிகளிலே ஆங்கிலமும் வைத்துக்கொள்வதற்கு இன்று அனுமதி அளித்திருக்கிறது. தமிழைப் பயிற்சி மொழியாக மாற்றுவது என்று சொல்வது இவ்வளவு நாளும் இல்லாத ஒரு முன்னேற்றமான நிலையை, புரட்சிகரமான நிலையைச் செய்யும் காரியமாகும். அந்தக் காரியத்தைச் செய்யும்பொழுது அங்கே கொஞ்சம், இங்கே கொஞ்சம் செய்வதன் மூலமாக அந்த முறையின் மீது வெறுப்பு உண்டாகும் நிலைதான் ஏற்படும். இந்த அரசு, பயிற்சிமொழி தமிழ் என்று சொல்லிவிட்ட பிறகு, எந்தவித தயவு தாட்சண்யமும் இல்லாமல், உறுதியாக, எல்லாக் கல்லூரிகளுக்கும் தமிழ்தான் பயிற்சிமொழி என்று உறுதியாகச் செய்ய முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அப்படி இல்லாவிட்டால், தேசியமயம் செய்யும் தொழில்களுக்கும், தனிப்பட்ட தொழில்களுக்கும் இருக்கின்ற வித்தியாசத்தைக் காட்டி தேசியமயம் செய்வதே தவறு என்று சொல்வதைப்போல், தமிழுக்கும் ஆங்கிலத்திற்கும் உள்ள வேற்றுமைகளைக் காட்டி, தமிழ் பயிற்சிமொழியாக ஆவது தவறு என்று எடுத்துக்கூற வாய்ப்புகள் கிடைக்கின்றன. அந்த வாய்ப்பை நீக்குவது அவசியம். அந்த மாற்றத்தைச் செய்வதற்கு ஏதோ சில சங்கடங்கள் இருக்கலாம், அவைகளைச் சமாளித்து முன்னேறிப் போவதுதான் திறமையான செயலுக்கு வழி என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கல்லூரிகளில் இருக்கின்ற ஆசிரியர்கள் சம்பந்தமாக ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். யுனிவர்சிடி மானியக் கமிஷன் அளித்துள்ள சிபார்சுகள் இந்த ராஜ்யத்தில்





ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று எனக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே இருக்கிற கல்லூரிகளில் டியூட்டர்கள் நியமிக்கப்படும்பொழுது, அவர்களை வருடா வருடம் நீக்கி, வேறு ஆட்களை வைக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இங்கு இருக்கிற கல்லூரி ஆசிரியர்களுக்கு அளிக்கப்படுகின்ற அடிப்படை சம்பளம் மற்ற இடங்களில் இருப்பதைவிடக் குறைவானது என்று சொல்லப்படுகிறது. இவைகள் எல்லாம் அரசாங்கம் கவனத்தில் எடுத்துக்கொண்டு, உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய விஷயங்கள்.

அடுத்தாற்போல, கல்லூரிகள் என்று சொல்கிறபொழுது, இப்பொழுது பல இடங்களில் கல்லூரிகள் கட்டப்படுகின்றன. கல்லூரிகள் கட்டுவதற்கு முன்னால், அங்கே உயர்நிலைப் பள்ளிகள் எவ்வளவு இருக்கின்றன, அதிலே எவ்வளவு பிள்ளைகள் படிக்கிறார்கள், கல்லூரிகளுக்கு வருபவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை ஆராய்ந்து தெரிந்துகொண்டிருக்கிறார்களா என்று பார்த்தால், அப்படியில்லை என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. அதோடு மட்டுமல்ல. அது கல்விக் கற்றுக்கொள்வதற்கும், கல்லூரியில் சேர்வதற்குமான வாய்ப்பும், வசதியும் உள்ள இடமாகவாவது இருக்கிறதா என்பதை ஆராய்ந்து பார்த்து செய்கிறார்களா என்றால், அதுவும் இல்லை என்றுதான் கூறவேண்டும். கல்லூரிக் கல்வி கற்பதற்கு, ஹாஸ்டலில் தங்கி படிப்பதற்கு வசதி இல்லாத பகுதி எது என்று பார்த்து, அப்படிப்பட்ட இடங்களில் அம்மாதிரி கல்லூரிகளைக் கட்டுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்வதுதான் மக்களுக்கு உதவி செய்வதாகும். சேலம் ஜில்லா, நாமக்கல்லில் இரண்டு கல்லூரிகள் கட்டப்பட்டிருக்கின்றன. மேட்டூரில் ஒரு கல்லூரி கட்டவேண்டும் என்று இரண்டு வருஷங்களுக்கு முன்னால் சப் கலெக்டர் தலைமையில் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு, அதற்கான நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இரண்டு பஞ்சாயத்து யூனியன்களைச் சேர்ந்த எல்லாத் தலைவர்களையும் அழைத்து, ஒரு கமிட்டி அமைத்து, எப்படி பணத்தை உருவாக்குவது என்று தீர்மானிக்கப்பட்டன. ஆனால் இரண்டு வருஷங்கள் ஆனதற்குப் பின்னாலும்கூட, அங்கே அதற்கான நடவடிக்கைகள் எதுவும் முன்னேறவில்லை. அதை அப்படியே போட்டுவிட்டார்கள். அதற்கான காரணம் என்ன? அந்தப் பகுதியில் இருப்பவர்கள் பெருவாரியாகத் தொழிலாளர்கள். அவர்கள் கல்லூரிகளுக்குச் சென்று, ஹாஸ்டலில் தங்கி படிப்பதற்கு வாய்ப்பும், வசதியும் இல்லாதவர்கள். அப்படி பிற்போக்கான இடங்களாக இருக்கிற பகுதியில் கல்லூரி கட்டுவதற்காக அங்குள்ளவர்கள் முன்வந்தால் அதை உற்சாகப்படுத்தி, வேகப்படுத்தி, துரிதப்படுத்திக் கட்டுவதற்கு இந்த அரசாங்கம் உதவி செய்யவேண்டும். தவிர, அது நடைமுறைக்கு வராமல் நின்றுவிடுவதை, ஏன் வரவில்லை என்று கவனிக்கப்படவில்லை. ஏன் வரவில்லை என்று கேட்டால், அரசாங்கத்தினிடம் அனுமதி பெறவேண்டும் என்று கலெக்டர் கூறினார்கள். மறுபடியும் அனுமதி கிடைத்துவிட்டது என்று சொன்னார்கள். அப்படி

பெற்றோர்கள் நல்ல கல்விப் பழக்கம் உள்ளவர்களாகவும், கல்வி கற்றவர்களாகவும் இருப்பதால், அவர்கள் தங்களுடைய குழந்தைகளை பள்ளிகளுக்கு அனுப்புவது மிகவும் சுலபமாக இருக்கிறது.

இப்பொழுது ஆரம்பப் பள்ளிகள் தொடங்கப்படவேண்டும் என்றால், அதற்குக் கல்வி இலாகாவில் சில நிபந்தனைகள் வைத்திருக்கிறார்கள். ஒரு பள்ளிக்கும் இன்னொரு பள்ளிக்கும் இடையே குறைந்தது ஒரு மைல் தூரமாவது இருக்கவேண்டும், மேலும் 300-க்கு மேற்பட்ட அளவுக்கு மக்கள் தொகை இருக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். இந்த அடிப்படையில் பார்ப்போமானால், பல கிராமங்களில் ஆரம்பப் பள்ளிகள் கூட ஏற்படுத்தப்பட முடியாத நிலை இருக்கிறது. அதனால் அந்தப் பகுதி மக்கள் கல்வி வசதியை இழந்துவிட நேரிடுகிறது. ஆகவே, அந்த முறையை மாற்றி, பள்ளிகளுக்குத் தேவையான குழந்தைகள் இருந்தால், ஓர் ஆசிரியருக்குப் போதுமான குழந்தைகள் எங்கே இருக்கிறார்களோ, அங்கெல்லாம் பள்ளிகள் ஏற்படுத்தப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்பொழுதெல்லாம், ஆரம்பத்திலிருந்தே குழந்தைகள் அரசாங்கப் பள்ளிகளிலோ அல்லது சட்ட அனுமதி பெற்ற பள்ளிகளிலோதான் சேர்க்கப்படவேண்டும் என்று சொல்கிறார்கள். கிராமங்களை எடுத்துக்கொண்டால், ஒரு மைலுக்கு இடையே பள்ளிகள் இருக்கக்கூடாது என்ற ஒரு விதியை வைத்துக்கொண்டிருக்கிறோம். அதே சமயத்தில் பிற்பட்ட குழந்தைகள் அத்தனை பேர்களும் மேற்சொன்னபடியுள்ள பள்ளியில்தான் படிக்கவேண்டும் என்றும் நாம் ஒரு விதியை ஏற்படுத்துகிறோம்.

இந்த முறையைப் பார்த்தோமேயானால், குறைந்தது 5, 6 வயது குழந்தைகள் ஆரம்ப வகுப்புக்குக் கூடச் செல்ல முடியாமல், கல்வியை இழந்து விடுகிறார்கள். வருங்காலத்திலாவது, தனியாகக் கல்வி கற்ற குழந்தைகள் நேராக 5, 6 வகுப்பில் சேருவதற்கு அனுமதி கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த விதியைக் குறைந்தது கிராமப் பகுதிகளிலாவது அமுல் நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள், புதிதாகக் கல்லூரிகள் ஏற்படுத்துவதைக் குறைக்க வேண்டும் என்றும், கல்வியின் தரம் சரியாக இல்லை என்றும் சொன்னார்கள். குறிப்பாக முன்பு ஒரு தடவை இம்மாமன்றத்தில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவம் அவர்கள் இதைச் சொன்னார்கள். அந்தக் கொள்கையை அரசு அமுல் நடத்தினால், பாதிக்கப் படக்கூடிய பகுதிகள் சென்னை, மதுரை, கோவை போன்ற நகரங்கள் அல்ல. மாறாக, சின்ன சின்ன கிராமங்களும், வட்டத் தலைநகரங்களும்தான். ஆகவே, இனிமேலாவது புதிதாகக் கல்லூரிகள் ஏற்





படுத்துவதாக இருந்தால், அந்த அந்த வட்டத் தலைநகரத்தில், எங்கு கல்லூரிகள் இல்லாமல் இருக்கின்றனவோ அங்கு பார்த்து ஏற்படுத்த வேண்டும். ஒரு கல்லூரி இருக்கும் இடத்தில் மற்றொரு கல்லூரி ஏற்பட்டு வருவதனால் சிக்கல்கள் ஏற்படும்.

கல்வி அமைச்சரிடம் பொதுநலத்துறையும் இருப்பதால், அவர்கள் ஒரு சிக்கலைப் பார்க்க வேண்டும். பொதுவாக, கிராமங்களிலிருந்து தன் பிள்ளைகள் படிக்க வேண்டும் என்று பெற்றோர்கள் பலர் நகரங்களுக்குக் குடியேறுகிறார்கள். இப்படிக் குடியேறுவதால் நகரங்கள் மக்கள் பெருக்கத்தால் பாதிக்கப்படுகின்றன. கல்லூரிகள் இருக்கும் இடத்திற்குப் பெரிய நெருக்கடி ஏற்படுகிறது. எந்த எந்தப் பெரிய நகரங்களில் கல்லூரிகள் இருக்கின்றன என்று அரசாங்கமே ஒரு குறிப்பு எடுத்து அந்தப் பகுதிகளில் புதிய கல்லூரிகள் கொண்டு வாராமல் இருந்தால், நகரத்தில் மேலும் குடியேறுவது குறைந்து, நகரத்து மக்களும் வசதியாக வாழ்ந்து வருவார்கள். பரவலாகக் கல்லூரிகள் கிராமப் பகுதிகளில் இருந்தால் கிராமப் பகுதிகளுக்கும் நலன் ஏற்படும்.

அடுத்தபடியாக, தமிழின் நிலை பற்றி இந்த மன்றத்திலே சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன். இப்பொழுது மாணவர்களிடம் அமைதி குறைவாக இருக்கிறது. பலரும் பல கருத்துக்களைச் சொன்னார்கள். கல்லூரியின் பாட மொழி தமிழாக இருப்பது கல்வி வளர்ச்சிக்குச் சிறப்பாக இல்லை என்று ஒரு சிலர் கூறுகிறார்கள். என்னைப் பொறுத்த வரையில், தமிழின் தகுதியில் அதன் சிறப்பில் எனக்கு நம்பிக்கையுண்டு. அதன் மூலம் கல்வி கற்றுக் கொடுக்க முடியாது என்ற நிலை இல்லை. தமிழ் தான் பயிற்சி மொழி என்று சொல்லி, தமிழின் மூலமாக மாணவர்கள் பாடங்களை ஏற்றுக் கற்கக்கூடிய அளவில் உற்சாகத்தோடும், உள்ளத்தில் பற்றோடும் உள்ளவர்கள் பாடம் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்து தர வேண்டும். ஆசிரியர்கள் நியமிக்கப்படும்போது தமிழ்ப்பற்று உள்ளவர்களாக, தமிழின் மூலம் பாடங்கள் சொல்லிக் கொடுப்பதில் ஆர்வம் உடையவர்களாக இருப்பவர்களை நியமிக்க வேண்டும். ஆசிரியர் தொழில் என்பது மற்ற தொழில்கள் போல் இல்லாமல், அது ஒரு தூய்மையான, பயனுடைய தொழில். அந்தத் தொழிலில் பற்றும், ஆர்வமும் உள்ளவர்களை நியமிக்க வேண்டும். அப்படிப் பட்ட ஆசிரியர்களை நியமித்தால்தான் உண்மையிலேயே அவர்களுக்கும் அந்தத் தொழிலிலே பற்று இருக்கும். அதனால் கல்வி கற்கும் மாணவர்களுக்குக் கல்வியில் பயனும் நல்ல பற்றும் ஏற்படும். அதன் மூலமாக தமிழிலேயே பாடங்கள் கற்கும் நிலை ஏற்படும். அந்த நிலை இல்லாமல் மற்ற வேலைகளுக்கு ஆட்களைத் தேர்ந்தெடுப்பது போல் ஆசிரியர் வேலைக்கும் தேர்ந்தெடுத்தால், நாம் உண்மையிலேயே கல்வித் துறையிலும், தமிழ் பாட மொழித் திட்டத்திலும் தோல்வியடைந்தவர்கள் ஆவோம். ஆசிரியர் தொழிலில் தானாகவே விரும்பி மேற்கொண்டு திறமைசாலிகளாகப் பணியாற்றி மற்ற எந்தத் துறையிலும் இல்லாத அளவிற்கு இந்தத் துறையின் ஈடுபட்டு வேலை செய்ய, அந்தத் தொழிலில் பற்றுள்ள

வர்களை, ஆர்வம் உள்ளவர்களை அமைத்தால்தான் கல்வி முன்னேற, மாணவர்கள் நல்ல முறையில் கல்வி பெற வாய்ப்புகள் ஏற்பட முடியும். ஆகவே, அந்த வகையில் ஆவன செய்யவேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொண்டு, இந்த மானியத்தை வரவேற்று என் உரையை முடிக்கிறேன்.

**திரு. ஏ. பாலசுப்பிரமணியன் :** பேரவைத்தலைவர் அவர்களே, கல்வி மானியத்தைப் பற்றி என் கட்சியின் சார்பாக என் கருத்துகளை அவைமுன் வைக்க விரும்புகிறேன்.

வேலையில்லாத் திண்டாட்டம், குறிப்பாக படித்தவர்கள் மத்தியில் வெகு வேகமாக வளர்ந்துகொண்டிருக்கின்ற காலத்தில் இருக்கிறோம். இந்த நேரத்தில் விநோதமான யோசனைகள் சபை முன் வைக்கப்பட்டன. ஆளுநர் உரையின் மீது நடந்த விவாதத்தின் போது, மன்றத்திலே உறுப்பினர்கள் சிலர் தயவுசெய்து கல்லூரிகளைத் திறக்கவே வேண்டாம்' என்றார்கள். அப்படிப்பட்ட கேவலமான, தவறான, மோசமான ஆலோசனைகளை நாம் ஏற்கக் கூடாது. அவற்றிற்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது. மேலும் மேலும் கீழேயிருந்து மேலே வரையில் கல்வி விஸ்தரிக்கப் பட வேண்டும். அப்படிச் செய்ய வேண்டிய அத்தியாவசியமான ஒன்று கல்வி. வேலை கொடுக்க முடியவில்லை என்றால் சமுதாய அமைப்பு அப்படி இருக்கிறது. செருப்பு சரியில்லை என்றால், காலை வெட்ட முடியாது. கட்டில் 4 அடி, ஆள் 6 அடி என்றால், கட்டிலை உடைத்துப் பெரிதாக்கவேண்டும். அதேபோல, படித்து வளர்ந்து வரும் வாலிபர்கள் அனைவரும் வேலை தேடும் நிலையில், பழைய சமுதாயத்தை அடித்திருப்பவர்கள் கல்லூரிகளைத் திறக்கக் கூடாது என்பது போன்ற ஆலோசனைகள் அறுவருக்கத்தக்கவை.

அடுத்து, இந்த அகடெமிக் பாடிஸ், செனட் போன்ற ஸ்தாபனங்களில், குழுக்களில் நிலக் கிழார்களுக்கு பிரதிநிதித்துவம் இருக்கிறது. ஆலை முதலாளிகள், தொழில் அதிபர்களுக்கு பிரதிநிதித்துவம் இருக்கிறது. ஆனால் இந்தக் குழுக்களில் மாணவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கிடையாது. கட்டாயமாக மாணவர்களுக்கு அவற்றில் இடம் கொடுக்க வேண்டும். பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும். 'ஆர்கனைஸ்ட் லேபர்' என்று சொல்வார்கள். தொழில் சங்கங்களுக்கு இவற்றில் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்று எனது கட்சியின் சார்பாக வற்புறுத்துகிறேன். மாணவர்கள், தொழிலாளர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பதை இந்தப் பெரிய மனிதர்களும் புரிந்து கொள்ள வேண்டும். அதற்கு இடம் ஏற்படும். அதை வற்புறுத்துகிறேன்.

அடுத்தபடியாக, கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பது என்ற விஷயத்தில், சிற்சில கல்லூரிகளுக்கு தனிக் குழுக்கள் இருக்கின்றன. அவற்றில் இடம் பெற, விஞ்ஞான பாடங்கள் வேண்டும் என்று போடுகிறார்கள். அதற்காக ஏராளமான மனுக்கள் போடப்படுகின்றன. அத்தனை கல்லூரிகளுக்கும், ஒவ்வொரு கல்லூரிக்கும்



5 ரூபாய் அட்மிஷன் பீஸ் சேர்த்துப் போடுகிறார்கள். அநியாயமாக இருக்கிறது. அவ்வளவு பணமும் இப்படிப் போவதைத் தடுக்க' மாநில அளவில் ஒரு குழு அமைக்கவேண்டும். இதற்கு ஒரு மாணவர் ஒரு மனுப் போட வேண்டும். ரூபாய் 5 கட்டினால் போதும். அதிலே அவர்கள் பார்த்து, பரிசீலித்து தேர்ந்தெடுத்து, எந்த எந்தக் கல்லூரிக்கு எந்த எந்த மாணவர்கள் என்று பட்டியலைப் பிரித்து, அனுப்பி விடவேண்டும். இப்படிச் செய்தால், 8, 10 கல்லூரிகளுக்கு மனுப்போடும் தொல்லை போகும். இப்படிக் குழுவை அமைத்துவிட்டால், சிபாரிசுகள் செய்வதும் போய்விடும். இது ஒரு கேவலமான வியாபாரமாக இருக்கிறது. கல்லூரிகளில் இடம் பிடிக்க எவர் மூலம் போவது, எவருக்குத் தருவது, எவ்வளவு தருவது, இதற்கெல்லாம் ப்ரோக்கர்கள் ஏற்படுவது, இதெல்லாம் தொடர்ந்து நாட்டில் கேவலமாக இருப்பது, இவற்றைத் தொலைத்து கட்டுவதற்கு சாதகமாக இருக்கும். ஆகவே, மாநில ரீதியான குழு ஒன்றைக் கல்வி நிபுணர்களை மட்டும் கொண்டதாக அமைக்க வேண்டும். அதன் மூலம் மாநில முழுதிற்கும் பிரித்து அனுப்புவது என்கிற ஏற்பாட்டைச் செய்தால் அது பொருத்தமான ஏற்பாடாக இருக்கும்.

அடுத்து, யூனிவர்சிடி கிராண்ட் கமிஷன் பற்றி சில விவரங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். யுனிவர்சிடி கிராண்ட் கமிஷன் சில சிபாரிசுகளைச் செய்திருக்கிறது. நாம் அவற்றை ஏற்றுக் கொண்ட போதிலும் முழுமையான அளவிற்கு நமது மாநிலத்தில் இன்னும் அமுலாக்கப்படவில்லை. சென்ற கால சேவைக்காக மூன்று இன்கிரிமெண்டு கொடுக்க வேண்டுமென்று அந்தக் கமிஷன் கூறியது. ஆனால் நமது மாநில அரசு ஒரு இன்கிரிமென்ட்தான் கொடுத்திருக்கிறது.

இரண்டாவதாக 25 பர்சென்ட் லெக்சரர்ஸ் போஸ்ட்டை சீனியர் கிரேடாக ஆக்கி, 400 ரூபாய்—800 ரூபாய்வரை சம்பள விகிதம் தர வேண்டுமென்று கமிஷன் கூறியிருக்கிறது. ஆனால் நமது மாநிலத்தில் இதுவும் அமலாக்கப்படவில்லை. எல்லா மொழியாசிரியர்களுக்கும் 300 ரூபாய்—முதல் 600 ரூபாய் சம்பள விகிதம் இருக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறது. ஆனால் நமது மாநிலத்தில் அப்படி ஆக்கப்படவில்லை. மொழியாசிரியர்கள் இரண்டாவது கிரேடாக சம்பளம் 200 ரூபாயில் தொடங்கி 300 ரூபாயில் முடியக் கூடிய ஏற்பாடுதான் இருக்கிறது. ஏன் இந்தத் தாரதம்மியம்? இது தவறானது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். எல்லா மொழியாசிரியர்களுக்கும் ரூபாய் 300 முதல் 600 ரூபாய் என்ற சம்பள விகிதம் தர வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன். மேலும் லைப்ரரியன்ஸ்க்கு அமுலாக்கியதைப்போல பிசிகல் டைரக்டர்ஸ் இவர்களுடைய சம்பள விகிதம் அமலாக்கப்படவில்லை. ஆனால் அமைச்சர் அவர்களுடைய குறிப்பிலே ஃபிசிகல் டைரக்டர்களுக்கு அமலாக்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி அமலாக்கும் போது ஃபஸ்ட் கிரேடு, செகன்ட் கிரேடு என்று செய்துவிடாமல்,

limiting the power of Parliment, limiting thepower of Assemblies and other bodies."

என்று நேருவின் வாக்குறுதி அதில் இல்லை என்று ஒப்புக்கொண்டு அப்பொழுதுதான் சொன்னார்கள். அதற்குப் பிறகாவது, நாட்டின் நன்மையைக் கருதி, தமிழக மக்களின் நலனைக் கருதி, இந்தி பேசாத மக்களின் நலனைக் கருதி, காங்கிரஸ்காரர்கள் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தார்களா என்றால் இல்லை. ஆனால் இன்றைய தினம் சொல்வதற்குக் காரணம், தங்களுடைய அரசியலுக்காக இந்தப் பிரச்சினையைச் சொல்லுகிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் நாட்டு மக்களுக்கு உண்மையை உணர்த்த வேண்டுமென்ற அடிப்படையிலே, அண்மையிலே நாடாளுமன்றத்தில் இந்த மொழிப்பிரச்னை பற்றி திருத்தத் தீர்மானத்தை, குடியரசுத் தலைவரவர்களின் உரையின் மீது கொண்டு வந்தது. ஆனால் காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒருவர் கூட ஆதரவு தெரிவிக்கவில்லை. இங்கே சந்துமுனையிலே சிந்து பாடுகிறார்கள், வீதிக்கு வீதி சங்கநாதம் செய்கிறார்கள், ஆனால் நாடாளுமன்றத்தில் ஒரு நாதி கூட இல்லாமல் போய்விட்டது. இதை நான் சொல்வதற்குக் காரணம், இப்பொழுது நமது முதலமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள், ஒன்று நீங்கள் கொண்டு வாருங்கள், நாங்கள் ஆதரவு தருகிறோம், அல்லது நாங்கள் கொண்டு வரும் திருத்தத்தை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு இன்னும் காங்கிரஸ் கட்சியிலிருந்து பதில் வரவில்லை. ஆனால் அவர்கள் விரும்புவதெல்லாம், நாம் இப்படிப்பட்ட ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தால் இந்திரா அமைச்சரவையைக் கவிழ்த்து விடலாம், கதை முடிந்துவிடும் என்று அவர்கள் கருதுகிறார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அப்படி ஒரு திருத்தத்தைக் கொண்டு வருவதன் மூலம் இந்தி இந்த நாட்டிலிருந்து ஒழியுமானால் அதைச் செய்ய திராவிட முன்னேற்றக் கழகம் தயாராக இருக்கிறது, இந்திரா அமைச்சரவையாக இருந்தாலும் சரி, இந்திரனின் அமைச்சரவையாக இருந்தாலும் சரி அதைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. ஆனால் அந்தத் திருத்தம் தோல்வியுற்று, இந்திரா அமைச்சரவை கவிழ்ந்த பிறகும், இந்தித் திணிப்பு ஒழியவில்லையென்றால், தமிழ்நாட்டிலிருக்கின்ற தமிழக காங்கிரஸ் கட்சியைக் கலைக்கத் தயாராக இருக்கிறார்களா ? இது தெரிந்தாக வேண்டும். இந்த உண்மையை நாட்டு மக்கள் உணர வேண்டும். அவர்கள் நீண்ட நாள் ஓடும், 1972-இல் இதற்குப் பதில் கிடைக்கும் என்று அந்த அளவுக்கு நினைக்கத் தேவையில்லை. ஒவ்வொரு கணமும் ஒவ்வொருவராக ஓடிக் கொண்டிருக்கிறார்களே, அதற்கே அடிப்படைக் காரணம், வேளைக்கு ஒரு வேஷம் போடுவதனால் ஏற்படும் விபரீதமேயாகும்.

எனவே, மாணவர்களைத் தவறான வழிக்கு இழுத்துச் செல்லாதீர்கள், தவறான முறையில் பிரச்னைகளை அணுகாதீர்கள், ஆட்சி மொழிப்பிரச்சினையாக இருந்தாலும் சரி, பயிற்சி மொழிப்பிரச்





னையாக இருந்தாலும் சரி, தமிழக அரசு தீவிரமாகச் செயலாற்றும், தெளிவோடு செயலாற்றும், அதற்கு நீங்கள் உறுதுணை புரிய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன்.

*** திரு. எம். சுரேந்திரன் :** தலைவரவர்களே, இந்தச் சபையின் முன்னால் வைத்திருக்கும் கல்வி மானியக் கோரிக்கையின் மீது நான் ஒரு வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்தி சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நம் நாட்டிலே அறிவு வளர்ச்சிக்கான ஒரு கருவியாக கல்வியை இன்று யாரும் பயன்படுத்துவதில்லை என்று முதலிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். வாழ்க்கை நடத்துவதற்கு ஆதாரமாகத்தான் கல்வியை இன்று கற்றுக் கொள்கிறார்கள். அப்படிக் கற்றுக் கொள்கின்ற கல்வி, வாழ்க்கை நடத்துவதற்குப் பயன்படுகிறதா என்றால் பயன்படவில்லை என்ற விடைதான் நமக்குக் கிடைக்கின்றது. அதற்குக் காரணம் என்னவென்றால், படித்தவர்களிலே பல்லாயிரக்கணக்கான பேர்கள், இன்றைக்கு வேலையில்லாத நிலையிலே தத்தளித்து, திணறிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, கல்வி, உயர் கல்வி கற்றவர்கள் ஏதோ ஆடாமல், அசையாமல் காரியாலயங்களில் வேலை செய்யவேண்டும், தொழில் ஸ்தாபனங்களிலே உயர்ந்த பதவிகளிலே வேலை செய்ய வேண்டுமென்றுதான் விரும்புகிறார்களே தவிர, அவர்களுடைய கல்வியை உழைப்புடன் சேர்த்து பயன்படுத்துவதற்கான உணர்வு இன்றைக்குத் தோன்றவில்லை. இதற்குக் காரணம் கடந்த காலத்திலே கல்வியைப் பற்றிய ஒரு உருவம் அளிக்கின்றபொழுது, இந்தத் தேசத்திலே ஜனத்தொகை மிகக் குறைவாக இருந்தது, நிலப்பரப்பு மிக அதிகமாக இருந்தது. அம்மாதிரி நிலப்பரப்பிலே பணி செய்பவர்கள் நிலத்திலிருந்தே செல்வத்தை உண்டாக்க வேண்டிய நிலையிலுள்ளவர்களாக, படிக்காதவர்களாக இருந்தார்கள். படிக்காதவர்களெல்லாம் நிலத்திலே பாடுபடுகின்றவர்கள். படித்தவர்களெல்லாம் வேறு துறையிலே பாடுபடுகின்றவர்கள் என்ற முறையிலே சமூகத்திலே கல்வியானது அமைந்து வளர்ந்து வந்திருப்பதைப் பார்க்கிறோம்.

இன்றைக்கு நிலமானது குறைந்துபோய், ஜனத்தொகை அதிகப்பட்டு, நிலம் ஆங்காங்கு குவிந்திருக்கின்ற நிலைமைகளை மாற்றி ஒரு குறிப்பிட்ட அளவிலே சிறுசிறு பகுதியாக மாற்றுவது என்ற நிலை ஏற்பட்டிருக்கும்பொழுது, குறைந்த நிலத்தை வைத்துக் கொண்டு, படிக்காதவர்கள், அந்த நில சம்பந்தமான நுணுக்கங்கள் தெரிந்தவர்கள் இனிமேல் அதில் ஈடுபட்டு அதிகமான உற்பத்தியை உண்டாக்கிவிட முடியாது. ஆகவே, இனிமேல் படித்தவர்களும் சேர்ந்து நிலத்திலும், மற்றவைகளிலும் உழைக்க வேண்டிய அவசியம் இன்று ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, கல்வியினுடைய தன்மையை மாற்றி அமைக்க வேண்டிய நிலை இன்றைக்கு உண்டாகியிருக்கிறது.

[திரு. எ. பாலசுப்பிரமணியன்] [1970 மார்ச் 11

யுனிவர்சிடி கிராண்ட் கமிஷன் சொல்லியிருப்பவை முழுவதையும் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் ஃபிசிகல் டைரக்டர்ஸ்களை ஏன் விட்டுவைக்க வேண்டும்? A sound mind in sound body என்று சொல்வார்கள். நல்ல உடல் ஆரோக்கியத்திற்கு மாணவர்களைப் பக்குவப்படுத்தக்கூடிய ஃபிசிகல் டைரக்டர்ஸ்களை விட்டுவைப்பது சரியல்ல.

அடுத்தபடியாக, கிராஜுவேட் டியூட்டர்ஸ், போஸ்ட் கிராஜுவேட் டியூட்டர்ஸ் இவர்கள் இரண்டு பேரும் ஒரே வேலையைத்தான் செய்கிறார்கள். சம வேலைக்குச் சம சம்பளம்தான் தர வேண்டும். இப்பொழுது வித்தியாசம் இருக்கிறது. அப்படி மேல் பட்டப் படிப்பு என்று இருந்தால் அதற்காக அலவன்ஸ் வேண்டுமானால் கொடுக்கலாம். ஆகவே, இவர்களுக்குச் சம சம்பள விகிதங்கள் இருக்கவேண்டும். மேலும் டியூட்டர்கள் கேஷுவல் லேபரர்ஸ் போல நடத்தப்படுகிறார்கள். அம்மாதிரி நடத்தப்படுவது நிறுத்தப்பட வேண்டும். அவர்களுக்கு உரிய மரியாதையைக் கொடுத்து நடத்த வேண்டும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

யூனிவர்சிடி கிராண்ட் கமிஷன் சிபாரிசுகளை எல்லாம் ஆந்திர மாநிலம் முழுமையாக அங்கீகரித்து, அமல் நடத்தியிருப்பதாக அறிகிறேன். நம் மாநிலம் எதிலும் முன்னணியில் இருக்கக்கூடிய மாநிலம் என்று சொல்வார்கள். இந்த விஷயத்தில் நம் மாநிலம் பின்னணியில் இருப்பது சரியல்ல. கமிஷன் சிபாரிசுகளை நம் மாநிலம் அமல்படுத்த வேண்டும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

கல்லூரி ஆசிரியர்கள் தங்கள் சம்பளத்தை அரசாங்கக் கருவூலத்திலிருந்து பெறுவதற்கு வகை செய்ய வேண்டும். கல்லூரி நிர்வாகத்தினர் வாங்கி, அவர்களுக்கு முழுமையாகக் கொடுக்காத நிலைமை இருக்கிறது. ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் நடக்கிற மாதிரி கல்லூரி மட்டத்திலும் நடைபெறுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். 80 சதவிகிதத்தை யூனிவர்சிடி கிராண்ட் கமிஷன் தருகிறது. ஆகவே, கல்லூரி ஆசிரியர்கள் தங்கள் சம்பளத்தை அரசாங்கத்தின் கருவூலத்திலிருந்து நேரடியாக வாங்கிக் கொள்வதுதான் சிறந்த முறை, பொருத்தமான முறை, எந்தவிதமான தவறுகளும் ஏற்பட முடியாத முறை, ஆசிரியர்களுக்கு மனநிறைவைத் தரும் முறை, மகிழ்ச்சியைத் தரும் முறை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, செகண்டரி எஜுகேஷனைப்பற்றி குறிப்பிட்ட சில விஷயங்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன். பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளைச் சேர்ப்பதற்காக ஏதாவது லஞ்சக் கட்டணம் கட்டாமல் ஆறாவது படிவத்தில் எந்த மாணவனையும் சேர்த்துவிட முடியாது. 25 ரூபாய், 50, 75, 100 ரூபாய் நன்கொடை என்ற பெயரால் வாங்குகிறார்கள். கட்டட நிதி என்கிறார்கள், அது கட்டட நிதியே அல்ல. சுத்த லஞ்சம்தான். வார்த்தைதான் வேறே தவிர



1970 மார்ச் 11] [திரு. எ. பாலசுப்பிரமணியன்]

அது லஞ்சம்தான். அந்த நன்கொடை கொடுக்க முடியாதவன் பள்ளியில் சேர முடியாது. அதைக் கொடுக்க முடியாத ஏழைகள் என்ன செய்ய முடியும்? பள்ளிகளில் இடம் பிடிப்பது என்பது பயங்கரமான சோதனையாக இருந்து வருவதை நாம் பார்க்கிறோம். பள்ளிக்கூட அபிவிருத்தி நிதி என்று சொல்லுகிறார்கள். உண்மையில் அது அபிவிருத்தி நிதியா? மாணவன் அவர்கள் கேட்பதைக் ஏழைகள் தங்களுடைய வீட்டிலுள்ள எதையாவது அடகு வைத்துக் கொடுத்துதான் ஆக வேண்டுமென்ற நிலைமை இருக்கிறது. இந்த மாதியயான நிலைமை தமிழகத்தில் எல்லாவிடங்களிலும் பரவியிருக்கிறது. சர்க்கார் உடனே தலையிட்டு தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக, செகண்டரி எஜுகேஷன் எந்த நிலவரத்தில் இருக்கிறது என்பதை இன்றைக்கு நாம் பார்க்கிறோம். இன்றைக்கு இருக்கும் முறையில் குமாஸ்தா வேலைக்குத்தான் மாணவர்களைத் தயார்ப்படுத்துகிறார்கள். இந்த நிலைமை மாற வேண்டும். ஆகவே, எட்டாவது படிவத்திலிருந்தாவது மாணவர்களுக்கு டெக்னிகல் ஓரியன்டேஷன் தொழில் பயிற்சி இணைந்திருக்கக் கூடிய கல்வி அளிக்க வேண்டும். படிக்கும்போதே மாணவர்களுக்கு இன்டஸ்ட்ரியல் டிரெயினிங், அக்ரிகல்சரல் டிரையினிங் கொடுத்தால் பிற்காலத்தில் தானாகவே வேலைவாய்ப்பைத் தேடிக்கொள்ளக்கூடிய நிலைமை ஏற்படும். இதை எட்டாவது படிவத்திலேயிருந்து செய்தால், மெல்ல மெல்ல வேலைவாய்ப்பை ஏற்படுத்தக் கூடியதான நிலைமையை ஏற்படுத்த முடியும்.

அடுத்து, நான் வற்புறுத்திக் கூற விரும்புவது, தனியார் துறை என்பது கல்வியில் இருக்கக்கூடாது என்பதுதான். இதைவிடக் கேடுகெட்ட வியாபாரம் வேறு ஒன்றும் இந்த நாட்டில் இல்லையென்று சொல்லலாம். நாட்டில் வர்த்தக சமுதாயம் வளருகிறது என்று சொல்கிறார்கள். தொழிலில் மோசடி செய்யலாம், விவசாயத்திலே மோசடி செய்யலாம், எவன் சுருக்கு வழியில் பணம் சம்பாதிக்கிறானே அவன்தான் கெட்டிக்காரன் என்ற நிலைமை உள்ளது. இன்றையதினம் கல்வி ஒரு வர்த்தகமாக அமைந்திருக்கிறது. தனியாரிடத்தில் கல்வியை விட்டு வைத்திருக்கக் கூடாது. அரசாங்கமே கல்வித் திட்டத்தை ஏற்று நடத்த வேண்டும். அது நீண்ட காலத் திட்டமாகத்தான் இருக்க முடியும். அதற்கு ஒரு நல்ல திட்டத்தை ஏற்படுத்த வேண்டும். ஒரு ஃபேஸ்டு ப்ரொகிராம் ஏற்படுத்தி இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். போன வருஷம் நடந்ததைப் பார்த்தோம். எஸ்.ஐ.இ.டி. கல்லூரி அரசாங்க ஆணையை மீறியிருக்கிறது. கட்டணம் வசூலிப்பேன் என்று அந்தக் கல்லூரி சொல்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகளை அரசாங்கம் அனுமதிக்கக்கூடாது. நாம் கல்விக்காக அதிகமாகச் செலவு செய்தால் இந்தப் போக்கை நிறுத்தலாம், கல்விக்காக அதிகமாகச் செலவு செய்வது நியாயம். தனியார் துறைக்கு கல்வியை விட்டுவிட்டு, அவர்கள் தங்கள் இஷ்டப்படி

கிறார்கள், இன்னும் பூரணமாக அடையவில்லை என்கிற குறிப்பை நம்முன்னால் வைத்திருக்கிற அறிக்கையில் பார்க்கிறோம். பததாண்டுக்குள் கட்டாய ஆரம்பக் கல்வித் திட்டத்தை பூரணமாக வெற்றிபெறச் செய்து கட்டாய செகண்டரி கல்வித் திட்டம் அமுல் படுத்தப்படவேண்டிய நிலையில் இந்தக் குறையிருக்கிறது. இது அவ்வளவு உகந்ததாக இல்லை என்று மக்கள் கருதுகின்றனர்.

அடுத்ததாக, நம்முடைய மாநிலத்தில் கல்வியின் தரம் உயர்ந்திருக்கிறதா என்றால் இல்லை என்றே கல்வி நிபுணர்கள் கருதுகிறார்கள். மாண்புமிகு அவை முதல்வர் கூட—வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கிற மாணவர்களை எடுத்துக் கொண்டால் மற்ற மாநில மாணவர்களைவிட நம் மாநில மாணவர்களின் தரம் குறைவாகவே இருப்பதாக வெளிநாட்டுக் கல்வி ஸ்தாபனங்கள் கூறுவதாகக் கூறினார்கள்.

கல்வியின் தரம் குறைந்து வருகிறது என்பதற்கு மற்றொரு சான்று ஐ.ஏ.எஸ். பரிட்சையில் நம் மாநில மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டு வருகிறது.

இப்படிக் கல்வியின் தரம் குறைந்து வருவதற்குக் காரணம் என்ன? 1965 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் மாணவர்களை இந்திப் போராட்டத்திற்கு ஏவிவிட்டது. அன்றையதினம் இருந்து இன்றுவரை—திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிற்பாடு கூட—போராட்ட உணர்ச்சியில் இருந்து, போராட்டப் பாதையில் இருந்து மாணவர்களை இவர்களாலேயே மீட்க முடியவில்லை. மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்தாமல் போராட்ட உணர்ச்சியினாலே இழுக்கப்பட்டு சென்று வருகிறார்கள்.

அடுத்து, மொழிக் கொள்கையை எடுத்துக்கொண்டால் இந்த அரசுக்கு திட்டவட்டமான கொள்கை எதுவும் இல்லை. திரு. ஆலடி அருணா அவர்கள் மொழிக் கொள்கையைப் பற்றி அதிகமாகச் சொன்னார்கள். ஸ்திரத்தன்மை இல்லாத மொழிக்கொள்கையாக இருப்பதினால்தான் அதிகமாகப் பேசவேண்டியிருக்கிறது. இவர்களது திட்டவட்டமான கொள்கை என்ன? இன்னும் கூறப்படவில்லை. 1965-இல் இந்திப் போராட்டம் தொடங்கியபோது—காங்கிரஸ் கட்சியின் கொள்கை—இந்த நாட்டின் தேசிய மொழி இந்தி,. இந்தி பேசாத மாநிலங்கள் விரும்பும்வரை ஆங்கிலம் ஆட்சிமொழியாகத் தொடர்ந்து இருக்கும் என்கிற நேருஜியின் வாக்குறுதி காப்பாற்றப்படவேண்டும் என்பதாக இருந்தது. ஆனால் ஆட்சிக்கு வந்து 3 ஆண்டுகள் ஆகியும் திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய மொழிக்கொள்கை என்ன என்பதை இங்கும்சரி, பாராளுமன்றத்திலும் சரி, சரியான முறையில் எடுத்து விளக்கத் தவறி வருகிறது. பிரசிடெண்ட் அவர்களது உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பாராளுமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு திருத்தம் மொழிக்கொள்கை சம்பந்தமாகக் கொடுத்



திருந்தது. அதாவது மொழி சம்பந்தப்பட்ட அரசியல் சட்டப் பிரிவு திருத்தப்பட வேண்டும் என்பதாகும். ஆனால் திருத்தம் வாக்கெடுப்புக்கு விடுகிறபோது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த 10 பேர்களே ஆதரித்திருக்கிறார்கள், 15 அங்கத்தினர்கள் எதிராக . . .

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மன்றத்திலே ஒரு கட்சி என்ன முடிவெடுத்தது என்பதுதான் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய ஒன்று. அந்தக் கட்சியில் உள்ள எல்லா உறுப்பினர்களிலே சில உறுப்பினர்கள் வராமல் இருந்துவிட்டார்கள் என்ற காரணத்தால் அவர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள் என்று பொருளாகாது. இந்த மன்றத்திலே எத்தனையோ தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றன. சில உறுப்பினர்கள் ஒரு கட்சியைச் சார்ந்தவர்கள் வரவில்லையென்றால் அவர்கள் அந்தத் தீர்மானங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள் என்றோ, ஆதரவு அளிக்கவில்லையென்றோ கருதிக் கொள்வதுதான் முறையா? அப்படிக் கருதிக்கொள்வது முறையாக இருக்குமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** இந்த அரசு ஆட்சிக்கு வந்தது மொழிக் கொள்கையை வைத்துத்தான். இந்த மொழிப் பிரச்னையை ஜீவாதாரப் பிரச்சினையாக வைத்துக்கொண்டிருக்கிற இந்த அரசு, பாராளுமன்றத்தில் செயல்படுகின்ற தனது கட்சியைச் சேர்ந்தவர்கள், பிரசிடெண்ட் உரையின்மீது கொடுத்த திருத்தத்திற்கு ஓட்டளிக்கின்றபோது 25 உறுப்பினர்களில் 15 பேர்கள் ஆஜர் இல்லை என்றால் அதற்கு ஆதரவாக ஓட்டளிக்கவில்லை என்றுதான் மக்களும் மற்றவர்களும் அர்த்தயாகக் கருதுவார்கள். எனக்கு முன்பு உரையாற்றிய நண்பர் திரு. ஆலடி அருணா . . .

**திரு. ஆலடி அருணா :** திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த 15 உறுப்பினர்கள் அவைக்குச் செல்லவில்லை என்பதுதான் உண்மை நிலைமை. உறுப்பினர் அவர்கள் ஆதரவு அளிக்கவில்லை என்று சொல்வது 15 பேர்களும் அங்கே இருந்து வாக்களிக்கவில்லை என்று சொல்வதுபோல் இருக்கிறது. இது உண்மை நிலையைத் திரித்துக் கூறுவதாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, இரண்டு நிமிடம் எனக்கு இன்னும் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது முக்கியமான பிரச்னையாக இருக்கிறது. 25 உறுப்பினர்கள் உள்ள கட்சியில் 15 உறுப்பினர்கள் ஆஜர் இல்லை, கலந்துகொள்ளவில்லை என்றால் ஆதரவளிக்கவில்லை என்பதுதான் நான் எண்ணுகின்ற கருத்து, 15 உறுப்பினர்கள் ஆதரவு கொடுக்கவில்லை, ஆகவே வரவில்லை என்று கருதுகிறேன் . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** திராவிட முன்னேற்றக் கழகத்தினர் 15 பேர்கள் செல்லவில்லை என்று சொல்வது இருக்கட்டும். மொழிப் பிரச்னைபற்றி காங்கிரஸ் கட்சியின் நிலைமை என்ன?

**திரு. ஜே. ஜேம்ஸ்:** முதலமைச்சர் அவர்கள் நான் முதல் பகுதியிலே பேசும்பொழுது இல்லாததால் கேட்கிறார்கள். தலைவர் அவர்கள் எனக்கு இன்னும் நேரம் கொடுக்கவேண்டும். இந்தி தேசிய மொழியாக இருப்பதோடுகூட இந்தி பேசாத மக்கள் விரும்புகிற காலம் வரையில் ஆங்கிலமும் தொடரவேண்டும் என்பது அரசியல் சட்டத்தில் இடம்பெறவேண்டுமென்றுதான் காங்கிரஸ் கட்சியும் கட்சியின் தலைவர்களும் கூறினார்கள் . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** காங்கிரஸ் கட்சியும் பற்றத் தலைவர்களும் கூறினார்கள் என்று சொன்னார்கள். இங்கே இருக்கிற காங்கிரஸ் கட்சித் தலைவர்களும், அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியிலே இருப்பவர்களும் அதற்காகத் தீர்மானம் போட்டிருக்கிறார்களா?

**திரு. ஜே. ஜேம்ஸ்:** அகில இந்திய காங்கிரஸின் சார்பிலே உலகம் போற்றும் தலைவர் நேருஜி அவர்கள் கொடுத்த வாக்குறுதியைச் சட்டமாக்கவேண்டுமென்றுதான் தலைவர் திரு. காமராஜ் போன்றவர்களும் பெரும் தலைவர்களும் வற்புறுத்தி வந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நேருஜி அவர்களின் உறுதி மொழியைச் சட்டமாக ஆக்கவேண்டுமென்ற தீர்மானத்தைச் சேலத்திலே அவர்கள் போட்டார்களா? ஆனால் மாணவர்கள் மாநாட்டில் போடச்சொல்லி இருக்கிறார்கள். காங்கிரஸ் கமிட்டி, அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறதா?

**திரு. ஜே. ஜேம்ஸ்:** விந்தையிலும் விந்தை. நம்முடைய முதலமைச்சர் எங்கள் கட்சியிலே சேலத்திலே கூட்டப்பட்ட மாநாட்டிலே தீர்மானத்தைப் போட்டார்களா என்று கேட்கின்ற கேள்வி முறையான கேள்வியா என்பது புரியவில்லை. நாங்கள் எத்தனையோ மாநாடுகள் கூட்டுகிறோம். எந்த எந்தத் தீர்மானங்களை வைக்க வேண்டும், எந்த எந்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்படவேண்டும் என்று முடிவுசெய்யவேண்டியது எங்களுடைய கட்சி. முதலமைச்சர், எங்கள் மாநாட்டிலே தீர்மானத்தைப் போட்டீர்களா என்று கேட்பது விந்தையாக இருக்கிறது. இருந்தாலும்கூட எங்கள் கொள்கையை நாங்கள் கடைப்பிடிக்கிறோம். என்றுமே அந்தக் கொள்கையை நாங்கள் காப்பாற்றத் தயாராக இருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இந்தியினுடைய ஆதிக்கம் தமிழ்நாட்டிலே கூடாது, இந்தி பேசாத மாநிலங்கள் விரும்புகின்ற வரையில் இந்தித் திணிப்புக் கூடாது என்பதற்கு அரசியல் சட்டத்தைத் திருத்தவேண்டுமென்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை. இதே கொள்கையைத்தான் சுதந்திராக் கட்சியும் வைத்திருக்கிறது அநேகமாக, இந்த நிலையைக் காங்கிரஸ் கட்சியும் ஒப்புக்கொள்கிறதா?





**திரு. ஜே. ஜேம்ஸ்:** காங்கிரஸ் கட்சியின் கொள்கையை திருப்பித் திருப்பி விளக்கிக் கூறிவிட்டேன். இந்தி ஆட்சிமொழியாக இருப்பதை திராவிட முன்னேற்றக் கழகமும் இந்த அரசும் ஒப்புக்கொள்கிறதா? இந்தி ஆட்சிமொழி, இந்தி பேசாத மக்கள் விரும்புகிற வரையிலே ஆங்கிலமும் இருக்கவேண்டும் என்பதுதான் காங்கிரஸ் கட்சியின் கொள்கை. முதலமைச்சர் அவர்கள் சந்தர்ப்பம் வரும்பொழுது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையைக் கூறவேண்டும் . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இந்தி பேசாத மக்கள் விரும்புகின்ற வரையில் இந்தி திணிக்கப்படக்கூடாது என்று அகில இந்தியக் காங்கிரசில் உள்ள ராம்சுபாக் சிங், மொரார்ஜி தேசாய் போன்றவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்களா?

**திரு. ஜே. ஜேம்ஸ்:** அத்தனைத் தலைவர்களும் ஒத்துக் கொள்கிறார்கள். தலைவர் நேருஜி அவர்கள் உயிரோடு இருந்தபொழுது அந்த உறுதிமொழியைக் கொடுத்தார்கள். அதை மீறுவதற்கு இந்த நாட்டில் எந்தக் காங்கிரஸ்காரரும் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தி தேசியமொழி என்பதை இந்த அரசும் திராவிட முன்னேற்றக் கழகமும் ஒப்புக்கொள்கிறார்களா என்பதைக் கேட்க விரும்புகிறேன். எப்பொழுதாவது சந்தர்ப்பம் வரும்பொழுது அவர்கள் கூறவேண்டும். இந்த ஆட்சியினுடைய மொழிக் கொள்கையினாலே எண்ணற்ற படித்த இளைஞர்களுக்கு இன்றைக்கு மற்ற மாநிலங்களிலே வேலை கிடைக்கமுடியாத அளவுக்கு அநீதியை இழைத்திருக்கிறார்கள். இந்த மாநிலத்திலே உள்ள மக்கள் வட நாட்டிலே உள்ள மாநிலங்களுக்குப் போய் வியாபாரம் செய்யலாம். திராவிட முன்னேற்றக் கழக அரசின் முதலமைச்சரும் மற்ற எல்லா அமைச்சர்களும் மற்ற மாநிலங்களுக்குப் போகலாம், டெல்லியில் போய் அரசியல் செய்யலாம். ஆனால் இந்த மாநிலத்திலே படித்த இளைஞர்கள் மற்ற மாநிலங்களில் சென்று பிழைப்பதற்கு முடியாத நிலைமை உருவாக்கப்பட்டு இருக்கிறது. . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** ஆகவே இந்தியை இங்கே இருப்பவர்கள் படிக்கவேண்டுமென்று சொல்கிறார்கள், இல்லையா?

**திரு. ஜே. ஜேம்ஸ்:** யார் வேண்டுமானாலும் விரும்பினால் படிக்கலாம். இந்த நாட்டிலே உள்ளவர்கள் இந்தியைப் படிக்கவேண்டாமென்று சொன்னதால் இந்த நாட்டு மக்களுக்கு அநீதியைச் செய்திருக்கிறார்கள். . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அப்படியானால் அறிஞர் அண்ணா அவர்கள் இந்தத் தமிழ்நாடு சட்டமன்றத்திலே தமிழ்நாட்டுப் பள்ளிக்கூடங்களில் இந்தி அகற்றப்படும் என்று சொன்னார்களே, அந்த நிலையை ஒப்புக் கொள்கிறீர்களா?

[திரு. எ. பாலசுப்பிரமணியன்] [1970 மார்ச் 11

ஆட்டம் போடக்கூடிய நிலைமையைத் தடுத்து நிறுத்த வேண்டும். இனி தனியார் துறை கல்லூரிகள் இருக்காது என்ற நிலையை உண்டுபண்ண அரசு திட்டமிட வேண்டும்.

அடுத்து—டெக்ஸ்ட் புக்ஸ்—பாடப் புத்தகங்கள் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். யாரோ, "அரசாங்கம் பாடப் புத்தகங்கள் போடவே கூடாது, தனியார் துறைகள் போட வேண்டும்" என்று சொன்னார்கள். தனியார் துறையினர் லாபம் அடிக்க வேண்டும், கொள்ளை லாபம் அடிக்க வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு வக்காலத்து வாங்கி, அவர்கள் அப்படிப் பேசுகிறார்கள். பாடப் புத்தகங்களை அரசாங்கம்தான் தயாரிக்க வேண்டும். இந்த வேலை தொடர்ந்து படிப்படியாக விஸ்தரிக்கப்பட வேண்டும். குறைகள் இருக்கின்றன என்பதற்காக அதைக் கைவிட்டுவிடக்கூடாது. அந்தக் குறைகளைத் திருத்த வேண்டும். அபிவிருத்தி ஏற்படக் கூடிய முறையிலே, ஒழுங்காக இருக்கக்கூடிய முறையிலே புத்த கங்களை அதிகமாகத் தயாரிக்க வேண்டும். நாமே அரசுத் துறையில் தயாரிக்க வேண்டும், விஸ்தரிக்க வேண்டும். சில பள்ளிக் கூடங்களில் நாங்களே புத்தகங்கள் வாங்கித் தருகிறோம் என்று சொல்லி, அங்கேயும் வியாபாரம் செய்கிறார்கள். மாணவர்கள் நேரடியாகக் கடைகளுக்குச் சென்று புத்தகங்கள் வாங்கி விடுவ தில்லை. பள்ளிகளில் தாங்களே புத்தகங்கள் வாங்கித்தருவதாகச் சொல்லி வியாபாரம் செய்து அதன்மூலம் சம்பாதிக்கக்கூடிய நிலைமை நாட்டிலே பரவலாக இருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்த வேண்டும். அதற்கு இடம் கொடுக்கக்கூடாது. பள்ளிகள் வர்த்தக ஸ்தாபனமாக இருக்கக்கூடாது. பள்ளிக்கூட பாடப் புத்தகங்களை வைத்துக்கொண்டு, பள்ளிகள் வர்த்தக ஸ்தாபனங்க ளாக இருக்கும் மோசமான சூழ்நிலையை உண்டுபண்ணி, விளை யாடக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் திண்டுக்கல் நகரத்திலே ஒரு மாலைநேரக் கல்லூரி வேண்டுமென்ற வற்புறுத்தல் அதிகமாக இருக்கிறது. மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் அதை அமைத்துத் தர வேண்டும்.

அடுத்தபடியாக, என்னிடம் ஒரு கேள்வித்தாள் இருக்கிறது. மதுரை தியாகராஜர் கல்லூரியிலே கொடுக்கப்பட்டது. இதில் கம்யூனிஸ்ட் இயக்கத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறது. கம்யூ னிஸ்ட் இயக்கத்தைப் பற்றிப் பலபேருக்குத் தெரியாமல் இருக்க லாம். பலர் புரியாமலே அதைப்பற்றிச் சொல்வார்கள். மார்க்ஸ் பற்றியோ, லெனின் பற்றியோ அவர்கள் படித்திருக்க மாட்டார்கள். அதில் என்ன சொல்லியிருக்கிறது என்று படித்து அறியும் பண்பாடு இருக்காது. அந்தக் கேள்வித்தாளில் கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு விரோதமாக ஒரு குறிப்பு கொடுத்திருக்கிறார்கள்.

The Communist solution is excessive. Private property has been mis-used and therefore abolish it. The remedy is similar tochopping off the head in order to cure a headache.



1970 மார்ச் 11] [திரு. எ. பாலசுப்பிரமணியன்]

'தலைவலி வந்தால் தலையை எடுத்துவிடு என்று கம்யூனிஸ்டுகாரன் சொல்கிறான்' என்று கேள்வி தயாரித்து அதன்மூலமாக விரோத உணர்ச்சியைப் பரப்புவது நடைபெறுகிறது.

இதுபோன்ற கேள்வித்தாள்களைக் கொடுத்து மாணவர்களுடைய பிஞ்சு நெஞ்சங்களிலே விஷத்தை ஏற்றுவது சரியல்ல. துணிச்சல் இருந்தால் 'எல்லாவற்றையும் படி, நாளைக்கு நீ எப்படிவேண்டு மானாலும் முடிவு செய்துகொள்' என்று சொல்லித்தரவேண்டும். அனைத்தையும்படி, அறிவை உபயோகித்து உன்னுடைய பாதையை நீயே வகுத்துக்கொள் என்று நல்ல ஆசிரியர்களாக இருக்கிறவர்கள் சொல்லித்தரவேண்டும். அதற்குமாறாக சுரண்டும் வர்க்கங் களுக்குச் சேவை செய்வதையே தொழிலாகக் கொண்டவர்கள், மாணவர்கள் நெஞ்சங்களை கேள்வித்தாள், பதில் மூலம் பாழ்படுத் தாதிருக்கவேண்டும் என்பதற்காக இதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து, இதுபோல் இனி அனுமதிக்கக் கூடாது என்று கேட்டு அமர்கிறேன்.

* திரு. ஜே. ஜேம்ஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, 1970-71 ஆம் ஆண்டு கல்விமானியத்தின்மீது எனது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

அமைச்சர் அவர்கள் அவைமுன் வைத்திருக்கிற அறிக்கையில் 1959-60 ஆம் ஆண்டு 15 கோடிதான் செலவினமாக இருந்தது, 1970-71 ஆம் ஆண்டுக்கு 66 கோடியாக உயர்ந்திருப்பதாகக் கூறி யிருக்கிறார்கள். ஆனால் கல்வி அமைச்சர் அவர்களின் கவனத் திற்கு 1938-39 ஆம் ஆண்டு செலவினம் என்ன என்பதைக் கொண்டு வர விரும்புகிறேன். 1938-39 ஆம் ஆண்டு இரண்டுகோடி, அறுபத் தெட்டு லட்சம்தான் கல்விக்காக ஒதுக்கப்பட்டது. ஆனால் 1961-62-லே 23 கோடி, 66 லட்சம்—கிட்டத்தட்ட 9 மடங்கு உயர்ந்திருப்பதை நினைவுபடுத்துகிறேன்.

அதோடு 1969-70-ஐ விட இந்த ஆண்டு ஏகதேசம் 3 கோடிக்கு அதிகமாக ஒதுக்கியிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறியிருக் கிறார்கள். சென்ற ஆண்டு 65 கோடியே 38 லட்சம் ஒதுக்கப் பட்டது என்றால் 63 கோடி, 68 லட்சம் தான் செலவழிக்கப்பட் டிருக்கிறது. அதை ஒட்டிப் பார்க்கிறபோது சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு ஒரு கோடியே 44 லட்சம் மாத்திரம் கூடுதலாக ஒதுக்கப்பட்டிருக்கிறதே தவிர 3 கோடிக்கு இல்லை. அதுவும் சென்ற ஆண்டு மொத்தத்தில் செலவு குறைந்ததுபோல இந்த ஆண்டும் ஏன் குறையக் கூடாது என்கிற ஐயப்பாடு இல்லாமல் இல்லை. இதை எல்லாம் பார்க்கிறபோது கல்விக்காக நாம் அதிக மாகச் செய்யவில்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

அதோடு 1960-61-ஆம் ஆண்டு இந்த மாநிலத்தில் கட்டாய ஆரம்பக் கல்வித் திட்டம் வந்தது. பத்தாண்டுகள் கழிந்து விட்டன. பத்து ஆண்டுகள் ஆகியும் கூட 93 சத வீதம் பிள்ளைகள் தான் கட்டாயக் கல்வித்திட்டத்தினால் பயன் அடைந்திருக்

[1970 மார்ச் 11

**திரு. ஜே. ஜேம்ஸ் :** இந்தியைக் கட்டாயமாக மாணவர்கள் படிக்கவேண்டும் என்ற நிலைமையை யாரும் விரும்பவில்லை. ஆனால் படிக்கின்ற மாணவர்களுக்கு வசதி ஏற்படுத்திக்கொடுக்கத் தவறியதால் இந்த அரசை நான் கண்டிக்கிறேன். படிக்கக்கூடாது என்று நிர்ப்பந்தித்த நிலையைக் கண்டிக்கிறேன் . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அறிஞர் அண்ணா அவர்கள் கொண்டுவந்த அந்தத் தீர்மானத்தை இப்பொழுது வரவேற்கிறேன் என்று சொல்கிறார்கள். ஆனால் அந்தத் தீர்மானத்தின்மீது ஓட்டு எடுத்தபொழுது ஆதரவு அளிக்க மாட்டோம் என்று அப்பொழுது அவர்கள் சொன்னதற்குக் காரணம் என்ன ?

**திரு. ஜே. ஜேம்ஸ் :** என்னுடைய கட்சிக் கொள்கையை நான் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். நேரமாகிவிடும். எனவே இந்த நிலைமையில் நிறுத்திக்கொள்கிறேன். எல்லாத் தரப்பினரும் மற்ற மாநிலங்களுக்குச் செல்லலாம். இங்கே உள்ள முதலமைச்சர் பஞ்சாப் மாநிலத்திற்குச் செல்லலாம். நம்முடைய வியாபாரிகள் மற்ற மாநிலங்களுக்குச் சென்று வியாபாரம் செய்யலாம். அரசியல் பண்ணலாம். ஆனால் இந்த மாநிலத்திலே படித்தவர்கள் மற்ற மாநிலத்திற்குச் சென்று பிழைப்பதற்கு முடியாத நிலைமையை இந்த அரசு அப்படிப்பட்ட சூழ்நிலையை ஏற்படுத்திவிட்டது. மொழிப் பிரச்னையை வைத்தே ஆட்சிக்கு வந்த இந்த அரசு மொழிப் பிரச்னையாலே அகற்றப்படும் என்பதைக் கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ந. தருமலிங்கம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1970-71-ஆம் ஆண்டிற்கான கல்வி மானியத்தை ஆதரிக்கும்வகையில் சிலவற்றைக் கூறவிரும்புகிறேன். தமிழ்நாடு அரசு தமிழகத்தைப் பொறுத்தவரையில் கல்வித் துறையின் மேம்பாட்டிற்காகவும், முன்னேற்றம் ஏற்படுத்துவதற்காகவும் எடுத்துவருகின்ற முடிவுகளை நாடு இன்றைய தினம் நன்றாக அறியும். இதிலே நமக்கு முன்னாலே முக்கியமாகப் பேசப்படுகின்ற மொழிப்பிரச்னையைப் பொறுத்தவரையில் கழக அரசின் கருத்தை இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் நல்ல முறையிலே ஆதரிக்கிறது. கல்விமானியக் கோரிக்கையிலே மொழிப் பிரச்னையைப்பற்றிக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் பேசமாட்டார்கள் என்று பலர் கருதினார்கள். டெல்லியிலே அண்மையிலே நடைபெற்ற ஓட்டெடுப்பிற்குப் பிறகு அவர்கள் இப்படியிருப்பார்கள் என்று பல பேர்கள் கருதியதுண்டு.

ஆனால் இந்த மன்றத்தில் மொழிப் பிரச்சினையைப் பற்றி முன்னுக்குப்பின் முரணாக மட்டுமல்லாமல் காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கை எது என்பதையும் விளக்காமலே திராவிட முன்னேற்றக் கழக அரசின் கொள்கையைத் திரித்துக் கூறும் வகையில் அவர்களுடைய நிலை பரிதாபகரமாக இருக்கிறது. நமக்கு ஒரு உண்மை நன்றாகத் [illegible] சென்ற மூன்றாண்டு காலமாக [illegible]



1970 மார்ச் 11] [திரு. ந. தருமலிங்கம்]

கல்வித் துறையின் பல மட்டத்தில், தொடக்கக் கல்வி, உயர்நிலைக் கல்வி, கல்லூரிக் கல்வி, தொழிற்துறைக் கல்வி, மற்றும் தொடர்பான வேறு பல கல்விகளைப் பொறுத்தவரை அரசு எடுத்திருக்கும் முடிவுகளை கற்றவர்கள் அனைவரும் பாராட்டுகிறார்கள். புள்ளி விவரப்படி ஆறு வயது முதல் 11 வயது வரை இருப்பவர்கள் 93 சதவிகிதத்தினர் பள்ளிக்குச் செல்லுகிறார்கள் என்ற செய்தி நமக்கு இனிப்பாக இருக்கிறது. கடந்த காலத்திலும் சரி, நம்முடைய காலத்திலும் சரி, இந்த மாற்றத்திற்குப் பின்னால் உள்ள நம்முடைய முழு முயற்சியை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். தமிழ்நாடு அரசாங்கத்திற்கு வருகின்ற வருவாயில் நாலில் ஒரு பங்கைக் கல்வித் துறைக்காக அரசு செலவழிக்கிறது. இந்தத் துறையைக் கண்ணும் கருத்துமாகப் பேணி வருவதில் அதிக அக்கறை செலுத்தி வருகிறது. ஆகவே, 68 கோடி ரூபாய்க்குக் குறையாத அளவில் இன்று மானியமாகக் கோரப்பட்டிருக்கிறது என்பதைக் கூற விரும்புகிறேன்.

சென்ற ஆண்டில் மட்டுமல்லாது கடந்த மூன்றாண்டுகளில் அரசியல்வாதிகளால் ஏற்படுத்தப்பட்ட அரசியல் தட்ப வெப்ப நிலையிலும், மாணவர்கள்-ஆசிரியர்கள் மன வேறுபாடுகள், தொடர்புகள் விரும்பத்தகாத நிலையில் இருந்த நிலையிலும், கல்வித் துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆற்றி வரும் பணிகளை எதிர்க்கட்சி உறுப்பினர்களும் உளமாரப் பாராட்ட வேண்டும்; மனச்சான்றுப்படி பாராட்ட வேண்டும். மாறாக, கண்டிப்பது வேதனையைத் தருகிறது. கெட்டிக்காரர் ஒருவர் உண்மை கலவாத ஒன்றை ஓயாமல் சொல்லி வந்தால் அது அப்படியே ஆகிவிடும் என்று சொல்லுவார்கள். அவர்கள் பொதுமக்கள் மத்தியில் கல்வித் துறைக்கும் கல்வித்துறை அதிகாரிகளுக்கும் களங்கம் கற்பிக்கும் வகையில் பேசி வருவது உண்மையிலேயே சங்கடத்தைத் தருகிறது.

இன்னொரு செய்தியையும் கூற விரும்புகிறேன். நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்தவரை பல்வேறு தலைப்புகளின் கீழ் தொகைகளை ஒதுக்கிக் கொண்டு வருகிறது. இப்படி ஒதுக்கப்படும்போது ஆளும் கட்சியினர் இருக்கும் பகுதிகளில் கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளிகள் துவங்கப்படுகின்றன என்று, சில இடங்களில் குறிப்பிட்ட சூழ்நிலைகளுக்காகக் கல்வி நிலையங்கள் தோற்றுவிக்கப்படவில்லை என்பதற்காக வேண்டி இப்படிப் பேசுவதில் எப்போதும் நியாயம் இருப்பதில்லை. புள்ளிவிவரத்தைப் பார்க்கிறபோது தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் வெற்றி பெறாத தொகுதிகளில் எல்லாம் பள்ளிகளும், கல்லூரிகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன, தொழில் வளர்ச்சி நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன, அதிலே எந்த விதமான மாறுபாடும் இல்லாமல் மிகுந்த பெருந்தன்மையுடன் நடந்து கொண்டு வருகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். இதை உணர்ந்து கல்வித்

[திரு. என். ராஜாங்கம்] [1970 மார்ச் 11

மாவரர்கள். தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களாக இருந்தால் ஹரிஜன வெல்பேர் நிதியிலிருந்து மதிய உணவிற்குக் கொடுப்பது போல் அங்கும் கொடுக்கப்படவேண்டும். அங்குள்ள மாணவர்களில் பெரும்பாலானோர் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களாக இருப்பதால் அந்த இலாகாவே அப்பொறுப்பை எடுத்துக்கொள்ள வேண்டும். அந்தவிதமான ஒரு உத்தரவைப் பிறப்பிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஜூனியர் இன்ஸ்பெக்டர்களாக சில்லரை நியமிக்கிறார்கள். செகன்டரி கிரேட் ஆசிரியர்களைத்தான் ஜூனியர் இன்ஸ்பெக்டர்களாக நியமிக்கிறார்கள். அதில் கூட தாழ்த்தப்பட்டவர்களுக்கு கிடைக்கப்படவேண்டிய சதவிகிதம் கிடைக்கவில்லை என்ற ஒரு குறை இருக்கிறது. அதையும் கல்வி அமைச்சர் அவர்கள் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக நான் சொல்லவிரும்புவது, குறிஞ்சிப்பாடியில் உள்ள இரண்டு ஆண்கள் உயர்நிலைப் பள்ளிகளோடு கூட ஒரு பெண்களுக்கான உயர்நிலைப் பள்ளியையும் கேட்டிருக்கிறோம். கிட்டத்தட்ட 40% பெண்கள் வடலூர், நெய்வேலி, கடலூர் போன்ற இடங்களுக்கு வந்து செல்கிறார்கள். ஆகவே அந்தப் பெண்களுக்கான பள்ளிக்கு இந்த ஆண்டே அங்கீகாரம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** தலைவர் அவர்களே, 1970-71ம் ஆண்டுக்கான கல்வி மானியக் கோரிக்கை மீது ஒரு சில குறிப்புகள் கூறிக் கொள்ள நான் முன்வந்துள்ளேன். நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கக்கூடாது என்பது என் கொள்கை. அதிலும் குறிப்பாக கல்வித் துறையில் வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கக்கூடாது. செகன்டரி கிரேட் அல்லது சீனியர் கிரேட் ஆசிரியர்கள் பயிற்சியில் 1967, 68, 69ல் பாஸ் செய்துவிட்டு வேலையில்லாமல் இன்று பலர் கஷ்டப்படுவதை நான் அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அடுத்த ஆண்டு ஆசிரியர்களை அதிகமாக எடுக்கப் போவதாகக் கேள்விப்படுகிறேன். அப்படி எடுக்கும்போது 67-ல் பாஸ் செய்தவர்களுக்கு முதல் சலுகை, 68ல் பாஸ் செய்தவர்களுக்கு அடுத்தபடியான சலுகை, 69ல் பாஸ் செய்தவர்களுக்கு அதற்கு அடுத்தபடியான சலுகை என்ற விதத்தில் ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1967ல் சீனியர் கிரேட் ஆசிரியர் பயிற்சி பெற்று குறைந்த மார்க் வாங்கி பாஸ் செய்து சர்ட்டிபிக்கட் வாங்கியிருக்கலாம். 68 அல்லது 69 பரீட்சைக்கு சென்றவர்கள் அதிகப்படியான மார்க்குகள் வாங்கியிருக்கலாம். அதிகப்படி மார்க்குகள் வாங்கியவர்களை ஆசிரியர்களாக வேலைக்கு எடுத்துக் கொள்கிறார்கள். எங்கள் ஜில்லாவில் அப்படி நடக்கிறது. ஆகவே நான் சொல்வது, 1967ல் ட்ரெயினிங் முடித்தவர்கள், பாஸ் செய்து சர்டிபிகேட் எடுத்திருக்கிறார்கள் என்றால் அவர்களை எடுக்க வேண்டுமே தவிர அவர்கள் வாங்கியுள்ள மார்க்கை கவனிக்கக்



1970 மார்ச் 11] [திரு. எஸ். சிவசுப்பிரமணியம்]

கூடாது. அவர்கள் சர்டிபிகேட் வைத்திருக்கிறார்களா என்று மட்டும்தான் பார்க்கவேண்டும். அப்படிச் செய்தால் வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்க முடியும். ஆகவே 1967ல் பாஸ் செய்த வர்களுக்கு முதல் சலுகை கொடுக்கப்படவேண்டும். அவ்விதத்தில் சர்க்கார் உத்தரவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, ஆசிரியர்களுக்கு வரும் சம்பளம் குறைவு தான், ஆசிரியர்களுக்கு டியர்னெஸ் அலவன்ஸ், இன்னும் சில சலுகைகளை அரசாங்கம் கொடுத்திருக்கிறது. கொடுத்துக்கொண்டே இருக்கிறார்கள். இந்த அரசாங்கமும் சரி, அந்த அரசாங்கமும் சரி கொடுத்துக்கொண்டேயிருக்கிறார்கள். ஆனால் அது ஆசிரியர் களுக்கு, கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்தப்பட்டதால், வருமானம் 2000 ரூபாய் வரை ஆகிவிடுகிறது. அப்படி இரண்டாயிரம் ஆகி விட்டால் அந்த ஆசிரியர்களின் பிள்ளைகளுக்குச் சலுகைகள் கிடைக்க முடியாது. கொஞ்சம் கொஞ்சமாக கூட்டப்பட்டு, மொத்தக் கணக்கில் 2,000 ரூபாய் ஆக ஆகிவிடுகிறது. எனவே, 2,000 ரூபாய் என்று வரம்பு இருந்தால் அவர்களுக்கு கல்விச் சலுகைகள் கிடைக்கவில்லை. ஆகவே, ஆசிரியர்களுக்கு மட்டும், இந்த விதிவிலக்கை மாற்றி, 3,000 ரூபாய் என்று உயர்த்தி வைத்தால் அந்த ஆசிரியர்களினுடைய பிள்ளைகள் படிப்பதற்கு நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன். ஒரு பழமொழி சொல்லுவார்கள், 'வாத்தியார் காசு வாசற்படியோடு' என்று. அது உள்ளே போகாது. வீட்டிற்குள்ளே போகாது. அவ்வளவு தூரம் கடன் வாங்கிப் பழக்கம். ஏனென்றால் அவர்களுக்குப் போதிய சம்பளம் கிடையாது. உபாத்தியாயர் காசு வாசற்படி பிற்பகல் 12-30
யோடு நின்றுவிட்டால், உள்ளே போகாவிட்டால் எப்படி அவர்கள் பிள்ளைகளைப் பிழைக்க வைக்க முடியும்? படிக்க வைக்கமுடியும். ஆசிரியர்களின் மனம் நோகவே கூடாது. அவர்கள் செய்யும் தொழில் பாவமற்ற தொழில் எவ்வளவு தொழில்கள் இருந்தாலும் உலகத்திலேயே பாவமற்ற தொழில் ஆசிரியர் தொழில். எனவே, அவர்களுக்கு 2,000 ரூபாய் என்ற வரம்பை மாற்றி 3,000 ரூபாய் என்று விதிவிலக்கு கொடுக்க வேண்டுமென்று இந்த அமைச்சரவையைக் கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது ஹையர் கிரேட் பயிற்சி கிடையாது. இன்றைக்கு எடுத்துவிட்டார்கள் அரசாங்கத்திலே. ஒரு சட்டம் இருக்கிறது. ஹையர் கிரேட் ஆசிரியர்களுக்கு மூன்று வருஷம் சர்வீஸ் இருந்தால் சீனியர் கிரேட் பரீட்சைக்குப் போகலாம் என்று ஆக்கியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஹையர் கிரேட் பாஸ் பண்ணிய ஆசிரியர்கள் எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் பண்ண வேண்டுமென்று சொல்லும் நேரத்தில், தமிழ் படிப்பும் இருக்கிறது. எல்லா சீனியர் கிரேட் பரீட்சைக்கும் வைத்திருக்கிறார்கள். ஹையர் கிரேடிற்கு ஆங்கிலம் கிடையாது. எனவே, ஆங்கிலத்தை மாத்திரம் வைத்து, மற்ற சப்ஜெக்டுகளை நீக்கிவிட்டு, அந்தப் பரிட்சையில் ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்குச் சலுகை கொடுத்தால்

யிருந்தாலும், வெல்ஃபேர் இலாக்காவிலேயிருந்தாலும், தனியார் பள்ளிகளிலேயிருந்தாலும், இதற்குத் தகுந்தவாறு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ஆசிரியர்களின் சம்பள உயர்வை இப்பொழுது கொடுத்திருக்கிறார்கள். நிறையக் கொடுக்கவேண்டும். எல்லோருக்கும் செய்யுங்கள். மத்திய சர்க்காரிலே மூன்று ரேட் போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். மூன்று ரேட்டிலே, ஒரு ரேட் 10 ரூபாய், இரண்டாவது ரேட் 15, மூன்றாவது ரேட் 17½ ரூபாய் என்று நினைக்கிறேன். அந்த மாதிரி ரேட்டுகளை இந்த மாநிலத்திலுள்ள சிப்பந்திகளுக்கும் கொடுத்தால் என்ன குறைந்துவிடும்? அதுமாதிரிக் கொடுக்க வேண்டும். சம்பளக் கமிஷன் போட்டிருக்கிறார்கள். அவர்கள் எப்பொழுது, என்ன செய்யப்போகிறார்கள் என்று ரொம்ப பேருக்குச் சந்தேகமாக இருக்கிறது. உயருமா, உயராதா என்ற சந்தேகம் இருக்கிறது. 10 ரூபாய், 15 ரூபாய், 17½ ரூபாய் என்று ஏன் நாமும் உயர்த்தக்கூடாது? அந்தச் சர்க்காரிலே மட்டும் பணம் எங்கே இருக்கிறது? நம்முடைய சர்க்கார், நம்முடைய நாட்டு சர்க்கார், நம் நாட்டிலே வாழ்பவர்கள், நம் நாட்டு மக்கள் ஓட்டுப் போடுகிறார்கள், எனவே நாம் 10, 15, 17½ என்று நிச்சயமாக ஏற்றிவிட்டால் பிறகு அவர்கள் ஏற்றினால் நாம் ஏற்றலாம். எனவே இப்பொழுது அந்த அளவில் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

கல்லூரிகளில் ஹரிஜன மாணவர்களுக்கு விகிதாச்சாரம் இருக்கிறது. 500 பிள்ளைகள் என்றால் அதற்குத் தகுந்தமாதிரி விகிதாச்சாரம் இருக்கிறது. பி.எஸ்.ஸி. அக்ரிகல்சர் என்றால் அங்கே படிப்பவர்கள் எத்தனைபேர், பி.எஸ்.ஸி. ஸுவாலஜி என்றால் அங்கே படிப்பவர்கள் எத்தனைபேர், பி.எஸ்.ஸி. பாட்டனி என்றால் எத்தனை பேர் படிக்கிறார்கள் என்று பார்த்து, தனிப் பிரித்து எடுக்க வேண்டுமே தவிர, மொத்தமாக எத்தனைபேர் என்று எடுத்துவிடக் கூடாது. ஒவ்வொரு இலாக்காவிலும் விகிதாச்சாரப்படி பகிர்ந்து கொடுத்து, ஹரிஜன சமுதாயத்திற்கு முன்னேற்றம் கொடுக்க வேண்டுமென்று இந்த அமைச்சரவையைக் கேட்டுக்கொண்டு, நான் என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ஜே. எஸ். இராசு :** மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்ட 1970-71-ஆம் ஆண்டிற்கான கல்வி மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ஆலடி அருணா அவர்கள் எப்படி இந்தக் கோரிக்கையை வரவேற்றாரோ அதே அளவுக்கு நானும் வரவேற்று, இந்த அறிக்கையில் காணப்பட்ட சிலவற்றைப் பற்றிப் பேச விரும்புகிறேன். கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்று ஒருகாலத்திலே போற்றப்பட்டாலும், இடையிலே கல்வியறிவு



குன்றி, பாமரர்களாக, தற்குறிகளாக இருந்த நிலையை மாற்ற
திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசாங்கம், 1967-க்குப்
பிறகு எந்த அளவுக்கு விரிவாகச் செயல்பட்டு வருகிறது என்பதை
ஆண்டுதோறும் இங்கு வைக்கப்படும் நிதிநிலை அறிக்கையையும்,
கல்வி மானிய கோரிக்கையையும், அதற்கு ஒதுக்கப்படும் தொகை
யையும் பார்த்தால் நிச்சயமாகப் புரியும் என்று கருதுகிறேன்.
வழக்கமாகவே கடுகடுப்போடும், காரசாரத்தோடும் பேசுகின்ற
மாண்புமிகு சிவசுப்பிரமணியன் அவர்கள் கூட இந்த அறிக்கையைப்
பற்றி கருத்தினை தெரிவிக்கின்ற நேரத்தில் கனிவாகவும், இனிமை
யாகவும் பேசினார்கள். இந்த மாற்றம் நிரந்தரமாக இருக்க
வேண்டும் என்று நான் இந்தப் பக்கத்திலிருந்து தெரிவித்துக்
கொள்ள விருப்பப்படுகிறேன்.

மாநில வருவாயில் ஏறக்தாழ 23 சதவிகிதம் நாம் கல்விக்காக
இன்றைக்கு ஒதுக்கியிருக்கிறோம். என்னுடைய அருமை நண்பர்,
நான் படித்த பல்கலைக் கழகத்தில் படித்த மாண்புமிகு உறுப்பினர்
திரு. கருப்பையா அவர்கள் இப்பொழுது சபையில் இல்லை. என்றா
லும் கூட, அவர் விவாதத்தைத் துவக்கிய நேரத்தில் எதையாவது
எதிர்க்கவேண்டுமென்று காரணத்திற்காக, இரண்டொரு விஷயங்
களைப் பற்றி அவர் பேசினார்கள். நான் ஒன்றைப்பற்றி அவர் பேசு
வார் என்று எதிர்பார்த்தேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :**
மாண்புமிகு உறுப்பினர் பேச்சின் அந்தப் பகுதியை * மாத்திரம் குறிப்
பேட்டிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன். பத்திரிகைக்காரர்களையும்
அதை வெளியிட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஜே. எஸ். இராசு :** மதுரைப் பல்கலைக்கழகத்தில் மாணவர்
கள் சிலர் கல்லூரியை விட்டு நீக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற
செய்தி நமக்குக் கிடைத்திருக்கிறது. அதனுடைய காரண, காரி
யங்கள் என்ன என்பதை நம்முடைய அரசு ஆராய்ந்து, பரிகாரத்
தையும் காணவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்
கொள்கிறேன்.

நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் அறிவு உணர்ச்சி
மிக்க கழக அரசு கல்வியின் தரத்தை உயர்த்தியும் கல்விக்
கூடங்களின் எண்ணிக்கையையும், அதில் பணியாற்றுபவர்
களுடைய எண்ணிக்கையும் விரிவுபடுத்திவருவதோடு, தமிழில்
கல்வியைப் புகட்டுவதற்கு நல்ல ஏற்பாட்டினைச் செய்துவருகிறது.
தமிழ் மொழியில் தான் பாடங்கள் படித்துத் தரப்படவேண்டும்
என்ற கொள்கையை அறிவித்திருந்தபடி, நிறையக் கல்லூரிகளில்
இன்றைக்கு தமிழை விஸ்தரித்து, தமிழ் உணர்ச்சியை வெளிக்
காட்டிக்கொண்டிருக்கிறது. அதுபற்றி நான் ஒரு சிறிய
கருத்தினையும் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ந. தருமலிங்கம்] [1970 மார்ச் 11

துறை அதிகாரிகளைப் பாராட்டினால் அவர்கள் மேலும் முறையாகச் சேவை செய்யமுடியும். அப்படி நல்ல முறையில் சேவை செய்ப வர்களை ஊக்குவிப்பதற்குப் பதிலாக தவறான முறையில் அவர் களைப் பற்றிக் கூறிக் கொண்டிருந்தால் அது நமக்கு மட்டுமல்ல; பின் சந்ததியினருக்கும் நாம் பெரிய தீங்கைச் செய்தவர்கள் ஆவோம் என்பதைக் கூற விரும்புகிறேன்.

கல்விமானிய அறிக்கையில் பலவற்றைப் பற்றி விவரமாக எழுதியிருக்கிறார்கள். ஆனால் நூலகங்களைப் பற்றி குறிப்பிட்டிருப் பது குறைவாக இருக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இரண்டாயிரத்துக்கு அதிகமாக, மூவாயிரத்துக்குக் குறையாத அளவுக்கு கிளை நூலகங்கள் பணியாற்றி வருகின்றன. இந்த நூலகங்களுக்கு அரசாங்கம் செய்கின்ற உதவி எல்லாம் ஈட்டுப்படி தான். ஒவ்வொரு மாவட்ட நூலகங்களுக்கும் அந்தந்த மாவட்ட உள்ளாட்சித் துறையினர் வீட்டு வரி மூலமாக நூலகங்களுக்கு என்று வாங்கப்படுகின்ற தொகைக்கு ஈடாகத்தான் தமிழ்நாடு அரசு பணம் உதவி செய்கிறது. உதாரணமாக, தமிழ்நாடு முழுவதும் வீட்டு வரி மூலமாக நூலக வரியாக 10 லட்சம் ரூபாய் வருகிறது என்றால் அரசாங்கம் பத்து லட்சம் ரூபாய் தருகிறது. ஆக, இந்த 20 லட்சம் ரூபாயை வைத்துக் கொண்டு நூலகம் என்ற ரதம் ஓடிக் கொண்டிருக்கிறது. நான் ஒரு கணக்கைத் தர விரும்பு கிறேன். இன்றையதினம் அரசாங்கம் தரும் ஈட்டுப்படி போது மானதாக இல்லை. முன்னால் இருந்த நிலை மாறி இப்போது புதிய புதிய புத்தகங்கள். புதினங்கள், நாவல்கள், தினசரி, வார ஏடுகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. நிரம்பப் படிக்க வேண்டும். நல்லவற்றைப் படிக்க வேண்டுமென்ற எண்ணம் மக்களுக்கு இருக் கிறது. இவற்றையெல்லாம் வாங்கி வைக்கும் அளவுக்கு நூலகங் களுக்கு வருவாய் இல்லை. ஒரு கணக்கைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு மாவட்ட நூலகத்திற்கு 150 கிளை நூலகங்கள் இருக்கின்றன. மிகச் சிறந்த பத்திரிகைகள் அங்கே இல்லை. மூன்று லட்சம் ரூபாய்க்கு மேல் வரவு செலவாகிக் கொண்டிருக்கும் நிலையில் சென்ற ஆண்டு 20,000 ரூபாய்க்குத்தான் புத்தகம் வாங்கப்பட்டிருக் கிறது. தோட்டத்தில் பாதி கிணறு என்று கூட இல்லாமல் முக்கா லும் கிணறாகிவிட்டது. அரசாங்கம் செய்கின்ற உதவி போதுமான தல்ல என்று கூற விரும்புகிறேன்.

மாவட்ட நூலக ஆணைக்குழு நூலகங்கள் தவிர, திட்ட நூலகங் கள் என்று ஒவ்வொரு ஆண்டும் 60 நூலகங்களை அரசாங்கம் அனு மதித்து வந்தது. சென்ற ஆண்டு 60 நூலகங்களுக்கு அனுமதி அளித்தது. 1970-71-ம் ஆண்டுக்கு அந்த 60 நூலகங்களுக்கு அனு மதி இல்லை என்பதைக் கேள்விப்படுகிறபோது சங்கடமாக இருக் கிறது. திட்ட நூலகங்களைத் தோற்றுவிப்பதன் காரணமாக சிற்றூர்களில், ஐயாயிரத்துக்குக் குறைவாக மக்கள் வாழும் பகுதி களில் நூலகங்களை [illegible] வழி இருந்தது. திட்டத்தின் மூலம் அந்தப் பணம் [illegible] வாடகை, ஆட்கள் சம்பளம்



1970 மார்ச் 11] [திரு. ந. தருமலிங்கம்]

புத்தகங்களின் கிரயம் ஆகியவற்றுக்குத் தொகை தரப்பட்டது. அந்த நூலகங்களை இந்த ஆண்டு நிறுத்தி விடாமல் தமிழ்நாட்டில் 60 நூலகங்களைத் திறக்க அனுமதி அளிக்க வேண்டுமென்று இந்த மானியத்தின் மூலமாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

முன்னால் குறிப்பிட்ட மாதிரி கட்டடம் இல்லாத பள்ளிகளுக்குக் கட்டடம் கட்டித் தர, வேறு பல வசதிகளைச் செய்து தர வரவு செலவுத் திட்டத்தில் வழி செய்யப்பட்டிருக்கிறது. அதைப் போலவே இரண்டாயிரத்துக்கும் அதிகமாக உள்ள தமிழ்நாட்டி லுள்ள கிளை நூலகங்களுக்குச் சொந்தத்தில் கட்டடம் இல்லை. நக ரங்களில் 100 ரூபாய்க்குக் குறைவான வாடகையில் கட்டடம் கிடைப்பதில்லை. சொந்த செல்வாக்கைப் பயன்படுத்தினாலும் 75 ரூபாய்; 50 ரூபாய்க்குக் குறைவான வாடகையில் கிடைப்பதில்லை. அந்த அளவுக்கு வாடகை கொடுப்பதைத் தவிர்த்த கட்டடங்களைக் கட்டுவதற்கு மானியம் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையில் நூலகங்கள் நல்ல முறையில் இயங்கும் வகையில், தமிழ்நாட்டு மக்கள் பலவற்றைக் கற்றுத்தேர்ந்து நல்லறிவு பெறும் வகையில் வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மானியத்தை ஆதரித்து அமருகிறேன்.

**திரு. என். ராஜாங்கம்:** பெருமதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியத்தில் நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கடந்த மூன்றாண்டு காலத்தில் நமது கல்வியின் தரம் எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்பதை நாட்டிலுள்ள நல்லறிஞர்கள் பாராட்டுகிறார்கள். நாம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் இருந்த ஆட்சியாளர்கள் சொல்லி வந்த கருத்து — 'திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஆட்சிக்கு வந்துவிட்டால் பள்ளிகளை இடித்து விடுவார்கள்; கல்லூரிகளை மூடிவிடுவார்கள்; கல்வித் துறையிலே அக்கறை காட்டமாட்டார்கள்' என்றெல்லாம் சொன்னார்கள். பொதுமக்கள் கூட ஒருசமயம் இவர்கள் சொல்லு வதெல்லாம் உண்மையாக இருக்குமோ என்று அஞ்சினார்கள். இருந்தாலும் நம்மிடம் இருந்த அன்பின் காரணமாகவும், நம்பிக்கை யின் காரணமாகவும் வாக்களித்து ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தி னார்கள். ஆட்சியில் அமர்த்திய பிறகு எத்தனை கல்லூரிகள் புதி தாக ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன, எத்தனை உயர்நிலைப் பள்ளி கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன; கல்வி அபிவிருத்தியிலே எந்த அளவுக்கு கவனம் செலுத்தப்படுகிறது; எவ்வளவு அக்கறை செலுத்தப்படுகிறது என்பதையெல்லாம் நன்றாகக் கூர்ந்து பார்த்து பொறுப்புள்ள ஆட்சி என்று மக்கள் சொல்லிக் கொண்டிருக் கிறார்கள். உதாரணமாக குறிஞ்சிப்பாடியில் இரண்டு உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு பள்ளிக்கூடம் அங்கு இருக்குமா, இருக்காதா என்று எண்ணிய நிலை உண்டு. ஒரு பள்ளிக்கூடம் போதும் இரண்டு பள்ளிக்கூடங்கள் தேவை இல்லை என்ற நிலை ஏற்பட்டு வருடா வருடம் ஒரு பள்ளிக் [illegible] உயிர் போய் உயிர் வந்து கொண்டிருந்தது. ஆனால்

[திரு. எஸ். சிவசுப்பிரமணியம்] [1970 மார்ச் 11

நிச்சயமாக ஆசிரியர் சமுதாயம் இந்த அரசாங்கத்தைப் போற்றுவார்கள். இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, ஆரம்பப் பள்ளிக்கூடங்களில், ஆசிரியர்கள், மாணவர்கள் விகிதாச்சாரம் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நான் ஆசிரியராக இருந்தவன், அந்தக் கஷ்டங்கள் எனக்குத் தெரியும். ஆசிரியர்கள், மாணவர்கள் விகிதாச்சாரம் சொற்பமும் கவனிக்க வேண்டும். அடிக்கடி மாறி விடுகிறது, 20, 25, 30 என்று. 20 என்று வைத்தபொழுது ஆசிரியர்கள் நல்லமுறையில் படிப்பு சொல்லிக் கொடுத்தார்கள். ஆனால் ஒரே கும்பலாக இருந்தால் எப்படிச் சொல்லிக் கொடுக்க முடியும்? ஒரு பள்ளிக்கூடத்தில் 200 பிள்ளைகள் இருக்கிறார்கள், ஆனால் உபாத்தியாயர்களோ 5 பேர்தான் இருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். 200 பிள்ளைகளுக்கு 5 ஆசிரியர்கள் என்றால் எப்படி முன்னுக்கு வர முடியும், எப்படி கல்வித் தரம் உயரும்? விகிதாச்சாரத்தைப் பார்க்க சர்வே செய்ய வேண்டும், மாநிலம் பூராவும் சர்வே செய்யவேண்டும். இப்படிச் செய்தால் ஆசிரியர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் இருக்காது. ஒரு பள்ளிக்கூடத்திலே சென்று கேட்டால், 200 பிள்ளைகளுக்கு 5 ஆசிரியர்கள்தான் இருக்கிறோம், எல்லாம் எழுதி விட்டோம், டி.இ.ஓ. வந்தார், டெபுடி இன்ஸ்பெக்டர் வந்தார், வெல்பேர் ஆபீசர் வந்தார், நடக்கவில்லை, புதிதாக ஆசிரியர்கள் போடவில்லை என்று சொல்லுகிறார்கள். ஏராளமான பிள்ளைகளை உட்கார வைத்து, 100, 75, 50 என்று உட்கார வைத்து, படியுங்கள், வாய்ப்பாடு படியுங்கள், ஒன்று, இரண்டு சொல்லுங்கள் என்று சொன்னால் என்ன கதை என்று கேட்கிறேன். எனவே, இதைப் பற்றி நன்றாக சர்வே செய்தால், வேலையில்லாத் திண்டாட்டம் நிச்சயமாகக் குறைந்துவிடும் என்று சொல்லிக் கொள்ளுகின்றேன்.

அடுத்து, ஆசிரியர்களின் கஷ்டங்கள். பிள்ளைகளை உட்கார வைத்துக்கொண்டிருந்தால் மட்டும் போதுமா? படிப்பு சொல்லிக் கொடுக்க வேண்டுமே. படிப்பு சொல்லிக்கொடுக்க அவர்களுக்குத் தெம்பு இல்லை. வருமானம் இருந்தால்தானே தெம்பு வரும். தெம்புக்கு வசதி வேண்டாமா? எனவே வசதிக்கு அவர்களின் நிலைமையை உயர்த்த வேண்டுமென்றால், நிச்சயமாக அரசாங்கம் அதைப்பற்றி பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். சிதம்பரம் தாலுகாவில் ஸ்ரீமுஷ்ணம் என்று ஊர் இருக்கிறது. சிதம்பரத்திற்கு 30 மைல்களுக்கு அப்பால் இருக்கிறது. அங்கு ஏராளமான மக்கள் இருக்கிறார்கள். அங்கு ஒரு கல்லூரி வைத்தால் அங்கிருந்து அவர்கள் சிதம்பரத்திற்கு வரவேண்டியதில்லை. அங்கு ஏராளமானவர்களைப் படிக்க வைக்க



1970 மார்ச் 11] [திரு. எஸ். சிவசுப்பிரமணியம்]

பொறுத்தவரையிலும் நாங்கள் உங்களை ரொம்பப் போற்றுவோம். வாழ்த்துவோம். எனவே, மருத்துவக் கல்லூரி ஒன்றும் பெண்கள் தனிக்கல்லூரி ஒன்றும் நிச்சயமாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

சிதம்பரத்தில், உயர்நிலைப்பள்ளிகள் இருக்கும் இடங்களிலெல்லாம் உணவு விடுதிகளை நிச்சயமாக ஆரம்பிக்க வேண்டும். ஹைஸ்கூல் வைத்தால் உணவு விடுதியையும் வைக்க வேண்டும். அப்பொழுதுதான் பின் தங்கிய, ஹரிஜன மாணவர்கள் முன்னேற்றம் அடைய நலமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ளுகின்றேன். ஹரிஜன மாணவிகளை இன்று ட்ரெயினிங் ஸ்கூலுக்கு எடுக்கும் பொழுது அவர்களுக்கு அதிகமான இடத்தை ஒதுக்க வேண்டும். எப்படி எடுக்கிறார்கள் என்றால் 40 பேர் எடுத்தால் 6 பேர் என்று எடுக்கிறார்கள். 400 பேர் விண்ணப்பம் போட்டிருக்கிறார்கள், 6 பேர்தான் எடுத்ததாகத் தெரிகிறது. எம்.எல்.ஏ. சிபார்சு ஒன்று, எம்.பி. சிபார்சு ஒன்று, மற்றவர்கள் சிபார்சு என்று எடுக்கிறார்கள். 100 மார்க்குகள் வாங்கியிருக்கிறார்கள், அப்படியிருந்தும், 50 மார்க் வாங்கியவர், சிபார்சின் மேல் எடுக்கப்படுகிறார்கள். நானே கூட சிபார்சு செய்திருக்கிறேன். ஆனால் அப்படியெல்லாம் எடுக்கக் கூடாது, 6 என்பதைக் கொஞ்சம் கூட்டிக் கொடுக்க வேண்டும். 6 என்றிருப்பதை 12 ஆகவாவது உயர்த்தி விகிதியைச் செய்யவேண்டும். எவ்வளவோ செய்கிறோமே, ஹரிஜன மாணவர்களுக்கு இதுமாதிரி உயர்த்திக்கொடுத்தால் ஹரிஜன சமுதாயம் இந்த அரசாங்கத்தை நிச்சயமாகப் போற்றும் என்று கூறிக்கொள்ளுகின்றேன்.

ஆசிரியர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டும். ஆண் ஆசிரியர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்காவிட்டாலும்கூட, பெண் ஆசிரியர்களுக்கு நிச்சயமாக வீடு கட்டிக்கொடுக்கத் திட்டம் தீட்டி அதை அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். சில பெண் ஆசிரியர்கள் வெகு தூரம் போய் வரவேண்டியிருக்கிறது. தினந்தோறும் ஒரு ஊரிலிருந்து வேறோர் ஊருக்குச் சென்றுவர வேண்டியதாகயிருக்கிறது, அங்கு வீடு கிடைக்காததால். எனவே, பெண் ஆசிரியர்களுக்கு கட்டிடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பல பள்ளிக்கூடங்கள் ஒழுங்காகவே இருக்கின்றன. உதாரணமாக, சி. சாத்தமங்கலம் என்ற ஊரில் பார்த்தேன், மழை பெய்துகொண்டிருக்கிறது, அங்கே போய்த் தங்கலாம் என்று போனால், பெய்கிற மழை பூராவும் அந்தப் பள்ளியிலேதான் இருக்கிறது. ஆசிரியர்களும், பிள்ளைகளும் ஒரு மூலையிலே இருக்கிறார்கள். அந்தப் பள்ளிக்கூடத்தைப் பார்த்தால் ஒரே பொத்தல் குடிசை, மழை பூராவும் அங்கேயிருக்கிறது. நான் டி.இ.ஓ.-விற்கு எழுதிக் கொடுத்திருக்கிறேன். கட்டிக் கொடுத்துவிட்டார்களோ என்னவோ தெரியவில்லை. போய்ப் பார்க்க வேண்டுமென்றிருக்கிறேன். இதுமாதிரி குடிசைகள் இருக்கக்கூடாது. அதுமட்டுமல்ல,

களில் கல்வியின் தரம் ஆண்டுக்கு ஆண்டு குறைந்துகொண்டே வருகிறது. கல்வித்தரத்தை அங்கெல்லாம் உயர்த்துவதற்கு அரசாங்கம எந்தவிதமான திட்டத்தையோ அல்லது முயற்சியையோ இது வரைக்கும் எடுத்ததில்லை. எனது தொகுதியில் 25 சதமானம் தேயிலைத் தோட்டங்கள். அந்தத் தேயிலைத் தோட்டங்களில் இருக்கக்கூடிய பள்ளிகளை மானேஜ்மெண்டார்தான் நடத்திக் கொண்டு வருகிறார்கள். அவர்கள் அந்தப் பள்ளிகளை சரியான முறையில் நடத்துவதில்லை. அதற்குக் காரணம் என்னவென்று தெரியவில்லை. தேயிலைத் தோட்டங்களில் இருக்கக்கூடிய எல்லாப் பள்ளிகளையும் அரசாங்கமே ஏற்று, அரசாங்கத்தின் மூலம் நடத்தினால் மிக நன்றாக இருக்கும் என்பதுதான் என்னுடைய கருத்து. எனவே, இந்த விஷயத்தில் அரசாங்கம் முக்கியமாக கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எனது தொகுதியில் இருக்கக்கூடிய பஞ்சாயத்து யூனியன் பள்ளி ஆசிரியர்களுக்கும் வீட்டு வசதி இல்லை. எப்படியென்றால், அங்கு இருக்கக்கூடிய பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்து போர்டு இவைகளெல்லாம் எஸ்டேட் பகுதியிலே இருக்கக்கூடிய காரணத்தினால், அங்கே வீடுகள் இல்லை. அங்கே இருக்கக்கூடிய வீடுகள் எஸ்டேட்டிக்குச் சொந்தமான வீடுகள். வாடகைக்குக் கிடைக்கக்கூடிய தனிப்பட்டவர்களின் வீடுகள் இருக்கின்றனவா என்றால், இல்லை. அந்தக் காரணத்தை முன்னிட்டு அங்கு இருக்கக்கூடிய ஆசிரியர்கள் வீட்டு விஷயத்திலே மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டு வருகிறார்கள். இந்த விஷயத்திலே மிகவும் முக்கியமாக கவனம் செலுத்த வேண்டும். ஏனென்றால் அந்தப் பகுதி குளிர் பிரதேசம். குளிர் காலத்தில் ஆசிரியர்கள் தங்குவதற்கு வீடுகள் இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எங்கேயோ சிறு, சிறு இடங்களில்தான் அவர்கள் இருக்கிறார்கள். அந்தக் காரணத்தை முன்னிட்டு, தோட்டப் பகுதியில் இருக்கக் கூடிய ஆசிரியர்களுக்கு வீட்டு வசதியை உடனே செய்து தரவேண்டும் என்று மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு இருக்கக்கூடிய மானேஜ்மெண்டார் நடத்தும் பள்ளிகளில் உணவு அளிக்கும் விஷயத்தில், மிகவும் மோசமான உணவைப் போடுகிறார்கள். கோதுமையை வாங்கி அதை அப்படியே சமைத்து, மோசமான நிலையில் உணவு போடுகிறார்கள். நல்லவிதமான முறையில் எந்தவிதத்திலும் உணவு கொடுக்க வேண்டும் என்ற நிலை இல்லாமல், மோசமான உணவைக் கொடுக்கிறார்கள். அந்த விஷயத்தில் சர்க்கார் கவனம் செலுத்த வேண்டும். இப்பொழுது அரிசி தாராளமாகக் கிடைக்கிறது. அரிசி உணவுதான் போடவேண்டும் என்று சட்டத்தை இந்த அரசாங்கம் போட்டால் நல்லது என்ற கருத்தைத் தெரிவிக்கிறேன்.

இன்று ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் குறைவான சம்பளம். நீலகிரி மாவட்டத்தில் இருக்கும் ஆசிரியர்கள் இந்த 10 ரூபாய் என்பதை வேதனையோடுதான் ஏற்றுக்கொள்கிறார்கள்.

அந்தப் பகுதியில் விலைவாசிகள் மிகவும் அதிகமான நிலையில் இருக்கின்றன. எந்த ஒரு சாமான் வேண்டுமென்று வாங்கினாலும், கோயம்புத்தூருக்குச் செல்ல வேண்டும். அந்த நேரத்தில் கோயமபுத்தூருக்கும், நீலகிரிக்கும் வித்தியாசம், 25 சதவிகிதம் விலைவாசிகள் உயர்ந்திருக்கிறது. அந்த அடிப்படையில் சம்பளத்தைக் கணக்கிட்டுக் கொடுக்க வேண்டும். அந்த வகையில் ஆசிரியர்களுக்கும், என்.ஜி.ஓ.-க்களுக்கும் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று இந்த சமயத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அந்தப் பகுதி கன்னட சமுதாயம், மலையாள சமுதாயம் இவற்றைச் சேர்ந்தவர்களுடைய தாய் மொழியைப் படிக்க தக்க வசதிகள் இல்லை. அப்படி வசதியில்லாததால், தங்களுடைய தாய் மொழியைப் படிக்க கஷ்டமான நிலையிருக்கிறது. அதைப் போக்கத் தக்க ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் தங்கள் தாய் பாஷையை படிக்க ஆரம்பப் பாடமெல்லாம் படித்துவிட்டு, மேற்படிப்புக்கு கேரளத்திற்கோ அல்லது மைசூருக்கோதான் போகக் கூடிய நிலை இருக்கிறது. இந்த சூழ்நிலையைத் தவிர்த்து மலையாள, கன்னட சமுதாயத்தினர்கள் மேல் படிப்புக்கு ஒரு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று இந்த சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு தோட்டப் பகுதியில் இருக்கும் குழந்தைகள் உயர் நிலைப் பள்ளிக்குச் செல்ல வேண்டுமென்றால் 5, 10 மைல்கள் நடந்து செல்ல வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். என் தொகுதியில் ஓவாயில் என்ற பகுதியில் உயர்நிலைப்பள்ளி இருக்கிறது. மாணவர்கள் பல பாகங்களிலிருந்து வரவேண்டும் என்றால் 10 மைல் நடந்து செல்ல வேண்டும். மழை காலங்களில், மழை காற்று இருக்கும்போது மாணவர்கள் பள்ளிக்கு நடந்து செல்ல வேண்டும் என்பதால், அப்படிப் போகும்போது காற்று மழை காரணமாக குறிப்பிட்ட நேரத்திற்கு பள்ளிக்கூடத்திற்குப் போக முடியவில்லை. அதோடு சில சமயங்களில் பள்ளிக்கூடங்களுக்கே செல்ல முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையை கவனத்தில் கொண்டு இந்த அரசாங்கம் அந்தப் பகுதி மாணவர்கள் வசதிக்காக ஒரு பஸ் விட்டால், எஸ்டேட் பகுதியில் இருக்கக் கூடிய மாணவர்களுக்கு பள்ளிக்குச் செல்வதற்கு வசதியாக இருக்கும். படிப்பில் முன்னேற்றம் அடையமுடியும். ஆகவே அந்தக் குறையை தாழ்மையோடு தெரிவித்துக் கொண்டு அந்தக் குறையை நீக்கினால், நேயிலைத் தோட்டத்தில் இருக்கக் கூடிய பின்தங்கிய வகுப்பினரின் பிள்ளைகள் சென்று படிக்க வசதியாக இருக்கும் என்கின்ற என்னுடைய கருத்து நல்ல கருத்து, அதை இந்த அரசாங்கம் நிச்சயமாக செயல்படுத்தும் என்பதை நம்பிக்கொண்டு இருக்கிறேன் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, இந்தப் பிரச்சினையில் அரசாங்கம் கவனம் செலுத்தி, ஆவன செய்யவேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக்





கொள்வதுடன், மற்ற சமுதாயத்தினர் தங்கள் தாய் பாஷையை படிக்க தகுந்த உயர்நிலைப் பள்ளியை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என் வார்த்தையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. இ. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் கொண்டுவந்திருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல நான் முற்படுகிறேன். 1970-71-ம் ஆண்டுக்கு, இந்த நாட்டின் வாருவாயில் 23 சதவிகிதம் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது; ரூபாய் 66,83,00,000 கல்விக்காக என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த நாட்டின் கல்வியின் தரம் உயரவேண்டும் என்பதற்காக ரூபாய்க்கு நான்கு அணா வீதம் கல்விக்கென்று செலவிட்டு, செயல்பட இந்த அரசு முன்வந்துள்ளது. அதே நேரத்தில், கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு ஒருகோடி 45 லட்சம் ரூபாய் அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்கள். அதை விட என்ன சாதித்திருக்கிறார்கள் என்று எதிர்த்தரப்பிலிருந்து பேசுகிறார்கள். அவர்கள் கடந்த காலத்தில், இந்த நாட்டை காங்கிரஸ் கட்சி ஆண்டுகொண்டிருந்த காலத்தில், கல்விக்காக செலவழித்ததைவிட, இன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழக அரசு பல கோடி ரூபாய்களை அதிகமாகக் கல்விக்காக செலவிட முன்வந்திருக்கிறது என்றாலும் கூட ஒரு குறை சொல்ல வேண்டும் என்று அவர்கள் அப்படிச் சொல்கிறார்கள். கடந்த பட்ஜட்டில் புது வரி போட்டிருப்பதைப் பற்றி, தகுதி வாய்ந்தவர்களுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு நிதி அமைச்சர் பட்ஜட் தாக்கல் செய்து பேசியபோது, ‘ஆகா, வரி போட்டு விட்டார்கள், உயர்த்திவிட்டார்கள்’ என்று சொன்னார்கள். இப்பொழுது கல்விக்காக ஒரு கோடி 45 லட்சம் தானே அதிகமாகச் செலவிட்டிருக்கிறார்கள் என்கிறார்கள். வரியையும் உயர்த்தக்கூடாது, அதிகமாகவும் செலவு செய்யவேண்டும் என்பதுதான் அவர்களுடைய வாதம். அதே போல, கடந்த காலத்தில் நெல்லுக்கு விலை போதாது, அது விவசாயிகளைப் பாதிக்கிறது, அதிகப்படுத்த வேண்டும் என்றார்கள். அதே நேரத்தில் அரிசி விலையையும் குறைக்க வேண்டும் என்று சொன்னவர்கள்தான் இவர்கள். முன்னுக்குப் பின் முரணான கொள்கை உடையவர்கள் காங்கிரசார். திராவிட முன்னேற்றக் கழகம் மிக உறுதியான கொள்கையுடையது. அதேபோலத்தான் மொழிக் கொள்கையிலும். காங்கிரஸ்காரர் களுக்கு உறுதியான கொள்கை இல்லை. அவர்கள் பேசிய பேச்சிலிருந்து பிரதிபலிக்கிறது. நாட்டுப் பற்று, இனப் பற்று, மொழிப்பற்று இவற்றில் ஸ்திரமான, உறுதியான பற்று எங்களுக்கு இருக்கிறது. ஆனாலும், ஆளும் கட்சி கொண்டு வருகின்ற தீர்மானங்களை, எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகளை குறை சொல்ல வேண்டும் என்று சிலவற்றை கூறுகிறார்களே தவிர, வேறொன்றும் இல்லை. அவர்களிடத்தில் ஆட்சியின் கொள்கைகளை, திட்டங்களை பாராட்டுவார்கள் என்று என்றுமே எதிர்பார்க்கவில்லை. ஆகவே, எதைச் சொல்லவேண்டுமோ அதைச் சொல்லமாட்டார்கள். இந்த 66 கோடி, 83 லட்சம் ரூபாய் கல்விக்காக ஒதுக்கி, செலவிட முன்வந்து

பாட புத்தகங்கள் தமிழிலே வருகின்றன. விஞ்ஞான கருத்துக்கள் அடங்கிய புத்தகங்கள் பலவும் தமிழிலே வருகின்றன. அப்படி வருகின்ற நேரத்தில் நாம் புத்தகங்களை ஆய்ந்து, தேர்ந்தெடுக்கிற நேரத்தில், அதில் பழமையான கருத்துக்கள், பழமைக்கு ஆதரவு தருகின்ற கருத்துக்கள், பகுத்தறிவுக்கு ஒத்துவராத கருத்துக்கள் பல இடங்களில் காணப்படுகின்றன. தமிழ் மொழி மூலம் தமிழ் நாட்டு மாணவர்களுக்குத் தரப்படுகிற கல்வி பகுத்தறிவை அடிப்படையாக வைத்துத் தான் அந்தக் கல்வி தரப்படவேண்டும் என்பதை வற்புறுத்திக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். நான்கு, ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு ஒரு வரலாற்றுப் புத்தகத்தில் "நரசிம்மவர்ம பல்லவன் ஆண்டவன் திருவடி சேர்ந்தார்" என்று எழுதியிருந்தது. அந்த அளவுக்கு பகுத்தறிவுக்கு ஒவ்வாத கருத்துக்களை புகுத்தியிருக்கிறார்கள், புத்தகங்களில். ஆகவே, புத்தகங்களை எழுதும்பொழுது, அதிலே ஈடுபட்டிருப்பவர்கள், அரசு ஏற்றுக்கொண்டிருக்கிற புத்தக வெளியீட்டில், அந்த புத்தகங்கள் நல்ல புத்தகங்களாக அமையத் தக்க அளவுக்கு புத்தகங்களை உருவாக்கவேண்டும், தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கரூர், அரியலூர், புதுக்கோட்டை என்று மூன்று பகுதிகளாக கல்வி மாவட்டங்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அப்படி கல்வி மாவட்டங்கள் பிரிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அரியலூர் கல்வி மாவட்டத்திலிருந்த லால்குடி வட்டாரத்தை புதுக்கோட்டையில் சேர்த்திருக்கிறார்கள். லால்குடி வட்ட ஆசிரிய நண்பர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்கள். லால்குடியிலிருந்து அரியலூருக்கு வர வேண்டியவர்கள், இன்றைக்கு புதுக்கோட்டைக்குச் சென்று, 60 மைல்களுக்கு அப்பால் காரியங்களை ஆற்றவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும், கல்வி இலாகாவினரும், லால்குடியை மீண்டும் அரியலூரில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். 'டிரைண்டு பட் ஃபைல்டு' என்று சொல்லப்படுகிற தேர்ச்சி பெறாத ஆசிரியர்கள் பலர் தனியார் பள்ளிகளை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் வருஷா வருஷம் தங்களுடைய வேலை உறுதி செய்யப்படுவதற்கு அனுமதிபெற்றுக்கொண்டிருக்கிறார்கள், அரசாங்கத்தினிடம். அதுகூட சமீபத்தில் கிடைக்கவில்லை. ஆகவே, அவர்கள் ரிடையர் ஆகக்கூடிய அந்த வயது வரைக்கும் அவர்களுக்கு வேலை வாய்ப்பிற்கான உறுதி மொழியை அரசு தர வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).

* **திரு. சி. நஞ்சன்:** தலைவர் அவர்களே, 1970-71-ம் ஆண்டுக்கான கல்வி நிதிநிலை ஆண்டு அறிக்கையின் மீது எனது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இன்று கல்வி முன்னேற்றத்திற்கு பல திட்டங்களைப் போட்டிருக்கிறார்கள். ஆனால், தேயிலைத் தோட்ட பகுதிகளில் இருக்கக்கூடிய தொழிலாளர்கள் வசிக்கக்கூடிய பகுதி

ஆகவே, எல்லாக் கல்லூரிகளிலும் விடுதிகளை ஆரம்பித்து எல்லோரும் தங்குவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும்.

இன்றையதினம் கிராமப்புறங்களில், பி.யு.சி. வகுப்பில் இனமாகப் போதிப்பதால்தான் கல்வி கற்க வேண்டுமென்ற ஆவல் ஏற்பட்டிருக்கிறது. கல்லூரிகளில் தங்கிப் படிக்க விடுதிகள் இல்லை என்ற குறை அகற்றப்பட வேண்டும். 7 ஆயிரம் இடங்கள் காலியாக இருப்பதை மனதிற்கொண்டு, மாணவர்கள் சேர முன்வருவதற்கான வழிவகைகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

மற்றொரு விவகாரம் மொழியைப்பற்றியது. அரசாங்கக் கல்லூரிகளிலே தமிழைப் பயிற்சி மொழியாக ஆக்கியிருக்கிறார்கள். தனியார் கல்லூரிகளில் ஆங்கிலம்தான் பயிற்சி மொழியாக இருக்கிறது. சகலரும், பெரிய படிப்பு படித்தவர்களும் ஆங்கிலம் படிக்க தனியார் துறைக் கல்லூரிகளுகுத்தான் தங்கள் பிள்ளைகளை அனுப்பி படிக்க வைக்கிறார்கள். இனி வருங்காலத்தில் ஆங்கிலம் படித்தவர்களுக்குத்தான் வேலைவாய்ப்பு கிடைக்கும், தமிழில் படித்தால் வேலைவாய்ப்பு கிடைக்காது என்று எல்லோரும் ஆங்கிலப் பயிற்சி மொழி உள்ள கல்லூரிகளுக்குத்தான் செல்கிறார்கள். சில கல்லூரிகளில் தங்களுடைய இஷ்டத்திற்குத்தான் பாடம் சொல்லிக்கொடுப்போம் என்று சொல்கிறார்கள்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். திருச்சி சீதாலட்சுமி கல்லூரியில் தங்களுடைய இஷ்டத்திற்குத்தான் பாடம் படிக்க வேண்டும் என்று சொல்லி 82 பெண்களை வெளியேற்றிருப்பதாக தகவல் கிடைத்திருக்கிறது. அம்மாதிரி செய்பவர்களைக் கட்டுப்படுத்தக்கூடிய அதிகாரம் அரசாங்கத்திற்கு இருக்க வேண்டும். தனியார் கல்லூரிகளில் ஏற்படுகின்ற தவறுகளைக் கட்டுப்படுத்துவதற்கு அதிகாரம் இருக்க வேண்டும். மேலும் தனியார் கல்லூரிகளில் செலக்ஷன் என்ற முறை இருக்கிறது. இதெல்லாம் கூடாது.

'தொடக்கப் பள்ளிகளில் அதிகமான மாணவர்கள் வருகிறார்கள். தொடக்கப் பள்ளியில் படித்து முடித்தவர்கள் 100க்கு 10 பேர்தான் உயர்நிலைப்பள்ளிகளுக்குப் போகிறார்கள்' என்று குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஏன் இப்படி குறைகிறது என்பதைப் பார்த்தால், வசதிக் குறைவாக இருக்கிறது. இது ஏழைகள் நிறைந்த நாடாக இருக்கிறது. பல்வேறு தொழில்களுக்குப் போக வேண்டிய நிலைமை இருக்கிறது. தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைக்க முடியாத நிலைமை பல பெற்றோர்களுக்கு இருக்கிறது. அதைப்போக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

மாணவர்கள் தற்போது கிளர்ச்சிகள் செய்கிறார்கள். ஏன் செய்கிறார்கள்? இதற்கெல்லாம் காரணம் என்ன என்பதைக் கவனித்து ஆராய்ந்து பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும். மாணவர்கள்



அரசியலில் தலையிடுகிறார்கள் என்று பிரசாரம் செய்கிறார்கள். ஊன்றிப் பார்த்தால் எல்லா மாணவர்களும் ஏதாவது ஒரு கட்சியைச் சேர்ந்தவர்களாகத்தான் இருந்து வருகிறார்கள். மாணவர்கள் அரசியலில் தலையிடக்கூடாது என்று ஒரு காலத்தில் சொல்லப்பட்டு வந்தது. அவர்களுடைய கோரிக்கைகளைப் பெறுவதற்காக, நிர்வாகத்தின் தவறுதல்களைப் போக்குவதற்காக மாணவர்கள் மன்றங்கள், கழகங்கள் அமைத்துக்கொண்டு, கிளர்ச்சிகள் செய்கிறார்கள். மாணவர்களுடைய குறைகள் அவ்வப்போது போக்கப்பட வேண்டும். அதற்காக எத்தனை மன்றங்கள் இருந்தாலும் அதன் தலைவர்களை வருஷத்திற்கு ஒரு முறையோ, இருமுறையோ வரவழைத்து அவர்களுடைய குறைகளைக் கேட்டு, போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற எனது ஆலோசனையைச் சொல்லிகொள்ள விரும்புகிறேன்.

தமிழ் ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் முதல் நிலை, இரண்டாவது நிலை என்றிருப்பதைப் போக்க வேண்டும். இவர்களைச் சமமான நிலையில் வைத்து நடத்த வேண்டும். அவர்களுக்குரிய சம்பளங்களையும், சலுகைகளையும், உதவிகளையும் செய்தாக வேண்டும்.

அடுத்தபடியாக, ஆசிரியராக பயிற்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள். இன்றைக்கு பயிற்சி கொடுக்கப்படும் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. மேலும் பயிற்சி பெற்றவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். வேலையில்லாமல் இருக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கையைக் குறைப்போம் என்று சொல்லி, பயிற்சிபெற வருகிறவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கிறார்கள். அதிகமான ஆசிரியர்கள் பயிற்சி பெறுவது நல்லது. நமக்கு அதிகமான ஆசிரியர்கள் தேவையாக இருக்கிறது. நம்முடைய கிராமங்களிலுள்ள அத்தனை குழந்தைகளும் படித்தாக வேண்டும். ஒரு 20, 25 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்றிருப்பது நியாயமாக இருக்கும். இன்றைக்கு இருக்கும் அமைப்பு முறையில் மந்தைக் கல்வி முறைதான் இருக்கிறது. ஆடுமாடுகளை அடைத்து வைப்பதுபோல் ஒரு ஆசிரியருக்கு 40, 50 என்று பிள்ளைகள் வைத்துக்கொண்டிருந்தால் எப்படி அவர்களுக்குப் போதிக்க முடியும். பிள்ளைகளைப் பராமரிப்பது கஷ்டமாக இருக்கும். ஆகவே, ஒரு ஆசிரியருக்கு 25 மாணவர்கள் என்ற விகிதத்தை ஏற்படுத்திக் கொடுத்தால் இன்னும் ஆயிரக்கணக்கான ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றொன்று, புதிய பள்ளிக்கூடம் ஆரம்பிக்க வேண்டுமென்றால் 300 ஜனத்தொகை இருக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இந்த ஜனத்தொகைக் கணக்கு 1961-ல் எடுக்கப்பட்டது. இந்தப் பத்தாண்டுகளில் ஜனத்தொகை பெருக்கம் எவ்வளவு இருக்கிறது.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : 300 மக்கள் தொகை உள்ள இடத்தில் ஆரம்பப்பாடசாலை ஏற்படுத்தலாம் என்பது விதியே [illegible], 1961-ஆம் ஆண்டு சென்சஸ் கணக்கை அடிப்படையாக

[திரு. இ. இராமசாமி] [1970 மார்ச் 11

இருப்பதைப் பாராட்டி, மானியத்தை ஆதரித்து, என்னுடைய தொகுதியின் பிரச்சினைகள் சிலவற்றை அமைச்சர்கள் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதி ஒரு பகுதி மலைப் பகுதியும், ஒரு பகுதி கிராமப் பகுதியும் ஆக இருக்கிறது. மலைப் பகுதியில் 150 மைல் சுற்றளவு உள்ள பகுதியில், ஒரே ஒரு உயர்நிலைப் பள்ளிதான் இருக்கிறது. அதில் 2,500 மாணவ மணிகள் படிக்கிறார்கள். வசதி போதாது. இடத்தை விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இருபது ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில், பாம்பே-பர்மா ட்ரேடிங் கம்பெனியில் முடிஸ் என்ற இடத்தில் ஒரு உயர் நிலைப் பள்ளி எட்டு ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டு, அதற்கு இடவசதியில்லாமல், வீதியில் நடந்து கொண்டிருந்தது. கடந்த ஆண்டு மாண்புமிகு கல்வி அமைச்சருடைய முயற்சியினால், அதிகாரிகள் முயற்சியினால், 5 ஏக்கர் இடம் கட்டடத்திற்காக வாங்கியிருக்கிறது. ஒரு ஆண்டு ஆகிறது, கட்டட வேலை ஆரம்பிக்கவில்லை. தயவுசெய்து கட்டட வேலையை விரைவில் ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, 152 மைல் சுற்றளவுள்ள மலைப் பகுதியில் இன்றைய தினம் ஒரு உயர்நிலைப்பள்ளி இருப்பதால், மாணவர்கள் படிக்க வசதியில்லாமல் இருக்கிறார்கள். சில மாணவர்கள் பத்துப்பதினைந்து மைல் நடந்துபோய் படிக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, கருமலை, வாட்டர்பால், சோலையாறு அணை முதலிய இடங்களில் உயர்நிலைப்பள்ளிகளை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் பள்ளிக்கட்டடம் கட்டுவதற்கான இடமும், பள்ளிக் கட்டடம், பராமரிப்புச் செலவுக்காக 22,500 ரூபாய் பொதுமக்கள் கொடுக்கவேண்டும் என்ற அரசாங்கத்தின் கருத்துக்கும் அந்தப் பகுதி மக்கள் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் இந்தக் கோரிக்கையை ஏற்று, அந்தப் பகுதிகளில் உயர்நிலைப்பள்ளிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, எனது தொகுதியில் கோட்டூரில் பெண்களுக்காக தனியான உயர்நிலைப் பள்ளி இல்லாத காரணத்தினால் பெண்கள் படிப்பதற்கு கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அந்த இடத்தில் பெண்களுக்கு தனியான ஒரு உயர்நிலைப் பள்ளி அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது அங்குள்ள உயர்நிலைப்பள்ளி பாதுகாப்பற்ற முறையில் இருக்கிறது. ஆகவே, அந்தப் பள்ளிக்கு சுற்றுப்புறச் சுவர் கட்டித் தர வேண்டும்.

அடுத்து, கோவை நகரில் ஒரு சர்வகலாசாலையை விரைவில் நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கோவையில் தற்போது ஒரு அரசினர் கலைக் கல்லூரி இருக்கிறது. மேலும் ஒரு அரசினர் கலைக் கல்லூரி நிறுவ வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த மானியத்தை ஆதரித்து பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.



1970 மார்ச் 11]

திரு. ஆ. கு. சுப்பையா: பேரவை உதவித் தலைவர் அவர்களே, கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்த மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன். கல்வி அமைச்சர் அவர்கள், "ஒரு சமூகம் தனது குடிமக்களுக்கு வழங்குகிற கல்வியின் அளவையும், தரத்தையும் ஒட்டியே தற்கால உலகின் சமுதாய முன்னேற்றம் மதிப்பிடப்படுகிறது" என்று குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு கல்விக்காக 1 கோடியே 40 லட்சம் ரூபாய் அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்காக நான் அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். இன்றைதினம் மொத்த வருவாயில் அதிகமான தொகையை கல்விக்கு ஒதுக்குவது மிகவும் உதவியாக இருக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கல்வியைப் போதிப்பதில்தான் ஒரு நாட்டின் முன்னேற்றம் இருக்கிறது. இந்தச் சமயத்தில் தனியார் துறையினர் கல்லூரிகளையும் பள்ளிகளையும் வைத்துக்கொண்டு ஒரு தொழிலாகவே நடத்தி வருகிறார்கள். ஒரு காலத்தில் தர்மமாக நினைத்து இதை ஆரம்பித்திருந்தாலும்கூட இன்றையதினம் வருவாயைத் தேடித் தரக்கூடிய தொழிலாக நடத்தி வருகிறார்கள். தனியார் கல்லூரிகளிலே மாணவர்களைச் சேர்க்கிற நேரத்திலே, பல்வேறு வகைகளிலே கட்டணம் வசூலிப்பதனால் மாணவர்கள் மிக்க அவதிப்படுகிறார்கள். அரசாங்கக் கல்லூரியிலே கட்டணம் 80 ரூபாய் என்றால், தனியார் கல்லூரிகளிலே 180 ரூபாய், 200 ரூபாய் என்று கட்டணத்தை வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். அரசு கல்லூரிகளுக்கும், தனியார் கல்லூரிகளுக்கும் கட்டண விகிதத்தில் ஏற்றத் தாழ்வுகள் இருந்து கொண்டிருக்கின்றன. இப்படி இருப்பதனால் தான் கல்வியில் தேக்கம் இருப்பதை, மாணவர்கள் அக்கறை இல்லாமல் இருப்பதை, முன்னேற்றம் இல்லாமல் இருப்பதை நாம் பார்க்கிறோம். இன்றைதினம் பார்த்தால் கல்லூரிகளில் சேருகிற மாணவர்களின் எண்ணிக்கை 64 ஆயிரம் மாணவர்கள்தான். ஆனால் கல்லூரிகளில் உள்ள இடங்களின் எண்ணிக்கை 71,000 ஆகும். இன்னும் 7 ஆயிரம் மாணவர்கள் வந்து சேரவில்லை. போதுமான வசதி இல்லாத காரணத்தால் இந்த மாணவர்கள் வந்துசேரவில்லை என்று தெரிகிறது. மாணவர்களுக்குரிய பொருளாதார வசதிகள் குறைந்திருக்கலாம். அல்லது மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கான விடுதிகள் இல்லாமல் இருந்திருக்கலாம், அல்லது விடுதிகளில் தங்கிச் செலவழிக்கக்கூடிய பணவசதிகள் இல்லாமல் இருந்திருக்கலாம். இவைபோன்ற பல காரணங்கள் இருக்கலாம். ஆனால் இன்றைக்கு எல்லாக் கல்லூரிகளிலும் தங்கிப் படிப்பதற்கான விடுதிகள் இருக்கின்றனவா என்பதைப் பார்க்க வேண்டும். இல்லையென்றால் அப்படிப்பட்ட இடங்களில் விடுதிகளை ஏற்படுத்த வேண்டும். சில கல்லூரிகளில் தனியார் விடுதிகளை நடத்தி வருகிறார்கள். அவர்கள் மாணவர்களிடத்தில் அதிகக் கட்டணத்தை வசூலிக்கிறார்கள். அந்தமாதிரியான நிலைமை இருக்கக்கூடாது.

இணைப்பு

[116-ம் பக்கத்தில் 316-ம் எண்ணுள்ள வினாவுக்குரிய விடையைக் காண்க.]

A. *Names of manure mixure firms eligible for allotment of Pool fertilisers.*

MADRAS.

1. E.I.D. Parry Limited, "Dare House", Post Box No. 12, Madras-1.

2. Shaw Wallace and Company Limited, 8|9, Thambu Chetty Street, Madras-1.

3. Mysore Fertiliser Company, No. 6, Linghi Chetty Street, Madras-1.

4. Rallis India Limited, 320, Linghi Chetty Street, Madras-1.

5. Hindustan Fertilisers and Bone Mills Private Limited, 6, Linghi Chetty Street, Madras-1.

6. The Scientific Fertiliser Company Private Limited, 13|14, Second Line Beach, Madras-1. (Post Box No. 1290).

7. New Premier Chemical Industries Private Limited, 289, Thambu Chetty Street, Madras-1.

8. South India Steel and Sugars Limited, 98, Armenian Street, Madras-1.

9. Primier Fertilisers, 151, Mount Road, Madras-2.

10. V. Venugopal Pillai and Company, 2|27, Broadway, Madras-1.

11. Blue Mountain Estates and Industries Limited, "Oriental Building", 99, Armenian Street, Madras-1.

12. The Saidapet Taluk Co-operative Marketing Society Limited, 164, G.N.T. Road, Red Hills, Madras-52.

13. The Penninsular Bone Mills, 28|29, Coral Merchant Street, Madras-1.

14. The Imperial Fertiliser Company Limited, 73|74, Gollawar Agraharam Road, Post Box No. 1188, Madras-1.

15. Suriya Fertilisers, No. 7-A, Briethapet Road, Vepery, Madras-7.

16. Associated Phamaceutical Industries Private Limited, 10, Boag Road, Madras-17.

17. Soundararajan and Company, 330, Thumbu Chetty Street, Madras-1.

18. Geo Industries and Insecticides (India) Private Limited, Sathankadu Village, Kaladipet, Tiruvottiyur, Madras-19.

19. Thiru Sreedaran Manure Industries, Kodungaiyur, Madavaram, Saidapet Taluk.

20. Thiru S.K.D. Ulagavi Jayapandian Well Pack Industries, 10, Karneeswaran Koil Street, Saidapet, Madras-15.





CHINGLEPUT.

21. The Chingleput District Co-operative Supply and Marketing Society Limited, No. 150, Broadway, Madras-1.

22. Tamil Nadu Fertiliser, Trunk Road, Poonamallee, Madras-56.

23. Madurantakam Co-operative Sugar Mills, Madurantakam (Chingleput District).

24. Carnatic Fertilisers, Vallipuram P.O. (via) P. V. Kalathur, Chingleput Distrtct.

25. Thiru E. M. Swaminathan, Podoturpet, Tiruttani Taluk.

NORTH ARCOT.

26. The North Arcot District Co-operative Supply and Marketing Society Limited, No. 14, Officers Line, Vellore (North Arcot District).

27. The Tiruvannamalai Co-operative Marketing Society Limited, Tiruvannamalai (North Arcot District).

28. A. M. K. Jambulinga Mudaliar, 44, Mandy Street, Vellore (North Arcot District).

29. M. M. Abdul Kaffoor Sabib, Oriental Fertilisers, 69, V. Kota Street, Peranampet, Gudiyatham Taluk (North Arcot District).

30. Thiru A. Jayaram Reddiar, 1, Tindivanam Road, Tiruvannamalai (North Arcot District).

SOUTH ARCOT.

31. Kumar Manure Mixing Works, No. 2, Imperial Road, Cuddalore O. T. (South Arcot District).

32. The South Arcot District Co-operative Supply and Marketing Society Limited, Cuddalore N.T. (South Arcot District.)

33. Babji Sahib and Company, No. 31, Mahatma Gandhi Road, Panruti (South Arcot District).

34. The Tiruvannainallur Co-operative Marketing Society Limited, Tiruvannainallur (South Arcot District).

35. V. Ramalingam and Sons, Gemini Fertilisers, Sivanandapuram, Cuddalore (South Arcot District).

36. Thiru Govindarajulu Gopalakrishnan Mills, Kallakurichi (South Arcot District).

37. Messrs. Panruti Fertilisers, 30, Padavattamman Koil Street, Panruti (South Arcot District).

38. Messrs. T. R. Rajamanickam Chetty, 501, Jawaharlal Nehru Street, Tindivanam (South Arcot District).

39. Thiru E. L. Navaneethan Chettiar and sons, Meenakshi Talkies, Tindivanam (South Arcot District).

MADURAI.

40. A. P. V. Sons, No. 13, Swami Sannadhi Lane, East Masi Street, Madurai-1.

41. The Madurai District Co-operative Supply and Marketing Society Limited, No. 31, Vengalakudi Street, Madurai-1.

வைத்துத்தான் முடிவு செய்யவேண்டும் என்பது விதியல்ல. ஆங்
காங்கு இருக்கக்கூடிய கல்வி அதிகாரிகள், வட்டார வளர்ச்சி
அதிகாரிகள் 300க்கும் மேற்பட்ட மக்கள் தொகை இருக்கிறது
என்று தெரிந்தால், ஊராட்சி ஒன்றிய தீர்மானத்துடன் புதிய
ஆரம்பப்பாடசாலையை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துக்கொள்
வார்கள். கருத்து வேறுபாடுகளினால் முன்பு அங்கீகாரம் அளிக்கப்
படாதிருந்த இடங்களில் எல்லாம் பாடசாலை ஏற்பட இப்போது
அங்கீகாரம் அளிக்கப்பட்டுவிட்டது. இந்தப் பிரச்சினையில் சிக்கல்
எதுவும் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** 300 ஜனத்தொகை என்பதை 200 என்று ஆக்குவது நல்லது என்று நினைக்கிறேன். துண்டு துண்டாக கிராமங்கள் இருப்பதனால் 3 மைல், 4 மைல் என்று போகாது—200 என்று ஆக்கினால் அங்கங்கே பிள்ளைகள் படிப்பதற்கு வசதி ஏற்படும்.

அடுத்து, பெண் ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும்
திட்டம், இந்த ஆண்டு 5 லட்சம் ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொன்
னார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 25 லட்சம் என்று
நிர்ணயிக்கப்பட்டிருப்பதாகவும் படிப்படியாக அவர்களுக்கு
முறையே வீடுகள் கட்டித்தரப்படும் என்றும் சொன்னார்கள்.
கிராமங்களில் இன்று வீடுகள் கிடைப்பதுதான் கஷ்டமாக இருக்
கிறது. அதன் காரணமாகத்தான் ஆசிரியர்கள் வேலைக்கு
சேர்ந்துவிடுகிறார்களே தவிர பிறகு வீடு கிடைக்கவில்லை, அங்கே
மாற்றுங்கள் இங்கே மாற்றுங்கள் என்று வருகிறார்கள். ஆகவே
எல்லா ஆசிரியர்களுக்கும் இலவச வீட்டு வசதியைச் செய்து
கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்று, செகண்டரி கிரேட் படித்துவிட்டு இன்றும் ஹையர்
கிரேடு போஸ்டில் ஹையர் கிரேடு சம்பளம் வாங்கிக்கொண்டு பணி
புரிகிற ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அரசாங்கம் வருஷாவருஷம்
சில நூறு பேர்களைத்தான் செகண்டரி கிரேடு சம்பளத்திற்கு
மாற்றி வருகிறார்கள். அப்படியின்றி உடனடியாக செகண்டரி
கிரேடு படித்த ஆசிரியர்கள் எந்த போஸ்டில் இருந்தாலும் செகண்
டரி கிரேடு சம்பள விகிதம் பெறும்படியாகச் செய்யவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, போலீஸ்காரர்கள் மாணவர்கள் பிரச்சினையில் தலை
யிடுவது. பொதுவாக விவசாயிகள் பிரச்சினையாக இருந்தாலும்,
தொழிலாளர்கள் பிரச்சினையாக இருந்தாலும் போலீசார்கள்
முதலாளிகளுடைய கையாட்களாக விவசாயிகளுக்கும். தொழி
லாளர்களுக்கும் துன்பத்தை அளித்து வருவது என்பது இயற்கை
யாக இருக்கிறது. அப்படி மாணவர்கள் கிளர்ச்சி செய்தாலும்
உடனே தலையிடுவது, பிரம்பால் அடிப்பது, துப்பாக்கியால்
சுடுவது என்கிற போக்கினால் மாணவர்கள் இந்த அரசின் மீது





அதிருப்தி அடைந்து வருகிறார்கள். ஆகவே இந்த அரசாங்கம் இனி மாணவர்கள் கிளர்ச்சியில் போலீசார் தலையிடக்கூடாது என்கிற உத்தரவைப் போடவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. ஆர். நாகசுந்தரம் :** பேரவை துணைத்தலைவர் அவர்களே, தமிழக அரசின் வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் அரசு உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு கடந்த இருபதாண்டுக் கோரிக்கைகளான வீட்டு வாடகைப்படி, பண்டிகை முன்பணம் இலவச மருத்துவ வசதி, கைத்தறி துணி வாங்குவதற்கு உதவி, திருமணக் கடன், மலைப்பகுதி ஆசிரியர்களுக்கு 'குளிர்காலப்படி', ஓய்வு ஊதியத்தை உயர்த்தியது, ஓய்வு ஊதிய விதியைத் தளர்த்தியது ஆகியவற்றை நிறைவேற்றித் தந்த அரசுக்கு நாட்டில் உள்ள ஆசிரியர் சங்கங்கள் தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறார்கள்; பல கடிதங்களையும், தந்திகளையும், நன்றித் தீர்மானங்களையும் நாள்தோறும் அனுப்பி வருகிறார்கள் என்கிற செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் நாட்டில் உள்ள கைத்தொழில் ஆசிரியர்கள் 1962-ஆம் ஆண்டு முதல் நடுத்தரப்பள்ளிகளில் மாதம் 30 ரூபாய் மட்டும் (பஞ்சப்படி இல்லை) வாங்கிக்கொண்டு அல்லல்படுகிறார்கள். இவர்கள் எண்ணிக்கை அதிகம் இல்லை. பள்ளிக்கு ஒருவர்தான் இருப்பார். ஆக இவர்களுக்கு அதிகமாகச் செலவு ஆகப்போவதில்லை. அன்புகூர்ந்து 1962-க்கு முன் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்ததைப்போல ரூ. 65-1-70-2-80 என்ற விகிதத்தில் அவர்களை நியமிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

அரசு உதவி பெறும் தனியார் உயர்நிலைப் பள்ளிகளில் வேலை பார்க்கும் அலுவலகச் சிப்பந்திகளுக்கு (நான்—டீச்சிங் ஸ்டாப்) அங்கேயே வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்கு உள்ளதுபோல பென்ஷன், விடுமுறை சட்டதிட்டங்கள் (லீவ் ரூல்ஸ்) முதலியன தந்து உதவவேண்டும் என்று நமது அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சிராப்பள்ளி கடந்த 25 ஆண்டுகளாக ஒரு கல்வி நகரமாக இருந்தும் தொழில் நகரமாகிய மதுரையில் பல்கலைக்கழகம் ஏற்பட்டிருக்கிறதே தவிர திருச்சியில் ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்படவில்லை. எட்டு கல்லூரிகள் திருச்சியில் இருந்தும் அங்கு ஒரு பி.டி. அல்லது பி.இ. என்ற பட்ட ஆசிரியப் பயிற்சிப் பள்ளி இல்லாதது ஒரு பெரிய குறை. அன்புகூர்ந்து இவைகளை உடனடியாக நிறுவவேண்டுகிறேன்.

தமிழகத்தில் டிப்ளமோ பெற்ற பொறியாளர்களுக்கு மட்டும் மேலே படிக்க வசதி செய்து கொடுக்கப்படவில்லை. அரசு ஒப்புக்கொண்டும் முன்னாள் சர்வகலாசாலை துணைவேந்தர் ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால் தற்பொழுது தமிழக அரசு கொள்கை அளவில் இதை ஒப்புக்கொண்டு வரவு-செலவுத் திட்டத்திலும் கோவை, சென்னை, ஆகிய இடங்களில் சுமார் 180 டிப்ளமோ என்சினியர்கள்

87. The Mettur Fertiliser Company Limited, Sambandam Mudaliar Road, R. S. Puram (Coimbatore District).

88. The Fertilisers and Chemicals Travancore Limited, 130, Avanashi Road, Coimbatore-1.

89. The Indian Commercial Syndicate, Mettupalayam Road, Coimbatore.

90. The Tiruppur Co-operative Sale Society Limited, Kamaraj Road, Tiruppur-4.

91. The Premier Fertilisers, 8, Rondy North-South Road, R.S. Puram, Coimbatore.

92. The Coimbatore Fertilisers Company, 27|9, Cysial street, Coimbatore-1.

93. The Coimbatore Chemicals and Fertilisers Limited, Mettupalayam Road, Coimbatore-11.

94. The Sulur Co-operative Marketing Society Limited, Sulur P.O., (Coimbatore District).

95. V. V. Ramasawamy Mudiliar, Karamadai (Coimbatore District).

96. Gobichettipalayam Co-operative Marketing Society Limited, Gobichettipalayam (Coimbatore District)

97. The Tudiyalur Co-operative Agricultural Services Limited, Tudiyalur P.O., Coimbatore-11.

98. The Mettupalayam Co-operative Marketing Society Limited, Mettupalayam.

99. Parambikulam Fertilisers, 29, Ansari Street, Pollachi (Coimbatore District).

100. T. Stanes and Company Limited, 6|23-24, Race Course Road, Coimbatore.

101. Palladam Fertiliser Company, Palladam, Coimbatore District.

102. Khamadhenu Fertiliser Company, Coimbatore.

103. S. D. Kuthubi Alam, 39, Banjoor Street, Coimbatore.

104. The Coimbatore District Central Co-operative Supply and Marketing Society Limited, Post Box No. 5, R. S. Puram (Coimbatore District).

105. Messrs. Pierce Leslie and Company, Box No. 1333, Race Course Road, Coimbatore-18.

106. Sri C. R. Ramanathan, Post Box No. 9, 7|21, Bazaar Street, Udumalpet, Coimbatore District.

107. Pollachi Co-operative Marketing Society Limited, Pollachi, (Coimbatore District).

108. Perundurai Co-operative Marketing Society Limited, Perundurai (Coimbatore District.)

109. The Agricultural Trading Corporation, Mettupalayam, Coimbatore-11.

110. B. N. Elias and Company (Private) Limited, Sundaram Layout, Tiruchi Road, Coimbatore-1.

111. The Tamil Nadu Fertiliser Company, Singanallur, Coimbatore-5.



112. A. K. Moorthy and Company, 132, Dharapuram Road, Coimbatore.

113. Coimbatore Pioneer Fertilisers, Pioneer House, Peelamedu (Coimbatore District).

114. Thiru Hussain Baig, 13|42, West Periaswamy Road, R.S. Puram, Coimbatore District.

115. The Udumalpet Co-operative Marketing Society Limited, Udumalpet (Coimbatore District).

116. The Amaravathi Co-operative Sugar Mills, Krishnapuram, Coimbatore District.

117. The Palladam Co-operative Marketing Society Limited, Palladam, Coimbatore District.

118. Jayabharathi Fertilisers, Gandhipuram, Coimbatore District.

119. Tiruppur Fertiliser Corporation, Post Box No. 55, Kangayam Road, Tiruppur-4.

120. A. V. Krishnaswami Chettiar, 26, Kalingarayar Street, Pollachi (Coimbatore District).

121. T. Kaliappa Chettiar, Venus Fertiliser Company, Pollachi (Coimbatore District).

122. Sakthi Sugar Mills Limited, 72, Senguptha Road, R.S. Puram, Coimbatore.

123. Messrs. P. Kanniappan and Company, Hardware Merchant, 24, Bazaar Street, Udumalpet, Coimbatore District.

124. Thiru R. C. Rengaswamy Chettiar, Chettipalayam P.O. (via) Podanur (Coimbatore District).

125. Thiru A. M. S. Jamal, 3|6, Meenakshi Sundaram Street, Udumalpet (Coimbatore District).

126. Thiru D. Shanmugam, Palani Gaunderpalayam, Pasur P.O., Erode Tank (Coimbatore District).

127. The Truthful Fertilisers, 49|B|21, Kamaraj Road, Tiruppur-4 (Coimbatore District).

128. Thiru Ganapathy Fertilisers, 8|76 B, Muthur Road, Vellakoil (via) Coimbatore.

129. Thiru U. K. Doraiswamy Gounder and Company, Krishna Fertilisers, 242, Netaji Road, Erode, Coimbatore.

TIRUCHIRAPPALLI.

130. Amaravathi Fertiliser Company, Post Box No. 3, Karur (Tiruchirappalli District).

131. Tiruchi Fertilisers, No. 11, Diamond Jubilee Buildings, Mylam, Tiruchirappalli-8.

132. The Tiruchirappalli District Co-operative Supply and Marketing Society Limited, L.N.P. Buildings, 1, Old Goods Shed Road, Tiruchirappalli.

133. Thuraiyur Co-operative Supply and Marketing Society Limited, Thuraiyur (Tiruchirappalli District).

134. Karur Fertilisers Company, Karur (Tiruchirappalli District).

42. The Pandyan Fertiliser Company, 24, Jadmuni Koil Street, Madurai-1.

43. A. Bose and Company, Chennapillai Lane, Amman Sannathi, Madurai.

44. Anil Fertilisers and Allied Products, Swami Sannadhi Lane, Madurai-1.

45. The Melur Co-operative Marketing Society Limited, Melur (Madurai District).

46. The National Co-operative Sugar Mills Limited, Aanganallur, Madurai District.

47. A. V. S. Soundarapandian, Son of Shanmugha Nadar, 32, Kuruvikaran Salai Road, Madurai-9.

48. Thiru V. S. Amanullakhan and Company, 25, Gurusami Asari Lane, Nagalnagar, Dindigul-3, Madurai District.

49. The Srivilliputtur Co-operative Marketing Society Limited, Srivilliputtur (Ramanathapuram District).

50. The Virudhunagar Agricultural Improvements Co-operative Society Limited, Virudhunagar (Ramanathapuram District).

51. Agnar Effort, Srivilliputtur (Ramanathapuram District).

52. R. T. Rajan and Bros., Virudhunagar (Ramanathapuram District).

53. Selvam Industries, 125, Main Road, Kariapatti, Aruppukottai Taluk (Ramanathapuram District).

54. Ramanad District Co-operative Supply and Marketing Society Limited, 39|40, Dhavadi Agraharam, Madurai-1.

TIRUNELVELI.

55. Krishna Trading (Fertiliser Company), No. 9, Kalvetri Lane, Tirunelveli-6.

56. Arasan Fertiliser Company Private Limited, Padambur (Tirunelveli District).

57. S. G. R. Subramaniam, Melacheval P. O., via Pattamadai, Tirunelveli.

58. Sri D. Hariharan, Proprietor, Sri Vigneswara Manure Mixing Firm, Kadayanallur P.O., Tenkasi Taluk, Tirunelveli District.

59. Sri A. Ramaswamy, No. 64-A, Mela Ranganathapuram Street, Tuticorin.

60 Murugan Manure Works, Palayamcottai, Tirunelveli District.

61. Thiru M. Edison and Company, 181, North Cotton Road, Tuticorin-1.

62. The Tirunelveli District Co-operative Supply and Marketing Society Limited, Tuticorin-1.

63. Thiru R. Vaidya Sagar, B.SC., B.L., Chairman, Tiruchendur Panchayat Union, Tiruchendur (Tirunelveli District).

64. Rajan Trading Fertilisers, No. 6, Kaluvettai Mudukku, Tirunelveli-6.

1969-பிப்ரவரித் திங்களில் சென்னையில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே நிகழ்ந்த முதல் போட்டிக்கான செலவு குறித்து கல்கத்தாவில் உள்ள இந்திய பள்ளிகள் விளையாட்டுக் கழகத்திற்குத் தனிப்பட்ட. மானியமாக ரூ. 2,500 கொடுக்கப்பட்டது.

### ஆசிரியர்களுக்கான வசதிகள், நலன்கள் சலுகைகள்.

அரசுப் பள்ளிகளிலும், மானியம் பெறும் பள்ளிகளிலும், உள்ளாட்சி மன்றப் பள்ளிகளிலும் பணிபுரியும் ஆசிரியர்களின் பணிநிலைகளை மேம்படுத்துவதற்கான அவசியம் பற்றி அரசு நன்கு அறியும். ஆசிரியர்களின் பணிகளைச் சீரமைத்து அவர்களது பணிநிலைமைகளை மேம்படுத்தும் நோக்குடன் அரசு 1969-70-இல் குழு ஒன்றை நியமித்துள்ளது. இம்மாநிலத்தில் உள்ள பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள், ஆசிரியரல்லாத பிற பணியாளர்கள் ஆகியோரின் பணி நிலைகள் குறித்த கூறுகள் அனைத்தையும் ஆய்வு செய்யுமாறு இக்குழு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இக்குழுவின் அறிக்கை கிடைத்த உடன் அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளும்.

உள்ளாட்சி மன்றப் பள்ளி ஆசிரியர்களும் மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களும் வருங்கால வைப்பு நிதித் திட்டம்—. சேமநலநிதித் திட்டம்—ஓய்வூதியத் திட்டம் ஆகிய மூன்று திட்டங்களின் பலனையும் தற்போது துய்த்து வருகின்றனர். குடும்ப ஓய்வூதியத் திட்டம் மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கும், உள்ளாட்சி மன்ற ஆசிரியர்களுக்கும் முன்னரே நீட்டிக்கப்பட்

டுள்ளது. குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின் நன்மைகளைப் பெறுவ தற்காக ஆசிரியர் ஒருவர் குறைந்த அளவு இருபது ஆண்டுக்கால அளவாவது பணிபுரிந்திருக்க வேண்டும். என்ற நிபந்தனை முன்னர் விதிக்கப்பட்டிருந்தது. குறைந்த அளவு பணிக்கால அளவை ஐந்து ஆண்டுகளாகக் குறைத்து நிபந்தனையைத் தளர்த்தி 1969-70-இல் இத் திட்டம் ஆசிரியர் பலருக்கு நன்மை பயக்கும் வகையில் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. ஓய்வூதியத் திட்டம், குடும்ப ஓய்வூதியத் திட்டம் ஆகிய திட்டங்களின் நன்மைகள் தொடக்கப் பள்ளிகளில் பணிபுரியும் உடற் பயிற்சி இயக்குநர்களுக்கு 1969 ஏப்ரல் ஒன்றாம் நாள் முதற்கொண்டு நீடிக்கப்பட்டது.

ஆசிரியர் நலனுக்கான தேசியக் கழகம், பணியிலிருந்து ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்குத் தொடர்ந்து உதவி வருகிறது. தகுதி உள்ள ஆசிரியர்களுக்கும், வறுமையுற்ற அவர் தம் குடும்பத் தினருக்கும் இக்கழகத்தின் மாநிலச் செயற்குழு திங்கள் தோறும் குறிப்பிட்ட தொகை அளிப்பதுடன் ரொக்கத் தொகைகளையும் அளிக்கிறது. பணியிலிருந்து ஓய்வு பெற்று, வருவாயின்றித் தவிக்கும் ஆசிரியர்களுக்கு அல்லது ஆசிரியர்களின் விதவை களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 30 முதல் 60 வரை தொகை வாங்கப் படுகிறது. ஆசிரியர்களின் குடும்பத்தினருக்குத் தகுதியான நேர்வுகளில் மருத்துவச் செலவுகள், திருமணச் செலவுகள் போன்ற செலவுகளுக்கு அதிக அளவு ரூ. 1,500 வரையில் ரொக்கத் தொகைகளும் வழங்கப்படுகின்றன. பாராட்டத்தக்க பணிக்காக ஆசிரியர்களுக்கு ரூ. 1,000 முதல் ரூ. 2,000 வரை கருணை மானியங்களும் வழங்கப்படுகின்றன. இந்த நிதியின்கீழ் ரூ. 25.99 லட்சம் வசூலாகியுள்ளது. 1969-ஆம் ஆண்டு ஆசிரியர் நாள் விழா தொடர்பாக இதுவரை வசூலாகியுள்ள ரூ. 5.30 லட்சம் இதில் அடங்கும். இதுவரையில் 542 தகுதியுள்ள ஆசிரியர்களுக்கு உதவித் தொகையாக ரூ. 2.02 லட்சம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகரிலும், மதுரையிலும் அவற்றைச் சுற்றயுள்ள நகர ஈட்டுபடி வழங்கப்படத்தக்க பகுதிகளிலும், பணிபுரியும் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் 7½ சதவீத நகர ஈட்டுப்படி யம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கும் தொடர்ந்து வழங்கப்படு கிறது.

ஆசிரியர்கள் தங்கள் தகுதிகளை அதிகரித்துக்கொள்ள ஊக்க மளிக்கும் வகையிலும் உயர்தரக் கல்வித் தகுதிகளைப் பெற்றுள்ள ஆசிரியர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையிலும் அவர்களுக்கு இரு ஊதிய உயர்வுகளை முன்னதாகவே வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

பாராட்டத்தக்க வகையில் பணிபுரியும் தொடக்கப்பள்ளி ஆசிரி யர்களுக்கு மாநில அரசு பரிசு வழங்கப்படுவது போல் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் ஆண்டுதோறும் 90 பரிசுகள் வழங்கப்



படும். மாநிலத்திலுள்ள 45 கல்வி மாவட்டங்களில் ஒவ்வொன் றிலிருந்தும் இரண்டு ஆசிரியர்கள் மேற்படி பரிசுக்காகத் தேர்ந் தெடுக்கப்படுவர்.

1—4—1966 முதல் அரசு மேற்கொண்டுள்ள மாவட்ட வாரிய உயர்நிலைப் பள்ளிகளின் ஆசிரியர்களை அரசுப் பணியில் இணைத்த தனால் சிக்கல்கள் பல எழுந்தன. அரசு (வாரிய) உயர்நிலைப் பள்ளி கள் என அழைக்கப்படும் சுமார் 1,500 உயர்நிலைப் பள்ளிகள் தற் போது நடந்து வருகின்றன. இந்தப் பள்ளிகளில், பல பதவித் தரத்திலுள்ள 26,000-க்கு மேற்பட்ட ஆசிரியர்களும், சுமார் 6,000 ஆசிரியர் அல்லாத பிற பணியாளர்களும் பணியாற்றி வருகின்றனர். இத்தகைய பள்ளிகளிலுள்ள பணியாளர் அனைவரையும் 1—4—1966 முதல் அரசுப் பணியில் எடுத்துக்கொள்ள வேண்டும் என அரசு தற்போது முடிவு செய்துள்ளது.

"தமிழ்நாடு சார்நிலைப் பணி" ( M.E.S.S.B.) என்று ஒருத் தனி பதவித் தரம் அமைக்கப்படுவதற்காக 1966-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதிக்கு முன்னர் ஏற்படுத்தப்பட்ட பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள்—தலைமை ஆசிரியர்கள், தனிப் பதவித் தரமாக வைக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பதவித் தரம் மாவட்ட அடிப்படையில் அமைக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டப் பதவித் தரமும் தனிப் பிரிவாக அமையும். இந்தப் பதவித்தரத்தின் கீழ்வரும் ஆசிரியர்கள்—தலைமை ஆசிரியர்கள் இதுவரைப் பெற்றுவரும் சம்பளம், ஓய்வூதிய நலன்களைத் தொடர்ந்துபெறத் தகுதியுடையவராவர். மேலும் அவர்கள் ஏனைய பணி நிபந்தனைகளுக்கும் உட்பட்டவராவார். 1—4—1966-க்குப்பின் திறக்கப்பட்ட கழகப் பள்ளிகள். அரசினர் பள்ளிகள் யாவும், தமிழ் நாடு கல்வி சார்நிலைப்பணியின் கீழ் வரும் ஆசிரியர்களால் நடத்தப்படும் இத்தகைய ஆசிரியர்கள், பணி நிபந்தனைகள், ஓய்வூதிய நிபந்தனைகள் குறித்து ஓர் அரசுப் பணியாளர்குரிய எல்லாச் சிறப்புரிமைகளையும் பெற உரியவ ராவர்.

ஆசிரியப் பணியாளரைப்போலவே, ஆசிரியரல்லாத பணியா ளரும் ஒரு தனிப் பதவித்தரத்தில் வைக்கப்படுவர். இது குறித்து தமிழ் நாடு அரசு அலுவலர் தேர்வுக் கழகத்துடன் கலந்துகொண்டு விரைவில் ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

### அரசுதவி பெறும் பள்ளி ஆசிரியர்களுக்குச் சலுகைகள்

அரசு, உள்ளாட்சி மன்றப்பள்ளி ஆசிரியர்கள் அனுபவித்து வரும் நலன்கள் தங்களுக்கும் அளிக்கப்படவேண்டுமென்று மானி யம் பெறும் பள்ளி ஆசிரியர்கள் அரசுக்கு முறையிட்டு வருகின்ற னர். அவர்தம் வேண்டுகோள் சிறிது காலமாகவே பரிசீலனையில் இருந்து வருகிறது.

பயிர்வகைத் திட்டத்தில் பங்குறும் குடியானவர்களுக்கு மட்டும் நடைமுறைப் பயிற்சிக்கல்வி அளிக்க இத் திட்டத்தின் கீழ் 60 நிலையங்கள் நடத்தப்பட்டன. அதே பகுதியில் மீண்டும் 1969 நவம்பரிலிருந்து இதைப் போன்ற வகுப்பு நடத்தப்படுகிறது. நடைமுறைப் பயிற்சிக் கல்வித் திட்டத்தை "யூனெஸ்கோ" உதவி யுடன் இம்மாநிலமெங்கும் விரிவுபடுத்தவும் கருதியுள்ளது. இவ்வாண்டில் இத்திட்டத்தின்கீழ் ஒரு முழு மாவட்டம் எடுத்துக் கொள்ளப்படலாம். இது பற்றிய விவரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

ஏனைய கல்வி ஏற்பாடுகள் கல்வி பரப்புவதில் சமுதாயத்தினர் பங்கு.—கிராமங்களிலும், சிறு நகரங்களிலும் உள்ள பள்ளிகளின் மேம்பாட்டுக்காக உள்ளூர் மக்களிடமிருந்து பொருளுதவி திரட்டும் இயக்கம் தொடர்ந்து செயல்படுகிறது. இம்மாநிலத்தில் இதுவரை 424 பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நிகழ்ந்துள்ளன. இத்திட்டத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற சொத்துடைமைகளின் மொத்த மதிப்பு 1,039 லட்சத்திற்கு மேலிருக்கும். சீரமைப்புத் திட்டத்தின் கீழ் பள்ளிக் கட்டிடங்கள் பலவும் ஆசிரியர்க்கான வீடுகளும் கட்டப்பட்டுள்ளன.

## III. கல்லூரிக் கல்வி.

### 1970–71 திட்டம்.

இப்போதுள்ள கல்லூரிகளைப் பேணவும் அவற்றை மேலும் மேம்படுத்தி கல்லூரிக் கல்விக்கான வசதிகளை விரிவாக்கவும் 1970–71 வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 518·24 லட்சம் செலவுக்கு வகை செய்துள்ளது.

"28. கல்வி" என்பதின் கீழ் 1970–71 வரவு-செலவுத் திட்டத்தில் கல்லூரிக் கல்விக்காக ஒதுக்கியுள்ள தொகை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| கணக்குத் தலைப்பு. (1) | திட்டத்தில் சேராதவை. (2) | திட்ட வேலைகள். (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| 1. தமிழ்நாட்டில் பல்கலைக் கழகங்களுக்கு மானியம் வழங்குதல் .. | 44·90 | 23·61 | 68·51 |
| 2. கல்லூரிக் கல்வி நிறுவனங்கள் .. .. | 377·66 | 44·37 | 422·63 |
| | 422·56 | 67·98 | 490·54 |
| 3. பொது நிர்வாகம் (தேசியக் கடன் நீங்கலாக) உதவிச சம்பளம் நூலகங்கள் பலவகை .. .. | 27·06 | 0·64 | 27·70 |
| மொத்தம் (திட்டத்தில் சேராதவை திட்ட வேலைகள்) .. .. .. | 449 62 | 68·62 | 518·24 |



திட்டத்தின் கீழ் ஒதுக்கிய ரூ. 68.62 லட்சத்தில் நிறுவனங்கள் பேணப்படுவதற்கான நிதி ஒதுக்கம் அடங்கும். மேலும் 1969-70-ல் தொடங்கிய பாட முறைகளுக்கும் புதிய, அரசினர் கல்லூரிகள், புதிய அல்லது கூடுதல் பட்ட வகுப்புகள், பட்ட மேற் படிப்பு வகுப்புகள் பணி இருப்புப் பயிற்சி, எம்.ஏ. (ஆங்கிலம்) வகுப்பு மாணவர்களுக்கு படிப்பு உதவித் தொகைகள், உடல் ஊனமுற்ற மாணவருக்கு படிப்பு உதவித்தொகைகள் ஆகிய வற்றுக்கும், இயக்குநர் அலுவலகத்தில் கூடுதல் பணியாளரை நியமிப்பதற்கும் ஒதுக்கிய தொகைகளும் இந்த நிதி ஒதுக்கீட்டில் அடங்கும்.

### 1969-70-ல் அடைந்த முன்னேற்றம்.

#### (அ) 1969-70-ல் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்த்தல்.

பொதுவாக 1969-70-ல் கல்லூரிப் புகுமுக வகுப்பில் சேர விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை எப்போதும் போலவே அதிகமாகவே உள்ளது. இட நெருக்கடியை ஈடு செய்ய, இட வசதி கிடைப்பதைப் பொறுத்து அவசியமான இடங்களில் எல்லாம் அரசினர் கல்லூரிகளும் அரசினர் மானியம் பெறும் கல்லூரிகளும் கூடுதல் பிரிவுகளைத் திறக்க மாநிலத்திலுள்ள பல்கலைக் கழகங்கள், கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கியுள்ளன. இத்தகைய ஏற்பாடுகளுடன் (ஆறு அரசினர், மானியம் பெறுபவை எட்டு) பதினான்கு புதிய அரசினர், மானியம் பெறும் கலை அறிவியல் கல்லூரிகளும் திறக்கப்பட்டதால் கல்லூரியில் இடம் பெறுவதில் உள்ள போட்டி கணிசமான அளவுக்குக் குறைந்தது.

எல்லாக் கல்லூரிகளிலும் புதுமுக வகுப்பில் கிடைக்கும் இடங்களின் மொத்த எண்ணிக்கை சுமார் 71,000 ஆக இருந்தது. ஆனால், கல்லூரியில் சேர்ந்த மாணவர்களின் மொத்த எண்ணிக்கை சுமார் 64,000 ஆகும்.

#### (ஆ) 1969-70-ல் தொடங்கிய புதிய கல்லூரிகள்.

கல்லூரிக் கல்வி வசதியின் தேவை பெருகிவருவதை ஈடு செய்யும் வகையில் 1969-70-ல் அரசினர் தங்கள் நிர்வாகத்தின்கீழ் ஆண்களுக்கு நாலு, மகளிர்க்கு இரண்டு ஆக மொத்தம் ஆறு புதிய கலைக் கல்லூரிகளைத் திறந்தனர். அவையாவன :—

(1) அரசினர் கலைக் கல்லூரி (ஆண்கள்), நந்தனம்.

(2) அறிஞர் அண்ணா அரசினர் கலைக் கல்லூரி (ஆண்கள்), முசிறி.

(3) அரசினர் கலைக் கல்லூரி (ஆண்கள்), மேலூர்.

(4) திரு. ஏ. கோவிந்தசாமி அரசினர் கலைக் கல்லூரி (ஆண்கள்), திண்டிவனம்.

[1970 மார்ச் 11

ஆசிரியர்களின் பணி நிலைமைகள் பற்றி ஆய்வு செய்ய குழு ஒன்றை அரசு நியமித்தது. இக்குழுவின் அறிக்கை விரைவில் எதிர்ப்பார்க்கப்படுகிறது. குழுவின் அறிக்கை கிடைத்ததும் மேற்கொண்டு ஏற்பாடுகள் எடுத்துக்கொள்ளப்படும். இதற்கிடை யில் மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்குக் கீழ்காணும் சலுகை கள் அளிக்க அரசு ஒப்புக் கொண்டுள்ளது. இவை 1970-71 முதல் நடைமுறைக்கு வரும்.

(a) மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களும் அவர்தம் குடும்பத் தினரும், அரசு மருத்துவ மனைகளில் இலவச மருத்துவ வசதி பெற உரியவராவர். இச்சலுகையின் மூலம் நலனடையும் ஆசிரியர்கள் சுமார் 72,000 ஆசிரியர்கள் ஆவர்.

(b) உள்ளாட்சிப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குப் பொருந்தும் வீதங்களிலேயே மானியம் பெறும் பள்ளி ஆசிரியர் களுக்கு வீட்டு வாடகை கொடுக்கப்படும். எந்த எந்த இடங்களில் பணியாற்றி வருகின்றனரோ, எவ்வளவு சம்பளம் வாங்கு கின்றனரோ, அவற்றைப் பொறுத்து அரசுப் பணியாளருக்குக் கொடுக்கப்படுவதைப் போலவே, அதாவது ரூ. 3 முதல் 20 வரை, வீட்டு வாடகை பெறுவதற்கு உரியவராவர். இச்சலுகையின் மூலம் 37,000 ஆசிரியர்கள் நலனடைவர்.

(c) மானியம் பெறும் பள்ளியாசிரியருக்கு பண்டிகை முன் பணம் கொடுக்கப்படும். கைத்தறி ஆடைக்கும் உதவியளிக்கப் படும். கெற்காகத் தங்களது வருங்கால வைப்பு நிதியில் உள்ள தொகையில் 50 சதவிதத்திற்கு மேற்படாமல் பணம் வாங்கவும் அனுமதிக்கப்படுவர்.

(d) மானியம் பெறும் பள்ளிகள் அனைத்திலும் உள்ள ஆசிரியர் கள் அனைவருக்கும் ரூ. 500-க்கு மேற்படாத திருமணக் கடனும் வழங்கப்படும். இக்கடன் 60 தவணைகளில் திருப்பித் தரத்தக்க தாகும்.

(e) அறிக்கையிடப்பட்ட மலைப் பகுதிகளில் மானியம் பெறும் பள்ளியாசிரியர்களுக்கு ஓராண்டில் நான்கு திங்கள் வரை குளிர் காலப் படி வழங்கப்படும். இச்சலுகையில் 2,570 ஆசிரியர்கள் பயன்பெறுவர்.

## சிறப்புப் பள்ளிகளும் பாடமுறைகளும்

1969-70-ம் ஆண்டில் சிவகங்கையில் குருடர் பள்ளி ஒன்று திறக்கப்பட்டது. குருடர்களுக்கும், செவிடர்களுக்கும் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான இரு பயிற்சி வகுப்புகள் 1970-71-ல் ஏற்பாடு செய்யப்படும்.



1970 மார்ச் 11]

குருடர்களுக்குக் கல்வி கற்பிப்பதற்காக, ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பொருட்டு (பம்பாய், டில்லி, மேற்கு வங்காளம்) மூன்று வட்டாரப் பயிற்சி நிலையங்களை இந்திய அரசு ஏற்கனவே ஏற்படுத்தியது. தமிழ்நாடு அரசு ஆலோசனையின் பேரில், 1969-70-லிருந்து பூவிருந்தவல்லியில் குருடர்களுக்கான அரசினர் பள்ளியில் நான்காவது பயிற்சி நிலையம் தொடங்கவும் தற்போது இந்திய அரசு அனுமதித்துள்ளது. இந்நிலையம் இந்திய அரசிடம் முழு நிதி உதவியும் பெறும்.

குருடர்கள் நல அனைத்து நாட்டு மன்ற நான்காவது பொதுக் கூட்டம் 1969 அக்டோபரில் டில்லியில் நடைபெற்றபோது, பொருட் காட்சியில், பூவிருந்தவல்லி, குருடர்க்கான அரசினர் பள்ளி கலந்துகொண்டது.

இந்திய அரசின் உதவியைக்கொண்டு, தென்னக மாநிலங்கள் நான்கின் தேவைகளைக் கவனிக்க, பூவிருந்தவல்லியில் உள்ள குருடர் பள்ளி முதல்வரின் நிர்வாகப் பொறுப்பின் கீழ் "பிரெய்ல்" முறை அச்சகம் ஒன்று ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த அச்சகம் மன நிறைவுறும் வகையில் செயல்பட்டு வருகின்றது.

பாலர் நிலைக்குப் பின்னர், தொடர்ந்து கல்விபெற இயலாத 11—14 வயதுச் சிறுவர்களுக்குக் கல்வி, மற்றும் கற்கையிலே தொழில் பயிலும் வசதியும் ஏற்படுத்திக் கொடுக்க, இந்திய அரசு வகுத்த திட்டத்தின்கீழ் தொழில் பயிற்சிக்கு முற்பட்ட கல்விப் பயிற்சி நிலையங்கள் ஆறு ஏற்படுத்தப்பட்டன. இவை மத்திய அரசு உதவியுடன் மன நிறைவளிக்கும் வகையிலேயே செயல்படு கின்றன. சாதனங்களும் கருவிகளும் "யூனிசெப்" நிறுவனத் தாலே வழங்கப்பட்டுள்ளன.

இம்மாநிலத்தில் முதியோர் கல்லாமையை அறவே போக்குவதற் கான ஓர் ஏற்பாடாக, 1969-70-ல் 500 முதியோர் கல்வி நிலையங்களைத் திறக்க அரசு அனுமதித்தது. இந்நிலையங்களில் சேர்ந்துள்ள குறைந்தது 10,000 முதியோர் நான்கு திங்களில் கல்வி பெறுவதற் கான இத் திட்டம் ஒரு முன்னோடித் திட்டமாகும். ஆசிரியர்கள் திட்டமிட்டுச் செயல்படவும், சீரிய முறையில் கற்பிக்கும் தொழிலை நடத்தவும் 1969-70-ல் ஆசிரியர்களுக்கு மறு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. இத்திட்டத்தின்கீழ், மதுரை, திருச்சி, செங்கற் பட்டு, திருநெல்வேலி, இராமநாதபுரம், வட ஆர்க்காடு, தருமபுரி, தஞ்சாவூர், தென் ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் மறுபயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

இந்திய அரசு உதவியோடும், மற்றும் "யுனெஸ்கோ", "எஃப்.ஏ.ஓ." போன்ற அனைத்து நாட்டு நிறுவனங்களின் உதவி யுடனும், கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டத் தில் 1969 மார்ச்சில் நடைமுறைப் பயிற்சிக் கல்வித் திட்டம் அமைக்கப்பட்டது. மேற்சொன்ன பகுதியில், மிகு பயன் விளையும்

(5) அரசினர் கலைக் கல்லூரி (மகளிர்), நாமக்கல்

(6) கலைஞர் கருணாநிதி அரசினர் கலைக் கல்லூரி (மகளிர்), புதுக்கோட்டை.

மேற்சொல்லியவற்றுடன் தனியார் முகவர் அமைப்புகளும், எட்டு கலைக் கல்லூரிகளைத் திறந்தன. (ஆண்கள் கல்லூரி—7, மகளிர் கல்லூரி—1), அவையாவன :—

(1) ஆர்.பி.சி.சி. ஹிந்துக் கல்லூரி, பட்டாபிராம்

(2) ஹிந்து தேசியக் கல்லூரி, சிறுகளூத்தூர், சென்னை.

(3) யாதவர் கல்லூரி, மதுரை.

(4) அம்பை கலைக் கல்லூரி, அம்பாசமுத்திரம்.

(5) ஸ்ரீ ஐயப்பா கலைக் கல்லூரி, ஆலூர், கன்னியாகுமரி மாவட்டம்.

(6) மஸ்ருல் உலூம் கல்லூரி (ஆண்கள்), ஆம்பூர்.

(7) பூம்புகார் கலைக் கல்லூரி, மேலையூர் (சீர்காழி வட்டம்).

(8) 'எமரால்டு ஹைட்ஸ்' பெண்கள் கல்லூரி, ஆனந்தகிரி, உதகமண்டலம்.

1969-70-ல் 14 கல்லூரிகள் திறக்கப்பட்டதோடு, தமிழ் நாட்டில் உள்ள கலை, அறிவியல் கல்லூரிகளின் மொத்த எண்ணிக்கை 126-லிருந்து 140 ஆக உயர்ந்தது. (அரசினர் கல்லூரிகள் 39, மானியம் பெறும் கல்லூரிகள் 101). 1966-67-ல் கல்லூரிகளின் மொத்த எண்ணிக்கை 105 ஆக இருந்தது. (அரசினர் கல்லூரிகள் 27, மானியம் பெறும் கல்லூரிகள் 78.) கடந்த மூன்றாண்டுகளில் புதிதாகத் திறக்கப்பட்ட கல்லூரிகளின் எண்ணிக்கை 35. கலை, அறிவியல் துறைகளுக்கான 140 கல்லூரிகளோடு இம்மாநிலத்தில் உயர் கல்விக்குரிய கீழ்க்காணும் சிறப்பு நிறுவனங்களும் செயல்பட்டு வருகின்றன :—

| | |
|---|---|
| கிராம நிறுவனங்கள் .. .. .. .. | 2 |
| கீழ்த்திசைக் கல்லூரிகள் .. .. .. .. | 21 |
| உடற் பயிற்சிக் கல்விக் கல்லூரிகள் .. .. | 3 |
| சிறப்புக் கல்லூரிகள் (கருநாடக இசை, மத்தியக் கல்லூரி, கலாக்ஷேத்திரா, சென்னை சமூகப் பணிப் பள்ளி) .. .. .. .. | 3 |
| மொத்தம் .. | 29 |



(c) புதிய கல்லூரிகள்.

1968-69-ல் புகுமுக வகுப்பில் மாணவர்கள் பெருவாரியாக சேர்ந்ததன் விளைவாக, புகுமுக வகுப்பை வெற்றிகரமாக முடித்து 1969-70-ல் பட்ட வகுப்புக்கு இடம் கோரிய மாணவர்களின் எண்ணிக்கையும் கணிசமாக உயர்ந்ததுடன், பட்ட வகுப்புகளில் கூடுதல் இடங்களின் தேவை பெரிதும் உணரப்பட்டது. இந்தத் தேவையை நிறைவு செய்யக் கீழ்க்காணும் அரசினர் கல்லூரிகளில் கூடுதல் வகுப்புகள் தொடங்கப்பட்டன.

பட்ட வகுப்புகள்.

(1) அரசினர் மகளிர் கல்லூரி, கும்பகோணம்.

(2) ராஜா சரபோஜி அரசினர் கலைக் கல்லூரி, தஞ்சாவூர்.

(3) திருமகள் ஆலை அரசினர் கல்லூரி, குடியாத்தம்.

(4) அரசினர் கலைக் கல்லூரி, அரியலூர்.

(5) பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

(6) ஸ்ரீ மீனாட்சி அரசினர் (மகளிர்) கலைக் கல்லூரி, மதுரை.

(7) அரசினர் கலைக் கல்லூரி, கரூர்.

(8) அறிஞர் அண்ணா அரசினர் கலைக் கல்லூரி, செய்யாறு.

பட்ட மேற்படிப்பு வகுப்புகள்.

(1) அரசினர் கல்லூரி, சேலம்.

(2) அரசினர் கலைக் கல்லூரி, கோயம்புத்தூர்.

(3) பெரியார் ஈ.வெ.ரா. அரசினர் கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

இத்துடன் கீழ்க்காணும் அரசினர் கல்லூரிகளை 1969-70-ல் பட்ட வகுப்புக் கல்லூரிகளாகத் தர உயர்வுபடுத்திப் பட்ட வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன :—

(1) சிக்கண்ணா அரசினர் கலைக் கல்லூரி, திருப்பூர்.

(2) கொளஞ்சியப்பர் அரசினர் கலைக் கல்லூரி, விருத்தாசலம்.

(3) அரசினர் மகளிர் கலைக் கல்லூரி, தஞ்சாவூர்.

(4) அரசினர் கலைக் கல்லூரி, திருவண்ணாமலை.

(5) அறிஞர் அண்ணா அரசினர் கலைக் கல்லூரி, நாமக்கல்.

(6) திருவள்ளுவர் அரசினர் கலைக் கல்லூரி, ராசிபுரம்.

(7) அறிஞர் அண்ணா மகளிர் கலைக் கல்லூரி, வாலாஜா பேட்டை.

[1970 மார்ச் 11

மற்றும் அரசினர் கல்லூரிகளில் சிலவற்றில், பட்ட வகுப்புகளில் அனுமதித்த எண்ணிக்கையை உயர்த்தவும், பல்கலைக் கழகங்களிடமிருந்து சிறப்பு அனுமதி பெறப்பட்டுள்ளது மானியம் பெறும் கல்லூரிகளும் கூடுதல் பட்ட வகுப்புகளை 1969-70-ல் தொடங்கி உள்ளன. 1969-70-ல் இத்தகைய மானியம் பெறும் கல்லூரிகள் பட்ட வகுப்புக் கல்லூரிகளாகவும் தரஉயர்வு படுத்தப் பட்டுள்ளன.

(d) மாலைக் கல்லூரிகள்.

தங்களுடைய வாழ்க்கைப் போக்கில் சிறந்த நல் வாய்ப்புக்களைப் பெறுமுகத்தான், கல்லூரிக் கல்வியைத் துணைகோட விருப்பம் உடையோருக்கு பல்கலைக் கழகக் கல்வி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக பல கல்லூரிகளில் ஏற்கெனவே கலை, அறிவியல் துறைகளில் மாலை நேர வகுப்புகள் தொடங்கி வைக்கப் பட்டுள்ளன. 1969-70-ல் புதுக்கோட்டை, மாட்சிமை தங்கிய ராஜா கல்லூரியில் புகுமுக பாடத் திட்டத்தில் மாலை நேர வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. இப்போது மாலை நேர வகுப்புகள் நடத்தும் கல்லூரிகளின் மொத்த எண்ணிக்கை 12 ஆகும். இவற்றில் பத்து கல்லூரிகள் புகுமுக பாடத் திட்டத்திலும், பட்டம் அளிக்கும் பாடத் திட்டத்திலும் மாலை நேர வகுப்புகள் நடத்துகின்றன. 1969-70 முதற்கொண்டு, மாலைநேரப் பட்ட வகுப்புக்கு விதிக்கப்படும் கல்விக் கட்டணம் முழு நேரக் கல்லூரிப் பட்ட வகுப்புக்குப் பொருந்தும் கட்டண விகிதத்திற்குக் குறைக்கப்பட்டுள்ளது.

(e) ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள்.

ஆசிரியர் பயிற்சி கல்லூரிகளின் மொத்த எண்ணிக்கை 1969-70-லும் தொடர்ந்து 23 ஆகவே இருந்து வருகிறது. இம்மாநிலத்தில் உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றவேண்டிய பட்டதாரி ஆசிரியர்களுக்கு இவை போதுமானவை என்றே கருதப்படுகிறது. பயிற்சிக் கல்லூரிகளை மேலும் விரிவுபடுத்துவதால், பயிற்சி பெற்ற பி.டி. பட்டதாரிகளிடையே வேலை வாய்ப்பின்மை உண்டாகலாம்.

(f) பாட மொழி.

1966-67-லிருந்து புகுமுக வகுப்பிலும் (கலைகள்), 1967-68-லிருந்து பி.ஏ. வகுப்பிலும், 1968-69 முதல் புகுமுக வகுப்பிலும் (அறிவியல் பாடங்கள்) பாடமொழியாகத் தமிழ் கொண்டுவரப் பட்டுள்ளது.



1970 மார்ச் 11]

புகுமுக வகுப்பில், தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்ட கல்லூரிகளின் எண்ணிக்கை 1969-70-ம் ஆண்டில் 111 ஆக அதிகரித்துள்ளது. 1968-69-ல் இத்தகைய கல்லூரிகள் 92 தான் இருந்தன. தமிழ்ப் பயிற்சி மொழி புகுமுக வகுப்பில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 1968-69-ல் 13,784 ஆக இருக்க, இந்த ஆண்டில் அது 19,502 ஆக அதிகரித்துள்ளது. 1968-69-ம் ஆண்டில் பி.ஏ. வகுப்பில் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்ட கல்லூரிகள் 57 இருந்தன. 1969-70-ம் ஆண்டில் இக்கல்லூரிகளின் எண்ணிக்கை 94 ஆக அதிகரித்தது. இந்த வகுப்பில் 1969-70-ம் ஆண்டில் 3,739 மாணவர்கள் கல்வி பயின்றனர்.

புகுமுக வகுப்பில் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு அறிவியல் பாடமுறையைப் பயின்ற மாணவர்கள், பட்டப்படிப்பு நிலையிலும் தமிழையே பயிற்சி மொழியாகக் கொண்டு தங்கள் படிப்பை தொடர அவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில், 1969-70-ம் ஆண்டில், பி.எஸ்.சி. பட்டப்படிப்பு வகுப்பில் கணக்கியல், பௌதீகம், வேதியல், தாவரவியல், விலங்கினவியல் பிரிவுகளில் தமிழ்ப் பயிற்சி மொழித் திட்டம் கொண்டுவரப்பட்டது. சென்னை மாநகரில் உள்ள அரசுக் கலைக் கல்லூரிகள் நான்கில் மட்டும் பி.எஸ்.சி. பட்டப்படிப்பு வகுப்பில் 5 முக்கிய பாடங்களை தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் கற்பிக்க வகை செய்யப்பட்டுள்ளது. ஐந்து பாடங்கள் ஒவ்வொன்றிலும் தற்போது ஒப்பளிக்கப்பட்டுள்ள எண்ணிக்கை தொடர்ந்து இருத்திக் கொள்ளப்பட்டு, தமிழ், ஆங்கிலம் பயிற்று மொழி வகுப்புகளிடையே சமமாகப் பிரிக்கப்படும். வெளியூரில் உள்ள மூன்று அரசுக் கல்லூரிகளில் மூன்றில் மட்டும் (அரசுக் கலைக் கல்லூரி, கோயம்புத்தூர், அரசுக் கலைக்கல்லூரி, உதகமண்டலம், லோகநாத நாராயணசுவாமி அரசுக் கல்லூரி, பொன்னேரி) ஐந்து முக்கிய பாடங்களிலும் இரு மொழிகளிலும் இணையான எண்ணிக்கை கொண்ட பிரிவுகள் நடத்தப்படுகின்றன. ஏனைய அரசுக் கல்லூரிகளில் மேற்சொன்ன ஐந்து முக்கிய பாடங்களில் எவைஎவை கற்றுத்தரப்படுகின்றனவோ அவையனைத்திலும் தமிழ் பயிற்று மொழியாகக் கொண்டுவரப்பட்டுள்ளது. 1969-70-ம் ஆண்டில் பி.எஸ்.சி. தமிழ் பயிற்சி வகுப்பில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 1,900 ஆகும்.

பி.எஸ்.சி. நிலையில் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்கும் திட்டம் படிப்படியாகச் செயலுக்குக் கொண்டுவரப்

பட்டதன் காரணமாகத் தேவையான பாடப்புத்தகங்களைத் தமிழிலேயே வெளியிட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. முதற்கண், கணக்கியல், பௌதிகம், வேதியியல், தாவரவியல், விலங்கினவியல் ஆகிய ஐந்து பிரிவுகளிலும் தொழில் நுட்பச் சொற்களைத் தரமான வகையில் உருவாக்குவதற்காக 1968-69-ம் ஆண்டில் ஒரு குழு அமைக்கப்பட்டது. இது குறித்த பணி முடிந்துள்ளது. மேற்படி ஐந்து பிரிவுகளிலும் பாட புத்தகங்களைத் தமிழில் எழுதும்படி பணிக்கப்பட்ட ஆசிரியர்கள் தங்கள் பணியை முடித்துள்ளனர். இந்தக் கையெழுத்துப்படிகள் அனைத்துப் பல்கலைக் கழக வல்லுநர் குழுவின் உறுப்பினரால் ஆய்வு செய்யப்பட்ட பின்னர் தமிழ் பி.எஸ்.சி. வகுப்புகளுக்கான 30 புத்தகங்கள் அச்சிடப்பட்டு, 1969-70-ம் ஆண்டில், தமிழ் வெளியீட்டுக் கழகத்தால் வெளியிடப்பட்டன.

### (g) கல்லூரிப் புகுமுக வகுப்பில் இலவசக் கல்வி

1969-70-ம் ஆண்டு முதல், புகுமுக வகுப்பில் படிக்கும் மாணவர்கள் எவரிடமிருந்தும், அவர்களுடைய பெற்றோருடைய ஆண்டு வருவாய், சமுதாயம் ஆகியவை எதுவாக இருப்பினும், படிப்புக் கட்டணம் எதுவும் வாங்கப்படுவதில்லை. ஆனால், அந்த மாணவர் தமிழ்நாட்டில் பிறந்து வளர்ந்தவராகவோ அல்லது இம்மாநிலத்தில் குடியேறியவராகவோ இருக்க வேண்டும். இந்தச் சலுகை தொழில் நுட்பப் புகுமுக வகுப்பில் படிக்கும் மாணவர்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளது.

### (h) பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ள சம்பள விகிதங்கள்.

உடற்பயிற்சி ஆசிரியர்களையும், நூலகங்களையும் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுத் திட்டத்தின்கீழ் கொண்டுவர இந்திய அரசு இசைந்து சில சம்பள விகிதங்களை வரையறுத்துள்ளது. இச்சம்பள கல்லூரிகளில் பணியாற்றும் நூலகங்களுக்கு, 1966 ஏப்ரல் 1-ம் நாள் முதல் நிலுவைகள் பெறுவதற்கான தகுதியுடன் அளிக்கப்பட்டுள்ளன. உடற் பயிற்சி ஆசிரியர்களுக்குப் பல்கலைக் கழக மானியக் குழுவின் சம்பள விகிதங்களை அளிப்பது ஆய்வில் இருந்து வருகிறது.

### (i) பணிக்காலப் பயிற்சியும், மரபியல் ( orientation) பயிற்சியும் அளித்தல்

கல்லூரி ஆசிரியர்கள் பி.எஸ்.சி. அறிவியல் பாடங்களைத் தமிழில் கற்பிக்க இயலும் பொருட்டு, அவற்றைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு, மதுரைப் பல்கலைக் கழகத்தின் ஆதரவின் கீழ், மதுரையில்





மறுபயிற்சி அளிக்கப்பட்டது. 376 ஆசிரியர்கள் இத்திட்டத்தினால் பயனடைந்தனர். ஆங்கிலம் கற்பிப்பதில் பணியிருப்புப் பயிற்சி ஒன்று, பிரிட்டிஷ் மன்றத்தின் உதவியுடன், 1969 டிசம்பர், 1970 ஜனவரி திங்கள்களில் சைதாப்பேட்டையில் உள்ள ஆசிரியர் கல்லூரியில் நடத்தப்பட்டது. 36 கல்லூரி ஆசிரியர்கள் இப்பயிற்சியினால் பயன் பெற்றனர்.

### (j) எம்.ஏ. (ஆங்கிலம்) மாணவர்களுக்கு உதவித்தொகை.

ஆங்கிலப் பாடம் கற்பிக்கும் துணைப் பேராசிரியர்களை நியமிப்பதற்குப் போதுமான ஆசிரியர்கள் கிடைப்பது அரிதாக இருப்பதால், தகுதியுள்ள மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் எம்.ஏ. பட்ட மேற்படிப்பு படிப்பதற்காகப் படிப்புதவித் தொகைகள் வழங்க வகைசெய்யும் புதியதிட்டம் ஒன்று செயலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த மாணவர்கள் பட்ட மேற்படிப்பு பட்டம் பெற்ற பிறகு அவர்கள் அந்தப் படிப்பில் பெற்ற வகுப்பின் அடிப்படையில் அவர்களை ஆங்கிலத் துணைப் பேராசிரியர்களாக நியமிப்பது குறித்தோ, தமிழ்நாடு கல்வி சார்நிலைப்பணியில் உள்ள ஆங்கிலத் துறையில் தகுந்த பதவியில் நியமிப்பது குறித்தோ கருதிப்பார்க்க இயலும். இத்திட்டத்தின் கீழ், ஆங்கிலத்தில் எம்.ஏ. பட்டப்படிப்புப் பயிலுவதற்காகத் தெரிந்தெடுக்கப்படும் மாணவர் ஒவ்வொருவருக்கும் அவரது படிப்புக் காலத்தில் (அதாவது 21 மாதங்கள்) படிப்புக்கட்டணம், புத்தகங்களுக்கான செலவு முதலிய செலவுகளைச் சரிக்கட்டுவதற்காக திங்கள்தோறும் ரூ. 100 உதவித் தொகை வழங்கப்படுகின்றது. அத்தகைய உதவித் தொகைகள், ஒவ்வொரு ஆண்டும் 40 மாணவர்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன.

### (k) படிப்புதவித் தொகைகள்

மெட்ரிக் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பைத் தொடருவதற்காக தகுதியுள்ள மாணவர்கள் பெறக்கூடிய மத்திய அரசின் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டங்கள் மூன்றும் தொடர்ந்து செயலில் இருந்து வருகின்றன. அவை (1) உயர் தகுதி பெற்ற மாணவர்களுக்குத் தேசிய கல்வி உதவித் தொகை, (2) தொடக்கநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றில் பணியாற்றும் ஆசிரியர்களின் மக்களில் தகுதியுள்ளவர்களுக்கு வழங்கப்படும்

தேசியக் கல்வி உதவித் தொகை, (3) தேசியக் கடன் படிப்புதவித் தொகை.

1969-70-ம் ஆண்டில் மேற்குறிப்பிட்ட மூன்று திட்டங்களின் கீழும் புதிதாகப் படிப்புதவித் தொகை வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை முறையே 569, 46, 1,445 (மொத்தம் 2,060) ஆகும். இது தவிர, கடந்த ஆண்டுகளில் படிப்பு உதவித்தொகை வழங்கப் பட்டவர்களில் 5,440 மாணவர்களுக்கு இந்த உதவித்தொகை மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. இந்த வகையில் இந்த மூன்று திட்டங்களின்கீழ் கிட்டத்தட்ட 7,500 மாணவர்கள் நிதி உதவி பெற்று வருகின்றனர்.

இத்துறையினல் இயக்கப்படுபவையும், மேலே குறிப்பிட்டுள்ள வையுமான இந்திய அரசு படிப்புதவித் தொகைகள் தவிர, மாநில அரசு வழங்கும் படிப்புதவித் தொகை சிலவும் மாணவர்களுக்கு வழங்குப்படுகின்றன. (1) அரசியல் தியாகிகளின் மக்கள், இந்தியத் தேசீய ராணுவத்தில் பங்குகொண்டவர்களின் மக்கள் ஆகியோர், புகுமுக வகுப்பு, பி.ஏ., பி.எஸ்.சி., பி.டி. ஆகிய வகுப்புகளில் படித்துக்கொண்டிருந்தால் அவர்களுக்குத் தங்கி பயிலுவதற்கான உதவித் தொகைகளும், கல்லூரி விடுதியில் உறையாத மாணவர் களுக்கான உதவித் தொகையும் வழங்குதல், (2) பாதுகாப்புப் பணி யாளர்களின் மக்களுக்கு உதவித் தொகை வழங்குதல், (3) பர்மா, இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய அகதிகளின் மக்களுக்கு உதவித் தொகை வழங்குதல், (4) முகமதியர்களுக்காகத் தனிப் பட்ட வகையிலும். மாணவியர்க்காகத் தனிப்பட்டவகையிலும் வழங்கப்படும் உதவித் தொகைகள், (5) கைம்பெண்களுக்குப் படிப்புதவித் தொகைகள் வழங்குதல், (6) ராணி மேரி கல்லூரியில் பயிலும் மாணவியருக்குப் படிப்புதவித் தொகை வழங்குதல், (7) கீழ்த்திசைக் கல்வி பெறுவதற்குப் படிப்புதவித் தொகை வழங்கு தல், (8) பட்ட மேற்படிப்புக்கான படிப்புதவித் தொகை வழங்கு தல்.

மோரீஸ் தீவுகள், பிஜித் தீவுகள், மலேசியா ஆகிய நாடுகளில் குடியேறியுள்ளவர்களில் தமிழ் பேசும் மாணவர்களைத் தேர்ந் தெடுத்து மெட்ரிக் வகுப்பிற்குப் பிந்திய கல்லூரிப் படிப்பை இம்மாநிலத்தில் தொடருவதற்காக படிப்புத் தொகை வழங்கப் படுகின்றது. இந்த நாடுகள் ஒவ்வொன்றிலும் இரண்டு மாணவர் களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகின்றது.



## 1. தேசீய மாணவர் படை

தேசிய மாணவர் படையிலும், அது போன்ற படைகளிலும் இந்திக் கட்டளைச் சொற்களைப் பயன்படுத்தப்படக் கூடாதென்றும், அதனை மத்திய அரசு ஏற்க மறுத்தால் தேசிய மாணவர் படை மற்றும் அது போன்ற ஏனைய படைகள் கலைக்கப்பட வேண்டு மென்றும் 23—1—1968 அன்று நடந்த சிறப்புக் கூட்டத்தில் தமிழ் நாட்டுச் சட்டமன்றப் பேரவை தீர்மானித்தது. அதன்படி, இந்திய அரசிடமிருந்து பதிலை எதிர்பார்த்து, தேசிய மாணவர் படையின் நடவடிக்கைகள் 1968 ஜனவரி முதல் தாற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டன. தேசீய மாணவர் படைப்பயிற்சியில் ஆங்கிலக் கட்டளைச் சொற்களைப் பயன்படுத்துவதற்கு, இந்திய அரசு இப் பொழுது இணங்கியுள்ளது. எனவே கீழ்க்கண்ட நிபந்தனைகளின் கீழ் 1969 அக்டோபர் முதல் கல்லூரிகளில் தேசிய மாணவர் படைப் பயிற்சி மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது.

(1) படையினருக்கு ஆங்கிலச் கட்டளைச் சொற்களின் மூலம் பயிற்சியளிக்கப்படும்;

(2) மாணவர்கள், இருமொழி அணிவகுப்புகளிலும் திறம் படக் கலந்துகொள்ள இயலும் வகையில் ஆங்கிலக் கட்டளைச் சொற்களுக்கு இணையான இந்திச் சொற்கள் படையினருக்குக் கற் பிக்கப்படும் ;

(3) தேசீய மாணவர் படையில் பங்கு கொள்வது அவாவர்கள் விருப்பத்தின் அடிப்படையில் இருக்கும்.

தமிழ் நாடு தேசீய மாணவர் படைப்பிரிவு 1970 ஜனவரியில் புது டில்லியில் நடந்த குடியரசு தின விழாவில் கலந்து கொண்டு இரண்டு பெரிய பரிசுகளைப் பெற்றுள்ளது.

## திட்ட அரங்குகள்

நாட்டு நலனுக்காக வகுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டங்களைப்பற்றி அறிந்து கொள்வதில் கல்லூரி மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் ஊக்கமளித்து அவை குறித்து திறனாய்வு செய்யும் வகையில் பல்கலைக் கழகங்களிலும், கல்லூரிகளிலும் திட்ட அரங்குகள் செயல்பட்டு வருகின்றன. சென்னை நகரில் இயங்கிவரும் திட்ட அரங்குகளுக்குக் கல்லூரிக் கல்வி இயக்குநரும், வெளியூர்களில் இயங்கிவரும் திட்ட அரங்கு களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரும் மானியம் வழங்கி வருகின்றனர்.

[1970 மார்ச் 11

**( n ) மாநிலத் திட்டத்தின்கீழ் உடல் ஊனமுற்றோருக்கு மெட்ரிகுக்கு மேற்பட்ட படிப்புக்காக வழங்கப்படும் படிப்புதவித் தொகை.**

முடவர், குருடர், செவிடர் போன்ற உடல் ஊனமுற்றோருக்கு இந்திய அரசு ஏற்கெனவே படிப்புதவித் தொகை வழங்கி வருகிறது. இம்மாநிலத்தில் ஒவ்வொரு வகையிலும் சுமார் 25 மாணவர்கள் வீதம் பயனடைகின்றனர். இந்திய அரசு விதிக்கும் நிபந்தனைகள் கடுமையாக இருப்பதால் இம்மாநிலத்திலுள்ள உடல் ஊனமுற்றோர் அனைவரும் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற இயலவில்லை. எனவே, உடல் ஊனமுற்றோரில் மேற்கூறிய வகையைச் சேர்ந்த, 16 முதல் 30 வயது வரையிலுள்ள மெட்ரிக்குக்கு பிந்திய படிப்பினை மேற்கொண்டுள்ள மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகை வழங்கும் மாநிலத் திட்டம் ஒன்று 1969-70-ம் ஆண்டில் இம்மாநிலத்தில் கொண்டுவரப்பட்டது. முடவர்களுக்கு 56, குருடர்களுக்கு 28, செவிடர்களுக்கு 28 ஆக மொத்தம் 112 படிப்புதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன.

### 1970-71-ம் ஆண்டுக்கான திட்டம்.

**புதிய கல்லூரிகளும், புதிய வகுப்புகளும்.**—1969-70-ம் ஆண்டு முதல் இம்மாநிலத்தில், புகுமுக வகுப்பில் இலவசக் கல்வி கொண்டு வரப்பட்டுள்ளதன் விளைவாகப் புகுமுக வகுப்பில் சேர மாணவர்கள் திரண்டு வருகின்றனர். பல கல்லூரிகளில் இட நெருக்கடியைத் தவிர்ப்பதற்காகவும், கிராமப் பகுதிகளில் உள்ள மாணவர்களுக்கு வசதியளிப்பதற்காகவும் பல்கலைக் கழகங்கள் இணைப்பு வழங்கப்படுவதற்குட்பட்டு 1970-71-ம் ஆண்டில்—

(1) எங்கெங்கு பொது மக்களின் ஆதரவு உள்ளதோ அவ்விடங்களில் நான்கு புதிய அரசுக் கல்லூரிகளைத் தொடங்கவும்;

(2) அரசுக் கல்லூரிகளில் சிலவற்றில் புகுமுக வகுப்பில் கூடுதலான பிரிவுகளைத் தொடங்கவும்;

(3) தற்போது செயல்பட்டு வரும் பட்டப்படிப்பு அளிக்கும் கல்லூரிகளில், மேலும் பல பட்டப்படிப்பு வகுப்புக்களைத் தொடங்கவும், புகுமுக வகுப்புக் கல்லூரிகளை பட்டப்படிப்புக் கல்லூரிகளாக மேம்படுத்துவதற்கும்;

(4) கோயம்புத்தூரில் உள்ள அரசுக் கல்லூரி, சென்னை ராணி மேரி கல்லூரி, கும்பகோணத்திலுள்ள அரசுக் கலைக் கல்லூரி (ஆண்கள்) ஆகியவற்றில் பட்ட மேற்படிப்பு வகுப்புகளைத் தொடங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.



1970 மார்ச் 11]

### பயிற்சி மொழி.

வரும் 1970-71-ம் ஆண்டில் பி.எஸ்.சி. பட்டப்படிப்பு வகுப்பின் மூன்றாவது ஆண்டில் உள்ள மாணவர்களுக்காக தமிழில் மேலும் இருபத்தைந்து புத்தகங்களை அச்சிட்டு வெளியிடக் கருதப்பட்டுள்ளது. இப்பணிக்கு வேண்டிய ஆசிரியர்கள் ஏற்கெனவே தெரிந்தெடுக்கப்பட்டு கையெழுத்துப் பிரதிகளைத் தயாரிக்கும் பணியும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதுவரையில் கிடைத்துள்ள கையெழுத்துப் படிகள் அனைத்துப் பல்கலைக் கழக வல்லுநர் குழுவினால் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

**பணிக்காலப் பயிற்சியும், மரபியல் பயிற்சியும் (Orientation scheme)** பி.எஸ்சி. பட்டப்படிப்பு வகுப்புகளில் கணிதம், பௌதீகம், வேதியல், தாவரவியல், விலங்கினவியல், பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குச் சென்னை பல்கலைக் கழகத்தின் ஆதரவின்கீழ் புது முறைப் பயிற்சி வகுப்புகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சி வகுப்புகளின் மூலம் 300 ஆசிரியர்கள் பயனடைவர்.

**விடுதிக் கட்டிடங்கள்.**—அரசுக் கல்லூரிகளுக்கும் மானியம் பெறும் கல்லூரிகளுக்கும் விடுதிக் கட்டிடங்கள் கட்டுவதற்காக 1970-71-ம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 15 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### IV தொழில் நுட்பக் கல்வி.

தமிழ் நாட்டில் கடந்த இரண்டு திட்டக்காலங்களில் தொழில் நுட்பக் கல்வி பாராட்டத்தக்க வகையில் வளர்ச்சி அடைந்துள்ளது. தமிழ் நாட்டில் தற்போது 1,00,000 பேருக்கு 3.7 பொறியியல் பணியாளர்கள் வீதம் உள்ளனர். அனைத்திந்திய அடிப்படையில் இந்த எண்ணிக்கை 1.6 ஆகும். கடந்த சில ஆண்டுகளில் பொறியாளர்களிடையே வேலையின்மை பெருகி வருவதை முன்னிட்டுத் தொழில் நுட்பக் கல்வியை இன்னும் அதில் அளவில் விரிவுபடுத்துதல் கூடாது என்றதொரு கருத்து பொதுவாக நிலவி வருகிறது. அதோடு, இனிவரும் திட்டங்களில் ஏற்கனவே உள்ள தொழில் நுட்பக் கல்வி நிலையங்களின் தரத்தையும், தகுதியையும் மேம்படுத்துவதில் கருத்துச் செலுத்தப்படல் வேண்டும். பல தொழில் பயிற்சிப் பள்ளிகளில் டிப்ளமா வகுப்புகளில் பல் நோக்குக் கல்விப் பிரிவுகளை ஏற்படுத்தல் வேண்டும். பாடத் திட்டங்களை மேம்படுத்தி, பொறியியல் பட்டதாரிகள், டிப்ளமா

[1970 மார்ச் 11

பயிற்சி பெற்றோர் ஆகியோருக்குச் செயல்முறை பயிற்சியளித்தல் வேண்டும். அதன்படி இந்த நோக்கில் முதல் நடவடிக்கையாகத் தொழில் நுட்பக்கல்வி இயக்குநரின் ஆளுகையின்கீழ் உள்ள பொறியியல் கல்லூரிகளில், பொறியியல் பட்டப்படிப்பு ஐந்தாண்டு வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 1,400-லிருந்து 1,000-ஆகக் குறைக்கப்பட்டது. இது தவிர பி.எஸ்.சி. பட்டப்படிப்பு மாணவர்களுக்காக கல்லூரிகளில் சிலவற்றில் (260 இடங்கள்) செயலிலிருந்துவரும் மூன்றாண்டுப் பொறியியல் பட்டப்படிப்பு 1968-69 முதல் தாற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. பல்நோக்குப்படுத்தும் திட்டத்தின் கீழ், பட்டப்படிப்பு, டிப்ளமா, வகுப்புகளுக்கான பாடத்திட்டங்கள் விரிவாகத் திருத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் பல்வேறு விருப்பப் பாடங்களில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும். இது தவிர, மேலும் பல்நோக்குப் படுத்துவது குறித்தும், தொழிற்சாலைகளின் குறிப்பிட்ட தேவைகளை நிறைவேற்றுவதற்காகப் புதிய வகுப்புகளை ஏற்படுத்துவது குறித்தும் ஆய்வு செய்வதற்காகத் தமிழ் நாடு தொழில் நுட்பக் கல்விபயிற்சி வாரியத்தின் முடிவிற்கிணங்க வல்லுநர் குழு ஒன்று ஏற்படுத்தப் பட்டுள்ளது. அக்குழு இது குறித்து ஆய்வு செய்து வருகிறது. நான்காவது திட்டக் கால அளவில் மேலும் பல சிறிய நடுத்தரத் தொழில்கள் ஏற்படக்கூடுமாதலால், பல்வேறு கூறுகளில் சிறப்புப் பயிற்சி பெற்றுள்ள பயிற்சி பெற்ற தொழில் நுட்ப வல்லுநர்கள், பொறியாளர்களுக்கான தேவை வரும் ஆண்டுகளில் கண்டிப்பாக அதிகமாகக்கூடும். அப்பொழுது பட்டப்படிப்பு, டிப்ளமா நிலையில் அதிகமான தொழில் நோக்குக் கொண்ட பாடமுறைகளை ஏற்படுத்த அவசியமாகும் சூழ்நிலை உருவாகும். எனவே, தற்போதுள்ள நிறுவனங்களில் தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள எண்ணிக்கையை உறுதிப்படுத்திக் கொள்ளவும், பட்டப்படிப்பு, பட்டயப் படிப்பு (டிப்ளமா படிப்பு) நிலைகளில் பாடமுறைகளை பல கூறுக்கும் வகையில் கடந்த மூன்றாண்டுகளாக ஆண்டுத் திட்டங்களில் சேர்க்கப்பட்டுள்ள வேலைத் திட்டங்கள் உருவாக்கப் பட்டுள்ளன.

2. இம்மாநிலத்தில் உள்ள பொறியியல் கல்லூரிகள், பல்தொழில் பயிற்சிப்பள்ளிகள், தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை முறையே 12, 36, 16 ஆகும். (இதில் பாண்டிச்சேரியில் உள்ள மோதிலால் நேரு பல்தொழில் பயிற்சிப் பள்ளியும், தொழில் நுட்ப உயர் நிலைப் பள்ளியும் அடங்கும், இவை தமிழ்நாடு தொழில் நுட்பக் கல்வி—பயிற்சி வாரியத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.)



1970 மார்ச் 11]

3. செலவு.—தொழில், தொழில் நுட்பக் கல்வி வகுப்பு மாணவர்
களுக்கு அளிக்கப்பட்ட கல்விக் கடன்கள், கட்டிடங்களுக்கான
செலவு ஆகியவை நீங்கலாக 1968-69-ம் ஆண்டில் தொழில் நுட்பக்
கல்வி குறித்த செலவு ரூ. 226.71 லட்சமாகும். "கடன்", "கட்டி
டங்கள்" குறித்த நிதி ஒதுக்கம் நீங்கலாக 1969-70-ம் ஆண்டுக்கான
திருத்த மதிப்பீடு, 1970-71-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட
மதிப்பீடு ஆகியவை முறையே ரூ. 241.40 லட்சமும், ரூ. 248.71
லட்சமுமாகும். 1970-71-ம் ஆண்டில் கட்டிடங்கள், கடனுக்காக
ஒதுக்கப்பட்டுள்ள தொகைகள் முறையே ரூ. 28.64 லட்சமும்,
ரூ. 9.00 லட்சமுமாகும்.

4. பாடத் திட்டங்களைப் பல்கூறுக்கும் கொள்கையின்கீழ், 22
மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் நோக்கத்துடன் மின் அணு,
செய்தித் தொடர்பு பொறியியல் பாடமுறையில் பட்டப்படிப்பு
வகுப்பு ஒன்று, 1969-ம் ஆண்டில் காரைக்குடி, அழகப்ப செட்டியார்
பொறியியல்-தொழில் நுட்பவியல் கல்லூரியில் தொடங்கப்பட்டது.

அவ்வாறே கோயம்புத்தூரில் மகளிர்க்கான அரசுப் பல்தொழிற்
பயிற்சிப் பள்ளியில் மின் அணுப் பொறியியலில் தகுதிப் பட்டயப்
பாடமுறை ஒன்று தொடங்கப்பட்டது. சுரங்கப் பொறியியல்
பாடமுறை நிறுத்திவிடப்பட்டதால், அந்த இடத்தில் 1969-70-ஆம்
ஆண்டிலிருந்து உலோகவியலில் பட்டப் படிப்பு, கிண்டி பொறி
யியல் கல்லூரியில் தொடங்கப்பட்டது.

5. தகுதிப்பட்டயம் பெற்றவர்கள் தாமாகவே தொழில் நடத்து
வதை ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் மதுரை மாநகரில் குடி
யிருக்கும் தகுதிப்பட்டயம் பெற்ற, வேலை இல்லாத இளைஞர்களுக்கு
வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் 1969-70-ஆம் ஆண்டில் மதுரை,
தமிழ்நாடு பல்தொழிற் பயிற்சிப் பள்ளியில், திட்டம் ஒன்று
கொண்டுவரப்பட்டுள்ளது. உள்ளூர்த் தொழிற்சாலைகளின்
ஒத்துழைப்புடன் இத்திட்டம் தொடங்கப்பட்டது. மரைகளையும்,
திருகுகளையும் கடைதல், பிணைப்பு இறுக்கிகள், இயந்திர உதிரிப்
பாகங்கள், இயந்திர பாகங்கள், மின்சார கம்பங்களுக்கான குறுக்
குக்கம்பிகள், சிறு கட்டுமானங்கள் ஆகியவை செய்தல் போன்ற
சிறு வேலைகளை இத்திட்டத்தின்கீழ் இத் தொழிற்சாலைகள்
கொடுத்து வருகின்றன. பல்தொழிற் பயிற்சி பணிக்களரியில்
தகுதிப் பட்டயம் பெற்றவர்களுக்குக் கொடுக்கப்படும் வசதிகளைப்
பயன்படுத்திக்கொண்டு, அனுபவம் வாய்ந்த பணியாளரின் ஆலோ

சனியின் கீழும் மேற்பார்வையின் கீழும் பணிகளை நிறை வேற்றுவது அவர்களது பொறுப்பாகும். இயந்திரங்களுக்கான வாடகைக் கட்டணங்களுக்கும் பிற இடை நிகழ்ச்சிச் செலவு களுக்கும் உரியத் தொகையைக் கொடுத்த பிறகு ஒரு நாளைக்கு சுமார் ரூ. 8 முதல் ரூ. 10 வரை இத்திட்டத்தில் சேர்த்துக்கொண்ட 20 மாணவர்கள் அனைவரும் பெறுகின்றனர் என்று தெரிய வந்துள்ளது.

இப் பணித் திட்டம் குறிப்பிட்ட அளவு எண்ணிக்கை உடை யோருக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது. இத்துடன், தகுதிப் பட்டயம் பெற்றிருப்பவர்களை அங்காடி உத்திகளில் தகுதி வாய்ந்தவர்களாக்கவும், அவர்கள் ஈடுபட்டுள்ள தொழில்களில் அவர்களுக்குரிய திறமையை வளர்க்கவும் உதவுகிறது. இத்திட்டம் பரிசோதனை நிலையில் உள்ளது. தெரிந்தெடுக்கப்பட்ட பலதொழிற் பயிற்சிப் பள்ளிகள் சிலவற்றின் முதல்வர்கள் இத்திட்டத்தை அவர் களுடைய நிறுவனங்களில் புகுத்த அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

6. 1970–71-ம் ஆண்டுத் திட்டம்.—1970–71-ஆம் ஆண்டில் பின்வரும் பாடமுறைகளை தொடங்குவதற்குத் திட்டமிடப் பட்டிருக்கிறது :—

(1) கோயம்புத்தூரில் அரசுத் தொழில் நுட்பக் கல்லூரியில் மின் அணு, செய்தித் தொடர்பு பொறியியலில் பட்டப்படிப்புப் பாடமுறைகள்.

(2) சேலம், அரசுப் பொறியியல் கல்லூரியில் (அ) உலோகப் பொறியியலிலும், (இ) ரசாயனப் பொறியியலிலும் 5 ஆண்டு பொறி யியல் பட்டப்படிப்புப் பாடமுறைகள்.

(3) சென்னை ரசாயன தொழில் நுட்ப இயல் நிறுவனத்தில் சர்க்கரை தொழில் நுட்ப இயலில் தகுதிப்பட்டய பாடமுறைகள்.

(4) சென்னை, மகளிர்க்கான அரசுப் பல்தொழிற் பயிற்சிப் பள்ளியில் (அ) கட்டிடக் கலை உதவியாளர் நிலையிலும் (இ) கருவித் தொழில் நுட்ப இயலிலும் தகுதிப்பட்டயப் பாட முறைகள்.

சென்னை தொழில் நுட்ப இயல் நிறுவனம், குரோம்பேட்டை.— குரோம்பேட்டை, சென்னை தொழில் நுட்ப இயல் நிறுவனம், சங்கங்களின் பதிவு சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட ஒரு தனியார் பொறியியல் கல்வி நிறுவனமாகும். இது 1949-ஆம்





ஆண்டில் தொடங்கப்பட்டது. மோட்டார் வண்டிப் பொறியியல், மின் அணு வின் போக்குவரத்து பற்றிய ஆய்வுப் பொறியியல், மின் அணு இயல், கருவித் தொழில் நுட்ப இயல் ஆகியவற்றில் மூன்று ஆண்டு தகுதிப்பட்டய பாட முறைகளை இந்த நிறுவனம் நடத்தி வரு கிறது. இந்த நிறுவனத்தில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் நூறு மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். இதில் 30 சதவீதம் பிற மாநிலங்களிலிருந்து வரும் மாணவர்களுக்கும், 70 சத வீதம் தமிழ் நாட்டிலிருந்து வரும் மாணவர்களுக்கும் இடங்கள் ஒதுக்க படுகின்றன. இந்த நிறுவனத்தின் தகுதிப்பட்டயம் இந்தியப் பல்கலைக் கழகங்களின் பொறியியல் பட்டத்திற்கு சமமானதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் வளர்ச்சியின் தொடக்கக் கட்டத்தில், தொடரா செலவில், ஆறில் ஒரு பாகத்தை மானியமாகவும், ஒவ்வொரு ஆண்டுக்குமான தொடர் செலவுக்கு ரூபாய் ஒரு லட்சம் ஒரு மொத்த மானியமாகவும் மாநில அரசு நிதியளித்துள்ளது. அதையடுத்து, அதிக அளவு நிதி உதவி இல்லாமல் செயல்படுவது மிகவும் கடினம் என்பதை இந் நிறுவனம் அறிந்தபொழுது, அதன் பணி நிலைமைகளையும், நிதிகளையும் குறித்த ஆய்வு செய்வதற்காக தொழில் நுட்ப வல்லுநர்கள் அடங்கிய ஆய்வுக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழுவின் பரிவுரைகளின்படி, நிறுவனத்தைப் பேணுதலுக்காகவும், மேம்படுத்துவதற்காகவும், தொடர், தொடரா செலவுகளில் முறையே 66-2/3 சத வீதத்தையும், 33-1/3 சத வீதத்தையும் ஏற்றுக் கொள்ள இந்திய அரசும் மாநில அரசும் இசைந்துள்ளன. மாநில அரசின் கல்வி அமைச்சரை இந்நிறுவனத்தின் நிர்வாக மன்றத் தலைவராகக் கொண்டு இம்மன்றம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

## V பல்வகை.

### அரசு அரும் பொருட்காட்சி சாலை.

1. 1968—69-ஆம் ஆண்டில் அரும் பொருட்காட்சி காலைகளின் சீரமைப்பு—மேம்பாடுத் திட்டத்தின்கீழ், கிடைப்பதற்கரிய நாணயங்கள், விசயநகர, கங்க அரசர்களது மானியச் செப் பேடுகள், இசைக் கருவிகள், புதையல் பொருள்கள் முதலியன பெறப்பட்டன. 1969-70-ஆம் ஆண்டில் சிறப்ப வேலைப்பாடமைந்த இரண்டு கற் சிற்பங்களும், நிழற்தோல் பொம்மைகளும் ( Leather

shadow figure ) கூடப் பெறப்பட்டன. 1969-70-ஆம் ஆண்டில் அரும் பொருட்காட்சி சாலை குறித்த செய்திப் படம் தயாரிக்கும் பணி எடுத்துக்கொள்ளப்பட்டது. இது முடிவடையும் நிலையில் உள்ளது.

2. 1970–71-ஆம் ஆண்டில் சென்னையிலும், புதுக்கோட்டையிலும் உள்ள அரசு அரும் பொருட்காட்சி சாலைகளுக்காக கிடைப்பதற்கரிய பொருள்களின் மாதிரிகளும், வண்ண ஓவியங்களும் சேகரிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த அரும் பொருட்காட்சி சாலைகளுக்காக அறிவியல் சாதனங்களும் நவீன காட்சிச் சாதனங்களும்கூட சேகரிக்கப்படும்.

## தொல் பொருள் ஆய்வு.

3. இம்மாநிலத்தில் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த ஏழு நினைவுச் சின்னங்களைப் பாதுகாப்பதற்காக சில பணிகள் நிறைவேற்றப்படுவதற்கு வேண்டிய நிதியை அரசு 1969-70-ல் ஒப்பளித்தது. இப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. தொல்பொருள் துறை, சென்னை மாவட்டம், தஞ்சாவூர் பெரிய கோயில் கல்வெட்டுகள் உட்பட ஒன்பது வெளியீடுகளை வெளியிட்டு உள்ளது. மதுரைப் பல்கலைக் கழகத்தின் ஆதரவில் அண்மையில் மதுரையில் ஒரு கருத்தரங்கையும், தொல்பொருள் பணிக்களரி ஒன்றையும் இது நடத்தியது.

4. மேற்சொன்ன கால அளவில் மதுரையில் பொருட்காட்சி ஒன்றும் நடத்தப்பட்டது. இத்துடன் வைத்தீஸ்வரன்கோயில் மகா கும்பாபிஷேகம் தொடர்பாகப் பொருட்காட்சி ஒன்றையும் நடத்தியது. மாநில தொல்பொருள் ஆராய்ச்சித் துறை அலுவலகத்தில், கொற்கையிலிருந்து அகழ்ந்து எடுக்கப்பட்ட பழமைச் சின்னங்களைக் கொண்ட பொருட்காட்சி ஒன்றை நடத்தியது.

5. கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்வெட்டுக்கள் குறித்து ஆய்வு செய்யும் பணி தொடர்ந்து நடந்தது. இப் பணி ஏறக்குறைய முடிவடைந்துவிட்டது.

6. தாம்பரபரணி ஆற்றின் கயவாய்ப் பகுதியில் பாண்டியர்களின் பண்டையத் துறைமுகமான கொற்கையில் அகழ்வுப் பணி ஒன்று துறையால் மேற்கொள்ளப்பட்டது. சங்க காலத்திய பழமையான உறைவிடங்கள் இந்த அகழ்வாராய்ச்சியினால் வெளிக்கொணரப்



படுத்தப்பட்டன. இதற்கான சான்றுகள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. இவை கி. பி. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும் எனக் கருதப்படுகிறது. பாலாற்றின் கயவாய்ப் பகுதியில் அமைந்திருக்கும் வாசவசமுத்திரம் என்னும் இடத்தில் 1-வது, 2-வது நூற்றாண்டைச் சேர்ந்த மிகப் பழமையான உறைவிடம் ஒன்றை ஆய்வின்போது துறை கண்டுபிடித்துள்ளது.

## தமிழ்நாடு மாநில சங்கீத நாடகச் சங்கம்.

7. தமிழ்நாடு சங்கீத நாடகச் சங்கம் இசை, நடனம், நாடகம், திரைப் படங்கள் முதலிய நுண் கலைகளை வளர்ப்பதற்காகவும், பேணுவதற்காகவும், அவற்றின் மூலம் நாட்டின் கலாச்சார ஒற்றுமையை மேம்படுத்துவதற்காகவுமான நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்து வருகிறது. சங்கத்தின் பொது மன்றத்திற்கு தேர்தல் மூலம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய பத்து இடங்களுக்கான தேர்தல்கள் அண்மையில் நடைபெற்றன. எஞ்சிய பத்து பேர்கள் சங்கத்தின் பொது மன்றத்திற்கு அரசினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

8. இச்சங்கம் திறமையான இளம் கலைஞர்களுக்கு ஊக்கம் அளித்தும், அதன் சொந்த ஆதரவில் அவர்களது திறமையை வெளிப்படுத்த வாய்ப்பு அளித்தும் வருகிறது. இசை, நடனம், நாடகம் திரைப்படத் துறைகளில் தேர்ச்சிபெற்ற கலைஞர்களுக்கு பரிசுகளும் விருதுகளும் இச்சங்கம் வழங்குகிறது. இந்திய அரசின் பண்பாட்டுக் கலைத்திட்டத்தின்கிழ், 1969 டிசம்பர் திங்களில் ரஷ்யாவிலிருந்து லெனின்கிராடு மாலி நாட்டியக் குழுவினர் (Leningrad Mily Dance Troop) சென்னைக்கு வருகை தந்தனர். அரசின்சார்பில், அவர்களுடைய கலை நிகழ்ச்சிகளுக்கு இச்சங்கம் எல்லா ஏற்பாடுகளையும் செய்தது.

9. 1969—70-ஆம் ஆண்டில் இச்சங்கம், தனது நடவடிக்கைகளுக்காக ரூ. 2.25 லட்சம் மானியம் பெற்றுள்ளது. 1970—71-ஆம் ஆண்டிலும்கூட இச்சங்கத்திற்கு அதே அளவு நிதி உதவி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## கர்நாடக இசை மத்தியக் கல்லூரி.

கர்நாடக இசையில் (வாய்ப்பாட்டு—கருவிமிடற்று இசை) மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான கர்நாடக இசை

மத்தியக் கல்லூரி (ஒரு அரசுக் கல்லூரி) தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. சங்கீத வித்வான் பட்டம் பெறுவதற்கான இரண்டாண்டு பாடமுறை இக்கல்லூரியில் அளிக்கப்படுகிறது. இக்கல்லூரியில் இசை ஆசிரியர் பயிற்சிப் பாடமுறையும்கூட நடத்தப்படுகிறது. ரூ. 3 லட்சம் செலவில் இக்கல்லூரி மாணவர்களுக்காக மாணவர் இல்லம் கட்டுவதற்கான விவரமான திட்டங்களும், மதிப்பீடுகளும் 1969-70-ஆம் ஆண்டில் ஏற்பளிக்கப்பட்டன. இதை நிறைவேற்றுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## VI கைவினைப் பணியாளர் பயிற்சித் திட்டங்கள்

தொழில் நுட்ப ஆற்றல் கிடைப்பதைப் பொறுத்துத்தான் இத்திட்டங்களின் வளர்ச்சி அமைந்துள்ளது. இம்மாநிலத்தின் விரைந்த தொழில் முன்னேற்றம் காரணமாக, கைவினைப் பணியாளர் பயிற்சியின் முக்கியத்துவம் அதிகரித்துள்ளது. மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தின் போதும் 1966-67, 1967-68, 1968-69 ஆண்டுத் திட்டங்களின்போதும் மாநில வரவு-செலவுத் திட்டத்திலும், மாநில திட்டங்களிலும் இது எதிரொலிக்கின்றது. இம்மாநிலத்தில் கைவினைப் பணியாளர் பயிற்சித் திட்டம், 1968-69 வரையில் மத்திய அரசுத் திட்டமாக இருந்து வந்தது. 1969-70 ஆண்டுத் தொடக்க முதற்கொண்டு, இத்திட்டம் மத்திய அரசுத் திட்டமாக இருப்பது நின்றுவிட்டது. நடப்பாண்டில் இத்திட்டத்தின்கீழ்ப் பெரும்பாலும் முந்திய ஆண்டுத் திட்டங்களில் நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்பட்ட திட்டங்களை முடிக்க கருதப்படுகிறது. வருவாய்க் கணக்கில் கண்டுள்ள செலவினம் திட்ட நிதி ஒதுக்கத்திற்குப் புறம்பானதாகக் கருதப்படும்.

2. 1—11—1956 அன்று இந்திய அரசிடமிருந்து கைவினைப் பணியாளர் பயிற்சித் திட்டத்தை மாநில அரசு மேற்கொண்டதிலிருந்து, அத் திட்டத்தின்கீழ் பல்வேறு பணிகள் குறித்த செலவு கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது :—

| | இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம். | மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம். | 1966–67 ஆண்டுத் திட்டம். | 1967–68 ஆண்டுத் திட்டம். |
|---|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| 1 தொழிற் பயிற்சி .. | 141·20 | 345·10 | 130·00 | 151·09 |
| 2 வேலை பயில்வோர்க்காக பயிற்சி. | 5·02 | 52·00 | .. | .. |
| 3 மாலை நேர வகுப்புகள் நடத்துதல். | 1·45 | 3·90 | .. | .. |
| 4 கிராமப் பயிற்சி நிறுவனங்கள் | .. | .. | .. | .. |
| மொத்தம் .. | 147·67 | 401·00 | 130·00 | 151·09 |





| | 1968–69 ஆண்டுத் திட்டம். | நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் (தற்காலிகமானது.) | 1969–70 திட்டநிதி ஒதுக்கம். | 1970–71 திட்டநிதி ஒதுக்கம் (திட்டமிடப்பட்டுள்ளது). |
|---|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| 1 தொழிற் பயிற்சி .. | 125·10 | 164·10 | 12·72 | 8·18 |
| 2 வேலை பயில்வோர்க்கான பயிற்சி. | .. | 40·00 | 7·00 | 8·21 |
| 3 மாலை நேர வகுப்பு நடத்துதல். | .. | 6·23 | .. | 0·19 |
| 4 கிராமப் பயிற்சி நிறுவனங்கள் | .. | 10·00 | .. | .. |
| மொத்தம் .. | 125·10 | 220·33 | 19·72 | 16·58 |

("109. மூலதனச் செலவு" என்ற தலைப்பில் சேர்க்கப்பட்ட செலவுத் தொகைகளும் மேற்குறிப்பிட்ட தொகைகளில் அடங்கும்.)

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் அடுத்துவந்த ஆண்டுத் திட்டங்கள் மூன்றிலும் இத்திட்டத்தை விரிவுபடுத்துவது குறித்து வலியுறுத்தலில் ஒரு மாறுதல் ஏற்பட்டுள்ளதை இந்த அட்டவணையின் மூலம் காணலாம்.

3. இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்களிலும் அடுத்து வரும் ஆண்டுத் திட்டங்கள் மூன்றிலும் பயிற்சி வசதிகள் விரிவுபடுத்தப்பட்டதைக் கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் காட்டுகின்றன :—

| (1) | இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (2) | மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் (3) | 1966-67 ஆண்டுத் திட்டம் (4) | 1967-68 ஆண்டுத் திட்டம் (5) | 1968-69 ஆண்டுத் திட்டம் (6) |
|---|---|---|---|---|---|
| 1 தொழிற் பயிற்சி— | | | | | |
| தொழிற் பயிற்சி நிறுவனங்கள் எண்ணிக்கை. | 10 | 30 | 31 | 31 | 31 |
| இடங்களின் எண்ணிக்கை | 3,368 | 9,592 | 12,608 | 13,112 | 13,112 |
| 2 வேலை பயிலுவோர்க்கான பயிற்சி— | | | | | |
| வேலை பயின்றோர் எண்ணிக்கை. | 550 | 2,600 | 2,850 | 1,975 | 2,173 |
| 3 மாலை நேர வகுப்புகளில் பயின்ற பணியாளர்கள். | 400 | 900 | 900 | 900 | 900 |

நான்கு இடங்களிலுள்ள தொழிற் பயிற்சி நிறுவனங்களில் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இந்த நிறுவனங்களில் கீழே குறிப்பிட்டுள்ள தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.—

*(1) கருமார் தொழில், இணைப்பு வேலை (Fitting)*

*(2) செப்புத் தொழில், தகர வேலை.*

தற்போது நான்கு தொழிற் பயிற்சி நிறுவனங்களில் மொத்தம் 117 பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 10 வீதம் பயிற்சி உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இவ்வேலைத் திட்டத்திற்காகும் செலவு ஐந்தாண்டுத் திட்ட வரைவு எல்லைக்குப் புறம்பாகக் கொள்ளப்படுகிறது. இவ் வேலைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக 1969-70-ஆம் ஆண்டுத் திட்ட மதிப்பீடு ரூ. 27,200 ஆகும். 1970-71-ஆம் ஆண்டுத் திட்ட மதிப்பீடு (திட்டமிடப்பட்டுள்ளது) ரூ. 23,900 ஆகும்.

### கிராமப் பயிற்சி நிறுவனங்கள்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்ட வரைவில், இப்போதுள்ள வேலைத் திட்டங்களை விரிவுபடுத்துதலோடு, திட்டப் பகுதிகளில் கிராமக் கைவினைஞர்கள் நலன் கருதி, கிராமப் பயிற்சி நிறுவனங்களை நிறுவும் திட்டமும் உள்ளது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நான்கு கிராமப் பயிற்சி நிறுவனங்கள் நிறுவப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வேலைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கெனத் திட்டத்தில் ரூ. 10.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### பொது.

#### (அ) பர்மா அகதிகளுக்கும், இலங்கை அகதிகளுக்கும் மறு வாழ்வு ஏற்பாடுகள்.

பர்மா அகதிகளுக்கும், இலங்கை அகதிகளுக்கும் மறு வாழ்வு ஏற்பாடுகளில் ஒன்றாக, ஒவ்வொரு தொழிற் பயிற்சி நிறுவனத்திலும் உள்ள தொழிற் பிரிவு ஒவ்வொன்றிலும் மொத்தமுள்ள இடங்களில் ஐந்து சதவீதம் இவ்வகதிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. பெற்றோருடன் வசிக்கும் பயிற்சியாளர்களுக்கு, மாதம் ஒன்றுக்குப் பயிற்சி உதவித் தொகை ரூ. 25 அளிக்கப்படுகிறது. பெற்றோரிடமிருந்து தனித்து வந்து வசிப்போருக்கு மாதம் ஒன்றுக்கு பயிற்சி உதவித் தொகை ரூ. 55 அளிக்கப்படுகிறது.



#### (இ) தொழிற் பயிற்சி நிறுவனங்கள், பயிற்சியாளர் விடுதிகள், பணியாளர் குடியிருப்புகள் ஆகியவற்றுக்கான கட்டிடங்கள் கட்டுதல்

முப்பது தொழிற் பயிற்சி நிறுவனங்களுக்குச் சொந்தக் கட்டிடங்கள் உள்ளன. இருபத்து மூன்று தொழிற் பயிற்சி நிறுவனங்களுக்கு விடுதி வசதிகள் உள்ளன. மீதம் உள்ள தொழிற் பயிற்சி நிறுவனங்களுக்குப் படிப்படியாக நிறைவேற்றும் திட்ட அடிப்படையில், நான்காவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்துள் விடுதிகள் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் இருபத்து இரண்டு தொழிற் பயிற்சி நிறுவனங்களில் பணியாளர் குடியிருப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் கால இறுதிக்குள்ளாக மீதமுள்ள தொழிற் பயிற்சி நிறுவனங்களிலும் பணியாளர் குடியிருப்புகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

#### (உ) அனைத்து இந்திய திறமைப் போட்டி.

தொழிற் பயிற்சி நிறுவனங்களில் ஆயினும் சரி, தொழில் பயிலும் காலத்தில் ஆயினும் சரி, தொழிலாளர்களுக்கான மாலை நேர வகுப்புகளில் ஆயினும் சரி, பயிற்சித் தரத்தை மேம்படுத்த இத்துறை பெரு முயற்சி மேற்கொண்டுள்ளது. குறித்த காலத்துக்கொரு முறை வேலைத் திறமை மதிப்பிடுதல், முன்னேற்றச் சோதனைகள், முறையாக அமைந்த தொழில் பழக்குதல் ஆகியவை அடங்கிய வேலைத் திட்ட வாயிலாக, தொழிற் பயிற்சி நிறுவனங்களில் அளிக்கப்படும் பயிற்சி போதிய தரமுடைத்து என்றும், இத் தரம் மேம்பட்டுள்ளது என்றும் உறுதி செய்துகொள்ள முடிகிறது. இம் மாநிலத்திலுள்ள பயிற்சியாளர்களின் தொழில் திறமை மேம்பட்டு வருகின்றதென்பது, கடந்த நான்கு "அனைத்திந்திய திறமைப் போட்டிகளின்" முடிவுகளிலிருந்து தெளிவாகத் தெரிகின்றது. அனைத்திந்திய திறமைப் போட்டியைத் தொடங்கிய காலம் தொட்டு, நடந்துள்ள ஒவ்வொரு திறமைப் போட்டியிலும் தமிழ் நாடு, ஒன்று அல்லது இரண்டு தொழிற் பிரிவுகளில் முதல் பரிசைத் தட்டிக்கொண்டு சென்றுள்ளது.

முதலாவது அனைத்திந்தியத் திறமைப் போட்டியில், நமது மாநிலம் எந்திரத் தொழிற் பிரிவில் முதலாவது ஆகவும், மின்சாரத் தொழிற் பிரிவில் இரண்டாவது ஆகவும் வந்தது. பின்னர் நடை

## தொழிற் பயிற்சி

இம்மாநிலத்தில் தற்போது 31 தொழிற் பயிற்சி நிறுவனங்களில் தொழிற்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த 31 தொழிற் பயிற்சி நிறுவனங்களில், 10 நிறுவனங்கள் இரண்டாவது திட்டக் கால இறுதியில் இருந்தன. 20 நிறுவனங்கள் மூன்றுவது திட்டக் காலத்தில் தொடங்கப்பட்டன. ஒரு நிறுவனம் 1966-67 ஆண்டு தொடங்கப்பட்டது. மூன்றுவது திட்டக்கால இறுதியில் 30 தொழிற் பயிற்சி நிலையங்களில் 9,592 மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான இடங்கள் இருந்தன. 1966-67-ம் ஆண்டு 3,016 மாணவர்களைக் கூடுதலாகச் சேர்த்துக் கொள்ள வகை செய்யப் பட்டதன் காரணமாகவும் 1967-68-ம் ஆண்டு 504 மாணவர்களைக் கூடுதலாகச் சேர்த்துக் கொள்ள வகை செய்யப்பட்டதன் காரண மாகவும் 31 தொழில் பயிற்சி நிலையங்களில் சேர்த்துக்கொள்ளப் படத்தக்க மாணவர்களின் எண்ணிக்கை 13,112 ஆக அதிகரிக்கப் பட்டுள்ளது. நான்காவது திட்டக்கால அளவில் தற்போதுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் 1,000 மாணவர்களைக் கூடுதலாகச் சேர்த்துக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை 1969-70, 1970-71-ஆம் ஆண்டில் செயல்படுத்து வதற்காக மாநில வரவு-செலவுத் திட்டத்தில் மானியக் கோரிக்கை 13ல் "28. கல்வி" என்னும் தலைப்பில் கீழ்க்காணும் வகையில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது :—

| | 1969–70 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 1970–71 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| திட்ட நிதி ஒதுக்கம் .. .. .. | 2·30 | 1·64 |
| திட்டத்தின் கீழ் வராத நிதி ஒதுக்கம் .. | 92·93 | 97·33 |
| மொத்தம் .. | 95·23 | 98·97 |

### தொழில் பழகுவோர் பயிற்சித் திட்டம்.

1961-ஆம் ஆண்டு, தொழில் பழகுவோர் பயிற்சித் திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள தொழில் பழகுவோருக்கு பயிற்சியளிக்க வேண்டியது தொழில் நிறுவனங்களின் கடமை யாகும். தற்போது இச்சட்டத்தின் கீழ் 195 தொழில்கள் வருகின்



றன. 365 நிறுவனங்கள், இச்சட்டத்தையொட்டி, நடந்து வரு கின்றன. 1969, செப்டம்பர் இறுதி வரையில் முழுநேர, பகுதி நேர தொழில் பழகுவோர் 2,111 பேர் தொழில் பயிற்சி பெற்று வருகின்றனர். மேலும் பல துறைகளை இத் திட்டத்தின் கீழ் கொண்டுவருவதன் மூலமும் நான்காவது திட்டக் காலத்தில் மேலும் பல தொழில்களை இச்சட்டத்தின் வரையறைக்குள் கொண்டு வருவதன் மூலமும், நான்காவது திட்டக் காலத்தில் ரூ. 40 லட்சம் செலவில் கூடுதலாக 3,000 தொழில் பழகுவோருக்கு பயிற்சியளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1969-70, 1970-71-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் முறையே இத் திட்டத் திற்காக ரூ. 7 லட்சமும், ரூ. 8.21 லட்சமும் நிதி ஒதுக்கம் செய்யப் பட்டுள்ளன.

### தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்காக மாலை வகுப்புகள்.

தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் தங்கள் நூலறிவை மேம்படுத்திக்கொள்வதற்கு வகை செய்வதே இத் திட்டத்தின் நோக்கமாகும். தற்போது இத் திட்டம் சென்னை மாநகரில் இரு இடங்களிலும், மதுரையில் ஓர் இடத்திலும், கோயம்புத்தூரில் ஓர் இடத்திலும் செயல்படுத்தப்படுகின்றது. ஒவ்வொரு நிலையத்திலும் 225 தொழிலாளர்களுக்கு வகுப்புகள் நடத்துவதற்கான வசதிகள் உள்ளன. இத்திட்டத்தை நான்காம் திட்டக் காலத்தில் மேற்கொண்டும் விரிவுப்படுத்த திட்டமிடப் பட்டுள்ளது. 1970-71-ஆம் ஆண்டில் இத் திட்டத்தை விரிவு படுத்துவது குறித்த முதல் நடவடிக்கையாக அம்பத்தூர் தொழிற் பயிற்சி நிலையத்தில் 100 தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான வசதிகளைச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்காக நான்காவது திட்டத்தில் ரூ. 6.23 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### பொற்கொல்லர்கள், கைத்தறி நெசவாளர்கள் முதலியோர்களுக் கான பகுதி நேரப் பயிற்சித் திட்டம்.

பொற் கொல்லர்கள், வடிவமைப்புத் தொழிலாளர்கள், கைத் தறி நெசவாளர்கள், ஆகியோர் தங்கள் தொழிலைத் திறம்பட அமைத்து, நலம்பெற வகை செய்வதற்காக மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சிறப்புத் திட்டமொன்று தொடங்கப் பட்டது. இத் திட்டம் திருச்சி, மதுரை, சேலம், பேட்டை ஆகிய

## தமிழ் நாடு சட்டப் பேரவை

### வியாழக்கிழமை, 1970 மார்ச் 12.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### *Agitation by Dravida Kazhagam.*

* 329 *Q.*—Thiru K. SAHADEVA KANDER :
Thiru K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government are aware of the move of the Dravida Kazhagam to launch an agitation over the entry into Sanctum Sanctorum in Hindu temples?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஆம். ஆனால், முதலமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க, திராவிடக் கழகத் தலைவர் திட்டமிட்ட தமது கிளர்ச்சியைத் தள்ளிப்போட்டுள்ளார்.

**திரு. கே. விநாயகம் :** தலைவர் அவர்களே, திராவிடக் கழகத் தலைவராகிய பெரியார் அவர்கள் எந்தக் காரணத்திற்காக இது மாதிரியொரு இயக்கத்தைத் துவக்கவேண்டும்? கர்ப்பகிருகத்திற்குள்ளே இருக்கின்ற ஆண்டவனைத் தரிசிப்பவர்கள் நேரடியாகப் போய் ஆண்டவனையே ஆலிங்கனம் செய்ய வேண்டும் என்று சொல்லப்படுகிறதே அது உண்மையா? அவர் என்ன கருத்தைத் தங்களுக்குச் சொன்னார்கள்? தாங்கள் எதைச் சொல்லி அதை இப்பொழுது தடுத்து நிறுத்தியிருக்கிறீர்கள் என்று சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஆண்டவனை அருச்சிப்பதிலும் பூசிப்பதிலும் ஒரு குறிப்பிட்ட சமூகத்தார்தான் இருக்க வேண்டும் என்கிற பாகுபாடு இருத்தல் ஆகாது என்ற அடிப்படையிலேதான் இந்தக் கிளர்ச்சி துவக்கப்படுகிறது என்று அவர் அறிவித்ததன்பேரில், ஆண்டவனை அருச்சனை செய்வதற்கு அல்லது அபிஷேகம் போன்றவைகளைச் செய்வதற்குத் தகுதி படைத்தவர்கள், அவைகளிலே தேர்வு செய்யப்பட்டுத் தகுதி அடைகின்றவர்கள் செய்யலாம் என்ற அளவுக்கு நாம் சட்டங்களிலே திருத்தம் கொண்டுவரமுடியும் என்கிற நிலையை அவர்களுக்கு எடுத்து விளக்கியதற்கிணங்க அவர்கள் தம்முடைய கிளர்ச்சியை நிறுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

பெற்ற போட்டிகளில் தொழில் திறமை மேலும் உயர்ந்தது. கீழ்க் குறிப்பிட்டுள்ள அனைத்திந்தியத் திறமைப் போட்டிகளில் ஒவ் வொன்றிலும் கீழ்க்குறித்துள்ளபடி இரண்டு தொழிற் பிரிவுகளில் தமிழ்நாடு முதல் இடம் பெற்றுள்ளது :—

| | | |
|---|---|---|
| மூன்றாவது போட்டி | .. | பற்றவைப்பவர், கடைசல் பிடிப்பவர். |
| நான்காவது போட்டி | .. | இயந்திரப் பணியாள், மின்சாரப்பணியாள். |
| ஐந்தாவது போட்டி | .. | கடைசல் பிடிப்பவர், மின்சாரப் பணியாள். |
| ஆறாவது போட்டி | .. | மோட்டார் மெகானிக், மின்சாரப் பணியாள். |

மொத்தமாகப் பார்க்குமிடத்தும் இந்தியாவிலேயே "சிறந்த மாநிலம்" என்று அறிவிக்கப்பட்ட பெருமையும் நமது மாநிலத்தையே சாரும். தொடர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கு, அதாவது 1965, 1966-ஆம் ஆண்டுகளுக்கு குடியரசுத் தலைவரின் சுழற் கேடயம் பெறும் சிறப்பும் தமிழ்நாட்டிற்குக் கிடைத்துள்ளது. 1969 செப்டெம்பரில் நடந்த ஆறாவது அனைத்திந்தியத்திறமைப் போட்டியிலும் நமது மாநிலத்திற்குக் குடியரசுத் தலைவரின் கேடயம் கிடைத்துள்ளது.

வேலை வாய்ப்பு, பயிற்சித் துறை, இம் மாநிலத்தில் உள்ள தனி யார் தொழில் பள்ளிகளில் பணியை மேற்பார்வையிடுகிறது. மானியம் பெறும் 58 தொழிற்பள்ளிகளுக்கு இத் துறையினால் ஏற்பளிக்கப்பட்டுள்ளது. தொழிற்பள்ளிகளை முறைப்படுத்து வதற்கான விதி முறைக் கோவையின் கீழ் இந்தப் பள்ளிகளைப் பேணுவதற்கும், கருவிகளுக்கும், கட்டிடங்களுக்கும் மானியங்கள் அளிக்கப்படுகின்றன.

## VII தமிழ் வளர்ச்சித் துறை.

1965-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் இரண்டாம் நாள் தமிழ் வளர்ச்சித் துறை தோற்றுவிக்கப்பட்டது. இத்துறை தமிழ் வளர்ச்சிக் குறித்த எல்லா அலுவல்களையும் கவனித்து வருமென உத்தரவிடப்பட்டது. இத் துறையின் மேற்பார்வையில் பின்வரும் அமைப்புகள் தமிழ் வளர்ச்சி இயக்குநரின் ஆட்சி வரம்புக்குட் பட்டு இயங்கி வருகின்றன.

(1) ஆட்சிமொழிக் குழு.

(2) தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம்.

(3) தமிழ் வெளியீட்டுக் கழகம் (4—3—1970 வரை).



### ஆட்சி மொழிக் குழு.

2. தமிழக ஆட்சி மொழிச் சட்டம் 1956-ஆம் ஆண்டில் நிறை வேற்றப்பட்டு 1957-ஆம் ஆண்டில் ஆளுநரின் இசைவுடன் சட்ட மாயிற்று. அதன்படி அரசு அலுவலகங்களில் தமிழை நடை முறைப்படுத்துவது குறித்து ஆலோசனை வழங்குவதற்காக ஆட்சி மொழிக் குழு அமைக்கப்பட்டது. இக்குழுவில் தற்போது ஒரு செயலாளர், ஒரு தனி அலுவலர் (ஆய்வு), ஒரு தனி அலுவலர் (மொழி பெயர்ப்பு) ஆகிய அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர்.

3. ஆட்சிமொழித் திட்டத்தை அரசு அலுவலகங்களில் படிப் படியாகச் செயல்படுத்தும் முறைப்படி 1963-க்குள் சில விலக்கு களுடன் மாவட்ட நிலை அலுவலகங்களில் எல்லா நடவடிக்கை களிலும் தமிழே பயன் படுத்தப் பெற வேண்டும். அதன்படி 1969-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27-ம் தேதியில் துறைத் தலைமை அலுவலகங்களில் தமிழ்த் திட்டத்தின் மூன்றும் நிலை வரை செயல் படுத்தப்பட்டது. தலைமைச் செயலகத்தின் நிதி, சட்டம், சட்டப் பேரவை, சட்டமன்றம் ஆகியதுறைகள் நீங்கலாக எல்லாத் துறை களிலும் இயன்ற மட்டும் எல்லா அலுவலக நடைமுறைகளுக்கும் தமிழைப் பயன்படுத்தவேண்டுமென்று உத்தரவிடப்பட்டது. சிவில், குற்ற விசாரணை நீதி மன்றங்கள் யாவற்றிலும் வாக்குமூலங்களைத் தமிழிலேயே பதிவு செய்யவேண்டுமென இந்த ஆண்டு ஆணையிடப் பட்டுள்ளது. மேற்கூறியவாறு தமிழ்த் திட்டம் அலுவலகங்களில் செயல் படுத்தப்படுகிறதா என்று ஆய்வு செய்யவும் தக்க ஏற்பாடு கள் செய்யப்பட்டுள்ளன. தமிழ் திட்டத்தை அலுவலகங்களில் செயற்படுத்த விதிகள், விதித் தொகுப்புகள், நடைமுறை நூல்கள் மற்றும் படிவங்கள் முதலியவற்றை தமிழாக்கம் செய்யவேண்டியது இன்றியமையாதது. இவ்வேலையும் நடைபெற்று வருகிறது. 1969-70-ஆம் ஆண்டில் சட்டங்கள், விதிகள், நடைமுறை நூல்கள் ஆகிய வற்றில் பத்து தமிழில் அச்சிடப்பெற்று வழங்கப்பட்டன.

செயலகத் துறைகளில் தமிழ்த் திட்டத்தை செயல்படுத்துவதில் பயன்படச் சிறப்புச் சொற்கள் துணை அகராதி ஒன்று வெளியிடப் பட்டுள்ளது. 1962-ல் வெளியிடப்பட்ட ஆட்சிச் சொல்லகராதி மறு ஆய்வு செய்யப்பட்டுத் தேவையான திருத்தங்கள் சேர்ப்புக் களுடன் அதன் மூன்றும் பதிப்பினை வெளியிட ஒப்பளிக்கப்பட் டுள்ளது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படி எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் அப்படிப்பட்ட கல்லூரிகளில் அர்ச்சகர்களாவதற்கான தேர்ச்சியைப் பெறலாம், பெறுவதிலே தவறு இல்லை என்பதுதான் இந்த அரசை நடத்துகிற எங்களுடைய கொள்கையாகும். அதற்குக் கேரளத்திலும் ஒரு உதாரணம் இருப்பதாக எடுத்துக்காட்டியதற்கு நன்றி.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, தமிழகத்திலே 20-ஆம் நூற்றாண்டிலேகூட கோயில்களுக்குள்ளே நுழையும்பொழுது இடுப்பிற்குக் கீழே மட்டுந்தான் ஆடை இருக்கவேண்டும், இடுப்பிற்கு மேலே ஆடை இருக்கக்கூடாது என்று வற்புறுத்தப்படுகிறதே, இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இதெல்லாம் கோயிலுக்குப் போகவேண்டியவர்கள் படவேண்டிய கவலை.

**திரு. கே. விநாயகம்:** சார், நோக்கம் நல்ல நோக்கமாக இருந்தாலும் கூட இதையெல்லாம் பாதுகாக்க வேண்டிய அவசியத்தின் அடிப்படையிலே எல்லா பக்கலும், அர்ச்சனை செய்கிறவர்களும் போகலாம் என்று வைத்துவிட்டால் விக்ரகங்களுக்குப் போடப்பட்டிருக்கிற விலைமிகுந்த நல்ல ஆபரணங்கள் இருக்குமே ; இப்பொழுது ஒரு சாரார் அதற்குப் பொறுப் பேற்றிருக்கிறார்கள், களவுபோய்விட்டால் அவர்களைப் பிடிக்கலாம் தண்டிக்கலாம் என்று இருக்கிறதே, இந்த முறையை மாற்றி எல்லோரும் போகலாம் என்று சொன்னால்--ஆலிங்கனம் செய்யலாம் என்றுகூட சொல்லக்கூடும்--பாதுகாப்புக் கொடுப்பதற்கு என்ன வழிவகைகள் செய்யப்படும் ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எல்லோரும் போகலாம் என்பதற்கும் எல்லா வகுப்பினரும் போகலாம் என்பதற்கும் உள்ள வித்தியாசத்தை நான் சொன்னேன். சில கோயில்களில் நிறைய ஆபரணங்கள், அணிமணிகள், ஏராளமான சொத்துக்கள், இன்னும் சொல்லப்போனால் அங்கே இருக்கிற சிலைகள்கூட கோமேதகம், மரகதம் போன்ற விலையுயர்ந்த பொருள்களால் செய்யப்பட்டவையாக இருக்கின்றன. ஆகவே பொறுப்பாக அதிகாரம் பெற்றவர்கள்தான் செல்லவேண்டுமென்பதை அரசு ஏற்றுக்கொள்கிறது. அப்படி அதிகாரம் பெற்றவர்களாக இருப்பவர்கள் ஒரு குறிப்பிட்ட வகுப்பினராகத்தான் இருக்க வேண்டுமா என்பதற்குத்தான் இந்த அரசு விடைகாண விரும்புகிறது.

### *Arrests in train stopping incidents.*

* 330 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether a number of arrests have been made in this State in connection with the Communist Party of India agitation with train stopping incidents about the 27th May 1969 ; and

(b) if so, the details thereof ?



**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) ஆம்.

(இ) 27—5—1969-ஆம் தேதியன்று, சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் 11 பேரும், கோயம்புத்தூர் சந்திப்பில் 45 பேரும், மதுரை சந்திப்பில் 25 பேரும், ராஜபாளையம் ரயில் வண்டி நிலையத்தில் 18 பேரும், சேலம் சந்திப்பில் 12 பேரும், திருச்சிராப் பள்ளி சந்திப்பில் 27 பேரும், கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிக் கைதுசெய்யப்பட்டவர்கள் எப்பொழுது விடுதலை செய்யப்பட்டார்கள் ? காலையில் கைது, மாலையில் விடுதலை என்ற கொள்கையை இந்த அரசாங்கம் தோழமைக் கட்சிக்காரர்களுக்கு மட்டும் கடைப்பிடிக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தோழமையாக இருக்கிற கட்சிகளுக்கு மாத்திரம் அல்ல. பிரச்சினைகளின் தன்மையை அனுதாபத்தோடு அணுகவேண்டுமென்ற முறையில் எல்லாப் பிரச்சினைகளிலும் இந்த அரசு அணுகுகிறது.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களால் நடத்தப்பட்ட இந்தப் போராட்டம் தமிழ்நாட்டிலே மூடப்பட்ட பஞ்சாலைகளைத் திறக்கவேண்டுமென்றுதான், அதற்காக மத்திய அரசாங்கத்தைக் கண்டிப்பதற்காகத்தான் நடத்தினார்கள். மத்திய அரசாங்கத்தைக் கண்டிப்பதற்காக நடத்திய காரணத்தினால்தான் இந்த அரசாங்கம் அனுதாபத்தோடு நடந்துகொண்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மத்திய சர்க்காரை எதிர்த்தார்கள் என்பதற்காக அல்ல. ஒரு பிரச்னை எந்தவகையிலே அணுகப்படுகிறது என்பதைப் பொறுத்துத்தான் இந்த அரசு அவற்றினைத் தீர்மானிக்கிறது. பொதுவாகத் தொழிலாளர்கள் பிரச்னை, மாணவர்கள் பிரச்னை இவற்றில் உணர்வின் அடிப்படையில் பல காரியங்கள் நடைபெற்றால் அந்த உணர்வை மதித்து இந்த அரசு பல காரியங்களை நடத்திவருகிறது.

**திரு. இராம. அரங்கண்ணல் :** எத்தனை பஞ்சாலைகள் திறக்கப்பட்டன? எத்தனை பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைத்திருக்கிறது என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மூடப்பட்டிருந்த பஞ்சாலைகளின் கணக்கு 27. அரசாங்கத்தினால் திறக்கப்பட்டவை 4 ; அரசின் உதவியோடு ஆலை உரிமையாளர்களால் திறக்கப்பட்டவை 7 ; அரசின் உதவியோடு தனியார் எடுத்துநடத்துவது 2 ; மேலும் அரசு நடத்த எண்ணியுள்ளது 2 ; ஆக 13 ஆலைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் இரண்டு ஆலைகள் விரைவிலே திறக்கப்பட இருக்கின்றன. ஆலைகள் மூடப்பட்டதன் காரணமாக 13,000 தொழிலாளர்கள் வேலையிழந்தார்கள். அந்த 13,000 பேர்களில் 4,000 என்ற அளவுக்குத் தவிர, மற்ற 9,000 பேர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள்.

## Agricultural University.

*331 Q.—Thiru K. VINAYAKAM :
Thiru S. RAMACHANDRAN :
Thiru S. DURAISAMY :
Thiru R. MANICKAVACHAGAM : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(a) whether the Government of Tamil Nadu has decided to start an Agricultural University in our State; and

(b) if so, how soon?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) & (இ) தமிழ் நாட்டில் வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஒன்றைத் துவக்குவது குறித்த செயற்குறிப்பை அரசு கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ளது. பல்கலைக்கழகம் அமைக்கப்படவிருக்கிற இடம், தொடங்கவிருக்கும் காலம், பிற விவரங்கள் ஆகியவை, தொடக்க ஏற்பாடுகள் முடிவு செய்யப்பட்ட பின்னர், விரைவில் தீர்மானிக்கப்படும்.

**திரு. கே. விநாயகம் :** கொள்கையளவிலே இந்த அக்ரிகல்சுரல் யுனிவர்சிடி துவக்கப்படுமென்று பட்ஜெட் ஸ்பீச்சிலே வந்தது. அதற்கு வேண்டிய பூர்வாங்கமான வேலைகள், ப்ரிலிமினரில் எல்லாம் நடத்தப்பட்டு இருக்கிறதா? துவக்கினால் ஜூன் மாதத்திலே துவக்கவேண்டும், இல்லையென்றால் காலதாமதம் ஆகும். ஆகவே, அதற்குவேண்டிய திட்டங்களைப் போட்டு விரைவிலே செயல்படுத்துவதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** பல்கலைக் கழகம் கொண்டுவருவதற்கு முன்னால் சட்டமன்றத்திலே அதற்காக ஒரு மசோதா கொண்டுவரவேண்டும். அந்த மசோதாவை இப்பொழுது தயார்செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த மசோதாவைக் கொண்டுவந்து நிறைவேற்றிய பிறகு நிதி ஒதுக்கீடு செய்து, என்னென்ன வகையிலே இவற்றை விரைவாகச் செய்யலாம் என்று பார்த்து நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இந்த வேளாண்மைப் பல்கலைக்கழகம் பஞ்சாபிலே நன்றாக இயங்கி வருகிறது. அதுபோல் இங்கேயும் துவங்குவதற்கு டெல்லி அரசிடமிருந்து ஏதாவது அனுமதி பெறவேண்டியிருக்கிறதா ? அப்படியானால் அது கிடைத்துவிட்டதா ? இந்த வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டால் இப்பொழுது நடைபெற்றுவருகின்ற பசுமைப் புரட்சிக்கு மேலும் உறுதுணையாக இருக்கும் என்ற காரணத்தினால் அதனை விரைவிலேயே தொடங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?



**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** டெல்லி அரசாங்கம் ஏற்கனவே இந்தப் பல்கலைக்கழகம் இங்கே அமைய வேண்டும் என்றுதான் வற்புறுத்திக்கொண்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சமீபத்திலே பஞ்சாப்புக்குச் சென்றபொழுது அங்கேயிருக்கிற துணைவேந்தரோடு கலந்துபேசி, லூதியானப் பல்கலைக்கழகத்தைப் பார்வையிட்டும் வந்திருக்கிறார்கள். 1968-ஆம் ஆண்டு வேளாண்மை இயக்நர், டீன், அக்ரிகல்சுரல் காலேஜ், டைரக்டர் ஆப் அனிமல் ஹஸ்பென்ட்ரி, டைரக்டர் ஆப் வெட்டரினரி சர்வீஸஸ், டீன், அக்ரிகல்சுரல் காலேஜ், மதுரை, அக்ரோநாமிஸ்ட், அக்ரிகல்சுரல் காலேஜ், மதுரை இவர்கள் ஆறு பேர்களைக்கொண்ட குழுவை நியமித்து இன்னும் பல பல்கலைக்கழகங்களுக்குச் சென்று பார்வையிட்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் கொடுத்திருக்கிற குறிப்புகளின் மீதும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்று பார்வையிட்டுவந்த விபரங்களை வைத்துக்கொண்டும் புதிய மசேதாவைத் தயார்செய்து கொண்டிருக்கிறோம். இந்த மசோதாவை நிறைவேற்றியதற்குப் பிறகு எப்படியெல்லாம் நடத்தலாம் என்பதுபற்றி முடிவெடுக்கலாம்.

**திரு. சு. துரைசாமி :** தலைவர் அவர்களே, கோவையிலே வேளாண்மைக் கல்லூரி இருக்கிறது. அங்கே போதுமான வசதிகள் இருக்கின்ற காரணத்தினால் இந்த நடைமுறை ஆண்டிலேயே இந்தப் பல்கலைக்கழகத்தை அங்கே துவக்குவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** கோவையிலே இதற்கு வாய்ப்புகள் இருப்பதால்தான் அங்கே இந்தப் பல்கலைக்கழகத்தைக் கொண்டுவரவேண்டுமென்று அரசாங்கம் முடிவெடுத்திருக்கிறது. முதலிலே இதற்கான மசோதாவை நிறைவேற்றவேண்டும். அதற்காகத்தான் நான் முதலிலேயே சொன்னபடி மசோதாவைத் தயார் செய்து கொண்டிருக்கிறோம். இந்தச் சட்டமன்றத் தொடர் கூடத்திலேயே கொண்டுவரலாம் என்று நம்புகிறேன்.

## ஏம்பலில் அரிசன விடுதி

*332 வினா—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருமயம் கூற்றத்திலுள்ள ஏம்பலில் பயிலும் மாணக்கருக்கு வசதியாக அங்கு அரிசன நல விடுதியொன்று அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** ஏம்பலில் ஒரு அரசினர் மாணவர் இல்லம் துவக்கும் குறிப்பு அதைப் போன்ற மற்ற செயற்குறிப்புகளுடன் தகுதிக்கேற்ப நாளடைவில் அரசினரால் பரிசிலனை செய்து ஆணை விடுக்கப்படும்.

[1970 மார்ச் 11

**தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம்.**

4. தமிழ் வளர்ச்சி குறித்த எல்லாச் செயல்களையும் ஆராய்ந்து தமிழ் மொழி ஒரு நவீன மொழியாக வளர்ச்சியுறும் வகையில் அரசுக்கு ஆலோசனைகள் கூறும் நோக்குடன் 1959-ல் இம்மன்றம் அமைக்கப் பெற்றது.

தமிழ் எழுத்துக்களுக்குச் சரியான ரோமன் எழுத்துக்களை உருவாக்குதல், எழுத்துச் சீர்திருத்தம் செய்தல், தமிழ் மக்களின் அதிகார பூர்வமான வரலாற்றினைத் தயாரித்தல், தந்தி முறை தட்டச்சினை ( Telepr nter ) உருவாக்குதல், தமிழில் தந்திச் செய்திகள் அனுப்ப ஏற்பாடு செய்தல் முதலிய கருத்துக்களைத் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் ஆய்ந்து வருகின்றது.

**தமிழ் வெளியீட்டுக் கழகம்,**

5. தமிழ் வெளியீட்டுக் கழகம் 1962ல் தொடக்கப் பெற்றது. கல்லூரி படிப்புக்குத் தேவையான பாடங்களைத் தமிழில் வெளியிடுவது இக்கழகத்தின் தலையாய நோக்கம். மேலும் மக்களுக்கு பொதுவாகப் பயன்படும் நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிடுவதையும் இக்கழகம் செய்து வருகின்றது. இதுவரை இக்கழகம் 200-க்கும் மேலான நூல்களை வெளியிட்டுள்ளது. கடந்த ஆண்டு பி.எஸ்.சி. பட்டப் படிப்புக்கான 30 நூல்களை வெளியிட்டது. கல்லூரிப் படிப்புக்கான பாட நூல்களை வட்டார மொழிகளில் வெளியிடுவதற்கென மைய அரசு தீட்டியுள்ள ஒரு கோடித் திட்டத்தின் கீழ் 500 நூல்கள் வெளியிடுவதற்கான திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. சங்கங்களின் பதிவு சட்டத்தின் கீழ் "தமிழ்நாடு பாட நூல் பதிப்புக் கழகம்" பதிவு செய்யப்பட்டுள்ளது. கல்லூரிப் பாட நூல் வெளியிடுவது பற்றி தமிழ் வெளியீட்டுக் கழகம் ஆற்றி வந்த பணிகளனைத்தும் தமிழ்நாடு பாட நூல் பதிப்புக் கழகத்துக்கு மாற்றப்பட்டுவிட்டன.

**தமிழ் வளர்ச்சி பிரிவு.**

6. இப்பிரிவில் கீழ்க்கணும் திட்டங்கள் செயல்படுத்தப்பெற்று வருகின்றன. தமிழில் சிறந்த நூல்களை வெளியிடுவதற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் ஆசிரியர்களுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டு வருகின்றது. அரசுக்கு இது குறித்து வரும் விண்ணப்பங்களை



1970 மார்ச் 11]

ஆய்ந்து பரிந்துரைக்க வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இம்முறையில் திரு. பழனிச்சாமிப் புலவருக்கு "ஓதாளர் குறவஞ்சி" என்னும் நூலை வெளியிட ரூ. 1,125 அளிக்கப்பட்டது.

தமிழ்மொழியில் நல்ல நூல்கள் வெளிவருவதை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு சிறந்த நூல்களுக்குப் பரிசு அளிக்கும் திட்டமான்று செயல்பட்டு வருகின்றது. ஆண்டொன்றுக்கு இத்திட்டத்திற்கென ரூ. 10,000 செலவாகின்றது.

தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தமைக்காகப் பேராசிரியர் திரு. சி. இலக்குவனார் அவர்களுக்கு ரூ. 5,000 மானியமாக வழங்கப்பெற்றது.

7. **சிறுவர்க்கான கலைக் களஞ்சியம் தயாரித்தல்.**—சென்னையிலுள்ள தமிழ்வளர்ச்சிக் கழகம், "தமிழ் கலைக் களஞ்சியம்", "சிறுவர் கலைக் களஞ்சியம்", "தமிழ் கலைக் களஞ்சியம் முதல் துணைப் பதிப்பு" ஆகிய முக்கிய நூல்களை வெளியிடும் பணியில் ஈடுபட்டுள்ளது. இதற்கு மைய அரசும் மாநில அரசும் பொருளுதவி செய்து வருகின்றன.

8. **தென் மொழிகள் புத்தக நிறுவனம்.**—"யுனெஸ்கோ கூரியரைத்" தமிழில் மேற்படி நிறுவனம் வெளியிட்டு வருகின்றது. இதற்கென அரசு 1967-68-ஆம் ஆண்டிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு ரூ. 24,500 பொருளுதவி செய்து வருகின்றது. மேலும் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு மொழிகளிலும் இந் நிறுவனம் நூல்களை வெளியிட்டு வருகின்றது. அதற்கு உதவியாக ஆண்டு ஒன்றுக்கு இவ்வரசு ரூ. 12 ஆயிரம் வீதம் பொருளுதவி செய்து வருகின்றது.

9. **பிற மாநிலப் பல்கலைக் கழகங்களுக்கு நிதியுதவி.**—வெளி மாநிலங்களில் உள்ள பல்கலைக் கழகங்கள் பலவற்றில் தமிழ்ப் பேராசிரியர் பதவியை ஏற்படுத்தவும் மேற்படிப்பு நிலையில் தமிழ் மொழிக் கல்வியை ஊக்குவிக்கவும் தமிழக அரசு ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 4,000 முதல் ரூ. 25,000 வரை நிதியுதவி செய்து வருகின்றது. கடந்த சில ஆண்டுகளாக அவ்வாறு நிதியுதவி பெற்ற பல்கலைக் கழகங்கள் அலகாபாத்து, கேரளா, கல்கத்தா, உஸ்மானியா, வெங்கடேஸ்வரா ஆகியவையாகும்.

**திரு. டி. மார்டின் :** பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி கடலோரப் பகுதியில் முத்துக்கள் கிடைப்பதைப் போன்று உவரி கடலோரப் பகுதிகளில் விலை உயர்ந்த பவளங்கள் கிடைப்பதற்கு அறிகுறியாக சிறு சிப்பிகள் போன்றவை கடலோரத்தில் ஒதுங்குவதாக மீனவர்கள் குறிப்பிடுகிறார்கள். இதைப் பற்றி ஆய்வு செய்து விலை உயர்ந்த பவளங்கள் அங்கு இருக்குமானால் அதைக் கண்டுபிடித்து எடுக்க அரசு தரப்பில் முன்வருவார்களா?

**மாண்புமிகு திருகு செ. மாதவன் :** இதைப்பற்றி ஏற்கனவே ஜியாலஜிகல் துறையினர் ஆய்வு செய்தனர். அந்த ஆராய்ச்சியின் பேரில் பவளங்கள் கிடைப்பதாக, பொருளாதார வசதிக்கு ஏற்றவாறு கிடைப்பதாக ஆதாரம் இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். During the survey the occurrence of garnet sands (Iron Aluminimum Silicates) இருப்பதாகத்தான் கூறியிருக்கிறார்கள்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** அழகாய் முத்துக் குவியும் கடல்கள் என்று புலவர்களால் புகழப்பட்ட தமிழகத்தில் எந்தெந்த இடங்களில் முத்துக் குவியல்களும், எந்தெந்த இடங்களில் பவளக் குவியல்களும் கிடைக்கின்றன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** புலவர்கள் ஏராளமாகப் பாடிச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் பாடியதெல்லாம் கிடைப்ப தாகத் தெரியவில்லை.

**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** உவரி பக்கம் கிடைக்கும் கார்னெட் சான்டைப் பயன்படுத்தி தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்பது அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ? அரசு என்ன முடிவு எடுத்திருக்கிறது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அது பற்றிய விவரம் இல்லை.

## பேப்பர் இறக்குமதி

*336 **வினா—திரு. கே. போஜன் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) நம் மாநிலத்திற்கு வெளி மாநிலங்களிலிருந்தோ வெளி நாடுகளிலிருந்தோ பேப்பர் இறக்குமதி செய்யப்படுகிறதா ?

(இ) ஆம் எனில், ஆண்டொன்றுக்கு எவ்வளவு இறக்குமதி செய்யப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) பேரவை முன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப் பட்டுள்ளது.

* 375-ம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.





**திரு. வி. கே. கோதண்டராமன் :** இந்த விவர அறிக்கையிலே 1965-66 முதல் 1967-68 வரை பார்த்தால் இந்தியாவுக்குள் இருக்கும் மற்ற மாநிலங்களில் இருந்து வரக்கூடிய பேப்பர் குறைந்திருக் கிறது ; வெளிநாடுகளில் இருந்து வரக்கூடிய பேப்பர் அதிகமாகிக் கொண்டு வந்திருக்கிறது. அதற்கான காரணம் என்ன ? இங்கு எல்லா பேப்பர் மில்களும் இருந்தும் குறைந்த விலையில் போது மான அளவுக்குக் கொடுக்க மறுக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நமக்குத் தேவையான தாள்களில் பலவிதமான தாள்கள் உண்டு. நம்முடைய மாநிலத்தில் உற்பத்தி செய்யக் கூடிய தாள்களைத் தவிர, வெளிநாடுகளில் இருந்து வாங்க வேண்டிய தாள்கள் ஏராளமாக இருக்கின்றன. அதனால் இந்தப் புள்ளிவிவரத்தில் வித்தியாசம் வருகிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால்—

M.F. Printing
Poster
Duplex Boards
Unbleached Printing
Cream Laid
Bond
Azure Laid

என்ற தாள்கள் வேறு மாநிலங்களில் இருந்து வருகின்றன.

Special Electrical Insulation Paper
Special Kraft Paper
Some varieties of newsprint.

என்ற தாள்கள் வெளிநாடுகளில் இருந்து வருகின்றன.

THIRU K. S. KOTHANDARAMIAH : There is possibility of producing paper in Hosur taluk where bamboo is grown abundantly. In view of that will this Government think of opening a paper factory at Hosur taluk?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பேப்பர் தொழிற்சாலை அமைக்க மூலப்பொருள் என்ன கிடைக்கிறது என்பதைப் பார்த்து அமைக்க வேண்டும். நம்முடைய மாநிலத்தில் ஏற்கனவே இருக்கக் கூடிய பேப்பர் மில்களிலே உற்பத்தி செய்யக்கூடிய திறன் மீதம் இருக்கிறது. அவற்றைப் பயன்படுத்திக் கொண்ட பிறகுதான் புதிய தொழிற்சாலை பற்றி ஆராய முடியும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தற்போது முத்திரைத் தாள்கள் தட்டுப்பாடாக இருக்கிறது. அவற்றை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்கிறார்களா ? அந்தத் தாள்கள் போதிய அளவு கிடைக்க அரசாங்கம் வழிவகை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஸ்டாம்ப் பேப்பரை மத்திய அரசாங்கம் அடிக்கிறது. நம்முடைய மாநிலத்தில் தேவையான அளவுக்கு அவை கிடைக்கவில்லை என்று அவர்களிடம் அறிவித்த போது அந்தப் பேப்பர் வெளிநாடுகளில் இருந்து கிடைப்பதிலே

THIRU K. VINAYAKAM : If the net income is worked out, it would result in a great loss. Does the Minister accept this theory?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : This is not the occasion to accept or deny theories.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** அரசாங்கத்துறையில் ஓடுகிற இந்த பஸ்களின் மூலம் கிடைக்கிற வருமானத்தை அதிகரிக்கச் செய்வதற்கும் லாபத்தில் ஓட்டுவதற்கும் அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

(பதில் இல்லை.)

## கிழக்குக் கடற்கரைச் சாலை

***339 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் 5—7—1967-ல் 173-ம் எண் கேள்விக்கு அளித்த பதிலையொட்டி தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிழக்குக் கடற்கரைச் சாலை அமைக்கும் திட்டம் தற்போது எந்த நிலையிலுள்ளது ?

(இ) இந்தச் சாலை செங்கற்பட்டு மாவட்டத்தில் எந்தெந்த ஊர்களின் வழியாகச் செல்ல திட்டமிடப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) கிழக்குக் கடற்கரைச் சாலைத் திட்டத்திற்கு இந்திய அரசு இதுவரையில் ஒப்பளிப்பு வழங்கவில்லை. எனினும் மாமல்லபுரத்திலிருந்து தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள மரக்காணம் வரையில் விட்டுப் போன இணைப்புகளை அமைப்பதற்கும், கோவளத்திற்கு அருகில் உப்பங்கழியின் குறுக்கே பாலம் ஒன்று கட்டுவதற்கும் இந்திய அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. கிழக்குக் கடற்கரைச் சாலைத் திட்டத்தை முழுமையாக ஏற்றுக் கொள்ளும்படி இந்திய அரசை இணங்க வைப்பதற்கு இடைவிடாமல் முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

(இ) திட்டமிட்டுள்ள கிழக்குக் கடற்கரைச் சாலை செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள கீழ்க்கண்ட இடங்களின் வழியாகச் செல்லும் :—

1. பூஞ்சேரி
2. வாயலூர்
3. கூவத்தூர்
4. வடபட்டணம்
5. முகையூர்
6. பெருந்தொறவு
7. பரமங்கேணி
8. ஓடையூர்
9. முனிபிள்ளைச் சத்திரம்
10. பனையூர்



**திரு. கொளத்தூர் கோதண்டம் :** தற்போது கிழக்குக் கடற்கரைச்சாலையில் மரக்காணம் வரையில் வேலைகள் நடைபெற்று வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தக் கிழக்குக் கடற்கரைச்சாலை புதுவை மாநிலத்தையும் தமிழகத்தையும் இணைக்கிற சாலையாக இருப்பதால், சென்னையில் இருந்து புதுவை செல்வதற்கு பக்கிங்காம் கால்வாய் குறுக்கே ஒரு பாலம் அமைப்பதால் 16 மைல் அளவிற்குத்தான் இருக்கும் என்பதால், மத்திய அரசு அதை இன்டர் ஸ்டேட் கனெக்டிங் ரோடு என்று எடுத்திருப்பதால் நாம் மத்திய அரசை வற்புறுத்தி மரக்காணத்தில் பக்கிங்காம் கால்வாய் குறுக்கே பாலம் கட்டுவதற்கு மானியமாகவோ அல்லது கடனாகவோ மத்திய அரசிடமிருந்து பெற்று இதை உடனடியாகச் செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஏற்கனவே நான் குறிப்பிட்டுள்ளதுபோல் அரசாங்கம் இடைவிடாது முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறது. சமீபத்தில் கூட மத்திய அரசிடம் இந்த அரசு தெரிவித்திருக்கிறது.

**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** கிழக்குக் கடற்கரைச் சாலை அமைக்கப்பட இருக்கிறது என்ற காரணத்தினால், அந்தப் பகுதியில் உள்ள பல இடங்களில் பாலங்கள் போன்றவை ரிப்பேர் செய்யப்படுவது இப்போது தள்ளிப்போடப்பட்டு வருகிறது. எனவே போக்குவரத்து முக்கியமாக இருக்கிற காரணத்தினால், திருத்துறைப்பூண்டி-நாகப்பட்டணம் பாதையில் இருக்கக்கூடிய பாலங்களை உடனடியாகச் செப்பனிடுவதற்கு அரசாங்கம் அதற்காகக் காத்திராமல் அவைகளைச் செப்பனிட உடனடியாக உத்தரவு போடுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதுபற்றிய விவரக்குறிப்பு இல்லை. இருந்தாலும் அதைப் பற்றி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** செங்கற்பட்டு மாவட்டத்தையும் தென் ஆர்க்காடு மாவட்டத்தையும் பிரிக்கிற அந்தப் பாலம் சீக்கிரத்தில் கட்டப்பட வேண்டும் என்பது எல்லோருடைய அபிப்பிராயமுமாக இருக்கிறது. அதைக் கட்டுவது என்றால் அதன் மதிப்பீடு எவ்வளவு? இதுவரை ஏதாவது ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றனவா ? அதற்கான வழிவகைகள் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதுபற்றிய குறிப்பு இல்லை. ஏற்கனவே அதுபற்றி நம் அரசு மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறது.

[1970 மார்ச் 12

**புலவர் பொ. பொன்னம்பலம் :** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, திருமயம் கூற்றத்தின் கடைக்கோடியிலிருக்கும் திருக்களம்பூரிலே ஒரு அரிசன நல விடுதி அமைப்பதற்கு அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறதா, அதனுடைய விவரத்தை அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** திருமயத்தில் இருக்கும் ஏம்பலில் அமைப்பது பற்றியதுதான் கேள்வி. எந்த ஊரிலே விடுதி அமைக்கவேண்டுமென்றாலும் பக்கத்திலே உள்ள ஊர்களிலிருந்து எத்தனை மாணவர்கள் வந்து படிக்கிறார்கள், அப்படிப் படிக்கின்ற மாணவர்களில் எத்தனை பேர்கள் 5 மைலுக்கு அப்பாலிருந்து வந்து பயிலவேண்டியிருக்கிறது, ஒரு விடுதி அமைக்கவேண்டிய அவசியத்திற்கு மாணவர்களின் தொகை இருக்கிறதா என்பதையெல்லாம் பார்த்து அவசியமென்று கருதினால் மாவட்ட நல அதிகாரி அவர்கள் அதைப் பற்றி இயக்குநர் அவர்களுக்குச் சிபாரிசு செய்தால் அரசாங்கம் பரிசீலனைசெய்து முடிவெடுக்கலாம். ஏம்பலில் விடுதியமைப்பதற்கு இயக்குநருக்குப் பூரணத் தகவல்கள் வரவில்லை. எந்த ஊரிலே அமைக்கவேண்டுமென்றாலும் மாவட்ட நல அதிகாரி சிபாரிசு செய்தால் கவனிக்கலாம்.

### நந்தனார் பெண்கள் ஆரம்ப ஆதாரப்பள்ளிக் கட்டடம்

* 333 வினா—திரு. எஸ். சிவசுப்ரமணியன் : மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் ஓமக்குளம் ரோட்டில் இருக்கும் அரசாங்க நந்தனார் ஆரம்ப ஆதாரப் பெண் பள்ளிக்கென தனிக் கட்டடம் ஒன்று கட்ட அரிசன நல இலாக்காவால் போடப்பட்ட எஸ்டிமேட் எந்நிலையிலுள்ளது ?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** குறிப்பிட்ட கட்டடப் பணி டிசம்பர் 1969-ல் துவங்கப்பெற்று தொடர்ந்து நடைபெறுகின்றது.

### *Mat Weaving Industry.*

* 334 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether any protection has been offered by the State Government to the mat weaving industry?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பாய்முடைவோர் கூட்டுறவுச் சங்கங்களை அரசு அமைத்துள்ளது. அவற்றிற்கு நிதி உதவியையும் வழங்குகின்றது. தமிழ்நாடு கைப்பணிகள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் மூலம் விற்பனை வசதி செய்து கொடுக்கப்படுகிறது.



1970 மார்ச் 12]

**திரு. என். எஸ். வி. சித்தன் :** இந்தப் பாய்முடையும் தொழில் தமிழகத்தில் தொன்றுதொட்டு நடைபெறுகின்ற புராதனத் தொழில். அதில் பத்தமடையப் பாய் உலகப் பிரசித்தி பெற்றது. அப்படிப்பட்ட இந்தத் தொழிலுக்குத் தற்போது அரசாங்கம் எந்த அளவுக்கு உதவி செய்திருக்கிறது ? இந்த உதவியை மேலும் உயர்த்திக் கொடுப்பதற்கு அரசாங்கத்திடம் திட்டம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதிலே உள்ள அங்கத்தினர்களுக்கு 100 ரூபாயில் இருந்து 300 ரூபாய் வரை கடன் கொடுக்கிறது. உற்பத்தி ஆகக்கூடிய பத்து லட்சம் ரூபாய் பெறுமான சரக்குகளை விற்றுக் கொடுக்க மாநில சொசைடி ஏற்பாடு செய்கிறது.

THIRU K. VINAYAKAM : Are the mats manufactured in Pathamadai being exported to foreign countries and is it earning foreign exchange for our State?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எந்தெந்த வெளிநாட்டுக்கு ஏற்றுமதி ஆகிறது என்ற விவரம் இல்லை. ஏற்றுமதி செய்யப்படுகின்ற முயற்சி எடுக்கப்படுமானால் நமது சொசைடி அதற்கான ஏற்பாடு செய்கிறது.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** பாய் நெசவாளர்களுக்கு மிகவும் தேவையானது கோரைப் புற்கள். ஆற்று ஓரங்களிலும், கால்வாய்ப் பக்கங்களிலும் கோரைப் புற்கள் இருக்கின்றன. அவர்கள் லைசென்ஸ் பெறாமல் அவற்றைப் பறித்துக் கொள்ளுவதற்கு இடம் கொடுக்க முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கோரைகள் உற்பத்தி செய்யக்கூடிய இடங்களில் இருந்து நெல்லை மாவட்டத்திற்குத் தேவையான கோரைகளை வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கரூர் பகுதிகளில் இருந்து கோரைகளை வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

### உவரிக்கருகே பவளம் கண்டுபிடிப்பு

* 335 வினா—திரு. டி. மார்டின் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்தில் நாங்குநேரித் தாலுக்காவில் உள்ள கடலோரப் பகுதியான உவரி கிராமத்தை ஒட்டிய கடலில் விலையுயர்ந்த பவளங்கள் உள்ளனவென்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. எஸ். இராமச்சசந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற உயரிய கருத்திற்கிணங்க, ஒரு குறிப்பிட்ட இனத்தார்தான் கர்ப்பக்கிருகத்தில் நுழையலாம் என்றிருப்பது தவறு என்பதைச் சுட்டிக்காட்டி, தந்தை பெரியார் அவர்கள் அந்த அடிப்படை உரிமைகளுக்காக—ஆண்டவன் முன்னால் தாரதம்மியம் அடியோடு நீக்கப்படவேண்டும், இருபதாம் நூற்றாண்டில் கூட ஒரு குறிப்பிட்ட இனத்தாரைத் தவிர மற்றவர்கள் நுழைய மறுக்கப்படுவது சரியல்ல என்பதை எடுத்துக்கூறுவதற்காக—போராட்டம் நடத்த இருந்தது உண்மையா ? அந்தப் போராட்டத்தைத் தவிர்க்கவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கான அறிக்கையை வெளியிட்டதற்குப் பிறகு சனாதனவாதிகளில் சிலபேர் முதலமைச்சருடைய அந்த அறிக்கைக்குப் பதில் தந்தார்களா ? அப்படியானால் அந்த விவரங்களை முதலமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்போதே பல ஆலயங்களில் குறிப்பிட்ட வகுப்பார்—அதாவது பிராம்மணர்—அல்லாத வகுப்புக்களைச் சேர்ந்தவர்களும் அர்ச்சகர்களாக இருக்கிறார்கள். ஆனால், அதிகமான கோயிலகளில் பிராமணர்கள்தான் அங்கே அர்ச்சகர்களாக இருக்கிறார்கள். பிராமண வகுப்பைச் சேர்ந்தவர்கள் மற்ற தொழில்களில் நாட்டம் கொண்டு சென்றுவிடும்போது அந்த இடங்களில் அருச்சனை வேலைக்கு அதற்கான பயிற்சியை ஒழுங்காகப் பெற்றவர்கள் கிடைப்பது அரிதாகவும் கடினமாகவும் ஆகிவிடுகிறது என்று திருத்தணியில் நடைபெற்ற கோயில் ஆலோசனைக் கமிட்டிக் கூட்டத்தில் கூட—பிராமணர்கள் உட்பட இருந்த அந்தக் கூட்டத்தில்கூட—எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. கோயில்களில், எந்த வகுப்பைச் சேர்ந்தவராக இருந்தாலும், எவராக இருந்தாலும் அர்ச்சகராக வேலை செய்வதைத் தடுக்கும் வழக்கம் இப்பொழுது தமிழ்நாட்டுக் கோயில்களிலே இல்லை என்றாலும் கூட, இப்பொழுது பிராமணர்கள் இருக்கின்ற இடங்களிலும் அவர்களுக்குப் பிறகு அர்ச்சகர்களாக வருகிறவர்கள் பிராமணரல்லாதாரும் இருக்கலாம், ஆண்டவனிடத்தில் எம்மதமும் சம்மதம் என்ற வகையிலே ஜாதி வேறுபாடு கிடையாது என்பதை அனைவரும் ஒத்துக்கொண்ட வகையிலே இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை தவறானதல்ல என்ற அளவிலேதான் பெரியாரவர்களுடைய கிளர்ச்சியையொட்டி நாம் அந்த அறிக்கையை விட நேர்ந்தது. அதுபற்றிச் சில எதிர்ப்புக்கள் கிளம்பியது உண்மை. ஆனால், ஆண்டவனுடைய உண்மையான பக்தர்களிடமிருந்து அப்படிப்பட்ட எதிர்ப்பு வந்ததாக எனக்கு நினைவில்லை.





**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அப்படி நியமிக்கக்கூடாது என்று அரசு எந்த உத்தரவும் இடவில்லை.

**திரு. ந. தருமலிங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமுதாயத்தின் திருக்கோயில்களில் கருவறைக்குள் எல்லா வகுப்பினர்களும் நுழைவார்களானால் திருக்கோயில்கள் எந்த வகையில் புனிதம் கெட்டுவிடும் என்று அரசு கருதுகிறது? திருக்கோயில்களின் கருவறைக்குள் குறிப்பிட்ட வகுப்பார் மட்டும் செல்வதால் எப்படிப் புனிதம் காப்பாற்றப்படுகிறது என்பதை விளக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, கர்ப்பக்கிருகத்திற்கு அருகில் எல்லா வகுப்பினரும் செல்லலாமா ? என்கிற கேள்விக்கும், எல்லோரும் செல்லலாமா ? என்கிற கேள்விக்கும் இடையிலே இருக்கின்ற வேறுபாட்டை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். எல்லோரும் செல்லுகின்ற காரணத்தால் கர்ப்பக்கிருகத்திற்கு அருகில் இருக்கின்ற பொருட்கள் ஏதாவது காணமல் போய்விடுமாயின் யார் அதற்குப் பொறுப்பாளி என்பது இல்லாமல் போய்விடும். ஆகவேதான், சர்ப்பக்கிருகத்திற்குள்ளே குறிப்பிட்ட யாராவது ஒருவர் அல்லது இருவர்தான் போக அதிகாரம் பெற்றவர்களாக இருக்கவேண்டும். அப்படிப்பட்ட, குறிப்பிட்ட ஒருவர், ஏதாவது ஒரு குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்தவராக இருக்க வேண்டுமா என்பதுதான் கேள்வி. அதற்காகத்தான் நாம் சட்டத்திலேயே ஒரு திருத்தம் கொண்டுவரவேண்டும் என்று கருதுகின்றோம்.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவர் அவர்களே, பெரியார் அவர்கள் நடத்துகின்ற இந்தப் போராட்டம் தள்ளிப்போடப்பட்டிருக்கிறது என்று முதலமைச்சரவர்கள் அறிவித்தார்கள். போராட்டம் தள்ளிப் போடப்பட்டுள்ளதா அல்லது போராட்டம் அறவே கைவிடப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பெரியார் அவர்கள் விடுத்த அறிக்கையில், தள்ளிவைத்திருப்பதாகத்தான் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. தி. பொன்னுமலை:** தலைவர் அவர்களே, கர்ப்பக்கிருகம் என்றால் கணவன்-மனைவி வாழ்க்கை நடத்துகின்ற இடமா ? அல்லது மகப்பேறு இடமா ? என்று அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை).

**திரு. எம். சுரேந்திரன் :** சார், எல்லா ஜாதிகளையும் சேர்ந்த நபர்களை அர்ச்சகர்களாகப் பயிற்றுவிப்பதற்காக கேரள மாநிலத்தில் ஒரு கல்லூரி துவக்கியிருக்கிறார்கள் என்பதும் அதிலே எல்லாவிதமான ஜாதியைச் சேர்ந்தவர்களும் பயிற்சிபெற்று வருகின்றார்கள் என்பதும் அரசுக்குத் தெரியுமா ? அதுபோன்ற ஒரு கல்லூரியை இங்கே அமைப்பதற்கான ஏற்பாட்டைப்பற்றி அரசு யோசனை செய்யுமா ?

(இ) ஆமெனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) ஆம்.

(இ) பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன :—

(1) புதுக்கோட்டை கோட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களின் உபரிப் பொது நிதிகளிலிருந்து, பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கும் இணைப்புச் சாலைகள் போடுவதற்கும் தேவையான நிதிகள் எடுத்துப் பயன்படுத்தப்படும்.

(2) புதிய கிணறுகள் தோண்டுவதற்கும், பழைய கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும் தேவையான நிதிகள், வறட்சித் துயர் தணிப்புக்கு ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்து பயன்படுத்திக் கொள்ளப்படவேண்டும்.

(3) வரவு-செலவு திட்டத்தில் கிடைக்கும் நிதிகளிலிருந்து, சிறு பாசன வாயில்களுக்குத் தேவையான நிதிகள், தலைமைப் பொறியாளரால் ஒப்பளிக்கப்பட வேண்டும்.

(4) பயிர்ப் பாதுகாப்புப் பணியின் கீழ் கிராமணித் தொண்டர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகத் தேவையான நிதிகள் 'கிராமணி' என்றத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து பயன்படுத்திக்கொள்ளப்பட வேண்டும். அதற்குத் தேவையான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

**புலவர் பொ. பொன்னம்பலம் :** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, ஆலங்குடி, திருமயம், குளத்தூர் கூற்றங்களைத் தன்னகத்தேகொண்ட புதுக்கோட்டைப் பகுதியை மாநில அளவில் பின் தங்கிய பகுதியாகக் கருதி, அரசுச் சார்பில் கூடுதல் நிதியை ஒதுக்கி முன்னேற்றம் செய்யமுற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தமிழ்நாட்டிலே ஒவ்வொரு மாவட்டத்திலும் சில பகுதிகள் மிகமிகப் பின்தங்கியதாகத்தான் கருதி அதற்கேற்ற வகையில் ஊராட்சி ஒன்றியங்கள் ஏ, பி, சி, டி என்று 4 பிரிவுகள் அமைக்கப்பட்டு, தேவையான நிதி ஒதுக்கப்படுகிறது. ஆகவே இதற்கான தனிப்பட்டமுறையில் எந்தவித செயற்குறிப்பும் அரசிடம் இல்லை.

**திரு. என். வரதராஜன் :** தலைவரவர்களே, மாநிலத்தில், பிற்படுத்தப்பட்ட பகுதி என்று மாநில அரசு ஏதாவது வைத்திருக்கிறதா ? அப்படிப்பட்ட பிற்பட்ட பகுதிகளுக்கு மத்திய சர்க்கார் பல மாநிலங்களுக்கு நிதி உதவி அளிப்பதாக அறிகிறோம். நம்முடைய மாநிலத்திற்கும் நிதி கேட்டிருக்கிறோமா ? அதை அளிக்க மத்திய அரசு ஆலோசனை சொல்லி இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதி, நிரந்தரமாகப் பிற்படுத்தப்பட்ட பகுதியெல்லாம் வருவாய்த் துறை மூலம் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய ஒன்று என்னிடத்தில் தகவல் இல்லை.



**திரு. ஆர். கருப்பையா :** தலைவரவர்களே, வறட்சிப் பகுதியாக உள்ள இடங்களில், யூனியன் பொது நிதியிலிருந்து கிணறுவெட்ட அதிகாரம் கொடுக்கப்பட்டு கிணறு வெட்டுவது நடைபெறுகின்றது. ஆனால் தண்ணீர் இருக்கின்ற நிலைமையை அறிந்துசொல்ல 'வாட்டர் டிவைனர்' நீர் ஊற்றை ஆராய இருக்கிறார்கள். அவர்களைக் கலக்காமல், சில இடங்களில் தோண்டப்பட்டு தண்ணீர் வராமல் தடைப்பட்டிருக்கிறது. அதுபோன்ற நிலைமைகள் இல்லாமல் வறட்சியான பகுதிகளில் கிணறு தோண்டும்பொழுது நீர் ஊற்றை ஆராய்ந்தபிறகு கிணறு வெட்ட முன் வர ஆவன செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** இந்த முறைகளெல்லாம் பின்பற்றப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. மூலக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் எந்தவகையிலும் தொடர்பிருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் தண்ணீர் இருக்கிறதா என்று பரிசீலித்துப் பார்த்து ஆய்வாளர்கள் செய்தபிறகும் சில கிணறுகளில் தண்ணீர் வராமல் போய்விடுவதும் உண்டு.

**திரு. செஞ்சி வெ. முனுசாமி :** தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களை ஏ, பி, சி, டி, இ என்ற பிரிவுகளாகப் பிரிக்கும் பொழுது ஏற்கனவே இருந்த அரசு அதை உண்மைக்குப் புறம்பான வகையில், பாரபட்சம் காட்டியதாகப் பரவலாகப் பேச்சு அடிபடுகிறதே. எனவே, உண்மையை ஆராயும் வகையில் அதைப் புனராய்வு செய்து, உண்மையாகவே எந்தெந்தப் பகுதிகள் பிற்பட்ட பகுதிகள் என்று அறிந்து, அதற்கேற்றாற்போல் பிரிவுகளை மாற்றியமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** ஊராட்சி ஒன்றியங்களைத் தரம் பிரிக்க, ஆரம்பக்காலத்திலே எற்படுத்தறிய நடவடிக்கைகளெல்லாம் அந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு வருகின்ற வருமானம், ஊராட்சி ஒன்றியத்தினுடைய பரப்பளவு, அங்கிருக்கும் மக்கள் தொகை ஆகிய அடிப்படையில் தான் ஏ, பி, சி, டி என்று பிரித்து; ஒவ்வொரு பிரிவுக்கும் ஏற்ற வகையில் மானியம் ஒதுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. படிப்படியாக சில இடங்கள் வளர்ச்சியுற்று, சில ஊராட்சி ஒன்றியங்கள் வளம் பெற்றிருக்கின்றன. சில பகுதிகள் எவ்வளவு செலவழித்தும் இன்னும் முன்னேற முடியாமல் இருக்கின்றன. ஆகவே, எந்த வகையிலே திருத்தியமைக்கலாம் என்பதைப்பற்றி அரசு கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது.

*Posts of Additional Personal Assistants to Collectors.*

*345 Q.—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(a) whether the Government have decided to revive the posts of Additional Personal Assistant (Panchayat Development Works) for the District Collectors in the districts of Tamil Nadu;

(b) the number of such posts abolished in the year 1967; and

(c) the districts in which the posts were revived between 1967 and April, 1969 and those in which the above posts are yet to be revived?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) இவ்வாண்டு நடுவில் நடைபெறவிருக்கும் ஊராட்சித் தேர்தலையொட்டி ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியரின் ஒரு நேர்முக உதவி யாளரின் பதவி தற்காலிகமாக 1969 ஆகஸ்ட் திங்கள் ஏற்படுத்தப் பட்டு இப்பொழுது இருந்து வருகிறது.

(இ) பத்து பதவிகள்.

(உ) எந்த மாவட்டத்திலும் அந்தக் கூடுதலான பதவிகள் 1967-ம் ஆண்டு முதல் 1969-ம் ஆண்டு எப்ரல் வரை உயிர்ப்பிக்கப் படவில்லை.

**திரு. நா. காசிராமன் :** தலைவரவர்களே, இந்த அரசு பதவி யேற்றபின், பல இடங்களிலே பதவிகளை இல்லாமல் செய்ததன் காரணமாகக் காலியான பதவியிலே இந்த பர்சனல் அசிஸ் டெண்ட்டு டிஸ்டிரிக்ட் கலெக்டர்ஸ் என்ற பதவியும் ஒன்றாகும். அந்தப் பதவியிலிருந்து விலகியவர்களுக்கு மாற்று உத்தியோகங் கள் கொடுக்கப்பட்டனவா? அவ்வாறு நீக்கப்படுவதால் வேலைகள் பாதிக்கப்படுவதை நன்கு தெரிந்துகொண்டு அப்பதவிகள் நீடிக்கப் படுமா? என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** உயிர்ப்பிக்கப்பட்டிருக் கிறதா என்பது கேள்வி. ஆனால் இப்படிப்பட்ட பதவிகளை இரண்டாக இருந்ததை ஒன்றாக ஆக்கியதின் மூலம் யாரும் வேலையிலிருந்து நீக்கப்படவில்லை. அவர்கள் பதவி இறக்கம், பி.டி.ஓ. என்ற நிலையில் ஆக்கப்பட்டிருப்பார்களே தவிர, வேலை யிலிருந்து பாதிக்கப்படவில்லை. ஆகவே, வேண்டிய சமயத்தில், அவசியம் என்று இருப்பதால் மீண்டும் புதுப்பித்து, தேர்தல் வேலைகளைக் கவனிக்க நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. கே. விநாயகம் :** சார், மாவட்டங்களிலே இருக்கிற பி.ஏ. (பஞ்சாயத்து டெவலெப்மெண்ட்) என்ற ஏற்பட்டாலும் டிஸ்டி ரிக்ட் டெவலெப்மெண்ட் கவுன்சில் வேளைகளையெல்லாம் அவர்கள் செய்கிறார்கள். எனவே, தேர்தலுக்கு மாத்திரம் அந்த பதவி உயர்வு கொடுத்துவைத்திருப்பதை, தேர்தல் முடிந்தபிறகு, அவர்களை நிரந்தரமாக வைத்துக்கொண்டு, நல்ல பணிகளை அவர்களிடமிருந்து வாங்க அரசு முடிவு செய்யுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தேர்தல் வேலைகளைக் கவனிப் பதற்காக நியமிக்கிறது. பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களும், மாவட்ட அபிவிருத்தி மன்றமும், இந்தப் பதவிகள் உயிர்ப்பிக்கப் பட வேண்டுமென்றும், அதனால் வேலைகள் துரிதமாக நடைபெறும் என்றும் கேட்டிருக்கிறார்கள். இந்த வேலைகள் முடிந்தபிறகு அது பற்றி பரிசீலிக்கப்படும்.





**திரு. க. இராமமூர்த்தி :** தலைவரவர்களே, இந்தப் பதவிகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்ததால் அல்லது எடுத்துவிட்டதாலே அரசாங்கத்திற்கு எந்தவிதத்திலும் பொருளாதார ரீதியில் லாபம் ஏற்படவில்லை என்பதோடு, அடிக்கடி தற்காலிகமாக நீக்கி, மறு படியும் உயர்த்துவது என்று இப்படி அடிக்கடி தற்காலிகமாக நீக்கிவிடுவதால் வேலைப்பளுச் சிக்கலாகியிருக்கிறது என்று அரசுக்குத் தெரியுமா? பஞ்சாயத்துத் தேர்தல் நிரந்தரமாக ஆகிவிட்டதால் இந்தப் பதவிகளை நிரந்தரமாக ஆக்கி இந்தச் சிக்கலைத் தவிர்க்க அரசு ஆலோசிக்குமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** பதவி உயர்விலேயிருந்து பதவியிறக்கப்பட்ட நேரத்தில், பதவி உயர்வுமூலம் கொடுக்கும் தொகை அரசாங்கத்திற்கு மிச்சம்தான். இதிலே என்ன மிச்சம் ஏற்பட்டு இருக்கிறது என்ற அந்த வகையில் இது மிச்சம்தான். இரண்டாவது, பதவியிறக்கம், அடிக்கடி செய்யப்படுவதாகச் சொல் கிறார்கள். அப்படிப்பட்ட நிலை இல்லை. இந்தத் துறையில் பணி யாற்றும் ஊழியர்களுக்குப் பதவி உயர்விற்கான வாய்ப்புகள் மேலும்மேலும் அதிகமாக்கப்பட்டு, அவர்கள் மன நிறைவோடு இருக்கிறார்கள். கடைசியாக அவர்கள் குறிப்பிட்டதற்கு மாண்புமிகு திரு. விநாயகம் அவர்களின் கேள்விக்குப் பதில் கூறிவிட்டேன்.

*George Town Co-operative Bank.*

* 346 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(a) whether the management of the George Town Co-operative Bank has been declaring Bonus on Recurring deposit accumulations in violation of Rule 46(4) of the Tamil Nadu Co-operative Societies Rules, 1963;

(b) if so, the loss sustained by the Society under this Head from the year 1961–62 to 1968–69; and

(c) the action Government propose to take against those responsible for the mismanagement?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) இல்லை.

(இ) & (உ) இவ்வினுக்கள் எழவில்லை.

DR. H. V. HANDE : Sir, is it not a fact that a bonus of nearly Rs. 1 lakh was declared in 1960–61, Rs. $1\frac{1}{2}$ lakhs in 1965–66 and Rs. 2.54 lakhs in 1967–68. Also is it not a fact that the bonus even exceeds the percentage that is allowed even for non-credit societies —normally credit societies should not at all declare bonus and only non-credit societies are given the option to declare 25 per cent bonus. Also, is it not a fact that there is a total violation of rule 46(4) which states that the credit society should not declare any bonus at all?

THE HON. THIRU SI. PA. ADITANAR : Sir, as the hon. Member has quoted rule 46(4), I may as well tell him that rule 46 (4) refers to societies other than banks and this happens to be a

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மத்திய அரசிடம் மாநில அரசு முதலில் கேட்டது 14 கோடி ரூபாய். ஆனால் மத்திய அரசாங்க அமைச்சர் அவர்கள் திருத்திய மதிப்பீடு சமர்ப்பிக்கும்படிச் சொன்னபோது ரூ. 13 கோடி என்ற அளவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அதை இரண்டு பிரிவாகப் பிரித்து அனுப்பும்படி கோரப்பட்டதால், ஆறு கோடி ரூபாய்க்கு ஒரு திட்டமும் ஏழு கோடி ரூபாய்க்கு மற்றொரு திட்டமும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. இர்ாம. அரங்கண்ணல் :** கிழக்குக் கடற்கரையோரத்தில் சாலை அமைப்பது ஒரு திட்டம் இன்னொன்று கால்வாய் வழிப் போக்குவரத்தை அதிகரிப்பதற்கு ஒரு திட்டம். இரண்டு திட்டங்களும் அரசாங்கப் பரிசிலனையில் இருக்கிறது. இவை இரண்டையும் ஒட்டி ஒரு முடிவு எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** உறுப்பினர் அவர்களின் கேள்வி கவனத்தில் வைத்துக் கொள்ளப்படும்.

**திரு. சோ. அழகர்சாமி :** இந்தக் கிழக்குக் கடற்கரைச்சாலை எந்த இடத்தில் ஆரம்பித்து எங்கு வந்து முடிவடைகிறது? இதற்கு மொத்தத்தில் ஆகும் செலவு மதிப்பீடு எவ்வளவு?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The proposed East Coast Road passes through the revenue districts of Chingleput, South Arcot, Thanjavur, Ramanathapuram, Tirunelveli and Kanyakumari. The total length of the road is 482 miles including 21 miles in Pondicherry and Karaikal limits and 4½ miles in Madras City.

ஏற்கனவே நான் குறிப்பிட்டதுபோல் அரசு முதலில் தயாரித்து அனுப்பிய எஸ்டிமேட் 14 கோடி ரூபாய்.

*340 **வினு.—திரு. ந. தருமலிங்கம் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை, திருத்துறைப்பூண்டி, பட்டுக்கோட்டை, அறந்தாங்கி தாலுகாக்கள் வழியாகச் செல்லும் சேதுச்சாலை வேலை எப்போது முடிவு பெறும்?

(இ) இதற்காக அரசு இன்றுவரையில் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) & (இ) சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரையுள்ள கிழக்குக் கடற்கரைச் சாலையை தேசிய நெடுஞ்சாலையின் தரத்துக்கு உயர்த்துவதற்கான செயற்குறிப்பை மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்க்கவேண்டுமென இவ்வரசு பரிந்துரைத்தது. நிதியின்மை காரணமாக இவ் வேலைதிட்டத்தை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்திய அரசு சேர்க்க இயலவில்லை. இதை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று





இவ்வரசு வலியுறுத்தியது. இதன் முதல் நடவடிக்கையாக மாமல்லபுரத்திலிருந்து தென் ஆற்காடு மாவட்ட எல்லை வரை 25 மைல் நீளமுள்ள சாலைத் தொடர்பு அறுபட்ட பகுதியை அமைப்பதற்கான வேலை எடுத்துக்கொள்ளப்பட்டது. கிழக்குக் கடற்கரைச் சாலை அமைப்பில் கோவளத்துக்கு அருகே உப்பங்கழியின்மீது பாலம் கட்டும் வேலையை மேற்கொள்வதற்கும் இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

**திரு. ந. தருமலிங்கம் :** இந்த சேதுச்சாலையையொட்டி தஞ்சை மாவட்டத்தில் தென் பகுதியில் தஞ்சை மன்னர்கள் ஆண்ட காலத்தில் கட்டி வைக்கப்பட்ட சத்திரங்கள்—அம்மணிசத்திரம், ராஜாமடம் சத்திரம்—போன்ற சத்திரங்கள் கவனிப்பாரற்றுக் கிடப்பதையொட்டி இந்த சாலை அமைக்கப்படும்போது அவைகளையும் புனரமைப்பு செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதுபற்றிய செயற்குறிப்பு இல்லை.

### பரமக்குடி பயணியர் விடுதி

*341 **வினு—திரு. வீ. மலைக்கண்ணன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடியில் உள்ள பயணியர் விடுதியை விஸ்தரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கும்?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

### *Educational finance of Panchayat Union Councils*

*342 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(a) whether the Government have constituted a ten-member Committee to review the educational finance of the Panchayat Union Councils in the State; and

(b) if so, the names of those members?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) ஆம்.

(இ) (1) அரசுச் செயலாளர், கிராம வளர்ச்சி-உள்ளாட்சித் துறை—தலைவர்.

அரசு சார்புள்ள உறுப்பினர்கள்.

(2) கிராம வளர்ச்சித் துறை இயக்குநர்.

(3) அரசுத் துணைச் செயலாளர், கல்வித் துறை.

(4) துணைச் செயலாளர் (திட்டம்), நிதித் துறை.

[illegible]

DR. H. V. HANDE : Is it not a fact that this also comes under the Banking Companies Act 1964? Is it not applicable to co-operative societies? There is a clear ruling. Have you consulted the Reserve Bank on this? How do you say that it does not come under the Banking Companies Amendment Act?

THE HON. THIRU Si. Pa. ADITANAR: The hon. Member need not get excited over this. The question was about Rule 46(4) framed under the Madras Co-operative Societies Act, and the rules under the Banking Companies Amendment Act. If the hon. Member is asking a supplementary question relating to the Banking Companies Amendment Act, he may do so. But let him not confuse one with the other.

### *Sri Sadana Rescue Centre*

*347 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Minister for Religious Endowment be pleased to state :

(*a*) whether new buildings are to be constructed for the Sri Sadana Rescue Centre for Women in Mylapore, Madras; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** (அ) & (இ) அரசு கண்காணிப்பு இல்லமும் ஸ்ரீ சாதனா மீட்பு இல்லமும் இப்பொழுது செயல்பட்டு வரும், சென்னை மயிலாப்பூர் கச்சேரி சாலையிலுள்ள "எவரெஸ்ட்" என்கிற, அரசுக்குச் சொந்தமான சுற்று வளவுக்குள் கிடைக்கக்கூடிய காலி நிலத்தில் ரூ. 1.40 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் ஸ்ரீ சாதனா மீட்பு இல்லத்திற்காக விடுதிக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு மட்டுமே அரசு ஒப்பளித்துள்ளது. பொதுப்பணித் துறையினால் மேற்படி பணிக்காகத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. கட்டிடப் பணிக்காக ஒப்பந்தப் புள்ளிகளும் அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது. பணியை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று செங்கற்பட்டு சரகம், சென்னை, கண்காணிப்புப் பொறியாளருக்குப் பொதுப்பணித்துறையின் (கட்டிடங்கள்) தலைமைப் பொறியாளர் கட்டளை பிறப்பித்துள்ளார்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** இந்த ஸ்ரீ சாதனா மீட்பு இல்லத்தில் எத்தனை மாணவிகள் இப்பொழுது இருக்கிறார்கள். புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசாங்கம் ஏதாவது மானியத் தொகை கொடுக்க இருக்கிறதா? ஆமெனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** இந்த ஸ்ரீ சாதனா மீட்பு இல்லத்தில் வயதுவந்தவர்கள் 68 பேர்களும், குழந்தைகள் நான்கு பேர்களும் இருக்கிறார்கள். இந்தக் கட்டடத்திற்கான தொகை அரசாங்கத்தின்மூலமாகத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நம்புகிறேன். சரியான தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை.

**திரு. கே. விநாயகம் :** இப்பொழுது கட்டடம் இருக்கிற இடத்தில் இடம் போதவில்லை, ஆகவே இதைப் பெருக்குகிறோம், புதியதாகக் [illegible] கட்டுகிறோம் என்று சொன்னார்கள். அது [illegible] [illegible]



**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** தலைவர் அவர்களே, இந்த ஸ்ரீ சாதனா மீட்பு இல்லத்திற்காக இரண்டு கட்டடங்கள் வாடகைக்கு எடுக்கப்பட்டு, மாத வாடகையாக ரூ. 400 வீதம் கொடுக்கப்பட்டு வருகிறது. இதுவரைக்கும் வாடகையாக ரூ. 80,000 கொடுக்கப்பட்டு வந்துள்ளது. அந்த வீட்டுக்காரர் அந்த வீட்டைத் தான் வாங்கிக்கொள்ளவேண்டும் என்பதற்காக எந்தவிதமான வசதியையும் செய்து கொடுக்காத காரணத்தினால், வீட்டுக்காரர் அந்த வீட்டை தனக்கு வேண்டும் என்று வற்புறுத்தி வந்த காரணத்தினால், குழந்தைகளும் வரவர குறைந்துகொண்டு வருகிற காரணத்தினால், பொருளாதார அடிப்படையில் தனியாகக் கட்டடம் கட்டப்பட்டால் அதிக லாபம் இருக்கிற காரணத்தினாலும் அந்தக் கட்டடம் கட்டப்படுகிறது.

### *Daya Sadan*

*348 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) whether the Vice-President of Daya Sadan presented any memorandum to the Hon. the Minister about September—October, 1969; and

(*b*) if so the details thereof?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** (அ) & (இ) தயாசதனத்தில் சேர்க்கப்பட்டுள்ள ஒவ்வொருவருக்காகவும் அளிக்கப்படும் பேணுதல் மானியம் 1-4-1969 முதற்கொண்டு திங்கள் ஒன்றுக்கு ரூ. 15-லிருந்து ரூ. 30-ஆக உயர்த்தப்பட வேண்டும் என முறையீடு ஒன்றை அக்காப்பிலத்தின் உதவித்தலைவர் 1969 அக்டோபர் 28-ஆம் நாளன்று அரசுக்கு அனுப்பினார். என்னிடமும் அந்தக் கோரிக்கை மனுவைத் தந்திருக்கிறார்கள். இந்த வேண்டுகோள் அரசின் ஆலோசனையில் இருந்து வருகிறது.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** தயாசதனத்தின் உதவித் தலைவர் சங்களிடம் அளித்த அந்த வேண்டுகோளின் பேரில் நடவடிக்கை எடுக்க இந்த அரசாங்கம் முன்வருமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** ஏற்கனவே இது மாதிரி இருப்பவர்களுக்கு ஒருவருக்குரிய பேணுதல் மானியத்தொகை ரூ. 15 ஆக இருக்கிறது. இந்த இல்லத்திற்கு ஒரு ஆண்டுக்கு ஒரு லட்ச ரூபாய்க்குமேல் இப்பொழுது மானியத் தொகையாகக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். ரூ. 5 அதிகப்படுத்தினால்கூட, ஆண்டுக்கு ரூ. 36,000 அதிகமாகக் கொடுக்கவேண்டியிருக்கிறது. இதைப்பற்றிப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். அவர்களுக்கு அனுதாபமான முடிவுகள் எடுக்கப்படும்.

**திரு. சி. கோவிந்தராசன் :** தயாசதனத்தில் வந்து சேர்ந்திருப்பவர்கள் யார்? இதில் சேருவதற்கு வேண்டிய யோக்கியதாம்சங்கள் என்ன? யாருடைய தயவில் இங்கு வந்திருக்கிறார்கள்?

(5) பள்ளிக் கல்வி இயக்குநர்.

(6) உள்ளாட்சி நிதிக் கணக்குகள் ஆய்வாளர்.

(7) கிராம வளர்ச்சித் துறை (கல்வி) இணை இயக்குனர்—செயலாளர்.

அரசுச் சார்பற்ற உறுப்பினர்கள்.

(8) திரு. எஸ். கிருஷ்ணசாமி பிள்ளை (ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி).

(9) திரு. எம். ஸ்ரீராமுலு, தலைவர், மாநில ஊராட்சி ஒன்றியங்கள் கூட்டமைப்பு.

(10) திரு. பி. என். பரமசிவம், எம்.எல்.ஏ., செயலாளர், மாநில ஊராட்சி ஒன்றியங்கள் கூட்டமைப்பு.

**திரு. கே. விநாயகம் :** இந்தக் குழு இந்த விஷயத்தில் ஆராய்ந்ததா? அப்படி ஆராய்ந்திருந்தால் அவர்களுடைய முடிவு என்ன? அந்த முடிவின்படி நம் சர்க்காருக்கு ஏதாவது செலவு இருக்கிறதா? அந்த முடிவுகளை அமல்படுத்துவதற்கு எவ்வளவு நாட்களாகும்?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** இந்தக் குழு தன் ஆய்வுகளை மிக வேகமாகச் செய்து கொண்டிருக்கிறது. 30—4—70-க்குள் அவர்கள் அறிக்கை கொடுப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அவர்களின் அறிக்கை வந்த பிறகு அதைப் பரிசீலித்து அதன் மேல் என்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என்பதுபற்றி யோசிக்கலாம்.

**திரு. வை. சுவாமிநாதன் :** இந்தக் குழு ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் சென்று யூனியன் தலைவர்களைச் சந்தித்து அவர்களுடைய கருத்துக்களை ஆராய்ந்ததா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும் என்றால் அதற்கு ஏறத்தாழ இரண்டு ஆண்டு காலம் ஆகக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே மாவட்டவாரியாகச் சென்று ஆங்காங்குள்ள ஊராட்சி ஒன்றியத் தலைவர்களையும் மற்ற ஏனைய அலுவலகங்களையும் சார்ந்தவர்களையும் கலந்து அவர்களுடைய கருத்துக்களையும் பெற்றுவருகிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** இந்தக் கல்வி நிதியை மறு ஆய்வு செய்வது சம்பந்தமாக மாவட்ட அபிவிருத்தி மன்றங்களில் விவாதிக்கப்பட்டு அவர்கள் இது சம்பந்தமாக ஆலோசனைகளைக் கூறியிருக்கிறார்களே, அந்த ஆலோசனைகளும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** மாவட்ட ஆலோசனை மன்றங்களிலும் இதற்குத் தொடர்பானவர்கள்தான் பொறுப்பில் இருக்கிறார்கள். அவர்களுடைய கருத்துக்களையும் இந்தக் குழு



**திரு. இல. பலராமன் :** இந்த சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மத்திய அரசாங்கம் இந்தக் கல்வி மானியத்திற்காக எவ்வளவு ஒதுக்கீடு செய்கிறது? அது நல்ல முறையில் பயன் படுத்தப்படுகிறதா என்ற விவரங்களை அரசு தெரிவிக்குமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** கிடைக்கக்கூடிய எந்தத் தொகையையும் நல்லமுறையில்தான் பயன்படுத்துகிறோம். ஆனால் எவ்வளவு தொகை கிடைக்கிறது என்ற விவரம் இல்லை.

பனையப்பட்டிக்கு பேருந்து நிலையம்

* 343 வினா—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தொகுதியிலுள்ள பனையப்பட்டியில் பேருந்து நிலையம் கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்விலுள்ளதா?

(இ) ஆமெனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) & (இ) பனையப்பட்டி பஞ்சாயத்து அவ்வூரில் ஒரு பேருந்து நிலையம் கட்டுவதற்காக ரூ. 21,700 அரசினரிடம் கடன்கேட்டு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியாளருக்கு செயற்குறிப்பு அனுப்பி உள்ளதாக, மாவட்ட ஆட்சியாளர் அறிவித்துள்ளார். அந்த செயற்குறிப்பு கிராம நல இயக்குநர் வழியாக அரசினருக்கு வந்தவுடன் கடன் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

**புலவர் பொ. பொன்னம்பலம் :** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, திருமயம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பனையப்பட்டியில் பேருந்து நிலையம் அமைப்பது சம்பந்தமாக மாவட்டத் தலைமையிடம் மீண்டும் கேட்டு விரைவில் அமைத்துத்தர அரசு முற்படுமா என்று அறிய விழைகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** புதுக்கோட்டை உதவி ஆட்சியாளர் கடன் கோரிக்கையை மாவட்ட ஆட்சியாளரின் வழியாக அரசுக்கு அனுப்பியுள்ளதாகத் தகவல் கிடைத்தது. மேற்கண்ட கடன் கோரிக்கை இந்தத் துறைக்கு வந்து சேர்ந்ததும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

புதுக்கோட்டைப் பகுதியை மேம்படுத்த நிதி ஒதுக்கம்

* 344 வினா—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

தராத நேரத்தில், தாங்கள் அவர்கள் ஆதாரங்களைத் தருவதற்கு காலத்தவணை அளித்திருந்தீர்கள். அதன்படி அவர்கள் தங்களுக்கு ஆதாரங்கள் ஏதாவது அனுப்பியிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 14—3—1970-க்குள் அந்த ஆதாரங்களைத் தர வேண்டும், டாகுமெண்டைத் தரவேண்டும் என்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குக் கடிதம் ஒன்று எழுதியிருக்கிறேன் என்பதை அவைக்குத் தெரிவிக்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, 14-ந் தேதிக்குள்ளாக, சட்ட சபை விதிகளிலே 81-வது பிரிவின்கீழ் ஒரு அறிக்கை சமர்ப்பிக்க இருக்கிறேன் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் டாகுமெண்டை 14-ந்தேதிக்குள் என்னிடம் கொடுக்கத் தவறினால், உங்களிடத்தில் அப்படிப்பட்ட டாகுமெண்ட் இல்லை என்று பொருளாகக்கொண்டு, அதன்மேல் என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதுபற்றி யோசிக்கப்படும் என்று கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. நீங்கள் அவையில் அறிக்கை வைப்பது என்பது, பேரவைத்தலைவருடைய அனுமதியின்மேல் செய்ய வேண்டியது. அது வேறு விவகாரம். திரு. அரங்கண்ணல் எழுப்பியதற்கு அவைக்குச் செய்தியைத் தெரிவிக்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அது சம்பந்தமாகத்தான் 13-ம் தேதி காலையில் அறிக்கை சமர்ப்பிக்கத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அன்றையதினம் திரு. ஆதித்தனார் 85 லட்சம் ரூபாய்க்கு வருமான வரி கொடுக்கவில்லை, வரி ஏய்ப்புச் செய்தார், அதனால் அவர் மீது ஹைகோர்ட்டில் வழக்கு இருக்கிறது, அது சம்பந்தமான ஆதாரங்கள் என்னிடத்தில் இருக்கின்றன என்று கூறி, அதற்குப் பிறகு அவர் மகன்மீது என்று மாற்றிச் சொல்லி, இறுதியாகத் தங்களிடம் கொடுத்தது, ஆதாரம் இல்லை, வெறும் கடிதம் என்றாகியது. அது மாத்திரம் இல்லை, ஹைகோர்ட்டுத் தீர்ப்பில் மாண்புமிகு திரு. கருத்திருமன் அவர்கள் இடைச்செருகல் செய்து கொடுத்திருக்கிறார்கள் என்று தாங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அவையின் கவனம் வேறு திசையில் திருப்பப்படுகிறது. "வேறு ஆதாரம் தருவீர்களா" என்று தாங்கள் கேட்டபோது, "ஆம், ஆம், வேறு ஆதாரம் இருக்கிறது" என்று சொன்னார்கள். இப்பொழுது ஆதாரம் இல்லை; அறிக்கை என்கிறார். ஆதாரத்தைத் தரப்போகிறார்களா, அல்லது அறிக்கை தரப்போகிறாரா? தங்களைக் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவருக்கு ஒரு வாய்ப்பு அளித்தேன். அன்றைக்கே தீர்ப்பு அளித்திருக்க முடியும். எதிர்க்கட்சித் தலைவருக்கு



மீண்டும் ஒரு வாய்ப்பு அளிக்கவேண்டும் என்று வாய்ப்பு அளிக்கிறேன் என்று சொன்னேன். மாண்புமிகு திரு. ஆதித்தனார் 85 லட்ச ரூபாய் வரி கொடுக்கவில்லை, அதுபற்றி உயர் நீதி மன்றத்தில் வழக்கு இருக்கிறது என்று சொன்னதற்கு ஆதாரமாக டாகுமெண்ட் 14-ம் தேதிக்குள் தரவேண்டும் என்றும், அப்படித் தரவில்லையென்றால், உங்களிடத்தில் ஆதாரம் இல்லை என்று பொருள் கொண்டு மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும் என்றும் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவருக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். அதற்கு விடை அளிப்பதோ அளிக்காமல் இருப்பதோ உங்களுடைய பொறுப்பு. அறிக்கை அளிப்பது என்பது வேறு. அதை 13-ம் தேதி பார்த்துக் கொள்ளலாம். அதைப்பற்றி இன்று அவைமுன் தெரிவிக்க வேண்டியதில்லை. அறிக்கை வைப்பது பேரவைத் தலைவருடைய அனுமதிபெற்று, சட்ட மன்ற விதிமுறைகளுக்கு ஒட்டி அளிக்க வேண்டும். எந்த வகையில் என்பதைப்பற்றி 13-ம் தேதி பார்த்துக் கொள்ளலாம். இப்பொழுது திரு. அரங்கண்ணல் எழுப்பிய கேள்விக்கு, அதுபற்றிய செய்தியை அவைக்குத் தெரிவிக்கிறேன். அவ்வளவுதான். ஆக, இந்த அளவோடு இதற்கு முற்றுப்புள்ளி வைக்கலாம் என்றும் தெரிவிக்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சட்ட சபையின் 81-வது விதிப்படி, ' A member may, with the permission of the Speaker, **make a** personal explanation although there is no question before the House forward
என்று இருக்கிறது என்பதைச் சொன்னேன். சபாநாயகர் அவர்களே, நீங்கள் கடிதம் எழுதியிருக்கிறீர்கள். கடிதத்திற்குப் பதில் அளிப்பதன்மூலமாகச் சட்ட சபையில் சொல்ல விரும்புகிறேன். தப்பித்து ஓடுகிற மாதிரி ஒன்றுமில்லை. குற்றச்சாட்டுகளுக்குப் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். சட்ட சபையில் அறிக்கை வைக்கத் தயாராக இருக்கிறேன். அது வேறு விஷயம் இல்லை. அதே விஷயந்தான் இதுவும். மாண்புமிகு முதல் அமைச்சர் பேசிய அடிப்படையில் (திரு. ரா. கனகசபை : அது . அறிக்கையா, ஆதாரமா என்றார்கள்.) அறிக்கையும் அதுதான், ஆதாரமும் அது தான்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஆதாரத்தைத் தங்களிடத்தில் கொடுத்துவிட்டு, ஒரு காப்பியை இங்கே தரலாம். அது மாத்திரமல்ல; தலைவர் அவர்களே, ஒரு வேண்டுகோளையும் அவைமுன் வைக்க விரும்புகிறேன். இப்படிக் குற்றச்சாட்டுக்கள் கூறப்பட்டு, உடனுக்குடன் அமைச்சர்களாலும், மற்ற உறுப்பினர்களாலும், யார்மீது குற்றச்சாட்டுச் சாட்டப் படுகிறதோ அவர்களாலும், உடனடியாக மறுப்பு அளிக்கப்படுகிறது. குறிப்பாக, இந்த விவகாரத்தில் கூட்டுறவு அமைச்சர்மீது குற்றச்சாட்டுத் திரும்பத் திரும்ப ஒரு மாதகாலமாகப் பல நேரங்களில் பேசப் பட்டிருக்கிறது. ஆனால். இதிலே பத்திரிக்கைக்காரர்கள் இந்தச் செய்திகளைப் பிரசுரிப்பதில், மறுப்பு விளக்கங்களை முழுவதாக

வெளியிடுவதில்லை. அதனால், பொதுமக்களிடையில் குழப்பமான சூழ்நிலை ஏற்படுகிறது. தலைவர் அவர்களே, இங்கே நடக்கும் விஷயங்களை முழுதும் போடவேண்டும் என்று பத்திரிகைகளைத் தங்கள்மூலம் கேட்டுக் கொள்ளுகிறேன். தாங்களும் ஆணை பிறப்பிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொள்வதற்கு முன்பே, நான் பத்திரிகையாளர்களைப் பார்த்து, இரண்டு தரப்பிலிருந்தும் செய்திகளை ஒத்த வகையில் போடுங்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கிறேன். அதிலே சில பத்திரிகையாளர்கள், ஒரு சில பகுதிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, சில செய்திகளை வெளியிடுவதைப் பார்க்கிறேன். என்னுடைய தீர்ப்பை வெளியிடும்போதுகூட, சில பத்திரிகைகள் ஒரு மாதிரியாக வெளியிடுகின்ற, அப்படிப்பட்ட முறைகளையும் பார்க்கிறேன். பத்திரிகையாளர்கள் அப்படிப் போடுவதால் ஜனநாயகம் தழைக்க இடையூறாக இருக்கும். ஆகவே, பத்திரிகையாளர்கள் ஒத்துழைக்க வேண்டும். அப்படி ஒத்துழைக்க முடியவில்லை என்ற நிலை ஏற்பட்டால், அதற்குப் பிறகு என்ன செய்ய வேண்டும் என்பதைப்பற்றி அப்பொழுது முடிவு செய்யவேண்டியிருக்கும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** ஸார், பாயின்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஸ்பீக்கர் ரூலிங் மீதா? சரி, உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் 81-வது விதியின்கீழே ஒரு அறிக்கை கொடுப்பதாகச் சொன்னார்கள்.

A member may, with the permission of the Speaker, make a personal explanation although there is no question before the House, but in this case no debatable matter may be brought forward . . . என்று விதி இருக்கிறது. ஆக, அப்படி விவாதத்திற்குரியதல்லாத பொருளாக இருக்க வேண்டும். விவாதத்திற்குரிய பொருளைப்பற்றி எழுப்பக் கூடாது. . . . (குறுக்கீடு) இல்லை, நன்றாகப் பாருங்கள்

A member may with the permission of the Speaker, make a personal explanation although there is no question before the House, but in this case no debatable matter may be brought forward என்றுதான் இருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** "and no debate shall arise" என்றும் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் சொல்வது, no debetable matter shall be brought forward அதாவது, ஒரு உறுப்பினர் இந்த அவையிலே தன்னிலை விளக்கம் என்கிற முறையில் இந்த அறிக்கையை அளிக்கும் நேரத்தில், விவாதத்திற்குரிய ஒன்றைக் கூறக் கூடாது என்று இருக்கிறது.





No debatable matter shall be brought forward, and no debate shall arise. ஆக, debatable matter, விவாதத்திற்குரிய பொருளைப் பற்றி அறிக்கை கொடுத்துவிட்டால், விவாதம் வரத் தூண்டுதலாகும். (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அவர்களுடைய அனுமதி பெற்று, விதிக்கு அடங்கிக் கொடுக்கவேண்டும். பேரவைத் தலைவர் அனுமதித்தால்தான் தன்னிலை விளக்கம் கொடுக்க முடியும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் 13-ம் தேதி அறிக்கை கொடுக்கிறேன் என்கிறார்கள். என்னவானாலும், விதியிருக்கும் முறையில் அவராக அதைக் கொடுத்துவிட முடியாது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அறிக்கை கொடுக்கக்கூட உரிமை கிடையாதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இல்லையென்று. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் இந்த அவையில் அறிக்கை அளிப்பதற்கு உரிமை இருக்கிறது, விதியை ஒட்டி. ஆனால், அது வேறு. 14-ந் தேதிக்குள் தாங்கள் மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர்மீது கூறிய குற்றச்சாட்டுக்கு ஒரு ஆதாரம் தேவை, ரெகார்ட் தேவை, டாகுமெண்ட் தேவை. ஆக, அதைத் தரவேண்டும் என்று வாய்ப்பு அளித்திருக்கிறேன். 14-ம் தேதிக்குள் நீங்கள் தரவேண்டும். அப்படித் தரத் தவறினால், உங்களிடத்தில் அதற்கான ஆதாரம் இல்லை என்று கருதி, மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க, பேரவைத் தலைவர் அவர்களுக்கு அப்படிப்பட்ட நிலை உருவாகும். ஆக, கடிதம் எழுதி அதற்குப் பதில் கொடுப்பது வேறு, அறிக்கை கொடுப்பது வேறு. இரண்டையும் ஒன்றாக ஆக்கவேண்டாம் என்று தெரிவிக்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்கள் இந்த விஷயத்திலே, வேறு எவ்வளவோ காரியங்கள் நடைபெறுகின்றன என்றாலும், இந்த விஷயத்தில் இவ்வளவு அக்கறை எடுத்துக் கொண்டிருப்பதைப்பற்றி மிக்க நன்றி. ஒரு முக்கியமான பிரச்சினை வந்திருப்பதால், அதை மக்களுக்கு, பொது மக்களுக்கு அறிவிக்க, சட்ட சபையில் அறிவிக்க வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. எங்களுடைய ஒத்துழைப்பைக் காட்டி, இந்த விஷயத்திற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்றுதான் இருக்கிறேன். முதல் அமைச்சர் சொல்கிறார்கள் இந்த விஷயம் வளர்ந்துகொண்டே போகிறது என்று. ஆகவே, ஆதாரத்துடன் வருகிறேன். வேண்டிய ஆதாரத்துடன் சொல்கிறேன். ஆதாரம் இல்லாமல் இல்லை. நிரூபிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குற்றச்சாட்டுக்கான ஆதாரங்களைக் கொடுக்க வேண்டுமென்று பேரவைத் தலைவர் அவர்கள் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆதாரங்களைக் கொடுக்கட்டும். அறிக்கை கொடுப்பதைப்பற்றித் தனியாக யோசிக்கலாம்.

[1970 மார்ச் 12

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** வயதான, உடல் நலிவுற்ற நோயுற்ற பிச்சைக்காரர்கள், உடல் நலம் குறைந்த பிச்சைக்காரர் கள், உடல்கட்டுள்ள பிச்சைக்காரர்களுக்கு வேலை செய்வதற் குரிய வாய்ப்புகளும் அங்கே இருக்கின்றன. 1954-ல் தொடங்கப் பட்டு ஏறத்தாழ 600 பேர் அந்த விடுதியில் இருந்து வருகிறார்கள், பிச்சைக்காரர்கள், உடல் நலிவுற்றவர்கள். இது தவிர தண்டனை பெறுகிற பிச்சைக்காரர்கள் அங்கே வேலை செய்து கொண்டிருக் கிறார்கள். ஆக, அவர்களும் சேர்ந்து ஏறத்தாழ 600 பேர்கள் இருக்கிறார்கள்.

**திரு. செஞ்சி வெ. முனுசாமி :** தலைவர் அவர்களே, தயாசதனத் திற்குக் கொண்டுவரப்படுகிற பிச்சைக்காரர்கள் அங்கே இருக்க விருப்பம் இல்லாமல் ஓடிவிடுவதாகப் பேசப்படுகிறதே, அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** ஆனால், இங்கே கொடுக் கப்பட்டிருக்கிற அந்தக் கோரிக்கை மனுவில் அதிகமாக எண்ணிக்கை இருக்கிறது, தங்களால் பராமரிக்க இயலவில்லை, தங்களுக்குக் கொடை வழங்குபவர்களும் குறைந்துபோய் விட்டார்கள், ஆகவே அரசாங்கம்தான் நிதி அதிகம் தரவேண்டும் என்று கோரப்பட்டிருக்கிறது. ஆகவே, எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது என்பதைத்தான் இது காட்டுகிறது.

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி :** தயாசதனத்திற்கு யாரும் சிபார்சு செய்து அனுப்பிவைக்கிறார்களா? அல்லது அவர்களே வரு கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன். அடுத்து வயது வந்தோர், யாருடைய உதவியும் இல்லாமல் இருக்கிற நிலைமையில் இருக்கக் கூடியவர்களை தயாசதனத்தில் சேர்ப்பதுபற்றி அரசாங்கம் யோசிக்குமா?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** வயதானவர்களுக்கு, எந்த விதமான ஆதரவும் இல்லாதவர்களுக்கு 'ஓல்டு ஏஜ் பென்ஷன்' என்று தனியாக ரெவின்யூ இலாகாவின்மூலம் உதவி செய்கிறது. பிச்சைக்காரர்கள், உடல் நலிவுற்றவர்கள், குறிப்பாக தொழுநோ யுற்றவர்கள் ஆகியவர்கள் இந்த விடுதியில் சேர்க்கப்படுகிறார்கள்.

THIRU K. VINAYAKAM : Is it not a fact that able-bodied beggars and inmates of this House are made to work and produce some commodities which are saleable in the market? What is the total amount of proceeds which we realise out of this?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** இந்த தயாசதனம் தனி யாரால் நிறுவப்பட்டு, அதற்கென்று ஒரு குழு அமைத்து அவர்கள் இதை நடத்துகிறார்கள். நம்முடைய போலீஸ் கமிஷனர் அவர்கள் மேற்பார்வையிடுகிறார்கள். ஆனால், நம்முடைய அரசாங்கம் நிர்வாகம் செய்கின்ற நம்முடைய கேர் ஹோம் என்று சொல்லப் படுகிறது மேல்பாகத்தில் இருக்கிற காப்பு இல்லத்திலும், காஞ்சி புரத்தில் இருக்கிற இல்லத்திலும் நெசவு நெய்தல், அட்டைப்



1970 மார்ச் 12]

பெட்டிகள் முதலியவை தயார்செய்தல், இப்படி பல்வேறு பொருள் கள் தயார் செய்து வருகிற சிறு சிறு காட்டேஜ் இண்டஸ்டிரீஸ் என்று சொல்லப்படுகிற சிறு தொழில்களைச் செய்கிறார்கள். அது அவர்களுடைய செலவுக்கு சரிக்கட்டிப் போகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினுக்கள்-விடைகள் முடிவுற் றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

## (2) ஒத்திவைப்புத் தீர்மானம்.

### மின்சாரக் கட்டண உயர்வை எதிர்த்து கோவை மாவட்ட விவசாயிகளுடைய உண்ணாவிரதம் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. என். எஸ். வி. சித்தன், திரு. வை சுவாமிநாதன், திரு. எம். சுரேந்திரன், திரு. ஏ. அ. சுப்பராஜா, திரு. சோ. அழகர்சாமி, திரு. ஆ. கு. சுப்பையா, திரு. என். மருதாசலம் ஆகியோர் சட்டப் பேரவையின் 42-வது விதியின்கீழ் விவசாயிகளுக்கான மின் சாரக் கட்டணத்தை 8¼ காசிலிருந்து 10 காசுகளாக தமிழக அரசு உயர்த்தியிருப்பதை எதிர்த்து கோவை மாவட்ட விவசாயிகள் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு முன்பு உண்ணாவிரதம் ஆரம்பித்திருப்பதைப்பற்றி விவாதிக்க இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும் என்று கூறியிருக்கிறார்கள்.

இது அரசாங்கத்தினுடைய அன்றாட அலுவலுக்குட்பட்டது. மேலும், உண்ணாவிரதம் இருப்பதைப்பற்றி இந்த அவை விவாதிப் பது என்பது முறையாகாது. இன்னும் மானியக் கோரிக்கையின் விவாதத்தின்போது இதுபற்றிய கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தினால், இதற்கு அனுமதி தர மறுக் கிறேன்.

## (3) தகவல் கோரல்.

### கூட்டுறவுத் துறை அமைச்சர்மீது எதிர்க்கட்சித் தலைவர் சாட்டியுள்ள குற்றச்சாட்டு குறித்து.

**திரு. இராம. அரங்கண்ணல் :** தலைவர் அவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன். தலைவர் அவர்களே, மூன்று நாட்களுக்கு முன்பு, சட்ட மன்றத்திலே மரியாதைக்குரிய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் திரு. ஆதித்தனார் அவர்கள் 85 லட்ச ரூபாய் வருமான வரி கொடுக்கவில்லை, வருமான வரி இலாகாவினர் கோர்ட்டில் வழக்குப் போட்டு இருக்கிறார்கள் என்றும், அதற்கான ஆதாரங்களைப் போதிய அளவில் தங்களிடம்

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** தலைவர் அவர்களே, நான் ஆதாரத்தோடு அறிக்கை கொடுக்கலாம் என்றிருக்கிறேன். இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகத்தான் நான் சொல்கிறேன் . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அப்படியானால் பேரவைத் தலைவர் அவர்கள் தங்களுக்கு விடுத்திருக்கிற அறிவிப்புப்படி நோட்டீஸுக்கு மன்றத்தின்முன் ஆதாரங்களைக் கொடுக்கப் போவதில்லையா? அறிக்கை மட்டும்தான் கொடுக்கப் போகிறீர்களா?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** தலைவர் அவர்களே, எந்த விஷயத்தை எழுப்பினாலும் நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவரவர்கள் அறிக்கை கொடுப்பதற்கு நான் குறுக்கே நிற்கவில்லை. நான் சொல்வது என்னவென்றால், 81-வது விதியின்கீழ் எந்த அளவிற்கு வரும் என்பதைப் பார்த்து, பேரவைத் தலைவரின் அனுமதி பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதுதான். அதற்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

இரண்டாவதாக, 'எவ்வளவோ காரியங்கள் நடைபெறுகின்றன. இதில் பேரவைத் தலைவர் அக்கறை காட்டுவதற்கு நன்றி' என்று சொல்லியிருக்கிறார். எவ்வளவோ காரியங்கள் நடைபெறுகின்றன. இந்த அவையின் கண்ணியத்தைக் காப்பாற்றுகிற பேரவைத் தலைவர் கொஞ்சம் தாராள மனப்பான்மையுடன் நடந்து கொண்டார் என்பது தவறு. இப்படிக் கூறுவது தவறு. இந்த மன்றத்திலே இருக்கிற உறுப்பினர்கள் எழுந்திருந்து, ஏதாவது ஒரு குற்றச்சாட்டைச் சொல்லிவிட்டு, அதை நிரூபிக்க ஏதாவது என்குயரி வையுங்கள், கமிஷன் வையுங்கள் என்று சொல்கிற நிலைமை இருக்கிறது.

### (4) அறிவிப்புகள்.

**(அ) திரு. ரா. ராமச்சந்திர துரை உள்ளாட்சித்துறை அமைச்சர் மீது சாட்டிய குற்றச்சாட்டு குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னொரு செய்தி. திரு. ராமச்சந்திர துரை அவர்கள் பேசிய நேரத்தில் ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். உள்ளாட்சித் துறை அமைச்சர் மீது, நாமக்கல் கல்லூரிக்காக நன்கொடை வசூலிப்பதைப் பற்றியது அந்தக் குற்றச்சாட்டு. குற்றச்சாட்டிற்கான ஆதாரம் அவர்களிடம் இருக்கிறது என்று உறுப்பினர் கூறியிருக்கிறார். நான் ஒரு தீர்ப்புக் கூறுகிறேன் என்று சொல்லியிருக்கிறேன்.



குற்றச்சாட்டிற்கான ஆதாரங்களைத் தருமாறு திரு. ராமச்சந்திர துரைக்கும், குற்றச்சாட்டை மறுப்பதற்கான ஆதாரங்கள் என்ன என்று உள்ளாட்சித் துறை அமைச்சருக்கும் எழுத இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### (5) நடைமுறைக் கேள்வி.

**பேரவை நடவடிக்கைகள்பற்றிய செய்திகள் வெளியிடுவது குறித்துப் பத்திரிகையாளருக்கு முதலமைச்சர் விடுத்த வேண்டுகோள்.**

DR. H. V. HANDE: Sir, under Rule 83 sub-rule (3) I raise a point of order whether the Chief Minister is competent to give instructions to the Press, which is the Fourth Estate and which has the freedom to publish what it wants. In fact we are very much aggrieved because there are so many papers in Madras City which do not publish our points of view at all. It is a specific and very serious point of order. There are so many papers which do not publish whatever we say and they publish whatever the other persons say. Supposing there is an argument between me and another member, my argument is not published and the other member 's argument is published.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பத்திரிகைக்காரர்களுக்கு இப்படிப்பட்ட எச்சரிக்கை விடுவதற்கு உரிமை இருக்கிறதா?' என்பதுதானே உங்களுடைய கேள்வி? மற்ற விளக்கங்கள் தேவையில்லை.

DR. H. V. HANDE: I am making out a clear point of order. Am I not entitled even a couple of minutes to make out the point of order? I am trying to convince the Speaker that there is a specific point of order.

Then I never warned those papers. Similarly a Member in this House has no business or right or authority to instruct the newspapers. It is the fundamental right of the newspapers to publish in any manner without going against the rules. When there is justification for this feeling, we have also the same justification for our feeling because our points of view are not published. Is there any rule in the Rules Book which authorises the Speaker to give instructions to the Fourth Estate which has to maintain its freedom? Neither the President nor the Prime Minister of India has power to instruct the Press.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நான் எந்தப் பத்திரிகைக்கும் எச்சரிக்கை விடவில்லை. பத்திரிகைக்காரர்களைப் பொறுத்தவரையில் டாக்டர் ஹாண்டே அவர்களுக்குத் தெரிந்ததைவிட எனக்கு நன்றாகத் தெரியும். தனக்குத்தான் எல்லா விஷயங்களும் தெரியும் என்று அவர் பேசுவது முறை அல்ல. நான் பேரவைத் தலைவர் மூலமாகப் பத்திரிகையாளர்களுக்குத் தெரியப்

படுத்திக்கொள்கிறேன். அவர்கள் பத்திரிகையில் செய்திகள் போடுகிறார்களா இல்லையா என்பதல்ல பிரச்சினை. ஒரு செய்தியைப் போடும்போது முழுவதுமாகப் போட்டால் சரியானது. ஒரு முக்கியமான குற்றச்சாட்டை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொண்டுவருகிறபோது, செய்தியை, சபை நடவடிக்கைகளை வெளியிடுகிற நேரத்தில் கூட்டியும் குறைத்தும் வெளியிடுவதனால் மக்களிடத்தில் குழப்பங்கள் நேரிடுகின்றன என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பத்திரிகைச் சுதந்திரம் பறிக்கப்பட வேண்டுமென்று சொல்லவில்லை. கூட்டியோ, குறைத்தோ போடுவதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறதென்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பத்திரிகைக்காரர்கள் எந்த முறையைப் பின்பற்ற வேண்டுமென்பதைத்தான் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களுடைய பாயின்ட் ஆஃப் ஆர்டருக்கு விளக்கம் சொல்லியாகவேண்டும். டாக்டர் ஹாண்டே அவர்கள், "பத்திரிகைக்காரர்களுக்கு முழு உரிமை இருக்கிறது. அந்த உரிமையிலே குறுக்கிட யாருக்காவது உரிமை இருக்கிறதா? பேரவைத் தலைவருக்கு உரிமை இருக்கிறதா?" என்றெல்லாம் கேட்டார்கள். நான் கூறுகிறேன், நிச்சயமாகப் பேரவைத் தலைவருக்கு உரிமை இருக்கிறது. (பாராட்டொலி). இந்த அவையில் நடைபெறுகிற நிகழ்ச்சிகளை, எப்படி நடைபெறுகிறதோ, எந்த உணர்வோடு நடைபெறுகிறதோ அந்த உணர்வோடு வெளியிடுவது தான் பத்திரிகைகளின் உரிமை, கடமை. மாசு கற்பிக்கும் வகையில், ஒரு உணர்வுக்கு மதிப்பளித்து இன்னொரு உணர்வுக்கு மதிப்பளிக்காமல், இம்மன்ற நடவடிக்கைகளைத் திருத்தி வெளியிடுவது இந்தச் சபையை அவமதித்து, நோக்கம் கற்பித்து வெளியிடுவது ப்ரீச் ஆஃப் ப்ரிவிலேஜ் ஆகும். இதில் பேரவைத் தலைவருக்கு உரிமை இருக்கிறது. பேரவைத் தலைவருக்கு உரிமை இருக்கிறதா என்று உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். இந்தச் சபை கொடுத்திருக்கிற அதிகாரம், பெரிய அதிகாரம், அவருக்கு இருக்கிறது. ஆகவே, பத்திரிகைகள் இன்ன முறையிலேதான் பணியாற்ற வேண்டுமென்று வழிகாட்டவில்லை. இந்த மன்றத்தில் நிகழ்ச்சிகள் எப்படி நடைபெறுகின்றனவோ அப்படிப் போட வேண்டும். நடைபெறுகிற நிகழ்ச்சிகளைத் திருத்தி நோக்கங்களைக் கற்பிக்கும் முறையில், தவறான எண்ணங்களை உண்டாக்கும் முறையில் போடக் கூடாது. இப்படித்தான் வெளியிட வேண்டு மென்று நான் ஆணை பிறப்பிக்கவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் சொல்லியதில் பேரவைத் தலைவர் இதற்கு வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இந்த அவையிலுள்ள அத்தனை பேருக்கும் தவறுகளைச் சுட்டிக்காட்டித் திருத்துவதற்கும், பேரவைத் தலைவருக்குத் துணை செய்வதற்கும் உரிமை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



DR. H. V. HANDE : There is a specific point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, 41-வது விதியின் கீழ் அவசரப் பொதுமுக்கியமான ஒரு காரியத்தை திரு. வி. கே. கோதண்டராமன் அவகள் உணவு—வணிக வரித்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்.

DR. H. V. HANDE : I am raising a different point of order.

MR. SPEAKER : Under what rule?

DR. H. V. HANDE : I am raising a point of order under sub-rule (3) of rule 83. முதலமைச்சர் அவர்கள், 'ஹாண்டே அதிகம் தெரிந்ததுபோல் பேசுகிறார் என்று சொன்னார்கள் . I fully agree. I am only an ordinary member. I do not say that I know more.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சீக்கிரம் என்னிடத்தில் சொல் லுங்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** பத்திரிகைகளைப்பற்றி எனக்கு அதிகம் தெரியும், ஹாண்டே விஷயம் எல்லாம் தெரிந்தவர்கள் போல் பேசுகிறார் என்று சொன்னார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சரி, பாயின்ட் ஆஃப் ஆர்டருக்கு வாருங்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** மன்றத்திலே உள்ள ஒரு உறுப்பினர் மீது நோக்கம் கற்பிப்பதுபோல் ஆகாதா? எல்லாம் தெரிந்தவர்போல் பேசுகிறார் என்பது நோக்கம் கற்பிப்பதாகாதா?

What is in my mind, I have not stated. (The Hon. Chief Minister rose). I am asking the Speaker. The Speaker is impartial. Whether judgment he gives, I will abide by it. I am asking whether a newspaper has not got the right to publish or delete any information, though they have no right to twist. Some papers are blacking me out. When that was done, the Speaker and everybody kept quiet. Newspapers have no right to twist or give false information. I request whether it is in order . . .

MR. SPEAKER : DR. Hande, please sit down.

டாக்டர் ஹாண்டே அவர்கள் எந்தவிதமான பாயின்ட் ஆப் ஆர்டரும் எழுப்பவில்லை. பத்திரிகைகளுக்குச் செய்திகளை வெளியிட முழு உரிமை இருக்கிறது. டாக்டர் ஹாண்டே சொல்வது போல ஒருவருடைய செய்தியை முழுக்க வெளியிடலாம். இன்னொருவர் செய்தியை முழுக்க வெளியிடாமல் இருக்கலாம். இருவர் பேசுகின்ற நேரத்தில் ஒருவருடைய பேச்சையும்

மனைகள், சிறைச் சாலைகள், அரிசன மாணவர் விடுதிகள் முதலியவைகளுக்கு மலிவு விலையில் அரிசி வழங்கப்படுகிறது. மற்றும், அங்குள்ள அனாதை இல்லங்களுக்கும், அற நிலை நிறுவனங்களுக்கும் 1—3—1970-லிருந்து அரிசி மலிவு விலையில் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

மற்ற மாவட்டங்களில் அரசின்-கையிருப்பிலிருந்து தற்போது அரிசி வழங்கப்படுவதில்லை. பொதுவாக, உணவுப் பொருள்களின் மீதிருந்த தடைகள் நீக்கப்பட்டுள்ளதால், உணவுப் பொருள் தாராளமாகக் கிடைக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. சென்ற ஆண்டு வெளிச் சந்தையில் நிலவியதை விட விலைகள் பொதுவாக தற்போது குறைந்திருக்கின்றன. மேலும், அதிக மகசூலைக் கொடுக்கும் ஐ.ஆர். 8 நெல்லை, மாநிலத்தில் பரவலாகவும், குறிப்பாக செங்கற்பட்டு, வடாற்காடு மாவட்டங்களில், பெருமளவில் பயிரிடப்படுவதையொட்டி வெளிச் சந்தைகளில் அடுத்த சில மாதங்களில் நெல் கணிசமாகவும் தாராளமாகவும் கிடைக்கும் என்ற காரணத்தால், விரைவில் விலைகள் மேலும் குறைந்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, மதிய உணவு நிறுவனங்களும், வேறு நிறுவனங்களும் அவைகளுக்குத் தேவையான அரிசியை வெளிச் சந்தையில் பெறுவதில் எவ்விதத் தடங்கலும் இருக்காது என அரசு கருதுகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : கனம் அமைச்சர் அவர்கள் இந்த நிறுவனங்களுக்கு நியாயவிலைக்கடைகளின் மூலமாக உணவுப்பொருள் கொடுக்கவேண்டுமென்று சமீபத்தில் உத்தரவிட்டிருப்பதாகக் கூறினார்கள். எந்த அடிப்படையில் இப்போது கொடுக்கப்பட்டு வருகின்றது? பத்து பைசாவுக்கு சோறு போட வேண்டும், 15 பைசாவுக்குச் சோறு போடவேண்டும் என்கிற நிலையில் தற்போது 2 மாதத்திற்குள் 30 புள்ளி விலைவாசி ஏறியிருக்கிற நேரத்தில்—இந்த நியாயவிலைக்கடைகளின் மூலமாக இந்த ஸ்தாபனங்களுக்கு ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்று கிடைக்க உடனடியாக உத்தரவு போடுவார்களா? இப்போது உத்தரவிட்டிருப்பதாகக் கூறினார்களே தவிர இதுவரை கொடுக்கவில்லை என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சென்னையிலும், கோவையிலும் அனாதை இல்லங்கள், மற்ற விடுதிகள் சிறைச்சாலைகள், மருத்துவ மனைகள் இவற்றுக்கு அரிசி நியாயவிலைக்கடைகளின் மூலம் வழங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இப்போது வழங்கி வருகிறார்கள்.

திரு. ஆர். கருப்பையா : சார் ஆன் ய பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த விதியின் கீழ்?





திரு. ஆர். கருப்பையா : 83-வது விதியின் கீழ் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது எவ்வப்போது பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாம் என்பது பற்றியது. தாங்கள் இப்போது எழுப்புகிற பாயின்ட் ஆப் ஆர்டர் எந்த விதியின் கீழ்?

திரு. ஆர். கருப்பையா : எக்ஸ்ப்ளனேஷன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நான் அனுமதிக்க முடியாது.

THIRU V. GEORGE : Sir, on a point of order. The proceedings of the House are governed not only by the Assembly Rules but also by May's Parliamentary Practice and the provisions of the Constitution. We cannot nave at the fingertips all the rules. So, the hon. Member's freedom to raise a point of order should not be restricted.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய விதிமுறைகளில் தெளிவு ஏற்படாதபோதுதான் மேல் பார்லிமெண்டரி ப்ராக்டிஸைப் பாக்கவேண்டுமே தவிர, இது தெளிவாக இருக்கும் போது இதை விட்டுவிட்டு அதற்குப் போகவேண்டுமென்பதில்லை.

## (7) அரசினர் தீர்மானங்கள்.

### (அ) மதிப்பீட்டுக் குழுவிற்குத் தேர்தல்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : "பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு சட்டப் பேரவையின் 164-வது விதியின் கீழ் 1970-71-ம் ஆண்டுக்குரிய மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்" என்கிற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

## (4) அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) மதிப்பீட்டுக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ் மதிப்பீட்டுக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 18—3—1970 புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள் வேண்டுவோர் செயலாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

இன்னொருவருடைய பேச்சையும் வெளியிடுகின்ற முறையில் பொதுமக்களுக்குத் தவறான கருத்து ஏற்படுகின்ற நிலையில் அந்தச் செய்தியை வெளியிடக்கூடாது.

நோக்கம் கற்பிக்கின்ற நிலையில் வெளியிடக் கூடாது.

உதாரணமாக திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் முதல் அமைச்சர் அவர்களுடைய கார் டிரைவருக்கு ஒரு ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்கிற குற்றச் சாட்டைச் சொன்னார்கள்.

முதல் அமைச்சர் அவர்கள் அதை மறுத்து "என்னுடைய கார் டிரைவருக்கு ஒரு ஏக்கர் நிலம் கொடுக்கப்படவில்லை. ஒரு சென்ட் நிலம் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் அவனுக்கு மட்டுமல்ல. மற்றவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்ப தாக எல்லாம் விளக்கினார்கள்.

இந்த இரண்டு செய்திகளையும் ஒரு பத்திரிகை வெளியிடாமல் விட்டுவிட்டால் பாதகமில்லை. ஆனால் வெளியிடுகிற நேரத்தில் திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் கூறியதைப் பெரிய எழுத்தில் "முதல் அமைச்சர் அவர்களுடைய கார் டிரைவருக்கு ஒரு ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்று தலைப்பில் போடுவது, முதல் அமைச்சருடைய மறுப்பை சின்ன எழுத்தில் வேறு ஓர் இடத்தில் கொண்டுபோய்ப் போடுவது என்பது தவறாகும். இது மக்களிடத்தில் தவறான கருத்தை ஏற்படுத்தவே உதவும், இப்படி பிரித்து, தவறான நோக்கத்தை மக்களிடையே ஏற்படுத்தும் வண்ணம் போடக்கூடாது.

DR. H. V. HANDE : Sir, the same thing has been committed by other newspapers.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் திராவிட முன்னேற்றக் கழகப் பத்திரிகைகளை விட்டுவிட்டு மற்ற பத்திரிகைகளுக்குச் சொல்லவில்லை. பொதுவாக, பத்திரிக்கையாளர்கள் என்று குறிப்பிட்டேனே தவிர, சிலரை விலக்கி, சிலருக்காக மட்டும் சொல்லவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நீங்கள் உதாரணம் சொல்கிறபோது மிகுந்த அக்கறையோடு திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் சொன்னதுபற்றி பத்திரிகையில் வந்ததைமட்டும் என்றிப் பார்த்துச் சொன்னீர்கள். இதுபோல அந்தப் பத்திரிகைகளில் நாங்கள் சொன்னதை எப்படிப்போடுகிறார்கள், அவர்கள் சொல்வதை எப்படிப் போடுகிறார்கள் என்பதையும் பார்த்து ஒரு உதரணத்தைச் சொல்லியிருக்கலாம் என்கிற ஆலோசனையைத் [illegible] நான் சொல்கிறேன்.





**திரு. ரா. ராமச்சந்திர துரை :** சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எந்த விதியின் கீழ்?

**திரு. ரா. ராமச்சந்திர துரை :** பர்சனல் எக்ஸ்ப்ளனேஷன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் இப்போது அனுமதிப் பதற்கில்லை. விதி 41-இன் கீழ் திரு வி. கே. கோதண்டராமன் அவர்கள் அவசரப் பொது முக்கியமான ஒரு காரியத்தை மாண்புமிகு உணவு-வணிக வரித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

### (6) கவன ஈர்ப்பு

மாணவர், அனாதை விடுதிகளுக்கும், சிறைச்சாலைகளுக்கும் கொடுத்துவந்த கட்டுப்பாடு விலை அரிசியை நிறுத்தியதும், அதனால் ஏற்பட்ட பாதிப்பும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்பேரவையின் 41-வது விதியின் கீழ் நியாயவிலைக் கடைகளை எடுத்துவிட்டதாலும், மாணவர்களின் விடுதிகள், அனாத விடுதிகள், சிறைச்சாலைகள், மதிய உணவு முதலியவைகளுக்குக் கொடுத்துவந்த கட்டுப்பாட்டு விலை அரிசியை நிறுத்தியதாலும் அதிக விலை கொடுத்து அரிசி வாங்கிச் சமாளிக்க முடியாத நிலையில் மாணவர்களும், மற்றவர்களும் பாதிக்கப்பட்டுள்ளதைப் பற்றிய அவசர பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு உணவு-வணிக வரித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அரசு, உணவு உற்பத்தியை அதிகரிக்க எடுத்துக் கொண்ட தீவிர நடவடிக்கைகளாலும், அண்மையில் மாநிலம் முழுவதும் அனுகூலமாக அமைந்து பருவ நிலை காரணமாகவும், உணவுப் பொருள்கள் மீதிருந்த கட்டுப் பாடுகளை நீக்க அரசு முடிவு செய்தது. இம் முடிவின்படி, சென்னை மாநகரிலும், கோயம்புத்தூரிலும் சட்டபூர்வ பங்கீட்டு முறை ரத்து செய்யப்பட்டது. மாவட்டங்களில் சட்ட பூர்வமற்ற பங்கீட்டு முறையும் நீக்கப்பட்டது. சென்னை மாநகர், கோயம் புத்தூர் நீங்கலாக ஏனைய இடங்களில் பங்கீட்டு அட்டைக்காரர் களுக்கும், பெரும் அளவில் நுகர்வோர்க்கும் (Bulk consumers) அரிசி வழங்குவது 31—1—1970 முதல் நிறுத்தப்பட்டது.

அரசு படி அரிசித் திட்டம் அமுலிலுள்ள சென்னையிலும், கோவையிலும் அரிசியை மலிவு விலையில், மாத வருமானம் ரூ. 200-ம் அதற்கும் குறைவாய் உள்ளவர்களுக்கு மட்டும் வழங்க உத்தரவிட்டிருக்கிறது. மேற்கூறிய இடங்களிலுள்ள மருத்துவ

எஸ்.எஸ்.எல்.சி. படித்துவிட்டு எல்.டி.சி.யாக வேலை பார்க்கின்றவர்கள் என்ன சம்பளம் பெறுகிறார்களோ, அதே சம்பளம் தான் எஸ்.எஸ்.எல்.சி. படித்துவிட்டு அதற்குப்பிறகும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் இரண்டாண்டுக் காலம் படித்துவிட்டு செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக வருகின்றவர்களுக்கும் கொடுக்கப்படுகிறது. அதிகமாகப் படித்து இருக்கிறார்கள் என்ற காரணத்தினால் அவர்களுக்கு அதிகமான சம்பளம் தரப்பட வேண்டும்.

பி.ஏ. அல்லது எஸ்.எஸ்.எல்.சி. படித்துவிட்டு அப்பர் டிவிஷன் கிளார்க்காகவும், லோயர் டிவிஷன் கிளார்க் ஆகவும் வருகிறவர்களுக்கு வேறு துறைகளில் வளர்வதற்கு வாய்ப்பு இருப்பதுபோல் ஆசிரியர்களுக்குக் கிடையாது. எனவே, வளர்ச்சிக்கான வாய்ப்பு குறைவாக இருக்கின்ற கல்வித் துறையிலே பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்கு நியாயமான சம்பளத்தையேனும் கொடுத்தாக வேண்டும்.

இன்னும் இரண்டு விஷயங்களையும் என்னுடைய பேச்சிலே சொல்ல விரும்புகிறேன். கல்வித் துறை அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும், திராவிட முன்னேற்றக் கழக அரசும் இவற்றைச் செயல்படுத்துவார்கள் என்று நம்புகிறேன்.

கல்வித் துறையிலே சிலபல நல்ல அம்சங்கள், நல்ல முன்னேற்றங்கள் தமிழக அரசால் செய்யப்பட்டிருந்தாலும், கல்வி முறை மாற்றம் ஏற்படுத்துவதற்கான எந்த ஒரு திட்டமும் இந்த சட்டப் பேரவை முன் வைக்கப்படவில்லை. அப்படியொரு திடத்தைக் கடந்த மூன்று ஆண்டுக்காலத்திலே நான் காணவில்லை. போதனா மொழி பற்றி இப்பொழுது நான் சொல்லவில்லை. கல்வி போதிக்கின்ற வழி முறையானது தொழிலோடு தொடர்புடையதாக இருக்க வேண்டும். இருபது ஆண்டுகளாகத் தொடர்ந்து சமுதாயத்திலே தலைமைப் பொறுப்பேற்றவர்கள் இதிலே கவனம் செலுத்தவில்லை. அன்னிய ஆட்சியாளர்கள் ஏற்படுத்திவிட்டுப்போன கல்வித்திட்டத்தையேதான் இன்றும் வைத்திருக்கிறோம். சுதந்திரத்திற்காகப் போராடிய நேரத்திலே உறுதி கொடுக்கப்பட்டது, சுதந்திர இந்தியாவிலே ஆதாரக் கல்வித் திட்டம்—தேசியக் கல்வித் திட்டம் நடைமுறைக்கு வருமென்று. தொழிலோடு கல்வியைப் போதிக்கின்ற கல்வித் கல்வித் திட்டமாகத்தான் அது இருந்தது. சுதந்திரத்தைத் தேக்கொடுத்த காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு அந்தத் திட்டங்களை அது செயல்படுத்தவில்லை. காந்தியடிகளின் அஸ்தியைக் கரைத்த கடலிலேயே அதையும் சேர்த்துக் கரைத்து விட்டது. இப்பொழுது காந்தியக் கல்வித்திட்டம் அசலே இல்லாமல் போய்விட்டது. தேசியக் கல்வித் திட்டத்தில் போதனா மொழி தாய்மொழிதான். அதுவே தேசியக் கல்வியின் உயிர் நாடியாக இருந்தது. கடந்த 20 ஆண்டு காலமாக தேசியக் கல்வித் திட்டம் கைவிடப்பட்டு விட்டது. நான் அதைச் செயல்படுத்தும் படிச் சொல்லவில்லை.



திராவிட முன்னேற்றக்கழகத்திற்கு ஒரு தனிப் பாரம்பரியம் உண்டு ; சுயமரியாதை இயக்கமாக அது உருவெடுத்த நாள்தொட்டு —திராவிடர் கழகமாக அது வளர்ச்சியுற்ற நாள்தொட்டு—திராவிட முன்னேற்றக் கழகமாக அது மலர்ந்த நாள்தொட்டு—எதிர்க் கட்சியாக இருந்து, ஆட்சிக் கட்சியாக வந்திருக்கின்ற இன்று வரை அது புரட்சிகரமான சீர்திருத்தக் கொள்கையை வலியுறுத்தி வந்தது. சாதிகளற்ற சமுதாயத்தை அமைக்கின்ற கொள்கையை—சமயங்களிடையே ஒருமைப்பாடுள்ள கொள்கையை —மூடப்பழக்க வழக்கங்கள் அற்ற சமுதாயத்தைப் படைக்கின்ற கொள்கையை—பகுத்தறிவுக்கொத்த பழக்க வழக்கங்களோடு கூடிய சமதர்ம சமுதாயத்தை அமைக்கின்ற கொள்கையை ஏற்றுக்கொண்டு, ஆளுங்கட்சியாக வந்திருக்கிறது தி.மு.க. கழகம் இந்த நிலையைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். அந்தளவுக்குப் புரட்சிகரமான சீர்திருத்தக் கொள்கைக்கு நான் உடன்பட்டவன் அல்லன் என்பதையும் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், அதே நேரத்திலே நான் அப்பட்டமான வைதீகங்களைச் சேர்ந்தவனும் அல்லன் என்பதைத் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நம்புவார்கள் என்று நம்புகிறேன். அதிகமான வைதிகனாகவும் இல்லாமல் —அதிகமான புரட்சியாளனாகவும் இல்லாமல், யதார்த்தவாதியாக, பிரத்தியட்சவாதியாக—சமுதாயத்தில் முற்போக்கான சீர்திருத்தங்களைக் காண விரும்புகிறவன். அப்படிப்பட்ட மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய திட்டத்தைக் கல்வித் துறையிலே திராவிட முன்னேற்றக் கழக அரசு புகுத்தவில்லை என்பதைத்தான் பார்க்கிறேன். இந்தச் சமுதாயத்திலே சீர்திருத்தங்கள் ஏற்பட வேண்டுமானால், அதற்கேற்ற கல்வித் திட்டம் வேண்டும் இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக அடிமைப்பட்டுக் கிடந்த நாடு விடுதலை கிடைத்ததற்குப் பிறகு, சோஷலிஸ சமுதாயம் ஏற்படவேண்டுமென்று சொல்கிறோம். சமுதாயத்திலே உள்ள பொருளாதார ரீதியான மேடுபள்ளங்களைப் போக்கவேண்டுமென்று சொல்கிறோம்.

சமுதாயத்திலுள்ள பொருளாதார மேடுபள்ளங்களைப் போக்க வேண்டுமானால், முதலிலே மக்கள் மனங்களிலே இருக்கின்ற மேடு பள்ளங்களைத் தகர்த்தாக வேண்டும். அதனுடைய அடிப்படை உயிர்நாடி கல்விதான். எனவே கல்வியில் மாறுதல் காணுதவரையில் —மாணவர்கள் உள்ளங்களிலே சமத்துவத்தை ஏற்படுத்தாத வரையில்—சோஷலிஸ சமுதாயம் இல்லை; சுயமரியாதைச் சமுதாயம் இல்லை; சமத்துவமுள்ள சமுதாயம் இல்லை; இதனை கலைஞர் அவர்களும், நாவலர் அவர்களும் நான் சொல்லி எடுத்துக் கொள்ளவேண்டியவர்கள் அல்லர், ஒரு தலைமுறைக்கு மேலாக அவர்களே இதைச் சொல்லி வந்தவர்கள். எனவே, கல்வியானது தொழிலோடு கூடியதாக இருக்க வேண்டும். பட்டம் பெற்ற படித்தவர்கள் தொழிலாளர்களை இழிவாக எண்ணுகின்ற நிலைமை எப்படியோ வளர்ந்து வந்திருக்கிறது. தாங்கள் ஒரு தனி ஜாதி என்கிற எண்ணம் அவர்களிடத்திலே எப்படியோ வளர்ந்து வந்திருக்கிறது. நாங்கள் ஒரு உயர்ந்த ஜாதி என்ற எண்ணம்

நியமனத் தாள்கள் 20—3—1970 வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 21—3—1970 சனிக்கிழமை மாலை 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதினறுக்கு மேற்படுமாயின் 26—3—1970 வியாழக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே வாக்கெடுப்பு நடைபெறும்.

(7) அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) பொதுக்கணக்காய்வுக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு சட்டப் பேரவையின் 173-வது விதியின் கீழ் 1970-71-ம் ஆண்டுக்குரிய பொதுக்கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி பதினறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்" என்கிற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

(4) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) பொதுக்கணக்காய்வுக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒற்றை மாற்று வாக்கு முறைப் படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதி முறைகளின் கீழ் பொதுக்கணக்காய்வுக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 18—3—1970 புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாள ரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 20—3—1970 வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 21—3—1970 சனிக்கிழமை மாலை 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதினறுக்கு மேற்படுமாயின் 26—3—1970 வியாழக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே வாக்கெடுப்பு நடைபெறும்.



(8) 1970-71ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண். 13—கல்வி—தொடர்ச்சி.

* திரு. ம. பொ. சிவஞானம் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே! இந்த அவையின்முன் கல்வி சுகாதார அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டிருக்கிற கல்வி மானியத்தின் மீது என் கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இந்த மானியத்திலே—மானியத்தையொட்டி இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற அறிக்கையிலே சில நல்ல அம்சங்களைக் காண்கிறேன்— குறிப்பாக, இந்த ஆண்டு கல்வித் துறைக்கு அதிகமாக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. பல கட்டங்களிலே அதிகமாக ஆசிரியர்களை நியமிப்பதற்குத் திட்டம் இருக்கிறது. அதிகமான மாணவர்களைச் சேர்ப்பதற்கு ஏற்ற வகையில் இட ஏற்பாடுகள் செய்யப்படவிருக்கின்றன. தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குப் பல வகையான வசதிகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

இவைபோன்ற நல்ல அம்சங்களுக்காக நான் கல்வியமைச்சர் அவர்களையும் இந்த ஆட்சியையும் பாராட்டுகிறேன். அதே நேரத்திலே சில விஷயங்களை கல்வித் துறையினர் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

கல்வித் துறைக்காக வாங்கப்படுகிற ஆடைகள், பலகைகள், இன்னும் மற்ற சாமான்கள் கதர்-கைத்தொழில் வாரியத்திலிருந்து வாங்கப்படவேண்டும். கதர்-கைத்தொழில் வாரியம் அரசினரால் நடத்தப்படுகிறது என்பதை நான் நினைப்பூட்டத் தேவையில்லை. காந்தியடிகள் கொடுத்த ஆதாரக் கல்வித் திட்டத்தின்படியும்— தேசியக் கல்வித் திட்டத்தின்படியும் கதர்-கைத்தொழிலும் கல்வியோடு சேர்ந்து இருக்கவேண்டும். இன்று, இரண்டும் வேறுபட்டு இருந்தாலும்கூட, கல்வித் துறை, கதர்-கைத்தொழில் வளர்ச்சியிலும் அக்கறை காட்டவேண்டும். கல்வித் துறைக்காக தேவைப்படுகின்ற ஆடைகள், பலகைகள், காகிதங்கள், மற்ற சாமான்களை வேறு துறைகளிலிருந்து வாங்குவதற்குப் பதிலாக கதர்—கைத்தொழில் வாரியத்திலிருந்து வாங்குவதன்மூலம் அதன் வளர்ச்சிக்குக் கல்வித் துறை அக்கறை காட்ட வேண்டும்.

பி.ஏ. படித்துப் பட்டம் பெற்றவர்கள் பெறுகின்ற சம்பளமும், பி.ஏ.-வுக்குப் பிறகு ஓராண்டுக் காலம் பி.டி. படித்துவிட்டு ஆசிரியர் வேலை பார்க்கின்றவர்களின் சம்பளமும் ஒன்றாக இருக்கின்றன. பி.ஏ. படித்துவிட்டு அப்பர் டிவிஷன் கிளார்க் ஆக இருக்கிறவர்களுக்கு என்ன சம்பளம் தரப்படுகிறதோ, அதே சம்பளம்தான் அதற்குப் பிறகு ஓராண்டுக் காலம் பி.டி. படித்துவிட்டு வருகின்றவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றது. தகுதியை ஒன்றாக வைத்து இருந்தாலும் பரவாயில்லை. பி.டி. ஆசிரியர்கள் கூடுதலாகப் படித்து இருக்கின்ற காரணத்தினால், நியாயமான முறையில் அவர்களுக்கு அதிகமான சம்பளம் கொடுக்கவேண்டும்.

மாணவர்களை எந்தப் போக்கிற்கு இது கொண்டு போகும் என்பதனை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்று தமிழ் போதனை மொழியாக ஏற்றுக்கொள்ளப் படுவதில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. ஒன்று, அரசைச் சார்ந்துள்ள கலைக் கல்லூரிகளில் போதனை மொழியாகத் தமிழ் கட்டாயமாக இருப்பது என்பது. அடுத்து, தனியார் கல்லூரிகள் விரும்பினால் தமிழை போதனை மொழியாக ஏற்றுக் கொள்ளலாம் என்பது. விருப்பம் எப்படி வரும்? செல்வாக்குப் படைத்தவர்கள் எல்லாம் தமிழ் போதனை மொழியாவதற்கு எதிராகப் பிரச்சாரம் செய்தால், ஆட்சியின் கொள்கைக்கு எதிராக ஆளுநரே இப்படிப்பட்ட கருத்துக்களை வெளியிட்டால், பத்திரிகைகள் எல்லாம் வரிந்து கட்டிக் கொண்டு எதிரான தலையங்கங்களை எழுத முற்பட்டால் முதுமையடைந்த அரசியல் தலைவர்கள் எல்லாம்—தங்கள் பழைய கொள்கைகளை அடியோடு மாற்றிக் கொண்டு—எதிர்ப் பிரச்சாரங்களைச் செய்கிறார்கள் என்றால், உங்கள் தரப்பில்—ஆளும் கட்சியினர் தரப்பில் அதற்கு எதிரான பிரச்சாரம் இல்லையே! நீங்களே இப்படி இருந்துவிட்டால், மாணவர்கள் இந்தப் போக்கிற்குக் கண்டனம் தெரிவிக்க மாட்டார்களா? எதிர்த்துப் போராட மாட்டார்களா?

இன்று மாணவர்கள் தமிழைப் போதனை மொழியாக ஏற்கப் பயப்படுகிறார்கள். "ஆங்கிலம் போதனை மொழியாக இருந்தால் உத்தியோகங்கள் கிடைக்கும்; தமிழ் போதனை மொழியாக இருந்தால் அப்படிப்பட்ட வாய்ப்புகள் கிடைக்காது" என்று இன்று மாணவர் உலகம் கருதுகிறது. உத்தியோகத்திற்குப் போனால் கேட்கிறார்கள், 'நீர் இங்கிலீஷ் மீடியமா, தமிழ் மீடியமா?' என்று. 'இங்கிலீஷ் மீடியம்' என்றால், உயர் ஜாதி. 'தமிழ் மீடியம்' என்றால், 'சிவஞனம் ஜாதி' என்று சொல்லி, 'உனக்கு உத்தியோகம் இல்லை, அவனுக்குத் தான் உத்தியோகம்' என்று சொன்னால்' மாணவர்கள் பயப்பட மாட்டார்களா? புகுமுக வகுப்புகளில் மொத்தம் உள்ள 71 ஆயிரம் இடங்களில் தமிழை போதனை மொழியாக ஏற்றுக் கொண்டு படிப்பதற்கு 19,502 மாணவர்களே முன்வந்தார்கள் என்றால், மாணவர்களுக்கு தமிழ்ப் பற்று அற்றுப் போய்விட்டது என்று சொல்ல மாட்டேன். தங்கள் வளர்ச்சியோடு தமிழ் வளர்ச்சியும் சேர்ந்து வர வேண்டும் என்று எண்ணுவது மனித மனோபாவம்தான். ஆனால், தமிழைப் போதனை மொழியாகக் கொண்டால் தன் வளர்ச்சி குன்றிவிடுமோ என்று ஐயப்பாடு எழுகிறது. அதனால், மாணவர்கள் பயப்படுகின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** (மணியடித்து) நேரம் ஆகி விட்டதே?

**திரு. ம. பொ. சிவஞானம்:** குறிப்பிட்ட நேரம் கடந்தமைக்காக வருந்துகிறேன். ஆனால் இந்தப் பிரச்சினைக்காக வாதிட்டு அழக் கூடியவன் நான் ஒருவன்தான் என்ற நிலை இருப்பதால், [illegible]



தலைவர் அவர்கள் எனக்கு விதி விலக்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளவில்லை—ஆனால், விதியைச் சற்று விரிவுபடுத்தி எனக்கு மேலும் இரண்டொரு நிமிஷம் பேச அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கல்வி அமைச்சர் அவர்களுடைய நல்லெண்ணத்திலே எனக்கு ஐயப்பாடு இல்லை. முன்பொரு சமயம் கலைஞர் அவர்களுடைய 63-வது பிறந்த நாள் விழாவில்—மன்னிக்க வேண்டும், எனது பிறந்தநாள் விழாவினை எண்ணிச் சொல்லுகிறேன், அவரது 45-ஆவது பிறந்த நாள் விழா. அவர் என்னைவிட பன்னெடுங்காலம் வாழ இறைவன் அருளட்டும்—அண்ணா அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தை வளர்த்த பணியில்—வளர்க்கும் பணியில் மதியழகன் அவர்களுடைய பங்கு என்ன; கலைஞர் கருணாநிதி அவர்களுடைய பங்கு என்ன—என்று விரிவு படுத்திச் சொல்லி வரும்போது, தமிழ் வளர்ச்சிப் பணிகளுக்கு என நம் நாவலர் அவர்களையே குறிப்பிட்டார்கள். அந்த நினைவோடு சொல்லுகிறேன், இன்று தமிழ் போதனை மொழியாக வருவதற்கு எதிராக நடத்தப்பட்டு வரும் பிரச்சாரத்திற்கு நாவலர் அவர்கள் மறுப்புக் கூற வேண்டாமா? இந்தத் தலைமுறையில் இல்லாவிட்டாலும் அடுத்த தலைமுறையிலே, அல்லது ஒரு நூற்றாண்டு காலத்திற்குள்ளாவது தமிழ் ஆட்சி மொழியாக—போதனை மொழியாக வந்தே தீரும்" என்று கூட்டங்களில் பேசியிருக்கிறார். ஒரு கூட்டத்தில் நானே என் காதுகளால் கேட்டேன். இதனால் ஏற்படும் விளைவுகள் என்ன என்று யோசித்துப் பார்க்க வேண்டுகிறேன். இந்தப் பிரச்சினையில் கல்வியமைச்சருடைய நோக்கம் என்ன என்பது பிரச்சினை இல்லை. அவர்களுக்கு உள் நோக்கம் கற்பிக்க நான் விரும்பவில்லை. ஆனால், இந்தப் பிரச்சினைக்கு முடிவு காண வேண்டாமா? ஒரு புறம் எதிரான பிரச்சாரம் முரட்டுத்தனமாக நடந்து கொண்டு இருக்கும்போது, ஆளும் கட்சியில் உள்ளவர்கள் வாளாவிருந்து விட்டால், பிறகு நாம் எப்படி—எப்போது எல்லாக் கல்லூரிகளிலும் தமிழை போதனை மொழியாகக் கொண்டுவரப் போகிறோம்?

அடுத்து, இன்னமும் ஒன்று; மாணவர்கள் தமிழை போதனை மொழியாக எடுத்துக் கொண்டால் அவர்களுக்கு அரசுத் துறையில் உத்தியோகத்திற்கான உத்திரவாதம் இருக்கின்றதா என்றால், நீங்கள் என்ன சொல்லுகின்றீர்கள்? "எந்த இலாகாவில் அவர்களுக்கு வேலை கொடுக்கலாம் என்று யோசித்து வருகிறோம் என்கிறீர்கள். ஏன் இந்த ஐயப்பாடு? உள்ளாட்சித் துறைப் பணிமனைகளிலும் வேளாண்மைத் துறைப் பணிமனைகளிலும் வேலை கொடுக்கலாமா என்று யோசிக்கின்றீர்கள் என்றால், அவர்களை அரசாங்கமே இரண்டாம்தர மாணவர்களாகத்தான் கருதுகின்றது என்றாகிறது. ஏன் எல்லாத் துறைகளிலும் அவர்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரக் கூடாது என்றுதான் புரியவில்லை. ஏதோ இல்லாத ஒன்றைக் கிளப்பிவிடுவதாக யாரும் தயவுசெய்து

எப்படியோ அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இப்படி எண்ணும் படித்த இளைஞர் என் பிள்ளையாகவோ, பேரப்பிள்ளையாகவோ இருக்கலாம். குற்றம் அவர்களிடம் இல்லை. அவர்களுக்குத் தரும் கல்வியில்தான் இருக்கிறது. நான் சொல்வதை கலைஞர் அவர்களும், நாவலர் அவர்களும் கவனிக்கவேண்டும். நீண்ட நெடுங்காலமாகக் கல்வியிலே இருந்துவந்த குறைபாட்டின் காரணமாக; படித்தவர்கள் தொழிலாளர்களை இழிவாக எண்ணுகின்ற மனப்பான்மையானது இன்றைக்கு விபரீதமாக வெளிப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். அதைப் போக்கவேண்டும், மாணவர்களின் உள்ளங்களிலே அமைதியை உண்டாக்கவேண்டும். படித்தவர்கள் படிக்காதவர்களால்தான் வாழ்கிறார்கள் என்று எண்ணக் கூடிய முறையில் கல்வியில் மாறுதலை ஏற்படுத்த வேண்டும். இதற்கு போதனாமுறையில் மாறுதல் வேண்டும் அதற்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் திட்டம் என்ன என்பதை நண்பன் என்ற முறையிலே நான் கேட்க விரும்புகிறேன்.

மெக்காலே என்பவர் ஒரு கல்வித் திட்டம் கொடுத்தார், பிரிட்டிஷார் ஆட்சி புரிந்த காலத்திலே! அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். கோபாலகிருஷ்ண கோகலே அவர்கள், ஆரம்பக் கல்வியையாவது இலவசமாகக் கற்றுக் கொடுக்கின்ற ஏற்பாடு வேண்டுமென்று அன்றைய இந்திய இம்பீரியல் கவுன்சிலில் ஐந்து நாட்கள் பேசினார்கள். அன்று ஆண்டுகொண்டிருந்த பிரிட்டிஷார் சொன்னார்கள், “இங்கேயுள்ளவர்களை அறிவாளிகளாக்குவது எங்கள் நோக்கம் அல்ல; எங்களுக்குக் கருவியாகப் பயன்படுத்தக்கூடிய வகையில் சிப்பந்தி வர்க்கத்தைத் தயாரிப்பதற்காகத்தான் மெக்காலே கல்வி முறையை ஏற்படுத்தி இருக்கிறோம்” என்று.

சிப்பந்தி வர்க்கத்தைத் தயாரிப்பதற்காகவே, முதலாகவும் முடிவாகவும் ஏகாதிபத்தியத்தை ஓங்கச் செய்வதற்காகவே, அந்தக் கல்வி முறையை வகுத்தார்கள். அவர்கள் விட்டுச்சென்ற ஏகாதிபத்தியத்திற்குத் தொண்டு செய்கிற தாசர்களைத் தயாரிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட கல்வித் திட்டம், சுதந்திர உணர்ச்சியைக் கொல்லுகிற திட்டமாகும். தங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் குமாஸ்தாக்களின் பாரம்பரியத்தை, தன்னம்பிக்கையற்று ஆங்கிலேயனுக்கு ஆண்டாண்டு காலம் பணி செய்திடப்படுதே தங்களுக்குக் கிடைத்த பெரும் பாக்கியம் என்று எண்ணத்தக்க அடிமைகள் பாரம்பரியத்தை உருவாக்கும் கல்வி முறையைத்தான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்த நாட்டில் அமுல்படுத்தியது ஆனால் சுதந்திரம் வந்த பிறகு, "எல்லோருக்கும் கல்வி, இலவசமாகக் கல்வி: கல்லாதவர்களே இல்லாத நிலை வேண்டும்" என்ற திட்டம் [illegible] நேற்று வரையில் இருந்த [illegible] ஆட்சி அறிமுகப்படுத்தியது. ஆனாலும், சுமார் இருபது ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சியில் கல்வி முறையில் மாறுதல் [illegible] ஏற்படவில்லை. [illegible] ஒரு பாலிடெக்னிக், [illegible]



பட்டன. ஆனால், தொழிலோடு தொடர்புடைய முழு அளவுக் கல்வித் திட்டம் ஒன்று உருவாக்கப்படவில்லை. கலைக் கல்லூரிகள் பல ஏற்படுத்தப்பட்டாலும், அவை அனைத்தும் சுயமரியாதை உணர்ச்சியைக் கொல்லக் கூடிய, தன்னம்பிக்கையைப் பாழ்படுத்தக் கூடிய கல்வியைத்தான் போதித்து வருகின்றனவே தவிர, தங்கள் உரிமையைக் காக்கக்கூடிய, சமுதாயத்தை நல்லதொரு எதிர் காலத்தை நோக்கி எடுத்துச் செல்லத்தக்க கல்வியைத் தரவில்லை. நேற்று வரையில் இருந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அரசானாலும் சரி; அதற்குப் பின்னால் வந்த தேசிய பாரம்பரியத்தில் வளர்ந்த அரசானாலும் சரி; சுயமரியாதை பாரம்பரியத்திலே ஊறி வளர்ந்துள்ள இந்த அரசானாலும் சரி; நல்லதொரு கல்வி முறையை அளிக்கவில்லை. இதனை மிகுந்த ஏமாற்றத்துடனேயே நான் சொல்ல வேண்டியிருக்கிறது. இனி, வருங்காலத்திலாவது கல்வி முறையில் எத்தகைய மாறுதலைக் காணப்போகிறீர்கள்? காண்பதற்கான திட்டங்கள் என்ன வைத்துக் கொண்டு இருக்கிறீர்கள் என்பதை இந்த அவையின் முன்பு—எஞ்சியுள்ள இரண்டாண்டு காலத்திலாவது—சொல்ல முன் வரவேண்டும் என்று அரசினரை வேண்டிக் கொள்ளுகிறேன்.

அடுத்து, போதனாமொழிபற்றி ஒரு சில கருத்துக்களைக் கூற விழைகிறேன். எனக்கு நன்கு நினைவில் இருக்கின்றது; 1968-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 23-ஆம் நாளன்று இந்த மன்றத்தில் போதனா மொழி பற்றியதொரு தீர்மானத்தை நிறைவேற்றினோம். “அடுத்த ஐந்தாண்டு காலத்திற்குள் தமிழகத்தில் உள்ள எல்லாக் கல்லூரிகளிலும் தமிழே போதனா மொழியாக்கப்படும்” என்ற தீர்மானத்தை நிறைவேற்றினோம். எல்லாக் கல்லூரிகளிலும்—கலைக் கல்லூரியானாலும் சரி; மற்ற மற்ற பொறியியல், மருத்துவக் கல்லூரியானாலும் சரி—அனைத்திலும் தமிழே போதனா மொழியாக்கப்படும் என்று அன்று தீர்மானித்தோம். அந்தத் தீர்மானத்தின் மீது பேசிய- இன்று அமரராகிவிட்ட அண்ணா அவர்கள் சொன்னார்கள். ‘இந்தத் திட்டம் அடுத்த ஆண்டிலேயே அமுலுக்கு வரும், அதுவும் விஞ்ஞான பாடங்கள் உள்ளிட்ட எல்லா வகுப்புகளிலும் அமுலுக்கு வரும்’ என்று சொன்னார்கள். ஆனால், இப்போது நாம் அறிவது புகுமுக வகுப்புகளில் மட்டும்—அங்கும் அறிவியல் பாடங்களுக்கு மட்டும் தமிழ் போதனா மொழியாக இருக்கிறது என்பதே. தனியார் கல்லூரிகளில் இதுகூட கட்டாயம் இல்லை என்ற நிலை. இதன் விளைவாக, 71,000 மாணவர்கள் படிக்கும் புகுமுக வகுப்புகளிலே, 19,502 மாணவர்களுக்குத்தான் தமிழ் போதனாமொழி என்ற நிலை இருக்கிறது. 71 ஆயிரம் மாணவர்களில் 19,502 மாணவர்களுக்குத்தான் தமிழ் போதனா மொழி என்று இருந்தால் இடையிலுள்ள இந்தப் பெரிய இடைவெளியை வரும் காலத்திலாவது குறைக்க முடியுமென்ற நம்பிக்கை இருக்கிறதா என்றால், ‘இல்லை’ என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

[திரு. ம. பொ. சிவஞானம்] [1970 மார்ச் 12

தனியார் துறையிலுள்ள கல்லூரிகளை வழிக்குக் கொண்டுவர முயலாத வரையில் இந்தப் பிரச்சனையில் தீர்வு காண முடியுமா என்பது சந்தேகமே. இதற்குப் பதில் சொல்ல வேண்டிய நாளான 1972 வெகு அண்மையிலேயே இருக்கிறது. எனவே, தனியார் கல்லூரிகள் வழிக்கு வரவில்லை என்று சொல்லி அரசு தப்பித்துவிட முடியாது. இந்தப் பிரச்சினை, தேசியப் பிரச்சினை. கட்சிகளுக்கு அப்பாற்பட்ட பிரச்சினை. வாக்காளர்களில்—அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும்—மொழிப் பற்றுள்ள அனைவருமே, 'சட்ட மன்றத்தில் போட்ட தீர்மானம் என்ன ஆயிற்று' என்று 1972-லே சந்துக்கு சந்து கேட்க வேண்டிய பிரச்சினை. எனவே, மொழிப் பற்றினாலேயே அமரத்தன்மை பெற்ற —மொழிப்பற்றுக்கே தனது வாழ்வினை அர்பணித்துக் கொண்ட —ஒருவர் தோற்றுவித்த இந்தக் கட்சி, "இந்த மன்றத்திலே நிறை வேற்றப்பட்ட ஆட்சி மொழி—போதனா மொழித் தீர்மானம் என்ன ஆயிற்று?" என்று 1972-ல் வாக்காளர் கேட்கும்போது, அதற்குப் பதில் சொல்லியாக வேண்டிய நிலையில் இருக்கிறது.

ஏற்கெனவே மூன்று ஆண்டு காலம் கடந்துவிட்டது. எஞ்சி யிருக்கும் இன்னும் இரண்டு ஆண்டு காலத்திலாவது ஏதாவது செய்ய வேண்டாமா? 1968-ல் மொழித் தீர்மானத்தை ஏற்றுக் கொண்ட நேரத்திலேயே, இந்தப் பிரச்சினையில் தீர்வு காண ஒரு ஐந்தாண்டுத் திட்டத்தை வகுத்திருக்க வேண்டும். முதல் ஆண்டில் இந்தக் கட்டத்தை அடைவது, இரண்டாவது ஆண்டிலே இந்தக் கட்டத்தை எட்டுவது, மூன்றாவது நான்காவது ஐந்தாவது ஆண்டுகளிலே, இன்னின்ன கட்டங்களை அடைவது என்று, பல கட்டங்களைக் கோடிட்டுக் காட்டியிருக்க வேண்டியது அவசியம் அல்லவா? அப்படிப்பட்ட ஒரு திட்டத்தினைத் தீட்டி மக்கள் முன்பு வைத்து, அதற்குப் பிறகு போதனாமொழியை மாற்றுவதற்கான செயல்முறைகளை அமுல் படுத்தியிருக்கலாம் அல்லவா? பதிலாக, ஏதோ ஆண்டுக்கு ஆண்டு மான்யத்தை உயர்த்திக் கொடுக்கும் விவகாரம் போல, இந்தப்போதனா மொழிப் பிரச்னை நடத்தப்படுகிறதே தவிர, கல்வித் துறையில்—போதனா மொழிக் கொள்கையில் அரசின் நடைமுறை எனக்கு மனநிறைவைத் தர வில்லை என்பதைச் சற்றும் ஒளிவு மறைவின்றி சொல்லக் கடமைப் பட்டு இருக்கிறேன். எந்த ஒரு கொள்கைக்காக இன்று நான் இங்கு வந்தேனோ, ஆட்சிப் பொறுப்பில் உள்ள நீங்கள் கண்யத் தோடு உதவி புரிந்து நான் இங்கே வருவதற்குப் பொறுப்பாக இருந்தீர்களோ, அந்தக் கொள்கையில் ஆட்சியிடம் உள்ள குறையை நான் எடுத்துக் காட்டத் தவறிவிட்டால், நான் எனது மனச்சாட்சிக்கே துரோகம் செய்தவனாவேன்.

இன்றைக்குப் பல பத்திரிகைகளிலும் பார்க்கிறோம்; "ஆங்கிலமே போதனா மொழியாக இருக்க வேண்டும்—இல்லை யெனில், அனைத்துமே கெட்டுவிடும்" என்று விட்டுப்பட்டான



1970 மார்ச் 12] [திரு. ம. பொ. சிவஞானம்]

முறையில் எழுதப்பட்டு வருவதை. ஏனோ தெரியவில்லை, நண்பர் விநாயகம் உள்பட காங்கிரஸ்காரர்களில் பலரும் தமிழ் மொழி போதனா மொழியாக வருகின்றதை ஆதரிக்கவில்லை. அவர் சிறிது காலம் ஆந்திரத் தாயின் மடியில் வளர்ந்த காரணத்தாலோ என்னவோ, தமிழ் மொழி ஆட்சி மொழியாக வருவதையும் மனமார ஆதரிக்கவில்லை. ஆனாலும், அவர் நம்மோடு சேர்ந்து வரும் காலம் வெகு தூரத்தில் இல்லை என்பதை மட்டும் சொல்லிக் கொண்டு, அவரை இதோடு விட்டுவிடுகிறேன்.

ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். இந்தப் பயிற்சி மொழிப் பிரச்சினை ஐந்து ஆண்டு காலத்திற்குள் நிறைவேற்றப்பட வேண்டும். அறிஞர் அண்ணா அவர்கள், இதை உணர்ச்சி பூர்வமாக ஏற்றார். ஆனால், அதற்கான முழுமையானதொரு திட்டம் இந்த மன்றத்தில் இதுவரையில் அறிவிக்கப்படாதது பெரும் ஏமாற்றத்தையளிப்பதாகயிருக்கிறது என்ற உள்ளக் குமுற லுடனேயே நான் சொல்ல வேண்டியிருக்கிறது.

இரண்டாவதாக, தமிழ் போதனா மொழியாவதற்கு இன்று நடத்தப்படும் எதிர்ப் பிரச்சாரம் எவ்வளவு பயங்கரமாக இருக் கிறது என்பதைச் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும் "ஆங்கிலம் போனால் அறிவே போய்விடும்", 'தமிழிலேயே எல்லாம்' என்றால், அறிவே அழிந்துவிடும்" என்று மிகக் கொடுமையான பிரச்சாரம் நாளுக்கு நாள் நடக்கும்போது, பிரச்சாரத்தில் மிகத் திறமை வாய்ந்த ஆளும் கட்சியினர், எதிர்ப் பிரசாரத்தில் ஈடுபடாதது ஏனோ? மிகத் திறமையுடன் வாதிட்டு அவ்வளவு எதிர்ப பிரச்சாரங்களையும் முறியடிக்கும் திறன் வாய்ந்த கல்வி அமைச்சர் அவர்கம் முதல் அமைச்சர் அவர்களும் சார்ந்துள்ள ஆளும் கட்சி, இன்று ஏனோ இப்படிப்பட்ட பிரச்சரரங்களைப்பற்றி ஒன்றுமே கூறாமல் இருக்கிறது என்று வருத்தப்பட வேண்டி உள்ளது.

அண்மையில், அடையாறு அழகப்பா பாலிடெக்னிக் கல்லூரியில் நடைபெற்ற ஒரு விழாவினில் நமது ஆளுநர் அவர்கள் உரை யாற்றியிருக்கின்றார்கள். அவர் தமது உரையில், பிரதேச மொழியை போதனா மொழியாக ஆக்குகிறதைக் கடுமையாகக் கண்டித்து இருக்கிறார். 'இது பிற்போக்குத்தனம்' என்று கூட அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டு இருக்கிறார். அந்த விழாவிற்கு நமது மதிப்பிற்குரிய கல்வியமைச்சர் அவர்கள் தலைமை தாங்கியிருக் கிறார்கள். ஆளும் கட்சியின் கல்விக் கொள்கையை—கல்வி யமைச்சரை வைத்துக்கொண்டே ஆளுநர் அவர்கள் கண்டித்திருக் கிறார்கள். 'பிரதேச மொழி போதனா மொழியாக்கப்படுவது பிற்போக்குத்தனம்' என்று கூறியிருக்கிறார்கள். அதிலுள்ள பண்பாட்டுக் குறைவினைப் பற்றி நான் இங்கே பேச முன்வரவில்லை. ஆனால், பொறுப்புள்ள ஆளுநர் அவர்களே இப்படிப்பட்ட ஒரு கருத்தினை மாணவர்களிடையே சொல்லுகின்றார்கள் என்றால்,

எண்ணிவிட வேண்டாம். சப்ஜெட்களைப் படிப்பதற்காக தமிழைப்
போதனை மொழியாக எடுத்துக் கொண்டவர்களும் ஆங்கிலம்
படித்தவர்கள் தானே? தமிழைப் போதனை மொழியாக ஏற்ற
பின்னரும் அவர்கள் ஒரு மொழி என்ற அளவில் ஆங்கிலத்தைத்
தொடர்ந்து படிக்கத்தானே செய்கிறார்கள்? அப்படியிருக்க,
அவர்களுக்கு எல்லா இலாக்காக்களிலும் ஏன் உத்தியோகங்கள்
தரக்கூடாது?

பிற மாநிலங்களில் என்ன நடைபெறுகின்றது என்பது
பிரச்சினையில்லை. கேரளத்திலோ, ஆந்திரத்திலோ என்பது
குஜராத்திலோ என்ன நடைபெறுகின்றது அல்லது
பிரச்சினை. இன்று உள்ள பிரச்சினை, ஏன் எல்லாக் கல்லூரிகளிலும் அல்ல
தமிழே போதனை மொழியாக இருக்கக் கூடாது?, போதனை
மொழியாக ஏற்றுக்கொண்ட கல்லூரிகளில் படித்துத் தேர்வு
பெற்றுவரும் மாணவர்களுக்கு ஏன் அரசுத் துறையின் எல்லாப்
பிரிவுகளிலும் உத்தியோகத்திற்கான வாய்ப்புகளை விரிவுபடுத்தக்
கூடாது என்பதுதான். ,எனவே, இதைச் செய்யுங்கள்—விஞ்ஞான
எதிர்ப் பிரச்சாரங்களை யெல்லாம் தகர்த்தெரிந்து, புத்தம் புதிய
சமுதாயத்தை உருவாக்கும் வகையில் கல்வித் துறையில்
மாறுதல்களைச் செய்யுங்கள் என்பதுதான் என்னுடைய வேண்டு
கோள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பத்து உறுப்பினர்கள் பேச
வேண்டுமென்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். கல்வி அமைச்சர்
ஒரு மணி நேரம் தேவை என்று கூறியிருக்கிறார். எதிர்க்கட்சித்
துணைத் தலைவர் அவர்கள் அரை மணி நேரம் கேட்டிருக்கிறார்கள்.
ஆகவே, ஒரு மணி நேரந்தான் உறுப்பினர்களுக்குக் கிடைக்கிறது.
ஓர் உறுப்பினர் ஆறு நிமிடத்திற்கு மேல் எடுத்துக் கொள்ள
வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. வை. சுவாமிநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே,
கல்வி மானியத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்ததற்காக
நன்றி. எங்கள் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப்
பிரேரணையை ஆதரித்து சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.
கல்விக்காக இந்த ஆண்டு 67,73,14,400 ரூபாய் ஒதுக்கப்பட்
டிருக்கிறது. உண்மையிலேயே இந்தத் தொகை போதுமானதா
என்று எண்ணிப் பார்த்தால் மிக மிகக் குறைவு என்பது தெரியும்.
இந்த நாட்டினுடைய ஜனத்தொகை மூன்று கோடிக்கு மேல் போய்
விட்டது. பள்ளிக்கூடங்களில் சேரக்கூடிய மாணவர்களின்
எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வரும்
இந்தச் சமயத்தில் கல்விக்காக இன்னும் அதிகப்படியான தொகை
ஒதுக்கி இருக்க வேண்டும். பொதுவாக, இன்று கல்வியின் தரம்
குறைவாக இருக்கிறது என்று எல்லோராலும் பேசப்படுகிறது.
இந்தக் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கான முயற்சிகளை
அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.





நம்முடைய கல்வியமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது 'ஆரம்பக் கல்விக்குத் தனி இயக்குநர் வேண்டும்; உயர்நிலைப் பள்ளிக் கல்விக்குத் தனி இயக்குநர் வேண்டும்; பல்கலைக் கழகக் கல்விக்குத் தனி இயக்குநர் வேண்டும்; தொழிற் கல்விக்குத் தனி இயக்குநர் வேண்டும்' என்ற கருத்துக்களைக் கூறினார்கள். அதிர்ஷ்டவசமாக அவரே இன்று கல்வியமைச்சர் பதவியை ஏற்றிருக்கிறார். இந்த மாதிரி தனி இயக்குநர்களை இரண்டு ஆண்டுகள் ஆகியும் ஏற்படுத்தவில்லை. இதை உடனடியாகச் செய்ய வேண்டும்.

கல்வியின் தரம் உயரவேண்டுமென்றால் ஆரம்பக் கல்வியில் இருந்துதான் தரத்தை உயர்த்த வேண்டும். கல்விக்கு அஸ்திவாரமாக இருக்கக்கூடியது ஆரம்பக் கல்விதான். அந்தக் கல்வியை வலிவுடன், பொலிவுடன் போதிப்பவர்கள் நல்ல முறையில் இருந்தால்தான் கல்வியின் தரம் உயரும். ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் சரியான நேரத்தில் பள்ளிக்கூடத்திற்குச் செல்லுவது கிடையாது. எந்த ஒரு ஆசிரியரும் கிராமத்தில் குடியிருப்பது கிடையாது. கிராமத்தில் குடியிருக்க வசதியில்லை என்று நகரத்தில் இருந்து வருவதன் காரணமாக சரியான நேரத்தில் அவர்கள் பள்ளிக்குச் செல்ல முடியவில்லை. கிராமங்களிலேயே ஆசிரியர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டும். ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுடைய குறைகளைப் போக்கவேண்டும். அவர்களுடைய குறைகளைப் போக்க ஏழு அம்சத் திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அவற்றை உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டும். கோத்தாரி கமிஷன் அறிக்கைப்படி சம்பளம், மற்றச் சலுகைகளையும் கொடுக்கவேண்டும். இப்போது நாலைந்து வகுப்புகளுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலை இருக்கிறது. அப்படி இருந்தால் கல்வியின் தரம் எப்படி உயர முடியும்? ஆறு, ஏழு, எட்டாம் வகுப்புகளை ஒரே ஆசிரியர் பார்த்தால் சரியான முறையில் பாடம் கற்பிக்க முடியாது. அந்த வகுப்புகளுக்குத் தனித் தனி ஆசிரியர்களைப் போட வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

ஹையர் கிரேடு ஆசிரியர்களை எடுத்து விட்டார்கள். இதன் காரணமாக நாட்டிலுள்ள ஏழைச் சமுதாயம் பாதிக்கப்படுகிறது. ஹையர் கிரேடு ஆசிரியர்களாக வேலை பார்ப்பவர்கள் யார்? வாழ்க்கையில் வழியற்றவர்கள், கணவனை இழந்தவர்கள் குடும்பச் சிக்கல் காரணமாக வாழ்க்கை வசதியை இழந்தவர்கள் வாழ, வழி காணும் வகையில் ஹையர் கிரேடு ஆசிரியர்கள் என்று இருந்தது ஒரு சலுகையாக இருந்தது. அதன் மூலம் அவர்கள் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார்கள். அதை இப்போது எடுத்துவிட்டதால் ஏழைக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கு வேலை கொடுக்க வாய்ப்பு இருக்க வேண்டும்.

மாவட்டங்களில் மாவட்டக் கல்வி அதிகாரி பதவி நாலைந்து மாதங்கள் கூட காலியாக இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. மாவட்டக் கல்வி அதிகாரி இல்லாததால் கல்வி நிலை பாதிப்பதோடு

[திரு. வை. சுவாமிநாதன்] [1970 மார்ச் 12

மற்ற காரியங்களைச் செய்யவும் தடங்கலாக இருக்கிறது. மாவட்டக் கல்வி அதிகாரி எங்கெங்கு இல்லையோ உடனடியாக அங்கெல்லாம் போடுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும்.

இப்போது செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக வேலை பார்ப்பவர்கள் எல்லாம் ஹையர் கிரேடு ஆசிரியர்கள் என்ற நிலையிலேயே இருக்கின்றனர். அவர்களுக்கெல்லாம் பதவி உயர்வு கொடுத்து விட்டதாகக் கூறப்படுகிறது. சென்ற ஆண்டில் கொடுத்த தாகத் தெரியவில்லை. பத்தாயிரம் ஆசிரியர்களுக்கு மேலேயே ஹையர் கிரேடு நிலையில் வேலை செய்கிறார்கள். அவர்கள் எல்லாம் உடனடியாக செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக மாற்றப்பட வேண்டும்.

கல்வித் துறையிலே இந்த அரசாங்கத்தால் வெளியிடப்படுகின்ற புத்தகங்களில் பல பிழைகள் இருக்கின்றன. புத்தகமே பிழையாக இருந்தால் மாணவர்கள் எப்படிச் சரியாகக் கல்வி கற்க முடியும்? அரசாங்கத்தால் வெளியிடப்படுகின்ற புத்தகங்களைப் பிழையில்லாத முறையில் வெளியிட அரசாங்கம் முயற்சிக்க வேண்டும். இன்றுள்ள மாணவர்களின் நிலையைப் பார்த்தால், முன்பு இரண்டாவது, மூன்றாவது படிக்கக்கூடிய மாணவன் வாயாலேயே போடக்கூடிய கணக்குகளைக் கூட, எஸ்.எஸ்.எல்.சி. படிக்கின்ற மாணவர்கள் காகிதத்திலே எழுதிக்கூடப் போட முடியாத நிலையில் இருக்கிறார்கள். அந்த அளவுக்குக் கல்வியின் தரம் குறைந் திருக்கிறது. இதை உயர்த்த வேண்டுமென்றால் ஆரம்பக் கல்வி அடிப்படையில் இருந்துதான் செல்ல வேண்டும்.

ஆரம்பப் பள்ளிகளை எடுத்துக் கொண்டால் தனியார் பள்ளி என்றும், லேபர் பள்ளி என்றும், பஞ்சாயத்து யூனியன் பள்ளி என்றும் பல பிரிவுகளாக இருக்கின்றன. அவற்றை ஒரே அடிப்படையின் கீழ் கொண்டு வந்து நடத்தினால்தான் பள்ளிக் கூடத்தின் தரம் உயர முடியும். தனியார் பள்ளிகளையாவது அரசாங்கம் எடுத்துக் கொள்ள முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். மாணவர்கள் என்ன நினைக்கிறார்கள்? வேலைக்குச் செல்லுவதற்காகத்தான் படிக்க வேண்டும்; பரிட்சைக்கு வரக் கூடிய இரண்டு மூன்று கேள்விகளைத் தெரிந்து எழுதி விட்டால் போதும்; அல்லது ஆசிரியர்களைச் சரி செய்து விட்டால் பரிட்சையில் பாஸ் செய்து விடலாம் என்ற எண்ணத்தில் இருக்கிறார்களே தவிர, அறிவையும் ஆற்றலையும் பெருக்க வேண்டு மென்ற எண்ணத்தில் இல்லை. பரிட்சை வைத்து மார்க் கொடுப்ப தற்குப் பதிலாக ஹாண்ட்ரைட்டிங்குக்கு மார்க்கு, மற்ற நிலைகளில் எப்படி இருக்கிறான் என்று பார்த்து மார்க்கு போடுவது என்ற முறையைக் கூட மேற்கொள்ளலாம். எஸ்.எஸ்.எல்.சி. படிக்கக்கூடிய மாணவனின் கையெழுத்து அதிகப் பிழைகள் உள்ளனவாகவும், புரிந்து கொள்ளமுடியாததாகவும் இருக்கின்றது. மாணவனுடைய தேக நிலையைப் பார்த்தாலும் வலிவுடையவனாக இல்லை. ஐந்தாவது



1970 மார்ச் 12] [திரு. வை. சுவாமிநாதன்]

படிக்கும் மாணவன் கண்ணாடி போட்டுக் கொண்டு படிக்கும் நிலைமை இருக்கிறது. அவனுடைய ஹாண்ட்ரைட்டிங்குக்கு மார்க், தேகாப்பியாசத்திற்கு மார்க் என்று ஏற்பாடு செய்ய வேண்டும்.

கல்லூரிகளிலே இன்று இடம் கிடைப்பதில்லை. வசதி உடையவர் களுக்கும் செல்வாக்கு உடையவர்களுக்குந்தான் இடம் கிடைக்கிறது. சாதாரண மாணவர்களுக்கு இடம் கிடைப்பதில்லை. அதோடு ஆங்கிலமா, தமிழா என்ற நிலை வேறு. தனியார் கல்லூரிகளில் ஆங்கிலத்திற்கு முதலிடம் கொடுக்கிறார்கள். அரசாங்கக் கல்லூரிகளில் மட்டுந்தான் தமிழ் போதிக்கப்படுகிறது. கெட்டிக்கார மாணவர்கள் எல்லாம் தனியார் கல்லூரிகளில் படிக்கிறார்கள். வாய்ப்பு வசதி இல்லாதவர்கள்தான் அரசாங்கக் கல்லூரிகளில் படிக்கிறார்கள். இதையெல்லாம் அரசாங்கம் கவனிக்க வேண்டும். திருச்சியில் எட்டு கல்லூரிகள் இருக்கின்றன என்றால் ஒவ்வொரு கல்லூரிக்கும் ஒவ்வொரு முறை என்று இல்லாமல் அவ்வளவு கல்லூரிகளுக்கும் இன்ன முறையில் அமைக்க வேண்டுமென்ற அடிப்படையில் செய்யவேண்டும்.

அனைத்துக் கல்லூரிகளுக்கும் ஒரு கமிட்டி அமைத்து அதன் மூலம்தான் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும், அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களைக் கல்லூரிகளுக்கு விகிதாசாரப் படி பிரித்து அளிக்க வேண்டும்.

திருச்சியில் ஒரு சட்டக் கல்லூரியை ஏற்படுத்த வாய்ப்பும் வசதியும் இருக்கிறது. விரைவில் அங்கு ஒரு சட்டக் கல்லூரியை ஏற்படுத்த வேண்டும். திருச்சியில் பல்கலைக் கழகம் அமைப்ப தாகவும் அமைச்சர் அவர்கள் முன்பு சொன்னார்கள். அந்த முறையில் ஒரு பல்கலைக் கழகத்தையும் அமைக்க வேண்டும். தமிழுக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று சொல்லும்போது தமிழாசிரியர்களை உயர்நிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியராக நியமிக்க வேண்டும்; கல்லூரிகளிலும் அவர்களை முதல்வர்களாக நியமிப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

* திரு. க. ந. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநிலத்தின் மொத்த வருவாயில் 23 சதவிகிதத்தைக் கல்விக்காக செலவழிக்கின்ற தன்மைக்காக அரசைப் பாராட்டி என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். தமிழக அரசு ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் தொடக்கப் பள்ளிகளுக்காக சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு பத்து லட்சம் ரூபாய் அதிகமாகச் செலவிட முன் வந்திருக்கிறது. ஊராட்சி கட்டடங் களுக்காக முன்பு 24,32,000 ரூபாய் செலவிட்டது. இப்போது 25 லட்சம் ரூபாய் செலவு செய்ய முன் வந்திருக்கிறது. அதற்காக அரசைப் பாராட்டுகிறேன். நண்பகல் உணவுத் திட்டத்தை மேலும் விரிவாக்கும் வகையில் 'கேர்' நிறுவனம் தற்போது தமிழ்நாட்டில்

[திரு. க. ந. இராமச்சந்திரன்] [1970 மார்ச் 12

அடுத்து, பத்து இடங்களில் மாலை நேரக் கல்லூரிகள் நடத்தி வருவதை வரவேற்கிறேன். 1966 ஏப்ரல் 1-ம் தேதி முதல் யுனிவர்ஸிட்டி கிரான்ட்ஸ் கமிஷன் ஸ்கேல் ஆஃப் பே, கல்லூரி ஆசிரியர்கள் அனைவருக்கும் வழங்கி வருகிறார்கள். அதை ஆசிரியர்கள் வரவேற்கிறார்கள். ஆனால் தமிழைப் பொறுத்த வரையில்—கல்லூரி ஏற்பட்டவுடனேயே ஆங்கிலப் பேராசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். ஆனால் அதேபோல் உடனடியாகத் தமிழ்ப் பேராசிரியர்கள் நியமிக்கப்படுவதில்லை. தமிழகத்தில் தமிழ் பற்று கொண்ட ஒரு அரசு வந்தும் கூட பட்டப் படிப்புப் பெற்றவர்கள் இருந்தும்கூட பல கல்லூரிகளில் கெஸெட் பதிவு பெற்ற தமிழ்ப் பேராசிரியர்களை நியமிக்காதது வருந்தத்தக்கதாகும். நாம் தமிழுக்கு எவ்வளவு மதிப்பு கொடுக்கிறோம் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக தமிழ்ப் பேராசிரியர்களை கெஸெட் பதிவு பெற்றவர்களாக நியமிக்க வேண்டும். ஒன்பது கல்லூரிகளில்தான் இப்படி நியமிக்க வேண்டியிருக்கிறது என்று கணக்கு கொடுத்திருக் கிறார்கள். ஆகவே அக் கல்லூரிகளில் தமிழ்ப் பேராசிரியர்களை கெஸெட் பதிவு பெற்றவர்களாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ் ஆசிரியர்களையும் மற்ற மொழி ஆசிரியர்களையும் இழிவுபடுத்துகிற முறையில் கிரேட் 1, கிரேட் 2 என்று வைத்திருக்கிறோம். அந்நிலை மாற்றப்படாதது வருந்தத் தக்கது. அறிஞர் அண்ணா அவர்கள் தொடர்ந்து இருந்திருப்பார் களேயானால் இத்தகைய காரியங்களை எப்போதோ தூக்கி எறிந்திருப்பார்கள். அண்ணா அவர்களின் செயலைப் பற்றி திரு. மொரார்ஜி தேசாய் அவர்களே ஒரு முறை குறிப்பிட்டிருக் கிறார்கள்,

Anna leaves his thumb-print in whatever he does for himself or for others.

என்று. அண்ணா அவர்கள் எந்தயிடத்திற்குச் சென்றாலும் சரி மற்றவர்களைவிட அவர்கள்தான் முதல் இடம் பெறுவார் என்று தேசாய் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். காங்கிரஸ்காரராக இருந்தாலும் கூட. அத்தகைய ஆற்றல் பெற்றவர் அறிஞர் அண்ணா அவர்கள். ஆக, தமிழுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் திரு. ம.பொ.சி. கூறியதுபோல், 1968 ஜனவரி 23-ம் தேதி இந்தி ஆணைச் சொற்கள் இருந்தால் என்.ஸி.ஸி.-யே தேவை இல்லை என்று சொல்லிவிட்டார்கள். பின்னர் கல்வி அமைச்சர் அவர்களின் முயற்சியாலும், முதல் அமைச்சர் அவர்களின் முயற்சியாலும் 1969 அக்டோபரில் மீண்டும் என்.ஸி.ஸி. இங்கு செயல்படத் தொடங்கி யிருப்பதை அனைவரும் பாராட்டுகிறார்கள்.

அடுத்து, தமிழ் ஆசிரியர்களுக்கு அவர்கள் எந்த நிலையில் தகுதி பெற்றிருந்தாலும், முதல் கிரேட் தகுதி படைத்தவர்களாக இருந்தாலும் சரி அல்லது, இரண்டாம் கிரேட் தகுதி படைத்தவர் களாக இருந்தாலும் சரி, எதுவாக இருந்தாலும் சரி, அவர்களது படிப்பைப் பொறுத்து அத்துறைச் சம்பளத்தை அவர்களுக்கு வழங்க வேண்டுமென்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். உயர்நிலைப்



1970 மார்ச் 12] [திரு. க. ந. இராமச்சந்திரன்]

பள்ளிகளில் எவ்வளவோ ஆசிரியர்கள் முதல் கிரேட் தகுதி பெற்றவர்களாகயிருந்தும் கூட இரண்டாம் நிலையில் வேலை பார்த்து வருகிறார்கள். ஆரம்பப் பள்ளியில் ஹையர் கிரேட் ஆசிரியராக ஒரு செகண்டரி கிரேட் பாஸ் செய்தவர் வேலை பார்த்து வந்தால் அவருக்கு எப்படி செகண்டரி கிரேட் சம்பளம் கொடுக்கப் படுகிறதோ அதேபோல், தமிழ் ஆசிரியர்கள் இரண்டாம் நிலை ஆசிரியர்களாக வேலைபார்த்து வந்தாலும் அவர்கள் முதல் கிரேட் ஆசிரியராகப் பணியாற்றக்கூடிய தகுதி பெற்றவர்களாக இருந்தால் அவர்களுக்கு முதல் கிரேட் ஆசிரியர் சம்பளம் அளிக்கப்பட வேண்டும்.

அடுத்து, ஆறு முதல் எட்டு வகுப்புகள் வரை எலிமென்டரி கிரேட், நடுநிலைப் பள்ளி, சீனியர் பேஸிக் என்று மூன்று விதமாக இருக்கின்றன. இவை தனித்தனியாக இயங்கினாலும் இவை களுக்குள்ள பாட திட்டங்கள் ஒரேமுறையில்தான் அமைக்கப் பட்டிருக்கின்றன. ஆனால் நான்-பேஸிக் டீச்சேர்ஸ் சீனியர் பேஸிக் பள்ளிகளில் நியமிக்கப்படுவதில்லை. பாடதிட்டங்கள் ஒன்றாக இருந்தாலும் கூட ஆதாரப் பயிற்சிப் பட்டம் பெறாதவர்கள் சீனியர் பேஸிக் பள்ளிகளில் நியமிக்கப்படுவது இல்லை. அக் குறையை நிவர்த்திக்க 1968-ல் ஒரு எக்ஸ்பர்ட் கமிட்டி நியமிக்கப் பட்டது. அக் கமிட்டியின் பரிந்துரைகளைச் செயல்படுத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, டி.ஈ.ஓ-க்களாக இருப்பவர்கள் அரசாங்கப் பயிற்சிக் கல்லூரிகளில் லெக்சரேர்ஸ் ஆக நியமிக்கப்படுகிறார்கள். அப்படி லெக்சரேர்ஸ் ஆகப் பணிபுரிகிறபோது அவர்கள் யு.ஜி.ஸி. ஸ்கேல் ஆஃப் பே பெறுகிறார்கள். ஆனால் அவர்கள் திரும்பி டி.ஈ.ஓ.-ஆக வந்தால் அவர்கள் சம்பளம் குறைவாகவே வாங்க வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, இந்தக் குறை நிவர்த்திக்கப்பட வேண்டு மென்று கல்லூரி டைரக்டரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, திருக்குறள் ஆராய்ச்சிக்காக தமிழக அரசு 9 லட்சம் ரூபாய் மூன்று பல்கலைக் கழகங்களுக்கு வழங்கியது. அது நல்ல முறையில் பயன்படுத்தப்படுகிறதா என்ற ஐயம் ஏற்படுகிறது. அந்தப் பதவிக்கு பீ.எச்.டி. பட்டம், டாக்டர் பட்டம் பெற்றவர்கள் அந்த ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் அப்படிச் செய்யாமல் ரீடர்ஸ் போஸ்ட்டுக்கு விளம்பரம் செய்யப் பட்டது. ஏற்கனவே சில லெக்சரேர்ஸ்ஸை நியமித்திருக்கிர்கள். கழுதை தேய்ந்து கட்டெறும்பாவதுபோல் எங்கேயோ தொடங்கி எங்கேயோ போய்க் கொண்டிருக்கிறது. சீர்பெற்றுள்ள சென்னைப் பல்கலைக் கழகத்திலேயே இந்த நிலை என்றால் மற்ற பல்கலைக் கழகங்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. ஆகவே, இதில் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

அடுத்து, மாநிலக் கல்லூரியில் பி.எச்.டி., எம்.லிட்., டி. லிட். என்று பல ஆராய்ச்சித் துறைகள் இருக்கின்றன. இங்கு பதவி வகித்து வரும் பேராசிரியர்கள் பலர் பத்துப் பதினைந்து வருடங் களாக இங்கேயே பணியாற்றி வருகிற காரணத்தால் வேறு

[திரு. க. ந. இராமச்சந்திரன்] [1970 மார்ச் 12

10 இடங்களில் வட்டாரக் கிடங்குகளைக் கட்டித் தர முன்வந்ததற்காக அமெரிக்கக் குடியரசைப் பாராட்டுகிறேன். இதிலே 90 விழுக்காட்டுக்கு மேல் 'கேர்' நிறுவனம் ஏற்றுக் கொண்டதற்காகப் பாராட்டுகிறேன்.

ஒன்று முதல் மூன்று வகுப்புகள் வரையில் உள்ள மாணவர்களுக்கு இலவசமாகப் புத்தகங்கள் ஏற்கனவே வழங்கப்பட்டு வந்திருக்கின்றன. 1970-71-ம் ஆண்டில் 14 வயது முதல் 17 வயது வரை உள்ள மாணவர்களுக்குப் புத்தகங்கள் வழங்குவதில் 70,000 பேரைச் சேர்த்துக் கொண்டதற்காகவும், 1,320 புதிய பி.டி. ஆசிரியர்களை நியமிக்க இருப்பதற்காகவும் நான் பாராட்டுகிறேன். டெக்ஸ்ட்புக் கார்ப்பரேஷன் என்று ஏற்பாடு செய்து மூன்று முதல் பத்து வரை உள்ள வகுப்புகளுக்குக் கணித நூல்களும், ஒன்பதாவது, பத்தாவது வகுப்பு மாணவர்களுக்கு ஆங்கில, தமிழ்ப் பாட நூல்களும் வெளியிட அரசாங்கம் முடிவு செய்ததைப் பாராட்டுகிறேன்.

ஆகவே அவற்றில் அதிக அவசரப்படாமல் நேற்று ஒரு உறுப்பினர் கூறியது போல்—நான் ஒருவருக்காகவும் வக்காலத்து வாங்கிப் பேசவில்லை—அரசாங்கம் அவ்வளவு புத்தகங்களையும் அவ்வளவு விரைவில் வெளியிட முடியுமா என்று யோசித்துப் பார்த்து இந்த விஷயத்தில் சற்று நிதானமாக நடந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு ஆண்டும், பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டுள்ளதைப்போல், படிப்படியாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நான்கு டிவிஷனல் இன்ஸ்பெக்டர்ஸ் இருந்த இடத்தில் அதற்குப் பதிலாகப் பத்து தலைமை கல்வி அதிகாரிகளை நியமித்து அரசாங்கப் பள்ளிகளைக் கண்காணிப்பதற்காக அதிகாரிகளை அதிகப்படுத்தியிருப்பதற்காக நான் அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். ஒரு பத்து ஆண்டுகளுக்கு முன்பு உயர்நிலைப் பள்ளிகள் மாவட்டக் கழகத் தலைவர் அவர்களின் அதிகாரத்தின் கீழ் இருந்து வந்தது. அப்போது ஹைவேஸ்-ம், பப்ளிக் ஹெல்த்-ம் அவர்களின் கீழ்தான் இருந்து வந்தது. மாவட்டக் கழகங்கள் கலைக்கப்பட்ட பிறகு ஹைவேஸ்-ம், பப்ளிக் ஹெல்த்-ம் அந்தந்தத் துறைகளுக்கு அனுப்பப்பட்டு விட்டன. ஆனால் உயர்நிலைப் பள்ளிகள் மட்டிலும் கலெக்டரின் நேர்முக உதவியாளரின் பார்வையின்கீழ் வைக்கப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக கல்வியில் சில தடங்கல்கள் ஏற்பட்டு முன்னேற்றம் ஏற்படாத நிலையைப் பார்த்தோம். இப்போது பத்துத் தலைமைக் கல்வி அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதை எல்லோரும் வரவேற்கிறார்கள்.

1—4—64-க்கு பிறகு நியமிக்கப்படும் ஆசிரியர்கள் அனைவரும் அரசாங்க ஆசிரியர்களாகவே கருதப்படுவர் என்று சொல்லியிருப்பது ஆசிரியர்களுக்கு ஓரளவிற்கு பாதகத்தை விளைவிக்கும். ஆகவே 1—4—70-க்குப் பிறகு எடுத்துக்கொள்ளப்படும்



1970 மார்ச் 12] [திரு. க. ந. இராமச்சந்திரன்]

ஆசிரியர்களே அரசாங்க ஆசிரியர்கள் என்ற முறையில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்பட்ட பலர் அரசாங்க ஆசிரியர்களோடு இணைக்கப்படுவார்களேயானால் அவர்கள் அந்தப் பதவியை இழக்கக்கூடும். அப்படிப் பதவி இழந்தால் தலைமை ஆசிரியராக இருந்தபோது ரூ 225 அடிப்படைச் சம்பளம் பெற்றிருந்தால் அதைத் தொடர்ந்து அவர்களுக்குக் கொடுப்பதற்காகவாவது இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும். அடுத்து, புகுமுக வகுப்பில் 71,000 இடங்கள் இருந்தும் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை 64,000 தான் என்றும் இப்படி இவ்வளவு இடங்கள் காலியாக இருக்கின்றனவே என்று வானொலி மூலம் விளம்பரம் செய்தார்களா என்றும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஒருவர் கேட்டார்கள் நேற்றையதினம். இந்த அறிக்கையைத் தெளிவாக அவர்கள் படித்திருப்பார்களேயானால் அந்தக் கேள்வியைக் கேட்டிருக்க மாட்டார்கள்.

அடுத்து பேசுகிறபோது குறிப்பிட்டார்கள், பல பள்ளிகளுக்குச் சென்று பார்த்ததில் ஒரு ஆசிரியர்தான் அமர்ந்திருக்கிறார் என்று சொன்னார்கள். இந்த உருப்படாத திட்டத்தை நீங்கள்தான் கொண்டு வந்தீர்கள், ஓராசிரியர் பள்ளிகள் என்று. அதை இப்போது திருத்தியமைத்து, தகுதி அடிப்படையில் எத்தனை மாணவர்கள் இருக்கிறார்களோ அதற்குத் தக்கபடி ஆசிரியர்களின் எண்ணிக்கையைக் கூட்டுவது அல்லது குறைப்பது என்று அந்த முறையில் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு வருகிறார்கள். கலைக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில் 124 கல்லூரிகள் இருந்தன. இன்று 140 என்ற அளவில் உயர்த்தப்பட்டுள்ளன. அரசினர் கலைக் கல்லூரிகள் 39, மானியம் பெறும் கல்லூரிகள் 101 என்ற அளவில் இப்போது இருக்கின்றன. இந்த 101 கல்லூரிகளில் உள்ள நிலைமை என்ன என்று பார்த்தால் அவர்கள் தமிழ் வளர்ச்சிக்கு எந்த அளவிற்குத் துணை நிற்கிறார்கள் என்று பார்த்தால், சிலம்புச் செல்வர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் அவர்கள் அரசாங்க மானியம் பெற்றும் ஆணவத்தோடும், திமிரோடும்தான், அரசாங்கக் கட்டளைகள் வந்தால் அவற்றை ஏற்று நடத்தத் தயாராகயில்லை என்ற நிலையைத்தான் பார்க்கிறோம். அவர்கள் எண்ணியபடி எந்தெந்தப் பாடங்களைப் போதிப்பது, எந்தெந்த மொழியில் போதிப்பது என்று அவர்கள் கருதுகிறார்களோ அதற்குத் தக்கபடி தனிச் சட்டதிட்டங்களை வகுத்துக் கொண்டு அவர்கள் நினைத்தபடி செயல்படுவதையே காண்கிறோம். எனவே இம்மாதிரிக் கல்லூரிகள் ஒன்றிரண்டிற்காவது அரசாங்க மானியம் கொடுப்பதை நிறுத்தி வைத்தால் அடுத்த ஆண்டிலாவது இந்த 101 கல்லூரிகளும் வழிக்கு வந்து தமிழக அரசு எதைச் செய்யவேண்டுமென்று சொல்கிறதோ அதைச் செய்ய முன்வருவார்கள்.

(திரு. ந. தருமலிங்கம் தலைமை)

[திரு. க. ந. இராமச்சந்திரன்] [1970 மார்ச் 12

கல்லூரிகளில் உள்ள பேராசிரியர்களுக்கு இங்கு வந்து பணியாற்ற சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. ஆகவே ஐந்து ஆண்டுகளுக்கு மேல் ஒருஅதிகாரி ஒரு இடத்தில் இருக்கக் கூடாது என்று நாம் செய்து வருவதைப் போல் மாநிலக் கல்லூரியிலும் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை பேராசிரியர்களை மாற்றம் செய்யப்பட வேண்டும். அப்போதுதான் மற்றவர்களுக்கு அங்கு பணிபுரிய ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும்.

அடுத்து, 1968-ல் சென்னையில் கூடிய முதல் அமைச்சர்கள் மகாநாட்டில் யு.ஜி.ஸி. எப்படிப் பல்கலைக் கழகங்களுக்கு நிதி உதவி செய்து வருகிறதோ அதேபோல் எலிமென்டரி எட்யூகேஷன் கிராண்ட்ஸ் கமிஷன் என்று ஒன்றை அமைக்க வேண்டுமென்று அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆதாரக்கல்விதான் கல்வி என்ற கட்டடத்திற்கு அடிப்படையாகும். அதற்கு மத்திய அரசின் மானியம் கிடைக்குமானால் அக் கல்வியை மேம்படுத்த முடியும் என்று அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். அக்கருத்தின்படி தொடர்ந்து செயலாற்ற வேண்டுமென்று கல்வி அமைச்சர் அவர்களையும், முதல் அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொண்டு கல்வியமைச்சரின் திறமையையும், முதல் அமைச்சர் அவர்களின் நல்ல முற்போக்குக் கொள்கைகளையும் வரவேற்றுப் பாராட்டி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*ஹாஜி ம. மு. பீர் முஹம்மது: பேரவையின் மாற்றுத் தலைவரவர்களே, கல்வித்துறை மானியத்தின்மீது பேசுவதற்கு அனுமதித்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். சென்ற ஆண்டுகளைவிட இந்த ஆண்டு தம்முடைய கல்வித்துறைக்கு அதிகமான மானியம் ஒதுக்கி இருப்பதையும், கல்லூரிகளில் அதிகமான மாணவர்களைச் சேர்ப்பதற்கு வகைசெய்திருப்பதையும் நான் மனமாரப் பாராட்டு கிறேன்.

மதுரைப் பல்கலைக் கழகத்தில், மதுரைக்கு அடுத்து பல பெரிய கலைக் கல்லூரிகளையும், மருத்துவக் கல்லூரியினையும் கொண்டது பாளையங்கோட்டை நகரமாகும். ஏறத்தாழ 70 மைல் வட்டாரத்தில் உள்ள பல கல்லூரிகளின் மையமாகவும், ஏறக்குறைய 70-க்கு மேற்பட்ட கலைக் கல்லூரிகளின் நடுநாயகமாகவும் பாளையங் கோட்டை விளங்கி வருகின்றது. முதுகலை, எம்.ஏ. பயில விரும்புவோர் 100 மைலுக்கு அப்பாலுள்ள மதுரையினையே நாடிச் செல்ல வேண்டியுள்ளது. திருநெல்வேலி, குமரி மாவட்டங்கள், வரலாற்றுப் பெருமை கொண்டவை. வீரபாண்டியக் கட்டபொம்மன், பூலுத்தேவன் போன்ற முதல் விடுதலை வீரர்களும், உமறுப்புலவர், செய்குத் தம்பிப் பாவலர் போன்ற இஸ்லாமியப் புலவர்களும், தத்துவ போதகர் வீரமாமுனிவர், கால்டுவெல் போப் போன்ற கிறித்துவ அறிஞர்களும், நம்மாழ்வார், குமரகுருபார போன்ற இந்துப் பெரியவர்களும் வாழ்ந்து மறைந்த மண்ணாகும்.



1970 மார்ச் 12] [ஹாஜி ம. மு. பீர். முஹம்மது]

செக்கிழுத்த செம்மல் வ. உ. சிதம்பரனாரும், பாட்டுக்கு ஒரு புலவனும் பாரதியும் இந்த மண்ணுக்குப் பெருமை பல சேர்த்தவர்களே.

காயல் பட்டினம், ஆதிச்சநல்லூர் போன்ற பழமைப்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களும் தவத்திரு ஹீராஸ் போன்ற பேரறிஞர்கள் பாராட்டிய கிருஷ்ணாபுரம், தென்காசி, சுசீந்திரம் போன்ற சிறப்புப் பெருமை படைத்த ஆலயங்களும் இங்கு உள்ளன. திருநெல்வேலிச் சீமையில் பயிலப்பெறும் பழமொழிகளும், நாடோடிக் கதைகளும் வில்லுப் பாட்டுக் கதைகளும் கணக்கி லடங்காத முறையில் விளங்கி வருகின்றன.

ஏறத்தாழ பத்து ஆண்டுகளுக்கு முன், குமரிக்கடலில் ஒலி அலைகளைக் கண்ட ருசியக் கப்பல், அக்கடலுக்கு அடியில் கீழ் மேலாக ஒரு மலை கிடக்க வேண்டும் எனக் கண்டது. அது சங்ககால வரலாற்றினையும் கடல் கொண்ட குமரிக்கண்டத்தையும் தெளிவு படுத்தப் பெரும்பயனாகும் என்று நான் தெரிவித்துக்கொள்ளு கின்றேன். அதுபற்றிய உண்மையைக் காண எந்தவிதமான முயற்சியும் இதுவரை இல்லை. எனவே, அந்தத் துறையில் அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

குமரிக்கடலில் 80 அடி நீளமுள்ள இரண்டு கோட்டைக் கதவுகள் கடல் வற்றிய சில நேரத்தில் காணப்பட்டனவாக ஆபிரகாம் பண்டிதர் தனது கருணாமிர்த சாகரத்தில் குறிப்பிட் டிருக்கிறார்கள். நாணயங்கள், பழங்கால சீனப் பீங்கான் பொருள்கள், சமண பௌத்த மடங்களின் தூண்கள் கடற்கரை ஓர நகரங்களில் காணப்படுவதாக நாம் அறிகிறோம். அத்துடன் நூற்றுக்கணக்கான சிற்றரசர்கள் ஆண்ட பகுதி இது. அது மாத்திரம் அன்று. பல்லாயிரக்கணக்கான கல்வெட்டுகள் இன்னும் இங்கே படியெடுக்காமல் வேறு உள்ளன.

ஆராய்ச்சிக்கும் அறிவு வளர்ச்சிக்கும் பெருந்துணை புரிகின்ற முதுகலை வகுப்புகளை—பொருளாதாரம், தமிழ், ஆங்கிலம், வரலாறு, பழம்பொருள் கலை முதலியவற்றினைக் கொண்ட எம்.ஏ. வகுப்புகளை—பாளையங்கோட்டையில் துவங்குவது மிகவும் அவசரமானது, அவசியமானது என்பதைத் தெரிவித்துக் கொள் கின்றேன். தென்பாண்டிசீமை ஆழ்வார்குறிச்சியிலிருந்து திருச் செந்தூர் வரையும், கோவில்பட்டியிலிருந்து கன்னியாகுமரி வரை யும் உள்ளது. இப்பரப்பின் மத்திய பகுதியாக உள்ள பாளையங் கோட்டையில் முதுகலை வகுப்பு துவங்குவது இன்றியமையாதது. உடனடியாக அரசு இத் துறையில் கவனம் செலுத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பாளையங்கோட்டையை, மதுரைப் பல்கலைக் கழகத்தின் துணைக் கேந்திரமாக ஆக்கவேண்டும், முன்னர் சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைக்கேந்திரமாக மதுரை இருந்ததைப் போன்று

[ஹாஜி ம. மு. பீர் முஹம்மது] [1970 மார்ச் 12

இப்பொழுது மதுரைப் பல்கலைக் கழகத்தின் துணைக்கேந்திரமாகப் பாளையங்கோட்டையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, அறிஞர் அண்ணாவின் துணைவியாரின் பெயரால் திருநெல்வேலியில் பெண்களுக்காகக் கல்லூரி ஆரம்பிப்பதற்கு 5 லட்சம் ரூபாய் நாங்கள் சேர்த்து வைத்திருக்கிறோம். அதற்காக விண்ணப்பம் செய்திருக்கிறோம். அபிஷேகப்பட்டி மாட்டுப் பண்ணைக்குப் பக்கத்திலுள்ள உபரி நிலத்தை 40 ஏக்கர் நிலத்தைப் பெண்கள் கல்லூரிக்காக அரசுக்குக் கிடைக்கச் செய்வதுடன், வருகின்ற ஆண்டில் ராணி அண்ணாத்துரைப் பெண்கள் கல்லூரியை அரசு துவக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

தனியார் துறைப் பள்ளிகள் சர்க்கார் துறைப் பள்ளிகளை விடச் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆரம்பப் பள்ளியானாலும், உயர்நிலைப் பள்ளியானாலும், கல்லூரியானாலும் சர்க்கார் துறைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் தேர்ச்சி எண்ணிக்கையைவிட தனியார்துறைப் பள்ளிகளில் தேர்வு எண்ணிக்கை அதிகமாக இருக்கின்றது. எனவே, அந்தத் துறையில், தனியார் துறைப் பள்ளிகளுக்கு, இன்னும் சிறப்பாக இயங்குமளவுக்கு, அரசு தேவையான நிதி உதவியைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

என்னுடைய உரையை முடிப்பதற்கு முன்னால் ஒரு கருத்தைச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன். குமரி மாவட்டத்தில், தமிழ் நாடு அரசுப் பள்ளிகளில் கேரள அரசு முன்னர் நியமித்த முப்பதிற்கும் மேற்பட்டவர் அரபி மொழி ஆசிரியர்களாகப் பணி புரிகிறார்கள். பதினைந்து ஆண்டுகாலமாக அவர்களைத் தற்காலிகப் பணியாளர்களாகத்தான் இந்த அரசு வைத்திருக்கிறது. அவர்களை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்தக் குமரி மாவட்டத்தில் அரசினர் பள்ளியில் அரபிக் கல்வியைப் பயில வாய்ப்பிருப்பதைப்போல, தமிழ்நாட்டிலே இருக்கும் முஸ்லீம் மாணவர்கள் நிறைந்திருக்கின்ற பல்வேறு நகரங்களில், கிராமங்களில் உள்ள பள்ளிக்கூடங்களில் அரபி மொழி பயிலும் வாய்ப்பை அரசு ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை நிறைவுபடுத்திக் கொள்ளுகின்றேன்.

* திரு. பி. துரைராஜ்: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் கொண்டு வந்துள்ள இந்த மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற நான் ஆசைப்படுகிறேன்.

1967 தேர்தலுக்கு முன்னால் காங்கிரஸ்காரர்கள் ஒரு பொய்ப் பிரச்சாரத்தை நாட்டு மக்களிடம் செய்து வந்தார்கள். அதாவது; திராவிட முன்னேற்றக் கழகம் இன்றையதினம் ஆட்சிக்கு வந்தால்



1970 மார்ச் 12] [திரு. பி. துரைராஜ்]

பள்ளிக் கூடங்களை மூடிவிடுவார்கள் என்று அவர்கள் சொல்லி வந்தார்கள். ஆனால் இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் புள்ளிவிவரங்களை எடுத்துப் பார்த்தால், திராவிட முன்னேற்றக் கழகம் கல்வியில் எந்த அளவுக்கு அக்கறை கொண்டிருக்கிறது என்பது நாங்கள் சொல்லாமலே தெளிவாக விளங்கும். 1966-67-இல் இருந்த ஆரம்பப் பள்ளிகள் 31,195. ஆனால் கடந்த 1969-70-இல் 31,706 என்ற அளவில், ஏறக்குறைய 3 ஆண்டுகளில் 511 ஆரம்பப் பள்ளிகள் அதிகமாக இந்த நாட்டிலே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. உயர்நிலைப் பள்ளிகளை எடுத்துக்கொண்டால், 1966-67-இல் 2,368 இருந்தது, 1969-70-இல் 2,541 ஆக, ஏறத்தாழ 173 உயர்நிலைப் பள்கள் அதிகமாக ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. கல்லூரிகளை எடுத்துக் கொண்டாலும் ஏறக்குறைய 3 ஆண்டுகளில் 34 கல்லூரிகளைப் புதிதாக தமிழக அரசு ஏற்படுத்தியிருக்கிறது. இந்த முடியாது. எனக்கு ஏற்பட்ட அனுபவத்தையே சொல்கிறேன். நீங்கள் உங்கள் கணக்கில் இவ்வளவு தொகை செலுத்த வேண்டி நிலைமையில், ஏறத்தாழ கல்வி இலாக்காவிற்கு இன்றைய தினம் 60 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதில், 30 கோடி ரூபாய் ஆரம்பக் கல்விக்காக ஒதுக்கி இருப்பதைப் பார்க்கும்பொழுது பெருமையாக இருக்கிறது. என்னென்றால், இந்த நாட்டில் அறிவு பெறாதவர்களே இருக்கக் கூடாது, கல்வி கற்காத மக்களே இருக்கக் கூடாது என்ற அந்த அடிப்படைத் தத்துவத்தை நிறைவேற்ற, ஆரம்பக் கல்வியில் இந்த அரசாங்கம் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறது என்பதை இதன் மூலம் அறியலாம்.

ஆரம்பக் கல்வியின் முன்னேற்றத்தை உணர்ந்து, கடந்த 20 ஆண்டு காலமாக காங்கிரஸ் ஆட்சியில் ஆசிரியர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமல் இருந்ததை, இன்றையதினம் தமிழக அரசாங்கம் ஆசிரியர்களுக்கு நல்ல சலுகைகளைக் கொடுத்து, மருத்துவ வசதிகளும், வீட்டு வாடகையும், இது போன்ற பல வசதிகளையும் அளித்திருப்பதைக் கண்டு, ஏறத்தாழ அத்தனை ஆசிரியர்களும் இந்த அரசாங்கத்தைப் பெருமையுடன் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு மட்டும் 2,720 ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களைப் புதிதாக நியமிக்க வழிவகை செய்யப்பட்டிருப்பதைப் பெருமையோடு கூறிக்கொள்ளுகின்றேன்.

ஒரு ஆரம்பக் கல்விப் பள்ளியின் நிர்வாகி என்ற முறையில், நம் அரசாங்கம் நிர்வாக மானியத்தை உதவி வரும் பள்ளிகளுக்கு, 10 சதவிகிதம் என்று காங்கிரஸ்காரர்கள் காலத்தில் இருந்ததை, இப்பொழுது 12 சதவிகிதம் ஆக உயர்த்தி இருப்பதைக் கண்டு, நிர்வாகிகளின் சார்பாக நன்றியைச் செலுத்திக் கொள்ளுகின்றேன்.

விஞ்ஞான அறிவு இந்த நாட்டின் மாணவர்களுக்கு ஏற்பட வேண்டுமென்பதற்காக, விஞ்ஞானக் கருவிகள் வழங்குவதற்காகவும், மற்றவைகளுக்காகவும் 3 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதால் நமக்கு விஞ்ஞானக் கல்வி அதிகரிக்கும் என்று எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

கிராமப் பகுதிகளில் பள்ளிக்கூடங்கள் கட்ட இருந்த இணை மானியத்தை 4,000-இலிருந்து 8,000 ஆக ஆக்கியிருக்கிறது. 7,000-இலிருந்து 13,000 ரூபாய் என்ற நிலையில் உயர் ஆரம்பப் பள்ளிக் கட்டிடங்கள் கட்ட உயர்த்திக் கொடுக்கப்பட்டிருக்றது என்பதைப் பெருமையோடு கூறிக்கொள்ளுகின்றேன்.

மத்திய சமையல் கூடங்கள் 30-க்கு மேல் ஏற்படுத்துவதாகத் தெரிகிறது. ஆனால் இந்தச் சமையல் கூடங்களை ஏற்படுத்துவதில் முக்கியமான அடிப்படை ஒன்றை நான் கூறிக்கொள்ள ஆசைப் படுகிறேன். தமிழகத்திலுள்ள பிற்பட்ட பகுதிகளை எடுத்துக் கொண்டால், அதில் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த சங்கரன் கோயில் மிகவும் பின் தங்கிய வட்டாரமாகும். அங்கு இந்த ஆண்டில் மத்திய சமையல் கூடத்தை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ஆசிரியர்கள், மற்ற அதிகாரிகளுக்கு எவ்வளவு தூரம் நன்மை செய்தாலும். இன்னும் சில ஆசிரியர்கள் கல்வியிலாக்காவால் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள் என்பதற்காக நான் ஒருசில ஆலோசனைகளைக் கூற விரும்புகிறேன். ஆரம்பக் கல்விக்காகத் தனி இயக்குநர் அவசியம் தேவை என்று இங்கே எல்லா அங்கத்தினர்களும் வற்புறுத்திக் கூறுகிறார்கள். ஏனென்றால் இன்று அங்கே அதிகக் காலதாமதம் ஏற்படுவதற்குக் காரணம், அங்குள்ள வேலைப் பளுதானே தவிர, அவர்கள் மீது குற்றம் சொல்ல நான் முற்பட வில்லை. அந்த வேலைப் பளுவைக் குறைப்பதற்காக, ஆரம்பக் கல்விக்கு என்று தனி இயக்குநரை நியமித்தால் அந்த வேலைகள் சீக்கிரமாக முடிக்கப்பட்டு எல்லோருக்கும் உரிய காலத்தில், நியாயம் வழங்கப்படும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, ஆசிரியர்களுக்குப் பரிசுகள் கொடுக்கிறோம். ஆனால், இதற்கான விதிகளைச் சற்று மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றையதினம் 20 ஆண்டு கால சர்வீஸ் வேண்டும் என்று சொல்லப்படுகிறது. அப்படி ஒரு சில ஆசிரியர்கள் தான் இருக்கிறார்கள். அவர்கள் பரிசு பெற்ற ஓரிரண்டு வருடங்களுக்குள்ளேயே ஓய்வு பெறக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். இதை மாற்றி அமைத்து சர்வீஸ் 10 ஆண்டு காலம் என்று வைத்தால், இளைஞர்களுக்கு, நடுவயதில் இருக்கக்கூடியவர்களுக்கு பரிசு பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படும். அவர்களுக்கு அப்படிப் பரிசு பெறும் வாய்ப்பு அளிக்கப்பட்டால், மேலும் ஊக்கத்தோடு அவர்கள் வேலை செய்வதற்கு வசதியாக இருக்கும்.

அடுத்தபடியாக, கல்வி இலாகாவில் பணியாற்றக்கூடிய ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில், இப்பொழுது ஓய்வு பெறும் வயதைப் பொறுத்தவரையில், ஒரு குழப்பமான நிலைமை இருந்து வருகிறது. கல்வி இலாகாவில் பணியாற்றக்கூடிய எல்லா கெஜெடெட் அதிகாரிகளுக்கும் 55 வயது தான் என்று நிர்ணயித்து விட்டால், அவர்கள் கல்லூரியில் இருந்தாலும் சரி, பயிற்சிப்





பள்ளிகளில் இருந்தாலும் சரி அல்லது வேறு உத்தியோகத்தில் இருந்தாலும் சரி, இந்தக் குழப்பம் நீடிக்காமல் இருக்கும். 55 வயது, கெஜட் பதவி பெற்ற அனைத்துப் பேர்களுக்கும் ஓய்வு உறுதி, என்ற நிலைமை ஏற்படும்படி மாற்றி அமைக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கூறிக் கொண்டு, இந்தக் கல்வி மானிய விவாதத்தில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

**திரு. கே. பி. எஸ். மணி:** மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற கல்வி மானியக் கோரிக்கையை ஆதரித்து, அதன் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன். பொதுவாக கல்வித் துறை தேசத்திற்கு மிக இன்றியமையாதது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆனால், இன்று என்ன காரணத்தினாலோ நம்முடைய தேசக் கல்வி அமைப்பு முறை, பாட முறை மாறுதல் இல்லாமல், பழைய முறையிலேயே செக்கு மாடு சுற்றிச் சுற்றி வருவதுபோல், பழைய முறையிலேயே வந்து கொண்டிருக்கிறது. தேசத்தில் அறிவாளிகள், கல்வி அறிவில் திறம்படைத்தவர்கள் அதிகம் தேவை என்று நாம் நினைக்கும் பொழுது, உண்மையில் கல்வி முறையிலே மாடர்ன் எஜுகேஷன் என்ற முறையிலே அயல் நாடுகளில் எப்படி எந்தெந்த முறை கையாளப்படுகிறது என்பதைக் கண்டறிந்து, அந்த முறைகளை நாம் பின்பற்றுவதற்கு முயற்சிக்க வேண்டும். இன்றைக்கு இந்திய முறைப்படி எப்படி நிர்ணயிக்கிறார்கள் என்றால், ஒரு அமைச்சரவை இருக்கும்பொழுது ஒரு முறை, ஒரு கல்வித் திட்டம்; அது மாறி அடுத்த அமைச்சரவை வருகிறபொழுது அடுத்த கல்வித் திட்டம்; அவர்கள் கட்சிக்கும், எண்ணத்திற்கும் உகந்ததாக உள்ள திட்டம்; இப்படிக் கல்வித் திட்டத்தை மாற்றும்பொழுது, மாணவர்களுடைய ஜீவன் அழிக்கப்படுகிறது, அவர்களுடைய உள்ளம் நசுக்கப்படுகிறது. அந்த முறை இல்லாமல் கல்வித் துறையில் வல்லுநர்கள், அதிகம் படித்தவர்கள் என்று நற்பெயர் பெற்றிருக்கிற நம்முடைய மாநில அதிகாரிகளைக் கொண்ட ஒரு தூதுக் குழுவை மற்ற வெளி நாடுகளுக்கு அனுப்பி, அங்கெல்லாம் உள்ள முறைகளைப் பரிசீலித்து, மற்றைய அயல் நாடுகளிலே மாணவர்களுக்கு நல்ல உள்ளங்களை ஏற்படுத்தவும், அவர்களுடைய திறமையை வெளிப்படுத்தவும் அந்த அளவுக்கு எந்த முறையிலே அங்கே கல்வியைப் போதிக்கிறார்கள் என்று கண்டறிந்து, அந்த முறைப்படி இங்கே உள்ள பாட முறைகளை, போதனை முறைகளை மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு அல்லாமல், பள்ளிச் சிறுவர்களிடையே மதப் பற்றை ஏற்படுத்துகிற, ஜாதிப் பற்றுகளை ஏற்படுத்துகிற ஒரு முறை தெரிந்தோ, தெரியாமலோ அனுஷ்டிக்கப்படுகிறது. உண்மையிலே பள்ளிகளில் படிக்கிற மாணவர்களிடையே சிறிய வயதில் மதப் பற்றை ஏற்படுத்துவது என்பது, அந்த மாணவர்களுடைய

6-வது வருகிறபோது, பள்ளி இறுதி வகுப்புக்கு வரும்போது, மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைந்துவிடுகிறது. முதலாவதைவிட மூன்றாவதில் குறைவு, மூன்றாவதை விட, 5, 6-வது வகுப்பில் குறைந்துவிடுகிறது. கல்வி இலாக்காவில் இருப்பவர்கள் இதற்கு வழிவகை காணவேண்டும். முதலில் தொடங்கிய மாணவன் பத்தாவது வரையில் படிக்கும் அளவில், இடையில் ஏற்படும் குறைவு இல்லாமல் செய்ய, குறைவுக்குக் காரணம் என்ன என்பதைப் பார்த்துச் செயல் படவேண்டும். இப்பொழுது நாம் இலவசமாக உணவு, உடை, இன்னும் எல்லா வசதிகளும் கொடுத்தும் கூட, ஆண்டுதோறும் சேர்க்கின்ற மாணவர்கள் இடையிலே நின்றுவிடும் நிலை தவிர்க்கப் படவேண்டும். இதற்கென்று ஒரு பிரிவு கல்வித் துறையில் ஏற்படுத்தி, ஆவன செய்ய வேண்டும். இப்பொழுது எல்லா ஊர்களிலும் 5-வது வரையில் உள்ள பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. ஐந்து மைல் வட்டாரத்தில் உயர்நிலைப் பள்ளிகளும் இருக்கின்றன. தொடர்ந்து உயர்நிலைப் பள்ளிகளில் படிக்க முடியாமல் போவதற்குக் காரணம் என்ன என்று கண்டறிய வேண்டும். அப்பொழுதுதான் கல்வி முறையில் முழு முயற்சியோடு எல்லாக் குழந்தைகளுக்கும் 10-வது வரையில் படிப்பைக் கொடுக்க முயற்சி எடுத்திருக்கிறோம் என்று பொருளாகும்.

அதோடு கல்லூரியில் இன்றையதினம் மாணவர்கள் சேருகிறார்கள். பயிற்சி மொழிக் கொள்கையில் சமநிலை இல்லை. கல்லூரியில் புகுமுக வகுப்பில் தமிழ் போதனு மொழி என்றால், தனிப்பட்டவர்களுடைய கல்லூரிகளுக்கு எல்லா மாணவர்களும் ஒரே முகமாகப் போகிறார்கள். இந்த முறையால் நாம் இரண்டு பிரிவுகளை வளர்த்துக் கொண்டே இருக்கிறோம். அரசினர் கல்லூரிகளில் தான் தமிழிலே பயிற்சி. தனிப்பட்டவர் கல்லூரிகளில் இல்லை. ஆகவே, அங்கே சேருவதற்குச் சிபாரிசுகள் தேடுகிறார்கள். படிப்பை எல்லோருக்கும் கொடுக்க நினைக்கிறோம். ஆனால் எண்ணங்களைச் செயல்படுத்த இடர்ப்பாடு ஏற்படும் வகையில் கொள்கை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பெரும்பாலான பிற்பட்ட, அரிசன சமூகத்தினர்கள், பின்தங்கிய சமூகத்தினர் அரசினர் கல்லூரிகளுக்குத் தான் செல்ல வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆனால் பணவசதி உள்ளவர்கள், தனிப்பட்டவர்களுடைய கல்லூரிகளுக்குச் சென்று சேருகிறார்கள். அப்படிச் சேருவதற்கு பலவற்றையும் சரிக்கட்டிசேர முடிகிறது. அதே சமயத்தில் ஏழை மாணவர்கள் அதைச் செய்ய முடியவில்லை. அதற்கு நல்லதொரு வழிவகை கண்டுபிடித்தாக வேண்டும். எல்லா மாணவர்களையும் ஒரு முறையான அளவில் கல்வி பயில, தமிழ்தான் போதனு மொழி எல்லாக் கல்லூரிகளிலும் என்று செய்ய வேண்டும். தமிழும், ஆங்கிலமும் என்றிருப்பதால், சங்கடங்கள் ஏற்படுகின்றன. கல்வி அமைச்சர் ஒரு கல்லூரிக்கு எந்தக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறார்களோ அதே கொள்கையை எல்லாக் கல்லூரிகளுக்கும் கடைப்பிடிக்க வேண்டும்.





பின்தங்கிய மாணவர்களுக்கு, அரிசன மாணவர்களுக்கு இடம் ஒதுக்குகிறார்கள். 400 மாணவர்கள் என்றால், விகிதாசாரம் போடுகிறார்கள். அந்த முறையை மாற்ற வேண்டும். சயன்ஸ் பிரிவில், கணிதப் பிரிவில், இத்தனை இத்தனை விகிதாசாரம் என்று கொடுக்கப் படவேண்டும். பின்தங்கிய, அரிசன மாணவர்கள் தமிழ் போதனு மொழியாக இருக்கும், பொருளாதாரப் பாடத்தில்தான் தள்ளிவிடப்படுகிறார்கள். கணிதம், சயன்ஸ் போன்ற பாடங்களுக்கு எடுக்கப்படுவதில்லை. அந்த முறையிருப்பதைப் பார்க்கிறோம். அதைத் தவிர்க்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஏழை மாணவர்களுக்கு உதவி செய்ய வேறு யாரும் ஆள் இல்லை. அரசாங்கமே முன்னோடியாக இருந்து, தக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

இன்னொன்று, கல்லூரியில் பொருளாதாரப் படிப்புப் படிக்கிறார்கள். அவர்கள் ஆசிரியர்கள் பயிற்சி பெற்று, ஆசிரியர்களாக உயர்நிலைப்பள்ளிகளில் பணியாற்ற வருகிறார்கள். பொருளாதாரம் படித்துவிட்டு ஆசிரியர்களாகப் பணியாற்ற வரும் போது அவர்களுக்குத் தொடர்பான பாடத் திட்டங்கள் இல்லை. பல கல்லூரிகளிலே இந்தக் குறைபாடு இருக்கிறது. கல்லூரியில் படிப்பதற்கேற்ற முறையிலேயே உயர்நிலைப்பள்ளிகளில் பாடத் திட்டங்கள் அமைய வேண்டும். இன்றையதினம் சமூகநல பாடத் திட்டம் வைத்திருக்கிறோம். இப்போதிருக்கிற சூழ்நிலைக்குத் தக்கவாறு, விஞ்ஞான முன்னேற்றத்திற்கான முறையில், வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் பாடத் திட்டம் அமைய வேண்டும். எல்லாக் கல்லூரிகளிலும் காமர்ஸ் போன்ற பட்டப் படிப்பு ஏற்படுத்த வேண்டும். பொருளாதாரத் துறை, சரித்திரப் பிரிவு போன்ற பாடங்களிலே பயிற்சி பெற்றால் ஒருசில காரியங்களுக்குத் தான் பயன்படும். இன்றைக்கு இருக்கும் சூழ்நிலைக்குப் பயன்படாத முறையில் உள்ள பாடத் திட்டத்தை யெல்லாம் அகற்றிவிட்டு, காலத்திற்கேற்றவாறு பாடத்திட்டங்கள் கல்லூரி மட்டத்தில் அமைய வேண்டும். கல்வி இலாக்கா அதிகாரிகளும் அந்த வாய்ப்பைத் தேடிக் கொடுக்க முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்கான ஊக்கம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்களையும், உயர்நிலைப்பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களையும் வெளிநாடுகளுக்கு அனுப்பி, அங்கிருக்கும் கல்வி முறைகளைக் கண்டுவர, பயிற்சி பெற ஏற்பாடு செய்ய வேண்டும். எக்சேஞ்ச் ப்ரோகிராம் என்ற அடிப்படையில் கல்லூரி, உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் 100 பேர்களையாவது ஒவ்வொரு ஆண்டும் வெளிநாடுகளுக்கு அனுப்பி, அங்குள்ள கல்வியை அறிந்து தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வகை செய்ய வேண்டும். இதற்கான நிதிவசதியை மத்திய அரசிலே இருந்து பெறலாம். அல்லது நாம் கல்விக்காகச் செலவு செய்யும் 66 கோடியிலே சில லட்சம் ரூபாயை இதற்கென்று ஒதுக்கிச் செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. கே. பி. எஸ். மணி] [1970 மார்ச் 12

இந்த நாடு இயங்குகிறது, அதற்குச் சட்டம் இருக்கிறது என்று
சொன்னல், பாபாஜி அம்பேத்கார் அவர்கள் அதற்கு
முக்கிய காரணம். அப்பேர்ப்பட்டவருடைய ஜீவிய சரித்திரத்தை
பாட புத்தகத்தில் கொண்டுவர வேண்டும். தாழ்ந்தவர்
உயர்ந்தவர் என்று பேதம் பார்க்க வேண்டிய அவசியமில்லை,
கட்சியைச் சேர்ந்தவர், கட்சியைச் சேராதவர் என்று பேதம்
பார்க்க வேண்டிய அவசியமில்லை. ஆகவே, அண்ணு அவர்கள்
சொன்னபடி வருகிற ஆண்டிலாவது பாபாஜி அம்பேத்காருடைய
ஜீவிய சரித்திரத்தை நான்டிடைல் டெக்ஸ்டாகக் கொண்டு
வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு,
எனக்குப் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு
நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. கோ. பூவராகன்** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே,
கல்வி மானியத்தின்மீது எங்கள் கட்சியின் வெட்டுத் தீர்மானத்தை
ஒட்டி ஒரு சில கருத்துக்களைக் கூற விழைகிறேன். கல்விக்காக
நம்முடைய மாநிலத்தின் மொத்த வருவாயில் 23 சதவிகிதம் செல
விடுகிறோம் என்று கூறியிருக்கிறார்கள். கல்விக்கு எவ்வளவு
செலவிட்டாலும், அதனைச் செலவுக் கணக்கில் வைக்கக் கூடாது
என்பதைச் சொல்ல விரும்புகிறேன். அதை மூலதனச் செலவாக
செலவிடுவதாகக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். வருகின்ற
ஒரு முன்னேற்ற நிலையில், உலக நாடுகளின் நிலையைப் பார்க்கும்
போது, அறிவுத் திறன் இருந்தால்தான் நாட்டிலே மதிப்பு மரி
யாதை நம்முடைய நாட்டிற்கும் ஏற்படுத்த முடியும் என்கிற
நம்பிக்கை பிறந்திருப்பதைப் பார்க்கிறேன். அறிவுத் திறன்
இல்லாமல் ஒரு காரியமும் நடக்காது. கல்வியில் கீழ் மட்டத்தில்
இருந்தால், சமுதாய வளர்ச்சிக்கான முயற்சிகள் நல்ல முறையில்
செயல் படுத்த முடியாது என்று என்னைப் பொருத்தவரையில்
எண்ணுகிறேன்.

நம்முடைய அரசாங்கம் செலவிடும் தொகை 66 கோடி ரூபாய்
என்றும், அந்த அளவுக்கு அதிகமாகச் செலவிடுகிறோம் என்றும்
சொல்லுகிறார்கள். பெருமைப்படுகிறோம். அப்படிப் பெருமைப்
படும்போது, சில இனங்களை மறந்து விடுகிறோம். இவ்வளவு
அதிகமாக இருப்பதற்கு, ஆசிரியர் சம்பளம் அதிகமாக இருப்பதும்,
படியை உயர்த்தியதும் காரணங்கள். இதற்காக கூட்டப் பட்டி
ருக்கிறதே யல்லாமல், புதிய பள்ளிக் கட்டடங்கள் கட்டினதால்
என்று இல்லை. முன்பு கட்டியதை விட அதிகமாகப் பள்ளிக்கூடங்
கள் கட்டியோ, ஆசிரியர்-மாணவர் எண்ணிக்கையைக் குறைத்து
அதிக ஆசிரியர்களை நியமித்தோ காரியங்கள் செய்யப்படவில்லை.
இந்த வகையில் முயற்சிகள் நடந்து இதற்காக அதிகப் பணம்
செலவிட்டதாகத் தெரியவில்லை. அதில் தயக்கம் காட்டியிருப்ப
தாகத் தெரிகிறது. ஆண்டுதோறும் பட்ஜெட்டில் ஒதுக்கியிருக்கும்
தொகைகளைச் செலவிடாமல் இருக்கும் நிலைகளையும் பார்க்கிறோம்.



1970 மார்ச் 12] [திரு. கோ. பூவராகன்]

உயர்நிலைப் பள்ளிக்கு ஒதுக்கிய பணம் சரியாகச் செலவழிக்கப்
படவில்லை. ஊராட்சி மன்றங்களுக்கு அளிக்கப்படும் மானியங்
கள், ஏற்கனவே போதாது என்று சொல்லிக் கொண்டிருக்கும்
போது, குறைவாகத்தான் அந்த இனத்தில் செலவிட்டிருக்கிறார்
கள். அரசினர் ஆரம்பப் பள்ளிகளில் சென்ற ஆண்டு ஒதுக்கிய
பணத்தை சரியான முறையில் செலவழிக்கவில்லை. சிறப்புப்
பள்ளிகளில் ஒதுக்கிய பணம் செலவழிக்கப்படாத நிலை
இருக்கிறது. தயக்கத்திற்குக் காரணம் என்ன என்று காட்டப்பட
வில்லை. தேசீய மாணவர் படைக்கு, அது நிறுத்தப்பட்ட திட்டம்,
அதற்கு செலவு இனங்களில் செலவு செய்ததாகக் கணக்கு
இருக்கிறது. எப்படி இவ்வளவு என்.சி.சி-க்குச் செலவாகியது
என்பதை அமைச்சர் விடை அளிக்கும்போது சொல்வார்கள்
என்று கருதுகிறேன்.

இப்பொழுது நம்முடைய பள்ளிக் கூடங்கள் நடக்கும் நேரம்
மாற்றப் படவேண்டும். ஏனென்றால், இப்பொழுது காலை 10
மணிக்குப் பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்கின்றன. 1-30 மணிவரையில்
நடக்கின்றன. காலையில் 10 மணியளவில் குழந்தைகளுக்குப்
பள்ளிக்குப் போக, படிக்க அவ்வளவு தக்க நேரம் இல்லை. மற்ற
மேலை நாடுகளில், பாரதத்தில் கூட கோவா போன்ற சிறு இடங்
களிலும், காலை 7-30 அல்லது 8 மணிக்கு ஆரம்பிக்கிறார்கள். பிறகு
12 மணிக்கு முடிக்கிறார்கள். அந்த வகையில் நடத்த முடியுமா
என்று முயற்சி செய்ய வேண்டும். காலையில் இருக்கும் சுறு
சுறுப்பு, மதியம் வருகிறபோது இருப்பதில்லை, குறைந்துவிடுகிறது.
12 மணிக்குமேல் உற்சாகம் குறைந்து வகுப்புகளில் என்ன நடக்
கிறது என்பதை ஆசிரியர்கள், மாணவர்களைக் கேட்டால் தெரியும்.
ஆகவே, காலை நேரத்தில் கல்லூரியாக இருந்தாலும், மற்ற பள்ளி
களாக இருந்தாலும், துவங்கும் நேரம் இருக்கும் முறையை வகுக்க
வேண்டும். பள்ளிக்கூடங்கள் 10 மணிக்கு, அலுவலகங்கள் 10-30
மணிக்கு என்கிற இந்த முறை இருப்பதால், இப்பொழுது
விவசாயத்தில் கூட இந்த முறை வந்துவிட்டது. விவசாய
வேலைகளுக்கும், காலையில் 9 மணிக்குத்தான் வருகிறார்கள்.
ஒன்பது மணிக்கு முன்னல் ஏர் பிடிக்க, களை எடுக்க வருவதில்லை.
நம்முடைய நாட்டுக்கு 9 மணி அவ்வளவு பொருத்தமானது இல்லை.
உற்சாகமாக இருக்கும் அளவிற்கு, காலையிலேயே வேலை துவங்கும்
பழக்கத்தை இளமையிலேயே ஏற்படுத்திவிட வேண்டும். வருகின்ற
ஆண்டில் இந்த முறையை மாற்றி அமைத்து, காலையிலேயே
துவங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.
மாலையிலே விளையாட, நூல் நிலையங்களில் அமர்ந்து படிக்கத்
தேவையான முறையில் மாற்றிச் செயல்பட ஏற்பாடு செய்ய
வேண்டும்.

கட்டாயப் படிப்பு என்ற வகையில் ஆரம்பப் பள்ளிகளில்
சேருகிறார்கள். முதல் வகுப்பில் சேருகிறார்கள். ஆனல் இந்த
மாணவர்கள் மூன்றாவது வரும்போது, எண்ணிக்கை குறைந்து
விடுகிறது. 5-வது வகுப்பில் இன்னும் குறைந்துவிடுகிறது. அடுத்து

முற்போக்கான சக்தியைத் தடுப்பதாகும். ஏதோ ஒரு வெறியில் உந்தித் தள்ளப்படுகிறார்களே தவிர, பரந்த உள்ளத்தோடு, அந்த மாணவர்களைப் படிக்கவிடுவதில்லை, அறிவை வளர்த்துக் கொள்ள விடுவதில்லை. மதப்பற்று வேண்டும் என்று நினைக்கிறவர்கள், மதசார்பில் உள்ள பள்ளிகளில் படித்து, அவர்கள் அறிவை அபிவிருத்தி செய்துகொள்ளலாம். ஆகவே, பள்ளிகளில் மதப்பற்று உள்ள பாடங்கள் அறவே நீக்கப்பட வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான வேண்டுகோள்.

ஆசிரியர்களைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஏதோ ஆசிரியர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு கொடுத்தாலும் திருப்தியில்லை என்ற அதிருப்தியான எண்ணம் நம்மிடையே இருக்கிறது. ஆசிரியர்களைப் பொறுத்த அளவில் 40 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்றால், மாடுகளைப் பட்டியில் அடைப்பதைப் போல் தான் குழந்தைகளை அடைத்து வைக்க முடியுமே தவிர, உண்மையிலேயே நல்ல முறையில் பாடம் கற்பிக்க முடியாது. ஆகவே, ஒரு ஆசிரியருக்கு 25 மாணவர்கள் என்ற முறை இருந்தால் தான், அவர்கள் நல்ல முறையில் பாடம் சொல்லிக்கொடுக்க முடியும் என்பது எல்லோரும் கண்டறிந்த உண்மை. அதே நேரத்தில் அரசாங்க கஜானா நிலைமையும் பார்க்க வேண்டும். கஜானா நிலைமை பரிதாபகரமாக இருந்தாலும், வேறு துறையில் ஈடுபாடு செய்து, நிச்சயம் அந்த மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் கோத்தாரி கமிஷன் கொடுத்துள்ள சிபார்சுகளை ஆசிரியர்கள் முறையாக செயல்படுகிற நிலையிலே அரசாங்கம் நிறைவேற்றி வைக்க வேண்டும்.

கல்லூரி அட்மிஷன், உபகாரச் சம்பளம் என்று சொல்லும் பொழுது இப்பொழுது அரசாங்கம் கொடுக்கிற உபகாரச் சம்பளத் திற்காக விண்ணப்ப பாரத்தைப் பூர்த்தி செய்திருந்தாலும், அதைச் சில கல்லூரித் தலைவர்கள் அரசாங்கத்திற்கு அனுப்பாமல் தடை செய்து வைத்திருக்கிறார்கள். என்ன காரணம் என்று தெரிய வில்லை. இந்த ஆண்டு கூட தஞ்சாவூரில் மெடிகல் கல்லூரியில் ஸ்காலர்ஷிப் பாரம் முறையாக வெல்பேர் டிபார்ட்மெண்டுக்கு அனுப்பப்படாமல், பிறகு மூன்று முறை திருப்பி அனுப்பி, நான்கா வது முறை பிள்ளைகளே கொண்டு வந்து கொடுக்கக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டது. அந்த நிலையைக் கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு அல்லாமல் பகல் உணவுத் திட்டத்தைத் தேவையான அளவுக்கு செயல்படுத்த வேண்டும். (மணி அடிக்கப்பட்டது). எனக்கு முன்னால் பேசியவர்கள் 10 நிமிஷம் பேசினார்கள். நான் ஒரு பார்டி லீடர் என்ற காரணத் தினால் எனக்கு கர்டஸி காட்டி, கொஞ்சம் டைம் கொடுங்கள்.

உபகாரச் சம்பளம், ரூ. 6,000-க்கு மேல் வருமானம் உள்ள பெற்றோர்களின் பிள்ளைகளுக்குக் கொடுக்க முடியாது என்று வைத்திருக்கிறார்கள். இது ஒரு பரிதாபகரமான நிலை. இப்பொழுது



வேண்டுமானால் ஃபாமிலி ப்ளானிங் என்று சொல்லலாம். முன்பே 7, 8 பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டிருப்பவர்கள், எப்படியாவது பிள்ளைகளும் படித்துத் தீரவேண்டும் என்று ஆவலாக இருக்கிறார்கள். ஆகவே, படிப்பு விஷயத்தில் ரூ. 6,000, 7,000 வருமானம் என்ற ஒரு நிலையை வைக்காமல், எல்லாப் பிள்ளை களுக்கும் தாராளமாக உபகாரச் சம்பளம் கொடுப்பதற்கு வழி செய்ய வேண்டும். அதுமட்டுமல்லாமல், ஒரு மாணவர் இரண்டு டிகிரி கோர்ஸ் படித்தால், உபகாரச் சம்பளம் இல்லை என்று சொல்லப்படுகிறது. தேசத்தில் அறிவாளிகள் வளர வேண்டும் என்று நினைக்கிறவர்கள், அறிவு உள்ளவர்கள் முன்னேறவேண்டும் என்று நினைக்கிறவர்கள் நிச்சயம் ஒரு டிகிரி கோர்ஸ் அல்ல, எத்தனை டிகிரி கோர்ஸ் படித்தாலும், அறிவுள்ளவர்களுக்கு, முதல் மார்க் வாங்குபவர்களுக்கு மெரிட்டின் அடிப்படையில் பூரணமாகச் சலுகை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இவ்வளவு தூரத்திற்குக் கல்வித் தரமானது உயர்ந்து கொண்டு போனாலும், தாழ்த்தப்பட்ட மக்களின் நிலை, இந்தக் கல்வி இலாகாவிலும் எப்படி ரிசர்வ் ஸீட் என்று ஒதுக்கப்பட்டு வைத்திருக்கிறார்களோ, அதே நிலை தான் அங்கும் இருக்கிறது. உதாரணமாக ஒன்று சொல்கிறேன். மதிப்பிற்குரிய நம்முடைய திரு. சுந்தரவடிவேலு அவர்கள், மதிப்பைப் பெற்று, உயர்ந்தவர் படித்தவர் என்று சொல்லப்பட்டு, அப்படி அவர்களால் புகழப்பெற்ற சகோதரர் திரு. ஆனந்தராஜ் அவர் களுக்கு 16 வருட சர்வீஸ் இருந்தும், அவருக்கு ஜூனியர்களாக இருப்பவர்கள் பிரமோஷன் அளிக்கப்பட்டு, மேலிடத்தில் இருக் கிறார்கள் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். என்ன காரணத்திற்காகவோ அவர் ஒதுக்கித் தள்ளப்பட்டிருக் கிறார். வேறு ஏதாவது காரணத்தை வேண்டுமானாலும் சொல்லலாம். இந்த நிர்வாகத்தில் மட்டுமல்ல, எல்லா நிர்வாகத்திலும் இப்படி ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள். தயவுசெய்து கேட்டுக்கொள்கிறேன், பாரபட்சமின்றி நாங்கள் கொஞ்சம் குறைவாக இருந்தாலும் கூட, எங்களைத் தட்டிக் கொடுத்து, மேலே கொண்டு வரவேண்டும். ஒரு சிறு சாக்கைச் சொல்லித் தட்டிக் கழிப்பது முறையாகாது.

அறிஞர் அண்ணா அவர்கள் பாபாஜி அம்பேத்காருடைய சரித் திரத்தை பாடப் புத்தகத்தில் நான்-டிடைலாகக் கொண்டு வருவதாக உறுதி தந்தார். ஆனால் இன்று வரையில் கொண்டுவரப் படவில்லை. என்ன காரணம் என்று தெரியவில்லை. அவர் ஒரு தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர், அவருடைய ஜீவிய சரித்திரத்தைப் பாட புத்தகங்களில் கொண்டுவரலாமா என்று நினைக்கக் கூடாது. அவர் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்திருந்தாலும் அவர் கான்ஸ்டிடியூஷன் மேக்கர். இந்தச் சபை இயங்குகிறது. அதற்குச் சட்டம் இருக்கிறது என்று சொன்னால்,

வந்தவர்கள் எதை எதைப் படிக்க வேண்டுமென்று புரிந்து கொள்ளக்கூடிய மனப்பக்குவம் இருக்கிறது. ஆகவே, மாணவர்களுக்கு உரிய முறையில் இன்னின்ன வகையில் திட்டவட்டமான நூல்கள்தான் இருக்க வேண்டும் என்று சொல்லி என் உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். ஆர். கண்ணன் :** தலைவர் அவர்களே, கல்வி மானியத்தின்மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கல்வி என்பது குறிப்பாக, மிகமிகச் சிறந்த பொருள். அந்தப் பொருளுக்காக எத்தனை கோடி செலவு செய்தாலும் அதை முதலீடாகவே கருத வேண்டுமென்று நண்பர் திரு. பூவராகன் சொன்னதை அனைவரும் வரவேற்பார்கள். எவ்வளவு வேண்டுமானாலும் பணம் செலவு செய்யலாம். அத்தகைய சிறப்புமிக்கது கல்வி என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள்.

இன்று தமிழகத்தில்—குறிப்பாக திரு. சிவஞானம் அவர்கள் கூடச் சொன்னார்கள், ஆங்கிலம் அவ்வளவு தேவையில்லை என்பதாகப் பேசுகிறார்கள். அதிலும் குறிப்பாக மொழித் துறையில் ஆங்கிலம் இருக்கக் கூடாது, அதிகமாகத் தமிழ் வரவேண்டும் என்பதாகும். நாங்கள் தமிழை எதிர்ப்பவர்கள் கிடையாது. தமிழை உயிராகப் போற்றுகிறோம். தமிழோடு கூட ஆங்கிலமும் சிறப்பாக இருந்தாக வேண்டும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். மறைந்த மாமேதை அறிஞர் அண்ணா அவர்கள் . . . .

**திரு. ம. பொ. சிவஞானம் :** நான் ஆங்கிலமே கூடாது என்று சொல்லவில்லை. அது போதனா மொழியாக இருக்கக் கூடாது என்று கருதுகிறேன். அவர்கள் சார்ந்துள்ள கட்சியின் கொள்கையும் அதுதான் என்று நினைக்கிறேன். அதை அவர்கள் மறுக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1966-67-ல் சுமார் 44½ கோடி ரூபாயாக இருந்தது மூன்றாண்டுக் காலத்திலே, கல்வித் துறையில் அதிக நாட்டம் செலுத்த வேண்டுமென்ற அடிப்படையில் இப்பொழுது கிட்டத்தட்ட 67 கோடி ரூபாய் அளவுக்கு இந்தக் கல்வித் துறைக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட ரூ. 22½ கோடி அதிகமாகக் கல்வித் துறைக்குப் பல்வேறு வகையில் செலவழித்து, திட்டமிடப்பட்டு, செம்மையாகப் பணிகள் ஆற்றிவரப்படுகின்றன. இப்படியிருந்தும்கூட, போதுமான வசதிகளை நாம் செய்துதர முடியவில்லை. அதற்குப் பல இடர்பாடுகள் ஏற்படுகின்றன. இருந்தாலும், நாம் நம்முடைய பணிகளை மேற்கொண்டிருக்கிறோம்.

1947-ல் இந்த நாடு விடுதலை பெற்றபொழுது ரூ. 2½ கோடி கல்விக்காக செலவழித்திருக்கிறார்கள். ஆகவே, கல்வித் துறையை நிர்வகித்துக் கொண்டு வருகிற நிலையில், நாட்டினுடைய தேவைகள் இன்றையதினம் பரவலாக ஆகிக்கொண்டிருக்கிறபொழுது, சிலபல குறைபாடுகள் ஏற்படுகின்றன. அதையும் தாங்கிக்கொண்டு கல்வித் துறையை வளர்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்த நாட்டில் இருக்கிற வருமானத்தின் அடிப்படையில்தான் நாம் பணிகளை ஆற்றவேண்டியவர்களாக இருக்கிறோம். அது மட்டுமல்ல. இந்த நாடு வசதி குறைந்த நாடு, வறுமை மிகுந்த நாடு என்பதையும் நாம் தெளிவாக உணர்வோம். ஆகவேதான் தேவைப்படுகின்ற வசதிகள் அத்தனையையும் உடனுக்குடன் செய்துதரத்தக்க அளவில் நம் நிலை இல்லை. நம்முடைய நிலை பிற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கிற வகையில் அமையவில்லை என்பதையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். கிடைக்கின்ற வசதிகள், வாய்ப்புகளை வைத்துக் கொண்டு எவ்வளவு பரவலாக ஆக்கலாம் என்ற முயற்சியில்தான் நாம் ஆண்டுக்கு ஆண்டு ஈடுபட்டு வருகிறோம். அந்த முறையில் கல்வித் துறையில் துவக்கப் பள்ளிகள் ஆண்டுக்கு ஆண்டு பெருகிக் கொண்டு வருகின்ற தன்மையை நாம் கண்டு வந்திருக்கிறோம்.

1966-67-ல் கிட்டத்தட்ட 31,195 பள்ளிகள் இருந்தன என்றால், அதற்குப் பிறகு இந்த மூன்று ஆண்டுக் காலத்தில் 511 பள்ளிகள், மக்களுடைய தேவைகளை உத்தேசித்து, அதிகமாகத்தான திறக்கப்பட்டிருக்கின்றன. 1966-67-ல் மாணவர்களின் எண்ணிக்கை

57,86,000 ஆக இருந்தது, அடுத்த ஆண்டு 1967-68-ல் 60,41,000-ஆக உயர்ந்து, 1968-69-ல் 61,33,000 ஆக உயர்ந்து, 1969-70-ல் 62,95,000 ஆக உயர்ந்து, அதற்கான வாய்ப்பு வசதிகளை நாம் செய்ய வேண்டிய கடப்பாட்டில் இருந்துவந்திருக்கிறோம். அதைப் போல ஆசிரியர்களை நியமிப்பதிலும், ஆண்டுக்கு ஆண்டு சிந்தித்து, அதிகமாக ஆசிரியர்களை நியமித்துக்கொண்டிருக்கிறோம். இப்பொழுது இவை அனைத்தையும் எதற்காகச் சொல்கிறேன் என்றால், இருக்கிற வசதிகளை வைத்துப் பயன்படுத்தி அவைகள் அத்தனையையும் நாம் செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம். வசதியுடன் கூடிய பள்ளிகளையும் அதிகப்படுத்தி வந்திருக்கிறோம். உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட 204 பள்ளிகளை அதிகமாக ஆக்கியிருக்கிறோம். அதே போன்று கல்லூரிகளைப் பொறுத்தவரையில் 35 கல்லூரிகள் இந்த மூன்று ஆண்டுக் காலத்தில் அதிகமாக ஆக்கப்பட்டிருக்கின்றன வசதி வாய்ப்புகளைப் பரவலாகச் செய்கின்ற முயற்சியில் துவக்கப் பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவைகளின் தேவைகளை நாம் நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம். தேவைகளை, கிடைக்கின்ற நிதிவசதியின் அடிப்படையில் பூர்த்திசெய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த வகையில் பல்வேறு வசதிகளைப்பற்றியும் மன்ற உறுப்பினர்கள் பலரும் எடுத்துத் தெரிவித்த வகையில் பல இடங்களிலும் செய்ய முடியவில்லை.

2,500 சில்லரை உயர்நிலைப் பள்ளிகளில், 1,100 சில்லரை உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கற்கட்டடங்கள் இல்லாமல் கூரைக் கட்டடங்கள் இருக்கின்றன. ஆகவே, எல்லா உயர்நிலைப் பள்ளிகளுக்கும் கற்கட்டடங்கள் அமைத்த பிறகு, உயர்நிலைப் பள்ளிகளைத் துவக்குவது என்று அரசாங்கம் நினைத்தால், இவ்வளவு உயர்நிலைப் பள்ளிகளை ஏற்படுத்தியிருக்க முடியாது. எல்லா உயர்நிலைப் பள்ளிகளுக்கும் கற்கட்டடங்கள் உடனடியாக அமைத்துக்கொடுக்கக்கூடிய அத்தகைய சூழ்நிலை இப்பொழுது இல்லை. பள்ளிகளில் மாணவர்கள், ஆசிரியர்கள் உட்காருவதற்குப் போதிய இட வசதி இல்லாவிட்டாலும், சில இடங்களில் ஆலமரத் தடியில் அரசமரத்தடியில் பள்ளிகளை வைத்திருந்தாலும், வசதிக் குறைவுகள் இருந்தாலும், சில ஆசிரியர்களுக்குத் தரப்படுகிற நாற்காலி பெயரளவில் நாற்காலியாக இருந்தாலும், அதற்குக் கால்கள் மூன்று இருந்தாலும் சிலபல இடங்களில் சில பள்ளிகளில் சுவரை ஒட்டி நாற்காலியை சாய வைத்துக்கொண்டு படிப்புச் சொல்லிக் கொடுக்கவேண்டிய நிலை இருந்தாலும், கல்வியைப் பரவலாக ஆக்கலாம் என்ற முயற்சியில் நாம் ஈடுபட்டிருக்கிற காரணத்தினால், உறுப்பினர்கள் பலரும் தங்கள் தங்கள் தொகுதியிலிருக்கிற பல குறைபாடுகளை எடுத்துச் சொன்னபொழுது, அவை முழுவதையும் இந்த ஆண்டோ அல்லது அடுத்து வருகிற சில ஆண்டுகளிலோ செய்து முடிக்கின்ற நிலைமையில் நாம் இல்லை.



ஆண்டுக்கு ஆண்டு எந்த அளவுக்குச் செய்யலாமோ அந்த அளவுக்குத் திட்டங்களை மேற்கொண்டு, அதற்கான பணிகளில் நாம் ஈடுபட்டுக்கொண்டு வருகிறோம். வருகிற ஆண்டில் கூட ஆசிரியர்களைச் சேர்ப்பதிலும், துவக்கப் பள்ளிகளை அதிகமாக ஆக்குவதிலும், ஆசிரியர்களை அதிகமாக நியமிப்பதிலும் நாட்டம் செலுத்தி வருகிறோம். அதுவும் நிதி வசதி அடிப்படையில்தான் செய்ய வேண்டியிருக்கிறது.

1967-68-ல் 6,158 புதிய துவக்கப்பள்ளி ஆசிரியர்களை நாம் நியமித்திருக்கிறோம். 1968-69-ல் 6,00 ஆசிரியர்களும், 1969-70-ல் 7,600 ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு கூட 1½ லட்சம் மாணவர்கள் துவக்கப் பள்ளிகளில் சேரக்கூடும் என்று ஒரு கணக்குப்போட்டு, அதைப்போல உயர் துவக்கப் பள்ளிகளில் 1,10,000 பேர்கள் 1970-71-ல் சேரக்கூடும் என்று கணக்கிட்டு, 4,650 ஆசிரியர்களை நியமிப்பதற்குத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், ஆசிரியர்கள்-மாணவர்கள் விகிதாசாரத்தைப்பற்றியும் உறுப்பினர்கள் பலரும் எடுத்துத் தெரிவித்தார்கள். ஒரு ஆசிரியருக்கு 20 மாணவர்கள், 25 மாணவர்கள், 30 மாணவர்கள் இருந்தால் நன்றாக இருக்கும் என்றெல்லாம் கூறப்பட்டது. ஒரு ஆசிரியருக்கு 25, 30 மாணவர்கள் இருந்தால் நன்றாகத்தான் இருக்கும். ஆனால், அப்பொழுது எல்லோருக்கும் கல்வி கற்பிக்கின்ற முயற்சியை நிறைவேற்ற முடியுமா என்று கேட்டால், ஒரு ஆசிரியருக்கு 25, 30 மாணவர்கள் தான் என்றால், பல பள்ளிகளை ஏற்படுத்த முடியாத நிலை இருக்க வேண்டிவரும், பல மாணவர்களைப் பள்ளிகளில் சேர்க்க முடியாத நிலை இருக்க வேண்டிவரும். ஆகவேதான், ஆசிரியர்களை நியமிப்பதில் கிடைக்கின்ற நிதி வசதியை வைத்து, இவ்வளவு ஆசிரியர்களை நியமிக்க முடியும் என்ற அடிப்படையில், இவ்வளவு பள்ளிகளுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. இவ்வளவு பள்ளிகளுக்கு அனுமதி அளிக்கப்படும் என்ற நிலைமை வருகிறபொழுது, மாணவர்கள் வருகிறார்கள். 30, 40, 45 மாணவர்கள் என்ற நிலை இருந்தாலும், அவர்களுக்கு இடமில்லை என்று சொல்லாமல் அவர்களையெல்லாம் சேர்த்துக்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு நாம் ஆளாகியிருக்கிற காரணத்தினால், இந்தத் தலைமுறையைப் பொறுத்த வரையில் கொஞ்சம் கஷ்டநஷ்டங்களை ஏற்றுத்தான் நாம் சமாளிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம், பல இடர்பாடுகளுக்கிடையே நாம் பணியாற்றவேண்டியவர்களாக இருக்கிறோம். இருந்தும்கூட, அந்த விகிதாசாரத்தை ஓரளவுக்குக் குறைப்பதற்கு என்ன செய்யலாம் என்பதில் இந்த அரசு நாட்டம் செலுத்தி வருகிறது.

ஆசிரியர்களுக்கான வசதிகளையும், சம்பளத்தையும் பெருக்குவதில் இந்த அரசு நாட்டம் செலுத்தி வருகிறது. ஏற்கனவே கொடுக்கப்பட்ட சலுகைகளுடைய அடிப்படையில், அவைகளை விரிவுபடுத்தும் முறையில், பல்வேறு நடவடிக்கைகளை சென்ற

மூன்று ஆண்டு காலத்தில் இந்த அரசு எடுத்துவருகிறது, எடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது என்பதை இந்தப் பேரவை உறுப்பினர்கள் தெளிவாக உணர்வார்கள். ஆசிரியர்களுக்கான வசதிகள், நலன்கள், சலுகைகள் இவற்றைப் பற்றி ஆராய, ஆசிரியர்களின் பணிநிலைகளை மேம்படுத்த, அதைப் பற்றி ஆராய ஒரு குழு 1969-ல் நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவில் பலதரப்பட்டவர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். அந்தக் குழு மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று பல நிலைமைகளையும் ஆராய்ந்து, ஆசிரியர்களுடைய நிலையைப்பற்றியும், அவர்களின் பணிநிலைகளை மேம்பாடு செய்வது பற்றியும், கல்வி நிலையங்களின் தன்மையைப் பற்றியும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அறிக்கை சமர்ப்பித்தவுடன், பல்வேறு நிலைமைகளும் ஆராயப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, தக்க நடவடிக்கை எடுக்க இந்த அரசு ஆயத்தமாக இருக்கிறது. இந்த அறிக்கையை இந்த அரசு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

உள்ளாட்சி, மற்ற பள்ளி ஆசிரியர்கள், மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர்களுக்கு, மற்ற அரசுப் பள்ளிகளில் பணி புரிகிறவர்களுக்குக் கொடுப்பது போன்று, குடும்ப ஓய்வு ஊதியத் திட்டம், வருங்கால வைப்பு நிதித் திட்டம், ஈட்டுறுதித் திட்டம், ஓய்வூதியத் திட்டம் ஆகிய திட்டங்களின் அடிப்படையில் அவர்களும் அந்த வசதிகளைப் பெறுவதற்கு வழி செய்யப்பட்டிருக்கிறது. குடும்ப ஊதியத் திட்டத்தின் நன்மைகளைப் பெற 20 ஆண்டுகள் பணிபுரிந்திருக்கவேண்டும். ஆனால் அது சம்பந்தமாக அந்த நிலையைத் தளர்த்தி, 5 ஆண்டுகள் பணி புரிந்தால் போதும் என்ற அளவுக்கு சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. 1969 ஏப்ரல் முதல் தொடக்கப்பள்ளி உடற்பயிற்சி இயக்குநர்கள் ஓய்வூதியத் திட்டம், குடும்ப ஓய்வூதியத் திட்டம் ஆகிய திட்டங்களின் நன்மைகளைப் பெறுவதற்கான வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன.

ஆசிரியர்களின் நலனுக்காக தேசியக் கழகம் ஒன்றும் நிறுவப்பட்டிருக்கிறது. ஆசிரியர்கள் எதிர்பாராத வகையில் இறந்து போனால், விதவைகள் ஒவ்வொருவருக்கும் ரூ. 30-லிருந்து ரூ. 60 வரையில் மானியம் அளிக்கின்ற முயற்சியும் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆசிரியர்களின் திறமையைப் பாராட்டும் வகையில் கருணை மானியம் ரூ. 1,000 முதல் ரூ. 2,000 வரையில் தரப்பட்டுவருகிறது. இதுவரையில் ரூ. 25,99,000 ஆசிரியர்களின் நலனுக்காக தேசியக் கழகத்தினால் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. இது தவிர 542 ஆசிரியர்கள் இதன் மூலம் பலன் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. மேலும் பல ஆசிரியர்கள் விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த விண்ணப்பங்கள் ஆராயப்பட்டு வருகின்றன. தக்கபடி அவர்களுக்கு உதவி [illegible] முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது.





சென்னை நகரிலும், மதுரை நகரிலும், சுற்றியுள்ள பகுதிகளிலும் மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு 7½ சதவிகித நகர ஈட்டுப்படி தரப்படுகிறது. உயர்தர தகுதிகளைப் பெற்றுள்ள ஆசிரியர்களுக்கு இரு ஊதிய உயர்வு அளிக்கப்பட்டு வருகிறது. அதாவது, எம்.ஏ., எம்.எஸ்.ஸி., பட்டம் பெற்றவர்களுக்கு 'டு இன்கிரிமென்ட்ஸ்' தரப்பட்டு, ஊக்குவிக்கப்படுகிறது

அடுத்தபடியாக, பாராட்டுப் பரிசுகளும் வழங்கப்பட்டு வருகின்றன. ஏற்கனவே தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டும், அவர்களுடைய பணிகளைப் பாராட்டுகின்ற வகையில் பாராட்டுப் பரிசுகள் வழங்கப்பட்டு வந்தன. இப்பொழுது 45 கல்வி மாவட்டங்கள் இருக்கின்றன. 90 தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இப்பொழுது பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் பாராட்டுப் பரிசுகள் வழங்குகின்ற அத்தகைய முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கை விடப்பட்டதன் காரணமாக, இந்த அரசு அதை ஆராய்ந்து, உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும், மாவட்டத்திற்கு இரண்டு ஆசிரியர்களுக்குப் பாராட்டுப் பரிசுகள் வழங்கும் திட்டத்தை மேற்கொண்டிருக்கிறது. 45 கல்வி மாவட்டங்களில் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் இரண்டு, இரண்டு பேர்கள் வீதம். 90 ஆசிரியர்களுக்குப் பாராட்டுப் பரிசு வழங்குவதற்கான அத்தகைய முயற்சியை இன்றைக்கு இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. 26,000 மாவட்டவாரியாக உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள், 6.00 ஆசிரியர்கள் அல்லாத பிற பணியாளர்கள் ஆகியோகேளை 1—4—1966 முதல் அரசுப் பணியில் எடுத்துக் கொள்வதென்று அரசு முடிவு செய்து 13—1—70-ல் அறிவித்துள்ளது. ஆசிரியர்கள் சிலர் சங்கடத்தில் இருப்பதாகக் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அதுவும் ஆராயப் பட்டு வருகிறது. ஆராய்ந்ததற்குப் பிறகு அதன்படி மறுபடியும் அரசு தக்கதோர் முடிவு எடுக்கக்கூடும். ஆகவே, 1—4—66-ல் இவர்களையெல்லாம் அரசாங்கத்தின் பணியாளர்களாக ஏற்றுக்கொண்டு, அவர்களுடைய எதிர்கால உயர்வு மற்றவைகள் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்ள என்னென்ன முயற்சிகள் தேவையோ அவை செய்யப்படும் அரசாங்கப் பள்ளி ஆசிரியர்கள் பெறும் சலுகைகள், நலன்கள் மற்றவைகள் இவர்களுக்கும் தரப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறது. 1—4—66 என்று சொல்வதால் சிலபல சங்கடங்கள் ஏற்படுகின்றன என்று கோரிக்கை வந்ததன் காரணமாக, அதை மீண்டும் ஆராய வேண்டும் என்று இயக்குநரிடம் கூறியிருக்கிறேன். அதில் மாற்றங்கள் செய்ய வேண்டிய அவசியம் இருந்தால், தக்க முடிவு எடுக்கப்படும் என்பதை இந்த வாய்ப்பில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கும், நிதி நிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள வசதிகள், சலுகைகள், கொடுக்கப்படும் என்று சொல்லியிருப்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். மானியம்

மானியம் இப்பொழுது 8,000 என்று உயர்த்தப்பட்டிருக்கிறது. அதே போல உயர் துவக்கப் பள்ளிக்கு 7,000 என்றிருந்தது, 13,000 என்று செய்யப்பட்டிருக்கிறது. வருங்காலத்தில் பொதுமக்கள் உதவியால் நிறைவேற்றப்படுவதற்கான வசதிகள் ஏற்படக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாட நூல்களைப் பொறுத்தவரையில், அரசாங்கமே பாட நூல்கள் எல்லாவற்றையும் ஏற்று நடத்தவேண்டும், மற்ற, மற்ற மாநிலங்களில் அப்படி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, நம்முடைய அரசாங்கம் தீவிரமாகச் செயல்படவேண்டும் என்று சொல்லப்பட்டது. ஆந்திராவில் பெரும்பாலான பாடங்களுக்கான புத்தகங்களையும், வேறு பல மாநிலங்களில், பீகார், மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் இதற்கென்று தனி நிறுவனம் அமைதது, கார்ப்பொரேஷன் ஃபார் டெக்ஸ்ட் புக்ஸ் என்ற நிறுவியிருக்கிறார்கள். அவற்றின் மூலமாக வெளியிடும் முயற்சி எடுக்கப்படுகிறது. தமிழகத்தில், அவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, பின்தங்கிய நிலைதான் இருக்கிறது. அந்தத் துறையில் விரைவாகச் செயல்பட, டெக்ஸ்ட் புக்ஸ் கார்ப்பொரேஷன் என்று அண்மையில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. முயற்சிகள் மேற்கொண்டு செய்யப்பட்டு வருகிறது. 1968-69-வரை 4 முதல் 7 வகுப்பு வரையில் ஆங்கில நூல்கள் வெளியிடப்பட்டன. 1 முதல் 8-வது வரை தமிழ் நூல்களும் வெளியிடப்படுகின்றன. 1969-70-ல் 8-வது ஆங்கில நூலும், 1970-71-ல் 3 முதல் 10-வது வரை, கணித நூல்களும், 9-வது, 10-வது தமிழ் ஆங்கில நூல்களும் இந்த நிறுவனத்தின் மூலம் வெளியிடப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தனியார் புத்தகங்கள் வெளியிட ஒரு ஆண்டு காலத்திற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. எதை எதை அரசாங்கம் எடுத்துக் கொள்ளும் சூழ்நிலை ஏற்படுகிறதோ அதற்கு அறவே அனுமதி நீக்கப்படும். அவர்களுக்கு வசதிகள், வாய்ப்புகள் செய்து தரவேண்டும் என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். விற்பனை ஏஜெண்டுகள் என்ற வகையில் எந்த அளவில் உதவிகள் செய்யலாம் என்று நிறுவனம் பரிசீலிக்கிறது. பரிசீலனைக்குப் பிறகு வசதிகளைச் செய்ய முயற்சிகள் செய்யலாம்.

அடுத்து, நடுத்தர உயர்நிலைப்பள்ளிகளைத் தனியார் துறையிலே நடத்துகிறார்கள் என்றும், நல்ல இடவசதி சீராக, செம்மையாகப் போதிக்கப்படுவதற்கான வசதி வாய்ப்புகள் இல்லையென்றும் உறுப்பினர்கள் சொன்னார்கள். இந்தக் குறைபாடுகள் எல்லாம் நீண்ட நாட்களாகச் சொல்லப்பட்டு வருகிறது. மற்றும் வெள்ளையடித்தல், பாடபோதனைக் கருவிகள் போன்றவற்றை வாங்கிக் கொள்வதற்காக—ஸ்பெஷல் பீசாக—தனிக் கட்டணம் வசூலிக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறது. நடுத்தரப்பள்ளிகளில் ஆண்களிடமிருந்து 11 ரூபாய் வரையிலும், பெண்களிடமிருந்து 10 ரூபாய் வரையிலும் வசூலிக்கலாம் என்று அனுமதி தரப்பட்டிருக்கிறது. உயர்நிலைப்பள்ளிகளைப் பொறுத்தவரையில் ஆண்களிடத்தில் 16½ ரூபாய் வரையிலும், பெண்களிடத்தில் 15½ ரூபாய் வரையிலும்



தனிக் கட்டணம் வசூலிக்கலாம் என்ற குறிப்பு இருக்கிறது. புதிதாக தனிக் கட்டணம் என்று விதிக்காமல் ஏற்கெனவே இருக்கிற கட்டணம்தான் வசூலிக்கப்படுகிறது. பள்ளிக் கட்டடம் பராமரிப்பு விஞ்ஞானக் கருவிகள் வாங்குதல் இவற்றிற்காக ஐந்து ரூபாய் தனிக் கட்டணமாக—எக்ஸ்ட்ராவாக—வசூலிக்கலாம் என்ற ஏற்பாட்டை இனி வருகிற ஆண்டிலே நடைமுறைப்படுத்தலாம் என்று வகை செய்யப்பட்டிருக்கிறது.

அடுத்து, திரு. எ. பாலசுப்பிரமணியனும் வேறு சில நண்பர்களும், பள்ளிகளையும், கல்லூரிகளையும், தனியார் துறையிலே விடாமல் எல்லாவற்றையும் அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் எல்லாவற்றையும் தனியார் துறைதான் ஏற்று நடத்த வேண்டும், அப்போது தான் கல்வி சிறப்பாக இருக்கும் என்று கருத்து தெரிவித்தார்கள். இந்த அரசு இந்த இரண்டுவிதக் கருத்துக்களுக்கும் இடையில் செல்ல வேண்டியிருக்கிறது. அறவே தனியார் துறையினர் நடத்த வேண்டுமென்று விடுவதற்கில்லை. எல்லாவற்றையும் அரசாங்கமே நடத்த வேண்டும் என்றால் பெரும் சுமையாக அமைந்துவிடும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். 1966-67-ல் 105 கல்லூரிகள் இருந்தன. 1969-70-ல் 140 கல்லூரிகள் இன்று இருக்கின்றன. அவ்வளவு கல்லூரிகளையும் நாமே ஏற்று நடத்துவது அரசுக்குப் பெருத்த சுமையாக இருக்கும். மேலும் 700-க்கு மேற்பட்ட உயர்நிலைப்பள்ளிகள் தனியார் துறையில் நடைபெற்று வருகின்றன. அவை எல்லாம் சீராக, செம்மையாக நடைபெறுகின்றனவா என்பதைக் கண்காணிக்க நாம் இருக்கிறோம். சட்டத்திற்குப் புறம்பான ஒழுங்கீனங்கள் நடந்தால் தடுத்து நிறுத்த அரசாங்கம் முயற்சி செய்யும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். இவற்றையெல்லாம் கண்காணிக்க ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இக்குழு அறிக்கை தயாரித்துத் தந்தால், தனியார் துறையிலுள்ள குறைபாடுகள் போக்கப்படும். தயனிார் துறையில் பலரும் கல்வி வளர்ச்சிக்கு வகைசெய்திருக்கிறார்கள். சிலர் தங்கள் பெயராலேயே பள்ளிகள் அமைக்கவும் முன்வருகிறார்கள். அப்படிச் செய்ய முன்வருபவர்களுக்கு அரசாங்கம் ஊக்கமளிக்கும். தனியார் துறையினர் இடவசதி ஏற்படுத்திக்கொடுத்து, கட்டிட வசதி செய்துகொடுத்து, பராமரிப்புக்கென்று 40 லட்சம், 30 லட்சம் ரூபாய் என்று செலவு செய்து, வசதி செய்துகொடுப்பவைகளையெல்லாம் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலைமை இல்லை. அவ்வளவு பெரும் பளுவை அரசாங்கம் சுமக்க முடியாது. இப்போதுகூட 5 லட்சம் ரூபாய் நன்கொடை கொடுத்தால் அரசினர் கலைக்கல்லூரிக்கு அவர் பெயரிட்டு, உபயோகித்துக் கொள்ளலாம். 75 ஆயிரம் ரூபாய் நன்கொடை கொடுத்தால் உயர்நிலைப்பள்ளிக்கு அவர் பெயரை வைக்கலாம். 50 ஆயிரம் ரூபாய் நன்கொடை கொடுத்தால் உயர் துவக்கப்பள்ளிக்கு அவர் பெயரை வைக்கலாம். 25 ஆயிரம் ரூபாய் நன்கொடை கொடுத்தால் துவக்கப்பள்ளிக்கு அவர் பெயரிடலாம். இவை மிகச்

பெறும் பள்ளி ஆசிரியர்களும், அவர்கள் தம் குடும்பத்தினரும் அரசு கொடுக்கும் மருத்துவமனைகளில் இலவச மருத்துவ வசதி பெற உரியவராவர். இதன் மூலம் பலன்பெறுபவர்கள் 72,000 ஆசிரியர்கள். வீட்டு வாடகைப் படியும் இவர்களுக்கு அளிக்கப்படும். மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்குக் கைத்தறித் துணி வாங்க உதவும், பண்டிகைக்கு முன் பணம் கொடுக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதற்காக வருங்கால வைப்பு நிதியிலிருந்து 50 சதவீதத்திற்குள் வாங்க அனுமதிக்கப்படுவர். இவர்களுக்கு ரூ. 500-க்கு மேற்படாமல் திருமணக்கடன் வழங்கப்படும். இது 60 தவணைகளில் திரும்பப் பெறப்படும். மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டார் 2,000 ரூபாயாக உயர்த்தப்படவேண்டும் என்று. இந்தப் பணம் சம்பளத்தைப் பொறுத்து இருக்கிறது. திருப்பிக் கொடுக்க வேண்டும் என்பதால், சக்தியைப் பொறுத்து கடன்களைக் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. துவக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு உதவியாக இருக்கவேண்டும் என்றுதான் 60 தவணைகளில் திருப்பித் தர வேண்டும் என்று இருக்கிறது. ரூபாய் 500-க்கு என்று உச்ச வரம்பு வைப்பது நல்லது. அதோடு திருமணங்கள் சிக்கனமாக நடத்தப்படுவதும் நல்லது; அதற்கும் இது உறுதுணைபுரிய ரூ. 500 வரைதான் கடன் என்பது நல்லது. மலைப்பகுதியிலுள்ள மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு நான்கு திங்கள் வரை குளிர்காலப்படி வழங்கப்படும். இதனால் 2,570 ஆசிரியர்கள் பலனடைவார்கள்.

ஓய்வூதியம் 20 ரூபாயிலிருந்து 30 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. ஓய்வூதியம் கடைசியில் 36 திங்கள்கள் கணக்கிடப்படவேண்டும் என்பதற்குப் பதிலாக, கடைசியில் 12 திங்களுக்குக் கணக்கிட்டு ஓய்வூதியம் அதிகமாகப் பெற வேண்டும் என்பதற்காக வாய்ப்பு அளித்து மற்ற துறைகள் போல் இவர்களும் கேட்கிறார்கள்.

ஆசிரியர்களுடைய பயிற்சியைப் பொறுத்தவரையில், பயிற்சி அளிக்கும் பள்ளிகள் அதிகமாக இருப்பதால், ஆசிரியர்களிடையே வேலையில்லாமை இருக்கிறது என்று சொல்லப்பட்டது. தமிழகத்தில் பல்வேறு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் இருந்தன. அவற்றிலிருந்து கிட்டத்தட்ட 8,000 ஆசிரியர்கள் வெளிவந்து வேலையில்லாமல் இருக்கக் கூடும் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது. படிப்படியாக இரண்டு மூன்று ஆண்டுகளில் அதை நீக்க வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதன் காரணமாக, ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்குப் புதிதாக அனுமதி அளிப்பதில்லை என்ற முடிவுக்கு அரசு வந்திருக்கிறது. ஹையர் கிரேடு ட்ரெயினிங் கொடுக்க ஒதுக்கப்பட்டிருந்த பள்ளிகளில் 55 பள்ளிகள் துவக்கநிலை, இடைநிலை, ஆதாரப் பள்ளிகள் எடுக்கப்பட்டு விட்டன. அதே அடிப்படையில் வரும் 41 பள்ளிகளையும் எடுத்துவிடலாம் என்ற முடிவுக்கு அரசாங்கம் வந்திருக்கிறது.



1970-71-ல் ஆசிரியர்களில் 8,308 பேர்கள் வேலையில்லாமல் இருக்கக் கூடும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு சேருகிறவர்கள் 8,000 சில்லரையையும் சேர்த்தால், 16,308 பேர்கள் வரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதிலே ஓய்வு பெறும் ஆசிரியர்களையும், மற்றவர்களையும் கணக்கெடுத்தால், 5,395 பேர்கள் இருப்பார்கள். புதிதாகத் துவக்கப்படும் பள்ளிகள் மூலம் 4,650 பேர்கள் எடுக்கப்படுவார்கள். ஆக, 10;045 பேர்கள் இந்த ஆண்டில் வேலைவாய்ப்புப் பெறுகிறவர்கள். அப்படியும் 6,263 பேர்கள் இந்த ஆண்டு மிஞ்சுவார்கள். 1971-72-ல் கணக்கிடும் போது, அதிகமான ஆசிரியர்கள் ஓய்வுபெற இடம் இருக்கிறது. கிறது. மீதம் 2,048 ஏற்படுகிறது. 1972-73-க்குள்ளாக வேலையில்லாத ஆசிரியர்கள் இல்லை என்கிற அளவிற்குச் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படும். பள்ளிகள் துவக்கி நிலைமை சீர்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்பதை இந்த வாய்ப்பில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நண்பகல் உணவு பற்றிக் குறிப்பிட்டார்கள். இப்பொழுது 18 லட்சம் மாணவர்கள் பயன் பெறுகிறார்கள். அடுத்த ஆண்டு, 67,000 மாணவர்கள் கூடுதலாக இருக்கும். 'கேர்' நிறுவனத்தார் தரும் உணவுப் பொருள்களைக் கொண்டு மதிய உணவுத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்துகிறோம். இது வரையில் 'கேர்' நிறுவனத்தாரால் ரூ. 17,56,00,000 அளவில் பல ஆண்டுகளாக அவர்கள் உதவி அளித்து வந்திருக்கிறார்கள். மைய சமையற் கூடம் நிறுவுவதன் மூலம், ஆசிரியர்கள் மதிய உணவுத் திட்டத்தில், உணவு பரிமாறுதல், முதலிய முறையில் ஈடுபடும் சங்கடங்கள் தீர்க்கப்படும். ஆனாலும், அவர்களாகவே, இதை ஒரு தொண்டாகக் கருதிச் செய்யவேண்டும் என்று அவர்கள் கோரப்படுகிறார்கள். இந்த ஆண்டு 30 மைய சமையர் கூடங்கள் அமைக்க 'கேர்' நிறுவனத்தார் உதவியிருக்கிறார்கள். அவை செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு முதலிய மாவட்டங்களில் நிறுவப்படும். 1972-73-ல் இருக்கும் 374 ஊராட்சி ஒன்றியங்களிலும் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்ற கருத்தை 'கேர்' நிறுவனத்தினர் தெரிவித்திருக்கிறார்கள். அப்பொழுது மேலும் இந்த முறை சிறப்பாக நடைபெறும் என்று கருதுகிறேன்.

உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், 204 பள்ளிகள் அதிகமாக்கப்பட்டிருக்கின்றன. வசதிகள், வாய்ப்புகள் கொடுக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கிறது. கட்டடங்கள் வசதி வாய்ப்புகள் போதாது என்று உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். துவக்கப் பள்ளிக் கட்டடங்களுக்கு, ரூ. 4,000 அரசாங்கம் மானியமாகத் தரும், பாக்கித் தொகையைப் பொது மக்கள் தர வேண்டும் என்று ஏற்கனவே இருந்தது. இப்பொழுது அந்தத் தொகை ரூ. 8,000 வரை என்று உயர்த்தப்பட்டிருக்கிறது. இதற்கும் பிறகு பொதுமக்களிடத்திலிருந்து ரூ. 2,000 நன்கொடையாகப் பெறவேண்டும் என்று இருக்கிறது. ஆக, 4,000 என்கிற

[திரு. இரா. நெடுஞ்செழியன்]

செம்மையாகச் செய்யப் படுவதற்கு அரசாங்கம் உதவலாம். தவறு செய்கின்றவர்களை கண்டுபிடித்து அவ்வப்போது தக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். குழு அறிக்கையைச் சமர்ப்பித்தபிறகு ஆராயந்து திருத்தச் சட்டங்களைக் கொண்டுவருவதன் மூலம் நல்ல முறையில செம்மையான முறையில் கல்வி போதிக்கப்படும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

கல்லூரிகளைப் பொறுத்தவரையிலும் கூட தனியார் கல்லூரிகள் ஆஙகாஙகு ஏறபடுத்த வேண்டுமெனறு பலரும தெரிவித்திருக் கிறார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 20 அரசினர் கலலூரிகள் ஏற்படுத்த நிதி வசதி செய்யப்பட்டிருக்கிறது. ஆண்டு ஒனறுக்கு நானகு கலலூாிகள் எடுத்துககொள்ளலாம எனற அடிப் படையில் 1970-71-ம் ஆண்டிலே நான்கு அரசினர் கல்லூரிகள் ஏற் படுத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது. நிபந்தனையின் அடிப்படை யில் ஐந்து லட்சம் ரூபாயும அதற்கேற்ற 40 ஏக்கர் நிலமும் கட்டடஙகள் கட்டி முடிக்கிற காலம் வரையிலும். இடவசதி என்ற வகையிலே செய்துகொடுத்தால் கவனிக்கலாம் என்று சொல்லப் பட்டிருக்கிறது. திருவாரூா கல்லூரியும் திருநெல்வேலி கல்லூரி யும் இதில் சேர்ந்திருக்கின்றன. இப்பொழுது நான்கிலே இரண்டு உறுதியாகிவிட்டது. நிபநதனையை யாா நிறைவேறறுகிறார் களோ, அங்கு கல்லூரி ஏறபடுத்தப்படும். மேலும தனியார் பள்ளிகளும் ஆண்டுதோறும் வருகின்றன. 8,9 கல்லூரிகள் வந்து கொண்டிருக்கின்றன. மதுரைப்பல்கலைக் கழகத்தோடும் சென்னைப் பல்கலைக் கழகத்தோடும் தொடர்பு வைத்துக்கொண்டு கல்லூரிகள் அமைக்க முயற்சி செய்து வருகிறார்கள். சென்ற ஆண்டும் 7, 8, 9 கல்லூரிகள் வந்திருக்கின்றன. இந்த ஆண்டும் வரும் என்று எதிர்பார்க்கிறோம்.

அடுத்து மாலைநேரக் கல்லூரியின் அவசியத்தைப் பற்றி திரு. எ. பாலசுப்பிரமணியன் அவர்களும் மற்றவர்களும் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். மாலைநேரக் கல்லூரிகளை அமைக்கும முயற்சில் பல்கலைக் கழகத் துணைவேந்தரும் ஈடுபட்டிருக்கிறார்கள். எங்கெங்கு வசதி வாய்ப்பு இருக்கிறதோ அங்கிருந்து விண்ணப்பித் துக்கொணடால், அமைததுத் தரலாம் என்பதைக் கூறிக்கொள கிறேன். இப்போது 12 மாலைநேரக் கல்லூரிகள் இயங்கி வரு கின்றன. 10 கல்லூரிகளிலே பட்டப்படிப்பு சொல்லிக்கொடுக்கப படுகிறது. இரண்டு கல்லூரிகளில் புகுமுக வகுப்புக்கு மட்டும் வசதி செய்து தரப்பட்டிருக்கிறது.

அடுத்து, திரு. பூவராகன் அவர்கள் விருத்தாசலத்தில் கல்லூ ரிக்கு இடம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது கட்டடம் கட்டவில்லை என்று சொன்னார்கள். விரைவிலே கட்டி முடிப்பதற்கான முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேல் பட்டப் படிப்பு வகுப்புகளுக்கு பல்கலைக் கழகத்தின் அனுமதி வேண்டும். இப்போது இருக்கிற இடம் போது மான வசதியுள்ளதாக இருக்கிறதா என்பதையெல்லாம் பார்த்து



1970 மார்ச் 12] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

பல்கலைக் கழகம் அனுமதியளிக்கும். பி.எஸ்.சி. போன்ற அறிவியல் பாடங்கள் தொடங்குவதற்கான வசதிகள் இருந்தால் அந்த இடங் களில் தொடங்குவதற்கு அரசு முயற்சி எடுக்கும். அதற்கும் பல் கலைக் கழகத்தின் அனுமதி பெற்றாக வேண்டும். இந்த முயற்சியிலே அரசாங்கம் உதவும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கல்வியின் தரம் உயர வேண்டுமென்று எல்லோரும் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாகவே தரம் குறைந்துவிட்டது, குறைந்துவிட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். இதற்குப் பல் வேறு காரணங்கள் இருக்கின்றன. கல்வி பரவலாக்கப்படுவது ஒரு காரணம். பல்லாண்டுகளாகப் படிப்பே இல்லாத குடும்பங் களில் இப்போது கல்வியை ஏற்றுக்கொள்ளக்கூடிய கட்டத்தில் இருக்கிறார்கள். பரம்பரையாகப் படித்தவர்கள் தகுதிக்குப் புதி தாகவே படிப்பவர்களின் தரத்தை உயர்த்துகிற நிலைமை இருந்து வருகிறது. மேலும், முன்பு குறிப்பிட்ட அளவுக்குத்தான் கல்வி இருந்தது. மேலும், அப்போது கல்லூரிப் பேராசிரியர்களை விரி வுரையாளர்களைத் தேர்ந்தெடுப்பதிலே அதிகம் கடினம் இருக்காது. குறிப்பிட்ட அளவிற்குச் சிறந்தவர்களைத் தேர்ந்து எடுத்துப் பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. கல்வி பரவலாக்கப்பட்ட பின்னர் கல்வி நிலையங்கள் நிறைய ஆன பின்னர் யார் யார் கிடைக்கிறார் களோ, அவர்களைப் பேராசிரியர்களாகவும், விரிவுரையாளர்களாக வும் அமர்த்தக்கூடிய நிலைமை இருக்கிறது.

மேலும் ஆங்கிலக் கல்வியின் தரம் குறைந்துவிட்டது என்று சொல்லப்படுகிறது. ஆங்கிலக் கல்விப் பயிற்சி பெற்று, ஆங்கிலத் திலே எம்.ஏ. வகுப்பிலே படித்து வந்தவர்கள் அதிகம் பேர் இல்லை. ஆகவே, பொருளாதாரம் போன்ற பிற துறைகளில் படித்து வருப வர்களைத்தான் ஆங்கிலப் பயிற்சிக்கு அமர்த்த வேண்டிய நிலைமை இருக்கிறது. கல்வியின் தரம் உயரவே இல்லையென்று சொல்ல முடியாது. சில குறிப்பிட்ட கல்லூரிகளில் தரம் உயர்ந்திருக் கிறது. அதற்குக் காரணங்கள் இருக்கின்றன. 400 மார்க் வாங்கியவர்களைத்தான் அந்தக் கல்லூரிகளில் சேர்த்துக்கொள் கிறார்கள். 100-க்கு 50 மார்க் என்று வாங்கியவர்களைத்தான் சேர்ப்பது என்ற நிலைமை இருக்கிறது. இதே நிலைமையை எல்லாக் கல்லூரிகளிலும் கடைப்பிடிக்க ஆரம்பித்தால் தரத்தை நல்ல முறையில் உயர்த்த முடியும். ஆனால் ஏழை எளியவர்கள், இது வரையில் அவர்களது குடும்பத்தில் யாருமே படித்தவர்கள் இல்லை என்கிற நிலையில் அவர்கள் எல்லோருக்கும் படிக்க வாய்ப்பு அளித்து அவர்களைச் சேர்த்துக்கொள்கிறபோது, மொத்தமாகப் பார்க்கிற நிலையில்தான் கல்வியின் தரம் குறைந்துவிட்டதோ என்று ஐயப்படுகிற நிலை வருகிறது.

ஆயினும், தரம் குறைந்துவிடக்கூடாது என்பதற்குப் பலவித மான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, டாக்டர் ஹாண்டே அவர்கள் ஆங்கிலம் புறக்கணிக்கப்படுவதாகச் சொன்னார்கள். அது சரியல்ல. 3-வது வகுப்பில் இருந்து

ஆங்கிலம் போதிக்கப்படவேண்டும் என்றே ஏற்பாடு செய்திருக்கிறோம். மும்மொழித்திட்டத்தை மாற்றி இரு மொழித் திட்டம் என்கிறபோது முதல் வகுப்பில் இருந்து தமிழ் போதிக்கப்பட வேண்டும், 3-வது வகுப்பில் இருந்து ஆங்கிலம் போதிக்கப்பட வேண்டும் என்றே ஏற்பாடு இருந்து வருகிறது.

தரம் குறைந்துவிட்டது என்கிறபோது கூட, ஒரு பாடத்தில் தரம் குறைந்திருக்கலாம், இன்னொரு பாடத்தில் தரம் உயர்ந்திருக்கலாம். குறிப்பாக பத்து வருடங்களுக்குமுன் இருந்ததைவிட இப்போது தமிழில் மாணவர்களுடைய தரம் உயர்ந்தே இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. இருபதாண்டுகளுக்கு முன்னால் பொது அறிவில் மாணவர்களுக்கு இருந்த தரத்தைவிட இப்போது பொது அறிவில் தரம் உயர்ந்தே காணப்படுகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆங்கில அறிவைப் பொறுத்தவரையில் அப்போதிருந்ததைவிட இப்போது ஓரளவு தரம் குறைந்திருக்கிறது என்பதை ஒப்புக் கொள்கிறோம். இந்தத் தரத்தை உயர்த்துவதற்காகத்தான் ஆசிரியர்களுக்கு மறுபயிற்சி அளிக்கும் திட்டம் இருக்கிறது.

பெங்களூரில் அமைந்திருக்கிற பிரிட்டிஷ் கவுன்சில் இந்த நான்கு மாநிலங்களில் இருந்து அனுப்பப்படுகிற ஆசிரியர்களுக்கு மறு பயிற்சி ஆங்கில போதனை விஷயத்தில் அளிக்கிறது. நாமும் பல பேர்களை அங்கே அனுப்பிப் பயிற்சி பெற்றுவரச் செய்திருக்கிறோம். மேலும் பாடத் திட்டங்கள் சம்பந்தப்பட்டவரை பெங்களூர் பிரிட்டிஷ் கவுன்சில் வகுத்துக்கொடுக்கிற திட்டத்தின்படிதான் அமைக்கப்படுகின்றன. அதன்படிதான் புத்தகங்களும் வைக்கப்படுகின்றன. மேலும் ஒரு சில ஆசிரியர்கள் எம்.இ.டி. பயிற்சிக்காகவும் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். ஆங்கில மொழி போதனை முறைப் பயிற்சிக்காக அனுப்பப்பட்டிருக்கிறார்கள். ஆங்கில மொழி போதனை முறைப் பயிற்சிக்காக இரண்டு லட்சத்து எண்பதாயிரம் ரூபாய் செலவில் ஒரு திட்டமே தயாரிக்கப்பட்டு செயல்படுகிறது. அமெரிக்காவில் இருந்து 9 ஆண்கள், 9 பெண்கள், ஆக 18 தொண்டர்கள் இன்றைய தினம் ஆங்கிலத்தை எப்படிப் போதிப்பது என்பது பற்றிய பயிற்சியை அளிக்க இங்கே வந்திருக்கிறார்கள். அவர்களையும் நாம் பயன்படுத்திக்கொண்டு வருகிறோம். அறிவியல் கல்வியில் கோடைகாலப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. மற்ற கணிதம், பூகோளம், விஞ்ஞானம் போன்ற துறைகளிலும் தரத்தை உயர்த்த 6 வார காலப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

பொதுவாக டெல்லியின் தரத்தோடு ஒப்பிட்டு, தரம் குறைந்திருக்கிறதே என்கிறார்கள். நாம் சென்னையில்மட்டும் இருக்கும் கல்விக் கூடங்களை எடுத்துக்கொண்டு பார்த்தால் டெல்லியைவிடக் கூடத் தரம் உயர்வானதாக இருப்பதைக் காட்டலாம். ஆனால் சென்னைமட்டும் இல்லாது செங்கற்பட்டும் பார்க்கப்படுகிறது.





இதரக் கிராமப்புறங்களும் பார்க்கப்படுகின்றன. அப்படி மொத்தத்தில் பார்க்கிறபோது தரம் குறைவாகக் காணப்படுகிறது.

திரு. ம.பொ.சி. அவர்களும் மற்றவர்களும் கல்வியின் நோக்கம் மாற்றப்படாமல் இருக்கிறதே என்றார்கள். கல்வி, வாழ்க்கைக்குப் பயன்படுகிற ஒன்றாக இருக்கவேண்டும் என்பதை எல்லோரும் சொல்கிறார்கள். பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் பேராசிரியர்கள் எல்லாம் சொல்கிறார்கள் கல்வி எப்படி அமையவேண்டும் என்பதை அடிப்படைத் திட்டத்தோடு வகுக்க வேண்டியவர்கள் கல்வி நிபுணர்கள், பல்கலைக்கழக சின்டிகேட், பேராசிரியர்கள் ஆகியோர்கள்தான். நம்மைப் பொறுத்தவரையில் அதைச் செயல்படுத்த, வசதி, வாய்ப்புகளைப் பெருக்கிக்கொடுக்க, கல்விச் சாலைகளை அமைத்துக் கொடுக்க செயல்பட்டு வருகிறோம்.

இருக்கின்ற திட்டத்தைத் திடீரென்று மாற்றிவிட முடியாது. மாற்றமும்கூட மெல்ல மெல்லத்தான் நடந்தாகவேண்டும். இன்றைக்கு ஒருவன் எவ்வளவு படித்திருக்கிறான் என்கிற நிலையில் மதிக்கிற பழக்கம் போய்விட்டது. படித்த படிப்பை எதற்குப் பயன்படுத்துகிறான், அதனால் அவன் அடைந்த நன்மை என்ன, அவனது வீட்டிற்கு ஏற்பட்ட நன்மை என்ன, அவனது நாட்டிற்கு ஏற்பட்ட நன்மை என்ன என்கிற அடிப்படையிலேயே மதிக்கிற நிலை உருவாகி வருகிறது.

ஆகவே, இன்றைய கல்வி முறையில் மாற்றம் ஏற்படவேண்டுமானால் அதைத் துணைவேந்தர்கள், பேராசிரியர்கள், ஆசிரியப் பெருமக்கள் எல்லோரும் சேர்ந்து ஆராய்ந்து ஒரு திட்டத்தை அமைத்துக்கொடுக்கவேண்டும். அப்படித்தான் இப்போது பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள் மதுரையில் கூடித் திட்டம் வகுக்கிறார்கள். செலபஸ் அமைக்கிறார்கள். அதன் அடிப்படையில் பாடப் புத்தகங்கள் தயாரிக்கப்படுகின்றன. அந்தப் புத்தகங்களைக் கொண்டே சொல்லியும் கொடுக்கப்படுகின்றன. நாம் எல்லாம் எந்தமுறையில் கல்வித் திட்டம் அமைவது நல்லது என்று சொல்கிறோமேதவிர, அந்த நோக்கத்தை நிறைவேற்றும் கல்வித் திட்டத்தை அமைக்க வேண்டிய பொறுப்பு கல்வி வல்லுநர்களிடத்திலேயே இருக்கிறது. அதற்கான வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டுமென்று அவர்களை இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழைப் போதனைமொழியாக ஆக்குவதுபற்றி மாண்புமிகு திரு. ம.பொ.சி. அவர்களும், மற்றவர்களும் எடுத்துச் சொன்னார்கள். தமிழைப் போதனைமொழியாக ஆக்கவேண்டும் என்பதுதான் இந்த அரசின் கொள்கை. அவர்கள் குறிப்பிட்ட 1968-ஆம் ஆண்டு தீர்மானப்படி ஐந்தாண்டுகளில் அது ஆக்கப்படவேண்டும் என்ற எண்ணத்தில்தான் அரசு இருந்து வருகிறது. ஆயினும், அதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துவதில்தான் பல சிரமங்களும்,

சங்கடங்களும் அமைந்திருக்கின்றன. அந்தவகையில் மெல்ல மெல்லத்தான் படிப்படியாகச் செல்ல வேண்டிய நிலையில் இருக்கிறோம். அரசாங்கம் ஒரு உத்தரவின்மூலம் எல்லாக் கல்லூரிகளிலும் இனி தமிழ்மூலம்தான் போதனை நடைபெற வேண்டும் என்பதாகச் சொல்லிவிடலாம். ஆனால் நடைமுறைப்படுத்துவதில் பல சங்கடங்களை நாம் எதிர்நோக்கவேண்டும்.

குறிப்பாக, தமிழ்மூலமே போதனை பெற மாணவர்களது மனப்பான்மையை நாம் உருவாக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். அதுபோல பெற்றோர்களின் மனப்பான்மையை உருவாக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். படித்துவருகிறவர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதில் வெற்றி காணவேண்டியவர்களாக இருக்கிறோம்.

தமிழில் போதிப்பதற்கான தகுதிபடைத்த ஆசிரியர்களை உண்டாக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இதன் காரணமாகத்தான் ஆண்டுக்கு ஆண்டு விரிவுரையாளர்களுக்கு மறுபயிற்சி அளிக்கிற திட்டத்தையும் செயல்படுத்திவருகிறோம். மதுரைப் பல்கலைக் கழகம் 400-க்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்திருக்கிறது.

தமிழில் போதிப்பதற்கு ஏற்ற பாட நூல்களையும் உருவாக்கித் தர வேண்டியவர்களாக இருக்கிறோம். இன்றைக்குப் புகுமுக வகுப்புக்குக் கலையியல் பாடத்தில் ஒன்றிரண்டு புத்தகங்கள், அறிவியல் துறையில் ஒன்றிரண்டு புத்தகங்களைக் கொண்டுவந்திருக்கிறோம். அதுபோல, பட்டப் படிப்பை எடுத்துக்கொண்டால் கலையியலுக்கு ஒன்றிரண்டு புத்தகங்கள். அறிவியலுக்கு ஒன்றிரண்டு நூல்களைக் கொண்டுவந்திருக்கிறோம்.

எம்.ஏ. வகுப்பை எடுத்துக்கொண்டால் ஒன்றிரண்டு நூல்கள் போதா. நூறு, நூற்றிருபதுக்கும் மேற்பட்ட புத்தகங்களைப் படித்தாகவேண்டிய நிலை இருக்கிறது. அண்மையில் பல்கலைக் கழகத் துணைவேந்தர்களிடத்தில் இதுபற்றியும் கூறப்பட்டிருக்கிறது. இப்போது தமிழில் படிக்கிறவர்கள் மேலே வருகிறபோது எம்.ஏ. தமிழில் படிக்க வகைசெய்தாகவேண்டும். அதுபற்றிய சங்கடங்களை எல்லாம் சொன்னார்கள். எனவே இப்படிப்பட்ட முயற்சிகளை அவர்கள் ஆரம்பித்துத்தான் தீரவேண்டும். இடையிலே சில பல இடையூறுகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் தீர ஆலோசித்து நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியிருக்கின்றன. பல சந்தர்ப்பங்களிலே மாணவர்கள் ஆங்கிலத்திலேயே படித்து இருந்தாலும் தமிழிலே படிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இப்போது கூட பல இடங்களிலே மெல்ல மெல்ல கலைக் கல்லூரிகளிலே தமிழ் பாட மொழியாக, பயிற்சி மொழியாகக் கொண்டுவரப்படுகிறது. அரசாங்கக் கல்லூரிகளிலே தமிழே பயிற்சி மொழியாக இருப்பதற்குக் கட்டாயமாக உத்திரவிடப்பட்டு



இருக்கிறது. ஆனால் தனியார் கல்லூரிகளைப் பொறுத்தவரையில் அவற்றுக்குப் பல்கலைக் கழகம் தான் பொறுப்பாக இருந்து அவர்களை வற்புறுத்தித் தமிழையே பயிற்சி மொழியாகக் கொள்ள வேண்டியிருக்கிறது. நாம் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர்களைக் கேட்டு இருக்கிறோம்.

பாட மொழியைப் பொறுத்தவரையில் 1966-67-லிருந்து புகுமுக வகுப்பிலும் (கலைகள்), 1967-68-லிருந்து பி.ஏ. வகுப்பிலும், 1968-69, முதல் பட்டதாரி வகுப்பிலும், அறிவியல் பாடங்கள் தமிழிலேயே போதிக்கப்படுகின்றன. 1969-70-ஆம் ஆண்டில் புகுமுக வகுப்பில் தமிழைப் பயிற்சி மொழியாகக்கொண்ட கல்லூரிகளின் எண்ணிக்கை 111 ஆக அதிகரித்து இருக்கின்றது. இப்படிப்பட்ட கல்லூரிகள் 1968-69-ல் மொத்தம் 92 தான் இருந்தன. தமிழ்ப் பயிற்சி மொழிப் புகுமுக வகுப்பில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 1968-69-ல் 13,784 ஆக இருந்தது. இந்த ஆண்டில் அது 19,502 ஆக அதிகரித்து இருக்கின்றது. 1968-69-ஆம் ஆண்டில் பி.ஏ. வகுப்பில் தமிழைப் பயிற்சி மொழியாகக்கொண்ட கல்லூரிகள் 57 ஆக இருந்தன. 1969-70-ம் ஆண்டில் இந்தக் கல்லூரிகளின் எண்ணிக்கை 94 ஆக உயர்ந்து இருக்கிறது. 1969-70-ம் ஆண்டில் இந்த வகுப்பில் 3,739 மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர். அதுபோல பி.எஸ்ஸி. வகுப்பில் 1969-70-ல் 1,090 மாணவர்கள் தமிழைப் போதனை மொழியாக ஏற்றுப் படிக்கின்றார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: தலைவர் அவர்களே, கூடுதலாக எங்களுக்கு ஐந்து நிமிஷம் கொடுக்கப்படவில்லை. அப்போது 1½ மணிக்குள் கண்டிப்பாக அலுவல்களை முடிக்க வேண்டும் என்று காரணம் காட்டப்பட்டது. இப்போது 1¼-க்கு அப்பாலும் நீடித்துக்கொண்டே போகிறது.

THIRU K. VINAYAKAM: I move that the discussion on the demand may be continued for tomorrow.

MR. SPEAKER: No no. We will continue and finish it today itself.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கல்லூரிகள் அனைத்திலும் தமிழையே பாட மொழியாக ஆக்குவது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக இருப்பினும் அதைச் செயல்படுத்த முயலும்போது பல்வேறு இடர்பாடுகள் குறுக்கிடுகின்றன. மாண்புமிகு திரு. ம.பொ.சி. அவர்களுக்கு உள்ள ஆர்வம் எனக்கும் இருக்கின்றது. எவ்வளவு வேகமாக இதைச் செயல்படுத்தவேண்டும் என்று அவர் எண்ணுகின்றாரோ அந்த ஆர்வம் எனக்கும் இருக்கிறது. ஆனால் பல இடர்பாடுகள் இருக்கின்றன. பல இடங்களிலே தமிழைப் பயிற்சி மொழியாக ஆக்கியிருக்கிறோம். ஆனால் மாணவர்கள் பல இடங்களிலே அதற்கு எதிராக வேலை நிறுத்தமும் செய்து இருக்கிறார்கள். ஆனாலும் அந்தத் திட்டத்தை அரசு மாற்றவில்லை என்று கண்டிப்பாகச் சொல்லியிருக்கின்றேன்.

இப்போது ராணி மேரி கல்லூரியில்கூடத் தமிழ் போதனு மொழியாக வைக்கப்பட்டுள்ள பிரிவுகளில் மாணவர்கள் சேராமல் பல இடங்கள் காலியாகவே இருக்கின்றன. அதே போலத் தமிழை போதனு மொழியாகக்கொண்ட பி.எஸ்ஸி. வகுப்புகளில் பல இடங்களில் மாணவர்கள் சேருவதற்கு முன்வரவில்லை. ஏறக்குறைய ஆருயிரம் இடங்கள் காலியாகத்தான் இருக்கின்றன. இவற்றை யெல்லாம் ஆங்கிலத்துக்கே மாற்ற வேண்டும் என்று அவ்வப்போது கோரிக்கைகள் வந்துகொண்டு இருக்கின்றன. ஆனுலும் அரசு அதில் ஏதும் மாற்றம் செய்ய விரும்பவில்லை. இப்படி எவ்வளவோ இடர்பாடுகள் இருக்கின்ற காரணத்தினுல்தான் . . . .

* **திரு. ம. பொ. சிவஞானம்:** கல்வி அமைச்சர் அவர்களிடம் ஒரு விளக்கத்தை எதிர்பார்க்கிறேன். மாணவர்கள், தமிழ் மொழியைப் பாட மொழியாகக்கொண்ட வகுப்புகளில் சேரத் தயங்குவதற்கே காரணம், அவர்கள் தமிழில் படித்தால் உத்தியோகத்திற்கு உத்திரவாதம் இல்லை என்பதால்தான். இதைத் தான் எனது பேச்சிலும் குறிப்பிட்டேன், இப்போதும் விளக்கம் கோருகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இப்படி மாணவர்களை ஓரே பகுதியினராக ஆக்குவதில்தான் கஷ்டம் இருக்கிறது என்று கூறுகிறேன். தமிழைப் பாட மொழியாகக்கொண்ட கல்லூரிகளில் தேர்வுற்ற மாணவர்களுக்கு வேலை வாய்ப்புகளைத் தேடித் தருவதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டு இருக்கின்றது. குறிப்பிட்ட துறைகளில் தமிழ் ஆட்சி மொழியாகக் கண்டிப்பாக அமல்படுத்தப்படுகிறது. எனவே, அரசாங்கத் துறைக்கான உத்தியோகங்களில் நியமிப்பதற்கான நபர்களைத் தெரிந்தெடுக்கும்போது, பப்ளிக் ஸர்வீஸ் கமிஷன் தமிழைப் பாட மொழியாகக்கொண்டு தேர்ச்சி பெற்றவர்களுக்கு முதல் இடம் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கிறது. மேலும் மாண்புமிகு திரு. ம.பொ.சி. அவர்கள் குறிப்பிட்டார்கள் அவர்களுக்கு என்று ஒரு பகுதி ரிஸர்வ் செய்யப்பட வேண்டும் என்று. இது இப்போது அரசின் பரிசிலனையில் இருக்கின்றது. விரைவிலே அதற்கான உத்திரவுகளை வெளியிடக்கூடும். தற்சமயம் இது போன்ற பல பிரச்சனைகளை அரசுபரிசிலித்துக்கொண்டு இருக்கிறது. மற்றபடி பாடப் புத்தகங்களை வெளியிடுவதில் மத்திய அரசு நமக்குக் கொடுத்த ஒரு கோடி ரூபாய்க்கு மேலேயே நாம் கூடுதலாகச் செலவழித்துப் பாடப் புத்தகங்களை வெளியிட்டு இருக்கிறோம். இதுவரையில் 220 பாடப் புத்தகங்களை வெளியிட்டு இருக்கிறோம். மேலும் பல புத்தகங்களைக் கொண்டுவரவேண்டி யிருக்கிறது. அதற்கான முயற்சியில் அரசு ஈடுபட்டு இருக்கிறது.

மேலும், ஆட்சி மொழிபற்றி பல கருத்துக்கள் இங்கே தெரிவிக்கப்பட்டன. இந்த அரசு திட்டவட்டமாகவும் தெளிவாகவும் ஆரம்ப காலத்திலிருந்தே தன் கருத்தைச் சொல்லிக்





கொண்டுவந்து இருக்கிறது. இதுபற்றி மாண்புமிகு திரு. பொன்னப்ப நாடார் அவர்கள்கூட சில கேள்விக் குறிகளை எழுப்பினுர்கள். அவர்களுக்கும் சொல்லிக்கொள்ளுவேன், ஆட்சி மொழிபற்றிய கொள்கை என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையிலும் சரி, அல்லது கழக அரசைப் பொறுத்த வரையிலும்சரி, இரண்டு விதக் கருத்துகளுக்கு இடமே இல்லை. முன்பு சொல்லிக்கொண்டு இருந்த அதே கருத்தை இன்னமும் சிறிதும் பிறழாமல் சொல்லிக்கொண்டு வருகிறது. இந்த இயக்கம் தோன்றிய காலம்முதல் 'இந்தியை ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ள முடியாது' என்பதை அன்று முதல் இன்று வரையில் சொல்லிக்கொண்டு வருகிறோம். இந்தி எக்காலத்திலும் தேசிய மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட முடியாது. பதினுன்கு இந்திய மொழிகளில் அதுவும் ஒன்று என்று வேண்டுமானுல் ஏற்றுக்கொள்ளலாமேதவிர, இந்தியை ஆட்சி மொழியாக திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் ஏற்றுக் கொள்ளாது என்ற கருத்தை அன்று முதல் இன்று வரையில் சொல்லிக்கொண்டு வந்து இருக்கிறோம். இந்தக் கருத்தின் அடிப்படையில்தான் முன்னேற்றக் கழகமும் நமது அரசும் பணியாற்றிக்கொண்டு வருகின்றன. இந்திய அரசியல் சட்டத்தில் இந்திதான் இந்தியாவின் ஆட்சி மொழி என்று சொல்லப்பட்டு இருக்கிறது. 1965-ஆம் ஆண்டு வரையில் இந்தி மொழியுடன் ஆங்கிலமும் ஆட்சி மொழியாக நீடிக்கும். அதற்குப் பிறகு ஆங்கிலம் அகற்றப்பட்டு இந்தி ஒன்றே ஆட்சி மொழியாக, அனைத்து இந்திய ஆட்சி மொழியாக இருக்கும் என்று அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டு இருந்தது. நாம் தெரிவித்த பல்வேறு எதிர்ப்புகளுக்குப் பிறகு இந்த நிலை சிறிது மாற்றப்பட்டது. அதற்கு முன்பு இருந்த நிலை, நமது கிளர்ச்சிகளுக்குப் பிறகு பண்டித நேரு அவர்கள் வாக்குறுதி கொடுத்தார்கள், ஆங்கிலமும் நீடிக்கும் என்று. அவர் கொடுத்த வாக்குறுதி, இந்தி ஆட்சி மொழி இல்லை என்று சொல்லுவது இல்லை. அல்லது இந்தியின் ஆதிக்கத்தை அகற்றுவது என்பதும் இல்லை. இந்தி பேசப்படாத மக்கள் வாழும் மாநிலங்கள் விரும்பும் வரையில் 1965-க்குப் பிறகும் இந்தியோடு ஆங்கிலமும் ஆட்சி மொழியாக நீடிக்கும் என்பதுதான் அவர் கொடுத்த உறுதி மொழியேதவிர, இந்தி இனி ஆட்சி மொழியாக இராது என்று சொல்லவில்லை. நாம் எடுத்துக்கொண்ட பல்வேறு நிலைகளுக்குப் பிறகுதான் 1963-ஆம் ஆண்டு ஆட்சி மொழிச் சட்டமானது 1968-ல் ஒரு சிறு திருத்தத்திற்கு உள்ளாகியது. இதன்படி

"Notwithstanding the expiration of the period of fifteen years from the commencement of the Constitution, the English language, may, as from the appointed day, continue to be used, in addition to Hindi."

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1970 மார்ச் 12

இந்திக்குப் பதிலாக ஆங்கிலமே தொடர்ந்து நீடிப்பதற்குத்தான் இது வழிவகை செய்து இருக்கிறதேதவிர, இந்தியின் ஆதிக்கத்தை போக்க இதில் ஒன்றும் கூறப்படவில்லை.

" Shall remain in force until resolutions for the discontinuance of the use of the English language for the purposes mentioned therein have been passed by the Legislatures of all the States which have not adopted Hindi as their official language and until after considering the resolutions aforesaid, a resolution for such discontinuance has been passed by each House of Parliament."

இந்தச் சட்டமும் ஆங்கிலம் நீக்கப்பட்ட பிறகு இந்திதான் இந்தியாவின் ஆட்சிமொழியாக இருக்கும் என்று சொல்லுகிறது. இது திருப்தி அளிக்கவில்லை என்ற அடிப்படையில்தான் நாம் நமது இந்த மன்றத்தில் 1968-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 28-ஆம் நாளன்று இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தோம். இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றி வைத்த நமது பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்று கூறிய அதே கருத்தைத்தான் இன்றும் நாம் வலியுறுத்திக்கூற விரும்புகின்றோம். "பல்வேறு மொழி—பண்பாடு நாகரீகங்களைக் கொண்ட இந்தியாவில், ஒரு வட்டார மொழியை மட்டும் ஆட்சி மொழி யாக்குவது இந்திய ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் குலைத்து, ஒரு மொழிப் பகுதி மற்ற மொழிப் பகுதிகளை அடிமை கொள்ளச் செய்திடும் என்று உணரப்படுவதால்,

தமிழும் மற்ற தேசீய மொழிகளும் மத்திய ஆட்சி மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும். அதுவரையில் ஆங்கிலமே ஆட்சி மொழியாகத் தொடர்ந்து இருந்து வரவேண்டும். அதற்கு ஏற்றபடி இந்திய அரசியல் சட்டத்தின் மொழிப்பிரிவு திருத்தப்பட வேண்டும் என்று இந்த மன்றம் வற்புறுத்துகிறது."

என்று அன்றைக்கு இந்தத் தீர்மானத்தை இந்த மன்றத்தில் நிறைவேற்றி வைத்தோம். இதன்மூலம் இது நமது கழகத்தின் கொள்கை, கழக அரசின் கொள்கை என்று எடுத்துக்காட்டியிருக்கிறோம். தமிழும் மற்ற தேசீய மொழிகளும் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும், 17-ஆவது பிரிவு அகற்றப்பட வேண்டும் என்று சொல்லவில்லை. மாண்புமிகு திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள், சுதந்திராக் கட்சி அரசியல் சட்டம் 17-வது பிரிவு நீக்கப்பட வேண்டும் என்று சொல்லுகிறது என்று. 17-வது பிரிவு திருத்தப்பட வேண்டும் என்றுதான் நாம் தொடர்ந்து சொல்லிக் கொண்டு வருகின்றோம். அதையொட்டித்தான் இந்த மன்றத்தில் தீர்மானமாக நிறைவேற்றியிருக்கிறோம்.

"இப்பொழுது நிறைவேற்றப்பட்டுள்ள மொழிச் சட்டம் இந்த இலட்சியத்துக்கு ஒத்ததாக அமையவில்லை என்று கருதுவதுடன், இந்தியா பிளவுபடவும் அரசாங்க நிர்வாகத்தில்



இருப்பவர்களிடையே, வெறுப்பு, குழப்பம், வேதனைகள் மலிந்த இரு பிரிவுகளை உண்டாக்கிடவும் வகை செய்கிறது என்று கருதுவதோடு, முதலில் குறிப்பிட்ட மொழி உரிமை இலட்சியம் நிறைவேறுவதற்கான முறையில் தொடர்ந்து வலியுறுத்தி வருவது எனத் தீர்மானிக்கிறது.

மொழித் திருத்தச் சட்டத்துடன் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் இந்தி பேசாத பகுதி மக்களுக்கு அநீதியையும் சங்கடத்தையும், புதிய பளுவையும் உண்டாக்குகிறபடியால், அந்தத் தீர்மானம் அமலாக்கப்படக் கூடாது என்பதில் பல அரசியல் கட்சிகளும் ஒருமித்த கருத்துத் தெரிவித்து இருப்பதைக் கவனத்தில்கொண்டு, மத்திய அரசு உடனடியாக அந்தத் தீர்மானத்தை நீக்கிவைத்து இந்தி பேசாத மக்களுக்குச் சங்கடமும், பளுவும் ஏற்படாத ஒரு முறையை வகுக்கவேண்டுமென்று இந்த மன்றம் வலியுறுத்துகிறது. மொழிப் பிரச்னைபற்றி ஆய்ந்தறியவும், மொழிச் சட்டத்துடன் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தால் விளையும் தீங்கை அகற்றும் வழிகாணவும், எல்லா அரசியல் கட்சித் தலைவர்களையும்கொண்ட ஒரு மேல்மட்ட மாநாட்டை இந்தியப் பேரரசு கூட்டவேண்டுமென்று இம்மன்றம் கேட்டுக்கொள்கிறது."

என்ற அளவிலே அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. நேருஜி கொடுத்த வாக்குறுதியின் அடிப்படையிலே தான் திருத்தத் தீர்மானம் கொண்டுவந்ததாகச் சொன்னார்கள். அதோடு அமைந்துவிடவில்லை என்பதைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் தெரிவித்தார்கள். அதை விளக்குகின்றபொழுது அவர்கள் சொன்னார்கள், நேருஜியின் உறுதிமொழியாகட்டும், இந்தத் தீர்மானம் ஆகட்டும், மழை பெய்கிறபோது குடையில்லாவிட்டால் அதைத் தடுப்பதற்கு துண்டை உபயோகப்படுத்திக் கொள்வது போல, அப்படிப் பயன்படுத்திக்கொள்வதிலே என்ன சாதகம் ஏற்படுமோ அதுதான் இதிலே ஏற்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் நேருஜியின் உறுதிமொழி நிறைவேற்றப்படுவதோடு நின்றுவிடாது. இந்தி ஆட்சிமொழி அந்தஸ்தைப் பெறக்கூடாது. எல்லா மொழிகளுக்கும் சம அந்தஸ்து தரப்படவேண்டும். அதுவரையில் ஆங்கிலம் நீடிக்க வேண்டும்.

1968-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23-ஆம் தேதி பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தத் தீர்மானத்தைப்பற்றிக் குறிப்பிட்டுப் பேசுகின்றபொழுது "எங்கள் கழகத்தின் தீர்மானம்—அப்போது தேசீய மொழிகள் 14-ஆக இருந்தன—இந்தியாவின் தேசீய மொழிகள் அத்தனையும் ஆட்சிமொழிகளாக ஆக்கப்படவேண்டும், அப்படி ஆக்கப்படுகிற காலம் வரையில் ஆங்கிலம் தொடர்ந்து ஆட்சிமொழியாக நீடிக்கவேண்டும் என்பது எங்கள் கழகத்தின் திட்டம். அது நிறைவேறுகிற வரையில் நாங்கள் முழுத் திருப்தி அடைவோம் என்று சொல்வதற்கில்லை. ஆனால் இப்போது

[1970 மார்ச் 12

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** எதிர்க்கட்சித் தலைவர் வாதத்தை ஒத்துக்கொள்கிறேன். எல்லோரும் ஒத்துக்கொள்கின்ற வரையில் ஆங்கிலம் இருக்கவேண்டும், பிறகு இந்தி இருக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். எல்லோரும் ஒப்புக்கொண்டபிறகு இந்தி இருக்கலாம் என்று சொல்கிறார்கள் அவர்கள். ஆனால் நாங்கள் எல்லோரும் தமிழை ஒத்துக்கொள்ளவேண்டும் என்று தமிழின் மீதுள்ள ' தவறான ' பற்றின் காரணமாகச் சொல்கிறோம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தவறான பற்றோ என்னமோ எனக்குத் தெரியாது. மொழிப் பிரச்னையில் கொள்கையைத் திட்டவட்டமாகச் சொல்லவேண்டும். நேருஜி அவர்கள் இந்தி திணிக்கப் படக்கூடாது, எல்லோரும் விரும்புகிற வரையில் ஆங்கிலம்தான் இருக்கவேண்டுமென்று உறுதிமொழி கொடுத்திருக்கிறார்கள். நாங்கள்தானே கேட்டோம்? நாங்கள்தானே வாங்கினோம்? நேருஜி அவர்கள் பிரதம மந்திரியாக இருந்தபொழுது கேட்டு நாங்கள்தானே கொண்டுவந்தோம்?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தயவுசெய்து திருத்திக்கொள்ளவேண்டும். சீனாக்காரன் கொண்டுவந்தான். சீன யுத்தம் வந்த நேரத்தில் எல்லாப் பத்திரிகைகளிலும்—எதிர்க்கட்சிப் பத்திரிகைகள் உள்பட—அதுவரையில் இல்லாத முறையில் விளம்பு கட்டிப் போட்டு, நேரு அவர்கள் இந்தியாவின் ஒற்றுமையைக் காப்பதற்காக இதை ஏற்றுத்தான் ஆகவேண்டுமென்று கொடுத்த உறுதிமொழி.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நேருஜி அவர்கள் தனிநாடு வேண்டுமென்று சொல்லி, விட்டுவிட்டுப் போனவர் அல்ல. நாட்டு மக்களுடைய சுதந்திரம், அந்தஸ்தைப் பாதுகாப்பதற்காக எத்தனையோ தியாகங்களைச் செய்தவர்கள். திராவிட நாடு கேட்டு விட்டுவிட்டுப்போனவர் அல்ல.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பாகிஸ்தான் என்னுடைய பிணத்தின் மீதுதான் உருவாகும் என்று சொன்னார், ஆனால் பாகிஸ்தான் உருவாவதை இருந்து பார்த்துவிட்டுப் பிறகுதான் மறைந்துபோனார்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அடைந்தால் திராவிட நாடு இல்லாவிட்டால் சுடுகாடு என்றீர்கள். இப்பொழுது சுடுகாட்டிலா உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள் ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** சுடுகாட்டில் இல்லை. உங்களோடு உட்கார்ந்து கொண்டிருக்கிறோம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதற்காக மகிழ்ச்சி. உங்களோடு உட்கார்ந்து கொண்டிருக்கிறோமே.

**THIRU K. VINAYAKAM:** I am not on this controversy. What I. . . . .



1970 மார்ச் 12]

MR. SPEAKER : Only after the end of Hon. Minister's speech.

THIRU K. VINAYAKAM : If the Hon. Minister is willing, he can answer. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மந்திரிகள் விரும்பினால் கூட பேரவைத் தலைவர் அனுமதி கொடுத்தால்தான் சொல்ல முடியும்.

THIRU K. VINAYAKAM : I have also given a cut-motion. I may. . . .

MR. SPEAKER : No, No.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நாங்கள் திட்டவட்டமாகச் சொல்லுவது போன்று, 14 மொழிகளும் இந்தியாவின் ஆட்சி மொழிகளாக ஆகும் வரையில் ஆங்கிலம் நீடிக்க வேண்டுமென்று சொல்லுவது போல், உங்களுடைய திட்டவட்டமான கொள்கை என்ன ? ஆங்கிலம் விரும்பப்படாத நிலை ஏற்படும் போது இந்திதான் இந்தியாவின் ஆட்சிமொழியாக இருக்க வேண்டுமென்பது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களின் கொள்கையா ? காங்கிரஸ் கட்சியின் கொள்கையா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அது அன்று உள்ள மக்கள் எப்படி முடிவு செய்கிறார்களோ அதைப் பொறுத்தது. எங்களுடைய கொள்கையை நான் திட்டவட்டமாகக் கூறிவிட்டேன். உங்களைப் போல் நான் ஒன்றும் ஓடத் தயாராக இல்லை. மொழிக் கொள்கையைப் பொறுத்தமட்டில் மும்மொழிக் கொள்கை எங்களுடையது. பிரதேச மொழி இருக்க வேண்டும்; விரும்பும் வரை ஆங்கிலம் இருக்க வேண்டும்; ஆங்கிலத்தை எல்லோரும் படிக்க வேண்டும். லிங்க் லாங்வேஜ் இந்தி என்று இதே அரசாங்கம் எழுதி அனுப்பியிருக்கிறதே . . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** நாவலர் கேட்ட கேள்வி, ஆங்கிலம் அகலுகின்றபோது எந்த மொழியை இந்தியாவினுடைய ஆட்சி மொழியாக நீங்கள் விரும்புகிறீர்கள் என்பது. ஆங்கிலம் அகலுகின்ற நேரத்தில் இந்தி இந்தியாவின் ஆட்சிமொழியாக இருக்க வேண்டுமென்பதை நீங்கள் விரும்புகிறீர்களா என்பது நாவலருடைய கேள்வி. நீங்கள் சொன்ன பதில் ' அப்போது மக்கள் எதை விரும்புகிறார்களோ அது ஆட்சி மொழியாகும் ' என்பதாகும். நாங்கள் சொல்லுவது—அப்போது மக்கள் இந்தியாவின் ஆட்சிமொழியாக தமிழ் இருக்க வேண்டுமென்று முடிவு செய்யும் நிலையை அடைய வேண்டுமென்று கருதுகிறோம். நீங்கள் என்ன கருதுகிறீர்கள் ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அப்போது இருக்கும்படியான ஆட்சி, அப்போது இருக்கும்படியான மக்கள் அதை முடிவு செய்வார்கள். தமிழ் வேண்டாம் என்று நான் ஏன் சொல்லுகிறேன் ? நீங்கள் வெளியே போய்ப் பிரசாரம் செய்வதற்கா ? ' ஓ! எதிர்க்கட்சித் தலைவர் சட்டசபையிலே தமிழ் ஆட்சி மொழியாவதை எதிர்க்கிறார் ' என்று நீங்கள் பேசுவதற்கு ஒன்றும் நான் ஏமாந்தவன் இல்லை.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் இன்றைய
1-51 p.m. நிகழ்ச்சிகள் இந்த அளவோடு முடிவுற்று பேரவை நாளை காலை 9 மணி அளவில் மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

(9) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்

A. Statutory Rules and Orders.

'Nil'

B. Reports, Notifications and other papers.

@ 67. Note on Demand No. 13--Education (1970-71) (English and Tamil).

@ Despatched to Members on 10th March 1970.



இணைப்பு

[270-ம் பக்கத்தில் 336-ம் எண்ணுள்ள வினாவிற்குரிய விடையைக் காண்க]

விடை :

தமிழ்நாட்டிற்கு ரயில் மூலமாகவும் சாலை வழியாகவும் இந்தியாவின் பிற மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தாள்.

| சரக்கு (1) | 1965-66* (2) | 1966-67* (3) | 1967-68* (4) |
|---|---|---|---|
| | | (குவிண்டாலில்) | |
| தாள்—பெட்டிகளில் .. | 12,745 | 8,547 | 4,840 |
| தாள்—உருளைகளில் .. | 5,80,488 | 4,37,836 | 3,89,863 |
| பிற தாள்கள் (எழுது பொருள் உட்பட) .. | 48,586 | 19,565 | 11,456 |
| | 6,41,809 | 4,65,948 | 4,06,159 |

தமிழ்நாட்டிற்கு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட செய்தி அச்சிடும் தாள்கள்.

| ஆண்டு* (1) | அளவு (2) (குவிண்டாலில்) |
|---|---|
| 1965-66 .. .. .. | 1,88,851 |
| 1966-67 .. .. .. | 2,70.858 |
| 1967-68 .. .. .. | 2,10,400 |

* நிதி ஆண்டு.

I. *Imports of paper by Rail and other forms of Road Transport from other States of Indian Union into Tamil Nadu.*

| *Commodity* (1) | 1965-66* (2) | 1966-67* (3) | 1967-68* (4) |
|---|---|---|---|
| | | (IN QUINTALS) | |
| Paper in cases .. | 12,745 | 8,547 | 4,840 |
| Paper in Rolls .. | 5,80,488 | 4,37,836 | 3,89,863 |
| Paper others (Including stationery) .. | 48,586 | 19,565 | 11,456 |
| | 6,41,809 | 4,65,948 | 4,06,159 |

II. *Imports of News printing Papers from Foreign Countries into Tamil Nadu.*

| *Year** (1) | *Quantity* (2) (IN QUINTALS) |
|---|---|
| 1965-66 .. .. .. | 1,88,815 |
| 1966-67 .. .. .. | 2,70,858 |
| 1967-68 | 2,10,400 |

* Financial Year.

வந்திருக்கிற சட்டம் இருக்கிறதே அது உங்களுக்கு எப்படிப் படுகிறது? என்று கேட்டார்கள். அது எனக்கு எப்படிப்படுகிற தென்றால், மழை பெய்கிறபோது குடை கிடைக்காவிட்டாலும் மேல் துணியை வைத்துக்கொண்டு பிடித்துக்கொள்வதுபோல் உடனடியாக இந்தி வந்துவிடாமல் ஆங்கிலத்தை வைத்துத் தடுக்கிறோம். அப்படித் தடுத்துக்கொண்டிருக்கும்போது 14 மொழிகளுக்காகவும் பாடுபட்டு அவற்றை வளரச்செய்து . . . .” “. . . . இந்திய அரசு இந்திக்கு மட்டும் சலுகை காட்டுகிற அந்தத் திட்டத்தை மாற்றி எல்லா மொழிகளுக்கும் சம அந்தஸ்து கொடுத்து எல்லா மொழிகளின் வளர்ச்சிக்கும் உரிய சலுகைகளைக் கொடுத்து வளரச் செய்வார்களானால் நாம் அந்த நிலைக்கு வர முடியும். அதுவரைக் கொஞ்சம் பல்லைக் கடித்துக்கொண்டு பொறுத்துக்கொள்ளவேண்டும்” என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே, இதே கருத்துப்படத்தான் நாங்களும் திரும்பத் திரும்ப வலியுறுத்திக்கொண்டுவருகிறோம். அப்பொழுது காங்கிரஸினுடைய திட்டவட்டமான கொள்கை என்ன என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கேட்டார்கள். இந்தியை ஆட்சிமொழியாக ஏற்றுக் கொள்கிறார்களா என்று திட்டவட்டமாகக் கேட்டார்கள், இங்கேயும் திட்டவட்டமாகக் கேட்கப்பட்டிருக்கிறது. அப்பொழுதும் அதற்குப் பதில் வரவில்லை, இப்பொழுதும் வரவில்லை. கழகத்தின் மொழிக் கொள்கை 14 மொழிகளும் வளருகின்ற வரையில் ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்பது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் பேசும்பொழுது குறிப்பிட்டார்கள், 14 மொழிகள் என்று. முன்னாலே அப்படிப் பேசிய அதே அண்ணாதுரை அவர்கள் பாராளுமன்றத்திலே ராஜ்ய சபையிலே பேசும்படியான சந்தர்ப்பத்திலே, இந்தித் திணிப்பை எதிர்க்கிறோம் என்று கூறினார்கள். பிறகு இந்தியைத் திணிக்காவிட்டால் இந்தியைப் பரப்புவதற்கு நான் தயாராக இருக்கிறேன் என்று சொன்னார்கள், அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்தி மொழியைப் பரப்பலாம், ஆனால் ஆட்சி மொழி என்ற அளவிலே அதைப் பரப்பக்கூடாது என்று சொன்னார்கள். இந்தியிலே இரண்டு ஹைஸ்கூல்கள் நடைபெறுவதற்கு அனுமதியளித்திருக்கிறது இந்த அரசு. ஆகவே, இந்தியை முழுக்க முழுக்க வெறுக்கிறது என்பதல்ல. ஆட்சிமொழியாக இந்தி இருந்தால் அதைப் பரப்புவதற்கு முயற்சிக்கிறேன் என்று ஒரு நாளும் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லவில்லை. அந்த நோக்கத்தோடு பரப்பப்படுகிறது, கட்டாயமாகத் திணிக்கப்படுகிறது என்ற காரணத்தினாலே அதை அவர்கள் எதிர்த்தார்கள். இப்பொழுதும் இந்தி ஆதிக்கத்தை எதிர்க்கிறோம். ஒருநாளும் இந்தி ஆட்சி மொழியாக இருக்கக் கூடாது என்பதுதான் திட்டவட்டமான கொள்கை. 14 மொழி



களுக்கும் சம அந்தஸ்து தரப்படவேண்டும் என்பதுதான் எங்களுடைய கொள்கை, அதுவரையில் 14 மொழிகளும் வளருகின்ற வரையில் ஆங்கிலம் நீடிக்கவேண்டுமென்பதுதான் இந்த அரசின், திராவிட முன்னேற்றக் கழகத்தின் நோக்கம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 14 மொழிகளும் வளரவேண்டும் என்று சொல்கிறார்களா அல்லது 14 மொழிகள் வரவேண்டுமென்று சொல்கிறார்களா என்பதைத் திட்டவட்டமாகச் சொல்ல வேண்டும், இந்தியும் அதிலே ஒன்றாக இருக்கும் என்பதை ஒப்புக்கொள்கிறார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** 14 மொழிகளுக்கும் சம அந்தஸ்து தரப்படவேண்டும். அப்படிப்பட்ட நிலைமை வருகின்றவரையில் ஆங்கிலம் நீடிக்கவேண்டும் என்பதுதான் திட்டவட்டமான கொள்கை. 14 மொழிகளில் இந்தியும் ஒன்றாக இருக்கும். தமிழுக்கும் இந்திக்கும் சம அந்தஸ்து இருக்கவேண்டும். தமிழுக்கு இல்லாத ஒரு அந்தஸ்தை இந்தி பெற்று ஆட்சிமொழியாக இருக்கக்கூடாது என்பதுதான் எங்களுடைய திட்டவட்டமான கொள்கை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** 14 மொழிகளும் ஆட்சிமொழிகளாக இருக்கவேண்டும் என்று திட்டவட்டமாகச் சொல்கிறார்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** 14 மொழிகளும் ஆட்சி மொழிகளாக ஆகும்வரை இந்தியைத் திணிப்பதை நாங்கள் ஏற்க மாட்டோம். 14 மொழிகளும் ஆட்சிமொழிகள் ஆகின்றவரையில் ஆங்கிலம் நீடிக்கவேண்டுமென்று சொல்கிறோம். 14 மொழிகளும் ஆட்சிமொழிகள் ஆகவேண்டும் என்பது எங்களுடைய கொள்கை. தயவுசெய்து அவர்கள் கொள்கை என்ன என்பதைச் சொல்ல வேண்டும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** எங்களுடைய கொள்கையைத் திட்டவட்டமாக அறிவித்திருக்கிறோம். ஆங்கிலம் வேண்டாமென்று சொல்லவில்லை. 14 மொழிகளும் வேண்டும் என்று சொல்லவில்லை. எங்களுடைய திட்டம் மும்மொழித் திட்டம்தான். இந்தியை விரும்புகின்றவர்கள் படிக்க வேண்டுமென்றுதான் சொல்கிறோம். (சப்தம்) சத்தம் போட்டு எதுவும் பண்ணவேண்டாம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்தியாவினுடைய ஆட்சி மொழியாக எந்த மொழி இருக்கவேண்டுமென்று விரும்புகிறீர்கள்?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சம அந்தஸ்து எல்லா மொழிகளுக்கும் வேண்டும். நேருஜி அந்த முறையிலேதான் உறுதிமொழி கொடுத்தார்கள். நேருஜி எங்களுடைய கட்சிதான். நீங்கள் ஏன் வருகிறீர்கள்?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஆங்கிலம் அகன்று இந்தியாவின் ஆட்சி மொழிகளில் தமிழும் ஒன்றாக இருக்க முடியும் என்பதைத் தாங்கள் ஆமோதிக்கிறீர்களா?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** ஏன் ஆமோதிக்கக் கூடாது? நான் அவ்வளவு பிற்போக்குவாதி அல்லவே. தமிழ் உலகப் பொது மொழியாகக் கூட இருக்கவேண்டுமென்று சொல்லுவேன். உலகத்திற்கே வள்ளுவர் வழி காட்டவில்லையா? தமிழில் இருக்கும் படியான சத்து, ஊட்டம், கருத்து, விஞ்ஞானம் அந்த அளவுக்குப் பரவ வேண்டும். தமிழ் மொழி உயர்வு அடைய வேண்டுமென்பதில் உங்களை விட நான் எந்த விதத்திலும் குறைந்தவன் அல்ல.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ளுகிறோம். ஆங்கிலம் அகற்றப்படுகின்ற நேரத்தில் இந்தியாவின் ஆட்சி மொழிகளில் தமிழும் ஒன்றாக இருக்க வேண்டுமென்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆட்சேபிக்க வில்லை; ஆமோதித்திருக்கிறார். எங்கள் கட்சி அந்த நிலையைத் தான் கொண்டிருக்கிறது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** இப்போதே ஷெட்யூலில் இருக்கிறதே.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஆட்சி மொழிக் கொள்கையைப் பொறுத்தவரையில் இப்போது எடுத்து வைக்கப் பட்ட கருத்துக்களில் இருந்து, நடந்த விவாதத்தில் இருந்து யாருக்குக் குழப்பம் இருக்கிறது என்பதை நாட்டு மக்கள் தெளிவாக உணர்ந்து கொள்வார்கள். இருமொழிக் கொள்கையைத் தற்போது நடைமுறைப் படுத்த வேண்டுமென்பதுதான் இப்போதுள்ள திட்டம்.

இந்த மானியத்தின் பேரிலும், வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்தவர்கள் அவற்றின் பேரிலும் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அவற்றைப் பற்றியெல்லாம் விரிவான விளக்கங்களைக் கூறவிட்டாலும் அந்தக் கருத்துக்களின் அடிப் படையில் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும் என்று கூற விரும்புகிறேன். இந்தப் பணிகளை எல்லாம் சிறப்பாக நிறை வேற்றுவதற்கு ஒத்துழைத்த பேரவை உறுப்பினர்களுக்கும், துறைச் செயலாளர் அவர்களுக்கும், இயக்குநர்களுக்கும், செம்மை யாகப் பணி புரிந்த அனைவருக்கும் நன்றியையும், வணக்கத்தையும் மீண்டும் மீண்டும் தெரிவித்து உரையை இந்த அளவோடு முடிக்கி றேன். வணக்கம்.

**திரு. கே. விநாயகம் :** ஆன் எ பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன். இந்த மொழிக் கொள்கையைப் பற்றி இந்த அளவுக்கு விவாதத்தை இங்கே நடத்துகிறோம். இந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் 25 பேர் பாராளுமன்றத்தில் இருக்கிறார்கள். அங்கே உங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி காரியத்தைச் சாதித்துக் கொள்ளு



வதற்கு உங்களுக்கு இப்போது நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அங்கே பேசாது விட்டு விட்டு எங்களைச் சிக்கலிலே மாட்டலாம் என்று இங்கே பேசுகின்றீர்கள். இங்கே நீங்கள் வாக்குவாதத்திலே வெற்றி பெற்றதாகச் சந்தோஷப்படலாமே தவிர, செயல்முறையில் என்ன வெற்றி பெற்று விட்டீர்கள்? இதற்கு ஒரு விளக்கம் தரமுடியுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அன்று 25 உறுப்பினர் களுமே சென்றிருந்தாலும் திருத்தம் நிறைவேறி இருக்காது. பத்து பேர் வந்தாலும், 25 பேர் வந்தாலும் திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கை திருத்தத் தீர்மானம் மூலம் திட்டவட்டமாகக் கூறப்பட்டிருக்கிறது. காமராஜர் அவர்கள் வந்தார்களா என்றால், அந்தக் கட்சி என்ன கொள்கையைக் கொண்டிருக்கிறது என்பதை அறிந்து கொள்வதுதான் முக்கியமான ஒன்று. இங்கே கூட 234 பேரும் வந்தபிறகுதான் ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற நிலை இல்லை. பத்து பேரோ, பதினைந்து பேரோ, திருத்தத் தீர்மானத்தின் மூலம் எங்கள் கொள்கை திட்டவட்டமாக விளக்கப்பட்டிருக்கிறது. காமராஜர் என்ன கருத்துக் கொண் டிருக்கிறார் என்பதுதான் கேள்வி.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** மூன்று வருஷம் கழித்துத் தீர்மானம் கொண்டு வந்து விட்டு பத்து பேர் உள்ளே, பதினைந்து பேர் வெளியே. காமராஜர் அவர்கள் வருகிறாரா என்பதைப் பார்ப்பதற்காக வெளியே 15 பேர் என்று முதலமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அந்த 10 பேரும் கூட வெளியே வந்து பார்த் திருக்கலாமே.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவர் உள்ளே வந்து சும்மா உட்கார்ந்து விடுவாரோ என்பதற்காக உள்ளே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** டிவிஷன் மணி அடித்து முடிந்த பிறகு கதவைச் சாத்தி விடுவார்கள் : உள்ளே போக முடியாது.

மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. ஏ. பாலசுப்பிரமணியம், திரு. கே. பி. எஸ். மணி, திரு. ஆர். கருப்பையா ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர் களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திரு. எம். சுரேந்திரன், திரு. சோ. அழகர்சாமி ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி— "நிதிக் கோரிக்கை எண் 13—கல்வி—என்ற தலைப்பின் கீழ் ரூ. 67,73,14,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

# தமிழ் நாடு சட்டப் பேரவை

---

வெள்ளிக்கிழமை, 1970 மார்ச் 13.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

முன்னாள் மாவட்டக்கழக உயர்நிலைப் பள்ளிகள்.

*** 349 வினா—திரு. டி. மார்டின்**
**திரு. என். எஸ். வி. சித்தன்**
**திரு. கே. விநாயகம்**

மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில், மாவட்ட போர்டு செகண்டரி பள்ளிகளை ர்க்கார் பள்ளிகளுடன் இணைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அர ன் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** :

(அ) ஆம்.

(இ) இவ்விஷயம் பரிசீலனையிலிருக்கிறது.

**திரு. கே. விநாயகம்** : தலைவர் அவர்களே, இந்த ஜில்லா போர்டு பள்ளிகளிலும் நம்முடைய அரசாங்கப் பள்ளிகளிலும் பணி புரிகின்ற ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகிற ஊதியத்தில் வித்தியாசமும், அவர்களுடைய ஸீனியாரிடி, ப்ரமோஷன் ஆகிய விஷயங்கள் வரும்போதெல்லாம் பல சிக்கல்கள் ஏற்படுவதால், இந்தப் பரிசீலனை எப்பொழுது முடியும்? பரிசீலனை முடிந்தபிறகு, இந்தப் பள்ளிகளெல்லாவற்றையும் அரசாங்கப் பள்ளிகளாக எடுத்துக் கொள்வதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்** : தலைவர் அவர்களே, மாவட்ட வாரியப் பள்ளிகளை 1958-ம் ஆண்டிலிருந்து மாவட்ட வாரியங்கள் நிறுத்தப்பட்டு விட்டதற்குப் பிறகு அரசாங்கமே ஏற்றுக்கொண்டு நடத்தி வருகிறது. ஆனால், மாவட்ட வாரியப் பள்ளிகளுக்கு என்ன சட்ட திட்டங்கள் உள்ளனவோ அந்த விதியின் அடிப்படையில் தனியாக இயங்கின. 1—4—1966-இலிருந்து அவற்றை அரசாங்கமே ஏற்றுக்கொள்வது என்று முடிவு செய்தது. மாவட்ட வாரியப் பள்ளிகளையும் அரசாங்கப் பள்ளிகளையும் ஒன்றாக இணைக்கும் அத்தகைய முயற்சியில் 13—1—1970-இல் ஓர் அறிவிப்பை அரசாங்கம் வெளியிட்டது. 1—4—1966 வரையில்

மாவட்ட வாரிய உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரிந்த தலைமை
யாசிரியர்களுக்கும் மற்ற ஆசிரியர்களுக்கும் உள்ள ப்ரமோஷன்
மற்றவை பாதிக்கப்படாத அளவுக்குத் தனியாக வைத்து,
அரசாங்கப் பள்ளிகளில் இருக்கும் ஆசிரியர்கள், மற்றவர்களுக்குக்
கொடுக்கிற சம்பளச் சலுகை, லீவ் வசதி ஆகியவற்றை ஒருபடியாக
அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதற்கான
அறிக்கை வந்தபிறகு, தலைமையாசிரியர்கள் மற்றவர்கள்,
அதிலே சில சங்கடங்கள் இருக்கின்றன என்றும், அதற்குப்
பிறகு அமைக்கப்பட்ட அரசாங்கப் பள்ளிகள் மாவட்ட வாரிய
விதிகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டிருக்கின்ற காரணத்
தாலும் மாவட்ட வாரியப் பள்ளிகளில் இருக்கும் தலைமையாசிரியர்
கள் இதிலே இணைக்கப்பட்டிருக்கிற காரணத்தாலும் 1—4—1966
என்பதைக் கொஞ்சம் தள்ளிப்போட வேண்டும் என்று கேட்டுக்
கொண்டிருக்கிறார்கள். அதையும் பரிசீலிக்கும்படியாக இந்த
அரசு தெரிவித்திருக்கிறது. பேச்சுவார்த்தை நடந்து, இயக்குநர்
அவர்கள் தெரிவித்து, சுமுகமான அடிப்படையில் எந்த முடிவு
எடுக்கலாம் என்பதைப்பற்றி அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது.
விரைவில் அதுபற்றி முடிவு எடுத்து எல்லா ஆசிரியர்களுக்கும்
ஒரேபடியாக அமைப்பதற்கான சூழ்நிலைதான் மேற்கொள்ளப்பட்டி
ருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** தலைவர் அவர்களே, மாவட்ட
வாரிய உயர்நிலைப் பள்ளிகளை அரசு ஏற்றுக்கொண்டு நான்காண்டு
கள் ஆகின்றன என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அடுத்த
ஆண்டுக்குள்ளாகவாவது அவற்றை அரசாங்கப் பள்ளிகளோடு
இணைத்துவிடமுடியுமா? தமிழ்நாட்டில் எத்தனை செகண்டரி
பள்ளிகள் இருக்கின்றன? அரசாங்கப் பள்ளிகளோடு அவற்றை
இணைப்பதனால் அரசாங்கத்திற்குக் கூடுதலாக எவ்வளவு பணம்
செலவாகும் என்று அரசாங்கம் மதிப்பிட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே,
தமிழகத்தில் 2,500 உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அவற்றில்
700 தனியார்ப் பள்ளிகள் மாவட்ட வாரியப் பள்ளிகள் 1—4—1966
வரையிலும் இருந்தவை கிட்டத்தட்ட 1,500 ஆகும். 1—4—1966
லிருந்து மாவட்ட வாரியப் பள்ளிகளை அரசாங்கம் எடுத்துக்
கொண்ட காரணத்தாலும் அதுவரையில் அவற்றில் இருந்தவர்
களைத் தனியாக வைத்திருந்த காரணத்தாலும், அதற்குப் பிறகு
துவக்கப்பட்ட பள்ளிகளும் மாவட்ட வாரிய விதிமுறைகளின்
அடிப்படையில் துவக்கப்பட்டிருக்கிற காரணத்தாலும், அதிலும்
பல தலைமையாசிரியர்கள் சேர்க்கப்பட்டு வேலைக்கு அமர்த்தப்
பட்டிருக்கிறார்கள். அதிலே சில சிக்கல்கள் இருக்கின்றன என்று
அவர்கள் தெரிவிக்கிற காரணத்தால், உடனடியாக நடை
முறைக்குக் கொண்டுவராமல், மறுபடியும் பரிசீலனை செய்து அவர்
களுடைய பிரச்னைகளையெல்லாம் கருத்திற்கொண்டு ஒரு
சுமுகமான முடிவுக்கு வரவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்
கிறது. விரைவில் அதுபற்றிய முடிவு எடுக்கப்படும்.



**திரு. டி. மார்டின்:** மிஸ்டர் ஸ்பீக்கர் சார், இந்த மாவட்ட
போர்டு உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரிகின்ற ஆசிரியர்களை
கவர்ன்மென்ட் சர்வீசில் எடுத்துக்கொள்ளும் நேரத்தில் அவர்
களுடைய சர்வீஸ் பாதிக்கப்படாத அளவில் அவர்களை எடுத்துக்
கொள்ளும் உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே,
அதைத்தான் நான் குறிப்பிட்டேன். அவர்களுடைய வேலையில்
பாதகம் எதுவும் ஏற்படாத அளவுக்கும் கவனித்துக் கொள்வ
தோடு, அரசாங்கத்தோடு இணைத்தபோதிலும், அவர்களுடைய
சர்வீசைக் குறித்து ஒரு செபரேட் காடர் என்று போடுவது பற்றி
அதாவது தமிழ்நாடு எஜுகேஷன் ஸபார்டினேட் சர்வீஸ் (பி)
என்று போடுவதுபற்றிப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அவர்
களுடைய நிலைமைகள் முடிகின்ற காலம் வரையில் அதில்
இருப்பவர்களுக்கு தலைமையாசிரியர்களாவதற்கு இருபது, இருபத்
திரண்டு ஆண்டுக் காலம் ஆகும் என்கிறார்கள். செபரேட் காடர்
வைத்து, ஆனால், வசதிகள் மற்றவற்றைப் பொறுத்து ஒருபடியாக
வைக்கவேண்டும் என்கிற திட்டத்தின் அடிப்படையில்தான் பரி
சீலிக்கப்பட்டு வருகிறது. விரைவில் இதுபற்றி முடிவு எடுக்கப்
படும்.

**திரு. ஏ. சி. நரசிம்மன்:** தலைவர் அவர்களே, மாவட்ட வாரி
யத்தைச் சேர்ந்திருந்த பள்ளிக்கூடங்களை அரசாங்கம் எடுத்துக்
கொள்ளும்போது, மாவட்ட வாரியத்தில் கல்வி இலாக்காவில் பணி
யாற்றுகிறவர்களுக்கு அவர்களுக்குண்டான ஊதிய உயர்வுகள்
கொடுக்காமலும், அரசாங்க ஊழியர்களுக்குண்டான ப்ரமோஷன்
போன்றவை சரிவரக் கொடுக்காமலும் அவர்களை அரசாங்க ஊழி
யர்களாக எடுத்துக்கொண்டதாகச் சொல்லுகிறார்களே அது எந்த
அளவில் உண்மை என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே,
இந்தப் பிரச்சினையெல்லாம் ஆராயப்பட்டு, எந்தவகையிலும் அவர்
களுக்குப் பாதகம் ஏற்படாமலும், இரண்டையும் ஒன்றாக ஆக்கி
ஒருபடியாக்கும் திட்டத்தை நிறைவேற்றுவதற்காகத்தான் இப்
பொழுது பரிசீலனையில் இருந்துவருகிறது என்றேன். பரிசீலனை
முடிக்கப்பட்டதற்குப்பிறகு, தக்க முறையில் அறிவிப்பு வெளி
யிடப்படும்.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது:** போவைத் தலைவர் அவர்களே,
மாவட்ட வாரியப் பள்ளிகளை அரசு, கொள்கையளவில் அங்கீகரித்
தும் உடனடியாகச் செயல்படமுடியாத நிலையில் சிக்கல்கள் இருக்
கின்றன என்று அமைச்சரவர்கள் கூறுகிறார்களே, அந்தச் சிக்கல்
கள் என்ன என்ன என்பதை விளக்குவார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே,
அதுபற்றி முழு விவரங்கள் இல்லை. தனி சட்டதிட்ட விதிகளின்
கீழ் இருந்த காரணத்தாலும், அரசாங்கத்தில் பணிபுரிகின்றவர்

அறவே ஒழிக்கப்பட்டுவிட்டது. இப்போது 42 சிற்றூர்களில்தான் இது பரவி இருக்கிறது. அதனுல் பாதிக்கப்பட்டவர்கள் 365 பேர்கள்தான். அதையும் ஒழித்து விட முயற்சி மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. இதை அறவே ஒழிக்க பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் எல்லா ஊர்களுக்கும் தருவதன் மூலம் இந்நோயை ஒழிக்க முடியும் என்பது மேற்கொள்ளப்பட்டிருக்கிற முயற்சி யாகும்.

**திரு. இல. பலராமன் :** அமைச்சர் அவர்களின் பதிலில் இருந்து
வட ஆர்க்காடு மாவட்டத்தில் எந்தெந்தப் பகுதிகளில் இந்த
நரம்புச் சிலந்தி நோய் காணப்படுகிறது? இந்த நோய் வருவ
தற்குக் காரணம், அங்குள்ள மக்கள் அங்குள்ள குளம், குட்டை
களில் உள்ள தண்ணீரை அருந்துவதனுல்தான் ஏற்படுகிறது என்
பதை அரசாங்கம் உணர்கிறதா ? ஆகவே, அப்படிப்பட்ட தண்
ணீரைக் குடிக்காமல் இருப்பதற்காக அரசு என்ன நடவடிக்கைகளே
மேற்கொண்டிருக்கிறது? அந்தத் தண்ணீரில் டி.டி.டி. மருந்து
தெளிப்பதினுல்—டி.டி.டி. கலந்ததை அருந்துவதால் அது பாத
கத்தை விளைவிக்கும் என்று ஐ.நா. மூலம் ஒரு மாதத்திற்கு முன்
ஒரு அறிவிப்பு வந்திருந்ததே, அதைப்பற்றி அரசு என்ன கருது
கிறது ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** எந்தெந்த ஊர்களில்
என்ற தகவல் என்னிடம் இப்போது இல்லை. 1960-ல் இதனுல்
பாதிக்கப்பட்ட ஊர்கள் 1,653 என்றிருந்தது, இப்போது 42 ஆக
குறைத்துக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. 13,712 பேர்கள் இந்த
நோயினுல் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் அது இப்போது 365
என்ற அளவிற்குக் குறைக்கப்பட்டிருக்கிறது. இந்த நோய் பரவ
தூய்மையற்ற நீர்தான் காரணம் என்று அறியப்படுகிறது. ஆகவே
பாதுகாக்கப்பட்ட குடிநீரை எல்லாக் கிராமங்களுக்கும் வழங்கு
வதன்மூலம், அந்த முயற்சியை மேற்கொள்வதன்மூலம் கொஞ்ச
நஞ்சமுள்ள இந்த நோயையும் தீர்க்க முடியும் என்று அந்த
முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கிறது. 1971–72-க்குள்ளாக கூடுமான
வரையில் எல்லாக் கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர்
வசதி செய்துதர அதற்கு முதல் இடம் அளித்து அத்தகைய
முயற்சி மேற்கொள்ளப்படுவதாக இருப்பதால் இந்த நோயை
அறவே ஒழித்துவிட முடியும் என்று கருதப்படுகிறது. டி.டி.டி.
தெளிப்பதால் ஓரளவு பலன் ஏற்படுகிறது. அதனுல்தான் இந்த
நோய் 1960–70-க்கு இடையில் இந்தளவிற்குக் குறைக்கப்பட்டிருக்
கிறது. சிறிது இருக்கிற தன்மையையும் நாளாவட்டத்தில்
குறைத்துவிட முடியும் என்ற நம்பிக்கை இருந்து வருகிறது.

**திரு. எம். எஸ். மணி :** இந்த நரம்புச் சிலந்தி நோய் திருச்சி மாவட்டத்திலுள்ள உடையார்பாளையம், ஜெயம்கொண்டான் ஆகிய பகுதிகளில்தான் அதிகமாக வருகிறது. காரணம், அங்குள்ள ஏரித் தண்ணீரை மக்கள் அருந்துகிற காரணத்தால் இது வாய் வழி யாகவும், உடம்பு வழியாகவும் இந்த நோய் பரவி மனிதனுக்கு





தொந்தரவு கொடுக்கும் நிலை ஏற்படுகிறது. ஆகவே இந்த நோயை ஒழிப்பதற்காக அங்கு பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வசதியைப் பெருக்குவதற்காக அரசிடம் ஏதாவது திட்டம் உண்டா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** முதலில் டி.டி.டி. தெளிப்பதன்மூலம் இது தடுக்கப்படுகிறது. நீரை ஓரளவிற்குத் தூய்மைப்படுத்தித் தருகிற முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் தருவதன்மூலம் இதை அறவே ஒழிக்கமுடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அதற்கான திட்டங்கள் போடப்பட்டு வருகின்றன. உடையார்பாளையம் தாலுகாவைப் பொறுத்தவரையில் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா என்ற தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துத் தரலாம்.

### சடையம்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளி.

* 351 வினு—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் வட்டத்திலுள்ள சடையம்பட்டி அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கான கட்டடம் கட்டும் திட்டம் எந்நிலையிலுள்ளது ?

(இ) எப்பொழுது கட்டப்பெறும் ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) இதற்கான திட்டம் இப்பொழுது இல்லை. இந்தப் பள்ளிக்கு அதிகக் கட்டடங்களுக்கான அவசியத்தை ஆராயும்படி பள்ளி கல்வித் துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். அவர் தகுந்த நடவடிக்கைகள் எடுப்பார்.

**புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமயம் வட்டத்திலுள்ள சடையம்பட்டி அரசினர் உயர்நிலைப் பள்ளி பல ஆண்டுகளாக கட்டட வாய்ப்பு இல்லாதிருப்பதால் மாணவர்களின் நலனைக் கருதி விரைவில் கட்டட வாய்ப்பு அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பல்வேறு பள்ளிக்கூடங்கள் இப்படி கட்டட வசதியில்லாமல் இருந்து வருகின்றன. இந்தக் குறிப்பிட்ட பள்ளியின் வரைவுத் திட்டம் இயக்குநரிடமிருந்து வரவில்லை. இயக்குநரிடம் கேட்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ஆராய்ந்து நிலைமையை அறிந்து அதற்கேற்றபடி வரைவுத் திட்டத்தை அனுப்புவார்களானுல் அது கவனிக்கப்படும். இப்போது இயக்குநர் அவர்கள் அளவில் அது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

போட்டிருக்கிறது. அது பற்றி ஆராய்ச்சி நடத்தப்பட்டதா? சர்வே செய்யப்பட்டதா ? அந்த இடத்திலே என்ன அகப்பட்டது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நம்முடைய ஜியாலில் துறை நடத்திய ஆராய்ச்சியில் திருப்பத்தூர் அருகிலுள்ள சவத்தூர்-கொரட்டி கிராமங்களில் இதுபோன்ற பொருள்கள் ஓரளவுக்குக் கிடைப்பதாக ஒரு தகவல் கிடைத்தது. ஆனால் இது குப்பம் என்ற இடத்திலே என்று ஒரு தவறான தகவல் பத்திரிகையில் வெளி வந்தது. ஆனால் இந்த இடத்திலே கிடைப்பதைப்பற்றி நமக்குத் தேவையான அளவுக்கு, எக்கனாமிக்கலாக, யூஸ் பண்ணக் கிடைக்குமா என்பதுபற்றி ஆராய்ச்சி நடத்த வேண்டியிருக் கிறது.

## பல்புகள் உற்பத்தி

* 357 வினா—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

பல்பு உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை ஏற்று நடத்த அரசாங்கத்தில் ஏதேனும் திட்டம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** இல்லையென்றால், பல்புகளின் எண்ணிக்கையை அதிகமாகத் தருவதற்காக, திரும்பவும் பரிசீலித்து, இந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கேள்வி, பல்பு உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை ஏற்று நடத்த அரசாங்கத்தில் ஏதேனும் திட்டம் இருக்கிறதா என்று. இல்லை என்று சொன்னேன். தனியார் துறையில், கல்கத்தாவிலுள்ள ஒரு கம்பெனிக்காரர், இங்கே வந்து 6 மில்லியன் பல்பு உற்பத்தி செய்யத் தொழிற்சாலைக்கு அனுமதி கேட்டிருக்கிறார். நாம் சிபாரிசு செய்து இருக்கிறோம். அண்மையில் நானும், கனம் முதலமைச்சரவர்களும், யூனியன் தொழில் அமைச்சரைப் பார்த்தபொழுது, இந்தத் தொழிற்சாலைக் குக் கூடிய விரைவிலே அனுமதி தரலாம் என்று கூறினார்கள்.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கல்கத்தா நிறுவனத்தார் பல்புகள் மட்டும் உற்பத்தி செய்வதற்கு ஒத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஏனைய பொருள்களும் தமிழக மின்சார வாரியத்திற்கு இப்பொழுது தட்டுப்பாடு உள்ளது. ஆகவே, வேறு பொருள்களையும் கல்கத்தா நிறுவனத்தார் உற்பத்தி செய்து தருமாறு இந்த அரசு கேட்டுக் கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எந்தெந்தப் பொருள்கள் நமக்குத் தேவையாக இருக்கின்றனவோ அவைகளை யெல்லாம் உற்பத்தி செய்வதற்குத் தொழிற்சாலைகள் தொடங்கவும்





**திரு. கே. போஜன் :** தற்சமயம் மின்சார வாரியம் நிர்வகித்து வரும் கிராமப் பகுதிகளில் உள்ள சாலைகளிலும், வீதிகளிலும் உள்ள விளக்குகள் அடிக்கடி கெட்டுப் போகின்றன. காரணம், வெளி மாநிலங்களிலிருந்து வாங்கும் பல்புகள் நல்ல தரம் உள்ளவை கள் அல்ல என்று கூறப்படுகிறது. ஆதலால் நம்முடைய அர சாங்கம் தனியாக மின்சாரத் துறையில் பல்புகள் உற்பத்தி செய்யும் பாக்டரி ஒன்றை நிறுவி, அதன் மூலம் நல்ல தரமான பல்புகளை உற்பத்தி செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஸ்குரு பல்புகள் கிடைக்க வில்லை என்பதுதான் இதற்குக் காரணம். அந்த பல்புகள் இப் பொழுது பங்களூரில் செய்கிறார்கள். அதை இங்கேயே செய்ய வேண்டும் என்று ஒரு முயற்சி எடுத்து, மின்சார வாரியத்தின் மூலம் இதற்கான ஆராய்ச்சி நடத்தப்பட்டது. மின்சார வாரியத் திற்குத் தேவையான ஒரு லட்சம் பல்புகளை உற்பத்தி செய்வதற்கு மட்டும் ஒரு தொழிற்சாலையை நடத்த முடியாது என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம். ஆகவே, மேற்கு வங்காளத்தில் கல்கத்தாவிலுள்ள தொழிற்சாலையின் ஒரு பகுதியாக இங்கே ஒரு தொழிற்சாலையைத் தொடங்கினால், அவர்களை பல்புகள் உற்பத்தி செய்யக்கூடிய முயற் சியை எடுக்கச் சொல்லலாம் என்ற எண்ணம் அரசாங்கத்தினிடம் இருக்கிறது.

## இளையாங்குடி ஊராட்சி ஒன்றியத்துக்கு சாலை வசதிகள்

* 358 வினா—திரு. வீ. மலைக்கண்ணன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் பாதை வசதியே இல்லாத இளையாங்குடி ஊராட்சி ஒன்றியத்தில், பாதை வசதி செய்யும் பொருட்டு, சுமார் 18 லட்ச ரூபாய்க்கு (Master Plan( சிறப்புத் திட்டம் தீட்டி, சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன் தமிழக அரசுக்கு அனுப்பப்பட்டதா ?

(இ) அத் திட்டத்தை மத்திய அரசு உதவியோடு செயல் படுத்தும் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) & (இ) ஆம். கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சாலைகள் இளையாங் குடி ஒன்றியத்திலுள்ள சாலைகள் உள்ளிட்ட மேம்பாட்டிற்கென 1967-ல் நெடுஞ்சாலைத்துறைத் தலைமைப் பொறியாளர் ரூ. 1 கோடி செலவில் ஒரு சிறப்புத் திட்டம் தீட்டி அரசின் ஒப்புதலுக்கு அனுப் பினார். செலவு அதிகமானதாலும் நிதி பற்றுக்குறை காரணமாக வும் மேற்படி திட்டம் நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப் படவில்லை. ஆனால் நிதிநிலையைப் பொறுத்தும் பல்வேறு திட்டங் களின் முதன்மையையும் தாரதா அவசர அவசியத்தைக் கருத்தில் கொண்டும் மேற்படி பகுதி மக்களின் தேவைகள் பரிசீலிக்கப்பட்டு அவ்வப்போது அரசு ஒப்பளிக்கும் திட்டங்களில் சேர்க்க அரசு வகை செய்யும்.

களுக்கு தனி விதிமுறைகள் இருப்பதாலும், அவர்களைக் கொண்டு வந்து சேர்ப்பதில் ஸீனியாரிடி, ஜூனியாரிடி எல்லாம் வருகின்றன. ஆகையால், அவர்களுக்கு 'செபரேட் காடர்' என்று தனியாக வைத்து, அவர்களுக்குப் பாதகம் ஏற்படாமலும், அதேசமயத்தில் அரசாங்கத்தில் பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்குக் கிடைக்கக்கூடிய வசதிகள் வாய்ப்புகள், சர்வீஸ் கண்டிஷன்கள், லீவ் வசதி ஆகியவை இவர்களுக்கும் பொருந்தக்கூடிய வகையில் அமைக்கவேண்டும் என்பது நோக்கம். இரு சாராருக்கும் பாதகம் ஏற்படாத அளவுக்கு என்ன செய்யவேண்டும் என்பதுதான் பரிசீலனையில் இருக்கிறது. இன்றைக்கு அதில் சில நிர்ப்பந்தங்கள் இருக்கின்றன உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டால் என்று தெரிவித்ததற்கிணங்க அதை மீண்டும் பரிசீலிக்கும்படியாக இயக்குநர் அவர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். தலைமையாசிரியர்களுடைய சங்கத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளோடு இயக்குநர் அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள். அவருடைய அறிக்கை வந்தபிறகு அதுபற்றி ஒரு திட்டவட்டமான முடிவு எடுப்பதன் மூலம் யாருக்கும் பாதகம் ஏற்படாமலும், வசதிகள் ஒருபடியாக இருக்கும் நிலையை உண்டாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**திரு. சி. கோவிந்தராஜன்:** 1—4—1966 முதல் அந்தப் பள்ளிக்கூடங்களையெல்லாம் அரசாங்கம் எடுத்துக்கொண்ட பிறகு சில சிக்கல்கள் இருப்பதாக அமைச்சரவர்கள் கூறுகிறார்கள். அந்தச் சிக்கல்களெல்லாம் முடிவுற்றபிறகு அரசாங்கமே முழு அளவுக்கு எடுக்கக்கூடிய அளவில் வரும்போது, 1—4—1966 அன்றிலிருந்து ரிட்ராஸ்பக்டிவ் எஃபெக்ட் கொடுத்து எல்லாவிதமான சலுகைகளும் அந்தத் தேதியிலிருந்து கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அது கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். 1—4—1966 வரையில் மாவட்ட வாரியப் பள்ளிகள் இருந்துவந்தன. அதற்குப் பிறகு துவக்கப்பட்ட பள்ளிகள் எல்லாம் மாவட்ட வாரிய விதிமுறைகளையொட்டி துவக்கப்பட்டதனால் மாவட்ட வாரியப் பள்ளிகளில் இருந்த தலைமையாசிரியர்கள் பலரும் அதன்படி வேலைசெய்கிறார்கள். 1—4—1966 இலிருந்து என்று வைக்கவேண்டாம், எப்பொழுது உத்தரவு வருகிறதோ அந்தக் காலம் வரையிலும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று அவர்கள் கோரிக்கையில் தெரிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இப்பொழுது பரிசீலனை இருந்து வருகிறது. அந்தப் பரிசீலனைக்குப் பிறகு எந்தப் பாதகமும் ஏற்படாத வகையில் செய்யவேண்டும் என்பது முக்கிய நோக்கமாகும். எந்தவித பாதகமும் ஏற்படாமலும் அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகள், வாய்ப்புகள், வசதிகள் அத்தனையும் கிடைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். ரிட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுக்கவேண்டி வருமா, வராதா என்பது யோசிக்க வேண்டிய விஷயம்.



## நரம்புச் சிலந்தி நோய்

* 350 வினா திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1968–69-ம் ஆண்டில் மாநிலத்தில் எப்பகுதியில் நரம்புச் சிலந்தி நோய் ஏற்பட்டது?

(இ) இந்நோயை அறவே நீக்கிட அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** (அ) 1968–69-ஆம் ஆண்டில் (ஏப்ரல் 1968 முதல் மார்ச் 1969 வரை) தென்னார்க்காடு, திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, வடஆர்க்காடு, தர்மபுரி, கோயம்புத்தூர் முதலிய மாவட்டங்களில் சில இடங்களில் நரம்புச் சிலந்தி நோய் காணப்பட்டது.

(இ) இந்நோயை அறவே ஒழித்திட சுகாதார இலாகா வாயிலாக "நரம்புச் சிலந்தி ஒழிப்புத் திட்டம்" 1960-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், கிராமங்களின் குடி நீர் நிலைகளில் டி.டி.டி. ( D.D.T ) மருந்து கலக்கப்படுகிறது. இத்திட்டம் நல்ல பயனை அளிப்பதன் காரணமாக இந்நோய் படிப்படியாகக் குறைந்து தற்போது சேலம், இராமநாதபுரம், தஞ்சாவூர், செங்கற்பட்டு முதலிய மாவட்டங்களில் அறவே ஒழிக்கப்பட்டுள்ளது.

**திரு. என். கிட்டப்பா:** இந்த நரம்புச் சிலந்தி நோயைத் தடுப்பதற்கு தமிழ்நாட்டில் தனியாக மருத்துவமனைகள் ஏதாவது ஏற்படுத்தப்பட்டுள்ளதா? அதேபோல் சித்தவைத்தியத்தின்மூலம் இந்த நோயை முழுவதுமாகக் குணமாக்கிவிடலாம் என்று கூறப்படுகிறதே, அதைப்பற்றி அரசாங்கம் ஏதாவது ஆலோசனை செய்ததா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இதற்காக தனியாக மருத்துவ மனைகள் ஏற்படுத்தவேண்டிய அவசியம் இல்லை. இது பொதுச் சுகாதார அமைப்பின்கீழ் செய்யப்பட வேண்டிய பணியாக இருக்கிறது. 1960-ல் இருந்து படிப்படியாக இந்த நோய் குறைக்கப்பட்டு இருக்கிறது. இந்த நோய் ஒழிக்கப்படுவதற்குள்ள ஒரே ஒரு வழி பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீரை எல்லா ஊர்களுக்கும் வழங்குவதன்மூலம் இந்த நோயைப் போக்க முடியும். 1960-ல் இந்த நரம்புச் சிலந்தி நோயால் 1,653 கிராமங்கள் பாதிக்கப்பட்டிருந்தன. அதன் காரணமாக 13,712 பேர்கள் இந்த நோயால் பாதிக்கப்பட்டிருந்தார்கள். அது படிப்படியாகக் குறைக்கப்பட்டு 1969-ல் 42 ஊர்களில்தான் இந்த நோய் இருந்து வருகிறது. அதனால் பாதிக்கப்பட்டவர்கள் 365 பேர்கள்தான். ஆகவே விரைவில் அந்த நோயை ஒழித்துவிட முடியும் என்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. நான் முதலில் குறிப்பிட்டபடி, இந்த நோய் சேலம், இராமநாதபுரம், தஞ்சாவூர், செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில்

### ஆர். பாலக்குறிச்சிப் பகுதிக்குப் பாசன வசதிகள்

* 359 வினா.—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருமயம் தொகுதியிலுள்ள ஆர். பாலக்குறிச்சிப் பகுதியில் அமைந்துள்ள பேயன் ஊற்றையும், சக்கம்மா கேணியையும் சீர்படுத்தி பெருமளவில் வேளாண்மைக்குப் பயன்படுத்தச் செய்யும் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

(இ) இன்றெனில், உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) & (இ) திருமயம் வட்டம், ஆர். பாலக்குறிச்சிப் பகுதியில் மண் குழாய்க்குப் பதிலாக பேயனூத்துவாரிக்குக் குறுக்கே அணைக்கட்டு கட்டும் செயற்குறிப்பு ஒன்று உள்ளது. சக்கமா கேணியைச் சீரமைப்பது தேவையில்லை எனத் தெரிவதால், அக் கேணியை மேம்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**புலவர் பொ. பொன்னம்பலம்:** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேயன் ஊற்றுத் திட்டம் எப்பொழுது தொடங்கி நிறைவுறும் என்பதை அறிவிக்க இயலுமா என்று அறிய விழைகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இந்தத் திட்டம் குறித்தும், உணவு உற்பத்தி மதிப்புக் குறித்தும், மாவட்ட ஆட்சித் தலைவரின் இசைவுக்காக நிர்வாகப் பொறியாளர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எழுதியிருக்கிறார். மாவட்ட ஆட்சித் தலைவரின் இசைவைப் பெற்ற பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

### மாநிலங்களுக்கிடையே பேருந்துப் பணி

* 360 வினா.—திரு. டி. மார்டின்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையையும் திருவனந்தபுரத்தையும் இணைக்கும் வகையில் மாநிலங்களுக் கிடையே வசதியான பேருந்துப் பணி ஒன்றைத் தொடங்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆமெனில், அதுகுறித்த விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. டி. மார்டின்:** மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார், தற்சமயம் சென்னைக்கும் திருவனந்தபுரத்திற்கும் போக வேண்டிய பிரயாணிகள் ரயிலில் மிகவும் கஷ்டப்பட்டு நின்று கொண்டு பிரயாணம் செய்ய



வேண்டிய நிலைமை இருப்பதனால், அதை மனதில் கொண்டு, நதிநீர் பங்கீட்டில் எப்படி சுலபமாக பிரச்னையைத் தீர்த்து வைத்ததோ தமிழக அரசு அதே போன்று, கேரள சர்க்காருடன் பேசி, இந்தப் பிரச்னைக்கு முடிவு கண்டு டீலக்ஸ் பஸ் விடுவதற்கு இனிமேலாவது இந்த அரசாங்கம் முயற்சி மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** சென்னைக்கும் திருவனந்தபுரத்திற்கும் இடையே தூரம் 470 மைல், பிரயாண நேரம் 20 மணி என்று சொல்லப்படுகிறது. தற்பொழுது இது பற்றிய செயற்குறிப்பு ஒன்றுமில்லை. கனம் உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்தை மனதில் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** சென்னைக்கும் நாகர்கோவிலுக்கும் இப்பொழுது நேராக பஸ்போக்குவரத்து இல்லை. திருச்சியில் இறங்கி, இன்னொரு பஸ்ஸில் செல்ல வேண்டியிருக்கிறது. ஏற்கனவே இருந்த அரசு சென்னைக்கும் நாகர்கோவிலுக்கும் ஒரே பஸ், அதுவும் வசதி நிறைந்த பஸ் விடுவது என்று ஒரு திட்டம் வைத்திருந்தது. அந்தத் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது. இந்த அரசு அதை நிறைவேற்றுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அதைப்பற்றிய தகவல் என்னிடம் இல்லை. ஆனாலும், கனம் உறுப்பினரின் கேள்வி கவனத்தில் கொள்ளப்படும்.

### காஞ்சீபுரத்துக்குப் பேருந்து வசதிகள்

* 361 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்ட தலைநகர் காஞ்சிபுரத்திற்கு மாற்றப்பட்டு விட்டதால் மாவட்டத்திலுள்ள பல ஊர்களிலிருந்து போதுமான பஸ்கள் விட உத்தேசமுண்டா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** செங்கற்பட்டு மாவட்டத் தலைமையிடத்தைக் காஞ்சிபுரத்துக்கு மாற்றிய பிறகு, தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை காஞ்சிபுரத்துக்கும் காஞ்சீபுரம் வழியாகவும் மூன்று புதிய வழித்தடங்களை இயக்குகிறது. அத்துடன் தனியார் பேருந்து முதலாளிகள் மூவர் காஞ்சிபுரத்தைத் தொட்டுச் செல்கிற வகையில் மூன்று வழித்தடங்களில் பேருந்துகள் விடுகின்றனர். இவையன்றி, மேலும் பதினொரு வழித்தடங்களுக்கு தனியார் பேருந்து முதலாளிகளுக்கு அனுமதிச் சீட்டுகளை வழங்குவது பற்றி போக்குவரத்து ஆணையாளர் ஆலோசித்து வருகிறார்.

[1970 மார்ச் 13

## மதுரையிலுள்ள பார்வையற்றோர் புனர் வாழ்வு நிலையம்

* 352 வினா—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையிலுள்ள பார்வையற்றோர் புனர்வாழ்வு நிலையம் எந்த வெளி நாட்டு உதவியுடன் நடத்தப்படுகிறது?

(இ) எந்த அடிப்படையில் பார்வையற்றோர் அங்கு சேர்க்கப் படுகின்றனர்?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) மதுரை குருடர்களுக்கு மறு வாழ்வளிக்கும் நிலையம், அமெரிக்க அரசு சமூக மறு வாழ்வளிப்புப் பணித்துறையின் (சுகாதாரம், கல்வி, தொழில் துறை நல, மறு வாழ்வளிப்பு நிர்வாகம்) உதவியுடன் செயல்பட்டு வருகிறது.

(இ) 18 வயதுக்கு மேற்பட்ட ஆனால் 40 வயதுக்குக் குறைவான பார்வையிழந்த ஆண், பெண் இருபாலாரும் மதுரை குருடர் மறுவாழ்வளிப்பு நிலையத்தில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். அவர்களது திறமையைப் பரிசோதித்த பின்னர், அங்கு அவர்களுக்குத் தொழிற்பயிற்சி அளிக்கப்படுகிறது.

**திரு. பி. எஸ். மணியன் :** 18 வயதுக்கு குறைவானவர்களை அந்த நிலையத்தில் சேர்ப்பதற்கு அரசு ஆவன செய்யுமா? அதோடு, இப்போது பரிசுச் சீட்டிலிருந்து வரும் வருமானத்தை பயன் படுத்தி இதுபோன்ற புனர்வாழ்வு நிலையங்கள் ஒவ்வொரு தாலுகாவிலும் ஒவ்வொரு இடத்திலும் அமைப்பதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இந்த அமெரிக்க நிறுவனம் மதுரையில் வைப்பதற்கு மட்டும்தான் தந்திருக்கிறார்கள். அதைக்கூட நிறுத்திவிடும் நிலைமை இருக்கிறது. இன்னும் சில ஆண்டுகளுக்கு அந்த உதவியைத் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறது இந்த அரசாங்கம். நெசவுத் தொழில், பிரம்பு நெய்தல், தையல் போன்றவை ஆண்கள், பெண்கள் இருசாராருக்கும் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. 18-ல் இருந்து 40 வயதுக்கு உட்பட்டு இருப்பவர்களைத்தான் ஓரளவு சேர்ப்பதற்கு வசதி வாய்ப்பு இருப்பதால் அதற்குக் கீழே கொண்டு வந்து அதிக இடங்களை ஒதுக்க வாய்ப்பிருக்காது. ஆகவேதான் குறிப்பிட்ட வயது என்று குறிக்கப்பட்டிருக்கிறது. நிதி வசதி பெருகியிருக்குமானால் வயதைக்கூட தளர்த்திவிடலாம். ஆனால் இப்போது இந்த நிபந்தனையின் அடிப்படையில் கொடுக்க வேண்டுமென்று அந்த நிறுவனம் சொல்லியிருப்பதால் 18-ல் இருந்து 40 வயதுக்கு உட்பட்டவர்கள்தான் எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள்.

**திரு. அ. லெ. சுப்ரமணியம் :** விழி ஒளி இழந்தவர்களுக்கு பாளையங்கோட்டையில் பல்லாண்டுகளாக ஒரு பள்ளிக்கூடம் இருந்து வருகிறது. அதில் சிலர் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுகூட



1970 மார்ச் 13]

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) வட ஆற்காடு கூட்டுறவு சர்க்கரை ஆலை, ஆம்பூர், கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை, மூங்கில்துறை பட்டு; சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, மோகனூர் சர்க்கரை ஆலை.

(இ) பல துறைகளிலுள்ள இளம் அதிகாரிகள் தொழில் நிறுவனங்களின் நிர்வாகத் திறமையில் தேர்ச்சி பெற வேண்டும் என அரசு விரும்புகிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை ஏற்படுத்தியதற்குக் காரணமே, ஏற்கெனவே நல்ல முறையிலே நடந்து கொண்டிருந்த அந்தச் சர்க்கரை ஆலைகளிலே நிர்வாகம் மோசமான அளவுக்குப் போனதால்தான் அந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அது உண்மையா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் போனால் நல்ல நிர்வாகம் நடக்கும் என்று அங்கத்தினர் ஒப்புக் கொண்டதற்கு நன்றி.

## குப்பம் பகுதியில் உரேனியம், தோரியப் படிவங்கள்

* 356 வினா—**திரு. ஆர். கருப்பையா :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வட ஆற்காடு மாவட்டம் குப்பம் பகுதியில் அணுசக்திக்குத் தேவையான உரேனியம், தோரியம் கிடைப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதா?

(இ) இதனை எடுக்க அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகள் யாவை?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஆர். கருப்பையா :** தலைவரவர்களே, அணுசக்திக்குத் தேவையான உரேனியம் போன்ற பொருள்கள் திருச்சி மாவட்டத்தில் அரியலூருக்கும் கீழப்பழுவூருக்கும் இடையே கிடைப்பதாகச் செய்தி வந்தது. அப்படிக் கிடைக்கும் அந்தப் பொருள்கள் உண்மையானவைதானா என்று கண்டு பிடிக்க, ஒரு கமிட்டியையோ அல்லது அதிகாரிகளையோ நியமித்து ஆவன செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கேள்வி, வட ஆற்காடு மாவட்டத்தைப் பற்றியது. திருச்சி ரொம்ப தூரம். திருச்சியைப் பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரலாம்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவரவர்களே, கேள்வி வட ஆற்காடு பற்றியது என்று சொன்னார்கள். அந்தக் குப்பத்திலே அணுசக்திக்கு வேண்டிய உரேனியம் கிடைக்கிறதா என்று கேள்வி

திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனார் : தலைவர் அவர்களே, விவசாய பம்பு செட்டுகளுக்கு 1968-69-ல் கொடுக்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு, 1969-70-ல் எவ்வளவு? குறைவு இருந்தால் அதற்கான காரணம் என்ன, அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன, என்பவற்றைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, பம்பு செட்டுக்கு, கிணற்றுக்கு எவ்வளவு கொடுக்கப்பட்டது என்பதற்கு கணக்கு கைவசம் இல்லை. ஆனால், மொத்தம் எவ்வளவு கொடுக்கப்பட்டது என்பதற்கு கணக்கு இருக்கிறது. 1966-67-ல் மொத்தம் விவசாயிகளுக்கு, மத்திய நில அடைமான வங்கி, வட்டார வங்கிகள் மூலம் கொடுக்கப்பட்டது 3 கோடி ரூபாய். இந்த வருஷம், 1969-70-ல் வழங்கப்படுவது 16½ கோடி ரூபாய்.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister how many applications have been disposed of within the number of days prescribed, viz., 30 days and 33 days?

THE HON. THIRU SI. PA. ADITANAR : The disposal of the applications is done at the primary level. Everything depends upon how quickly the primary banks dispose of the applications. What the Government does is to guarantee the amount and send the money over to the State Land Development Bank. We have already arranged to send this year Rs. 16½ crores. There is not enough offtake from the primary land development banks. If our learned friend will use his influence and ask the primary banks to utilise those moneys, it will be possible to distribute the moneys in hand now.

வீட்டுவசதி வாரியம் கையகப்படுத்திய நிலங்கள்

■366 வினா—திரு. கொளத்தூர் கோதண்டம் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) State Housing Board சென்னை, மதுரை, கோவை ஆகிய இடங்களில் நிலம் ஆர்ஜிதம் செய்த பிறகு, அதை எதிர்த்து நீதி மன்றங்களில் நிலச் சொந்தக்காரர்கள் வழக்குப் போட்டிருக்கின்றனரா?

(இ) ஆம் எனில், எத்தனை பேர்?

(உ) வழக்கு மன்றங்களில் நிலச் சொந்தக்காரர்களுக்கு சாதகமாக தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகள் எத்தனை?

(எ) அந்த தீர்ப்புகளை எதிர்த்து அப்பீல் செய்யப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) ஆம்.

(இ) 274 வழக்குகள்.

(உ) 13 வழக்குகள்.





(எ) ஒரு வழக்கில் உயர்நீதி மன்றத்தில் அப்பீல் செய்யப்பட்டது. ஆனால், அது தள்ளுபடியாகிவிட்டது. எஞ்சின 12 வழக்குகளில் அப்பீல் செய்யவேண்டியதில்லை என்று அரசு முடிவு எடுத்துள்ளது.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, இந்த சம்பந்தப்பட்ட வழக்குகளில் அதிகமான பணம் நிலச்சொந்தக்காரர்களுக்குக் கொடுக்கப்படவேண்டுமென தீர்ப்பு வழங்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறதே, அப்படியிருந்தால் அதன் மேல் அப்பீல் செய்யாததற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : தலைவர் அவர்களே, இதிலே இரண்டு விதமான வழக்குகள் இருக்கின்றன. ஒன்று நிலத்தை ஆர்ஜிதம் செய்யக் கூடாது என்பதற்காக வழக்குப் போடுகிறார்கள். மற்றொன்று, கொடுக்கின்ற கிரயத்தொகை போதாது என்று வழக்கு. அதில் கிரயத் தொகை போதாது என்று சொல்வதற்குக் காரணம், அந்த நிலங்களை எடுத்துக் கொண்டு, அதை பிறருக்கு மனைக்கட்டுகளாக, அதிகத் தொகைக்கு விற்கிறார்கள் என்பது. அதனால் நிலச் சொந்தக்காரர்கள், நம்மிடம் குறைந்த தொகைக்கு எடுத்துக்கொண்டு, அதிகமான தொகைக்கு விற்கிறார்கள், ஆகையினால் அந்தப் பணத்தை நமக்கே தரவேண்டும் என்று வழக்குப் போடுகிறார்கள். அதற்குக் காரணம், நிலத்தை ஒரு 100 ஏக்கரை நில ஆர்ஜிதம் செய்யப்படுகிறது என்றால், அதில் 60 ஏக்கர் கிரௌண்டுகளாகவும், பாக்கி 40 ஏக்கர் பள்ளிக்கூடங்கள், பூங்காக்கள், ரோடுகள், இப்படிப்பட்ட பொதுக் காரியங்களுக்கும் ஒதுக்கப்பட்டுவிடுகிறது. ஆகவே, இந்த 40 ஏக்கர் தொகையையும் அந்த 60 ஏக்கரில் வாங்க வேண்டியிருக்கிறது. அது வல்லாமல் ரோடு போடும் செலவு, நிலத்தை ஒப்பிடும் செலவு, லைட் செலவு, மற்ற வசதிகள் செய்யச் செலவு என்று செய்ய வேண்டியிருப்பதால் அதிகத் தொகைக்குக் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. குறைவான நிலக்கிரயம் என்றால் அப்பீல் செய்யலாம் என்றிருக்கிறது. ஆகவே, நிலச் சொந்தக்காரர்களும் அதிகமான தொகை வேண்டும் என்று வழக்கு போடுகிறார்கள்.

THIRU T. MARTIN : Sir, in the High Court a number of land acquisition cases—whether they are writ petitions or first appeals—are pending for a long time, even from 1965 onwards. So may I request the HON. Minister to state whether any direction has been given by this Ministry to the Government Pleader to expedite the disposal of these land acquisition cases and if not, whether the Government will come forward to issue such a direction for expediting the cases pending in the High Court?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத்திலே இருக்கும் லேண்ட் அக்விசிஷன் வழக்குகளையெல்லாம் உடனடியாக விசாரிக்க வேண்டும் என்ற குறிப்பு அரசாங்கத்தின் சார்பிலே அனுப்பப்பட்டிருக்கிறது. எத்தனை வழக்குகள் இருக்

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** தலைவர் அவர்களே, மக்க ளுடைய தேவைகளை அனுசரித்து, இனிமேலாவது, திட்டம் தயாரித்து அனுப்பினால் அதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** நிர்வாக அதிகாரியிடம் மாவட்டத் தலைவர் கேட்டிருந்த செயற்குறிப்பு அரசுக்கு விரைவில் தரவேண்டும் என்று கேட்டிருப்பதாக நெடுஞ்சாலைத் தலைமை பொறியாளர் கருத்தினைத் தெரிவித்திருக்கிறார். உயிர் காப்பு நிதிக் குழுவின் சார்பாக கடனைப் பெற்று, அந்தத் திட்டத்தின் கீழ் தென் ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் மரக்காணம் போன்ற பேரூ ராட்சிக்கு ரூ. 3 லட்சம் ஒதுக்கீட்டில் புதுத் திட்டத்தை அனுப்பி இருக்கிறார்கள். தலைமைப் பொறியாளர் திட்டச் செயற்குறிப்பு அனுப்பும்படி கேட்கப்பட்டிருக்கிறார்.

காளியாகுடி ஊராட்சிக்கு தெரு விளக்குகள்

*** 364 வினா.—திரு. பி. ஜெயராஜ் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) நன்னிலம் தாலுக்கா, காளியாகுடி பஞ்சாயத்தைச் சேர்ந்த கிராமங்களுக்குத் தெரு விளக்கு போடுவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் என்றால், எப்போது?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) & (இ) நன்னிலம் தாலுக்கா, காளியாகுடி ஊராட்சியைச் சேர்ந்த கிராமங்களுக்கு தெருவிளக்கு வசதி விரிவுபடுத்தும் வேலைகள் எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளன. விளக்குக் கம்பங்கள் இப்போது நடப்பட்டு வரு கின்றன. இந்த வேலைகள் விரைவில் முடிக்கப்படும்.

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி :** தலைவர் அவர்களே, இந்த ஊராட்சிக் கிராமங்களுக்கு தெருவிளக்குப் போடும்போது, ஊராட்சி எல்லைக்குட்பட அரிசனத் தெருக்களுக்கும் லைட் போட வேண்டியவைகையும் சேர்த்துக் கணக்கிட்டாலும், லைட் போட போடுவது கிடையாது. லைட் போடும்போது, அரிசனத் தெருக் களுக்கும் போட வேண்டும் என்று அரசு உத்தரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தலைவர் அவர்களே, கேள்வி நன்னிலம் தாலுகா காளியாங்குடி ஊராட்சியைச் சேர்ந்த கிராமங் களுக்கு தெரு விளக்குப் போடுவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா என்பது. இதற்கும் துணைக் கேள்விக்கும் தொடர்பு இல்லை என்றாலும், கூடுமான வரையில் கிராமத்தில் இருக்கக்கூடிய எல்லாத் தெருக்களுக்கும் மின்சாரம் கொடுக்க வேண்டும் என்பதுதான் திட்டம். அதிலே முக்கியமாக தாழ்த்தப்பட்டவர்கள் வாழும் பகுதி களுக்குச் சலுகை கொடுத்து மின்சாரம் வழங்கத் திட்டங்கள் மேற் கொள்ளுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. துறை ஏதாவது நேரடியாக அது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால், பரிசீலிக்கப்படும்.





நிலவள வங்கிகளிலிருந்து கடன் பெறுதல்

*** 365 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு நில அடமான வங்கிகளின் மூலம் கடன் பெறுவதில் அதிகக் காலதாமதம் ஏற்படுவதாக அரசுக்கு மக்களிட மிருந்து முறையீடு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனின், காலதாமதத்தைத் தவிர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்னென்ன ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) ஆம்.

(இ) விவசாயிகளிடமிருந்து ரூ. 10,000-த்திற்கும் அதற்குக் குறைவாகவும் கடன் வேண்டிவரும் மனுக்கள் 30 நாட்களுக் குள்ளாகவும் ரூ. 10,000-க்கு மேற்பட்டுக் கடன் கேட்டு வரும் மனுக்கள் 33 நாட்களுக்குக்குள்ளாகவும் முடிவு செய்யப்பட வேண்டும் என்று அதிகாரிகளுக்குக் கட்டளைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, கட்டளைகளைப் பிறப்பித்திருக்கிறார்களே தவிர, மாதக்கணக்காக பைல் கட்டுகளை வாங்குவதில், ஈ.ஓ. (கோ ஆபரேஷன்), டி. ஆர். மூலம் வருவதில் பணிகளில் காலதாமதம் ஏற்படுகிறது என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுகிறதா ? இது சம்பந்தமாக வங்கி ஊழியர்களுக்கு உத்தரவு இடுமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, கடன் வழங்குவதில் காலதாமதம் சம்பந்தப்பட்ட வரையில், வட்டார வங்கிதான் பொறுப்பு. அரசோ, மத்திய அடைமான வங்கியோ பொறுப்பு அல்ல. காரணம் என்னவென்றால், 19-1-70 அன்று மத்திய நிலவள வங்கியில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப் பட்டது. எதிர்பார்பதற்கு அதிகமான கடன் வழங்குவதற்கு சாத்தியக்கூறுகள் இருப்பதால், வட்டார நில அடைமான வங்கிகள் அவர்களுக்குத் தேவை என்கிற தொகைகளை லிமிட் இல்லாமல், குறியீடு இல்லாமல் பெற்று, விவசாயிகளுக்கு விரைவில் வழங்க வேண்டும் என்று சுற்றறிக்கை விடப்பட்டிருக்கிறது, மாண்புமிகு திரு. சித்தன் அவர்களைத் தலைவராகவும், மதிப்பிற்குரிய அவ ருடைய தந்தை அவர்களைத் தலைவராகவும் கொண்டு நடந்து வந்த, வருகிற நில அடைமான வங்கிக்கு, கடந்த 8 மாதத்தில் 5 லட்ச ரூபாய்க்கு மேல் பணம் அனுப்பியுள்ளோம் இன்னும் நேற்று மத்திய அரசின் சம்மதம் கிடைத்ததன் மூலம் 1¼ கோடி அளவிற்கு மத்திய நில அடைமான வங்கி, வட்டார வங்கிகள் இவற்றிற்கு கிடைக்கும். மாண்புமிகு சித்தன் அவர்கள், ஏதாவது மேற்கொண்டு விவசாயிகளுக்குக் கொடுக்க வங்கிகளுக்குப் பணம் தேவையென்றால் உடனடியாகத் தேவைப்படும் அளவிற்கு வரம்பு இல்லாமல் பெற்றுக் கொள்ளலாம். (சிரிப்பு)

*திரு. இரா. சௌந்தரராஜ மூப்பனார் :* தலைவர் அவர்களே, விவசாய பம்பு செட்டுகளுக்கு 1968-69-ல் கொடுக்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு, 1969-70-ல் எவ்வளவு? குறைவு இருந்தால் அதற்கான காரணம் என்ன, அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன, என்பவற்றைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :* தலைவர் அவர்களே, பம்பு செட்டுக்கு, கிணற்றுக்கு எவ்வளவு கொடுக்கப்பட்டது என்பதற்கு கணக்கு கைவசம் இல்லை. ஆனால், மொத்தம் எவ்வளவு கொடுக்கப்பட்டது என்பதற்கு கணக்கு இருக்கிறது. 1966-67-ல் மொத்தம் விவசாயிகளுக்கு, மத்திய நில அடைமான வங்கி, வட்டார வங்கிகள் மூலம் கொடுக்கப்பட்டது 3 கோடி ரூபாய். இந்த வருஷம், 1969-70-ல் வழங்கப்படுவது 16½ கோடி ரூபாய்.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister how many applications have been disposed of within the number of days prescribed, viz., 30 days and 33 days?

THE HON. THIRU SI. PA. ADITANAR : The disposal of the applications is done at the primary level. Everything depends upon how quickly the primary banks dispose of the applications. What the Government does is to guarantee the amount and send the money over to the State Land Development Bank. We have already arranged to send this year Rs. 16½ crores. There is not enough offtake from the primary land development banks. If our learned friend will use his influence and ask the primary banks to utilise those moneys, it will be possible to distribute the moneys in hand now.

### வீட்டுவசதி வாரியம் கையகப்படுத்திய நிலங்கள்

*366 வினா—திரு. கொளத்தூர் கோதண்டம் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) State Housing Board சென்னை, மதுரை, கோவை ஆகிய இடங்களில் நிலம் ஆர்ஜிதம் செய்த பிறகு, அதை எதிர்த்து நீதிமன்றங்களில் நிலச் சொந்தக்காரர்கள் வழக்குப் போட்டிருக்கின்றனரா?

(இ) ஆம் எனில், எத்தனை பேர்?

(உ) வழக்கு மன்றங்களில் நிலச் சொந்தக்காரர்களுக்கு சாதகமாக தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகள் எத்தனை?

(எ) அந்த தீர்ப்புகளை எதிர்த்து அப்பீல் செய்யப்பட்டுள்ளதா?

*மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :* (அ) ஆம்.

(இ) 274 வழக்குகள்.

(உ) 13 வழக்குகள்.



(எ) ஒரு வழக்கில் உயர்நீதி மன்றத்தில் அப்பீல் செய்யப்பட்டது. ஆனால், அது தள்ளுபடியாகிவிட்டது. எஞ்சின 12 வழக்குகளில் அப்பீல் செய்யவேண்டியதில்லை என்று அரசு முடிவு எடுத்துள்ளது.

*திரு. கொளத்தூர் கோதண்டம் :* தலைவர் அவர்களே, இந்த சம்பந்தப்பட்ட வழக்குகளில் அதிகமான பணம் நிலச்சொந்தக்காரர்களுக்குக் கொடுக்கப்படவேண்டுமென தீர்ப்பு வழங்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறதே, அப்படியிருந்தால் அதன் மேல் அப்பில் செய்யாததற்குக் காரணம் என்ன?

*மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :* தலைவர் அவர்களே, இதிலே இரண்டு விதமான வழக்குகள் இருக்கின்றன. ஒன்று நிலத்தை ஆர்ஜிதம் செய்யக் கூடாது என்பதற்காக வழக்குப் போடுகிறார்கள். மற்றொன்று, கொடுக்கின்ற கிரயத்தொகை போதாது என்று வழக்கு. அதில் கிரயத் தொகை போதாது என்று சொல்வதற்குக் காரணம், அந்த நிலங்களை எடுத்துக் கொண்டு, அதை பிறருக்கு மனைக்கட்டுகளாக, அதிகத் தொகைக்கு விற்கிறார்கள் என்பது. அதனால் நிலச் சொந்தக்காரர்கள், நம்மிடம் குறைந்த தொகைக்கு எடுத்துக்கொண்டு, அதிகமான தொகைக்கு விற்கிறார்கள், ஆகையினால் அந்தப் பணத்தை நமக்கே தரவேண்டும் என்று வழக்குப் போடுகிறார்கள். அதற்குக் காரணம், நிலத்தை ஒரு 100 ஏக்கரை நில ஆர்ஜிதம் செய்யப்படுகிறது என்றால், அதில் 60 ஏக்கர் கிரௌண்டுகளாகவும், பாக்கி 40 ஏக்கர் பள்ளிக்கூடங்கள், பூங்காக்கள், ரோடுகள், இப்படிப்பட்ட பொதுக் காரியங்களுக்கும் ஒதுக்கப்பட்டுவிடுகிறது. ஆகவே, இந்த 40 ஏக்கர் தொகையையும் அந்த 60 ஏக்கரில் வாங்க வேண்டியிருக்கிறது. அது வல்லாமல் ரோடு போடும் செலவு, நிலத்தை ஒப்பிடும் செலவு, லைட் செலவு, மற்ற வசதிகள் செய்யச் செலவு என்று செய்ய வேண்டியிருப்பதால் அதிகத் தொகைக்குக் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. குறைவான நிலக்கிரயம் என்றால் அப்பீல் செய்யலாம் என்றிருக்கிறது. ஆகவே, நிலச் சொந்தக்காரர்களும் அதிகமான தொகை வேண்டும் என்று வழக்கு போடுகிறார்கள்.

THIRU T. MARTIN : Sir, in the High Court a number of land acquisition cases—whether they are writ petitions or first appeals—are pending for a long time, even from 1965 onwards. So may I request the HON. Minister to state whether any direction has been given by this Ministry to the Government Pleader to expedite the disposal of these land acquisition cases and if not, whether the Government will come forward to issue such a direction for expediting the cases pending in the High Court?

*மாண்புமிகு திரு. செ. மாதவன் :* தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத்திலே இருக்கும் லேண்ட் அக்விசிஷன் வழக்குகளையெல்லாம் உடனடியாக விசாரிக்க வேண்டும் என்ற குறிப்பு அரசாங்கத்தின் சார்பிலே அனுப்பப்பட்டிருக்கிறது. எத்தனை வழக்குகள் இருக்

கின்றன என்ற விவரம் பற்றி உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நமக்குக் கிடைத்த தகவலின்படி ஏராளமான வழக்குகள் விசாரிக்கப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. இராம. அரங்கண்ணல் :** தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் குடிசைவாழ் மக்களுக்கு நல்வாழ்வு அமைத்துத் தர இடம் தேவைப்படுகிறது. தனிப்பட்டவர்கள் தாங்களாகவே கலெக்டர் நிர்ணயிக்கும் விலைக்கு தங்களுடைய மனைகளை விற்க முன்வந்தால், வீட்டுவசதி வாரியம் அதை ஏற்றுக் கொள்ளுமா? அங்குள்ள விதிமுறைகள் ஏதாவது இடையூறாக இருந்தால் அவற்றைத் திருத்தியமைக்க அரசு உத்தரவு பிறப்பிக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு யோசனையும் பரிசீலனையில் இருக்கிறது. இரண்டு வகைகளில் நில ஆர்ஜிதம் செய்யப்படுகிறது. ஸ்லம் இம்ப்ரூவ்மெண்ட் என்று தனியாக இருக்கிறது. அடுத்தது, சாதாரண லேண்ட் அக்விசிஷன் ஆக்ட் பிரகாரம் மார்க்கெட் ரேட்டில் நில ஆர்ஜிதம் செய்ய வேண்டுமென்று சட்டம் இருக்கின்றது. அப்படிச் செய்யும்போது ஐந்து வருட ஆவரேஜ் வால்யூ, அப்பொழுதிருக்கும் மார்க்கெட் ரேட் இவற்றில் எது குறைவாக இருக்கிறதோ whichever is less வாங்க வேண்டும் என்று சட்டம் இருக்கிற காரணத்தால் காலதாமதம் ஆகிறது. அரசாங்கம் அதையும் பரிசீலனை செய்து வருகிறது.

THIRU K. VINAYAKAM :: Sir, in the mater of acquisition of lands by the Housing Board, it is stated that they acquire lands at a very low price and after effecting the so-called improvements like laying roads and lamp posts here and there without even providing sewage facilities they sell a plot of land at an exorbitant price which has nothing to do with the price at which it was purchased. So, will the Government go into the matter and see that at least fair justice is meted out to the allottees?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வழக்குமன்றத்திலே வழக்குகள் இருக்கின்றன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் விரும்பினால் பதில் அளிக்கலாம்.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு நான் முதலிலேயே பதில் சொல்லியிருக்கிறேன். குறைவான தொகை கொடுத்து நிலத்தை ஆர்ஜிதம் செய்து அதிக விலைக்கு விற்கிறது என்று குறிப்பிடுகிறார்கள். 100 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்கிறோம் என்றால், அதில் பொது விஷயங்களுக்காக சுமார் 40 ஏக்கர் நிலம் விட வேண்டியிருக்கிறது. அதாவது, ரோடு போடுதல், பாலம் அமைத்தல், பள்ளிக்கூடம் அமைத்தல், பூங்கா அமைத்தல், பொது மைதானம் அமைத்தல் இவைகளுக்காக நிலம் ஒதுக்க வேண்டியிருக்கிறது. மேலும் அந்தப் பகுதியில் லைட் வசதிகள், குடிதண்ணீர் வசதி, சுகாதார வசதி சாக்கடை வசதி முதலியன செய்து கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, மீதி



யுள்ள 60 ஏக்கர் நிலத்தை விற்கும்போது, மேற்கண்ட செலவுகளையும் சேர்த்து, 40 ஏக்கர் பொது விஷயங்களுக்கான நிலத்தின் கிரயத்தையும் சேர்த்து போட்டு விற்க வேண்டியிருக்கிறது. 40 ஏக்கர் நிலம் பொதுவிஷயங்களுக்கு விடப்படுவதால் அதன் கிரயத்தை மற்ற 60 ஏக்கர்களில் சேர்த்து வாங்கவேண்டியிருக்கிறது. ஆகவே, குறைந்த விலைக்கு வாங்கி அதிக விலைக்குக் கொடுக்கிறார்கள் என்று சொல்வது நல்லதல்ல. இதில் 'நோ லாஸ், நோ கெய்ன்'.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, வீட்டுவசதி வாரியம் வீட்டு மனைகளை ஒதுக்குகிறார்கள். அதற்கு வேண்டிய பணத்தை கட்டிவிட்ட பிறகும், அந்த நிலத்தைப்பற்றிய வழக்குகள் நீதி மன்றத்தில் இருப்பதால், வீட்டுமனையை ஹேண்ட் ஓவர் செய்வதில் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, பணம் செலுத்தியவர்களுக்கு மாற்று மனைகளை வழங்க முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, கேள்வியிலேயே விடையையும் சொல்லி விட்டார்கள். அப்படிப்பட்ட நிலைமை ஏற்படுவதற்கு வழக்குகள் நீதிமன்றத்தில் இருப்பதுதான் காரணம் என்று உறுப்பினர் அவர்களே சொல்லி விட்டார்கள். அப்படிப்பட்ட நிலைமை தோன்றாமலிருக்க நிலச் சொந்தக்காரர்கள் வழக்கு மன்றத்திற்குப் போகாமல் இருந்தால் நல்லதாக இருக்கும். வழக்குகள் நீதி மன்றத்தில் இருக்கும் காரணத்தால், வழக்கு முடிந்த பிறகுதான் நிலம் கொடுக்கமுடியும். மாற்று மனை கொடுக்கலாமே என்று குறிப்பிட்டார்கள். அப்படி மாற்றுமனைச் சொந்தக்காரர்களும் வழக்கு மன்றத்திற்குப் போகமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்.

## பஞ்சாயத்து தெரு விளக்குகளுக்கு மின் கட்டணம்

* 367 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பஞ்சாயத்து தெரு விளக்குகள் எரிந்தாலும் எரியாவிட்டாலும் குறிப்பிட்ட தொகை கட்டவேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறதா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, பஞ்சாயத்தின் பராமரிப்பிலுள்ள தெருவிளக்குகள் எரிவதற்கு மாதத்திற்கு இவ்வளவு தொகை கட்ட வேண்டும் என்று இருப்பதை மாற்றி, ஒவ்வொரு பஞ்சாயத்திலும் மீட்டர் பொருத்தி யூனிட் அடிப்படையில் கட்டணம் வசூலிக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா? சில விளக்குகள் பாதி நாட்கள் எரியாமல் இருக்கின்றன. ஆகவே, யூனிட் அடிப்படையில் கட்டணம் வசூலிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவர் அவர்களே, நான் விடையிலேயே கூறியிருக்கிறேன், விளக்கு எரிந்தாலும் எரியாவிட்டாலும் குறிப்பிட்ட கட்டணம் கட்டவேண்டுமென்று வலியுறுத்தப்

[1970 மார்ச் 13

படவில்லையென்று. மாதத்திற்கு பத்து நாட்களுக்கு விளக்குகள் எரியவில்லையென்று புகார் வந்தால், அதுபற்றி கட்டாயம் முறைத் துக்கொள்ளப்படும்.

*Report of National Commission on Labour*

* 368 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) Whether the Government are aware of the report of the National Labour Commission presented to the Union Government; and

(b) if so, whether a copy of the report will be placed on the Table of the House ?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** (அ) ஆம். மேற்கண்ட தொழிலாளர் பற்றிய தேசிய ஆணைக்குழுவின் அறிக்கையை ஆய்வதற்கு டில்லியில் நடந்த தொழிலாளர் அமைச்சர்கள் மாநாட்டில் நானும் பங்குகொண்டு நம் அரசாங்கத்தின் பரிந்துரைகளைக் கூறியிருக்கிறேன்.

(இ) இவ்வறிக்கை ஐந்நூறுக்கும் மேற்கொண்ட பக்கங்களைக் கொண்டதாக இருப்பதால் அவையின் முன் வைக்க இயலவில்லை. உறுப்பினர்களின் பார்வைக்காக சில நகல்கள் சட்டப் பேரவையின் நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** தலைவர் அவர்களே, இந்தக் கமிஷனுடைய அறிக்கை டேபுளின்மேல் வைக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, நான் முன்பு சொன்னதுபோல இந்த அறிக்கை 500 பக்கங்களைக் கொண்டதாக இருக்கிறது. இந்த அறிக்கையை மத்திய அரசாங்கம் வெளியிட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்திற்கு சில பிரதிகள் பெறப்பட்டிருக்கின்றன. முப்பத்து நான்கு லட்சம் ரூபாய் செலவில் மூன்று ஆண்டுகள் முயன்று தயாரிக்கப்பட்ட அறிக்கை. இது பெரிய அளவில் இருப்பதாலும், அதிக பக்கங்களைக் கொண்டதாக இருப்பதாலும் அவை முன் வைக்க சாத்தியம் இல்லை. சட்டப் பேரவையின் நூலகத்தில் பேரவை உறுப்பினர்களுடைய பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, அந்த அறிக்கை எல்லோருக்குமே மேஜைமேல் வைக்க முடியவில்லையென்றாலும், கட்சி அடிப்படையிலாவது இரண்டு புத்தகங்களாவது கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, இந்தப் புத்தகம் மத்திய அரசாங்கத்தின் தொழிலாளர் துறை வெளியிட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்திற்கென்று சில பிரதிகள்தான் அனுப்பியிருக்கிறார்கள். ஆகவேதான் பேரவை உறுப்பினர்களின் பார்வைக்காக சட்டப் பேரவை நூலகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.



1970 மார்ச் 13]

**திரு. நா. காசிராமன் :** தலைவர் அவர்களே, மேஜைமேல் வைக்க முடியவில்லையென்றாலும்கூட, விலைக்குக் கேட்டால், கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தின் தொழிலாளர் துறை இதை வெளியிட்டிருக்கிறது. நாம் வெளியிடவில்லை.

THIRU K. VINAYAKAM : Sir, may I know what are the salient features or recommendations of this Commission affecting Madras Labour ?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன். இதில் இருக்கிற பரிந்துரைகள் நாம் ஏற்கனவே நம் மாநிலத்தில் செயல்படுத்தி வருகிறோம். புதிதாக எந்தவிதமான யோசனைகளும் சொல்லப்படவில்லை. மற்றும் மாநாட்டில் கலந்துகொண்ட எல்லா தொழிலாளர் நல அமைச்சர்களும் அதிகாரிகளும் தீவிரமாக ஆலோசிக்கவில்லை. பிரதம நீதிபதியாக இருந்து ஓய்வுபெற்ற டாக்டர் கஜேந்திர கட்கர் என்பவரைத் தலைமையாகக் கொண்டு மூன்று ஆண்டுகள் முயன்று தயாரிக்கப்பட்டது. இந்தக் குழுவிலே நியமிக்கப்பட்ட உறுப்பினர்களில் பலர் ராஜினாமா செய்துவிட்டார்கள். சிலர் இறந்துவிட்டார்கள். மாநாடு நடைபெற்ற நேரத்திலே மத்திய தொழிலாளர் நல அமைச்சர் ஜெய் சுக்லால் ஹாத்தி என்பவர் எந்த முடிவும் எடுக்காமல் ராஜினாமா செய்துவிட்டுப் போய்விட்டார். மாநாடு எந்தவிதமான முடிவும் எடுக்காமல் கலைந்துவிட்டது.

**திரு. சி. கோவிந்தராசன் :** தலைவர் அவர்களே, பழைய மத்திய தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இப்போது இல்லையென்பதாலும், பல உறுப்பினர்கள் அந்தக் குழுவிலிருந்து ராஜினாமா செய்துவிட்டார்கள் என்ற காரணத்தாலும் தேசிய தொழிலாளர் ஆணைக் குழுவின் பரிந்துரைகளைப்பற்றி நம்முடைய அரசாங்கம் கவலைப்படவில்லை யென்பதாகத் தெரிகிறதே, அது உண்மையா ?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, நான் பெருமையோடு சொல்லிக்கொள்வதற்கு விரும்புகிறேன். தேசிய தொழிலாளர் ஆணைக்குழு எதை எதை வற்புறுத்திக் கூறுகிறதோ அவற்றையெல்லாம் நாம் நடைமுறைப்படுத்தி முன்பிருந்தே செய்துவருகிறோம். தொழிலாளர்களுக்குத் தேவைப்படும் எல்லாவற்றையும் நாம் செயல் படுத்தி வருகிறோம். உறுப்பினர் அவர்கள் அந்த அறிக்கையைப் படித்துப்பார்த்தால் முழுவதும் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

**தமிழ் நாடு கால்நடை உதவியாளர் சங்க நிர்வாகக் குழு தலைமைச் செயலகத்தின் முன்பு உண்ணாவிரதம் இருக்க எடுத்திருக்கும் முடிவு குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. கோவிந்தராசன் அவர்கள் சட்டப்பேரவை விதி 42-ன் கீழ்—

"தமிழ்நாடு கால்நடை உதவியாளர் சங்க நிர்வாகக் குழு கால்நடை உதவியாளர்களின் கோரிக்கைகள் தீர்க்கப்படாமலிருப்பது குறித்து வருகிற மார்ச் 16-ம் நாளன்று ஊர்வலமாக வந்து தமிழக அரசு தலைமைச் செயலகத்தின் முன்பு உண்ணாநோன்பு மேற்கொள்வதென்று முடிவெடுத்துள்ளதால் எழுந்துள்ள அவசரமும், பொதுமுக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையை விவாதிக்க அவையின் அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்" என்று ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

இது அரசினரின் அன்றாட நிர்வாகத்திற்கு உட்பட்டது. மேலும் உண்ணாவிரதம் இருப்பது போன்ற நிகழ்ச்சி இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைப்பதற்கான ஒன்றாக இருக்காது என்று பல தீர்ப்புகள் கொடுக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் நான் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

3. கவன ஈர்ப்பு.

**கீழையூரில் தி.மு.க.வினர் ஏற்றிய கொடியை வெட்டி வீழ்த்தியதும், விசாரிக்க வந்த காவல் துறையினர் தாக்கப்பட்டதும்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து திரு. மலைச்சாமி அவர்கள் உடனடிப் பொது முக்கியம் வாய்ந்த ஒரு நிகழ்வை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

**திரு. பெ. மலைச்சாமி:** தலைவரவர்களே, சட்டப்பேரவையின் 41-வது விதியின் கீழ் 'மேலூர் வட்டம், கீழையூரில் பொங்கலன்று திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் ஏற்றிய கொடியை வெட்டி வீழ்த்தியவர்களை விசாரிக்க வந்த கீழவளவு காவல் நிலையத்தைச் சார்ந்த தலைமை போலீஸ்காரரையும், போலீஸ்காரரையும் பலர் சேர்ந்து தாக்கிக் காயப்படுத்தி, சட்டைகளைக் கிழித்து எறிந்த கொடுமையான நிகழ்ச்சியினைப்பற்றிய' அவசர பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** 14—1—1970-ம் நாள் காலை 9 மணியளவில் கீழவளவு காவல் நிலைய எல்லைக்குள் அமைந்த கீழையூர்க் கிராமத்தைச் சேர்ந்த சிலருடன் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் சிலர், அக் கிராமத்தில் அரிசனச் சேரிக்குள் சென்று ஊராட்சிக் கிணற்றுக்கு அருகில் தி.மு.க. கொடியை ஏற்றினர். ஒரு மணி நேரத்திற்குப் பின், அந்த இடத்திலிருந்து அக்கொடி அகற்றப்பட்டிருப்பதைக் கண்டனர். இவ்வாறு கொடியை அகற்றியது யார் என்று அவர்கள் வினவினர். அந்த நேரத்தில்



அந்தக் கிராமத்தில் வாழும் அரிசன வகுப்பைச் சேர்ந்த சிலரும் காங்கிரஸ் ஆதரவாளர்கள் சிலரும் இவர்களுடன் சண்டையிட்டு அவர்களைத் தடியாலும், கையாலும் அடித்தனர்.

கீழவளவு காவல் நிலையத்தைச் சேர்ந்த தலைமைக் காவலர் எண் 1495 காதர் மீரான், பொங்கல் திருநாள் சம்பந்தமாக அக் கிராமத்திற்கு வழக்கமாகக் கடமையாற்றச் சென்றார்; இக் கலகம் பற்றிக் கேள்விப்பட்டு அவர் அந்த இடத்திற்கு விரைந்தார். குற்றவாளிகள், தி.மு.க. உறுப்பினர்களை முரட்டுத்தனமாக இழுத்து அடித்துக் கொண்டிருப்பதைக் கண்டார். உடனே அவர், மேலும் குற்றவாளிகள் அவர்களை அடிக்கவொட்டாமல் தடுக்க முயன்றார். குற்றவாளிகளில் ஒருவரிடமிருந்த கத்தியைப் பறிக்கவும் முயன்றார். அக் குற்றவாளி, தலைமைக் காவலரை கையாலும், தடியாலும் அடித்ததுடன், அவரது காக்கி நிகராடையையும் கிழித்தார்; அவரது உடலில் 10 இடங்களில் சாதாரணக் காயங்களை ஏற்படுத்தினார். இவ்வாறு, தலைமைக் காவலர் சட்டப்படி செய்ய வேண்டிய கடமையை நிறைவேற்றுவதனின்றும் குற்றவாளி அவரைத் தடுத்தார். ராமையா என்னும் தி.மு.க. உறுப்பினருக்கும் 3 இடங்களில் சாதாரணக் காயம் ஏற்பட்டது.

தி.மு.க. உறுப்பினர் ராமையா கொடுத்த குற்றச்சாட்டின் மீது, கீழவளவு காவல் நிலையத்தில் இந்தியத் தண்டனைச் சட்டத் தொகுப்பின் 143, 323, 370, 332-வது பிரிவுகளின் கீழ் ஒரு வழக்கு (குற்றம் எண். 6/70) பதிவு செய்யப்பட்டது.

காயமடைந்த தலைமைக் காவலர் (எண் 1495) காதர் மீரானும் ராமையாவும் மேலூர் அரசு மருத்துவ மனையில் புற நோயாளிகளாகச் சிகிச்சையளிக்கப் பெற்றுள்ளனர். குற்றவாளிகள் பத்துப் பேரில் நால்வரைக் காவல்துறையினர் கைது செய்தனர்; எஞ்சிய 6 பேரும் 19—1—1970-ல் மதுரை கூட்டு முதல் வகுப்பு குற்றத்துறை நீதிபதி (எண் II) முன்னால் சரணடைந்தனர். குற்றவாளிகள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். எதேனும் வன்முறைச் செயல்கள் நடப்பதைத் தடுக்கும் பொருட்டு அக் கிராமத்தில் காவற் பிரிவு ஒன்றும் அமைக்கப்பட்டது. இப்போது நிலைமை அமைதியாக உள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.

**திரு. பெ. மலைச்சாமி:** தலைமை போலீஸ்காரரை கிராமத்தில் உள்ள கிராம ஊழியர்கள், கிராம சேவக்குகளே தாக்கினார்கள் என்கிற தகவல் கிடைத்திருக்கிறதே, அரசாங்க ஊழியர்களை அரசாங்க ஊழியர்களே தாக்கலாமா? அந்த கிராம ஊழியர்கள், கிராம சேவக்குகளின் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அரசாங்க ஊழியர்களை அரசாங்க ஊழியர்களே தாக்கலாமா என்றார். தாக்குவது என்கிறபோது ஒருவரை ஒருவர் தாக்குவதே கொடுமையானதாகும். வழக்கு விசாரணையில் இருப்பதால் மேற்கொண்டு எந்த விளக்கமும் அளிக்க இயலாமல் இருக்கிறேன்.

4. அறிவிப்பு.

சட்டமன்ற மேலவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவின கணக்கின் மீது வாக்கெடுப்பு) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 4/70) சட்டமன்ற மேலவையில் 9—3—70-ம் நாள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுப் பரிந்துரை எதுமில்லாமல் நிறைவேற்றப்பட்டதென்றும், தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூட்டுறவு நிலவள வங்கிகள் (திருந்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 3/70) மேலவையில் 9—3—70-ம் நாள் ஆய்வுக்கெடுத்துக்கொள்ளப்பட்டுத் திருத்தமேதுமின்றி நிறைவேற்றப்பட்டதென்றும் மேலவைத் தலைவரிடம் இருந்து வந்துள்ள செய்தியை இந்த அவைக்கு அறிவிக்கிறேன்.

5. 1970-71 ஆம் ஆண்டுக்கான நிதிக்கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) நிதிக்கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும் பல்வகையும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 15,56,77,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

THIRU K. VINAYAKAM : To discuss about the desirability of reforming the entire district administration, I move the following cut motion :—

"That the allotment of Rs. 15,56,77,100 under Demand No. 9—District Administration and Miscellaneous—be reduced by Rs. 100."

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தை நிர்வாக வசதியைக் கருதியும் மக்களின் நலனை உத்தேசித்தும் இரண்டாக பிரித்தல் குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும் பல்வகையும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 15,56,77,100-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. என். வரதராஜன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் குறைந்தபட்சம் மாதாமாதம் இரண்டு நாட்கள் கூட்டம் நடத்த வேண்டுமென்று வற்புறுத்த—



**திரு. கே. போஜன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மனுநீதி திட்டத்தை நல்ல முறையில் அமுல்படுத்துவதைப் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும், பல்வகையும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 15,56,77,100-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(ஆ) நிதிக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை ✓

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

"நிதிக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,08,16,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்.

**திரு. ரா. கனகசபை :** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கும் வரி விதிப்பு முறையை மாற்றி அமைக்கவேண்டும் என்று விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ 2,08,16,600 ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நஞ்சை நிலத்திற்கான நிலவரியை நீக்கிவிட்டு, வேறு தீர்வைகளின் மூலமாக விவசாயிகளின் வரிப் பளுவை உயர்த்தியிருப்பதைப் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,08,16,600ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. கரு. சீமைச்சாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, நஞ்சை நிலவரி ரத்து செய்ய வேண்டுமென்பது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,08,16,600-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்

**திரு. சோ. அழகர்சாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, 5 ஏக்கருக்குக் குறைந்த நஞ்சை நிலவுடையாளர்களுக்கும் நிலவரியை ரத்து செய்யவேண்டுமென்று விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,08,16,600ல் ரூ. 100 குறைக்கவேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஏ. அ. சுப்பராஜா : பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சத்தால் பீடிக்கப்பட்ட இடங்களில் நில்வரி ரத்து செய்யப்பட்டும் அப்படிப்பட்ட இடங்களில் வரி வசூலிப்பதை உடனடியாக நிறுத்துவது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,08,16,600ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திருமதி கே. பி. ஜானகி அம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, கோவில் மடங்கள், டிரஸ்டுகள் இவைகளின்பேரால் ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை உச்சவரம்புச் சட்டத்திற்குள் கொண்டு வந்து நிலமில்லா விவசாயிகளுக்கு வழங்குவது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,08,16,600ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நில சம்பந்தமான தஸ்தாவேஜிகளை மாற்றி அமைப்பது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,08,16,600ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(இ) நிதிக்கோரிக்கை எண் 4—முத்திரைத்தாள்கள்—நிர்வாகம்

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"நிதிக்கோரிக்கை எண் 4—முத்திரைத்தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 30,79,700 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

THIRU N. S. V. CHITHAN : To discuss policy, I move the following cut-motion :—

"That the allotment of Rs. 30,79,700 under Demand No. 4—Stamps—Administration—be reduced by Rs. 100."

திரு. ரா. கனகசபை : பேரவைத் தலைவரவர்களே, முத்திரை, முத்திரைத்தாள்கள் பற்றுக் குறையைத் தவிர்க்க வேண்டும் என்பதைப்பற்றி விவாதிக்க—

"நிதிக்கோரிக்கை எண் 4—முத்திரைத்தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 30,79,700ல் ரூபாய் 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



திரு. ஏ. அ. சுப்பராஜா : பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்கு முத்திரைத்தாள்கள் போதுமான அளவு கிடைக்காமல் கஷ்டப்படுவது குறித்து விவாதிக்க—

"நிதிக்கோரிக்கை எண் 4—முத்திரைத்தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 30,79,700ல் ரூபாய் 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கே. போஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, பொது மக்களுக்கு சிலசமயங்களில் போதுமான அளவு முத்திரைத்தாள்கள் கிடைக்காததைப்பற்றி விவாதிக்க—

"நிதிக்கோரிக்கை எண் 4—முத்திரைத்தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 30,79,700ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. சி. கோவிந்தராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற் சங்கங்களின்மூலம் நடைபெறும் சகலவித வழக்குகளுக்கும் முத்திரைத்தாள் கட்டணத்திலிருந்து விதிவிலக்குக் கொடுக்க வேண்டிய அவசியத்தைப்பற்றி விவாதிக்க—

"நிதிக்கோரிக்கை எண் 4—முத்திரைத்தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 30,79,700ல் ரூபாய் 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(ஈ) நிதிக்கோரிக்கை எண் 31—பஞ்சத் தணிப்பு

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்—

"நிதிக்கோரிக்கை எண் 31—பஞ்சத் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 16,20,800க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, சமீபத்தில் செய்யப்பட்ட பஞ்சத் தணிப்பு வேலைகளை நேர் ஆய்வுசெய்யவேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க—

"நிதிக்கோரிக்கை எண் 31, பஞ்சத் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 16,20,800ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, அரசு இதுவரை செய்துள்ள பஞ்சத் தணிப்பு வேலைகள், அதன் பலன்கள் ஆகியவை பற்றிக் கண்டறிய ஒரு குழு அமைக்கப்படவேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க—

"நிதிக்கோரிக்கை எண் 31, பஞ்சத் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 16,20,800ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, வறட்சிப் பிரதேசங்களில் வசிக்கும் மக்களுக்குக் குறைந்த விலை அரிசி விநியோகம் செய்யவேண்டிய அவசியத்தைப்பற்றி விவாதிக்க—

"நிதிக்கோரிக்கை எண் 31, பஞ்சத் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 16,20,800ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** தலைவர் அவர்களே, பஞ்சத் தணிப்பு வேலைகளில், மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க, கிராமங்களில் பல இணைப்பு ரோடுகள் அமைக்கப் பணம் ஒதுக்குவது குறித்து விவாதிக்க—

"நிதிக்கோரிக்கை எண் 31, பஞ்சத் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 16,20,800ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU E VENKATASWAMY : Sir, to discuss about the need to provide adequate ufnds to remove the chronic famine conditions in the backward areas of our State especially Dharmapuri district, I move the following cut-motion :—

"That the allotment of Rs. 16,20,800 under Demand No. 31—Famine Relief be reduced by Rs. 100."

### (உ) நிதிக் கோரிக்கை எண் 32—ஓய்வூதியங்கள்

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக்கோரிக்கை எண் 32—ஓய்வூதியங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,30,96,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

DR. H. V. HANDE : To discuss the need to review the Pensioners' Act, 1871, to increase the rate of pension commensurate with the present cost of living as recommended by the Lok Sabha Committee on Pensions in Lok Sabha, I move the following cut-motion—

"That the allotment of Rs. 4,30,96,700 under Demand No. 32—Pensions be reduced by Rs. 100."

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, வேலையில்லாதவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கவேண்டியதைப்பற்றி விவாதிக்க—

"நிதிக்கோரிக்கை எண் 32—ஓய்வூதியங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,30,96,700ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.





**திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, ஆண்டு முதிர்வு ஓய்வுப்படி கொடுப்பதில் உண்டாகும் காலதாமதத்தையும், விஸ்தரிப்பின் அவசியத்தையும் குறித்து விவாதிக்க—

"நிதிக்கோரிக்கை எண் 32 ஓய்வூதியங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,30,96,700ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** தலைவர் அவர்களே, திக்கில்லாத முதியோர்களுக்கு ஓய்வூதியம் அளிப்பதற்கு அதிகப்பணம் ஒதுக்குவது குறித்து விவாதிக்க—

"நிதிக்கோரிக்கை எண் 32—ஓய்வூதியங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,30,96,700ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

### (ஊ) நிதிக்கோரிக்கை எண் 36—ஏனைய பல்வகை இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக்கோரிக்கை எண் 36—ஏனைய பல்வகை இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 8,92,44,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

DR. H. V. HANDE : Sir, to discuss policy, I move the following cut-motion—

"That the allotment of Rs. 8,92,44,200 under Demand No. 36—Other Miscellaneous Compensations and Assignments be reduced by Rs. 100. 55

**திரு. இல. பலராமன் :** தலைவர் அவர்களே, கேளிக்கை வரியைப் பங்கீடு செய்வது எந்த இடத்தில் கேளிக்கைகள் நடத்தப்படுகின்றனவோ அதில் இருந்து 5 மைல் அளவுள்ள உள்ளாட்சி மன்றங்களுக்குப் பகிர்ந்துகொடுத்தல் பற்றி விவாதிக்க—

"நிதிக்கோரிக்கை எண் 36—ஏனைய பல்வகை இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 8,92,44,200-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, உள்ளாட்சி நிறுவனங்களுக்குக் கொடுக்கவேண்டிய பங்குத் தொகையைச் சரியானபடி கொடுக்கவேண்டியதைப்பற்றி விவாதிக்க—

"நிதிக்கோரிக்கை எண் 36, ஏனைய பல்வகை இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 8,92,44,200-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** தலைவர் அவர்களே, ஏனைய வரிகள், தீர்வைகள் இவற்றிலிருந்து நிகராமாகக் கிடைப்பவற்றை உள்ளாட்சி மன்றங்களுக்கு கொடுக்கப்படுவது போதுமானதாக இல்லாததைக் குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 36, ஏனைய பல்வகை இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 8,92,44,200-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(எ) நிதிக்கோரிக்கை எண் 37—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"நிதிக்கோரிக்கை எண் 37, ஜமீன்தார்களுக்கு இழப்பீடு என்ற தலைப்பின்கீழ் ரூ. 76,15,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

DR. H. V. HANDE : I move the following cut-motion—

"That the allotment of Rs. 76,15,500 under Demand No. 37—Compensation to Zamindars—be reduced by Rs. 100".

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, ஜமீன்தார்களுக்கு தரப்படுகின்ற இழப்பீட்டை நிறுத்தவேண்டிய அவசியம்பற்றி விவாதிக்க—

"நிதிக்கோரிக்கை எண் 37, ஜமீன்தார்களுக்கு இழப்பீடு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 76,15,500-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி :** தலைவர் அவர்களே, ஜமீன்தார்களுக்கு இழப்பீடு அளிப்பதை ரத்துசெய்வது குறித்து விவாதிக்க—

"நிதிக்கோரிக்கை எண் 37, ஜமீன்தார்களுக்கு இழப்பீடு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 76,15,500-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(ஏ) நிதிக்கோரிக்கை எண் 45—ஓய்வூதியங்களை மொத்தமாக்கிக் கொடுத்தல்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"நிதிக்கோரிக்கை எண் 45, ஓய்வூதியங்களை மொத்தமாக்கிக் கொடுத்தல் என்ற தலைப்பின்கீழ் ரூ. 10,10,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".



DR. H. V. HANDE : Sir, to discuss policy I move the following cut motion standing in my name :—

"That the allotment of Rs. 10,10,000 under Demand No. 45—Commuted Value of Pensions—be reduced by Rs. 100".

THIRU K. RAMAMOORTHY : To discuss policy, I move the following cut motion standing in my name :—

"That the allotment of Rs. 10,10,000 under Demand No. 45—Commuted Value of Pensions—be reduced by Rs. 100".

(ஐ) கோரிக்கை எண் : 47—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

நிதிக்கோரிக்கை எண் 47, மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 23,58,49,300-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

DR. H. V. HANDE : To discuss the need to resist any reduction in Tamil Nadu's share of Central assistance for the period of 1969-70 to 1973-74, I move the following cut motion :—

"That the allotment of Rs. 23,58,49,300 under Demand No. 47—Loans and advances by the State Government reduced by Rs. 100".

THIRU N. KASIRAMAN : To discuss the necessity of granting increased allotment for Municipalities and Municipal Corporation, I move the following cut motion :—

"That the allotment of Rs. 23,58,49,300 under Demand No. 47—LOANS AND ADVANCES BY THE STATE GOVERNMENT—be reduced by Rs. 100".

**திரு. எம். பூபதி :** தலைவர் அவர்களே, நகர மன்றங்களில் குடிநீர் திட்டத்தையும் கீழ்ச் சாக்கடைத் திட்டத்தையும் நிறைவேற்ற அதிக மானியமும் கடனும் கொடுக்கவேண்டுமென்பதுபற்றி விவாதிக்க—

"நிதிக்கோரிக்கை எண் 47, மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 23,58,49,300-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ஏ. அ. சுப்பராஜா :** தலைவர் அவர்களே, வசூலிக்க இயலாத கடன்களையும், வரிகளையும் ஏழை விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்து நிலுவை இல்லாது செய்வதுகுறித்து விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண். 47, மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 23,58,49,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் " என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, இந்தாண்டு பல்லடத்தில் வறட்சி ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் வாங்கியுள்ள கூட்டுறவுக் கடன்கள் அரசாங்கக் கடன்கள் எல்லாவற்றையும் இந்த ஆண்டும் தள்ளிவைக்கக் கோரி விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண். 47, மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 23,58,49,300-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் " என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் விவாதத்திற்கு வருகின்றன.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியங்கள் விவாதத்திற்கு வருகின்றன. இந்த மானியங்கள் பற்றிச் சுருக்கமாக ஒரு உரை அளிக்கப்பட்டிருக்கிறது. அது கொஞ்சமாக இருக்கிற காரணத்தினாலே மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுடைய நல்ல கருத்துக்களை ஆக்கம் கொடுக்கிற வகையிலே தருவதற்காக நான் அந்த உரையை நிகழ்த்த விரும்புகிறேன். கடந்த ஆண்டு இத் தலைப்பின் கீழ் 1-ம் எண் கோரிக்கையை முன் மொழிகையில், எனது ஆளுகையிலுள்ள துறைகளில் பின்பற்றப்படவிருக்கும் கொள்கையின் முக்கியக் கூறுகளைச் சுருக்கமாக விளக்கும் குறிப்பு ஒன்றை நான் பேரவை முன் வைத்தேன். பல்வேறு இனங்களின் கீழ் என்ன முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதற்காக இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள நான் கருதியுள்ளேன்.

கடந்த நிதி ஆண்டின் இறுதியில் தமிழ் நாட்டில் நிலவிய வறட்சி நிலைமையைப்பற்றி நான் குறிப்பிட்டிருந்தேன். அவ்வமயம், பஞ்சத் துயர் தணிப்புக்காக ரூ. 157.63 லட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது. இத்திட்டத்திற்கு உதவி அளிப்பதற்குத் தேவையான இடர் தணிப்பை மத்திய அரசு அளிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. நமது கெட்ட காலமாக வறட்சி நிலைமைகள் மேலும் சீர்கேடு அடைந்தன. வறட்சி துயர் தணிப்புப் பணிகளை மேற்கொள்ள இந்த அரசு முன்னுரிமை அளித்துள்ளது. சமுதாயத்திற்கு நிலையான பயன் அளிக்கக்கூடிய பணிகளின்மீது சிறப்பு நாட்டம் செலுத்தப்பட்டது. இடர் தணிப்புப் பணிகளின் எண்ணிக்கை



40,604 என்ற உச்சநிலையை அடைந்தது. 3.1 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது. மொத்த நிதி ஒதுக்கீடாகிய ரூ. 18.94 கோடியில் ரூ. 18.35 கோடி செலவிடப்பட்டது. திட்டவாரியான விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| திட்டத்தின் பெயர். | செலவு. (2) (ரூ. கோடியில்.) |
|---|---|
| குடி தண்ணீர் கிணறுகளை ஆழப்படுத்துதல், வெட்டுதல் | 5.93 |
| சிறு பாசனப் பணிகள் | 2.80 |
| பெரும் பாசனப் பணிகள் | 2.24 |
| சாலைப் பணிகள் | 3.28 |
| மண்வளப் பாதுகாப்புத் திட்டங்கள் | 0.21 |
| குடி மராமத்துப் பணிகள் | 0.09 |
| தக்காவிக் கடன்கள் | 2.65 |
| பாறை உடைக்கும் பிரிவுகள் | 0.64 |
| பாதிக்கப்பட்ட இடங்களில் தண்ணீர் வழங்குவதற்கான விரைவுத் திட்டம் | 0.51 |
| மொத்தம் | 18.35 |

இந்தச் செலவினத்தில் மத்திய அரசு ரூ. 14.25 கோடி உதவித் தொகையாக அளித்துள்ளது. அதனை மானியமாகக் கொள்வதா அல்லது கடனாகக் கொள்வதா என்பது குறித்து இந்திய அரசுடன் இன்னமும் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. அரசியல் காரணங்களுக்காகச் சிறப்புச் சலுகையாக இவ்வளவு பெருமளவில் மத்திய அரசின் உதவி கிடைத்துள்ளது என்று உறுப்பினர்கள் எவரும் கருதவேண்டாம். வறட்சித் துயர் தணிப்பு நடவடிக்கைகளுக்கான உதவி, இந்திய அரசினால் வகுக்கப்பட்டுள்ள ஒரு திட்டத்தின்கீழ் வழங்கப்படுகிறது. இது அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்தக்கூடியதாகும். இத்திட்டத்தின்கீழ், முதல் 50 லட்சத்தை மாநில அரசு செலவிடவேண்டும். எஞ்சிய தொகையில் 75 சதவீதத்தை மத்திய அரசும், 25 சதவீதத்தை மாநில அரசும் ஏற்கிறது. மாநில அரசினால் ஏற்றுக்கொள்ளப்படுகிற 25 சதவீத செலவை மேற்கொள்வதற்காக மத்திய அரசு கடன்களும் வழங்கும். இந்தக் கொள்கையின்படி இம்மாநிலத்திற்கு ரூ. 14.25 கோடி வழங்கப்பட்டுள்ளது. நெருக்கடி நிலையை முற்றிலும் உணர்ந்து திட்டமிட்ட முறையிலும் மிக முதன்மையிடம் அளித்தும் இந்த அறைகூவலை ஏற்ற இந்த அரசின் திறமையே வறட்சித் துயர் தணிப்பின்கீழ் நாம் இந்தச் சாதனையை அடைய முடிந்தது என்பதை உறுதிப்படுத்த நான் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்

[திரு. கே. ஏ. மதியழகன்] [1970 மார்ச் 13

கிறேன். மிக உயரிய அளவிலான இத்திட்டத்தை நிறைவேற்ற அயராது உழைத்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் இதர அரசு அதிகாரிகளுக்கும் எனது பாராட்டுதல்களை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நல்ல மழை பெய்ததன் விளைவாக இம்மாநிலத்தின் பல பாகங் களில் பருவக்கால நிலைமைகள் மேம்பாடு அடைந்ததுடன், மாநி லம் முழுவதும் வேளாண்மைப் பணிகள் நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளன என்பதையும், துயர் தணிப்புப் பணிகளைத் தொடர்ந்து செய்வதற்கான அவசியம் இல்லை என்பதையும் கூற நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அதே சமயத்தில், வறட்சித் தணிப்புத் திட்டத்தில் நிறைவேற்றி முடிக்க இயலாமல்போன பணி களுக்கு மாநில அரசின் இயல்பான நிதிவாயில்களிலிருந்து நிதி உதவி கொடுக்க வேண்டும் என்று அரசு கட்டளைகள் பிறப்பித் துள்ளது. இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி மாவட்டங் களில் ஆங்காங்கு சில இடங்களில் உள்ள சில பாதிக்கப்பட்ட பகுதி களில் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக ரூ. 3 லட்சமும், தக்காவிக் கடன்களாக வழங்குவதற்காக ரூ. 4.53 லட்சமும் அண்மையில் வழங்க அரசு ஒப்பளித்தது. இதுபற்றிய நிலைமை குறித்து அரசு உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. இந்தப் பகுதி களுக்கு எவ்வளவு விரைவில் துயர் துடைப்பு அளிக்க இயலுமோ அவ்வளவு விரைவில் அளிக்க அரசு தன்னால் இயன்ற அளவுக்கு உதவி செய்யும்.

6. நடை முறைக் கேள்வி.

நிதிக் கோரிக்கை பற்றிய நீண்ட கொள்கை விளக்கங் குறிப்பைப் பேரவையில் படிப்பது குறித்து

திரு. டி. மார்டின் : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். பேரவைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய 13 அமைச்சர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு அமைச்சரும் அவரவர்களுடைய மானியக் கோரிக்கையின் குறிப்பை இந்த அவையில் வைக்கிறார் கள். இந்த மானியங்களின் மீது தொடர்ந்து விவாதங்கள் நடந்த பிறகு அமைச்சர்கள் நீண்ட பதிலைச் சொல்லுகிறார்கள். இப்போது இந்த முன்னுரையை அமைச்சர் வாசிக்க ஆரம்பித்தால் ஏறக் குறைய 45 நிமிடங்கள் ஆகிவிடும். இதனால் உறுப்பினர்கள் தங்கள் மேலான கருத்துக்களைச் சொல்ல நேரம் இல்லாது போய் விடும். ஆகவே, அமைச்சர் அவர்கள் இந்த அவையில் வைத்த அறிக்கையை வாசித்து அளித்ததாக ஏற்றுக்கொண்டு உறுப்பினர் களுடைய கருத்துக்களைச் சொன்ன பிறகு அமைச்சர் அவர் களுடைய மேலான கருத்துக்களைப் பிறகு கூறலாம்.



1970 மார்ச் 13] [திரு. கே. ஏ. மதியழகன்]

ஆண்டுகளாக அசெஸ்மெண்ட் செய்யப்பட்ட விவரங்கள், ரெவின்யூ போர்டு ஒழிப்பு முறையில் இருக்கிற காரியங்கள், கிராம ஊழியர் களுக்கான காரியங்கள் ஆகியவற்றைப் பற்றிச் சுருக்கமாக நானே தயாரித்த உரையே தவிர, வழக்கமாக அதிகாரிகளால் தயாரித்துக் கொடுக்கப்படும் குறிப்பு அல்ல. அமைச்சர்கள் மானியக் கோரிக் கையை முன்மொழிந்து 1½ மணி நேரம் பேசக் கூட உரிமை உண்டு. முக்கியமான கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத் திற்குக் கொண்டு வருவதற்காகப் படிக்கிறேன். மாண்புமிகு உறுப் பினர்களுக்கு இதைப் படிக்க வேண்டுமென்பதிலே அபிப்பிராயம் இல்லையென்றால் விட்டு விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர்கள் தங்களுடைய ஸ்டேட்மெண்டைப் படிப்பதற்கு உரிமை இருக்கிறது. தாங்கள் எழுப்பியது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல. நேரம் வீணாகிவிடும் என்று நீங்கள் கேட்கலாமே தவிர, படிப்பதிலே முறை இருக்கிறதா இல்லையா என்ற கேள்விக்கு இடம் இல்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்பு மிகு உறுப்பினர் மார்ட்டின் அவர்கள் சொன்ன கருத்தை ஏற்றுக் கொள்வதற்கில்லை. பெரிய புத்தகமாக இருந்தால் உறுப்பினர் அவர் கள் சொல்வதுபோல் 45 நிமிட நேரம் ஆகலாம். இந்த அறிக்கை வெகு சீக்கிரத்திலே முடிந்துவிடக் கூடிய அளவிலே தயாரிக்கப்பட் டிருக்கிறது. இந்த அறிக்கையை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் படிக்கும்போது உறுப்பினர்கள் அனைவரும் இருந்து கேட்டு அவர்கள் ஏற்கனவே படித்திருந்தாலும், படிக்கா விட்டாலும் விவாதத்தில் கலந்து கொள்ளுவதற்குச் சவுகரியமாக இருக்கும் என்ற அக்கறையின் காரணமாகத்தான் இதைப் படிக்கிறார்களே அல்லாமல் வேறு அல்ல. பல உறுப்பினர்கள் இதைப் படிக்கிறார்கள். சில உறுப்பினர்கள் படிக்காமல் போகி றார்கள். அவர்களுடைய காதுகளிலே இந்த அறிக்கையின் கருத்துக் கள் விழுவதற்கு உபயோகமாக நிதியமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையைப் படிக்க முன்வந்திருக்கிறார்கள்.

5. 1970-71-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக் கெடுப்பு—தொடர்ச்சி.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நான் உறுப்பினராக உள்ளதற்குப் பெருமிதமடைகிற திராவிட முன்னேற்றக் கழகத் தின் தேர்தல் அறிக்கையில் நிலச் சீர்திருத்தங்கள் உள்ளிட்ட பல சீர்திருத்தங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. வேளாண்மை உற்பத்தி யைப் பெருக்குவதற்கு அரசு பல நடவடிக்கைகள் எடுத்துள்ளது. வேளாண்மை உற்பத்தி பெருக வேண்டுமென்றால், நில உரிமை முறையில் அடிப்படையான மாறுதல்கள் செய்யப்படவேண்டு மென்பதை அரசு உணர்ந்துள்ளது. இந்தச் சூழலில், தமிழ் நாடு நில உச்ச வரம்புச் சட்டத்தைத் திருத்தி, நில உச்ச வரம்பு அளவை

30 ஸ்டாண்டர்டு ஏக்காராவிலிருந்து 15 ஸ்டாண்டர்டு ஏக்காராவாகக் குறைக்க அரசு முடிவு செய்துள்ளது. இந்த முடிவைச் செயல்படுத்துவதற்கான மசோதா ஒன்று இப்பொழுது நடைபெறும் சட்டசபைக் கூட்டத் தொடரிலேயே முகவுரைக்கப்படும். அறிவிப்புத் தேதிக்குப் பின்னர் எடுத்துக்கொண்ட எந்த நடவடிக்கைகளினால், இந்த மசோதாவின் விதித்துறைகள் முறியடிக்கப்படாமலிருக்க 1970 பிப்ரவரி 26-ம் நாள் முதற்கொண்டே இம் மசோதா செயலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாகக் கருதப்படும்.

நீலகிரி மாவட்டத்திலுள்ள கூடலூரில் "ஜன்மம்" முறையை நீக்கிவிடுவதற்குச் சட்டமன்றப் பேரவையில் ஒரு மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது. இம்மசோதா சட்டமாக இயற்றப்பட்டது. நில உரிமையிலுள்ள இடையாட்களை நீக்குவதில் இது இறுதிக் கட்டத்தைக் குறிக்கிறது. இச் சட்டம் ரிட் மனுக்களின் வாயிலாக உயர் நீதி மன்றத்தில் எதிர்க்கப்பட்டது. எனவே, மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்க வேண்டாமென நிறுத்தப்பட்டுள்ளது.

கிழக்கு தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு குறைந்த அளவு கூலியை வரையறுப்பதற்கான சட்டம் இயற்றியது, நாம் மேற்கொண்ட மற்றொரு முக்கிய நடவடிக்கையாகும். இந்தச் சட்டம் இயற்றியதனால், அந்தப் பகுதியில் உள்ள உழவுத் தொழிலாளர்களுக்கிடையே இணக்கமான நல்லுறவு ஏற்பட்டது.

இதற்கு இணையாக, நாம் மேற்கொண்ட மற்றொரு நடவடிக்கை நில உரிமை முறை பதிவேட்டுச் சட்டமாகும். இந்தச் சட்டம் நியாயமான கால அளவிற்குள் மாநிலம் முழுவதும் செயல்படும்படிச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

இயற்றப்பட்டுள்ள மற்றொரு சட்டம் தமிழ் நாடு இனாம் எஸ்டேட்டுகள் (நீக்குதல்—ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தினைத் திருத்தம் செய்வதற்கான சட்டமாகும். இதன்கீழ் புதுக்கோட்டைப் பகுதியில் உள்ள 116 பகுதிக் கிராமங்கள் பகுதி இனாம் எஸ்டேட்டுகளாகக் கருதப்பட்டன. இதனால் உழவர்களுக்கு மேலும் அதிகப் பலன்கள் கிட்டின.

இங்கு அரசு ஆட்சிக்கு வந்த பின் நிலமில்லாத ஏழைகளுக்கு நில ஒப்படை செய்வதற்கான சிறப்பான நாட்டம் செலுத்தப்பட்டுள்ளது. 1967-68-ஆம் ஆண்டில் 22,849.42 ஏக்கர் நிலங்கள் ஒப்படை செய்யப்பட்டன. 1968–69-ம் ஆண்டில் இந்த அளவு 51,851 ஏக்கர் அளவுக்கு உயர்ந்தது. இந்த ஆண்டில் மேலும் முனைப்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டதன் விளைவாக, முதல் பத்து மாதங்களில், 1,32,809 ஏக்கர் நிலங்கள் ஒப்படை செய்யப்பட்டன. இந்த ஆண்டிற்காக முடிவு செய்யப்பட்ட குறிக்கோள் அளவு ஒரு லட்சம் ஏக்கர் என்று இருக்க ஒப்படை செய்யப்பட்ட





மொத்தப் பரப்பு 1.5 லட்சம் ஏக்கருக்கு மேல் இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுவரை வழங்கப்பட்ட பட்டாக்களின் மொத்த எண்ணிக்கை சுமார் ஒரு லட்சமாகும்.

## வீட்டுமனை ஒப்படைப்பு

இதற்கு இணையாக நாம் மேற்கொண்ட நடவடிக்கை வீட்டு மனைகளுக்காக செய்துள்ள நில ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்துதல் ஆகும். 1969 ஏப்ரல் முதல் 1970 ஜனவரி வரையுள்ள கால அளவில் அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்ட 2,07,574 நேர்வுகளில் 77,181 நேர்வுகள் பட்டா வழங்குவது மூலம் முறைப்படுத்தப்பட்டுள்ளன. எத்தனை ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்த முடியுமோ அவையனைத்தையும் முறைப்படுத்த சிறப்புப் பணியாளர்கள் இன்னும் ஈடுபட்டுள்ளனர்.

மத்திய அரசு ஆதாரவு வரும் திட்டத்தின்கீழ் நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களின் குடும்பங்களைக் குடியேற்றுவதற்காக இந்திய அரசு உதவி வழங்கியது. இதுவரை, 14,661 ஏக்கர் நிலங்கள் 3,433 குடும்பங்களுக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ளன.

## வருவாய்த் துறை வாரியத்தைக் கலைப்பது.

1969-70-ஆம் ஆண்டிற்கான எனது கொள்கை விளக்கக் குறிப்பில், வருவாய்த் துறை வாரியத்தைக் கலைத்துவிடுவது பற்றி அரசு பரிசீலனை செய்துவந்ததென பேரவைக்கு நான் தெரிவித்தேன். வருவாய்த் துறை வாரியத்தைக் கலைப்பதில் ஏற்பட்டுள்ள எல்லாவிதச் சிக்கல்களும் விரிவாக ஆய்வு செய்யப்பட்டு, வருவாய்த் துறை வாரியத்தைக் கலைப்பதற்குரிய தேவையான மசோதா தயாரிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு மாநில அரசினால் நிறைவேற்றப்பட்டச் சட்டங்களின்கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை வருவாய்த் துறை வாரியம் நிறைவேற்றி வருகிறது என்பதை பேரவை உறுப்பினர்கள் அறிவர். வருவாய்த் துறை வாரியம் கலைக்கப்படுகையில் வருவாய்த் துறை வாரியம் தற்போது ஆற்றி வரும் பணிகளை, நாம் துறைத் தலைவர்களாக நியமிக்கவிருக்கும் ஆணையர்களிடம் சட்டபடி ஒப்படைக்க இயலுமா என்பது குறித்து கருதிப்பார்க்க வேண்டியது அவசியமாகும். இந்திய அரசியலமைப்பின் 203(1) விதியின் கீழ் குடியரசுத் தலைவரின் இசைவைப் பெற்ற பின்பே இச் சட்டத்தை இயற்ற இயலும். இதை நிறைவேற்றுவதில் எவ்வளவு காலதாமதம் ஏற்பட்டாலும், இதனை நிறைவேற்றுவதினால் மக்களுக்கு எவ்வித இடர்ப்பாடும் ஏற்படக்கூடாது என்பதே அரசின் விருப்பமாகும் என்பதை இப் பேரவையினர்க்கு உறுதியளிக்கிறேன்.

[திரு. கே. ஏ. மதியழகன்] [1970 மார்ச் 13

## ஜமாபந்தி ஒழிப்பு.

கடந்த ஆண்டு எனது உரையில் ஜமாபந்தி முறையில் சில விரும்பத்தகாத முறைகள் உள்ளன என்று குறிப்பிட்டிருந்தேன். ஜமாபந்தி முறையை அறவே நீக்குவதும், அதற்குப் பதிலாக துறைவாரியாகக் கணக்குகளை முடிவு செய்யும் திட்டம் ஒன்றைக் கொண்டு வருவதும் நல்ல நிர்வாக முறையாகும் என்றும் நான் கூறினேன். இந்த ஆண்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. மேலும் கணக்குகள் முறையாகவும், சரிவரவும் வைத்துவரப்படு கின்றனவா; ஆண்டு ஆய்வுக்குப் பதிலாக, அவ்வப்போது ஆய்வு செய்யப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதற்கு ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு துணைத் தாசில்தார் நியமிக்கப்பட்டுள்ளார். அமைதியான முறையில் இந்த மாற்றத்தைச் செய்வதற்காக இந்த ஆண்டு ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒரு வட்டத்தில் ஜமாபந்தி முறை எடுக்கப்படும். இவ்வாறாக ஜமாபந்தி முறை படிப்படியாக நீக்கப்படும்.

## கிராமப் பணியாளர்கள்.

பரம்பரைக் கிராம அதிகாரிகள் சட்டத்தை ரத்து செய்து விட்டதால், இதுவரை பின்பற்றப்பட்டு வந்த பரம்பரைக் கொள்கை கைவிடப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அறிவர். இந்திய அரசியலமைப்பின் 309-வது பிரிவின் கீழ் இயற்றப்பட்ட விதிகளின்படி கிராம அதிகாரிகளின் பணி நிலைமை முறைப்படுத்தப்படும். இந்த விதிகளுக்கு இறுதி வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. அவை விரைவில் வெளியிடப்படும். கிராம அதிகாரிகளின் சம்பள வீதத்தை மேம்படுத்துவது அரசின் விருப்பமாக இருந்து வந்துள்ளது. எனவே, இந்த மாநிலத்தில் கிராம அதிகாரிகளின் சம்பள வீதத்தையும், படிகளையும் மாற்றியமைப்பது பற்றி ஆய்வு செய்யும் பணியை இரண்டாவது சம்பள ஆணைக்குழுவிடம் ஒப்படைக்க நாங்கள் முடிவு செய்துள்ளோம். இவ்வாறு செய்யப்பட்டுள்ளது தமிழ் நாட்டு வரலாற்றிலேயே, இதுதான் முதல் முறை.

கிராம அதிகாரிகளுக்கு வரையறுக்கப்பட்ட அடிப்படையில் நியாயமான பயணப்படி அளிக்கப்பட வேண்டும் என்று அரசு தீர்மானித்துள்ளது என்று எனது வரவு-செலவுத் திட்ட உரையில் நான் தெரிவித்திருந்தேன். இது கூடிய விரைவில் நிறைவேற்றப்படும். பிற அதிகாரிகளுக்கு வழங்கப்படுவதுபோல் கிராம அதிகாரிகளுக்கும் பண்டிகை முன் பணம் கொடுக்க அரசு முடிவு செய்துள்ளது.



1970 மார்ச் 13] [திரு. கே. ஏ. மதியழகன்]

இத்துறை கருணையோடு அணுகும்படிச் செய்வதும் அரசின் பெரு முயற்சியாக இருந்து வருகிறது. கடந்த மூன்றாண்டுக் காலத்தில் கூடுதலாகக் கீழ்க்கண்ட வட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு :—

| மாவட்டத்தின் பெயர். | புதிதாக அமைக்கப்பட்ட வட்டங்கள். |
| --- | --- |
| திருச்சி மாவட்டம் | அரியலூர், மணப்பாறை உத்தமபாளையம் |
| மதுரை மாவட்டம் | உசிலம்பட்டி, வேடசந்தூர், மதுரை (வடக்கு) மதுரை (தெற்கு) (மதுரை வட்டத்தை இரு பகுதியாக்குவதன் மூலம்) |
| திருநெல்வேலி மாவட்டம் | தூத்துக்குடி |

தருமபுரி மாவட்டத்தில், தென்கனிக்கோட்டை, ஊத்தங்கரை ஆகிய தனித்துணை வட்டங்களை முழு வட்டங்களாகத் தரம் உயர்த்த உத்தரவிடப்பட்டுள்ளது. (திருச்சி மாவட்டம்) துறையூரை முக்கிய வட்டமாக ஆக்கவும், (மதுரை மாவட்டம்) நத்தத்தை ஒரு துணை வட்டமாக அமைக்கவும், (திருநெல்வேலி மாவட்டம்) விளாத்திகுளத்தை ஒரு வட்டமாகத் தரம் உயர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## மனுநீதித் திட்டம்.

இந்த ஆண்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள முக்கிய மாறுதல், யாவரும் அறிந்துள்ள "மனு நீதித் திட்டம்" ஆகும். அதாவது, அதிகாரிகள் சிலர் தொகுதியாக கிராமங்களுக்கு நேரில் சென்று, பொது மக்களின் புகார்களைக் கேட்டறிந்து, முடிந்தவரை அந்த இடத்திலேயே அவர்கள் குறைகளைத் தீர்த்து வைப்பதாகும்.

## தாசில்தார்களுக்கு தொலைபேசி இணைப்பு கொடுத்தல்.

தாசில்தார்கள் பொதுமக்களுடன் நேரடித் தொர்பு கொள்ளுமாறு செய்ய, நாங்கள் நிறைவேற்றத் திட்டமிட்டுள்ள மற்றொரு முக்கிய ஏற்பாடு, மாநில முழுவதுமுள்ள தாசில்தார்களின் இல்லங்களுக்குத் தொலைபேசி இணைப்புக்கு வகை செய்வதாகும். இந்த ஆண்டில் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

## வருவாய்த் துறை அதிகாரிகளுக்கு வீட்டுவசதி.

இம் மாநிலத்தில் உள்ள நீதித் துறை அதிகாரிகள் அனைவருக்கும் குடியிருப்புகளுக்கு வகை செய்யும் பணித் திட்டம் ஒன்றை இவ்வரசு கொண்டு வந்தது என்பது உறுப்பினர்கள் அனைவரும் அறிந்ததே. அதே அடிப்படையில், வருவாய்க் கோட்ட அதிகாரிகளுக்கும், வட்டங்களின் பொறுப்பில் உள்ள தாசில்தார்களுக்கும், விற்பனை வரி அதிகாரிகளுக்கும் குடியிருப்பு இல்லங்கள்

அமைத்துத் தர ரூ. 52 லட்சம் செலவில் இவ்வரசு, திட்டங்களை உருவாக்கியது. இத் திட்டம் அடுத்த ஐந்து வருடங்களில் செயல் படுத்தப்படும்.

## குடிசைவாழ் பகுதி மேம்பாடு.

தீயாலும், வெள்ளத்தாலும் ஏற்பட்ட இன்னல்களை நீக்குவதற்கென்று இந்த அரசு எப்போதும் சிறப்பான நாட்டம் செலுத்தி வந்திருக்கிறது. தீ விபத்துத் துயர் தணிப்புத் தொகையை ரூ. 40-லிருந்து ரூ. 80 ஆக உயர்த்தியது இந்த அரசு முதற்படியாக எடுத்துக்கொண்ட நடவடிக்கையாகும்.

மேலும், மாநகர தீ நிவாரண நிதிக்கு ரூ. 40 லட்சம் வசூலிக்கப் பட்டது. தீ விபத்துக்களில் வீடிழந்தோர்களுக்கு எளிதில் தீப்பிடிக்காத வீடுகள் கட்டுவதற்கு இத் தொகை பயன்படுத்தப் பட்டுள்ளது. இதுவரை 4,160 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 1,722 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. அவை விரைவிலேயே கட்டி முடிக்கப்படும்.

## முத்திரைத்தாள்.

முத்திரைத்தாள் சட்டம், 1967-ஆம் ஆண்டு 24-ஆம் சட்டத்தின்படித் திருத்தப்பட்டது. அவ்வாறு திருத்தப்பட்ட முத்திரைத்தாள் சட்டத்தின்படி, ஆவணங்களில் சொத்து மதிப்பைக் குறைத்து எழுதுவதைத் தடுப்பதற்கு, சொத்தின் நிலவர மதிப்பின்பேரில் முத்திரைத்தாள் கட்டணத்தை முடிவு செய்யும் முறை கொண்டுவரப்பட்டது. திருத்தச் சட்டத்தின்படி, வாணிகப் பற்று வரவுகளில் சொத்தின் நிலவர மதிப்பிற்கு இணங்க, முத்திரைத்தாள் தீர்வையைச் செலுத்துமாறு வற்புறுத்துவதற்கு பதிவுத்துறை அதிகாரிகளுக்கு இது சாத்தியமாக இருக்கும். சொத்தை மதிப்பிடுவதற்காக வழிகாட்டும் கோட்பாடுகள் வருவாய்த் துறையினால் வரையறுக்கப்பட்டு, உதவிப் பதிவாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. நிலவர மதிப்பை வரையறுப்பதில் முன்னிலும் சிறந்த வழிகாட்டும் கோட்பாடுகளைத் தயாரித்துச் சீர்படுத்தும் நோக்குடன், சென்னை மாநகரத்திற்கும், கோயம்புத்தூர், தஞ்சை ஆகிய மாவட்டங்களுக்கும் பதிவுத் துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரலின் பொறுப்பில் பணி புரிய சிறப்பு வருவாய்த் துறை பணியாளர்களை அரசு அனுமதித்தது.

1968-69-ஆம் ஆண்டு முழுவதற்குமாக இத்துறையின் வாயிலாகக் கிட்டிய மொத்த வருவாய் ரூ. 14.80 கோடியாக இருந்ததற்கு மாறாக மாநிலத்தில் வறட்சி நிலவியிருந்தபோதிலும் இவ்வாண்டின் மொத்த வருவாய் ரூ. 17.24 கோடியாக உயர்ந்துள்ளதென்றும், 1969 டிசம்பர் திங்கள் முடிய மொத்த வருவாய் ரூ. 12.95 கோடியாக இருக்கிறதென்று அறிய உறுப்பினர்கள் கண்டிப்பாக மகிழ்ச்சி அடைவார்கள்.





கடந்த மூன்றாண்டு காலத்தில் பதிவுத் துறையின் பல்வேறு வகைப் பணியாளர்களுக்கு அரசு பெருவாரியான சலுகைகள் அளித்துள்ளது. இது பணி நிலைமைகளைக் கணிசமான அளவில் மேம்படுத்தியது.

சட்ட மன்றத்தில் என்னென்ன உறுதிமொழிகள் அளிக்கப் படுகின்றனவோ அவற்றை நிறைவேற்றுவதே இவ்வரசின் நோக்கமாகும் என்பதை இக் கொள்கை விளக்கக் குறிப்பிலிருந்து உறுப்பினர்களுக்குத் தெள்ளென விளங்கும். மக்கள் நலனுக்காக இது வரை எடுத்து விளக்கப்பட்டுள்ள கொள்கைகளை இனி வரும் ஆண்டுகளில் ஆர்வமுடனும் துணிவுடனும் நிறைவேற்றுவதே நமது முயற்சியாக அமையும்.

* **திரு. எஸ். ராமலிங்கம் :** கனம் சபாநாயகர் அவர்களே, எங்கள் கட்சி சார்பாக கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை மு.ப.
ஆதரித்து நான் சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். 10-30
அமைச்சர் அவர்கள் தனது விளக்க உரையில் விரிவாக தங்களுடைய அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளையெல்லாம் பற்றி நமக்கு கொடுத்து அதை எங்கே நாம் படிக்காமல் போய் விடுவோமோ என்று அச்சப்பட்டு அதை இங்கு வாசித்தும் காட்டினார்கள். எனவே அவர்களுக்கு அதிலுள்ள அக்கறையை நான் பாராட்டுகிறேன். உரையில் பஞ்ச நிவாரண வேலைகளை எல்லாம் மிக நல்ல முறையில் செய்துள்ளோம் என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு பஞ்சம் கொடுமையாக இருந்தது. நம் நாட்டில் இந்த பஞ்சம் என்பது ஏதோ சென்ற ஆண்டு மட்டும் வரவில்லை. நம் நாட்டைப் பொறுத்தவரையில், அது அடிக்கடி வந்து கொண்டிருக்கிறது. அம்மாதிரியான நிலையில் சர்க்காரின் தலையாய கடமை இப்பஞ்ச நிலையைத் தவிர்ப்பதற்கான முயற்சிகளைச் செய்வதுதான். ஆகவே அப்படிப்பட்ட பஞ்ச நிலை நம் நாட்டில் வராத அளவிற்கு நிரந்தரமான வேலைகளைச் செய்ய வேண்டும் என்பதுதான் என் ஆலோசனை. பஞ்ச நிவாரண வேலைகளுக்காக 18 கோடி 35 லட்சம் ரூபாய் வரையில் செலவு செய்ததாகச் சொன்னார்கள். அது செய்யவேண்டியதொரு வேலைதான். அதை அவர்கள் செய்ததில் எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. அப்படிச் செய்ததற்காக பாராட்டுகள் கூட நாங்கள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் செய்துள்ள வேலைகள், பிற்காலத்தில் நிரந்தரமாக நின்று பஞ்ச நிலை மீண்டும் ஏற்பட்டால் அதைத் தடுப்பதற்குரிய வகையில் நிரந்தரமாக வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்று பார்த்தால், உண்மையில் அப்படிப்பட்ட நிலை ஏற்படுத்தப்படவில்லை என்பதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சரியான முறையில் கவனித்துப் பார்த்து எதிர்காலத்திற்கு வேண்டியபடி அவர்கள் உள்ளபடியே

---

" தமிழ்நாட்டில் வீட்டுவசதி—1969-70 " என்ற கொள்கை விளக்க குறிப்பு 484-501 -ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.

செய்யவில்லை என்ற குற்றச்சாட்டை நான் சொல்லும்போது அவர்களுக்கு சிறிது கோபம் கூட வருகிறது, இந்தக் காங்கிரஸ்காரர்கள் பொருமையால் சொல்கிறார்கள், போட்டியுணர்ச்சியால் சொல்கிறார்கள் என்றெல்லாம் அவர்கள் சொல்கிறார்கள்.

(பஞ்ச நிவாரண வேலைகளை மேற்கொள்ளுகிற நேரத்தில் எதிர்காலத்தில் பஞ்சநிலை வராதிருக்கக்கூடிய வகையில் பஞ்ச நிலை ஏற்படுவதைத் தடுக்கும் விதத்திலும், உணவு உற்பத்தியைப் பெருக்கும் விதத்திலும் ஒரு நோக்கோடுதான் நாங்கள் பல பாசனத்திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம். எல்லோருக்கும் தெரியும், நாங்கள் நிறைவேற்றியுள்ள பெரிய பாசனத் திட்டங்கள், சிறிய பாசனத்திட்டங்கள் இவைபற்றி. பவானிசாகர் அணைக் கட்டுத் திட்டம், சாத்தனூர் அணைக்கட்டுத் திட்டம், மதுரை வைகைத் திட்டம், புள்ளம்பாடி அணைக்கட்டுத் திட்டம், கட்டளையாற்றுத் திட்டம் போன்ற பெரிய பெரிய திட்டங்களை நாங்கள் செய்திருக்கிறோம். பஞ்சத் துயர் தணிப்பிற்காக 18 கோடி 35 லட்சம் ரூபாய் செலவு செய்திருப்பதாக கூறியுள்ளார்கள். இன்றைய பொருளாதாரச் சூழ்நிலையில் இந்தப் பணம் சாதாரணமானதல்ல. பவானிசாகர் அணைக்கட்டிற்கு நாங்கள் 10.5 கோடி ரூபாய் செலவு செய்து முடித்துள்ளோம். இவர்கள் நாங்கள் வந்தவுடன் உணவு உற்பத்தியைப் பெருக்கிவிட்டோம் என்று சொல்கிறார்கள். 57 லட்சம் டன்னை இருந்ததை 63 லட்சம் டன்னை பெருக்கியிருக்கிறோம் உணவு உற்பத்தியை என்று பெருமையாகச் சொல்கிறார்கள். எங்கிருந்து அவர்கள் இதை இந்த அளவிற்குப் பெருக்கினார்கள்? நாங்கள் கட்டி வைத்த மேம்மாதிரிப்பட்ட பெரிய பாசனத் திட்டங்கள், சிறிய பாசனத் திட்டங்கள், கிணற்று ஊற்றுகள் போன்ற வளர்ச்சிப் பணிகளுக்கு நாங்கள் அதிகமாக செலவிட்ட காரணத்தினால்தான் இவர்கள் உற்பத்தியைப் பெருக்க முடிந்தது என்று நாங்கள் சொல்கிறோம்.

இப்போது கூவத்தில் சுமார் ஒரு கோடி ரூபாய் செலவில் சீரமைப்பு வேலை திட்டம் நடந்து கொண்டு இருக்கிறது. எதிர்காலத்தில் இந்த ஒரு கோடி ரூபாய் செலவின் அநுகூலத்தை நாம் பார்க்க முடியும். அந்த முறையில் இன்று செலவழித்ததாகச் சொல்லப்படும் இந்த 18½ கோடி ரூபாய் செலவின் பலாபலன் ஏதாவது எதிர்காலத்தில் பார்க்க முடியுமா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். இப்படிப்பட்ட பெரும் செலவுகளை மேற்கொள்ளும்போது எதிர்காலத்தை எண்ணிச் செலவு செய்ய வேண்டுமே அன்றி, ஒரு சிலருடைய சூழ்நிலைகளை மனத்தில் எண்ணி இந்தப் பணத்தைச் செலவு செய்து இருக்க வேண்டிய அவசியம் இல்லை. இப்படிப்பட்ட செலவுகளை கொஞ்சம் கருத்தோடு செலவு செய்யுங்கள் என்றுதான் ஆலோசனை கூறுகிறோம். அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள் 'பதினைந்து கோடி ரூபாய்க்கு மேல் மத்திய அரசிலிருந்து கொடுக்கப்பட்டது. அப்படி அவர்கள்





கொடுத்து உதவியதற்கு தயவுசெய்து யாரும் அரசியல் காரணங்களைக் கற்பித்துவிட வேண்டாம்' என்று கேட்டுக்கொண்டார்கள். 'எங்கள் அப்பன் குதிருக்குள் இல்லை' என்று சொல்லுவது போல இருக்கிறது இப்படி சொல்லுவது. மத்திய அரசில் உள்ளவர்கள் கொடுக்கக் கடமைப்பட்டவர்கள்தான். யாரும் மறுக்கவில்லை. ஆனாலும் இதைக் குறிப்பாக அமைச்சர் அவர்கள் சொல்லும்போது கொஞ்சம் ஐயப்பாடு எழுகின்றது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இந்தத் தொகையே மொரார்ஜி தேசாய் அவர்கள் நிதி அமைச்சராக இருந்தபோது கொடுக்கப்பட்டதுதான். அவசியத்தையொட்டி இந்தத் தொகை கொடுக்கப்பட்டதேயன்றி அரசியலுக்காகக் கொடுக்கப்படவில்லை.

**திரு. எஸ். இராமலிங்கம்:** அடுத்தபடியாக, நிலச் சீர்திருத்தத்தைப் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். அவர்கள் நல்ல உள்ளம் கொண்டவர்கள். ஏழை எளிய மக்களுடைய நல்வாழ்விற்கு ஏதாவது தீவிரமாகச் செய்ய வேண்டும் என்று அடிக்கடி சொல்லிக்கொண்டு வருகின்றவர்கள். குறிப்பாக மொத்த மக்களில் 75 சதவிகிதத்தினரான கிராம வாழ் மக்களுக்கு, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நிலத்தைச் சார்புடைய கிராம வாழ் மக்களுக்கு ஏதாவதொன்றைச் செய்ய வேண்டும் என்ற விருப்பத்தைத் சொல்லிக் கொண்டு வந்தவர்கள். இப்படிப்பட்ட மக்களுடைய வாழ்க்கை பிரச்சினை தீர வேண்டுமானால் ஜீவாதாரமான பிரச்சினையான நிலச் சீர்திருத்தப் பிரச்சினையில்தான் ஏதாவது செய்து தீர வேண்டும். என்று அடிக்கடி சொல்லிக்கொண்டு வருகின்றவர்கள். ஆனால் சென்ற ஒரு ஆண்டு காலமாக அவர்கள் இப்படிப்பட்ட எண்ணங்களைச் சொல்லாமல் இருந்தது சற்று வியப்பாகவும் ஏமாற்றமாகவும் இருந்தது. இவர்களையும் யாராவது மிரட்டி 'இப்படியெல்லாம் பேசாதீர்கள்' என்று சொல்லிவிட்டார்களோ என்று அச்சப்பட்டேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** நண்பர் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான எண்ணத்தைக் கொண்டு இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். யாரும் யாரையும் மிரட்டுவது என்பது கிடையாது. இங்கே எந்த விதமான அபிப்பிராய பேதமும் இல்லை. எப்படிப்பட்ட கருத்து வேறுபாட்டுக்கும் இந்த அமைச்சரவையிலேயே இடம் இல்லை. ஒரே மாதிரி கொள்கை, ஒரே மாதிரியான குரல் என்ற வகையிலேதான் செயல்பட்டு வருகிறோம்.

**திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி:** அவர்களுக்குள் உள்ள அபிப்பிராய பேதங்களை மனத்தில் வைத்துக்கொண்டு சொல்லுகிறார்கள் போல இருக்கிறது.

**திரு. எஸ். ராமலிங்கம்** : மன்னிக்க வேண்டும். அந்த மாதிரியான ஐயப்பாடு இருந்தது என்றுதான் குறிப்பிட்டேன். இப்போது அந்த மாதிரியான எண்ணம் எனக்கு இல்லை என்றுதான் சொல்ல வந்தேன். முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கரிலிருந்து 15 ஸ்டாண்டர்டு ஏக்கராகக் கொண்டு வர இருப்பதைப் பாராட்டுகிறேன். ஆளும் கட்சியிலுள்ள சில நண்பர்கள் குறைப்பட்டுக் கொண்டார்கள், 'என்ன இது, இப்படிப்பட்ட புரட்சிகரமான மாறுதல்களைக் கொண்டு வருகின்றோம், ஆனால் எதிர் தரப்பில் உள்ளவர்கள் இதற்காக எங்களைப் பாராட்டுவதில்லையே' என்று. பாராட்ட வேண்டிய இடத்தில் பாராட்டு சொல்வதற்கு நாங்கள் தவறுவதில்லை. குற்றங்குறைகளைச் சொல்வதற்காக மட்டும் நாங்கள் இங்கே இல்லை. ஆனால் அவர்கள் ஒன்றை மறந்து விட்டார்கள். இப்படிப்பட்ட புரட்சிகரமான திட்டங்களுக்கு வித்திட்டவர்களே நாங்கள்தான். அப்படிப்பட்ட சீர்திருத்தங்களைக் கொண்டு வந்து இருக்கிறோம். மேலும் அந்த சீர்திருத்தங்களை விரிவு படுத்துவதற்கான, தீவிரப்படுத்துவதற்கான சாதகமான நிலைமையை நாங்கள் மேலும் உருவாக்கிக்கொடுத்துவிட்டு வெளியேறியிருக்கிறோம். ஒரு தனிப்பட்ட மனிதன் எவ்வளவு நிலம் வேண்டுமானாலும் வைத்துக்கொண்டு இருக்கலாம்—மிட்டாதார்கள், மிராசுதாரர்கள், ஜமீன்தாரர்கள், மகாராஜாக்கள் எல்லாம் எவ்வளவு நிலம் வேண்டுமானாலும் வைத்துக்கொண்டு இருக்கலாம் என்று இருந்த நிலையை உடைத்து, நாங்கள் தோற்றாலும் பாவர்யில்லை, இவர்களுடைய ஆதரவு நமக்கு கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை என்று மிகப் பெரிய நிலச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தோம். எனவே இதற்காக நீங்கள்தான் எங்களையெல்லாம் பாராட்டியிருக்க வேண்டும். ஆனால் கடந்த காலத்தில் நீங்கள் அப்படி பாராட்டத் தவறியிருக்கிறீர்கள். இது போகட்டும். எப்படியிருந்தாலும் நீங்கள் செய்யும் இப்படிப்பட்ட சீர்திருத்தங்களுக்கு எங்கள் பாராட்டுகள்.

அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று கொண்டு வந்தால் மட்டும் போதாது. இருக்கும் அவ்வளவு நிலச் சீர் திருத்தச் சட்டங்களையும் ஒன்று படுத்தி அமுலாக்கக்கூடிய ஒரு 'காம்ப்ரெஹென்சிவ்' ஆக்ட் ஒன்றைக் கொண்டு வரவேண்டும் என்று சொல்லுகின்றார்கள். வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். இதை எவ்வளவு சீக்கிரமாகக் கொண்டு வர முடியுமோ அவ்வளவ சீக்கிரமாகக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இருக்கும் சட்டத்தில் உள்ள ஓட்டைகளையெல்லாம் அடைத்து இப்படிப்பட்ட ஒரு ஒட்டுமொத்தமான சட்டம் கொண்டு வந்தால் நல்ல பலனைக் கொடுக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இப்படிப்பட்ட சட்டங்களின் மூலம் நிலத்தைக் [illegible]ப்பதன் காரணமாக உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டுவிடும் [illegible] சுதந்திராக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் குறிப்பிட்





கிறார்கள். அவர்கள் சொல்லுவது நியாயம்தான். காரணம் அவர்கள் ஆண்டு ஆண்டு காலமாக பெரும் அளவு நிலங்களை அனுபவித்துக் கொண்டு வந்தவர்கள். இப்போது அவர்களிடமிருந்து அப்படிப்பட்ட நிலத்தைப் பறிப்பதற்குச் சட்டங்கள் கொண்டுவரும்போது எதிர்ப்பு இருக்கத்தான் செய்யும். அது அவர்களுடைய நியாயம். இப்படிப்பட்ட தீவிரமான சட்டங்களை அவர்களுடைய நிலையிலிருந்துதான் பார்ப்பார்களே தவிர, நாட்டிலுள்ள ஏழை எளிய மக்களுடைய நிலையிலிருந்து பார்க்க அவர்களுக்குத் தெரியாது. அது அவர்களுக்கு அவசியமும் இல்லை. கிராமத்திலுள்ள ஏழை எளியவர்களுடைய வாழ்வு மிகவும் பரிதாபத்திற்கு உரியது. சென்ற ஆண்டு ஏற்பட்ட பஞ்சத்தின்போது பார்த்தோம். அவர்களுக்கு நிரந்தரமான வேலை வாய்ப்புகள் கூட இல்லை. அதிலும் குறிப்பாக இராமனாதபுரம் தருமபுரி மாவட்டங்களில் ஏற்பட்டு இருந்த கொடுமை சாதாரணமானது அல்ல. அவ்வளவு பயங்கரமானதாக இருந்தது. இப்படிப்பட்ட நிலையில், இந்த மாதிரியான ஒரு நிலச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்து நிலம் அற்ற ஏழை எளியவர்களுக்கு ஒரு ஏங்கர் அல்லது இரண்டு ஏக்கர் என்று கொடுத்தால், அவர்கள் மிகவும் ஆர்வத்துடனும் ஊக்கத்துடனும் உழைப்பார்கள். அதனால் உற்பத்தி மேலும் அதிகரிக்குமே தவிர, குறைந்துவிடாது.

"வையகம் முழுவதும் வறிஞன் ஓம்பும் ஓர்
செய்யெனக் காத்து இனிது அரசு செல்கின்றான்"

என்று கம்பராமாயணத்தில் தசரதன் தன்னுடைய சாம்ராஜ்யத்தில் எப்படி மக்களின் நல்வாழ்வில் கண்ணும் கருத்துமாக இருந்தானோ அந்த அளவிற்கு நிலம் அற்ற ஏழைக்கு நிலம் கொடுக்கப்பட்டால், அதைக் கண்ணும் கருத்துமாக பார்த்துக்கொள்ளுவான். எனவே ஏழை எளியவர்கள் கையில் நிலத்தைக் கொடுத்தால்தான் அவர்கள் கண்ணும்கருத்துமாக அதைப் பராமரிப்பார்கள். அதே நேரத்தில் உணவு உற்பத்தி நிச்சயமாகப் பெருகும் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் தேவையில்லை. பெருகும் பொருளாதார நிபுணர்கள் சொல்லியிருப்பதுபோல குறிப்பாக டாக்டர் பி. வி. நாராயணசாமி நாயுடு அவர்கள், ஜே. சி. குமரப்பா போன்றவர்கள் சொல்லுகிறார்கள் இப்படிப்பட்ட நிலச் சீர் திருத்தத்தைக் கொண்டு வந்தால், கிராமப் பொருளாதாரம் பாதிக்கப்படாது அதே நேரத்தில் உணவு உற்பத்தி பெருகும் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் 30 ஏக்கருக்குக் குறைத்த பிறகுதான் இப்போது பார்க்கின்றீர்கள் ஆறு லட்சம் டன் அதிக அளவிற்கு தான்யம் உற்பத்தியாகியிருக்கிறது என்று. எனவே குறைப்பதால் உற்பத்தி குறையும் என்று சொல்லும் வாதம் பொருந்தாது. எப்படியாவது இந்தச் சட்டம் வராமல் இருக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் இப்படியெல்லாம் பூச்சாண்டி காண்பிக்கலாம். இதைக் கண்டு நீங்கள் பயப்படத் தேவையில்லை நாங்களாவது நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தபோது தனியாக நின்று கொண்டு

[திரு. எஸ். ராமலிங்கம்] [1970 மார்ச் 13

வந்தோம். இப்போது நீங்கள் கூட்டணியாக இருந்து கொண்டு வருகின்றீர்கள். எனவே எந்தவிதமான தொல்லையோ குறுக்கீடோ ஏற்படும் என்று நீங்கள் ஐயம் கொள்ளத்தேவையில்லை. இந்த சட்டத்தினைக் கொண்டு வருவதற்காக நான் மீண்டும் உங்களைப் பாராட்டுகிறேன்.

மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்களுக்கும் முதல் அமைச்சர் அவர்களுக்கும் இப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று எண்ணியிருந்த நோக்கில் அவர்கள் மனத்தில் பல சிந்தனைகள் ஓடியிருக்கக்கூடும். காரணம் அவர்கள் அமர்ந்துள்ள நாற்காலி சாதாரண நாற்காலி அல்ல. விதுரர் போன்று வீற்று இருக்கும் அந்த மாமுனிவர் கொடுத்த நாற்காலி அல்லவா அது. அந்த மாமுனிவருடைய உள்ளம் நோக இதையெல்லாம் செய்யலாமா என்ற ஐயப்பாடு தோன்றியிருக்கலாம். நான் எண்ணுகிறேன், இந்த சீர்திருத்தத்திற்கான திட்டத்தைத் தீட்டும் போது நாற்காலியில் கூட அமர்ந்து தீட்டியிருக்கமாட்டார்கள் என்று. வேறு ஸ்டூலில் அமர்ந்து இருந்திருக்கக்கூடும். ஆனால் பயப்படத் தேவையில்லை என்று ஆளும் கட்சியினருக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மேல் நாட்டுப் பொருளாதாரத்தைக் காட்டி அவர்கள் வாதிடக்கூடும். ஜப்பான் மிகச் சிறிய நாடு. அங்கேயே குறுகிய நிலப்பரப்பில், குறுகிய காலத்தில் அதிகமான விளைச்சலை உற்பத்தி செய்கிறார்கள். எனவே நிலப்பரப்பைக் குறைத்துவிடுவதால், விளைச்சல் பாதிக்கும் என்று எண்ணம் கொள்ளத் தேவையில்லை, என்று சொல்லிக்கொண்டு இந்தச் சட்டத்தை நல்ல முறையில் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும் ஒன்றை மட்டும் இந்த மன்றத்தின் முன்பு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். விதி விலக்கு என்று இப்போது இருக்கிறது. இது விஷயத்தில் சற்று எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கோவிலுக்கு விதி விலக்கு, கரும்புத் தோட்டத்திற்கு விதிவிலக்கு, மடத்திற்கு விதிவிலக்கு, மாடு மேயும் நிலத்திற்கு விதிவிலக்கு என்று எல்லாம் விதிவிலக்கு கொடுத்துவிட்டால், முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல் "மூன்று மூலையில் மூன்று குளம் வெட்டினேன். இரண்டு குளம் பாழ் ஒன்று தண்ணீரே இல்லை" என்று கடைசியில் எஞ்சுவது ஒன்றும் இல்லாமற் போய்விடும். பல ஆண்டுகளாக பெரும் நிலப்பரப்பை தங்கள் ஆதிக்கப் பிடியில் வைத்துக்கொண்டு இருந்தவர்கள் இப்போது அவ்வளவு சீக்கிரம் அவற்றைக் கொடுத்துவிட முன் வர மாட்டார்கள். அப்படிப்பட்ட திட்டத்தினைத் [illegible] சொல்லத்தான் சொல்லுவார்கள். [illegible] ஒன்றை ஏற்படுத்தி விருக்கிறேன், அதற்கு இந்த நிலம் என்று சொல்லுவார்கள். இவ்வளவு காலம் நல்ல பணிகளுக்கு மனதைத் திருப்பி [illegible] தயங்கியவர்கள் இப்போது [illegible] வருகின்றது என்று [illegible] இப்படிப்பட்ட' [illegible]



1970 மார்ச் 13] [திரு. எஸ். ராமலிங்கம்]

எனவே இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் மனதில் வைத்துக் கொண்டு நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இன்று இப்படிப்பட்ட நடவடிக்கைகளுக்கு எதிப்பு தெரிவிக்கிறவர்கள் நாளைக்கு எப்படி 'ரீ-ஆக்ட்' செய்யப் போகிறார்கள் என்பதை நீங்கள் பார்க்கத்தான் போகின்றீர்கள். அப்போது சொன்னீர்கள், 'கோவிலைக் கண்டு பயப்பட மாட்டோம், கோவில் நிலங்களை எடுக்க தயங்க மாட்டோம்' என்று. பயப்படாமல் உரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுங்கள். அதற்காக உங்களைப் பாராட்ட கடமைப்பட்டு இருக்கிறோம்.

கடைசியாக, மாவட்டங்கள் பெரிய அளவிலே, மாறுபட்ட அளவிலே இருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பார்த்தால் சின்ன மாவட்டம், தர்மபுரியும் மிகச் சிறிய மாவட்டம், ஆனால் இராமநாதபுரம், தஞ்சாவூர், தென்னார்க்காடு, திருச்சிராப்பள்ளி போன்ற மாவட்டங்கள் மிகப்பெரிய மாவட்டங்கள். இப்படிப்பட்ட மாறுபாடு இருக்கிறது. நிர்வாகமெல்லாம் சீரான முறையில் நடக்க வேண்டுமென்றால், மாவட்டங்களை எவ்வளவு சீக்கிரம் இரண்டாகப் பிரித்து, நல்லபடியாக நிர்வாகம் செய்ய வேண்டுமோ, அந்த அளவுக்குச் செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை நான் முடித்துக்கொள்கின்றேன், வணக்கம்.

**திரு. என். ராஜாங்கம் :** சட்டப்பேரவைத் தலைவரவர்களே, இந்த அரசு ஏற்பட்டதற்குப் பிறகு, மாவட்ட நிர்வாகம் எந்தநிலையில் இருக்கிறது என்பதைப்பற்றி நான் ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். மாவட்ட நிர்வாகங்கள் ஏற்கெனவேயிருந்த நிலைக்கும், இப்பொழுது சுமார் மூன்றாண்டுக்காலமாக இருக்கும் நிலைக்கும் உள்ள நிர்வாக வகைகளை மக்கள் அறிந்து கொண்டிருக்கிறார்கள். மூன்றாண்டுக் காலத்தில், குறிப்பாகச் சொல்லப்போனால், பொதுவாகத் தமிழ்நாட்டிலே, சிறப்பாக தென்னார்க்காடு மாவட்டத்திலே சொல்லப்போனால், தென் ஆர்க்காடு மாவட்டத்திற்கு இன்றோடு 4 மாவட்ட அதிகாரிகள் வந்திருக்கிறார்கள். இந்த 4 மாவட்ட அதிகாரிகளுக்கும், ஏற்கெனவே இருந்த மாவட்ட அதிகாரிகளுக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது என்றால், மக்களிடத்திலே நன்கு பழகி, பொதுமக்களுக்கு என்னென்ன தேவைகள் எப்பொழுது ஏற்படுகிறதோ, அவைகளையெல்லாம் கண்காணித்து வருவதை மாவட்ட மக்கள் அறிவார்கள், சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். பொதுவாக நான் சொல்ல விரும்புவது, வறட்சி நிவாரணப் பகுதி வேலைகளை எடுத்துச் செய்யும்பொழுது, அரசாங்கத்தின் நிலை என்ன என்று கருதி, பொதுமக்கள் நலனையும் கருதி, மாவட்ட அதிகாரிகள் என்ன சிரமப்பட்டு அந்த நிவாரண வேலைகளைச் செய்தார்கள் என்பதையெல்லாம் நான் ரெக்கார்டு மூலம் சொல்லத் தேவையில்லை, நேரில் பார்த்தவர்களுக்குத் தெரியும். ஒவ்வொருநாளிலும் அந்த வேலையை எடுத்துச் செய்து

[திரு. என். ராஜாங்கம்] [1970 மார்ச் 13

முடிக்க என்னென்ன முயற்சிகளை எடுத்துக்கொண்டார்கள் என்பதற்கு, அரசாங்கத்திற்கு வெற்றிகரமாக, குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட வேலையை, குறிப்பிட்ட தொகையில் முடித்துக்கொடுத்ததே சான்றாகும்.

இன்னொன்று சொல்ல ஆசைப்படுகிறேன். மாவட்ட அதிகாரிகளாக, மாவட்ட ஆட்சித் தலைவராக இருக்கும் கலெக்டருக்கு அதிகப் பளுவைக் கொடுத்திருக்கிறோம். பொதுவாக, முன்னாலே மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தபொழுது ரெவின்யு துறையில் ஒரு பகுதி, நீதித்துறையில் ஒரு பகுதி இதைத்தவிர வேறொன்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால், 10, 15 ஆண்டுகளுக்குப் பிறகு நாளுக்குநாள் அபிவிருத்தி வேலைகள் அதிகமாக நடந்துக்கொண்டிருக்கும் இந்த நாளில் மாவட்ட அதிகாரி எல்லாத் துறையையும் கவனிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து முறையை ஏற்படுத்தியிருக்கிறோம்.

(திரு. ந. தருமலிங்கம் தலைமை)

பஞ்சாயத்து யூனியன்களுக்கு, ஒரு பிளாக்கிற்கு பிளாக் டெவலெப்மெண்ட் ஆபீசர் அல்லது கமிஷனர் என்று போட்டிருக்கிறோம், பொதுவாக ஒவ்வொருதுறையிலேயும், மருத்துவம் என்றோ, சுகாதாரம் என்றோ, அல்லது பொதுமராமத்துப் பணி அல்லது நெடுஞ்சாலை என்றோ எடுத்துக்கொண்டால், ஒரு மாவட்ட அதிகாரி வேலை செய்து கொண்டிருக்கிறார். ஆனால் அதிக பணத்தைச் செலவழித்துச் செய்யும் பஞ்சாயத்துக்களைப் பொறுத்தவரையில் மாவட்டத்திற்கு என்று பொது அதிகாரி ஒருவர் இல்லை என்ற குறையினால் மாவட்ட அதிகாரிகளுக்கு, கலெக்டர்களுக்கு அதிக வேலைப்பளு ஏற்படுகிறது. ஆகவே, அவர்கள் எவ்வளவுதான் விரைவாக வேலை செய்து, சர்க்காருக்குப் பொதுமக்களிடத்திலிருந்து நல்ல பெயரை ஏற்படுத்த வேண்டும், நாட்டிற்காக நன்மையைச் செய்யவேண்டுமென்று கருதினாலும்கூட, அவர்கள் உழைப்பினால் பலன் ஏற்படக் காலதாமதம் ஆகிறது. ஆகவே, என்னுடைய கருத்து, பஞ்சாயத்திற்கு என்று தனி மாவட்ட அதிகாரி ஒருவரை நியமிக்க வேண்டும். அவருக்கு டிஸ்ட்ரிக்ட் டெவலெப்மெண்ட் ஆபீசர் என்று பெயர் கொடுக்கலாம் என்று கருதுகிறேன். ஒவ்வொரு துறையிலும் ஒரு மாவட்ட அதிகாரி இருக்கும்பொழுது, அதிகப் பணம் செலவழிக்கிற, அதிகக் கவனம் செலுத்த அதிகமாக மக்கள் பங்குகொள்ளும் ஒரு துறைக்கு மாவட்ட ரீதியாக ஒரு அதிகாரி இல்லை. ஆகவே, டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் ஆபீசர் என்று நியமிக்கலாம் என்ற என்னுடைய கருத்தை நான் அரசுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்துக்களில், இருக்கின்ற எல்லாத் துறைகளையும் சேர்த்துக் கவனிக்க வேண்டிய நிலை இருக்கிறது. பி.டி.ஓ. அல்லது கமிஷனர் என்றிருந்தால் அவர் எல்லாத் துறைகளையும், ஒரு அரசு செய்கிற அத்தனை துறையையும் கலந்து



1970 மார்ச் 13] [திரு. எஸ். ராமலிங்கம்]

கொண்டு பணியாற்ற வேண்டியநிலை இருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு டெவலெப்மெண்ட் ஆபீசரையும் அல்லது கமிஷனரையும் கிட்டத்தட்ட கெஜட் பதிவுள்ள அதிகாரியாக நியமிப்பது நல்லது என்ற கருத்தை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதற்குக் காரணம், எவ்வளவுதான் வேலை செய்து முடித்தாலும் கூட, கடைசியாக மாவட்ட கலெக்டரிடமோ அல்லது அதற்காக தனியாக உள்ள பி.ஏ. (பிளானிங்) அவரிடமோதான் காரியம் செயல்பட வேண்டியிருக்கிறது. ஆகவே, அதைக் கெஜட்டட் ஆகச் செய்ய வேண்டுமென்ற கருத்தை நான் சொல்லிக்கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக மாவட்டத்தில் இன்று மனுநீதித் திட்டம் என்று அரசு ஏற்படுத்தியிருக்கும் காலத்தில், மாவட்டத்திலே உள்ள ஒவ்வொரு அதிகாரியும் ஒவ்வொரு மாதத்திலும், மனுநீதித்திட்டம் என்ற பெயரால், கிராமங்கள்தோறும் சென்று ஆங்காங்குள்ள குறைகளைத்தெரிந்து, ஆங்காங்கு பைசல் செய்ய வேண்டியிருக்கிறது. அப்பொழுது ஒரு மாவட்டத்திலுள்ள அத்தனை துறை அதிகாரிகளும் அதில் கலந்து கொள்ளக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அந்தச் சூழ்நிலை ஏற்படும்பொழுது மாவட்ட அதிகாரிகளும் கலந்துகொள்ளும், நேரடியாக கலெக்டர்களே கலந்துகொள்ளும், நாட்களும் உண்டு. அந்த நாட்களில், கலெக்டர்களுக்கு இருக்கும் பளுக்கள், அரசாங்கத்திலிருந்து தகவல் கேட்டால் அதற்குப் பதில் சொல்ல வேண்டும். அதேபோல் அங்குள்ள நிலைமைகளைச் சரி செய்ய வேண்டும். பொதுமக்கள் பார்க்க வந்தால், பதில் சொல்ல வேண்டும், இப்படிப்பட்ட நிலையில் இருக்கும் ஒரு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு, அவருக்குத் துணையாக, அவர் செய்யக்கூடிய எல்லாக் காரியங்களையும் செய்யக்கூடிய அதிகாரம் பெற்ற ஒருவரை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உதவியாக நியமிக்க வேண்டுமென்ற கருத்தைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது உதவியாளர்கள் இரண்டு பேர்கள் இருக்கிறார்கள். ஒருவர் பொது, அதாவது ஜெனரல் பீ.ஏ. இரண்டாவது பிளானிங் பீ.ஏ., பஞ்சாயத்து டெவலப்மெண்ட் வேலைகளைச் செய்யக்கூடிய பீ. ஏ. எனவே, இவர்கள் அந்தக் காரியத்தைச் செய்யக்கூடிய சாத்தியம் இல்லாமல் இருப்பதால் தனியாக ஒருவரை, பீ.ஏ. வாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு, அவர் இல்லாத காலத்தில் செயல்பட வேண்டிய அளவுக்கு நியமனம் செய்ய வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

எல்லா நல்ல காரியங்கள் ஏற்பட்டாலும், ஒரு நல்ல காரியம் செய்ய வேண்டியிருக்கிறது. அரசு, கீழே இருப்பவர்களிடத்திலே கவனம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது. கீழேயிருக்கும் தலையாரி, தோட்டிகள், கர்ணம்கள், முன்சீப்புகள் அதாவது கிராம மணியக்காரர்கள் ஆகியவர்களுக்குச் சில குறைகள் இருந்து கொண்டுவருவதாகச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். ஒரு சில வற்றைச் செய்திருக்கிறோம். இன்னும் சில செய்தாக வேண்டும்

[திரு. என். ராஜாங்கம்] [1970 மார்ச் 13]

அப்படிச் செய்ய நான் சொல்லும் யோசனை என்னவென்றால், அவர்களுக்குச் சம்பளத்தைக் கூட்டிக்கொடுக்கவேண்டும். கிட்டத்தட்ட இரண்டு வேலைகளை அவர்கள் செய்ய வேண்டியிருக்கிறது. ஒரு வேலை ஏற்கெனவே இருந்த வேலை. இரண்டாவது வேலை, பஞ்சாயத்துக்களில் நுழைந்து அங்குள்ள ரெவின்யூ முறைகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, அவர்களுக்குள்ள வேலையை நிர்ணயம் செய்வதற்காக, இதைத்தான் அவர்கள் செய்ய வேண்டுமென்று திட்டவட்டமான அறிவிப்பைச் செய்ய வேண்டும். எப்படிச் செய்தாலும், மணியக்காரர், கணக்குப்பிள்ளை, தோட்டிகள், தலையாரிகள் ஆகியவர்களின் சம்பளத்தை ஏற்றிக்கொடுக்க அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். செய்தாக வேண்டும். அவர்கள்தான் ஒரு அரசுக்குக் கீழேயிருக்கும் கடைசி அதிகாரிகள். அவர்கள் உள்ளபடியே வேலை செய்தால்தான், இந்த அரசுக்கு நல்ல பெயர் கிடைக்கும் என்பது இன்று நேற்று அல்ல, இந்தத் துறை ஏற்பட்டதிலிருந்து அவர்கள் உழைப்பு தேவைப்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், எத்தனையோ பெரிய இடங்களில் உள்ள அதிகாரிகள், சிப்பந்திகள் எல்லாம் களவு செய்து, கையாடல் செய்து, அதற்காகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்கள். ஆனால் கீழ்மட்டத்திலேயுள்ள இந்தத் தோட்டி, தலையாரிகள் எங்கேயாவது அரசாங்கப்பணத்தை கஜானாவிற்கு எடுத்துச் செல்லும்பொழுது கையாடல் செய்து சிறைவாசம் செய்திருக்கிறார்களா? அரசாங்கம் தண்டித்திருக்கிறதா என்றால், இந்த நாட்டில் அப்படித் தவறு நடக்கவில்லை. இந்த இந்திய உபகண்டம் பூராவும் அம்மாதிரிக் குற்றச்சாட்டு ஏற்பட்டதே இல்லை. தோட்டி, தலையாரிகளில் சிலரை எடுத்து இருக்கிறோம். அவர்களெல்லாம் இன்று வேலை கிடைக்கும், மறுபரிசீலனை செய்து அரசாங்கம் உதவும் என்று இருக்கிறார்கள். எனவே மறுபரிசீலனை செய்து உள்ளபடியே, வயதானவர்களுக்கு இல்லாவிட்டாலும், வாலிபர்களுக்காவது, வேறொரு வேலையை மாற்றுவேலையைக் கொடுத்து, அவர்களை ஆதரிக்க வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.



1970 மார்ச் 13] [திரு. என். ராஜாங்கம்]

றும் என்று நம்பிக்கொண்டிருந்தாலும், அரசாங்கம் லட்சக்கணக்கில் பணத்தை ஒதுக்கி வைத்தாலும், மக்கள் எதிர்பார்க்கும் பலன் கிடைக்கவில்லை என்பது நாம் எல்லோரும் ஒப்புக் கொண்ட ஒன்று, ஒத்துக்கொள்கிற ஒன்று. ஆகவேதான், அந்தத் துறைக்கு மேலும் பொறுப்பை அளிக்கும் வகையில், அதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் தனிக் கவனம் செலுத்த, அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கும் நல்லதொரு திட்டத்தை, பசுமைப்புரட்சித் திட்டத்தை, அமல் படுத்த, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிக அதிகாரம் கொடுக்க வேண்டுமென்ற என்னுடைய கருத்தையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த மனு நீதித் திட்டத்தின் கீழ் என்னுடைய மு.ப. 11-00
மாவட்ட ஆட்சித் தலைவரை என்கூட அழைத்துச்சென்றபொழுது, அவர் காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரைக்கும் சாப்பிடக்கூட இல்லை, அவருக்கு மயக்கம் கண்டு, சோடா குடித்து தெளிய வைக்கவேண்டிய நிலைமைகூட ஏற்பட்டது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அமைச்சர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், பொது மக்களுடைய பிரதிநிதிகளுக்கு எவ்வளவு வேலை பளு இருக்கிறதோ, எப்படி பசியென்றும் பாராமல், பட்டினி என்றும் பாராமல், அவர்கள் எப்படி மக்களுக்காக உழைக்கவேண்டுமென்று எண்ணம் கொண்டிருக்கிறார்களோ, அந்த எண்ணத்தில் எப்படி மக்கள் நம்மை அனுப்பி வைத்திருக்கிறார்களோ, நாமும் அதே போல் கஷ்டப்பட்டு மக்களுக்காக உழைகிறோமோ, அதே நிலையில் அந்த அதிகாரிகளும் உழைக்க முன்வருகிறார்கள், உழைக்கிறார்கள். உதாரணத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவரை எடுத்துக்கொண்டால், நம்முடைய நிலையில் அவர்களும் இருந்துகொண்டு உழைக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட ஊழியர்களை ஊக்கிவைத்து, அவர்களுடைய வேலை பளுவைக் குறைப்பதற்கு, அவர்களுக்கு இருக்கிற வேலைகளுக்கு அதிக அதிகாரத்தைக் கொடுப்பதற்கு இந்த அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. கே. போஜன்: தலைவர் அவர்களே, இந்த வருவாய்த் துறை மானியத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நான் நன்றி தெரிவித்துக் கொண்டு, எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். தமிழக அரசு மாவட்ட ரீதியில் மனுநீதித் திட்டம் என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. அது மிகவும் வரவேற்கக்கூடிய ஒரு நல்ல திட்டம். ஆனால், அந்தத் திட்டம் செயல்படும் முறையில், அது நல்ல முறையில் செயல்படுவதற்கு நாம் வேண்டிய வசதிகளைச் செய்து தரவேண்டும். பொதுவாக, முன்பெல்லாம் மக்கள் அவர்களுடைய குறைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு மாவட்ட அதிகாரிகள் அல்லது வட்ட அதிகாரிகள் ஆகியோர் இருக்குமிடத்திற்குச் சென்று குறைகளைச் சொல்லி தீர்த்துக் கொள்ளவேண்டும் என்ற நிலைமை இருந்தது. அதனால் மக்கள் அதிக கஷ்டங்களை அனுபவிக்க வேண்டிய நிலை இருந்தது, காலதாமதமும் ஏற்பட்டது. ஆனால் இப்பொழுது மாவட்டத்திலுள்ள

[திரு. கே. போஜன்] [1970 மார்ச் 13

அதிகாரிகள் மக்களிடையே சென்று அவர்களுடைய குறைகளைக் கேட்டறிந்து, அந்தக் குறைகளைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆனால், அதே சமயத்தில் எல்லா பெரிய மாவட்ட அதிகாரிகளும் குறிப்பிட்ட கிராமப் பகுதிகளுக்கெல்லாம் செல்வதற்கு இயலவில்லை. அதனால் தாசில்தாரோ அல்லது மற்ற பெரிய அதிகாரிக்கு கீழே உள்ள அதிகாரிகளோ தான் மக்களுடைய குறைகளை கண்டறிந்து வருகிறார்கள். அப்படி வரும்பொழுது, ஆங்காங்கு அவர்களுக்கு மக்களால் கொடுக்கப்படும் விண்ணப்பங்களை அந்த இடத்திலேயே பரிசீலனை செய்து, முடிவு கண்டு பைசல் செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. அந்த விண்ணப்பங்களை மாவட்ட அலுவலகங்களுக்குக் கொண்டுவந்துதான் பரிசீலனை செய்யவேண்டியிருக்கிறது. ஆகவே, முன்னால் இருந்த காலதாமதம் தான் ஏற்படுகிறது. பெரிய அதிகாரிகள், அல்லது அடுத்தபடியாக இருக்கும் அதிகாரிகள் கிராமப் பகுதிகளுக்குச் சென்று மக்களுடைய குறைகளை அறிந்து, அந்த இடத்திலேயே அந்தக் குறைகளைத் தீர்ப்பதற்கு வேண்டிய அதிகாரித்தை அந்த அதிகாரிகளுக்கு அளிக்கவேண்டும். மேற்கொண்டு கிராமப்பகுதிகளில் உள்ள பின்தங்கிய வகுப்பினர், அரிசனங்கள் வீடுகள் கட்டிக்கொள்வதற்கு நிலம் இல்லாதவர்கள், விவசாயம் செய்வதற்கு நிலம் இல்லாதவர்கள் நிலம் வேண்டும் என்று கோரி விண்ணப்பம் செய்துகொண்டால், அந்த விண்ணப்பங்கள் மாவட்ட அலுவலகத்திற்கு வந்து, பிறகு அங்கிருந்து வருவாய்த்துறை வாரியத்திற்கு வந்து, பிறகு அரசாங்கத்திற்கு வந்து, அனுமதி வழங்கப்படுகிறது. அதனால் நீண்ட நாட்கள் காலதாமதம் ஏற்படுகிறது. அவ்வித குறைகளையெல்லாம் தீர்ப்பதற்கு, உண்மையான நியாயமான கோரிக்கைகளாக இருந்தால், அந்த இடத்திலேயே அந்த மாவட்டரீதிலேயே அந்த விண்ணப்பங்களை பைசல் செய்வதற்கும் வீட்டு மனை அல்லது நிலம் இல்லாதவர்களுக்கும், நிலம் கொடுப்பதற்கும் வேண்டிய அதிகாரத்தை அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கொடுப்பது நல்லது. அதோடு வட்ட அதிகாரிகளாக இருக்கும் தாசில்தார் போன்றவர்களுக்கு அதிகமான அதிகாரத்தைக் கொடுத்தால், இந்த மனு நீதித் திட்டம் நல்ல முறையில் செயல்படும் என்பது என்னுடைய கருத்து.

சில மாவட்டங்களில் பெரிய அதிகாரிகள் மாற்றப்படுவதன் காரணமாக, அல்லது அவர்கள் உத்தியோக உயர்வு பெற்று வேறு உத்தியோகங்களுக்குச் செல்லுவதன் காரணமாக, காலியாகும் இடங்களுக்கு, உடனடியாக வேறு அதிகாரிகளை நியமிப்பதில்லை. அம்மாதிரி வேறு அதிகாரிகள் நியமிப்பதில் மிகுந்த காலதாமதம் ஆகிறது. அதனால் மாவட்டத்திலுள்ள மக்கள் பெருவாரியாக கஷ்டங்களுக்குள்ளாகிறார்கள். மேலும் சம்பந்தப்பட்ட துறையிலே உள்ள வேலைகள் நல்ல முறையிலே நடப்பதில்லை. இதை அரசாங்கம் உடனடியாகக் கவனித்து காலியாக உள்ள ஸ்தானங்களுக்கு காலதாமதம் இல்லாமல் உடனுக்குடன் அதிகாரி



1970 மார்ச் 13] [திரு. கே. போஜன்]

களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக நீலகிரி ஜில்லாவில் ஜில்லா கல்வி அதிகாரி மாற்றப்பட்டு அநேக மாதங்கள் ஆகிவிட்டன. இருந்தும், அந்த ஸ்தானத்தில் இன்னொரு கல்வி அதிகாரி இன்னும் நியமிக்கப்படவில்லை. ஆகவே, உடனடியாக ஜில்லா கல்வி அதிகாரியை நியமித்து, கல்வி துறையிலே உள்ள குறைபாடுகளை உடனுக்குடன் போக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதே போன்று நீலகிரி ஜில்லாவில் விவசாய அதிகாரி மேல் நாடுக்கு மேல் படிப்புக்காக சென்றுவிட்டார். அந்த அதிகாரி போய் சில மாதங்கள் ஆகியும், அந்த இடத்தில் மற்றொரு அதிகாரி இன்னும் நியமிக்கப்படவில்லை. அதனால் விவசாயத் துறையில் அநேக வேலைகள் தடைபட்டிருக்கின்றன. அதையும் அரசாங்கம் உடனடியாக கவனிக்க வேண்டும். அதேபோன்று உதவி பப்ளிக் பிராசிகியுட்டர் ஒருவர் அநேக மாதங்களாக நியமிக்கப்படாமல், அந்த ஸ்தானம் காலியாகவே இருந்தது. இப்பொழுது தான் அந்தப் பதவிக்கு ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இம்மாதிரியான காலதாமதத்தை அரசு உணர்ந்து, இப்படிப்பட்ட குறைபாடுகளை நீக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுவும் அல்லாமல், மாவட்ட ஆட்சி நல்ல முறையில் நடப்பதற்கு, அதற்கு உறுதுணையாக பெரிய அதிகாரிகள் மட்டுமல்ல, கெஜட் பதிவு பெறாத உத்தியோகஸ்தர்களும் உழைத்துப் பாடுபடுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கும் போதிய சலுகைகளையும், வசதிகளையும் அரசாங்கம் அளிக்கவேண்டும். அவர்களுடைய கஷ்டங்களையும், குறைகளையும் கவனித்து, அவைகளை நீக்குவதற்கு ஆவன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக மற்ற மாவட்டங்களைவிட நீலகிரி மாவட்டம் அமைப்பிலும், இயற்கையிலும் தனித்து நிற்கிறது. அங்கு வேலை செய்யும் அதிகாரிகள் அதிகத் தொல்லைகளுக்கும், கஷ்டங்களுக்கும் உட்படுகிறார்கள். காரணம் அது மிகவும் குளிர் பிரதேசம். அங்கு விலைவாசி அதிகமா இருக்கிறது. அவர்களுக்குப் போதிய வீட்டு வசதிகள் செய்து தரப்படவில்லை. இந்தக் குறைகளையெல்லாம் அரசாங்கம் உடனடியாக கவனிக்க வேண்டும். நீலகிரி, ஜில்லாவில் 1922-ம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட மலைவாசப் படி தான் இன்றைக்கும் அவர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. அதை உடனடியாக மாற்றி அமைக்க வேண்டும் என்று நான் வேண்டிக்கொள்கிறேன். மேலும், வன இலாகாவின் கீழுள்ள சாயில் கன்சர்வேஷன் ஸ்கீமில் (மண் அரிப்பு தடுப்புத்துறை) பணிபுரியும் ஊழியர்களுக்கு மலைவாசப் படி அதிகமாகக் கொடுக்கப் படுவதாகக் கூறப்படுகிறது. இம்மாதிரியான வேறுபாடுகள் பாகுபாடுகள் இருக்கக்கூடாது. அதை நீக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய சட்டமன்றத்தின் மூலம் புஞ்சை பூமிகளுக்கான அடிப்படை நிலவரியை நாம் நீக்கி, ரத்து செய்துவிட்டோம். ஆனால், நீலகிரி மாவட்டத்திலுள்ள புஞ்சைப் பகுதி

[திரு. கே. போஜன்] [1970 மார்ச் 13

யிலே தேயிலை, காப்பி போன்றவைகள் சாகுபடி செய்யப்படும் நிலங்களுக்கு அடிப்படை நிலவரி ரத்து செய்யப்படவில்லை. அதையும் அரசாங்கம் கவனித்து, குறைந்தபட்சமாக சிறிய விவசாயிகளுக்காவது இந்த அடிப்படை நில வரியிலிருந்து விலக்கு அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடிப்படை நிலவரி ரத்து செய்யப்படுகிறது என்று கருதி, அங்குள்ள ஊராட்சி ஒன்றியங்கள் அவர்கள் போடும் செஸ் வரிகளை முன்பிருந்ததைவிட இரட்டிப்பாக ஆக்கிவிட்டன. ஆகவே, சிறிய விவசாயிகள் இப்பொழுது அதிகமாக கந்தாயம் கட்டவேண்டியிருக்கிறது. இந்த குறைபாடு உடனடியாக நீக்கப்பட்டு, மற்ற மாவட்டங்களில் அளித்தது போல், நீலகிரி மாவட்டத்திலும் இந்த அடிப்படை நிலவரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கவேண்டும் என்று நான் மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். நான் இதுபற்றி அடிக்கடி இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லியும் கூட, அரசாங்கம் இதை கவனிக்கவில்லை. இனிமேலாவது உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புஞ்சை பூமிகளுக்கு அடிப்படை நில வரியிலிருந்து விலக்கு அளிப்பது போல, நஞ்சை பூமிக்கும், குறைந்தது 5 ஏக்கர் வைத்திருக்கும் சிறு விவசாயிகளுக்காவது வரி விலக்கு அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நீலகிரியில் கூடலூர் வட்டாரத்தில் ஜென்மி முறையை ஒழித்து, மத்தியில் உள்ளவர்களை ஒழித்து, நம்முடைய சர்க்கார் நிலங்களை எடுத்துக்கொண்டு, ஏற்கனவே அந்தப் பூமிகளில் விவசாயம் செய்து கொண்டுவந்த விவசாயிகளுக்கு, அந்த நிலங்களை பட்டா செய்து கொடுப்பதற்கு ஒரு சட்டம் இயற்றியுள்ளது. ஆனால், ஜென்மி சொந்தக்காரர்கள் உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு செய்து, அதை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். மேற்கொண்டு அந்தச் சட்டத்தை அமுல்நடத்த முடியாமல் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கம் உடனடியாக உயர்நீதி மன்றத்திற்குச் சென்று அந்த ரிட்மனுவை நீக்க நடவடிக்கை எடுத்து உடனடியாக இந்த பூமிகளை விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஜென்மி பூமிகளில் விவசாயம் செய்துவரும் சிறு விவசாயிகள் கந்தாயம் கட்டவேண்டும், வரி பாக்கி என்று அவர்கள் மீது ஜென்மி சொந்தக்காரர்கள் கோர்ட்டுகளில் தாவா போட்டு, அவர்கள் அந்த பூமிகளை அவர்களுடைய பிறைமி ஆட்களை வைத்து ஏலத்திற்குக் கொண்டு வந்து நாங்களே எடுத்துக்கொள்ளுகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதனால் கூடலூர் பகுதியில் இருக்கும் சிறு விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்தக் குறையை அரசாங்கம் உடனடியாக நீக்கவேண்டும். அந்த ரிட் மனு பைசல் ஆகும் வரையில், ஜென்மி சொந்தக்காரர்கள் சிறு விவசாயிகளிடமிருந்து கந்தாயமோ, அல்லது மற்ற எந்தவிதமான வரியோ வசூல் செய்யக்கூடாது என்று அரசாங்கம் உத்தரவு இட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1970 மார்ச் 13] [திரு. கே. போஜன்]

ஜமாபந்தி முறையை ஒழிக்கவும், வருவாய்த்துறை வாரியத்தை ஒழிக்கவும் சட்டம் வரும் என்று கூறினார்கள். இப்பொழுது ஜமா பந்தி முறையை, மாவட்டத்திற்கு ஒரு வட்டம் என்று படிப்படியாக ஒழிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அப்படிச் செய்வதைவிட, எல்லா மாவட்டங்களிலும் ஒரேயடியாக ஒழித்துவிட்டால் நன்மையாக இருக்கும். வருவாய்த் துறை வாரியத்தை ஒழிக்க பிரசிடெண்டு உத்தரவு பெற்றுத்தான் ஒழிக்கவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்கள். அதில் காலதாமதம் ஏற்படாமல் உடனடியாக உத்தரவைப் பெற்று, அந்த வாரியத்தை ஒழித்துவிடுதல் நலமாக இருக்கும். அதனால் மாநிலத்திற்கு எவ்வளவோ செலவினங்கள் மிச்சமாகும். பல செலவினங்களைத் தவிர்க்க முடியும். இதை அரசு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கிராம அதிகாரிகளை அமைப்பது பற்றிச் சொல்லும்போது, பரம்பரை உரிமை என்பதை ஒழித்துவிட்டு, யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம் என்று செய்திருப்பது வரவேற்கத்தக்கது. அதே சமயத்தில், பரம்பரையில் தகுதியுள்ளவர்கள் பதவிக்கு வேண்டிய படிப்புப் படித்து வேலைக்கு வந்தால், அவர்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். பஞ்ச நிவாரணத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்திற்கு 15 லட்சம் ரூபாய் கேட்டதற்கு 11.5 லட்சம்தான் கிடைத்தது. அதை நல்ல முறையில் செலவிட்டு, கிராமப் பகுதிகளுக்குக் குடி தண்ணீர் வசதி செய்து கொடுத்திருக்கிறோம். மேற்கொண்டு பல கிராமங்களுக்கு பஞ்சநிவாரண வேலை செய்ய முடியாத நிலையில் இருப்பதால், அரசாங்கம் குறைந்தபட்சம் 4, 5 லட்சம் ரூபாயாவது நீலகிரிக்குக் குடிநீர் வசதிக்கு என்று கொடுக்க வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பத்திரப் பதிவு சம்பந்தப்பட்ட வரையில், சிறிய வட்டங்களில் பத்திரங்கள் கிடைப்பது சிரமமாக இருக்கிறது. அவ்வப்பொழுது பத்திரங்கள் மக்களுக்குத் தேவையான அளவில் கிடைக்க, காலாகாலத்தில் கிடைக்கச் செய்ய ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஓய்வூதியம் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல வேண்டும். ஒவ்வொரு உத்தியோகஸ்தரும் அரசுப்பணியிலிருந்து விலகிய பின், ஊதியம் பெறுகிறார்கள். குறைந்த பட்ச ஓய்வு ஊதியத்தை 20 ரூபாய் என்பதிலிருந்து, 30 ரூபாய் என்று செய்திருக்கிறார்கள்; அதுவும் வரவேற்கத்தக்கது. ஓய்வு ஊதியத்தைக் கணக்கிடும் காலத்தையும் மூன்று ஆண்டுகள் என்றதையும் மாற்றி ஒரு ஆண்டு என்று செய்திருக்கிறார்கள். அதுவும் வரவேற்கத்தக்கதே. ஓய்வு பெற்ற உத்தியோகஸ்தர்கள் மாதத்தில் முதல் நாள் அல்லது மற்ற நாட்களில் ஊதியம் பெற ட்ரெஷரிகளுக்குப் போகிறார்கள். அந்த நாட்களில் நம்முடைய ட்ரெஷரிகளில் பெரிய கூட்டங்களாக இருக்கிறது. அவர்கள் ஓய்வுக்கு தங்குவதற்குப் போதிய இடம் இல்லை. பணம் கிடைப்பதற்கு அதிக நேரம் ஆகிறது. போதிய வசதியில்லாத காரணத்தால் அவர்கள் அவதிப்படுகிறார்

கள். குறிப்பாக, நீலகிரியில், குன்னூர், கூடலூர், உதகை போன்ற இடங்களில் இப்படிக் கஷ்டப்படுகிறார்கள். மாவட்ட அலுவலகங்களில் போதிய இடவசதி இல்லை. ஆகவே, இப்படிப்பட்ட ஓய்வு பெற்றவர்கள் ஊதியம் பெற வரும்போது, அவர்கள் தங்குவதற்கு வசதியாக ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இது நீலகிரியில் மட்டுமன்றி, மற்ற மாவட்டங்களிலும் இப்படித்தான் இருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு மாவட்ட அலுவலகத்திலும் ஓய்வு அறை ஒன்று இவர்களுக்கு என்று ஏற்பாடு செய்துகொடுக்க வேண்டும் என்று வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இதை எல்லா மாவட்டங்களிலும் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

**திரு. கொளத்தூர் கோதண்டம்:** மாண்புமிகு பேரவை மாற்றுத்தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சரவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கையை முழு மனதோடு ஆதரித்து, என்னுடைய கருத்துக்களைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய திரு. ராமலிங்கம் அவர்கள், பஞ்ச நிவாரணத்தின்போது, செய்யப்பட்ட வேலைகள் திட்டமிட்டு செய்யப்பட்டு இருக்குமானால், அந்தக்காலத்தில் செய்ததைப்போல, பவானி சாகரைக் கட்டியது போல் உருவாக்கியிருக்கலாம் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். பஞ்சம் ஏற்படும் நேரத்தில், பஞ்சத்தால் வாடும் மக்களுக்கு ஏதாவது ஒரு வேலை தரவேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு அரசு அந்த வேலையைச் செய்யும்போது, திட்டமிட்டுச் செய்யப்பட்டிருந்தால் நல்லதாக இருந்திருக்கும் என்பது சரியான வாதம் அல்ல. அப்படிச் செய்வதானால், எஸ்டிமேட் தயார் செய்து, அதற்கென்று பலப்பலக் காரியங்கள் செய்ய வேண்டும். அப்படிச் செய்த பிறகுதான் வேலைகள் செய்ய முடிந்திருக்கும். பஞ்சங்கள் காரணமாகச் செய்யப்படும் காரியங்களும் தேவையான காரியங்களாகத்தான் இருக்கும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்றால், மதுராந்தகத்தைப் பொறுத்தவரையில், 200 ஆண்டுகளாகத் தூர் வாராமல் இருந்து, தூர்ந்துபோன ஏரி, பஞ்சநிவாரணத்தின் மூலம் சலுகை பெற்றிருக்கிறது. அப்படி அந்த வேலை நடைபெற்ற காரணத்தால், விவசாயத்திற்கு ஏறக்குறைய இரண்டு மாதத்திற்கு மேற்பட்ட தண்ணீர் தங்கிநிற்கும் சூழ்நிலை உருவாகியிருக்கிறது. ஆகவே, அந்தக் காரியங்கள் திட்டமிட்டு செய்யப்பட்டிருந்தால் இப்படிப்பட்ட விளைவுகள் ஏற்பட்டிருக்குமா என்பது சந்தேகம் தான். உறுப்பினர் திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டு வந்திருக்கிற நல்ல பல திட்டங்களைப் பாராட்டினார்கள். அதற்கு அவர்களுக்கு நன்றி. அந்த நேரத்தில் அவர்கள் ஒரே பட்டியலைச் சொல்லிவிட்டு, மற்றவைகளைச் சொல்லாமல் விட்டுவிட்டார்கள். அவர்கள் விட்டதைப் பற்றி மட்டும் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக, திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்ற பிறகு இந்தத் தமிழகத்தில் இருக்கிற





விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அதிகமான நிலத்தைத் தர வேண்டும் என்ற எண்ணத்தை உள்ளத்தில் கொண்டிருந்தோம். அந்த அடிப்படையில் திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்ற பிறகு 1967-68-ல் ஏறக்குறைய 22,849 ஏக்கர்களும், 1968-69-ல் 51,851 ஏக்கர்களும் நிலமில்லாத ஏழைகளுக்கு நாங்கள் ஒப்படை செய்திருக்கிறோம். இந்த ஆண்டில் ஏறக்குறைய 1,32,000 ஏக்கர்கள் ஏழைகளுக்குத் தந்திருக்கிறோம். வீட்டு மனை வசதியைப் பொறுத்தவரையில் 77,000 பேர்களுக்கு வசதியைச் செய்திருக்கிறது. நீண்ட நெடுங்காலமாக விவசாயப் பெருங்குடி மக்களின் முக்கியமான பிரச்சினையாக இருந்து வந்தது, இந்த ரெவின்யுபோர்டை எடுக்கவேண்டும் என்பது தான். அதுதான் அவர்களுடைய பிரச்சனையாக இருந்திருக்கிறது. நீங்கள் உங்கள் காலத்தில் எடுக்காவிட்டாலும், முழு வடிவத்தில் அதை எடுப்பதற்கான சாத்தியக் கூறுகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. இன்னும் கிராம அதிகாரிகளைப் பொறுத்தவரையில், நீண்ட நெடுங்காலமாக, எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் எடுத்துக் கூறியதுபோல் அவர்களுக்குத் தேவையான ஊதியம் தரப்படவில்லை. பணிபுரிகின்ற தலையாரி, வெட்டியான் முதலியவர்கள் சம்பளத்தைக் கொண்டே தாசில்தாரை, ரெவின்யு இன்ஸ்பெக்டரைப் பார்க்கப் போக வேண்டும். இன்றைய தினம் இந்த அரசு இந்த ஆண்டிலிருந்து, நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டது போல, கிராம அதிகாரிகளுக்குத் தேவையான சம்பளத்தை நிர்ணயிப்பதற்கு, இரண்டாவது ஊதிய நிர்ணயக் குழுவை அமைத்து, அதில் கிராம அதிகாரிகளுடைய பிரச்சினையையும் சேர்ந்திருப்பது, கிராம அதிகாரிகளுக்கு இந்த அரசு செய்திருக்கும் சாதனையாகும்.

அடுத்து எடுத்துக் கொண்டால், அதிகாரிகளை மக்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இன்றையதினம், மக்களை அதிகாரிகள் போய்ப் பார்க்கும் நிலையை இந்த அரசு உண்டாக்கி, அதன் மூலம், ஒரு புதிய புரட்சிகரமான எண்ணத்தை மக்களிடையே ஏற்படுத்தியிருக்கிறது. அதிகாரிகள் மக்களால் காணப்படவேண்டியவர்கள் அல்ல, ஆனால், அதிகாரிகள்தான் மக்களுடைய தொண்டர்கள் என்ற நிலையை ஏற்படுத்திய பெருமை இந்த அரசுக்கே சாரும் என்பதைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூற விரும்புகிறேன்.

ஜமாபந்தி முறையைப் பொறுத்தவரையில், அது முழுமையாக நடைபெறவில்லை என்று குறிப்பிட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, இந்த இரண்டு ஆண்டு காலத்தில் முழுமையாகச் செய்வதில் சிலபல சிக்கல்கள் இருந்தாலும், படிப்படியாக எடுத்தால் சிக்கல்களைத் தீர்க்கலாம் என்றும், அதன் மூலம், ஜமாபந்தி முறையை எடுத்து, நிலையான நிர்வாகத்தைக் கொடுக்க முடியும் என்றும் அதையும் செய்து கொண்டு வருகிறோம்.

[திரு. கொளத்தூர் கோதண்டம்] [1970 மார்ச் 13

நான் முதலிலே பஞ்சத்தைப் பற்றிக் குறிப்பிட்டேன். பஞ்ச நிவாரணம் பற்றி எதிர்க்கட்சியிலேயிருந்து பேசும் உறுப்பினர்கள், ஏதாவது மாசு, நோக்கம் கற்பிக்க வேண்டும் என்கிற எண்ணத்தோடு பேசுகிறார்களே அல்லாது, வாங்கப்பட்டிருக்கிற தொகைகள் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அவர்கள் வாங்கியிருக்கும் தொகையைவிடக் குறைவானதா, கூடுதலானதா என்பதைப் பார்க்க வேண்டும்.

மத்திய சர்க்காரிலே வேறு அரசாக இருந்தும், மாநிலத்திலே இருப்பது இன்னொரு அரசாக இருந்தும் இந்தத் தொகையை எப்படியோ பெற்றுத்தந்தார்களே என்பதற்காக ஒரு பாராட்டுதலை நீங்கள் சொல்வீர்கள் என்பதை நேரிடையாக எதிர்பாரா விட்டாலும், உங்களுடைய மனச்சாட்சி மூலமாகவாவது எங்களுக்குக் கிடைக்காமலா போய்விடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பொழுது தமிழகத்திற்குக் கிடைத்திருக்கிற பணம், பஞ்சப் பிரதேசங்களில் நிவாரண வேலைகளுக்காக கிடைத்திருக்கிறது. விவசாயப் பெருங்குடிமக்களின் நல்வாழ்விற்காகக் கிடைத்திருக்கிறது, விவசாயத் தொழிலாளர்களுக்கும், கூலி வேலை செய்பவர்களுக்கும் கிடைத்திருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. இந்த அரசு இந்தப் பணத்தைப் பெற்றுத் தந்திருக்கிறது. இந்தப் பணத்தைப் பெறுவதற்கு நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தீவிர கவனம் செலுத்தி, அதிக அக்கறை காட்டி, மற்றவர்கள் செய்ததைவிட அதிக அளவில் முயற்சி செய்திருக்கிறார்கள் என்பது தமிழக அரசின் சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தாலே நன்கு தெரியும். அவர்கள் இருந்தபோது செய்ய முடியாத காரியத்தை நாங்கள் செய்திருக்கிறோம் என்பதை மானசீகமாக திரு. ராமலிங்கம் போன்றவர்கள் கருதுவார்கள் என்று நிச்சயமாகக் கருதுகிறேன். பஞ்ச நிவாரண வேலைகளைப் பொறுத்தவரையில் எல்லா இடங்களிலும் நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார்கள்.

அடுத்து, என்னுடைய தொகுதியைப்பற்றி ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் எனக்கு முன்னாலே பேசிய திரு. என். ராஜாங்கம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல கிராமப்புறங்கள் வளர்ச்சியடைவதற்கு அடிப்படையான காரணம் ஊராட்சி மன்றங்களாகும். ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இருக்கிற வேலைப்பளுவின் காரணமாக பஞ்சாயத்து டெவலப்மெண்ட் காரியங்களில் அதி கவனம் செலுத்த முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, மாவட்ட அளவில் அரிஜன வெல்பேர் ஆபீசர் என்று இருப்பதைப்போல, மாவட்ட அளவில் ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் இவைகளைப் பொறுத்தவரையில் அவைகளின் வேலைகளை நல்ல முறையில்



1970 மார்ச் 13] [திரு. கொளத்தூர் கோதண்டம்]

கவனிக்க டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் ஆபீசர் என்ற அதிகாரியை நியமிக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து. ஆகவே, அரசு இதைக் கருத்திற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராம அதிகாரிகளை எடுத்துக்கொண்டால், இன்றைக்கு பெரிய அதிகாரிகள்கூட மாறிவிட்டிருக்கிறார்கள், ஆனால் கிராம அதிகாரிகள் எல்லோரும் பழைய நிலையிலேயே இருந்து வருகிறார்கள். அவர்களை நம்மால் மாற்ற முடியவில்லை. இசும்பு பாத்தியதை, பரம்பரை பாத்தியதை நீக்கப்பட்டிருக்கிறது. சர்வே ஆண்ட் செட்டில்மெண்ட் பரிசீலனையில் இருப்பதாகத் தெரிகிறது. முடிவு எடுக்கும் நேரத்தில் இப்போதிருக்கின்ற கிராம உத்தியோகஸ்தர்களை எடுத்துவிட்டு புதிய தகுதியின்கீழ், புதிய அடிப்படையில் இந்த வேலைகளை புதியவர்களிடத்தில் ஒப்படைக்கலாம். இன்னும் கிராம சேவக்குகள் போன்றவர்கள் இருக்கிறார்கள். அதைப் போன்றவர்களிடத்திலும் இந்தப் பொறுப்பை ஒப்படைக்கலாம்.

அடுத்த படியாக, இன்றைக்கு செங்கற்பட்டு மாவட்டத்தின் தலைநகரம் காஞ்சீபுரமாக இருந்து வருகிறது. இது செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒரு கோடியில் அமைந்திருக்கிற காரணத்தால், செங்கற்பட்டு மாவட்டம், வட ஆற்க்காடு மாவட்டம் ஆகிய இரண்டு மாவட்டங்களையும் ஒன்றாக இணைத்து, பின்னர், செங்கற்பட்டு மாவட்டம், வட ஆர்க்காடு மாவட்டம், காஞ்சீபுரம் மாவட்டம் என மூன்று மாவட்டங்களாகப் பிரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிப் பிரிப்பதன் காரணமாக மக்களுக்கு நன்மை அதிகம் கிடைக்கும். ஒரு கோடியிலுள்ள மக்கள் தலைநகரை நோக்கி இன்னொரு கோடிக்குப் போகவேண்டியதில்லை.

அடுத்தபடியாக மாவட்ட வளர்ச்சி மன்றங்களைப் பொறுத்த வரையில், எல்லா அதிகாரிகளும் மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தில் கலந்து கொண்டபோதிலும், போலீஸ் அதிகாரிகள் மட்டும் கலந்துகொள்வதில்லை. கலந்துகொள்ளாததன் காரணம் தெரியவில்லை. நிச்சயமாக அவர்களும் அந்தக் கவுன்சில் கூட்டத்தில் கலந்துகொள்ள வகை செய்ய வேண்டும். இந்த மானியங்களை நான் ஆதரித்துப் பேசுகின்ற நேரத்தில், செய்யப்பட்டிருக்கின்ற நல்ல காரியங்கள், பொதுமக்களுக்குச் செய்யப்படுகின்ற நல்ல காரியங்கள், நாட்டின் அடித்தளமாக விளங்குகின்ற கிராம மக்களுக்குச் செய்கின்ற நல்ல காரியங்கள் எல்லாவற்றையும் பாராட்டி, எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி இத்துடன் என் உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

• திருமதி கே. பி. ஜானகியம்மாள்: தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைமீது என்னுடைய கட்சியின் சார்பாக சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இன்றுள்ள மாவட்ட ஆட்சி நிர்வாகம், அரசுக்கு அடுத்தபடியாகக் கிராமப் பகுதிகளில் இருக்கக்கூடிய பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்து ஒன்றிப்பு இவைகளை

மேற்பார்வையிடுகிறது. முன்பு ஜில்லா போர்டு என்ற ஸ்தாபன அமைப்பு இருந்தது. இப்போது ஜில்லா மட்டத்தில் ஜில்லாவுக்கு என்று விவாதிக்கக்கூடிய வகையில் ஒரு அமைப்பு இல்லை. இப்போது இருக்கக் கூடிய ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில் மாதத்திற்கு ஒரு முறை கூடுகிறது. மூன்று மணி நேரம் விவாதிக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரால் வைக்கக்கூடியவைகளைப் பரிசீலனை செய்து, எல்லாவற்றுக்கும் அங்கீகாரம் வாங்கும் முறையில்தான் இருக்கிறது. சட்ட மன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள், மற்றவர்களுடைய பல பிரச்னைகளைச் சேகரித்து நேரில் முறையிட்டு, ஒரு முடிவு எடுக்கக்கூடிய, பரிகாரம் பெறக்கூடிய முறையில் இயங்கும் ஒரு ஸ்தாபனமாக இல்லை. ஆகவே மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில் மாதத்திற்கு ஒரு நாள் கூடுவது என்பதை மாற்றி, மாதத்திற்கு இரண்டு நாட்களாவது கூடி முடிவு எடுக்கிற ரீதியில், பல்வேறு விஷயங்களையும் குறைகளையும் பரிசீலனை செய்யக் கூடிய ஒரு நல்ல அங்கமாகச் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் மாவட்ட நிர்வாகத்தில் இருக்கக்கூடிய குறைகளை உடனுக்குடன் தீர்க்க முடியும்.

மேலும், இந்தக் கவுன்சில் கூட்டத்திலே சம்பந்தப்பட்ட எல்லா இலாக்காக்களின் அதிகாரிகளும் வருகிறார்கள். ஆனால் போலீஸ் அதிகாரிகள் மட்டும் கலந்து கொள்வதில்லை. பலவிதமான சிவில் கேஸ்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களிலும்கூட போலீஸ் நிர்வாகம் தலையிடுகிறது. சாதாரணமாக நிலத்திலிருந்து வெள் கூடாது என்று சட்டம் இருந்தபோதிலும், அறுபது ியேற்றக் என்று சட்டம் இருந்தபோதிலும், குடியிருப்பு மனைக நாற்பது திடீரென காலி செய்யக்கூடாது என்று இருந்தபோதிலும் லிருந்து புறத்தில் இருக்கக்கூடிய போலீஸ் அதிகாரிகள் கிராமப் மக்களுக்குத் தொந்தரவு கொடுத்துவருகிறார்கள். லையிட்டு அபிவிருத்திக் கவுன்சில் கூட்டுகின்ற கூட்டத்தில் [illegible] வட்ட அதிகாரிகள் கலந்து கொண்டால், இப்படிப்பட்ட நிலை போலீஸ் எடுத்துச் சொல்வதற்கும், அதற்குப் பரிகாரம் காண்பதற்கு மைகளை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வழி நிர்வாகத்தில் போலீஸ் தலையிட்டு செய்வது, கெடுபிடி செ[illegible] சிவில் என்ற நிலைமையை மாற்றுவதற்கும், அடக்குமுறை இல்லாம வது நிர்வாகத்தை நடத்திச் செல்ல முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கும் போலீஸ் அதிகாரிகள் கவுன்சில் கூட்டத்தில் கலந்துகொள்வது நல்லது.

தற்போது மனுநீதித் திட்டம் என்று நடக்கிறதே அந்த இடங்களுக்குக்கூட போலீஸ் அதிகாரிகள், அந்த வட்டத்தில் இருக்கக்கூடிய கீழ் அதிகாரிகள் கலந்துகொண்டால் மக்களுடைய குறைகளை நேரில் அறிந்து, நிவர்த்தி செய்ய வசதியாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.



அடுத்தபடியாக உச்ச வரம்புச் சட்டம். சென்ற மாதம் 26-ம் தேதியிலிருந்து இந்தச் சட்டம் அமலாக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் கூறியவுடனே இன்றைக்கே தஞ்சாவூரில் இருக்கக்கூடிய நிலவுடைமையாளர்கள் இந்தச் சட்டத்தை உடைத்தெறிய ஆரம்பித்துவிட்டார்கள். பழைய தேதியிட்டு ரிகார்டுகள் தயாரித்தும், பினாமி பட்டாக்களாக மாற்றுவதும், நிலங்களை விற்பதும் போன்ற வேலைகளைச் செய்து வருகிறார்கள் என்று பத்திரிகைகளில் செய்தி வருவதைப் பார்க்கிறோம். இம்மாதிரியான நிலைமைகளை நாம் தடுத்து நிறுத்தியாக வேண்டும். பினாமி பட்டா மாற்றங்களானாலும் இந்தத் தேதிக்குப் பின்னர் எப்படிப்பட்ட மாற்றங்கள் செய்யப்படுகிறதோ அவையெல்லாம் செல்லாது என்று திட்டமாக அறிவித்துவிட வேண்டும், அதோடு இதைச் சட்ட மன்ற ரீதியிலும் நல்ல முறையில் சட்டமாக்க வேண்டும். அன்பு மிக்க காங்கிரஸ் மெம்பர்கள்கூட இந்த உச்சவரம்பு சட்டத்தை நல்ல முறையில் வரவேற்றது மிக முக்கியமான அம்சம். அவர்கள் காலத்தில் செய்த உச்சவரம்புச் சட்டத்தினால் நிலமே கிடைக்காமல் போய் விட்டது. ஆனால், இந்த உச்சவரம்பு சட்டத்தில் இரண்டு லட்ச ஏக்கர் அளவு நிலம் கிடைத்து, விவசாயிகளுக்கு உதவக்கூடிய முறையில் அமையப்போவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இந்தச் சட்டத்திற்கு சுதந்திரா போன்ற கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தாலும், மற்ற நிலவுடைமையாளர்கள் எதிர்த்தாலும், விவசாயிகளும், பொதுமக்களும் மற்ற கட்சிகளும் பெருவாரியான ஆதரவு கொடுக்கிறார்கள். ஆகவே, இந்தச் சட்டத்தை எந்தவிதக் காலதாமதமும் இன்றி, உடனடியாகக் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியான பஞ்ச நிவாரண வேலைகள் கிராமப்பகுதிகளில் நடந்திருக்கின்றன. சில இடங்களில் நல்ல பயன் அளித்துள்ளது. இருந்தாலும், மதுரை ஜில்லா மட்டத்தில் பார்த்தால் இன்னமும் பல தாலுக்காக்களில் பஞ்ச நிலைதான் நீடிக்கிறது. 3 ஆண்டுகளாக மழை இல்லை. இந்த ஆண்டும் அதே நிலைதான். திருமங்கலம் தாலுக்கா, உசிலம்பட்டி தாலுக்கா, மதுரை தெற்கு தாலுக்கா ஆகிய இடங்களில் புஞ்சைப் பயிர்கள் தீய்ந்துபோய் விட்டன. நஞ்சையும் சாவியாகி விட்டது. இந்த ஆண்டு உணவுக்கே அங்கே வழியில்லை. இந்த நிலையில். கிராம மக்களுக்கும். மற்றும் அரிசனங்களுக்கும் கொடுக்கப்பட்ட கடன்கள், கூட்டுறவு கடன்கள் இவற்றை வசூலிக்க கடுமையான ஜப்தி நடவடிக்கை எடுத்து மாடுகளைப் பிடித்துபோடுவது, வீட்டுக்கதவுகளைப் பிடுங்குவது போன்ற நிலை அங்கே நடந்து வருகிறது. உடனடியாக இவ்வாண்டு அந்தப் பிரதேசங்களில் கடன் வசூலை நிறுத்தவேண்டும். இந்த ஆண்டு நிறுத்திவிட்டு, அடுத்த ஆண்டு இந்த ஆண்டு தொகையையும் சேர்த்து 2 ஆண்டுகளுக்கும் ஒன்றாக வசூல் செய்வது முறையாகாது. இந்த ஆண்டு ஒத்திவைத்தால் இதை லோன் வசூல் முடிகிற கடைசி வருஷத்திற்கு அடுத்த

வசூல் செய்கிற முறைவேண்டும். இந்த முறையில் உடனடியாக இவ்வாண்டு கடனை ஒத்திவைக்க உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வீடுகள் கட்டுவதற்கு காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் அரிசனங்களுக்கு ரூ. 250 கடனுகவும், ரூ. 250-க்கு உடல் உழைப்புத்தானம் செய்யவேண்டும் என்று ஒரு சமூகநலத் திட்டத்தின் மூலமாக வீடுகட்டிக் கொடுக்கப்பட்டது. அரிசனங்கள் தங்கள் உடல் உழைப்பின் மூலமாக ரூ. 250-க்கு உதவியிருக்கிறூர்கள். கடனுக 250 கொடுக்கப்பட்டது. ஆனால் இன்றையதினம் அந்த அரிசன மக்களிடம் 500 ரூபாயைக் கடனுகக் காட்டி அதற்கு வட்டி எல்லாம் சேர்ந்து ரூ. 1,000-க்கு மேல் கொடுக்க வேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்படுகிறூர்கள். குறிப்பாக திருமங்கலம், உசிலம்பட்டி தாலுக்காவில் கொடிக்களம், சொக்கத்தேவன்பட்டி என்ற கிராமங்களில் அந்தக் கடனுக்காக அரிசனங்களுடைய மாடுகளை ஜப்தி செய்து பிடித்துச்சென்றூர்கள். அப்புறம் மாவட்ட ஆட்சித் தலைவரை நான் சென்று அணுகி அந்த மாடுகளை விடும்படியாகவும், இதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவருவதாகவும் சொன்னதன் பேரில் மாடுகள் விடுவிக்கப்பட்டுள்ளன. ஆகவே, அரசு பரிசீலனை செய்து உடனடியாக இந்தக் கடன்களை ரத்துசெய்யவேண்டும் என்று மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டிக் கொள்ள நிலம் வழங்கும் திட்டம். அரிசன மக்களுக்காக வீடுகள் கட்டிக்கொள்ள இத்திட்டத்தின்கீழ் நிலம் வழங்கப்படுகிறது சில ஆண்டுகளுக்குள் வீடுகள் கட்டவில்லை என்றால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தற்காலிக பட்டாவைத் திரும்ப வாங்கிவிடுகிறூர்கள். மிகவும் பள்ளமான இடத்தில் நிலம் ஒதுக்கும்போது அதைச் சமன் செய்து மேடு செய்யவே அவர்கள் மிகுந்த செலவு செய்ய வேண்டியிருக்கிறது. இந்த நிலையில் குறிப்பிட்ட காலத்திற்குள் வீடுகள் கட்டவில்லை என்று சொல்லி பட்டாவைத் திரும்ப வாங்குவதற்குப் பதிலாக—வீடுகள் கட்டிக்கொள்ள மனை வழங்கும்போதே அந்த அரிசன மக்களுக்கு 300 ரூபாய் அளவில் கடனுகக் கொடுத்து உதவினுல்தான் அவர்களால் உடனடியாக வீடுகள் கட்ட முடியும். அரசாங்கம் அவர்களுக்கு மனை வழங்கும்போதே 300 ரூபாய் வீடு கட்டிக்கொள்ள கடனும் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மதுரை நகரத்தில் காமராசபுரம் என்ற இடத்தில் 45 ஏக்கரா புறம்போக்கு நிலத்தில் 3,500 குடும்பங்கள் 15 ஆண்டுகளாகக் குடியிருக்கிறூர்கள். இதுவரை அவர்களுக்குப் ச்பட்டா வழங்கவில்லை. உடனடியாக அவர்களுக்குப் பட்டா வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.



கரும்பாலை என்ற பகுதியில் 45 ஆண்டுகளாகப் புறம்போக்கு நிலத்தில் நகரத்தித் தொழிலாளர்கள், அரிசனங்கள் குடி இருந்து வருகிறூர்கள். சமீபத்தில் ஒரு கல்லூரிக்கு நிலம் வழங்குகிற போது இந்தக் குடியிருப்புப் பகுதியையும் சேர்த்து வழங்கி இருப்பதாகத் தெரிகிறது. அது சரியல்ல. நாற்பத்தைந்து ஆண்டுகளாக வீடு கட்டிக்கொண்டிருக்கிற இந்த ஏழை அரிசன மக்களுக்கு இவற்றைப் பட்டா செய்துகொடுத்துவிட்டு இந்தக் குடியிருப்புப் பகுதியை நீக்கி மற்றவற்றை கல்லூரிக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உணவு ரேஷனை எடுத்துவிட்டார்கள். ஆனால் மழைவிட்டும், தூறல் விடவில்லை என்கிறபடி கிராம மக்கள் ஒரு வகையில் தொல்லைக்கு உள்ளாக்கப்பட்டே வருகிறூர்கள். மதுரை மாவட்டத்தில் போடியில் இருந்து கூடலூர் வரை பார்டர் ஏரியா என்று வைத்து அதன் வழியாகக் கேரளாவுக்கு அரசிக் கடத்தலைத் தடுக்க விஜிலன்ஸ் ஸ்க்வாட் போடப்பட்டுள்ளது. இந்த 16 மைல் பார்டர் ஏரியாவுக்கு அருகில் உள்ளவர்கள் அரிசிச் சாப்பாடே சாப்பிட முடியவில்லை. காரணம் இவர்கள் தேனிக்கு வந்துதான் சாப்பிட அரிசி வாங்கிப்போக வேண்டியிருக்கிறது. அப்படி கிராம மக்கள் அரிசி வாங்கிப்போகிறபோது விஜிலன்ஸ் ஸ்க்வாட்—அவர்களை அரிசிக் கடத்தல்காரர்கள் என்பதாகக் குற்றம்சாட்டி அவர்களிடம் இருக்கும் அரிசியையும் பறிமுதல் செய்து துன்பத்திற்கு உள்ளக்குகிறூர்கள். அந்தப் பகுதியில் உள்ளவர்கள் அரிசிச்சாப்பாடே உண்ணவேண்டாம் என்று சொன்னுல் அது வேறு விஷம். அப்படியில்லாதபோது அவர்கள் நிலை என்ன? தங்களை அரிச்சந்திரர்களாக எண்ணிக்கொண்டிருக்கிற இந்த விஜிலன்ஸ் படையினரால் இந்தக் கிராம மக்கள் அடைகிற துன்பம் கொஞ்ச நஞ்சமல்ல. இது அரசாங்கத்திற்கும் தெரியாதது அல்ல. ஆகவே நான் அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்வதெல்லாம் இந்த போடி—கூடலூர் பார்டர் ஏரியா 16 மைல் நீளத்தில், எந்த இடத்திற்கு மேல் கொண்டுபோகக் கூடாது, எந்த இடத்தில் பிடிக்கவேண்டும் என்கிற வரையறை ஏற்படுத்தவேண்டும். அதோடு அரிசியைப் பறிமுதல் செய்கிற போது இரண்டு நகல், யாரிடம் இருந்து பறிக்கப்பட்டது, எந்த இடத்தில் எவ்வளவு பறிக்கப்பட்டது என்கிற விவரம் எல்லாம் அடங்கிய நகல் தயாரித்து அந்தக் கிராம மக்களிடத்திலும் ஒரு காப்பி கொடுக்கவேண்டும். அப்போதுதான் இவர்கள் மீது பொய் வழக்கு ஜோடனைக்கு இடமில்லாது வழக்கு மன்றத்திற்குப் போனுலும் இவர்களால் வழக்கு நடத்தவும் முடியும்.

அடுத்து, முதியோர் பென்ஷனை எடுத்துக்கொண்டால் இப்போது புதிதாக யாருக்கும் கொடுப்பதில்லை. முன்பு கொடுக்கப்பட்டவர்களில் யாராவது காலமானுல் அந்த இடத்திற்கு மட்டும் வேறு ஒருவரை எடுத்துக்கொள்கிறூர்கள். அதற்குள் ஆதரவு அற்ற மனு செய்தவர் இறந்துவிடக்கூடும். அப்படியின்றி ஆதரவு

[திருமதி கே. பி. ஜானகியம்மாள்] [1970 மார்ச் 13

இல்லாத முதியவர்கள் என்று தெரிந்தால் அவர்களுக்கும் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும், இப்போது கொடுக்கிற தொகை இருபது ரூபாயை முப்பது ரூபாயாக உயர்த்திக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக நகர அவை உயர் பிரிவு ஊழியர்களில் ஓய்வு பெறு கிறவர்களுக்கு 1970 ஜனவரி 14-ந் தேதியில் இருந்து—பொங்கல் பரிசு போல ஓய்வு ஊதியத்தை உயர்த்திக்கொடுக்க அரசு உத்தர விட்டிருக்கிறது. இதை வரவேற்கிறேன். ஆனால், தமிழகத்தில் 11 மாவட்டங்களில் 1970 ஜனவரி 14-க்கு முன்பு ஓய்வு பெற்றவர்கள் 496 பேர்கள் இருக்கிறார்கள். இவர்கள் மிகவும் தளர்ச்சி அடைந்து வறுமையுடன் இரண்டு மூன்றாண்டுகளில் இறந்தேவிடக்கூடிய மோசமான நிலையில் இருக்கிறார்கள். ஆகவே 1970 ஜனவரி 14-ஆம் தேதிக்கு முன்பு ஓய்வுபெற்றவர்களுக்கும் பொருந்தும் முறையில் இந்த 496 பேர்களும் நன்மை அடையக்கூடிய வகையில்—ஓய்வு ஊதியத்தை உயர்த்திக்கொடுக்கவேண்டும் என்பதாகத் தமிழக அரசைக் கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. நா. நாச்சிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற வருவாய்த் துறை மானியத்தை வரவேற்று நான் எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

சென்ற ஆண்டு தமிழகத்தில் மிகக் கடுமையான வறட்சி நிலை இருந்தது. நமது அரசு மத்திய அரசின் உதவியோடு நல்ல முறையில் நிவாரணப்பணிகள் பலவற்றைச் செய்திருக்கிறது. தமிழக மக்களின் பெரும்பான்மையான குறைகளை அது ஓரளவு போக்கிற்று. அதேநேரத்தில் உணவுப் பிரச்சினையைத் தீர்க்கவும் அரசு நல்ல வேளாண்மைத் திட்டத்தைத் தீட்டி செயல்படுத்திற்று. அப்படிப் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருந்தாலும் இந்த ஆண்டும் குறிப்பாக புன்செய்ப் பயிர் விளையும் இடங்களில் பழைய வறட்சி நிலை தொடர்பாகவே இருந்து நீடிக்கிறது. உடனடியாக இது கவனிக்கப்படவில்லை என்றால் சென்ற ஆண்டு பஞ்சநிவாரண வேலைக்காகச் செலவிட்டது வீணாகிவிடும் நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட மோசமான வறட்சிப் பகுதிகளில் ஒன்று பழனி வட்டம். சென்ற ஆண்டு தமிழக அரசு செய்திருக்கிற அத்தனை திட்டங்களினாலும் பயனில்லாத நிலையில் இருக்கிறது. காரணம், இந்தப் பகுதி முழுக்க முழுக்க ஆண்டு முழுவதும் குறைவாகப் பெய்யும் மழையையே நம்பியிருக்கக்கூடிய பகுதி. பொதுவாக ஆண்டில் எப்பொழுதும் அந்தப் பகுதி கிணற்று நீரை நம்பித்தான் விவசாயம் செய்யக்கூடிய பகுதியாக இருக்கிறது. கிணற்று நீரை நம்பியே விவசாயம் செய்யக்கூடிய பகுதியாக இருப்பதால் இரண்டு விதமான நிலைகளிலும் அங்கு பாதகம் ஏற்படுகிறது. மழை மிகுதி யாகப் பெய்யும்பொழுது புஞ்சைப் பயிர்கள் கெட்டுவிடுகின்றன, ஒன்றிரண்டு மழை பெய்தால் மழைக்குப் பின்னாலே கிணற்றிலே



1970 மார்ச் 13] [திரு. நா. நாச்சிமுத்து]

நீர் இல்லாமல் பயிர்கள் காய்ந்துவிடுகின்றன. ஆகவே மழை பெய்யாத காலத்திலேயும் பலன் கிடைப்பதில்லை, மழை அதிகம் பெய்கின்ற காலத்திலேயும் துன்பங்கள் ஏற்படுகின்றன. எங்கள் பகுதி முழுக்க முழுக்க எந்தவிதமான ஏரிகளும், குளங்களும், குட்டைகளும் இல்லாமல் இருக்கிற பகுதியாகும். எங்கள் பகுதி முன்பெல்லாம் ஜமீன் பகுதியாக இருந்ததால் ஆங்காங்கு இருந்த சிறு சிறு குளங்களை, குட்டைகள் மற்றவர்களுக்கு பட்டாப் போட்டுக் கொடுக்கப்பட்டதால் அவை அழிக்கப்பட்டு இன்றைக்கு எல்லா நிலங்களுமே ஒரு பாறைபோல் காட்சியளிக்கக்கூடிய நிலை மையில் எந்தவிதமான நீர்ப்பாசனத்திற்கும் வசதியில்லாத சூழ் நிலைதான் இருக்கிறது. இந்த துயரமான நிலைமையைப் போக்கு வதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. ஆங்காங்கேயுள்ள சிறு சிறு நிலங்களில் சிறு சிறு குட்டைகளைத் தேக்குவதற்கு அரசு ஆவன செய்யவேண்டும். எங்கள் பகுதியைப் பொறுத்தவரையில் எந்தக் கடன்தொகையைக் கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் கடனாகவும் மானியமாகவும் கொடுக்கப்படுகின்ற தொகைகள் அத்தனையையும் வைத்து ஆங்காங்கு சிறு சிறு கண்மாய்களை அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் பகுதி யிலே அப்படிப்பட்ட கண்மாய்களை அமைக்கும்பொழுது எல்லா நலன்களும் அங்கேயுள்ள மக்களுக்கு ஏற்படக்கூடும். குடிநீர் கிணறுகளுக்காகச் செலவழிக்கப்படுகின்ற பணத்தைப் பார்த்தால் —அது அதிகமாக இருந்தாலும்கூட—இந்த ஆண்டு எந்தவிதமான பலனும் இல்லாமல் இருக்கிறது. சிறிய கண்மாய்கள் ஏற்பட்டு மானால் ஒன்றிரண்டு மழையினாலே நன்மைகள் ஏற்படும். வறண்ட பகுதிகளில் வறட்சியான காலங்களில் பெரிய கட்டடங்கள், பாலங் கள் கட்டுவதைக்கூட நிறுத்திவிட்டு மற்ற எல்லாத் துறைகளிலும் செலவழிக்கக்கூடிய பணத்தை இந்த நீர்ப்பாசனத் திட்டங்களில் அரசாங்கம் செலவழித்தால் அந்தத் தொகையின் மூலமாக சாதா ரண ஏழை எளிய மக்களுக்கு வேலை கிடைப்பதோடு, அதன்மூல மாக உணவு உற்பத்திக்கும் துணையாக இருக்குமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடன்கள் எல்லாம் அரசாங்கத்தின் மூலமாகக் கொடுக்கப்படு கிறது என்றாலும் அரசாங்கக் கடன்கள் பெறும்பொழுது ஒரு சாதாரண விவசாயியும் தன் நிலத்தை அடமானம் வைப்பதற்காக வேண்டி பதிவு அலுவலகத்திற்குச் செல்வதில்லை. அப்படிச் செல்லாமலேயே ஒரு அதிகாரியும் நிலத்தின் சொந்தக்காரரும் ஒரு பாரத்தில் கையெழுத்துப் போட்டவுடனே நிலத்தின்மேலே கடன்பெற்றதாகப் பதிவு அலுவலகங்களில் பதிவேடுகளில் எழுதி விடுகிறார்கள். கடனைத் தீர்த்ததற்குப் பிறகு எத்தனை ஆண்டுக ளானாலும் சரி அதைப் பதிவேடுகளிலிருந்து நீக்குவதில்லை, எப்போதும் கடன் தீர்க்கப்படாததாகவே குறிக்கப்பட்டிருக்கிறது. ஏதாவது வேறு ஒரு வேலைக்குச் சென்று அந்த நிலத்தின் வில்லங்கச் சான்றிதழ் பெறுவதற்காகப் போனால் அந்த அலுவல

கத்திற்குச் செல்லும்பொழுது அந்த நில சம்பந்தமான கடன்கள் முன்பே தீர்க்கப்பட்டிருந்தாலும்கூட அந்தக் கடன் இருப்பதாகத் தான் வில்லங்க சான்றிதழ் கிடைக்கிறது. இது என்னுடைய சொந்த நேரடி அனுபவம் ஆகும். அப்படியிருப்பதால் விவசாயி களுக்கு தொல்லைகளும் சிரமங்களும் ஏற்படுகின்றன. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாக என்னுடைய சொந்த நிலத்தை ஒரு பள்ளிக்கு நான் எழுதிவைத்தேன். அதைக் கல்வியதிகாரிகள் எல்லாம் ஏற்றுக்கொண்டும் அதிலே கடன் தீர்க்கப்படாமல் இருப்ப தாக நினைத்துக்கொண்டு பள்ளிக்கு வரவேண்டிய சாதகங்களையும் மற்ற உதவிகளையும் தர மறுக்கிறார்கள், இதனால் அவை தடைபடு கின்றன. இந்த விவரத்தை நான் பல இடங்களில் எடுத்துச் சொல்லியும்கூட இந்தச் சிறிய சிக்கல் தீர்க்கப்படாமல் இருக்கிற தென்றால், நாம் அரசாங்கத்திலே இந்தவிதமான சிறிய சீர்திருத்தத் தையும் செய்யாமல் இருக்கிறோம் என்பதைப் பார்க்கும்பொழுது, உண்மையிலேயே வருந்த வேண்டியிருக்கிறது. ஒரு சிறிய பிரச்னை மாநில அளவிலே கூட வந்தும் தீர்க்கமுடியாத நிலைமை இருக்கிறது என்றால் ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான விவசாயிகள் எவ்வளவு துயரப்படுகிறார்கள் என்பதை நினைத்துப் பார்க்கும் பொழுது உண்மையிலேயே மனவேதனைப்படக்கூடிய நிலைமையில் தான் இருக்கிறோம். இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இங்கே வந்திருப்பார்களானால் என்னுடைய சிக்கலைத் தீர்ப்பதோடு இந்த மாநிலத்திலே உள்ள இந்தச் சட்டப் பிரச்னையை, தேவையில்லாத சிரமத்தைத் தீர்த்து வைப்பார்கள் என்று நம்புகிறேன்.

மாவட்டங்களைப்பற்றி எனக்கு முன்பு பேசிய பல உறுப்பினர் கள் பல மாவட்டங்கள் பெரிய வட்டங்களாக இருப்பதாகவும் பரப்பு அதிகமாக உள்ளனவாக இருப்பதாகவும் கூறினார்கள். அது உண்மையிலேயே ஒத்துக்கொள்ள வேண்டிய நிலைமைதான். ஒரு மாவட்டத்தின் ஒரு கோடியிலிருந்து தலைநகருக்குச் செல்லவேண்டு மானால் 100 மைல்கள்தூரம்வரை கடந்து செல்லவேண்டியிருக் கிறது. சாதாரண ஏழை எளிய விவசாயி அப்படிப்பட்ட இடங் களுக்குச் சென்று வேலைகளை முடித்துக்கொள்வது சிரமமாக இருப்பதால் அதற்குப் பதிலாக தரகர்களையும் அலுவலகத்திலே தொடர்புள்ள சில மனிதர்களையும் வைத்துத்தான் வேலைகளைச் செய்யவேண்டியிருக்கிறது. எனவே மாவட்டங்களைப் பிரிக்கும் பொழுது மாவட்டத் தலைநகருக்கும் அந்த மாவட்டத்திலுள்ள எந்த ஊருக்கும் 25 அல்லது 30 மைல்களுக்கு மேற்கொண்டு தூரம் இல்லாத அளவில் பிரித்து அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். மாவட்டங்களைப் பிரித்து அமைக்கும்பொழுது அந்த அந்த மாவட்டங்களிலே உள்ள நிலைமைகளை வைத்துப் பார்த்து அடுத்த மாவட்டங்களின் பகுதிகளோடு சேர்க்கும்பொழுதும் நிலத்தினுடைய இயற்கையமைப்பையும், வளத்தையும், விளைச்சல் தன்மையையும் பார்த்து அந்த அந்த வட்டங்களைப் பார்த்து அமைக்கவேண்டும். மதுரை மாவட்டத்திலே பழனி மிகவும்



வறண்ட பகுதியாக இருக்கிறது. ஆனால் நில அமைப்பு, நிலவளம், நீர்வளம் மற்ற எல்லாத் தன்மைகளையும் பார்க்கின்றபொழுது அது மதுரையைச் சேரக்கூடிய வட்டமாக இருக்காது என்பது தெரிய வரும். மதுரை மாவட்டம் என்று சொல்லும்பொழுது நினை வுக்கு வருகிறது என்ன என்றால் வைகை பாய்கிற சோழவந்தான் பகுதியும், கம்பம் பள்ளத்தாக்கும்தான் நினைவுக்கு வரும். பழனி போன்ற வறண்ட பகுதி நினைவுக்கு வராது. அப்படி நினைவுக்கு வராத காரணத்தினால் தன்னையும் அறியாமல் அதிகாரிகள் திட்டங் களைத் தீட்டுகின்றபொழுது செழிப்பான பகுதிகளைக் கணக்கிட்டுத் தான் அந்தத் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்துகிறார்கள், எங்க ளுடைய பகுதி இந்தவிதமாகத்தான் விடப்படுகிறது. இதுபோன்று வேடசந்தூர், பல்லடம், உடுமலைப்பேட்டை, தாராபுரம், கரூர் போன்ற வறண்ட பகுதிகளை ஒன்றாகச் சேர்த்து மாவட்டமாக அமைத்துக்கொடுத்தால், அப்படி அமைந்ததற்குப் பிறகு அந்த மாவட்டத்தின் முழுத்தன்மை எப்படி இருக்கும் என்பதைத் தலைமைச் செயலகத்தில் இருப்பவர்கள்கூட எளிதில் தெரிந்து கொள்வார்கள். பஞ்ச நிலைகளை, வறட்சியான நிலைகளைப் பார்த்து எந்தவிதமாகச் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று அந்த மாவட்டத்தை நினைக்கும்பொழுதே அவர்களுக்குத் தெளிவாகத் தெரியும். அப்படித் தெரிந்தால் அவர்கள் நல்லவிதமாக முடிவு எடுப்பார்கள் என்று கருதுகிறேன். எனவே மாவட்டங்களைப் பிரிப்பதற்கு முன்பாகக் கவனத்தில் இவற்றைக் கொள்ளவேண்டு மென்று கேட்டுக்கொண்டு நான் என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. என். துரைபாண்டியன் :** கனம் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது கொடுக்கப்பட்டுள்ள என்னுடைய வெட்டுப் பிரேரணை மீது கருத்துக்களைச் சொல்ல விரும்புகி றேன். இன்று ஆளும் கட்சியாக இருக்கிறவர்கள் அன்று எதிர்க் கட்சியாக இருந்த நேரத்தில் நல்ல பல திட்டங்களைப் பற்றிச் சொல்லி வந்தார்கள். அவர்கள் அன்று சொன்ன திட்டங்களை எல்லாம் நிறைவேற்றிக் கொடுப்பதற்கு இன்று அவர்களுக்கு நல்ல சந்தர்ப்பம் இருக்கிறது. ஜில்லா அபிவிருத்தி மன்றத்தின் தலைவ ராக நம்முடைய மாநிலத்தில் கலெக்டர்தான் இருக்கிறார். அண்டை யில் இருக்கும் ஆந்திர மாநிலத்தில் கூட அபிவிருத்தி மன்ற உறுப் பினர் ஒருவரே தலைவராக இருக்கிறார். இந்தக் கருத்தை அன்று சொல்லி வந்தவர்கள் அதேமாதிரி நமது மாநிலத்திலும் அபிவிருத்தி மன்றத்தின் தலைவராக கலெக்டர் இல்லாமல் மன்றத்தின் ஒரு உறுப்பினரே தலைவராக இருக்க வேண்டுமென்று மாற்ற வேண்டும்.

இன்று உச்சவரம்பை மாற்றியதால் நல்ல பல காரியங்களைச் செய்வதாக அவர்கள் சந்தோஷமாகச் சொல்லுகிறார்கள். எதிர்க் கட்சியும் உச்சவரம்பைக் குறைத்திருப்பதை வரவேற்றிருக்கிறது. நிலச்சுவான்தார்கள் 30 ஏக்கர் என்று வைத்திருந்ததை 15 ஏக்கர் என்று மாற்றினார்களே தவிர, கடவுளின் பெயராலே, கோவில்

[திரு. என். துரைபாண்டியன்] [1970 மார்ச் 13

ஆண்டவனுக்கு மோர் விடுகிறேன் என்ற பெயராலே, முருகனுக்கு தண்ணீர் பந்தல் வைக்கிறேன் என்ற டிரஸ்டின் பெயராலே பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களும், கிராமங்களும் இருப்பதை இவர்கள் மாற்றவில்லை. அன்று ஆண்டவனைக் கண்டு பயப்பட வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லி வந்தார்கள். இந்த நேரத்திலே அதிலே கை வைக்காமல் இருக்கும் காரணத்தை பொதுமக்கள் அறிய விரும்புகிறார்கள்.

மனுநீதி நாள் என்று ஊர் ஊராக டம்பமாகச் சொல்லி வருகிறார்கள். காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோது திங்கள் அன்று மனுக் கொடுக்கும் தேதியாக வைத்திருந்தார்கள். இவர்கள் அன்று அதைக் கேலி செய்தார்கள். "திங்கட்கிழமை வருகிறது; திருவிழாக்களில் கூட்டம் கூடுவது போல் கூடுகிறார்கள்; கடைசியாக முடிவு என்னவென்றால் 'ஃபார்வர்டட்; சப்மிட்டெட்' என்ற பழைய பல்லவிதான்; வேறு ஒன்றையும் காணோம்" என்று அன்று சொன்னார்கள். இன்று அந்த வார்த்தையை மாற்றி மனுநீதி நாள் என்று வைத்திருக்கிறார்களே தவிர, செயலிலே மாற்றம் இல்லை. பழைய சரித்திரத்தைப் புரட்டி மனுநீதிச் சோழன் காலத்தில் இருந்த மனுநீதி நாள் என்ற பெயரை இந்த அரசு வைத்திருக்கிறது மக்களும் பரம்பரையாக சோழ பாண்டிய ஆட்சியில் நீதி வழங்கியது போல் இன்றும் இருக்கும் என்று நினைத்தார்கள். அந்த மனுநீதிச் சோழனுடைய மகன் தேரை ஓட்டிச் செல்லுகிறபோது கன்றுக்குட்டியின் மீது ஏற்றி அது இறந்து விட்டது. கன்றை இழந்த அந்தப்பசுவானது அலறி அடித்துச் சென்று ஆராய்ச்சி மணியை அடித்துவிடுகிறது. ராஜன் வருகிறான்; பார்க்கிறான் பசுவின் துடிதுடிப்பை. கண் கலங்குகிறான். இதேமாதிரி நானும் துடிதுடிக்க வேண்டும்; அதுதான் நியாயம் என்று உணர்ந்து தன் மகன் மேலேயே தேரைச் செலுத்திக் கொன்று விடுகிறான். அதேமாதிரி பொற்கைப் பாண்டியன் இரவில் மாறுவேடம் பூண்டு வீடு வீடாகச் சென்று கதவைத் தட்டுகிறான். அப்படித் தட்டும் போது புருஷன் இல்லாத வீட்டில் கதவைத் தட்டிவிடுகிறான். மறு நாள் மனுநீதி மன்றத்தில் 'இரவில் புருஷன் இல்லாத வீட்டில் எவனோ ஒருவன் கதவைத் தட்டினான்' என்ற முறையீடு வருகிறது. அப்படித் தட்டியவனுக்கு என்ன தண்டனை கொடுக்க வேண்டுமென்று மன்னன் கேட்க, அவனுடைய கையை எடுத்துவிட வேண்டுமென்று சொல்ல, மன்னன் தன்னுடைய கையை வெட்டி வைத்து விடுகிறான். அந்த நாள் இன்று வந்துவிட்டதோ என்று மக்கள் எல்லாம் அந்த மனுநீதி நாள் அன்று ஆவலோடு மனுக் கொடுக்கிறார்கள்.

இன்று நீங்கள் ரேஷனையே எடுத்து விட்டீர்கள். எங்களுடைய பகுதியில் எங்களுக்கும் ஒரு படியரிசி கொடுக்க வேண்டுமென்று மனுக் கொடுத்தார்கள். தாசில்தார் என்ன சொன்னார்? பட்டணத்திற்கு மட்டுந்தான் படியரிசித் திட்டம் என்று சொன்னார். இது தான் மனுநீதியா? ஊரிலுள்ள ஏழை எளியவர்கள் வயதானவர்



1970 மார்ச் 13] [திரு. என். துரைபாண்டியன்]

களுக்கு உதவிப் பணம் வேண்டுமென்று மனுக் கொடுத்தார்கள். அது திட்டத்தில் இல்லையென்று சொல்லிவிட்டார்கள். புறம்போக்கு நிலம் வேண்டுமென்று கேட்டார்கள். அதற்கு அசைன்மென்ட் செய்ய வேண்டும்; கணக்குப் பார்க்க வேண்டும் என்று சொல்லி விட்டார்கள். இந்தச் சர்க்கார் வெள்ளையர் காலத்துச் சட்டத்தை வைத்துக் கொண்டுதான் ஆட்சியை நடத்தி வருகிறது. 'மேட் இன் இங்லண்டு' என்று ஒரு சாமான் வந்தால் அது உறுதியானது, சிறந்தது என்ற முறையில் அதற்கு விலை அதிகமாக இருக்கிறது. வெள்ளையர் அமைத்த முறையிலே சர்க்கார் நடைபெறுவதில் இன்று வரை எந்தவிதமான மாறுதலும் இல்லை. கணக்கனைப் பழித்தவன் கண்ணை இழந்தான் என்ற பழமொழி உண்டு. இன்றும் கணக்கன் தான் சர்டிபிகேட் கொடுக்க வேண்டியிருக்கிறது. பையன் படிக்க வேண்டுமென்றால் வசதி இல்லையென்று கணக்கன் சர்டிபிகேட் கொடுக்கிறான். இதே கணக்கன் அந்தப் பையனின் பெற்றோர்கள் ஏதாவது காண்ட்ராக்ட் எடுக்க வேண்டுமென்றால் இரண்டு லட்சம் ரூபாய்க்கு சால்வன்சி சர்டிபிகேட் கொடுக்கிறான். இருந்த இடத்தில் இருந்து கொண்டே இப்படி எழுதுகிறான். அதற்குத்தான் இந்தச் சர்க்காரும் மரியாதை கொடுக்கிறது. அப்படி இருக்க இந்த நாட்டிலே என்ன வித்தியாசமான ஆட்சி நடக்கிறது என்பதைத் தான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரை எங்கள் வட்டாரத்தைப் பற்றி ஏதாகிலும் கேள்வி கேட்டால் வர வேண்டிய பதில் அடிப்படையான கலெக்டர் ஆபீசில் இருந்து வர வேண்டியிருக்கிறது. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல் உங்களுடைய ஆட்சியில் கலெக்டர் ஆபீஸ் நல்ல முறையில் நடக்கிறதா என்றால் இல்லை. ஆபீசர்கள் நல்ல ஆபீசர்களாகத்தான் இருக்கிறார்கள்; அவர்களைக் குறைசொல்ல நான் முன்வரவில்லை. சட்டசபை உறுப்பினர்கள் ஆளும் கட்சியில் இருப்பவர்கள் கூட ரூமில் பேசும்போது என்ன அநியாயம் நடக்கிறது என்பதைக் கூறுகிறார்கள். கட்சி சார்பற்று இந்த அரசு இருக்க வேண்டும்; ஆபீசர்கள் இருக்க வேண்டும் என்று அன்று நீங்கள் பேசினீர்கள். இன்று என்ன நடக்கிறது என்பதைத்தான் நீங்கள் குறிப்பாக உணரவேண்டும்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். அங்கத்தினர் அவர்கள் பேசும்போது கணக்கர் என்ற வகுப்பை 'கணக்கன்' என்று பேசுவது பொதுவாக அவர்களை அவமதித்துப் பேசுவதாக இருக்கும் காரணத்தால் அதை அவர் வாபஸ் வாங்க வேண்டும். நாங்கள் இதுபற்றித் தீர்ப்புக்கொடுக்க வேண்டும்.

**திரு. என். துரைபாண்டியன் :** தலைவர் அவர்களே, கடவுளை சிலர் 'ஆண்டவர்' என்று சொல்வதுண்டு. அதிக பக்திமான்கள், தமிழை நன்கு அறிந்தவர்கள் 'ஆண்டவனே' என்று அழைப்பார்கள். ஆகவே, 'கணக்கர்' என்று சொல்லாமல் 'கணக்கன் அவர்களே' என்று சொல்லுவதில் எந்தவிதமான தப்பும் இல்லை.

மாவட்டங்களில் உண்மையிலேயே மாவட்ட ஆட்சித் தலைவர் ஆட்சி செய்கிறாரா இல்லையா என்று தெரியவில்லை. இதற்கு ஒரு எடுத்துக்காட்டைச் சொல்ல விரும்புகிறேன். எனது மாவட்டத்தில் திருநெல்வேலி டவுன் சட்டசபை உறுப்பினர் திரு. ஏ. எல். சுப்பிரமணியம் ஆவார்கள். அங்கு ஒரு சர்க்கார் ஃபங்ஷன் நடக்கிறபோது சட்டசபை உறுப்பினருக்கு முதலிடம் கொடுக்காமல், நோட்டீசில் கூடப் போடாமல் அங்குள்ள கட்சிப் பிரமுகர்களைப் போட்டு சர்க்கார் ஃபங்ஷனை நடத்துவது எவ்வளவு கேவலமான ஆட்சி நடக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாகும். திரு. சுப்பிரமணியம் அவர்கள் இன்று ஆளும் கட்சியில் இருப்பவர்கள் ; மிகவும் வலிமை வாய்ந்தவர்கள் ; பி.ஏ., பி.எல். படித்தவர்கள். அந்த ஊரில் இருக்கிற சட்டசபை மெம்பரை விட்டுவிட்டு அதே ஊரில் இருக்கிற கட்சி அங்கத்தினரைக் கொண்டு அவர் தலைமையில் சர்க்கார் ஃபங்ஷன் நடக்கிறது. இதைவிட இந்த ஆட்சி ஒரு கட்சிக்காக நடக்கிறது என்பதற்கு வேறு உதாரணம் தேவையா ? மனு நீதி நாளில் கூட யார் இருக்கிறார்கள் என்றால், அந்த ஊர் கழக வட்டச் செயலாளர் இருக்கிறார். என்னுடைய வட்டாரத்தில், ராமகிருஷ்ணபுரம் கிராமத்தில் உள்ள ஏழைகளுக்குப் பட்டா வாங்கித் தருவதாகச் சொல்லி மனு வாங்கிக் கொண்டு போய் தாசில்

ந.ப. 12-00 தாரிடம் கொடுக்கிறார். உடன்குளம் பக்கத்தில் உள்ள இந்த நிலம் நல்ல நிலம் ; இதற்குப் பட்டா கொடுத்தால் நஞ்சை நிலமாகிவிடும் என்று அவர் சொல்லுகிறார். ஆகவே இந்த ஏழை எளியவர்களுடைய மனுக்கள் மறுக்கப்பட்டு அங்கே உள்ள வட்டச் செயலாளர்களுக்கு அல்லது செல்வாக்குப் படைத்த ஆளும் கட்சியினருக்குக் கொடுக்கப்படுகின்றன. இனம்கள் ஒழிக்கப்பட்டு விட்டன. இந்த நிலையில் அந்த இனம் கிராமத்தில் உள்ள நிலத்தை அதுவரையில் யார் பயிர் செய்து கொண்டு வந்து இருப்பார்கள்? அந்தக் கிராமத்தில் பன்னெடுங்காலமாக உள்ள விவசாயிகள்தான் பயிர் செய்து கொண்டு வந்து இருப்பார்கள். இதை யாரும் மறைக்கவோ அல்லது மறுக்கவோ முடியாது. பொது அறிவு படைத்த யாருமே இதை மறுக்க முடியாது. ஆனால் இன்றுள்ள சட்டப்படி என்ன நடைபெறுகிறது என்றால் அந்தக் கிராமத்திலுள்ள கிராம மாணியங்கள், கணக்கர்கள் என்ன எழுதி வைத்து விடுகிறார்களோ அவர்களுக்குத்தான் அந்த நிலம் கொடுக்கப்படுகிறது. என்னுடைய தாலுக்காவில் அடக்கரை கிராமத்தில் உள்ள விவசாயிகள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள். அங்கே இனம் ஒழிக்கப்பட்டுவிட்டது. அந்தக் கிராமம் இனம் கிராமம். அந்தக் கிராமத்தையே கபளீகரம் செய்ய வேண்டும் என்று குற்றாலத்திலிருந்து ஒரு செல்வாக்கு படைத்தவர் இவைகள்



எல்லாம் என்னுடைய நிலம் என்று எழுதுகிறார். அந்த நிலங்கள் அவருடையவைதான் என்று அங்குள்ள கிராம மாணியமும் கர்ணமும் எழுதுகிறார்கள். இந்த அளவிற்கு இனம் கிராமங்களிலுள்ள ஏழை மக்களுக்கு நீதி மறுக்கப்படுகிறது என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். இவற்றையெல்லாம் மனதில் வைத்துக் கொண்டு அரசு, மக்கள் அரசு என்று சொல்லிக் கொள்ளும் இந்த அரசு, ஏழை மக்களுக்கு நீதி வழங்கத்தக்க வகையில் சட்டங்களை இயற்றி இனம் கிராமங்களிலுள்ள நிலங்கள் எல்லாம் அந்தக் கிராமத்தைச் சார்ந்த விவசாயிகளுக்கே கொடுக்கப்பட வேண்டும் என்று சட்டங்களை இயற்றி ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

* * *

அரசுத் துறைகள் நல்ல முறையில் செயல்பட வேண்டுமானால் இப்படிப்பட்ட உத்திரவுகள், மேலும் கட்சிக்காரர்களுடைய தலையீடுகள் இருக்கக்கூடாது என்று அரசு கட்டளை பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்பொழுதுதான் அரசு ஊழியர்கள், அதிகாரிகள் தங்கள், கடமையைச் சரிவரச் செய்ய முடியும்.

அடுத்து, 1966-லிருந்து இதுவரையில் டெபுடி கலெக்டர்கள் பதவி உயர்வுக்கான பட்டியல்—'லிஸ்டு'—தயாரிக்கப்படவில்லை. இதன் காரணமாக பதவி உயர்வை எதிர்பார்த்து ஏமாற்றம் அடைந்த பல தாசில்தார்கள் விரக்தியடைந்து உறங்குகிறார்கள். 'நாங்கள் எப்படிச் செய்தாலும் இந்தச் சம்பளம்தானே, நமக்கு என்ன பதவி உயர்வா கிடைக்கப்போகிறது' என்ற ரீதியில் அவர்கள் இன்றைக்குப் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். சுறுசுறுப்பாக அவர்கள் இப்போதெல்லாம் பணியாற்றுவதில்லை. அவர்களுக்கு பதவி உயர்வு இல்லை. அவர்களுக்கு பதவி உயர்வு இருந்தால்தான் கீழே உள்ள தலைமை குமாஸ்தாக்களுக்கு, டெபுடி தாசில்தார்களுக்கு எல்லாம் பதவி உயர்வு கிடைக்கும். இப்படி 'ப்ரமோஷன்' இல்லாத காரணத்தினால் 'ரெவின்யு டிபார்ட்மெண்ட்' தூங்கக்கூடிய நிலையில் போகும்படி அரசு விட்டுவிட்டது என்ற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன்.

* * *

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ந. தருமலிங்கம்):** * * பற்றி உறுப்பினர் திரு. துரைபாண்டியன் அவர்கள் குறிப்பிட்ட பகுதிகள் அனைத்தையும் சட்டமன்றக் குறிப்பேடுகளிலிருந்து நீக்குமாறு நான் உத்திரவிடுகிறேன்.

**திரு. அ. லெ. சுப்ரமணியம் :** Sir, on a point of personal
நண்பர் அவர்கள் தமது உரையில், 'நெல்லையில் நடைபெறும் அதிகாரபூர்வமான நிகழ்ச்சிகளில் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் நான் அழைக்கப்படவில்லை'

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

என்று குற்றம் சாட்டிப் பேசினார்கள். அது சரியல்ல. அநேகமாக நான் தலைநகரில் இருக்கும்போதெல்லாம் அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுகிறேன். ஒரே ஒரு நிகழ்ச்சியில் மட்டும் தவறுதலாக விடப்பட்டு விட்டது. மாவட்டக் கலெக்டர் அவர்களே அதற்காக வருத்தம் தெரிவித்தார்கள். மேலும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை, எங்கெங்கே அரசாங்க நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றனவோ அவற்றில் சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கு பெற வேண்டும் என்பதாகும். இதுபற்றி திருச்சியிலே நடைபெற்ற கருத்தரங்கிலே முடிவெடுக்கப்பட்டு இருக்கிறது. எனவே நான் அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளில் பங்குபெற அழைக்கப்படவில்லை என்று சொல்லுவது சரியல்ல என்று மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

*புலவர் பொ. பொன்னம்பலம்: தலைவர் அவர்களே, இங்கே சட்டப் பேரவையின் முன்பு வைக்கப்பட்டுள்ள வருவாய்த் துறை மான்யத்தினை வரவேற்று சில கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன். எனக்கு முன்பு பேசிய நண்பர் அவர்களுக்கு பொதுவாக ஒரு கருத்தினை மட்டுமே நினைவூட்டிவிட்டு மேலே செல்ல விழைகின்றேன். அன்றைய தினம் பொய்யூர், கொழுப்பூர் வழியாகப் புறப்பட்டு அகந்தை நகருக்குச் சென்று ஆணவபுரியிலே வட்டமிட்டு இன்றைய தினம் அருமைக் காங்கிரஸ் நண்பர்கள் திரும்பி வந்து கொண்டு இருக்கின்றார்கள். ஆனால் நாமோ நமது பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற பண்பியல் வழியில் இன்பத் தமிழ் நகருக்குச் சென்று இலட்சிய புரியை நோக்கிச் சென்று கொண்டு இருக்கின்றோம். ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால் இப்போது இருக்கும் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவர் மக்களின் முன்பு பேசிக்கொண்டு வருகின்றார், 'நாங்கள் தவறி விட்டோம், நாங்கள் செய்யத் தவறிவிட்டோம்' என்று இப்போது உண்மையை ஒப்புக்கொண்டு வருகின்றார்கள். இப்படி பொய்யூர் வழியிலே சென்றவர்களை இப்போது உண்மையை உணரவைத்தவர்களே நாங்கள்தான். இதுவே ஒரு மகத்தான சாதனை என்று சொல்லிக்கொள்ள விழைகின்றேன்.

அடுத்து, வருவாய்த் துறையைப் பற்றிக் குறிப்பிடும்போது, அது இன்னமும் செக்கு மாடு முறையைத்தான் பின்பற்றிக்கொண்டு இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். இதை யாரும் மறுப்பதற்கு இல்லை. அவர்கள் சுறுசுறுப்பாக இல்லாமல் போய்விட்டார்கள் என்று சுட்டிக்காட்டினார்கள். இருபது ஆண்டுகாலமாக நீங்கள் ஊட்டினீர்களே அந்தச் சுறுசுறுப்பு இப்போது மூன்று ஆண்டுகளில் பாழ்பட்டுப்போய் விடவில்லை. நீங்கள் உறங்கச் செய்தீர்கள் கடந்த காலத்தில். இப்போது அவர்களை எழுப்பிக்கொண்டு இருக்கிறோம். நிச்சயமாக அவர்களை எழுப்பிவிடுவோம் என்ற உறுதியான நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. நிச்சயமாக சுறுசுறுப்பு அவர்கள் அவ்வளவு பெருக்கும் வந்துவிடும் என்ற உறுதிப்பாடும் எங்களுக்கு இருக்கிறது. அதிகாரிகளைப் பற்றிக் குறிப்



பிடும்போது ஒன்றைச் சொல்ல விழைகின்றேன், பொதுவாகப் பார்க்குமிடத்து. அன்றைய தினம் காங்கிரஸ் ஆட்சியில் அதிகாரிகள் சிலர் தங்களைக் காந்தீயவாதிகள் என்று சொல்லிக்கொண்டு காங்கிரஸ் நண்பர்களோடு பக்குவமாகப் பழகிக்கொண்டு வந்த அந்தப் பழக்கத்தை இன்னமும் மாற்றிக்கொள்ள முடியாமல் இருந்து வருகின்றார்கள். அவர்கள் தங்களைக் காந்தீயவாதிகள் என்று சொல்லிக் கொள்ளுகிறார்களே தவிர, அவர்களைப் பொறுத்த வரையில், முன்னால் இருக்கும் இரு எழுத்துக்களையும் விட்டுவிட்டு மிச்சமுள்ள நான்கு எழுத்துக்களுக்குத்தான் அவர்கள் இன்றைக்குப் பொறுப்பாக இருக்கின்றார்கள் என்பதைச் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. எனவே, அப்படிப்பட்ட சில அதிகாரிகளைப் பொறுத்தவரையில் சற்று கண்காணிப்பு தேவை என்று இந்த நேரத்தில் எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்து, வருவாய்த்துறை அமைப்பு 'டெமாக்ரஸி' என்று நாம் அரசியல் சட்டத்தில் சொல்லியிருக்கிறோமே, அதற்குக் கொஞ்சம் மாறுபட்டதாகத்தான் இருக்கிறது. அங்கே 'ப்யூராக்ரஸி' என்று சொல்லுகிறார்களே அதிகாரிகளின் ஆட்சி, அந்தகைய நிலைமைதான் இருந்து வருகிறது. இந்த நிலை மாற்றப்பட வேண்டியதொன்றாகும். அது இன்றைக்கு மெதுவாக, ஆனால் உறுதியாக மாறிக்கொண்டு வருகிறது என்பதை நான் வரவேற்கின்றேன். அடுத்து, வட்டத்திற்குப் பொறுப்பாக இருக்கும் தாசில்தார்கள் இன்னும் சிறந்த முறையில் பணியாற்ற ஏற்ற வகையில் வட்டத்திற்கு ஒரு சிற்றுந்து 'ஜீப்' வழங்க வேண்டும். பல வட்டங்களில் இது அவசியமாகத் தேவைப்படுகிறது. பல கிராமங்களுக்குச் சரியான சாலை வசதிகள் இல்லை. சில ஊர்களுக்கு நடந்தே செல்ல வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களுக்கு இந்தச் சிற்றுந்து இருந்தால் அவர்கள் இன்னும் திறம்படப் பணியாற்ற முடியும்.

அடுத்து மனுநீதி நாளைப் பற்றி இங்கே விளக்கம் கொடுத்தார்கள் மதிப்பிற்குரிய நண்பர் அவர்கள். ஆனால் அவர்கள் அதற்குள்ள ஒரு பொருளைப் பற்றித்தான் குறிப்பிட்டார்கள். ஆனால் அதற்கு இன்னும் ஒரு பொருளும் உண்டு. மனுநீதி சோழனைக் காண்பித்து அவர்கள் விளக்கம் கொடுத்துக் கொண்டு இருந்தார்கள். ஆனால் நான் குறிப்பிடுவது மனுவிற்கு நீதி வழங்கும் நாள் என்றுதான் சொல்ல விழைகிறேன். அப்படிப்பட்ட பொருளும் அதற்கு உண்டு. முன்பெல்லாம் கிராமவாசிகள்—முன்பெல்லாம் என்று நான் சொல்லும்போது, அண்மையில் இருந்த காங்கிரஸ் ஆட்சி காலம் வரையில் குறிப்பிடுகிறேன்—கிராமத்திலுள்ள சாதாரண மக்கள் அதிகாரிகளைக் காணப் பயப்படுவார்கள். பார்க்க வேண்டும் என்று விரும்பினாலும் இடையில் எவ்வளவோ இடர்ப்பாடுகள். இன்றைக்கு அதிகாரிகளே கிராமங்களுக்குச் சென்று மக்களை நேரில் சந்தித்து அவர்களுக்கு உள்ள குறைகளைக் கேட்டு அறிந்து அவற்றை நீக்குவதற்கான உத்திரவுகளும் பிறப்பிக்கப்

[புலவர் பொ. பொன்னம்பலம்] [1970 மார்ச் 13

படும் நிலையைக் காண்கிறோம். இது பெரிய மாறுதல் அல்லவா? ஆனால் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் குறிப்பிட விழைவது என்னவென்றால், மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இன்னும் அதிக அதிகாரங்களைக் கொடுத்தால் திறம்படச் செயல்பட முடியும் என்று நான் கருதுகிறேன். காரணம், இப்போது மனுநீதி நாளில் கொடுக்கப்படும் மனுக்களின் மீது சில துறைகள் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் மாவட்ட ஆட்சித் தலைவரால் உடனுக்குடன் உத்திரவுகளைப் பிறப்பிக்க முடியவில்லை. எனவே கூடுதலான அதிகாரம் இருப்பின் மேலும் திறமையாகச் செயலாற்ற முடியும் என்று கருதுகிறேன். ஆனால், முன்பு காங்கிரஸ் நண்பர் தானே தாசில்தாராகவும், தானே கோட்டாட்சித் தலைவராகவும், தானே மாவட்ட ஆட்சித் தலைவராகவும் இருந்து, தானே மனுக் கொடுப்பவராகவும் செயற்பட்டு, தானே தீர்ப்பு வழங்குவோராகவும் இங்கே பேசிக் காட்டினார். அப்படிப் பேசாமல் சான்று காட்டி பேசியிருந்தால் ஏற்புடைத்தாக அமையும். அடுத்து, மாவட்ட வளர்ச்சி மன்றத்தைப் பொறுத்தவரையில், அந்த மன்றம் அதிகாரம் படைத்த வளர்ச்சி மன்றமாக இருக்க வேண்டும். அந்த மன்றத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் எல்லாம் எந்த அளவிற்கு செயலாக்கப்படுகின்றன என்று நான் இங்கே குறிப்பிட விழைகிறேன். அங்கே நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய குறிப்புகள் அங்கத்தினர்களுக்கு அனுப்பப்படும் சூழ்நிலை உருவாக வேண்டும். அடுத்து என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியப் பகுதிகள் தொடர்ந்து வறட்சிக்கு உள்பட்டதாகவே இருந்து வருகின்றது. திருமயம் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் சில இடங்கள் வறட்சிக்கு உள்பட்டதாக இருக்கிறது. அரிமளம் பகுதியும் பாதிக்கப்பட்டு இருக்கிறது.

எனவே, அந்தப் பகுதிகளுக்குத் துயர் நணிப்பிற்காக கணிசதொகை ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டு, அடுத்து

"பகடு பிறந்தருநர் பாரம் ஓம்பிக் குடிபுறம் தருகுவை
ஆயின் நின் அடிபுறம் தருகுவர் அடங்கா தோரே."

என்ற புறநானூறுப் பாடலைச் சொல்லி உழவர் நலன்களை நன்கு கவனித்து ஆவன செய்ய முற்படுவோமானால் நிச்சயமாக அடங்காத காங்கிரஸ்காரர்களும் தானே அடங்கி விடுவார்கள். அடக்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை. அவர்களே அடங்கி விடுவார்கள் என்று கூறி இந்த நல்ல வாய்ப்பை நல்கியதற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, மாவட்ட நிர்வாகம், பல்வகை நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள மானியக் கோரிக்கையை ஆதரித்து என் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.



1970 மார்ச் 13] [திரு. பெ. சௌந்தரபாண்டியன்]

இந்த விவாதத்தைத் துவக்கி வைத்த மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்கள் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் பவானி சாகர் திட்டத்தினை நிறைவேற்றினோம், சாத்தனூர் அணையைக் கட்டினோம், கட்டளைக் கால்வாயை வெட்டினோம் என்றும் அதனால் தான் உணவு உற்பத்தி பெருகியிருக்கிறது என்றும் குறிப்பிட்டார். இன்னொன்றும் சொன்னார், இவ்வளவும் செய்து விட்டு நாங்கள் வெளியேறிவிட்டோம் என்று. திருத்திக்கொள்ள வேண்டுகிறேன். நீங்கள் வெளியேறவில்லை, நாட்டு மக்களால் வெளியேற்றப்பட்டீர்கள், என்று.

அடுத்துப் பேசிய உறுப்பினர் திரு. துரைபாண்டியன் அவர்கள் மாண்புமிகு கலைஞர் அவர்களின் மனு நீதித் திட்டத்தைப் பற்றிக் குறைகூறிக் குறிப்பிட்டார்கள். சோழர்கால ஆட்சியில் சிறப்பாக இருந்தது என்றும், பாண்டியன் ஆட்சியில் அரசன் சென்று யாரோ மாப்பிள்ளை இல்லாத வீட்டின் கதவைத் தட்டியதாகத் தவறாகக் குறிப்பிட்டார்கள். ஆராய்ச்சி மணி கட்டி அரசாண்ட மன்னன் மனு நீதிச் சோழன் இருந்த இடம் திருவாரூர். இன்று மனு நீதி முறையைப் புகுத்தி அரசாளும் கலைஞர் அவர்கள் பிறந்த இடம் திருவாரூர். ஆக, இருவரும் சோழ நாட்டைச் சேர்ந்தவர்கள்தான். சோழர் கால ஆட்சி முறை நிர்வாக முறையில் பொற்காலமாக இருந்தது என்பதை முற்கால மக்கள் பாராட்டிய வரலாறு நமக்கு அதை எடுத்துக் காட்டும். அதேபோல் கலைஞர் அவர்களின் ஆட்சியும் பொற்காலமாகத் திகழ்ந்தது என்று பிற்கால மக்கள் கூறும் வகையில் உன்னதமான திட்டங்களைத் தீட்டி இவ்விதமாக ஒரு புதுமையான ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள். இதை நாடு வரவேற்கிறது, நாட்டு மக்கள் வரவேற்கிறார்கள் என்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆட்சி என்பதை ஒரு தேருக்குச் சமமாக எடுத்துக் கொள்ளலாம். இந்தத் தேருக்கு அச்சாணி போன்றதுதான் அமைச்சரவையும் இம்மன்றத்திலுள்ள உறுப்பினர்களும். நிர்வாகம் செய்கிற அதிகாரிகளும் அலுவலர்களும் தேரின் இரண்டு சக்கரங்கள் போல் ஆவார்கள். நாம் தீட்டுகின்ற திட்டங்கள், நாம் போடுகிற கூட்டங்கள் இவை தேரின் வடக்கயிறுபோலாகும். இதை இழுப்பவர்கள்தான் பொது மக்கள். ஆகவே வடக் கயிறு அறுந்துவிட்டால் அல்லது அதை இழுக்கிற சக்தியுள்ள பொதும்க்கள் அதை இழுப்பதை நிறுத்திவிட்டால் தேர் நின்றுவிடும். ஆகவேதான், அதிகாரிகளுக்கும் பொது மக்களுக்கும் இடையே இருக்கிற உறவு முறை, அமைச்சர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையே இருக்கிற உறவு முறை, பொதுமக்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இடையே இருக்கிற உறவு முறை அத்தனையும் சீர்பட்டால்தான், செம்மைப்பட்டால்தான், நமது மக்களின் வருங்காலம் சீரும்சிறப்புமாக அமைய முடியும் என்பதை தான் இந்த நல்ல நேரத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும், பேரறிஞர் அண்ணா அவர்கள் நிர்வாக அலுவலகங்களில், பொது இடங்களில் ஏன் வள்ளுவர் படத்தை வைத்தார்கள் என்றால் அதில் நல்லதொரு கருத்து இருக்கிறது. அதில் நல்லதொரு கொள்கை இருக்கிறது. அதில் நல்லதொரு எண்ணம் இருக்கிறது. வள்ளுவர், அரசாட்சிபற்றிக் கூறும்போது அரசை நடத்துகிற நேரத்தில் அமைச்சர்களும் அதிகாரிகளும் எப்படியிருக்கவேண்டுமென்று கூறியுள்ளார். அரசாங்கத்தை நடத்திச் செல்பவர்கள் எளியவர்களாக இருக்கவேண்டும், அதாவது காட்சிக்கு எளியவர்களாக இருக்கவேண்டுமென்று கூறியுள்ளார். அப்படிச் சொல்கிற நேரத்தில் அதிகாரிகள் அலுவலகங்களுக்கு நேரம்தவறாது வந்து அமரவேண்டும். வருகிற பொதுமக்கள் அவர்களை எளிதில் பார்க்கிற முறையில் இருக்க வேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் எனக்கு ஒன்று நினைவிற்கு வருகிறது. மதிப்பிற்குரிய புரட்சி நடிகர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் நடித்துள்ள நம் நாடு படத்தில் கனம் எதிர்பார்த்து காலதாமதம் செய்வதைச் சுட்டிக் காட்டியுள்ளார். கடந்த இருபது ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில் நீங்கள் எவ்வளவு எவ்வளவு கடுஞ்சொற்களை கூறியிருக்கிறீர்கள்? தனிப்பட்டவர்களுக்கு எவ்வளவு சலுகைகள் காட்டியிருக்கிறீர்கள்? ஆகவேதான் மக்கள் உங்களை அகற்றியிருக்கிறார்கள் என்பதைக் காங்கிரஸ்காரர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். நிர்வாகம் என்பது ஜனநாயகத்தில் ஒரு நேர்கோடாக இருக்க வேண்டும். ஜனநாயகத்தில் நிர்வாகத்தில் தனிப்பட்டவர்களின் குறுக்கீடுகள் இருப்பது சகஜம்தான். ஆனால் நேர்கோடாக இருக்க வேண்டிய நிர்வாகத்தில் குறுக்கீடுகள் ஏற்படும்போது வளைந்து கொடுத்தால் நிச்சயமாக ஆட்சியும் வளைந்து கொடுக்கும், அப்போது நிர்வாகம் என்கிற நேர்கோடும் சாய்ந்துகொடுக்கும், அப்போது உண்மை நிலைமை மாறிவிடும். ஆகவே, ஜனநாயக முறையில் நிர்வாகத்தில் தனிப்பட்டவர்கள் செல்வாக்கோ அல்லது தனிப்பட்டவர்கள் நிர்வாகத்தில் தலையிடுவதற்கோ எந்தவிதமான இடமுமில்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். இதை வலியுறுத்துவது என் கடமையாகும் என்று கருதுகிறேன். நம் மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், இருக்கக்கூடிய அமைப்பு முறைகள் வெள்ளைக்காரன் காலத்தில் இருந்து வந்த அதே அமைப்பு முறைகள்தான் இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அவை சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும். மாவட்டத்திலுள்ள நிர்வாக முறையில் ஆணிவேர் போன்றவை ஊராட்சி மன்றங்களும், ஊராட்சி ஒன்றியங்களுமாகும்.

பொதுப்பணித் துறையாக இருந்தாலும் சரி அல்லது அறநிலையப் பாதுகாப்புத்துறையாக இருந்தாலும் சரி அல்லது எந்தத் துறையாக இருந்தாலும் சரி அங்கு தீட்டப்படுகிற திட்டங்கள், போடப்படுகிற ஆக்கப் பணிகள் ஆகிய அத்தனையும் மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதல் பெற்ற பிறகுதான் செயல்படுத்தப்



படுகின்றன. இதனால் எவ்வளவோ காலதாமதம் ஆகிறது. ஆகவே, ஆக்கப்பணிகளை நிறைவேற்ற அவகாசம் இல்லாமல் போய் விடுகின்றது. எனவே, அந்தந்தத் துறைக்கேற்ப அவற்றைத் தனித் தனியாகப் பிரித்து அந்தந்தத் துறைகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வருவாய்த் துறையைப் பொறுத்த வரைக்கும்தான் கண்காணிப்பும் கட்டுப்பாடும் செய்கிற ஒரு அதிகாரம் இருக்கவேண்டும் என்ற கொள்கையை இந்த அரசு விதிக்கவேண்டும் என்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த இருபது ஆண்டுக் காலத்தில் காங்கிரஸ்காரர்கள் அத்தனை ஆக்கப் பணிகளையும் செய்கிற வேலையை ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைத்தார்கள். இந்த ஊராட்சி ஒன்றியத்தில் பணியாற்றுகிற பெரும் தலைவருக்கு இருக்கிற அதிகாரங்கள், கொடுக்கப்பட்டிருக்கிற தொலைபேசி வசதி, எழுத்தர் வசதி, பணியாள் வசதி போன்ற வசதிகள் இருபத்தைந்து பஞ்சாயத்துத் தலைவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு இருக்கும் போது ஒரு லட்சம் வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அப்படிப்பட்ட தொலைபேசி வசதி கிடையாது, எழுத்தர் வசதி கிடையாது. பணியாள் வசதி கிடையாது என்ற நிலை இருக்குமானால் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதி வேலைகளை எப்படிக் கவனிப்பது? தொகுதியில் சாலை வசதி வேண்டுமென்றால் சட்டமன்ற உறுப்பினரிடம் வருகிறார்கள், மின்சார வசதி வேண்டுமென்றால் சட்டமன்ற உறுப்பினரிடம் வருகிறார்கள், மருத்துவ வசதி வேண்டுமென்றால் சட்டமன்ற உறுப்பினரிடம் வருகிறார்கள். அப்படி வரும்போது அதை எடுத்துச் சொல்வதற்கு, அதிகாரிகளிடம் அல்லது சம்பந்தப்பட்டவர்களிடம் தொடர்பு கொள்வதற்குத் தொலைபேசி வசதி கிடையாது, எழுதித் தபாலில் போடுவதற்குக்கூட பணியாள் வசதி கிடையாது. மக்களின் கோரிக்கைகள் குறித்து எழுதி சிபார்சு செய்வதற்கும் எழுத்தர் வசதி கிடையாது என்ற நிலைதான் இருக்கிறது. ஆகவே இந்த நிலை நம் ஆட்சிக் காலத்தில் அகற்றப்படவேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

இதேநேரத்தில் இன்னொரு கருத்தையும் வலியுறுத்த விரும்புகிறேன். நாட்டின் ஆட்சிக்கு அச்சாணி போன்ற சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஊராட்சி ஒன்றியக் கவுன்சிலில் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளதை அறிவோம். இந்த நியமனம் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டது என்பதையும் நாம் அறிவோம். இது எப்படியிருக்கிறதென்றால், அரசாளும் மன்னனை ஆண்டி மடத்தில் உறுப்பினராக்குவது போலாகும். இப்படிச் சொல்வதால் ஊராட்சி ஒன்றியக்குழுவை நான் குறைத்து மதிப்பிடுவதாக யாரும் நினைத்துக் கொள்ளக் கூடாது. இருக்கிற ஏற்றத்தாழ்வின் அளவைத்தான் சுட்டிக்

காட்டுகிறேனே தவிர வேறு எதையும் சுட்டிக்காட்டுவதாக யாரும் தவறாக எண்ணவேண்டாம். நம்முடைய அரசு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, ஊராட்சி ஒன்றியங்களில் நிர்வாகம் செலுத்தும் பொறுப்பையும், ஊராட்சி ஒன்றியங்களில் மதிக்கத்தக்க நல்ல ஆற்றலையும், அதிகாரத்தையும் வழங்கினால்தான் வருங்காலத்தில் நாடு செம்மையுறும், வருங்காலத்தில் நம்முடைய ஆட்சி திறன் பெறும், வருங்காலத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் பொது மக்களுக்கு ஆற்றவேண்டிய பணிகளைத் திறம்படச் செய்வார்கள். ஆகவே, இப்படிப்பட்ட நல்ல திட்டத்தை நம்முடைய அரசு செயல்படுத்த வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

இம்மாமன்றத்தில் அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் சொத்துக் கணக்குக் காட்டியிருக்கிறோம். அதைப்போல, இந்த நாட்டிலுள்ள அதிகாரிகள், நம்முடைய ஆட்சிமன்றத் தலைவர்கள், கீழ்மட்டத்திலுள்ள தாசில்தார்கள், கோட்டாட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பெருந்தலைவர்கள், ஆணையாளர்கள், உத்தரவிட அதிகாரம் பெற்ற அத்தனைபேர்களும் இந்த மாமன்றத்தின் முன்னால் சொத்துக் கணக்கை காட்டினால்தான் வருங்காலம் சீர்படும், செம்மைப்படும், வருங்கால நிர்வாகம் நேர்மையோடு இருக்கும், உண்மையான முறையில் ஆக்கப்பணிகள் ஆற்றப் பயன்படும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொண்டு எனக்குப் பேசுவதற்கு அனுமதியளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

* திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, நிதியமைச்சரவர்கள் வருவாய்த்துறையின்பேரில் சமர்ப்பித்த இந்த மானியத்தின் மீது பேசுவதற்கு அனுமதித்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

கோவை ஜில்லாவிலே அரசாங்கம் பஞ்ச நிவாரண வேலைகளை மேற்கொண்ட காலத்தில், பஞ்ச நிவாரண வேலைகளை மேற்கொள்வதற்காக கிட்டத்தட்ட 18 கோடி ரூபாய் அரசாங்கம் செலவழித்திருக்கிறது. இதில் 14 கோடி ரூபாய் மத்திய அரசாங்கம் கொடுத்திருக்கிறது, நல்ல வேலைகள் நடைபெற்றிருக்கின்றன என்று அரசாங்கம் அறிவித்திருக்கிறது. இருந்தாலும்கூட, பஞ்சம் நீங்கிவிட்டது என்ற பிரச்னையை அரசாங்கம் அறிக்கையின் மூலமாக மக்களுக்கு அறிவித்திருக்கிறது. அதேபோல, கோவை ஜில்லாவில் பல பகுதிகளில் பஞ்சம் நீங்கிவிட்டது என்று அரசாங்கம் அறிவித்ததற்குப் பிறகு, மிகவும் பாதிக்கப்படுகிற ஒரு நிலை அந்தப் பிரதேசத்திலே இருக்கிறது என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். காரணம் என்னவென்றால், ஏதோ மழை பெய்ததே தவிர, அதிலே வெள்ளாமை விளைச்சல் முழுமையாக விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை. அந்தப் பகுதி வறட்சி நிலவும் பகுதியாகக் காட்சியளிக்கிறது. விவசாயிகள், வெள்ளாமை சரியாக விளையாததால் மிகவும் சிரமப்பட வேண்டியிருக்கிறது.



அதேநேரத்தில், குடிதண்ணீர்ப் பிரச்னையை எடுத்துக்கொண்டால், அதுவும் சரிவர அங்குள்ள மக்களுக்குக் கிடைக்கவில்லை என்பது அதிகாரிகளுக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும், அந்த இடங்கள் பாதிப்பான நிலைமைகளிலேதான் மேற்கொண்டும் இருக்கிறது என்பதைக் கவனப்படுத்த விரும்புகிறேன்.

கடன் வசூல் சம்பந்தமாக, மூன்றாண்டுகளாக, மழையில்லாததால் மூன்றாண்டுகள் கடன் தள்ளி வைத்தார்கள். அதை இந்த ஆண்டு மூன்று ஆண்டுக் கடனையும் வசூல் செய்ய வேண்டுமென்று அரசாங்கம் அதிகாரிகள் மத்தியிலே சொல்லி வசூலிக்கிறார்கள். அந்தக் கடனைக் கட்டமுடியாத நிலையில், அந்தக் கடன்களைத் தள்ளி வைக்க வேண்டுமென்று கோரி, கிட்டத்தட்ட 7,000, 8,000 விவசாயிகள் ஒருநாள் உண்ணாவிரதம் இருந்து அரசாங்கத்திற்கு அறிவுறுத்தியிருக்கிறார்கள். அதற்குக் காரணம், பஞ்சம் நீங்கிவிட்டது என்ற பிறகு, அங்கு பஞ்சம் நிலவுகிறது என்று கணக்கில் எடுத்துக்கொண்டு, இந்தப்பிரச்னைக்குத் தீர்வு காண, இந்தத் துயர்துடைப்பு வேலைகள் மூலமாக மேற்கொள்ள வேண்டுமென்று கூறிக்கொள்ளுகிறேன். பஞ்சம் நீங்கிவிட்டது என்று சொன்னதால், அங்கு மிகவும் துன்பத்திற்குள்ளாகியிருக்கிறார்கள் என்பதையும் இந்த ஆண்டு கடன்களையும் தள்ளி வைக்கக் கோரி அரசாங்கத்தின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

பஞ்சாயத்துக்கள் மூலமாக வெட்டப்பட்ட கிணறுகளுக்குக்கூட, பஞ்ச நிவாரண வேலையில் வெட்டப்பட்ட கிணறுகளாகக் கருதி, என்னுடைய பகுதியிலே 60,000 ரூபாய்வரை கிணறு வெட்டியவர்களுக்குப் பணம் கொடுக்காமல் இருப்பதால் அவர்கள் மிகவும் சிரமத்திற்குள்ளாகியிருக்கிறார்கள். ஆகவே, பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக ஏற்கெனவே கிணறு வெட்டியவர்களுக்குப் பணம் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, மாவட்ட நிர்வாகம். மனுநீதி விசாரணை ஏற்படுத்தியதன் மூலம், சிறுசிறுப் பிரச்னைகளுக்குத்தான் தீர்வு காண முடிகிறதே தவிர, பெரும் பிரச்னைகளுக்குத் தீர்வு காண, வருகின்ற அதிகாரிகளுக்கு அதிகாரம் இல்லை, அவர்களும் சொல்ல முடியாத நிலை இருக்கிறது. 25 % தான் அந்தப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண முடிகிறதே தவிர 75%க்குத் தீர்வு காண முடிவதில்லை. அதிகாரிகள் வந்ததற்குப் பிறகு, ஜனங்கள் என்ன கோரிக்கைகளை சொல்கிறார்களோ அதற்குத் தீர்வு காண்பதிலே, மேலதிகாரிகளை சந்தித்து, என்ன முடிவு என்பதைப் பற்றி பரிசீலனை கிடையாது, அத்துடன் விட்டுவிடுகிறார்கள். 25% தான் தீர்வு காண முடிகிறதே தவிர, மீதியில் சுணக்கமான நிலை ஏற்படுகிறது. எனவே, இதற்கு வேறு மார்க்கமாக, சீக்கிரமாக அரசாங்க இயந்திரங்கள் இயங்கி, மக்களின் கோரிக்கைகளை அவ்வப்பொழுது, ஒருமாதத்திற்குள்ளோ இரண்டு மாதத்திற்குள்ளே அந்தப்

[திரு. கே. என். குமாரசாமி] [1970 மார்ச் 13

பிரச்னைகளைத் தீர்க்க, அதிகாரிகள் மட்டத்திலே தீர்க்க, சுறுசுறுப்பான நடவடிக்கை நிர்வாக மட்டத்திலே வந்தால்தான் முடியும். அந்த அளவுக்கு அக்கறை செலுத்தி, இன்னும் நிர்வாகம் துரிதமாக இயங்கக்கூடிய மார்க்கத்தைக் கண்டுபிடித்து, சுணக்க மான நிலை இல்லாமல் செய்ய அரசாங்கம் முன் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

எனக்கு முன்னால் அங்கத்தினர் ஒருவர் சொன்னார், அரிசி போட வில்லையே ஏன் போடவில்லை என்று ஜனங்கள் சொல்கிறார்கள் என்று சொன்னார். இம்மாதிரி நிலை வரும்பொழுது நிர்வாகிகள் எந்தப் பதிலையும் தெரிவிக்க முடியாமல் இருக்கிறது. இதற்கு முன்பு உணவுத்துறை மந்திரியாகவும், இப்பொழுது நிதியமைச்ச ராகவும் இருக்கும் அமைச்சரவர்கள், படிப்படியாக இந்தப் புஞ்சை நிலத் தீர்வையைத் தள்ளிவிடுவதைப்போல், நஞ்சை நிலத்திற்குப் படிப்படியாகக் கொண்டு வரலாம் என்று சொன்னார்கள். அந் நஞ்சை நிலத் தீர்வைத் தள்ளுபடியைப்பற்றி கவனிக்கவில்லை. நஞ்சை நிலத் தீர்வை அப்படியே இருக்கிறது. ஆகவே, நஞ்சை நிலம் என்று பெயர்தான் இருக்கிறதே தவிர, அதற்குத் தண்ணீர் பாய்வது கிடையாது. அந்தமாதிரி நஞ்சைத் தீர்வைகளைத் தள்ள இந்த நேரத்தில் முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கின்றேன்.

வீட்டு வசதிக்காக, நிலங்களை அரசாங்கம் எடுத்துக்கொண்டு நிலங்களை மக்களுக்கு விநியோகிக்கும்பொழுது, அந்த நிலங்களில் வீடுகள் கட்டுவதற்கு வழியில்லாமல் அந்த நிலம் பல வருஷங்க ளாக இருக்கிறது. இதற்குக் காரணம், வீடில்லாதவர்களுக்கு நிலத்தைக் கொடுத்து, அவர்கள் கையிலே வீடு கட்டுவதற்கு வேண்டிய பணம் இல்லாததால் அப்படியே இருக்கிறது. இன்னும் பல இடங்களில் வீடு கட்ட விண்ணப்பித்தும்கூட, பலவருஷங்க ளாகியும், அதிலே ஏதோ ஒரு சிறிய காரணத்திற்காக, சிக்கல்கள் இருக்கின்றன என்று பெரிதுபடுத்திச் சொல்லி அந் நிலங்களை எடுத்துக் கொள்ளாமல், மக்களுக்கு வீடும் கிடைக்காமல் திண் டாட்டமாக இருக்கிறது. அப்படிக் காலதாமதம் ஏற்படுவதால் வீடும் கட்ட முடியாது, வீட்டிற்கு நிலமும் கிடைக்காமல் அந்தப் பகுதியில் ஒரு முடிவேற்படாமல் இருக்கிறது. இந்த பிரச்னையில் அரசாங்கம் விசேஷ கவனம் செலுத்தி, அந்தச் சிக்கல்களுக்கு வேறு என்ன காரணம் என்று அறிந்து அப்படிப்பட்ட நிலைமை களைச் சரியான முறையில் பைசல் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

வீடு கட்டப் பணம் ஒதுக்கவேண்டும். வெறும் நிலம் மட்டும் கொடுத்தால் வீடு கட்டிவிடுவார்கள் என்று நம்ப முடியாது. நகரத்திலே, தீப்பிடிக்காத வீடுகளுக்காகப் பணம் செலவழித்துக் கொண்டிருக்கிறோம். அரசாங்கம் ஒருபுறம் கார்ப்பரேஷன் தற்கு ஒத்தாசையாக இருக்கிறது. நகரப்புறங்களில் மட்டும்



1970 மார்ச் 13] [திரு. கே. என். குமாரசாமி]

விசேஷ கவனம் செலுத்தினால் பிரயோஜனப் படாது. கிராமங்களில் வீட்டு வசதி செய்து கொடுக்க விசேஷ கவனம் செலுத்த வேண்டும். எதை யெடுத்தாலும் நகரம் நகரம் என்று சொல்லிக் கொண்டிருந் தால், அங்கிருக்கும் மக்கள், அரசாங்கம் என்ன செய்து கொண் டிருக்கிறது, அங்கே வீடு கட்டிக் கொடுக்கவில்லையே, வீடு கட்டப் பணம் இல்லையே என்று கேட்கிறார்கள். அந்த அடிப்படையிலே, கிராம மக்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். நகரத்தில் தீப் பிடிக்காத வீடுகள் கட்டினால், கிராமங் களில் தீப்பிடித்தால் அவர்களுக்கு 80 ரூபாய் அரசாங்கம் கொடுக் கிறது, பாக்கி கட்டுவதற்குப் பணம் இல்லை. அப்படிப்பட்ட இடங் களுக்கு என்ன செய்வது என்பதைப் பரிசீலித்து, அந்தப் பிரச்னை களுக்கு முடிவு காண ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கிராமப்புறத்திலுள்ள விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்த விலையில் ரேஷன் கொடுக்க வேண்டுமென்று ஏற்கெனவே பல தடவைகள் சொல்லியிருக்கிறோம். இன்று விலைவாசி ஓரளவுக்கு ஏறிக் கொண்டிருக்கிறது, படிப்படியாக ஏறப் போகிறது. அங்கிருக் கின்ற கிராமப்புற விவசாயத் தொழிலாளர்கள், ஏன் எங்களுக்கு குறைந்தபட்ச விலையில் கொடுத்தால் உங்களுக்குக் கட்டுப்படி யாகாதா? அரசாங்கத்திற்குப் பெரிய நஷ்டம் அதனால் வந்து விடாது, எங்களுக்கு மறுப்பதற்கு என்ன காரணம் என்று கேட்கிறார்கள். குறைந்த வருவாயில் இருக்கும் எங்களுக்கும் குறைந்த விலையில் ரேஷன் கொடுக்கக்கூடாதா? சென்னையிலும், கோயம்புத்தூரிலும் மட்டும் கொடுக்க வேண்டுமா என்ற கேள்வி யைக் கேட்கிறார்கள். எனவே, அரசாங்கம் இதைப்பற்றிப் பரி சீலனை செய்ய வேண்டும். கிராமப் பகுதிகளிலுள்ள மக்களுக்கு, குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு, நியாயவிலைக் கடைகளின் மூலமாக, விலையேறும் காலத்தில், குறைந்த விலைக்கு ரேஷன் கொடுக்க வழிவகை செய்யவில்லையென்றால், எடுத்த எல்லா முயற்சி களும் வீணாகிவிடும். நல்லபடியாகச் செய்வார்கள் என்று அந்த மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், அந்த நம்பிக்கைக் குப்பாத்திரமான முறையில் நடவடிக்கை இருக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

இதேநேரத்தில் இன்னொன்றையும் சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன். 200 ரூபாய்க்குக் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு, கோவையிலும், சென்னையிலும் படியரிசி போட உத்தரவு போடப் பட்டிருக்கிறது. ஒரே துறையிலே, ஒரே இலாக்காவிலே வேலை செய்பவர்கள் ஏதோ ஒரு காரணத்திற்காக கணக்கு வைத்துக் கொண்டு, அவர்களில் சிலருக்குக் கிடைப்பதில்லை. எனவே, அந்த வருமானக் கணக்கை, 200 ரூபாயிலிருந்து 300 ரூபாயாக உயர்த்தி, அவர்களுக்கு அந்த நியாய விலையிலே ரேஷன் கிடைக்க அரசாங்கம் விரைவில் வழி செய்தால் அந்தப் பகுதியிலுள்ளவர் களுக்கு நிச்சயமாகப் பலன் ஏற்படும். அந்தவகையிலே, சென்னை

[திரு. கே. என். குமாரசாமி] [1970 மார்ச் 13

யிலும், கோவையிலும் 200 ரூபாய் என்ற கணக்கை 300 ரூபாய்
என்று உயர்த்திக் கொடுத்து ரேஷன் வழங்க அரசாங்கம் முயற்சி
எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ஸ்டாம்பு பேப்பர் வாங்குவது சம்பந்தமாக, தொழிற்சங்கப்
பிரச்சினைகளிலும், தொழிற்சங்கத் தலைவர், தொழிலாளர்களுக்காக
எடுத்துக் கொள்ளும் கேஸ்களுக்குப் பணம் கட்டி ஸ்டாம்ப் வாங்கிக்
கோர்ட்டுக்குப் போக வேண்டியிருக்கிறது. அதே மாதிரி தொழி
லாளர்களும் இண்டிவிஜுவலாக கோர்ட்டுக்குப் போகவேண்டி
யிருக்கிறது. அதற்கு ஸ்டாம்பு பீஸ் கிட்டத்தட்ட ரூ. 300-க்கு
மேல் ஆகிறது. அது தொழிலாளிக்குப் பெரிய பாதகமாக இருக்
கிறது. நம்முடைய நாட்டில் தொழில் சங்கங்களே அப்படிப்பட்ட
கேஸ்களை எடுத்து நடத்தும் அளவிலும் இன்னும் வளர்ந்துவிட
வில்லை. ஆகவே, தொழிலாளர்கள் கோர்ட்டில் வழக்காட வேண்டு
மென்றால் ஸ்டாம்பு கட்டணம் கொடுத்தாக வேண்டியிருக்கிறது.
நான் நினைக்கிறேன், தொழிலாளர்கள் தரப்பில் வாதாடுவதற்குக்
கூட அரசாங்கமே வக்கீல்களை அமர்த்திக் கொடுக்க முயற்சி
எடுத்துக்கொள்ள வேண்டும் என்று முன்பே சொல்லியிருந்தாலும்,
இந்த நேரத்தில் அதை ஞாபகப்படுத்துகிறேன். ஆகவே, தொழி
லாளர்களுக்கு ஸ்டாம்பு கட்டணம் இல்லாமல் இலவசமாகவே
வழக்காடுவதற்கு வேண்டிய முயற்சிகளை அரசாங்கம் எடுத்துக்
கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இன்றைக்கு பாகப் பிரிவினை பண்ணவேண்டுமென்று
சொன்னால் மிகவும் சிரமப்படுகிறார்கள் விவசாயிகள். அதற்கு
ஸ்டாம்புக் கட்டணம் அதிகமாக இருக்கிறது. பூர்வீக சொத்தை
பாகப்பிரிவினை செய்துகொள்ள வேண்டுமென்றால், இன்றுள்ள
அந்த சொத்து மதிப்பீட்டின் பேரில் ஸ்டாம்பு கட்டணம்
செலுத்த வேண்டியிருக்கிறது. ரூ. 1,000, 2,000 என்ற அளவில்
ஸ்டாம்பு பேப்பர் வாங்க வேண்டிய நிலைமை இருப்பதினால்,
பாகப்பிரிவினையே பண்ணாமல் இருந்துவிடலாம் என்று கூட
தோன்றிவிடுகிறது. எப்படி விவசாயி அண்ணன், தம்பிகளுக்குள்
பாகப்பிரிவினை செய்துகொள்ள முடியும்? முன்பு எப்பொழுதோ
வாங்கிய சொத்துக்கு, இப்பொழுதுள்ள மதிப்பின்படி ஸ்டாம்பு
கட்டணத்தை உயர்த்துவதற்கு என்ன நியாயம் இருக்கிறது? இது
மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏதோ
மக்களுக்கு நன்மை செய்கிறோம் என்று சொல்லிவிட்டு, இந்த
ஸ்டாம்புக் கட்டணத்தை உயர்த்துவதன் மூலம், அவர்கள் பாகப்
பிரிவினை செய்துகொள்ள முடியாத அளவுக்கு நிலைமை இருந்து
கொண்டிருக்கிறது. ஆகவே, ஸ்டாம்பு கட்டணத்தை பழைய நிலை
மைக்கே கொண்டுவர வேண்டும். ஒரு தரம் சொத்து வாங்கும்
பொழுது அவன் ஸ்டாம்பு கட்டணம் செலுத்துகிறான். அந்த
சொத்தையே மறுபடியும் பாகப்பிரிவினை செய்துகொள்ளும்
பொழுது அதே அளவுக்கு ஸ்டாம்பு கட்டணம் மாற்றி அமைக்கப்
படவேண்டும். ஸ்டாம்பு பேப்பர் வாங்குவது மிகவும் கஷ்டம்
என்பதை மனதில் வைத்துக்கொண்டு, அரசாங்கம் இதில் முயற்சி



1970 மார்ச் 13] [திரு. கே. என். குமாரசாமி]

எடுத்துக்கொண்டு, ஸ்டாம்பு கட்டணத்தை பழைய நிலைமைக்கே
கொண்டுவரவேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன்.

முதியோர் பென்ஷன் என்று வயது வந்தோர்களுக்கும்,
அநாதைகளுக்கும் அரசாங்கம் பென்ஷன் தொகை கொடுத்து
உதவி செய்து வருகிறது. ஆனால், அப்படிப்பட்ட எல்லா முதியோர்
களுக்கும், அனாதைகளுக்கும் பென்ஷன் கொடுக்கப்படுகிறதா
என்று கேட்டால், இல்லை. முதியோர் பென்ஷன் வேண்டுமென்றால்
அவர்கள் நடையாக நடக்க வேண்டியிருக்கிறது. 'நீங்கள் பார்த்து
வாங்கித்தரக்கூடாதா, நடையாக நடக்க வேண்டியிருக்கிறதே?'
என்று கேட்கிறார்கள். முதியோர் பென்ஷன் என்ற அம்சத்தை
வைத்துக் கொண்டு, அதைப் பூரணமாக அமல் செய்ய வேண்டும்.
ஒரு சில பேர்களுக்கு கொடுப்பது, ஒரு சில பேர்களுக்குக் கொடுப்ப
தில்லை என்ற நிலைமை இருக்கக் கூடாது. முதியோர்கள்,
அனாதைகள் எல்லோருக்கும் இந்த முதியோர் பென்ஷன் வழங்கப்
படவேண்டும். முதியோர்கள் கஷ்டத்திற்கு உள்ளாகாமல்,
எல்லோருக்கும் முதியோர் பென்ஷன் திட்டத்தை அமலாக்க
அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இந்த
நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றும் சொல்லிக்கொள்கிறேன். ஒட்டுமொத்தமாக
சமுதாயம் முழுவதற்குமே பென்ஷன் திட்டத்தை நாம் கொண்டு
வரலாம். உழைத்து, உழைத்து அலுத்துப்போனவர்களுக்குக்
கூட இப்படிப்பட்ட ஒரு பென்ஷன் திட்டத்தை சமுதாயத்தில்
கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்யலாம். சமுதாயத்தில் உழைக்
கின்ற மக்களின் பிற்கால வாழ்க்கைக்குப பயன்படத்தக்க அளவில்
இந்தத் திட்டத்தை நாம் மேற்கொண்டால், அது சாலச்சிறந்ததாக
இருக்கும் என்று நினைக்கிறேன். இதே போன்ற ஒரு நிலைமையை
ஏற்படுத்த வேண்டும், அந்த எண்ணத்தோடு இந்தப் பிரச்சினையை
அணுக வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு,
எனக்குப் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு
நன்றி தெரிவித்துக்கொண்டு, விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. ஏ. அ. சுப்பராஜா: தலைவர் அவர்களே, இந்த மானியக்
கோரிக்கையின் மீது என் பெயரால் கொடுக்கப்பட்டிருக்கிற
வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைக் கூற
விரும்புகிறேன். மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்தமட்டில்,
என்னுடைய ராமநாதபுரம் மாவட்டத்தில் பெரிய பிரச்சினை
தலைநகரப் பிரச்சினை தான். இது நிதி அமைச்சர் அவர்களுக்கு
நன்றாகத் தெரியும். ஆனால் அவர்கள் முன்பே இந்தச் சபையில்
உறுதி அளித்திருந்தார்கள். இந்த மாவட்டத்தைச் சேர்ந்த
சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் ஏகோபித்து ஒரு இடத்
திற்கு தலைநகரை மாற்ற வேண்டுமென்று சொன்னால், அப்படி
மாற்றுவதற்குத் தயார் என்று சொன்னார்கள்.

[திரு. ஏ. அ. சுப்பராஜா] [1970 மார்ச் 13

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இது ஒருபுறம் இருப்பினும்கூட, இப்பொழுது எங்களது
மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் நன்றாகத் தெரியும், அந்த
பக்கம் ராமேசுவரத்திலிருந்து இங்கே கேரளாவின் எல்லை மேற்குத்
தொடர்ச்சி மலை வரைக்கும் எங்கள் மாவட்டம் தான். தலைநகரை
மாற்றுவது என்று சொன்னால், இப்பொழுது சமீபத்தில் சட்டமன்ற
உறுப்பினர் ஒவ்வொருவரும் அவரவர் இடத்திற்கு தலைநகரத்தை
மாற்றவேண்டும் என்று ஒவ்வொரு காரணம் காட்டி, அதன்பேரில்
சர்ச்சைகள் கிளம்பி, ஜில்லா அபிவிருத்தி மன்றத்தில், மேற்கு
ராமனாதபுரம், கிழக்கு ராமனாதபுரம் அபிவிருத்தி மன்றத்தில்
தனித்தனியாக இதுபற்றி தீர்மானம் போடப்பட்டிருக்கிறது.
முன்பே இந்த மாகாணத்திலுள்ள அத்தனை மாவட்டங்களையும்
ஒவ்வொரு மாவட்டத்தையும் முழுமையாகச் சுற்றிப்பார்த்து
ரீ-ஆர்கனைஸேஷன் பிரபோஸல் கொடுப்பதற்கு ஒரு கமிட்டி நிய
மிக்கப்பட்டதாக நாம் கேள்விப்படுகிறோம். அதற்குப் பின்பு
தான் எந்த விதத்தில், எந்த இடத்தில் தலைநகரம் அமைய
வேண்டும் என்று நிர்ணயிக்கலாம் என்ற யோசனையும் இருந்து
வந்தது. வெகுசீக்கிரத்திலே அருகாமையில் இருக்கக்கூடிய
இடத்தில் ஏழை எளியவர்கள் சென்று அங்கு இருக்கக்கூடிய
ஆட்சித் தலைவரையும், மற்ற அதிகாரிகளையும் பார்த்து
தங்களுடைய குறைகளைத் தீர்த்துக்கொள்ளவேண்டும் என்ற
ஒரு நிலையில் அந்த சௌகரியத்திற்கும், நிர்வாக சௌகரியத்
திற்கும் ஏற்ப, அதை மாற்றி அமைக்கக்கூடிய ஒரு திட்டத்தை
நாம் அமல்படுத்த வேண்டும் என்று தான் கேட்டுக்கொள்கின்றேன்.

அப்படிப்பட்ட ஒரு நிலை இருக்கும்பொழுது எனக்கு ஒரு ஐயம்
ஏற்படுகிறது. என்னவென்றால், அரசாங்கத்திற்கு ஆங்காங்
கிருந்து மனுக்கள் அனுப்பப்படுகின்றன. ராமனாதபுரத்தை
மாவட்ட தலைநகரமாக்க வேண்டும், மானாமதுரையை மாவட்ட
தலைநகரமாக்க வேண்டும் என்று இப்படி ஒவ்வொரு ஏரியாவிலிருந்
தும், ஒவ்வொரு பிரதேசத்திலிருந்தும் கேட்கப்படுகிறது. ஆனால்,
திடீரென்று பெரிய அதிர்ச்சி அளிக்கக்கூடிய விஷயம் என்ன
வென்று சொன்னால், மானாமதுரையை தலைநகரமாக ஆக்கலாமா,
வேண்டாமா என்று அதைப் பரிசீலனை செய்வதற்காக, ஒரு அதி
காரி அங்கு வந்து பார்த்துச் சென்றதினால்தான் ஒரு சிறிய ஐயம்
ஏற்படுகிறது. எனக்குச் சரியாக நினைவு இருக்குமானால், திரு.
நம்பியார் என்று நினைக்கிறேன். அந்த அதிகாரி மானாமதுரையை
பார்த்துவிட்டு, மீதி எல்லா இடத்தையும் விட்டுவிட்டுச் சென்றிருப்
பதால் ஒரு சிறிய சந்தேகம் ஏற்படுகிறது. இந்தப் பிரச்சினையில்
ரொம்ப அவசரக் கோலமாக, வெகு வேகமாக நமது அமைச்சர்
அவை முடிவு எடுக்கக் கூடாது என்பது என்னுடைய தாழ்மை
யான வேண்டுகோளாகும். அதற்கு முன்பு இப்பொழுது மதுரை
எங்களுடைய தலைநகரமாக இருப்பதை, "ஸ்டேடஸ் கோவை"
மெய்ன்டைன் செய்துவிட்டு, அதை எப்படி மாற்றுவது, எந்த
முறையில் செய்யலாம் என்று தீர்க்கமாக ஆலோசனை செய்ய



1970 மார்ச் 13] [திரு. ஏ. அ. சுப்பராஜா]

வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இல்லாவிட்டால்,
மேற்கு, கிழக்கு என்று பிரித்து கிழக்கு ராமனாதபுரத்தை
புதுக்கோட்டையோடு சேர்த்து ஒரு தனி மாவட்டமாக ஆக்கினால்
கூட நிர்வாகம் நன்றாக இருக்கும் என்பது என்னுடைய கருத்
தாகும். இதை யெல்லாம் யோசித்துப் பார்க்கும்பொழுது, ஒரு
வேளை இதையெல்லாம் நீங்கள் நன்றாக ஆலோசிக்காமல், அவசரப்
பட்டு செய்துவிட்டால், ஒரு காலத்தில் துக்ளக் மன்னர் டெல்லி
யிலிருந்து தலைநகரத்தை மாற்றிய கதை தான் எனக்கு நினைவு
வருகிறது. ஆகவே, இதில் தீவிரமாக கவனம் செலுத்த
வேண்டும். அப்படியில்லாமல் ஒரு சில இடத்திற்கு மாத்திரம்
ஒரு அதிகாரியை அனுப்பி, பரிசீலனை செய்து, தலைநகரத்தை
மாற்ற முடிவு எடுத்தால், பழைய மன்னர் கதை போலத்தான்
ஆகிவிடும். ஆகவே அந்தப் பெயரை நாம் வாங்கக் கூடாது
என்று அமைச்சரிடத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பஞ்ச நிவாரணத்தை எடுத்துக்கொண்டால், அறிக்
கையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. "இராமனாதபுரம், மதுரை,
திருநெல்வேலி மாவட்டங்களில் ஆங்காங்கு சில இடங்களில் உள்ள
சில பாதிக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்
துவதற்காக ரூ. 3 லட்சமும், தக்காவிக் கடன்களாக வழங்குவதற்
காக ரூ. 4.53 லட்சமும் அண்மையில் வழங்க அரசு ஒப்பளித்தது".
ஆக மூன்று மாவட்டங்களிலும் இருக்கக்கூடிய பிரதேசங்களுக்குக்
கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கொடுக்கப்பட்ட தொகை
போதுமானதா என்று பார்த்தால், போதுமானதாக இல்லை. மிக
வும் மோசமான நிலையில் இருக்கக்கூடிய ராமனாதபுரம் மாவட்டத்
திற்கு ஒதுக்கிய பணத்தில், அங்கே இருக்கக்கூடிய சில இடங்
களுக்கு மாத்திரம் தக்காவிக் கடன்கள் அதிகமாக கொடுக்கப்பட்டு,
சில இடங்களுக்குக் கொடுக்கப்படாமல் இருக்கக்கூடிய நிலைமை
இருந்து வருகிறது. எந்த அடிப்படையில் கடன் கொடுக்கிறது
என்று நிர்ணயமே இல்லாமல் இந்தக் காரியம் நடக்கிறது என்பதை
உங்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சாதாரணமாக
அந்த பகுதியிலே எங்கு பார்த்தாலும், நான் பார்த்த மட்டில்,
சாத்தூர், சிவகாசி, ராஜபாளையம் போன்ற வட்டங்களில், மக்கள்
படும் அவதி கொஞ்ச நஞ்சமல்ல. மிக மோசமான நிலையில் இருக்
கிறார்கள். குடிக்கத் தண்ணீர் இல்லாத நிலையும், உண்ண உணவு
கிடைக்காத நிலையும் இருக்கிறது. அதே சமயத்தில், நம்முடைய
அரசாங்கம் நியாயவிலைக் கடைகளையும் எடுத்துவிட்டதால் உச்சக்
கெடுதலாக இருக்கிறது. வேலையில்லாமல் இருக்கும் மக்களுக்கு
அவர்கள் ஒதுக்கும் பணம் கிடைக்கிறதா என்றால், இணைப்பு
ரோடுகளையும், புதிய ரோடுகளையும் ஏற்படுத்த பணங்களை ஒதுக்
கினால் அவர்களுக்கு அதிகமாக வேலை கிடைக்கும். அதற்கான
வாய்ப்பு இருக்கும். அதற்கு உண்டான தொகைகள் ஒதுக்கப்
படவில்லை என்பது வருந்தத்தக்க விஷயம். அங்கே எத்தனையோ
கிராமங்களில் இப்படி இருக்கும்போது, உணவு கிடைக்காமல்
கஷ்டப்படும்போது, நியாயவிலைக் கடைகள் மூலம் தானியங்கள்

வேண்டும் என்று அவர்கள் கூச்சல் போடுகிறார்கள். குடிக்கத் தண்ணீர் இல்லை. ஆழப்படுத்தினாலும் கிணறுகளில் தண்ணீர் வருமா என்கிறது சந்தேகம். ஆகவே, குடிக்கத் தண்ணீர் இல்லை. எங்களைப் போன்ற சட்ட மன்ற உறுப்பினர்கள் நிலை மிக மோசமானதாக இருக்கிறது. என்னவென்றால், நாங்கள் இங்கிருந்து சென்றவுடனே, அவர்கள் பத்திரிகைகளில் பார்த்ததை வைத்துக் கொண்டு, என்ன அங்கே லட்ச லட்சமாக ஒதுக்கியிருக்கிறார்கள், ஏன் எங்களுக்கு வசதிகள் கிடைக்கவில்லை என்று உறுப்பினர்கள் ஏதோ தின்று விட்டார்கள் என்று சொல்வது போல் கேட்கிறார்கள். அந்த அளவிற்கு அவர்களுடைய அறியாத நிலை பரிதாபத்திற்குரியதாக இருக்கும்போது, இங்கே நீங்கள் எங்களைக் கண்டு பரிதாபப்படவில்லையே என்றுதான் வருத்தமாக இருக்கிறது. நமது அரசாங்கத்தில் மிக முக்கியமான இந்த வேலைக்கு ஒதுக்கிய பணம் போதுமானதாக இல்லை.. அதே நேரத்தில் 75% மத்திய சர்க்காரும், 25% மாநில சர்க்காரும் கொடுப்பது என்று இருக்கும்போது, மாநில சர்க்கார் என் தன்னுடைய 25% பணத்தைக் கொடுத்து பணம் வாங்கும் நல்ல வாய்ப்பினை பெறக் கூடாது என்று கேட்கிறோம். மத்திய சர்க்காரோடு சரியாகச் சண்டை போட்டு, உங்களுக்கு, இருக்கும் செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டு, அதிகமான பணத்தை வாங்கவில்லை என்றால். எத்தனை மணிநேரம் நாள் நடத்தினாலும் அது நன்மை பயக்காது என்று கருதுகிறேன். ஆகவே. இதில் அக்கறையோடு கவனம் செலுத்தி, இந்த மாவட்டங்களில் இருக்கும் சில தமிழ்நாட்ட ஏக்குகளை முடிக்க வேண்டும். முதலிலே கமிட் செய்த ஒர்க்குகள் முடியவில்லை. புதிதாகப் பணம் ஒதுக்கியிருந்தாலும், அந்தப் பணங்கள் வில்லை. பணம் போதாருக்கு எந்த விதத்தில் கொடுப்பது என்பதில் தயக்கம் இருக்கிறது. பஞ்சத்தை நிவர்த்திக்க என்று இருப்பது. பஞ்சத்தை மேலே கொண்டு போகுமோ என்ற சந்தேகம் இருக்கிறது. ஆகையினால், பஞ்சநிவாரண வேலையில் அக்கறை காட்டி, நியாய விலைக் கடைகளை ஏற்படுத்தி, இணைப்பு ரோடுகளைச் செய்ய முற்பட்டால் வேலை வாய்ப்புகள் இருக்கும். ஒவ்வொரு கிராமத்திலும் டிப் போர் வெல்கள் போட்டால் தண்ணீர் அளிக்க உத்தரவாதம் ஏற்படும். இவற்றைச் செய்ய வேண்டும் என்று நிதி அமைச்சரை கேட்டுக் கொள்வதோடு, இந்த மாவட்டத் தலைநகரம் சம்மந்தமாக அவர்கள் ஒரு சின்ன விளக்கத்தைத் திட்டவட்டமாகக் கொடுத்து, எங்களுக்கு இருக்கும் சந்தேகத்தை நிவர்த்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

* திரு. வ. ஜார்ஜ் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, அவைமுன் வைக்கப் பட்டுள்ள மானியக் கோரிக்கைகளின் மேல் எங்கள் கட்சியின் சார்பில் கொடுக்கப் பட்டுள்ள வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனது குறிப்பில் குறிப்பிட்டது போல், வருவாய்த் துறைதான் அரசின் விவகாரங்களில் அதிகமான





பங்கு பெறுகிறது. மாவட்ட நிர்வாகம் தான் மக்களோடு உண்மையான தொடர்பு உள்ளதாக இருக்கிறது. ஆகவே, அது நடக்கும் முறையைப் பார்த்துத்தான் மக்கள் அரசு எவ்வாறு நடக்கிறது என்பதை நிர்ணயிப்பார்கள். எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், இந்த மாவட்ட ஆட்சி, மாவட்ட ஆட்சியாக நடக்காமல், கட்சி ஆட்சியாக நடக்கிறது என்கிற குற்றச் சாட்டைக் கூறுகிறேன். இதற்குப் பல உதாரணங்களைக் காட்ட முடியும். பஞ்சாயத்துப் பிரிவினை முறையே எடுத்துக் கொண்டால், பஞ்சாயத்து பிரிவினை பைல்கள் எல்லாம் ஆளும் கட்சி உறுப்பினர் திரு. எம். சி. பாலன் வீட்டிலேயேதான் இருந்தன, அரசாங்க அலுவலகத்தில் இல்லை. அவர் இஷ்டம் போல் துண்டாடப்பட்டது. இதை அரசினரால் மறுக்க முடியாது என்ற குற்றத்தைச் சாட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் செயல்படுவது கூட, கட்சி ஆட்சியாகத்தான் நடைபெறுகிறது என்கிற குற்றச் சாட்டையும் சாட்ட விரும்புகிறேன். மாவட்ட வளர்ச்சி மன்றம், சட்டப்படி ஏழுநாள் நோட்டீஸ் கொடுத்து, அஜெண்டா கொடுத்து கூட்டப்பட வேண்டும். ஆனால். எப்படி நடக்கிறது என்றால், காலையில் நோட்டீஸ் கொடுத்து, மாலையில் கூட்டம் போடுகிறார்கள். இப்படி. அனேக தடவைகளில் நடந்திருக்கிறது. அஜெண்டாவில் இல்லாத விஷயங்கள் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஒரு தடவை பஞ்சாயத்து பிரிவினை பற்றி விவாதிக்க வேண்டும் என்று கொண்டு வந்த தீர்மானத்தை அனுமதிக்காததால், மாவட்ட வளர்ச்சி மன்ற உறுப்பினர்களில் இருவர் தவிர மற்றவர்கள் அனைவரும் வெளி நடப்புச் செய்து, அந்த இருவரையும் மட்டும் வைத்துக் கொண்டு கூட்டம் நடத்தி, ப்ரொசீடிங் நடத்தப்பட்டிருக்கிறது. சட்டப்படி மூன்றில் ஒரு பங்கு நான்-அபிஷல் மெம்பர்களாவது இருக்க வேண்டும். அப்படி 24 அங்கத்தினர்கள் உள்ள மன்றத்தில் வெறும் இரண்டு பேர்களை மட்டும் வைத்துக் கொண்டு, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களை மட்டும் வைத்துக் கொண்டு, ஒரு எம்.எல்.ஏ. ஒரு எம்.எல்.சி. இவர்களை வைத்துக் கொண்டு நடந்திருக்கிறது என்றால். இது உண்மையிலேயே கட்சி ஆட்சியில்லாமல் வேறு என்ன ஆட்சி என்று கேட்க விரும்புகிறேன்.

அமைச்சர் இருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் ஆர்.டி.ஓ. ஆபீஸ் கட்டட அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. விழா நடக்கும் இடத்திலிருந்து ஒரு பர்லாங்கு தூரத்தில் தான் என்னுடைய அலுவலகம் இருக்கிறது. ஆனால் எனக்குத் தகவல் கொடுக்கப்படவில்லை. ஆனாலும் நான் கேட்டுக்கொண்டிருந்தேன். மாவட்ட ஆட்சியாளர், ஒரு ஐ.ஏ.எஸ். ஆபிசர் சொல்லுகிறார் : 'அன்புள்ள அண்ணா மதியழகன் அவர்களே என்று அழைக்க விரும்புவேன். ஆனால், நான் அதிகாரத்தில் இருப்பதால், அவ்வாறு கூறாமல், மாண்புமிகு அமைச்சர் அவர்களே என்று கூறுகிறேன்' என்று அட்ரெஸ் பண்ணுகிறார். . . . (குறுக்கீடு)

கலெக்டர். உங்கள் முன்னாலே, தக்கலையிலே சொன்னார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் உடனடியாகக் கண்டித்து இருக்க வேண்டும்: 'அண்ணா என்று அழைப்பது சரியில்லை தம்பி, ரிசைன் செய்து விட்டு என்னோடு கூட கட்சியில் வா' என்று அழைத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். அமைச்சர் அவர்கள் கவனிக்காமல் இருந்து விட்டார்கள். ஆகவே, இது கட்சி ஆட்சியா இல்லையா? இப்படி ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பகிரங்கமாகப் பேச வேண்டிய நிலை ஏற்படுகிறது என்றால், இந்த முறையில் இந்த அரசு செயல்படுகிறது என்று குற்றம் சாட்டுகிறேன்.

பஞ்ச நிவாரண வேலையைப் பற்றி அமைச்சர் குறிப்பிட்டார்கள். அரசின் திறமையை தெற்றெனக் காட்டுவதாக இருப்பதை உண்மையிலேயே பாராட்டுகிறேன். எதை? மத்திய சர்க்காரிடமிருந்து பணம் கறந்த முறையை அதில் காட்டிய திறமையைப் பாராட்டுகிறேன். இதிலே, "அரசியல் காரணங்களுக்காகச் சிறப்புச் சலுகையாக இவ்வளவு பெருமளவில் மத்திய அரசின் உதவி கிடைத்துள்ளது . . . . " என்று குறிப்பிடுவது அப்பா குதிருக்குள்ளே இல்லை என்பது போல இருக்கிறது. அவராகவே இதைச் சொல்ல வேண்டிய தேவையில்லை. இதிலிருந்தே இது அரசியல் காரணத்திற்காகத்தான் என்பது தெற்றென விளங்குகிறது. எந்தக் காரணத்திற்காகக் கொடுத்தாலும், கூடுதலாகப் பெறவேண்டும் என்பதுதான் எங்களுடைய அக்கறை எல்லாம். பெற்ற பணம் எவ்வாறு செலவு செய்யப்பட்டது என்பது தான் பிரச்சினை. வறட்சி நிவாரணம், கட்சி நிவாரண வேலையாகச் செயல்படுத்தப் பட்டிருக்கிறது. வறட்சி நிவாரண வேலையில் மன்ற உறுப்பினர்களை, பஞ்சாயத்து யூனியன் தலைவரைக் கலந்து ஆலோசிக்கவில்லை. கழக வட்டச் செயலாளர், மாவட்டச் செயலாளர் இவர்களைக் கொண்டு காண்ட்ராக்டுகள் கொடுத்துப் பல காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. வேறு மக்கள் பிரதிநிதிகள் தக்க முறையில் கலந்து செயல்படவில்லை. ஆகவே தான் வறட்சி நிவாரண வேலைகள் பலவும் பயனற்றதாக இருக்கின்றன.

எங்கள் மாவட்டத்தில்தான் இந்நிலை என்றில்லை. தமிழகம் முழுவதும் இப்படியிருக்கும் என்று நினைக்கிறேன். அரசின் தலைமைச் செயலாளர் மதுரையில், பத்திரிகை நிருபர்களுக்களித்த பேட்டியில் வறட்சி நிவாரண வேலைகளைக் குறிப்பிட்டு disgraceful—waste of money என்ற வார்த்தைகளை உபயோகித்திருக்கிறார்கள் என்றால், நாங்கள் அவ்வாறு கட்சிக் கண்ணோட்டத்தோடு கூறுகிறோம் என்று உங்களால் கூறி சமாளிக்க முடியாது.

என்னுடைய மாவட்டத்தில் வறட்சி நிவாரண வேலைகள்பற்றி ஆனரரி ரெவின்யூ போர்டு மெம்பர் திரு. திருமலை அவர்கள் வந்து விசாரணை நடத்தினார்கள். அவர் நடத்திய விசாரணையின் மீதான அறிக்கை என்ன ஆனது என்று தெரியவில்லை. அதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்





என்னுடைய மாவட்டத்தில் ஷேமநல நிதி என்று வைக்கப்பட்டது. எத்தனை மக்களைத் துன்பப்படுத்தி, வற்புறுத்தி, ஆறலைக் கள்வர்போல வழிப்பறி செய்து பணம் பறித்தார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். இதுபற்றி மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருமே சேர்ந்து முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு விண்ணப்பம் கொடுத்தோம். ஆனால் இன்றுவரையில் அதற்குப் பதில் இல்லை. ஷேமநல நிதி என்ன ஆனது? அங்கே 'கலைஞர் கருணாநிதி கலையரங்கம்', என்றும், 'அறிஞர் அண்ணா விளையாட்டு அரங்கம்' என்றும் செய்து வருகிறார்கள். இது கட்சிக் கண்ணோட்டத்துடன் செய்வது அல்லவா. திரு. எம். சி. பாலன் அவர்களுடைய தொகுதியில்தான் இப்படி நடைபெறுகிறது. அந்த இடங்களுக்கு வேறு பெயர் இடக் கூடாதா? இந்த மாவட்டத்தின் தந்தை என்று பாராட்டப்படும் முன்னாள் எம். பி. மார்ஷல் நேசமணி அவர்கள் பெயரை அந்த அரங்கத்திற்கு வையுங்கள் என்று கேட்டுக் கொண்டோம். அல்லது கவிமணி என்று போற்றக்கூடிய தேசிய விநாயகம் பிள்ளை அவர்களின் பெயரைப் போடுங்கள் என்று கேட்டோம். பலன் அளிக்கவில்லை. அதுபோலவே கலையரங்கை அம் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. கிருஷ்ணன் அவர்கள் பெயர் சூட்டக் கேட்டோம், பயனில்லை. ஆகவே இவையெல்லாம் கட்சிக் கண்ணோட்டத்துடன்தான் செயல்படுகின்றன என்று சொல்ல முடியாதா?

அடுத்தபடியாக, தாசில்தார் இல்லங்களுக்கு தொலைபேசி வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்று குறிப்பு இருக்கிறது. அதைக் கொடுக்க வேண்டிய தேவையில்லை. தாசில்தார் அலுவலகங்களுக்கு தொலைபேசி வசதி செய்துகொடுத்தால் போதும். சாதாரணமாகவே தாசில்தார்கள் ஒழுங்காக அலுவலகத்துக்குப் போவதில்லை. இன்னும் தொலைபேசி வசதி செய்து கொடுத்து விட்டால், சொல்லவே வேண்டாம். நிச்சயமாக அவர்கள் வீட்டைவிட்டு வெளியே வரமாட்டார்கள். அலுவலகத்தில் ஆகவேண்டிய காரியங்களை எல்லாம் தொலைபேசி மூலமாகக் கூறிவிட்டு தங்கள் வீடுகளிலே இருந்து விடுவார்கள். தாசில்தார்கள் அலுவலகத்திற்கு வந்தால் பொதுமக்கள் கண்டு தங்கள் குறைகளைச் சொல்லி பரிகாரம் தேடிக்கொள்ள முடியும். ஆகவே, இல்லங்களுக்குத் தொலைபேசி வசதி கொடுக்க வேண்டுமென்ற முறை நல்லது அல்லவென்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக தமிழகம் எங்கும் நிலவரி ரத்து செய்ய வேண்டும் என்று சொல்லி வருகிறோம். புஞ்சை நிலங்களுக்கு வரி இல்லை. ஆனால் குமரி மாவட்டத்திற்கு மட்டும் ஏன் விதிவிலக்கு? அங்கு காங்கிரஸ்காரர்கள் அதிகமாக வந்துவிட்டார்கள் என்பதாலா? அமைச்சர் அவர்கள் செட்டில்மெண்ட் ஆன பிறகு பரிசீலிக்கலாம் என்று முன்னால் சொன்னார்கள். அந்த சிறிய மாவட்டத்தில் இருந்து அந்த வரி கணிசமான அளவில் கிடைக்கிறது என்பதால்

[திரு. வ. ஜார்ஜ்] [1970 மார்ச் 13

அரசு தயங்குகிறதா ? இல்லை, வேண்டுமென்றே அரசியல் கண்
ணோட்டத்துடனேயே இந்த மாவட்டத்தில் புஞ்சை நிலவரியை
நிறுத்தாமல் இருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ரயத்துவாரி விஸ்தரிப்பு பழைய பாக்கியுடன்
வசூலித்து வருகிறார்கள். இதை நிதியமைச்சர் அவர்கள் நன்கு
அறிவார்கள். அது காங்கிரஸ் அரசாங்கம் கொண்டு வந்த திட்டம்
தானே என்று சொல்வதை விட்டுவிட்டு, உங்கள் கருத்துப்படியே
உடனடியாக நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திருவாங்கூர்-கொச்சியுடன் இருந்த பகுதிகளில்
ஜாயின்ட் பட்டாவைப் பிரித்து அரசாங்கச் செலவில் செய்து
கொடுத்தார்கள். ஆனால் இப்பொது மறு நில அளவை செய்திருப்
பதில் அவற்றை எல்லாம் திரும்பவும் கூட்டு பட்டாவாகக்
கொடுக்கும் முறையில், பல தனிக் கண்டங்களை ஒன்றாகச் சேர்த்து
நிலப்புலப்படம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதனால் பட்டா
வழங்குவதில் பல இடையூறுகள் ஏற்படுகின்றன. முன்னால்
இருந்த ஊடுகூறு ஊழல்கள் திரும்பவும் வருகின்றன. பட்டா
கொடுப்பதிலேகூட பல மைனர் சப்டிவிஷன் ஆனதாலே நிறைய
பேருக்குப் பட்டாகொடுக்க வேண்டியிருக்கிறது. அந்த இடங்
களில் ஒரு வில்லேஜில் பதினைந்து நாட்களுக்குள் இதைக் கொடுக்க
வேண்டும் என்று குறிப்பிட்ட காலத்திற்குள் இதைச் செய்து
கொடுக்க வேண்டும் என்று சொல்வது சாத்தியமல்ல. அவசரப்
படுத்தினால், உரிமையுடையவர்களுக்குப் பட்டா கிடைக்காமல்,
யார் யாருக்கோ கிடைக்கும் நிலை ஏற்படும். ஆகவே அங்கு
காலக்கெடுவை நீட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

(மணியடிக்கப்பட்டு திரு. ஆ. கருப்பையா அழைக்கப்பட்டார்.)

* திரு. ஆ. கருப்பையா : தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி
யமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற வருவாய்த் துறை மானி
யத்தை ஆதரித்து என்னுடைய ஒருசில கருத்துக்களைச் சொல்ல
முன்வருகிறேன். இந்த ஆண்டு நமது மாநிலத்தில் வறட்சி என்ன
நிலைமைக்கு இருந்தது என்பதை இந்த மன்றத்திலுள்ள நாம்
அனைவரும் அறிவோம். இந்த வறட்சி நேரத்தில் நமது அரசாங்
கம் எவ்வளவு உன்னிப்பான முறையில் இதைச் சமாளித்திருக்கிறது
என்பதையும், அறிவோம். ஏறத்தாழ 18¼ கோடி ரூபாய் வரை
வறட்சி நிவாரண வேலைகளுக்குச் செலவு செய்திருக்கிறோம்.
குறுகிய காலத்தில் பல திட்டங்களைத் தயாரித்து, அந்தத் திட்டங்
களை உடனுக்குடன் செயல்படுத்தி, நம்மோடு ஒத்துழைத்த
அதிகாரிகளும், இந்த மாநிலத்தில் நாங்களும் மக்களின் பிரதி
நிதிகள் என்ற முறையில் செயல்பட்டிருப்பதற்காக அவர்களை
இந்த மன்றத்தில் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1970 மார்ச் 13] [திரு. ஆ. கருப்பையா]

இந்த நிவாரண பணி கட்சிக் கண்ணோட்டத்துடன் செயல்
படுத்தப்பட்டிருக்கிறது என்று எனக்கு முன்னால் பேசிய உறுப்
பினர் திரு. ஜார்ஜ் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு
ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எங்கள் மாவட்டத்
திற்கு ஏறத்தாழ 74 லட்சம் ரூபாய்தான் செலவழித்தார்கள்.
எங்கள் மாவட்டமான திருநெல்வேலி மாவட்டத்தில் காங்கிரஸ்
உறுப்பினரான திரு. என். சௌந்தரபாண்டியன் அவர்களுடைய
தொகுதிக்கு மட்டும் 7 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்
கிறது. இதை ஏன் சொல்கிறேன் என்றால், மாவட்டம் முழு
மைக்கும் உள்ள 19 தொகுதிகளுக்கும் சேர்த்து ஒதுக்கப்பட்ட
தொகை 74 லட்சம் ரூபாய். இதைப் பங்கிட்டால் ஒவ்வொரு
வருக்கும் எவ்வளவு வரும் என்பது எல்லோருக்கும் தெரியும்.
அப்படியிருந்தும் காங்கிரஸ் உறுப்பினர் தொகுதிக்கு அதிகப்படி
யான பணத்தைக் கொடுத்து, வளமான தொகுதியாக ஆக்கியிருப்
பதை நினைவிற் கொண்டால், இது எந்த முறையில் கட்சிக் கண்
ணோட்டம் என்று சொல்ல முடியும் ?

அடுத்து, நமது அமைச்சர் அவர்கள் நிவாரணப் பணிகள்
செம்மையாக, தீவிரமாக செய்யப்பட்டதைப்பற்றி மட்டுமல்லாமல்
இன்னும் பல பாகங்களில் செய்ய வேண்டிய பணிகள் இருக்கின்றன
என்பதையும், மாநிலம் முழுவதிலும் செய்ய வேண்டிய பணிகள்
பற்றியும் கோடிட்டுக் காண்பித்திருப்பதைக் கண்டு பெருமைப்படு
கிறேன். இந்த நாட்டின் மீது, இந்த நாட்டு மக்களின்மீது, இந்த
நாட்டு மக்களின் நலன்கள்மீது அமைச்சர் அவர்களுக்கு எவ்வளவு
அக்கறை கொண்டு கவனித்திருக்கிறார்கள் என்பதைக் கண்டு
பெருமைப்படுகிறேன். திருநெல்வேலி மாவட்டத்தையும்
கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். இந்த மாவட்டத்தில் இன்னும்
அந்தத் துயர் வறட்சி இருந்து கொண்டிருக்கிறது. பல கிராமங்
களில் குடி தண்ணீருக்காகக் கூட மக்கள் சிரமப்பட்டுக்
கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்தில் சொல்லக்
கடமைப் பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியில் உக்கிரன்
கோட்டை மாரான்புதூர் என்ற கிராமங்களில் எல்லாம் குடித்
தண்ணீருக்குக் கூட கஷ்டமாக இருக்கிறது. குடி தண்ணீர்ப்
பிரச்சினையைப் போக்க, அதிகமாகப் பணம் செலவழிக்க வேண்டு
மென்று கோடிட்டுக் காட்டியிருப்பதை வரவேற்கிறேன்.

அடுத்து, திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்த அளவில்
வடபகுதி முழுவதுமே மிகுந்த வறட்சியான பகுதி. எங்களது
முதல் அமைச்சர் அவர்கள் சுற்றுப்பயணம் வந்திருந்தபோது
தென்காசியில் இருந்து அந்த ஏரியா முழுவதையும் கவனித்து
வந்தார்கள். அதன் பலன் மேலும் பஞ்ச நிவாரணப் பணிகளை
திருநெல்வேலிக்கு விஸ்தரிக்க வேண்டுமென்று அவர்கள் முடிவு
செய்திருப்பதை அறிந்து உண்மையில் நான் பெருமைப்படுகிறேன்.
அது நல்லமுறையில் நடக்க வேண்டுமென்றும் கூறிக்கொள்கிறேன்.

அடுத்து, உச்சவரம்புச் சட்டத்தை நான் மனதாரப் பாராட்டுகிறேன். 15 ஏக்கரா என்று நல்லமுறையில் அமைத்திருக்கிறார்கள். இதைக் கொண்டுவரும் போது நாம் இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். அந்த நிலங்களை நிலம் இல்லாத ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டும். ஒரு விவசாயி ஒரு சோடி மாடு வைத்திருந்தால் 3 ஏக்கரா நிலம் இருந்தால் தான் மாட்டையும் காப்பாற்ற முடியும். குடும்பத்தையும் காப்பாற்ற முடியும். ஆகவே உபரி நிலங்களை கட்டுபடியாகக் கூடிய அளவில் நிலம் இல்லாத விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேசமயத்தில் கிராம கர்ணம், முன்சிப் போன்றவர்களுடைய சம்பளத்தை உயர்த்துவதை நான் வரவேற்கிறேன். இந்த உச்சவரம்புச் சட்டம் வெற்றிபெற அவர்கள் தான் ஒத்துழைக்க வேண்டும். அவர்களில் ஒருசிலர் ஜமீன்தார் பரம்பரை போல எண்ணிக் கொண்டு இருக்கிறார்கள் என்பதைச் சொல்லாமல் இருக்க முடியாது. அந்த நிலை மாற வேண்டும். மாறவேண்டுமானால் என்.ஜி.ஓ.க்களுக்குக் கொடுக்கிற சம்பளம் போல அவர்களுக்கும் கொடுத்து மற்றவர்களைப் போலவே இவர்களையும் ஆங்காங்கு மாற்றிப்போடும் ஒரு திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, நான் பத்திரப் பிரிவுத்துறையைப் பற்றிச் சொல்கிறேன். முத்திரைத்தாள்கள் மூலம் இந்த ஆண்டு நல்ல வருவாய் வந்திருக்கிறது. அது பாராட்டுக்குரியதுதான். ஆயினும் முத்திரைத்தாள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது என்பதையும் சொல்லாமல் இருக்க முடியாது. முன்பு பத்திரத்தாள் விற்பனைக்கு நூற்றுக்கு 6¼ ரூபாய் கமிஷன் கொடுத்து வந்தார்கள். இப்போது 50 ரூபாய்க்கு மேற்பட்ட தாள்களுக்கு கமிஷனைக் குறைவாக்கி விட்டார்கள். அதன்காரணமாக ஸ்டாம்ப் வெண்டார்கள்—50 ரூபாய்க்குள் தான் ஸ்டாம்பு வாங்கி வைத்திருக்கிறார்கள். அதற்கு மேற்கொண்டு வேண்டுமென்றால் வாங்கி வர இருபது கொடு, இருபத்தைந்துகொடு என்று ஸ்டாம்பு வாங்குகிறவர்களிடமே கமிஷன் பெற்று வருகிறார்கள். இநதப் பழக்கத்தை நிறுத்த ஒரு சிறு யோசனை—50-க்குக் கீழே உள்ள ஸ்டாம்புகளை ஏஜெண்டுகளின் மூலம் விற்றால் போதும். அதற்குமேற்பட்ட தொகைக்கு வேண்டுமானால் அந்த அந்த சப்ரிஜிஸ்திரார் ஆபீசிலேயே விற்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிச் செய்தால் ஏஜெண்டுகள்—மக்கள் சேர்ந்து அரசாங்கத்தை ஏமாற்றுகிற தன்மை நின்றுவிடும். அரசாங்கத்திற்கும் அதிக வருமானம் வரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு மாவட்டத்துறையில் வேலை புரிகிற சிறிய அதிகாரிகளை பெரிய அதிகாரிகள் துன்புறுத்துகிற நிலை இருக்கிறது. ஒரு யூனியனில் ஒரு என்ஜினியர் வேலை பார்த்தார் என்றால் அந்த யூனியனில் இருக்கும் ஜீப்பை அவர்களுக்குக் கொடுப்பதே இல்லை. பெரிய அதிகாரிகள் தங்கள் சொந்த விஷயத்திற்காகவே ஜீப்பை எடுத்துக்





கொண்டு போகிற நிலைதான் இருக்கிறது. இதை மாற்ற வேண்டும். இன்னும் மாவட்டங்களில் உள்ள ஜீப்புகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும். அப்போதுதான் முன்னேற்றத் திட்டங்களின் கீழ் உள்ள அதிகாரிகள் விரைவில் செயல்பட வழியேற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

* **திரு. எஸ். பரமசிவம் :** பேரவைத் தலைவர் அவர்களே வருஷநாடு, கடமலைக்குண்டு பிராந்திய உழவடை நிலங்களை நிலமில்லாத விவசாயிகளுக்குப் பட்டா வழங்க வேண்டும் என்பதுபற்றி ஒரு வெட்டுப் பிரேரணையை நான் கொடுத்திருக்கிறேன்.

கடந்த 45, 50 ஆண்டுகளுக்கு முன்பாக திருநெல்வேலி மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டங்களிலிருந்து பல திக்கற்ற குடும்பங்கள் குடியேறின. அந்தக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பல கொடிய விலங்குகளால் தாக்கப்பட்டு இறந்திருக்கிறார்கள். ப்ளேக், காலரா போன்ற நோய்களினால் குடிசையிலேயே இறந்து, பல நாட்கள் கழித்துக் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதையும் பார்க்கிறோம். இப்படி விலங்குகளினாலும், நோய்களினாலும் தங்கள் தங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் உயிரை இழக்க நேர்ந்து இருக்கிறார்கள். இதை ஏன் சொல்கிறேன் என்றால் அப்படி உயிரையே பணயம் வைத்துவிட்டு அந்த இடங்களிலே குடியேறினவர்களுக்கு இன்னமும் அந்த நிலம் பட்டா செய்து கொடுக்கப்படவில்லை. வன இலாக்காவினர் அந்த நிலங்கள் தங்களுக்குச் சொந்தமானது, வனத்தை அழித்து விட்டால் மழை பெய்யாது என்றெல்லாம் சொல்லி வருகிறார்கள்.

முன்பெல்லாம் அவர்கள் வருவதும்—பின்னர் வெளியேறுவதுமாக 1719-ஆம் ஆண்டில் இருந்தே இருந்து வந்திருக்கிறார்கள் என்பதற்கு தஸ்தாவேஜ் மூலமாகத் தகவல்கள் இருக்கின்றன. தற்போது பல ஆண்டுகளாக அங்கே தங்கி விவசாயம் செய்து வருகிறவர்கள் தான் இருக்கிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன்னால் வன இலாக்கா அதிகாரிகளால் அவர்களுக்குத் தொந்தரவு இருந்தது. இந்த அரசு வந்த பிற்பாடு அந்தத் தொந்தரவு இல்லை. ஆயினும் அவர்களுக்கே அந்த நிலம் பட்டா செய்துகொடுக்கப்படும் என்று நிதி அமைச்சர் அவர்கள் வந்திருந்தபோது வாக்குறுதி கொடுத்தார்கள். அவர்கள் இங்கே வந்து கேட்டபோதும் எந்த அமைச்சர்களும் அவர்களைப் பார்த்தவுடன் அப்படியே பட்டா செய்து கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அந்த வாக்குறுதி இன்னும் நடைமுறைக்குக் கொண்டுவரவில்லை என்று நான் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

முன்பு ஒருவருக்கு 5 ஆண்டுக்குக் குத்தகைவிடலாம் என்கிற யோசனை இருந்தது. அதற்காக ஒரு கமிட்டியையே போட்டிருந்தார்கள். உழவர்கள் யாரும் குத்தகை எடுக்க முன்வரவில்லை. அந்தக் காரணத்தினால் அந்தக் கமிட்டி அப்படியே செயலற்றுப் போய் கரைந்துவிட்டது.

கடந்த மாதம் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதிலிருந்து திரும்பவும் ஒரு கமிட்டி அமைத்து அந்த நிலங்களைக் குத்தகைக்குவிட நட எடுக்கப் போவதாகத் தெரிகிறது.

எல்லோரும் சிந்திக்க வேண்டும். பல ஆண்டுகளாக அங்கே சாகுபடி செய்துவந்த இந்த ஏழை மக்களுக்கு அந்த நிலம் பட்டா. செய்துகொடுக்கப்படவில்லை. பணவசதி படைத்தவர்கள், முன்பு அரசியல் செல்வாக்கு உடையவர்களுடன் தொடர்பு கொண்டவர் களுக்கு ஏற்கனவே நிலம் பட்டா செய்து கொடுக்கப்பட்டிருக் கிறது. அவர்கள் அந்த நிலத்தைக் குத்தகைக்குவிட்டுக் கொண் டிருக்கிருர்கள். உழுது நேரிடையாகப் பயிர் செய்கிறவர்களுக்கு நிலம் பட்டா செய்துகொடுக்கப்படவில்லை. பலகாலமாகக் கோரி வந்தும் வருஷநாடு, கடமலைக்குண்டு ஏழை விவசாயிகளுக்கு இன்னமும் விமோசனம் ஏற்படவில்லை. அதன்காரணமாக அவர் களிடையே சிலர் தவருன பிரச்சாரம் செய்கிருர்கள். அவர்களும் என்ன என்னமோ பேசிக் கொண்டிருக்கிருர்கள். இதை மனதில் வைத்து உடனடியாக அவர்களுக்குப் பட்டா வழங்குமாறு இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஆண்டிப்பட்டி பிராந்தியம் பூராவும் மலைப் பிராந்தியம். அங்கு தண்ணீர் 85 அடி ஆழத்தில் இருக்கிறது. பஞ்ச நிவாரண வேலைக்காக எட்டு லட்சம், ஒன்பது லட்சம் செலவு செய்தும் இப்போது குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல் மிகவும் வறட்சியாக இருக்கிறது. குறிப்பாகக் கண்டமனூர் பிராந்தியம் காட்டுப் பகுதி, எப்பொழுதுமே தண்ணீருக்குச் சிரமப்படுகின்ற இடம். குடிதண்ணீருக்கு அங்கே மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அதை நிவர்த்தி செய்வதற்கு சர்க்கார் ஆவனசெய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட காரியங்களுக் கெல்லாம் நிவாரணம் வேண்டு மென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கேட்கிறபொழுது அவர்கள் சர்க்காரிடத்திலே கேட்டுத்தான் செய்ய வேண்டுமென்று சொல்கி ருர்கள். அவசரமான முக்கியத்துவம் வாய்ந்த பல காரியங்களைச் செய்வதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பொறுப்பில் ஏதாவது ஒரு பண்ட், நிதி கொடுத்தால் அவர்கள் உடனடியாக அவற்றை கவனிப்பதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மக்களுக்கு உடனடியாகத் தொண்டாற்றக்கூடிய நல்ல ஏற்பாடாக அது இருக்கும்.

ஆண்டிப்பட்டியிலே சென்ற ஆண்டு பஞ்ச நிவாரண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இன்னும் காண்ட்ராக்டர்களுக்குப் பில் கொடுக்கப்படாமல் இருக்கிறது. 70 ஆயிரம் ரூபாய் வரையில் பாக்கியிருக்கிறது. காண்ட்ராக்டர்கள் அத்தனை பேருமே பஞ்சா யத்து யூனியனுக்கு நோட்டீஸ் விட்டுக் கொண்டிருக்கிருர்கள். இதைப்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் சர்க்காருக்கு எழுதியிருக்





கிருர்கள் ஆனல் இன்னும் பணம் வந்து சேரவில்லை. அவர்கள் கோர்ட்டுக்குப் போய்விடக்கூடிய நிலைமை ஏற்படுவதற்கு முன்பு பணத்தைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பலர்—என்னுடைய நண்பர்கள்—மாவட்ட ஆட்சித் தலைவர் களைப் பற்றிப் பேசினர்கள். ஏதோ ஏதோ அந்த அந்த மாவட்டங் களிலே உள்ள நிலைமைகளைப் பற்றிச் சொல்கிருர்களா அல்லது திரித்துக் கூறுகிருர்களா என்பது தெரியவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி வந்ததற்குப் பிறகுதான் மாவட்ட ஆட்சித் தலைவர்களாக இருந்தாலும்சரி, தாசில்தார்களாக இருந் தாலும்சரி கிராமங்களுக்குச் செல்கிருர்கள். கட்சிப் பாகுபாடு காட்டுவதாக எல்லாம் சொன்னர்கள். அப்படி ஒன்றும் இல்லை. காட்டுப் பகுதியில் உள்ள குக்கிராமங்களுக்குக்கூட செல்லுகிருர் கள். அவாகள் ஏதோ பல குக்கிராமங்களுக்குக்கூட செல்லுகிருர் மென்பதற்காகத் திருப்பித் திருப்பிச் சொல்லித் தங்களுடைய பேச்சுத் திறனை அதிகாரிப்பதற்கோ அல்லது மற்றவர்கள்மீது பொய்க் குற்றம் சொல்வதற்கோ சொல்லிக் கொண்டிருக்கிருர்கள். அது எல்லாம் இந்த ஆட்சியில் இல்லை, முன்பு இருந்த ஆட்சியிலே நடந்தது என்பதைச் சொல்லிக் கொண்டு எனக்கு இந்த வாய்ப்பை அளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. கே. சகாதேவக் கண்டர்:** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியின் சார்பாகக் கொண்டுவரப் பட்டு இருக்கிற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். என்னுடைய மாவட்டம் வட ஆற்காடு மாவட்டம். 11 தாலுகாக்கள் இருக்கின்ற பெரிய மாவட்டமாக இருக்கிறது. அந்த மாவட்டத்திலே 100 மைல் வரையில் உள்ள கிராமங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஒரு விவசாயி அந்த மாவட்டத்தின் தலைநகருக்குச் செல்ல வேண்டு மென்ருல் 100 மைல் செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. இதனல் நிர்வாகத்திலே பல காலதாமதங்கள் ஏற்படுகின்றன. அதனல் இரண்டாகப் பிரித்து திருவண்ணுமலை மாவட்டம் ஆக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதே கோரிக்கையை நான் 1968-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 26-ஆம் தேதி அன்றும் சொல்லியிருக்கிறேன். மீண்டும் அதை ஞாபகப்படுத்துகிறேன். சர்க்காருக்கு இதனல் அதிகமான செலவுகள் இருப்பினும் மக்களுடைய கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றுவதற்காக, மக்களுக்கு நல்ல முறையிலே சேவை செய்வதற்காக அந்த மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நிலவரித் தீர்வையினை வசூலிப்பதிலே பல ஊழல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதற்காக ஒரு புதிய திட்டத் தைக் கொண்டுவர வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன். நடை பெற்றிருக்கின்ற ஊழல்களைச் சொல்லிவிட்டு அதற்கான மாற்றுத்

[திரு. கே. சகாதேவக் கண்டர்] [1970 மார்ச் 13

திட்டத்தையும் சொல்ல விரும்புகிறேன். உதாரணமாக, என்னுடைய தொகுதியிலே 40 ஆயிரம் ரூபாய் வசூல் செய்து கையாடல் செய்யப்பட்டுள்ளது. இதுபற்றிப் பொது மக்கள் மகஜர் கொடுத்ததின் பேரில் அவர்கள்மீது நடவடிக்கை எடுத்து அவர்களை சஸ்பெண்ட் செய்துவிட்டு பக்கத்தில் உள்ள கிராம அதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டுமென்று உத்திரவு போட்டார் கள். ஆனால் அந்த உத்திரவுப்படி நடக்கவில்லை. போலீஸ் அதிகாரிகளை அழைத்துச் சென்றார்கள், அவர்களையும் மிரட்டி போகச் சொல்லிவிட்டார்கள். கட்சிக்காரர்கள் செல்வாக்கை உபயோகப்படுத்தி நீ போய்விட்டு வா நான் பார்த்துக்கொள்கி றேன் என்று சொல்கிறார்கள். சர்க்கார் உத்திரவு போட்டால் அதை நிறைவேற்ற போலீஸால் முடியாமல் இருக்கிறது என்றால் எதற்காக இந்தச் சர்க்கார் என்று கேட்க விரும்புகிறேன். இதைப் பற்றி பொதுமக்களும் தெரிவித்தார்கள், நானும் தெரிவித்தேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைக் கேட்டால் இன்னும் பணம் வசூல் ஆக வேண்டும், நிறுத்தி வைத்திருக்கிறோம். அவசரப்பட வேண்டாம், என்று சொன்னார்கள். ஆனால் அடுத்த நாள் அந்த உத்திரவைக் கேன்சல் செய்துவிட்டு அந்த கிராம கர்ணத்திற்குக் கொடுத்தார்கள். ஊழல்களை மறைப்பதற்காகத்தான் கர்ணத்திடம் கொடுத்தார்கள். வேறு அதிகாரியிடம் கொடுத்தால் ஊழல்களை மறைக்க முடியாது என்பதால் கட்சிக்காரருக்குத் தெரிந்த கர்ணத்திடம் கொடுத்தார்கள். நான் கேட்டேன் என்னையா இது நேற்று ஒரு உத்திரவு இன்றைக்கு ஒரு உத்திரவு என்று கட்சிக் காரர்கள் எப்படிச் சொல்கிறார்களோ அப்படித்தான் நடக்க வேண்டுமா என்று கோபத்தோடு கேட்டேன். அதன் பிறகு அந்த உத்திரவையும் கேன்சல் செய்துவிட்டு பேசாமல் விட்டுவிட்டார் கள். பிறகு அங்கே தாசில்தார் அந்த மணியக்காரரையும் வைத்து 20 ஆயிரம் ரூபாய்க்கு ஒரே நாளிலே ரசிது போட்டு கஜானாவிலே செலுத்தப்பட்டுள்ளது. ரசிது என்ன ஆயிற்று என்று தெரிய வில்லை. நான் இதைப்பற்றி நிதியமைச்சர் அவர்களுக்கு மகஜரைக் கொடுத்தேன். ஆனால் இன்றுவரையில் அதற்கு நட வடிக்கை எடுக்கப்படுமென்றோ அல்லது எடுக்கப்பட முடியாது என்றோ பதில் கிடைக்கவில்லை. இப்படி ஒரு ஆட்சி நடக்கிறது என்றால் ஏன் என்ன என்பது புரியவில்லை.

கட்சிக்காரர்கள் நிர்வாகத்தில் தலையிட்டு வருகிறார்கள். இந்தக் குற்றத்திலிருந்து விவசாய மக்கள் விடுபடுவதற்கு புதிய திட்டத்தை உண்டாக்க வேண்டும். விவசாயிகள் நிலவரியைச் செலுத்துவதற்கு முன்பாக அவர்களுக்கு டிமாண்ட் நோட்டீஸ் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். பஞ்சாயத்து வரியை வசூ லிப்பதற்கு எப்படி டிமாண்ட் நோட்டீஸ் கொடுக்கப்படுகிறதோ அதைப் போல முன்னதாகவே இதற்கும் விவசாயிகளுக்கு நோட்டீஸ் கொடுத்தால் அவர்கள் எவ்வளவு தொகை என்பதை முன்னதாகத் தெரிந்து கொண்டு செலுத்துவதற்கு வசதியாக இருக் கும். எனவே இந்த டிமாண்ட் நோட்டீஸ் கொடுக்கும் திட்டத்தை



1970 மார்ச் 13] [திரு. கே. சகாதேவக் கண்டர்]

அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டுவர வேண்டும். ரசீதுகளிலே மூன்று வகையான ரசீதுகள் இருக்கின்றன. ஒரு ரசீது பணம் செலுத்தியவர்களிடத்தில் போகிறது, ஒரு ரசீது தாலுகா ஆபீஸுக்கு அனுப்பப்படுகிறது, ஒரு ரசீதை மணியக்காரரே வைத்துக்கொள்கிறார். பணம் செலுத்தியவர் கையெழுத்துப் போடக்கூடிய நிலைமை இல்லாமல் போகிறது. கையெழுத்துப் போட்டால் யார் என்ன விவரம் என்று தெரிந்துவிடும் என்பதால் கையெழுத்துப் போடாமலே ஆயிரக்கணக்கான ரசீதுகள் போடப் படுகின்றன. இதிலே சர்க்காருக்கு என்ன நன்மை, மற்றவர் களுக்கு என்ன நன்மை என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகி றேன். நிலவரியைச் செலுத்துகின்றவர்களும் நிச்சயமாகக் கை யெழுத்துப் போட வேண்டுமென்று வைத்தால், பட்டாதாரர்களோ அல்லது வாரிசோ கையெழுத்துப் போட வேண்டும் என்று வைத்தால் இப்படிப்பட்ட தவறுகள் நடக்காது. அப்படித் தவறினால் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே இதை யெல்லாம் போக்குவதற்கு டிமாண்ட் நோட்டீஸ் முன்னதாக அனுப்பக்கூடிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

அடுத்து, மனு நீதி நாள் என்று விமரிசையாகச் சொல்கிறார்கள். என்னுடைய பகுதியிலே இதற்காக விளம்பரப்படுத்தி போஸ்டர் கள் எல்லாம் போட்டு விழாக்கள் எல்லாம் கொண்டாடினார்கள், என்னுடைய கிராமத்திலே இல்லை, காரணம் நான் காங்கிரஸ்காரன். திருவண்ணாமலை, கலசப்பாக்கம் இந்த இடங்களிலே கலெக்டர், அதிகாரிகள் இவர்கள் எல்லாம் கொண்டாடினார்கள். என்னுடைய கிராமத்திலே நான்தான் சேர்மனாக இருக்கிறேன். அங்கே மனு நீதி மன்னர்கள் வந்தார்கள். எந்தவிதமான பலனும் அதனால் ஏற்படவில்லை யென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மனுநீதி நாள் என்பது மக்களை மயக்கும் நாளாகத்தான் இருக் கிறது. இருபத்தைந்து ஏழை விவசாயிகள் வீடு இல்லாமல் இருக்கிறார்கள், அவர்களுக்கு இடம் வேண்டுமென்று 10 ஆண்டு களுக்கு மேலாக 1962-லிருந்து மனுக்கள் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். இதுவரையில் நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட வில்லை. நான் 1968-ம் வருடம் மார்ச் 26-ம் தேதி இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். ஒரு ஆண்டுக்கு மேலாக ஆகிறது. ஒன்றும் நடவடிக்கை எடுக்கவில்லை. ஒன்று ஜாரி செய்யவேண்டும் அல்லது கொடுக்கமாட்டோம் என்றாவது சொல்லிவிட வேண்டும். இரண்டும் சொல்லாததால் அவர்கள் கஷ்டமான நிலையில் இருக்கிறார்கள். இல்லை யென்றால் அவர்கள் முயற்சிசெய்யமாட்டார்கள். மனுநீதி நாள் என்று சொன்னாலும் எந்தவிதமான பலனும் கிடைக்கவில்லை. உதாரணமாக என்னையே எடுத்துக்கொள்ளுங்கள். என்னுடைய கிராமத்திலே இருந்து தண்டராம்பேட்டைவரை ரோடு போடுவதற்காக நிலம் வாங்கினோம். அதை சர்வே செய்து ரோடு புறம்போக்காக மாற்ற வேண்டுமென்று 1967-ஆம் ஆண்டு தீர்மானம் போட்டு அனுப்பினோம். பஞ்சாயத்து அனுமதி பெற்றுதான் சர்வே செய்யப்பட வேண்டிய கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

[திரு. கே. சகாதேவக் கண்டர்] [1970 மார்ச் 13

பஞ்சாயத்து அனுமதி பெற்று சர்க்காருக்கு அனுப்பி 1967, 68, 69,
70 என்று ஆகியும் இதுவரை சர்வே செய்யப்பட வில்லை. இப்படிப்
பட்ட குறைகள் மலிந்திருக்கின்றன. இப்படிப்பட்ட குறைகளை
நிவர்த்திக்கும் வகையில் தகுந்த அதிகாரிகளைப் போட்டு பொது
மக்கள் கொடுக்கும் மனுக்களின் மீது நடவடிக்கை எடுக்க
அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு
என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. வி. எஸ். இளஞ்செழியன் :** சட்டப் பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் கொண்டு வரப்
பட்டிருக்கிற இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று என்னு
டைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். முன்னாலே
பேசிய அருமை காங்கிரஸ் நண்பர்கள் எல்லாம் திராவிட முன்
னேற்றக் கழக ஆட்சியில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச்
சேர்ந்தவர்கள் எல்லாம் அதிகமான காரியங்களைச் செய்து கொள்
ளுகிறார்கள் என்று மிக வேகமாகச் சுட்டிக்காட்டிப் பேசினார்கள்.
எனக்கு ஒரு பெரிய குறை இதிலிருந்து நீங்குகிறது.
என்னைப் போன்றவர்களைப் பார்த்து தொகுதி மக்கள் 'என்ன உங்
களால் காங்கிரஸ்காரர்கள் செய்யக்கூடிய அளவு காரியங்களைக் கூட
செய்ய முடியவில்லை ; அவர்கள் பகுதிகளில் அதிகமான காரியங்
கள் நடைபெறுகிறதே' என்று குறைபட்டுக் கொண்டார்கள். நான்
அவர்களுக்குச் சொன்ன பதில் "காங்கிரஸ்காரர்கள் நீண்ட
நாட்கள் ஆண்டு கொண்டு இருந்தவர்கள் ; அதிகாரிகளிடத்தில்
தொடர்பு கொண்டு இருந்தவர்கள் ; அதனால் அவர்கள்
காரியங்களைச் செய்து கொள்ளுகிறார்கள் ; நாமும் கொஞ்சம்
கொஞ்சமாகக் காரியங்களைச் செய்து கொள்ளலாம்" என்பதாகும்.

இந்த மானியத்திலே மட்டுமல்லாமல் எதிலே பேசினாலும்
அருமை காங்கிரஸ் நண்பர்கள் 'இவ்வளவுதானா?' என்று பேசி
வந்தார்கள். அந்த வரையில் மகிழ்ச்சி. எதையும் செய்யவில்லை
என்று சொல்லாமல் 'இவ்வளவுதானா ?' என்று கேட்பதில் இருந்தே
பல பல காரியங்களைச் செய்திருக்கிறோம் என்பதை அவர்கள்
ஏற்றுக் கொள்ளுகிறார்கள் என்பது புரிகிறது. பல புதிய காரியங்கள்
நாட்டிலே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. விவசாயிகளுக்கான
காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தொழிலாளர்
களுக்கான காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.
ஏழை மக்களுக்கான காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்
கின்றன. 'இவ்வளவுதானா?' என்று கேட்டால் இவ்வளவுதான்
எங்களால் செய்ய முடிந்தது ; முடிந்த வரை செய்து கொண்
டிருக்கிறோம். இந்த நாட்டில் இருக்கும் விவசாயிகளுக்காக.
இந்த நாட்டில் இருக்கும் கிராம மக்களுக்காக, இந்த நாட்டில்
இருக்கும் ஏழை, நடுத்தர மக்களுக்காக நாங்கள் செய்ய எண்ணி
யிருப்பது ஏராளமாக இருக்கிறது. எங்களுடைய குறுகிய கால
ஆட்சியில் இந்த அளவுக்குத்தானே செய்ய முடிந்தது என்பதை
நாங்கள் மிகுந்த வருத்தத்துடன் தான் பார்க்கிறோம். இன்னும்



1970 மார்ச் 13] [திரு. வி. எஸ். இளஞ்செழியன்]

பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லையே,
விவசாயிகளுடைய நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றித் தரமுடியவில்
அன்றாட நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றித் தரமுடியவில்
லையே என்ற வருத்தம் எங்களுக்கும் இருக்கிறது. ஆனால் ஒன்றை
நீங்கள் ஒத்துக் கொள்ளவேண்டும். நீங்கள் விவசாயிகளுக்காக,
கிராமங்களுக்காகச் செய்த காரியங்களைவிட எந்த அளவுக்கு அதிக
மாக நாங்கள் விவசாயிகளுக்காகவும், மற்றவர்களுக்காகவும் செய்தி
ருக்கிறோம் என்பதை நீங்கள் ஒத்துக் கொள்ள வேண்டும். இந்த
வருவாய்த் துறை மானியக் கோரிக்கையிலேகூட கிராமங்களுக்
காக நிவாரண வேலையின் மூலம் எவ்வளவு செலவு செய்தோம்
என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அதை நண்பர்கள் வர
வேற்பார்கள் என்று எதிர்பார்த்தேன். வரவேற்பதற்குப் பதிலாக
நீண்டகாலத் திட்டமாக எதுவும் செய்யப்படவில்லை என்று ராம
லிங்கம் போன்றவர்கள் குறைபட்டார்கள்.

நாடு சுதந்திரம் அடைந்த பிறகு எடுத்துக் கொண்ட நடவடிக்
கைகளை நீண்ட காலத்திற்கு என்று திட்டம்போட்டுச் செய்த
தாலேதான் அன்றாட மக்கள் பிரச்சினைகளை, அவர்களுக்குத் தேவை
யான காரியங்களைக் கோரிக்கைகளைக் கவனிக்காமல் போய்விட்
டார்கள். அவ்வாறு கவனிக்காமல் போனதன் விளைவாகத்தான்
இந்த அளவுக்கு அவல நிலைமைகளுக்கு ஆளாகியிருக்கிறோம்.
இன்றையதினம் தமிழக அரசு மிக புத்திசாலித்தனமாக எடுத்துக்
கொண்ட காரியங்களின் விளைவாக பெரிய அளவில் வரக்கூடிய
வறட்சியைத் தவிர்த்திருக்கிறது. கிராமங்களில் எட்டு லட்சம்
பேருக்கு மேல் வேலை வாய்ப்புக் கிடைக்கும் நிலைமையும், நூற்றுக்
கணக்கான சிறு சிறு வேலைகளைக் கிராமங்களில் கவனிக்கும் நிலை
மையும் ஏற்பட்டிருக்கிறது. இன்று கிராமங்களில் குடிதண்ணீர்ப்
பிரச்சினையே இல்லையென்ற அளவுக்கு நிலைமை முன்னேறியிருக்
கிறது. பெரும் திட்டமாகப் போட்டிருந்தால் இப்படிப்பட்ட
சிறிய பிரச்சினைகளை எல்லாம் தீர்க்க முடிந்திருக்காது.

பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்
அவர்கள் ஒரு லட்சம் பேருக்கு மேல் பட்டா வழங்கப்பட்டிருப்
பதைப் பற்றிப் பெருமையாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.
நீங்களும் அதை வரவேற்க வேண்டும். இவ்வளவு பெரிய காரியம்
ஆற்றியிருக்கும் அரசை நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படு
கிறேன். இந்த நாட்டில் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள்
தீர்வை ஏற்படாத தரிசு நிலங்கள் என்ற பெயரால் இருந்து கொண்
டிருக்கின்றன. அவற்றைப் பட்டா வழங்கும் காரியத்தை அதிகாரி
களால் செய்ய முடியவில்லை. மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்,
மாவட்ட ஆட்சித் தலைவர் என்று படிப்படியாக வந்து காலம்
கடந்து கொண்டிருக்கிறது. ஏதோ ஒரு காலத்தில் தீர்வை ஏற்
படாத தரிசு என்று அறிவித்து விட்டார்கள். இந்த நிலங்களைப்
பெரிய அளவுக்கு விவசாயப் பெருங்குடி மக்கள் நிலச் சீர்திருத்தம்
செய்து ஆரம்ப காலத்தில் இருந்து அனுபவித்துக் கொண்டிருக்கி
றார்கள். அப்படி தீர்வை ஏற்படாத தரிசு நிலங்கள் கல்குத்து

[திரு. வி. எஸ். இளஞ்செழியன்] [1970 மார்ச் 13

நிறைந்த இடம் என்ற பொருளில் இருக்கின்றன. இன்றையதினம்
விவசாயப் பெருங்குடி மக்கள் தீர்வை ஏற்படாத அந்தத் தரிசு
நிலங்களைப் பயனுள்ள நிலங்களாக, அனுபவித்துக் கொண்டிருக்
கிறார்கள். இதைப் பற்றிக் கலெக்டர் அவர்களிடமும், மற்றவா
களிடமும் கூறியும் பட்டா வழங்க முடியவில்லை. அப்படிப்பட்ட
தீர்வை ஏற்படாத நிலங்களுக்குப் பட்டா வழங்கும் நிலைமை
ஏற்படும்போது நாட்டில் இருக்கக்கூடிய நிலமற்ற ஏழை விவசாயி
களுக்கு அது பேருதவியாக இருக்கும்.

எங்கள் பகுதி மக்களின் நீண்ட காலக் கோரிக்கை ஒன்றை
நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். புதுக்கோட்டைப் பகுதி
யைத் திருச்சி மாவட்டத்தில் இருந்து தனியாகப் பிரித்து புதுக்
கோட்டையைத் தலைநகராகக் கொண்ட புதுக்கோட்டை மாவட்
டத்தை உருவாக்க வேண்டுமென்பது எங்களுடைய நீண்ட நெடுங்
காலக் கோரிக்கை. அந்தப் பகுதி மக்கள் அவ்வளவு பேரும்
நீண்ட காலமாக வலியுறுத்திச் சொல்லிக் கொண்டு வரு
கிறோம். அருமைக் காங்கிரஸ் நண்பர்கள்கூட 15, 20 ஆண்டு கால
ஆட்சியில் புதுக்கோட்டையைத் தனி மாவட்டமாக ஆக்காது,
புதுக்கோட்டைக்கு என்று தனிக் காங்கிரஸ் கமிட்டியை மட்டும்
அமைத்துக் கொண்டார்கள். ஜில்லா காங்கிரஸ் கமிட்டி, புதுக்
கோட்டை என்று அமைத்துக் கொண்டார்கள். புதுக்கோட்டை
யைத் தனி மாவட்டமாக ஆக்கும் எண்ணம் அவர்களுக்கு வர
1-10 பி.ப. வில்லை. அந்தப் பகுதி மக்களின் நீண்ட நெடுங்கால கோரிக்கை
யான புதுக்கோட்டையைத் தனி மாவட்டமாக ஆக்க வேண்டு
மென்ற கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். திருச்சி மாவட்டம் என்று சொல்லும்போது
அரசுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும் வருகின்ற எண்ணம்,
" தன்னிறைவு பெற்ற மாவட்டம் ; கொள்முதல் போன்ற காரியங்
களில் ஈடுபடலாம் " என்பதாகும். அதிலே தவறு இல்லை. புதுக்
கோட்டையும், அதையொட்டிய மூன்று நான்கு தாலுகாக்களும்
திருச்சி மாவட்டத்துடன் சேர்ந்து கொண்டிருப்பதால் அவற்றுக்
குக் கிடைக்க வேண்டிய சலுகைகள் கிடைக்காமல் போகின்றன.
இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களுக்குக் கிடைக்கின்ற நியாய
மான சலுகைகள் எங்களுக்குக் கிடைக்காமல் போய்விடுகின்றன.
ஆகவே, பின்தங்கிய புதுக்கோட்டைப் பகுதியைத் தனி மாவட்ட
மாக ஆக்குகின்ற பிரச்சினையைத் தயவு செய்து கவனிக்க வேண்டு
மென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

புதுக்கோட்டையைத் தனி மாவட்டமாக ஆக்கும்போது மற்ற
மாவட்டங்களைத் தனி மாவட்டமாக ஆக்குவதற்கு உண்டான
செலவைப் போல் அதிகமான செலவுகள் நிச்சயமாக ஆகாது.
அங்கே பல்வேறு காரியங்கள் இப்போது மாவட்ட அளவில் நடை
பெற்று வருகின்றன. கட்டிடங்கள் எல்லாத் துறைக்கும் இருக்
கிறது. அதற்கு அதிக அளவில் செலவு செய்ய வேண்டியதில்லை.
அரசர் ஆண்டு கொண்டிருந்த இடமாகையால் ஒரு மாவட்டத்திற்கு



1970 மார்ச் 13] [திரு. வி. எஸ். இளஞ்செழியன்]

என்னென்ன கட்டடங்கள் வேண்டுமோ அவ்வளவும் மற்றும் வசதி
வாய்ப்புகளும் இருக்கின்றன. எங்களுக்குச் செய்ய வேண்டிய
காரியம் எல்லாம் இப்போது துணை ஆட்சித் தலைவர் என்று இருப்
பதை ஆட்சித் தலைவர் என்று மாற்றியமைக்க வேண்டும். எங்கள்
நீண்ட நெடுங்காலக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டு
மென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்
ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய
நிகழ்சிகள் இத்துடன் முடிந்து, பேரவை மீண்டும் நாளை காலை 9
மணி அளவில் கூடும்.

பின்னர் பேரவை ஒத்தி வைக்கப்பட்டது.

(7) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

ஏதும் இல்லை.

[1970 மார்ச் 13

## இணைப்பு.

(423-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க]

### தமிழ் நாட்டில் வீட்டு வசதி 1969-70.

வளர்ச்சி குன்றிய நாட்டிலே உணவு, உடை, உறையுள் ஆகிய
சிக்கல்கள் மலிந்திருப்பது இயற்கையே. நமது நாட்டில் வீட்டு
வசதிப் பற்றாக்குறை கடுமையாக இருப்பதை வலியுறுத்த
வேண்டிய தேவையில்லை. 1961-ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்
குப்படி 1961-ம் ஆண்டில் 60 லட்சம் வீடுகள் பற்றாக்குறையாய்
இருந்தன. ஐந்தாவது திட்ட இறுதிக்குள், இந்தப் பற்றாக்குறை
90 லட்சமாக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, கிராம
வீட்டு வசதித் திட்டங்களை நாட்டத்துடன் நிறைவேற்ற வேண்டிய
அவசியம் ஏற்பட்டுள்ளது. ஏனென்றால், அத்துறையில்தான்
தேவைகளுக்கும் உண்மைநிலைக்கும் இடைவெளி மிகுந்து காணப்
படுகிறது. நகர்ப்புற பகுதிகளில் இப்போது தொழில்கள் வளர்ந்து
வருவதால் நாட்டுப்புறங்களிலிருந்து பெரும்பாலான மக்கள் நகரங்
களுக்கு வந்து குடியேறுகின்றனர். அதனால் நகர்ப் புறப்பகுதி
களில் வீடுகள் பற்றாக்குறை மிகக் கடுமையாகவுள்ளது.

2. இந்தியா விடுதலை அடைந்த பிறகு, மேற்கண்ட நிலைமைகளைக்
கருதிப்பார்த்து, பெருகி வரும் மக்கள் தொகைக்கு வீட்டு வசதி
களை அளிக்க உண்மையான, தீவிர முயற்சிகளை மேற்கொண்டது.
வளங்கெழு அரசு, நிலைத்த குடியாட்சி, இவற்றைத் தோற்றுவிப்ப
தையேக் குறிக்கோளாகக்கொண்ட நமது அரசு, பாமர மக்களுக்கு,
பெரும்பாலும் குடிசை வாழ்வோருக்குத், தொழிற்சாலைத் தொழி
லாளர்களுக்கும், குறைந்த வருமானமுள்ளவர்களுக்கும், நல்ல
சுற்றுப்புறச் சூழல்களில் வீடுகள் கட்டிக் கொடுப்பது பற்றி
எண்ணத்தொடங்கிற்று. முக்கியமாக, கூட்டுறவுச் சங்கங்களின்
வாயிலாக வீடுகள் கட்டுவதற்கு முதலில் தமிழ் நாடு அரசு நிதி
வழங்கத் தொடங்கியது. 1945-ம் ஆண்டில் மாநகர மேம்பாட்டுப்
பொறுப்புக் கழகம் நிறுவப்பட்டது. இந்தக் கழகம் அரசு தந்த
நிதி உதவியுடன் வீட்டுத் தேவையைப் பெருமளவில் நிறைவு
செய்ய முடிந்தது. முதலாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில்
தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம், குறைந்த வருமானம் உள்ள
வர்களுக்கான வீட்டு வசதித் திட்டம் போன்ற இரண்டொரு
திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டாலுங்கூட, இப்பணித் திட்டங்கள்
இரண்டாவது, மூன்றாவது திட்டக் காலங்களிலேதான் முனைப்
பாக்கப்பட்டன. இக்கால அளவுகளில் குடிசைப்பகுதி மேம்பாடு-
குடிசைப்பகுதிகள் ஒழிப்புத்திட்டம், மலைத் தோட்டத் தொழி
லாளர் வீட்டு வசதித் திட்டம், கிராம வீட்டு வசதித் திட்டம்
போன்ற பல வீட்டு வசதித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.
வீட்டு வசதி வேலைத் திட்டம் சென்னை மாநகரில் மட்டுமின்றி
மாவட்டங்களிலும் மேற்கொள்ள வேண்டுமெனக் கருதப்பட்டதால்,
திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்கள்
வீட்டு வசதிப் பிரிவுகளுடன், தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம்



1970 மார்ச் 13]

1961 ஏப்ரலில் நிறுவப்பட்டது. ஒவ்வொரு பிரிவும் மூன்று
அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்கள் குறித்து அதிகார
வாம்பு உடையதாகும். பல துறைகளின் உறுப்பினர்கள்
ஒவ்வொன்றிலும் ஒரு வீட்டு வசதிப் பிரிவாக மொத்தம் மூன்று
அடங்கிய இந்த வாரியம் ஓர் சட்டப்படி அமைந்த வாரியமாகும்.
எனவே, இந்த வாரியம் இம்மாநிலத்தின் வீட்டு வசதித் திட்டங்
களை வகுத்து ஒருங்கிணைத்து வேலைத் திட்டங்களை விரைவாகவும்,
பயனுள்ள வகையிலும் நிறைவேற்ற முடிகிறது. இதற்கிணங்க,
பொதுப்பணித்துறை, கிராம வீட்டு வசதிப்பிரிவு, சென்னை
மாநகராட்சி, கூட்டுறவுச் சங்கங்கள், தொழிலாளர் துறை போன்ற
பல துறைகளின்கீழும் பல் வகை வீட்டு வசதித் திட்டங்களை வகுப்
பதும், நிறைவேற்றுவதும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்
கீழுள்ளன. முன்பு கூட்டுறவுச்சங்கப் பதிவாளரது கட்டுப்பாட்டின்
கீழ் இருந்து வந்த கூட்டுறவு வீட்டு வசதிப்பிரிவு இப்போது தமிழ்
நாடு வீட்டு வசதி வாரியத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேற்
கூறிய திட்டங்களைத் தவிர, நடுத்தர வருவானமுள்ளோர் வீட்டு
வசதித் திட்டம், குறைந்த வருமானமுள்ளோர் வீட்டு வசதித்
திட்டம் நிலத்தைக் கையகப்படுத்தி மேம்படுத்தும் திட்டம், தமிழ்
நாடு அரசுப் பணியாளர்கள் வாடகை வீட்டு வசதித் திட்டம்
போன்ற பல திட்டங்கள், இந்திய ஆயுள் ஈட்டு இறுதிக் கழகத்தின்
நிதி உதவியுடன், திட்டத்தின்கீழ் வராத வேலைத் திட்டங்களாக
மேற்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு வீட்டு வசதி திட்டம் குறித்த
சுருக்கமான அறிக்கையொன்று கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

3. 1 தொழிலாளர்களுக்கு மலிவு வீட்டு வசதித் திட்டம்.—
ஐந்தாண்டுத் திட்டங்களை மேற்கொண்ட பிறகு தனியார்துறை
யிலும், பொதுத்துறையிலும் விரைவான தொழில் வளர்ச்சி
ஏற்பட்டதன் விளைவாக, தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழி
லாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. அவர்களில் பெரும்பா
லோருக்கு வீடு கட்டிக்கொள்ள இயலாது அல்லது வேலை செய்யு
மிடத்திற்கப்பால் மிகத் தொலைவிலுள்ள இடங்களில் வசிக்க
இயலாது. சில தொழில் நிர்வாகத்தினர் தங்களது தொழிலாளர்
களுக்கும் பணியாளர்களுக்கும் குடியிருப்புகள் கட்டிக்கொடுக்
கின்றனர். ஆனால், இதனாலேயே இச்சிக்கல் தீர்ந்துவிடாது.
எனவே, வேலை செய்யும் இடங்களுக்கு அருகிலேயே நல்ல சூழலில்
தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி அளிப்பது
இயலும் பொருட்டு, இந்திய அரசு இத்திட்டத்தைக் கொண்டு
வந்துள்ளது.

இத் திட்டத்தின்கீழ், தொழிற்சாலைகள் சட்டம் பொருந்துகிற
தொழிற்சாலைகள் தொழிலாளர்களுக்கு வீடு கட்டி கொடுப்பதற்
கென மாநில அரசுகள், வீட்டு வசதி வாரியங்கள், உள்ளாட்சி மன்
றங்கள், தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கானக் கூட்டுறவுச் சங்
கங்கள், தொழில் முனைவர்கள் ஆகியோருக்கு நிதி உதவி வழங்கப்
படுகிறது.

[1970 மார்ச் 13

**மேல்வரம்புச் செலவு.**—ஓரறைக் குடியிருப்புகளுக்கு ரூ. 4,850; இரண்டறைக் குடியிருப்புகளுக்கு ரூ. 5,100 என்று இந்திய அரசு மேல் வரம்பினை வரையறுத்துள்ளது. மூன்று லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகையுள்ள இடங்களில் குடியிருப்பு ஒன்றுக்கு ரூபாய் 1,100 கூடுதலாக அனுமதிக்கப்படுகிறது. ஒரு லட்சம் முதல் 3 லட்சம் வரை மக்கள் தொகையுள்ள இடங்களில் குடியிருப்பு ஒன்றுக்கு ரூ. 450 கூடுதலாக அனுமதிக்கப்படுகிறது.

| உதவி விபரம். | மாநில அரசு. | கூட்டுறவுச் சங்கங்கள். | தனிப்பட்டத் தொழில் அதிபர்கள். |
|---|---|---|---|
| | | (சத வீதம்.) | |
| இந்திய அரசு தரும் கடன் .. | 50 | 65 | 60 |
| இந்திய அரசு தரும் மானியம் .. | 50 | 25 | 25 |
| மூன்றுவது திட்டக் குறிக்கோள் அளவுகளும் சாதனைகளும்— | | (ரூபாய் லட்சத்தில்) | |
| மொத்த நிதி ஒதுக்கீடு .. | 125·00 | 50·00 | 25·00 |
| பயன்படுத்திய தொகை .. | 67·21 | 67·11 | 7·42 |
| கட்டுவதற்குத் திட்டமிடப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 4,394 | 1,200 | முடிவு செய்யப் படவில்லை. |
| கட்டி முடிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை. | 1,042 | 1,343 | 339 |
| ஆண்டுத் திட்டக்கால அளவுகளில் சாதனைகள்— | | | |
| 1966–67 முதல் 1968–69 வரை பயன்படுத்தப்பட்ட தொகை. | 29·16 | 25·46 | 0·08 |
| 1967–68 முதல் 1968–69 வரை கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 327 | 561 | ஒன்றுமில்லை. |
| நான்காவது திட்டக் குறிக்கோள் அளவுகளும் சாதனைகளும்— | | | |
| நான்காவது திட்ட நிதி ஒதுக்கம். | 150·00 எல்லா பிரிவுகளுக்கும். | | |
| நான்காவது திட்டக் குறிக் கோள் அளவு. | 1,500 குடியிருப்புகள்— எல்லா பிரிவுகளுக்கும். | | |
| 1969–70 திட்ட மதிப்பீடு .. | 2·91 | 5·00 | 7·09 |
| 1969–70 திருத்த மதிப்பீடு .. | 8·44 | 2·50 | 4·00 |
| 1969 டிசம்பர் வரையில் பயன்படுத்தப்பட்ட தொகை. | 3·12 | 2·07 | ஒன்றுமில்லை. |
| 1969 டிசம்பர் வரை முடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | .. | 282 | .. |
| கட்டப்பட்டு வரும் வீடுகளின் எண்ணிக்கை. | 12 | 121 | .. |
| 1970–71 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 9·00 | 3·73 | 1·23 |
| 1970–71 குறிக்கோள் அளவு. | 117* | 75* | 30* |

*3.1-அ. அரசுத் திட்டங்கள்.*—பீளமேட்டில் தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கான வீட்டு வசதிக்காக 12 வீடுகளைக் கட்ட அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. மாநில வீட்டு வசதி வாரியம் விரைவிலேயே இப் பணியை மேற்கொள்ளும்.

* குடியிருப்புகள்



1970 மார்ச் 13]

*3.1 (இ) தனிப்பட்டத் தொழிலதிபர் திட்டம்.*—தனியார் துறையில் தொழிலாளர்களுக்கு, மலிவு வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் நிதி உதவிக்காக 5 தொழிற்சாலை நிர்வாகிகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. ஒரு விண்ணப்பம் தவறாக இருந்ததால், அது சம்பந்தப்பட்ட நிர்வாகிக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஏனைய நான்கு விண்ணப்பங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

*3. 1. (உ) கூட்டுறவு வேலைத்திட்டங்கள்.*—தேசிய நெருக்கடி காரணமாக, தொழிலாளர் வீட்டு வசதிச் சங்கங்களுக்கு மானியம் அளிப்பது 1962 முதற்கொண்டு நிறுத்தப்பட்டது. அதுமுதல் நிதி உதவி கடனாக மட்டுமே வழங்கப்படுகிறது. மனை, கட்டிடம் குறித்த மதிப்பீட்டுச் செலவில் 80 சதவீதம் கடனாக வழங்கப்படும். எஞ்சிய தொகை உறுப்பினர்களின் பங்கு மூலதனமாகச் சரிக்கட்டப்படும். 1969-70-ல் 1969 செப்டம்பர் வரையில் ரூ. 2.01 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. 282 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 106 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. 1970-71-ல் 75 வீடுகளைக்கட்ட ரூ. 3.73 லட்சம் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

*4.1. குறைந்த வருமானமுள்ளோருக்கான வீட்டு வசதித் திட்டம்.*—ஓராண்டில் 7,200 ரூபாய்க்கு மேற்படாமல் ஆண்டு வருமானம் பெறுபவர்களின் பயனுக்காக, 1955-56-ல் முதன் முதலாக இத் திட்டம் கொண்டு வரப்பட்டது. (நிலவிலை உட்பட) கட்டிடம் கட்டும் செலவில் 80 சதவீதத்திற்கு மேற்படாமல், ஆனால் ஒரு வீட்டுக்கு ரூ. 12,500 என்ற பேரளவிற்கு உட்பட்டு, கடன்கள் வழங்கப்படுகின்றன. மாநில வீட்டுவசதி வாரியத்தின் மூலம் மாநில அரசு தற்போது இத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறது. இவ் வேலைத் திட்டத்திற்காக நான்காவது திட்டத்தில் ரூ. 520 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

| | கூட்டுறவுச் சங்கங்கள். | உள்ளாட்சி மன்றங்கள். | மாநில வீட்டு வசதி வாரியம். |
|---|---|---|---|
| | | (ரூபாய் லட்சத்தில்.) | |
| மொத்த நிதி ஒதுக்கீடு .. | 125·00 | 50·00 | 145·00 |
| மூன்றுவது திட்டக் குறிக்கோள் அளவுகளும் சாதனைகளும்— | | | |
| பயன்படுத்திய தொகை .. | 103·64 | 1·11 | 131·05 |
| கட்டுவதற்குத் திட்டமிடப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 1,791 | 106 | 1,916 |
| ஆண்டு திட்டக்கால அளவுகளில் சாதனை— | | | |
| 1966–67 முதல் 1968–69 வரை பயன்படுத்திய தொகை. | 60·50 | .. | 75·25 |
| 1966–67 முதல் 1968–69 வரை கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 737 | .. | 1,126 |

[1970 மார்ச் 13

| | கூட்டுறவுச் சங்கங்கள். | உள்ளாட்சி மன்றங்கள். | மாநில வீட்டு வசதி வாரியம். |
|---|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | | |
| **நான்காவது ஐந்தாண்டு திட்டக் குறிக்கோள் அளவும் சாதனைகளும்—** | | | |
| நான்காவது திட்ட இலக்கு. | 220·00 | .. | 300·00 |
| நான்காவது திட்டத்திற்கான திட்டக் குறிக்கோள் அளவு | 6,300 வீடுகள், (எல்லா பிரிவுகளுக்கும்). | | |
| 1969–70 திட்ட மதிப்பீடு .. | 25·00 | .. | 25·00 |
| 1969–70 திருத்த மதிப்பீடு .. | 25·00 | .. | 25·00 |
| 1969 டிசம்பர் வரையில் பயன்படுத்தப்பட்ட தொகை. | 15·64 | .. | 34·04 |
| 1969 எப்ரல் முதல் 1969 செப்டம்பர் வரை | 287 வீடுகள் | .. | 600 வீடுகள் |
| கட்டிய வீடுகள .. | 527 கட்டப்பட்டு வருகின்றன. | .. | 236 கட்டப்பட்டு வருகின்றன. |
| 1970–71 திட்ட மதிப்பீடு .. | 30·00 | .. | 25·00 |
| 1970–71 குறிக்கோள் அளவு | 240 வீடுகள் | .. | 600 அங்கணங்கள். |

4. 1. (அ) **கூட்டுறவுச் சங்கங்கள்.**—நான்காவது திட்டக் காலத்தில் ரூ. 220 லட்சம் அளவுக்குக் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் (1969-70) 1969-டிசம்பர் வரையில் ரூ. 15.64 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. இக் கால அளவில் 87 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 537 வீடுகள் பல்வேறு நிலைகளில் கட்டப்பட்டு வந்தன. 1970-71-ல் 240 வீடுகளைக் கட்ட ரூ. 30 லட்சம் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

4. 1. (இ) **தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்.**—1969-70 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 25 லட்சமாக இருக்க 1969 டிசம்பர் வரையில் ரூ. 34.04 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. 600 அங்கணங்கள் கட்டி முடிக்கப்பட்டு குடிபுக தயாராக உள்ளன. அவற்றிக்கு நீர் வழங்கு வசதியும் பிற வசதிகளும் அளிக்கப்பட வேண்டியுள்ளது.

5. 1. **சேரி மேம்பாடு/சேரி ஒழிப்புத் திட்டம்.**—நகரப்புறப் பகுதிகள் அனைத்திலும் ஒரு பிரிவினர் சேரியினர் வசிக்கின்றனர், அலேது அவர்கள் தமது குறைந்த வருமானம் காரணமாக இந்தச் சேரிகளில் குடியேறியுள்ளனர். நகரப் பகுதிகளில் வீடுகளுக்குக் கேட்கப்படும் உயர்ந்த வாடகைகளைக் கொடுக்க அவர்களுக்கு இயலவில்லை என்பதே இதற்குக் காரணமாகும். தவிர, அவர்கள் வேலை செய்யும் இடங்கள் வெகு தொலைவில் இருக்கையில் அந்த இடங்களின் அருகிலேயே தங்கள் குடியிருப்புகள் இருக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அப்போதுதான் விரைவான போக்குவரத்து வசதி இன்மையைச்



13 மார்ச் 1970]

சமாளித்து உரிய நேரத்தில் அவர்கள் வேலைக்குச் செல்ல முடிகிறது. இந்த வகைப் பிரிவினரில் பெரும்பாலானவர்கள் வீட்டு வேலைக்காரர்கள், பால்காரர்கள், அன்றாட ஊதியம் பெறும் தொழிலாளர்கள், கைவினைஞர்கள், குப்பை கூட்டுபவர்கள், துப்புரவுப் பணியாளர்கள், பெட்டிக்கடைக்காரர்கள், தொழிற்சாலைத் தொழிலாளர்கள் ஆவர். காலியாக உள்ள இடத்தில் அவர்கள் குடிசைகளை அமைத்துக் கொள்கின்றனர். அந்த குடிசைகள் நெருக்கமாகவும், காற்றோட்ட வசதியில்லாமலும், சுகாதார வசதியில்லாமலும் இருக்கின்றன. ஒழுங்கற்ற முறையில் இந்த குடிசைவாழ் பகுதிகள் அமைந்துள்ளன. இந்தக் குடிசைவாழ்ப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் தொகை மிக அதிகமாக உள்ளது. இப் பகுதிகளில் உள்ளவர்களின் உடல்நிலை மிக சீர்கேடாக உள்ளது. 1961-ல் நடத்திய ஆய்வின்படி, சென்னை மாநகரில் மட்டும் சுமார் 491 குடிசைவாழ் பகுதிகள் இருந்தன. தற்போது நிலைமை மாறியிருக்கும். இதற்குள் குடிசைவாழ்ப் பகுதிகளின் மொத்த எண்ணிக்கை பெருமளவுக்கு அதிகரிக்கும். மக்கள் தொகையின் பெருக்கத்தைக் குறைக்கும் பொருட்டு, சேரி வாழ்வோர் மேம்பாடு செய்யப்பட்ட வேற்று மனைகளில் குடியமர்த்தப்படுகின்றனர் அல்லது குடியிருப்புகள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இந் திட்டத்தை இப்போது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நிறைவேற்றி வருகிறது.

5. 1. (அ) **செப்பனிட்ட காலி மனைகள்.**—இந்த வகையின்கீழ் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் சுமார் 1,000 சதுர அடி மேம்பாடு செய்த மனை வழங்குகின்றது. அத்துடன் ரூ. 253 அளவிற்கு குடிசை போடுவதற்கான சாதனங்களையும் தாமே குடிசை போட்டுக்கொள்வதற்காக ரூ. 32.50 ரொக்க மானியத்தையும் வழங்குகின்றது. ஒவ்வொரு மனைக்கும் ஒரு குளியறைக்கும், நீரடிக்கழிப்பிடத்திற்கும் வாரியம் வகை செய்கின்றது. குடியிருப்புத் தொகுதியில் தெருவிளக்கு, சாலைகள், நீர்வழங்கு வசதி, கழிவு நீர் அகற்றும் வசதி, நிழற்சாலைகள் முதலியவற்றிற்கு வகை செய்யப்படுகிறது. மனை ஒன்றுக்கு ரூ. 5 முதல் ரூ. 11 வரையில் வாடகை விதிக்க இந்திய அரசு அனுமதித்திருந்தபோதிலும், திங்களொன்றுக்கு ரூ. 3 என்ற குறைந்த வாடகை வசூலிக்கப்படுகிறது.

5. 1. (இ) **குடியிருப்புகள்.**—இந்த முறையின்கீழ் ஒரு மாடி, இருமாடி அல்லது பல மாடி கட்டிடங்களை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் கட்டி, தகுதியுள்ள சேரி வாழ்வோருக்கு வாடகை அடிப்படையில் ஒதுக்குகின்றது. ஒவ்வொரு குடியிருப்பிலும் 120 சதுர அடி வராந்தாவும், 84 சதுர அடி சமையல் அறையும், 16 சதுர அடி குளியல் அறையும் 12 சதுர அடி கழிப்பிடமும் இருக்கும். இந்திய அரசு வரையறுத்துள்ள வாடகை திங்களொன்றுக்கு ரூ. 12 முதல் ரூ. 30 ஆகும். ஆனல், மாநில அரசு வாடகையை ரூ. 10 ஆகக் குறைத்துள்ளது. வாடகையின் எஞ்சியத் தொகை மாநில நிதிகளி

லிருந்து உதவித் தொகையாக வழங்கப்படும். மொத்தமாக ஒவ்வொரு ஏக்கரிலும் 20 முதல் 75 குடும்பம்வரை இந்த மாடிக் குடியிருப்புகளில் வசிக்கலாம் என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

5. 1. (உ) மேல் வரம்புச் செலவு.—

(1) செப்பனிட்ட காலி மனை—ரூ. 1,850.

(2) வீடுமட்டும் கட்டுவதற்கு—ரூ. 2,900.

(3) ஒரு மாடி குடியிருப்புக்கள்—ரூ. 4,850.

(4) இருமாடிக் குடியிருப்புகள்—ரூ. 5,100.

(5) பலமாடிக் குடியிருப்புகள்—ரூ. 6,750.

(1) முதல் (4) வரை உள்ள இனங்களுக்காக 3 லட்சத்துக்குமேல் மக்கள் தொகையுள்ள நகரங்களில் குடியிருப்பு வீடு ஒன்றுக்கு ரூ. 1,100. 1 லட்சம் முதல் 3 லட்சம்வரை மக்கள் தொகையுள்ள நகரங்களில் குடியிருப்பு ஒன்றுக்கு ரூ. 450 கூடுதலாக அனுமதிக் கப்படுகிறது. தரிசல் நிலப்பகுதியில் அல்லது மீட்கப்பட்ட நிலப் பகுதியில் அல்லது மலைப்பகுதியில் ஆழமாகவும் வலுவாகவும் கடைக்கால் அமைக்க வேண்டியிருப்பதாலும், கூடுதல் போக்கு வரத்துச் செலவு காரணமாகவும், வீடு மட்டும் கட்டுவதற்கு அல்லது வசதியுடன் முழுவீடு கட்டுவதற்கு பேரளவுச் செலவிற்கு மேற்பட்டு ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ. 550 கூடுதலாக அனுமதிக்கப் படுகிறது.

5.1. (எ) உதவி விவரம்.—(1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதிக்கு முன்னர் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட திட்டத்திற்கு) இந்திய அரசிடமிருந்து 37 ½ சதவீதக் கடன், இந்திய அரசிட மிருந்து 37½ சதவீதம் மானியம், மாநில அரசிடமிருந்து 25 சதவீத மானியம்.

(1966-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் நாளுக்குப் பின்னர் ஒப்ப ளிப்பு வழங்கப்பட்ட திட்டங்களுக்கு).

இந்திய அரசிடமிருந்து 50 சதவீதம் கடன்.

இந்திய அரசிடமிருந்து 37 ½ சதவீத உதவித் தொகை.

மாநில அரசிடமிருந்து 12 ½ சதவீதம் உதவித் தொகை. மேல் வரம்புச் செலவுக்கு மேல் கூடுதலாக ஆகும் செலவு, மாநில அரசால் கூடுதல் உதவித் தொகையாக அளிக்கப்படுகிறது.

III-வது ஐந்தாண்டுத் திட்ட குறிக்கோள் அளவுகளும் சாதனைகளும்.

| | (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|
| மொத்த நிதி ஒதுக்கீடு .. .. | 270·00 |
| பயன்படுத்திய தொகை .. .. | 312·13 |





| | |
|---|---|
| சீர் செய்த வெற்று மனைகளின் எண்ணிக்கை .. .. .. | 5,985 சீர்செய்த வெற்று மனைகள். |
| கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்புகளின் எண்ணிக்கை .. .. .. | 2,688 குடியிருப்புகள். |

ஆண்டுத் திட்ட காலத்தில் சாதனைகள்.

| | |
|---|---|
| 1966–67-லிருந்து 1968–69 வரை பயன்படுத்தப்பட்ட தொகை | ரூ. 287·80 லட்சம். |
| 1966–67-லிருந்து 1968–69 வரை கட்டி முடிக்கப்பட்ட குடியிருப்பு களின் எண்ணிக்கை. | 5,938 குடியிருப்புகள் 761 சீர்செய்த வெற்று மனைகள். |

IV-வது ஐந்தாண்டுத் திட்டக் குறிக்கோள் அளவும் சாதனையும்.

| | |
|---|---|
| திட்டச் செலவு | ரூ. 800 லட்சம். |
| திட்டக் குறிக்கோள் அளவு .. .. | 10,000 மேம்பாடு செய்த வெற்று மனைகள். 6,650 குடியிருப்புகள். |
| 1969–70-ம் ஆண்டுத் திட்ட மதிப்பீடு. | ரூ. 75 லட்சம் |
| 1969–70 திருத்த மதிப்பீடு .. | ரூ. 57·32 லட்சம் |
| 1969-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய பயன்படுத்தப்பட்ட தொகை .. | ரூ. 61·86 லட்சம் |
| 1969-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை .. .. .. | 1,800 குடியிருப்புகள் |
| 1970–71-ம் ஆண்டுத் திட்ட மதிப்பீடு. | 100 லட்சம் |
| 1970–71-ம் ஆண்டு குறிக்கோள் அளவு. | 2,000 குடியிருப்புகள் |

6. 1. தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம்.—தோட்ட அதிபர்கள் தங்கள் தொழிலாளர்களுக்கு வீடுகட்டிக் கொடுப் பதற்காகத் தோட்ட அதிபர்களுக்குக் கடனுதவி அளிப்பதற்கென இத்திட்டம் இந்திய அரசால் வகுக்கப்பட்டது. 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் நாள் முதற்கொண்டு உதவி பெறும் வீட்டு வசதித் திட்டத்தின் அடிப்படையில், இத்திட்டம் தொழிலாளர் களுக்கான உதவிபெறும் வசதித் திட்டமாகச் செயல் படுத்தப் பட்டுள்ளது. திருத்த விதிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

6. 2. இத்திட்டத்தின்கீழ் ஒரு வீட்டைக் கட்டுவதற்கான மேல் வரம்புச் செலவு ரூ. 2,400-லிருந்து ரூ. 3,000 வரையில் ஆகிறது. தோட்டத் தொழிலதிபர்கள் மேல்வரம்புச் செலவில் 50 சதவீதம் கடனாகவும் 25 சதவீதம் உதவித் தொகையாகவும் பெற உரிமையுள்ளவர்களாவர். கூட்டுறவுச் சங்கங்கள் மேல் வரம்புச் செலவில் 65 சதவீதம் கடனாகவும் 25 சதவீதம் உதவித் தொகை யாகவும் பெற உரிமை உள்ளனவைகளாகும்.

**மூன்றாவது ஐந்தாண்டுத்திட்ட குறிக்கோள் அளவுகளும் சாதனைகளும்.**

| | |
|---|---|
| மொத்த நிதி ஒதுக்கீடு | |
| பயன்படுத்தப்பட்ட தொகை | ரூ. 5.00 லட்சம் |
| கட்டுவதற்கு திட்டமிடப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை | ரூ. 0.81 லட்சம் |
| கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 260 வீடுகள் |
| கட்டப்பட்டுவரும் வீடுகளின் எண்ணிக்கை | இல்லை. |
| | 68 வீடுகள். |

**நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் குறிக்கோள் அளவுகளும் சாதனைகளும்.**

| | |
|---|---|
| மொத்த நிதி ஒதுக்கீடு | |
| திட்டக்குறிக்கோள் அளவு | ரூ. 10.00 லட்சம். |
| 1968-69-ம் ஆண்டு திட்ட ஒதுக்கீடு | 450 வீடுகள். |
| 1969-70-ம் ஆண்டு திட்ட ஒதுக்கீடு | ரூ. 1.00 லட்சம். |
| 1969-70 திருத்த மதிப்பீடு | ரூ. 2.00 லட்சம். |
| 1970-71 வரவு-செலவு திட்ட மதிப்பீடு | ரூ. 2.00 லட்சம். |
| 1970-71 குறிக்கோள் அளவு | ரூ. 2.00 லட்சம். |
| | 88 வீடுகள் |

531 வீடுகள் கட்டுவதற்கு ஏற்கனவே பல விண்ணப்பங்கள் வந்துள்ளன. மேலும் பல வரலாமென எதிர்பார்க்கப்படுகிறது. பெறப்பட்ட விண்ணப்பங்கள் பற்றி பரிசீலிக்கப்படும்.

7. 1. கிராம வீட்டு வசதித் திட்டம்.—இத்திட்டம் 1959-ம் ஆண்டிலிருந்து தொடங்கப்பட்டது. சமுதாய நல வளர்ச்சி வட்டாரங்களிலும் தேசிய வளர்ச்சிப் பணிப் பகுதிகளிலும் தெரிந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் இத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது.

**திட்டக்காலத்தில் குறிக்கோள் அளவுகளும் சாதனைகளும்**

**மூன்றாவது திட்டம்:**

| | |
|---|---|
| திட்ட ஒதுக்கீடு .. .. .. | ரூ. 25.00 லட்சம். |
| பயன்படுத்திய தொகை .. .. | ரூ. 36.27 லட்சம் (மத்திய நிதியின் கீழ் 23·63 லட்சம். ஆயுள் ஈட்டுறுதிக் கழக நிதியின் கீழ் 12·64 லட்சம்). |
| கட்டிமுடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 1,922 வீடுகள் (மத்திய நிதியின் கீழ் 1,791 வீடுகளும் ஆயுள் ஈட்டுறுதிக் கழக நிதியின் கீழ் 131 வீடுகளும்) |
| திட்டக்கால அளவில் மேற்கொள்ளப்பட்ட புதிய கிராமங்களின் எண்ணிக்கை. | 81 கிராமங்கள். |
| இத்திட்டம் நிறைவேற்றப்பட்டுவரும் கிராமங்களின் மொத்த எண்ணிக்கை. | 161 கிராமங்கள். |



**1966-67-ஆம் ஆண்டுத் திட்டம்.**

| | |
|---|---|
| நிதி ஒதுக்கீடு .. .. .. .. | ரூ. 4 லட்சம். |
| பயன்படுத்திய தொகை .. .. .. | ரூ. 5·35 லட்சம் (மத்திய நிதியின் கீழ் ரூ. 4·23 லட்சம் ஆயுள் ஈட்டுறுதிக் கழக நிதியின் கீழ் ரூ. 1·12 லட்சம்.) |
| கட்டி முடித்த வீடுகள் .. .. .. | 58 வீடுகள். |
| இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட புதிய கிராமங்களின் எண்ணிக்கை. | 4 கிராமங்கள். |
| இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு வரும் கிராமங்களின் மொத்த எண்ணிக்கை. | 165 கிராமங்கள். |

**1967-68-ஆம் ஆண்டுத் திட்டம்.**

| | |
|---|---|
| நிதி ஒதுக்கீடு .. .. .. .. | ரூ. 6 லட்சம். |
| பயன்படுத்திய தொகை .. .. .. | ரூ. 6·17 லட்சம். |
| கட்டி முடித்த வீடுகள் .. .. .. | 214 வீடுகள். |
| மேற்கொள்ளப்பட்ட புதிய கிராமங்களின் எண்ணிக்கை. | 3 கிராமங்கள். |
| இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு வரும் கிராமங்களின் மொத்த எண்ணிக்கை. | 168 கிராமங்கள். |

**நான்காவது திட்டக்கால குறிக்கோள் அளவும் சாதனைகளும்.**

| | |
|---|---|
| மொத்த நிதி ஒதுக்கீடு .. .. .. | ரூ. 50 லட்சம். |
| திட்டக் குறிக்கோள் அளவு .. .. .. | 1,500 வீடுகள். |
| 1970-71-ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. | 5.46 லட்சம். |
| 1970-71-ஆம் ஆண்டுக்குரிய குறிக்கோள் அளவு. | 300 வீடுகள். |

**1968-69-ஆம் ஆண்டுத் திட்டம்.**

| | |
|---|---|
| திட்ட நிதி ஒதுக்கம் .. .. .. | ரூ, 13 லட்சம். |
| கட்டுவதற்குத் திட்டமிடப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 250 வீடுகள். |
| திட்டக்கால அளவில் மேற்கொள்ளப்பட்ட புதிய கிராமங்களின் எண்ணிக்கை. | 27 கிராமங்கள். |
| திட்டம் நிறைவேற்றப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை. | 195 கிராமங்கள். |
| கட்டி முடித்த வீடுகள் .. .. .. | 200 வீடுகள். |
| பயன்படுத்திய தொகை .. .. .. | ரூ. 13·29 லட்சம். |

**1969-70-ஆம் ஆண்டுத் திட்டம்.**

| | |
|---|---|
| திட்ட நிதி ஒதுக்கம் .. .. .. | ரூ. 5 லட்சம். |
| 1969-70-ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு | ரூ. 5 லட்சம். |
| கட்டுவதற்குத் திட்டமிடப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 300 |
| 31—12—1969 முடிய கட்டி முடித்த வீடுகள் | 99 |
| கட்டப்பட்டு வரும் வீடுகள் .. .. .. | 1,127 |
| பயன்படுத்திய தொகை .. .. .. | ரூ. 4·78 லட்சம். |

7.2. கிராமத்தினர் பிறரிடமிருந்து நிதி உதவி பெற்றுச் சொந்த முயற்சி அடிப்படையில் தங்கள் வாழ்க்கை நிலைகளை மேம்படுத்திக் கொள்ள அவர்களுக்கு ஊக்கமளிப்பதற்காகவே இத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. வீட்டின் மதிப்பீட்டுச் செலவில் 80 சதவீதம் கடனாக வழங்கப்படுகிறது. ஒவ்வொரு வீட்டிற்கும் பேரளவுக் கடன் தொகை ரூ. 3,000 ஆகும். இந்தக் கடனுக்கு 6¼ சதவீதம் வட்டி உண்டு. இது 20 ஆண்டுக்கால அளவில் திருப்பிச் செலுத்தப் படத்தக்கதாகும். கிராமத்தினர் மெய் வருந்த உழைத்தும், உள்ளூரிலே கிடைக்கும் பொருள்களைக் கொடுத்தும் தங்கள் சேமிப்புகளைத் தந்து உதவியும் தங்கள் பங்குப் பொறுப்பினை நிறைவேற்றுகின்றனர். பெருந் திட்டத்தையொட்டி வீடுகள் கட்டப்பட்டுள்ள கிராமங்களில் சாலைகள், கழிவு நீர் அகற்று ஏற்பாடு முதலிய வசதிகள் கிராமம் ஒன்றுக்கு ரூ. 10,000 செலவில் செய்து கொடுக்க இத் திட்டம் வகை செய்கிறது. சென்னை, கன்னியாகுமரி மாவட்டங்கள் நீங்கலாக தமிழ்நாட்டிலுள்ள எல்லா மாவட்டங்களிலும் இத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத் திட்டம் கிராமத்தினரைக் கவர்ந்துள்ளது.

8. 1. நிலம் கையகப்படுத்துதல்—மேம்படுத்துதல் திட்டம்.—நிலவிலைகள் ஏறுவதைத் தடுப்பதற்காக முன்னதாக நிலத்தைக் கையகப்படுத்துவதும், வீடு கட்டும் காரியங்களுக்குக் குறைந்த செலவில் நிலம் கிடைக்கச் செய்வதும் வளர்ந்து வரும் பெரிய நகரங்களில் இட நெருக்கடியைக் குறைப்பதும் இத்திட்டத்தின் நோக்கங்களாகும்.

8.2. இந்தத் திட்டம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் ஆதாயவிரயமற்ற அடிப்படையில் நடத்தப்படுகிறது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நகரிலும், நகரைச் சுற்றிலும், பெரிய நிலப் பகுதிகளைக் கையகப்படுத்தி, அவற்றை எல்லா வசதிகளும் நிரம்பிய சிறு சிறு நகர்களாக உருவாக்குகின்றது. பொது வசதிகளாகிய பள்ளிக்கூடங்கள், மருத்துவ மனைகள், கடைகள், விளையாட்டுத் திடல்கள், முதலியவற்றுடன் சாலைகள், தெரு விளக்குகள், நீர் வழங்கல், கழிவு நீரகற்று வசதி, விளையாட்டுத் திடல், பூங்கா ஆகிய வசதிகள் இந்த நகர்களிலே ஏற்படுத்தப்படும். இத் திட்டத்தின் கீழ் தனிப்பட்ட பொதுமக்கள், கூட்டுறவுச் சங்கங்கள், அல்லது ஏனைய நிறுவனங்களுக்கு வீடுகள் கட்டும் மனைகள் ஒதுக்கப்படுகின்றன. வீடுகளும், குடியிருப்புகளும், அங்கணங்களும், முழு உரிமை அடிப்படையில் வழங்கப்படுகின்றன. இவர்கள் மூலதன முதலீட்டை 15 முதல் 20 ஆண்டுகளில் திருப்பிக் கொடுக்கின்றனர். ஒதுக்கப்பட்ட அல்லது பொது ஏலத்தில் விற்கப்பட்ட மனைகளை, ஐந்து ஆண்டுக் காலத்திற்குள் வேறு எவரிடமும் திரும்ப விற்கக் கூடாது என்ற நிபந்தனையின் பேரில் கொடுக்கப்படுகிறது. அதாவது, அக்கால அளவிற்குள் அவர்கள் அங்கு வீடு கட்டிக்கொள்ள வேண்டும். இதன் காரணமாக, நிலத்தையோ அன்றி வீட்டையோ அவர்கள் விற்க விரும்ப மாட்டார்கள். இதனால் நிலங்களின் விலை



அதிகரிப்பதைத் தடுக்கிறது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மேம்பாடு செய்த மனைக்கட்டுகளை மனை ஒன்றுக்கு ரூ. 5,500 முதல் ரூ. 6,500 வரை விற்கின்றது. இத்துடன் கூட மூலை மனைக்கட்டுகள் பொது ஏலத்தில் விற்கப்படுகின்றன. இத் திட்டத்திற்கு வேண்டிய நிதி வசதி ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தால் வழங்கப்பட்ட நிதிகளிலிருந்து அளிக்கப்படுகிறது. பின்னர் விற்பனைத் தொகையும் மீண்டும் பயன்படுத்தப்படுகிறது.

மூன்றாவது திட்டக் குறிக்கோள் அளவுகளும், சாதனைகளும்.

| | |
|---|---|
| மொத்த நிதி ஒதுக்கீடு | ரூ. 170.00 லட்சம். |
| பயன்படுத்திய தொகை | ரூ. 383.22 லட்சம். |
| கையகப்படுத்திய நிலம் | ரூ. 2,321.42 ஏக்கர். |

1966-67-லிருந்து 1968-69வரை ஆண்டுத் திட்டம்.

| | |
|---|---|
| 1966-67 முதல் 1968-69 வரை பயன் படுத்தப்பட்ட தொகை. | 412·18 லட்சம். |
| இக்கால அளவில் திட்டச் சாதனை .. | 812·03 ஏக்கர். |

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்.

| | |
|---|---|
| திட்ட ஒதுக்கீடு .. .. .. .. | 500 லட்சம். |
| குறிக்கோள் அளவு .. .. .. .. | 1,000 ஏக்கர் நிலம். மேம்படுத்தப்பட வேண்டும். |
| 1969-70 திட்ட மதிப்பீடு .. .. .. | 160 லட்சம். |
| 1969-70 திருத்த மதிப்பீடு .. .. .. | 125 லட்சம். |
| 1969-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய பயன்படுத்திய தொகை. | 114·72 லட்சம். |
| 1969-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய சாதனைகள். | 198·56 ஏக்கர். |
| 1970-71-ஆம் ஆண்டு திட்ட மதிப்பீடு .. | 160 லட்சம். |
| 1970-71-ஆம் ஆண்டுக்குரிய குறிக்கோள் அளவு | 200 ஏக்கர். |

9. 1. நடுத்தர வருமான மூன்ளோர் வீட்டு வசதித் திட்டம்.—நடுத்தர வருமான முள்ளோர் இந்திய அரசால் வகுக்கப்பட்ட நடுத்தர வருமான மக்களுக்கான வீட்டு வசதித் திட்டம் இம் மாநிலத்தில் 1959-ம் ஆண்டு மார்ச் திங்கள் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வீடுகள் கட்டுவதற்காக ஆண்டு வருவாய் ரூ. 6,000-க்கு மேற்பட்டு ரூ. 15,000-க்கு மேற்படாமல் வருவாயுடையோருக்கு வீட்டு வசதி செய்து கொடுப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும்.

9.2. இத் திட்டத்தின் மேல்வரம்புச் செலவு வீடு ஒன்றுக்கு ரூ. 30,000-க்கு உட்பட்டு, நிலம் உட்பட கட்டுமானச் செலவில் 80 சதவீதமாகும்.

93. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியமும் கூட்டுறவுப் பிரிவும்
இத்திட்டத்தை நிறைவேற்றுகின்றன. தகுதியான நபர்களுக்கு
விற்பனை செய்வதற்காக அல்லது தகுதியானவர்களுக்கு வாட
கைக்கு விடுவதற்காக வீடுகள் கட்ட இந்தக் கடன்கள் தமிழ்
நாடு வீட்டு வசதி வாரியத்தால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.
ஆனால், அத்தகைய வாடகை வீட்டு வசதித் திட்டத்திற்கு 50 சத
வீதத் தொகைக்கு மேற்படாத தொகை பயன் படுத்தப்பட
வேண்டும். அத்துடன், 25 சத வீதத்திற்கு மேற்படாத வீடுகள்
மாநில அரசுப் பணியாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

**மூன்றாவது திட்டக் குறிக்கோள் அளவுகளும், சாதனைகளும்.**

| | கூட்டுறவுச் சங்கங்கள். | மாநில வீட்டு வசதி வாரியம். |
|---|---|---|
| மொத்த ஒதுக்கீடு .. .. | 125 லட்சம். | 75 லட்சம். |
| பயன்படுத்திய தொகை .. | 109·10 லட்சம் | 201·77 லட்சம் |
| கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 801 வீடுகள். | 572 வீடுகள். |
| கட்டப்பட்டுவரும் வீடுகளின் எண்ணிக்கை. | 262 வீடுகள். | 528 வீடுகள். |

**திட்டம் 1966–67 முதல் 1968–69 ஆண்டுத் வரை திட்டம்.**

| | | |
|---|---|---|
| பயன்படுத்தப்பட்ட தொகை.. | 37·50 லட்சம். | 82·86 லட்சம் |
| கட்டிமுடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 146 வீடுகள். | 489 வீடுகள். |

**நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்.**

| | | |
|---|---|---|
| மொத்த ஒதுக்கீடு | இருபிரிவுகளுக்கும் | 500 லட்சம். |
| 1969–70 ஆண்டுக்கான திட்ட மதிப்பீடு. | 10.00 லட்சம் | 60·00 லட்சம். |
| 1969–70 ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு. | 10·00 லட்சம் | 60.00 லட்சம் |
| செப்டம்பர் 1969 வரை செலவிடப்பட்ட தொகை. | 6.58 லட்சம். | 30·74 லட்சம் |
| கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 44 வீடுகள். | 450 வீடுகள். |
| 1970–71 ஆண்டுத் திட்ட மதிப்பீடு. | 10·00 லட்சம். | 55.00 லட்சம் |

*10. தமிழ்நாடு அரசுப் பணியாளர் வாடகை வீட்டு வசதி திட்டம்.*

முக்கியமாக, குறைந்த வருமானமுடைய மாநில அரசுப் பணி
யாளர்களுக்கு, முழுக்க முழுக்க வாடகை அடிப்படையில், அங்க
ளைச் ஏற்படுத்திக் கொடுப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.
வீடு ஒதுக்கப்பட்டவர்களின் சம்பளத்தில் 10 சத வீதம் உதவி
பெற்ற வாடகையையே மாநில அரசு வசூலிக்கிறது. அவர்களுக்கு
வீட்டு வாடகைப் படி கொடுக்கப்படுவதில்லை. இந்த அடிப்
படையில் வசூலிக்கப்படும் வாடகை சிக்கன வாடகையைவிடக்



குறைவாக இருக்கிறது. சிக்கன வாடகைக்கும் சலுகை வாட
கைக்கும் உள்ள வேறுபாட்டை மாநில அரசு ஈடு செய்வதால்
அரசுப் பணியாளர்களுக்குக் குறைந்த வாடகையில் இந்த அங்க
ணங்கள் கிடைக்கின்றன. இத்திட்டத்தை நிறைவேற்றவும் நிறை
வேற்றிய பின் சொத்துக்களைப் பேணுதற்கும், மாநில அரசின்
முகவராகத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் விளங்குகிறது.
சொத்துக்களின் உரிமை மாநில அரசிடம் நிலைபெறுகிறது.
பொதுவாக, இத்திட்டத்தின்கீழ் வீடுகள், அரசு நிலங்களில்தான்
கட்டப்பட்டு வருகின்றன. பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்
பட்டு வருகின்ற சென்னை மாநகரத்தைத் தவிர, தலைமையிடங்கள்
ஒவ்வொன்றிலும் குறைந்த வருமானமுள்ள பணியாளர்களுக்கு
ஒதுக்குவதற்காகக் குறைந்தது 50 வீடுகள் கட்டிக் கொடுக்கவும்
அரசு முடிவு எடுத்துள்ளது.

**மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட குறிக்கோள் அளவுகளும், சாதனைகளும்.**

| | |
|---|---|
| மொத்த ஒதுக்கீடு .. | மாநில முழுவதற்கும் ரூ. 500 லட்சம். |
| பயன்படுத்தப்பட்ட தொகை. | ரூ. 177·15 லட்சம் (தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம்). |
| திட்டச் சாதனை .. .. | 1,364 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டன. 1,556 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. |

**1966–67 முதல் 1968–69 ஆண்டுத் திட்டம்.**

1966–67 முதல் 1968–69 வரை பயன்படுத்தப்பட்ட தொகை ரூ. 131·20 லட்சம்.

1966–67 முதல் 1968–69 வரை கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 3,430 அங்கணங்கள்.

**நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்.**

1966–70 ஆண்டுக்கான திட்ட மதிப்பீடு ரூ. 70·00 லட்சம்.

1969–70 ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு ரூ. 105·00 லட்சம்.

1969 டிசம்பர் வரை பயன்படுத்திய தொகை ரூ. 39·70 லட்சம்.

1969 டிசம்பர் வரை கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 502 அங்கணங்கள்.

1970–71 ஆண்டுக்கான திட்ட மதிப்பீடு ரூ. 75·00 லட்சம.

1970–71 ஆண்டுக்கான குறிக்கோள் அளவு 500 அங்கணங்கள்.

*11. நகர்ப்புற வீட்டு வசதித் திட்டம்.*

இத்திட்டம் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் கூட்டுறவுப்
பிரிவின் மூலம் நிறைவேற்றப்பட்டது. இதற்கென திட்ட ஒதுக்
கீட்டிற்குப் புறம்பாக நிதி வழங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ்,
ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படுகிற பேரளவுக் கடன் ரூ. 12,000
என்று வரையறுக்கப்பட்டுள்ளது. வருமான வரம்பு எதுவும்
குறிப்பிடப்படவில்லை.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட சாதனைகள்—

| | |
|---|---|
| பயன்படுத்திய தொகை | ரூ. 110.71 லட்சம். |
| கட்டப்பட்ட வீடுகள் | 1,948 |
| கட்டப்பட்டு வருகின்ற வீடுகளின் எண்ணிக்கை. | 116 |
| 1966-67-ல் கட்டப்பட்ட வீடுகள் | 42 |

1968, ஏப்ரலிலிருந்து நிறுத்தப்பட்ட இத்திட்டம் இப்பொழுது நிறைவேற்றப்படவில்லை.

12. கிராமப்புற வீட்டு வசதித் திட்டம்.

இத்திட்டம் 1950-ஆம் ஆண்டிலிருந்தே நிறைவேற்றப்படுகிறது. கிராமப்புறச் சூழல் நிலவுகிற பெரிய, சிறிய ஊராட்சிகளில் வீடுகள் கட்டுவதற்குக் கடன் வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கூட்டுறவுப் பிரிவின் மூலம் இத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது. திட்டத்தின்கீழ் வராத மாநில நிதிகளிலிருந்து இத்திட்டத்திற்கான நிதி வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ், கட்டுமானச் செலவில் 80 சதவீதம் வரையில் (செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தைப்போல நான்கு மடங்குத் தொகைக்கு இது மேற்படக்கூடாது), ரூ. 10,000 கடன் மேல் வரம் பிற்குட்பட்டு, கடன்கள் வழங்கப்படுகின்றன. செலவு மதிப்பீடு ரூ. 15,000-க்கு மேற்படக்கூடாது. கடனைப்போல இரு மடங்கு மதிப்புடைய வில்லங்கமற்ற நிலங்களைச் சொந்தமாக வைத்திருக் கும் உறுப்பினர்கள் அதை இணைப்பிணையமாகக் கொடுக்கும் நேர்வு களில், பங்கு மூலதனத்தைப்போல எழு மடங்குத் தொகை கடனுத வியாக அளிக்கப்படும்.

மூன்றாவது திட்டச் சாதனைகள்.

| | | |
|---|---|---|
| 1. | செலவழித்த தொகை .. | ரூ. 36·37 லட்சம். |
| 2. | கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 510 |
| 3. | வெவ்வேறு கட்டிட நிலையில் இருந்த வீடுகளின் எண்ணிக்கை. | 872 |

இடைக்காலத் திட்டச் சாதனை.

| | | பயன்படுத்திய தொகை. | | சாதனை. |
|---|---|---|---|---|
| 1966–67 | .. | ரூ. 10·00 லட்சம் | .. | 75 வீடுகள் |
| 1967–68 | .. | ரூ. 6·03 லட்சம் | .. | 85 வீடுகள் |
| 1968–69 | .. | ரூ. 10·13 லட்சம் | .. | 164 வீடுகள் |

நான்காவது திட்டச் சாதனைகள்.

| | | |
|---|---|---|
| 1. | 1969–70 ஆண்டுக்கான திட்ட ஒதுக்கீடு. | ரூ. 10·00 லட்சம். |
| 2. | 1969–70 ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு. | ரூ. 10·00 லட்சம். |
| 3. | 1–4–1969 முதல் 31–12–1969 வரை முதல் ஆண்டிற்கு செலவழித்த தொகை. | ரூ. 4·93 லட்சம். |
| 4. | 1–4–1969 முதல் 31–12–1969 வரை கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை. | 76 |
| 5. | 1970–71 ஆண்டுக்கான திட்ட மதிப்பீடு. | ரூ. 10·00 இலட்சம். |



13. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் புழைக் கற்கலவைத் தொழிற்சாலை. (Cellular Concrete Plant).

இந்திய அரசுக்கும் போலந்து குடியரசுக்கும் இடையில் ஏற்பட்ட 1962-ஆம் ஆண்டுப் பொருளாதார ஒத்துழைப்புக்கிணங்க சென்னைக்கு அருகில், எண்ணூரில் புழைக் கற்கலவைத் தொழிற் சாலை ஒன்றை நிறுவுவதற்காக 23—9—1966-ம் நாளன்று தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்துக்கும் போலந்து நாட்டைச் சேர்ந்த திருவாளர்கள் செகாப் நிறுவனத்துக்கும் இடையே உடன்படிக்கை ஒன்று கையொப்பமாகியது. இதற்கு வேண்டிய இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டுவருகின்றன. தொடக்க வேலைகள் நடந் தேறி வருகின்றன. இது காரணமாக, போலந்து வங்கிக்கு இந்திய அரசு நிதி அமைச்சகத்தினரால் ரூ. 1.04 கோடிக்கு ஆணைக் கடிதம் வழங்கப்பட்டது. இத்தொழிற்சாலைக்கான செலவு முதலீடு ரூ. 285 லட்சம் என்று மதிப்பிடப்படுகிறது. இதில் அந்நியச் செலாவணி சுமார் ரூ. 104 லட்சமாகும். இத்தொழிற்சாலை கூடிய விரைவில் முறைப்படி உற்பத்தி செய்யத் தொடங்குமென்று எதிர்பார்க்கப் படுகிறது. இத்திட்டத்திற்காகும் முழுச் செலவையும் மாநில திட்டத்தில் சேராத கடனைக் கொடுக்க இந்திய அரசு இசைந் துள்ளது. 1969-70-ம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடும் 1970-71-ம் ஆண்டுக்கான திட்ட மதிப்பீடும் முறையே 1.63 லட்சம், ரூ. 80 லட்ச மாகும்.

14. செங்கல் சூளை.

செக்கோஸ்லோவோகிய நாட்டு ஒத்துழைப்புடன் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் செங்கல் யந்திர சூளை ஒன்றைத் தொடங்கு வதற்கான செயற்குறிப்பு சில காலமாகவே ஆலோசனையில் இருந்து வருகிறது. யந்திரங்களின் செலவு குறித்து யந்திரம் வழங்கு வதற்கு ரூ. 18.00 லட்சம் வரை கடன் வசதிப் பொறுப்புக் கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான முதலீட்டுச் செலவு சுமார் ரூ. 98.30 லட்சம் ஆகும். அந்நியச் செலாவணி ரூ. 21.09 லட்சமாகும். தற்போது இத்திட்டத்தைத் தொழிற் துறைக்கு மாற்றக் கருதப்பட்டுள்ளது. எனினும், யந்திரங்களை மாநில வீட்டு வசதி வாரியம் இறக்குமதி செய்து அத்துறைக்கு அனுப்பும்.

15. பங்கு மூலதனச் சான்றுகளும் புரோ நோட்டுகளும் வழங்கு வதற்காக 1969-70-ல் ரூ. 200 லட்சம் வரை பொது மக்களிடமிருந்து கடன் திரட்டுவதற்குத் தமிழ்நாடு அரசு மாநில வீட்டு வசதி

வாரியத்திற்கு அனுமதியளித்தது. பங்கு மூலதனச் சான்றுகள், புரோ நோட்டுகளின் மீது வட்டியையும் முதலினையும் செலுத்து வதற்கு மாநில அரசு உத்திரவாதமளித்தது. 1970 ஜனவரியில் எழுப்பிய கடனுக்கு, தேவையான அளவுக்கு மேலேயே தொகை கிடைத்துள்ளது.

## 16. முடிவுரை.

போதிய நிதி உதவி இல்லாததே திட்டத்தின் ஆர்வமிக்கச் செயல்களை நிறைவேற்ற முடியாததற்கு முக்கியக் காரணமாகும். இத் திட்டங்களின் தேவைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், அவற் றிற்காக ஒதுக்கியுள்ள நிதிகள் மிகக் குறைவு என்பது தெரிய வரும். ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து ரூ. 150.00 லட்சமும் இந்திய அரசிடமிருந்து ரூ. 150.00 லட்சமும் சராசரியாக நமக்குக் கிடைக்கிறது. பல்வேறு திட்டங்களின் அவசியத்தைக் கருதிப் பார்க்கையில், இன்னும் 10 ஆண்டுகளுக்கு, ஒவ்வொரு ஆண்டுச் செலவிற்கு ரூ. 10 கோடி தேவைப்படும். வீடுகளின் தேவைகளைப் போதுமான அளவுக்கு நிறைவு செய்ய இத்தொகை உதவும். மாநிலத்தில் உள்ள பல்வேறு வீட்டு வசதி திட்டங்களின் பணிகளை விரைவில் செயல்படுத்துவதற்காகவும் ஆர்வமிக்க திட்டங்களை விரைந்து சாதிப்பதற்கும் ரூ. 23 கோடி சுழல்நிதி ஒன்றை ஏற் படுத்துவதற்கான செயற்குறிப்புகள் இந்திய அரசுக்கு அனுப்பப் பட்டுள்ளன.



இரண்டாவது மூன்றாவது திட்டக்கால அளவுகளிலும், அடுத்து வருகிற ஆண்டுத் திட்டக்கால அளவுகளிலும் வீட்டு வசதி நிலை பற்றிய ஒப்பீட்டு ஆய்வினை காட்டும் விவர அறிக்கை.

| வரிசை எண்ணும் திட்டத்தின் பெயரும். | துறையின் பெயர். | இரண்டாவது திட்டம். — வீடுகளின் எண்ணிக்கை. கட்டி முடிக்கப்பட்ட வீடுகள். | இரண்டாவது திட்டம். — கட்டப்பட்டு வருபவை. | மூன்றாவது திட்டம். — கட்டி முடிக்கப்பட்ட வீடுகள். | மூன்றாவது திட்டம். — கட்டப்பட்டு வருபவை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 தொழிலாளர் மலிவு வீட்டு வசதித் திட்டம் .. | 1. பொதுத் துறை | 2,074 | [illegible] | 1,042 | 215 |
| | 2 தனியார் துறை | .. | .. | 339 | .. |
| | 3. கூட்டுறவுத் துறை. | 71[illegible] | 220 | 1,343 | 59 |
| 2 குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு வீட்டு வசதி. | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம். | [illegible]24 | .. | 1,916 | 652 |
| | கூட்டுறவுத் துறை. | [illegible]421 | 752 | [illegible]1,791 | 387 |
| 3 சேரி மேம்பாடு அகற்றுதல் திட்டம் .. | மாநில வீட்டு வசதி வாரியம். | [illegible]247, (சீர் செ[illegible] வெற்று மனைகள்.) | .. | 2,688 (கு[illegible]புகள்) 5,[illegible]8 (சீர் [illegible]த வெற்று மனை கள்.) | 2,528 (குடியிருப்பு கள்.) |

| வரிசை எண்ணும் திட்டத்தின் பெயரும். | துறையின் பெயர். | இரண்டாவது திட்டம். வீடுகளின் எண்ணிக்கை. கட்டி முடிக்கப்பட்ட வீடுகள். | இரண்டாவது திட்டம். கட்டப்பட்டு வருபவை. | மூன்றாவது திட்டம். கட்டி முடிக்கப்பட்ட வீடுகள். | மூன்றாவது திட்டம். கட்டப்பட்டு வருபவை. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 4 தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம். | தொழில் துறை ஆணையாளர். | 155 | 36 | .. | 68 |
| 5 கிராம வீட்டு வசதித் திட்டம் .. .. .. | கிராமப் புற வீட்டு வசதி அமைப்பு. | 131 | 1.401 | 1,922 | 1,456 |
| 6 நிலக் கையகப்படுத்துதல் மேம்பாட்டுத் திட்டம் .. | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம். | 358 ஏக்கர்கள். | .. | 2,321 ஏக்கர்கள். | 4,067 ஏக்கர்கள். |
| 7 நடுத்தர வருமானமுள்ளோர்களுக்கு வீட்டு வசதித் திட்டம். | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம். | 29 | .. | 572 | 828 |
| 8 குறைந்த வருமானம் பெறும் மாநில அரசுப் பணியாளர்களுக்கு வாடகை வீட்டு வசதித் திட்டம். | கூட்டுறவுத் துறை. | 37 | 260 | 801 | 262 |
| | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம். | .. | .. | 1,364 | 1,556 |
| 9 கிராம வீட்டு வசதித் திட்டம் .. .. .. | கூட்டுறவுச் சங்கப் பதிவாளர். | 326 | 220 | 510 | 372 |
| 10 நகர்புற வீட்டு வசதித் திட்டம் .. .. | .. | 1,691 | 734 | 1,948 | 116 |



| வரிசை எண்ணும் திட்டத்தின் பெயரும். | துறையின் பெயர். | ஆண்டுத் திட்டம் (1966–67 முதல் 1968–69 வரை) வீடுகளின் எண்ணிக்கை. கட்டி முடிக்கப்பட்ட வீடுகள். | ஆண்டுத் திட்டம். கட்டப்பட்டு வருபவை. | நான்காவது திட்டம் 1969–70 (டிசம்பர் 1969 வரை.) கட்டி முடிக்கப்பட்ட வீடுகள். | நான்காவது திட்டம். கட்டப்பட்டு வருபவை. |
|---|---|---|---|---|---|
| | | (7) | (8) | (9) | (10) |
| 1 தொழிலாளர் மலிவு வீட்டு வசதித் திட்டம் .. | 1. பொதுத் துறை | 327 | 156 | .. | 12 |
| | 2 தனியார் துறை | .. | .. | .. | .. |
| | 3. கூட்டுறவுத் துறை. | 561 | 218 | 282 | 121 |
| 2 குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு வீட்டு வசதி. | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம். | 1,126 | 400 | 600 | 236 |
| | கூட்டுறவுத் துறை. | 737 | 466 | 87 | 527 |
| 3 சேரி மேம்பாடு அகற்றுதல் திட்டம் .. | மாநில வீட்டு வசதி வாரியம். | 5,938 (குடியிருப்புகள்.) 761 சீர்செய்த வெற்று மனைகள்.) | 2,220 (குடியிருப்புகள்.) | 1,800 (குடியிருப்புகள்.) | 1,000 (குடியிருப்புகள்.) |

| வரிசை எண்ணும் திட்டத்தின் பெயரும். | துறையின் பெயர். | ஆண்டுத் திட்டம் (1966–67 முதல் 1968–69 வரை). வீடுகளின் எண்ணிக்கை. கட்டி முடிக்கப்பட்ட வீடுகள். (7) | கட்டப்பட்டு வருபவை. (8) | நான்காவது திட்டம் 1969–70 (டிசம்பர் 1969 வரை). கட்டி முடிக்கப்பட்ட வீடுகள். (9) | கட்டப்பட்டு வருபவை. (10) |
|---|---|---|---|---|---|
| 4 தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம். | தொழில் துறை ஆணையாளர். | .. | .. | .. | .. |
| 5 கிராம வீட்டு வசதித் திட்டம் .. .. .. | கிராமப் புற வீட்டு வசதி அமைப்பு, | 472 | .. | 90 | 1,127 |
| 6 நிலக் கையகப்படுத்துதல் மேம்பாட்டுத் திட்டம் .. | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம். | 238·08 ஏக்கர்கள். | 3,133·03 ஏக்கர்கள். | 198·51 ஏக்கர்கள். | 735 ஏக்கர்கள். |
| 7 மத்தியதர வருமானமுள்ளோர்களுக்கு வீட்டு வசதித் திட்டம். | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம். | 489 | 485 | 450 | 220 |
| | கூட்டுறவுத் துறை | 146 | 350 | 44 | 150 |
| 8 குறைந்த வருமானம் பெறும் மாநில அரசுப் பணியாளர்களுக்கு வாடகை வீட்டு வசதித் திட்டம். | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் | 3,430 | 14 | 502 | 678 |
| 9 கிராம வீட்டு வசதித் திட்டம் .. .. .. | கூட்டுறவுச் சங்கப் பதிவாளர். | .. | .. | 76 | 205 |
| 10 நகர்புற வீட்டு வசதித் திட்டம் .. .. | .. | .. | .. | .. | .. |

## தமிழ் நாடு சட்டப் பேரவை.

**சனிக்கிழமை, 1970 மார்ச் 14.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. நீத்தார் நினைவுக் குறிப்பு.

**முன்னாள் உறுப்பினரும் அமைச்சருமான திரு. எஸ். இராமநாதன் அவர்களின் மறைவு குறித்து**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1937-லிருந்து 1939-வது ஆண்டு வரை மாயூரம் பொதுக் கிராமப்புறத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ் நாடு சட்டப் பேரவையின் முன்னாள் உறுப்பினராகவும், பொதுச் செய்தித் துறை அமைச்சராகவும் இருந்த திரு. எஸ். இராமநாதன் அவர்கள் 9—3—1970-ம் நாளன்று மறைந்ததைக் குறித்து இப் பேரவையின் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் தெரிவிக்கிறேன்.

மறைந்தவருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மறைந்த அன்னாருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் இப் பேரவையின் நிகழ்ச்சியைப் பதினைந்து நிமிடங்கள் ஒத்திவைக்கின்றேன்.

பேரவை காலை 9-15 வரை ஒத்திவைக்கப்பட்டது.

பேரவை மீண்டும் காலை 9-15 மணியளவில் கூடியது.

### (2) வினாக்கள்—விடைகள்.

**வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.**

**வட்ட மருத்துவ மனைகளுக்கு எக்ஸ் கதிர் வீச்சுப் பிரிவுகள்**

*** 369 வினா—திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வட்ட மருத்துவ மனைகளில் எக்ஸ் கதிர் வீச்சுப் பிரிவுகளைத் தொடங்க அரசு திட்டமிட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** எக்ஸ் கதிர்வீச்சுக் கருவிகள் தாலுக்கா தலைமை மருத்துவ நிலையங்களில் படிப்படியாக நிதி நிலையைப் பொருத்து நிறுவப்பட்டு வருகின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்த எக்ஸ் கதிர் வீச்சுப் பிரிவு கள் மருத்துவ நிலையங்களில் மிக அத்தியாவசியமாக இருக்கிறது. அது மக்களுக்கு மிகவும் தேவையாக இருப்பதினால் உடனடியாக அரசாங்கம் எல்லா வட்ட மருத்துவ மனைகளிலும் இந்தப் பிரிவு களைத் தொடங்க ஏற்பாடுகள் செய்யுமா? படிப்படியாக அமைக்கப் படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். படிப்படியாக என்று இல்லாமல் உடனடியாக எல்லா வட்ட மருத்துவ மனை களிலும் இப் பிரிவுகளைத் தொடங்க என்ன திட்டம் இருக்கிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : படிப்படியாகத் தொடங்குவதற்குக் காரணம் நிதிப் பற்றுக்குறைதான். அப்படி உடனடியாகத் தொடங்க வேண்டுமென்றால் ஏராளமான நிதி வேண்டும். 1967ஆம் ஆண்டில் மருத்துவ பொதுநலத் துறை இயக்குநர் அவர்கள் ஒரு திட்டம் கொடுத்தார்கள். அதில் 11 வட்டத் தலைநகர்களில் இப்படிப்பட்ட கதிர் வீச்சுக் கருவிகளை வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது. விழுப்புரம், செய்யாறு, ஸ்ரீபெரும்புதூர், பட்டுக்கோட்டை, போடிநாய்க் கனூர், காஞடுகாத்தான், திருவரங்கம், ஸ்ரீவைகுண்டம், நாமக்கல், தாராபுரம், பத்மநாபபுரம் என்று தாலுகா தலைநகர்களில் முக்கியமான 11 இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நிதிப் பற்றுக்குறை காரணமாக 1968–69-ல் ஆறு இடங்களில் வைக் கப்பட்டது. பட்டுக்கோட்டை, கானாடுகாத்தான், நாமக்கல், தாரா புரம், ஸ்ரீவைகுண்டம், பத்மனாபபுரம் ஆகிய இடங்களில் வைக்கப் பட்டது. 1969-70-ல் விழுப்புரம், செய்யாறு, திருவரங்கம், ஸ்ரீ பெரும்புதூர், போடிநாயகனூர் என்ற ஐந்து இடங்களில் மேற் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு எந்த எந்த இடங்கள் என்பது இனிமேல்தான் திட்டமிடப்பட வேண்டும்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தாலுகா ஹெட்குவார்ட்டேர்ஸ் ஆஸ்பத் திரிகளில் ஒரு ஆண் டாக்டரையும் ஒரு பெண் டாக்டரையும் போடுகிறார்கள். இந்த இரண்டு டாக்டர்களில் ஒருவர் சர்ஜரி தெரிந்தவராக இருக்க வேண்டும், ஒருவர் பிஸிஷனாக இருக்க வேண்டும். அப்படி ஒருவர் சர்ஜரி தெரிந்தவராகவும் ஒருவர் பிஸிஷனாகவும் இருந்தால்தான் அந்த எக்ஸ்ரே கருவிகளைப் பயன் படுத்தி ஆபரேஷன் போன்ற வேலைகளுக்கு அவர்கள் பயன்படுவார் கள் என்ற காரணத்தினால் அப்படி சர்ஜரி தெரிந்த ஒருவரையும் பிஸிஷியன் ஒருவரையும் போடுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : எக்ஸ் கதிர் வீச்சுக் கருவிகள் பொருத்தப்படுகிறது என்பதால் அதை இயக்குவதற்கு ஏற்ற அளவிற்குத் திறமை படைத்தவர்கள்தான் அங்கு டாக்டர் களாக நியமிக்கப்படுவார்கள்.

திரு. என். வரதராஜன் : திண்டுக்கல் போன்ற மாவட்ட மருத் துவ மனைகளில் மிக முக்கியமான ஈ.என்.டி. போன்ற பிரிவுகள் இல்லை. ஆகவே குறைந்தபட்சம் மாவட்ட மருத்துவ மனைகளி



லாவது இது போன்ற குறைந்த பட்ச ஏற்பாடுகளை அல்லது அபி விருத்தியை மேற்கொள்ள அரசாங்கத்திலிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : உறுப்பினர் அவர்கள் இதுபற்றித் தனியாகக் கேள்வி போட்டால் அதற்கான முயற்சிகள் எடுக்கப்படும். கூடுமான வரையில் மாவட்ட தலைமை மருத்துவ மனைகளில் எல்லாப் பிரிவுகளும் படிப்படியாக நிறுவப்பட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் : அமைச்சர் அவர்கள் கூறிய பதிலிலிருந்து முதலாவது வருடத்தில் 11 இடங்களிலும் இரண்டா வது ஆண்டில் 6 இடங்களிலும் அதற்கு அடுத்த ஆண்டில் 5 இடங் களிலும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். இந்த ரீதியில் போனால் தமிழ்நாட்டில் உள்ள எல்லா வட்ட மருத்துவ மனைகளிலும் இப் பிரிவுகளை ஏற்படுத்துவதற்கு ஒரு நூற்றாண்டு ஆகிவிடும். விஞ்ஞானம், மருத்துவம் இவை வளர்ந்துவரும் இக் காலத்தில் இவை சாதாரணத் தேவைகள்தான். ஆகவே விரைவில் எல்லா வட்ட மருத்துவ மனைகளிலும் மிக அவசியமான இப்பிரிவு களை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : முதல் வருடத்தில் 11 என்று திட்டம் தீட்டப்பட்டு அதுதான் 6, 5 என்று பிரித்துத் தரப்பட்டிருக்கிறது, 1968-69-ல் 6-ம், 1969-70-ல் 5-ம் என்று. எதுவும் இல்லாத இடத்தில் இதையாவது தொடங்குகிறோமே என்பதைக் கவனிக்க வேண்டும். நூற்றாண்டுக் காலம் ஆகிவிடும் என்று உறுப் பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தக் கதிர் வீச்சுக் கருவி கள் எல்லாம் ஒரு சூழ்நிலையில் இருந்து மெல்ல மெல்ல தொடங்கப் பட்டு நிதிப் பற்றுக்குறை காரணமாக 6, 5 என்று 11 இடங்களில் என்றிருக்கிறது. படிப்படியாகத்தான் நாம் போக வேண்டும். நிதி நிலை சிறிது அதிகமாகச் சேருமானால்—நானும் அதிகமாகத் தான் கேட்டுக்கொண்டு வருகிறேன்—பொதுநலத் துறைக்கும், மருத்துவத் துறைக்கும் நல்லது. ஆகவே ஒன்றும் இல்லாத இடத்தில் இவ்வளவாவது செய்யப்பட்டிருக்கிறதே என்று மகிழ வேண்டியவர்களாக இருக்கிறோம். நீண்ட காலம் ஆகாது. எங்கெங்கு தேவைப்படுகிறதோ அங்கு வைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

*Employees of Madras Institute of Technology.*

*370 Q.—DR. H. V HANDE : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(a) whether any representation was made to the Hon. Minister for Education by the Employees of the Madras Institute of Technology at Chromepet, regarding the non-implementation of revised scales by their management; and

(b) if so, the action taken by the Government?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) குரோம்பேட்டையிலுள்ள சென்னை தொழில் நுட்பவியல் நிலையம் சுயேச்சை நிறுவனமாகும். எனவே அரசு இதில் தலை யிடுவதற்கில்லை.

DR. H. V. HANDE : Sir, is it not a fact that a number of grievances of the Madras Institute of Technology have to be re- dressed? Also is it not a fact that they have submitted a Memo- randum and if so, what are the contents of the Memorandum? Also recently there was a move for the State Government to take over the Institute and whether there was any such proposal to take over it?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, நான் முதலிலே கூறியபடி, தனியார் துறையில் நடைபெறுவதால் அதிலே நம் தலையீடு இல்லாமல் இருக்கிறது. எந்தக் காரியம் என்னென்ன என்பதுபற்றிய விவரக் குறிப்புகள் இங்கு இல்லை. இப்பொழுதுதான் இந்த நிறுவனத்திற்கு மத்திய அரசும், மாநில அரசும் பொறுப்பேற்று, அண்மையில் 10 நாட்களுக்கு முன்புதான் தலைமைப் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டிருக்கிறேன். அந்தப் பொறுப்பு, என்கீழ் வந்ததற்குப் பிறகு, வந்திருக்கிற குறைபாடு களைக் கவனித்து, என்னென்ன செய்ய இயலுமோ அதை இனிமேல் செய்ய முயற்சி செய்யலாம்.

**கோயம்புத்தூர் மாவட்டத்தில் தொழில் தொடர்புள்ள கல்வி.**

*** 371 வினா—திருமதி வி. ப. பழனியம்மாள் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

கோயம்புத்தூர் மாவட்டத்தில் "யுனெஸ்கோ" உதவியுடன் தொடங்கும் தொழில் தொடர்பான கல்வித் திட்டம் எப்பொழுது தொடங்கப்படுவதாக உள்ளது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கோயம்புத்தூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை வட்டத்தில் குடியானவர்களுக்குத் தொழில் தொடர்பான முதியோர் கல்வி அளிக்கும் 60 நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் சேர்ந்தவர்களுக்கு முதல் தொகுதியாக 19—3—1969 முதல் 18—9—1969 வரை ஆறு திங்கள் களுக்கு வகுப்புகள் நடத்தப் பெற்றன. இரண்டாவது தொகுதி யாக அவற்றில் சேர்ந்தவர்களுக்கு 20—11—1969 முதல் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

**இராணிப்பேட்டையில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள்**

*** 372 வினா.—திரு. எம். அப்துல் கபூர் சாகிப் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராணிப்பேட்டை நகராட்சி மன்றத்துக்கு தோல் பதனிடும் தொழிற்சாலைகள் கட்டடம் விஸ்தரிப்பு, இயந்திரங்கள்



அமைப்புக்கான விண்ணப்பங்கள் 1968–69-ல் எத்தனை பெறப் பட்டன?

(இ) அவைகளுள் எத்தனைக்கு அனுமதிகள் அளிக்கப் பட்டன?

(உ) இன்னும் அனுமதிக்கப்படாதவைகள் எத்தனை?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :**

(அ) மூன்று.

(இ) மூன்று.

(உ) ஒன்றுமில்லை.

**திரு. எம். அப்துல் கபூர் சாகிப் :** தலைவரவர்களே, இயந்திரங்கள் அமைப்புக்காக இதுவரையிலே அனுமதி கொடுக்கப்படவில்லையே, உடனடியாகக் கொடுக்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, நான் முதலிலேயே சொன்னேன், இராணிப்பேட்டை நகராட்சி மன்றத்துக்குத் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் கட்டடம் விஸ் தரிப்பு, இயந்திரங்கள் அமைப்புக்கான விண்ணப்பங்கள் மூன்று வந்தன. அந்த மூன்றுக்கும் அனுமதி அளிக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. மா. பா. சாரதி :** தலைவரவர்களே, இந்தத் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் அமைப்பதற்கு அனுமதி அளிக்கக்கூடிய அந்த நேரத்தில், அதனால் ஏற்படும் கழிவுத் தண்ணீர் போக்குவரத்திற்கு இடைஞ்சலாகவும், மற்றும் நிலங்களுக்கும், கிணற்றிலிருந்து வரக் கூடிய தண்ணீர் கெடுவதாகவும் உள்ள அந்தச் சூழ்நிலையைத் தடுக்க, அதற்குண்டான லைசென்ஸ் வழங்கும்பொழுது கவனித்து, அதற்குத் தடைவிதித்து, அம்மாதிரி துர்நாற்றம் உள்ள தண்ணீரை அப்புறப்படுத்த வேண்டுமென்று, முன்னதாகவே லைசென்ஸ் கொடுக்கும் பொழுது கவனிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள், பல்வேறு நிலைமைகளையும் ஆராய்ந்து அறிவதற்காக, அனுமதி பெற வேண்டுமென்ற நிபந் தனை விதிக்கப்பட்டது. பக்கத்து ஊரில் இருப்பவர்களுக்கு எந்த விதமான கெடுதலும் ஏற்படக் கூடாது என்பதைப் பார்த்து அதற் கான முன்னேற்பாடான தடுப்புத் திட்டங்களெல்லாம் அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்களா என்பதைப் பார்த்து, அனுமதி வழங்க வேண்டுமென்று, கமிஷனர் அனுமதி வழங்க வேண்டுமென்றிருக் கிறது. அப்படித் திருப்தி இல்லாது போனால், அந்தக் கவுன் சிலுக்கே விண்ணப்பிக்க வேண்டுமென்று கூறப்பட்டு, அந்தந்த நகராட்சி மன்றங்களின் பொதுநலத்துறை அதிகாரிகள் கொடுக் கலாம் என்று, அவர்கள் கெடுதல் ஏற்படாது என்று கூறியதற்குப் பிறகு அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இந்தத் தொழிலில் அநேகமாக எல்லோருமே தாழ்த்தப்பட்டவர்கள்தான் ஈடுபட்டுள்ளார்கள். இயந்திரங்களைப் புகுத்தாத நிலைமைகளிலே நடைபெறக்கூடிய நேரத்திலேயே, வருஷத்திலே 6, 7 மாதங்கள்தான் வேலை நடைபெறுகிறது. இப்படி இயந்திரங்களைப் புகுத்துவதால் மேலும் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும் என்கிற நிலைமையை அமைச்சரவர்கள் உணர்வார்களா ? ஆகவே, அந்த அடிப்படையில், இனிமேலாவது அதுபோன்ற இயந்திரங்களை வைத்து நடத்த அனுமதிக்காமல் இருக்க முடியுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இந்தத் தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் இயந்திரங்களைப் புகுத்துவதனால், அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்ட சூழ்நிலை ஏற்படும் என்பது கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. இரண்டும் நடைபெற வேண்டும். இப்பொழுது வேலை செய்து கொண்டிருப்பவர்களுக்கு, வேலைக்குப் பாதுகாப்பு ஏற்படவும் முயற்சி நடைபெற வேண்டும். நாடு எதிர்காலத்தில் மிக விரைவில் முன்னேற வேண்டும், உற்பத்தி பெருக வேண்டும், அதன்மூலம் வருவாய் ஏற்பட வேண்டும் என்ற முயற்சியையும் நாம் செய்ய வேண்டும். அந்தக் கருத்துக்களை அறிந்துதான் எந்தெந்த அளவுக்குத் தரலாம் என்ற நோக்கத்தினுடைய அடிப்படையில், லைசென்ஸ் வழங்கும் முறையெல்லாம் இருந்து வருகிறது.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் தலைவரவர்களே, அந்நிய நாட்டு செலாவணியைக் கணிசமாக ஈட்டித் தருகின்ற இந்தத் தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கு, இயந்திரங்கள் தேவை என்று விண்ணப்பிப்பார்களானால், அதனால், அதிக அந்நிய நாட்டுச் செலாவணியைத் தேடிக் கொள்ள முடியுமென்றிருப்பதால், காலதாமதம் ஏற்படாமல், இந்தத் துறையில் நடவடிக்கை எடுத்து அனுமதி அளிக்க அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நான் முதலிலேயே குறிப்பிட்டப்படி, இராணிப்பேட்டையில் மூன்றுக்கு அனுமதி கேட்கப்பட்டன. அந்த மூன்றுக்கும் அனுமதி வழங்கப்பட்டன என்று கூறியிருக்கிறேன். ஆகவே, விரைவிலே, காலதாமதம் இல்லாமல் அனுமதி வழங்க வேண்டுமென்ற தன்மையின் அடிப்படையிலேதான் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. தி. பொன்னுமலை :** தலைவரவர்களே, தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கு லைசென்ஸ் வழங்குவதால், சங்கங்களும் மற்றவைகளும் ஏற்பட்டு தோல் ஷாப் நடத்த முடியாத நிலை இருக்கிறது. அதனால் விவசாயம் கெடுகிறது. குடிநீர் கெட்டு விடுகிறது. குறிப்பாக சேலம் மாவட்டத்திலே ஒரு ஆண்டு காலமாக அந்த ஷாப் நடத்த முடியாமல் இருக்கிறது. ஆகவே, லைசென்ஸ் வழங்குவதற்கு முன், எல்லாச் சுகாதார அதிகாரிகளையும் கலந்து





ஆராய்ந்து, அந்தத் தண்ணீரில் கெடுதல் இல்லை என்று முடிவு செய்த பிறகு, லைசென்ஸ் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, நான் முன்னரே குறிப்பிட்டேன். அந்த நிலைமைகளை ஆராய்ந்து அறிந்ததற்குப் பிறகு, சுகாதார அதிகாரிகள் அனுமதி வழங்க சிபாரிசு செய்கிறார்கள். அந்த அடிப்படையிலே ஆணையாளர்கள் அனுமதி வழங்குகிறார்கள்.

**திரு. என். மருதாசலம் :** தலைவரவர்களே, தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வரும் அந்தக் கழிவுநீரை வெளியே கொண்டு வருவதால், அது அங்குள்ள ஜனங்கள் குடியிருக்கும் இடங்களில் தேங்கி, அதனால் தொத்துநோய் ஏற்படுகிறது. எனவே, அந்தக் கழிவுநீரை உடனடியாக அகற்ற வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிடுமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சாரதி அவர்களும், திரு. பொன்னுமலை அவர்களும் இதைப்பற்றிக் கேட்டுவிட்டார்கள். அதே கேள்வியைத் திரும்பப் போடுகிறீர்களே.

**திரு. எம். அப்துல் கபூர் சாகிப் :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுது மூன்று பேர் விண்ணப்பம் செய்திருப்பதாகக் கூறியுள்ளார்கள். I. A. Ismail & Co., M. A. Khizon Hussain & Co., A. M. Shafullah & Co. ஆகியவர்களுக்கு இதுவரையிலும் இயந்திரம் அமைக்க அனுமதி கிடைக்கவில்லை என்று நான் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதில் அவர்கள் யாராவது இருப்பார்களா என்று தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, என்னிடத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் தகவலின் அடிப்படையில், மூன்று விண்ணப்பங்கள் போடப்பட்டு, மூன்று விண்ணப்பங்களுக்கும் அனுமதி அளிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தவிர தனியாக மேலும் விவரங்களை மாண்புமிகு உறுப்பினரவர்கள் விரும்புவாரேயானால், தனிக் கேள்வி போட்டால் அந்த விவரங்களைச் சேகரித்துத் தரலாம்.

*Infant Jesus Basic Training School for Women in Mulagumoodu*

* 373 Q.—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(a) whether the advance grant for the year 1968–69 and 1969–70 was paid by the Education department of the Government of Tamil Nadu to Infant Jesus Basic Training School for women in Mulagumoodu in Kanyakumari district;

(b) whether there is any delay in the payment; and

(c) if so, the reason for the same?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இல்லை.

(உ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. டி. மார்டின் :** பேரவைத் தலைவரவர்களே, பள்ளிகள் சாதாரணமாக ஜூன் மாதத்திலே ஆரம்பித்தாலும், 'டீச்சர்-பியூப் பில் ரேஷியோ'வில் ஆசிரியர்களை நிர்ணயம் செய்யும் முறை இல்லை. சுமார் 6 மாத காலமாக 'டீச்சர்-பியூப்பில் ரேஷியோ' முறையில் நிர்ணயம் செய்ய முடியாமல் உள்ளது. டி.பி.ஐ. ஆபீசில் பேப்பர் நின்று போய்விடும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே, 'டீச்சர்-பியூப்பில் ரேஷியோ' முறையில் ஸ்டாஃப்களை பிக்ஸ் பண்ண சீக்கிரம் பைசல் செய்யுமாறு டி.பி.ஐ. ஆபீசிற்கு அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, 'Extension of the provisions of the Grant-in-Aid coda' படி பள்ளி கள் வைக்கின்ற முறையில் அந்த ஆண்டுக் கணக்கை ஆடிட் செய்த பிறகு அளிக்க வேண்டியிருக்கிறது. 1968-69-ம் ஆண்டுக்கான கணக்குகள் ஆடிட் செய்யப்பட்டு, குறிப்பிட்ட பள்ளிக்கூடத்திற்கு 6,800 ரூபாய் வழங்க இப்பொழுது முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. மற்றும் இந்தத் தேதியிலிருந்து என்பதற்கான நிலைமைகள் முடிவு செய்யப்பட்டிருக்கின்றன. எவ்வளவுக் கெவ்வளவு விரைவில் ஆடிட் செய்து கணக்குகள் கொடுக்கப்படுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு விரைவில் நிதி உதவி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### *Electric Crematorium in Madras*

* 374 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether there are proposals under the consideration of the Government to instal electric crematorium in Madras City?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இல்லை, ஐயா.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** தலைவரவர்களே, சென்னையிலே உள்ள பல இடுகாடுகளைப்போல, பல நகராட்சிகளிலே சொந்தமாக இடமில்லாமல் இருக்கின்றன. எனவே, நகராட்சிகளைப் பொறுத்த வரையிலும், நல்லமுறையில் சுடுகாடு அமைக்க அரசாங்கம் உத்தரவிடுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இது மின்சார சுடுகாடு ஏற்படுத்துவது பற்றியது. மின்சார சுடுகாடு ஏற்படுத்த வேண்டுமென்று சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஒரு வரைவுத் திட்டத்தை மாநகராட்சி மன்றத்தில் வைத்தார்கள். ஆனால் மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள், மக்க ளிடத்தில் எதிர்ப்பு உணர்ச்சி ஏற்படும் என்று சொல்லி நிறுத்தி



வைத்துவிட்டார்கள். மற்ற சுடுகாடுகள் எப்படி இருக்க வேண்டு மென்று, மாநகராட்சி மன்றம் முறைப்படி கவனித்து ஆவன செய்ய முயற்சிக்கப்படும்.

**திரு. பி. வேலுசாமி :** தலைவர் அவர்களே, பல நகரங்களில் சுடுகாடுகள் நகரத்தின் மத்தியில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொழுதுதான் திரு. ஏ. சி. நரசிம்மன் கேள்வி கேட்டபொழுது கூறப்பட்டது. இந்தக் கேள்வி, சென்னையில் மின்சார மேடையுள்ள சுடுகாடு அமைப்பது குறித்தது. அதைப்பற்றிக் கேளுங்கள்.

**திரு. பி. வேலுசாமி :** இம்மாதிரி இருக்கக்கூடிய இடங்களி லாவது இந்த மின்சார மேடை சுடுகாட்டை அமைக்க வேண்டும். இல்லையென்றால், சுடுகாட்டை நகர எல்லைக்குக் கொண்டு வருவ தற்கு சர்க்கார் முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதைப்பற்றிய குறிப்புகள் எதுவுமில்லை. தனிக் கேள்வி போட்டால், அதைப் பற்றி என்ன முறைகள் மேற்கொள்ளப்படும் என்று கண்டறிந்து விவரங்கள் தரலாம்.

THIRU K. VINÀYAKAM: What was exactly the proposal made by the Commissioner of the Corporation of Madras regarding this electric crematorium? What was the estimated cost and where was the objection raised for?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தியாகராயநகர் பகுதியில் உள்ள சுடுகாட்டில் இம்மாதிரி எலக் டிரிக் கிரமடோரியம், மின்சாரம் பொறிக்கப்பட்ட சுடுகாடு ஒன்றை வைக்கலாம் என்ற வரைவுக் குறிப்பை மாநகராட்சி மன்ற ஆணை யாளர் மாநகராட்சி மன்றத்தில் வைத்தார்கள். மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் சிலர் இந்துக்கள் மற்றவர்களிடையே இதற்கு எதிர்ப்பு உணர்ச்சி ஏற்படுகிறது என்ற காரணத்தைத் தெரிவித்து, இந்தத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படாமல் நிறுத்தி வைக்கப் பட்டது. இதற்கு எவ்வளவு செலவாகும் என்பதைப் பற்றிய விவரக் குறிப்பு என்னிடம் இல்லை.

**திரு. என். வரதராஜன் :** ஜனத்தொகை வளர்ந்து வருகிற பெரிய நகரங்களில் சுடுகாடுகள் இன்றைக்கு இருக்கிற நிலைமையில் சுகாதாரத்திற்கு மிகவும் ஆபத்தாக இருக்கிறது. இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையில் சிலர் செத்தவர்களைப் புதைக்கிறார்கள். சிலர் சுடுகிறார்கள். மின்சார வசதியுள்ள சுடுகாட்டை ஏற்படுத்தினால், இதையும் உபயோகப்படுத்தலாம். சுகாதாரத் திற்கும் உதவியாக இருக்கும். ஆகவே, இதைப்பற்றிச் சர்க்கார் புனராலோசனை செய்ய முற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் கூறுகிற யோசனையைப் பல பேர் எடுத்துச் சொல்லி வருகிறார்கள். அதற்கான முயற்சி செய்வது கூட ஓரளவுக்கு வளர்ந்துவருகிற நகரங்களில் நன்மை பயக்கும். செத்தால், சிலர் பிணங்களை எரிக்கிறார்கள். அப்படிப் பிணங்களை எரிக்கவேண்டும் என்று சொல்கிறவர்களுக்கு முழு வாய்ப்பையும் அளித்துவிட்டு மின்சார சுடுகாடு வைக்கப்பட்டு, அதன் மூலம் பிணங்களை எரிப்பதற்கும் வாய்ப்பு அளித்து, இந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்தால் நன்றாக இருக்கும். இப்பொழுது வளர்ந்து வருகிற நகரங்களில் இரண்டு முறைகளும் இருக்கலாம். மின்சார வசதியைப் பயன்படுத்தினால், பிணத்தை வைத்து ஐந்து நிமிடங்கள் கழித்து, சாம்பலையும் வாங்கிக் கொண்டு வீட்டுக்கு வந்துவிடலாம். மறுநாள் சொந்தக்காரர்கள், மற்றவர்களுடன் மறுபடியும் அங்கே வரவேண்டிய அவசியம் ஏற்படாது. சுகாதார வளர்ச்சிக்கும் இது அனுகூலமாக இருக்கும். சுடுகாடுகளில் பிணங்கள் எரிக்கப்பட்டால், அதன் மூலம் வெளிவருகிற புகைகள், மற்றவைகள் சுற்றி இருக்கிற பகுதிகளைப் பாழ்படுத்தி விடுகின்றன. இந்த யோசனை நல்ல யோசனைதான். என்ன காரணத்தினாலோ மாநகராட்சி இதை நிறுத்தி வைத்துவிட்டது. மாநாராட்சியைப் பொறுத்த வரையில், மீண்டும் இது குறித்துப் பரிசிலனை செய்து தக்க முடிவுகள் எடுப்பதற்கு முயற்சி செய்யலாம்.

*Opening of service centres by Agro-Industries Corporation*

* 375 Q.—Thiru K. VINAYAKAM: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state whether the Madras Agro-Industries Corporation Ltd., has started five service centres in Tamil Nadu to help farmers owning tractors and other farm machinery?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தமிழ் நாட்டில் "டிராக்டர்கள்", ஏனைய பண்ணைத் தொழில் இயந்திரங் களைச் சொந்தமாகக் கொண்ட உழவர்களுக்கு உதவியாக எந்தப் பணிநிலையத்தையும் இதுவரை தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் சார்ந்த கழகம் தொடங்கவில்லை. எனினும், அத்த கைய பணி நிலையங்களைத் தொடங்குவதற்குரிய செயற்குறிப்பு இக் கழகத்தின் பரிசிலனையில் உள்ளது.

**திரு. கே. விநயகம் :** அக்ரோ இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷன் நம்முடைய மாநிலத்தில் ஐந்து இடங்களில் இதைத் துவக்கினார் கள், அவர்கள் நம்முடைய அரசாங்கத்தின் உதவியைக் கொண்டு விவசாயிகளுக்கு இந்தப் பணியைச் செய்யப் போகிறார்கள் என்றெல்லாம் வெளிவந்த செய்தி உண்மையா? அப்படியில்லை என்றால் அது கைவிடப்பட்டதா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** தமிழ் நாடு வேளாண்மைத் தொழில் கழக இயக்குநர்கள் வாரியம் (போர்டு ஆப் டைரக்டர்ஸ்) 29—8—1967-ல் இப்படிப்பட்ட ஒரு



முடிவு எடுத்தது. தஞ்சாவூர், இராமநாதபுரத்தில் ஸ்ரீவில்லி புத்தூர், விழுப்புரம், காஞ்சிபுரம், ராசிபுரம் ஆகிய இடங்களில் பணி நிலையங்களைத் துவக்க வேண்டும் என்று முடிவு எடுத்தது. தஞ்சையில் மாத்திரம் இருபோக விளைச்சல், தீவிர சாகுபடி இவை களை யெல்லாம் முன்னிட்டு தஞ்சாவூரில் முதலில் துவக்க வேண்டும் என்று அதற்காகக் கட்டடத்திற்காக மாத்திரம் ரூ. 3 லட்சம் அவுட்-லே-க்காக ரூ. 41.5 லட்சம், இன்வெஸ்ட்மெண்டுக்காக ரூ. 28.5 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ரூ. 50,000 வருமானம் வரத்தக்க அளவுக்கு ஒரு திட்டத்தை அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். இதனை இப்பொழுது அரசாங்கம் பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது. இன்னமும் அதைப்பற்றி முடிவு எடுக்கவில்லை. பரிசிலனை செய்வதற்காகத் துணைக் குழு ஒன்றை இந்த வேளாண்மைத் தொழில்கள் கழகம் அமைத்திருக்கிறது. இந்தத் துணைக் குழுவுக்குத் தலைவர் அரசு நிதித் துறைச் செயலாளர், வேளாண்மை இயக்குநர், நிர்வாக இயக்குநர் ஆகியோர் அடங்கிய ஒரு குழுவை நியமித்திருக்கிறார்கள். இந்தக் குழு இந்தத் திட்டத்தைப் பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது. அறிக்கை இதுவரையில் வரவில்லை. வந்தபிறகு அதைப்பற்றி அரசாங்கம் முடிவு எடுக்கும்.

**திரு. எம். சண்முகம் :** சில ஆண்டுகளுக்கு முன்பு வரையில் ஒவ்வொரு ஊரிலும் தச்சர், கொல்லர் போன்ற தொழிலாளிகள் நிரந்தரமாகக் குடிவாசிகளாக இருந்து கொண்டு, அவர்களுக்கு நில மானியமும் அளிக்கப்பட்டு வந்து, அவர்கள் தொழில் நடத்தி வந்தார்கள். சில ஆண்டுகளாக அது கைநழுவவிடப்பட்டிருக் கிறது. மீண்டும் அரசினர் ஒவ்வொரு ஊரிலும் கட்டாயமாகப் பயிற்சி கொடுத்து, தச்சர்கள், கொல்லர்கள் ஆகியோர்களுக்கு நில மானியமும் கொடுத்து, உச்ச வரம்புச் சட்டத்தின் மூலம் கிடைக்கும் நிலங்களை மானியமாகக் கொடுத்து, அவர்கள் தொழிலாற்ற ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அக்ரோ இண்டஸ்டிரீஸ் கார்பரேஷன் தமிழ் நாட்டில் இம்மாதிரி பணி நிலையங்களைத் துவக்கியுள்ளதா என்பது கேள்வி. ஆனால், சில தொழிலாளர்களுக்கு நிலம் கொடுத்து அவர்களுக்குப் பல நன்மை கள் செய்வது பற்றிய கேள்வி அல்ல இது. இது வேறு, அது வேறு என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** இந்த சர்வீஸ் ஸ்டேஷன்களைப் பொறுத்த வரையில் இது எந்த அடிப்படையில் துவக்கப்படுகிறது? மாவட்ட வாரியாக நம்முடைய மாநிலத்தில் எத்தனை டிராக்டர்கள் இருக்கின்றன? அதோடு எத்தனை டிராக்டர்கள் இன்றையதினம் கோரியிருக்கிறார்கள் ? 1,000 கோரியிருக்கிறார்கள் என்ற விவரம் இருக்கிறது. ஆகவே, எதிர்காலத்தை மனதில் வைத்து, எந்த அடிப்படையில் சர்வீஸ் ஸ்டேஷன்களைத் துவங்க இருக்கிறார்கள்? இப்படித் துவக்கப்படுகிற டிராக்டர் சர்வீஸ் ஸ்டேஷன்கள் அரசுத்

துறையிலா அல்லது தனியார் துறையிலா? எல்லா மாவட்டங்
களும் பாதிக்கப்படாமல் இந்த சர்வீஸ் ஸ்டேஷன்கள் ஆரம்பிக்கப்
படுமா என்பதை அரசு தெரிவிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :**
ஆண்டில் அவர்கள் உருவாக்கிய திட்டம் இது. நான் 1967-ம்
கூறியதுபோல், தஞ்சாவூர், இராமநாதபுரம், தென் ஆற்காடு, முதலில்
செங்கற்பட்டு, சேலம் ஆகிய மாவட்டங்களில் பணிநிலையங்களை
உருவாக்கவேண்டும் என்று திட்டம் போடப்பட்டிருக்கிறது.
இதை இப்பொழுது அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.
அதை ஒரு தனிக்குழு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.
அக்ரிகல்சரல் ரி-பைனான்ஸ் கார்பரேஷனை ரூ. 72 கோடி கேட்
டிருக்கிறோம். அவர்களும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அதன்
மூலம் 3,000 டிராக்டர்கள் கொடுப்பதற்கு ஒரு திட்டம் இருக்கிறது.
அதை ஒத்துக் கொண்டுவிட்டார்கள். எனவே விரைவில் அதுவும்
கிடைக்கும் என்று உறுப்பினர் அவர்களுக்குக் கூறிக்கொள்ள
விரும்புகிறேன்.

**திரு. முனு ஆதி :** டிராக்டர்கள் 20,000, 25,000 ரூபாய் விலை
யிலே இருப்பதால் பெரிய பெரிய நிலப் பிரபுக்கள்தான் வாங்க
வசதி ஏற்படுகிறது. இப்பொழுது ரூ. 7,500 விலையில் ஒரு டிராக்டர்
வந்திருக்கிறது. இதை அரசு எல்லா விவசாயிகளுக்கும் கடன்
வாரியாக அல்லது இந்த சர்விஸ் ஸ்டேஷன் மூலமாக விநியோகம்
செய்தால் ஏராளமான உணவு உற்பத்தியாகும். ஆகவே, இந்த
ரூ. 7,500 விலையுள்ள டிராக்டரை அறிமுகப்படுத்த அரசு முன்
வருமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அதைப்
பற்றி விவரம் ஒன்றும் இல்லை. தனிக் கேள்வி போட்டால், அதைப்
பற்றிப் பரிசீலனை செய்யலாம்.

**திரு. அ. மாரிமுத்து :** தலைவர் அவர்களே, இத்தகைய நிலையங்
கள் மாவட்டத்தில் எங்கோ ஒன்று இருப்பதால், விவசாய காலங்
களில் இந்தக் கருவிகளை நல்ல முறையில் சரிசெய்வதற்கு முடியாத
நிலை இருக்கிறது. ஆதலால், விவசாய உற்பத்தியை முன்னிட்
டாவது தாலுகா அளவிலே இப்படிப்பட்ட நிலையங்களை நிறுவ
அரசுக்கு உத்தேசம் ஏதேனும் இருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** மாவட்
டத்திற்கு ஒன்று என்று ஐந்து மாவட்டங்களில்தான் துவக்குவது
பற்றி இப்பொழுது பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறோம்.
எல்லா மாவட்டங்களும் பூர்த்தியாகவில்லை. அதற்குப் பிறகு
தாலுகா மட்டத்திற்குச் செல்லவேண்டும்.

### நாரைக்கிணறு அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

* 376 வினா.—**திரு. மு. முத்தையா :** மாண்புமிகு வேளாண்மை,
அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி வட்டம், ஒட்டப்பிடாரம் ஊராட்சி
ஒன்றியத்தைச் சார்ந்த நாரைக்கிணறு கிராமம், நாரைக்கிணறு



புதூர் என்ற ஊரில் வாழும் அரிசன மக்கள் குடியிருப்புக்கு அந்த
ஊரில் உள்ள S. E. 200/1-A என்ற புறம்போக்கு நிலத்தை
ஒதுக்கித் தரப்படுமா?

(இ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து:** (அ) ஆம்.

(இ) மந்தை புறம்போக்கு நிலம் என்று வகைப்படுத்தப்பட்ட 1200/2 நில அளவை எண்ணுள்ள (கேள்வியில் சொல்லியுள்ளதைப் போல் எஸ்.எப்கு 200/1-ஏ அல்ல) 2.31 ஏக்கர் பரப்பளவில், 0.87 ஏக்கர் பரப்பளவு நிலம் நத்தம் புறம்போக்காக மாற்றப்படும். இந்த நிலம், திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், நாரைக்கிணறு புதூர் என்ற சிற்றூரில் வாழும், 15 அரிசன குடும்பங்களுக்கு, ஒரு குடும்பத்துக்கு 3 சென்ட் வீதம் ஒப்படை செய்யப்படும்.

**திரு. மு. முத்தையா :** தலைவர் அவர்களே, இந்த வீட்டு மனை கோரி ஏறக்குறைய ஒரு வருஷம் ஆகிறது. ஆகையால், நமது அரசாங்கத்திற்கு அடிக்கடி மனுக்கள் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். மேலும் அரிசன வெல்பேர் ஆபீசரிடம் நானும் நேரில் சொல்லியும் இருக்கிறேன். ஆகவே, கூடிய விரைவில் வீட்டு மனைப்பட்டா கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல வருகிற அநேக மனுக்களைப் பரிசீலனை செய்து உடனுக்குடன் பட்டா கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அவர்கள் மனுவில் குறித்திருந்த சர்வே நெம்பர் 200-1-ஏ என்பது இல்லை. அந்த சர்வே நம்பர் தனிப்பட்ட பட்டா நிலம். ஆகவே, கிராமத்திற்குப் பக்கத்தில் மேய்க்கால் புறம்போக்கு 1200/2 என்ற எண்ணுள்ள புறம்போக்கைக் கொடுத்திருக்கிறார்கள். அதை அரசு ஆராய்ச்சி செய்த பிறகு, அந்த மேய்க்கால் புறம்போக்கை நத்தம் புறம்போக்காக மாற்றி, அந்தப் புறம்போக்கில் 2.81 ஏக்கர் நிலத்தில் 0.87 ஏக்கர் நிலம் நத்தமாக மாற்றப்பட்டு, ஒரு குடும்பத்திற்காக 3 சென்ட் வீதம் ஒப்படை செய்ய, 11 அரிசன குடும்பங்களுக்குக் கொடுத்தது போக, பாக்கியை மேய்க்கால் புறம்போக்காக வைத்துக்கொள்ள ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

### விருத்தாசலத்திலுள்ள மண்டல அச்சகக் கட்டடம்.

* 377 வினா—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மாண்புமிகு பின்னிலை வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலத்திலிருக்கும் அரசாங்க பிராந்திய அச்சகம் (Government Regional Press) இயங்கும் கட்டடத்திற்கு மாத வாடகை எவ்வளவு?

[1970 மார்ச் 14

(இ) அரசாங்கத்தில் இதற்குக் கட்டடம் கட்டிக்கொடுக்க ஏதேனும் திட்டம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (அ) மாத வாடகை ரூ. 1,225.

(இ) விருத்தாசலத்திலுள்ள அரசு மண்டல அச்சகத்திற்குக் கட்டடம் கட்டுவதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்வது குறித்து, தென் ஆற்காடு மாவட்ட வருவாய்த்துறை அதிகாரியுடன் கடிதப் போக்கு வரவு நடைபெற்று வருகிறது.

**திரு. கே. போஜன் :** தலைவர் அவர்களே, நம்முடைய மாநில பிராந்திய அச்சகங்கள் வாடகைக் கட்டடங்களிலேயே இருப்பதால், விருத்தாசலம் போன்ற இடங்களில் அச்சகம் வைத்திருப்பதில் இடநெருக்கடி இருக்கிறது. ஆகையால், அரசாங்கமே கட்டடங்களைக் கட்டி எல்லாப் பிராந்திய அச்சகங்களையும் அந்தக் கட்டடங்களில் வைக்க ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, அரசாங்க அச்சகங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்க அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. இப்பொழுது புதுக்கோட்டையில் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. திருச்சியில் வணிகத்துறை தொழில் பேட்டையில் கிளை அச்சகம் இயங்கி வருகிறது. மற்றவைகளும் சொந்தக் கட்டடங்களில் இயங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, விருத்தாசலம் அரசாங்க பிராந்திய அச்சகம் அவசர அவசரமாகத் துவக்கப்பட்டதன் காரணமாக, அப்பொழுது அது காமாட்சி அம்மன் பஸ் சர்வீஸ் ஓனருடைய பஸ் ஷெட்டில் துவங்கி, தேர்தலுக்கு முன்னால், வாடகை அதிகம் தரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதும், அந்தக் கட்டடம் இடிந்து விழும் நிலையில் இருப்பதும், அந்தக் காரணத்தால் வேறு இடத்தை எடுக்க வேண்டிய அவசியம் இருப்பதும் அரசாங்கத்திற்குத் தெரியுமா? வேறு இடத்திற்கு மாற்ற நடவடிக்கை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, விருத்தாசலத்தில் அரசு அச்சகம் இருக்கும் இடம் மிகவும் மோசமாக இருக்கிறது என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டது. உடனே நான் சென்று பார்த்தேன். உள்ளபடியே அது அச்சகம் வைக்கத் தகுதியற்ற இடம் என்று உணர்ந்து உடனடியாக வேறு இடத்திற்கு அதை மாற்ற வேண்டும் என்று உத்தரவு இட்டு, அரசு அச்சகத் துறை, தென்னாற்காடு வருவாய்த்துறை அதிகாரிகள் தொடர்பு கொண்டு அதற்கான செய்து வருகிறார்கள்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, இந்த உத்தரவு எந்த மாதத்தில் இடப்பட்டது? எவ்வளவு காலதாமதம்? மிக மிக மோசமான இடமாக இருந்தால், உடனடியாக அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?



1970 மார்ச் 14]

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** ஏறத்தாழ மூன்று மாதங்களாக நடக்கிறது. மிக விரைவில் நடைமுறைக்கு வரும்.

## கால்நடை வளர்ப்புத் திட்டங்கள்.

*378 வினா—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு உணவு, வணிக வரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கால்நடைப் பராமரிப்புத் துறையின் திட்டங்களை மக்களுக்குப் புரியவைக்க சினிமா படங்கள், போஸ்டர்கள் மூலம் விளம்பரப் படுத்தும் செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** திரைப்படங்கள், சுவரொட்டிகள் முதலியவற்றின் மூலமாகக் கால்நடை வளர்ப்புத் திட்டங்கள் இம் மாநிலத்தில் ஏற்கெனவே பிரபலப்படுத்தப்பட்டு வருகின்றன.

**திரு. வை. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, இப்பொழுது ‘ஒயிட் லெக் ஹார்ன்’, ‘சீமைப் பன்றிகள்’ போன்றவற்றை வளர்ப்பது பற்றிய தகவல்களைக் கிராம மக்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. விளக்கம் தர சினிமா படங்கள் அந்த வகையில் அமைக்கப் பட்டால், கிராம மக்கள் புரிந்து கொள்ள சௌகரியமாக இருக்கும். ஆதலால் அதைப் பரிசீலிக்குமா அரசாங்கம் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, நான் அதைத்தான் குறிப்பிட்டேன். அரசாங்கத்தின் சார்பில் 23 ஆங்கிலப் படங்களும், 15 தமிழ்ப் படங்களும் கால்நடை வளர்ப்பு பற்றித் தயாரிக்கப்பட்டு, சென்னையிலும் மாவட்டங்களிலும், பொருட் காட்சிகளிலும், கருத்து அரங்குகளிலும் திரையிடப்படுகின்றன. வேறு வழியில்லை.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, கால்நடை வளர்ப்புத் திட்டத்தின் கீழ் கால்நடைக் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக அரசாங்க உதவியுடன் செயல் படவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. அது நிறுத்தப்பட்டுவிட்டது. உடனடியாக அதை மறுபடியும் ஏற்பாடு செய்யமுடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** கேள்வி, திரைப்படம் பற்றியது. கால்நடை வளர்ப்பு பற்றியது அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பெல்லி கவுடர் . . .

**சில உறுப்பினர்கள் :** பேரவைத் தலைவர் அவர்களே, அந்த உறுப்பினர் பெயர் ‘கருணாநாதன்’ என்று மாற்றியாகிவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சரி.

**திரு. சோ. கருணாநிதன்:** தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டில் கால்நடைப் பராமரிப்பு விவரம் அடங்கிய நூல்களைக் கால்நடை வைத்திருப்பவர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யப் படுமா?

(பதில் இல்லை)

*Building for Arkonam Municipal Office*

* 379 Q. THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(a) whether the Public Works Department has undertaken the construction of the Office Buildings for the Arakonam Municipality; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** (அ) & (இ) அரக்கோணம் நகராட்சிக்கான கட்டடம் இன்னும் தொடங்கப் படவில்லை. ஆனால் அதற்குரிய வரைபடமும், மதிப்பிட்ட அளவுகளும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அலுவலகத்தில் தயாரிப்பில் உள்ளது.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்:** தலைவர் அவர்களே, இந்த ஆபீஸ் கட்டட வேலைகள் முடிந்து விட்டனவா? ஆபீஸ் வைக்க வேண்டிய நிலையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** தலைவர் அவர்களே, கட்டடத்திற்கான வேலைகளை தொடங்கவில்லை என்று பதிலிறுத்தேன். நகராட்சி மன்றத்தில் ரூ. 3,80,000 மதிப்பீட்டுச் செலவில் கட்டடம் கட்டுவதற்கான ஒரு திட்டத்தை வைத்தார்கள். அதற்குப் பிறகு 19-12-1969 அன்று தீர்மானத்தில், இந்தத் தொகை அதிகமாக இருப்பதால், நகராட்சி மன்றம், ரூ 2 லட்சம் அளவில் திட்டம் தயாரித்தது. அது கட்டடப் பொறியாளரின் பரிசீலனையில் இருக்கிறது. இந்த நிலையில் நகராட்சியில் 3.44 லட்சம் ரூபாய் பற்றுக்குறை இருப்பதால், மூலதனச் செலவைக் குறைக்க ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது. கட்டட வரை படங்கள் வந்த பிறகு அரசு ஆணை பிறப்பிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி, அரக்கோணம் நகராட்சிக்கு அலுவலகம் கட்டுவது பற்றியது. அதுபற்றித் துணைக் கேள்வி கேட்கவேண்டும். திரு. நரசிம்மன்.

**திரு. ஏ. சி. நரசிம்மன்:** தலைவர் அவர்களே, நகராட்சி அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு அரசாங்கம் திட்டத்தை ஏற்று, அதைப் பொது பணித்துறை ஏற்று நிறைவேற்றும்போது, அதற்குப் பொதுப்பணித் துறை ஸெண்டேஜ் போடுகிறார்கள். அதைத் தவிர்த்து, அந்தத் திட்டத்திற்காக ஆகும் நிகரச் செலவை மட்டும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** அது ஒரு கொள்கைப் பிரச்சினை.

**திரு. நா. காசிராமன்:** தலைவர் அவர்களே, அரக்கோணம் நகராட்சி அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு, அந்த நகராட்சியின் நிதி நிலை பற்றுக்குறையாக இருப்பதால், மூலதனச் செலவைக் குறைத்துக்கொள்ள யோசனை சொல்லியிருப்பதாகச் சொன்னார்கள். நகராட்சிக்கு அலுவலகக் கட்டடம் அவசியம். ஆகவே, அரசாங்கம் அரக்கோணம் நகராட்சிக்குத் தனி உதவி கொடுத்து கட்டடத்தைக் கட்ட முன்வருமா?

**மாண்புமிகு மா. முத்துசாமி:** பற்றுக்குறை நிலை சுட்டிக் காட்டப் பட்டிருக்கிறதே தவிர, இதனால் வேலைகள் தடைபட வேண்டும் என்று கட்டளை இல்லை. நகராட்சி மன்றத்திற்குக் கட்டடமும் அவசியம்; நிதி வருவாயும் அவசியம்தான்.

*Vriddhachalam Municipality*

* 380 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(a) Whether the Government have decided to convert Virddhachalam Panchayat into a municipality; and

(b) If so, for what reasons and from which date?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** (அ) 1970-ஆம் ஆண்டு சனவரி 17-ம் நாளில் இருந்து விருத்தாசலம் பேரூராட்சி நகராட்சியாக அமைக்கப் பெற்றிருக்கின்றது.

(இ) ஒரு பேரூராட்சி நகராட்சியாக மாறுவதற்கு சட்டத்தில் குறிப்பிட்ட தகுதிகளை விருத்தாசலம் பேரூராட்சி பெற்றிருந்த படியாலும், விருத்தாசலம் பேரூராட்சியும், விருத்தாசலம் ஊராட்சி ஒன்றியமும் விருத்தாசலம் பேரூராட்சியை நகராட்சியாக மாற்றுவதற்குத் தீர்மானித்தபடியாலும் விருத்தாசலம் ஒரு நகராட்சியாக மாற்றப்பெற்றது.

**திரு. கே. விநயகம்:** தலைவர் அவர்களே, ஒரு பேரூராட்சி நகராட்சியாக ஆக வேண்டுமென்றால், ஒரு சில விதிகள் இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த விதிகளுக்கு இணங்க விருத்தாசலம் முனிசிபாலிட்டி அமைந்திருக்கிறது என்று சொன்னார்கள். அந்த முனிசிபாலிட்டிக்கு இரண்டு லட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் இருக்கிறதா? 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஜனத்தொகை இருக்கிறதா? அல்லது இரண்டும் சேர்ந்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** தலைவர் அவர்களே, விதிகள் என்ன என்பதை உறுப்பினர் அவர்களே சொல்லிவிட்டார்கள். இருபது ஆயிரத்துக்கு மேற்பட்ட ஜனத்தொகையும், ரூ. 2 லட்சத்திற்கு மேற்பட்ட வருமானமும் உடையதாக விருத்தசாலம் பேரூராட்சி இருப்பதாலே, அது நகராட்சியாக மாற்றப் பெற்றது.

**திரு. எஸ். இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, விருத்தாசலம் நகராட்சியாக அமைப்பதற்கு 7-11-1969-ஆம் தேதி அரசாங்க ஆணையின்படி கண்டியாங்குப்பம் என்ற ஊர் சேர்க்கப்பட்டிருந்தது. ஆனால் 12-1-1970-ஆம் தேதி ஆணையின்படி முதலில் சேர்க்கப்பட்டிருந்த கண்டியாங்குப்பம் என்ற சிற்றூர் சேர்க்கப்படவில்லை. அதற்கு என்ன காரணம்? அந்தப் பகுதியில் மிகவும் பின்தங்கிய வன்னிய சமுதாய மக்கள் இருப்பதாலே அவர்களை வேண்டுமென்றே புறக்கணித்து, தவறான தகவல்களை அரசுக்குத் தந்துவிட்டார்களோ என்று அப்பகுதியினர் எண்ணுகிறார்கள். விருத்தாசலம் பஞ்சாயத்து யூனியனில் இருக்கும் அண்ணா நகருக்கு அருகில் இருந்தும் அந்த சிற்றூர் விடப்பட்டிருக்கிறது. ஆகவே, அதைச் சேர்த்துக்கொள்வதற்காக மீண்டும் பரிசீலனை செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** தலைவர் அவர்களே, தென் ஆர்க்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வன்னிய சமுதாய மக்கள் பெரும்பாலும் இருக்கிறார்கள். வன்னிய சமுதாயத்தினருக்குப் பாரபட்சம் காட்டப்படுவதாக உறுப்பினர் அவர்கள் கூறுவது பொருத்தமல்ல. நகராட்சி அமைப்பில் அந்த ஊர் சேர்க்கப்படாமல் விட்டதைப்பற்றி உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். வன்னிய சமுதாயத்தினருக்கு எந்த விதமான அநீதியும் வழங்கவில்லை. கண்டியாங்குப்பத்தின் ஒரு பகுதியை நகராட்சியில் வைத்துக்கொண்டு, மற்றொரு பகுதியை அண்மையில் உள்ள வேறு ஊராட்சியுடன் சேர்க்க வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தார்கள். இன்னொரு பகுதி தொலைவில் இருப்பதாலே வேறு ஊராட்சியுடன் சேர்க்க வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தார்கள். அரசாங்கம் அதைப் பரிசீலனை செய்து, மற்ற உறுப்பினர்களுடைய கருத்துக்களையும் கேட்டறிந்து, முடிவு எடுத்திருக்கிறது. இதில் எந்தவிதமான ஜாதிப் பிரச்சனைக்கும் இடம் இல்லை.

**கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு ரயில்வே செஸ் நிதி**

*** 381 வினா.—திரு. இரா. மாணிக்கவாசகம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு ரயில்வே செஸ் நிதியாக மத்திய அரசிடமிருந்து எவ்வளவு தொகை எப்பொழுது கிடைக்கும்?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** கோயம்புத்தூர் மாவட்டத்தில் இரயில்வே செஸ் தீர்வை நிதியின் கீழ் ரூ. 37,80,544 ஈட்டுப் பத்திரங்கள் வடிவில் உள்ளது. இந் நிதி குறித்து, மத்திய அரசிடமிருந்து சேரவேண்டிய தொகை எதுவுமில்லை.

**திரு. ஆர். நாகசுந்தரம்:** தலைவர் அவர்களே, பொதுவாக ரயில்வே செஸ் நிதி எந்த விகிதத்தில் நமது மாநிலத்திற்குத் தரப்படுகிறது? நமது மாநிலம் எந்த விகிதத்தில் மாவட்டங்களுக்குப் பிரித்துக் கொடுக்கிறது?



**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாவட்டக் கழகங்கள் இருந்த காலத்தில் இந்த வரியை அவர்கள் மூலமாக வசூலித்து வந்தார்கள். மாவட்ட வாரியங்கள் சில இடங்களில் இருப்புப் பாதைகளைத் தாங்களே அமைத்து அவற்றைப் பேணி வந்தன. மாவட்ட வாரியங்கள் பேணிவந்த இரயில்வேக்களை நட்ட ஈடு கொடுத்து அவ்வப்போது இந்திய அரசு கையகப்படுத்திக்கொண்டது. எந்த விகிதாசார அடிப்படையில் என்ற முழு விவரம் இல்லை. அவ்வாறு கொடுக்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையும் இரயில்வே செஸ் நிதியுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டது. அந்த நிதிகள் எல்லாம் அரசாங்கத்தினுடைய ஈட்டுப் பத்திரங்கள் மூலமாக இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் எஞ்சிய தொகை முழுவதும், சேலம் மாவட்டத்தில் உள்ள நிதியில் ஒரு பகுதியும் மட்டுமே அரசுக் கருவூலகத்தில் வைப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு வட்டி 4½ சதவீதம் அரசு கொடுத்து வருகிறது.

**திரு. என். வரதராஜன்:** தலைவர் அவர்களே, ரயில்வே செஸ் நிதியானது மாவட்டக் கழகம் இருந்த காலத்தில் அபிவிருத்தி வேலைகளுக்கு உபயோகப்படுத்தப்பட்டது. இப்போது அந்த நிதி அவ்வாறு உபயோகிக்கப்படவில்லை. இதை மாற்றி ரயில்வே செஸ் நிதியை கிராம அபிவிருத்தி வேலைகளுக்கு உபயோகப்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருந்த அரசு 1964ஆம் ஆண்டில் ஒரு முடிவு எடுத்தார்கள். இந்த நிதியிலிருந்து முதல் செலவு பள்ளிக்கூடங்கள் கட்டுவதற்கும், பின்னர் மகப்பேறு நிலையங்களும் மருந்தகங்களும் கட்டுவதற்கும் செலவிடப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த நிதியில் பாதித் தொகையைப் பொதுமக்கள் மூலமாகவும், ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகவும் நன்கொடை வசூலிப்பது என்றும், பாதி மானியத் தொகை அடிப்படையில் வழங்கப்படுவது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதில் சங்கடங்கள் ஏற்படுகின்றன என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் சுட்டிக்காட்டியமையால் 18—2—1970ல் ஒரு முடிவு எடுத்திருக்கிறோம். அதன்படி கிராமச் சமுதாயத்தினருக்காக குடிநீர் வழங்கல், தெரு விளக்கு, தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள், சேய்நல—மகப்பேறு நிலையங்களுக்கான கட்டடங்கள், மருந்தகங்களுக்கான கட்டடங்கள், இணைப்புச் சாலைகள் போடுதல் ஆகியவற்றிற்காக இந்த நிதியைப் பயன்படுத்த வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறோம். கிடைக்கின்ற இடங்களிலிருந்து நன்கொடையைப் பெறுவோம். பெற இயலாத இடங்களில் தொகையைப் பெறாமலேயே, முழுத் தொகையையும் செலவழித்துச் செய்வதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அதற்கேற்றவாறு உபவிதிகளைத் திருத்த வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சேலத்தைப் பொறுத்த

வரையில் மருத்துவக் கல்லூரி போன்ற ஏனைய காரியங்களுக்காக நிதி பயன்படுத்தப்பட வேண்டுமென்று முடிவு செய்யப் பட்டிருக்கிறது.

### காட்டுமன்னார் கோயிலிலுள்ள ஆண்கள் ஆரம்பப் பள்ளிக் கட்டடம்

*** 382 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலூகா காட்டுமன்னார்கோயில் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த காட்டுமன்னார்கோயிலில் இருக்கும் ஆண்களுக்கான யூனியன் ஆரம்பப் பாடசாலை அமைந்துள்ள வாடகைக் கட்டடம் பழுதடைந்து இடிந்த நிலையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி** . (அ) கட்டடத்தின் சில பாகங்கள் செப்பனிடப்பட வேண்டிய நிலையிலுள்ளன.

(இ) செப்பனிட வேண்டிய வேலைகளை மேற்கொள்ள அக் கட்டட உரிமையாளர் ஒப்புக்கொண்டுள்ளார். மேலும் இப்பள்ளி தற்போதைய இடத்திலிருந்து மற்றொரு கட்டடத்திற்குத் தற்காலிகமாக மாற்றப்பட்டுள்ளது.

### சோழவந்தானிலுள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கம்

*** 383 வினா.—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் கூட்டுறவு விற்பனைச் சங்கம் (Marketing Society) கலைக்கப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணம் யாது ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) ஆம்.

(இ) இச் சங்கத்தை நடத்தியதில் பல ஒழுங்கீனங்கள் கண்டு பிடிக்கப்பட்டதால், இச்சங்கத்தின் நிர்வாகக் குழு கலைக்கப்பட வேண்டும் என்றும், தனி அதிகாரி நியமிக்கப்பட வேண்டுமென்றும் 1966-ஆம் ஆண்டு மே மாதத்தில் கட்டளையிடப்பட்டது. இச் சங்கத்தை மூடிவிடும்படி Liquidate செய்யும்படி 1969-ஆம் வருடம் அக்டோபர் மாதம் கட்டளையிடப்பட்டது.

**திரு. பி. எஸ். மணியன் :** தலைவர் அவர்களே, இந்த விற்பனைச் சங்கம் கலைக்கப்பட்டு பல ஆண்டுகளாகிவிட்டன. அந்தச் சங்கத் தின் நிர்வாகஸ்தர்கள் மாவட்ட அதிகாரிகளைத் தங்கள் வசம் படுத்தி, தப்பித்துக் கொள்ள முயற்சிசெய்கிறார்கள். ஆகவே, உயர்மட்ட அதிகாரி ஒருவரைப் போட்டு இச்சங்க நிர்வாகஸ் தர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?





**மாண்புமிகு சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, உறுப் பினர் அவர்களுடைய யோசனை ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் படும்.

### *Writ petition against Government Order*

* 384 Q.- THIRU N. S. V. CHITHAN : Will the Hon. Minister for Religious Endowment be pleased to state :

(a) whether the attention of the State Government has been drawn to the judgment of the Madras High Court in revising its order on a house owner's writ about the 2nd July, 1969; and

(b) if so, the action taken thereon?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** (அ) தியாகராயநகரில் உள்ள ஒரு வீட்டை அரசின் பொறுப்பிலிருந்து விடுவிக்க மறுத்து அரசு ஆணை பிறப்பித்தது. அதை எதிர்த்து அந்த வீட்டுச் சொந்தக்காரர் உயர் நீதி மன்றத்தில் ரிட் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார் ரிட் மனுவை அனுமதித்து உயர் நீதி மன்றம் 30-6-69 அன்று பிறப்பித்த ஆணையைப் பற்றி அரசு அறியும்.

(இ) சென்னை, உயர் நீதி மன்றத்தில் மேற்குறிப்பிட்ட ஆணை களின் மீது மேல்முறையீடு செய்ய அரசு நடவடிக்கை எடுத் துள்ளது.

### குந்தா மின் திட்டத்திலிருந்து வெளியேற்றப்படும் நீர்.

*** 385 வினா—திரு. ஏ. எம். இராஜா :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா :

குந்தா மின் திட்டத்தில் பயன்படுத்தப்பட்டு வெளியேற்றப் படும் கழிவு நீர் எவ்வளவு கன அடி?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** பவானி, குந்தா ஆறுகள் அவற்றின் கிளை ஆறுகளான அவலஞ்சி, எமரால்டு மற்றும் நீலகிரி யிலுள்ள பல ஓடைகள் ஆகியவற்றின் நீரை குந்தா மின்சக்தி உற் பத்தி நிலையத்தொடரைச் சேர்ந்த ஐந்து மின்சக்தி உற்பத்தி நிலையங்களில் பயன்படுத்திக் கொண்டு இறுதியாகப் பில்லூர் அணை யின் கீழுள்ள குந்தா மின் நிலையம் 4 லிருந்து அது வெளிவிடப்படு கிறது. குந்தா மின் நிலையம் 4 லிருந்து வெளிவிடப்படும் நீரின் அளவு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு :—

1968–69-ம் ஆண்டுக் கால அளவில்—

| | | |
|---|---|---|
| மொத்தம் | .. | 31,678·28 மில்லியன் கன அடி. |
| சராசரி வினாடிக்கு | .. | 1,004 கன அடி. |

1969-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் 1969-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் வரையிலுள்ள கால அளவில் :—

| | | |
|---|---|---|
| மொத்தம் | .. | 18,438·26 மில்லியன் கன அடி. |
| சராசரி வினாடிக்கு | .. | 1,166 கன அடி. |

[1970 மார்ச் 14

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவர் அவர்களே, அவனாசி, கோவை, பல்லடம் ஆகிய தாலுக்காக்களிலுள்ள விவசாயிகள், குந்தா கழிவு நீரைத் தங்களுடைய மூன்று தாலுக்காக்களுக்கும் வாய்க்கால்கள் மூலம் ஏரிகளில் நிரப்பிக் கொடுத்தால் விவசாயத்திற்கு சௌகரியமாக இருக்கும் என்று அரசுக்குக் கோரிக்கை அனுப்பியிருக்கிறார்களா? ஆம் என்றால், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியைப் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களிடத்தில் கேட்க வேண்டும்.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** தலைவர் அவர்களே, குந்தா பவர் ஹவுஸ் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என்று வரிசைக்கிரமமாக இருப்பதில் அந்த பவர் ஹவுஸ்களுக்கு முன்னால் அமைச்சர்கள் பெயர் சூட்டப்பட்டிருக்கிறதா? அப்படியென்றால் யார் யார் பெயர்? இன்னும் பெயர் சூட்டப்படாமல் இருப்பது எத்தனை? அப்படியிருந்தால் அவைகளுக்கு பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரையும், கலைஞர் கருணாநிதி அவர்களுடைய பெயரையும் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களுடைய பெயரையும் சூட்ட ஏற்பாடுகள் செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவர் அவர்களே, யார் யார் பெயர் சூட்டப்பட்டிருக்கின்றன என்ற விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. தனிக்கேள்வி போட்டால் பரிசீலிக்கப்படும்.

### சுருளியருவியிலிருந்து மின் உற்பத்தி

* 386 வினா—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், கம்பம் அருகிலுள்ள சுருளி அருவியிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) ஆம்.

(இ) மின்சக்தி உற்பத்திக்காக சுருளியாற்றின் நீரைப் பயன்படுத்திக்கொள்ள வகை செய்யும் திட்டம் நான்காவது திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்படக் கருதியுள்ள திட்டங்களில் ஒன்றாகும். இத் திட்டத்திற்காக ரூ. 400 லட்சம் செலவாகும் என மதிப்பிடப்படுகிறது. 35 மெகாவாட் உற்பத்தித் திறனுள்ள மின் உற்பத்தி நிலையம் ஒன்று மட்டுமே இத் திட்டத்தில் செயல்படும்.



1970 மார்ச் 14]

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எப்போது அமுல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** இப்போது சர்வே நடந்து கொண்டிருக்கிறது. முடிந்த பிறகு அமுல் நடத்தப்படும்.

### வடலூரில் தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம்

* 387 வினா—**திரு. சி. கோவிந்தராஜன் :** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென் ஆர்க்காடு மாவட்டம், வடலூரிலுள்ள தொழிலாளர்களுக்கு சமூக இன்ஷ்யூரன்ஸ் (                ) திட்டம் கொண்டு வரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** ஆம்.

**திரு. சி. கோவிந்தராஜன் :** இந்தத் திட்டத்தை எப்போது ஆரம்பிக்க உத்தேசம்? தேதி ஏதாவது குறிப்பிடப்படுமா? இன்று வடலூரில் உள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டிருக்கிறது. தொழிற்பேட்டை ஒன்றும் ஆரம்பிக்க இருப்பதனால் உடனடியாக இந்தத் திட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு உறுப்பினருக்கு இருக்கிற ஆர்வத்தைப்போலவே எங்களுக்கும் இந்த வடலூர்ப் பகுதியில் உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமென்ற ஆர்வம் இருக்கிறது. டெல்லியில் உள்ள இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன்தான் இதற்குத் தடையாக இருக்கிறது. முதலில் இரண்டாயிரம் தொழிலாளர்களுக்கான மருத்துவ மனைத் திட்டம் ஒன்றை அனுப்பியிருந்தோம். இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன் செலவைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்றும், ஒரு தொழிலாளிக்கு ஒரு ஆண்டுக்கு 48 ரூபாய் செலவுக்குமேல் இல்லாதிருக்கும்படியாகவும் திருத்தி அனுப்பச் சொல்லியிருந்தார்கள். அதை நாங்கள் ஒப்புக் கொள்வதற்கில்லை என்றும், எங்களுடைய திட்டத்திற்கு இசைவு தரும்படியாகவும் எழுதியிருக்கிறோம். இடையில் மருத்துவ மனையை வாடகைக் கட்டடத்தில் அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### மேட்டூரில் தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவ மனை

* 388 வினா—**திரு. எம். சுரேந்திரன் :** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூரில் படுக்கைகள் கொண்ட இ.எஸ்.ஐ. மருத்துவ மனை ஒன்று கட்டுவதற்குத் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) இந்தத் திட்டத்துக்கான மதிப்பீடுகளும், இந்த மருத்துவ மனையில் இருக்கக்கூடிய படுக்கை வசதிகளும் குறித்த விவரங்கள் யாவை?

(உ) இதற்குத் தேவையான நில ஆர்ஜித நடவடிக்கைகள் முடிந்து விட்டனவா?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** (அ) மேட்டூர் அணைப் பகுதியில் குடியிருக்கின்ற ஈட்டுறுதி செய்து கொண்டவர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் அகத்துள்ள பிணியாளர்களுக்கான சிகிச்சை வசதிகள் செய்யும்பொருட்டு மேட்டூர் அணைப் பகுதியில் 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை ஒன்றைக் கட்டுவதற்கான செயற்குறிப்பு இருந்தது. தற்போது புது டில்லியில் உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகத்தின் நிதி நிலை இடருற்றிருப்பதால் அச் செயற்குறிப்பு தற்போது கைவிடப் பட்டுள்ளது.

(இ) இவ்வினா எழவில்லை.

(உ) இவ்வினா எழவில்லை.

**திரு. எம். சுரேந்திரன் :** மேட்டூரிலே தொழிலாளர்கள் மிக அதிகமாக இருக்கிறார்கள். இ.எஸ்.ஐ. மருத்துவ மனை அங்கே பிரிவு பிரிவாக வைக்கப்பட்டிருந்தாலும் படுக்கை வசதி இல்லாததனலே சிரமமாக இருக்கிறது. இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரி நோயாளிகள், அர சாங்க மருத்துவ மனையில் படுக்கைக்கு ரிஜிஸ்தர் செய்யப்படுகிறார் கள் என்றாலும், இவர்கள் அங்கே சரியான முறையில் வைத்திய வசதியைப் பெற முடியாதிருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரிந்திருப்பதால் இந்த 50 படுக்கைகளுக்கான மருத்துவ மனைக்கு இடம் கூடத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது என்ற காரணத்தினுல், உடனேயே விரைவில் அவசரமாக இதை அங்கே அமைக்க முயற்சி எடுத்துக்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் :** முன் கேள்விக்குச் சொன்ன பதிலைப்போலவே இதற்கும் சொல்ல வேண்டியிருக்கிறது. 24 லட்சம் ரூபாய் செலவில் மேட்டூர் பகுதியிலே 12 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்து 50 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை அமைப் பதற்கு ஏற்பாடு செய்தோம். புது டெல்லியில் உள்ள இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷன் இந்தச் செலவை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், இதை நிறுத்திவைக்கும்படியும் ஆணை பிறப்பித்தது. அதன்காரணமாக நில ஆர்ஜித வேலைகள் நிறுத்தப்பட்டிருக் கின்றன. இதுபற்றிப் பொதுவாகக் கொள்கை முடிவு எடுக்க வேண்டியிருப்பதால் மத்திய அரசின் தொழில் அமைச்சருடன் கடிதப் போக்குவரத்து செய்து கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடி வுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்படவில்லை என்பதைக் குறிக்கும்.]



## 3. கவன ஈர்ப்பு.

**வேலூர் நகராட்சி மன்ற சுதந்திரா உறுப்பினர் திரு. வி. கே. கண்ணப்பன் கொலை செய்யப்பட்டதும் அதனுல் அப்பகுதியில் நிலவும் அமைதியின்மையும்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, விதி 41-இன் கீழ் டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்கள் அவசரப் பொது முக்கியம் வாய்ந்த ஒரு காரியத்தை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர் களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் வேலூர் நகராட்சி மன்ற சுதந்திரா உறுப்பினராகிய திரு. வி. கே. கண்ணப்பன் அவர்கள் வேலூரிலுள்ள சைதாப்பேட்டையில் 28–12–1969 அன்று கொலை செய்யப்பட்டதன் விளைவாக அப் பகுதிவாழ் மக்களிடையே நிலவும் அமைதியின்மை பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

## 4. நடைமுறைக் கேள்வி.

**வழக்குமன்றத்தின்முன் இருக்கும் ஒரு வழக்கு குறித்து மன்றத்தில் விவாதம் எழுப்புதல்.**

THIRU K. VINAYAKAM : On a point of order, Sir, Is not this matter pending before a Court of Enquiry ? Is it not sub-judice? Why should it be raised here? Why should we embarrass the Government to make a statement which will vitiate the judgment to be given by the judging authorities?

(THIRU T. MARTIN : Certainly.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையில் வழக்குக்குக் குந்தகம் விளைவிக்கும் விஷயத்தைப் பற்றி ஒன்றுமே கேட்கவில்லை.

THIRU K. VINAYAKAM : I do not now whether I am understood correctly. நீங்கள் சொல்வது சரி. ஆனுல் இந்த விஷயம் கோர்ட்டிலே—இன்னும் எப்.ஐ.ஆர். கூடப் போடவில்லை. சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. புலன் விசாரணை நடந்துகொண் டிருக்கிறது. இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் இப் பிரச் சினையை எழுப்பியிருக்கக்கூடாது. அதற்கு அரசாங்கமும் இசைவு தந்து அறிக்கை வைக்க முன் வந்திருக்கக் கூடாது. இதில் கட்சிகளை மறந்துவிடுவோம். சுதந்திராக் கட்சிக்காரர் என்பதற்காக எழுப்புவதும், திராவிட முன்னேற்றக் கழகம் இதில் அனுதாபத்துடன் இருப்பதாக அறிக்கை விட முன் வருவதும் சரியல்ல. ஒரு கொலை நடந்திருக்கிறது. குற்றவாளி யார் என்று தெரியவில்லை. கண்டு பிடிக்க வேண்டும். இந்த நேரத்தில் . . .

[1970 மார்ச் 14

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். அங்கத்தினர் தனது அறிக்கையில் May I bring to the attention of the Hon. Chief Minister the murder of so and so and the consequent feeling of insecurity among the residents of that area? என்றுதான் கேட்டிருக்கிறார்கள். இதற்கு அமைச்சர் அறிக்கை கொடுப்பது எந்த விதத்திலும் வழக்கைப் பாதிக்காது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகள் 41, 42-இன் கீழ் எழுப்பப்படுகிற பிரச்சினைகள் அன்மையில் நடந்த ஒன்றைப் பற்றியதாகவே இருக்கவேண்டும் என்று இருக்கிறது. ஆனால் இந்தக் கொலை 28-12-1969 நடந்திருக்கிறது. இந்த விதியின் கீழ் அது வருமா என்பதற்குத் தங்களுடைய தீர்ப்பை எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஏற்கனவேயே மாண்புமிகு உறுப்பினர் இதுபற்றி தம்முடைய நோட்டீசை—அறிவிப்பை—கொடுத்து விட்டார்கள். இலாக்காவுக்குப் போய் விடை பெற இவ்வளவு நாளாகியிருக்கிறது. ஆகவே இதில் ஒன்றும் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

**திரு. டி. மார்டின் :** சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எந்த விதியின் கீழ் ?

THIRU T. MARTIN : You must allow me to speak. As a Member I am standing and I want to raise a point of order. How could I raise a point of order unless I am allowed?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப அனுமதிக்கிறேன். ஆனால் எந்த விதியை மீறி இருக்கிறது என்ப தைச் சுட்டிக்காட்ட வேண்டும்.

**திரு. டி. மார்டின் :** சார், பாயின்ட் ஆப் ஆர்டர் ரெயிஸ் பண்ணுகிறபோது எந்த விதியை மீறியிருக்கிறது என்று கேட்டு provision போடுவது உரிமையைத் தடை பண்ணுவதாக இருக் கிறது. இது உறுப்பினர்களுடைய இண்டிபெண்டென்ஸ்ஸையும் right ஐயும் பாதிப்பதாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த அவையில் முறை கேடான நிகழ்ச்சிகள் நடைபெறுகிற நேரத்தில், விதிமுறைகள் மீறப்படுகிற நேரத்தில் சுட்டிக்காட்ட உரிமை இருக்கிறது. அதை மறுக்கவில்லை. தாங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொன்ன வுடன் அனுமதி தந்திருக்கிறேன். ஆனால் எந்த விதி மீறப்பட்டிருக் கிறது என்பதை முதலில் சுட்டிக்காட்டிவிட்டு எழுப்புங்கள்.



1970 மார்ச் 14]

THIRU T. MARTIN : I wish to raise this point on the ground that the regulation of business, viz. allowing the Hon. Chief Minister to make a statement is itself against the well established principles and rules under which this House is governed. There are ever so many grounds .. . . . . . . . . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நோ. நம்முடைய திரு. விநயகம் அவர்கள் கேட்டதுதான். அதற்கு நான் ரூலிங் கொடுத்துவிட்டேன்.

THIRU T. MARTIN : This is on a different footing.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இங்கே கொடுத்து இருப்பது வழக்குபற்றியல்ல, அந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து உள்ள consequent feeling of insecurity among the residents of that area என்பதுபற்றித்தான் கேட்கப்பட்டிருக்கிறது. ஆகவே அதற்கு நான் ரூலிங் கொடுத்து விட்டேன்.

THIRU T. MARTIN : May I take it from the Chair that the Hon. Chief Minister will not refer anything to the merits of the case or name of the accused or name of the party to which he belongs or nature of the incident? If he confines himself only to security of residents in that area then it will be within our rules. If he goes beyond that and give names, then it will be hit by the rules.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முதலமைச்சர் அவர்கள் அறிக்கையைக் கொடுக்கிற நேரத்திலே, நீங்கள் இந்த வரம்பிற் குட்பட்டுத்தான் கொடுக்க வேண்டுமென்று கூறமுடியாது. உறுப் பினர்கள் பேசுகின்ற நேரத்திலே சில வரம்புகள் இருக்கின்றன. வரம்பு மீறிப் பேசுகின்ற நேரத்திலேதான் சுட்டிக்காட்டப்படு கிறதே தவிர, முன்கூட்டியே உறுப்பினர்கள் இப்படித்தான் பேச வேண்டுமென்று வரம்பு கட்டுவது முறையாக இருக்காது. பேசுகின்றபொழுது விதிமுறைகளுக்கு மாறாகப் பேச்சு இருந்தால் —இந்த அவையில் அதற்கென சில முறைகளை மேற்கொண்டு வருகின்றோம்—அதன்படி அவற்றை, வழக்கினைப் பாதிக்கக்கூடிய தாக இருந்தால் நீக்கிவிடலாம் என்று சொல்லலாம். ஆனால் அறிக்கையைக் கொண்டுவருவதற்கு முன்பே என்ன என்ன இருக்கும், என்ன என்ன இருக்காது என்பதற்கு உறுதி கொடுக்க முடியுமா என்பது என்ன நிலைமை என்று புரியவில்லை.

3. கவன ஈர்ப்பு (தொடர்ச்சி).

**வேலூர் நகராட்சி மன்ற சுதந்திரா உறுப்பினர் திரு. வி. கே. கண்ணப்பன் கொலை செய்யப்பட்டதும் அதனால் அப் பகுதியில் நிலவும் அமைதியின்மையும்** (தொடர்ச்சி).

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** வேலூர் நகராட்சியைச் சேர்ந்த சுதந்திரா கட்சி உறுப்பினர் திரு. வி. கே கண்ணப்பன், 28-12-1969 அன்று இரவு சுமார் 8-30 மணிக்கு, சைக்கிள்

ரிக்ஷாவில் வீடு திரும்பிக் கொண்டிருக்கையில் சைதாப்பேட்டை பெரிய கடைச் சாலையில் ஐந்து பேர் அவரை வழிமறித்து முரட்டுத் தனமாகக் கத்தியால் குத்திக் கொலை செய்தனர். இறந்த திரு. கண்ணப்பன், இதற்கு முன்னர் ஜம்புலிங்கம் என்ற காங்கிரஸ் தொண்டர் ஒருவர் கொலை செய்யப்பட்ட வழக்கு ஒன்றில் குற்ற வாளியாவார். அவர் அந்த வழக்கில் குற்றமற்றவரெனத் தீர்ப் பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

சைக்கிள் ரிக்ஷா ஓட்டி. 28-12-1969 அன்று இரவு 9-45 மணிக்கு வேலூர் வடக்குக் காவல் நிலையத்தில் மேற்படி கொலை குறித்துப் புகார் செய்தார். இ.பி. கோ. 302-வது பிரிவின் கீழ் 1963/69 குற்ற எண்ணில், வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. இரவு 11-30 மணிக்கு முதல் தகவல் அறிக்கை கிடைத்ததன் மேல், குற்றப்பிரிவு இன்ஸ்பெக்டர் அந்த இடத்திற்கு விரைந்து சென்று புலன் விசாரணையை மேற்கொண்டார். கூடுதல் பொறுப்பு வகித்து வந்த ராணிப்பேட்டை காவல் துறை துணை சூப்பிரண்ட்டும், கொலை நிகழ்ந்த இடத்தைப் பார்வையிட்டு வழக்கைப் புலன் விசாரணை செய்தார். வேலூர், குற்றப்பிரிவு, காவல்துறை இன்ஸ்பெக்டர் சவ விசாரணை நடத்தினார். பல வெட்டுக் காரியங்களினால் இறப்பு நேரிட்டது என்று பஞ்சாயத்தார் தீர்ப்புக் கூறினர். குற்றம் சாட்டப்பட்ட நடராஜன், கணேசன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். ராமன், குட்டி என்கிற பாபு, தங்கவேலு ஆகிய ஏனைய மூன்று குற்றவாளிகள் தலைமறைவாக உள்ளனர். அவர்களை கைது செய்ய மும்முரமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்தப் பகுதியில் மக்கள் குடியிருப்பதால் படைக்கலம் தாங்கிய சேமக் காவல் படையைச் சேர்ந்த மூன்று பிரிவுகள் இப் பகுதியில் ரோந்து சுற்றி வருகின்றனர். இந்தப் பகுதியிலுள்ள மக்களிடையே அச்ச உணர்வு நிலவி வரவில்லை. வேலூர் சப் மாஜிஸ்ட்ரேட் 1 அவர்கள் முன்னிலையில் இவ்வழக்கில் 12-2-1970 இ.பி.கோ. 148, 302, 149-வது பிரிவுகளின்கீழ் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

## 5. 81-ம் விதியின் கீழ் விளக்கம் அளிக்க எதிர்க் கட்சித் தலைவரின் வேண்டுகோள்.

THIRU P. G. KARUTHIRUMAN : I just request the Speaker to allow me to make a statement under Rule 81, because it is 14th.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் நேற்று அறிக்கையை அனுப்பியிருந்தாலும், அதிலே கையெழுத்தில்லாமல் இருந்ததால், முறையாக அது வந்ததா என்ற நிலைமை ஏற்பட்ட காரணத் தினாலே எந்த முடிவும் எடுக்கவில்லை, அதுவும் இந்த அவைக்கு



வந்ததற்குப் பிறகு எனக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது. எனவே அந்த அறிக்கையை அவையிலே அளிப்பதற்கு அனுமதி அளிக்க லாமா இல்லையா என்பதைப்பற்றித் திங்கட்கிழமை அல்லது செவ்வாய்க் கிழமை முடிவு எடுக்கலாம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் ஏற்கனவே ஒரு அறிக்கை கொடுத்தேன். அதிலே சில பகுதிகளை நீக்கிவிடச் சொன்னீர்கள். அதற்கு ஏற்பத்தான் இப்பொழுது கொடுத்திருக்கிறேன். உங்க ளோடு அறையிலே பேசின முறையிலே இருக்கிறது. அறிக்கையை அவையிலே கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறேன். அறிக்கையைச் சமர்ப்பிக்கவில்லை என்றால், வெளியிலே அந்தக் கடமையிலே இருந்து தவறுவதாக நிலைமை உண்டாகும். எப்பொழுது அனும திக்கப் போகிறீர்கள் ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவரவர்கள் வேறு சில செய்திகளைக் கொடுத்தார்கள். முதலிலே ஒரு அறிக்கை கொடுத்தார்கள், பேசியதற்குப் பிறகு வேறு ஒரு அறிக்கையைக் கொடுத்தார்கள் என்று சொன்னார்கள். தனித்த முறையிலே பேசியதை இந்த அவையிலே கூறுவதில்லை. அப்படிக் கூறுவது முறையாக இருக்காது. நீங்கள் அறிக்கையைக் கொடுத் திருக்கிறீர்கள். திங்கட்கிழமையன்று, அவையிலே அறிக்கையை அளிப்பதற்கு அனுமதி அளிக்கலாமா கூடாதா என்பதற்குத் தீர்ப்பு கொடுக்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அறையிலே பேசியது இங்கே கொண்டுவரப்பட்டது என்றார்கள். என்னைக் கூப்பிட்டார்கள். நீங்கள் என்னை அழைத்ததால்தான் வந்தேன். இதையெல்லாம் உலகத்திற்குத் தெரியப்படுத்த வேண்டும். வெளிப்படுத்தலாம் அல்லவா ? சில விஷயங்கள் வேண்டாமென்று சொன்னீர்கள், அதற்குத் தகுந்தமாதிரி மாற்றிக் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எதிர்க்கட்சித் தலைவர் அவ ரோடு என்னைத் தொடர்புபடுத்திக் கூறியிருப்பதால் நானும் கூற வேண்டிய நிலைமையில் இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையை அவையிலே வெளியிடுவதற்கு அனுமதி தாருங்கள் என்று எழுதவில்லை. இரண்டாவதாக, அறிக்கையை அவையிலே கொடுத்தால் வேறு பல நிகழ்ச்சிகளுக்கு இடம் கொடுத்துவிடுமே என்ற காரணத்தினாலே, பேரவைத் தலைவர் என்ற முறையிலே அல்லாமல் தனிப்பட்ட முறையிலே கொண்டிருக்கிற நட்புரிமை காரணமாக இந்த அறிக்கையை மாற்றிக் கொடுத்தால் நலமாக இருக்குமே என்று சொல்வதற்காக, பேரவைத் தலைவர் என்ற முறையிலே அழைக்கவில்லை, நண்பர் என்ற முறையிலே அழைத்தேன். பேரவைத் தலைவர் என்ற முறையில் அழைப்ப தானால், 14-ம் தேதிக்குள் கொடுக்கவேண்டுமென்று எழுத்து மூலமாகக் கொடுக்கப்பட்டதைப்போன்று இந்த அழைப்பை

அனுப்பியிருப்பேன். தனிப்பட்ட முறையிலே நட்புரிமையின் காரணமாக அழைத்தேன். பேரவைத் தலைவர் என்ற முறையில் அல்ல. நான் இவ்வளவு சொல்வதற்குக் காரணம், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதையெல்லாம் எடுத்துக்கூறி விட்ட காரணத்தினலேதான் சொல்லவேண்டியிருக்கிறது. திங்கட் கிழமை இந்த அறிக்கையை அவையிலே அளிப்பதற்கு அனுமதி அளிக்கலாமா, கூடாதா என்பதற்குத் தீர்ப்பளிக்கிறேன் என்பதைத் தெரிவித்து, இந்த நிகழ்ச்சியை இந்த அளவோடு முடிக்கிறேன்.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். பேரவைத் தலைவர் அவர்களும் எதிர்க்கட்சித் தலைவரும் தனிப்பட்ட முறையிலே பேசியதாக அவர்கள் அறிவித்தார்கள். அது குறிப்புப் புத்தகத்தில் ஏறுதபடி—எதிர்க்கட்சித் தலைவர் குறிப் பிட்டார்கள், தாங்கள் ஏதோ பகுதியை எடுத்துவிடவேண்டு மென்று சொன்னீர்கள் என்று. அது தனிப்பட்ட முறையிலே கேட்டதாக இருக்கலாம். இந்த அவையிலே அதனைக் கூறிவிட்ட காரணத்தினலே ஏதோ பேரவைத் தலைவர் அவர் கட்சிக்கு அனு கூலமாகவோ வேறு எந்தக் காரணத்தினலோ அந்தப் பகுதியை . . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஒரு பகுதியை நீங்கள் எடுத்துவிட வேண்டுமென்று இந்தச் சர்க்காருக்குச் சாதகமாகச் சொன்னீர்களா, வேறு எந்தக் காரணத்திற்காகச் சொன்னீர்கள் என்பதைத் தெரியப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** யாருக்கும் சாதகமாகச் சொல்லவில்லை. இந்தப் பேரவையின் கண்ணியத்தையும் மரபை யும் காக்கக்கூடிய வகையிலே அறிக்கை இருக்கவேண்டும் என்பது தான். ஆளுங்கட்சிக்குத் துணை செய்வதற்காக அல்ல; அல்லது எதிர்க்கட்சிக்குத் துணை செய்வதற்காக அல்ல; இந்தப் பேரவை யின் கண்ணியத்தையும் மரபையும் காக்கவேண்டுமென்ற அளவிலே தான்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எதிர்க்கட்சித் தலைவர் உறுதியாகவும் கருராகவும் இருப்பார்களானல் தாங்கள் தயவு செய்து நட்பைப் பயன்படுத்தாமல் உரிமையைப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதேமாதிரி நானும் என்னுடைய கடமையைச் செய்வதில் முதலமைச்சர் அவர்கள் ஒத்துழைப் பார்கள் என்று நம்புகிறேன். சட்டசபையில் நடக்கின்ற நிகழ்ச்சி களிலே சில பிரச்னைகளிலே நியாயம் வழங்கும்படியான நிலைமை இருக்க வேண்டும்.





**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** முதலமைச்சர் ஒத்து ழைப்பை எதிர்க்கட்சித் தலைவர் முன்பே கேட்டிருக்கிருர்கள். நான் தரத் தயாராக இருக்கிறேன்.

**திரு. செஞ்சி வெ. முனுசாமி :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். அமைச்சர்கள் அறிக்கைகள் தரலாம் என்று 83-வது விதியில் இருக்கிறது. 81-வது விதியின்கீழ் தன்னிலை விளக்கம்தான் தர லாமே தவிர, உறுப்பினர்கள் அறிக்கை அளிப்பதற்கு உரிமை கிடை யாது. எந்த விதிகளின்கீழ், பேரவைத் தலைவர் அவர்கள் உறுப் பினர் அறிக்கையை அனுமதிக்க இருக்கிருர்கள் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தன்னிலை விளக்கத்தைத்தான் அறிக்கையின் மூலமாக அளிக்கிருர்கள். அதிலே ஒன்றும் தவறில்லை.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கொண்டுவந்த பிரச்சினை மிகவும் நியாய மானது. எதிர்க்கட்சித் தலைவருக்கு அந்த உரிமை இல்லை. ஆனல் 81-வது விதியின்படி அறிக்கையை சமர்ப்பிக்கப் போகிறேன் என்று சொல்கிருர்கள். விதிகளிலே அதற்கு உரிமை கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 81-வது விதியின் கீழ் விளக்கம் என்று எழுந்து, வாய்மொழியாகப் பேசுவதை, எழுத்துமூல மாகவும் அளிக்கலாம். எந்த விதமான வேறுபாடும் அதிலே இல்லை.

## 6. 1970-71-ம் ஆண்டுக்கான நிதிக்கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### (அ) நிதிக் கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும் பல்வகையும்.

(ஆ) நிதிக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை.

(இ) நிதிக் கோரிக்கை எண் 4—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம்.

(ஈ) நிதிக் கோரிக்கை எண் 31—பஞ்சத் தணிப்பு.

(உ) நிதிக் கோரிக்கை எண் 32—ஓய்வூதியங்கள்.

(ஊ) நிதிக் கோரிக்கை எண் 36—ஏனைய பல்வகை இழப்பீடு களும் ஒதுக்கீடுகளும்.

(எ) நிதிக் கோரிக்கை எண் 37—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு.

(ஏ) நிதிக் கோரிக்கை எண் 45—ஓய்வூதியங்களை மொத்த மாக்கிக் கொடுத்தல்.

(ஐ) நிதிக் கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்.

[1970 மார்ச் 14

*திரு. அ. லெ. சுப்ரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே,
மாவட்ட ஆட்சித்துறை மனியத்திலே ஒரு சில கருத்துக்களை
இந்த மன்றத்தின் முன் வைக்க ஆசைப்படுகிறேன். முன்
பெல்லாம் மாவட்ட ஆட்சித்துறை விவாதம் வரும்போது, எதிர்க்
கட்சியில் இருக்கும் காங்கிரஸ் நண்பர்கள், ஆளும் கட்சியில்
இருக்கும் சட்டமன்ற உறுப்பினர்களும் கட்சியைச் சேர்ந்தவர்
களும் மாவட்ட ஆட்சித்துறையில் தலையிடுகிறார்கள் என்ற குற்றச்
சாட்டைச் சொல்லி வந்தார்கள். அவர்களுடைய மொழியில்
சொல்வது என்றால் 'கட்டுவிரியன் துண்டுக்காரர்கள் கலெக்டர்
ஆபீசில் முற்றுகையிடுகிறார்கள்' என்று சொல்லி வந்தார்கள்.
இந்தச் சட்டமன்றக் கூட்டத்தொடரில் அப்படிப்பட்ட குற்றச்சாட்
டுக்கு அதிக முக்கியத்துவம் தரவில்லை என்று கருதுகிறேன்.
அறிஞர் அண்ணா அவர்கள் முன்பே மிகத் தெளிவான ஒரு விளக்
கத்தைச் சொல்லியிருக்கிறார்கள். 'ஆளும் கட்சியில் இருப்பவர்
கள், சட்டமன்ற உறுப்பினர்களானாலும் அல்லது கட்சியைச் சேர்ந்
தவர்களானாலும், அவர்கள் சொல்லுகின்ற சிபாரிசுகள் நியாய
மானவை அல்ல என்று அதிகாரிகள் கருதுவார்களானால், அவர்கள்
அந்தக் கூற்றுக்குச் செவி சாய்க்கத் தேவையில்லை' என்ற கருத்தை
பேரறிஞர் அண்ணா அவர்கள் அறிக்கை மூலமாக அதிகாரிகளுக்குத்
தெரிவித்திருக்கிறார்கள். மக்களுக்கும் தெரிவித்திருக்கிறார்கள்.
ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலையீடு இருக்கக்
கூடாது என்பதை இந்த அரசு கொள்கையாகக் கொண்டிருக்கிறது
என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்தில்,
சட்டமன்ற உறுப்பினர்கள் அதிகாரிகளிடத்தில் தலையிடவில்லை
என்ற காரணத்திற்காக அதிகாரிகள் மக்களுடைய தொடர்பைக்
குறைத்துக் கொள்ளலாமா, அல்லது மக்கள் அவர்களை அணுகுகிற
போது கடமையைச் செய்யத் தவறுகிறார்களா என்பதையும் அரசு
கண்காணிக்க வேண்டுமென்ற கருத்தையும் அறிஞர் அண்ணா
அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: ஒவ்வொரு உறுப்பினரும்
ஆறு நிமிடங்களுக்குள் முடித்துக்கொள்ள வேண்டும்.

■**திரு. அ. லெ. சுப்ரமணியம்**: இதை அறிஞர் அண்ணா அவர்
களுடைய வாக்கியப்படியே சொல்ல வேண்டுமென்றால் Politicians
should not be officialised, but officials should be democratised
என்று மிகத் தெளிவாகச் சொல்லி
யிருக்கிறார்கள். அரசியல்வாதிகளுக்கு அதிகார மனப்பான்மை
வரக்கூடாது; ஆனால் அதிகாரிகள் மக்கள் மத்தியில் ஜனநாயக
உணர்வோடு நடந்து கொள்ளவேண்டும் என்ற கொள்கையை மிக
விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, ஆட்சியில் இருக்
கின்ற கட்சியினரின் தலையீடு அதிகாரிகளிடத்தில் இருக்கிறது,
ஆட்சித் துறையில் இருக்கிறது என்ற கருத்தைத் திட்டவட்டமாக
மறுத்துக் கூற விரும்புகிறேன்.



1970 மார்ச் 14] [திரு. அ. லெ. சுப்ரமணியம்]

இன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைமை பற்றியும், செய்யப்பட
வேண்டிய சில சீர்திருத்தங்கள் பற்றியும் என்னுடைய கருத்தை
வைக்கப் பிரியப்படுகிறேன். எனக்கு முன்னாலே பேசிய பலரும்
ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். எந்தத் துறையை எடுத்துக்
கொண்டாலும், கிராம நலத் துறை, பஞ்சாயத்து யூனியன்தான்
முக்கியத்துவம் பெற்றிருக்கிற சூழ்நிலையைப் பார்க்கிறோம். அதே
நேரத்தில் அதற்கென தனி அதிகாரி இருக்கிறாரா என்று பார்த்
தால் கலெக்டருக்கு உட்பட்ட ஆர்.டி.ஓ. அந்தஸ்தில் இருக்கிற
டெவலப்மென்ட் பி.ஏ. தான் அதிகாரியாக இருக்கிறார். அவருக்
காவது தன்னிச்சையாக இயங்க அதிகாரம் இருக்கிறதா என்றால்
இல்லை. ஆட்சித் துறையை மாற்றியமைக்கின்ற நேரத்தில்
வட்டார வளர்ச்சித் துறைக்குத் தனியாக அதிகாரியை கலெக்ட
ருக்குக் கீழ் டி.ஆர்.ஓ. அந்தஸ்தில் நியமித்தால் நலமாக இருக்கும்.
இன்றைக்கு ரெவின்யூ காடரை எடுத்துக்கொண்டால் தாசில்தார்
இருக்கிறார், பிறகு ஆர்.டி.ஓ. பிறகு கலெக்டர் வருகிறார். வருவாய்த்
துறையில் டி.ஆர்.ஓ. அந்தஸ்தில் ஒரு அதிகாரி இருக்கிறார்.
ஆர்.டி.ஓ. வேலை என்ன என்று பார்க்கும்போது அவர்கள் தாசில்
தாருக்கும் கலெக்டருக்கும் இடையில் இருந்துகொண்டு, வருகின்ற
ஃபைல்களில் கையெழுத்துப் போடுகின்ற போஸ்ட் ஆபீஸ் போல்
தான் இருக்கிறார்களே தவிர, தன்னிச்சையாக இயங்க அதிகாரம்
இல்லை. அப்படி இருக்கும்போது, அனாவசியமாக ஃபைல்கள்
தேங்க இப்படி ஒரு அதிகாரி தேவைதானா என்பதைச் சிந்திக்க
வேண்டும். தாசில்தார்களுக்கு இன்னும் சற்று அதிகாரங்களை
அதிகமாக்கி, சில துறைகளில் அவர்களே முடிவு எடுத்துக் கொள்ள
லாம் என்ற அதிகாரத்தை தந்துவிட்டால் அவர்கள் நல்ல
முறையில் இயங்க உதவியாக இருக்கும். அனாவசியமாகத் தாமதம்
ஏற்படுவது குறைக்கப்படும். கலெக்டருக்கு மிக அத்தியாவசிய
மான, முக்கியமான சில ஃபைல்கள்தான் வர வேண்டுமென்ற விதி
முறையை வைத்துக் கொண்டால் ரெட் டேபிசம் என்று சொல்லப்
படுகின்ற சிவப்பு நாடா முறையை ஒழிப்பதற்கு வாய்ப்பாக
இருக்கும். சிவப்பு நாடா முறையை ஒழித்துவிட வேண்டுமென்ற
கருத்தை எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களானாலும் சொல்லு
கிறார்கள். நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் சிவப்பு நாடா
முறையை ஒழிக்க, பச்சை நாடா ஆக்குவதைத் தவிர வேறு வழி
இல்லை என்று நகைச்சுவையாகச் சொன்னார்கள். நான் கூறிக்
கொள்ள விரும்புவது எல்லாம், ஆட்சித் தலைவர் வாரத்தில் முதல்
மூன்று நாட்கள் ஹெட்குவார்ட்டர்சில் இருக்க வேண்டுமென்ற
விதிமுறையை ஏற்படுத்த வேண்டுமென்பதாகும். நெல்லை
மாவட்டத்தில் ஆட்சித் தலைவர் திரு. அந்தோணி அவர்கள் வாரத்
தில் முதல் மூன்று நாட்கள் மாவட்டத் தலைநகரிலே இருப்பார்கள்;
மக்கள் குறையைக் கவனித்துத் தீர்க்க நடவடிக்கை எடுப்பார்கள்;
மீது மூன்று நாட்கள் சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளுவார்கள்.
(மணி அடிக்கப்பட்டது) அந்த முறையில் ஆட்சித் தலைவர்கள்
தங்களுடைய பணியைச் செய்தால் நலமாக இருக்கும் என்று கூறி
என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

[1970 மார்ச் 14

*** திரு. நா. சௌந்தர பாண்டியன் :** மதிப்பிற்குரிய சட்டமன்றத்
தலைவர் அவர்களே, வருவாய்த்துறை மானியக் கோரிக்கையின்
மீது எங்கள் கட்சி கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணைகளை
ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.
பஞ்சத் துயர் தணிப்புக்காக இந்த ஆண்டு 18 கோடி 35 லட்சம்
ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அவ்வாறு செலவு செய்
ததன் காரணமாக உருவான வேலைகள், நிரந்தரமான வேலைகளாக
நடந்திருக்கின்றனவா என்று பார்த்தால் இல்லை. இதன் மூலம்
வறட்சி நிலை தணிக்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை.

திருநெல்வேலி மாவட்டத்தில் ராதாபுரம் உப வட்டத்தில்
கடந்த நான்கு ஆண்டுகளாக மழை இல்லை. இந்த ஆண்டும் மழை
இல்லை. அங்கே குடிக்கக் கூடத் தண்ணீர் இல்லை. வடக்கன்குளம்,
ஆவரைகுளம், காவல் கிணறு, அடங்கார் குளம் போன்ற பகுதி
களை மாவட்ட ஆட்சித் தலைவர் கடந்த மாதம் 10-ம் தேதியன்று
பார்வையிட்டும் கூட அங்குள்ள கிணறுகள் ஆழப்படுத்தப்பட
வில்லை. பஞ்சத் துயர் தணிப்புக்காகச் செய்யப்படுகின்ற வேலை
கள் நிரந்தரமாக இருக்க வேண்டும். சிறிய நீர்ப்பாசனத் திட்டங்
களை அமல்படுத்துவதன் மூலம், காட்டாறுகளுக்கு அணைகளைப்
போட்டு தண்ணீரை நிறுத்துவதன் மூலம், சிறுபாசனக் குளங்
களை ஆழப்படுத்துவதன் மூலம் இந்த வேலைகளைச் செய்தால் குடி
தண்ணீர்ப் பிரச்சினை ஓரளவு தீரும் என்பதை அமைச்சர்
அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கிராமங்களில் பின்தங்கிய மக்களுக்கு வீட்டு
மனை வழங்குவதில் காலதாமதம் ஏற்படுகிறது. ஒரு வீட்டு மனை
வேண்டுமென்று மனுக் கொடுத்தால் அந்த நபர் அந்த அதிகாரி
களுடன் அடிக்கடி தொடர்பு கொண்டால்தான் சீக்கிரம் முடி
கிறதே தவிர, மற்றபடி கிடைப்பதே இல்லை. அரசு இந்தக்
குறையை நிவர்த்திக்கும் வகையில் கிராமங்கள்தோறும் எந்தெந்த
நபர்களுக்கு வீட்டு மனை இல்லை என்ற குறிப்பை எடுத்து அவர்
களுக்கெல்லாம் வீட்டு மனை வழங்குவதற்கு முயற்சி எடுத்துக்
கொள்ள வேண்டும்.

வருவாய்த் துறை வாரியத்தை எடுத்துவிடுவதாக நிதி
அமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு அறிக்கையில் கூறினார்கள்.
இப்போது சொல்வதைப் பார்த்தால் அரசியல் அமைப்புச் சட்டத்
தின் 203 (1) விதியின் கீழ் குடியரசுத் தலைவரின் இசைவைப் பெற்
றுத்தான் வாரியத்தை எடுக்கக்கூடிய நிலைமை இருப்பதாகக் கூறு
கிறார்கள். இந்த முடிவை அப்போது எடுக்கும்போதே இந்த அரசு
ஏன் இதைக் கவனிக்கவில்லை என்று தெரியவில்லை. இப்போது
இதிலே அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்
கள் என்பதை விளக்குவார்கள் என்று கருதுகிறேன்.

கிராமப் பணியாளர்களை முழு நேரப் பணியாளர்களாக மாற்ற
வேண்டும். அவர்களுக்கு வேலை பளு அதிகமாகி இருக்கிறது.
அவர்களுடைய அடிப்படைச் சம்பளத்தை இளநிலை உதவியாளர்



1970 மார்ச் 14] [திரு. நா சௌந்தர பாண்டியன்]

களுக்கு (ஜூனியர் அசிஸ்டெண்ட்) கொடுப்பது போல் கொடுத்து
படிப்படியாக பதவி உயர்வும் பெற வாய்ப்பு இருக்க வேண்டும்.
அப்போதுதான் வேலை செய்வதில் அவர்களுக்கு உற்சாகம்
ஏற்படும்.

மாவட்டங்கள், வட்டங்கள் இவைகளை மாற்றியமைக்க
வேண்டும். நிர்வாகத் திறமையையும், பொதுமக்கள் நலனையும்
கருதி சிறு சிறு மாவட்டங்களாக்க தீவிர நடவடிக்கை எடுக்க
வேண்டும். திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குநேரி வட்டத்தில்
ராதாபுரம் உப வட்டமாக இருக்கிறது.

அது கிட்டத்தட்ட 40 மைல் நீளமும் 20 மைல் அகலமும்
உள்ளது. அதை ஒரு துணைத் தாசில்தாரால் எப்படி நிர்வகிக்க
முடியும்? தாசில்தார் பதவியை அரசிதழ் பதிவுபெற்றதாக்கி
(கெஸட்டட்) அவர்களை கெஸட்டட் ஆபீசர்களாக நியமிக்க
வேண்டும். இது கேரள மாநிலத்தில் இருக்கிறது. இப்படிச் செய்
தால் கோட்டாட்சித் தலைவரை எடுத்துடலாம்வேண்டும். தாசில்தார்
கள் மாவட்ட ஆட்சித் தலைவருடன் தொடர்பு கொள்வதன் மூலம்
உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க முடியும்.

மனு நீதி நாள் என்பது மக்களுக்கு ஏமாற்றத்தைக் கொடுக்கக்
கூடிய ஒரு நாளாக அமைந்திருக்கிறது. குறிப்பாக ஊராட்சி
மன்றத் தலைவரின் போக்கைப் பற்றியும், அங்கு நடக்க
வேண்டியது பற்றியும் குறிப்பிட்டு மனு கொடுத்தால் அது திரும்ப
அந்த ஊராட்சி மன்றத் தலைவருக்கே அதுபற்றி முடிவு செய்வதற்
காக அனுப்பப்படுகிறதே தவிர இதற்காக அதிகாரிகள் யாரும்
நடவடிக்கைகள் எடுத்ததாகத் தெரியவில்லை.

அடுத்தபடியாக, அரசாங்கம் விவசாயிகளுக்குக் கடன்கள்
வழங்குகிறார்கள். அந்தக் கடன்களை அரசாங்கம் தள்ளி வைத்
தாலும் அல்லது ஒத்திவைத்தாலும், அதை ஒரு ஆண்டு கழிந்து
கட்டலாம் என்று வைத்தாலும் அப்படி வழங்கப்பட்டிருக்கிற
கடன் தொகைகளுக்கு அபராத வட்டி வாங்கப்படுகிறது, அந்த
அபராத வட்டிக்கும் வட்டி வாங்கப்படுகிறது. இப்படி நம்முடைய
அரசாங்கம் ஒரு மார்வாடி வட்டிக் கடை வைத்து நடத்துவதைப்
போல் இருக்கிறது என்று சொல்லிக் கொண்டு வட்டி விகிதத்தில்
இந்த அரசு குறைந்தபட்ச வட்டிக்குக் கடன்கள் வழங்கவேண்டு
மென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. க. ந. சிவபெருமாள் :** சட்டமன்றத் தலைவர் அவர்களே.
மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள
இந்த வருவாய்த் துறை மானியத்தை ஆதரித்து என் கருத்துக்
களை எடுத்துச் சொல்ல விழைகிறேன். முன்னேற்றக் கழக அரசு
பதவி ஏற்றபிறகு, சட்டமன்றத்தில் பணி புரிந்து வரும் நிலையி
லாகிலும் சரி அல்லது தேர்தல் அறிக்கையில் ஆனாலும் சரி
என்னென்ன உறுதிமொழிகள் கொடுக்கப்பட்டனவோ அவை
அத்தனையையும் இன்றையதினம் ஒன்றன்பின் ஒன்றாக

நிறைவேற்றப்பட்டு வரும் காட்சியைத்தான் காண்கிறோம். மாவட்ட நிர்வாகத்தின் கீழ் பணியாற்றுகிற வட்ட அலுவலகங் களில் இருந்து ஏழை எளிய மக்களுக்காக பல்லாயிரக்கணக்கான தரிசு நிலங்கள் பட்டாவாக வருடாவருடம் கொடுத்துக் கொண்டு வருவதைப் பார்க்கின்றோம். இதுவரை ஒரு லட்சம் பட்டாக்களை இந்த அரசு வழங்கியிருக்கிறது. அது இந்த அரசுக்கு ஏழை மக்கள்பால் உள்ள நல்லெண்ணத்திற்கு ஒரு அடையாளமாகும். வருடா வருடம் பட்டா நிலங்கள் வழங்கப்படுவது அதிகமாகிக் கொண்டு வருகிறதே தவிர, அது குறையவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து நான் குறிப்பிட விரும்புவது மனு நீதி நாள் பற்றி யாகும். சமுதாயத்தில் மாறுதலை ஏற்படுத்தும் வகையில் ஒரு புரட்சிகரமான திட்டத்தை நம் அரசு கொண்டு வந்திருக்கிறது. ஏழை எளிய மக்கள் கொடுக்கக்கூடிய மனுக்களை அந்தந்த இடங் களில் விசாரித்து உடனடியாக நீதி வழங்க வேண்டும் என்ற முறையில் தான் இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். "ஜஸ்டிஸ் டிலேட் ஈஸ் ஜஸ்டிஸ் டினைட்" (Justice delayed is Justice denied) என்று சொல்வார்கள். அதை இந்த அரசு உணர்ந்துதான் கால தாமதம் ஏற்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காக, அப்படிக் காலதாமதம் ஏற்படுமானால், லஞ்சத்திற்கு வழி ஏற்படும் என்று உணர்ந்துதான் இப்படிப்பட்ட முறைகளை, மறுமலர்ச்சி ஏற்படத் தக்க முறையில், கொண்டு வந்திருக்கிறார்கள். இத் திட்டத்தினால் லஞ்ச ஊழல் ஏற்படுவதற்கு எந்தவகையிலும் வழியில்லை. அந்த இடத்திலேயே கொடுக்கப்படுகிற மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு நீதி வழங்கப்படுகிறது. எல்லா அதிகாரிகளும் கிராமங்களுக்குச் செல்கிற காரணத்தினால் கிராம மக்களுக்கு எந்தவிதமான செலவும் இல்லை. அவர்கள் அலுவலகங்களுக்குச் சென்று அங்கு நீண்ட நேரம் காத்திருந்து அதிகாரிகளைப் பார்க்க முடியாத நிலைமை இருந்தது. முன்பு மனுக்கள் கொடுத்தால் "அது வந்து சேர்ந்தது. அது கவனிக்கப்படும்" என்று சொல்வதற்குக்கூட பல மாதங்களாகும். அதை உணர்ந்துதான் இத்திட்டம் மேற்கொள் ளப்பட்டிருக்கிறது. இது கட்சி வேறுபாடு இல்லாமல் நடை பெற்று வருகிறது.

அடுத்து. மாவட்ட நிர்வாகத்திற்கு கிராமப் பணியாளர்கள் அச்சாணி போன்றவர்களாவார்கள். அவர்கள்தான் நேரடியாக மக்களிடம் தொடர்பு கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சரியாக இயங்கவில்லை என்றால் ஆட்சியும் சரிவர இயங்க முடியாது. ஆட்சிக்கு நல்ல பெயரை வாங்கித் தருகிற பொறுப்பு கூட அவர் களிடம் தான் இருக்கிறது. அவர்கள் வரி வசூல் செய்யச் செல்லும் போது அவர்கள் சிறிது கண்டிப்பாக இல்லாமல் இருப்பார்களே யானால், மக்கள் இந்த அரசைப் போற்றுவார்கள். ஆகவே அப்படிப்பட்டவர்களுக்கு இன்றையதினம் பல சலுகைகள், பிற





அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்டிருப்பவை போன்று இவர் களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே அவர்கள் எல்லோரும் இந்த அரசைப் பாராட்டுகிறார்கள்.

பரம்பரைப் பாத்தியதை இன்றையதினம் தவிர்க்கப்பட்டு தரத்தின் அடிப்படையில், படிப்பு அடிப்படையில், திறமை அடிப் படையில் உத்தியோகங்கள் இன்றையதினம் கொடுக்கப்பட்டு வருவது அரசு எந்தளவிற்கு நேர்மையாக நடந்து கொள்கிறது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

சம்பள விகிதத்தையும் படியையும் மாற்றியமைப்பது குறித்துத் தீர்மானிப்பதை இரண்டாவது சம்பள ஆணைக் குழுவினிடம் ஒப்படைத்திருப்பது, தமிழ்நாட்டில்தான் இது முதல் முறையாக அமல் நடத்தப்படுகிறது என்று நிதி அமைச்சர் அவர்கள் தமது வருவாய்த் துறை மானிய உரையில் குறிப்பிட்டிருப்பது பாராட் டுக்குரியதாகும்.

அடுத்து, வீட்டு மனைகள் வழங்குவது. இன்றையதினம் பல ஆயிரக்கணக்கான ஹரிஜனங்களுக்கும், ஏழைகளுக்கும் ,வீட்டு மனைகளுக்கான பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இப் போது கூட ஒன்பது மாதங்களுக்குள் 73,000 மனைகளுக்கான பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்றால் இந்த அரசு எவ்வளவோ வேகமாகச் செயல்பட்டு வருகிறது என்பது தெரிய வரும்.

அடுத்து, ஆட்சி எடுக்கிற முடிவுகள் அத்தனையையும் மக்களிடம் தொடர்பு கொண்டு செய்து முடிக்க வேண்டிய பொறுப்பு ஊராட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் இருக்கிறது. அந்த மன்றங்களுக்கு மாவட்ட ரீதியில் ஒரு அதிகாரி அமர்த்தப் பட வேண்டும். மக்களோடு தொடர்பு கொண்டு திட்டங்கள் நிறைவேற்றப்படுவதற்கு இத்தகைய மன்றங்களுக்கு நல்ல பல அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும். போதிய அளவு அதிகாரி களும் நியமிக்கப்பட வேண்டும். ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவர்களுக்கு அந்தந்தப் பகுதிகளில் அலுவல்கங்கள் கொடுக்கப் பட்டுள்ளதைப் போன்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அப்படிப்பட்ட அலுவலகங்கள் கொடுக்கப்பட வேண்டும்.

குறிப்பாக, என் தொகுதியில் ஏழை எளிய மக்களுக்குப் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் பட்டா நிலங்கள் வழங்கப்பட்டிருந் தாலும் இன்னும் வழங்கப்பட வேண்டிய நிலை இருக்கிறது. காட்டு இலாகாவினிடம் நிறைய நிலங்கள் இருக்கின்றன. அதை யும் ஏழை எளிய மக்களுக்குப் பகிர்ந்து அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த மானியத்தைப் பாராட்டி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கரு. சீமைச்சாமி:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நான் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. கரு. சீமைச்சாமி] [1970 மார்ச் 14

மனு நீதித் திட்டம் என்ற புரட்சிகரமான திட்டம் ராமநாத
புரம் ஜில்லாவைப் பொறுத்தவரையில் மிகச் சிறப்பான முறையில்
நடைபெற்று வருகிறது. நூறு ஆண்டுகளாக மாற்றப்படாத
பட்டாக்கள், நூறு ஆண்டுகளாகப் பிரிக்கப்படாத நிலங்கள்
எல்லாம் இன்று சிறப்பான முறையில் பிரிக்கப்பட்டு இந்த மனு
நீதித் திட்டம் சிறப்பாகச் செயல்பட்டு வருவதற்காக அங்குள்ள
கலெக்டர் அவர்களையும் மாவட்ட அதிகாரிகளையும் நான் மனமாரப்
பாராட்டுகிறேன். இந்தத் திட்டங்களை நிறைவேற்றுகிறபோது
இன்னும் சில தாசில்தார்களை நாம் நியமிக்க வேண்டிய நிலை
இருக்கிறது. அவர்களையும் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

பசுமைப் புரட்சி, உற்பத்திப் பெருக்கம் என்றெல்லாம் பேசு
கிறார்கள். உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று சொல்கிறார்
கள். உழவர்களுக்காக நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்?
விவசாயிகளுக்கு நீங்கள் செய்துள்ள நன்மைகள் என்ன? மின்
சாரக் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறீர்கள். மின்சார சாதனங்
களுக்குள்ள வரியை உயர்த்தியிருக்கிறீர்கள். டிராக்டருக்கு வரி
போட்டிருக்கிறீர்கள். அதே நேரத்தில் விவசாயிகளின் நிலையை
உயர்த்த வேண்டும் என்றும் சொல்கிறீர்கள்.

இப்படிப்பட்ட வரிகள் ஒரு பக்கம். இன்னொரு பக்கத்தில்
உச்சவரம்பு அளவு குறைக்கப்பட்டிருக்கிறது. முக மலர்ச்சி
யோடு இந்த நிலச்சீர்திருத்தத்தைக் கொண்டு வருகிறேன் என்று
நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். விவசாயிகளுக்காக
நீங்கள் என்ன கொடுத்திருக்கிறீர்கள்? விவசாயிகளின் நிலத்திற்கு
உச்சவரம்பு என்று சொல்லும்போது நகரில் உள்ள நாள் ஒன்றுக்கு
ஆயிரம் ரூபாய் வீதம் சம்பாதிக்கும் வக்கீலுக்கு உச்சவரம்பு
கிடையாது. டாக்டர்களுக்கு உச்ச வரம்பு கிடையாது. வர்த்தக
நிறுவனங்களில் இருப்பவர்களுக்கு உச்சவரம்பு கிடையாது.
முப்பது மில்கள் வைத்திருப்பவர்களுக்கு உச்சவரம்பு கிடையாது.
பத்து இருபது தொழிற்சாலைகள் வைத்திருப்பவர்களுக்கு உச்ச
வரம்பு கிடையாது. மாதம் ஆயிரக்கணக்கில் சம்பளம் வாங்குகிற
வர்களுக்கு உச்சவரம்பு கிடையாது. முப்பது ஏக்கர் அல்லது
ஐம்பது ஏக்கர் நிலம் வைத்திருந்தாலும் வருடம் ஒன்றுக்கு ரூ.
5,000-க்கு மேல் சம்பாதிக்க முடியாது. ஆக நான் மேலே குறிப்
பிட்டவர்களுக்கு உச்சவரம்பு இல்லாதிருக்கும்போது விவசாயி
களுக்கு மட்டும் உச்சவரம்பு நிர்ணயிப்பது என்ன நியாயம் என்று
நான் கேட்கிறேன். இது சமுதாயத்திலுள்ள விவசாய சமூகத்
தினருக்கும் இழைக்கப்படும் ஒரு அநீதியாகும். இதுதான் சமூக
நீதியா என்று நான் கேட்கிறேன். இன்று உச்சவரம்பு இல்லாத
அமெரிக்கா உலகம் பூராவிற்கும் உணவு சப்ளை செய்கிறது. உச்ச
வரம்பு இல்லாத கானடா கோதுமைக் களஞ்சியமாக விளங்கி
வருகிறது. ஆகவே இங்கு உச்சவரம்பு என்று கொண்டுவந்து
தமிழ் நாட்டைப் பிச்சக்கார நாடாக ஆக்க வேண்டாம் என்று
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



1970 மார்ச் 14] [திரு. கரு. சீமைச்சாமி]

இன்று. இரண்டு லட்சம் ஏக்கரா நிலங்கள் உபரி நிலங்களாக
இருப்பதாகச் சொல்கிறார்கள். நில உச்சவரம்புச் சட்டத்தைக்
கொண்டுவருகிற நேரத்தில் இந்த நிலங்களை யாருக்குக் கொடுக்கப்
போகிறார்கள்? இது திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கே ஒரு
பெரிய பிரச்சினையாக ஆகிவிடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.
இதுதான் சோஷலிஸமா? நிலத்தைப் பிரித்துக்கொடுத்து விடுவ
தால் மட்டும் அதை சோஷலிஸ சர்க்கார் என்று ஏற்றுக்கொண்டு
விட முடியாது. சோஷலிஸம் என்றால் அதைப்பல பேர்கள் பலவித
மாக வியாக்கியானம் செய்கிறார்கள். சோஷலிஸம் பேசுகிற எந்த
நாட்டிலும் கொலை செய்கிறார்கள், கொள்ளை அடிக்கிறார்கள்.
ஜப்பானை எடுத்துக் கொண்டால் அங்கு சோஷலிஸம் பேசவில்லை.
அங்கு வேலையில்லாத் திண்டாட்டம் இல்லை, வேலை வாய்ப்பு வசதி
கள் பெருகியிருக்கின்றன. அமெரிக்காவில் நிலத்தைத் தரிசாகப்
போட்டு நாலாயிரம் ரூபாய் மானியம் அளிக்கக்கூடிய வகையில்
அவர்கள் உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறார்கள். அவர்கள் நல்ல
படியாகப் பொருளாதார முன்னேற்றத்தை அமைத்துள்ளனர்.
பொருளாதார முன்னேற்றம், இருக்கிற நிலத்தைப் பிரித்துக்
கொடுத்துவிட்டால் வந்து விடுமா? சினிமாக்காரர்கள் ஒரு படத்
திற்கு நான்கு லட்சம், ஐந்து லட்சம் என்று வாங்குகிறார்கள்.
அவர்களுக்கு உச்சவரம்பு இல்லையென்று சொல்கிறீர்கள். நகரங்
களில் அழுக்குப் படாமல் வாழ்க்கை நடத்துகிறவர்களுக்கு
உச்சவரம்பு இல்லை. ஆனால் ரத்தத்தை வியர்வையாகச் சிந்திப்
பாடுபடும் விவசாயிகளுக்கு உச்சவரம்பு கொண்டு வந்திருக்கிறீர்
கள். இதை அரசு கவனிக்கவேண்டும் இன்று விவசாயிகள்
மட்டும் இப்படி வஞ்சிக்கப்படுவது நியாயம் இல்லை. எனவே
இந்த நில உச்ச வரம்பு என்று சொல்லும் இதைக் கைவிட
வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். மற்ற எதற்கும் உச்ச
வரம்பு என்று ஒன்றும் இல்லாத நேரத்தில், நிலம் வைத்துக்
கொண்டு இருக்கும் இந்த அப்பாவி மக்களுக்கு மட்டும் ஏன் உச்ச
வரம்பு என்று அரசு சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளு
கிறேன்.

அடுத்து, குதிரைப் பந்தயத்தினை ஒழிக்க வேண்டும், சூதாட்ட
மனப்பான்மையை ஒழித்திட வேண்டும் என்று எல்லாம் அன்றைக்
குச் சொல்லிவிட்டு, இன்று மக்களிடையே சூதாட்ட மனப்பான்
மையை வளர்க்கக்கூடிய பத்து லட்சம் பேருடைய பணத்தைக்
கொண்டு ஒருவனை இலட்சாதிபதியாக்குகிறேன் என்று சொல்லும்
இந்தப் பரிசுச் சீட்டு சூதாட்டத்தை ஏற்படுத்தியிருப்பது முறையா
என்று சிந்திக்க வேண்டும். ஒன்றுமே இல்லாதவன் இப்படி
இலட்சாதிபதியாகிறான். ஆனால் நிலத்தை வைத்துக்கொண்டு
இருக்கும் நிலச்சுவான்தார்கள் உங்கள் சட்டத்தினால் நிலங்களை
விட்டு விட்டு ஓட்டாண்டியாகிறான். இது எந்த வகையில் நியாய
மாக இருக்க முடியும்? ஒரு ஏக்கர் வைத்துக்கொண்டு இருந்தால்
அதில் 300 ரூபாய் வருமானம் வருகிறது. 16 ஏக்கர் நிலம் வைத்
துக்கொண்டு இருந்தால் 4,500 ரூபாய் வருமானம் கிடைக்கக்கூடும்.

இந்தத் தொகையில்தான் அந்த விவசாயி தன் குடும்ப வாழ்க்கை, குடும்பத்தில் வர இருக்கும் கல்யாணங்கள் போன்றவற்றைச் செய்ய வேண்டும். இந்த நில சம்பந்தமாக நமது சென்னை சர்வ கலாசாலையினர் ஒரு ஆராய்ச்சி செய்து

'Madras University Farm Management studies had revealed that cultivation of a holding of 10 to 15 acres is uneconomic and the marginal productivity rate is less than in the case of bigger sizes.'

இப்படி குறைக்கப்பட்ட நிலங்களில் பயிரிடுவதால் உற்பத்தி பாதிக்கப்படுகிறது என்ற முடிவிற்கு வந்து இருக்கிறார்கள். இதனால் உற்பத்தி—வேலைத் திறன் இரண்டும் பாதிக்கப்படுகிறது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட சீர்திருத்தங்களால் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. தமிழ் நாட்டிலே 1.75 லட்சம் ஏக்கர்கள் ஒரு ஏக்கர் அரை ஏக்கர் என்று வைத்துக்கொண்டு இருப்பவர்களிடம் தான் இருக்கின்றது. இப்படி ஒரு ஏக்கர் அரை ஏக்கர் நிலத்தை வைத்துக்கொண்டு இருப்பவர்கள் இன்று சொல்ல முடியாத தொல்லைக்கு உள்ளாகியிருக்கிறார்கள். இப்படி நிலத்தில் தங்கள் உழைப்பைத் தரக்கூடியவர்களிடையே பெரும் அளவிற்கு வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியிருக்கிறது. அதிக பட்சத்திற்கு உச்ச வரம்பு என்று சொல்லுகின்றீர்கள். அப்படியானால் ஒவ்வொருவரும் குறைந்த பட்சம் இவ்வளவு நிலமாவது வைத்துக் கொண்டு இருக்கவேண்டும் என்று சொன்னால் என்ன செய்யப் போகின்றீர்கள்? எவ்வளவு பேர்களுக்கு, நிலம் அற்றவர்களுக்கு நிலத்தைக் கொடுத்துவிட முடியும் என்பதையெல்லாம் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து இராமநாதபுரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்ற கோரிக்கை வெகு நாட்களாக இருந்து வருகிறது. இந்த மாவட்டம் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைக்கு எப்படி எப்படியோ பரவியிருக்கிறது. எங்கே போய் நின்றாலும் இராமநாதபுரம் மாவட்டம் என்றுதான் சொல்லுவார்கள். இந்த மாவட்டத்திற்கு நிர்வாக ரீதியில் இரண்டு மாவட்டக் கலெக்டர்கள் இருப்பது மிக மிக அவசியம். அமைச்சர் அவர்கள் தலைநகர் பிரச்சனையைக் குறிப்பிட்டு, அனைத்துக் கட்சியினரும் சேர்ந்து கொண்டு இது விஷயத்தில் ஏகோபித்த முடிவினைச் சொல்லுங்கள் பார்க்கலாம் என்றால், இது விஷயத்தில் கட்சிக்கு கட்சி மாறுபட்டுத்தான் நிற்பார்கள். ஒவ்வொருவர் கையிலும் தடியைக் கொடுத்தால் அடித்துக்கொண்டுதான் நிற்பார்கள். ஆனால் பிரச்சனை தீராது. எனவே அரசே இந்தப் பிரச்சனையில் ஒரு முடிவெடுக்க வேண்டும். அப்படி முடிவெடுத்தால் அனைத்துக் கட்சியினரும் ஏற்றுக்கொள்ளுவார்கள். ஆகவே இந்த தலைநகர்ப் பிரச்சனையிலும் மாவட்டத்தை நிர்வாகத் திறனையொட்டி இரண்டாகப் பிரித்தலைப் பற்றியும் அரசு சீக்கிரமே ஒரு முடிவெடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.



அடுத்து தூய்மையான நிர்வாகம் நடைபெற வேண்டும். தூய்மையான நிர்வாகம் மட்டும் இன்றி துரிதமாக முடிவெடுத்தலும் இன்றைக்கு அவசியமாகிறது. அன்றைக்கு ஆங்கிலேயன் காலத்திலிருந்த சிவப்பு நாடா முறையில் இன்னும் மாறுதலைக் காண முடியவில்லை. பச்சை நாடா ஆக்குவதாகச் சொல்லுகின்றார்கள். ஆனால் ஒன்றும் காரியாம்சத்தில் நடைபெறவில்லை. நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தி விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, நமது நாட்டின் பல்வேறு பகுதியில் அண்மையில் ஏற்பட்ட பஞ்ச நிலைமை பற்றி அறிவோம். பஞ்ச நிவாரண வேலைகளைப் பொறுத்தவரையில் இராமநாதபுரத்தில் சிறந்த முறையிலேயே அவை நடைபெற்று இருக்கின்றன என்று சொல்லுவேன். ஆனால் சிவகங்கை, பரமக்குடி போன்ற பகுதிகளில் பஞ்ச நிலை இன்னமும் நீடிக்கின்றது. குடி தண்ணீருக்குக் கூட அந்தத் தாலுக்காக்களில் உள்ள மக்கள் இன்றைக்கும் பெரிதும் அவதிப் படுகின்றார்கள். விவசாயிகள், உள்ள நிலத்தைப் பயிரிட முடியாமல் வேலை வாய்ப்புகளைத் தேடிக்கொண்டு அண்டையிலுள்ள தாலுக்காக்களுக்கும் மாவட்டங்களுக்கும் பல்லாயிரக்கணக்கில் சென்றுகொண்டு இருக்கின்றார்கள். மிகவும் பரிதாபகரமான நிலை இன்று அந்தப் பகுதிகளில் நீடிக்கின்றது. எனவே, அந்தப் பிரதேசத்தைப் பஞ்சப் பிரதேசம் என்று அறிவிக்க வேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படி அறிவிப்புச் செய்து பஞ்ச நிவாரண வேலைகளை அங்கே உடனடியாகத் துவங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இதேபோலத்தான் ஒரூர் வட்டத்தில் 1964-லும் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. தொடர்ந்து 1965, 1967-ல் எல்லாம் பெரும் பஞ்ச நிலை ஏற்பட்டது. இதனால் ஆண்டொன்றுக்கு விவசாயிகளுக்குப் பத்து கோடி ரூபாய் அளவிற்கு நஷ்டம் ஏற்படுகிறது. எனவே இப்படிப் பஞ்சத்தாலும் இயற்கையின் சீற்றத்தாலும் அவதிப்படும் விவசாயப் பெருங்குடி மக்களைக் காப்பாற்றும் வகையில் அரசு இப்படிப்பட்ட நடவடிக்கைகளை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்ளுகிறேன், வணக்கம்.

***திரு. ஆ. துரையரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள 'மாவட்ட நிர்வாகம்' என்ற கோரிக்கையின் கீழ் பேச வாய்ப்பளித்தமைக்காக நான் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன். நமது பேரறிஞர் அண்ணா அவர்களுடைய ஆசியின் கீழ் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு துவக்கப்பட்ட நமது அரசும் அதன் கீழ் இயங்கிவரும் மாவட்டங்களின் நிர்வாகப்பணியும் காந்திய வழியில் அஹிம்சா தத்துவத்தின் அடிப்படையில் பணியாற்றி காந்திய இலட்சியமான கிராம

இராஜ்யம் என்ற கொள்கையை நிறைவேற்றி வருகிறது என்று பெருமையுடனும் பூரிப்புடனும் சொல்லிக்கொள்ள விழைகிறேன். நமது மாவட்ட-மாநில நிர்வாகம் அண்டையிலுள்ள பல மாநிலத்தவர்களால் போற்றப்பட்டு வருகிறதைப் பார்க்கிறோம். நமது அரசின் மனுநீதித் திட்டம் நாட்டின் பல்வேறு மாநிலத்தவரையும் கவர்ந்திருக்கிறது. நமது அரசு இலட்சக்கணக்கான ஏக்கர் தரிசு நிலத்தை நிலமற்ற ஏழை மக்களுக்குப் பகிர்ந்து கொடுத்து இருக்கிறது. என்றுமே கண்டிராத மாபெரும் பஞ்சம் நமது மாநிலத்தைப் பெரும் அளவில் வாட்டிய நேரத்தில் நமது மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் மத்திய அரசுடன் திறமையுடன் வாதிட்டு ஏறத்தாழ 16 கோடி ரூபாய்க்கு மேல் பஞ்ச நிவாரணப் பணிகளுக்காகப் பெற்று, பஞ்சத் துயர் துடைப்புப் பணிகளை மாநிலம் முழுவதும் நிறைவேற்றி வைத்திருக்கின்றார்கள். ஆனால் மதிப்பிற்குரிய எதிர்க்கட்சி உறுப்பினர்களில் சிலர் இந்தப் பஞ்சத் துயர் துடைப்புப் பணிகளில் ஊழல்கள் நடந்திருக்கின்றன என்று குற்றம் சாட்டிப் பேசினார்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் அங்கு பஞ்சத் துயர் துடைப்புப் பணி சிறப்பாகவும் செம்மையாகவும் நடைபெறவில்லை என்றும் ஊழல்கள் நடந்து இருக்கின்றன என்றும் 'சிண்டிகேட்' காங்கிரசைச் சார்ந்துள்ள மதிப்பிற்குரிய திரு. இராமச்சந்திர துரை அவர்கள் குற்றம் சாட்டிப் பேசினார்கள். அவர் தம்முடைய குற்றச்சாட்டினை, அவர் கூறிய ஊழல்களை அவர் நிரூபித்துவிட்டால் நான் என்னுடைய பதவியைத் துறக்கத் தயாராயிருக்கிறேன். அப்படி அவர்களால் நிரூபிக்க முடியவில்லையென்றால், அவர்கள் தம்முடைய பதவியைத் துறக்கத் தயாராயிருக்கிறார்? என்று கேட்க விரும்புகிறேன். சட்ட மன்றத்திற்கு வெளியிலே பேசும்போது 'ஸிண்டிகேட்' காங்கிரஸ் நண்பர்கள் நமது ஆட்சியைப் பற்றிச் சிறப்பாகப் பேசுகின்றார்கள். ஆனால் இந்த மன்றத்திலே பேசும்போது வேறு விதமாகப் பேசுகின்றார்கள். வெளியே ஒப்புக்கொள்ளுகின்றார்கள். '20 ஆண்டு காலத்தில் நாங்கள் மக்களை மறந்து ஆட்சி புரிந்தோம், மேல் மட்டத்திலேயே நாங்கள் வாழ்ந்துவிட்ட காரணத்தினாலேதான் ஏழைகளைப்பற்றி நினையாது இருந்துவிட்டோம்' என்று ஒப்புக்கொண்டு பேசுகின்றார்கள். ஆனால் உள்ளே பேசும்போது வேறுவிதமாகப் பேசுகின்றார்கள். இது வேதனைக்குரிய ஒன்றாகும். நமது ஆட்சியைப் பொறுத்தவரையில் கடந்த 20 ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சியிலும் செய்திராத பெரும் சாதனையான நிலச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்து, 15 ஏக்கர் உயர்ந்த பட்சம் என்று கொண்டு வந்து இருக்கின்றோம். இதற்காக நமது வருவாய்த்துறை அமைச்சர் அவர்களை நாம் மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறோம். இந்தியாவிலே மட்டுமின்றி உலகத்திலேயே இது மிகப் பெரிய புரட்சிகாமான திட்டம் என்று சொல்லிக்கொள்வதில் பெருமையடைகிறோம். சாதாரணமாக இந்தத் திட்டத்தினால் பாதிக்கப்படக்கூடியவர்கள் நடுத்தர மக்கள்தான், இன்றைக்கு அவர்கள் பெரும்பாலும் தி. மு. கழகத்

தில் பற்றுதல் கொண்டு, கழக ஆட்சிக்கு ஊன்றுகோலாக இருந்து கொண்டு இருக்கின்றார்கள். அவர்கள்தான் இந்தச் சட்டத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டு இருக்கின்றார்கள். அப்படி இருந்தும் கூட இந்தப் புரட்சிகரமான திட்டத்தைக்கொண்டு வந்து இருக்கின்றோம். இதற்காக அரசினை எதிர்க்கட்சியினர் பாராட்ட வேண்டாமா என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் ஒரு பகுதியில் நிர்வாகப் பளு அதிகமாகவும் மற்றொரு பகுதியில் குறைவாகவும் இருக்கிறது. குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் சத்திரம் இல்லை. நிர்வாகப் பொறுப்பை மாவட்ட வருவாய்த் துறை அதிகாரியின் கீழ் கொண்டு வருவது சிறப்பு அம்சம் ஆகும். அடுத்து எல்லா மாவட்டங்களிலும் வருவாய்த் துறை அதிகாரிகளுக்குக் குடியிருப்பு வசதி கொடுக்கப்படவேண்டும். அது போன்று வட்ட ஆட்சித் தலைவருக்கும் கொடுக்கப்பட வேண்டும். ஒவ்வொரு போலீஸ் ஸர்க்கிள் இன்ஸ்பெக்டருக்கும் அவர்களுடைய வேலையைத் திறம்படச் செய்வதற்கு ஜீப் கார்கள் கொடுக்கப்பட வேண்டும். இன்னும் கிராம உத்தியோகஸ்தர்களுக்கு மேலும் பல வசதிகளைச் செய்து கொடுக்கும் வகையில் அவர்களுடைய ஊதிய உயர்வு பற்றி சம்பளக் கமிஷனுக்கு விட இருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கின்றார்கள். இவற்றையெல்லாம் சிறப்புறச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனது தொகுதியைப் பொறுத்தவரையில், பஞ்சத் துயர் துடைப்புப் பணிகளுக்கு என 18 லட்சம் ரூபாய்தான் தரப்பட்டதாக காங்கிரஸ் கட்சி அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது தவறான புள்ளி விவரம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எனது தொகுதி தஞ்சை மாவட்டத்தோடு இணைந்து இருந்தாலும் அது இராமநாதபுரம் மாவட்டத்தைப் போன்றது. அதற்கு 18 இலட்சம் இல்லை, 30 லட்சம் ரூபாய்க்கு மேல் நிதி ஒதுக்கீடு செய்து, பல நற்பணிகளைக் கடந்த 20 ஆண்டு காலத்தில் செய்ய முடியாத பல வேலைகளைச் சிறப்பாகச் செய்து தந்து இருக்கின்றார்கள் என்று கூறி அதற்காக இந்த அரசுக்கு நன்றி கூறி முடிக்கிறேன் வணக்கம்.

**திரு. நா. காசிராமன் :** தலைவர் அவர்களே, எங்கள் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து சில வார்த்தைகளைக் கூற ஆசைப்படுகிறேன். நில வருவாயில், 'நில வரியையும், அந்த நில வரியை அடிப்படையாகக் கொண்டு வசூலிக்கப்படும் பல்வேறு வரிகளையும் உபரி வரிகளையும்' கை விட வேண்டும் என்று நீங்களே முன்பு சொல்லியிருக்கின்றீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 'நீங்கள் முன்பு சொல்லியிருக்கின்றீர்கள்' என்றால் யாரைக் குறிப்பிடுகின்றீர்கள் ?

**திரு. நா. காசிராமன்:** தலைவர் அவர்கள் சொன்னதுதான். பெயரைக் குறிப்பிட வேண்டாம் என்று இருந்தேன். பேரவைக் குறிப்பேடுகளிலிருந்துதான் இதை எடுத்துச் சொல்லுகிறேன். அதாவது, இப்போது ஆளும் கட்சியில் இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் எதிர்க்கட்சியாக இருந்த போது அதில் ஒரு உறுப்பினராக இருந்த புலவர் திரு. கோவிந்தன் அவர்கள் 8—11—1966 அன்று குறிப்பிட்டவை இவை. அன்று மேலும் குறிப்பிட்டார்கள், "கேட்டவர்கள் நிலை மாறி, கேட்கப்பட்டவர்களாக ஆகிவிட்ட காரணத்தினாலேயே கேட்ட பிரச்சினையின் முக்கியத்துவம் குறைந்துவிடாது என்று நான் இங்கே தெரிவித்துக்கொள்ளுகிறேன்" என்று. அந்த முக்கியத்துவம் இன்னும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. கேரளத்தில் இருப்பது போல 'பேஸிக் லேண்டு டேக்ஸ்' அடிப்படையில் நிலவரி விதிப்பைப் பொறுத்தவரையில் இங்கேயும் சில மாற்றங்களைச் செய்வது நல்லது என்று கூறிக்கொள்ளுகிறேன். புஞ்சை நிலத்திற்கான வரியை யெல்லாம் எடுத்து விட்டோம் என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆனால் வரிக் கணக்கைப் பார்த்தால் கிட்டத்திட்ட 60, 65 லட்சம் ரூபாய்தான் தள்ளப்பட்டு இருக்கின்றது. இதை 1968-69-க்கான கணக்கில் புரிந்துகொள்ள முடிகின்றது. ஒரு ஆண்டின் மொத்த வருமானத்தில் அதாவது ரூ. 27,792 லட்சத்தில் சுமார் ரூ. 40 லட்சம்தான் தள்ளப்படுகின்றது. இது 1.4 சதவிகிதம். அதாவது, 100 ரூபாய் வருமானம் என்றால் 14 பைசா தள்ளுபடியாக இருக்கிறது. ஆனால் இதற்கு எவ்வளவு பெரிய விளம்பரங்கள் நடந்துக்கொண்டிருக்கின்றன என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

முத்திரைத்தாள்கள் பற்றி உள்ள சில சங்கடமான நிலைமைகளைச் சொல்ல விரும்புகிறேன். மார்க்கெட் வேல்யூவில் 4½ சதவிகிதம் சர்சார்ஜ் போடுகிறார்கள். ஆனால் ஸ்தல ஸ்தாபனங்களுக்குப் போகும்பொழுது 'கன்ஸ்டிரேஷன் ஆஃப் அமெண்ட்' இல் 5 சதவிகிதம்தான் கிடைக்கிறது. இதனால் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு வருவாய் குறைந்து விடுகிறது. இதற்குக் காரணம் என்னவென்றால், சர்க்காருக்கு வருமானம் கிடைக்கக்கூடிய அந்தச் சட்டத்திலே மாத்திரம் திருத்தம் செய்து, சர்க்கார் தங்களுக்கு வருமானத்திற்கு வழிவகைகளைப் பார்த்துக் கொண்டார்களே தவிர, ஸ்தல ஸ்தாபனங்கள் எப்படிப் போனால் என்ன என்ற முறையில் அதற்கு வருமானத்திற்கான வழிவகைகளைச் செய்து தர வேண்டுமென்ற முறையிலே அந்தச் சட்டத்தைத் திருத்தி அமைத்ததாகத் தெரியவில்லை. எனவே, அதற்கும் வழிவகை செய்து கொடுப்பது நல்லது என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அப்படிச் செய்யாவிட்டால் கள்ளப் பணப் புழக்கம் அதிகமாக ஏற்பட்டுவிடும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.





அடுத்தபடியாக, 'லோன்ஸ் அண்ட் அட்வான்சஸ்' என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையானது பல நல்ல காரியங்களுக்கு உபயோகப்படுகிறது. சென்னை கார்ப்பரேஷனுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும், விவசாயிகளுக்கும், ஹரிஜன முன்னேற்றத்திற்கும், நகரசபைகளுக்கும், கோவப்பரேட்டிவ் இன்ஸ்டிடியூஷன்களுக்கும், சுகாதார நல ஊழியர்களுக்கு அதாவது முனிசிபாலிட்டிகளிலே வேலை பார்க்கும் ஸ்கேவஞ்ஜர்ஸ்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கவும், அத்துடன்கூட, மெடிக்கல் காலேஜ், இன்ஜினியரிங் காலேஜ், வெட்டர்னரி காலேஜ் ஆகிய காலேஜுகளில் படிக்கும் மாணவர்களுக்கு உதவித் தொகை கொடுக்கவும் ஒதுக்கப்பட்டிருக்கும் அந்தத் தொகையானது 1968–69-ல் 51 கோடியாக இருந்தது, 1970-71-இல் 23 கோடி என்று குறைக்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 28 கோடி ரூபாய் அளவுக்குக் குறைக்கப்பட்டிருக்கிறது. இப்படிக் குறைத்துக் கொண்டே இருப்போமானால், அந்தந்த உதவிகளைப் பெற்று வந்தவர்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப்படுவார்கள் என்பதை இந்த அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால்,

'Loans to students studying in Engineering, Veterinary, Medical and Agricultural Colleges—Polytechnics including special institutions'.

என்ற இடத்திலே 1966-67-லே காங்கிரஸ் ஆட்சியிலே இருந்த பொழுது, 24.30 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டது. 1966-67-லே 24 லட்சமாக ஒதுக்கப்பட்டிருந்தது, 1968-69-லே 16¾ ஆகக் குறைந்து, இப்பொழுது 5 லட்சம்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். ஏன் இவ்வாறு குறைத்தார்கள், அவர்கள் தங்களுக்கு உண்டான கஷ்டங்களை எடுத்துச் சொன்னார்களா, ஏதேனும் கஷ்டங்கள் விளைந்தனவா என்ற தகவலைத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். இவ்வாறு குறைக்காமல், அதற்குண்டான தொகைகளை அதிகமாக உயர்த்திக் கொடுப்பது நல்லது என்ற கருத்தையும் நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இன்னும் ஒரேவொரு விஷயத்தைமட்டும் கூறி முடித்து விடுகிறேன். விவசாயிகளை நன்றாக ஊக்குவித்தால்தான் உணவு உற்பத்தி பெருகும் என்ற நிலை இருக்கிறது. 'ஹை ஈல்டிங் வெரைட்டி' உபயோகிக்கும் விவசாயிகளுக்கு, விவசாயத்தை ஆரம்பிப்பதற்கு முன்னால், முன் பணமாகச் சிறுதொகை கொடுத்து, விவசாயம் முடிந்த பிறகு, அறுவடை காலத்திலே, கொடுக்கப்பட்ட தொகைக்கு வட்டி இல்லாமல் நெல்லைக் கொள்முதல் செய்து பெறுவது, அதாவது பண்டமாகவே பெறுவது என்று செய்தால் 'ஹை ஈல்டிங் வெரைட்டி'-க்குப் போக அவர்களுக்கு ஆசையாக இருக்கும். அப்படிச் செய்தால் நாட்டிலே உணவு உற்பத்தி பெருகும். எனவே அந்த உதவியைச் செய்வது நல்லது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. நா. காசிராமன்] [1970 மார்ச் 14

அடுத்து, பஞ்ச நிவாரணத்தைப் பற்றிச் சுருக்கமாக ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பஞ்ச நிவாரணத்திற்கு என்று, வறட்சியைப் போக்குவதற்காக, 14 கோடி ரூபாய் மத்திய சர்க்காரிலிருந்து பணம் வந்தது என்று சொல்கிறார்கள். அவ்வளவும் நல்ல முறையிலே செலவழிக்கப்பட்டது என்றும், தமிழ்நாட்டிலே எந்தவிதமான ஊழலும் இல்லை என்றும் அரசாங்கத்திலே உள்ளவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பல இடங்களில் ஊழல்கள் இருப்பதாகவும், பல சங்கடங்கள் இருப்பதாகவும் பேப்பர்கள் வாயிலாகப் பார்க்கிறோம். உதாரணத்திற்குச் சொல்லப் போனால், நமது அரசாங்கத்தின் முதல் காரிய தரிசி அவர்களே, இராமநாதபுரம் ஜில்லாவிற்குப் போய் இருந்த பொழுது, பல இடங்களில் தவறுகளைக் கண்டு பிடித்து, அவைகளில் ஒரு சிலவற்றை எடுத்துச் சொல்லி, அந்த ஒரு சிலவற்றில் சில செய்திகள் பத்திரிகைகளில் வந்தன. கிணறு வெட்டப்பட்ட பல இடங்களில், கிணறுகளில் தண்ணீர் இல்லை, சரியாக இல்லை, கிராம உத்தியோகஸ்தர்கள் தவறு செய்கிறார்கள் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் பார்க்கும்பொழுது என்ன தோன்றுகிறது என்று சொன்னால், பஞ்சமோ நாட்டிலே, பணமோ ஏட்டிலே, மக்கள் நாட்டமோ பணபாட்டிலே, மந்திரிகள் நாட்டமோ மக்களது ஓட்டிலே என்ற நிலைமைகளைத்தான் நாம் அடைந்து கொண்டிருக்கிறோம் என்பதைக் கூறி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. கோ. பூவராகன்:** கனம் சபாநாயகரவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

வருவாய்த்துறை இலாக்கா என்பது நம்முடைய திட்ட வேலைகளோடு இணைந்த ஒரு இலாக்கா. அந்த இலாக்கா இல்லாமல் காரியம் நடைபெறாது என்று சொல்லும் அளவுக்கு ஒரு முக்கியத்துவம் வாய்ந்த இலாக்காவாக அது பணிபுரிந்து வருவதைப் பார்க்கிறோம். திட்டங்கள் அதிகரிக்க அதிகரிக்க, அந்த இலாக்காவில் வேலைப் பளு அதிகமாக ஆகிக் கொண்டு வருவதைப் பார்க்கிறோம். அந்த இலாக்காவில் இருப்பவர்களுக்கு வேலைகள் அதிகமாக இருந்தாலும், ஆங்காங்கு மாவட்டங்களிலே அந்த வேலைகள் பகிர்ந்து அளிக்கப்பட்டிருக்கின்றனவா, அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றவா என்று பார்த்தால் பெயரளவில்தான் இருக்கிறதே தவிர, அதிகாரம் இல்லை. இன்றையதினம், மத்திய சர்க்காரை நாம் குறைகூறுகிறோம், எல்லா அதிகாரமும் மத்திய சர்க்காரே வைத்துக் கொண்டிருக்கிறது, மாநில சர்க்காருக்கும் அதிகாரம் இல்லை என்று சாதாரணமாக கிராமப்புறங்களில் நெல் அரைவை மில் துவங்க வேண்டுமென்று சொன்னால் இங்கே வந்து அமைச்சர்களைப் பார்த்தால்தான் அந்தக் காரியம் நடக்கும். அவர்கள் கையெழுத்துப் போட்டால்தான் அது நடக்கும். அந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அந்த அதிகாரம் கிடையாது.



1970 மார்ச் 14] [திரு. கோ. பூவராகன்]

இது சாதாரண காரியம், பெரிய காரியம் ஒன்றுமில்லை. அவர்கள் அங்கிருக்கும் சூழ்நிலையை ஆராய்ந்து, அவர்களுக்கிருக்கும் அதிகாரத்தை வைத்துக் கொண்டு, அந்த இடத்திலே இந்த நெல் அரைவை மில்லைத் துவங்கலாம் என்றால் கொடுத்துவிடலாம். அப்படிக் கொடுப்பதற்குக்கூட அதிகாரம் இல்லை.

சமீபத்திலே, சென்ற ஆண்டு பஞ்சம் ஏற்பட்டது. அதற்காகப் பணம் ஏராளமாகச் செலவழிக்கப்பட்டது. சில கிராமங்களிலே தண்ணீர் வசதி இல்லை என்று தண்ணீர் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். நெய்வேலி வட்டாரத்திலே சுற்றியிருக்கும் கிராமங்களுக்கு அப்போது சில நாட்கள் கொடுத்துவிட்டு, சில நாட்கள் நிறுத்திவிட்டார்கள், மழை பெய்யவில்லை. தண்ணீர் இல்லை என்று. மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டால், பணம் இருந்தவரை தண்ணீர் கொடுத்தோம், பணம் இல்லை, தண்ணீர் கொடுப்பது நின்று விட்டது என்று சொல்கிறார்கள். இம் மாதிரி நெருக்கடியான நேரங்களிலே, அவருடைய அதிகாரத்தை வைத்துக் கொண்டு, இருக்கும் நிதி வசதியை வைத்துக் கொண்டு அந்தக் காரியங்களிலே, அமைச்சரவையிலிருந்து உத்தரவு வரும் வரையில் காத்துக் கொண்டிராமல், பணத்தைச் செலவழிக்க அதிகாரம் வழங்க வேண்டும். அப்படியிருந்தால்தான் நல்ல முறையில் அமையும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாவட்ட அளவிலே, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இப்பொழுதிருக்கும் அதிகாரம், அங்கிருக்கின்ற மக்களுக்கு நல்ல முறையிலே பயன் அளிக்கக்கூடிய அளவிலே செய்யக்கூடிய காரியம் ஏதாவது இருக்கிறதா என்றால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஏதாவது ஒரு திட்டத்தைச் செய்ய வேண்டுமென்றால், இங்கு அனுப்பி, இங்கிருந்து அனுமதி பெற்று வருவதற்குள் காலம் கடந்துவிடுகிறது. அதனால் அந்தக் காரியத்தை செய்ய முடியவில்லை. மாவட்டத்தில் அன்றாடம் இருக்கும் பிரச்சனைகளை உணருகிறார்கள், அப்படி உணர்ந்தாலும் அதைச் செய்ய அதிகாரம் இல்லாமல் இருப்பதால், தள்ளிப் போடப்படுகிறது, செய்ய முடியவில்லை. எதற்கெடுத்தாலும் இங்கே வந்து அனுமதி பெற வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம்.

அதேபோல பல மாவட்டங்களிலே பார்க்கிறோம், சேம நலக் கமிட்டி என்று இருக்கிறது. சேம நலக் கமிட்டிக்கு, ஆண்டு தோறும் ஏதாவது ஒரு நிலையை வைத்துப் பணம் வசூல் செய்கிறார்கள். அப்படிச் செய்யும்பொழுது, அது சரியாகப் பயன்படுகிறதா, அதை எவ்வாறு வசூல் செய்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். பணம் சரியாக வசூல் செய்யப்படவில்லை. கணக்கு வழக்குகள் சரியாக இல்லை. ஐந்தாறு ஆண்டுகளாக சேமநலப் பணிக்காகப் பல மாவட்டங்களில் பணம் செய்யப்பட்டிருக்கிறது. அதையெல்லாம் விசாரிக்க ஒரு தணிக்கைக் குழு வைத்தோ, அல்லது யாராவது மேல் மட்டத்திலேயுள்ள அதிகாரி சென்றோ பார்க்க வேண்டும், அந்த மாவட்டத்திலுள்ள

அந்தக் குழுக்களிலெல்லாம் யார் யார் பணியாற்றுகிறார்கள், எவ்வளவு வசூலானது, எந்தெந்த முறையிலே செலவிட்டிருக்கிறார்கள் என்று கணக்கு கிடையாது. பல இடங்களில் ஒரு கார்டு அச்சடித்திருக்கிறார்கள். 100 ரூபாய் என்று போட்டிருக்கிறார்கள். கவுண்டர்ஃபாயில் கிடையாது. வவுச்சர் கிடையாது. ஏதோ இன்விடேஷன் கார்டு மாதிரி இருக்கிறது. அந்த முறைகளை மாற்ற வேண்டும். சேமநல நிதிக்கு ஆங்காங்கு பணம் வசூலிக்க வேண்டிய அவசியம் வந்தால், அவர்கள் பிரதம காரியதரிசியின் அனுமதியைப் பெற வேண்டும். அப்படிப் பெறும்பொழுது, இங்கே தான் டிக்கெட்டுகள் அச்சடிக்கப்பட வேண்டும். ஒரு மாவட்டத்திற்கு எவ்வளவு கோருகிறார்களோ, எந்தெந்த இனங்களில் கோருகிறார்களோ அவைகளை இங்கேயே அச்சிட வேண்டும். முத்திரை பதித்து அனுப்ப வேண்டும். அங்கே விற்பனையானது போக, விற்பனை ஆகாதவற்றை அனுப்பி வைத்து விடுமாறும், வசூலான அந்தப் பணம் எந்த அளவிற்குச் செலவழிக்கப்படுகிறது என்பதற்கான தணிக்கை வைப்பதும் நல்லது. குறைபாடுகளைப் போக்க இது உதவியாக இருக்கும். இன்றையத் தினம் பார்க்கிறோம், அவரவர்கள் ஆங்காங்கு குழு அமைத்துக் கொள்கிறார்கள். அந்தக் குழு இங்கே அரசாங்கத்தின் அங்கீகாரம் பெறுகிறதா என்பதைப் பார்க்க வேண்டும். இதுவரையில் அம்மாதிரி நடைபெறுவதாகத் தெரியவில்லை. தணிக்கை செய்தால் இதில் சம்பந்தப்பட்டவர்கள் பல பேர் மாட்டிக்கொள்ளுவார்கள் என்பது தெரியும். அரசாங்கம் தணிக்கை செய்து, எவ்வளவு வசூல் செய்தார்கள், எவ்வாறு செலவழித்திருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும்.

அதோடு அரசாங்கத்தில் ஆண்டுதோறும் மானியங்கள் வரும்பொழுது, பல அறிக்கைகளை வைக்கிறார்கள் அப்படி அறிக்கைகள் வெளியிடுகிற சமயத்தில் ஜமாபந்தி போய்விடும், வருவாய்த் துறை வாரியத்தைக் கலைத்து விடுவோம் என்று தெரிவித்துவிடுகிறார்கள். ஆனால், நடைமுறைக்கு வருகிறபொழுது, இதிலெல்லாம் கொஞ்சம் சிக்கல்கள் இருக்கின்றன. படிப்படியாகத் தான் கொண்டுவரப் போகிறோம் என்று சொல்கிறார்கள். முதலிலேயே இம்மாதிரி அறிக்கைகள் வெளியிடுவதற்கு முன்னால், இதிலே இருக்கிற சிக்கல்களை ஆராய்ந்து, எவ்வளவு தூரம் இதையெல்லாம் செய்ய முடியும், எப்படிச் செய்ய முடியும் என்று கவனம் செலுத்த வேண்டும். அப்படி ஆராய்ந்து பார்த்த பிறகு, இம்மாதிரி அறிக்கைகளை வெளியிடுவது நலமாக இருக்கும். அப்படி இல்லாமல் முதலில் அறிக்கைகளை வெளியிட்டுவிட்டு, பிறகு சிக்கல்கள் இருக்கின்றன என்பதை உணர்ந்து, படிப்படியாக நிறைவேற்றுவதாக இருக்கிறோம் என்று சொல்வது அவ்வளவு பொருத்தமாக இருக்காது.

மாவட்ட அதிகாரிகளை அடிக்கடி மாற்றுவது என்பது கூடாது. உதாரணமாக தென் ஆற்காடு மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், 3, 4 மாதங்களுக்கு ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் மாற்றப்படு



கிறார். அங்கு இருக்கிற சூழ்நிலையை அறிந்து, அதற்குத் தகுந்தவாறு பணியாற்ற முற்படுவதற்குள், அடுத்த இலாகாவிற்கோ அல்லது இடத்திற்கோ அவர் மாற்றப்பட்டுவிடுகிறார். அதன் காரணமாகக் காரியங்கள் சரிவர முறையாக நடைபெற முடியாத நிலைமை ஏற்படுகிறது. குறைந்த பட்சம் மூன்று ஆண்டுகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரை ஒரு இடத்தை விட்டு மாற்றக் கூடாது என்ற முறையைக் கைக்கொள்ள வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் என்றால் ஏதோ அதை ஒரு பயிற்சி இடமாக வைத்துக் கொள்ளக் கூடாது. ஒரு ஆண்டுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டும் என்பதற்காக அதிகாரிகளை மாவட்ட ஆட்சித் தலைவராக ஓராண்டு காலத்திற்கு மட்டும் நியமிப்பது என்பது கூடாது. பயிற்சி பெறுகின்ற தற்காலிக இடமாக மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தியோகத்தை ஆக்கிவிடக் கூடாது. மாவட்ட ஆட்சித் தலைவருக்கு சில அதிகாரங்கள் இருக்கின்றன. சில பொறுப்புகள் இருக்கின்றன. மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவராக சிறப்பாக பணிபுரிந்து நற்பெயர் எடுக்கக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவராக இருப்பவரை மாற்றக் கூடாது என்ற ஒரு நிலையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இந்தச் சமயத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அமைச்சர் அவர்கள் லட்சக்கணக்கான பேர்களுக்கு பட்டாக்கள் வழங்கியிருப்பதாக அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். இப்படிப் பட்டாக்கள் வழங்குகிற ஒரு நிலையில், ஏரிப் புறம்போக்குகளில் என்குரோச்மெண்டுகள் இருக்கின்றன. குளங்களில், அணைக் கட்டுப் பகுதிகளில் என்குரோச்மெண்டுகள் இருக்கின்றன. நமக்கு நீர்நிலை வசதி மிகவும் குறைவாக இருக்கிறது. நீர்த்தேக்கங்களை இனிமேல் அதிகமாகக் கட்ட முடியாத நிலையில் நாம் இருக்கிறோம். இருக்கிற நீர்த்தேக்கங்களை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். அதிக நீரை எவ்வாறு, இருக்கிற நீர்த் தேக்கங்களில் தேக்குவது என்ற ஆராய்ச்சியில் நாம் ஈடுபட்டிருக்கும்பொழுது, நமக்குத் தெரிந்தவர்கள், நம்மைச் சார்ந்தவர்கள் என்று சொல்லி அவர்களுக்குப் பட்டா போட்டுக் கொடுக்கும் நிலையைத் தவிர்க்க வேண்டும். ஆகவே, இம்மாதிரி பட்டாக்கள் வழங்கும்பொழுது சரியான முறையில் கண்காணிக்க வேண்டும்.

இப்பொழுது இருக்கிற வரியைப்பற்றிச் சொன்னார்கள். நாம் ஒரு கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். இனிமேல் 15 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் ஒருவருக்கும் நிலம் இல்லை என்ற ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கிறோம். விவசாயிகளுக்குப் பல கஷ்டங்கள், பல சங்கடங்கள் இருக்கின்றன. தொல்லைகள் இருக்கின்றன. எல்லாவற்றிற்கும் அவர்கள்தான் பங்கு கொடுக்கிறார்கள். திட்ட காரியங்களுக்காக அரசாங்கக் கடன்களுக்கு உதவுகின்றவர்கள் யாராவது இருக்கிறார்களா என்றால், விவசாயிகளைத் தவிர வேறு யாரும் இல்லை. எல்லாக் காரியங்களிலும் விவசாயிகள்

நம்மோடு இருந்து பங்கு கொள்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது சலுகை கொடுக்க வேண்டுமென்ற நிலையிலே, நில வரியை, விவசாய வருமான வரியை அறவே ரத்து செய்துவிட வேண்டும் என்ற ஒரு கொள்கையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்தக் கொள்கையை இந்த ஆண்டே நிறைவேற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

பட்டாக்கள் வழங்கப்படுகிறபொழுது, கூட்டுப்பட்டா, தனிப் பட்டா என்றெல்லாம் சொல்கிறார்கள். இன்றைய தினம் பல பட்டதாரிகள் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள். அவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காக, அவர்களையெல்லாம் ஆங்காங்கு உள்ள நிலங்களைச் சர்வே செய்வதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். யாருக்கு, எவ்வளவு நிலம் இருக்கிறது என்பதற்கான உரிமைக் கார்டுகளை வழங்குவதற்கு அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். யாராவது நிலத்தை வைத்துப் பணம் பெறுவதாய் இருந்தால்கூட அந்தக் கார்டைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அந்தக் கார்டின் அடிப்படையில், அந்தக் கார்டை வைத்தே அரசாங்கத்தினிடமிருந்து அவர்களுக்கு வேண்டிய கடனைப் பெறலாம். அதற்கு இலகுவாக இருக்கக்கூடிய ஏற்பாடாக அமையும். இந்த உரிமைக் கார்டுகள் வழங்குவது. விலங்க சர்டிபிகேட் வாங்குவதென்றால், அதற்கு ஏராளமான பணம் செலவழிக்க வேண்டியிருக்கிறது. சாதாரணமாக 5 ஏக்கர், 10 ஏக்கர் நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் சிறு விவசாயிகள், குறைந்த பட்சம் அவர்களுக்கு வேண்டிய கடன் வசதியை இந்த அத்தாட்சியை வைத்து செய்து கொள்ளலாம். இந்த உரிமைக் கார்டுகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். நிலங்கள் சர்வே செய்யப்பட்டு, அவர்களுக்கு உடனுக்குடன் இம்மாதிரி உரிமைக் கார்டுகள் வழங்கினால், அவர்களுக்கு இருக்கக் கூடிய சங்கடங்களைப் போக்கி, நல்ல முறையில் வசதிகள் செய்வதற்கு வேண்டிய அளவில் அமையும். ஆகவே, இம்மாதிரியான ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று இந்தச் சமயத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

கிராமப் புறங்களில் வீடுகள் கட்டுவதற்கு அரசாங்கம் குறைந்த பட்சம் ரூ. 5,000 அவர்களுக்குக் கடன் வசதி செய்து கொடுப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். நம்முடைய திட்டங்களிலே நாம் எப்பொழுதும் பார்க்கிறோம், கிராமப்புறங்கள் அறவே புறக்கணிக்கப்படுகின்றன. கிராமப்புறங்கள் முன்னேற்றம் அடைந்தால் தான், கிராம மக்கள் முன்னேற்றம் அடைந்தால்தான், நம்முடைய நாட்டில் நாம் மக்களுக்காகச் செய்கின்ற காரியங்கள் நன்றாகப் பயன்படும், நல்ல முறையில் அந்தக் காரியங்கள் நடைபெறுகின்றன என்பதை நாம் கண்கூடாகக் காண முடியும். எனவே, கிராமப்புறங்களில் அதிக அளவிலே அக்கறை காட்ட வேண்டும். கிராமப்புறங்களில் வீடுகள் கட்டிக் கொள்வதற்கு வசதியாக, குறைந்தபட்சம் ஒவ்வொருவருக்கும் ரூ. 5,000 கடன் உதவி அளிக்க



வேண்டும். கிராமப் பஞ்சாயத்துகளில், நகரப் பஞ்சாயத்துகளில், இன்றைக்கு அந்தப் பகுதிகள் வளர்ந்து வருகிற நிலையில், அங்கெல்லாம் வீடுகட்டிக் கொடுக்கிற சொஸைடிகள் ஏற்கனவே இருந்தன, இடையிலே அவர்களுக்குப் பண உதவி அளித்து அவர்களை ஊக்குவிக்காத நிலை இருக்கிறது. அம்மாதிரி சொஸைடிகளுக்குக் கடன் வசதி அளித்து, நல்ல முறையில் அவைகள் கிராமப் புறங்களிலுள்ள மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

பட்டா வழங்குகிறபொழுது சில சமயங்களில் பாரபட்சம் காட்டப்படுகின்றது என்று சொல்லப்படுகிறது. அமைச்சர் அவர்கள், அப்படியில்லை, பாரபட்சம் காட்டப்படவில்லை என்று சொல்வார்கள். என்னுடைய தொகுதியில் விருத்தாசலத்தில் திரு.வி.க. நகர் என்ற ஒரு பகுதி இருக்கிறது. புதிதாக ஏழை மக்கள் குடியேறியிருக்கிற பகுதி. அவர்களுக்கெல்லாம் பட்டா வழங்கப்பட்டது என்று சொல்கிறார்கள். ஏற்கனவே இரண்டு ஆண்டுகள், மூன்று ஆண்டுகள் அங்கேயே குடியிருந்து வந்தவர்களுக்குப பட்டா வழங்கப்படவில்லை. யார் யார் சிபார்சு பிடித்துக் கொண்டு வருகிறார்களோ அவர்களுக்குத்தான் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. அங்கேயே இருப்பவர்களுக்குப் பட்டா வழங்கப்படவில்லை.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சிபாரிசு பிடித்துக் கொண்டு வருபவர்களுக்குப் பட்டா வழங்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். அது சாதாரண ஒன்று அல்ல. அப்படிப் பொறுப்பற்றதாகச் சொல்லக் கூடாது. ஏதாவது தவறுதல்கள், ஒழுங்கீனங்கள் நடந்திருந்தால், ஆதாரமாகச் சொல்ல வேண்டும். முன்னாள் மந்திரியாக இருந்தவர் இப்படிப் பொதுவான போக்கில் பேசுவது அவ்வளவு நல்லது ஆகாது, சரியானது ஆகாது.

**திரு. கோ. பூவசாகன் :** அங்கே காட்டிலாகாவிற்குச் சொந்தமான ஒரு இடம் இருக்கிறது, ரூபநாராயணன்காடு என்ற இடம். இரண்டு மூன்று வருடங்களாக விவசாயம் செய்துக் கொண்டிருக்கிற அரிசன மக்களுக்கு, பின்தங்கிய மக்களுக்கு, அங்கேயே இருப்பவர்களுக்குப் பட்டா இல்லை. அங்கே 400, 500 ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்தப் பகுதியில் இருப்பவர்களுக்குப் பட்டா வழங்கப்படவில்லை. இந்த இடத்தைப் பட்டா செய்யலாம் என்று அனுமதி கொடுத்திருக்கிறார்கள். காட்டிலாகாவினர் நகரப் பகுதிகளில் இருப்பவர்கள், விருத்தாசலம் போன்ற இடங்களில் இருப்பவர்கள், தங்களுக்குப் பட்டா போட்டுக் கொடுக்கவேண்டும் என்று கேட்டு விண்ணப்பித்திருக்கிறார்கள். இந்த வட்டாரத்தில் ஏற்கனவே இருக்கிற அரிசன மக்களுக்கு, பின்தங்கிய மக்களுக்கு அந்த இடத்தை ஒதுக்கி, பட்டா செய்து கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது என்று கருதுகிறேன். அந்த இடத்தில் நிலம் அசைன்மெண்டு செய்து கொடுத்தால், அந்த வட்டாரத்தில்

[திரு. கோ. பூவராகன்] [1970 மார்ச் 14

இருப்பவர்களுக்கு பட்டா செய்து கொடுத்தால் வசதியாக இருக்கும். ஆகவே, அங்கிருக்கிற 400, 500 ஏக்கர் நிலங்களை அந்த வட்டாரத்தில் இருக்கிற ஏழை அரிசனங்களுக்கும் பின்தங்கிய மக்களுக்கும் பட்டா செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ தவறுதலாக நடந்துவிட்டது என்று சொல் கிறார்கள். அப்படி ஏதாவது தவறுதலாக நடந்திருக்காதா என்பதைத் தெரிந்துகொள்வதற்காகத்தான் கேட்டேன். அவர்கள் சொல்வதிலிருந்து அவர் தொகுதியில் ஒரு இடம் இருக்கிறது. அந்த இடம் காட்டு இலாகாவைச் சேர்ந்தது. அதை விவசாயி களுக்குக் கொடுப்பதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எந்தவிதமான ஆட்சேபமும் இல்லை. அவர்களுக்கு இருக்கிற அச்சம், விருதாசலத்தில் இருக்கிற சில பேர்களுக்குக் கொடுத்து விட்டார்கள் என்பதுதான். அந்த இடத்தில் இருப்பவர் களுக்காகத்தான் கொடுக்க வேண்டும் என்பது அவ்வளவு சரியான தல்ல. யார் நிலத்தை உழவேண்டியவர்களோ, யாருக்கு அதற் கான யோக்கியதாம்சங்கள் இருக்கின்றனவோ, அதை வைத்துத் தான் முடிவு செய்ய வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வெறும் அச்ச உணர்வை மட்டும் அடிப்படையாக வைத்துக் கொண்டு, அபாண்டமான ஒரு குற்றச்சாட்டைச் சாட்டுவது முறையாகாது.

**திரு. கோ. பூவராகன் :** வெறும் அச்சம் மட்டும் அல்ல, ஆதாரத்தோடுதான் சொல்கிறேன் அந்தக் காட்டுப் பகுதிக்கும் விருத்தாசலத்திற்கும் 6, 7 மைல் இருக்கிறது. ஆகவே, விருத்தா சலத்தில் இருப்பவர்களுக்குப் பட்டா போட்டுக் கொடுக்காமல், பக்கத்தில் இருக்கிற அரிசனங்களுக்கு . . . .

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அந்த இடத்தில் குடி இருப்பவர்கள்தான் நிலத்தை உழுகிறார்கள் என்பது அல்ல. விருத்தாசலம் நகரில் இருக்கக்கூடியவர்கள்கூட உழலாம். மாண்புமிகு உறுப்பினர் தவறுதல் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், பொதுப்படையாக இல்லாமல் குறிப்பாகச் சொல்ல வேண்டும். அங்கு இருக்கிற அரிசனங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தினுடைய ஆவல் நீங்கள் மந்திரியாக இருந்தபோது இருந்ததைவிட, அரிசன மக்களுக்கு இந்த அரசு விசேஷமாக சலுகைகள் வழங்குகிறது. நடக்காத ஒன்றை ஏதோ நடந்தது மாதிரி கூறுவது சரியல்ல. குறைபாடுகள் இருந்தால், பொதுப் படையாகச் சொல்வதில் பலன் இல்லை. அதுவும் முன்னால் அமைச்சர் அவர்களின் வாயிலிருந்து அப்படி பொதுப்படையாக குற்றச்சாட்டுகள் வரக்கூடாது. நான் குறுக் கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். ஏதோ நடந்திருக்கிறது என்று சொன்னால், குறிப்பாகச் சொல்ல வேண்டும். தவறுதல் நடந்திருந்



1970 மார்ச் 14] [திரு. கே. ஏ. மதியழகன்]

தால் அதைத் திருத்திக்கொள்ள அரசாங்கம் கடமைப்பட்டிருக் கிறது. பொதுப்படையாகக் குற்றச்சாட்டு சாட்டுவது சரியான தல்ல.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் :** (திரு. என். எஸ். வி. சித்தன்) உறுப்பினர் இன்னும் ஒரு நிமிஷத்தில் தன் பேச்சை முடித்துக் கொள்ள வேண்டும்.

**திரு. கோ. பூவராகன் :** அடுத்து, இது போன்று பட்டாக்கள் வழங்கும்போது, கூடுமான வரையில், திடமான கொள்கையைக் கடைபிடிக்க வேண்டும். அந்த அந்த வட்டாரத்தைச் சேர்ந்தவர் களுக்குக் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வாதம், விருத்தாசலத்தில் வாழும், அங்கிருந்து வருகிற விவசாயிகளுக்கே நிலம் கொடுக்கக் கூடாது என்பதா? அதுதான் கொள்கையா?

**திரு. கோ. பூவராகன் :** விருத்தாசலத்திற்குப் பக்கத்தில் இருக்கிற நேமம் கருவேப்பலங்குறிச்சி காட்டில் 1,000 ஏக்கர் வரை நிலம் உள்ளது. அதை அந்த வட்டாரத்து அரிசன மக்களுக்கு, நிலமில்லாதவர்களுக்குப் பட்டா போட்டு கொடுக்க வேண்டும். அந்த இடத்தில் வேறு யார் யாருக்கோ கொடுப்பது சரியில்லை.

பஞ்சநிவாரண வேலையில் மொத்தமாக ஏராளமாகப் பணம் செலவிடப்பட்டிருக்கிறது. 18 கோடி ரூபாய் செலவு செய்து இருக் கிறார்கள். ஆனால், செலவு செய்யும்போது, நாம் பைனான்ஷல் டார் கெட்டை மாத்திரம் பார்க்கிறோம், பிஸிகல் டார்க்கெட்-ஐ பார்ப் பதில்லை. பிஸிகல் டார்கெட்டையும் பார்க்க வேண்டும். அர சாங்கம் பைனான்ஷியல் டார்கெட்டை மட்டும் பார்க்கிற போக்கே இருந்தால் அது சரியாகாது. இவ்வளவு செலவிடும்போது, பணம் அந்தக் காரியத்திற்கு, எப்படி எப்படிச் செலவிடப்பட்டிருக்கிறது, முழுக்க முழுக்கப் பயன்பட்டிருக்கிறதா என்று பார்க்க வேண்டும். கிட்டத்தட்ட இரண்டு மூன்று மாதங்களில் 18 கோடி ரூபாயை செலவிட்டிருக்கிறது. அவசர அவசரமாக, மழைகூட இல்லாத நேரத்தில், ஈரமில்லாமல் வெட்ட முடியாத நிலையில், மூன்று நான்கு தடவைகள் பணம் கொடுத்து இருப்பது நல்ல முறையில் செலவாகி இருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். அதற்கு ஒரு சர்வே செய்ய வேண்டும். எப்படிப் பணம் செலவிட்டிருக்கிறது, எந்த அளவில் அந்தக் காரியத்திற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் கண்காணிக்க வேண்டும் என்று சொல்கிறேன்.

அரசாங்கக் கடன் கொடுக்கிறார்கள். கடன் கொடுக்கும்போதே அரசாங்கம் கடனும் எழுப்புகிறார்கள். கொடுக்கிறபோது, பாதிப் பணத்தைக் கடனுக்கு எடுத்துக் கொள்கிறார்கள். மின்சார

வாரியம் கடன் எழுப்புகிறார்கள், அரசாங்கமே கடன் எழுப்பு கிறார்கள். இந்தக் கடன்களுக்காக எடுத்துக் கொண்டுவிடுகிறார் கள். அதனால், கடன் வாங்கியும் பயன் இல்லாமல் போகிறது. இந்த முறை சரியில்லை. இதை மாற்றியமைக்க வேண்டும். கடனைக் கொடுக்கும்போது, இந்தக் கையால் கொடுத்து, அந்தக் கையால் வாங்கிக் கொள்வது என்று சொல்லாமல், அப்படியில்லாமல், கடன்கள் சரிவரக் கொடுக்கப் படவேண்டும். விவசாயக் கடன் பெறுகிறவர்களுக்கு முழுப் பணமும் கிடைப்பதற்கான வழிவகை களைச் செய்ய வேண்டும். இப்பொழுது இருக்கும் முறையில் ஒவ் வொருவரும் கொஞ்சம் கொஞ்சம் எடுத்துக் கொண்டு மீதம் கொஞ்சம் சிறிய தொகை போகிறது. அவர்கள் கையில் முழுவ தாகப் போகவேண்டும் என்று சொல்லி என் பேச்சை முடிக்கிறேன்.

**திரு. பி. வேலுசாமி:** தலைவர் அவர்களே, என்னுடைய கட்சி யின் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நமது அரசானது கடந்த கால வறட்சி நிவாரணப் பணிக்காகக் கோடிக் கணக்கான ரூபாய்களை மத்திய சர்க்காரிலிருந்து பெற்று தமிழகத் திற்குச் சிறப்பான ஒரு பணியை மேற்கொண்டிருக்கிறது. அந்தப் பணியானது சிறந்த போற்றுதற்குரிய, சிறப்பான பணி என்று இருந்தாலும், அதிலே குறிப்பாக, வறட்சி நிவாரணப் பணிக்காகச் செலவிடப்பட்ட பணங்களில், அரசியல் உள்ளே புகுந்து இருந்தது உண்மை. எந்தப் பகுதியில் யார் தேர்ந் தெடுக்கப் பட்டிருக்கிறார்கள் என்று பார்த்து, நிவாரணப் பணிக்கு பணம் ஒதுக்கப் பட்டதே யல்லாமல் வேறு இல்லை. பல இடங் களில் அப்படியிருந்தது. குறிப்பாக என்னுடைய தொகுதியில் நான் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதியைச் சேர்ந்த இடத்தில் ஒரு குளம் வெட்டுவதற்காக, குட்டை வெட்டவென்று, ஒரு கோடி ரூபாய் பணம் சாங்ஷன் செய்து அதற்கான வேலைகளெல்லாம் தொடங்கும்போது, அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒரு குறிப்பிட்ட வர்களால் ஒரு விவசாயச் சங்கம் ஏற்பாடு செய்யப்பட்டது என்கிற காரணத்திற்காக, அந்த வேலையை அப்படியே விட்டு விட்டார்கள். அடுத்தாற்போல், போட்டியாக இன்னொரு விவசாயச் சங்கம் மற்றவர்களால் ஆரம்பிக்கப்பட்ட பிறகு, வேலை கள் மறுபடியும் தொடங்கி ஏற்பாடுகளைச் செய்தார்கள் என்பதைப் பார்த்தேன். இப்படி வெறும் அரசியல் காரணங்களுக்காகப் பணம் பல இடங்களில் செலவிட்டு இருப்பதைப் பார்க்கிறோம். எதோ தோழமைக் கட்சி என்று இருந்தாலும் இந்த நிலை கண்டு வாஸ்தவ மாகவே வேதனைப்படுகிறேன். வருத்தப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** உறுப்பினர் இப்படிப் பொதுப்படையாகச் சொல்வதில் பிரயோசனம் இல்லை. எந்தத் தொகுதியில், எந்த மாதிரி பாரபட்சம் காட்டப்பட்டது என்று தெரிவிக்கவேண்டும். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்



களை பெரும்பாலான தொகுதிகளில் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். நம்முடைய திரு. விநாயகம் தொகுதியிலும நிரம்பச் செய்திருக் கிறது. வறட்சி இருப்பதால் அங்கே செய்திருக்கிறோம். அது தான் உண்மை நிலை. இந்தத் தொகுதியில் இவர் உறுப்பினராக இருக்கிறார் என்ற காரணத்திற்காக காரியங்கள் மேற்கொள்ளப் படுவதில்லை. அரசியல் காரணங்களுக்காக என்றால், அதைப் பற்றி வெளியிலே பேசுங்கள். இந்த சர்க்கார் பாரபட்சம் என்று சொல்லட்டும். ஆனால் இங்கே நிலை வேறு. பெரிய ஆஸ்பத்திரி அங்கே வைத்தோம், இரண்டு கோடி ரூபாயில் அவர்கள் உறுப்பினராக இருக்கிறார்கள் என்பதால் வருகிறது, மற்றவர்கள் உறுப்பினர்களாக இருப்பதால் வரவில்லை என்று பொருள் அல்ல. பொதுவாக, எந்த இடங்களில் காரியங்கள் அவசியமோ என்று பார்த்து, செய்யப்படுகின்றன. ஆகவே, இங்கே பொதுவான போக்கில் சொல்வதற்குச் சட்ட மன்றத்தை உபயோகிக்க வேண்டும் என்பது சரியில்லை.

**திரு. பி. வேலுசாமி:** அதுதான், சரவணம்பட்டி என்ற கிராமத் தில், ஒரு குட்டை வெட்டுவதற்கான முயற்சி ஒரு ஆண்டுக்கு முன் பாகவே எடுத்து, அந்தப் பகுதியைப் பார்வையிட்டு வந்தார்கள். எஞ்சினியர்கள் வந்து பார்த்த பிறகு வேலை சாங்ஷன் செய்தார் கள். ஆனால் அப்புறம் அப்படியே வேலை நடங்கலாக நின்று விட்டது. சமீபத்திலே ஒரு விவசாய சங்கம் வைத்தார்கள்; அதன் பிறகு வேலை தொடங்கப்பட்டிருக்கிறது. வாஸ்தவமாக இந்த நிலைக்கு வந்ததற்கு வருந்துகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இதைச் சொல்வதற்கு, சின்ன கிராமத்தில் நடந்ததைச் சொல்லப் புகுந்து, ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள் மீது அபாண்டமான குற்றத்தைச் சாட்டுகிறீர்கள். 18 கோடி ரூபாய்க்கு மேல் செலவானதில், கோவை மாவட்டத்தில் 2¾ கோடி வரை செலவிடப் பட்டிருக் கிறது. மாண்புமிகு உறுப்பினர் பகுதி நகர்ப்புறம். தனியாக நகரத்தில் வேறு செய்வதற்கில்லை. அதை வைத்துக்கொண்டு, போதுப்போக்காக இப்படித்தான் எல்லாம் நடந்திருக்கிறது, இந்த அளவுக்கு தோழமை என்று சொல்லி அபாண்டமாக சொல்லியிருக்கவேண்டியதில்லை.

**திரு. பி. வேலுசாமி:** அபாண்டம் சொல்ல வேண்டும் என்று சிறிதளவாவது உள்ளத்தில் இருந்தால், இந்த துயர் தணிப்புப் பணிகளை இவ்வளவு போற்றிப் பாராட்டியிருக்கமாட்டேன். துயர் தணிப்புப் பணிகளில் செய்யப் பட்டவை சென்ற காலப் பணிகள் எல்லாவற்றையும்விட சிறப்பானவை என்று சொல்ல வேண்டிய தில்லை. அபாண்டம் சொல்ல வேண்டும், குற்றச்சாட்டுச் சொல்ல வேண்டும் என்ற நோக்கத்தில் சொல்லவில்லை என்பதை அமைச் சருக்கு தெரிவிக்கிறேன்.

அடுத்து, புஞ்சை நிலங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப் புஞ்சை நிலங்களுக்கு ரத்து செய்யப் பட்டிருக்கும் போது, ஒன்றைக் கவனிக்க வேண்டும். இந்த பூமிகளில் பல் வேறுவகையான பூமிகள் இருக்கின்றன. அதிலே புறம்போக்கு நிலம், சிவாஜிமா நிலம் என்று இரண்டு விதமான நிலங்கள் இருக்கின்றன. அவற்றில் விவசாயம் செய்து கொண்டிருக்கிறவர்கள் 20 வருஷம் 30 வருஷமாகத் தொடர்ந்து விவசாயம் செய்து கொண்டு வருகிறார்கள். அவர்களுடைய பட்டா நிலங்களுக்குத் தவிர, பாக்கி இருக்கிற நிலங்களுக்கு ஏற்கெனவே வசூல் செய்யப்படுகிறது. அதை நீக்குவதற்கு முயற்சி செய்தால் சிறப்பாக இருக்கும்.

கிராமப்புறங்களில் சாலைப் புறம்போக்கு, ஏரிப் புறம்போக்கு, நத்தம் புறம்போக்கு, மேய்ச்சல் புறம்போக்கு என்ற பல்வகையான புறம்போக்குப் பகுதிகளிலும் விவசாயம் நடந்து வருகிறது. இருபது, இருபத்தைந்து ஆண்டுகளாக அங்கு கிணறு வெட்டி, தொடர்ந்து விவசாயம் செய்து வருகிறார்கள். ஆனால் அந்தப் பகுதிகள் எல்லாம் பழைய புறம்போக்கு என்ற பெயராலே அழைக்கப்பட்டு, அதற்கென்று தண்டத் தீர்வை போட்டு, வசூல் செய்து வருகிறார்கள். தொடர்ந்து அந்தப் பகுதிகளில் விவசாயம் செய்து வருவதால், அரசு இதைக் கவனத்தில் கொண்டு நல்ல அக்கறை காட்டி, அந்தப் பகுதிகளை விவசாய மக்களுக்குப் பட்டா செய்து கொடுப்பதன் மூலம் விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, துயர்தணிப்பு காலத்தில் விவசாயிகளுக்குக் கடன் கொடுத்திருக்கிறார்கள். பல இடங்களில் இன்னும் வறட்சி நிலைமை மாறவில்லை. இந்த நிலைமையில் விவசாயிகளிடமிருந்து கடனைத் திருப்பி வசூலிக்கிற நிலைமை இருந்து வருகிறது. விவசாயிகள் கடனைத் திருப்பிக் கொடுக்கிற சந்தர்ப்பம் இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, கடன் வசூல் முறையைப்பற்றி மீண்டும் பரிசீலனை செய்து, கடன் வசூலை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஆற்றுப் பாசனம், குளத்துப் பாசனம் போன்றவற்றிற்கெல்லாம் மானியம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கிணற்றுப் பாசனம் செய்பவர்களுக்கு மின்சாரக் கட்டணம் ஒன்றே முக்கால் பைசா கூட்டியிருக்கிறார்கள். கிணற்றுப் பாசனம் செய்பவர்கள் ஏற்கெனவே கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அதிகப்படியான மின்சாரக் கட்டணம் கட்ட வேண்டுமென்று சொல்வது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிலாளர்கள் ஏதோ காரணத்திற்காக வேலை நீக்கம் செய்யப்பட்டால், சின்னப்ப மனுக்களில் ஸ்டாம்ப் ஒட்ட வேண்டும் என்ற நிலைமை இருக்கிறது. ஸ்டாம்ப் ஒட்டி வந்தால்

தான் அந்த விண்ணப்பம் பார்க்கப்படுகிறது. கையில் காசு இல்லாதவன் எப்படி ஸ்டாம்ப் வாங்கி ஒட்ட முடியும்? ஆகவே, வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் மனுவில் ஸ்டாம்ப் ஒட்ட வேண்டும் என்பதை ஒற்றிவைப்பது நலமாக இருக்கும்.

மின்சாரக் கட்டணம் சம்பந்தமாகக் கோயம்புத்தூர் விவசாயிகள் உண்ணாவிரதம் ஆரம்பித்துக் கிளர்ச்சி செய்தனர். இந்த மானியக் கோரிக்கையின்மீது நடைபெறும் காலத்தில் இதை நினைவுறுத்துகிறேன். கோயம்புத்தூரில் கிணற்று பாசனம் மூலம் விவசாயம் செய்கிறார்கள். மின்சாரக் கட்டணம் சம்பந்தமாக அந்தப் பகுதி விவசாயிகள் சந்தோஷப்படுகிற முறையில் திடீர் அறிவிப்பு ஒன்றை அமைச்சர் அவர்கள் வெளியிட வேண்டும்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: ஒரு விளக்கம். மின்சாரக் கட்டணம் 8¼ பைசாவிலிருந்து 10 பைசாவாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதனாலே கிளர்ச்சியும் செய்திருக்கிறார்கள். எது எதில் உற்சாகம் காட்டக் கூடாதோ, அதில் உறுப்பினர் அவர்கள் அக்கறை காட்டி உற்சாகப்படுத்தியிருக்கிறார்கள். அரசியல் ரீதியில் அப்படிச் செய்வதற்கு அவருக்கு உரிமை உண்டு. விவசாயிகள்மீது இந்த அரசாங்கத்திற்கு அக்கறை இருக்கிறது. கோவை மாவட்ட விவசாயிகள் இதை அறிவார்கள். ஒரு பம்ப் செட் வைத்திருக்கிறார் என்றால் அவர் ஒரு க்வார்ட்டருக்கு, ஒரு வருஷத்திற்கு எவ்வளவு பணம் கட்டுகிறார்? இன்றைக்கு எவ்வளவு அதிகமாகக் கட்ட வேண்டியிருக்கிறது? எவ்வளவு தூரம் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்? இந்தக் கணக்குச் சொல்ல முடியுமா? உறுப்பினர் அவர்கள் இந்தக் கணக்கையும் சொன்னால் நலமாக இருக்கும்.

திரு. பி. வேலுசாமி: தலைவர் அவர்களே, விவசாயி இதுவரைக்கும் 100 ரூபாய் கட்டியிருந்தால் இனிமேல் 120 ரூபாய் கட்ட வேண்டும். சாதாரணமாகக் கோயம்புத்தூரில் 4 ஏக்கரில் விவசாயம் செய்தால்—கிணறு 150 அடி ஆழம் இருக்கும்—அவர் 600 ரூபாய் கட்டணம் கட்ட வேண்டும். 150 அடி ஆழமுள்ள கிணற்றுக்கு 3 மோட்டார் பம்ப்கள் வைத்துத்தான் தண்ணீர் இறைக்க முடியும். ஒரு மாதத்திற்கு இப்பொழுது 500 ரூபாய் ஆகிறது. இனிமேல் 600 ரூபாய் ஆகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அவர்களுக்கு என்ன வருமானம் வருகிறது என்பது உறுப்பினர் அவர்கள் சொல்வதிலிருந்தே கணக்குத் தெரிகிறது. சிறிய ஏற்றம் என்பதுதான் விவசாயிகளை இது பாதிக்காது. அகில இந்திய ரீதியில் இதைச் சொல்கிறேன். கோவை மாவட்டத்தில் இதை அரசியல் காரியம்

[திரு. கே. ஏ. மதியழகன்] [1970 மார்ச் 14

களுக்குப் பயன்படுத்தினல் விவசாயிகள் இதை ஆதரிக்க மாட்டார்கள். இதிலே அரசியலைப் புகுத்தியிருப்பதை மக்கள் ஏற்க மாட்டார்கள்.

*திரு. க. மு. ராசகோபால்: பேரவை மாற்று தலைவர் அவர்களே, இந்த வருவாய்த்துறை மானியக் கோரிக்கையை ஆதரித்துப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். கிட்டத்தட்ட ஒரு லட்சம் மக்கள் தேர்ந்தெடுத்து எங்களை இங்கு அனுப்பியிருக்கிறார்கள். இங்கே எங்களுக்குப் பேச ஐந்து நிமிடம், ஆறு நிமிடம் என்று சொன்னல், எப்படிச் சொல்வது? நாங்கள் தொகுதியில் போகின்றபோது நாங்கள் படுகின்ற பாட்டை அறிந்து கொள்ள வேண்டும். நாங்கள் பேச வக்கற்றவர்களாக உட்கார்ந்திருக்கிறோம் என்று மக்கள் எங்களைப் பற்றி எண்ணிக் கொள்வார்கள் என்பதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். குறைந்தது எனக்குப் பதினைந்து நிமிடங்களாவது தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பேறிஞர் பெருந்தகை அண்ணு அவர்களின் பிறந்த ஊரானதும், பல்லவ சாம்ராஜ்யத்தின் தலைநகரானதுமான காஞ்சிபுரத்தை செங்கற்பட்டு மாவட்டத்தின் தலைநகரமாக ஆக்கியிருக்கிறார்கள். ஆனல் தலைநகருக்குரிய அலுவலகங்கள் இன்னும் அங்கு வந்து சேரவில்லை. மாவட்டக் கல்வி நிலையம், சுகாதார நிலையம், வேலைதேடித் தரும் நிலையம் போன்ற அலுவலகங்கள் இன்னும் அந்த நகரத்தில் அமைக்கப்படவில்லை. உடனடியாக எல்லா அலுவலகங்களும் தலைநகருக்கு வரவேண்டுமென்பதைக் கேட்டுக்கொள்கிறேன். நீண்ட காலமாக காங்கிரஸ்காரர்கள் காலத்திலேயே ஒரு திட்டம் இருந்தது. வட ஆற்காடு மாவட்டத்தில் அரக்கோணம், செய்யார், வந்தவாசி, செங்கற்பட்டு மாவட்டத்தில் காஞ்சிபுரம், செங்கற்பட்டு, மதுராந்தகம், திருத்தணி போன்ற ஏழெட்டு வட்டங்களை ஒன்றுக்கி, தனி மாவட்டமாக ஆக்கும் திட்டம் இருந்தது. இதை உடனடியாக உருவாக்கி, காஞ்சிபுரத்தைத் தனி மாவட்டமாக ஆக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

உத்திரமேரூர் வட்டம் இப்போது ஒரு உள்வட்டமாக இருக்கிறது. இரண்டும் கெட்டான் என்பார்களே அதுபோல உள்ளது. வெள்ளைக்காரன் காலத்திலேகூட அங்கு சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட் இருந்தது. அதற்குப் பின்னர் ஆள வந்தவர்கள் அதை எடுத்துவிட்டு, பத்து போலீஸ்காரர்களும், பத்து எழுத்தர்களும் கொண்டதாகப் போட்டு ஒரு துணைத் தாசில்தார் ஆபிசும், ஒரு போலீஸ் ஸ்டேஷனும் வைக்கப் பட்டிருக்கிறது. அந்த வட்டம் இப்போது பின்தங்கிய நிலையில் இருக்கிறது. அதைத் தனி வட்டமாக ஆக்க வேண்டும்.



1970 மார்ச் 14] [திரு. க. மு. ராசகோபால்]

அடுத்து, தாசில்தார்களுக்கு போன் வசதி செய்ய வேண்டும் என்பதை வரவேற்கிறேன். அவர்களுக்கு அவசியம் தேவை. அதே சமயத்தில் அதிக மக்களுடன் தொடர்புகொண்டு, தொகுதி பூராவிலும் மக்களின் குறைகளை அறிந்துகொள்ளும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவசியமாக, அரசு செலவிலேயே போன் வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் மக்களின் குறைகளை அறிந்துகொள்ள வசதியாக இருக்கும்.

எதிர்க்கட்சியிலே இருக்கிற காங்கிரஸ் நண்பர்கள் நம்மைப் பார்த்து, பஞ்ச நிவாரண வேலை சரியாக நடைபெறவில்லையென்று குற்றம் சொல்கிறார்கள். இந்த அரசு நீதியாக ஆட்சி புரியவில்லை யென்று சொன்னர்கள். இதற்கு முன்னலே காங்கிரஸ் அரசாங்கம் செய்திருக்கிற வேலைகளைப்பற்றி பி.டபிள்.யூ.டி., ஹைவேஸ், மைனர் இரிகேஷன் இவற்றின் பழைய ரிகார்டுகளை எடுத்துப் பார்த்தால் எந்தெந்த ஆண்டில், எந்தெந்த ஏரிக்கு மராமத்து வேலை நடந்தது, எந்தெந்தக் கால்வாய் வெட்டப்பட்டது என்ற விவரம் தெரியவரும். எவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதும் தெரியும். இன்றைய அரசு எந்த அளவிற்கு எவ்வளவு பணம் ஒதுக்கியிருக்கிறது என்பதும் தெரியும். இரண்டையும் ஒப்பிட்டுப் பார்ப்பதுதான் முறை. அவர்கள் இங்கே இதைப்பற்றி வாதிக்கிறார்களே தவிர, அவர்களுடைய பெருந் தலைவர், ஜனநாயக சோஷலிசவாதி என்று அழைக்கப்படும் பெருந் தலைவர், வெளியிலே, திண்டிவனத்தில் பேசியிருப்பதைப் பார்க்கவேண்டும் என்ன பேசியிருக்கிறார்கள் என்றால், "நாங்கள் ஆணவத்தோடு இருந்தோம். மக்கள் எங்களை இறக்கிவிட்டார்கள் அதே ஆணவம் உங்களுக்கு கூடாது" என்று பேசியிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தினர்தான் பட்டா செய்துகொள்கிறார்கள், அக்கிரமமாக நடந்துகொள்கிறார்கள் என்று சில உறுப்பினர்கள் குற்றச்சாட்டு செய்தார்கள். எனது தொகுதியில் இருக்கிற நண்பர்கள் திரு தாமஸ், திரு. குழந்தைசாமி என்பவர்கள் குண்ணவாக்கம் கிராமத்தில் புறம்போக்கில் வீடு கட்டிக்கொண்டு, நிலத்தைச் சீர்திருத்தம் செய்து மூன்று, நான்கைந்து ஆண்டுகளாகப் பயிர் செய்து வருகிறார்கள். அங்கே இருக்கிற அதிகார வர்க்கத்தைச் சேர்ந்த உரத்த சட்டை போட்டவர்—கோவிந்தசாமி ரெட்டியார்—இன்னமும் அதைப் பிரித்து எறியவிடாது நிறுத்திவருகிறார்கள். என்றைக்குச் செய்து விடுவாரோ தெரியவில்லை. ஆக இன்னும் காங்கிரஸ் ஆதிக்கம்தான் இருக்கிறதே தவிர, எங்கள் கட்சியின் ஆதிக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. மேல் மட்டத்தில் உள்ள அதிகாரிகள்தான் மக்களை நல்ல முறையில் வரவேற்கிறார்கள். கீழ்மட்டத்தில் இருக்கிற அதிகாரிகளின் மனப்பான்மை மாறவில்லை. அன்று நடந்துகொண்டது போலவேதான் இன்றும் நடந்துகொண்டிருக்கிறது. 600 பனை

மரங்களை ரூ. 20-க்கு ஏலம் விட்டுவிட்ட வி.எம். கன்னிக்குளம் இன்னமும் எந்தவிதமான தண்டனையும் பெறுதான் இருந்து வருகிறார். காங்கிரஸ்காரர்கள் போய்த் தடுத்து நிறுத்தி நீதி மன்றம் வந்து—நீதிமன்றம் என்றால் வேறு ஒன்றும் இல்லை, ரெவின்யூ டிபார்ட்மெண்டுதான்—இவரை ஆதரித்து நிறுத்தி யிருக்கிறார்கள்.

ஆக, எதிர்க்கட்சிக்காரர்கள் பேசும்போது சங்க கால வரலாறு களைச்—மனுநீதிச் சோழன், பொற்கைப்பாண்டியன் கதை களை சொன்னார்கள். இவை என்ன காட்டுகின்றன? பொற் கைப்பாண்டியன் அவசரப்பட்டு கதவைத் தட்டாமல் இருந்திருந் தால் கையை எடுத்திருக்க வேண்டாம். உள்ளே பேசிக்கொண் டிருந்தது யார் என்பதைத் தெரிந்துகொண்டிருக்க முடியும். மனு நீதிச் சோழன் தன் மகனையே தேர்க்காலில் இட்டுக்கொன்றதாகச் சொன்னார்கள். ஆனால் ஆண்டவனே திட்டமிட்டு, எமனே கன்றாக வடிவம் எடுத்து ஓடுகின்ற தேர்க்காலில் வந்து சிக்கிக்கொண்டான் என்றால் அதற்கு வீதிவிடங்கள் என்ன செய்ய முடியும்? தீர விசா ரித்தால் உண்மை வரலாறு புரிந்திருக்கும். நகர் சோதனை சென்ற வர்கள் நல்ல முறையிலே ஆளவில்லை. நகர்ச் சோதனைக்காகச் சென்ற இராமன், சலவைத் தொழிலாளி சொன்ன வார்த்தைகளைக் கேட்டு, கட்டிய மனைவியைக் காட்டில் கொண்டுபோய் விட்டான். இப்படி இவர்கள் எல்லாம் எதையும் தீர யோசிக்காமல் காரியம் செய்தவர்கள். அப்படி இந்த அரசு இருக்காது, எதையும் தீர யோசித்தே முடிவு எடுக்கும் என்று தெரிவித்து, வருவாய்த்துறை மானியங்களை ஆதரித்து முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. சோ. அழகர்சாமி**. தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மானியத்தின்மீது என் கட்சியின் சார்பாகக் கொடுக்கப் பட்ட வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகின்றேன்.

சென்ற ஆண்டு நமது மாநிலத்தில் ஏற்பட்ட வறட்சி நிலையை, பஞ்சத்தை சமாளிக்க இந்த அரசு சரியான திட்டத்தை மேற் கொண்டு 18 கோடி ரூபாய் வரை செலவு செய்திருப்பதை இந்த மாநில மக்கள் அனைவரும் வரவேற்பார்கள் என்பதில் சந்தேக மில்லை. இன்றும் பஞ்சத்தின் கொடுமைகளை அனுபவிக்கிற மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களுக்குக் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்த ரூ. 3 லட்சமும் தக்காவிக் கடன் வழங்க ரூ. 4.53 லட்சமும் ஒதுக்கியிருக்கிறார்கள். இது மிகக் குறைந்த தொகை. இதுபோதாது. இந்தப் பிரதேசங்கள் மிகவும் வறட்சி யான நிலையில் இருக்கின்றன. குடிக்கக் கூடத் தண்ணீர் இல்லாத நிலை இருக்கிறது. ஆகவே அதிகமான நிதியை ஒதுக்கியிருக்க வேண்டும்.

அதற்கடுத்தபடியாக நிலச்சீர்திருத்தத்தை இந்த மன்றத்தி லுள்ள சகல கட்சிகளும் ஆதரிக்கின்றது என்று நினைக்கிறேன். சுதந்திராக் கட்சிகூட—ஒரு சில திருத்தம் மாத்திரம் உச்சவரம்பு கொண்டு





வருகிறீர்களே, இதைப்போல நகர்புறச் சொத்துக்களுக்கும் வரம்பு கொண்டு வாருங்கள் என்றுதான் கேட்கிறார்கள். இதைக் கொண்டுவரக் கூடாது என்று சொல்லவில்லை.

பொதுவாக கிராமப் பிரதேசங்களில் உள்ள மக்களை எடுத்துக் கொண்டால்—அற்பமான ஊதியம், அரைகுறை வேலை நிலைமை யால் அவதிப்படும் விவசாயத் தொழிலாளர்களின் வாழ்க்கை, பரிதாபமாக இருக்கிறது. மனிதாபிமானம் அற்ற நிலைமைகளில் சேரிகளில் வாழுமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். பாதை, தண்ணீர் வசதி அரிசன மக்களுக்குக் கிடையாது. அரைகுறை ஆடையோடு அரை நிர்வாணமாகவே அவர்கள் உள்ளனர்.

தமிழ்நாட்டை எடுத்துக்கொண்டால் விவசாயத் தொழிலாளர்கள் 28.26 லட்சம் அதாவது 31 சத விதம் கிராமப் பகுதிகளில் இருக்கிறார்கள். அவர்களில் மிகப்பெரும்பாலோர் அரிசன வகுப் பைச் சேர்ந்தவர்கள். இன்று நம்முடைய இந்து சமுதாயத்தில் அவர்கள் பலவிதமான நிர்ப்பந்தங்களால் மிகவும் பாதிக் கப்பட்டிருக்கிறார்கள்.

காங்கிரஸ்காரர்களால் கொண்டுவரப்பட்ட உச்சவரம்புச் சட் டம், இந்த ஏழை எளிய அரிசன விவசாயிகளுக்கு எந்தவிதமான நிலமும் கொடுக்கவில்லை என்பதை திட்டக் கமிஷனே ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இந்த ஏழை விவசாயிகளின், விவசாயத் தொழிலாளர்களின் கேவலமான நிலைமைகள் மாற்றியமைக்கப் பட்டு, கன்னியமான, மனித வாழ்க்கைக்கேற்ற சூழ்நிலை உரு வாக்கப்படாவிட்டால் நமது நாடு சிறப்பான முன்னேற்றம் காண முடியாது. விவசாயத் தொழிலாளர்களை அவர்கள் கிடந்து உழலும் ஏழ்மையிலிருந்தும், மனிதத் தன்மைக்குக் கீழான நிலைமைகளில் இருந்தும் கரை சேர்க்கவேண்டுமானால், அவர் களுக்கு ஒரு துண்டு நிலத்தையாவது வழங்க வேண்டியது பிரதான கடமையாகும்.

இந்த நிலையில் பார்த்தோமானால் உச்சவரம்புச் சட்டத்தில் 15 ஏக்கராவை நிர்ணயித்திருப்பது, நாட்டில் உள்ள ஏழை எளிய அரிசன விவசாயத் தொழிலாளர்கள் அனைவராலும் வரவேற்கத் தக்க ஒன்று என்பதில் சந்தேகமில்லை.

அதே நேரத்தில் முன்பு உச்சவரம்புச் சட்டம் கொண்டுவரப் பட்டபோது பலவிதமான விதிவிலக்குகளை அளித்தார்கள். நாம் அந்த விதிவிலக்குகளை எல்லாம் நீக்கியாகவேண்டும்.

மேலும் 26—2—1970-ல் இருந்து இது அமுலுக்கு வரும் என்ப தாக அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதற்கு முன் பாகத் தேதியிட்டு பத்திரங்கள் தயாரித்து, பலவிதமான பினாமி டிரான்சாக்ஷன்கள் எல்லாம் நடைபெறும். 1961 ஆம் ஆண்டு காலத்தில் உச்சவரம்புச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது அது

போல பினாமியாக பல பேர்களின் மீது எழுதப்பட்டு பிறகு அவை எப்படியோ கைமாற்றம் செய்யப்பட்டிருப்பதை எல்லாம் அறி வோம். ஆகவே தற்போது இந்தச் சட்டம் 1955-ம் ஆண்டில் இருந்தே அமுலாக்கப்படும் என்பதாகச் செய்தால்தான் விவ சாயத் தொழிலாளர்களுக்கு நிலம் கிடைப்பதில் நல்ல பிரயோசன மாக இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து நில உரிமை முறை பதிவேட்டுச் சட்டத்தை மாநிலம் பூராவுக்கும் வேகமாக, உடனடியாக அமுல் படுத்த வேண்டும். அப்போதுதான் நிலவெளியேற்றத்தை நல்லமுறையில் உடனடி யாகத் தடுக்க வழியேற்படும். இப்போதே நிலவெளியேற்ற வேலைகள் நடக்க ஆரம்பித்துவிட்டன. ஆகவே நில சாகுபடிப் பதிவு சட்டத்தை உடனடியாக மாநிலம் பூராவுக்கும் அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் இனம் சட்டத்தைப் பொறுத்தவரையில் புதுக் கோட்டைப் பகுதி போல சேலம், தர்மபுரி மாவட்டத்திலும் உள்ளது. ஆகவே அந்தப் பிரதேசத்திற்கும் இதைக் கொண்டுவர ஆவன செய்ய வேண்டும்.

இன்னும் பட்டா வழங்குவதில் காலதாமதம் ஆகிறது. அவ்வப் போது பட்டா வழங்கப்பட்டால்தான் கடனோ, மற்ற உதவிகளோ விவசாயிகள் பெறுவதற்கு உதவியாக இருக்கும். ஆகவே ரிஜிஸ்தர் ஆன கையுடன் பட்டா மாற்றமும் செய்துகொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நில விநியோகத்தை எடுத்துக்கொண்டால்— அந்த அந்த ஏரியாவில் தரிசு நிலமோ, உபரி நிலமோ இருந்தால், அதைப் பிரித்துக் கொடுக்க அந்த அந்த ஏரியாவிலேயே சர்வ கட்சிகளும் அடங்கிய ஒரு குழு ஒன்றை அமைக்கவேண்டும். அப்படி ஒரு சர்வ கட்சிக் குழு அமைக்கப்பட்டால்தான் ஏழை எளிய அரிசன விவசாயிகளுக்கு—அந்த அந்த இடங்களில் அவர் கள் எவ்வளவு காலமாக விவசாயம் செய்துவருகிறார்கள் என்பதை உணர்ந்து நிலம் வழங்க வசதியேற்படும்.

மனைக்கட்டு வழங்குவதை எடுத்துக்கொண்டாலும் ஏழை சனங் களுக்கு மனை கிடைப்பதில்லை. ஆகவே உடனடியாக மனைக்கட்டு களை அங்கங்கே எடுத்து எல்லா இடங்களிலும் 1972-க்குள் —இன்னும் 2 ஆண்டுக்குள் வீட்டுமனை இல்லாதவர்களுக்கெல்லாம் மனைக்கட்டுகள் வழங்கப்பட்டுவிட வேண்டும் என்று உத்திரவு போட்டு தனி அதிகாரியை வைத்து அதை வழங்கவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

வருவாய்த்துறை வாரியத்தைக் கலைப்பது பற்றி அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அந்த நடவடிக்கையைத் துரிதப் படுத்தவேண்டும். அது மக்களுடைய நெடுநாளைய கோரிக்கை.





அதற்கடுத்தபடியாக ஜமாபந்தி முறை இப்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு தாலுக்காவில் மட்டும் ஒழிக்கப்பட்டி ருக்கிறது. அப்படியின்றி மாநிலம் பூராவிலும் அதை உடனடி யாக ஒழித்துவிடவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமப் பணியாட்கள், ஊழியர்களுடைய சம்பளப் பிரச்சினை பற்றிச் சொன்னார்கள். அவர்களுடைய சம்பளத்தை உயர்த்த ஏற்பாடு செய்யவேண்டும்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்த மட்டில் விளாத்தி குளத்தைத் தனித் தாலுக்காவாக ஏற்படுத்தவேண்டும் என்பது அப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை. அதை ஒரு தனி வட்டமாக ஆக்கியிருப்பதை மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.

இந்த மனு நீதித் திட்டம் இப்பொழுது நடைபெற்று வருகிறது. சிறப்பான முறையிலே அந்த அந்த இடங்களிலே சில சாதாரண மான மக்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றக்கூடிய முறையில் அதிகாரிகளுக்கு அதிகமான அதிகாரங்களை வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்தால் காலம் கடந்து போகாமல் விரைவிலே நிறைவேற்றுவதற்கு முடியும், எனவே அதற்காக அதிகாரிகளுக்குச் சில விசேஷ அதிகாரங்களை வழங்க வேண்டும்.

தாசில்தார்களுக்கு டெலிபோன் வசதியும் வீட்டு வசதியும் செய்துகொடுப்பதற்காக வசதி செய்யப்பட்டிருப்பதை நான் வர வேற்கிறேன்.

கடைசியாகக் குடிசைவாழ் பகுதி மக்களுடைய கோரிக் கையைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். தீப் பிடித்துவிட்டால் மீண்டும் கட்டிக் கொள்வதற்காகக் கொடுக்கப்பட்ட உதவித் தொகையான 40 ரூபாயை 80 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். மகிழ்ச்சி. ஆனால் இந்த 80 ரூபாயை வைத்துக்கொண்டு திரும்ப வீடுகளைக் கட்டி விடமுடியாது. உடனடியாக, தற்காலிகமாக ஒரு குடிசை கட்டிக் கொள்ளலாம். தீ விபத்துக்குள்ளான அரிசனங் கள் வீடுகள் கட்டிக் கொள்வதற்காக இப்பொழுது ரூ. 300 கடனாகக் கொடுக்கப்படுகிறது. ஆனால் அவர்கள் கடனுக்கு மனுப் போட் டால் பணம் கிடைப்பதற்கு 4 அல்லது 5 வருடங்கள் ஆகின்றன. ஏழை எளியவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற 80 ரூபாய் போதாது. எனவே அவர்களுக்கும் அரிசனங்களுக்குக் கொடுக்கப் படுவதைப் போன்று வீடுகள் கட்டிக்கொள்வதற்குக் கடன்களும் வழங்கவேண்டும்.

என்.ஜி.ஓ.-க்களுக்கு இப்பொழுது உள்ள ரகசியக் குறிப்பேடு முறையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அரசு முன்பே பரிசீலித்தது, அந்த ரகசியக் குறிப்பேடு முறையை நீக்கு வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

[திரு. சோ. அழகர்சாமி] [1970 மார்ச் 14

கடைநிலை ஊழியர்களுக்கு இப்பொழுது கொடுக்கப்படுகின்ற பிரயாணப் படி ஒன்றே கால் ரூபாயாக இருக்கிறது. இதை உயர்த்த வேண்டும்.

அடுத்தபடியாக ஊழியர்களுக்குக் கொடுக்கப்படுகிற அரசாங்கப் பென்ஷன் கிடைப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. பதவி விலகியவுடன் ஒரு வருஷத்திற்குள் பென்ஷன் கிடைக்கும் படி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

முதியோர் பென்ஷனுக்காக என்று 1969-70 ஆண்டு ரூ. 120 லட்சம் ஒதுக்கினார்கள். இப்பொழுது இந்த ஆண்டாகிய 1970-71-க்கு ரூ. 95 லட்சம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அங்கங்கே விவசாயத் தொழிலாளர்கள் வயதானவுடன் எந்த விதமான பாதுகாப்பும் இல்லாமல், குழந்தை இருந்தாலும் பாதுகாப்பு இல்லாமல் நடுத்தெருவிலே பிச்சையெடுக்கும் நிலைமை இருக்கிறது. எனவே சொத்து வசதியற்றவர்கள் அனைவருக்கும் இந்த முதியோர் பென்ஷன் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. இல. பலராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின்கீழ் என்னுடைய கட்சியின் பெயரால் கொடுக்கப்பட்டு இருக்கிற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நிர்வாக இயந்திரம் நல்ல முறையிலே நடந்தால்தான் ஒரு ஆட்சி நல்ல முறையில் மலரமுடியும். ஜனநாயகம் சிறப்பாகத் தழைக்கமுடியும் என்பது எல்லோரும் அறிந்த உண்மையாக இருக்கிறது. ஆனால் ஆட்சிப் பொறுப்பிலே உள்ள நண்பர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் முதற்கொண்டு பயமுறுத்தலோடு நிர்வாகம் நடந்து கொண்டு இருப்பதை நாம் பார்க்கிறோம். அதிகாரிகளுடைய ஆசனத்தில் உட்கார்ந்துகொண்டு அவர்களுக்கு உத்திரவு போடு கின்றார்கள். ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், 'அண்ணா' என்று அவர்களை அழைக்கக்கூடிய பரிதாபகரமான நிலைமையைக் காணும்பொழுது வருத்தமும் வேதனையும் படவேண்டியிருக்கிறது.

பஞ்ச நிவாரணத்திற்காக 18¼ கோடி ரூபாய் இந்த நாட்டிலே செலவழித்திருக்கிறார்கள். அது நாட்டு மக்களுக்கு நிவாரணமா அல்லது கட்சி நிவாரணமா என்ற கேள்வியை மக்கள் எழுப்பிக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். வட ஆற்காடு மாவட்டத்திலே அடுத்தடுத்துப் பஞ்சங்கள் வந்து கொண்டேயிருக்கும். கடந்த பருவ மழை தவறியதாலும், பெய்த மழை காலத்தில் பெய்யாமல் காலதாமதமாகப் பெய்த காரணத்தி னாலும், முதல் அறுவடை சம்பா அறுவடை மிகவும் மோசமாக இருந்ததினால் விவசாயிகள் நில வரியையும் கடன் பாக்கிகளையும் கட்டக்கூடிய நிலைமையில் இல்லாத காரணத்தினால், அரசாங்கம்



1970 மார்ச் 14] [திரு. இல. பலராமன்]

நிவாரணம் அளிக்கவேண்டும் அல்லது அவற்றை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டிருப்பதை உடனடியாகக் கவனிக்க வேண்டும்.

பதிவு அலுவலகம் வட ஆற்காடு மாவட்டத்திலே ஆரணி வட்டத்திலுள்ள கண்ணமங்கலத்தில் திறந்திருக்கிறார்கள். அதைத் திருவண்ணாமலையிலிருக்கும் தலைமை அலுவலகத்தோடு சேர்த் திருக்கிறார்கள். பக்கத்திலே இருக்கிற நான்கு மைல் தூரத்தில் இருக்கக்கூடிய வேலூர் அலுவலகத்தோடு சேர்க்காமல் 60 மைல் இருக்கக்கூடிய அந்த இடத்தோடு சேர்ந்திருப்பதால் மக்கள் மிகவும் கஷ்டப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது எனவே அதை வேலூர் மாவட்ட அலுவலகத்தோடு சேர்க்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராம அதிகாரிகள் இடையேயுள்ள இசும்பு முறையை நீக்கித் தனிப்பட்டவர்கள் அங்கம் வகிப்பதற்கு ஏற்பாடு செய்திருக் கிறார்கள். அதிலே கட்சி இயக்கம் காணப்படாமல் இயங்கும்படி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமக் கர்ணங்கள், மணியகாரர்கள் விவசாயிகளுக்குக் கொடுக் கக்கூடிய ரசீதுகள் தெளிவாக இருக்கவேண்டும். இதைத்தவிர கடன் பாக்கி எவ்வளவு என்பதை முன்னதாக அவர்களுக்கு அறிவிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

கர்ணங்களுக்குக் கொடுக்கவேண்டிய அலவன்ஸ், பஞ்சாயத்து நிர்வாக அலவன்ஸ் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்கிறார் களே தவிர, இன்னும் அதைக் கொடுப்பதற்கான பரிகாரங்கள் தேடப்படவில்லை. அதையும் விரைவாகக் கொடுக்கவேண்டும்.

நில அளவை என்ற முறையிலே பஞ்சாயத்துக்களுக்கு ஒப்படைக் கப்பட்ட புறம்போக்குகளாக இருந்தாலும், பொதுப் புறம் போக்குகளாக இருந்தாலும், கால்வாய், நீர் ஏரிப் புறம்போக்கு களாக இருந்தாலும், தனிப்பட்டவர்களிடத்திலே இருப்பதால் தண்ணீர் வரத்துப் போன்றவை பாதிக்கப்படுகின்றன. எனவே அரசாங்கப் புறம்போக்குகளை நல்ல முறையிலே அளந்து கல் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகள் கடன்கள் பெறவேண்டுமானால் கூட்டுப் பட்டாவா என்ற கேள்வியைக் கேட்டுக் கடன் கொடுக்காமல் இருக்கிறார்கள். எனவே அவர்கள் கடன்பெறுவதற்கு வசதியாக இருக்கும் பொருட்டு இந்தக் கூட்டுப் பட்டாவைப் பிரிப்பதற்கு அரசு நட வடிக்கை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

அரசாங்கத் தலையீடு என்பதைப் பொறுத்தவரையில் என் னுடைய மாவட்டத்தில் வாலாஜா பஞ்சாயத்து யூனியன் பெருந் தலைவர் பல ஆயிரக்கான ரூபாய்களைத் தவறுதல் செய்து பஞ்சா யத்துக் கணக்கிலிருந்து மோசடி செய்தார், என்று பொதுமக்களால் எழுப்பப்பட்டு போலீஸ் விசாரணையெல்லாம் நடந்தும் நீதி

விசாரணைக்காகச் சென்றபொழுது அரசாங்கம் தலையிட்டு நீதி விசாரணை நடத்தமுடியாமல் இருக்கிறது. என்னுடைய தொகுதி யிலே காட்டுப்புத்தூர் பஞ்சாயத்திலே பெரும் தவறு நடந்திருக் கிறது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் நீதி விசாரணைக்கு அனுப்பி யும் இந்த அரசு அதைத் தடைப்படுத்தி இருக்கிறது. நீதியும் நேர்மையும் காப்பாற்றப்படவேண்டுமென்றால் இந்த அரசும் நீதி யாகவும் நேர்மையாகவும் நடந்தாகவேண்டும். அப்படி இந்த அரசு நடந்துகொள்ளவில்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதியோர் பென்ஷன் என்று ஏழை எளிய மக்களுக்கு மிகவும் உதவியளிக்கின்ற வகையிலே காங்கிரஸ் ஆட்சி கொண்டுவந்தது.

ஒரு டிவிஷனுக்கு ஒரு ஆர். டி. ஓ. என்று இருப்பது மிகவும் வருத்தத்திற்குரியது.

மனுநீதி நாள் என்று ஆர்ப்பாட்டம் செய்தாலும் மனுக்கள் அதிகமாக இருந்தாலும் அந்தக் காரணத்திற்காகப் பயன்படுத்தா மல் ஒன்றிரண்டு பேர்களுக்குத்தான் அதிகமாகப் பயன்படுகின்ற நிலைமை இருக்கிறது.

வீட்டு வசதி வாரியம் நகர்ப்புற மக்களுக்கு மட்டுமல்லாமல் கிராமப்புறங்களுக்கும் விஸ்தரிக்கப்படவேண்டும். அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகை மிகமிகக் குறைவானது. கிராம மக்களுக்கும், மத்தியதர மக்களுக்கும், பின்தங்கிய மக்களுக்கும் வீட்டுவசதிகள் செய்து கொடுக்கவேண்டும். இந்த வாரியத்தினைக் கிராமப்புறங்களுக்கும் விஸ்தரிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்கு இந்த வாய்ப்பினைத் தந்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன், வணக்கம்.

*** திரு. பெ. சீனிவாசன் :** தலைவர் அவர்களே, இருபது ஆண்டுக் கால காங்கிரஸ் ஆட்சியில் உருவான ஏராளமான தீமைகளை நீக்கு கின்ற வகையில் வந்திருக்கின்ற இந்த வரவுசெலவுத் திட்டத்தைத் தொடர்ந்து பல்வேறு மானியங்களும் வந்துகொண்டிருக்கின்றன. இந்த ரெவின்யூ மானியத்தில் இருக்கக்கூடிய சில நல்ல அம்சங்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தாசில்தார்களுக்கு வீட்டுவசதி, தொலை பேசி வசதி தந்திருக்கிறார்கள், பொதுமக்கள் தாசில்தார்களோடு தொடர்பு கொள்ள வசதியான முறையில் இந்த வசதி செய்யப்பட்டிருப்பதை அனைவரும் வரவேற்பார்கள். அவர் களுக்கு வீட்டுவசதி தருவதையும் அனைவரும் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.

அரசாங்க நிர்வாகத்தில் மிகப் பெரிய இடையூறாகக் கருதப்படு கின்ற, பொதுமக்களால் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கின்ற வருவாய் வாரியத்தை ஒழிக்க முடிவு எடுத்து, படிப்படியாக நடவடிக்கை எடுப்பதற்காக இந்த அரசாங்கத்தைப் பொதுமக்கள் நிச்சயம் பாராட்டுவார்கள். தாசில்தார்கள் அஞ்சுகின்ற ஜமாபந்தி முறையை ஒழித்ததற்காகவும் பாராட்டுவார்கள்.



மனுநீதி நாள்பற்றி எனக்கு முன்பு பேசிய நண்பர் குறிப் பிட்டார்கள். அது பகிரங்கமாகத்தான் நடக்கிறது. அதிகாரிகள் அனைவரும் பொது மக்களிடமிருந்து மனுக்களைப் பெற்றுக்கொண்டு அந்த இடத்திலேயே விசாரிக்கிறார்கள். இதிலே வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்ற பாரபட்சம் நிச்சயம் கிடையாது.

எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரை மனுநீதி நாள் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. லட்சுமிகாந்தம் பாரதி அவர்களால் மிக அருமையாகவும், வேகமாகவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாவட்ட அளவில் இருக்கின்ற டிஸ்ட்ரிக்ட் டெவலப்மென்ட் கவுன்சிலுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்க வேண்டும். அவ்வாறு அதிக அதிகாரங்களைக் கொடுக்க முடியாத அளவில் இருக்குமானால் டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டுவதையே தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அந்தக் கூட்டம் சம்பிர தாயத்திற்குக் கூட்டப்படும் கூட்டமாக இருக்கிறதே தவிர அந்தக் குழுவிற்கு எந்த விதமான அதிகாரமும் இல்லை.

இன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வேகமாகச் செயல்பட முடியாத அளவுக்கு நிர்வாகச்சுமை அதிகமாக இருக்கிறது. ஆகவே, உள்ளாட்சித் துறை நிர்வாகத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் அதிகார வரம்பில் இருந்து தனியாகப் பிரித்து, மாநில அளவில் நிர்வாகம் சரியாக இருப்பதைப் போல் மாவட்ட அளவில் அதிகாரியை நியமித்து அந்த நிர்வாகத்தை நடத்த வேண்டும்.

இதிலே, கிராமாதிகாரிகளைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். கிராமாதிகாரிகளின் பரம்பரை உரிமையை ஒழித்துவிட்டது நல்லதுதான் என்றாலும் இன்றைக்கு இருக்கும் சூழ்நிலையில் கிராமாதிகாரிகளை அவ்வப்போது நியமித்து அவர்களை சாதாரண எழுத்தர்களை மாற்றுவது போல் மாற்றும் நிலைமை வருமானால் அது வெற்றிகரமாக அமையாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கிராமாதிகாரிகள் ஒரு இடத்தில் பரம் பரை பரம்பரையாகப் பழகி வந்தவர்கள்; வசூலில் ஈடுபட்ட வர்கள். அவர்கள் பழகியிருக்கின்ற காரணத்தால் வரி வசூல் செய்வதில் கஷ்டம் இருப்பதில்லை. தாலுகா ஆபிஸ் கிளார்க்கை மாற்றுவதுபோல் அவர்களை மாற்றினால் வசூலை வெற்றிகரமாகச் செய்ய முடியாது. அவ்வாறு மாற்றும்போது யார் எந்த நிலத்திற்குப் பட்டாக்காரர் என்பதைப் புரிந்து கொள்ளவே பல காலமாகிவிடும். ஆகவே, அந்த முறை சரியாக இருக்காது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

எனக்கு முன்பு பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர், நிர்வாகத் தில் கட்சி அதிகமாகத் தலையிடுகிறது என்று கூறினார். கடந்த மூன்று ஆண்டுக் காலமாக நிர்வாகத்திலே கட்சி தலையிடுவது மிக மிகக் குறைவாகி இருக்கிறது என்பதை 20 ஆண்டு கால சரித்திரம் தெளிவாக உணர்த்தும். இன்றைக்கு இருக்கின்ற உள்ளாட்சித் துறையில் கிராம சேவக்குகளையும், என்.இ.ஓ.-க்களையும் காங்கிர

சார் அவர்களுடைய கட்சியினருக்காகவே உருவாக்கிறுர்கள் என்பதை நிச்சயமாக மறுக்க முடியாது. மூன்ருவது, நான்காவது படிக்காதவனைக் கூட, கையெழுத்துக் கூடப் போடத் தெரியாது கைவண்டி மசியைத் தடவுகிறவர்களைக் கூட உள்ளாட்சித் துறையிலே நியமித்திருக்கிறுர்கள் என்பதை அந்த நண்பர்கள் தயவு செய்து மறந்து விடக்கூடாது. அவர்கள் உலகத்திலேயே இல்லாத வேடிக்கையான. விசித்திரமான இலாகாக்களை உருவாக்கிறுர்கள். அரசாங்க நிர்வாகத்தைக் கட்சிக்காகப் பயன்படுத்துவதை எங்கள் அரசாங்கம் நிச்சயமாக ஆதரிக்கவில்லை. படிப்படியாகக் குறைத்துக் கொண்டு வருகிறது என்பதைப் பொதுமக்களும் ஒப்புக் கொள்ளுவார்கள்.

இந்த ஆட்சியில் மனுநீதி நாள் ஆர்ப்பாட்டமாக இருக்கிறது என்று நண்பர்கள் குறிப்பிட்டார்கள். அது அமைதியாக நடைபெறுகிறது என்று நான் கூற விரும்புகிறேன். அதிகாரிகள் ஒரே நாளில் நாலைந்து கிராமங்களுக்குச் சென்று மக்களிடமிருந்து மனுக்களை வாங்குகிறுர்கள். அவர்கள் நாலைந்து குழுக்களாகச் செல்லுகிறுர்கள். அதிலே பல்வேறு இலாகா அதிகாரிகள் இருக்கிறுர்கள். காரியம் ஆங்காங்கு அமைதியாக நடக்கிறது. எந்த நேரத்திலும் பொதுமக்கள் தங்கள் குறைகளை எடுத்துக் கூறுவதற்கு 'அப்பலெட் அதாரிடி' யாக ஒரு குழு இருக்க வேண்டும். 'ஆம்புட்ஸ்மான்' என்று மேல்நாடுகளில் இருப்பது போல் இருக்க வேண்டும். யார் யார் பாதிக்கப்பட்டவர்கள், எந்தத் துறையிலே எந்த மட்டத்திலே பாதிக்கப்பட்டாலும் நீதிமன்றத்திற்குப் போவதற்கு முன்னல் மனுநீதிக் குழுவிற்கு முன்வரும் மனுக்கள் அடிப்படையில் குழுவை நியமித்து நீண்ட நாட்களாகத் தேங்கிக் கொண்டிருக்கும் விவகாரங்களை உடனடியாகத் தீர்த்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்குப் பேச வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

*திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையைச் சமர்ப்பிக்கிறபோது அமைச்சர் அவர்கள் வறட்சி நிலைமை நீடிக்கிறது என்பதை ஏற்றுக் கொண்டிருக்கிறுர்கள். வறட்சி நிலைமை நீடிக்கிறது என்று சட்டமன்றத்தில் சொல்லி விட்டால் மட்டும் பயன் இல்லை. என்னுடைய தொகுதியில் கடுமையான வறட்சி நிலைமையால் மக்கள் தவித்துக் கொண்டிருக்கிறுர்கள். கடந்த மூன்று ஆண்டு காலமாக மழை இல்லை; அங்குள்ள நிலைமை மிகவும் கடுமையான நிலைமை. கிஸ்தி, கடன் வசூலிப்பதில் எல்லாம் 'கோ ஸ்லோ பாலிசி' என்று சொல்லிக் கொண்டு நிர்பந்தமாக வசூல் செய்யும் முறை நீடிக்கிறது. இதிலே உடனடியாக அரசு தலையிடவேண்டும். ஏற்கனவே நிவாரண வேலைகளை மேற்கொண்ட சமயத்தில் கொடுக்க வேண்டிய பணத்தைக் கூட மதுரை மாவட்டத்தில் கொடுக்கவில்லை நிவாரண வேலைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். நிவாரண வேலைகளை ஆரம்பிக்கலாமா, வேண்டாமா என்பதை ஆலோசிப்பதற்குள் வறட்சி போய்





வறுமை மிஞ்சிவிடும். மூன்று மாதத்திற்குள் நிவாரண வேலைகளை முடிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. இந்தச் சட்ட மன்றக் கூட்டம் நடக்கும் காலத்திலேயே மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவுபோக வேண்டும். கடனையும், கிஸ்தியையும் வசூல் செய்வதை ஒத்திப் போட வேண்டுமென்ற நிலைமை ஏற்பட வேண்டும். மதுரை மாவட்டத்தில் திருமங்கலம், உசிலம்பட்டி, வேடசந்தூர், பழனி வட்டப் பகுதிகளில் நியாயமான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

நம்முடைய மாநிலத்தில் மிகவும் பிற்பட்ட பகுதி என்று 12, 15 வட்டங்கள் இருக்கும் என்று கருதுகிறேன். இந்த வட்டங்களின் லிஸ்டைத் தயார் செய்து மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி அங்கீகாரம் பெற்று நிரந்தரமாகப் பஞ்சத்தில் உழன்று கொண்டிருக்கும் வட்டங்களுக்கு நிவாரணம் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் திட்டமிட வேண்டும். மத்திய சர்க்காரில் இருந்து அதற்கு உதவி பெறவேண்டும். மத்திய அரசு பல்வேறு ராஜ்யங்களுக்கு, பீகார், ஒரிஸா, உ.பி. போன்ற மாநிலங்களுக்கு இதற்காக நிறையப் பணம் ஒதுக்கியிருக்கிறுர்கள். மத்திய சர்க்கார் நிதியிலிருந்து செலவழித்துக் கொண்டிருக்கிறுர்கள். நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும் நேரத்தில் நம்முடைய மாநிலத்தில் பிற்பட்ட பகுதிகள் என்று தேர்ந்தெடுத்திருக்கிறுர்களா, அவற்றுக்காக மத்திய சர்க்காரில் இருந்து நிதி உதவி பெற நடவடிக்கை எடுத்திருக்கிறுர்களா என்ற விவரத்தைத் தெரிவிக்க வேண்மென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தமிழ்நாட்டிலே 1953-ம் ஆண்டிலே கடன் நிவாரணச் சட்டம் வந்தது. இன்று கடன் நிலைமை மோசமாகி விவசாயிகள் கட்டமுடியாத நிலைமையில் இருக்கும்படியான நேரத்தில் உடனடியாகக் கடன் நிவாரணச் சட்டத்தைக் கொண்டு வர முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். தமிழ்நாட்டிலுள்ள மூன்று கோடி விவசாய மக்களுடைய கோரிக்கை இது என்பதை ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

ஜமீந்தார்களுக்கு இழப்பீட்டுத் தொகை கொடுக்க வேண்டுமென்பதற்காக மானியம் கோரியிருக்கிறேம். இதைக் கூட மத்திய சர்க்காரிடத்தில் கூறி செக்யூரிடி பாண்ட் ஆகக் கொடுக்கலாம். நாலைந்து ஆண்டுகளுக்கு அப்படிக் கொடுப்பதால் அவர்கள் ஒன்றும் குடிமுழுகிப் போய்விட மாட்டார்கள். அந்தப் பணத்தைத் தமிழ்நாட்டில் வறட்சிப் பணிகளுக்குச் செலவிடலாம். இதற்கு சட்டப் பரிகாரம் தேட இடம் இருக்கிறது.

விவசாயிகளுக்கு உரிமைக் கார்டு வழங்க வேண்டும். நான் பிளஷர் வைத்துக் கொண்டிருக்கிறேன் என்றுல் அதற்கான லைசென்ஸ் வைத்திருக்கிறேன். அதை வைத்துக் கொண்டு சொந்த உபயோகத்திற்காகக் கடன் வாங்க முடியும். விவசாயி உரம் பெற வேண்டும்; தக்காவிக் கடன் பெற வேண்டுமென்றுல்,

மின் இணைப்பு பெற வேண்டுமென்றால், ஒவ்வொரு நேரமும் கர்ணம், கிராம முன்சீப் ஆகியவர்களிடம் சென்று லஞ்சம் மற்றும் தொல்லைகளுக்கு உட்பட்டுத்தான் சர்டிபிகேட் வாங்க வேண்டியிருக்கிறது. இந்த அரசு கிராமாதிகாரிகளிடமிருந்து விவசாயிகளுக்கு முதலில் விடுதலையைப் பெற்றுத் தரவேண்டும். அவர்களுக்கு விடுதலையைப் பெற்றுத் தாருங்கள் என்று ரெவின்யூ அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். நிலத்தின் சர்வே நம்பர், பட்டா நம்பர், நிலத்தின் அளவு முதலிய விவரங்களைக் கொண்ட நில உரிமைக் கார்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டால் அவர்கள் ஒவ்வொரு முறையும் கிராமாதிகாரிகளிடத்தில் செல்ல வேண்டிய நிலைமை இருக்காது.

மனுநீதி நாளைப் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் பரிமாறப்பட்டன. மனுநீதி நாள் எந்த நல்ல நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டதோ அது தோல்வியடைந்து வருகிறது என்பதுதான் என்னுடைய கருத்து. நானே பல மனுநீதி நாளன்று சென்றிருக்கிறேன். அங்கே தாசில்தார் உட்கார்ந்திருக்கிறார். மனுநீதித் திட்டம் வெற்றிகரமாக நடைபெற வேண்டுமென்றால் தாசில்தாருக்குக் கூடுதலான அதிகாரம் கொடுக்க வேண்டும். பாதை, குளம் போன்ற புறம்போக்கு நிலத்தை சர்க்கார் சரிசாக மாற்றம் செய்ய வேண்டும். அந்த வட்டத்தில் இருக்கும்படியான சில முக்கியமான அதிகாரிகளும், சட்ட மன்ற உறுப்பினர்களும் பஞ்சாயத்து யூனியன் பெருந்தலைவர்களும் கொண்ட நிரந்தரக் குழு செயல்பட வேண்டும். அப்போதுதான் மனுநீதித் திட்டம் நிறைவேறும், இப்போது, 100 மனுக்கள் வந்தால் 98 மனுக்களிலும் எந்தக் காரியமும் செய்ய முடியாமல் இரண்டு மனுக்களுக்கு மட்டும் பட்டா மாற்றம் செய்யப்படுகிறது. இந்தத்திட்டம் வெற்றிகரமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று நினைத்துக் கொண்டால் அது வெறும் பிரமையாகத்தான் இருக்கும். இதிலே மறு பரிசீலனை தேவை என்று சொல்லுகிறேன். இது நல்ல திட்டம். மனுக் கொடுப்பவர்கள் தாசில்தார் அலுவலகத்தைத் தேடிப் போகாமல், விவசாயிகளைத் தேடி அதிகாரிகள் போகும் திட்டம் எட்டளவில் நிற்கக் கூடாது.

அடுத்தபடியாக நிலத்தின் தரத்தையும் நாம் ஆலோசிக்க வேண்டியிருக்கிறது. சில சமயங்களில் காட்டாறு கட்டுமீறிப் போய் நஞ்சை நிலத்தைப் பாழ்படச் செய்து அதை நாளாவட்டத்தில் புஞ்சையாக்கி இன்னும் சொல்லப்போனால் சாகுபடிக்கு அருகதையற்றதாக ஆக்கிவிடுகிறது. ஆனால் அப்படிப்பட்ட நிலத்திற்கும் நஞ்சைக்கான வரி விதிக்கப்பட்டு கடந்த 20 ஆண்டு காலமாக ஏக்கருக்கு 20 ரூபாய் கட்டிக்கொண்டு வருகின்றார்கள் என்றால் இதைவிட அநியாயம் வேறு இருக்கமுடியாது. இதை மாற்ற வேண்டும். இதை மாற்றுவதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம். இதற்காக ஒரு தனி இலாகாவை ஏற்படுத்தி அப்படிப்பட்ட நிலம் எங்கெங்கே





இருக்கின்றது என்று ஆராய்ந்து பார்ப்பதற்கு பணம் செலவழிக்க முடியாத நிலையில் இருப்பின், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பி இப்படிப்பட்ட பிரதேசம் எங்கெங்கே இருக்கிறது என்று ஆராய்வதற்கு வழி வகை காணவேண்டும் அல்லது மாவட்டங்களிலுள்ள அபிவிருத்தி மன்றமாவது இது பற்றி ஆலோசனை செய்து இப்படிப்பட்ட நிலங்களுக்கு வரி விதி விலக்கு அளிக்க உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த மன்றத்தில் விவசாயிகளைப் பற்றி ஏராளமாகப் பேசப்படுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் முன்பொரு சமயம் மறைந்த முதல்வர் அண்ணா அவர்கள் இந்த மன்றத்தில் விவசாயிகளைப் பற்றிச் சொல்லும்போது, 'விவசாயிகளைப் பற்றி எனக்கு நன்கு தெரியும், ஒன்று மாளிகையில் உட்கார்ந்து கொண்டு, அந்த நிலங்கள் எல்லாம் எனக்குச் சொந்தம் என்று சொல்லும் விவசாயி, இரண்டாவது ரகம் வரப்பினில் குடையைப் பிடித்துக் கொண்டு நிலத்தைச் சுற்றிவந்து இந்த நிலம் என்னுடையது என்று சொல்லும் விவசாயி மூன்றாவதாக நிலத்தில் இறங்கி உழுது பயிரிட்டு பாடுபடும் விவசாயி—ஆக இந்த மூன்று வகை விவசாயிகளையும் எனக்கு நன்கு தெரியும்' என்று அன்றைக்கு அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். இதைச் சொல்லிவிட்டு 'இவர்களில் எவன் விவசாயி எவன் உண்மையாக நிலத்தில் உழைப்பவன் என்று எனக்குத் தெரியும்' என்று மறைந்த அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். இதை இந்தச் சர்க்கார் கடைசி வரையில் நினைவில் வைத்துக் கொண்டு, இந்த சீர்திருத்தங்களுக்கு எதிர்ப்பு எந்தக் கண்ணோட்டத்துடன் எந்தத் தரப்பிலிருந்து வந்தாலும் அவற்றையெல்லாம் எதிர்த்து நின்று நிலச்சீர்திருத்த சட்டத்தை நிறைவேற்ற வேண்டிய அவசியத்தில் இருக்கின்றது இந்த அரசு.

சுதந்திரக் கட்சியினர் கூறுகின்றார்கள் இப்படிப்பட்ட சீர்திருத் தங்களால் எல்லாம் பாழாய்ப் போய்விட்டது என்று கூறுகிறார்கள். விவசாயி வாழ முடியாது என்கிறார்கள். உள்ள பிரச்சனை மூன்று கோடி விவசாயப் பெருங்குடி மக்கள் இன்று அடிமைப்பட்டு, அச் சுறுத்தப்பட்டுக் கிடக்கின்றார்கள். நிலப் பிரபுக்களின் இரும்புப்பிடி யில் அவர்கள் சிக்கிக்கொண்டு வாழ்வை இழந்தவர்களாக இருக் கின்றார்கள். இதை உடைத்தெறிந்தால்தான் விவசாயம் முன்னே றும், உற்பத்தி பெருகும். முதலில் இந்தச் சுரண்டலை ஒழிக்க வேண்டும். வக்கீலுடைய வருமானத்திற்கு உச்ச வரம்பு இல்லை, டாக்டருடைய வருமானத்திற்கு உச்ச வரம்பு இல்லை என்று எல்லாம் சுதந்திரக்கட்சியினர் சொல்லி, அதைக் காட்டி இதை எதிர்க்கத் துணிந்தார்களே தவிர அவர்களுக்கும் உச்ச வரம்பு வேண்டும் என்று அவர்கள் சொல்லவில்லை. எனவே இதை யெல்லாம் அரசு கவனத்தில் கொண்டு இந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்தை உடனடியாகவும் விதிவிலக்கின்றியும் திறமையாகவும் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. என். வரதராஜன்] [1970 மார்ச் 14

இன்று தமிழ் நாட்டில் பொதுவாக அதிகாரிகள் பேசிக்கொள்ளுகின்றார்கள், "பத்திரங்கள் பறக்கின்றன, பல ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன" என்று. இப்படி சட்டத்தின் நோக்கங்களை ஈடேறச் செய்யாமல் இருப்பதற்காக எழுதப்படும் இப்படிப்பட்ட பத்திரங்கள் செல்லாது என்று அரசு உத்திரவு போட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து தண்டத் தீர்வையைப்பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். மொகலாய சாம்ராஜ்யத்திலிருந்து பிரிட்டிஷ் ஆட்சி காலத்திலும் அதற்குப் பிறகும் பல துறைகளில் என்னென்னவோ மாறுதல்கள் நிகழ்ந்தாலும் இப்படிப்பட்ட சில தீர்வைகளை விதிப்பதில் ஒரு மாறுதலும் இருக்காது போல இருக்கின்றது. ஒரு விவசாயியை நிர்ப்பந்தப் படுத்தி அவனிடமிருந்து 15 ரூபாயை தண்டத்தீர்வை என்று வசூலிப்பதில் ஏனோ இந்த அதிகாரிகள் இப்படி நடந்துகொள்ளுகிறார்களோ தெரியவில்லை. எனவே இதை ஒழிப்பதற்கு ஏதாவது நடவடிக்கை வேண்டும் என்று விரும்புகிறேன். இந்தத் துறையில் சற்று சுறுசுறுப்பு தேவைப்படுகிறது.

கடைசியாக நான் சொல்ல விரும்புவது, இந்த அரசு ஊழியர்களுடைய இரகசிய குறிப்பேடு முறை அறவே ஒழிக்கப்பட வேண்டும் என்பது. காலம் சென்ற அண்ணா அவர்களே குறிப்பிட்டார்கள், இந்த முறையை ஒழித்திட வேண்டும் என்று, சொல்லி மூன்று ஆண்டு காலம் ஆகிறது ஆனால் நடை முறையில் இன்னும் அப்படியேதான் இருந்து வருகிறது. இந்த முறையிருப்பதால் மேலதிகாரிகளின் முறையற்ற பயமுறுத்தல்களுக்கு இடம் ஏற்படுகிறது. கீழ் தட்டில் உள்ள அதிகாரிகள் சுதந்திரமாக செயல் பட இப்படிப்பட்ட இரகசியக் குறிப்பேட்டு முறை இருக்கக் கூடாது என்று வற்புறுத்திக் கூறிக்கொண்டு மேலும் அரசு ஊராட்சி—நகராட்சி மன்றங்களுக்கு கடன் வழங்குதலைப் பற்றி மட்டும் ஓரே ஒரு கருத்தைக் கூறி முடித்துக்கொள்ள விழைகிறேன்.

நகராட்சி மன்றங்கள் அபிவிருத்தி பணிகளுக்காக அதாவது பள்ளிக்கூடம் கட்டுவது, பஸ் ஸ்டாண்டுகளைக் கட்டுவது போன்ற அபிவிருத்திப் பணிகளுக்காக அரசிடம் கடன் கேட்கும்போது அப்படிப்பட்ட கடன்களை வட்டியில்லாக் கடன்களாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். உதாரணமாக திண்டுக்கல் நகராட்சிக்கு குடிதண்ணீர் சப்ளையை அபிவிருத்தி செய்வதற்காக ஒரு கோடி ரூபாய் அரசு கடனை வழங்கிற்று. இதில் கிட்டத்தட்ட 25 லட்சம் ரூபாய் வட்டியாகக் கட்ட வேண்டியிருக்கின்றது. இப்படிபட்ட வட்டியை அந்நகரமக்களே தாங்க வேண்டி இருக்கின்றது. எனவே இப்படிப்பட்ட நெருக்கடிகளை அகற்ற அரசு ஆலோசிக்க வேண்டும் என்று வற்புறுத்திக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.



1970 மார்ச் 14]

**திரு. மு. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள வருவாய்த் துறை மான்யக் கோரிக்கை மீது நடைபெறும் இந்த விவாதத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்பினை அளித்தமைக்காக எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

கடந்த மூன்று ஆண்டுகாலத்தில் பல்வேறு திட்டங்களை ஆண்டுக்கு ஆண்டு விரிவுபடுத்தி நிர்வாகத்தினைச் செம்மைப் படுத்துவதிலும் தூய்மைப்படுத்துவதிலும் துரிதப்படுத்துவதிலும் தனிக் கவனம் செலுத்தப்பட்டு இன்றைக்கு நல்ல பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன. இதே நேரத்தில் நிர்வாகத்திலுள்ள அதிகாரிகளுக்கும் பொது மக்களுக்கும் நீண்ட நெடுங்காலமாக அற்றுப் போயிருந்த தொடர்பை இப்போது மீண்டும் ஏற்படுத்தி, மனுநீதி நாளைச் செயல் படுத்தும் முறையில் பல்வேறு துறை அதிகாரிகளுக்கும் பொது மக்களுக்கும் பெரியதொரு இணைப்பை ஏற்படுத்தி, அந்த அதிகாரிகள் எல்லாம் கிராமங்களுக்குச் சென்று பல்வேறு தொல்லைகளிலும் இடர்பாடுகளிலும் உள்ள அவர்களுக்கு ஆவன செய்து அவர்கள் துயர் தீர்க்கும் பணியினை நமது அரசு செம்மையாகச் செய்து வருகின்றதைப் பார்க்கின்றோம். பன்னெடுங்காலமாக தீர்க்கப்படாமல் இருந்த பல குறைகள் இந்த முறையினால் 30 நாட்களுக்குள் தீர்க்கப்பட்டு இருப்பதைப் பார்க்கின்றோம். தஞ்சை மாவட்டத்தினைப் பொருத்த வரையில் இந்தத் திட்டம் வெகு சிறப்பாக, மிக வெற்றிகரமாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றதைப் பார்க்கின்றோம். அதற்குக் காரணம் மனுநீதி கண்ட சோழன் தஞ்சைத் தரணியிலே தனது மகன் தேரையோட்டி ஒரு கன்றினைக் கொன்று விட்டதற்காக அந்தக் கன்றின் தாய்க்கு நீதி வழங்குவதற்காக தன்னுடைய மகனின்மீது தானே தேரோட்டி நியாயம் வழங்கினானே அந்தப் பாரம்பரையினர் இன்னும் அந்த மண்ணில் வாழ்வதாலோ என்னவோ, இது அங்கே மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. கலைஞர் ஆட்சியிலே இன்று தஞ்சை வாழ் மக்களுக்கு மனுநீதி கிடைக்கின்றது என்று அங்குள்ள மக்கள் எல்லாம் இன்று மகிழ்கின்றனர். தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இன்றைய தினம் இந்த மனுநீதி திட்டம் வெற்றிகரமாக நடைபெற வேண்டும் என்பதற்காக விவசாயிகளுடைய துயர்களைத் துடைப்பதற்காக சாதாரண அரிசனங்களுடைய இல்லங்களுக்குச் சென்று கூட அவர்கள் குறைகளைக் கேட்டறிந்து செயல்படுகிறார். எனவே இப்படிப்பட்ட முறையினால் பொது மக்களுக்கும் அதிகாரிகளுக்கும் நல்லதொரு இணைப்பு ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து கிராம ஊழியர்களுக்கு சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்பதற்காக அது பற்றி இரண்டாவது சம்பளக் குழு பரிந்துரை செய்ய வேண்டும் என்று அந்தப்

பிரச்சனையை அவர்கள் முன் வைத்து இருப்பது சிறப்பானதாகும். இது அவர்கள் பால் இந்த அரசு கொண்டுள்ள நல்லெண்ணத்தைக் காட்டுகிறது.

அடுத்து பல மாவட்டங்களில் பல வட்டங்கள் பிரிக்கப்பட்டிருப்பதாக அல்லது பிரிக்கப்பட இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதையொட்டி பேராவூரணியைத் தனித் துணை வட்டமாக பிரிக்கப்பட இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆனால் நான் இந்தச் சமயத்தில் வற்புறுத்திக் கூற விரும்புவது, பேராவூரணி தனித் துணைத் தாலுக்காவை ஒரு தனிவட்டமாக தாலுக்காவாக அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதற்காக நான் ஏற்கெனவே அமைச்சர் அவர்களிடம் ஒரு வேண்டுகோளைக் கொடுத்து இருக்கின்றேன். நிர்வாகத் திறன் கருதி பட்டுக்கோட்டைத் தாலுக்காவிலுள்ள திருச்சிற்றம்பலம் போன்ற பிர்க்காவை இதனுடன் இணைத்து இதைத் தனித் தாலுக்காவாக அமைத்திடல் வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். நிர்வாகத்துறையினர் இதை ஏற்றுக்கொண்டு ஒப்புதலுக்காக அரசுக்கு அனுப்பப்பட்டு இருக்கின்றது என்று கருதுகின்றேன். இதை விரைவில் செயல் படுத்தித் தரவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன். இதே நேரத்தில் தாசில்தார் அலுவலகத்திற்கு கட்டிட வசதி—பேராவூரணி தனித்தாலுக்காவிற்கான கட்டிட வசதி—ஏற்பாடு செய்து தரவேண்டும். இதற்கான குறிப்பு ஒன்றும் அரசுக்கு அனுப்பப்பட்டு இருக்கின்றது. அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த மான்யக் கோரிக்கையை நான் வரவேற்று இந்த அளவோடு என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன், வணக்கம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** சபாநாயகர் அவர்களே, இந்தச் சபையின் முன்பு இருக்கும் இந்த மானியக் கோரிக்கைகளின் மீது என் கட்சி அங்கத்தினர்கள் கொடுத்து இருக்கும் வெட்டுப்பிரேரணைகளை ஆதரித்துச் சில வார்த்தைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த அங்கத்தினர்கள் வழக்கம்போல காங்கிரசை ஏதோ ஒரு சாக்குக்காக சாடிப்பேசினால்தான் பாக்கி வேலைகள் நடக்கும் என்று அந்தப் பழைய பல்லவியைப் பாடிக்கொண்டு இருக்கிறார்களே தவிர, அதை விடுவதாகத் தெரியவில்லை. "இருபது ஆண்டுகாலம் நீங்கள் நடத்தினீர்கள், இப்போது நாங்கள் நடத்துகிறோம் பாருங்கள்" என்று சொல்லி அன்றைக்கு ஏதோ ஒன்றிரண்டு தவறுகள் நடந்து விட்டால் நாங்கள் இப்போது நூறு தவறுகளைச் செய்வதற்குத் தயாராக இருக்கிறோம் என்று எடுத்துக் காண்பிப்பது போலத்தான் நீங்கள் நடந்து கொண்டு வருகின்றீர்கள். இந்த மூன்று ஆண்டு காலத்தில் என்ன செய்து இருக்கின்றீர்கள்? செய்[illegible] அதெல்லாம் வாயளவில்தான் இருக்கின்றதே தவிர



செயலில் என்ன செய்து இருக்கின்றீர்கள் என்பதை மக்கள் கேட்க விரும்புகின்றார்கள், அவர்கள் சார்பாக நான் கேட்கிறேன். உலகத்தில் அரசியல் எந்தப் போக்கில் போனாலும் சரி, அல்லது அரசியலில் எந்த நிலையில் மாறுதல்கள் ஏற்பட்டாலும் சரி, இந்த ரெவின்யூ டிப்பார்ட்மெண்டு இந்த ஜில்லா நிர்வாகத்தில் இருக்கும் "ஜபர்தஸ்து" எந்த விதத்திலும் மாறப்போவது இல்லை. முன்பு எதிர்க்கட்சியில் இருக்கும்போது சொல்லிக் கொண்டு இருந்தீர்கள், "பார்த்தீர்களா, எவ்வளவு செலவழிக்கிறார்கள், ஆனால் நிர்வாகம் எப்படியிருக்கிறது" என்று. ஆனால் இவர்கள் வந்ததற்குப் பிறகு அதெல்லாம் அதிகமாகித்தான் இருக்கிறதே தவிர எந்த விதத்திலும் குறைந்ததாகத் தெரியவில்லை. பிற்போக்குத்தனம்தான் அதிகமாகிக் கொண்டு இருக்கிறது. எந்த விதமான முற்போக்கையும் பார்க்கமுடியவில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ரெவின்யூ டிப்பார்ட்மெண்ட் என்றாலேயே அதற்கு ஒரு தனி அந்தஸ்து. ரெவின்யூ போர்டிலிருந்து கடைசி வரை இந்த டிப்பார்ட்மெண்ட் பிரிட்டீஷ் ஏகாதிபத்தியத்தின் ஒரு சின்னமாக இருந்து வருகிறது. டிஸ்ட்ரிக்ட் அட்மினிஸ்ட்ரேஷனும் அப்படித்தான். (ஓர் உறுப்பினர்: 20 ஆண்டுகளாக இருந்ததுதானே.) இருபது என்ன, இருநூறு வருடங்களாக அதை ஆதரித்து வந்தீர்களே. முன்பு நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்? பிரிட்டீஷ் ஏகாதிபத்தியத்தைப் பார்த்தீர்களா, இதுமாதிரி ஏகாதிபத்தியம்தான் நமக்கு சரி என்று சொன்ன அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள்தானே நீங்கள். அவர்கள் வழி வந்தவர்கள்தானே நீங்கள். நீங்கள் என்ன மாற்றங்களைச் செய்திருக்கிறீர்கள்? முன்பெல்லாம் அமைச்சர்கள் பின்னால் தாசில்தார்கள் போகிறார்கள், கலெக்டர் போகிறார் என்றெல்லாம் சொல்லி வந்தீர்கள். அப்படிச் செலவைக் குறைக்க வேண்டும் என்று சொல்லி வந்தீர்கள். இதுவரை அப்படி நீங்கள் எதாவது குறைத்திருக்கிறீர்களா? இப்போது அமைச்சர்கள் என்ன தனியாகவா போகிறார்கள்?

மனு நீதி நாளைக் கொண்டாடுவதாக ஒரு உறுப்பினர் குறிப்பிட்டார். அந்தக் காலத்தில் மாடு வந்து மணி அடித்து நீதி கேட்டது. இப்போது அந்த மாட்டுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் மணி அடித்தால் உங்கள் காதில் கேட்பதில்லை. ஆனால் சிகப்பு கறுப்புத் துணி போட்டு மணி அடித்தால்தான் அது பெரிசாக உங்களுக்குக் கேட்கிறது. அதில் சரியாக நடந்து கொண்டிருக்கிறது. அப்பேர்ப்பட்ட நீதிதான் நடந்து கொண்டிருக்கிறது. மக்களுக்கு நீதி என்று நடக்கவில்லை.

இப்போது தாசில்தார்களுக்கு டெலிபோன் கொடுக்கிறீர்கள். வீட்டுக்குப் போக வேண்டாம், டெலிபோனிலேயே சொல்லி செய்து கொள்ளலாம் என்றுதானே கொடுக்கிறீர்கள்? நிர்வாகத்திற்காகவா கொடுக்கிறீர்கள். தாசில்தார் வீட்டுக்கு என் போக வேண்டும்? மாவட்ட செயலாளர் அல்லது அங்கத்தினர் டெலிபோனிலேயே கூப்பிட்டுச் சொல்லலாம் என்றுதானே டெலிபோன்

வசதி செய்து கொடுக்கிறீர்கள். உங்களுடைய வசதிகளைப் பெருக்கிக் கொள்ளத்தான் இந்த வசதியைக் கொடுக்கிறீர்கள். எங்கும் பஞ்சம் என்று சொல்கிறீர்கள். இப்போது டெலிபோன் கொடுப்பதுதானா முக்கியமான வேலை? இதற்கு எவ்வளவு செலவாகும் என்று பார்த்தீர்களா? இதுதானா சிக்கனம்? தாசில்தார் டெலிபோனை எடுத்தால் மணி அடிக்கும், இதுதான் மனு நீதி. (ஓர் உறுப்பினர்: சப்ஜெக்டைப் பற்றிப் பேசுங்கள்.) ஏதாவது இருந்தால்தானே பேசுவது? என்ன சப்ஜெக்ட் இருக்கிறது? ஏதாவது திட்டங்கள் போடப்பட்டு நிறைவேற்றியிருந்தால் அதைப் பற்றிச் சொல்லலாம். ஒன்றுமே இல்லையே. நாங்கள் செய்ததைத்தானே நீங்கள் செய்து கொண்டிருக்கிறீர்கள். ஏதாவது திட்டங்கள் கொண்டு வந்தால் ஆலோசனை கூற முடியும்.

ரெவின்யூ போர்ட் அப்படியே இருக்கிறது, டிஸ்ட்ரிக்ட் கலெக்டரும் அப்படியே இருக்கிறார். தண்டல்நாயகம் என்று பெயரை மட்டும் மாற்றியிருக்கிறீர்கள். வேறு என்ன முன்னேற்றத்தைச் செய்திருக்கிறீர்கள்? விவசாய வருமான வரி இருக்கிறது. நிலச் சீர்திருத்தம் வந்த பிறகு அது நீக்கிவிடப்படும் என்று சொல்லப்பட்டது. எந்தச் சர்க்கார் சொன்னாலும் அல்லது செய்தாலும் தப்பு என்றால் தப்பு என்றுதான் சொல்வேன். இந்த விவசாய வருமான வரியை அடியோடு நீக்கிவிட வேண்டுமென்று என் ஆலோசனையைச் சொல்கிறேன். 1961-62-ல் இருந்து விவசாய வருமான வரி கட்டவில்லை என்று ஏழை விவசாயிகளுக்கு நோட்டீஸ் வந்துகொண்டிருக்கிறது. முன்பு கம்பவுண்டிங் இருந்தது. கிராமங்களிலுள்ள விவசாயிகளுக்கு என்ன தெரியும்? 100 ஏக்கர் காட்டு நிலம் வைத்திருப்பான். அவன் கணக்குக் கொடுத்திருக்க மாட்டான். உண்மை. . சாதாரண ஏழை விவசாயிகளுக்கு எழுதப் படிக்கத் தெரியுமா? தாசில்தார்களுக்கு என்ன வேலை? டெலிபோன் கொடுத்துவிட்டால் வீட்டிலேயே உட்கார்ந்து விடுவார்கள். முன்பே இவ்வளவு ஏக்கர் இருக்கிறது, அதற்கு இவ்வளவு வரி உண்டு என்று சொல்லியிருக்கலாம் அல்லவா? இப்போது ஏக்கருக்கு ரூ. 200 வீதம் 100 ஏக்கர்களுக்கு ரூ. 20,000 என்று போட்டு ரூ. 7,000 ரூ. 8,000 என்று வரி செலுத்த நோட்டீஸ்கள் வந்து கொண்டிருக்கின்றன. இதுதான் மனு நீதி வழங்கும் சர்க்காரின் கோலமா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** நூறு ஏக்கர் இருக்கிறவன் ஏழை விவசாயியா?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** ஏழை படும் பாடு என்று ஏழையாக ஏழு லட்சம், எட்டு லட்சம் ரூபாய் வாங்கிக் கொண்டு நடிப்பதில்லையா? இப்போது டாக்ஸ் 11 லட்சம் பாக்கியிருக்கிறதே, அவரும் ஏழையா? ஏழை என்றால் என்ன அர்த்தம்? ஏழை என்றால் விவசம் புரியாதவன் என்று அர்த்தம். பிச்சை எடுத்து சங்கர சிவ சம்போ என்று செல்பவர்கள் தான் ஏழைகளா? ஏழை என்றால் விஷயம் புரியாதவன் என்றுதான் அர்த்தம்.





**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** ஏழை என்றால் அறிவில் ஏழை, பணத்தில் ஏழை, ஆற்றலில் ஏழை என்றெல்லாம் இருக்கின்றன. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடுகிற ஏழை எந்த ஏழை?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அறிவில் ஏழைகளாக இருப்பவர்களும் ஏழைகள்தான். தமிழ் உங்களுக்குத்தான் தெரியுமோ. நானும் விஷயம் புரியாத ஏழையாகத்தான் இருக்கிறேன். நீங்கள் ஏழை, நான் பரம ஏழை. கம்பவுண்டிங் பிரச்னையைத் தீர்த்தால் வரவேற்பேன். 7½ ஏக்கர் என்று செய்திருக்கிறீர்கள். விவசாய வருமான வரி வழக்குகள், பைசல் செய்யப்படாத வழக்குகளை நேரில் பார்த்துத் தீர்க்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, மாவட்டங்களைப் பிரிப்பது நல்லது என்பது என் ஆலோசனை. நிர்வாகம் நன்றாக நடைபெற வேண்டுமென்றால் எல்லா மாவட்டங்களையும் இரண்டு இரண்டாகப் பிரித்து—இப்போது 14 மாவட்டங்கள் இருக்கின்றன—முப்பது மாவட்டங்களாகப் பிரித்தால் கூட நல்லது என்பது என் அபிப்பிராயம். இருக்கிற மாவட்டங்களை இரண்டு இரண்டாகப் பிரித்தால் நல்லது. இப்போதுள்ள சூழ்நிலையில் மக்களின் பிரச்னைகள் தீரவேண்டுமென்றால் எல்லா மாவட்டங்களையும் இரண்டு இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்பது என் ஆலோசனை.

நேற்றையதினம் பத்திரிகைகளில் ஒரு செய்தி வந்தது. தாளவாடி பிர்க்காவில் மைசூரில் இருந்து வந்தவர்களின் மேல் உள்ள வழக்குகள் வாபஸ் பெறப்பட்டுள்ளது பற்றி என் நன்றியறிதலை தெரிவித்துக்கொள்கிறேன். இது நல்லதொரு சமிக்ஞை—பக்கத்து மாநிலத்தில் உள்ள ஏதோ ஒரு சிலர் தவறு செய்துவிட்டாலும்—அதை வாபஸ் வாங்கியது குறித்துப் பாராட்டுகிறேன். அதேபோல் மைசூர் மாநிலத்தில் இருப்பவர்களும் மனிதாபிமானத்தோடு நடந்து கொள்ள வேண்டுமென்று இச்சபை மூலம் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

காவேரி நதிப் பிரச்னை இருக்கிறது. நமக்குரிய பங்கு, சட்டப்படி நமக்கு வர வேண்டிய பங்கு, ஒப்பந்தப்படி நமக்கு வரவேண்டிய பங்கு நமக்குக் கிடைக்க வேண்டுமென்பதில் எல்லாக் கட்சிகளும் சர்க்காரோடு ஒத்துழைக்கும் என்று சொல்லிக் கொள்வதோடுகூட, இந்தப் பிரசனை கடுமையாகப் போகாத நிலையில் மைசூர் அரசாங்கமும் நம்முடன் ஒத்துழைக்க வேண்டுமென்று சபா நாயகர் அவர்கள் மூலம் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

தாளவாடி பிர்க்கா என்பது கன்னடம் பேசும் பகுதி. அது ஒரு மலைப் பகுதியாகும். 245 சதுர மைலில் 81 சதுர மைல்தான் ரெவின்யூ ஏரியா. பாக்கியுள்ளவை காடுகள். அங்கு போக்குவரத்து வசதி கிடையாது. அங்கு கல்விக்கூடங்கள் கிடையாது. கோர்ட்டுக்குப் போகும் விஷயத்தில் அங்குள்ள மக்கள் கஷ்டப்

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1970 மார்ச் 14

படுகிறார்கள். தாளவாடியிலிருந்து கோபிச் செட்டிப்பாளையத்
திற்கு 50, 60 மைல்கள் தாண்டி வர வேண்டியிருக்கிறது. இப்
போதுதான் நேரடி பஸ் போக்குவரத்து வைக்கப்பட்டிருக்கிறது.
ரோடு வசதி போன்ற வசதிகளைச் செய்து கொடுத்தால் அங்குள்ள
மக்கள் மைசூரோடு அப் பகுதியைச் சேர்ப்பதற்கு விரும்ப
மாட்டார்கள். அந்தச் சூழ்நிலை அங்கு இல்லை. அங்கிருந்து
சாம்ராஜ்நகர் 10, 12 மைல்தான் இருக்கிறது. பஸ் தாளவாடி
வந்து வருவதில்லை. தாளவாடியில் உள்ள மக்களுக்குப் போக்கு
வரத்து இடைஞ்சல் இருப்பதால்தான் அவர்களிடையே மைசூ
ரோடு சேரவேண்டுமென்கிற எண்ணம் பரவி வருகிறது. மைசூர்
அரசாங்கம் தாளவாடியை விரும்பவில்லை. தமிழ்நாட்டில் இருக்
கிறவர்கள் போங்கள் என்று தள்ளுவதற்கும் இல்லை. ரீ-ஆர்கனை
சேஷன் ஆக்ட்படி அவர்கள் கொள்ளேகாலத்தை எடுத்துக்
கொண்டார்கள், தாளவாடி நமக்கு இருக்கிறது. எல்லைச் சாவடி
கள் இருக்கின்றன. அவற்றை மைசூர்—தமிழ்நாட்டு எல்லையில்
போட்டிருப்போமானால் தொந்தரவு இருக்காது. பன்னாரி என்ற
இடத்திலே இந்த எல்லைச் சாவடியைப் போட்டிருக்கின்றார்கள்.
ஆபீசர்களுக்கு வசதியாக எல்லைச் சாவடிகளா? அல்லது நாட்டிலே
யிருக்கும் சர்க்காருக்காக எல்லைச் சாவடிகளா? தமிழகத்திற்கும்,
மைசூருக்கும் உள்ள எல்லை காட்டிலேயிருப்பதாலே, அதிகாரி
களெல்லாம் உட்கார முடியாமல் இருப்பதாலே இங்கே போட்டுக்
கொண்டிருந்தால்—பன்னாரி வரையில் இருக்கிறது என்று சொல்லு
கிறார்கள். ஆகவே, சாதாரணமான போக்குவரத்திற்குக்கூட
இடைஞ்சல் ஏற்படுகிறது சேல்ஸ் டாக்ஸ் ஒன்றைப் பார்க்
கிறார்கள். மக்களுடைய போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருக்
கிறது. எல்லையை 1967-ம் ஆண்டு போட்டார்கள். மீண்டும் பன்னா
ரியில் போட்டிருக்கிறார்கள். போக்குவரத்து வசதியில்லாமல்
பாதிக்கப்படுகிறார்கள். பள்ளிக்கூட வசதிகள், கோர்ட்டு வசதிகள்
கிடையாது. சாதாரண கேஸுக்குக்கூட கோபிசெட்டிப்பாளையத்
திற்கு வரவேண்டியிருக்கிறது. சப்மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டோ,
கேம்ப் கோர்ட்டோ போட்டிருந்தால் இந்தப் பிரச்சனை இருக்காது
என்று அலோசனை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்த ஹவுஸிங் போர்டுக்கு என்று இப்பொ
ழுது 23 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 23 கோடி ரூபாய்
ஒதுக்கப்படுகிறது என்றால் சரியான முறையில், நியாயமான
முறையில் வீடுகள் கட்டப்படுகின்றனவா? முதலிலே ஒரு திட்டம்
போடுகிறோம், பிறகு சிற்சில விஷயங்கள் ஒதுக்கப்படுகின்றன.
'அடானமஸ் பாடி' என்று வைத்து, கடன் சர்க்காரிடத்தில் ஒரு
பகுதியாகக் கொடுத்து, பாக்கி வசூல் செய்யப்பட்ட பணத்தை
எப்படிக் கொடுக்கிறார்களோ என்ற நிலையைப் பார்த்தால் சரியாக
இல்லை. பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியிலே நான் தலைவராகப்
பணியாற்றுவதால் என் கவனத்திற்கு வந்தது. ஏராளமான
ஊழல்கள், ஏராளமான கணக்குகள் சரியாக வைக்கப்படாத நிலை,
நிலை, சில அதிகாரிகள் சொல்லிக் கொண்டிருப்பதாகப் புகார்கள்



1970 மார்ச் 14] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

இருக்கிறது. என்ன, பிளாட் அட்ஜஸ்ட் செய்து விட்டால்
போகிறது என்று சொல்லக்கூடிய நிலை. இதனால் மக்களுக்கு
நன்மை இல்லை. சாஸ்திரி நகர் என்ற இடத்தில் இருக்கும்
ஹவுஸிங் போர்டைச் சார்ந்த இடத்தில், விளையாட்டுப் பூங்காக்
களுக்கு என்று சில இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. அந்தப்
பூங்காக்கள் அப்படியே இருக்கின்றனவா? அவைகளையெல்லாம்
குறைந்த விலைக்கு வாங்கி பிளாட் போட்டு, அதிக விலைக்கு
விற்று, வியாபாரம் மாதிரி செய்யக்கூடிய நிலை இருக்கிறது. இப்ப
டிப்பட்ட தவறுகள் நடந்து கொண்டிருக்கின்றன. பல காலனி
கள் கட்டுகின்ற இடத்திலே, பொதுமக்களுக்கு உதவியாக பூங்காக்
கள் இருக்க வேண்டுமென்று செய்யும்பொழுது அவைகளில் ஏன்
பிளாட்கள் போட வேண்டும் என்று கேட்கிறேன். சர்க்காரின்
பணத்தில், ரோடுகள் போட்டு, எல்லா வசதிகளும் செய்து
கொடுக்க ஹவுஸிங் போர்ட் இருக்கிறது. அங்கிருந்து ரூ. 2,000
என்று குறைந்த விலைக்கு வாங்கி, 10,000 ரூபாய் என்று அவர்கள்
விற்றுக் கொண்டு லாபம் சம்பாதிக்கிறார்கள். இந்த நிலை ஹவுஸிங்
போர்டில் இருப்பதால், 'அடானமஸ் பாடி' என்று விடுவதைவிட
சர்க்காரே மேற்பார்வை பார்த்து செய்வது மட்டுமல்ல, அதற்
கென்று அக்கவுண்ட்டலுக்குத் தனி ஆடிட் போட்டு, பூரணமாக
விசாரித்து, மக்களுக்குப் பயன்படும் வகையில் திருத்தி அமைக்க
வேண்டுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

பிளாட்ஸ் விநியோகம் செய்வதிலும் ஊழல்கள். அவருக்குக்
கொடுத்தார், இவருக்குக் கொடுத்தார், அதிகாரிகளுக்கு வேண்டிய
வர்களுக்குக் கொடுத்தார்கள், அமைச்சர்களுக்குச் சொந்தக்காரர்
களுக்குக் கொடுத்தார்கள் என்ற புகார்கள் நிறைய வருகின்றன.
ஆக 'கோடிஃபை பண்ணி, இன்னின்ன தகுதியுள்ளவர்களுக்குக்
கொடுக்க வேண்டும் என்ற நிலை இருக்க வேண்டும். 23 கோடி
ரூபாய் கடன்களைக் கொடுத்து, வீடுகளைக் கட்டிக் கொடுக்க என்று
வந்த நிர்வாகம் எப்படி இருக்கிறது? நிர்வாகம் எப்படி இருக்
கிறது என்று எடுத்துப் பார்த்தால், மிகவும் அவமானப்படும் வகை
யில் இருக்கிறது. 10, 15 கார்டுகள் எதற்கு? 5, 6 ரோடு ரோலர்கள்
எதற்கு? ரோடு ரோலர்களைக் கொண்டு வீட்டை இடித்துச் சமப்
படுத்தவா 5, 6 ரோடு ரோலர்கள்? வேண்டியவர்களுக்கு உத்தி
யோகம் கொடுக்க, சலுகை கொடுக்க ஹவுஸிங் போர்ட் நடந்து
கொண்டிருக்கும் நிலை இருக்கிறது. சர்க்கார் இதில் தீவிரமாகக்
கவனம் செலுத்தி, கண்காணித்து, யாராக இருந்தாலும்
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக இந்த ஸ்டாம்ப் ரெஜிஸ்ட்ரேஷனைப்பற்றிச்
சொன்னார்கள். அதைப்பற்றி திரு. காசிராமன் அவர்கள் விளக்க
மாகச் சொல்லிவிட்டார்கள் என்று நினைக்கிறேன். அமைச்சரவர்
களுக்கும் ஓரளவுக்கு ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.
மதிப்பீடு என்று போட்டு சர்க்காருக்கு 4½ சதவிகிதம் என்று
முடிந்து விட்டது. ரெஜிஸ்ட்ரேஷன் செய்யும் சமயத்தில், குறை

வாகப் போட்டு, லட்சம் ரூபாய் என்றால் 30,000 என்று போட்டு,
தனிப்பட்டவர்கள் கள்ளச் சந்தையில் ஈடுபட, சர்க்காரை
ஏமாற்ற, வருமானத்திற்குரிய வரி கட்டாமல் பயன்படுமோ என்ற
அளவில் அமைந்திருக்கிறது. எனவே, அதற்கும் தீவிரமான
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

எந்த இடத்திலே ஊழல் என்றாலும், ஊழல் இருந்தால்
கொண்டு வந்து காட்டுங்கள், நடவடிக்கை எடுக்கிறோம் என்று
சொல்கிறார்கள். எத்தனையோ சாதாரணமாக வருகிறது. அது
மட்டுமல்ல. ரெவின்யூ இலாக்காவிலே இம்மாதிரிக் குற்றச்சாட்டு
நிரூபிக்கப்பட்டாலும், நிரூபிக்கப்பட்டபின் நடவடிக்கை எடுக்க
வில்லை. அப்படி நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், மீண்டும்
மீண்டும் தவறுகள் செய்ய வகையேற்படும். வடார்க்காடு
மாவட்டத்தில், வாலாஜா பஞ்சாயத்து யூனியன் தலைவர் பல
ஆயிரக்கணக்கான ரூபாய்கள் கையாடல் செய்து தவறு
செய்திருக்கிறார். அதையெல்லாம் சொல்லி நடவடிக்கை எடுக்க
வில்லை என்று அங்கத்தினர் ஒருவர் சொன்னார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவையில் இல்லாத ஒருவர்
மீது நீங்கள் குற்றஞ்சாட்டிவிட்டீர்கள் என்றால், அவர் விளக்கம்
சொல்ல முடியாது. அமைச்சர்கள், அமைச்சர்களைச் சார்ந்திருக்
கும் அலுவலர்கள், அந்த அலுவலர்கள் சம்பந்தமாக இருந்தால்
அதைச் சுட்டிக் காட்டுங்கள். இந்த அவையிலே இல்லாத ஒருவர்
மீது, அந்தக் குற்றச்சாட்டிற்கு விடையளிக்க வாய்ப்பில்லாத
ஒருவர் மீது குற்றம் சுமத்துவது முறையாக இருக்காது.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தவறு என்று சொல்ல வந்தேனே
தவிர, பெயரைக் குறிப்பிடவில்லையே. புகார்கள் வந்திருக்
கின்றன. அவர்மீது எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை என்று
புகார்கள் வந்தன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என்ன புகார்?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** வாலாஜா பஞ்சாயத்து யூனியன்
தலைவர் கையாடல் செய்து, அவர்மீது போலீஸ் எந்தவிதமான
நடவடிக்கையும் எடுக்கவில்லை என்ற புகார். பெயரைச் சொல்ல
வில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புகார் என்றால் அதற்கு
ஆதாரம் ஏதேனும் இருக்கிறதா எந்த அளவுக்கு ஆதாரம் இருக்
கிறது என்று பார்த்துப் பேச வேண்டாமா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** நான் சொல்வது--புகார் வந்தால்,
ஸ்டே கொடுத்துவிடுகிறார்கள். புகார் வந்தால் விசாரித்து,
தவறுகள் நடக்காமல் காக்க வேண்டிய நிலைமை இருக்கிறது
என்பதற்கு விஷயத்தைச் சொல்லுகிறேன். கையாடல்



செய்திருக்கும் படியான புகார் வந்தால், போலீஸ் நடவடிக்கை
எடுக்கு முன்னாலே, சர்க்கார் ஸ்டே கொடுக்கக்கூடிய நிலைமையைச்
சொல்லுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சர்க்கார் கொடுத்த ஸ்டே
இருக்கிறதா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கொடுத்திருப்பதாகச் சொல்லு
கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் : சர்க்கார் கொடுத்த ஸ்டே
உங்களிடம் இருக்கிறதா ?**

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பேசிக் கொண்டிருக்
கும்பொழுது உறுப்பினர்கள் ஆங்காங்கு இருந்து செய்திகளைத்
தருவது நல்ல முறை ஆகாது.

THIRU T. MARTIN : Sir. when my Leader is in difficulty,
I have to instruct him.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** லீடர் ஆபத்திலேயிருக்கும்
பொழுது அங்கத்தினர் அங்கிருந்து உதவ முடியாது. முன்
கூட்டியே உதவியிருக்க வேண்டும்.

நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்று
கேட்பது வேறு. ஆனால் ஸ்டே கொடுத்திருக்கிறது என்று சொல்கி
றீர்கள். ஸ்டே கொடுத்திருப்பதற்கான ஆதாரம் இருக்கிறதா ?

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** அதைத்தான் சொல்ல வருகிறேன்.
பஞ்சாயத்து யூனியன் தலைவர் கையாடல் செய்திருப்பதாகப் புகார்
கூறி இருக்கிறார்கள். அதன்மீது சர்க்காரின் நடவடிக்கை என்ன?
மேல் நடவடிக்கை எடுக்க உதவியாக இருக்குமென்பதற்காகத்தான்
சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இம்மாதிரி மாண்புமிகு
எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பேசுவது அவ்வளவு முறையானது
அல்ல. பஞ்சாயத்து யூனியன் தலைவர் கையாடல் செய்திருக்கலாம்.
அதனால், கையாடல் செய்யப்பட்டதிலே அரசாங்கத்தின் மூலம் நட
வடிக்கைகள் என்ன எடுக்கப்பட்டது என்பதுதானே தவிர, ஏதோ
ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர் ஒரு தவறு செய்துவிட்டார் என்பதற்
காக அரசாங்கம் பொறுப்பு ஏற்கிறது என்ற பொருள் அல்ல.
யாரோ, வெளியிலே கொடுத்த புகாரை மட்டும் வைத்துக் கொண்டு
பேசுவது நல்லதல்ல. கையாடல் என்றால், யார், எப்பொழுது
என்றும், அரசாங்கம் எடுக்க வேண்டிய நடவடிக்கையில் என்ன
தவறியது என்றும் சொல்ல வேண்டுமே தவிர, புகார் இருக்கிறது
என்று சொல்லி, அது நிரூபணம் ஆகாவிட்டால், அது
அவர்களுக்கும் உகந்தது அல்ல, சர்க்காருக்கும் உகந்தது அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள், சர்க்கார் ஸ்டே கொடுத்திருக்கிறது என்று சொன்னார்கள். ஸ்டே கொடுத்திருப்பதற்கான ஆதாரம் இருக்கிறதா? உறுப்பினர்கள் தங்கள் கட்சித் தலைவருக்குத் துணை இருக்க வேண்டும். கட்சித் தலைவரை ஆபத்திலே விட்டுவிடக் கூடாது. ஆபத்திலே இருக்கிறார் என்று திரு. மார்டின் அவர்கள் சொன்னதாலே சொல்லுகிறேன். ஆபத்திலே ஆக்கி விட்டுவிட்டு அப்புறம் உதவிக்குப் போக வேண்டாமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. டி. மார்டின்** : "difficulty" என்று சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : "difficulty" என்றால் தமிழில் என்ன அர்த்தம்? ஆகவே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள், தனிப்பட்ட ஒருவரைப்பற்றி, அவையிலே இல்லாத ஒருவரைப்பற்றி அவையிலே குறிப்பிடுவது முறையாக இருக்காது. சர்க்காருக்கு எந்த வகையில் பொறுப்பிருக்கிறது? சர்க்கார் ஸ்டே கொடுத்து நிறுத்தியிருக்கிறதா? ஸ்டே கொடுத்திருக்கிறதா? அப்படியிருந்தால் சொல்லுங்கள். ஸ்டே கொடுத்திருக்கிறது என்றால் அதற்கு ஆதாரம் என்ன இருக்கிறது? தவறுகள் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு, அவர்கள் நடவடிக்கை எடுக்காமல் இருந்தால் சர்க்கார் மீது குற்றஞ்சாட்டலாம். அதை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் மனதிலே வைத்துப் பேசுவது நல்லது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : சபாநாயகர் அவர்களே, சர்க்கார் ஸ்டே ஆர்டரைக் காட்டுங்கள் என்று சொன்னால் நான் ஸ்டே ஆர்டரைக் காட்டுங்கள் என்று சொன்னால் நான் ஸ்டே ஆர்டர் காபி வாங்குவதற்கு அப்ளிகேஷன் போட்டு, அதற்காக ஒரு ஆபீஸ் வைத்துக் கொண்டு, காப்பி வாங்கி சப்மிட் பண்ண வேண்டுமா? குற்றச்சாட்டை சாட்டிவிட்டு நான் தப்பித்துக்கொள்வதற்காகச் சொல்லவில்லை. இன்று ஸ்டே ஆர்டர் வேண்டும் என்று கேட்டவுடன், நாளைக்கே உடனே பைலை என்னிடம் அனுப்பிவிடுவார்களா? இது சட்டசபை. இது கோர்ட்டு அல்ல. குற்றச்சாட்டு சொல்ல எனக்கு உரிமை இருக்கிறது. குற்றச்சாட்டை சொன்னவுடனேயே அதற்கு ஆதாரம் கொடுங்கள், டாக்குமெண்ட் கொடுங்கள், ஸ்டாம்பு பேப்பரில் ஆதாரம் கொடுங்கள் என்றெல்லாம் சொன்னால் நான் எப்படி இங்கே பணியாற்ற முடியும்? (ஆரவாரம்). சட்ட மன்றத்தில் எப்படி நான் எதிர்க் கட்சித் தலைவராகப் பணியாற்ற முடியும்? ஆகவே தான் சொல்லுகிறேன், நீங்கள் ஆதாரம் கேட்பதற்கு உரிமை இருக்கிறது, அமைச்சர்களுக்கு உரிமை இருக்கிறது. இப்படியில்லை, இப்படிச் சொல்லுங்கள் என்று சொல்வதற்கு உரிமை இருக்கிறது. ஆனால் எதற்கெடுத்தாலும் ஸ்டாம்பு பேப்பரில் ஆதாரம் கொண்டு வந்தாக வேண்டும், கையெழுத்துப் போட்ட ஸ்டே ஆர்டர் உங்களிடம் இருக்கிறதா என்று கேட்டால், நான் சொல்கிறேன், எங்களுக்கு உரிமை





கொடுங்கள் நான் வேண்டுமென்று எழுதியவுடன் உடனே மறுநாள் எனக்கு அனுப்பிவிடுங்கள், நான் அடுத்த நாளே இங்கு கொண்டு வந்து சமர்ப்பித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இப்பொழுது மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிற நேரத்தில், ஆதாரத்தை இப்பொழுதே கையிலே கொடுங்கள் என்று நான் கேட்கவில்லை. ஸ்டே கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னீர்கள். அதற்கு ஆதாரம் இருக்கிறதா என்றுதான் கேட்டேன், வேறு அல்ல. நான் முன்பு ஒரு முறை ஆதாரம் கேட்கும்பொழுது, அடுத்து வருகிற தொடர்கூட்டத்தில் கூடக்கொடுங்கள் என்று தான் கூறியிருக்கிறேன். முன்பு நீங்கள் ஒரு குற்றச்சாட்டைச் சாட்டியபொழுது, ஒரு மாத கால இடைவெளி கொடுத்து, ஆதாரத்தைக் கொடுங்கள் என்று தான் சொல்லியிருக்கிறேன். ஆனால், எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிற நேரத்தில், உரிமை இருக்கிறது, உரிமை இருக்கிறது என்று சொல்கிறார். ஏதோ அவர்களுக்கு இருக்கிற உரிமையை நான் மறுத்துவிட்டதுபோல, உரிமை இருக்கிறது, உரிமை இருக்கிறது என்று சுட்டிச் சுட்டிக் காட்டுகிறார்கள். அவர்களுக்குப் பேசுவதற்கு உரிமை இருக்கிறது. குற்றச்சாட்டு சாட்டுவதற்கு உரிமை இருக்கிறது. ஆனால், குற்றச்சாட்டு சாட்டுகிற நேரத்தில், அதற்கு ஒரு முறை இருக்கிறது என்பதைத்தான் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு நான் நினைவூட்டுகிறேன்.

**திரு. வ. ஜார்ஜ்**: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : என்னுடைய குற்றச்சாட்டு வட ஆர்க்காடு மாவட்டத்தில் வாலாஜா பஞ்சாயத்து யூனியன் தலைவர் கையாடல் செய்திருக்கிறார் என்பது தான். கையாடல் செய்திருக்கிறாரா? இல்லையா? அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்? என்று நான் சர்க்காரைக் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : கேள்வி நேரத்தில் கேள்வி போடுங்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : ஏன் நான் பேசக் கூடாதா? கேள்வி நேரத்தில் கேட்டால் பிரசங்கம் செய்யக் கூடாது, கேள்வி கேளுங்கள் என்று சொல்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அதற்கான கேள்வியைப் போட்டு, அமைச்சர் விடை அளிக்கின்ற நேரத்தில், துணைக் கேள்விகளைப் போட்டு, விவரங்களைப் பெறுங்கள் என்று தான் சொன்னேன். கையாடல் நடந்திருக்கிறதா, இல்லையா, அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள், என்று உறுப்பினர் அவர்கள் இப்பொழுது கேள்விக்கணைகளைத் தொடுத்தால், அமைச்சர் எப்படி பதில் சொல்ல முடியும்?

**திரு. வ. ஜார்ஜ்:** இல்லை யென்று சொல்லிவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஏதாவது சொல்வது, அதற்கு இல்லை என்று சொல்வது என்பதற்கு இந்த அவை அல்ல இடம்; வேறு இடத்தில் அதை வைத்துக் கொள்ள வேண்டும்.

**திரு. டி. மார்டின்:** மிஸ்டர் ஸ்பீக்கர் சார். ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர். It affects everybody.

பேரவைத் தலைவர் அவர்கள் 'ஏதாவது சொல்வது' என்று சொன்னார்கள், அப்படியென்றால் அப்படிப் பொறுப்பு இல்லாமலா இந்த அவைக்கு வந்திருக்கிறோம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள், இல்லை யென்று சொல்லிவிட்டுப் போகட்டும் என்று சொன்னார்கள்.

**திரு. டி. மார்டின்:** Sir, he wanted to raise a point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு முன்பு அது. இப்பொழுது சொன்னார்கள், அப்படியில்லை என்று சொல்லிவிட்டுப் போகட்டும் என்று. இந்த இடத்தில் அப்படிப் பேசுவது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உரிமை தானா என்பதைக் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், வாலாஜாபேட்டை பஞ்சாயத்து யூனியன் தலைவர் பணம் கையாடல் செய்திருப்பதாகச் சொல்கிறார். அதுபற்றி அரசின் கவனத்திற்கு இப்பொழுது கொண்டு வந்திருக்கிறார். முன்பு ஒரு முறை கூட நான் எதிர்க் கட்சி வரிசையில் இருந்த நேரத்தில், எருக்கஞ்சேரி விவகாரத்தைப்பற்றி சபையில் எடுத்துச் சொன்னேன். திரு. வெங்கட்டராமன் அவர்கள், அப்படியிருந்தால், அதை அரசு கவனிக்கும் என்று குறிப்பிட்டார். மறுநாள் அதற்கான ஆதாரங்களைக் கொண்டு வந்து கொடுத்தேன். கொடுத்த ஆதாரங்களை அவர் மகிழ்ச்சியோடு வாங்கிக் கொண்டு, அதைப் பற்றி விசாரணை செய்வதாகச் சொன்னார். அதைப்போலவே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இப்பொழுது தகவல் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பஞ்சாயத்து யூனியன் தலைவர் கையாடல் செய்திருக்கிறார் என்பதற்கான ஆதாரத்தை நாளைய தினம் கொடுத்தால், அரசாங்கம் அதற்குரிய நடவடிக்கை எடுக்கும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** மிக மிகப் பாராட்டுகிறேன், முதல் அமைச்சர் அவர்களை. இது மாதிரி சொல்லிவிட்டால் எதற்கு இத்தனை தகராறு வருகிறது? சபாநாயகர் அவர்கள் வகுப்பு நடத்தி, இப்படித்தான் நடக்க வேண்டும், இப்படித்தான் கேட்க வேண்டும் என்று சொல்லிக் கொடுத்தால், அதற்கும் நான் தயாராக இருக்கிறேன். முதல் அமைச்சருக்கு இருக்கிற பொறுப்பு கூட உங்களுக்கு இல்லையே . . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் தன்னை மறந்துவிடுகிறார். எதைப் பேசுவது, எதைப் பேசக் கூடாது என்பதற்கு விதிமுறைகள் இருக்கின்றன. நான் கேட்டதில் எந்தவிதமான முறைகேடும் இல்லை. நீங்கள் பேசுகிறபொழுது குற்றச்சாட்டு சாட்டுகிறீர்கள். நம்முடைய சட்டமன்ற விதிமுறைகள் தெளிவாகக் கூறுகின்றன. ஆதாரத்தோடு, குற்றச்சாட்டுகளைக் கூற வேண்டுமென்று. நீங்கள் பேசுவதற்கு ஆதாரம் இருக்கிறதா என்று கேட்டேன். இன்று இல்லையென்றால், நாளை தருகிறேன் என்று சொன்னால் கூடப் போதும் என்று சொன்னேன். முன்பு ஒரு முறை குற்றச் சாட்டுச் சொன்னபொழுது ஒரு மாத கால இடைவெளி தந்து, அதற்குள் ஆதாரங்கள் தாருங்கள் என்று சொல்லியிருக்கிறேன். நேற்று முன் தினம் கூட, நீங்கள் என்னிடம் ஒரு காகிதத்தைக் கொடுத்தீர்கள். நீங்கள் எதையாவது என்னிடம் கொடுத்துவிட்டு, அதுதான் ஆதாரம் என்று சொன்னால் நான் அதை எப்படி எடுத்துக்கொள்ள முடியும்? நீங்கள் கொடுத்தது ஒரு காகிதம், ஆதாரம் அல்ல என்று தான் சொன்னேன். டாகுமெண்டு என்றால் என்ன என்பது குறித்து விதிமுறைகள் இருக்கின்றன. ஆகவே, அது வெறும் காகிதம் என்று சொன்னேன். எதையாவது கொடுத்துவிட்டு, அதைப் பேரவைத் தலைவர் ஆதாரமாக எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சொன்னால், அது முறையா? அது முறையல்ல. இந்த மன்றத்தின் மரபையும், கண்ணியத்தையும் காக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த முறையில்தான் நான் கேட்டேனே தவிர, பேச வேண்டாம் என்று நான் சொல்லவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** இந்த மன்றத்தின் மரபையும், கண்ணியத்தையும் காப்பாற்றுவதற்குத்தான் நான் இங்கு நின்று கொண்டிருக்கிறேன் . . . .

**திரு. கொளத்தூர் கோதண்டம்:** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். சபாநாயகர் அவர்கள் பொறுப்பு இல்லாமல் நடக்கிறார் என்று பொருள்பட உறுப்பினர் அவர்கள் வார்த்தைகளை உபயோகித்தார். அப்படி உபயோகிக்கலாமா?

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** நான், பொறுப்பு இல்லை என்று சொல்லவில்லை; பொறுமை இல்லை என்றுதான் சொன்னேன். அது தப்பாக இருக்கிறது என்றால் நான் அதை வாபஸ் பெற்றுக் கொள்கிறேன். நான் 'பொறுமை' என்றுதான் சொன்னேன். பொறுப்பு இல்லையே என்று சொல்லவில்லை. சபாநாயகர் அவர்கள் சபையின் மரபையும், கண்ணியத்தையும் காப்பாற்ற வேண்டும் என்று சொன்னார்கள். அப்படியென்றால் மரபையும் கண்ணியத்தையும் காப்பாற்ற வேண்டாம் என்பதற்காகவா நான் இங்கே நின்றுகொண்டிருக்கிறேன்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நான் என்ன சொன்னேன் என்றால், இப்பொழுது நடைமுறையில் விவாதத்தில் இருக்கும் ஒரு விஷயத்தைப்பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு காகிதத்தைக் கொடுத்து, அது ஆதாரம் என்று சொன்னார். அது ஆதாரம் இல்லை, வெறும் காகிதம்தான் என்று நான் சொன்னேன். எதிர்க்கட்சித் தலைவர் டாகுமெண்டை என்னிடம் கொடுத்துவிட்டு, அது டாகுமெண்டு இல்லை, வெறும் காகிதம் தான் என்று நான் கூறியிருந்தால், பேரவைத் தலைவர் பொறுமை இழந்து பேசுகிறார் என்ற பொருள் அதற்கு இருக்கும், மறந்து பேசுகிறார் என்ற பொருள் அதற்கு இருக்கும். ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வெறும் காகிதத்தைக் கொடுத்துவிட்டு, அதை ஆதாரம் என்று ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சொன்னால், அது ஆதாரம் இல்லை, வெறும் காகிதம் என்று நான் கூறுவது முறைகேடா? அதை முறைகேடு என்று கூறக்கூடாது. நமது மன்றத்தின் மரபையும், கண்ணியத்தையும் காப்பாற்றவேண்டும் என்று சொன்னால், அதில் என்ன தவறு? அப்படிச் சொல்கிற நேரத்தில், பேரவைத் தலைவரை எப்படி அணுகவேண்டும், எப்படிப் பேச வேண்டும் என்பதற்கு விதிமுறைகள் இருக்கின்றன. நான் தெளிவாகச் சொல்கிறேன். பேரவைத் தலைவர் ஆளும் கட்சிக்குத் துணையாக இருக்கிறார், எதிர்க்கட்சிக்கு துணையாக இருக்கவில்லை, நடு நிலைமையில் இருக்கவில்லை என்று பட்டால், அதை எடுத்துக் கூறுவது எப்படி என்பதற்குச் சட்டமன்ற விதிமுறைகளில் இடம் இருக்கிறது. பேரவைத் தலைவரை 'நீங்கள் இப்படி நடந்து கொண்டீர்கள்' என்று சொல்வது முறையல்ல. பேரவைத் தலைவரின் மீது குற்றச்சாட்டு சாட்டிக் கூறுவதற்கு வேறு முறைகள் இருக்கின்றன, அதற்கு விதிமுறைகள் இடம் தருகின்றன. அதைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள். முதல் அமைச்சர் அவர்களுக்கு இருக்கிற பொறுமை கூட பேரவைத் தலைவருக்கு இல்லை என்று குற்றம் சாட்டுவது மன்றத்தின் மரபையும் கண்ணியத்தையும் காப்பாற்றுவதாகாது. அப்படி யிருக்கும்பொழுது 'நான் மன்றத்தின் மரபையும், கண்ணியத் தையும் காப்பாற்றாத முறையிலா நடந்து கொள்கிறேன்' என்று கேட்டால், என்ன பொருள்?

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : ஆதாரம் கொடுக்கவேண்டும் என்ற நிலை இருக்கிறது. அதே சமயத்தில் கோர்ட்டு மாதிரி ஸம்மன் கொடுத்து, இதைக் கொண்டுவந்து இப்பொழுது கொடுக்கவேண்டும் என்று சொன்னால், எப்படிக் கொடுப்பது? சட்டசபையில் இங்கே எடுத்துச் சொல்வதற்கு எங்களுக்குப் பாதுகாப்பு இருக்கிறது. சிலசமயங்களில் அதிலே தவறுகள் கூட இருக்கலாம். அதற்கு மறுப்பு கொடுப்பதற்கு அமைச்சர்கள் இங்கே இருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : முதல் அமைச்சர் அவர்களும், அவையில் உள்ள உறுப்பினர்களும் சேர்ந்து சபாநாயகர் அவர்களை உயர்த்தி வைத்திருக்கிறோம், முதல் அமைச்சருக்கு





இருக்கும் பொறுப்பு கூட, அல்லது பொறுமைகூட, சபா நாயகருக்கு இல்லை என்று குறிப்பிட்டதைப்பற்றி இப்பொழுது ஆழ்ந்து சிந்தித்தால், எதிர்க்கட்சித் தலைவரேகூட அது சரியில்லை என்று கருதுவார்கள் என்று கருதுகிறேன். ஆகவே, வருத்தம் தெரிவித்து விடுவது நல்லது.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : ஏற்கனவே சொல்லியாகி விட்டதே. நான் 'பொறுமைகூட' என்று சொன்னது தவறு என்றால், திருத்திக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். திருத்திக் கொள்வது தான். திருத்திக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நான் வருத்தப்படவில்லை.

"நயனில னென்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கும் உரை"

என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். 'நயனிலன்' என்பது அவர் உரைக்கும் உரையே உணர்த்தும். இதற்குப் பொருள் கோவைக் கம்பருக்குத் தெரியாமல் இருக்காது. நான் வருத்தப்பட மாட்டேன்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : கம்பர் கூட நிறைய சொல்லியிருக் கிறார். அழுத்தம் திருத்தமாக, ஆழமாகச் சொல்ல வேண்டும் என்கிறார். அடிக்கிற இடத்தில் அடித்துச் சொல்ல வேண்டும். இடிக்கிற இடத்தில் இடித்துச் சொல்ல வேண்டும். கடுத்துச் சொல்ல வேண்டும். அதுவும் கூட வள்ளுவர்,

"சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சா னவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது"

என்று கூறியிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி** : வள்ளுவர்,

"அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்"

என்றும் கூறியிருக்கிறார்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்** : 'அரங்கின்றி வட்டாடல்' உங் களுக்குப் பொருந்தும்; எங்களுக்குப் பொருந்தாது. எங்களுக் இல்லை அது. ஆகவே, குற்றச் சாட்டுகளைத் தெரிவித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அதிக நேரம் ஆகிவிட்டதால், சீக்கிரம் முடித்துவிடுகிறேன்.

டிஸ்ட்ரிக்ட் அட்மினிஸ்ட்ரேஷனில், ரெவின்யூ போர்டு ஒழிக்கப் பட வேண்டும் என்று தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். காங்கிரஸ் ஆட்சியில் இருந்த காலத்திலேயே ரெவின்யூ போர்டை எடுக்க வேண்டும் என்று தீர்மானம் செய்யப் பட்டது. அதற்குப் பிறகு ஒரு கமிட்டி போட்டுப் பார்க்கும்போது, கமிஷனர்களாகப் பிரித்து வைப்பதில், உரிய பலன்கள் வருமா என்ற சந்தேகம்

ஏற்பட்டது. பழைய மாதிரியே, ரெவின்யூ போர்டை வைத்துக் கொண்டால் என்ன என்கிற சூழ்நிலை அப்பொழுது இருந்தது. அப்படிப்பட்ட முடிவு எடுத்ததாக ஞாபகம். சர்க்காரிடத்தில் பைல்கள் இருக்கும். செயல் படுவதற்குப் பலன்களை மனதில் கொண்டு செய்தால் நல்ல முறையில் இருக்கும் என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக, நிலச் சீர்திருத்தம். அதில் முக்கியமான ஒரு பகுதியைப் பற்றி நிதி அமைச்சர் சொன்னார்கள். நான் இது மாதிரி புரட்சிகரமாகக் கொண்டு வந்திருக்கிற திட்டத்திலே, தேர்தலிலே முன்னணியாகக் கொடுத்த வாக்கை நிறைவேற்றி விட்டோம் என்று சொன்னார்கள். எத்தனையோ வாக்குகளில் இந்த ஒன்றையாவது நிறைவேற்றுகிறீர்கள். எந்தவிதமான முற்போக்குச் சட்டங்களையும் கொண்டு வருவதை எதிர்க்கட்சியில் நாங்கள் ஆதரிப்போம். அதே சமயத்தில் அதை ஆய்ந்து பார்த்து, பயன் உள்ளதாகக் கொண்டு வரவேண்டும். இப்பொழுது 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்பதற்கு ஆட்சேபம் இல்லை. ஆனால், அதே சமயத்தில், (Comprehens.ve land legislation) என்று சொன்னார்கள். அந்தமாதிரி (Comprehensive land legislation) வரும்போது, எல்லாவற்றையும் வைத்து, எல்லாவிதமான கருத்துக்களையும் ஒத்துவந்தால் வரவேற்கத்தக்கதாக இருக்கும். இப்பொழுது எந்த நிலையில் சட்டத்தைக் கொண்டு வருவார்கள் என்று தெரியவில்லை.

ஆகவே, அப்படிக் கொண்டுவந்து நிறைவேற்றுவதற்கு முன்னால், ஒன்றைச் சிந்திக்க வேண்டும். 'நில உச்ச வரம்பு என்று வரும்போது, 10 லட்சம், 20 லட்சம் என்று சொத்து வைத்துக் கொண்டு, சினிமாக்காரர்கள் மற்றவர்கள் இருக்கிறார்கள், வியாபாரத்தில் சாதாரணமாக சம்பாதிக்கிறவர்களும் இருக்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட வருமானத்திற்கும் உச்சவரம்பு கட்ட வேண்டும். சமுதாயத்தில் உச்சவரம்பு கட்டுவதனால் எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. ஆனால், நிலத்திற்கு மட்டும் என்று இருக்கக் கூடாது. உச்ச வரம்பு வேண்டியதுதான். சிலரிடத்தில் நிலங்கள் அதிகமாகி, உற்பத்தியைப் பெருக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை என்றால், நிலப் பிரபுத்துவம் பெருகியிருக்கிறது என்றால், அதற்கு உச்ச வரம்பு கட்ட வேண்டியதுதான். ஆனாலும், இந்த 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் போதுமானதா இல்லையா என்று ஒரு கருத்து. அதே நிலையில் விதிவிலக்குகள் அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை நீக்கி, நிலைமைகளைக் குழப்ப விதிவிலக்கு இருக்கிறதா என்று நாம் பார்க்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதைப்பற்றி இப்பொழுது அதிகமாகப் பேசுவதற்குத் தயாராக இல்லை. பொறுக்குக் கமிட்டி பரிசீலனை செய்து சீக்கிரமாகச் சட்டம் வருவதாக இருந்தால் கொண்டு வரட்டும்,





ஆனாலும், அதே சமயத்தில் விவசாயிகளை மட்டும், திருடுகிறார்கள், தவறுசெய்கிறார்கள், கொள்ளை அடிக்கிறார்கள் என்று குற்றம் சாட்டவேண்டாம். எத்தனையோ பேர்கள் லட்சம் லட்சமாகப் பணத்தை வைத்துக் கொண்டு, கருப்புச் சந்தையிலே திரட்டி. வரிகளை ஏமாற்றிவிட்டு பெரிய பெரிய பதவியில் இருக்கிறவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நல்லவர்களாகத் திரிந்து கொண்டு, உயர்ந்து கொண்டு இருக்கும்போது, ஏழை விவசாயிகள் 30 ஏக்கர் வைத்திருந்தால், அவன் திருடன், கொள்ளைக்காரன் என்று சொல்லிப் போட்டு, 'பிழிந்து விடுவேன், ஜாக்கிரதை' என்று மிரட்டுவது நியாயமா? கருப்புச் சந்தைக்காரர்கள், வரி ஏய்ப்பவர்கள் மீது பெரிய நடவடிக்கை எடுங்கள்; மன்றத்தில் நிறுத்துங்கள், பட்டணத்தில் இருக்கும் முதலாளிகள் மேல் நடவடிக்கை எடுங்கள். பரிபூரணமாக சர்க்காரை ஆதரிப்போம். கருப்புச் சந்தைக்காரர்கள், பெரிய பணக்காரர்கள் இவர்களிடம் வரி பாக்கியிருப்பதைச் சரியாக வசூல் செய்தார்களா? எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், சமுதாயத்தில் சம நீதி எல்லோருக்கும் இருக்க வேண்டும், சம உரிமை எல்லாவற்றிற்கும் இருக்க வேண்டும். உச்சவரம்பு . . . .

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** கள்ள மார்க்கெட்டுக்காரர்களை லாந்தக்கம்பத்தில் தூக்கி மாட்டுவேன் என்று நேரு பிரான் சொன்னார்களே. எங்கே, எத்தனை பேர்களை மாட்டினார்கள்? (சிரிப்பு)

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** "நாங்கள் மூன்று படியரிசி போடா விட்டால் முச்சந்தியில் அடியுங்கள்" என்று நிதி அமைச்சர் சொன்னார்களே, அதை எப்பொழுது செய்யலாம்? (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** கேட்பது ஒன்று, பதில் சொல்வது ஒன்று. அதிலே தப்பிக்க முடியாது. நேரு சொன்னது, கள்ளமார்க்கெட்டுக்காரர்களை லாந்தக் கம்பத்தில் தூக்கி மாட்டுவேன் என்றார். நேரு ஆட்சி காலத்தில் எத்தனை பேர்களைத் தூக்கி மாட்டினார்கள்? அதற்குப் பதில் சொல்லிவிட்டு, வேறு சொல்லுங்கள்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அதே வழியில் வந்த இந்த சர்க்கார், மூன்று படியரிசி போடாவிட்டால் முச்சந்தியில் வையுங்கள் என்றார்களே.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** ஆகவே, இரண்டும் ஒன்று தான்? நேரு சொன்னதும், நாங்கள் சொன்னதும் ஒன்றுதான் என்று ஒத்துக் கொள்கிறீர்களா?

**திரு. பி. ஜி கருத்திருமன்:** அதை வைத்து நீங்கள் தப்பிக்கா தீர்கள். கெய்ரான் முதல் அமைச்சர்தான். பெரும் சாதனைகள் செய்தவர். இருந்தாலும் அவரை நேரு 'வெளியில் போ' என்று சொன்னார்கள். நீங்கள் தயாரா?

[1970 மார்ச் 14

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தயார். இதே சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் வெகு விரைவில் நடவடிக்கைக்கு ஆளாவார்.

**திரு. பி ஜி. கருத்திருமன்:** மந்திரிகளும் வெளியில் போகத் தயாராக இருக்க வேண்டும். அமைச்சர் மீது தவறு நிரூபிக்கப் பட்டால் வெளியிலே போகத் தயாராக இருக்க வேண்டும். நாங்கள் பின்னால் பயந்து போகமாட்டோம். மனுநீதி ஆட்சியில் மகன் மீது தேர் ஓட்டியது போல் செய்யுங்கள். நாங்கள் தயாராக இருக்கிறோம். தப்பித்துப் போகத் தயாராக இல்லை. நான் சொல்வதெல்லாம், நடவடிக்கை தீவிரமாக இருக்க வேண்டும், நியாயமாக இருக்க வேண்டும், யாராக இருந்தாலும் சரியே, விடக் கூடாது என்பதுதான். மக்கள் நன்மை முதலிடம் பெற வேண்டும் என்று சொல்லி, இந்த மானியக் கோரிக்கையின் மீதுள்ள எங்கள் வெட்டுப் பிரேரணையை ஆதரிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பேரவைத்தலைவர் அவர்களே, இரண்டு நாட்களாக நடைபெற்ற விவாதத்தில், மாவட்ட நிர்வாகம், ரெவின்யூ இலாகாவைச் சேர்ந்த மானியங்கள் இவைகள் மேலெல்லாம், மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல வகையிலே கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு ஒரு சந்தேகம் வந்துவிட்டது. பலமாகப் பேசினால் தான் எதிர்க் கட்சித் தலைவர் என்ற காரணத்திற்கு உரிய சில குறை நலன்களை நிறைவேற்றுவதற்காக ஏதோ சொன்னார்களே தவிர, அவர்களும் நல்ல வகையில் பாராட்டியிருக்கிறார்கள். சந்தேகம் இல்லை. எதிர்க் கட்சித் தலைவர் பேச்சிலே பொதுவாகக் கருத்துக்களை வரவேற்று இருக்கிறார்கள். அதுவும், அவரை அறியாமலே, ஏற்பட்டிருக்கிற மாறுதல்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்று நாம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

ரெவின்யூ போர்டைப்பற்றிச் சொன்னார்கள். போன வருஷம் இந்தமாதிரி சொல்லவில்லையென்று எனக்கு ஞாபகம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன்:** அப்போதும், ஒரு ஆலோசனை செய்யலாம் என்பதைப் பற்றிச் சொன்னோம். சர்க்கார் இதைச் செய்யவேண்டுமென்று சொன்னோம்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பொதுவாக இந்த விவாதங்களிலே எல்லாரும் பாராட்ட ஆரம்பித்தால் தெவிட்டும் நிலைமை ஏற்படும். அதற்காகத்தானோ என்னவோ, எல்லோரும் பாராட்ட வேண்டுமென்று நினைக்கும்போது, நமது கும்பகோணம் உறுப்பினர் அவர்கள் ஒரு பாட்டுச் சொன்னார்கள். அது நன்றாக இருக்கிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அதைக் குறிப்பிட்டார்கள். ஸ்டாம்ப் சம்பந்தமாக அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய உபரி வரி, மார்க்கெட் வேல்யூவில் [illegible]



1970 மார்ச் 14] [திரு. கே. ஏ. மதியழகன்]

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 50 ஆயிரம் ரூபாய் பெறு
மான அளவில் இருந்தால், அது முனிசிபல் பஞ்சாயத்து யூனியன்
களுக்குப் போகும்போது, "கன்சிடரேஷன் ஆஃப் அமவுன்ட்"
என்ற அளவில் இருக்கிறது. எந்த அளவிற்குத் தொகை குறை
வான பத்திரம் வாங்க முடிகிறதோ, அந்த அளவிற்குத்தான் வரி
கிடைக்கிறது. 50 ஆயிரம் ரூபாய் பெறுமான வீட்டை 20 ஆயிரம்
ரூபாய் என்று எழுதினால் முனிசிபாலிட்டிக்கும் பஞ்சாயத்து
யூனியனுக்கும்தான் நஷ்டம் என்று சொன்னார்கள். மார்க்கெட்
வேல்யூவுக்கு விலை கொடுக்கும்படியான அளவில் விதிமுறைகளைத்
திருத்தும்படியான ஒரு பிரபோசல் அரசாங்கத்திலே இருக்கிறது
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் சட்டமன்றத்தில்
பேசிய தொனி, அவர் கவிஞரோ, என்னவோ தெரியாது—அம்
மாதிரியாக இருந்தது. திடீரென்று பாட்டுப் பாட ஆரம்பித்து
விட்டார்கள். "பஞ்சமோ நாட்டிலே. பணமோ ஏட்டிலே,
மக்கள் நாட்டமோ பண்பாட்டிலே, மந்திரிகள் நாட்டமோ மக்க
ளது ஓட்டிலே" என்று பாட ஆரம்பித்துவிட்டார்கள். இன்
றைக்கு ஊரிலே ஏராளமான கவிஞர்கள் இருக்கிறார்கள். அவரும்
நானும் பாட ஆரம்பித்தால் என்ன ஆகுமோ! (சிரிப்பு) நான்
அப்படித்தான் நினைக்கிறேன். "பஞ்சமோ நாட்டிலே, பணமோ
ஏட்டிலே" என்று சொன்னார்கள். பணம் ஏட்டில் மட்டுமா இருக்
கிறது? வீட்டிலேயும் இருக்கிறது. "மந்திரிகள் நாட்டமோ
ஓட்டிலே" என்று சொன்னார்கள். ஆம் மந்திரிகள் நாட்டம் பூரா
வும் மக்களது ஓட்டைப்பெற்று நாட்டுக்கு நல்லது செய்யவேண்
டும் என்பதிலேதான். நான் அவருடைய பாட்டிற்குப் பதவுரை
யும் சொல்லவேண்டும். பதிலும் சொல்லவேண்டும். "தங்கள்
நாட்டமோ பஸ் ரூட்டிலே" என்று சொல்கின்ற நேரத்திலே
"பத்து ரூபாய் வரி வரும்" என்று நானும் பாட முடியும். அப்படி
பாடக்கூடாது என்பதற்காகத்தான் நான் சொல்கிறேன். நாம்
ஜனநாயகத்தை நம்புபவர்கள். ஜமீன்தார்களை வைத்துக்கொண்டி
ருப்பவர்கள் அல்லர். பெரிய பெரிய மகந்துகள் ஆட்சி புரிகிறார்கள்
என்றால், ராஜகுமாரர்கள் ஆட்சி புரிகிறார்கள் என்றால் அப்படிச்
சொல்லலாம். ஏழை எளியவர்கள்தாம் நமக்கு எஜமானர்கள்.
'மக்களுடைய ஓட்டிலே' என்று சொன்னார்கள். அதில் தப்பு
இல்லை. மக்கள் எது நியாயமோ அதைத்தான் செய்கிறார்கள்.

இன்றைக்குப் பொதுவாக ரெவின்யூ துறையில் பல கெடுதல்
கள் எல்லாம் போய்விட்டிருக்கின்றன. 'ரொம்பக் கெட்டது
ரெவின்யூ இலாகா' என்று இருந்ததை நாம் மாற்றியிருக்கிறோம்.
முன்னாள் மந்திரி திரு. கோ. பூவராகன் அவர்கள் பட்டா கொடுப்
பதைப்பற்றிச் சொன்னார்கள். அவர் சொல்கின்றவைகளையும்
கவனிக்கலாம். அவர் 'இன்னவர்' என்பதற்காக அல்ல, (சிரிப்பு)
இந்த அரசு எவ்வளவோ செய்திருக்கிறது. அதற்காக இதைப்
பாராட்டி நாலு வார்த்தைகள் சொல்லக் கூடாதா? பிரஜா சோஷ
லிஸ்ட் கட்சி உறுப்பினர் ஏதோ குற்றம் சாட்டிச் சொன்னார்கள்.
இந்த அரசாங்கம் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட ஏக்கர்களை

[திரு. கே. ஏ. மதியழகன்] [1970 மார்ச் 14

நிலமற்ற விவசாயிகளுக்கு, குறிப்பாக அரிஜன மக்களுக்கு, வழங்கி
இருப்பதைப் பாராட்டிவிட்டாவது சொல்லக்கூடாதா? 18 கோடி
ரூபாய்க்கு மேல் பல காரியங்கள் நடந்திருக்கின்றன. கன்னியா
குமரி மாவட்டத்தில் பஞ்சாயத்து யூனியன்கள் எல்லாம் நிகழ்ச்சி
களில் கலந்துகொள்ளவில்லையென்று குறிப்பிட்டார்கள். ஒன்றை
மட்டும் நம்புங்கள். நீங்கள் போய்ப் பாருங்கள். குடிதண்ணீர்
வசதிகள் பல கிராமங்களுக்குச் செய்து கொடுக்கப்பட்டிருக்
கின்றன. நீங்களே கிராமங்களுக்குப் போய்ப் பாருங்கள். 18
கோடி ரூபாயிலே ஒவ்வொரு ஊரிலேயும் ஏரி மராமத்து வேலை
செய்யப்பட்டிருக்கிறது. சிங்கநல்லூர் தொகுதி உறுப்பினர் திரு.
பி. வேலுசாமி அவர்கள் அபாண்டமான வகையில் சொன்னார்கள்.
ஆளும் கட்சி உறுப்பினர் இருக்கிற தொகுதிக்குத்தான் அதிகம்
செய்திருக்கிறார்கள் என்று. இது உண்மைக்குப் புறம்பானது.
எல்லா உறுப்பினர்களின் தொகுதிகளுக்கும் வறட்சிப் பணி நிதி
கொடுக்கப்பட்டிருக்கிறது. திரு. கே. விநாயகம் அவர்கள் ஆளும்
கட்சியைச் சேர்ந்தவரா? இல்லையே. அவருடைய தொகுதிக்கு
அதிகமான பணம் ஒதுக்கவில்லையா? எங்கெங்கு வறட்சிப்
பணிகள் தேவைப்பட்டனவோ, எங்கெங்கு காரியங்கள் செய்யப்
படவேண்டுமோ அங்கெல்லாம் பணம் தரப்பட்டன.

அடுத்து, சீஃப் செகரடரி அவர்கள் புகார் செய்தார் என்று
சொல்லப்பட்டது. நாம் அவரைப் பாராட்ட வேண்டும். வம்
பிலே மாட்டிக்கொண்டால் என்ன ஆகும் என்பது அவருக்குத்
தெரியும். சீஃப் செகரடரிதான் பஞ்ச நிவாரணக் கமிஷனராக
இருந்தார். பல காரியங்களைச் செய்தார். அவர் இராமநாதபுரம்
மாவட்டத்தில் ஒரு கிணற்றைப் பார்த்துவிட்டு, ஏன் தண்ணீர்
இல்லை, என்று குறைப்பட்டதாகச் சொல்லப்பட்டது. பொது
வாக, பத்திரிகைக்காரர்களிடத்தில் அதிகாரிகள் அகப்பட்டுக்
கொள்ளக்கூடாது. ஒரு கிணற்றில் தண்ணீர் இல்லையென்றால்,
இன்னும் இரண்டு அடி ஆழம் வெட்டினால் தண்ணீர் வரும்.
இன்னும் இரண்டு அடி ஆழம் வெட்டிய பிறகு தண்ணீர் வந்து
விட்டது என்று மாவட்டக் கலெக்டர் எழுதியிருக்கிறார்கள். அவர்
கிணற்றைப்பற்றி ஏதோ கேட்டிருக்கிறார். உடனே பக்கத்தில்
இருந்த பத்திரிகைக்காரர்கள் இப்படி அப்படி என்று எழுதிவிட்
டார்கள். தண்ணீர் வந்துவிட்டது என்று கலெக்டர் எழுதியிருக்கி
றார்கள். அதிலே கொஞ்சமும் சந்தேகமும் இல்லை. வருவாய்த்
துறை வாரியத்தைப்பற்றிச் சொன்னார்கள். மத்திய அரசாங்கத்
திலேயிருந்து சில அதிகாரங்கள் வரவேண்டும். அதற்கான சட்
டங்கள் எல்லாம் தயாராகிவிட்டன. அதற்கான காரியங்கள் விரை
விலே மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து 'மனுநீதி' பற்றிச் சொன்னார்கள். அதைக் கேலி
செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் சுற்றுப்
பயணம் செய்யும்போது, வேண்டுமானால் என்னுடன் வாருங்கள்.
என்னுடைய ஜில்லாவுக்கு ஏன்று சொன்னால் அது அமைச்சர்



1970 மார்ச் 14] [திரு. கே. ஏ. மதியழகன்]

மாவட்டம் என்பார்கள். ஆகவே, இராமநாதபுரம் ஜில்லாவுக்கு
அவர்கள் வரட்டும். காரியங்கள் எப்படி நடக்கின்றன என்பதைப்
பார்க்கவேண்டும். பலவிதமான காரியங்களுக்கும் தீர்வு காணப்
படுகின்றன. வாரத்திற்கு ஒரு நாள் மின்சார அதிகாரி,
ரெவின்யூ அதிகாரி எல்லோரும் போகிறார்கள். அந்த இடத்தைப்
பார்வையிடுகிறார்கள். பட்டா கொடுக்க வேண்டுமா, தனிப் பட்டா
வேண்டுமா, ஜாயின்ட் பட்டா வேண்டுமா என்பதையெல்லாம்
பார்த்து உடனுக்குடன் முடிவு செய்கிறார்கள். ஆர்.டி.ஓ., கலெக்
டர் போன்ற அதிகாரிகளும் வருகிறார்கள். அதிகாரிகளுடைய
உணர்வை நாங்கள் இப்போது மாற்றியிருக்கிறோம். முன்பெல்
லாம் அதிகாரிகளைப் பார்ப்பது என்றால் தசரா பண்டிகையின்
போது மைசூர் மகாராஜாவைப் பார்ப்பதுபோல இருந்தது. முன்பு
கலெக்டர்கள் என்றால் பட்டாதாரர்கள், மிராசுதாரர்கள், ஜமீந்தார்
கள் போன்றவர்கள்தாம் பார்க்க முடிந்தது. இப்பொழுது
நிலைமைமாறி, மக்கள் இருக்கும் இடத்திற்கு கலெக்டர்கள் ஓடுகிற
நிலைமையில் மனுநீதித் திட்டம் இருக்கிறது என்பதைச் சொல்லிக்
கொள்கிறேன். அரசாங்கம் அதிகாரிகளின் புன்னகையைப் பெறு
வதைவிட, ஆயிரக்கணக்கான ஏழை மக்களின் குறைகளைப்
போக்கி, அவர்களின் நலிவைப் போக்கி, துயரைத் துடைக்கும்
மனுநீதித் திட்டமாக அமைக்க வேண்டுமென்று முன்னாள்
முதலமைச்சரான பேரறிஞர் அண்ணா அவர்கள் விரும்பினார்கள்.
அதை நாங்கள் நிறைவேற்றி வருகிறோம். இதை மனதிற்கொண்டு
தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் காஞ்சீபுரம் தொகுதியிலே
தல்பட்லம் என்ற ஊரிலே இந்தத் திட்டத்தைத் துவக்கினார்கள்.
நான் அந்த விழாவிற்குத் தலைமை தாங்கினேன். அன்று பரீட்
சார்த்தமாகத் தொடங்கப்பட்ட திட்டம் இன்றைக்கு முதல
மைச்சர் அவர்களால் விஸ்தரிக்கப்பட்டு நல்ல வகையிலே நடந்து
வருகிறது. அவர்கள் என்னவோ கதை சொன்னார்கள். மாடு
மணியை அடித்தது. நான் மாட்டுக்காரன் என்றெல்லாம் சொன்
னார்கள். அவர்கள் மாட்டுக்காரனா என்பதில்தான் சந்தேகம்
இருக்கிறது. இப்போது மாடு யாருக்கு? அவர்களுக்கா? திரு.
பூவராகனுக்கா? என்பதில்தான் அவர்களே சண்டைபோட்டுக்
கொண்டிருக்கிறார்கள். (சிரிப்பு). ஆயினும் இது நல்ல வகையில்
நடைபெறுகிறது என்கிற நம்பிக்கை அரசாங்கத்திற்கு ஏற்பட்
டிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்வேன்.

இராஜபாளையம் உறுப்பினர் அவர்கள் இராமநாதபுரத்தின்
தலைநகரம் மானாமதுரையில் அமைந்துவிடுமோ என்கிற ஐயத்தைத்
தெரிவித்தார்கள். ரெவின்யூ இலாக்கா காரியதரிசி திரு. நம்பியார்
அவர்கள் அங்கே போயிருந்தார்கள் என்கிற காரணத்தினால்
அப்படிக் கவலைப்படவேண்டிய அவசியம் இல்லை. மாவட்டத்
தலைநகரை நிர்ணயிக்க அவர் போகவில்லை. இராமநாதபுரம்
மாவட்டத்திலேயே இருக்கவேண்டும் என்பது கொள்கை அளவில்
ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆயினும் இதுபற்றிய ஒரு முடி
வுக்கு எல்லோரும் சேர்ந்து ஒன்றாக வாருங்கள் என்றால், அப்படி

[திரு. கே. ஏ. மதியழகன்] [1970 மார்ச் 14

ஒன்றுக வருகின்ற பொற்காலம் வராமல் இருக்கிறது. அந்த விதமான பொற்காலம் வருகிறவரையில் இந்த அரசாங்கம் எந்த விதமான முடிவும் எடுக்காது. உறுப்பினர் யாரும் அதுபற்றி ஐயம் கொள்ளத் தேவையில்லை.

அடுத்து, நிர்வாகத்திற்கு வசதியாக, சின்னச் சின்ன மாவட்ட மாக, 20 ப்ளாக்குகள் கொண்டது ஒரு மாவட்டம் என்கிற முறை யில், மாவட்டங்களை மாற்றி அமைக்க வேண்டும் என்பதும் கொள்கை அளவில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆயினும் சரித்திரபூர்வமான சம்பவங்களோடு ஒட்டிப் பார்க்கிறபோது இது முடியவில்லை. ஓடுகிற காவேரியை இடண்டாகப் பிரிக்க முடியாது. அதுபோல தொழில்துறையில் நன்ருக வளர்ந்த பகுதியோடு, தொழில்துறையில் வளர்ச்சி அடையாத பகுதியை இணைக்க முடியாது. இவை எல்லாவற்றையும்விட இப்போது புதியதாக ஒரு தடங்கல் ஏற்பட்டிருக்கிறது. மத்திய அரசு 1971 சென்ஸஸ் காரியத்தில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது. 1972-ல் பொதுத் தேர்தல் வருகிறது. இந்த இரண்டு காரியங்களும் நடைபெறுகிற வரையில் மாவட்டப் பிரிவினை, தாலுக்காப் பிரிவினை இல்லாமல் இருந்தால் நல்லது என்று மத்திய அரசிடம் இருந்து நமக்குச் சில தாக்கீதுகள் வந்திருக்கின்றன. நாம் அதுவரை ஒவ்வொரு மாவட்டத்தையும் எந்த எந்த வகையில் பிரிக்கலாம், தாலுக்காக்களை எப்படி எப்படி மாற்றி அமைக்கலாம் என்பதைப்பற்றி நியாய வாதங்களைப் புரிந்து கொண்டிருப்போம். ஆனல் அந்தக் காரியங்கள் யாவும் 1972-க்குப் பிறகுதான் நடந்தாகவேண்டும். அதற்கு முன்னல் எடுத்துக் கொள்வதற்கு இல்லை என்பதை அரசாங்கத்தின் சார்பில் தெரி வித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, முன்னள் அமைச்சர் திரு. பூவராகன் அவர்கள் கிரா மங்களிலே வீடுகள் கட்டும் திட்டத்திற்குக் கொடுக்கிற கடனை மூவாயிரத்தில் இருந்து ஐயாயிரமாக உயர்த்திக் கொடுக்கவேண்டு மென்று சொன்னர்கள். 3 ஆயிரம் என்று உச்சவரம்பு இப்போது இருப்பதைப் பார்லிமெண்டரி குழு பரிசிலனை செய்து 5 ஆயிரமாக உயர்த்தலாம் என்று சொல்லியிருக்கிறது. அதைப்பற்றிப் பல்வேறு மாநிலங்களின் கருத்தையும் மத்திய அரசு கேட்டிருக்கிறது. நாமும் அதற்கு ஆதரவாகச் சொல்லலாம் என்று கருதிக் கொண் டிருக்கிறேம். அதுபற்றி அவர்கள் சீக்கிரமே ஒரு முடிவிற்கு வருவார்கள் என்று நம்புகிறேன்.

கிராம உத்தியோகஸ்தர்கள் நம்முடைய நிர்வாகத்தின் முது கெலும்பு போன்றவர்கள். ஆகவே அவர்களுடைய ஊதிய உயர்வுப் பிரச்சினை பற்றியும் இரண்டாவது பே கமிஷனின் சிபார்சுக்கு விடப்பட்டிருக்கிறது.

அடுத்து, இந்த அரசு இந்த மூன்றண்டுகளில் செய்திருக்கிற காரியங்கள் மிகவும் பாராட்டப்படவேண்டியவைகளாகும். குறிப் பாக, கீழ் தஞ்சைப் பகுதியில் விவசாயத் தொழிலாளர்களுக்கும் நில உடைமையாளர்களுக்கும் இடையே இருந்த கொந்தளிப்பைத்



1970 மார்ச் 14] [திரு. கே. ஏ. மதியழகன்]

தவிர்க்கும் வகையில் நியாயக்கூலிச் சட்டம் செய்திருக்கிறது. நில உச்சவரம்புச் சட்டத்தைப் பற்றியும் நான் மிகுந்த மகிழ்ச்சி அடை கிறேன். மிகுந்த பூரிப்பு கொள்கிறேன். தமிழ்நாட்டில் இதற் கேற்ற நல்ல மனப்பக்குவம் ஏற்பட்டிருக்கிறது. என்றாலும் சில இடங்களில் சஞ்சலம் இருக்கிறது. குழப்பம் இருக்கிறது. ஆண் டாண்டு காலமாக வயல்களிலே, சேற்றிலே பாடுபட்டு வந்த நில மற்ற ஏழை எளிய விவசாயிகளுக்கு ஒரு நல்ல வாய்ப்பை உண்டாக்க சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. இது மிகப் பெரிய சமூகப் பொருளாதாரப் பிரச்சினையின் துவக்கமாக, நுழைவாயி லாகத் தான் அமைந்திருக்கிறது என்று அரசாங்கம் கருதுகிறதே தவிர வேறில்லை. சகல பகுதியினரும் இதற்கு ஆதரவு தெரிவித் திருக்கிறார்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கூடச் சொன்னர்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கரும்புத் தோட்டம் என்றும், மேய்ச்சல் தரை என்றும் எதற்காக விதிவிலக்கு என்று கேட்டார்கள்.

திரு. சங்கரய்யா அவர்கள் அறநிலையங்கள், கோவில்கள் இவற்றுக்கு எல்லாம் ஏன் விதிவிலக்கு என்றார்கள். மேலும், பினமி டிரான்சாக்ஷன் பற்றி எல்லாம் சொன்னர்கள். என்னு டைய நண்பர் ஒருவர்—விவசாயி—என்னிடம் வந்திருந்தார். ரூ. 3 ஆயிரத்திற்கு ஸ்டாம்பு வாங்கியிருப்பதாகச் சொன்னர். எப்படி எப்படி எல்லாம் நடக்கும் என்பதை அரசாங்கம் உணராமல் இல்லை. அதற்காகத்தான் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இதுபற்றிப் பிரகடனப்படுத்தப்பட்ட 26—2—1970 முதலே இந்தச் சட்டம் அமுலுக்கு வரும் என்று தெரிவித்தார்கள். ஒரு சந்தேகம் இருக்கிறது. ஸ்டாம்பு வாங்கி அதற்கு முன்தேதி போட்டு ஒப்பந்தம் செய்துகொண்டிருந்தால் அந்த ஒப்பந்தத் தேதியில் இருந்து 3 மாதங்களுக்குள் ரிஜிஸ்தர் செய்து கொள்ளலாம் என்று இருக்கிறது என்றே வைத்துக்கொள்ளுங்கள். இந்த நிலையைக் கொண்டு நிலச்சீர்திருத்தச் சட்டத்தின் நோக்கத்தையே முறி யடிக்கப் பலர் முற்படலாம். என்றாலும் அத்தகைய முயற்சியை இந்த அரசாங்கம் வெற்றிபெறச் செய்யாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதுபற்றி யாரும் கவலைப்படவேண்டாம்.

Any document registered after 26th February 1970 which would be in violation of the Ceiling Act will be debarred and made void by suitable provision.

என்பதாக, சட்டத்திலேயே அவசியம் என்றால் அதுபற்றி ஒரு பிரிவையே ஏற்படுத்தக் கூட இந்த அரசாங்கம் தயங்காது.

இன்னும் விதிவிலக்கு எதற்குக் கொடுப்பது நியாயமானது, எதற்குக் கொடுப்பது அதர்மமானது என்பதைப்பற்றியெல்லாம் அரசாங்கம் நன்கு ஆராய்ந்தே ஒரு முடிவுக்கு வரும்.

சர்க்கரை ஆலைக்கு என்று விதிவிலக்குக் கொடுக்கப்பட்டிருக் கிறதே என்றார்கள். அது அவர்கள் செய்த பாவம்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கனம் சபாநாயகர் அவர்களே,
நாங்கள் செய்த பாவங்கள் என்று சொல்கிறார்கள். இந்தப்
புண்ணியவான்கள் அந்தப் புண்ணியத்தைத் தேடிக்கொள்ளலாமே.
அமைச்சர் அவர்கள் பதில்சொல்லும்போது பிப்ரவரி 26-ஆம்
தேதிக்குப் பின்னாலே ரிஜிஸ்டர் பண்ணப்படுகிற டாக்குமெண்ட்கள்
செல்லா என்று சொன்னார்கள். நிலச் சீர்திருத்தத்தைத்
தோற்கடிக்கக்கூடிய டாக்குமெண்ட்கள் ரிஜிஸ்தர் ஆகியிருந்தால்
அப்படிச் சொல்லலாம். ஆனால் குடும்பப் பிரிவினைக்காக, நியாய
மான பிரிவினைகள் செய்தால் அப்படி இருக்கக்கூடாது. நிலச்சீர்
திருத்தத்தைத் தோற்கடிக்கக்கூடிய முறையில் அதற்குப் பிறகு
ரிஜிஸ்டர் செய்திருந்தால் வேண்டுமானால் செல்லாது என்று
அறிவிக்கலாம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நியாயம் எப்பொழுதும்
ஏற்றுக்கொள்ளப்படும். போலித்தனங்களும், புரட்டுத்தனங்
களும், அரசை ஏமாற்றுவதற்குச் செய்யும் சூழ்ச்சிகளும் வெல்லப்
படும்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** சூழ்ச்சிகள் வெல்லப்படுவதற்கு
நானும் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நான் தெளிவாகச்
சொன்னேன்.

Any document registered after 26th February 1970 which
would be in violation of the Ceiling Act will be debarred and made
void by suitable provision.

என்று நான் சொன்னேன். மிகத் தெளிவாக அது இருக்கிறது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்தப் புனிதமான
நோக்கத்திற்குத் தமிழகத்திலே உள்ள எல்லா விவசாயப் பெருங்
குடி மக்களும் நியாயமான அளவுக்கு ஒத்துழைக்கவேண்டுமென்று
இந்த நேரத்திலே வேண்டுகோள் விடுப்பதை நான் கடமையாகக்
கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இதை எல்லோரும்
உற்சாகமாக வரவேற்கிறார்கள். ஒரு காலக்கட்டத்தில் இந்த
நோக்கத்தை நிறைவேற்றாத முறையிலே கரும்புத் தோட்டங்கள்
வைத்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். பெரிய பாக்குத்
தோட்டங்கள், தென்னந் தோப்புகள், மேய்ச்சல் காடுகள், பழத்
தோட்டங்கள் என்றெல்லாம் செய்தார்கள். மில்கள் இருக்கின்றன,
கோயம்புத்தூர் ஜில்லாவிலே. பருத்தியும் விளையாது. ஒன்றும்
விளையாது. அப்படிப்பட்ட இடங்களைக்கூட மில்களுக்காக என்று
வைத்துக்கொள்வார்கள். டெய்ரி பார்ம் என்றெல்லாம் இருக்
கிறது. எனக்கு எங்கே இவர்கள் எதிர்த்துவிடுவார்களோ என்பது
தான். அரசாங்கம் இவற்றையெல்லாம் நல்ல முறையிலே பரிசீலனை
செய்யும்.



கோயில் நிலங்களைப்பற்றிச் சொன்னார்கள். கோயில்களிடத்திலே
பர்சனல் கல்டிவேஷனுக்காக 20 ஏக்கர் வைத்துக்கொள்ளலாம்
என்று இருப்பதாகத் தெரிகிறது. அதிலேயிருந்து குத்தகையே
கூட கோயிலுக்கு வருகிறதா என்பது தெரியவில்லை. அரசாங்கம்
பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. இது நிறைவேறுகிற
நேரத்திலே இந்த மாமன்றத்தினுடைய ஆதரவும் வெளியேயும்
ஆதரவும் இருக்கும் என்பதிலே சந்தேகம் இல்லை.

அர்பன் ப்ராப்பர்டி பற்றிச் சொன்னார்கள். சமதர்ம சமுதா
யத்தை அமைக்க, மேடு பள்ளங்களைச் சீராக்க எல்லோருக்கும்
நன்மைகள் கிடைக்கவேண்டுமென்பதுதான் நோக்கம். நாங்கள்
எல்லாம் பட்டணத்தில் பிறந்தவர்கள் அல்ல ; பட்டணத்தில் இருக்
கின்றவர்களுக்குச் செய்வது என்பதும் அல்ல. நமக்கு இதிலே
அதிகாரம் இருக்கிறதா என்பது தெரியவில்லை. இருந்தால்
சந்தோஷம். எவ்வளவு எவ்வளவு வைத்திருக்கிறார்கள் என்ற
கணக்கு கேட்டிருக்கிறோம். தப்ப முடியாது. மத்திய அரசை
வற்புறுத்தி நகர்ப்புறச் சொத்துக்களுக்கும் உச்சவரம்பு வேண்டு
மென்று சொல்கிறோம். அண்ணா அவர்கள் குறிப்பிட்டதெல்லாம்
எல்லோருக்கும் உணவு வேண்டும் ; இருக்க உறைவிடம் வேண்டும் ;
உடுத்த உடை வேண்டும் ; சுகாதாரம் வேண்டும் ; படிப்பு வேண்டும்.
இந்த அடிப்படையில் சமதர்ம சமுதாயத்தை நிறுவுவதற்கு அர
சாங்கம் தன்னுடைய வரம்பிற்குட்பட்டு பெரும் காரியங்களிலே
ஈடுபட்டிருக்கிறது என்பதிலே சந்தேகம் இல்லை. இப்பொழுது
மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் நல்ல தொடர்பு ஏற்பட்டுக்
கொண்டு வருகிறது.

தாசில்தாருக்கு டெலிபோன் கூடாது என்றெல்லாம் சொன்
னார்கள். அவர்களுக்கு அந்த வசதி இருந்தால்தான் அவர்கள்
சுதந்திரமாகச் செயல்பட முடியும். மிராசுதாரருடைய தயவிலே
வாடகைக்கு இருக்கும் நிலைமை இருக்கக்கூடாது. இதையெல்லாம்
அவர்கள் பாராட்டவில்லை.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** வீட்டு வசதி செய்து கொடுப்பதை
வரவேற்கிறோம். நிச்சயமாக வீட்டுவசதி அவர்களுக்குச் செய்து
கொடுக்கவேண்டும். டெலிபோன்பற்றித்தான் நாங்கள் சொன்
னோம். அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுப்பது முக்கியம், நிச்சயம்
கட்டிக் கொடுக்கவேண்டுமென்றுதான் சொல்கிறோம்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** முதலமைச்சர் அவர்கள்
சொன்னார்கள், பலரும் சொன்னார்கள். எம்.எல்.ஏ.க்களுக்கு
டெலிபோன் இருக்கவேண்டுமென்று. இப்பொழுதே சிலர் வைத்
திருக்கிறார்கள். அவர்களுக்காக அல்ல, பொதுமக்களோடு
தொடர்புகொள்ள தோட்டத்திலே இருந்தாலும் வீட்டிலே இருந்
தாலும் தொடர்புபடுத்தி மக்களுடைய பிரதிநிதிகளாக இருக்
கின்ற காரணத்தினாலே ஒரு லட்சம் பேர்களுடைய பிரதிநிதி
களாக இருக்கின்றவர்கள் அவர்களுக்குச் சேவை செய்யக்கூடிய
முறையிலே அது இருப்பது வரவேற்கத் தக்க அம்சம்தான்.

நாம் பெரிய மாறுதலை இன்றைக்கு ரெவின்யூ இலாகாவிலே செய்துகொண்டு வருகிறோம். ஜமாபந்தி ஒழிப்பு முறையை ஒரு தாலுகாவிலே பரீட்சார்த்தமாகச் செய்துகொண்டு இருக்கிறோம். ரெவின்யூ போர்டை ஒழிப்பதற்கும் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட காரியங்களை நல்ல வகையிலே நிறைவேற்றுவதற்கு மூன்று ஆண்டுகளாகச் சிறந்த முறையிலே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பணியாற்றினார்கள். கடந்த மூன்று ஆண்டுகளும் மிக நெருக்கடியான ஆண்டுகள் என்பதில் சந்தேகம் இல்லை. ரொம்பவும் திறமையாக—இளைஞர்களாக—மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உற்சாகத்தோடு, சொந்தக் காரியத்தைக் கவனிப்பதைப் போல், ஒரு போர்க்கால உணர்வோடு பணியாற்றியதற்காக முதலமைச்சர் அவர்களுடைய சார்பிலும் உறுப்பினர்கள் சார்பிலும் இந்த மாமன்றத்தின் மூலமாக எல்லா அதிகாரிகளுக்கும் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒன்றிரண்டு சாதாரணமான விஷயங்கள் இருக்கலாம். இது மக்களுடைய அரசாங்கம், இதைப்போன்று மக்களோடு நேரடியாகத் தொடர்புடைய அரசாங்கம் வேறு இல்லை என்று மக்கள் பாராட்டுகிறார்கள். இன்னும் இவற்றை வருகின்ற நாட்களிலே செழுமையாக்குவதற்கு நீங்கள் எடுத்துச் சொன்ன நோக்கங்களும் எண்ணங்களும் பயன்படும் என்ற வகையிலே நிலச் சீர்திருத்தம் போன்றவைகளிலே யோசனை செய்துகொண்டிராமல் நம்மை ஒப்படைப்பதற்கும் அர்ப்பணிப்பதற்கும் ஏற்ற வகையிலே உற்சாகத்தோடு—சமுதாயத்திற்கு நல்ல காலம் பிறந்திருக்கிறது, சமுதாயப் புரட்சியிலே முன்னோடியாக இருப்பதற்கு, தலைமை தாங்குவதற்கு தமிழ்நாட்டிலே எந்த அணியாக இருந்தாலும் உள்ள மக்கள் முன்னேற்றத்திலே மிகுந்த அக்கறை காட்டுவதற்காகப் பாராட்டி மிகுந்த மகிழ்ச்சியும் பூரிப்பும்கொண்டு வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெறுவதன் மூலம் ஏகோபித்த ஆதரவை நல்கி மானியங்களை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு நன்றியைத் தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

THIRU K. VINAYAKAM: In view of the appeal made by the Hon. Minister, I beg leave to withdraw my cut motion.

திரு. கே. விநாயகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டது.

திருவாளர்கள் ஏ. அ. சுப்பாராஜா, என். வரதராஜன், கே. போஜன் ஆகியோரின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 9—மாவட்ட நிர்வாகமும் பல்வகையும் என்ற தலைப்பின்கீழ் ரூ 15,56,77,100-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".



நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 1-க்கு வெட்டுத்தீர்மானங்கள் கொடுத்திருந்த திரு. ரா. கனகசபை, திரு. கரு. சிமைச்சாமி, திரு. எம். சுரேந்திரன் ஆகியோர் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திரு. க. இராமமூர்த்தி, திரு. சோ. அழகர்சாமி, திரு. ஏ. அ. சுப்பராஜா, திருமதி கே. பி. ஜானகியம்மாள் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 1—நிலவரித்துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,08,16,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 4-க்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருந்த திரு. என்.எஸ்.வி. சித்தன், திரு. ரா. கனகசபை, திரு. சி. கோவிந்தராஜன் ஆகியோர் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திரு. ஏ. அ. சுப்பராஜா, திரு. கே. போஜன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 4—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 30,79,700 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 31-க்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருந்த திரு. எம். சுரேந்திரன், திரு. பி. வெங்கடசாமி ஆகியோர் அவர்களுடைய இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திரு. க. இராமமூர்த்தி, திரு. என். வரதராஜன், திரு. ஏ. அ. சுப்பராஜா ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி—
"நிதிக் கோரிக்கை எண் 31—பஞ்சத் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 16,20,800—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறை வேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 32—க்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருந்த டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. வி. கே. கோதண்டராமன் ஆகியோர் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திரு. இல. பலராமன், திரு. எ. அ. சுப்பராஜா ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி—
"நிதிக் கோரிக்கை எண் 32—ஓய்வூதியங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,30,96,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறை வேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 36-க்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருந்த டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. வி. கே. கோதண்டராமன் ஆகியோர் அவர்களுடைய இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திரு. இல. பலராமன், திரு. எ. அ. சுப்பராஜா ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி—
"நிதிக் கோரிக்கை எண் 36—ஏனைய பல்வகை இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,92,44,200-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 37—க்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருந்த டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. பி. எஸ். தனுஷ்கோடி ஆகியோர் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.





திரு. க. இராமமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி—
"நிதிக் கோரிக்கை எண் 37—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு என்ற தலைப்பின் கீழ் ரூ. 76,15,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 45-க்கு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருந்த டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப் பட்டது.

திரு. க. இராமமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி—
"நிதிக் கோரிக்கை எண் 45—ஓய்வூதியங்களை மொத்தமாக்கிக் கொடுத்தல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 10,10,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறை வேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 47-க்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருந்த டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. எம். பூபதி ஆகியோர் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன வாகக் கருதப்பட்டன.

திரு. நா. காசிராமன், திரு. எ. அ. சுப்பாராஜா, திரு. கே. என். குமாரசாமி ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி—
"நிதிக் கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 23,58,49,300—க்கு மேற் படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறை வேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவோடு முடிவுற்று பேரவை மீண்டும் 16-3-1970 திங்கட்கிழமை காலை 9 மணிக்குக் கூடும். வணக்கம்.

பி. ப. 1-26 பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

(7) பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders

'Nil'

B. Reports, Notifications and other papers

@ 68. Policy note on Demands under Revenue (English and Tamil).

@ 69. A pamphlet on Housing in Tamil Nadu 1969-70 (English and Tamil).

@ Despatched to Members on 12—3—1970.

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

SEVENTH SESSION OF THE FOURTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

10TH MARCH TO 14TH MARCH 1970.

Volume XXVII (Nos. 1 to 5.)

PAGES

**A**

**ABDUL GHAFFOOR SAHIB, THIRU M.:**
Tanning factories, Ranipet, extension ... ... 508-511

ACCOMMODATION CONTROL:
High Court's judgment on a house-owner's writ petition revising Government orders ... ... 525

**ADMINISTRATION:**
Thanjavur district, bifurcation ... ... ... 20-21

**AGRICULTURE:**
Agricultural depots, functioning ... ... ... 10-11
Machineries at Cuddalore, covered shed ... 387-388

**AGRO-INDUSTRIES CORPORATION:**
Service Centres, opening ... ... ... ... 514-516

**ALADI ARUNA, THIRU:**
Budget, 1970-71, voting:
Education ... ... ... ... ... 147-151, 152-155, 169

PAGES

A—*cont.*

ALAGARSWAMY, THIRU S. :
Budget, 1970-71, voting :
District Administration and Miscellaneous, Land Revenue Department, Stamps Administration, Famine Relief, Pensions, Other Miscellaneous Compensation and Assignments, Compensation to Zamindars, Commuted Value of Pensions, Loans and Advances by the State Government ... 407, 564–568
Education ... ... ... ... ... ... ... 131
Fast by agriculturists in Coimbatore district in front of Collector's Office protesting against the increase in electricity rate for agricultural purposes (A.M.) ... 287
Point of Order—
Answers to questions ... ... ... ... 202

ANIMAL HUSBANDRY :
Hosur Cattle Farm, fraud committed in purchase of cattle fodder ... ... ... ... ... ... 120–121
Schemes, popularisation through films ... ... 519–520
Sheep Breeding Unit, Ootacamund, closure ... 11–12

ARANGANNAL, THIRU RAMA :
Budget, 1970-71, Voting :
Elections ... ... ... ... ... ... ...
Head of State, Ministers and Headquarters staff
Miscellaneous ... ... ... ... ... ... 55
Point of Information :
Allegation by Leader of Opposition against the Minister for Co-operation ... ... ... 287–288

ASAITHAMBI, THIRU A. V. P. :
Budget, 1970-71, Voting :
Education ... ... ... ... ... 152

**B**

BALARAMAN, THIRU L. :
Budget 1970-71, Voting :
District Administration and Miscellaneous, Land Revenue Department, Stamps Administration, Famine Relief, Pensions, Other Miscellaneous Compensation and Assignments, Compensation to Zamindars, Commuted Value of Pensions, Loans and Advances by the State Government ... 411, 568–570



PAGES

B—*cont.*

BALASUBRAMANIAM, THIRU A. :
Budget, 1970-71, Voting :
Education ... ... ... ... ... ... 131, 162–167

BANKS :
George Town Co-operative Bank, declaration of bonus ... ... ... ... ... ... 283–284
Land Development Banks, delay in getting loans ... 397–398

BHUPATHY, THIRU M. :
Budget, 1970-71, Voting :
District Administration and Miscellaneous, Land Revenue Department, Stamps—Administration, Famine Relief, Pensions, Other Miscellaneous Compensation and Assignments, Compensation to Zamindars, Commuted Value of Pensions, Loans and Advances by the State Government. ... ... ... 413
Elections, Head of State, Ministers and Headquarters staff, Miscellaneous ... ... ... 42

BHUVARAHAN, THIRU G. :
Budget, 1970-71, Voting :
District Administration and Miscellaneous, Land Revenue Department, Stamps—Administration Famine Relief, Pensions, Other Miscellaneous Compensation and Assignments, Compensation to Zamindars, Commuted Value of Pensions, Loans and Advances by the State Government ... 550–558
Education ... ... ... ... ... ... 326–332
Elections, Head of State, Ministers and Headquarters staff, Miscellaneous ... ... 63–66

BILLS :
Appropriation (Vote on Account) Bill, 1970 :
Message from Legislative Council ... ... 406
Co-operative Land Development Banks (Amendment) Bill, 1970 :
Message from Legislative Council ... ... 406

BLIND :
Rehabilitation Centre, Madurai ... ... ... 384–386

PAGES

B—*cont.*

BOJAN, THIRU K.:

Budget, 1970-71, Voting:

District Administration and Miscellaneous, Land Revenue Department, Stamps—Administration, Famine Relief, Pensions, Otherf Miscellaneous Compensation and Assignments, Compensation to Zamindars, Commuted Vale of Pensions, Loans and Advances by the State Government. ... ... ... ... 407-409, 433-436

Paper, import ... ... ... ... ... 270-272

BUS-STAND:

Panayampatti, construction ... ... ... 229

C

CALLING ATTENTION:

Murder of Vellore Swatantra Party Councillor and consequent insecurity ... ... ... ... 529, 531-532

Removal of fair price shops and lifting of rice rationing and consequences thereof ... ... ... 297-299

Violent incident at Kilayur on Pongal day due to cutting of D.M.K. flag ... ... ... 404-405

CANALS:

Sathuperi Tank Supply Channel, repairs ... ... 14-15

CHAIR:

ANNOUNCEMENTS:

Members who have joined the Congress party under the leadership of Thiru G. Bhuvarahan 130

RULINGS AND OBSERVATIONS:

*Adjournment Motions:*

*Fast by agriculturists in Coimbatore district in front of Collector's Office protesting against the increase in electricty rate for agriculture purposes:*

Consent was withheld on the grounds that the matter came within the day-to-day administration of the Government, that it was not in order to discuss about fast on an adjournment motion and that there was opportunity to give expression to their views on the matter during the discussion on the Demands for Grants ... ... 287



PAGES

C—*cont.*

CHAIR—*cont.*

*Veterinary Assistants' Association's decision to fast before Secretariat protesting against non-redressal of their demands:*

Consent was withheld on the grounds that the matter came within the day-to-day administration of the Government and there were several previous rulings that fasts could not form the subject matter of an adjournment motion ... 404

*Catching the eye of the chair:*

With reference to a remark by a Member that the Speaker's eye was an elusive object and his question whether they could catch his ear also besides his eye, the Chair denied the charge that his eye was elusive and stated that he was able to see the Members at both ends of the House. Members could only catch the eye of the Chair and not his 'ear' by saying 'Sir', 'Sir' ... ... ... ... ... 132-133

*Debate:*

*Allegations:*

On 12th March 1970, a Member enquired whether the Leader of the Opposition had produced evidence to the Speaker in support of his allegation against the Minister for Co-operation.

The Chair replied that he had given time to the Leader of the Opposition to produce the documentary evidence. If he failed to do it by that time, it would be presumed that he had no evidence with him and he would be constrained to consider the further action to be taken in the matter ... ... ... ... ... 287-292

On 12th March 1970, the Chair informed the House that he proposed to write to hon. Member Thiru R. Ramachandra Dorai to produce evidence in support of his allegation against the Minister for Local Administration and to the Hon. Minister for Local Administration to produce evidence to refute those allegations ... 292-293

CHAIR—cont.

*Debate*—cont.

*Allegations*—cont.

Should be made with basis. It was not in order for Members to say that it was for the Ministers to deny their allegations. Members should prove their allegations with proper documentary evidence ... ... ... ... ... 584-585 586-587 588-589

With reference to an allegation made by the Leader of the Opposition on 28th January 1970 that the Minister for Co-operation had not paid income-tax to the tune of Rs. 85 lakhs and a case in that regard was pending in the High Court, he was asked by the Chair to produce documentary evidence to prove his allegation.

On being reminded by the Chief Minister on 6th February 1970 about his assurance to produce evidence, the Leader of the Opposition stated that a case against the son of the Minister for Co-operation was pending and that he would produce evidence the next day.

On 10th March 1970, the Chair observed that the Leader of the Opposition had given him a sheet of paper which was said to be the evidence in support of the allegation. On a perusal of the paper, it was found that it was not an authenticated copy of the Judgment of the High Court as it was not signed by a proper authority and it contained only the signature of the Leader of the Opposition. After the Judgment proper, a sentence had been added and it was not known how it was included in the judgment. Thirdly it related to a Trust and not to the Minister for Co-operation.

After a short discussion in which the Chief Minister, the Ministers for Finance and Law and the Leader of the Opposition took part, the Chair observed that the sheet of paper did not satisfy the definition of 'document' and as no allegation could be made without proper evidence, he proposed to give another opportunity to the Leader of the Opposition to produce 'documentary evidence' to prove his allegation.







*Debate*—cont.

*Allegations*—cont.

With reference to the plea made by the Finance Minister for taking action against those who made baseless charges against Ministers, the Chair observed that the Assembly Rules already provided for action against such Members ... 27-42

*Matters sub-judice* :

On 14—3—1970, a Member called the attention of the Chief Minister to the reported murder of a person in a particular place and consequent feeling of insecurity among the residents of that locality. Immediately another Member rising on a point of order stated that the matter was sub-judice and any statement by the Chief Minister might vitiate the conduct of the case. The Chair observed that the Member had simply called the attention of the Chief Minister to a matter of fact and had not said anything about the merits of the case which was alleged to be *sub-judice*.

In reply to a query from another Member, the Chair observed that they could not stipulate that the Chief Minister's statement should be in a particular way, nor could they anticipate the contents of the statement.

Thereupon, the Chief Minister was allowed to make his statement ... ... ... ... 529-532

*Right to ask for clarifications* :

With reference to a point of order raised by Dr. H. V. Hande on 9th March 1970, that after the Finance Minister's reply on 7th March 1970, the Demands were guillotined and therefore he was 'robbed' of the privilege and opportunity, of getting further clarifications from the Minister, the Chair explained on 10th March 1970 how the allotted time had to be distributed among the Leaders of Parties and the Minister and how he had to guillotine the Demands at the close of the time fixed for the discussion on the Demands ... ... ... ... ...

*Debate*—cont.

*Right to ask for Classifications*—cont.

He also cited earlier rulings to point out that it would be impossible to allow every Member to seek clarification from the Ministers after their replies. He also observed that no Member could claim monopoly in seeking clarification from Ministers and it was the duty vested on the Chair to afford equal opportunity to all the Members ... ... ... ... ...

Moreover, a point of order could not be raised about any incident that took place the previous day ... ... ... ... ... ...

In the end, the Chair ruled that there was nothing irregular in the procedure adopted by him and there was thus no point of order ... ... ... 23–27

*Time limit for speeches*:

A member complained that the time allotted to him, viz., five minutes was quite insufficient and so he preferred not to speak. The Hon. Chief Minister pointed out that the days and time for Demands were settled by the Business Advisory Committee and therefore the member would be offending his party leader who was a party to the decision of the Business Advisory Committee ... ... ... ... ...

The Speaker said that the time for each member was allotted with reference to the total time available for a Demand and the number of members who wished to speak. Therefore the member could not get angry with the Chair ... 54–56

*Decorum*:

*Reference to Chair*:

When the Chair wanted the Members to observe the rules of procedure and follow the conventions while making allegations so that the dignity of the House could be maintained, it was indecorous for the Members to charge him of partiality, or lack of responsibility or patience. If they wanted to criticise the conduct of the Speaker they had to do it in accordance with the rules of procedure in that regard and not otherwise ... 590



*Decorum*—cont.

*Reference to individuals not in the House*:

Allegations against individuals not present in the House should not be made as they could not defend themselves. Members might refer to Ministers or the oficers working under them ... 584

With reference to a remark made by the Leader of the Opposition that he thanked the Speaker for taking special interest in a particular matter, when so many things happened in the House, the Chair observed that it was wrong on his part to have made such an insinuating remark against the Chair who guarded and maintained the dignity of the House ... ... ... ... 291–292

*Demands for Grants*:

*Cut Motions*:

It would be better if the Chair was informed in advance by the Members as to which Cut Motions would be moved on behalf of their respective parties ... ... ... ... ... ... 45

*Minister's introductory remarks*:

Interrupting a Minister who read the Policy Note relating to a Demand for Grant that he had moved, a Member, on a point of order, stated that in order to save time the Minister's Introductory Note could be taken as read and the House might proceed with the discussion on the Demands for Grants ... ... ... ...

The Chair held that the Minister had a right to read his policy note or speech and no point of order would lie ... ... ... ... ... 416–417

*Expunctions*:

On 10th March 1970 certain expressions used by the Leader of the Opposition during the debate on a Demand were ordered to be expunged by the Chair as he could neither prove the allegation nor was he prepared to withdraw the same ... ... 79–82

*Personal Explanation*:

A Member might, with the permission of the Speaker make a personal explanation. But no debatable matter could be brought forward and no debate could arise ... ... ... ... ... ... 290

C—*cont.*

*Demands for Grants*—cont.

*Point of clarification* :

Personal Explanation under Rule 81 could be made ex tempore and also by a written statement ... 535

Only at the end of a Minister's speech, Members could ask for clarification; even if the Minister was willing, he could reply only with the permission of the Chair ... ... ... ... ... 371

*Procedure* :

Reference to May's Parliamentary Practice might be made only in cases where the provisions of the Assembly rules of procedure were not clear on any point. ... ... ... ... ... ... 299

*Proceedings of the House* :

*Publication by the Press* :

On 12th March 1970, the Chief Minister drew the attention of the Chair to the fact that while publishing news about the allegations made against Ministers, the Newspapers were not publishing the denial by the Ministers in full which in turn created a confused atmosphere among the public ... ... ... ...

The Chair agreed with the Chief Minister and stated that he observed that even in the matter of publication of his rulings, some papers published in a particular manner and some papers gave prominence only to certain portions of the proceedings. Such distorted publication of news of the proceedings might impair the growth of democracy. Hence, he appealed for the co-operation of the Press in the matter. If, however, they found it not possible to co-operate, he might then have to consider what further action he had to take in the matter ...

After some time, a Member rose on a point of order and enquired whether the Chief Minister was competent to issue instructions to the Press as to how it should publish its news. He contended that no one—neither the Chief Minister nor the Speaker—had the right to direct the Press to publish its news in a particular manner. Because, that would affect the fundamental right of freedom of expression. ... ...





C—*cont.*

*Proceedings of the House*—cont.

*Publication by the Press*—cont.

The Chief Minister stated that he had neither warned the Press nor issued any instructions to them. He simply drew the attention of the Chair to the desirability of the Press not publishing a distorted version of the proceedings.

